


நாடு 4 போற்றும்

ஆண்டு

தொடரட்டும் 4 இது பல்லாண்டு



எல்லார்க்கும் எல்லாம்

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

27.04.2025

வாழ்த்துச் செய்தி

நான்காம் ஆண்டை நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது திராவிட மாடல் அரசு!

இந்த நான்காண்டுப் பயணத்தை நினைத்துப் பார்க்கும்போது என் நெஞ்சில் ஒன்றிரண்டு திட்டங்கள் அல்ல, ஓராயிரம் திட்டங்கள் நினைவுக்கு வருகின்றன. அந்த நினைவுகளோடு இந்த மலரைப் புரட்டிப் பார்க்கும்போது, இந்த மலரானது சாதனைப் பூந்தோட்டமாகக் காட்சி அளிக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் எத்தனை திட்டங்கள்! சாதனைகள்! வெற்றிகள்!

ஆட்சி அமைத்தபோது இதனை, 'விடியல் ஆட்சி' என்றோம். விடியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டமாகத் தீட்டினால்தான் இத்தனை திட்டங்களைத் தீட்டி இருக்க முடியும்.

நான் செல்லுமிடமெல்லாம் கூடும் மக்களின் முகங்களில் காணும் மகிழ்ச்சிதான் விடியலின் அடையாளம்!

மாதம்தோறும் ஒரு கோடியே 14 இலட்சம் சகோதரிகள் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையைப் பெறுகிறார்கள். கட்டணமில்லாத மகளிர் விடியல் பயணமானது, மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. 600 முதல் 1,200 ரூபாய் வரை மாதம் தோறும் அவர்களுக்கு மிச்சம் ஆகிறது. எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டமானது இலட்சக்கணக்கான இளைஞர்களைப் பன்முக ஆற்றல் உள்ளவர்களாக வளர்த்துள்ளது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் மிக உயரிய நிறுவனங்களில் பணி கிடைத்துச் சென்றுள்ளார்கள். அண்மையில் வெளியான இந்தியக் குடிமைப் பணித் தேர்வில் வென்றவர்கள், இத்திட்டத்தால் பயன்பெற்றவர்களே என்பதை அறியும்போது மகிழ்ந்து போனேன்.

அரசுப் பள்ளியில் படித்த பிள்ளைகள் - உயர்கல்விக்குச் செல்ல முடியாமல் பாதியிலேயே கல்வியை நிறுத்திய நிலைமையைப் புதுமைப்பெண் திட்டமும், தமிழ்ப் புதல்வன் திட்டமும் நிறுத்திவிட்டன. ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் மூலம் ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளில் 77.3 விழுக்காட்டினர் ஊட்டம்பெற்று இயல்புநிலைக்குத் திரும்பினர். 18 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்குக் காலை உணவு வழங்கப்படுகிறது. இது அவர்களின் உடல் உறுதியையும், உள்ள உறுதியையும் வளர்த்து வருகிறது.

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600009.

இப்படி மக்கள் ஒவ்வொருவரும் நேரடியாகப் பலன் அடையும் வகையிலான திட்டங்களைத் தீட்டிய நிரந்தர உதயசூரியன் ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சியாகும்.

இந்த நான்காண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த ஒட்டுமொத்த வளர்ச்சியானது இந்தியாவில் எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியாகும்.

1. 2024-2025 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69 விழுக்காடு உண்மைப் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.
2. தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது பொருளாதார மாநிலமாக இருக்கிறது.
3. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.
4. நிதி ஆயோக் வெளியிட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குறியீட்டில் தமிழ்நாடு 788 புள்ளிகளுடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.
5. சமூக முன்னேற்றக் குறியீடு - Social Progress Index அறிக்கையில் தமிழ்நாடு 63.33 புள்ளிகள் பெற்று தேசிய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
6. வறுமைக் குறியீடுகளில் இந்தியாவின் சராசரி விழுக்காடு என்பது 11.2 ஆக இருக்கும்போது தமிழ்நாடு 1.43 விழுக்காடாக இருக்கிறது.
7. பட்டினிச் சாவு இல்லாத மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இடம்பெற்றுள்ளது.
8. கடந்த மூன்று ஆண்டுகளில் 10 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளன.
9. இந்தியாவிலேயே தொழில் நிறுவனங்கள் பெருகியதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. குறு, சிறு, மற்றும் நடுத்தர நிறுவனங்களும் பெருகி இருக்கின்றன.
10. இந்தியா முழுமைக்குமான பணவீக்கம் அதிகமாகி உள்ளது. தமிழ்நாட்டுக்கு மட்டுமான பணவீக்கம் குறைந்துள்ளது. இந்தச் சாதனைகள் அனைத்தும் பத்து ஆண்டுகளில் எட்டப்படாத சாதனைகள் ஆகும். இந்தியாவில் எந்த மாநிலமும் எட்டாத சாதனைகள் ஆகும்.

இத்தகைய சாதனைகள், எத்தகைய திட்டங்களின் மூலமாக எட்டப்பட்டன என்பதை அறிய உதவும் மாபெரும் ஆவணமாக இதனைத் 'தமிழரசு' ஆசிரியர் குழு தயாரித்து வழங்கி உள்ளது.

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600009.

நான்காண்டு ஆட்சியின் சாதனை மலரை அழகுடனும் வரலாற்றுக் கருவூலமாகவும் தயாரித்து வழங்கி இருக்கும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.வைத்திநாதன், இ.ஆ.ப., ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

இம்மலரைச் சிறப்பாக உருவாக்கி இருக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் திரு. இரா. அண்ணா உள்ளிட்ட 'தமிழரசு' இதழ் ஆசிரியர் குழுவினருக்கு எனது நன்றிகள்!

தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் திரு. ரெ.கோமகன், ஊடகவியலாளர் திரு. ப.திருமாவேலன், பத்திரிகையாளர் திரு. பொ.தங்கப்பாண்டியன் ஆகியோரை உள்ளடக்கிய மலர்க் குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின் மாட்சியைக் கட்டுரைகளாகத் தீட்டி வழங்கி இருக்கும் தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் திரு. ரெ.கோமகன், ஊடகவியலாளர் திரு. ப.திருமாவேலன், பேராசிரியர்கள் திரு. சௌ.புஷ்பராஜ், திரு.இரா. சுப்பிரமணி, பத்திரிகையாளர்கள் திரு. எம்.ரமேஷ், திரு. ந.செல்லப்பா, திரு. பி.எம்.சுதீர், தமிழ் இணையக் கல்விக் கழகப் பொறுப்பாளர்கள் திரு. செல்வ புவியரசன், திரு. த.ராஜன், எழுத்தாளர் திரு. சூரியா கிருஷ்ணமூர்த்தி, மருத்துவர் யாழினி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவர்களது பார்வையும், பாராட்டும் ஆட்சிக்குக் கிடைத்த பாராட்டுகளாகவும், வழிகாட்டுதல்களாகவும் அமைந்துள்ளன.

மலரின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டியபோது மலைத்துப் போனேன். இது போல் இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தையும், உறுதியையும் நான் அடைந்தேன்.

இப்படிக்கு

(மு.க. ஸ்டாலின்)

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை- 600 009.

வாழ்த்துச் செய்தி 05.05.2025

வணக்கம்!

இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்து நான்காண்டுகள் நிறைவடைந்து இருக்கின்றன.

எல்லார்க்கும் எல்லாம் எனும் உயரிய தத்துவத்தோடு, மகளிர் - மாணவர்கள் - இளைஞர்கள் - விவசாயிகள் - மாற்றுத்திறனாளிகள் -விளையாட்டு வீரர்கள் என ஒவ்வொருவருக்கும் தேவையான திட்டங்களை நம்முடைய அரசு தந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்தே மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்துக்கான விடியல் பயணம் திட்டத்துக்குத்தான். இந்தத் திட்டத்தின் மூலம், பணிக்குச் செல்லும் மகளிர் இன்றைக்கு மாதம் 900 ரூபாய் வரை சேமிக்கின்றனர்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவ - மாணவியர் உயர்கல்வி சேருகிறபோது, அவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்குகிற புதுமைப்பெண்- தமிழ்ப் புதல்வன் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 8 இலட்சம் மாணவ- மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள்.

இந்தத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் உயர்கல்வி சேருவோரின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது.

இந்தியாவிலேயே மதிய உணவு வழங்கும் திட்டம் நீதிக்கட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றைக்கு நீதிக்கட்சியின் நீட்சியாக இருக்கும் திராவிட மாடல் ஆட்சியில், நம் முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார்கள். இதன் மூலம் கிட்டத்தட்ட 20 இலட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய ஒன்றியமே வியக்கின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக்காட்டினார்கள். கிட்டத்தட்ட 20 மாதங்களாக, ஒரு கோடியே 15 இலட்சம் மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி, நான் முதல்வன் போன்ற திட்டங்கள், இன்றைக்கு மற்ற மாநிலங்கள் மட்டுமின்றி, வெளிநாடுகளையும் தமிழ்நாட்டை நோக்கித் திரும்பிப் பார்க்கச் செய்துள்ளன.

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை- 600 009.

நான் முதல்வன் திட்டம் மூலம், சுமார் 30 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெற்று வருகிறார்கள்.

எல்லாவற்றையும்விட என் மனதில் ஆழமான இடம்பிடித்த திட்டம் என்றால், அது உடல் உறுப்பு தானம் செய்வோருக்கு, அவர்களது இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்ற அறிவிப்புதான்.

இந்த முன்னெடுப்பு நடைமுறைக்கு வந்த பிறகு, முன்பைவிட அதிகமானவர்கள், உடல் உறுப்பு தானம் செய்ய முன்வந்திருக்கின்றனர். தமிழ்நாடு ஒரு முற்போக்கு மாநிலம் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக, உடல் உறுப்பு தானத்திலும் முதலிடத்தில் இருப்பதை எண்ணி நெகிழ்ச்சி அடைகிறேன்.

தந்தை பெரியார் பிறந்த நாள் – சமூக நீதி நாள். அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் – சமத்துவ நாள் என்று சமூக நீதியையும், சமத்துவத்தையும் நம் திராவிட மாடல் அரசு உயர்த்திப்பிடித்து இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தந்தார்கள். இன்றைக்கு கலைஞர் அவர்கள் வழியில், மாற்றுத்திறனாளிகளின் உரிமையை நிலைநாட்டும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் 12 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் நியமன முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர் என்ற மாபெரும் அறிவிப்பை நம் முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நம் மாற்றுத்திறனாளித் தோழர்கள் இனி மாற்றத்திற்கான முகங்களாக உள்ளாட்சி அமைப்புகளில் குரல் எழுப்ப உள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

அதேபோல, மக்களைத்தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, மக்களுடன் முதல்வர், முதல்வர் மருந்தகம் போன்ற திட்டங்கள் தமிழ்நாட்டின் அனைத்துத் துறை வளர்ச்சிக்கு அடித்தளமிட்டு இருக்கின்றன. மற்ற துறைகளைப் போலவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளால், விளையாட்டிலும் நம்பர் 1 என்ற இடத்தைத் தமிழ்நாடு பிடித்து இருக்கிறது.

செஸ் ஒலிம்பியாட் – ஸ்குவாஷ் உலகக் கோப்பை – உலக அலைச்சறுக்குப் போட்டி, சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர் – ஆசியக் கோப்பை ஹாக்கிப் போட்டி, ஃபார்முலா 4 இரவு நேர கார் பந்தயம், – தெற்காசிய இளையோர் தடகளப் போட்டிகள் – கேலோ இந்தியா யூத் கேம்ஸ், Cyclothon என ஏராளமான சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளையும் – முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் போன்ற மாநில அளவிலான போட்டிகளையும் நம்முடைய தமிழ்நாட்டில் நடத்திக் காட்டியுள்ளோம்.

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை- 600 009.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத்தொகை, 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ், இதுவரை இல்லாத அளவுக்கு, நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு அரசுத்துறை-பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளோம். விளையாட்டுத்துறையின் இந்த முயற்சிகளுக்குக் பாராட்டுகளும் அங்கீகாரங்களும் எட்டுத்திக்கில் இருந்தும் குவிகின்றன.

மேலும் வறுமை ஒழிப்பு, பட்டினியின்மை, தரமான கல்வி, மேம்பட்ட சுகாதாரம், பாலின சமத்துவம், மகளிர் முன்னேற்றம், தொழில்துறை என 16 குறியீடுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களால், 5 ஆண்டுகளுக்கு முன்பு அதலபாதாளத்தில் இருந்த தமிழ்நாட்டின் வளர்ச்சிவீதம், இன்றைக்கு 9.69 சதவீதத்துடன் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது.

நம் திராவிட மாடல் அரசின் சாதனைப் பயணம் அடுத்த ஓராண்டு மட்டுமல்ல, மக்கள் ஆதரவுடன், இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் தொடரும் என்பதை உறுதியுடன் சொல்ல முடியும்.

மே 7, 2021 அன்று 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்று ஒலித்த அந்தக் குரல், இன்றைக்குத் தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசின் திட்டங்களால் ஒவ்வொரு தனிமனிதரும் ஏதோ ஒரு வகையில் பயன்பெறுகிறார்கள் என்பதே இந்த அரசின் வெற்றி.

இந்தச் சிறப்பான நேரத்தில் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை மலரைக் கொண்டுவந்துள்ள செய்தி மக்கள் தொடர்புத்துறைக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் திராவிட மாடல் அரசின் சாதனைகள் இன்னும் ஓராண்டு மட்டுமல்ல, இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் ஆதரவுடன் நிச்சயம் தொடரும்!

நன்றி வணக்கம்!

அன்புடன்

(உதயநிதி ஸ்டாலின்)

மு.பெ.சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

28.04.2025

நுழைவாயில்

தன்னலமற்ற பொதுத்தொண்டு செய்பவர்கள்,
பிரதிபலன் கருதாது உழைக்கக் கூடியவர்களின்
சீரிய குணங்கள் பொதுமக்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.
- தந்தை பெரியார் அவர்கள்

மக்களிடம் சென்றிடு,
அவர்களுக்கு உன் உழைப்பை நல்கிடு,
அவர்களோடு இணைந்து அவர்களுக்காகத் திட்டமிடு...
- பேரறிஞர் அண்ணா அவர்கள்

மக்களுடைய நன்மை ஒன்றையே,
எண்ணுகிறவர்களாலேதான் அதற்கான பயனைப் பெற முடியும்...
– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

இவ்வாறு போற்றுதலுக்குரிய மாமனிதர்கள் வழியில் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை இடைவிடாமல் தமது ஓய்வறியா உழைப்பினால் மக்கள்பணிஆற்றிவரும்திராவிடமாடல்அரசின்தன்னிகரில்லாசமூகநாயகன், சமூக நீதியை தம் இமைபோல் கட்டிக்காத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த நான்காண்டுகளில் அடுக்கடுக்கான மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலம் தமிழ்நாட்டையே இதர மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக மக்களுக்கான மக்கள் நலம் போற்றும் எண்ணற்ற திட்டங்களை அர்ப்பணித்து வெற்றி கண்ட திட்டங்களின் சாதனைகளைத் தொகுத்து "நான்காண்டு சாதனை மலரினை" அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இதுவரை கண்டிராத திட்டங்களில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், முதல்வர் மருந்தகம் திட்டம், இல்லம் தேடிக் கல்வித் திட்டம், விடியல் பயணத் திட்டம் என ஏழை எளிய மக்கள், மகளிர், இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்துத் தரப்பு மக்களுக்குமான நலத்திட்டங்களை அறிவித்து மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு

மு.பெ.சாமிநாதன்
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் "நான்காண்டு சாதனைகளை" மாநிலத்தின் கடைக்கோடி மக்களுக்கும் எடுத்துச் செல்லும் இம்மலரினை உங்கள் கரங்களில் தவழவிட்டிருக்கிறது.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் அனைத்துத் துறையில் எய்திய திட்டங்களைப் பற்றி சாதனை மலராக வெளியிட்டபோதும், கடந்த நான்காண்டுகளில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் தமிழரசு அச்சகத்தின் வாயிலாக 54 சிறப்பு வெளியீடுகளை வெளியிட்டு, பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு சேர்த்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று நான்காண்டு நிறைவடைந்ததையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின்கீழ் இயங்கும் "தமிழரசு" அச்சகத்தின் வாயிலாகப் படைக்கப்பட்டிருக்கும் இந்த "நான்காண்டு சாதனை மலரினை" அனைத்து மக்களும் படித்துப் பயன்பெற அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்



(மு.பெ. சாமிநாதன்)

நா.முருகானந்தம், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

வாழ்த்துரை

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு.

- எனும் குறள் வழி நின்று குடிமக்களை அரவணைத்து, நாட்டின் அறம் சார்ந்து, மக்கள் நலன் காத்து, உலக அளவிலும், மக்கள் மத்தியிலும் எவ்விதக் குறையுமின்றி, உறுதியான செயல்பாட்டினால், மக்களின் தேவைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அனைவருக்குமான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டினை இந்தியாவின் முதன்மை மாநிலமாகவும், முன்னோடி மாநிலமாகவும் முதன்மைப்படுத்திடும் வகையில், அரசின் ஆக்கப்பூர்வமான அறிவிப்புகளையும், மக்கள் நலத்திட்டங்களையும் அனைத்து மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ், வரலாறு போற்றும் அரசு நலத்திட்டங்களைத் துறைவாரியாகத் தொகுத்து "நான்காண்டு சாதனை மலராக" செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழரசு அச்சகம் உருவாக்கியுள்ளது.

இப்போற்றுதலுக்குரிய நான்காண்டு சாதனை மலரினைத் தொகுத்து வெளியிட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை "தமிழரசு" அச்சகத்தின் அலுவலர்களுக்கு எனது நல்வாழ்த்துகளை மகிழ்ந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

(நா.முருகானந்தம்)

வே. ராஜாராமன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதைத் தனது இலக்காகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசானது, மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்திடும் வகையில், ஆக்கப்பூர்வப் பணிகள், மாநிலம் முழுவதுமான வளர்ச்சித் திட்டங்கள் என அனைத்துத் துறைகளிலும் சிறப்பான பணிகளை செவ்வனே ஆற்றி வருகிறது.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோனோக்கி வாழுங் குடி.

- எனும் குறளின் வரிகளுக்கேற்ப, நமது தமிழ்நாட்டின் மக்களை வாழ்விப்பதற்காகவே ஓய்வறியாமல் உழைத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படுத்திவரும் முத்தான நலத்திட்டங்களின் சாதனைகளைத் துறை வாரியாகத் தொகுத்து "நான்காண்டு சாதனை மலராக" உருவாக்கியிருப்பதைக் கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்த மக்கள் நலத்திட்டங்களையும், ஒவ்வொரு துறையும் எவ்விதத் தொய்வுமின்றி, முனைப்புடன் செயல்படுத்திவரும் தன்னிகரற்ற பணியின் சாதனைகளை வெகுசிறப்பாகத் தொகுத்து வெளியிடும் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களுக்கு எனது பாராட்டுகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். மேலும், இந்த "நான்காண்டு சாதனை மலரினை" அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

23/4/2025

(வே. ராஜாராமன்)

மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

ஆசிரியர் உரை

மக்கள் நலன் ஒன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு இடைவிடாது மக்கள் பணியாற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு கடந்த நான்காண்டுகளாக நிறைவேற்றிவரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மக்கள் நலத்திட்டங்களின் சாதனைகளைத் தரணியெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில், "நான்காண்டு சாதனை மலர்" ஒன்றினை செய்தி மக்கள் தொடர்புத்துறையின் "தமிழரசு" அச்சகத்தின் வாயிலாக வெளியிடுவதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வழிநின்று ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து அவற்றைச் சிறப்பான முறையில் நிறைவேற்றிட கண்துஞ்சாமல் மக்களுக்காக உழைத்து வரும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், சீரிய சிந்தையில் உருவான, சமுத்திரம் போன்ற விரிவான, வரலாறே திரும்பிப் பார்க்கும் வகையில், உன்னத மக்கள் நலத்திட்டங்களை எல்லாம் துறை வாரியாகத் தொகுத்து "நான்காண்டு சாதனை மலரினை" ஒரு வரலாற்றுப் பெட்டமாகத் தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மேலும், என்றென்றும் மக்கள் மனதில் நிறைந்திருக்கும் வகையில், இந்த "நான்காண்டு சாதனை மலரினை" தொகுத்து வழங்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள துறையினருக்கும், தமிழரசு அச்சக ஆசிரியர் குழுவினர்களுக்கும், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மரு. இரா. வைத்திநாதன்)

தமிழரசு

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

ஒருங்கிணைப்பாளர்
இரா. அண்ணா
கூடுதல் இயக்குநர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு.மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீநந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற
இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச்
செலுத்தலாம்.

ஆளுமைகளின் பார்வையில்

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! 19
திரு. ப.திருமாவேலன்
ஊடகவியலாளர்

மகளிர் வாழ்வில் மலர்ச்சி 25
திரு. ரெ.கோமகன்
இணை இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம்

அறம் காக்கும் ஆட்சி 31
திரு. செல்வ புவியரசன்
உதவி இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம்

ஓர் ஏர் உழவர் காக்கும் அரசு 35
திரு. ந.செல்லப்பா
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்

கல்வியிற் சிறந்த தமிழ்நாடு 41
திரு. த.ராஜன்
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்

தொழில் பெருகும் தமிழ்நாடு 45
திரு. எம்.ரமேஷ்
மூத்த பத்திரிகையாளர்


இந்தியாவின் விடியல் பயணத்திற்கு வழிகாட்டும் தமிழக ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் 49
முனைவர் செள.புஷ்பராஜ் மற்றும் தி.சு.கி.துர்கேஷ் நந்தினி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

தமிழ்நாடு: உயர்கல்வியில் முதலிடம் அறிவுப் புலத்தின் புகழிடம் 53
பேராசிரியர் இரா.சுப்பிரமணி
முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மைய இயக்குநர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு 59
பேராசிரியர் சூரியா கிருஷ்ணமூர்த்தி
எழுத்தாளர், ஆய்வாளர்.

விளையாட்டல்ல நிஜம்! கனவுகள் நனவாகின்றன! 65
திரு. பி.எம்.சுதீர்
துணை ஆசிரியர், வாவ் மீடியா வேர்ல்ட்.

எல்லார்க்கும் எல்லாம்: தமிழ்நாட்டின் சுகாதாரப் பெருவழி 71
மருத்துவர் ப.மீ.யாழினி



எல்லார்க்கும் எல்லாம்
என்ற ஆட்சிப் பாதையில்
மகிழ்ச்சியான-மலர்ச்சியான-வளர்ச்சியான
தமிழ்நாட்டை உருவாக்குவோம்...

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 79

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள் 97

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் 113

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள் 151

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **இ.பெரியசாமி** அவர்கள் 179

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள் 197

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் 241

மாண்புமிகு வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள் 277

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல்,
காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் 297

மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர்
திரு. **எஸ்.ரகுபதி** அவர்கள் 321

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்
திரு. **சு.முத்துசாமி** அவர்கள் 329

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **கே ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் 335

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
திரு. **தா.மோ.அன்பரசன்** அவர்கள் 349

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள் 357

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி. **பி.கீதா ஜீவன்** அவர்கள் 407

மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்** அவர்கள் 433

மாண்புமிகு வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர்
திரு. **ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்** அவர்கள் 465

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. **ஆர்.ராஜேந்திரன்** அவர்கள் 475

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்
திரு. **அர.சக்கரபாணி** அவர்கள் 493

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்
திரு. **ஆர்.காந்தி** அவர்கள் 515

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. **மா.சுப்பிரமணியன்** அவர்கள் 527

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
திரு. **பி.மூர்த்தி** அவர்கள் 559

மாண்புமிகு போக்குவரத்து மற்றும்
மின்சாரத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் 573

மாண்புமிகு இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **பி.கே.சேகர்பாபு** அவர்கள் 595

மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர்
முனைவர் **கோவி.செழியன்** அவர்கள் 607

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
முனைவர் **பழனிவேல் தியாக ராஜன்** அவர்கள் 621

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.எம்.நாசர்** அவர்கள் 639

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள் 651

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. **சிவ.வீ.மெய்யநாதன்** அவர்கள் 663


மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **சி.வி.கணேசன்** அவர்கள் 671

மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர்
திரு. **த.மனோ தங்கராஜ்** அவர்கள் 677

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
முனைவர் **டி.ஆர்.பி.ராஜா** அவர்கள் 687

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
டாக்டர் **மா.மதிவேந்தன்** அவர்கள் 697

மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
திருமதி. **என்.கயல்விழி செல்வராஜ்** அவர்கள் 713


தமிழ்
எங்கள்
உயிருக்கு நேர்!

ப.திருமாவேலன்
ஊடகவியலாளர்



முத்தமிழறிஞர் கலைஞரைப் போலவே இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது வாழ்க்கையும் மொழிப்போரில் தான் தொடங்கியது.

1971 ஆம் ஆண்டு அப்போது அவருக்கு 18 வயது. கோவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் மாநாடு செப்டம்பர் மாதம் 25, 26 ஆகிய நாள்கள் நடைபெற்றது. கல்லூரி மாணவனாக அவரும் அதில் பங்கேற்றார். மாநாட்டில் தலைப்புகளில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர் தலைவர்கள் உரையாற்றினார்கள். உரையாற்றுவோர் பட்டியலில் அன்றைய மாணவர் இன்றைய முதலமைச்சர் அவர்களது பெயர் இடம்பெறவில்லை. மாநாட்டுக்குத் தலைமை வகித்த எல்.கணேசன் அவர்களிடம் – 'எனக்குப் பேச வாய்ப்பு கொடுங்கள், இரண்டு நிமிடங்கள் பேசுகிறேன்' என்று கேட்டார். அனுமதித்தார் எல்.கணேசன்.

"இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக் கொள்கிற அந்த வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். மொழிக்காக உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக் கூட நாங்கள் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்பட மாட்டார். அத்தகைய பாராட்டும், பெருமையும் வாங்கித் தந்த மகிழ்ச்சியும் என்னைச் சேரும். எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கும் நான் தயார் தயார்" என்று முழங்கினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதனைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். " நாங்கள் நாலு பிள்ளைகள் இருக்கிறோம் என்று ஸ்டாலின் சொன்னார். நான் நாலு பிள்ளைகளையும் தரத் தயாராக இருக்கிறேன். நான் உழைத்து, உழைத்து எழுதி எழுதி சம்பாதித்த குடும்பத்தைச் சேர்ந்தவன். இந்தக் குடும்பத்தில் ஒரு ஸ்டாலின் அல்ல நாலு பிள்ளைகளும் நாட்டுக்காகப் போனாலும் பரவாயில்லை. ஆனால் ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகள் இருக்கிறீர்கள். உங்களை நம்பி உங்களது பெற்றோர்கள் படிக்க அனுப்பி இருக்கிறார்கள். முதலில் வீட்டைக் காப்பாற்றுங்கள், பின்னர் நாட்டைக் காப்பாற்றுங்கள்" – என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இத்தகைய மொழி உணர்வோடு இளமை முதல் வளர்ந்தவர் என்பதால், அவர் தனது ஆட்சியைத் தமிழ் மொழிக்கான ஆட்சியாக நடத்தி வருகிறார்.

இது இனத்தின் அரசு

'இது ஒரு கட்சியின் ஆட்சியல்ல, இனத்தின் ஆட்சி' என்று அறிவித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்'. திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோ, அப்போதெல்லாம் அது தமிழின் ஆட்சியாக, தமிழினத்தின் ஆட்சியாகத்தான் இருந்துள்ளது' என்றும் சொன்னவர் முதலமைச்சர்.

தமிழ் மண்ணின் பெருமையை அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ நகரில் ஆற்றிய உரையில் முதலமைச்சர் வெளிப்படுத்தினார். " இனம் – மொழி – நாடு – சாதி – மதம் – ஆண் பெண் – ஏழை பணக்காரன் – கருப்பு சிவப்பு – என எந்தப் பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல் உலக உயிர்கள் அனைத்துக்கும் பொதுமறையைத் தந்த வான்புகழ் வள்ளுவரைத் தந்த மண்ணுக்கு நாம் சொந்தக்காரர்கள். ஊரைத் தாண்டிய ஊரும் – உலகமும் எப்படி இருக்கும் என்று அறியாக் காலத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அனைவரையும் ஒற்றைச் சொந்தமாகக் கருதி இலக்கியம் படைத்த கணியன் பூங்குன்றனைக் கொடுத்த புகழுக்குச் சொந்தக்காரர்கள் நாம்! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த இனம் தமிழினம் என்று பிறந்தது கண்டுபிடிக்க முடியாத முன் தோன்றிய உலக மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம்" என்று சொன்னவர் முதலமைச்சர் அவர்கள்.

"நிர்வாகத்தில் தமிழ் -நீதிமன்றங்களில் தமிழ் - ஆட்சியில் தமிழ் - ஆலயங்களில் தமிழ் - பள்ளிகளில் தமிழ் - கல்லூரிகளில் தமிழ் - நாடகங்களில் தமிழ் -திரையுலகத்தில் தமிழ் - பெயர் சூட்டுவதில் தமிழ் - பெயர்ப்பலகையில் தமிழ் - என எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஆதல் வேண்டும். அந்த வரிசையில் இசையிலும் தமிழிசை செழிக்க வேண்டும். இடைக்காலத்தில் சாதியின் பேரால் மதத்தின் பேரால் அந்நிய மொழிகளின் பேரால் பல்வேறு தாக்குதல் நடைபெற்றன. அவை அனைத்தையும் தாங்கி தமிழும், தமிழினமும், தமிழ்நாடும் நின்று நிலைக்க நமது மொழியின் வலிமையும் கலையின் வலிமையும் பண்பாட்டின் சிறப்பும் தான் காரணமாக அமைந்தன. எத்தகைய ஆதிக்கத்தையும் வென்று நின்று நிலைக்கும் வல்லமையை நமது நாட்டு மக்களுக்கு வழங்கியது மொழியும் கலையும் ஆகும்" என்று சொல்லி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

"தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் இலக்கியம் படிக்க வேண்டும். இலக்கியம் தான் ஒரு மனிதனைப் பண்படுத்தும்". என்று இலக்கியவிழாவைத் தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 18.10.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தி எதிர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். 'இந்தி பேசாத மக்கள் மீது இந்தி மொழி திணிக்கப்படாது. அவர்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கும்' என்று பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழிதான் இன்றுவரை இந்தி பேசாத பெரும்பான்மை மக்களைக் காக்கும் அரணாக இருக்கிறது. இதனை நினைவூட்டும் வகையில் முதலமைச்சரின் தீர்மானம் அமைந்தது.

1968, 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதனடிப்படையிலான விதிகளின்படி மத்திய அரசுப் பணிகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில், அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில் கொண்டு, எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் இந்திக்கு இணையான அலுவல் மொழியாக்குவதே மத்திய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை. தமிழ் மொழி இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது என்றும் - அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள்.

ஒன்று பிறமொழி ஆதிக்கங்களில் இருந்து தமிழைக் காத்தல். மற்றொன்று தமிழுக்குக் காலம் தோறும் செழுமையான படைப்புகளை உருவாக்கித் தந்து கொண்டே இருத்தல். இவை இரண்டையும் மிகச் சரியாகச் செய்யும் அரசாக இன்றைய கழக அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அதில் உறுதியாக இருக்கிறார்.

பழந்தமிழர் பெருமையை மெய்ப்பித்தார்!

1. கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களாக நமது இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
2. கீழடிக்கு அருகில் அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்தபோது அங்கே நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.
3. சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில் அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றுள்ளது.
4. கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறையில் கிடைத்த பொருளானது கி.மு. 1615 - கி.மு. 2172 எனக் காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4,200 ஆண்டுகளுக்கு முந்தையது எனக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.
5. கீழடி அகழாய்வில் 1000-க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60-க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்புக் கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பானை ஓடுகளில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற தனிநபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் அந்தக் காலத்திலேயே கல்வி பெற்றவர்களாக இருந்துள்ளார்கள்.
6. பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பெற்றும், நகர நாகரீகத்துடனும் மேம்பட்ட தமிழ்ச் சமூகமாகவும் விளங்கியதைக் கீழடி அகழாய்வு முடிவுகள் வாயிலாக அறிவியல் பூர்வமாகத் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை நிலை நிறுத்தியுள்ளது.
7. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில்

18 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் 'கீழடி அருங்காட்சியகம்' தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

8. "5,300 ஆண்டுகளுக்கு முன்பே உருக்கு இரும்புத் தொழில்நுட்பம் தமிழ் நிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது". என்று அறிவித்தார் முதலமைச்சர்.

9. சிந்துவெளி எழுத்துகளில் 100 ஆண்டுகளாகப் புதைந்திருக்கும் புதிருக்கு விடை கண்டுபிடித்தால் எட்டரை கோடி ரூபாய் பரிசு என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

10. தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கத்தைத் தமிழ்நாடு அரசு நடத்தியது.

11. சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாளன்று உலகிற்கு அறிவிக்கப்பட்டது. அதனை 'தி இல்லஸ்டிரேட் லண்டன் நியூஸ்' என்ற இதழில் சர் ஜான் மார்ஷல் அறிவித்தார். இந்த அறிவிப்பு இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கியது. அத்தகைய ஜான் மார்ஷலுக்கு சிலை அமைத்துள்ளார் முதலமைச்சர்.

12. சிந்துவெளிப் பண்பாடு குறித்துத் தொடர் ஆராய்ச்சிகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ரோஜா முத்தையா நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும் வகையில் தலை சிறந்த தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் பெயரில் ஓர் இருக்கை அமைத்திட ரூ 2 கோடி நல்கை வழங்கப்படும்

13. ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு நாட்டிலேயே அதிக அளவில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்று வரும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அத்தகைய அகழாராய்ச்சிகளை மேற்கொண்டு தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையினை உலகறிய செய்திட அயராது உழைத்திடும் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி கல்வெட்டியல் ஆய்வாளர்கள், நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரை ஊக்கப்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

–இவை அனைத்தும் தமிழரின் வரலாற்றுப் பழம் பெருமையை மீட்கும் முயற்சிகள் ஆகும்.

புலம்பெயர் தமிழர்க்கு நல்வாழ்வு!

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் திமு கழக அரசால் இயற்றப்பட்டது. வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம் ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் இதனைஅமைக்கவில்லை. இந்த நிலையில், 'அயலகத் தமிழர் நல வாரியம்' என்ற அமைப்பை 15 உறுப்பினர்களைக் கொண்டு அமைத்தார் முதலமைச்சர். சனவரி 12 ஆம் நாளை அயலகத் தமிழர் தினமாக அறிவித்துள்ளார் .

நமது தொப்புள் கொடி உறவுகளான இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டில் 105 முகாம்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு அனைத்து விதமான உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு 7 ஆயிரத்து 469 வீடுகள் கட்டத் திட்டமிட்டு 3 ஆயிரத்து 510 வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. இலங்கைத் தமிழர் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளைச் சொல்ல குழு அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது ரூ.150 கோடி மதிப்பிலான உணவு, மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

வெளிநாடு வாழ் தமிழர்களுக்காகக் கட்டணமில்லா உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் வேர்களைத் தேடி என்ற பயணத்தின் மூலமாக வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்படுகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களது சொந்த ஊர்களை மேம்படுத்தும் எனது கிராமம் என்ற திட்டம் செயல்பாட்டில் உள்ளது. அயலகத் தமிழர்க்கு கணியன் பூங்குன்றனார் விருது தரப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 2,398 பேர் அயல்நாடுகளில் இருந்தும் வெளிமாநிலங்களில் இருந்தும் தமிழர்களை மீட்டுக் கொண்டு வந்துள்ளோம்.

இந்தியை ஏற்க மாட்டோம்!

"ஒன்றிய அரசு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு 2,151 கோடி ரூபாயைத் தமிழ்நாட்டுக்குத் தராமல் நிறுத்தி வைத்திருக்கிறது. இது 43 இலட்சம் பள்ளிக் குழந்தைகளின் நலனுக்காகச் செலவு செய்யவேண்டிய தொகை ஆகும். தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதியைத் தர மறுக்கிறார்கள். தேசியக் கல்விக் கொள்கை என்பது கல்விக் கொள்கை அல்ல.அது காவிக் கொள்கை. அது இந்தியாவை வளர்க்க உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கை அல்ல. இந்தியை வளர்க்கக் கொண்டுவரப்பட்ட கல்விக் கொள்கை ஆகும். இந்தியாவை வளர்க்கத்தான் இந்திய நாட்டு மக்கள் மோடிக்கு வாக்களித்தார்களே தவிர - இந்தியை வளர்க்க அல்ல. இந்தியாவை வளர்க்கப் போவதாக வாக்கு கேட்ட பிரதமர் மோடி அவர்கள், அதை விட்டுவிட்டு இந்தியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் 2 ஆயிரம் கோடி தருவோம் என்று சொல்கிறார் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான்.

அவர்கள் கொண்டு வரும் தேசியக் கல்விக் கொள்கையானது, தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை மொத்தமாக ஒழித்து - அழித்துவிடும் என்பதால் தான் நாங்கள் எதிர்க்கிறோம். இரண்டாயிரம் கோடி என்ன பத்தாயிரம் கோடி தந்தாலும் ஏற்க மாட்டோம்" என்று சொன்னார் முதலமைச்சர் ஸ்டாலின்.

"தேசியக் கல்விக் கொள்கை என்பதே கல்வியை வளர்க்கக் கொண்டு வரப்படவில்லை. இந்தியை வளர்க்கக் கொண்டு வரப்படுகிறது. நேரடியாகத் திணித்தால் எதிர்ப்பார்கள் என்பதால் கல்விக் கொள்கை மூலமாக முலாம் பூசி திணிக்கிறார்கள். தாய் மொழியை வளர்க்கப் போவதாக ஒன்றிய அமைச்சர் சொல்கிறார்.தாய்மொழித் தமிழை வளர்க்க எங்களுக்குத் தெரியும். இதற்கு தர்மேந்திரப் பிரதானிடம் கையேந்தி நிற்கவில்லை தமிழ்.

இந்தியைத் திணித்து தமிழ்நாட்டின் மீது பண்பாட்டுப் படையெடுப்பை நடத்தும் ஒன்றிய அரசுக்கு நான் கடுமையான எச்சரிக்கையை விடுக்கிறேன்.

தேன் கூட்டில் கல் எறியாதீர்கள் என்பதுதான் என்னுடைய எச்சரிக்கையாகும்" என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

புத்துயிர் பெறும் புத்தக இலக்கியம்

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் நடக்காத -எந்த இந்திய மொழிகளிலும் நடக்காத - பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நடத்தி வருகிறது தமிழ்நாடு அரசு. " உலகைத் தமிழுக்கும்; தமிழை உலகுக்கும்" (Bringing the World to Tamil; Taking Tamil to the World) என்ற நோக்கத்தோடு நடத்தப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு 24 நாடுகளும், 2024 ஆம் ஆண்டில் 40 நாடுகளும், 2025 ஆம் ஆண்டில் 60 நாடுகளும் பங்கெடுத்தன. 2023 ஆம் ஆண்டில் 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. 2024 ஆம் ஆண்டில் 752 ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. 2025 ஆம் ஆண்டில் 1,125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

உலகெங்கும் தமிழ் இலக்கியங்களை எடுத்துச்சென்று, தமிழ் மொழியின் சிறப்பினை பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியமாக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த இரண்டாண்டுகளில், 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. உலகப் புகழ் பெற்ற பதிப்பகங்கள் இந்த நூல்களை வெளியிடுகின்றன.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் மென்பொருள் உருவாக்க மேம்பாட்டிற்குத் தமிழ் இணையக் கல்விக்கழகம் முக்கியப் பங்காற்றி வருகிறது.இணையத்தில் தமிழ் மொழி குறித்த பொருண்மைகளை மேம்படுத்த உதவும் எழுத்துப்பிழை சரிபார்ப்பி, இலக்கணப் பகுப்பாய்வி, உரை திருத்தி போன்ற மென்பொருளைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ளது, இத்துடன் தமிழ் பொருண்மைகள் அடிப்படையில் செயற்கை நுண்ணறிவு தொடர்புடைய முயற்சிகளுக்கு உதவும் வகையில் இயல் மொழிச்செயல்முறை கருவிகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

திருக்குறள் முதல்வர்!

"வள்ளுவம் வாழ்வியல் நெறியாக மாறட்டும். சமுதாயம் குறள் சமுதாயமாக மலரட்டும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார். திருவள்ளுவருக்குக் காவி சாயம் பூசப்படும் போதெல்லாம் அதனைக் கடுமையாக எதிர்த்தார். 2021 ஆட்சி அமைத்தது முதல் திருக்குறள் பரப்ப ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். தமிழ்இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாக 'தீராக்காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள்

நடத்திட சிறப்பு நிதியாக ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்குக் காசோலையாக வழங்கப்பட்டது.

மாநில அளவில் உள்ள 12 ஆயிரம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் 'குறளோவியப் போட்டி' நடத்தப்பட்டு, 365 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்குப் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 356 ஓவியங்கள் தினசரி நாள்காட்டியாக அச்சிடப்பட்டது. மாணவர்கள் வரைந்த ஓவியங்களைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடும் வண்ணம் சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற சித்திரைப் பொருள்காட்சியிலும் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், 'குறள் இனிது' என்ற பெயரில் திருக்குறள் நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

திருக்குறளின் 1,330 குறட்பாக்களையும் முழுமையாக முற்றோதல் செய்யும் மாணவர், மாணவியர்களின் திறமையை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில் அவர்களுக்குக் குறள்பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 598 பள்ளி மாணாக்கர்களுக்கு குறள்பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

'தீராக்காதல் திருக்குறள்' திட்டத்தின் படி விருதுநகர் மாவட்ட நிர்வாகம் – தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில் மாணவர் 'திருக்குறள் மாநாடு' நடத்தப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இருந்து 800 மாணவர்கள் பங்கேற்றனர். 200 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலுக்குத் தனித்தனியாக மாணவர்களால் வரையப்பட்ட குறள் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன.

திருக்குறளை மையமாகக் கொண்டு வாழ்வியல் சூழலில் தொடர்புபடுத்தி நன்னெறிக் கதைகள், நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் வடிவில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வழிவகை செய்திடும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்திட அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம், கணியாம்பூண்டியில் 12.09.2024 அன்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் குறளோவியம் நாட்டிய நாடகம் நடத்தப்பெற்றது.

2024 டிசம்பர் 31 – 2025 சனவரி 1 ஆகிய இருநாள்களும் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்படும் என்று முதல்வர் அறிவித்தார். குமரி முனை வள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவை முதலமைச்சர் அவர்கள் மாபெரும் திருக்குறள் சிறப்பு மாநாடாக நடத்திக் காட்டினார்கள்.

வள்ளுவர் சிலைக்கும் – விவேகானந்தர் மண்படத்துக்கும் இடையில் கண்ணாடிப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. கடலின் நடுவே அமைக்கப்பட்ட முதல் கண்ணாடிப் பாலமாக இது இருக்கிறது.

கன்னியாகுமரியில் நடைபெற்ற விழாவில் ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும், மாவட்டந் தோறும் திருக்குறள் பயிலரங்குகள், திருக்குறள் திருப்பணிகள் தொடர்ந்து நடத்தப்படும், திருக்குறள் போட்டிகள் 133 உயர் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் என்றும், மாணவர்களை மட்டுமே கொண்ட திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும் என்றும் அறிவித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

வேற்றுமையின் வேர்களைக் கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆகுதல் வேண்டும்". என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர். தனது ஆட்சி திராவிடக் கருத்தியல் ஆட்சியாக இருக்க வேண்டும் என்றும், தான் விரும்பும் மனிதன் குறள் நெறியைக் கொண்ட மனிதராக இருக்க வேண்டும் என்றும் செயல்பட்டு வருகிறார் முதலமைச்சர்.

ஒரு அரசியல் தலைவர் – ஆட்சியின் முதலமைச்சர் இலக்கணம் வகுத்துச் செயல்படுவது காலத்தின் கொடையாகும். தோன்றிற் புகழொடு தோன்றியவர் நம் முதலமைச்சர். முறை செய்து தமிழையும், தமிழரையும் காப்பாற்றும் மன்னவனாகச் செயல்பட்டு வருபவர் நம் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மகளிர் வாழ்வில் மலர்ச்சி



ரெ. கோமகன்
இணை இயக்குநர்,
தமிழ் இணையக் கல்விக்கழகம்



"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"

என்ற பெரும்புலவன் பாரதியின் வாக்குக்கிணங்க பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, சமூக அங்கீகாரம், தற்சார்பு, அதிகாரப் பகிர்வு வழங்கி அனைத்து நிலைகளிலும், அவர்களை மேன்மையடையச் செய்வதற்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பெண்களுக்குச் சொத்துரிமை, அரசுப் பணிகளில் 30 சதவீத இட ஒதுக்கீடு, உள்ளாட்சியில் 33 சதவீத இட ஒதுக்கீடு, காவல் துறையில் பெண்கள் நியமனம், திருமண நிதியுதவித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் எனப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு மகளிர் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தினார் டாக்டர் கலைஞர். முத்தமிழறிஞர் அவர்களின் கொள்கைப் பாதையில் நடைபோடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மகளிர் மேம்பாட்டுக்காக அளப்பரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

விடியல் பயணம்

பதவியேற்ற நாளன்றே அவர் கையெழுத்தில் மலர்ந்த மகத்தான திட்டம்தான் விடியல் பயணம். மகளிரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையில் கட்டணமில்லாப் பேருந்துப் போக்குவரத்துக்கு வழிவகுத்த அந்த ஒரு கையெழுத்தால் தமிழ்நாட்டுப் பெண்கள் யாரையும் எதிர்பாராமல் பணிநிமித்தமும், தொழில்நிமித்தமும் பயணங்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கட்டணமில்லாப் பயணத்தால் ஒரு பெண் சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.888/- சேமிப்பதாக மாநிலத் திட்டக் குழு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. நாளது வரை தமிழ்நாடு முழுவதும் 625 கோடி முறை மகளிரும், பால்புதுமையினரும் கட்டணமின்றிப் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில், இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2024-2025 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுயமரியாதைத் திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்த பேரறிஞர் அண்ணாவின் வழியில் செயல்படும் நம் முதலமைச்சர், சுயமரியாதைப் பயணத்தில் மேலும் ஒரு மைல்கல்லாக, மகளிருக்கு மாதந்தோறும் நிதியுதவியளிக்கும் இத்திட்டத்தினை இன்று மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக மாற்றியிருக்கிறார். இத்திட்டத்தின் மூலம் 1.15 கோடி குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

புதுமைப் பெண்

பெண் கல்வியை ஊக்குவிக்கும் விதமாகவும் உயர்கல்வியை உறுதி செய்யும் விதமாகவும் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு, தொழில்கல்வியில் சேரும் மாணவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ரூ.1000/- உதவித் தொகையானது படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. இதன் மூலம் உயர்கல்வியில் சேரும் மாணவிகளின் விகிதம் அதிகரித்து இடைநிற்றல் பெருமளவில் குறைந்துள்ளது. மேலும், இளம் வயதுத் திருமணங்களைத் தவிர்த்து,பெண்கள் உயர்கல்வி பயில்வதை இத்திட்டம் ஊக்கப்படுத்துகிறது. 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.நாட்டிலேயே அதிக அளவாக உயர்கல்விச் சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் 47 சதவிகிதம் என உயர்ந்துள்ளமைக்கு இத்திட்டத்தின் பங்களிப்பும் முதன்மைக் காரணமாகும். இத்திட்டத்தின்கீழ் 4.13 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

தோழி விடுதிகள்

குடும்பத்தின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் பங்களிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் இருப்பிடங்களை விட்டு நகரங்களுக்கு வரும் பெண்களுக்கு நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில், பாதுகாப்பான தங்கும் வசதி அளிக்கும் நோக்கத்தில் 2021 ஆம் ஆண்டு தோழி விடுதிகள் திட்டம் தொடங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரல் ரேகை உள்நுழைவு, 24 மணிநேரமும் பாதுகாவலர் வசதி, கண்காணிப்புக் கருவி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கட்டணமில்லா இணைய வசதிகள் எனப் பல்வேறு சிறப்பம்சங்களுடன் இவ்விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது 16 மாவட்டங்களில் 19 தோழி விடுதிகள் பணிபுரியும் மகளிருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், தொழிற்சாலைகள் அடர்த்தியாக உள்ள ஸ்ரீபெரும்புதூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வெளிமாவட்டங்கள், வெளிமாநிலங்களிலிருந்து வேலைவாய்ப்புத் தேடி வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் சுமார் ரூ.706 கோடி மதிப்பீட்டில் 18,720 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் விடுதி இந்தியாவிலேயே முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரியான திட்டங்கள் மூலம், இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களை (43%) அதிகமாகக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 15.80 இலட்சம் பெண்களில், 6.79 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர்.

தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை – 2024

பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையிலும் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் நோக்கிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை – 2024 வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையானது பெண்களுக்குக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சம வாய்ப்பு, அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தி நலவாழ்வினை உறுதி செய்தல், வன்கொடுமை மற்றும் பாகுபாடுகளைக் களைதல், பணியிடங்களில் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது. மேலும், பெண்களுக்கு நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கிட பல்வேறு துறைகளுடன் இணைந்து திட்டங்களைச் செயல்படுத்துதல், தலைமைப் பண்புப் பயிற்சி, திறன் பயிற்சி மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் பெண் பிரதிநிதிகளுக்கு அரசியல் அதிகாரமளித்தல் ஆகியவற்றையும் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TNWeSafe)

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு என்ற புதிய திட்டம் உலக வங்கி உதவியுடன், 2024-ஆம் ஆண்டு முதல், ரூ.1,185 கோடியில் 5 ஆண்டுகளில், செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதில், ரூ.168 கோடி மதிப்பிலான திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு

வருகிறது. இத்திட்டத்தின்படி பெண்களின் திறமைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப தரமான வேலைவாய்ப்புத் திட்டம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மகளிருக்குப் பயனளிக்கக்கூடிய திறன் மேம்பாடு, தொழில்முனைவு, உளவியல் கலந்தாய்வு, வேலைவாய்ப்பு தொடர்பான விவரங்கள், பெண்களின் பணியிடப் பாதுகாப்பு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் வகையில் மகளிர் தகவல் வங்கி இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும்.

காலை உணவுத் திட்டம்

அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டையும், பசியையும் களையும் நோக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குழந்தைகளுக்கு மட்டுமின்றி, பணிக்குச் செல்லும் தாய்மார்களுக்கும் பேராதரவாகத் திகழ்கிறது. இத்திட்டம் மூலம் சமூக நலம் பேணப்படுவதோடு குடும்பங்களின் பொருளாதாரச் சுமையினைக் குறைத்து சேமிப்புக்கும் வழிவகை செய்யப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழு இயக்கம்

பெண்களின் சமூக முன்னேற்றத்திற்காகவும் பொருளாதாரத் தற்சார்புக்காகவும் 1989இல் அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கம் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான முக்கிய முன்னெடுப்பாகும். சுய உதவிக் குழு இயக்கம் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை அறிந்த மத்திய அரசு 1999இல் ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனா (SJSY) திட்டத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலத்தில் ஆல் போல் தழைத்த மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது அறுகு போல் வேரோடியது. இன்று விழுதுகளாகப் பரவி ஒரு மாபெரும் மகத்தான மக்கள் இயக்கமாக, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கி வருகிறது.

புதிய சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் மொத்தம் 4.73 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. ஊரகப் பகுதிகளில் 7,58,489 மகளிரைக் கொண்டு 59,616 சுய உதவிக் குழுக்கள் கடந்த நான்காண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளன. நகர்ப்புர ஏழைகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக 67,664 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நிதி உள்ளாக்கம்

கடந்த நான்காண்டுகளில் ரூ.1.13 இலட்சம் கோடி வங்கிக் கடன் 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பெண்களின் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், கூடுதல் வருமானத்தை ஈட்டவும் பெருமளவு உதவிபுரிகிறது.

சுழல் நிதி

புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் ரூ.134.60 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.801.62 கோடி, நலிவு நிலைக் குறைப்பு நிதியாக ரூ.19.90 கோடி விடுவிக்கப்பட்டுள்ளன.

வாழ்வாதாரத் திட்டங்கள்

சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, சுய வேலைவாய்ப்புகளையும் திறன் சார்ந்த ஊதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் 60:40 என்ற

நிதி விகித அடிப்படையில் ஒன்றிய மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பண்ணைசார் வாழ்வாதார நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கடந்த நான்காண்டுகளில் ஊரகப் பகுதிகளில் 1680 பெண் விவசாயிகளைக் கொண்டு ரூ.6 கோடி செலவில் 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் பல்வேறு விவசாயப் பயிர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

இயற்கை வேளாண் தொகுப்புகள் ரூ.3 கோடி செலவிலும் ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் ரூ.33.30 கோடி செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவை முறையே இயற்கை விவசாய சாகுபடிப் பொருள்கள் விற்பனையை மேம்படுத்தவும், பெண் விவசாயிகள் தங்கள் வேளாண் நடவடிக்கைகளை ஒரு தொகுப்பு அணுகுமுறையில் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைக்கவும் ஆதரவளிக்கின்றன. மேலும், உற்பத்தியாளர் குழுக்கள், நாட்டுக் கோழி வளர்ப்பு, உள்ளூர் ஆடு இனங்கள் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற பண்ணைசார் வாழ்வாதாரத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பண்ணைசாரா வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் 35,559 சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூ.151.96 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. தொடக்க கிராமத் தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ் 4,457 நிறுவனங்களுக்கு சுழல் நிதியாக ரூ.17.82 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டத்தின்கீழ் ரூ.77.71 கோடி வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் 3,512 உற்பத்தியாளர் குழுக்கள், 1,002 தொழில் குழுக்கள், 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், 2,526 சமுதாயத் திறன் பள்ளிகள், 6 ஆயிரம் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் ஆகிய திட்டங்களுக்காக ரூ.114.95 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 12,701 தொழில்முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரப் பகுதிகளைப் பொறுத்தவரை சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 27,837 பேருக்கு ரூ.162.86 கோடி, 17,624 குழுக்களுக்கு ரூ.589.21 கோடி தொழில் கடனாக வங்கிகள் மூலம் பெற்றுத்தரப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி ரூ.62.15 கோடி செலவில் 27,865 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான ஒருங்கிணைந்த அதிகாரப்பகிர்வு மூலம் வறுமை ஒழிப்பு, சமூக மாற்றம், சமூகப் பொருளாதார மேம்பாடு, நிதி உள்ளாக்கம் ஆகியவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் சாத்தியமாக்குவதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நாட்டிலேயே முன்னிலை வகிக்கிறது.

ஆண்களுக்கு நிகரான உரிமையைப் பெண்களும் பெறவேண்டும் என்றால் கல்வியறிவு அடிப்படை என்றும், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பொருளாதாரச் சுதந்திரம் அவசியம் என்றும் வலியுறுத்தினார் தந்தை பெரியார். பகுத்தறிவுப் பகலவனின் பொன்மொழிக்கேற்ப பெண்களுக்குக் கல்வி அளிப்பதிலும், பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுப்பதிலும் இன்று முனனத்தி ஏராக நிற்கிறது தமிழ்நாடு. பெண்ணே, தமிழரின் மேன்மையைக் காப்பாய்; தமிழகம் நமதென்று ஆர்ப்பாய்; தடையினைக் காலினால் தேய்ப்பாய் என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் அனைத்துக் காரணிகளையும் தமிழ்நாடு காலந்தோறும் தகர்த்தெறிந்து வருகிறது. தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவராக மட்டுமின்றி, இந்தியத் திருநாடே வியந்து போற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வகுத்துத் தந்த கொள்கைப் பாதையில் பயணிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள் முன்னேற்றம் கண்கள் மாதிரி; பெண்கள் முன்னேற்றம் இதயத் துடிப்பு மாதிரி என்று கூறுவதோடு மட்டுமல்லாமல், திட்டங்களையும் வகுத்து மகளிர் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் ஒரு பொற்கால ஆட்சியை வழங்கி வருகிறார் என்றால் அது மிகையல்ல!


தொடக்க விழ
தொடங்கி
திரு
மா
XXXX
XXXX
XXXX
Anandhi Murugan



அறம்

காக்கும் ஆட்சி

செல்வ புவியரசன்
உதவி இயக்குநர்
தமிழ் இணையக் கல்விக்கழகம்



ஆலயங்கள் சமுதாய மையங்கள் என்றார் தவத்திரு குன்றக்குடி அடிகளார். தமிழர் நாகரிகமே திருக்கோயில்களை மையமாகக் கொண்டது என்பது அவரது பார்வை. 'தமிழ்நாட்டின் அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய அனைத்துமே திருக்கோயில்களின் வட்டத்தைச் சேர்ந்தே இயங்கியுள்ளன; வளர்ந்துவந்துள்ளன... இறைமைத் தத்துவத்தின் வழிநின்று மக்கள் சமுதாயத்தை ஒருங்கிணைக்க சமுதாய மேம்பாட்டிற்குரிய நெறிமுறைகளைக் காண சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு உருவம்கொடுக்கத் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு இயங்கினர்; செயல்பட்டனர் என்பதை அடிகளாரின் நூல்கள் ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றன. தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை ஆற்றிவரும் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் தமிழினத்தின் அந்தத் தெள்ளிய பார்வைக்குச் சான்றுகளாக அமைந்திருக்கின்றன. அரசு ஆற்றிவரும் அறப்பணிகளை குன்றக்குடி அடிகளார் காட்டிய அறிவொளியின், அருள்நெறியின் வழியே விளக்க முயல்கிறது இக்கட்டுரை.

துயர் தணிக்கும் அரும்பணி

ஏழாம் நூற்றாண்டில் திருவீழிமிழலை வட்டத்தில் பஞ்சம் வந்துவிட்டது. எங்கும் வறட்சி! வறட்சியினால் ஏற்பட்ட துயர் தணிக்க திருவீழிமிழலையில் உறையும் எந்தை ஈசனே முன்வந்தான்! வறட்சித் துயர் தணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திருத்தொண்டர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோருக்கு நாளும் பொற்காசு வறட்சியொழிப்புக்கு மானியம் தந்தருளினன்; திருக்கை வழக்கம் தந்தருளினன். வறட்சித் துன்பம் தெரியாமல் பலர் உண்டு மகிழ்ந்தனர். ஆதலால், துன்பம் வந்துற்ற பொழுதும் தொழுத கைத் துன்பம் துடைக்கும் கலையிலும் திருக்கோயிலே முன்னின்றது. (தவத்திரு குன்றக்குடி அடிகளார், ஆலயங்கள் சமுதாய மையங்கள், 1987; இக்கட்டுரையில் மேற்கோள் குறியிட்ட வாக்கியங்கள் அனைத்தும் அடிகளாரின் மேற்கண்ட நூலிலிருந்து எடுத்தாளப்பட்டவை.)

தேவார காலத்தின் துயர் தணிப்பு திராவிட மாடல் ஆட்சியில் மென்மேலும் மிளிர்கிறது. கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் 2021 மே, ஜூன் மாதங்களில் உணவு தேவைப்படுவோரின் பசியினைப் போக்க அனைத்து மாவட்டங்களிலுமாக மொத்தம் 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன என்பதே அதற்குச் சான்று. இயற்கைப் பேரிடர்களின்போது உணவு வழங்கும் பணிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. 2023 டிசம்பரில் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெள்ள நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களுக்கு 50,000-க்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வள்ளலாரின் வழியில்

திருவருட்பிரகாச வள்ளலார் பிறந்த 200-ஆவது ஆண்டு விழாவுடன், தருமசாலை தொடங்கியதன் 156 ஆவது ஆண்டு விழா, ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 ஆவது ஆண்டு விழா ஆகியவற்றையும் இணைத்து முப்பெரும் விழாக்கள் அறநிலையத் துறையின் சார்பில், 2022 அக்டோபர் முதல் ஓராண்டு காலம் வாரந்தோறும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் கொண்டாடப்பட்டன. வள்ளலாரின் அருள்நெறியைப் பரப்புவதிலும், பின்பற்றுவதிலும் இந்த ஆட்சி முன்னெடுத்துவரும் முயற்சிகளுக்குத் திருக்கோயில்களில் தொடங்கப்பட்டுவரும் அன்னதான இயக்கமே சாட்சி.

திருவரங்கத்திலும் பழனியிலும் மட்டுமே நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் செயல்பட்டுவந்த நிலையில், திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஆண்டுதோறும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுவருகிறது. செப்டம்பர் 16, 2021 இல் திருச்செந்தூர், திருத்தணி,

சமயபுரம் கோயில்களிலும் டிசம்பர் 31, 2022 அன்று மதுரை, இராமேஸ்வரம், திருவண்ணாமலை கோயில்களிலும் ஜனவரி 21, 2024 அன்று பெரியபாளையம், மேல்மலையனூர், ஆனைமலை கோயில்களிலும் டிசம்பர் 26, 2024 அன்று கள்ளழகர், மருதமலை கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் 13 திருக்கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானமும் 758 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் பக்தர்கள் பயனடைந்துவருகிறார்கள். 25 திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுவருகிறது. "அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க" என்னும் வள்ளலாரின் வார்த்தைகள் இன்று உண்மையாகியுள்ளன.

மனையறம்

சுந்தரருக்கு இறைவனேதிருமணம்செய்துவைத்தான்.திருக்கோயில்கள் மனையறத்தின்மாண்பறத்தையும்விளக்குபவை. வளர்ப்பவை.பொருளாதாரத்தில் பின்தங்கிய 500 இணைகளுக்குச் சீர்வரிசைகளுடன் திருமணத்தை நடத்திவைப்பதோடு அதற்கான செலவையும் திருக்கோயில்கள் ஏற்கும் என 2022–2023இல் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. 500 என்ற எண்ணிக்கையுடன் தொடங்கிய திருமணங்களுக்கான அறிவிப்பு அடுத்தடுத்த நிதியாண்டுகளில் 600, 700 என்று உயர்ந்துகொண்டுவருகிறது. தற்போது, நான்கு கிராம் பொன்தாலி, பட்டுப்புடவை, பட்டுவேட்டி உள்பட ரூ.60,000/- மதிப்புள்ள சீர்வரிசைகளுடன் திருமணம் நடத்திவைக்கப்பட்டு வருகின்றன. மனையறத்தைச் சிறப்பிக்கும் திருக்கோயில் பணியை மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த வகையில் அறநிலையத் துறை நடத்திவருகிறது.

கல்வியறம்

திருவாவடுதுறைத் திருக்கோயிலில் இலக்கணமும், திருவாமாத்தூர் திருக்கோயிலில் திருமுறையும் பயிற்றுவிக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருக்கோயில்கள் கல்வி கற்பிக்கும் அமைப்புகளாகவும் விளங்கின. இன்றும் விளங்குகின்றன. திருக்கோயில்கள் சார்பில் ஒரு பல்தொழில்நுட்பக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகள் நடத்தப்பட்டுவருகின்றன. திருக்கோயில்கள் சார்பில் 25 பள்ளிகளும், திருமடங்களின் சார்பில் 7 பள்ளிகளும் நடத்தப்பட்டுவருகின்றன.

இவ்வாட்சியில், நவம்பர் 1, 2021 அன்று கொளத்தூரில் தொடங்கப்பட்டுள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மிகச்சிறப்பான கல்விப் பணியாற்றுவதோடு சைவ சித்தாந்தச் சான்றிதழ்ப் படிப்பையும் நடத்திவருகிறது. பழனி திருக்கோயில் சார்பில் நடத்தப்பட்டுவரும் பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் காலைச் சிற்றுண்டியும், மதிய உணவும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், பதிப்பகப் பிரிவு தொடங்கப்பட்டு, முதற்கட்டமாக 108 அரிய நூல்களும் இரண்டாம் கட்டமாக 108 அரிய நூல்களும் மூன்றாம் கட்டமாக 300 அரிய நூல்களும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரையில், மொத்தம் 203 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டு இந்நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய வலையமைப்பைக் கொண்ட பதிப்பகமாக, இந்து சமய அறநிலையத் துறையின் பதிப்புப் பிரிவு செயல்பட்டுவருகிறது. திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்டுவந்த 38,928 ஏடுகள் கொண்ட 390 ஓலைச்சுவடிகள், ஏறத்தாழ 1,78,000 சுருணை ஓலை ஆவணங்கள், 91 செப்பேடுகள் மற்றும் செப்புப் பட்டயங்கள் தொகுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றின் பதிப்பும், ஆய்வுகளும் தமிழ்நாட்டின் வரலாற்றுத் துறைக்கும் சமயத் துறைக்கும் மிகப் பெரிய பங்களிப்பாக அமையும்.

மருத்துவ அறம்

திருக்கோயிலைச் சார்ந்த வாழ்க்கைமுறையில் மருத்துவம் சிறந்த முறையில் விளங்கியிருக்கிறது. திருவாவடுதுறையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்தது என்று விக்கிரமச் சோழன் கல்வெட்டுக் (கி.பி.1131) கூறுகிறது. காஞ்சிபுரம் பக்கத்தில் உள்ள திருமுக்கூடல் கல்வெட்டு கி.பி.1067இல் திருக்கோயில் வருமானத்திலிருந்து வீரசோழன் என்றபெயரால்மருத்துவச்சாலையும்மருத்துவக்கலாசாலையும்நிருவகிக்கப்பெற்றன. அவற்றில் ஓராண்டுக்குத் தேவையான மருந்து வகைகள் இருந்தன என்று பல்வேறு செய்திகளைக் கூறுகிறது. 2021 இல் இவ்வரசு பொறுப்பேற்றது முதல் பழனி, சமயபுரம், திருச்செந்தூர் உள்ளிட்ட மொத்தம் 17 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நானிலமும் போற்ற அரசாண்ட சோழர்களின் அறப்பணிகள் திராவிட மாடல் அரசின் அறம் காக்கும் ஆட்சியிலும் தொடர்கின்றன.

திருப்பணிகளின் பொற்காலம்

இவ்வரசு பொறுப்பேற்றுக்கொண்டது முதலாக பிப்ரவரி 3, 2025 வரையில் 2,504 திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவுற்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மேலும் 23,234 திருப்பணிகள் 12,202 திருக்கோயில்களில் நடைபெற்றுவருகின்றன.

திருக்கோயில் பணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது, ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோயில்களுக்கான திருப்பணியாகும். இவ்வகையில் மட்டும், 274 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (2024-25 நிதியாண்டு வரையில்). மாநில அளவிலும் இணை ஆணையர் மண்டல அளவிலும் வல்லுநர் குழுக்களின் வழிகாட்டுதலோடு இந்தப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வல்லுநர்க் குழுக்களில் ஆகம வல்லுநர்கள், ஸ்தபதிகள், பொறியாளர்களுடன் பேராசிரியர் சு.இராசவேலு, கி.ஸ்ரீதரன், சொ.சாந்தலிங்கம் முதலான தமிழ்நாட்டின் புகழ்பெற்ற தொல்லியல் வல்லுநர்களும் பங்குபெற்றுள்ளனர்.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றதும் ஊரகத் திருக்கோயில்களுக்கான திருக்கோயில் நிதி ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு 2021-2022ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கும், 2022-23ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கும், 2023-24ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மேற்கொள்வதற்குவழங்கப்படும்நிதியுதவிரூ.2இலட்சத்திலிருந்துரூ.2.5இலட்சமாகஉயர்த்தப்பட்டுள்ளது. இது போலவே, 2021-22, 2022-23, 2023-24 நிதியாண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக ஆண்டுதோறும் 1,250 திருக்கோயில்களுக்கு ரூ.2 இலட்சம் வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2024-25இல் 1250 திருக்கோயில்களுக்கான நிதியுதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

ஒளிமயமான 'ஒரு கால பூஜை'

அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, நிதிவசதி இல்லாத 12,959 திருக்கோயில்கள், ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் தலா ரூ.1 இலட்சம் வைப்புத் தொகையிலிருந்துகிடைக்கும்வட்டியிலிருந்துபயன்பெற்றுவந்தன.இவ்வரசு பொறுப்பேற்றுக்கொண்டதும், இந்தத் தொகையை இரட்டிப்பாக்கி ரூ.2 இலட்சமாக உயர்த்தியிருக்கிறது. 2022-2023 இல் மேலும் 2000 திருக்கோயில்களுக்கும் 2023-2024இல் மேலும் 2,000 திருக்கோயில்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டதால், பயன்பெறும் கோயில்களின் எண்ணிக்கை 17,000 ஆக உயர்ந்துள்ளது.

2024-2025சட்டமன்றஅறிவிப்பின்படிஒருகாலபூஜைத்திட்டத்தின்கீழ்பயன்பெறும்திருக்கோயில்களின் வைப்புத்தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படவுள்ளதோடு மேலும் நிதிவசதியற்ற 1,000 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது. திருக்கோயில்களுக்கு மட்டும் இத்திட்டம் ஒளியேற்றவில்லை; 2021-2022 நிதியாண்டிலிருந்து ஒரு கால பூஜைத் திட்ட அர்ச்சகர்களுக்கு முதன்முறையாக மாத ஊக்கத்தொகை ரூ.1,000/- வழங்கப்பட்டுவருகிறது. அவர்களது குழந்தைகளின் நலன்கருதி கடந்த இரண்டாண்டுகளில் 900 மாணவர்களுக்கு மேற்படிப்புக்காகத் தலா ரூ.10,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அன்னைத் தமிழில் வழிபாடு

'திருக்கோயில் வளாகத்தில் தமிழோடு இசைப் பாடல் ஓதப்பெற்றது; தமிழாய்வு செய்யப் பெற்றது... திருக்கோயிலைத் தமிழ் வளர்த்தது. தமிழைத் திருக்கோயில் வளர்த்தது'. இவ்வரசு பொறுப்பேற்ற பின், முதற்கட்டமாக 48 முதுநிலைத் திருக்கோயில்களில் அன்னைத் தமிழ் வழிபாடுகள் தொடங்கிவைக்கப்பட்டு, தற்போது மொத்தம் 294 கோயில்களில் நடைபெற்றுவருகின்றன. அன்னைத் தமிழ் வழிபாட்டை ஊக்குவிக்க, கட்டணத்தில் 60 விழுக்காடு அர்ச்சகர் பங்குத்தொகையாக வழங்கப்பட்டு வருவதோடு, 14 போற்றி நூல்களும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்

திருக்கோயில்களில் சாதிப் பாகுபாடின்றித் தகுதியுள்ள அனைவருக்கும் சமவாய்ப்பினை வழங்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் "அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" திட்டத்தின்படி, இதுவரை 29 அர்ச்சகர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2022-23இல் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து, பயிற்சி முடித்த 3 பெண்கள் உட்பட அனைத்து சாதிகளையும் சேர்ந்த மொத்தம் 94 அர்ச்சகர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அர்ச்சகர்ப் பயிற்சியில் மட்டுமின்றி ஓதுவார்கள் நியமனத்திலும் பெண்களுக்கு வாய்ப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு நியமிக்கப்பட்ட 42 ஓதுவார்களில், 11 பெண் ஓதுவார்களும் உள்ளடங்குவர். எல்லார்க்கும் எல்லாம் என்ற சமூகநீதித் தத்துவம் இறைவழிபாட்டிலும் எதிரொலிக்கிறது. அரசு உயிர்த்தே அருள்நிறை உலகம்!

ஓர் ஏர் உழவர் காக்கும் அரசு



ந. செல்லப்பா
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்



எண்சாண் உடம்புக்குத் தலையே முதன்மையாக உள்ளது போல் தமிழர்களுக்கு வேளாண்மையே முதன்மைத் தொழிலாக இருந்துள்ளது. உலகின் தொல் தொழிலான வேளாண்மையில் தமிழர்கள் சிறப்புற்று விளங்கியதற்குத் தொல்லியல் சான்றும் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைத்துள்ளன. வேளாண்மையைப் போற்றும் இலக்கியப் படைப்புகளும் நம்மிடம் ஏராளமாக உள்ளன. வேளாண்மையின் மேன்மையைக் கூறுவதற்காக அய்யன் வள்ளுவர் படைத்த 'உழவு' என்னும் அதிகாரத்தின் முதல் குறளே உழவை உயரிய இடத்தில் இருத்துகிறது:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை"

எல்லாத் தொழில்களிலும் முதன்மையானது உழவுத் தொழில் என அய்யன் மொழிந்துள்ளார்.

ஒரு நாட்டில் ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டும், உயர்ந்தவர்கள் போற்றப்பட வேண்டும், மக்களுக்கு அறத்தில் நம்பிக்கை வேண்டும். இந்த மூன்றும் ஒரு நாட்டில் உயிர்பெற்றுத் திகழ வேண்டுமாயின் ஆட்சியும், பண்பாடும் நிலைக்க வேண்டுமாயின், அந்நாடு வேளாண்மையில் சிறப்புற்று விளங்க வேண்டும். இக்கருத்தை இலக்கிய நயத்துடன் வெளிப்படுத்துகிறது தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம். அதில் இளங்கோவடிகள், மன்னனும் மக்களும் உழவர்களை எதிர்நோக்கியே வாழ்கிறார்கள் என்பதை "புரப்போர் கொற்றமும் இரப்போர் சுற்றமும் உழவிடை விளைப்போர்" எனத் தெளிவுறுத்துகிறார். இந்தச் செய்திகளைச் சுவைபட எழுதியுள்ளார் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட வேளாண்மையும் பண்பாடும் (1974) என்னும் நூலில் நூலாசிரியரும் அப்பல்கலைக்கழக மொழித் துறையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவருமான இல.செ. கந்தசாமி.

தொன்மைத் தமிழ் இலக்கியங்களில் தலையாய தொழிலாகப் போற்றப்படும் உழவுத் தொழிலைப் பேணிக்காத்தலை அற நெறிபோல் கருதியுள்ளனர் தகைசால் தமிழர்கள் என்பதற்கான சான்று கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளது. அந்தத் தமிழர்கள் வழிவந்தோர் தேர்ந்தெடுத்த தற்போதைய தமிழ்நாடு அரசும் வேளாண் துறையை மேம்படுத்தும் அரும்பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகிறது. வேளாண்மை உழவர் நலத்துறை எனத் துறையின் பெயரை மாற்றியதுடன் வேளாண்மை சிறப்பதற்காகத் தொலைநோக்குடன் வேளாண் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை கண்டுள்ளது தமிழ்நாடு அரசு. அத்துடன் உழவு செழிக்கவும் உழவர் மேன்மையுறவும் பல திட்டங்களையும் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

வேளாண் துறைக்காகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட அரசின் முதல் நிதிநிலை அறிக்கையிலேயே, நிகர சாகுபடிப் பரப்பை 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதே நேரத்தில், ஜப்பானின் வேளாண் புரட்சி நாயகர் மசானபு ஃபுகோகாவின், வேளாண்மையின் இறுதி இலட்சியம் "பயிர்களை வளர்ப்பதன்று; மனிதர்களை வளர்த்து முழுமைபெறச் செய்வதுதான்" என்னும் கூற்றையும் இந்த அரசு சிந்தையில் கொண்டே செயல்படுகிறது. அதனால்தான் முதல் நிதிநிலை அறிக்கையே இந்தியத் தலைநகரில் வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காகப் போராடிய உழவர்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டது.

வேளாண்மைக்கென இதுவரை ஐந்து நிதிநிலை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஐந்து அறிக்கைகளுமே உழவர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், அறிவியல் ஆய்வாளர்கள், மீனவர்கள் எனப் பலதரப்பினரின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் பெற்றே உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே, உழவர்தம் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கப்பட்டுள்ளன, அவர்தம் வேண்டுகோள்கள் நிறைவேற்றும் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

சாகுபடிப் பரப்பை உயர்த்துதல், தானியங்கள் உற்பத்தியை அதிகரித்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளித்துச் செயல்பட்டுவருகிறது தமிழ்நாடு அரசு. குறுவை சாகுபடிக்கெனக் குறித்த நாளில் 2021 ஜூன் 12 அன்றும், குறித்த நாளுக்கு முன்னதாகவே 2022 மே 24 அன்றும் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. அத்துடன் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டமும் வழங்கப்பட்டதால் சற்றேறக்குறைய 5 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டதுடன் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளின் வருமானமும், வாழ்வாதாரமும் உயர்ந்திட வழிவகுக்கப்பட்டது. இது கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத வரலாற்றுச் சாதனையாகும்.

உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு அரசு இலக்கை எட்டுவதற்குப் பெரும் தடைக்கற்களாய் இருப்பவை இயற்கைப் பேரிடர்கள். புயலும் மழையும் நமது வேளாண்மையைக் கடுமையாகப் பாதித்துவருகின்றன. பெரும்பாலான ஆண்டுகளில் வறட்சியால் பயிர் கருகும்; இல்லையெனில் வெள்ளநீரில் மூழ்கும். பேரிடரால் அறுவடை பாதித்துவிடும் துயரம் தமிழுழவர் வாழ்வில் தொடர்கதையே. துயர் துடைக்க ஒன்றியத்திலிருந்து நிதிபோதுமான அளவுக்குக் கிட்டாதபோதும், பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி உரிய நிவாரணத் தொகையைத் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் வழங்கிவருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட 18.10 இலட்சம் விவசாயிகளின் துயர் துடைக்க ரூ.1,379.44 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொண்டபோதும், உணவு தானிய உற்பத்தியில் இலக்கை எட்ட இயன்றவரையிலும் போராடி வருகிறார்கள் நம் உழவர்கள். உழவர்களின் கடும் உழைப்பால், 2021–2022 ஆம் ஆண்டில் 119.98 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியைப் பெற்றது தமிழ்நாடு. 2022–2023, 2023–2024 ஆகிய ஆண்டுகளில் இயற்கைப் பேரிடர் இன்னல் விளைவித்த காரணத்தால் உணவு தானிய உற்பத்தியில் நிர்ணயித்த இலக்கை எட்ட இயவில்லை என்றபோதும், இலக்கின் மிக நெருக்கமான அளவிலான உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 2024இல் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் 104.98 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியைத் தமிழ்நாடு கண்டுள்ளது. கடந்த ஆண்டைவிட அதிகமான அளவில் உணவு தானியங்கள் உற்பத்தியாகும் என்ற எதிர்பார்ப்பு நிலவுவது நம்பிக்கையளிக்கும் வகையில் உள்ளது.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் சாகுபடிக்குத் தேவையான விதை விநியோகத்தில் தொடங்கி, உழவுக் கருவிகளை அளித்தல், சாகுபடியான தானியங்களைப் பாதுகாக்க உதவுதல், வேளாண் பொருள்கள் விற்பனைக்கு உதவுதல் என அனைத்து நிலைகளிலும் உதவிவருகிறது தமிழ்நாடு அரசு. 2021–2022 முதல் 2023–2024 வரையான மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூ.14.958 கோடி செலவில் 1,74,884 தார்பாய்கள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது ஒரு சிறு சான்று.

குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம், வேளாண் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நெல் உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்திக்கு உரிய கவனம் கொடுக்கப்படுகிறது. பொதுமக்களின் உணவுப் பழக்கத்தில் அண்மைக்காலமாக மீண்டும் சிறுதானியங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதைக் கருத்தில்கொண்டு, சிறு தானிய சாகுபடிப் பரப்பையும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்காகத் தமிழ்நாடு அரசின் உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு சிறு தானிய இயக்கம் முன்னெடுக்கப்படுகிறது. இவ்வியக்கத்தின்கீழ், சிறு தானிய உழவர் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன; தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன; தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள், சிறுதானிய மதிப்புக் கூட்டல் மையங்கள், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன.

இப்படியான முன்னெடுப்புகளால், கடந்த நான்கு ஆண்டுகளில் சிறு தானிய சாகுபடிப் பரப்பு 4,023 ஏக்கர் அதிகரித்துள்ளது; மக்காச்சோளம் சாகுபடிப் பரப்பு 1.87 இலட்சம் ஏக்கர் அதிகரித்துள்ளது; மக்காச் சோள உற்பத்தி 4.25 மெட்ரிக் டன் அதிகரித்துள்ளது. வரகு உற்பத்தித் திறன் 199 கி/ ஏக்கர் அளவு அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசு உழவர் நலத் துறையில் காட்டிவரும் ஈடுபாட்டை இந்தப் புள்ளிவிவரங்கள் தக்கவகையில் எடுத்துக்காட்டுகின்றன.

2023–2024 ஆம் ஆண்டு இறுதி மதிப்பீட்டின் படி, இந்திய அளவில் தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதலிடத்திலும், கேழ்வரகு சாகுபடிப் பரப்பு, உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும், சிறு தானியங்கள் உற்பத்தித் திறனில் மூன்றாம் இடத்திலும், கம்பு உற்பத்தித் திறனில் நான்காம் இடத்திலும் உள்ளது என்பனவற்றை வேளாண் துறையில் இந்த நான்காண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இதைப் போன்றே பயறு வகைகளைப் பெருக்குவதன் பொருட்டு, பயறு பெருக்குத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு, பயறு வகைகளின் உற்பத்தித் திறன் 56 கிலோ/ஹெக்டர் எனும் அளவுக்கு அதிகரித்துள்ளது. எள், சூரியகாந்தி, ஆமணக்கு, நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துகளைப் பெருக்குவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத்தி, கரும்பு போன்ற உணவு தானியமல்லாத பயிர்களைப் பெருக்கவுமான திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் தரமான சாகுபடி நடைபெற வேண்டும். தரமான சாகுபடிக்கு உரிய விதைகள் உழவர்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆகவே, தமிழ்நாடு அரசு உரியவகையில் விதைகளை உற்பத்திசெய்து, விநியோகித்துவருகிறது. 2021–2025 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் 1,09,596 மெட்ரிக் டன் சான்று விதைகள் உற்பத்திசெய்யப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக 42,71,064 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது கிராம ஊராட்சிகளில் வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை உள்ளிட்ட சில துறைகளின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டமானது கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் ரூ.786.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆதிதிராவிட, பழங்குடியின உழவர்கள் பயன்பெறும் வகையில் 1,611 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 50.70 இலட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

இயற்கை வேளாண்மையிலும் இந்த அரசு உரிய கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. இதற்குச் சான்று பகர்கின்றன நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நம்மாழ்வார் விருது போன்ற முன்னெடுப்புகள். தமிழ்நாடு அரசு, வேளாண்மையை வளர்த்தெடுக்கும் திட்டங்களுடன் உழவர் நலனைப் பேணவும் அவர்களைப் பெருமைப்படுத்தவும் தவறுவதில்லை. ஆகவேதான் இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்கிய நம்மாழ்வாரைப் போற்றும் வகையில் அவர் பெயரில் இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. ஐந்து இலட்ச ரூபாய் பணப்பரிசுடன், பாராட்டுப் பத்திரமும் கொண்டது இவ்விருது. 2023–2024, 2024–2025 ஆகிய ஆண்டுகளில் தலா 3 உழவர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

ஆற்றலும், வேகமும் கொண்ட இளைஞர்களுக்கு வேளாண்மையில் உரிய இடத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு பயின்ற இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதில் பட்டதாரி இளைஞர்கள் 435 பேர் பயனடைந்துள்ளனர். அதேபோல் ஊரக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதுவரை 701 இளைஞர்கள் இத்தகைய திறன் மேம்பாட்டுப் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்திய உழவர் சந்தைத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து பேணிக்காத்து மேம்படுத்திவருகிறது. இந்த நான்கு ஆண்டுகளில் 125 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டுள்ளன; புதிதாக 14 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தைகள் மூலம் உழவர்கள் தம் உழைப்பில் விளைந்த விளைபொருள்களை நேரடியாக விற்று வருவாய் ஈட்டி தற்சார்படையும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண்மையின் விளைவாய்க் கிடைத்த தானியங்களைப் பாதுகாக்க, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உலர்கூடங்கள் அமைத்தல், நவீனக் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தல் எனப் பல்வகையான நடவடிக்கைகள் வேளாண் பொருள்களைப் பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதைப் பெயரளவில் கொள்ளாமல் செயலளவில் கொண்ட தமிழ்நாடு அரசு ஆதிதிராவிட, பழங்குடியின, சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்களது பொருளாதாரச் சுமையைக் குறைத்திடும் வகையில், ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண் இயந்திரங்கள் போன்ற திட்டங்களில் 40 சதவீதம் வரை மானியம் வழங்கி அவர்கள் கூடுதல் பலன்பெற உதவுகிறது.

தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பழங்கள், காய்கறிகள் என அனைத்து வகையான வேளாண் நடவடிக்கைகளுக்கும் இந்த அரசு துணை நிற்கிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற சத்துகள் செறிவூட்டப்பட்ட நெல் ரகங்கள் உருவாக்க தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலத் தோட்டக் கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானிய விலையில் மாடித் தோட்டத் தளைகள் வழங்கப்பட்டு மாடித் தோட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. கரும்பு விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்தியாவில் முந்திரி உற்பத்தியில் நான்காம் இடத்திலுள்ள தமிழ்நாடு முந்திரி ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தில் உள்ளது. ஆகவே, முந்திரி சாகுபடியை மேம்படுத்தும் பொருட்டு முந்திரி வாரியம் செயல்படுகிறது. இப்படி ஒவ்வொரு நடவடிக்கையையும் பார்த்துப் பார்த்துச் செய்துவருகிறது தமிழ்நாடு அரசு.

வேளாண்மை சார்ந்த கல்வி வகையிலும் அரசு தனிக் கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. தமிழ் வழியில் தோட்டக் கலை, வேளாண்மை படிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், பவானிசாகரில், மஞ்சள் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் பனை ஆராய்ச்சி நிலையம், வாழை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை உருவாக்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது.

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், ஒரு கிராமம் ஒரு பயிர், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வேளாண் தொழில் சிறப்புற தமிழ்நாடு அரசு கைகொடுத்து வருகிறது. காவிரி டெல்டா பகுதியில் கடைமடைக்கும் பாசன நீர் கிடைப்பதற்காகக் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மைப் பணிகளில் நீர்ப்பாசனம் மேற்கொள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நகரப் பகுதிகளில் சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையில் பூங்காக்களும் அமைக்கப்படுகின்றன. சென்னையில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா 2024 அக்டோபர் 7 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கன்னியாகுமரியில் முல்லைப் பூங்கா, தஞ்சாவூரில் மருதப் பூங்கா ஆகியவை தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கு இந்திய ஆராய்ச்சிக் கழகம் வழங்கிய சர்தார் படேல் சிறந்த கல்வி நிறுவன விருது; இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு வழங்கிய சிறந்த பல்கலைக்கழக விருது உள்ளிட்ட விருதுகள் உழவர் நலத்துறையில் இந்த அரசு மேற்கொள்ளும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளுக்குச் சான்று பகர்கின்றன. நான்காண்டுகளில் வேளாண் துறை கண்ட எண்ணற்ற சாதனைகளில் சிலவற்றை நினைவுகூரும்போதே தொலைநோக்குப் பார்வையுடன் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கப் பாடுபடும் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை எளிதில் புரிந்துகொள்ளலாம். தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தியில் 13 சதவீதம் பங்களிக்கும் வேளாண்மைத் துறை அதிகமானோருக்கு வேலைவாய்ப்பளிக்கும் துறையாகவும் உள்ளது. இளைஞர்களையும் இத்துறையில் ஈடுபடுத்தும் வகையில் வேளாண்மைத் துறையில் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்துவதால் தமிழ்நாடு அரசின் இலக்கான 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை எட்டுவதில் வேளாண் துறையும் பெரிய அளவில் பங்களிக்கும் என்பதில் ஐயமில்லை.





கல்வியிற் சிறந்த தமிழ்நாடு

த. ராஜன்
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்



இந்திய அளவில் தமிழ்நாடு சிறப்பாகப் பங்களிக்கும் துறைகளுள் ஒன்று கல்வி. பள்ளிக்கல்வியிலும் சரி, உயர்கல்வியிலும் சரி நாம் முன்வரிசையில் நிற்பவர்கள். அதேபோல, கல்வியைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பரவலாக்கியிருப்பதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலம். இதற்கு, தமிழ்நாட்டில் நூறாண்டுகளுக்கும் மேலாக நிலவிவரும் சீர்திருத்த நடவடிக்கைகள் மிக முக்கியமான காரணம். பெண்கள் கல்வி பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்காகத் தந்தை பெரியார், மகாகவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன் என ஒவ்வொரு காலகட்டத்திலும் இங்கே பெண்கல்விக்கு ஆதரவான குரல்கள் உரக்க ஒலித்தன. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் அந்தக் குரல்களுக்குச் செயல்வடிவம் கொடுத்தார்கள். அதற்காகப் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையிலான தற்போதைய ஆட்சிவரை இந்தக் கண்ணி அறுபடாமல் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இன்னுமின்னும் வலுவாகிக்கொண்டிருக்கிறது.

இது ஒருபுறம் என்றால், கல்வி எதிர்நோக்கியிருக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கும் இந்த நான்காண்டு ஆட்சியில் கவனம் கொடுக்கப்பட்டிருப்பது, நாம் கல்வி தொடர்பாக முன்னோடியாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம் என்பதற்கான மற்றொரு எடுத்துக்காட்டாகும். மனிதவள மூலதனத்தை இந்தியா அதிக அளவில் வீணாக்குவதைச் சுட்டிக்காட்டி நம்முடைய நாட்டில் நிலவும் கல்வி தொடர்பான சிக்கல்களை எடுத்துரைக்கிறது பொருளியல் அறிஞர் ரகுராம் ராஜனும், ரோஹித் லம்பாவும் இணைந்து எழுதி அண்மையில் வெளிவந்த 'பிரேக்கிங் தி மோல்ட்' நூல். அதேபோல, இந்தியாவில் 50% பட்டதாரிகள் பணிக்கு அமர்த்தத் தகுதியற்றவர்கள் என்கிறது, 2023இல் வெளியான வீபாக்ஸ் (Wheebox) அறிக்கை. இந்தியா தொடர்பாக இந்த நூலும் அறிக்கையும் முன்வைக்கும் வாதங்களுக்குத் தமிழ்நாடு ஏற்கெனவே முகம் கொடுக்கத் தொடங்கியிருப்பதுதான் நம் மாநிலத்தின் தனித்துவம் எனலாம்.

கல்வி தொடர்பாக இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில், தமிழ்நாடு அரசு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் இவற்றின் முக்கியத்துவத்தை நாமறிவோம். இவைபோக, தொலைநோக்குச் சிந்தனையின் அடிப்படையில் இங்கே சிறிதும் பெரிதுமாகப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய திட்டங்களை நாம் ஐந்து விதமாக வகைப்படுத்தலாம். 1) தமிழ்நாடு ஏற்கெனவே உருவாக்கி வைத்திருக்கும் கல்விக் கட்டமைப்பை வலுவாக்குதல், சீரமைத்தல், தரமுயர்த்துதல், 2) பாடத்திட்டத்துக்கு வெளியே கற்பித்துச் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துதல், 3) விளிம்புநிலையில் இருப்பவர்களுக்கெனத் தனி அக்கறையுடன் திட்டங்கள் வகுத்தல், 4) வளர்ந்துவரும் புதிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப நம்முடைய கல்வி அமைப்பைத் தகவமைத்துக்கொள்ளுதல், 5) பள்ளி, கல்லூரி மாணவர்கள் நீங்கலாக வாசகர்களுக்கும் பொதுமக்களுக்கும் கல்வியறிவூட்டும் செயல்பாடுகளை முன்னெடுத்தல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் அவர் முன் இருந்தமிகப்பெரும்முதல்நெருக்கடி:கொரோனாபெருந்தொற்று.மக்களின்உயிர்ப்பாதுகாப்பும், நோய்மையிலிருந்து சமூகத்தை மீட்டெடுக்கும் பொறுப்பும் அதில் முதன்மையானவையாக இருந்தன. அதேநேரத்தில், பெருந்தொற்றும் ஊரடங்கும் பள்ளிக்குழந்தைகளின் கற்றல் செயல்பாட்டில் உண்டாக்கிய பாதிப்பைப் பெருவாரியான மாநிலங்கள் கண்டுகொள்ளவில்லை. அல்லது, அது அவர்களுடைய முதன்மை அக்கறையாக இருக்கவில்லை. ஆனால்,

தமிழ்நாட்டில், சுகாதார நடவடிக்கைகளை நல்ல விதமாக மேற்கொண்டதைப் போலவே, கற்றல் இடைவெளியைக் குறைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதில் முக்கியமான திட்டம்: இல்லம் தேடிக் கல்வி. "அச்சுறுத்தல் காலத்தில் பல்லாயிரம் மாணவர்கள் கலங்கரை விளக்கமாக இறுகப் பற்றிக்கொண்டு கல்வி உதவிபெற 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' முக்கிய வழித்தடமாக அமைந்தது" என, 'தமிழர் நிதி நிர்வாகம்' நூலில் ஜே.ஜாஃபர், மேத்யூ கோஷி ஒடசேரில் இருவரும் இணைந்து எழுதிய கட்டுரை குறிப்பிடுகிறது. இந்தத் திட்டம் கற்றல் திறனையும் சிந்திக்கும் திறனையும் பன்மடங்கு அதிகரித்ததால், பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகும் இது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. 2021–2022 முதல் 2024–2025 வரை இத்திட்டத்துக்காக ரூ.660.35 கோடி ஒதுக்கப்பட்டு, பின்தங்கிய ஒன்றியங்கள், மலைப் பகுதிகள், நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதிகள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் வாழும் பகுதிகள், கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள் எனக் கொண்டுசெல்லப்பட்டது.

இதேபோன்ற மற்றொரு முக்கியமான திட்டம் 'எண்ணும் எழுத்தும்'. சிறார்களிடையே அடிப்படை கல்வியறிவையும், எண்ணறிவையும் மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்ட திட்டம் இது. தொழிற்கல்விப் பாடத்திட்ட மறுசீரமைப்பு, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகப் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத்திட்டம்,தனிநபர்கள்,முன்னாள் மாணவர்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான 'நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி' திட்டம், தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துதல், தனியார் சுயநிதிப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் 50 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையிலான தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் திட்டம், பள்ளிக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக மாநில மதிப்பீட்டுப் புலம், கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் காணொளிகளாக உருவாக்கி ஒளிபரப்பும் பணிகள் உள்ளிட்ட செயல்பாடுகளின் வாயிலாக நம் கல்விக் கட்டமைப்பை வலுவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்த முக்கியமான நடவடிக்கை, பாடத்திட்டத்துக்கு வெளியே மாணவர்களுக்குக் கற்பிப்பது. இதிலும் பன்முகத்தன்மையிலான அணுகுமுறையைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. கோடை விடுமுறை காலத்தில் குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ், ஆங்கிலக் கதைகளின் தொடர் வாசிப்பு (ரீடிங் மாரத்தான்) நடத்தப்பட்டது. மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல், சிந்திக்கும் திறன்களை வெளிக்கொணரும் விதமாக இல்லம் தேடிக் கல்வி மையங்களில் குறும்படக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. அரசுப் பள்ளி மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த 'வாசிப்பு இயக்கம்' முன்னெடுக்கப்பட்டது. இதன் பகுதியாக, குழந்தைகள் எளிதில் அணுகக்கூடிய மொழியில் நுழை, நட, ஓடு, பற என நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டு, 123 புத்தகங்களும் 1 வாசிப்பு இயக்கக் கையேடும் அச்சிடப்பட்டு, அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டன. கலைத் திருவிழா, வானவில் மன்றம், கோடைக் கொண்டாட்டம், விழிப்புணர்வு வாரம், மகிழ் முற்றம், கல்விச் சுற்றுலா, ஊஞ்சல், தேன்சிட்டு, கனவு ஆசிரியர் போன்ற இதழ்கள், தொல்லியல் பயிற்சி, மனநலப் பயிற்சி, தொழில் பயிற்சி, போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்தும் நடவடிக்கைகள், அயல் மொழிகள் கற்பித்தல், தமிழ் வழியில் பட்டயப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கலை, இலக்கியம், தொல்லியல், உளவியல், தொழிற்கல்வி என வெவ்வேறு துறைகளிலும் மாணவர்களுக்கு அறிமுகம் ஏற்படுத்தும் நோக்கில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், கல்லூரி மாணவர்களுக்காக 'மாபெரும் தமிழ்க் கனவு' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பல்துறை ஆளுமைகளும் இந்நிகழ்ச்சிகள் வாயிலாக மாணவர்களுடன் உரையாடினர். பாடத்திட்டத்துக்கு வெளியே கற்றுக்கொள்ள வழிகாட்டினர். ஏறக்குறைய இரண்டு இலட்சம் மாணவர்களுக்குத் 'தமிழ்ப் பெருமிதம்' நூலும், 'உயர்கல்வி வழிகாட்டி' நூலும் இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக வழங்கப்பட்டன.

அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையை வகுத்துப் பல தசாப்தங்களாகச் செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியிலும் அடுத்தடுத்த கட்டத்துக்கு அதை நகர்த்திச் சென்றிருக்கிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண், நான் முதல்வன், தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்கள் அப்படியான உயரிய நோக்கம் கொண்டவைதான். அறிவுசார் குறைபாடுள்ள மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் அடிப்படை எண்ணறிவையும், எழுத்தறிவுத் திறன்களையும் உறுதிசெய்யும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. சிறப்புப் பயிற்றுநர்கள் வாயிலாக அடையாளம் காணப்பட்ட, அத்தகைய மாணவர்களுக்கு உகந்த தக்க சிறப்புக் கல்வி வழங்க 'நலம் நாடி' செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. சமத்துவக் கல்விக்கான அளவுகோள்களை உறுதிப்படுத்தும் வகையில் உண்டு உறைவிடப் பள்ளிகளாகச் செயல்படும் 'மாதிரிப் பள்ளிகள்', ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பள்ளி வீதம் என மொத்தம் 38 பள்ளிகள் ரூ.352.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டன. மாதிரிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் பலர் பல்வேறு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு 7.5% உள்ஒதுக்கீட்டில் இந்த நான்கு ஆண்டுகளில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள்

பயன்பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தின்கீழ் சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என முழுக் கட்டணத்தையும் அரசே ஏற்கும் என அறிவிக்கப்பட்டது. மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்கான புதிய திறன் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது. இதேபோல, பல்வேறு வகைகளில் உதவித்தொகையும், ஊக்கத்தொகையும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்றன. தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500 ஊக்கத்தொகை, தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ.1,000 ஊக்கத்தொகை, முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி, கல்விக் கட்டண விலக்கு, முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை, முதலமைச்சரின் ஆராய்ச்சி மாணியத் திட்டம் என இந்தப் பட்டியல் நீளும். மிகவும் பின்தங்கிய பின்னணியிலிருந்து வரக்கூடிய மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் இப்படியான முயற்சிகளெல்லாம் உயரிய அக்கறையின் வெளிப்பாடன்றி வேறல்ல.

தொழில்நுட்பங்களின் வளர்ச்சி அதிவேகமாக இருந்துவரும் இந்தக் காலகட்டத்தில் அதற்கேற்ப கல்வி அமைப்பைத் தகவமைத்துக்கொள்வது என்பது அடுத்த செயல்பாடு.அரசுப்பள்ளிகளில்பயிலும்16,77,043மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.455.32 கோடி செலவில் இதுவரை 22,931 திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சமச்சீர் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தின்போது, தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்கனவுகளில்ஒன்றாகஇந்தஸ்மார்ட்வகுப்பறைகள் இருந்தன.2010ஆகஸ்ட்மாதத்தில்இதுதொடர்பானபேச்சுகள் எழத் தொடங்கியதிலிருந்து அடுத்தடுத்த ஆட்சிகளிலும் இது பேசுபொருளாகத் தொடர்ந்தது என்றாலும், இப்போதைய ஆட்சியில் அது தீவிரமான செயல்வடிவம் பெற்றிருக்கிறது. கல்லூரிகளிலும் –குறிப்பாக, தொழில்நுட்பக் கல்லூரிகளில் – திறன்மிகு வகுப்பறைகள் உருவாயின. இணைய சேவை, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஆசிரியர்களுக்குக் கைக்கணினிகள், மெய்நிகர் ஒளிப்பதிவுக்கூடம் என வகுப்பறைகளுக்குள் புதிய தொழில்நுட்பங்கள் அணிவகுத்தன. உயர் தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி உள்ளிட்ட பணிகளுக்கு ஏற்ப திறன்களை வளர்த்தெடுப்பது ஒருபுறம் என்றால், குறைந்த திறன் தேவைப்படும் தயாரிப்பு நிறுவனங்களுக்கான தொழில்திறன்களை வளர்த்தெடுக்கும் நடவடிக்கைகளும் இந்தக் காலகட்டத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்கள் நீங்கலாக வாசகர்களுக்கும் பொதுமக்களுக்குமான கல்விச் செயல்பாடுகள். தமிழ் இலக்கிய நூல்களையும், வரலாற்று நூல்களையும் ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளுக்கு மொழிபெயர்த்து வெளியிடும் பொருட்டு'திசைதோறும்திராவிடம்'திட்டம்தொடங்கப்பட்டது. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வெளியிடப்பட்டது. முதலில் 5 மருத்துவ நூல்களை உள்ளடக்கிய 45 பல்துறை நூல்கள், பிறகு 2024இல் 62 நூல்கள், 2025இல் 32 நூல்கள் என 139 பல்துறை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ், 138 சிறார் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வ.உ.சி. நூல் தொகுப்பு, கலைக் களஞ்சியத் தொகுப்புகள், சிறார் களஞ்சியத் தொகுப்புகள், நூல்கள் நாட்டுடைமையாக்கம், நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்புகள், பெரியார் சிந்தனைகள் மொழிபெயர்ப்பு, அம்பேத்கர் மக்கள் பதிப்பு என அரிய பணிகள் இந்தக் காலகட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் இந்த நான்காண்டு கால ஆட்சியில் கல்விக்கு அதிக அளவில் முக்கியத்துவம் தரப்பட்டிருப்பதை இந்தத் திட்டங்களின் வாயிலாக உணர்ந்துகொள்ள முடியும். தொழிலாளர்கள் கற்பிக்கப்படவும் பயிற்றுவிக்கப்படவும் வேண்டும் என்றும், அப்போதுதான் மனித வளம் செழுமையடையும் என்றும் பொருளியல் அறிஞர்கள் கருத்துரைக்கிறார்கள். புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப அவர்கள் தங்களைத் தகவமைத்துக்கொள்ளும்போதுதான் பணியாற்றும் திறன் மேம்படும் என்கின்றனர் ஆய்வறிஞர்கள். கல்லூரி முடித்துவிட்டு வெளியே வரும் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தாலும், மீண்டும் பயிற்சி அளித்தாலும், பலமுறை மீண்டும் மீண்டும் பயிற்சி அளித்தாலும் அவர்கள் பணிக்குத் தயாராக மாட்டார்கள் என சுபதீப் சிர்காரும் ருச்சி பாட்டியாவும் கூறுகிறார்கள். நல்ல தரமான கல்வி கிடைத்தால் மட்டுமே பணியைச் சிறப்பாக ஆற்ற முடியும் என்கிறார்கள். இவர்கள் வெளிப்படுத்தும் எண்ணங்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு முன்னெடுத்திருக்கும் கல்விச் செயல்பாடுகளில் பார்க்க முடியும். தகவல் தொழில்நுட்பக் கொள்கைக்கென இந்தியாவிலேயே முதன்முதலில் கொள்கை வகுத்து, தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் தமிழ் மாணவர்கள் முன்னேற்றப் பாதையில் பயணிக்க ஏதுவாகக் கல்வித் திட்டங்கள் வகுத்து செயல்பட்ட மாநிலம் தமிழ்நாடு. இப்போது, செயற்கை நுண்ணறிவு யுகத்திலும் தமிழ்நாடு முன்னத்தி ஏர்தான். கல்வித்தகுதி பெற்ற தொழிலாளர்களுக்கான தேவை அதிகரித்தது தாராளமயமாக்கலுக்குப் பிறகுதான். அதன் பின்னரே, கல்விக்காக இந்தியா அதிக அளவில் முதலீடு செய்யத் தொடங்கியது. ஆனால், இவற்றுக்கெல்லாம் ஏற்கெனவே அடித்தளம் அமைத்திருக்கும் தமிழ்நாடு இந்தப் பாதையில் எப்போதும் சில அடிகள் முன்னே வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கும். ●



தொழில் பெருகும்
தமிழ்நாடு



திரு. எம்.ரமேஷ்
மூத்த பத்திரிகையாளர்.



ஒரு மாநிலம் வளர்ச்சியடைந்ததாக உயர வேண்டுமானால் அனைத்துத் துறைகளிலும் அது வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முக்கியமாக, தொழில் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் அதிக அளவில் வேலைவாய்ப்பையும் உருவாக்க வேண்டும். மாநிலத்தில் வாழும் அனைத்து மக்களும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய சீரான ஒருங்கிணைந்த அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எட்டும் வகையில் திட்டங்களைத் தீட்டி அதைச் சிறப்பாக, சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு.

இந்திய மாநிலங்கள் குறித்த வளர்ச்சியை ஒப்பிட்டுப் பேசுகையில் நோபல் பரிசுபெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் "தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்பிட வேண்டும் என்றால் பிற மாநிலங்களுடன் ஒப்பிடாதீர்கள்; வளர்ச்சியடைந்த நாடுகளுடன் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்பிடுவதே சரியானதாக இருக்கும்" என்று குறிப்பிட்டிருந்தார். உலகம் அறிந்த பொருளாதார அறிஞர் தமிழ்நாடு குறித்துக் கூறியுள்ள இந்தக் கூற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தக்க சான்றாக அமைகிறது. அமர்த்தியா சென்னின் கூற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில், தமிழ்நாடு 2024-2025 ஆம் ஆண்டில் 9.69% உண்மைப் பொருளாதார வளர்ச்சி கண்டு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டு முதல் 8%க்கும் அதிகமான வளர்ச்சி வீதத்துடன் சீரான வளர்ச்சியைக் கண்டுவரும் மாநிலமாகத் தமிழ்நாடு இருந்துவருகிறது.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சியானது ஐந்து முக்கியமான காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி, சுற்றுச்சூழல், சம உரிமை. இவை அனைத்திலும் நிலையான வளர்ச்சியைக் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசு எட்டி வருவதன் மூலம் வளர்ச்சியடைந்த மாநிலங்கள் வரிசையில் தமிழ்நாடு தொடர்ந்து மிளிர்கிறது. சமுதாய வளர்ச்சியின் அடிப்படை அளவுகோல்களில் மிக முக்கியமானது கல்வி. மாநில அரசின் பட்ஜெட் ஒதுக்கீட்டில் கல்விக்கான தொகை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதிலிருந்தே ஒரு முன்னேறிய சமுதாயத்தை உருவாக்குவதில் மாநில அரசுக்கு இருந்த அக்கறையையும், ஈடுபாட்டையும் புரிந்துகொள்ள முடிகிறது.

மதிய உணவுத் திட்டம், ஊட்டச்சத்து நிறைந்த இளம் சமுதாயத்தை உருவாக்குவதற்காக இந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் உயர்கல்விக்கான தமிழ்ப் புதல்வன் போன்ற பல திட்டங்கள் மாணவர்களது பள்ளி வருகையை அதிகரித்துள்ளதோடு அவர்களது கற்றல்திறனையும் மேம்படுத்தியுள்ளன. உயர்கல்விச் சேர்க்கையும் அதிகரித்துள்ளது.

பெண் கல்வியில் பின்தங்கிவிடக் கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட புதுமைப்பெண் திட்டம், கல்லூரிப் படிப்பைத் தொடரும் மகளிர்க்கு மாதம் ரூ. 1,000 உதவித் தொகை வழங்கி மகளிர் மேம்பாட்டுக்கான முன்னெடுப்புகளில் முத்தாய்ப்பான திட்டமாக விளங்குகிறது. இது பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு, பட்டதாரிப் பெண்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

சமூகநீதியைப் போற்றிப் பாதுகாக்கும் தமிழ்நாடு, மகளிருக்கும் தொழில்துறையில் போதிய வாய்ப்புகளை அளித்துவருகிறது. இதனால்தான் இந்தியாவிலேயே அதிக பெண் ஊழியர்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியா முழுவதும் உள்ள பெண் பணியாளர்களில் 43 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் பணிபுரிகிறார்கள் என

ஒன்றிய அரசின் புள்ளியியல் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. தொழில்துறையில் முன்னணி வகிக்கும் மகாராஷ்டிர மாநிலத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிர் எண்ணிக்கை 12 சதவீதமாகவும், குஜராத் மாநிலத்தில் 6.8 சதவீதமாகவும், உத்தரப்பிரதேசத்தில் 5.7 சதவீதமாகவுமே உள்ளது.

அதனால்தான், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்துவருகிறது. இதற்காகப் புதிய தொழிற்சாலைகள், அதற்கேற்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி வருகின்றன. பெரிய தொழில் நிறுவனங்கள் உருவாவதன் மூலம் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு பெருகும் என்பதைக் கருத்தில்கொண்டு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதிலும் அரசு அதீத அக்கறை காட்டி வருகிறது.

2021-2022ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மாநில உற்பத்தி (ஜி.எஸ்.டி.பி) வளர்ச்சி 7.92% என்ற அளவில் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 2022-2023 ஆம் ஆண்டில் 8.19% என்ற அளவில் கணிசமான வளர்ச்சியை எட்டியது. அதற்கடுத்த ஆண்டில் (2023-2024) வளர்ச்சி 8.23% அளவுக்கு அதிகரித்தது.

2021-2022ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஜிஎஸ்டிபி ரூ. 13,43,287 கோடி என்ற அளவில் இருந்தது. இது 2022-2023ஆம் ஆண்டில் ரூ. 14,53,321 கோடியாக உயர்ந்தது. 2023-2024ஆம் ஆண்டில் இது ரூ. 15,71,000 கோடி அளவுக்கு அதிகரித்தது. 2024-2025 ஆம் நிதி ஆண்டில் மாநிலத்தின் ஜிஎஸ்டிபி ரூ. 27.22 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 9.21 சதவீத அளவுக்கு அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனங்கள், ஜவுளி, தோல்பொருள் ஆகியவற்றில் முக்கிய ஏற்றுமதி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. அதேபோல தமிழ்நாட்டில் தனிநபர் ஆண்டு வருமானம் சராசரி ரூ.2.78 இலட்சமாகும். தேசிய சராசரியான ரூ.1.69 இலட்சத்தை விட 1.64 மடங்கு இங்கு அதிகமாக உள்ளது.

தொழில் துறை வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் பாதையில் பல முக்கிய இலக்குகளை எட்டியுள்ளது. நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 2024-2025ஆம் ஆண்டு நிலவரப்படி மொத்தம் 39,666 தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் ஏற்றுமதி தயார் நிலைக்குறியீட்டில் 2022இல் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. தொழில்துறையில் வேலைசெய்யும் நபர்கள் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

வேலைவாய்ப்பு உருவாக்கம்

சென்னை நகரில் மட்டுமே தங்களுக்கு வேலைவாய்ப்பு என நகரை நோக்கிப் படையெடுக்கும் இளைஞர்களுக்கு அவர்கள் படித்த நகரங்களிலேயே வேலைவாய்ப்பை உருவாக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதன் விளைவாக இரண்டாம் கட்ட நகரங்களில் மினி டைடல் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், மற்றும் தூத்துக்குடியில் மினி டைடல் பூங்காக்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. நீலகிரியில் ரூ. 100 கோடி முதலீட்டில் டைடல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுத்துள்ளது. இதன் மூலம் மலையகப் பகுதியில் வாழும் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

2021-2022 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு உருவாக்கம் 7.5% என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் இந்த வேலைவாய்ப்பு உருவாக்கம் சற்று அதிகரித்ததில் 13 இலட்சம் புதிய வேலைகள் உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் பல துறைகளில் மேற்கொண்ட வளர்ச்சிக்கு வழிகோலாக இருந்தன. இந்த வளர்ச்சி தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையை விளக்குவதற்கு ஒரு நிலையான அடிப்படையாக அமையும்.

அந்நிய முதலீடுகள்

தமிழ்நாடு அரசு தொழில்துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் கணிசமான அளவில் அந்நிய முதலீடுகளை ஈர்த்துள்ளது. துபாயைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் டிபி வேர்ல்டு நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.2,000 கோடி முதலீடு செய்வதாக அறிவித்தது. 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் ரூ.6.64 இலட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.55 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு 2021 மே முதல் இதுவரை தொழில் துறைக்கென 895 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.10,14,368 கோடி. இதன் மூலம் 32 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திராவிட மாடல் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் சிறந்த கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை உருவாக்கியுள்ளது. புதிய தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பப் பூங்காங்கள், தொழிற்பேட்டைகள் என மாநிலம் முழுவதும் பரவலாக்கப்படும் இத்தகைய வசதிகள் சீரான, ஸ்திரமான வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதோடு வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் உறுதி செய்கின்றன.

பெரிய தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கேற்ற சூழலைத் தமிழ்நாடு உருவாக்கித் தந்துள்ளது. நிறுவனங்களுக்குத் தேவையான இடவசதி, தடையற்ற மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அளிப்பதோடு மானியச் சலுகை உள்ளிட்டவற்றையும் அளித்து முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தொழில் தொடங்குவதற்குச் சாதகமான மாநிலங்கள் வரிசையில் 14 ஆவது இடத்திலிருந்து 3-ஆவது இடத்திற்கு முன்னேற்றிய பெருமை இந்த அரசையே சாரும். இந்த விவரங்கள் வர்த்தக செயல் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சீனாவில் தொழிற்சாலைகளை வைத்துள்ள 29-க்கும் மேலான ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் வேறு நாடுகளில் ஆலைகளை அமைக்கத் திட்டமிட்டன. அத்தகைய நிறுவனங்களை இந்தியாவில் தொழிற்சாலை அமைக்க ஒன்றிய அரசு அழைப்பு விடுத்தது. அதில் பல நிறுவனங்களின் தேர்வாகத் தமிழ்நாடே திகழ்கிறது. அதில் தமிழக அரசு மேற்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக வந்ததுதான் பெக்கட்ரான்.

அமெரிக்காவின் சிஸ்கோ ஆலை இந்தியாவில் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் ஆலை அமைக்க முடிவெடுத்து ஒப்பந்தம் செய்துள்ளது. மின் வாகனங்களைத் தயாரிக்க ஹூண்டாய் நிறுவனம் ரூ. 2 ஆயிரம் கோடி முதலீடு செய்ய முன்வந்துள்ளது. தோல் அல்லாத காலணிகள் தயாரிக்கும் தைவான் ஆலைகளும் தமிழ்நாடு நோக்கி வரத் தொடங்கியுள்ளன.


இந்தியாவின் தோல் அல்லாத காலணித் தொழிலின் தலைநகராகத் தமிழ்நாடு மாறியுள்ளது என்றே சொல்ல வேண்டும். தமிழ்நாடு அரசு தோல் அல்லாத காலணி உற்பத்தியில் கவனம் செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பெரம்பலூரில் உள்ள எறையூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட ஜே.ஆர்.ஒன் கோத்தாரிஸ் நிறுவனம், அமெரிக்க நிறுவனமான கிராக்ஸ் பிராண்ட் காலணிகளைத் தயாரித்து வருகிறது. இங்கு பணியாற்றும் 2,500 ஊழியர்களில் 90 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. தமிழ்நாட்டில் தற்போது 5 தைவான் நிறுவனங்கள் தோல் அல்லாத காலணித் தொழிலைத் தொடங்கியுள்ளனர்.

∴ பெங்டே நிறுவனங்கள் செய்யாறு, பர்கூர், திண்டிவனம் ஆகிய இடங்களில் தோல் அல்லாத காலணிகளைத் தயாரித்து வருகின்றன. உலக அளவில் தோல் அல்லாத காலணிகளின் பயன்பாடு 86 சதவீதமாகும். இதில் இந்தியாவின் தோல் அல்லாத காலணி உற்பத்தியில் தமிழ்நாடு 38 சதவீதப் பங்களிப்பைத் தருகிறது. தோல் ஏற்றுமதியில் 47 சதவீதப் பங்களிப்பை நல்குகிறது.

இவை அனைத்துமே தமிழ்நாட்டின் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகளுக்குக் கிடைத்த தொடர் வெற்றியாகும். உலகின் மின்னல் வேக வீரர் என்றால் உடனே நினைவுக்கு வருபவர் ஜமைக்காவைச் சேர்ந்த உசேன் போல்ட். ஆனால், மாரத்தான் ஓட்டத்தில் சாதனை புரிந்தவர் கென்யாவைச் சேர்ந்த எலுயிட் கிப்சோக். தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் மாரத்தான் ஓட்டத்தைப் போல நீடித்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டவை. அந்த வகையில், ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை எட்டும் மாரத்தான் பந்தயத்தில் எட்டும் தூரத்தில்தான் இலக்கு உள்ளது எனும் நம்பிக்கையை அளித்துள்ளது திராவிட மாடல் ஆட்சி. ●

இந்தியாவின் விடியல் பயணத்திற்கு வழிகாட்டும்

தமிழக ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள்



முனைவர் செள. புஷ்பராஜ்
(மு) தி.சு.கி.துர்கேஷ் நந்தினி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்





இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களின் பங்களிப்பு விவசாயம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால், வறுமை, அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை, காலாவதியான திறனற்ற நிர்வாகச் சூழல் போன்றவை ஊரக வளர்ச்சியில் தடையாக இருக்கின்றன. இத்தகைய சூழலில், திட்டமிடப்பட்ட, பன்முகமான ஊரக வளர்ச்சி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

உள்கட்டமைப்பு மேம்பாடு, சாலை, மின்சாரம், குடிநீர், சந்தை வாய்ப்புகள் போன்ற அம்சங்கள் கிராம மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றன. இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஊரகத் தேவைகளுக்கு ஏற்ப தனித்துவமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. உதாரணமாக, மத்தியப் பிரதேசம் வீட்டு வசதிகள், சாலை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க, ராஜஸ்தான் நீர்ப்பாசனம் மற்றும் சூரிய மின்சக்தித் திட்டங்களை முன்னிலைப்படுத்துகின்றன. கேரளா, மகளிர் முன்னேற்றம் மற்றும் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கிறது.

அதேபோல், தமிழ்நாடு நவீன மின்னாட்சி முறை, திறமையான நிர்வாகம், சமூக நீதி மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ற முன்னெடுப்புகளினால் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

2021–2024 காலப்பகுதியில் ஆட்சியில் இருக்கும் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், வெளிப்படையான, எளிமையான மற்றும் தொழில்நுட்பத்திறன் வாய்ந்த முன்னோக்கு இலக்குகளுடன் செயல்பட்டுள்ளன. இதன் வாயிலாக, தமிழ்நாடு, நாட்டின் ஊரக வளர்ச்சிக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் அமல்படுத்திய திட்டங்களை அதன் முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் காணலாம்.

ஊராட்சி நிர்வாக மேம்பாடு

புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் டக்ளஸ் நார்த் (1990) தனது கருத்தில், எந்த ஒரு அரசாங்கத் திட்டமும் அதன் நிர்வாகத்தின் செயல்திறனைப் பொறுத்துதான் அதன் வெற்றி அல்லது தோல்வி நிர்ணயிக்கப்படும் எனக் கூறுகிறார். நிர்வாகம் திறமையுடன் இல்லையெனில், சிறந்த திட்டங்களும் எதிர்பார்த்த பயனைத் தராது. உலக வங்கியின் ஆய்வுகளும் இதையே ஒப்புக்கொள்கின்றன. அவ்வாய்வுகளின்படி திறனற்ற நிர்வாகங்கள் ஊழல் மற்றும் செயல்திறனின்றிச் செயல்படுகின்றன. ஆசிமோக்ளு மற்றும் ராபின்சன் (2012) ஆகிய பொருளாதார நிபுணர்களும், நிலையான வளர்ச்சிக்கு அனைத்து மக்களுக்கும் வாய்ப்பளிக்கும், ஜனநாயகப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்புகள் அவசியம் என வலியுறுத்துகின்றனர்.

இந்தக் கோட்பாடுகள் சீனா மற்றும் கேரளாவின் நிர்வாகச் செயல்திறனை எடுத்துக்காட்டுகின்றன. சீனாவில் நில உரிமை நிர்வாகத்தில் நடந்த மாற்றம், கிராமப்புற மக்களின் உற்பத்தித் திறனை உயர்த்தி, சுமார் 8 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டது. கேரளா மாநிலத்தின் நிதி மற்றும் நிர்வாக தன்னாட்சி ஊரக வளர்ச்சி மற்றும் சமூக நலத்திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்தி, மனிதவள மேம்பாட்டில் சிறந்த நிலையை எட்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளில், ஊரக நிர்வாகத்தை மின்னணுத் தொழில்நுட்பம் மூலம் நவீனமாக்கியுள்ளது. குறிப்பாக, TNPASS எனப்படும் தமிழ்நாடு

பஞ்சாயத்து எளிமைப்படுத்தப்பட்ட கணக்கியல் முறைமை என்ற மென்பொருள், ஊராட்சிகளில் நிதி மேலாண்மை மற்றும் கணக்கியல் பணிகளை ஒழுங்குபடுத்த உருவாக்கப்பட்டது. இந்த முறைமை மூலம் வரவு-செலவுக் கணக்குகள் பதிவுசெய்தல், நிதி ஒதுக்கீடுகள் கண்காணித்தல், தணிக்கைக்கான அறிக்கைகள் தயாரித்தல் ஆகியவை எளிதாகின்றன. முன்பு இதுவே வெறும் கணினிப் பதிவேற்ற முறைமையாக இருந்தது, ஆனால் இப்போது இது மற்ற மாநிலங்களின் மென்பொருள்களை விட மேம்பட்டதாகவும், பயனுள்ளதாகவும் செயல்படுகிறது.

மேலும், கிராமப்புறங்களில் வரி மற்றும் கட்டணங்களை ஆன்லைனில் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் நேரடியாகவும், எளிதாகவும் பணம் செலுத்த முடிகின்றது. இந்த டிஜிட்டல் மாற்றம் தமிழ்நாட்டின் ஊரக நிர்வாகத்தை ஒரு ஸ்மார்ட் நிர்வாகமாக மாற்றியுள்ளது. இத்தகைய முன்னேற்றங்கள் தமிழ்நாட்டை ஊரக வளர்ச்சியில் இந்தியாவின் முன்னோடியான மாநிலமாக உருவாக்கியுள்ளன.

ஊரகக் கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதி மேம்பாடு

தமிழ்நாடு அரசின் ஊரக மேம்பாட்டு நோக்குகளில், கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு மையப் புள்ளியாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஊரக சாலை வசதி மேம்பாட்டைக் கூறலாம். இந்த சாலை வசதிகள் கிராமங்களுக்கு இடையிலான போக்குவரத்தையும், வணிகத்தையும் அதிகரித்து, ஊரக மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பெற ஏதுவாக உள்ளன.

ஊரகக் கிராமப்புற சாலை வசதித் திட்டங்களில் முக்கியமானது மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டமாகும் (Mudhalvarin Grama Salaigal Membattu Thittam - MGSMT) இந்தத் திட்டத்தின்கீழ், ரூ. 2,872 கோடி செலவில் 4,129 கிலோமீட்டர் சாலைகள் போடப்பட்டுள்ளன. இந்த சாலைகளின் சிறப்பம்சங்களில் முக்கியமானவை தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட QR குறியீடு பொறிக்கப்பட்ட சைன் போர்டுகளும், அழியாத சாலை குறியீடுகளும் ஆகும். இவை தவிர தமிழ்நாடு அரசு NABARD வங்கியின் ரூ.1,075 கோடி கடனுதவியுடன் 4,129 கிலோமீட்டர் சாலைகளும், 31 பாலங்களும் அமைக்கப்பட்டன. கூடுதலாக RIDF நிதியில் ரூ.1075 கோடி செலவில் 505 கிலோமீட்டர் சாலையும், 254 பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ள அபாயப் பிரதேசங்களில் சிறப்புப் பாலம் கட்டும் நிதி திட்டத்தின்கீழ் ரூ.177.85 கோடி செலவிடப்பட்டது.

மற்றொரு முக்கிய ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டம் பிரதம மந்திரி கிராமப்புற சாலை திட்டம் (Pradhan Mantri Grama Sadak Yojana - PMGSY) ஆகும். ஒன்றிய பெட்ரோல் செஸ் வரியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒன்றிய சாலை நிதியிலிருந்து PMGSY திட்டம் செயல்படுத்தப்படுகிறது. PMGSY திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 2872 கோடி முதலீட்டில் 4129 கிலோமீட்டர் சாலைகள் மற்றும் 31 பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் தனித்துவமான அணுகு முறையின் காரணமாக MSMT உடன் இணைந்து PMGSY செயல்படுத்தப்பட்டது. இதில் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொண்டு எல்லாக் கால நிலைக்கும் ஏற்ற வகையில் போடப்பட்ட 2,518.62 கிலோமீட்டர் சாலைகள் நாட்டுக்கே முன்னுதாரணமாக உள்ளன.

ஊரக வீட்டு வசதி மேம்பாடு

தரமான வீடுகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலை என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அடிப்படைத் தேவையாகும். இது தனிமனிதனின் உடல்நலத்தையும், கல்வியையும், வேலைவாய்ப்புகளையும் மேம்படுத்தும் நல்ல வீட்டுச்சூழல் திறமையான மனித வளத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்திய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும் ஊரக வீட்டு வசதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக, கலைஞரின் கனவு இல்லம் திட்டம், சீனா மற்றும் பிரேசிலில் வெற்றிகரமாக செயல்பட்ட ஊரக வீட்டுத் திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் 2030க்குள் கிராமங்களில் குடிசைகள் இல்லாததாக்கும் நோக்குடன், ஏழை மக்களுக்கு நிரந்தரமாகக் குடியிருக்கத் தக்க வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகும்.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம், பிரதம மந்திரியின் ஊரக வீட்டு வசதித் திட்டம் (PMAY-G) மற்றும் ஜல் ஜீவன் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. PMAY-G திட்டத்தில் மட்டும் வழங்கப்படும் ரூ.1.3 இலட்சம் உதவி வீடுகட்டபோதுமானதாக இல்லாத நிலையில், மாநில அரசு

கூடுதலாக நிதி வழங்குவதன் மூலம் பயனாளிகள் அதிக எண்ணிக்கையில் வீடுகட்ட முன்வந்தனர். இதன் விளைவாக, தமிழ்நாட்டில் PMAY-G திட்டம், 98% வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது, இது தேசிய சாதனையாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், தமிழ்நாட்டில் 6.43 இலட்சம் உயர்தர வீடுகள் ரூ.7,572 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டில் கூடுதலாக ஒரு இலட்சம் வீடுகளுக்கு ரூ.3.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்றிய அரசின் திட்டத்தில் இடம்பெறாத குடும்பங்களும் மாநில அரசு வழியாக வீட்டு வசதியைப் பெறுகின்றனர்.

இதற்கும் மேலாக, பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற திட்டம் கிராமங்களில் சமூக ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 149 சமத்துவபுரங்களில் ரூ.196.16 கோடிச் செலவில் வீடுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் 8 புதிய சமத்துவபுரங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மற்றொரு முக்கியமான திட்டம், ஊரக வீடு பழுது பார்க்கும் திட்டம் ஆகும். இதில் பழைய வீடுகளுக்குத் தேவையான சுவர், கூரை, தரை ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு அரசு நிதியுதவி அளிக்கிறது. 2024-2025 ஆம் ஆண்டில் மட்டும் 1.48 இலட்சம் வீடுகள் ரூ. 1,041.31 கோடிச் செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

இந்த அனைத்து முயற்சிகளும் மாநில அரசின் தீவிரமான திட்டமிடலும், நேரடி நிதி உதவியுடனும், முழுமையான கண்காணிப்பு முறையுடனும் செயல்படுத்தப்பட்டிருப்பதால் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது.

குடிநீர் மற்றும் சுகாதார மேம்பாடு

ஆரோக்கியமான நோயில்லா வாழ்வுக்கும், திறன்மிக்க உழைப்பு சக்திக்கும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் மிகவும் அவசியம். ஜப்பானின் தொழில்துறை முன்னேற்றம் மற்றும் உயர் வருமானப் பொருளாதார நிலை ஆகிய இரண்டுக்கும் உந்து சக்தியாக இருந்தது அரை நூற்றாண்டுகளுக்கு முன் ஜப்பானில் கொண்டுவரப்பட்ட கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதேபோல் சீனாவில் ஊரகக் குடிநீர் திட்டமும் கழிப்பறைப் புரட்சியும் தொழிலாளர் உற்பத்தித் திறனைப் பெருமளவு மேம்படுத்தியதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு அரசு கனவு காணும் எல்லார்க்கும் எல்லாம் என்ற வளர்ச்சிப் பாதையில், குடிநீர், கழிவுநீர் மேலாண்மை போன்று மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முக்கியக் கூறுகளாகும். தமிழ் நாடு அரசு ஊரகப் பகுதிகளில் சுகாதாரம், பாதுகாப்பான குடிநீர் மற்றும் நவீன கழிவு மறுசுழற்சி முறைகளை மேம்படுத்த ஒன்றிய அரசுத் திட்டங்களான ஜல்ஜீவன் மிஷன் (Jal Jeevan Mission JJM) மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் (Swach Bharat Mission - Gramin, SBM-W) ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது. JJM மூலமாக 1.1 கோடி ஊரகக் குடும்பங்களுக்கு ரூ.2,280.52 கோடி செலவில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. SBM-W திட்டத்தின்கீழ் 3,09,058 தனிநபர் கழிப்பறைகளும் 1,816 பொதுக் கழிப்பறைகளும் ரூ.104.19 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசின் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் (SLWM) திட்டத்தின்கீழ் 1,288 மின்சார / மோட்டார் கழிவு சேகரிப்பு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

ஊரகக் கல்வி மேம்பாடு

பெக்கர் (1964) தனது மனித மூலதனக் கோட்பாட்டில், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவை பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய அடித்தளமாக இருப்பதாகக் கூறுகிறார். அமர்த்தியா சென் கூறும் திறன் கோட்பாடுப்படி, நல்ல தரமான ஊரகக் கல்வி மக்களுக்கு சுதந்திரமாக வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் திறனையும், சமூகத்தில் பங்கேற்கும் வாய்ப்பையும் தருகிறது. பின்லாந்து, சீனா போன்ற நாடுகள், ஊரகக் கல்வி வளர்ச்சிக்கு எப்படி முக்கியமாக இருக்கிறது என்பதை உலகிற்குக் காட்டியுள்ளன. கல்வியில் தமிழ்நாடு முன்னிலையில் இருந்தாலும், கல்வியின் தரத்தை உலகத் தரத்திற்கு உயர்த்துவதே திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம். இதற்காக இரண்டு வகை பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தில் ரூ.825.34 கோடி செலவில் கடந்த 4 ஆண்டுகளில் 2,547 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மற்றொரு திட்டத்தின் வாயிலாக 21,507 பள்ளிகள் ரூ.139.23 கோடியில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. உள்கட்டமைப்புடன் சேர்த்து, டிஜிட்டல்

வகுப்பறைகள், புதுமையான ஆசிரியர் பயிற்சிகள், ஜனநாயகப்படுத்தப்பட்ட பள்ளி நிர்வாகம் போன்றவை எல்லாம் சேர்ந்து ஒரு முழுமையான கல்விச் சூழலை உருவாக்கியுள்ளன.

வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு

வேலைவாய்ப்பு உண்டாக்கும் முயற்சிகள், கிராமப்புறங்களில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றன என்றும், கிராமப்புற மக்கள் தங்களது திறமைகள் மற்றும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்த வழிவகுக்கின்றன என அமர்த்தியா சென் கூறுகிறார். இதற்கான உதாரணங்களை சீனா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளில் காணலாம்.

தமிழ்நாட்டில் ஊரக வேலைவாய்ப்பிற்கான முக்கியமான அரசுத் திட்டமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (MGNREGS) மாறியுள்ளது. இந்தத் திட்டம் ஆண்டுக்கு 100 நாள்கள் கூலி வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துவதன் மூலம், பின்தங்கிய ஊரக மக்களுக்கு நிலையான வருமானத்தை வழங்குகிறது. இது ஊரக ஏழ்மை குறைவதற்கும், நகரங்களுக்கு இடம்பெயர்வதைத் தடுப்பதற்கும் காரணமாகிறது. புலம்பெயர்வுகள் குறைவதால், விவசாயம் உள்ளிட்ட ஊரகப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு, கடந்த நான்கு ஆண்டுகளாக தேசிய அளவில் MGNREGS திட்டத்தின் சிறந்த செயல்பாட்டு மாநிலமாகத் திகழ்கிறது. 2024-இல் மட்டும் ரூ.1392.82 கோடி செலவில் 40.87 கோடி வேலை நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 85.75% பெண்கள் பயனடைந்துள்ளனர்; மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கும் 73.20 இலட்சம் வேலை நாள்கள் வழங்கப்பட்டுள்ளன.

MGNREGS திட்டம் ஊரகப் பொதுச் சொத்துகள் - நீர் சேமிப்புக் கட்டமைப்புகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவற்றையும் மேம்படுத்தியுள்ளது. இதற்காக ரூ.28,037.85 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது நீண்ட காலத்தில் விவசாய நிலம் விரிவுபடுத்தலுக்கும், உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கும் வழிவகுத்துள்ளது. மேலும் வறட்சி, வெள்ளம் போன்ற காலநிலை சவால்களை எதிர்கொள்ளும் பொது திட்டங்களுடனும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் செயல்பாடு மின்னணு முகமை மூலமாகக் கண்காணிக்கப்படுவதால், அதன் செயல்திறனும் வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நிர்வாக மேம்பாடு இல்லாத காரணத்தால் உத்தரப்பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்கள் MGNREGS திட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

MGNREGS தவிர, தமிழ்நாடு அரசு பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, தீனதயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) மூலம் 46,144 ஊரக இளைஞர்கள் பயிற்சி பெற்று 22,876 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

2021க்குப் பின் தொடங்கப்பட்ட SVET திட்டம், ஊரக இளைஞர்கள் விவசாயம் அல்லாத தொழில்களைத் தொடங்க ஊக்குவிக்கிறது. இது காலநிலை மாற்றத்தால் விளையும் வருமான நிச்சயமின்மையை சமாளிக்க உதவுகிறது. உள்ளூர் பொருள்கள், சேவைகள் உள்ளிட்டவை ஊரகத்தில் விரிவுபடுவதற்கும் இது வழிவகுக்கிறது.

மகளிர் சுயஉதவிக் குழு (SHG) திட்டங்கள் ஊரகப் பெண்கள் தொழில்முனைவையும் நிதிச்சேவைகளை விரிவுபடுத்தவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதில் ஊரக வாழ்வாதாரத்தின் மேம்பாடு மற்றும் நீடித்த வளர்ச்சி நோக்கங்களும் அடங்கியுள்ளன.

முடிவுரை

பல்வேறு நாடுகளில், பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த வெற்றிகரமான அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு, திராவிடக் கோட்பாட்டின் வழிகாட்டுதலுடன், தமிழ்நாடு அரசு 2021-2025 காலகட்டத்திற்கான ஊரக வளர்ச்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தியுள்ளது. தற்போதைய ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள், முந்தைய எந்தக் காலத்திலும் இல்லாத வகையில், உடனடிப் பிரச்சனைகளை மட்டுமல்லாமல் நீண்ட காலத் தேவைகளான நீடித்த வளர்ச்சி, அனைவருக்குமான நலன்கள், சமூக நீதி, நவீனப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் நிர்வாகம் ஆகியவற்றிற்கும் வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளன. உள்கட்டமைப்புத் திட்டங்கள், நிர்வாக சீர்திருத்தங்கள், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு, கல்வி வளர்ச்சி, வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் போன்ற அனைத்துப் பரிமாணங்களிலும் தமிழ்நாடு சாதனை படைத்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது. இந்த மாதிரியான பரந்த அளவிலான மாற்றங்கள், தமிழ்நாட்டை ஊரக வளர்ச்சியில் முன்னோடியான மாநிலமாக மாற்றியுள்ளதோடு, பிற மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சி முயற்சிகள், இந்தியாவின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வலிமையான பங்களிப்பாக அமைந்துள்ளன என்பதில் எந்தவித ஐயமில்லை. சுருக்கமாகச் சொன்னால், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளால் விளைந்த விடியல் தமிழ்நாட்டிற்கு அல்ல; ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் என்பதைத் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் சாதனைகள் உணர்த்துகின்றன. தொடரட்டும் விடியல் பயணம்.

தமிழ்நாடு: உயர்கல்வியில் முதலிடம் அறிவுப் புலத்தின் புகழிடம்



பேராசிரியர் இரா. சுப்பிரமணி
முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மைய இயக்குநர்.

தலைவர்கள் தன்னியல்பாக உருவாவதில்லை. தலைவருக்கென்று ஒரு வரலாறும், வரலாற்றுக்கென்று ஒரு தலைவரும் முகிழ்த்தெழுவதுண்டு. காலச்சுழற்சியில் வரலாறு அவ்வப்போது சில தலைவர்களை உருவாக்குகிறது என்றாலும் எப்போதாவதுதான் வரலாற்றை உருவாக்கும் தலைவர்கள் உருவாகிறார்கள். அப்படியான வரலாற்றை உருவாக்கும் தலைவராக நம் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உயர்ந்து நிற்கிறார்; வலுவானதொரு வரலாற்றை உருவாக்கி வருகிறார்; ஆட்சி அதிகாரத்திற்கு வழிகாட்டும் திராவிட மாடல் என்னும் புதிய அரசியல் கோட்பாட்டின் தந்தையாகத் திகழ்கிறார்.

கல்வியையும், நலவாழ்வையும் தம் ஆட்சியின் செயல்திட்டங்களில் முதன்மைப்படுத்தும் முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டங்களால் தமிழ்நாட்டரசின் எல்லாத் துறைகளும் முன்னணியில் இருந்தாலும், உயர் கல்வியில் நாம் எட்டி இருக்கும் உயரமும் தரமும் உலக அரங்கில் கவனம் பெற்றவையாகும். இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை உறுதி செய்வதனையும், தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதனையும் எந்த விலை கொடுத்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்னும் தமது உறுதியான செயல்பாடுகளால் மாநிலங்களின் தன்னாட்சியையும் தம் மக்களுக்கான கல்வி உரிமையையும் வென்றெடுத்த வேந்தராக உருவெடுத்திருக்கிறார் நம் முதலமைச்சர்.

இந்தியாவிலேயே அதிகக் கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு தொடக்கக் கல்வி, மேல்நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியில் மிகச் சிறப்பெய்தி நிற்கிறது என்பது நாடறிந்த நற்பெயர் ஆகும். இலவசக் கல்வி, கட்டணமில்லாப் பாடநூல்கள், கட்டணமில்லாப் பேருந்து பயணம், இலவச மிதிவண்டிகள், மதிய உணவுத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், முனைவர் பட்ட ஆராய்ச்சி ஊக்கத் தொகைகள், தகைமைத் தொகைகள், உள் ஒதுக்கீடுகள், திறன் மேம்பாட்டு மையங்கள், திறன்மிகு வகுப்பறைகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், நவீனத் தொழில்நுட்ப உற்பத்தி மையங்கள், செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள், தரமான பாடத்திட்டங்கள், போட்டித்தேர்வுப் பயிற்சிகள், தொழில்துறையினர் தேவைக்கேற்ற புதிய பாடங்கள் என நீண்டுகொண்டே செல்லும் தமிழ்நாட்டு முதலமைச்சரின் அடுக்கடுக்கான மாணவர் நலம் நாடும் செயல் திட்டங்களைத் தான் அண்டை மாநிலங்களும், தொலைதூர தேசங்களும் தொடர விழைகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட உயர்கல்வியின் பொற்காலம் என்னும் புத்தாக்க வரலாறு திராவிட மாடல் ஆட்சியில் புதிய உச்சத்தை எட்டிய வண்ணம் பயணிக்கிறது. காலை உணவு முதல் கணினிகளைக் கையாளும் திறன் வரை, பள்ளியில் இலவசக் கல்வி முதல் உயர்கல்வியில் மாதம் ஆயிரம் ரூபாய் வரை எனத் தொடரும் நலத்திட்டங்களும், செயல்திட்டங்களும் வலிமையான வளமையான அறிவுச் சமூகத்தைக் கட்டமைக்கும் அமைதிப்புரட்சிக்கான அடித்தளங்களாகும்.

தமிழ்நாட்டிலுள்ள வலிமையான கல்விக்கட்டமைப்பில் பள்ளிகளில் மட்டும் 1.29 கோடிக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இது நாட்டின் ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கையில் 5.24 விழுக்காடாகும். தமிழ்நாடு திட்டக் குழுவின் பொருளாதார ஆய்வறிக்கையின்படி தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளின் மொத்த மாணவர்கள் பதிவு 98.4 விழுக்காடாகவும், (தேசிய அளவில் 91.7%) உயர்நிலைப் பள்ளிகளில் 97.5 விழுக்காடாகவும், (தேசிய அளவில் 77.4%) மேல்நிலைப் பள்ளிகளில் 82.9 விழுக்காடாகவும் (தேசிய அளவில்

மாநில சுயாட்சி நாயகருக்கு

மகத்தான பாராட்டு



56.2%) உள்ளன. ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி பள்ளிக் கல்வித் தர நிலைக் குறியீட்டில் 82.2 விழுக்காடு கொண்ட கேரளாவுக்கு அடுத்த நிலையில் 73.4 விழுக்காட்டுடன் தமிழ்நாடு இரண்டாம் நிலையில் உள்ளது. மேல்நிலைக் கல்வியைத் தொடர முடியாமல் இடைநிற்றல் வீதம் தமிழ்நாட்டில் 4.5 விழுக்காடாக உள்ள நிலையில், தேசிய சராசரி 12.6 விழுக்காடாக உள்ளதென்பது இடைநிற்றல் இல்லாத கல்வியை நோக்கிய தமிழ்நாட்டின் இலட்சியப் பயணத்தை எடுத்துக்காட்டுகிறது.

மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல்கள், கல்வி உதவித்தொகை, திறன் பயிற்சிகள் அளித்தல், வேலைவாய்ப்பை உறுதி செய்தல் போன்ற மைய இலக்குகளைத் தாண்டி அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வியில் இணைவதனை உறுதிசெய்யும் கள ஆய்வுகளைப் பள்ளிக்கல்வித் துறையும் உயர்கல்வித்துறையும் மாவட்ட அளவில் இணைந்து மேற்கொள்கின்றன. இதன்மூலம் அரசுப் பள்ளி மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கான தடைகளை அரசே கள ஆய்வின் மூலம் நேரடியாகக் கண்டறிந்து அவற்றை நிவர்த்திசெய்து அம்மாணவர்கள் தடையின்றி உயர்கல்வி தொடர்வதற்கான வழிவகைகளைச் செய்கின்றது. இக்கூட்டுச் செயற்பாட்டால் இடைநிற்றல் விழுக்காடு வெகுவாகக் குறைந்துள்ளது.

நாட்டில் தரமான உயர்கல்வியை வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலை பெற்று வருகிறது. நேக், என்ஐஆர்எப், அடல் போன்ற தேசிய அளவிலான தர அங்கீகாரம் வழங்கும் நிறுவனங்களின் தரமதிப்பீட்டில் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பல்கலைக்கழகங்களும், அரசுக் கல்லூரிகளும், ஆராய்ச்சி நிறுவனங்களுமே தொடர்ந்து முன்னிலை பெற்று வருகின்றன. நாட்டிலுள்ள சிறந்த 50 ஆராய்ச்சி நிறுவனங்களுள் மூன்று நிறுவனங்களும், தேசிய அளவில் சிறந்து விளங்கும் 100 பல்கலைக்கழகங்களில் எட்டு மாநில அரசுப் பல்கலைக்கழகங்களும், நாட்டின் தலைசிறந்த 100 கல்லூரிகளில் நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் தமிழ்நாட்டில்தான் உள்ளன எனத் தரவரிசை நிறுவனங்கள் வரிசைப்படுத்தியுள்ளன. நூறாண்டுகளைக் கடந்த வரலாற்றைக் கொண்ட கல்லூரிகளும், ஆற்றல்மிகு கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளன. ஐநூறுக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பப் பயிலகங்களுடன் ஆயிரத்தைத் தாண்டும் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தரமேம்பாட்டுடனும், திறன் மேம்பாட்டுடனும், உற்பத்தித் துறைக்கும், சேவைத் துறைக்கும் அதிக திறன்மிகு பணியாளர்களை உருவாக்குதல் என்னும் தொடர் செயல்திட்டங்களால் நாளும் தொழில்நுட்பக் கல்வி செழுமையடைந்து வருகிறது.

நலிந்தோர்களுக்கும், கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் அறிவு புகட்டுவதே திராவிடத்தின் தலையாயத் தத்துவம் என்பதனால் எளியோருக்கு உயர்கல்வியை உறுதி செய்ததுடன் பெண் கல்விக்கு முதன்மைத்துவம் தரும் அரிய திட்டங்கள் பல செயலாக்கத்தில் உள்ளன. 'பெண்களிடம் கரண்டியைப் பிடுங்கி விட்டு புத்தகம் கொடுத்தால்போதும்' என்றார் தந்தை பெரியார். பெண் கல்வியில் தனிக்கவனம் செலுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் மகளிருக்கான நாகம்மையார் இலவச பட்டப்படிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தினார். அக்கொள்கைத் தடத்தில் பயணிக்கும் நம் முதலமைச்சர் பெண் கல்வியை வளர்த்தெடுக்கும் தொடர் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையினில் அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வியில் இணையும் அனைத்து மாணவிகளுக்கும், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கும் 'புதுமைப்பெண்' எனப்பெறும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம் நாட்டிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்த மாணவிகள் கல்லூரிகளில் இணைந்து தொடர்ந்து உயர்கல்வி பயில்வதனை உறுதிசெய்வதே புதுமைப் பெண் திட்டத்தின் மைய நோக்கமாகும். 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இத்திட்டம் இரண்டு கட்டங்களாக விரிவுப்படுத்தப்பட்டு 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்று உயர்கல்வியில் இணையும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. புதுமைப்பெண் திட்டம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரையில் சுமார் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான

மாணவிகள் பயனடைந்துள்ளனர். புதுமைப்பெண் திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்த இந்த நிதியாண்டில் 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதுமைப்பெண் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டதனால் மூன்று ஆண்டுகளில் 34 விழுக்காடு மாணவிகள் கூடுதலாக உயர்கல்வியில் இணைந்துள்ளனர்.

புதுமைப்பெண் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, மாணவர்களுக்கான 'தமிழ்ப் புதல்வன்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சரால் 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் தொடக்கி வைக்கப்பட்ட இத்திட்டம் ஏழை, எளிய அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்விக் கனவுகளை நிறைவேற்றுவதனை முதன்மை இலக்காகக் கொண்டதாகும். புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கமான தமிழ்ப்புதல்வன் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இது புத்தகங்கள், கருவிகள் போன்ற கல்விச் செலவுகளுக்கு உதவுகிறது. அரசே இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் படிப்புச் செலவுகளைக் கவனிப்பதால், பெற்றோருக்கு ஏற்படும் பொருளாதார அழுத்தம் பெருமளவு குறைகிறது.

அரசுப் பள்ளிக் குழந்தைகளின் தொடக்கக் கல்வி காலை உணவுடனும், வளர்ந்த பதின்பருவ மாணவ, மாணவிகளின் உயர்கல்வி ஆயிரம் ரூபாய் நிதி உதவியுடனும் செயல்படுத்தப்படுவதால் பசியில்லாக் குழந்தைப்பருவமும், பொருளியல் தன்னிறைவு கொண்ட பதின்பருவமும் உறுதி செய்யப்படுகிறது.

புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற சீர்மிகு சிறப்புத் திட்டங்களைத் தொடர்ந்து முதலமைச்சரின் அடுத்த நகர்வு ஆண்டொன்றுக்குப் பத்து இலட்சம் மாணவர்களைத் திறன்மிகுந்த அறிவுச் செல்வங்களாக உருவாக்கும் இலக்கை மையமாகக் கொண்ட 'நான் முதல்வன்' திட்டமாகும். உயர் கல்வியில் தேர்ச்சி பெற்று பட்டங்களைப் பெற்றாலும் மாணவர்களிடம் ஆளுமைத்திறன், தொடர்பாடல் திறன், மேலாண்மைத் திறன், மென்திறன் மிகுந்திருக்க வேண்டுமென்னும் தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மாணவர்களின் கல்வித் திறனோடு, அவர்களின் தனித்திறன்களையும், தொழில் சார்ந்த ஆற்றலையும் வளர்த்து, அவர்களைப் பணிவாய்ப்பிற்குத் தயார்படுத்தும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படுகின்றன. மைக்ரோசாப்ட் போன்ற முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி காரணமாக நாள்தோறும் மாறிவரும் உலகளாவிய தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதாரச் சூழலை எதிர்கொள்ளும் வண்ணம் தமிழ்நாடு இளைஞர்களைத் தயார்படுத்தவும், அவர்கள் விரும்பும் துறைகளில் திறன்மிகுந்து சிறக்கவும் இத் திட்டம் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் ஆர்வத்தையும், தனித்திறன்களையும் கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்ற துறைகளைத் தேர்வு செய்ய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல், ரோபோட்டிக்ஸ், கோடிங் போன்ற வளர்ந்து வரும் கணினித் துறைகளில் திறன்மிகு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்நுட்பங்களை கற்பித்தல், திறன் அடிப்படையிலான பயிற்சிகள், தொழில் சார்ந்த அறிவாற்றலை வளர்த்தெடுத்தல் போன்ற இலக்குகளை மையப்படுத்திப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதேபோல தகவல் தொடர்புத் திறன், தலைமைப் பண்பு, குழுவாகப் பணிபுரிதல் போன்ற மென் திறன்களை வளர்க்கும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டம், மாநிலத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், அனைத்து கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது. இதுவரையில் 'நான் முதல்வன்' திட்டத்தால் 28 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர், அதேபோல வளாக வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பணி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் திறமையான முதுகலைப் பட்டதாரிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முழுநேர முனைவர் படிப்பை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தரமான ஆராய்ச்சியை ஊக்குவித்தல், இளம் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குதல், தமிழ்நாட்டை

ஆராய்ச்சி மையமாக மேம்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும். இதன்மூலம் தரமான ஆராய்ச்சி முடிவுகள் வெளிவரும் என்பதோடு, மாநிலத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சித் தரம் வெகுவாக உயரும் நிலையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவிலான நிதிநல்கை அமைப்புகளால் மட்டுமே செயல்படுத்தபடக் கூடிய ஒரு மகத்தான செயல்திட்டத்தை ஒரு மாநில அரசே மனமுவந்து செய்கிறதெனில் ஆராய்ச்சிகள் மீதும், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மீதும் இந்த அரசிற்கு உள்ள ஆர்வத்தையே இத்திட்டம் எடுத்துக்காட்டுகிறது.


இதேபோல் முனைவர் பட்டம் பயிலும் பட்டியலின மாணவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் சீரிய திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுபான்மையின மாணவர்கள், பட்டியலின மாணவர்களுக்கான ஆராய்ச்சி நிதி நல்கைகளை ஒன்றிய அரசு குறைத்து வரும் அல்லது நிறுத்தி வரும் நிலையில் தமிழ்நாடு அரசின் இந்த ஆய்வு உதவித் தொகை, ஊக்கத்தொகை முன்னெடுப்பு என்பது மாணவர்கள் மீதான பேரன்பை வெளிக்காட்டுகிறது.

உயர்கல்வி நிலையங்களின் கட்டமைப்பு மேம்பாடு, தர மேம்பாடு மாணவர்களின் திறன் மேம்பாடு, தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குதல், வேலை வாய்ப்பை உறுதி செய்தல் போன்ற தொடர் செயல்பாடுகளால் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித் தரம் உலக அரங்கில் எதிரொலிக்கிறது.

இப்படியான தொடர் செயல்பாடுகளுக்காக இந்த நிதியாண்டில் உயர்கல்வி வளர்ச்சிக்கென 8,494 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுப் பல்கலைக்கழகங்களில் நிலவி வரும் நிதிப்பற்றாக்குறையைக் குறைக்கும் வகையில் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பு நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்குப் பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் சேர 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அறிவியல் சிந்தனைகளை வளர்த்திடவும், புதிய தொழில்நுட்ப வசதிகளைத் தொடர்ந்து அறிமுகம் செய்திடும் எண்ணத்திலும் அறிவியல் மையம், மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள், டேப்லெட்டுகள் வழங்குதல் போன்ற நிதிநிலை அறிவிப்புகள் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித்தரத்தை வெகுவாக மேம்படுத்தும் இலக்கை மையமிட்டதாகும்.

இந்தியாவிலேயே அதிகப் பொருளாதார வளர்ச்சி விகிதம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் இதுவே அதிகம் ஆகும். மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் அண்மையில் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 2024-2025 நிதியாண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 9.69 விழுக்காடு ஆகும். மேலும், கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் இதுவே மிக உயர்ந்த வளர்ச்சி நிலையாகும். இந்நிலையின் தொடர்ச்சியாக 2032 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கைத் தமிழ்நாடு எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதிப்பற்றாக்குறையுடன் பொறுப்பேற்ற ஆட்சி இன்றைக்கு எட்டியிருக்கும் பொருளாதார வளர்ச்சி என்பது அபாரமானதாகும்.

மாநில அரசின் பல்கலைக்கழகங்களுக்கு மாநில முதலமைச்சரே வேந்தர் என்னும் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்திய உயர்கல்வி வரலாற்றில் உருமாற்றத்தையும், தமிழ்நாட்டு உயர்கல்வியில் பெரும் மாற்றத்தையும் உருவாக்கும் என்பது திண்ணம். கல்வி வளர்ச்சியில் இந்திய மாநிலங்களுக்கு முன்னத்தி மாநிலமாக விளங்கிய தமிழ்நாடு, இனி உலக நாடுகளுடன் போட்டியிடுமளவிற்கான வாய்ப்புகளை நோக்கி நகர்கிறது.



இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு





பேராசிரியர் சூரியா கிருஷ்ணமூர்த்தி
எழுத்தாளர், ஆய்வாளர்.



சென்னை தரமணியில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில், சட்டென கவனம் ஈர்க்கும் இந்திய வரைபடம் ஒன்றைக் காண முடியும். இமயமலை மேல்பகுதியிலும், குமரிமுனை கீழ்ப்பகுதியிலும் என வடக்கு தெற்காக அமைந்துள்ள பழக்கப்பட்ட வரைபடத்திற்கு மாற்றாக, குமரிமுனை மேல்பகுதியிலும், இமயமலை கீழ்ப்பகுதியிலும் எனத் தெற்கு வடக்காக இந்திய வரைபடம் அமைந்திருக்கும். மரபான திணிக்கப்பட்ட பார்வையில், சிந்தனையில் பெரும் உடைப்பை நிகழ்த்தும் அத்தனை சாத்தியங்களும் அந்த வரைபடத்தில் உள்ளன.

பொதுவான பார்வையிலிருந்து அணுகினால், அந்த வரைபடம் தலைகீழாக வைக்கப்பட்டு இருக்கிறது, அவ்வளவுதான். ஆனால், உண்மையில், வரலாற்றில் நேர்ந்துவிட்ட பிழையை நேர் செய்யும் விதமாக அது திருத்தி அமைக்கப்பட்டு இருப்பதாகவே உணர முடியும். இந்திய நிலப்பரப்பைக் குமரிமுனையில் இருந்து தொடங்கும் புதிய பார்வைக்கு அது வித்திடுகிறது.

நிலப்பரப்பை மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றையும் தென்முனையில் இருந்துதான் தொடங்க வேண்டும் என்பதற்கு, அடுக்கடுக்கான தொல்லியல் சான்றுகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு, இதுவரையிலான வரலாறுகளை நேர் செய்து வருகிறது நான்கு ஆண்டு கால 'திராவிட மாடல்' அரசு.

தலைகீழாக்கத்திற்கு பெயர்போன இயக்கம் திராவிட இயக்கம். அரசியல், பண்பாடு, மொழி, நம்பிக்கைகள், சமூக அமைப்பு என மனதின் அடி ஆழத்தில் புதைந்து போன சிந்தனைகளையும், வரலாறு நெடுக நிலைத்துநின்ற நிகழ்வுகளையும் புரட்டிப்போட்ட பெருமிதம் இந்த இயக்கத்திற்கு உண்டு. அந்த திராவிட மாடலின் பெயரால் ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு குறித்த இதுவரையிலான பார்வைகளைத் தலைகீழாக்கம் செய்துள்ளார். தமிழ்நாடு அரசு அடுத்தடுத்து வெளியிட்டு வரும் ஆய்வு முடிவுகள், வரலாற்று ஆசிரியர்களைத் தங்களது முந்தைய முடிவுகளை மறுபரிசீலனை செய்யக்கோருகிறது. எழுதப்பட்ட புத்தகங்களைத் திருத்தி அச்சிட நிர்பந்திக்கிறது.

2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே, 'இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றைத் தெற்கிலிருந்து தொடங்க வேண்டும்' என்று மேடைக்கு மேடை முழங்கியவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர். நான்கு ஆண்டுகால ஆட்சியில், தன் முழக்கத்திற்கு உயிர் கொடுத்துள்ளார். அரசியல் ரீதியான மேடை முழக்கமாக நிறுத்திவிடாமல், அதனைச் செயல்படுத்துவதற்கான தொடர் முயற்சிகள் இந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ், தமிழர், தமிழ்நாடு என்கிற பெருமிதத்தை அறிவியல் பூர்வமாக நிறுவியுள்ளார் நம் முதலமைச்சர்.

ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, தொல்லியல் தேடல்களை ஊக்கப்படுத்துவது, ஆய்வுப் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட தமிழரின் தொன்மைக்கு, உலக அளவில் அங்கீகாரத்தைத் தேடிப் பெறுவது. அங்கீகரிக்கப்பட்ட பெருமிதத்தை மக்கள்மயப்படுத்துவது என்கிற மூன்று தளங்களில் இடைவிடாது இயங்கிவரும் ஆட்சியாக, 'திராவிட மாடல்' அரசு வரலாற்றில் நிலை பெறுகிறது.

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

01) ஜனவரி 05, சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு விழா.

02) ஜனவரி 23, அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற இரும்புக் காலம் குறித்த ஆய்வுப் பிரகடன வெளியீட்டு விழா.

20.09.1924 அன்று, தி இல்லஸ்ட்ரேட்டர் லண்டன் இதழில் வெளியான, இந்திய தொல்லியல் துறையின் அந்நாளைய இயக்குனர் ஜான் மார்சல் அவர்களின், சிந்துவெளி பண்பாடு குறித்த அறிவிப்பு இந்தியாவின் வரலாற்றை ஆய்வுப் பூர்வமாக மாற்றி நிறுவியது. சிந்துவெளி என்கிற மிகப்பெரிய, பண்பட்ட, நன்கு செழுமை அடைந்த நகர நாகரிகம் இருந்ததை அந்த ஆய்வின் முடிவு உலகிற்கு அறிவித்தது.

இந்தியத் துணைக்கண்டத்திற்கே பெருமிதமான தருணம் அது. அதன் நூற்றாண்டில், இந்திய அளவில் அது குறித்த உரையாடல்களோ, கொண்டாட்டங்களோ, மீளாய்வுகளோ எங்கும் நடைபெறவில்லை. இந்தியாவில் எந்த அரசும் ஒரு திருப்புமுனை தருணத்தின் நூற்றாண்டைக் கொண்டாட முன்வரவில்லை.

ஆனால் தமிழ்நாட்டில், சிந்துவெளிப் பண்பாடு அறிவிக்கப்பட்டதன் நூற்றாண்டை வீதிகள்தோறும் பேசி, விவாதித்து, கொண்டாடினோம். அதன் உச்சமாக தமிழ்நாடு அரசு, அரசின் சார்பிலேயே பெருவிழாவை எடுத்தது. ஆய்வுக் கருத்தரங்கை நிகழ்த்தி, கொண்டாட்டம், விவாதம், மீள் வாசிப்பு என எல்லாவற்றுக்குமான தளத்தை உருவாக்கிக் கொடுத்தது.

பிற அரசுகளின் புறக்கணிப்புக்கும், தமிழ்நாடு அரசின் கொண்டாட்டத்திற்கும் அடிப்படையான காரணம் ஒன்று தான். ஜான் மார்சல் அவர்களின் பிரகடனம் இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை, ஆரிய நாகரிகத்தின் வரலாறாகக் கட்டமைத்து வைத்திருந்த பிம்பங்களைத் தகர்த்தது. ஆரிய நாகரிகத்திற்கு முன்பே உருவான நகர நாகரிகமாக திராவிடப் பண்பாட்டை முன் வைத்தது.

சிந்துவெளிப்பண்பாடு குறித்து தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் எழுதிய குறிப்புகள் இன்றும் நம்மிடம் உள்ளன. 1924 ஆம் ஆண்டு அது அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்து, நூறாண்டு காலமாகத் தமிழ்நாடு அதைக் கொண்டாடி வருகிறது. அதனை மற்றொரு பரிணாமத்திற்கு உயர்த்தியுள்ளார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். அரசு சார்பில் நடைபெற்ற விழாவில் மூன்று முக்கியமான அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

01) செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளிப் புதிர் பற்றி உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையைக் கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும் வழிவகையைத் தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும்.

02) சிந்துவெளிப் பண்பாடு குறித்து தொடர் ஆராய்ச்சிகளை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ரோஜா முத்தையா நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும் வகையில் தலைசிறந்த தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் பெயரில் ஓர் ஆய்விருக்கை அமைக்க 2 கோடி ரூபாய் நல்கை வழங்கப்படும்.

03) தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகமே தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஓயாமல் உழைக்கும் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி, கல்வெட்டியல் ஆய்வாளர்கள், நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரையும் ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

இந்தியப் பெருமிதமாகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய சிந்துவெளிப் பண்பாடு அறிவிப்பின் நூற்றாண்டை, தமிழ்நாடு பெருமிதத்தோடு கொண்டாடுவதும், நூறாண்டுகளாக அவிழ்க்கப்படாது சிந்துவெளிக் குறியீடுகளில் உள்ள மர்மங்களைக் கண்டறிய தமிழ்நாடு

முயல்வதும், இந்திய வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய ஜான் மார்சல் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைப்பதுமான நடவடிக்கைகள் ஒரு அரசியல் செய்தியைத் தன்னகத்தே கொண்டுள்ளன. பிறர் எந்தக் காரணத்திற்காக சிந்துவெளிப்பண்பாட்டைப் புறக்கணிக்கிறார்களோ, அதே காரணத்திற்காகத்தான் தமிழ்நாடு அதனைக் கொண்டாடுகிறது.

சிந்துவெளிப் பண்பாடு தமிழ்ப் பெருமிதத்தின், தமிழர் தொன்மையின் பகுதி என்பதை அழுத்தமாக நிறுவியுள்ளது திராவிட மாடல் அரசு. உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டின் இலச்சினையில் சிந்துவெளிக் குறியீடுகளைப் பயன்படுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓர் செய்தியை உலகிற்குச் சொன்னார். அதனை வெளிப்படையாகவே, சிந்துவெளி எங்கள் பெருமிதம் என்று அறிவிக்கிறார் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள்.

ஆரியமும், சமஸ்கிருதமும் தான் இந்தியாவின் மூலம் என்று, கற்பனையை வரலாறாக அதற்கு முன்னர் பலரும் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அதை மாற்றியது ஜான் மார்ஷல் அவர்களின் ஆய்வுகள்தான். சிந்துவெளி நாகரிகம் ஆரியத்துக்கு முற்பட்டது, அங்கு பேசப்பட்டது திராவிட மொழியாக இருக்கலாம் என்று அவர் நூறாண்டுகளுக்கு முன்பு சொன்ன குரல் இன்றைக்கு வலுப்பெற்றிருக்கிறது. என்னதான் அங்கு இல்லை! என்று கேட்கும் அளவுக்கு நன்கு கட்டமைக்கப்பட்ட வளர்ச்சி பெற்ற ஒரு நாகரிகம் சிந்துவெளியில் இருந்ததை அங்கு கண்டெடுக்கப்பட்ட பல்வேறு அடையாளங்கள் காட்டுகின்றன. சிந்துவெளியில் 'காளைகள்'தான் இருந்தன. இது திராவிடச் சின்னம்! சிந்துவெளியில் இருந்து, இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கின்றன.பழந்தமிழ் இலக்கியங்களில்,ஏறுதழுவுதல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்று வருகிறது.

சிந்துவெளி நாகரிகம் சார்ந்த ஒரு முத்திரையில் காளை உருவமும், அதை அடக்க முயலும் வீரரை அந்தக் காளை தூக்கி வீசுவதும் இருக்கிறது.அப்படியே மற்றொரு பக்கம் பார்த்தோம் என்றால், குதிரை முத்திரை சிந்துவெளியில் இல்லை. வேத இலக்கியங்களில் பெருநகரங்களும் இல்லை, தாய்த்தெய்வ வழிபாடும் இல்லை! ஆனால், இந்த இரண்டும் சிந்துவெளியிலும் இருக்கின்றன! கீழடியிலும் இருக்கின்றன! இதையெல்லாம் வைத்துதான் சங்ககாலத் தமிழர்களின் மூதாதையர் இருந்த இடம்தான் சிந்துவெளி என்று நிறுவப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறைகூவலில் உள்ள செய்தி அழுத்தமானது, ஆழமானது, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றை எப்படி எழுத வேண்டும் என்பதற்கு வழிகாட்டியானது. சிந்து சமவெளிக்கும், கீழடிக்குமான பண்பாட்டுத் தொடர்பை, தொடர்ச்சியை அலுவல்பூர்வமாக உரக்கச்சொல்லி உயர்ந்து நிற்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்.

இரண்டாவது நிகழ்வு, இரும்புக் காலம் குறித்த பிரகடனம்.

தமிழர்களுக்கு என்று பொருளை அடிப்படையாகக் கொண்ட, ஏற்றத்தாழ்வுகள் அற்ற, சமத்துவம் நிறைந்த, முற்போக்குச் சிந்தனைகள் வழிநின்ற தொல்காலம் இருந்ததை, அண்ணாவின் இயக்கம் ஊர்தோறும், தெருதோறும் பேசியது.

தமிழ்ச் சமூகம் ஒரு ஆதிப் பொதுவுடைமைச் சமூகமாக இயங்கியதாகவும், இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டுப் படை எடுப்புகளின் காரணமாக அதன் செழுமை சீரழிந்து, ஏற்றத்தாழ்வுகள் குடியேறி, சொந்த இயல்பை இழந்து, இன எதிரிகளால் அடக்கப்பட்டது என்பதை ஒரு அரசியலாகவே முன் வைத்தது திராவிட இயக்கம். சமத்துவம் நிறைந்த தமிழினத்தின் ஆதிப் பெருமிதத்தைப் பேசுகிற போதெல்லாம், அதை வெற்று முழக்கமாக, வீண் பெருமிதமாக, அர்த்தமும் ஆதாரமும் அற்ற கருத்துகளாக, கருத்துருவாக்க சக்திகளும், ஆதிக்க சக்திகளும் புறந்தள்ளின. தமிழர்களின் ஆதிப் பெருமிதம் எள்ளி நகையாடப்பட்ட காலமெல்லாம் உண்டு.

அப்போதெல்லாம் நம்முடைய பெருமிதங்களுக்குச் சான்றாக, சங்க இலக்கியம் உள்ளிட்ட இலக்கியச் சான்றாவணங்களை முன்வைத்து வாதிட்டோம். அத்தகைய இலக்கியக் குறிப்புகளை வெறும் கற்பனைக் காட்சிகள் என்று அதே சக்திகள் இடது கையால் புறந்தள்ளின.

இன்றைக்குத் தமிழ் இனத்தின், தமிழ் நிலத்தின், திராவிடப் பண்பாட்டின் புராதனத் தன்மையை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்து, நிரூபணம் செய்து உலகோர் ஏற்கும் வண்ணம் பிரகடனம் செய்துள்ளார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்.

இரும்புக் காலத்தின் தோற்றுவாய் குறித்து உலகம் முழுக்க பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், இரும்புக் காலம் தமிழ் நிலத்திலிருந்து தான் தொடங்கியது. இரும்பை உருக்கும் தொழில்நுட்பம் வரையில் அறிந்துவைத்துப் பயன்படுத்திய மரபு தமிழின மரபு என்பதை, நவீன அறிவியல் கணக்கீட்டு முறைகளின் அடிப்படையில், திராவிட மாடல் அரசு கண்டறிந்து அறிவித்துள்ளது.

சுமார் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இரும்பை உருக்கிப் பயன்படுத்தியதை இன்று நாம் நிறுவியுள்ளோம்.

தமிழினப் பெருமிதங்கள் வெற்று முழக்கங்கள் அல்ல, தமிழின் ஆதி இலக்கியங்கள் வெறும் கற்பனை அல்ல என்பதை நெஞ்சம் நிமிர்த்திச் சொல்லியிருக்கிறோம்.

தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் 5,300 ஆண்டுகளுக்கு முன்பு இரும்பு அறிமுகம் ஆகியிருக்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம். இதை ஆய்வு முடிவுகளாகவே நான் அறிவிக்கிறேன். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகத்தின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

புனே நகரில் இருக்கும் பீர்பால் சகானி தொல்அறிவியல் நிறுவனம், அகமதாபாத் நகரில் இருக்கும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுக்கும் பன்னாட்டு அளவில் உயரிய நிறுவனமான அமெரிக்க நாட்டின் ஃபுளோரிடா மாநிலத்தில் இருக்கும் பீட்டா ஆய்வகத்துக்கும் மாதிரிகள், பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தேசிய நிறுவனங்களில் OSL பகுப்பாய்வுக்கும், பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க காலப் பகுப்பாய்வுக்கும் ஒரே தாழியிலிருந்து மாதிரிகளை அனுப்பி வைத்தோம். இப்படியான மூன்று நிறுவனங்களிடம் இருந்தும் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பிப் பெறப்பட்ட முடிவுகளை, கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைக்கின்றன. இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு. 3,345-லேயே, தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்று தெரியவருகிறது. அதற்கான ஆய்வு முடிவுகள் இதோ!

தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது! இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல. உலகிற்கே மீண்டும் சொல்கிறேன். தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்த நிகழ்ச்சி வாயிலாக அறிவிக்கிறேன்!" என்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு, தமிழின வரலாற்றில் மாபெரும் திருப்புமுனை. இந்தியத் துணைக்கண்ட வரலாற்றைத் திருத்தி எழுதிய தருணம்.

இத்தனை ஆண்டு கால வரலாறு எங்களுடையது என்கிற பெருமிதத்தை மட்டும் முன்வைத்திருந்தால், அது இவ்வளவு பெரிய கொண்டாட்டத்திற்கு வழி செய்திருக்காது. மற்றோரை விட முன்னே பிறந்தோம் என்பதில் என்ன பெருமிதம் இருந்துவிடப் போகிறது. மற்றோரை விட நாகரிகமாகவும், அறிவில் மேம்பட்டும், சமத்துவத்தோடும் வாழ்ந்தோம் என்பதில் தானே பெருமிதம். தமிழ் இனத்தின் காலப் பழமையை மட்டும் முன் வைக்காமல் அதன் அறிவு மேன்மையையும் முன்வைத்து பிரகடனத்தை வெளியிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

5,300 ஆண்டு கால வரலாறு எங்களுக்கு உள்ளது என்பதோடு, அந்தக் காலத்திலேயே இரும்பை உருக்கிப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை அறிந்தவர்களாகத் தமிழர்கள் இருந்தார்கள் என்கிற அறிவைப் பிரதானப்படுத்தி அதனைப் பெருமைமிகு அடையாளமாக முன்வைத்த இடத்தில் திராவிட இயக்கத்தின் தனித்துவத்தை உச்சத்தில் நிறுத்தி உள்ளார் தமிழ்நாட்டின் முதலமைச்சர். கீழடியைக் கொண்டாடும்போதும், அதன் காலவெளியை மட்டும் முன்னிறுத்தாமல், அக்காலத்தில் நிலவிய எழுத்தறிவை, நகர நிர்மாண அறிவை முன்வைத்துக் கொண்டாடுவதை கவனங்கொள்ளலாம்.வெறும்பெருமிதத்திற்காகமட்டுமல்ல,எதிர்காலத்தைக்

கட்டமைப்பதற்கான படிப்பினையாகவும் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் சொன்னது தனிச்சிறப்பு.

2022 ஆம் ஆண்டு துபாய் நாட்டிற்குச் சென்றபோது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் சென்ற இடங்களில் ஒன்று எதிர்கால அருங்காட்சியகம் (:பியூச்சர் மியூசியம்). அமெரிக்காவிற்கு சென்றிருந்தபோது தமிழ்நாட்டு இளைஞர்களுக்காக அவர் மேற்கொண்ட ஒப்பந்தங்களில் ஒன்று, செயற்கை நுண்ணறிவுத் திறன் பயிற்சிக்கானது.

ஒருபுறம் 5,300 ஆண்டுகால வரலாற்றை மீட்டெடுப்பதும், மறுபுறம் அடுத்த நூறாண்டுக்கான செயல் திட்டங்களை வகுப்பதும் என தமிழ் இனத்தின் கிழக்கு – மேற்கு திசைகளை ஒருசேர அளக்கும் மாபெரும் தலைவராக அவர் உயர்ந்து நிற்கிறார்.

ஜான் மார்சலின் பிரகடனம் நூறு ஆண்டுகள் கழித்தும் பேசப்படுகிறது. அதைப்போல இரும்புக் காலம் குறித்த தமிழ்நாடு முதலமைச்சரின் பிரகடனமும் இன்னும் பல நூறு ஆண்டுகள் விவாதிக்கப்படும்.

அந்த அறிவிப்பின் மீதான தற்கால அரசியல் பார்வைகள், சில பத்து ஆண்டுகளில் உதிர்ந்து விடும். ஆனால் தமிழ் இனத்தின் அறிவு 5,300 ஆண்டுகள் பழமையானது என்கிற அவரது அறிவிப்பு நெடுங்காலத்திற்கு நிலைத்து நிற்கும். ஏனெனில் அது வெற்றுப் பெருமிதமாக முன்வைக்கப்படவில்லை, சான்றுகள் அடிப்படையில் அறிவியல்பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் எச்சங்களையும், சான்றுகளையும் நாம் புதிதாக உருவாக்க முடியாது. ஆனால் பழங்கால எச்சங்களை, அறிவியல் சான்றுகளாக முன்வைத்து நம்முடைய வரலாறுகளை நிரூபணம் செய்ய முடியும்.

அதற்குக் காலத்திற்கு ஏற்றாற்போல் புதிய புதிய பயிற்சிகள், தொடர்ச்சியான ஆய்வுகள், நிரூபிக்கப்பட்ட ஆய்வுகளை மக்கள் மத்தியில் பரப்புரை செய்து அந்தப் பெருமிதத்தை ஜனநாயகப்படுத்துதல் ஆகியவை ஒரு அரசின் தகைசால் தன்மையாக இருக்க முடியும்.

திராவிட மாடல் அரசு, இரண்டு ஆண்டு கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மை முதுகலைப் பயிற்சி, அருங்காட்சியியல் பட்டயப் பயிற்சி, ஆழ்கடல் ஆராய்ச்சிக்கான சிறப்புப் பயிற்சி ஆகியவற்றைப் புதிதாக அறிமுகம் செய்துள்ளது.

கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் உள்ளிட்ட பல தொல்லியல் பகுதிகளில் புதிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

அப்படிப் பெறப்பட்ட பெருமிதத்தை அறிவியல் பூர்வமாக நிரூபணம் செய்து, கருத்தரங்கங்கள், பண்பாட்டு விழாக்கள், புத்தகக் கண்காட்சியில் முப்பரிமாணக் காட்சிக்கூடங்கள், கீழடி உள்ளிட்ட பல பகுதிகளில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அருங்காட்சியகங்கள், வெளியீடுகள் என அப்பெருமைகளை மக்கள்மயப்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு.

தமிழ் இனத்தின் 5,300 ஆண்டு காலத் தொன்மையைத் தன் நான்கே ஆண்டுகளில் அளந்து முடித்ததோடு, தமிழர் பயணித்த நிலம் எல்லாம் பயணித்து, அயல் மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் தடங்களைத் தேடிப் புறப்படுகிறோம் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்.

அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு மருத்துவக் கல்வியில் 27 சதவீத இட ஒதுக்கீட்டை நீதிமன்றம் மூலம் உறுதி செய்து, நாடு முழுமைக்குமான சமூக நீதியைக் காப்பாற்றியது. மாநிலங்களின் சுயமரியாதையை மீட்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, தன்னாட்சி உரிமையை மீட்டெடுத்தது போன்ற நிகழ்காலத்திற்கும், இரும்பைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப அறிவோடு 5,300 ஆண்டுகளுக்கு முன்பே விளங்கிய தொல் காலத்திலும் சரி, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு தென்முனையாம் தமிழர் நிலத்திலிருந்து தான் தொடங்குகிறது. அந்தப் பெருமிதம் நிலைக்கும் வரையில், அதை உலகிற்குச் சொன்ன, 'திராவிட மாடல்' முதலமைச்சர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பெருமிதமும் நெடிந்துயர்ந்து நிலைக்கும். ●



விளையாட்டல்ல
நிஜம்!
கனவுகள்
நனவாகின்றன!

பி.எம். சுதீர்
துணை ஆசிரியர், வாவ் மீடியா வேர்ல்ட்



இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, ஒரு நாட்டின் வல்லமையைப் பறைசாற்றும் முக்கிய அம்சமாக விளையாட்டு இருக்கிறது.

ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டு போன்ற போட்டிகளில் ஒரு நாடு எத்தனை பதக்கங்களை வெல்கிறது என்பதை வைத்து அந்த நாட்டின் மதிப்பு அதிகரிக்கிறது. புகழ் பரவுகிறது. அந்த நாட்டு மக்களுக்கு உத்வேகம் பிறக்கிறது.

இதனாலேயே ஒவ்வொரு அரசும் தங்கள் நாட்டு விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது அவசியமாகிறது.

விளையாட்டில் ஒரு வீரர் தன் திறமைகளை மேம்படுத்திக்கொள்ள அவருக்கு நான்கு அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன.

1. பணம், பயிற்சிகளை மேற்கொள்ள, வாழ்க்கையை நடத்த.
2. பயிற்சியாளர், தன்னுடைய திறமைகளை தீட்டிக் கொள்ள.
3. நவீன விளையாட்டுக் கருவிகள், மேலை நாடுகள் போல் பயிற்சி பெற.
4. மைதானம், தொடர் பயிற்சிகளை மேற்கொள்ள.

இந்த அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டால், அது குறித்த கவலைகள் இல்லாமல் போனால் அவனால் தன்னுடைய விளையாட்டில் முழுக் கவனத்தைச் செலுத்த முடியும்.

இந்தத் தேவைகளை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலினின் தலைமையிலான திராவிட மாடல் அரசு சிறப்பாகப் பூர்த்தி செய்திருக்கிறது. விளையாட்டுத் துறையைத் தன்னுடைய பொறுப்பில் வைத்திருக்கும் துணை முதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலின், விளையாட்டு வீரர்களின் நலனிலும் அவர்கள் திறன் மேம்பாட்டிலும் கவனமாக, கனிவாகச் செயல்படுகிறார்.

அள்ளிக் கொடுத்த அரசு

கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடும் வீரர்களுக்குக் கோடிக்கணக்கில் பணம் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. ஆனால் தடகளம், வில்வித்தை, போன்றவற்றில் திறமையைக் காட்டும் விளையாட்டு வீரர்களுக்கு வருவாய் மிக சொற்பம். வெற்றி பெற்று கிடைக்கும் பரிசுப் பணமும் மிகக் குறைவு. இதனைத் தமிழ்நாடு அரசு தெளிவாகப் புரிந்திருக்கிறது. எல்லா விளையாட்டு வீரர்களையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கிறது.

கடந்த 4 ஆண்டுகளில் பாரா- தடகள வீரர்கள் உட்பட 4,554 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.151 கோடியை ஊக்கத்தொகையாக அள்ளிக் கொடுத்துள்ளது. இது இதுவரை எந்த அரசும் விளையாட்டு வீரர்களுக்கு செய்யாத சாதனை.

2023- 2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அறிவிப்பின்படி, எலைட் வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை 25 இலட்சத்தில் இருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் மட்டும் 27 வீரர்கள் பயனடைந்துள்ளனர்.

2024-ஆம் ஆண்டு நடந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற 4 விளையாட்டு வீரர்களுக்கு ஐந்து கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. 2023-இல் சீனாவின் ஹாங்சோவில் நடந்த 19-ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழக விளையாட்டு வீரர்கள் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்றுள்ளனர். பாரா பிரிவில், தமிழக விளையாட்டு வீரர்கள் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும்

11 வெண்கலம் என மொத்தம் 15 பதக்கங்களை வென்றுள்ளனர். அவர்களுக்கு ரூ.9.40 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

இப்படி விளையாட்டு வீரர்களைத் தொடர்ந்து ஊக்குவிப்பதால், 'விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கான சிறந்த மாநிலம்' என்ற விருதை 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பெற்றது. இந்த விருதை வழங்கியது இந்து ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ்.

திறமைகளைக் கூர்தீட்ட சர்வதேசப் பயிற்சியாளர்கள்

இளம் விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக, அதீதத் திறமை கொண்ட 76 புதிய பயிற்சியாளர்கள் மாநில அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் உயர் மட்ட பயிற்சியை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட 4 வெளிநாட்டு உயர் செயல்திறன் கொண்ட பயிற்சியாளர்களும், 5 சிறப்புப் பயிற்சியாளர்களும், 2 பாரா விளையாட்டு நிபுணர்களும் அடங்குவர்.

விளையாட்டுக் கருவிகளுக்கும் பஞ்சமில்லை

பயிற்சியாளரை நியமித்தால் மட்டும்போதுமா? விளையாட்டு உபகரணங்களை வாங்க வீரர்களுக்குப் பணம் வேண்டாமா? அங்கேயும் விளையாட்டு வீரர்களைத் தமிழ்நாடு அரசு கைவிடவில்லை. 'டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டம்' மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் 16,798 விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் மதிப்பு 85.99 கோடி ரூபாய். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தை" விரிவுபடுத்துவதற்காக ரூ.100 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது.

தரம் உயர்த்தப்பட்ட மைதானங்கள்

நிதி உதவி, பயிற்சியாளர்கள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற விஷயங்களில் தேவையானவற்றை செய்துகொடுத்த அரசு, வீரர்கள் பயிற்சி பெறவும், தங்கள் திறனை வெளிக்காட்டவும் பயன்படுத்தும் மைதானங்களில் தீவிர கவனம் செலுத்துகிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மைதானங்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2023-ஆம் ஆண்டில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வசதியாக சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயற்கை இழை தடகளப் பாதை ரூ.8.64 கோடியில் சீரமைக்கப்பட்டது.

சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல் குளம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ரூ.9.098 கோடியில் சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை ஆடுகளம் மறுசீரமைக்கப்பட்டு புதிய பயிற்சி ஹாக்கி மைதானம் அமைக்கப்பட்டது.தமிழகத்தில் 10 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ரூ.30 கோடிக்கு நிர்வாக அனுமதியும், ரூ.25 கோடிக்கு நிதியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 18 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கங்களை நிறுவுவதற்கு ரூ.54 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 10 சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டு அரங்கங்குகளுக்கும், ஏற்கெனவே 29 சட்டமன்றத் தொகுதிகளில் பயன்பாட்டில் உள்ள சிறு விளையாட்டு அரங்குகளுக்கும் 'முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் உள்ள SDAT (SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL-NADU) நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக அரசு ரூ.2.38 கோடி நிதியை ஒப்பளித்துள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்படும் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடங்கள் நிறுவவும், உடற்பயிற்சிக் கூட உபகரணங்களை பராமரிக்கவும்,புதிய உடற்பயிற்சிக் கூட உபகரணங்களை வழங்கவும் அரசு ரூ.9.78 கோடியை ஒப்பளித்துள்ளது.

சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் ரூ.3,00,65,000/- செலவில் புதிய மூன்று மாடிக் கட்டடத்தில் சென்னை ஒலிம்பிக் அகாடமி நிறுவப்பட்டு விளையாட்டு வீரர்களால் பயன்படுத்தப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில், ஒலிம்பிக் அகாடமியை நிறுவுவதற்கு ரூ.150 கோடிக்கு அரசு நிர்வாக அனுமதியும், முதற் கட்டமாகத் திருச்சி மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமியை மேம்படுத்துவதற்கு ரூ.20 கோடியையும் அரசு வழங்கியுள்ளது. மதுரை மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமியை நிறுவுவதற்கு அரசு ரூ.6 கோடியை ஒப்பளித்துள்ளது.

இவையெல்லாம் சில உதாரணங்கள்தான். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல் நூற்றுக்கணக்கான மைதானங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளில் உதாரணங்களாக இருக்கும் சில மைதானங்களை மட்டுமே இங்கே குறிப்பிட்டுள்ளோம். விளையாட்டு வீரரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி அவர்களை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு அரசு மகத்தான சாதனையைக் கடந்த 4 ஆண்டுகளில் செய்துள்ளது.

தமிழ்நாட்டுக்கு வந்த சர்வதேசப் போட்டிகள்

விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பது போல் விளையாட்டுப் போட்டிகளையும் தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கிறது. திராவிட மாடல் அரசின் கடந்த 4 ஆண்டுகால அரசில் விளையாட்டுத்துறை செய்த மகத்தான சாதனைகளில் ஒன்று செஸ் ஒலிம்பியாட் போட்டி. முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சிகளால் 44-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி சென்னைக்கு அருகில் உள்ள மாமல்லபுரத்தில் கோலாகலமாக நடத்தப்பட்டது. இதன்மூலம் சர்வதேச செஸ் வரைபடத்தில் தமிழ்நாடு ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது. 28.07.2022 முதல் 10.08.2022 வரை நடத்தப்பட்ட இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 186 நாடுகளைச் சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்த தமிழ்நாடு அரசு 114 கோடி ரூபாய் நிதி அளித்தது.

அதே 2022-ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியும் (WTA)சென்னையில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இந்தப் போட்டிக்குத் தமிழ்நாடு அரசு செலவழித்த தொகை 5 கோடி ரூபாய். செஸ், டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளைப் போலவே சென்னையில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2023 ஆம் ஆண்டில் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியும் நடத்தப்பட்டது. இதற்காக மாநில அரசு 2 கோடி ரூபாயை வழங்கியது.

இவை தவிர "7 ஆவது ஆசிய சாம்பியன்ஸ் டிராபி சென்னை - 2023" போட்டிகள் ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை 16 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சென்னையில் நடைபெற்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், சதுரங்க அறக்கட்டளையும் இணைந்து உலகத்தரம் வாய்ந்த சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்- 2023 சதுரங்கப் போட்டியை நடத்தின. இப்போட்டியில் இந்தியா, நார்வே, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 8 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள். இப்படிப் பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ளன.

உள்ளூர் வீரர்களை ஊக்குவிக்க முதலமைச்சர் கோப்பை:

சர்வதேசப் போட்டிகள் மட்டுமல்ல, சிறு நகரங்கள், கிராமங்களிலும் விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாடு அரசு நடத்துகிறது. இதனால் அந்தப் பகுதிகளில் வசிக்கும் பல விளையாட்டு வீரர்களுக்குத் தங்கள் திறமையை வெளிக்காட்ட வாய்ப்புகள் கிடைக்கின்றன. உள்ளூர் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தவும், அவர்கள் தங்கள் திறமையை நிரூபிக்கவும், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. ரூ.50.86 கோடி செலவில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் முடிய நடைபெற்ற மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. 17 இடங்களில் நடத்தப்பட்ட இந்த விளையாட்டு போட்டியில் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் பங்கேற்று தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

சென்னையில் ஜூலை 1 ஆம் தேதி முதல் ஜூலை 25 ஆம் தேதி வரை 17 இடங்களில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் முதலிடம் பெற்ற 27,054 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். 2024-ஆம் ஆண்டிலும் இதேபோல் ரூ.83.37 கோடி நிதியில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை வளர்த்திடும் நோக்கில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ரூ.38 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 07.10.2023 அன்று மாரத்தான் போட்டி, அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டி ஆகியவையும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

விளையாட்டை வளர்க்க கருத்தரங்குகள்

விளையாட்டுத் துறை சார்ந்த பல்வேறு கருத்தரங்கங்களும் கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கம் நடத்துவதற்கு ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது. தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேசக் கருத்தரங்கம் (TASCon 2023) சென்னை தாஜ் கோரமண்டலில் 2023 நவம்பர் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றன. இதில் இந்தியா, இங்கிலாந்து, நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து விளையாட்டு அறிவியல் தொடர்பான அறிஞர்கள் தலைமையில் சுமார் 250 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

விளையாட்டு வீரர்களுக்கும், இளைஞர்களுக்கும் இடையே கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்குத் தந்தை பெரியார் நினைவுச் சொற்பொழிவை ஆண்டுதோறும் நடத்துவதற்குக் தொடர் செலவினமாக அரசு ரூ.25 இலட்சத்தை வழங்கியுள்ளது. பெருமை சேர்த்த வீரர்கள் ஒரு அப்பாவாக தமிழக வீரர்கள் முன்னுக்குவர தமிழக முதல்வர் நடவடிக்கைகளை எடுக்க, அவரை பெருமைப்படுத்தும் பிள்ளைகளாய் தமிழக விளையாட்டு வீரர்களும் ஏராளமான சர்வதேசப் போட்டிகளில் வெற்றிகளைக் குவித்துள்ளனர். குறிப்பாக தமிழக செஸ்வீரரான குகேஷ், சர்வதேச செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

2022-இல் ஹரியானாவில் நடந்த 18 வயதுக்கு உட்பட்டோருக்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தில் இருந்து 288 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். அவர்கள் 14 தங்கப்பதக்கம், 14 வெள்ளிப்பதக்கம் மற்றும் 24 வெண்கலப்பதக்கம் என மொத்தம் 52 பதக்கங்கள் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

2023 இல் மத்தியப் பிரதேசத்தில் நடந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு 12 தங்கம், 19 வெள்ளி மற்றும் 21 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 52 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 8ஆவது இடத்தைப் பிடித்தது.

6ஆவது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை நடத்தப்பட்டன. இந்தப் போட்டியில் 38 தங்கம், 21 வெள்ளி, 39 வெண்கலம் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

வீரர்களின் வேலைக்கு உறுதி

விளையாட்டு வீரர்களுக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் வேலைவாய்ப்பு. பெரும்பாலான வீரர்கள் 30 வயதோடு விளையாட்டுப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விடுவார்கள். அதன்பிறகு அவர்கள் வாழ்க்கையை நன்றாக நடத்த ஒரு நல்ல வேலை வேண்டும். அந்த வேலைக்கான உத்தரவாதத்தை விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்நாடு அரசு கொடுக்கிறது. அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்களில் அடையாளம் காணப்பட்ட பதவிகளில் விளையாட்டு வீரர்களுக்கு 3% ஒதுக்கீட்டைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற / ஒலிம்பிக் / தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்ற 93 விளையாட்டு வீரர்கள் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நலிவடைந்த நிலையில் உள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.3,000-இல் இருந்து ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 58 வயது நிரம்பிய 74 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பயனடைந்து வருகிறார்கள்.

இப்படியாக இந்தியாவின் விளையாட்டுத் துறைத் தலைநகராகத் தமிழ்நாடு வேகமாக முன்னேறி வருகிறது. தாங்கள் தமிழ்நாட்டில் பிறக்கவில்லையே என்று பிற மாநில விளையாட்டு வீரர்கள் ஏங்கும் அளவு தங்கள் வீரர்களைத் தமிழ்நாடு அரசும் விளையாட்டுத்துறை அமைச்சரும் அரவணைத்து வருகிறார்கள்.

இந்த அரவணைப்பும், ஆதரவும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும், தமிழக வீரர்களின் ஒலிம்பிக் கனவுகள் விரைவில் நிறைவேறும் வண்ணம் உள்ளன. அந்தக் கனவுகளை நிறைவேற்றும் ஊக்க சக்தியும், விடாமுயற்சியும் இந்த அரசிடம் இருக்கிறது.


250
ossur



எல்லார்க்கும் எல்லாம் தமிழ்நாட்டின் சுகாதாரப் பெருவழி



ப.மீ. யாழினி
மருத்துவர்



தமிழ்நாடு ஒரு பெரும் சோதனையை 2021 மே மாதம் எதிர்கொண்டது. கொரோனா தொற்றின் இரண்டாவது அலை புயலெனத் தாக்கியது. மே 13 அன்று, ஒரே நாளில் 36,987 பேர் பாதிக்கப்பட்டனர். மருத்துவமனைகள் மூச்சுத் திணறின, ஆக்ஸிஜன் தட்டுப்பாடு உயிர்களைப் பறித்தது, படுக்கைகளுக்காக மக்கள் அலைந்தனர். அந்த இருண்ட சூழலில், ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும் பொறுப்பேற்றபோது, அவர்களுக்காக ஒரு மாநிலம் மட்டுமல்ல, ஒரு மாபெரும் சவாலும் காத்திருந்தது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, எதிர்க்கட்சித் தலைவராக திரு.ஸ்டாலின் அவர்கள் மக்களின் குரலாக ஒலித்தார். கடந்த ஆட்சியின் தொற்று நிர்வாகத்தை விமர்சித்து, அதிக பரிசோதனைகள், சிறந்த விநியோகச் சங்கிலிகள், மனிதநேய நிவாரணம் ஆகியவற்றை வலியுறுத்தினார். அதன் பின்பு, நிபுணர்களுடன் ஆலோசனைகள் நடத்தி, திட்டங்களைத் தீட்டினார். மே 7, 2021 அன்று பதவியேற்றவுடன், அவசர மருத்துவ நிலையை அறிவித்து, ஆக்ஸிஜன், தடுப்பூசிகள், படுக்கைகளை உடனுக்குடன் கண்காணிக்க ஒரு கோவிட் போர் அறை அமைத்தனர். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியம் மக்களுக்கு ஆதரவாக உருவாக்கப்பட்டது.

கொரோனாவின் கோரத் தாண்டவம் மருத்துவமனைகளை உலுக்கியபோது, அரசு ஒரு முடிவெடுத்தது: இனி ஒரு நோயாளியும் ஆக்ஸிஜன் படுக்கைக்காகக் காத்திருக்கக் கூடாது. பதவியேற்ற சில நாள்களில், 12,500 ஆக்ஸிஜன் படுக்கைகள் சேர்க்கப்பட்டன. மூச்சு விட முடியாமல் தவித்த மாநிலத்திற்கு இது ஒரு உயிர்க்கயிறு.

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 136 புதிய ஆக்ஸிஜன் படுக்கைகள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 1,914 படுக்கைகளாக உயர்ந்தது, அதில் 1,242 ஆக்ஸிஜன் வசதியுடன் இருந்தன. சேலத்தில், மே 20, 2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்த 500 படுக்கைகள் கொண்ட சிறப்பு மையம், ஆக்ஸிஜன் குழாய்களுடன் மக்களுக்கு நம்பிக்கை அளித்தது. மேலும் ஆக்ஸிஜன் செறிவூட்டிகளும் மருத்துவமனையிலேயே ஆக்ஸிஜன் உற்பத்தியும் பெரும் தொழிற்சாலைகளின் உதவியோடு ஆக்ஸிஜன் உற்பத்தி உபகரணங்களைப் பெறுதல் எனக் கழக அரசு சார்பில் முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன.

சாலைகளில் ஆம்புலன்ஸ்கள் அணிவகுத்து நின்ற காட்சி மாறியது – மக்களுக்கு மூச்சு விட சுதந்திரம் கிடைத்தது.

ரெம்டெசிவிர் போன்ற வைரஸ் எதிர்ப்பு மருந்துகள், முதலில் சென்னையில் மட்டுமே இருந்தவை, ஐந்து மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. கருப்புப் பூஞ்சைக்கு எதிராக ஆம்ஃபோடெரிசின் பி வழங்கப்பட்டது, ஜூன் மாதத்திற்குள் 1.7 இலட்சம் ஆர்.டி-பி.சி.ஆர் பரிசோதனைகள் நாள்தோறும் நடந்து, ஆகஸ்டில் பாதிப்பு விகிதம் 2%க்குக் கீழ் குறைந்தது.

வலிமையான சுகாதார அமைப்பும் முன்னோடியான மருத்துவக் கல்விக் கட்டமைப்பும் கொண்ட தமிழ்நாடு, கழக ஆட்சியில், இந்த நெருக்கடியை ஒரு புதிய பயணத்தின் தொடக்கமாக மாற்றியது. இந்தப் புத்துணர்ச்சியான முனைப்பு, தமிழ்நாட்டை இந்தியாவின் மருத்துவ சேவைகள் வரைபடத்தில் முன்னணியில் நிறுத்தியது மட்டுமல்லாமல், உலக சுகாதார அரங்கிலும் ஒரு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பாளராகவும் உயர்த்தியுள்ளது.

குறிப்பாக, தொற்றாத நோய்களின் (NCDs) பாரம் அதிகரித்து வரும் சவாலை எதிர்கொள்வதில் இந்தப் புத்துணர்ச்சியான முனைப்பு தனித்து நிற்கிறது.

எல்லார்க்கும் எல்லாம் – திராவிட மாடல் கொள்கையின் வேர்

தமிழ்நாட்டின் சுகாதாரப் புரட்சியின் ஆணிவேர் – 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற நம் தலைவரின் கொள்கை முழக்கம். ஒவ்வொரு குடிமகனுக்கும் எளிதில் கிடைக்கும், உயர்ரகமான சுகாதாரத்தை அளிப்போம் என்னும் உறுதியே அதன் உயிர்நாடி. முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக அரசு மக்களின் நலனை மையமாக வைத்து ஒரு புது பயணத்தைத் தொடங்கியது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு, மா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையிலான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, இந்தக் கொள்கை முழக்கத்தை ஐந்து தூண்களால் ஆன ஒரு மாபெரும் திட்டமாக மாற்றியுள்ளது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல, பல நாடுகளுக்கு ஒரு முன்மாதிரி!

முதலில், சுகாதாரக் கட்டமைப்பை விரிவாக்கி, நவீனமயமாக்குவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது கழக அரசு. இதயநோய், நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற தொற்றாத நோய்கள் (NCDs) உலக மக்களை அச்சுறுத்தும் இந்தக் காலத்தில், சிறப்பான மருத்துவ வசதிகள் இல்லாமல் நம் மக்களை எவ்வாறு காக்க முடியும்? அதனால்தான் அதிநவீன மருத்துவமனைகளை உருவாக்கி, மக்களுக்கு உயிர்க்காப்பு அரணாக மாற்றியிருக்கிறார்கள்.

அடுத்து, மருத்துவக் கல்வியைப் பலப்படுத்துவதில் தீவிரம் காட்டுகிறார்கள். இளங்கலை, முதுகலை மருத்துவ இடங்களைப் பெருக்கி, சிறப்புப் பயிற்சிகளால் மருத்துவர்களைச் செம்மைப்படுத்தி, எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் வல்லமை பெற்ற படையை உருவாக்கி வருகிறார்கள். குறிப்பாக மருத்துவப் படிப்புக் கனவை உழைக்கத் தயாராக இருக்கும் யாரும் காணலாம் என்பதை உறுதி செய்யவே நீட் போன்ற கொள்கைத் தெளிவற்ற தேர்வுமுறைக்கு எதிராகத் தொடர் சட்டப்போராட்டங்களை, மக்கள் போராட்டங்களைக் கழக அரசு முன்னெடுக்கிறது. மூன்றாவதாக, தொழில்நுட்பத்தின் துணையோடு சுகாதாரத்தைப் புரட்சிகரமாக்குகிறார்கள். டெலிமெடிசின், டிஜிட்டல் பதிவுகள், செயற்கை நுண்ணறிவு (AI) என எல்லாம் கைகொடுக்க, நோயாளிகளுக்கு சிகிச்சை விரைவாகவும் துல்லியமாகவும் கிடைக்க உள்கட்டமைப்பை உருவாக்கிவருகிறார்கள். நான்காவதாக, மக்களிடம் நேரடியாகச் சென்று தடுப்பு மருத்துவத்தை முன்னெடுக்கிறார்கள். தொற்றாத நோய்களின் தாக்கம் உலகை உலுக்கும் இன்றைய நாளில், முதன்மை சுகாதாரத்தையும் தடுப்பு நடவடிக்கைகளையும் முன்னிறுத்தி, மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். கடைசியாக, ஆராய்ச்சியையும் புதுமையையும் தூண்டி விடுகிறார்கள். சான்றுகளால் ஆதரிக்கப்பட்ட மருத்துவ முறைகளையும் (Evidence based Medical Practices), உலக நாடுகளுடன் கைகோத்துப் பணியாற்றுவதையும் ஊக்கப்படுத்தி, தமிழ்நாட்டை உலக சுகாதார வரைபடத்தில் பளிச்செனப் பிரகாசிக்க வைத்திருக்கிறார்கள்.

இந்த அணுகுமுறை உலக அரங்கில் பார்க்கும்போது மிகவும் முக்கியமானது. உலக சுகாதார அமைப்பு (WHO) சொல்வது என்னவெனில் தொற்றாத நோய்கள் (NCDs) உலக இறப்புகளில் 74% ஆக, அதாவது ஆண்டுக்கு சுமார் 40 மில்லியன் உயிர்களைப் பறித்து வருகின்றன. இது சுகாதாரத்தில் பெரிய திட்டங்களின் தேவையை உரக்கச் சொல்கிறது (Noncommunicable diseases WHO fact sheet). இதனால்தான் தமிழ்நாட்டின் கொள்கைகள், உள்ளூர் மக்களின் தேவைகளையும், உலகளாவிய தேவைகளையும் ஒரு கோர்வையாக இணைத்து, தொலைநோக்குப் பார்வையும் பெரிய கனவுகளும் நிறைந்த ஒரு அட்டகாசமான முன்மாதிரியாக உருவாகியிருக்கிறது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்னும் திராவிட மாடலின் இந்தத் தொலைநோக்குப் பயணம், எதிர்காலத்தை முன்கூட்டியே கணித்துச் செயல்படும் ஒரு சுகாதாரப் புரட்சியைத் தமிழ்நாட்டில் படைத்து, தமிழ்நாட்டை ஒரு சுகாதாரக் கலங்கரை விளக்கமாக உயர்த்தி, உலகுக்கே வழிகாட்டியாக மாற்றிக்கொண்டிருக்கிறது!

விரிவாகும், நவீனமாகும் மருத்துவ உள்கட்டமைப்பு

தமிழ்நாட்டில் நிகழ்ந்து வரும் சுகாதாரப் புரட்சியை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துவது, அரசின் முன்னெடுப்பில் மருத்துவ உள்கட்டமைப்பு பரந்தளவில் விரிவாக்கம் பெற்று நவீனமயமாகிக் கொண்டிருப்பது தான். மருத்துவ சேவைகளைத் திறம்பட வழங்குவதற்கு உள்கட்டமைப்பின் அவசியத்தை உணர்ந்து, பழைய மருத்துவமனைகளைப் புதுப்பித்து, புதிய மருத்துவ நிறுவனங்களை உருவாக்கி, மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் அவற்றைப் பலப்படுத்தி வருகிறது சுகாதாரத் துறை.

குறிப்பாக, தொற்றாத நோய்களை (NCDs) கட்டுப்படுத்த சிறப்பு சிகிச்சைகளும், சரியான நேரத்தில் தலையீடுகளும் இன்றியமையாதவை என்பதால், இது மிக முக்கியமான முயற்சியாகிறது.

மாநிலம் முழுவதும் மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கு அரசு திட்டமிட்ட அணுகுமுறையைப் பின்பற்றி வருகிறது. G1 முதல் G6 வரையிலான G-தொடர் மாதிரிகளின்கீழ், 560-க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் நவீனமயமாக்கப்பட்டு, பல நூறு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், அவசர சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (ICU) விரிவாக்கப்பட்டு, மேம்பட்ட நோயறிதல் சேவைகள் அறிமுகமாகியுள்ளன. இவை, திடீர் மற்றும் நீண்டகால நோய்களுக்கு தமிழ்நாடு திறம்பட பதிலளிக்க உதவுகின்றன. உதாரணமாக, காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை 800 படுக்கைகளுடன் மாநில அளவிலான புற்றுநோய் மையமாக உருவாக்கப்படுகிறது. 2025-2026 பட்ஜெட்டில் இதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 1,000-க்கும் மேற்பட்ட படுக்கைகள், பல அறுவை சிகிச்சைப் பிரிவுகளுடன் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு மருத்துவமனை (KCSSH) திறக்கப்பட்டு, புற்றுநோய், இதய நோய்கள், நரம்பியல் கோளாறுகள் போன்ற சிக்கலான NCD-களைக் கையாளும் திறனைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. ஆம்பூர், வாணியம்பாடியில் 24.31 கோடி ரூபாய் செலவில் 2025 இல் நிறைவடையவுள்ள புதிய மருத்துவமனைகள், கண், காது-மூக்கு-தொண்டை, பல் மருத்துவம், எலும்பியல், இதயவியல் சேவைகளை வழங்கி இதனை மேலும் வலுப்படுத்துகின்றன. இதில் குறிப்பிடத்தகுந்த விஷயம் என்னவென்றால் கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 3,13,864 பயனாளிகளுக்கு சேவையாற்றி, பொது சுகாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மருத்துவமனைகளை மேம்படுத்துவதோடு, NCD பாரத்தை எதிர்கொள்ள திறமையான பணியாளர்களை உருவாக்க, மருத்துவக்கல்விக் கட்டமைப்பையும் தமிழ்நாடு விரிவாக்கியுள்ளது. 2022-இல் அரியலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராமநாதபுரம், நீலகிரி, திருப்பூர், திருவள்ளூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, ஆண்டுக்கு 1,450 MBBS இடங்கள் சேர்க்கப்பட்டன.

2025-2026 இல், நம் மாநிலத்தில் 77 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அரசுக் கல்லூரிகளில் 5,250 MBBS இடங்களும் தனியார் கல்லூரிகளில் 6,050 இடங்களும், அரசுக் கல்லூரிகளில் 2,314 முதுகலை இடங்களும் உள்ளன. நவீன வகுப்பறைகள், ஆய்வகங்கள், டிஜிட்டல் நூலகங்களால் பயிற்சி திறன் பழைய அளவை விட பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதனுடன், துணை மருத்துவம் மற்றும் செவிலியர் கல்வியிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பிறந்த குழந்தைகள் மற்றும் தீவிர சிகிச்சை செவிலியர் பயிற்சிப் பாடநெறிகள், நம் செவிலியர்களின் திறன்களை மேம்படுத்தியுள்ளன. அதோடு 9,535 செவிலியர்கள் வெளிப்படையான இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளால் பயனடைந்துள்ளனர். 2025 இல் மருத்துவ சேவைகள் ஆட்சேர்ப்பு வாரியம் மூலம் 2,642 உதவி மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, வலுவான சுகாதாரப் பணியாளர் அணியை உருவாக்கியுள்ளது, நம் சுகாதாரத்துறை.

இத்தகைய தொடர் செயல்பாடுகளினாலும், முன்பிருந்த அரசுகளின் முன்னெடுப்பானாலும் மக்கள் நலம் என்ற ஒற்றை சிந்தனையை மனதில் கொண்டு அவற்றை சீரிய முறையில் நடைமுறைப்படுத்திக்கொண்டிருப்பதாலும், WHO பரிந்துரைகளைவிட தமிழ்நாட்டில் மருத்துவர்-மக்கள் விகிதம் சிறப்பாக உள்ளது. இப்படி இந்தியாவிற்கு சுகாதாரத்துறையை எப்படி நிர்வாகம் செய்வது என்பதற்குப் பாடம் எடுத்துக்கொண்டிருக்கிறது நம் தமிழ்நாடு.

தொழில்நுட்பத்தால் சுகாதார சேவையை மேம்படுத்துதல்

சுகாதார சேவையில் தொழில்நுட்பம் அடித்தளம் என்பதை உணர்ந்த அரசு நம் கழக அரசு, இன்றைய டிஜிட்டல் யுகத்தில், உலகம் முழுவதும் தொழில்நுட்பம் சுகாதார சேவைகளைப் புரட்சிகரமாக்கி வருகிறது. இதில் தமிழ்நாடு, இந்தியாவில் முன்னணியில் நிற்கிறது. மேம்பட்ட தொழில்நுட்பங்களைத் தன் சுகாதார அமைப்பில் புகுத்தி, நோய் அறிதலில் திறமை, துல்லியம், நோயாளிகளுடனான தொடர்பு ஆகியவற்றை உயர்த்தியிருக்கிறது. உலகளவிலும் உள்ளூரிலும் தொற்றாத நோய்கள் (NCDs) ஆதிக்கம் செலுத்தும் இந்தச் சூழலில், இது மிக முக்கியமான முன்னெடுப்பு.

தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம், உலக வங்கியின் 287 மில்லியன் டாலர் கடனுதவியுடன், இந்த டிஜிட்டல் புரட்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. மாநிலம் முழுவதும் விரிவான டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, நோயாளிப் பராமரிப்பை எளிதாக்கியிருக்கிறது. இதன்மூலம்தொடர்ச்சியானகண்காணிப்பு,நிகழ்நேரத்தரவுப்பகுப்பாய்வுமூலம்முடிவெடுப்பது,சுகாதார வழங்குநர்களிடையே ஒருங்கிணைப்பு, போன்றவை சாத்தியமாகியிருக்கின்றன. ஸ்காண்டிநேவிய நாடுகளின் அனுபவத்தினை மனதிற்கொண்டு,இப்பெரும் முயற்சிகள் நம் நிதர்சனத்திற்கு ஏற்றாற்போல் செயல்படுத்தி வருகிறது நம் சுகாதாரத்துறை.

டிஜிட்டல் பதிவுகள், டெலிமெடிசினுக்கு அப்பால், மேம்பட்ட நோயறிதல் மற்றும் AI ஒருங்கிணைப்பிலும் தமிழ்நாடு பெரிய முன்னேற்றம் கண்டிருக்கிறது. NCD பாரத்தை எதிர்கொள்ள இது அவசியம். உயர்தர MRI, CT ஸ்கேனர்களில் முதலீடு செய்து, புற்றுநோய், இதய நோய்கள் போன்றவற்றுக்கு துல்லியமான நோயறிதலும் விரைவான சிகிச்சையும் சாத்தியப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உலக சுகாதார ஆய்வகம் (Global Health Observatory) சொல்வது என்னவெனில், சரியான நேரத்தில் பரிசோதனையும் நோயறிதலும் புற்றுநோய், இதய நோய்களில் இறப்பு விகிதத்தை 40% வரை குறைக்கும். இவை தமிழ்நாட்டின் தொழில்நுட்ப முதலீடுகளுக்கு நியாயம் சேர்க்கிறது. NCD பாதிப்பு அதிகமுள்ள தமிழ்நாட்டில், ஆரம்பத் தலையீடு (early intervention) நோயின் போக்கை மாற்றி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்பதால் இந்த முன்னேற்றங்கள் மிக முக்கியமானவை.

வருமுன் காத்தல் நன்றே

கட்டமைப்பும், தொழில்நுட்பமும் முக்கியம்தான், ஆனால் ஒரு சிறப்பான சுகாதாரக் கட்டமைப்பின் திராணி, சமூகத்தைச் சென்றடைவதிலும், தடுப்பு நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுப்பதிலும்தான் இருக்கிறது,

குறிப்பாக NCD-களை எதிர்கொள்ளும்போது. இதில் தமிழ்நாட்டின் பல பரிமாண உத்தி, புதுமையானதும், முன்மாதிரியானதுமாக விளங்குகிறது - காரணம் என்னவெனில் பாரம்பரிய மருத்துவமனை எல்லைகளைத் தாண்டி,நாள்பட்ட நோய்களின் மூல காரணங்களை நோக்கி தன்னுடைய பார்வையைச் செலுத்த ஆரம்பித்திருப்பது தான். சுகாதாரத் துறை, நகரும் சுகாதார அலகுகள் மூலம் தனது பரப்பை விரிவாக்கியுள்ளது. 118 புதிய முதன்மை சுகாதார மையங்கள் தொடங்கப்பட்டு, 60 பழைய மையங்கள் மேம்படுத்தப்பட்டு, கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதி மக்களுக்கு அத்தியாவசிய நோயறிதல் மற்றும் ஆலோசனை சேவைகளை எடுத்துச் செல்கின்றன. இவை மருத்துவமனை சேவைகளின் நீட்சியாகச் செயல்பட்டு, உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நாள்பட்ட நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முன்னுரிமை அளிக்கின்றன. TN STEPS Survey 2020-ன்படி, தமிழ்நாட்டில் 40% பெரியவர்கள் உயர் ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இதன் உச்சமாக அமைவது மக்களைத் தேடி மருத்துவம் திட்டம். 2021 ஆகஸ்ட் 5 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சாமனப்பள்ளியில் தொடங்கப்பட்ட இந்தப் புரட்சிகரத் திட்டம், மக்களின் வீட்டு வாசலுக்கு நேரடியாக சுகாதார சேவையைக் கொண்டு செல்கிறது. உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய் போன்ற NCD-களைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்துகிறது. 2025 ஏப்ரல் வரை, மாநிலம் முழுவதும் 1.85 கோடி பயனாளிகளுக்கு சேவை வழங்கி, 632.80 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, 2,650 பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள் மாதம் 5,100 ரூபாய் ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டு,அடித்தட்டு மக்களுடன் நேரடித் தொடர்பை உறுதி செய்துள்ளது.எடுத்துக்காட்டாகப் பார்த்தோமேயானால், பெரம்பலூரில் மூன்று ஆண்டுகளில் 1,06,434 பேரும், திண்டுக்கல்லில் 5,43,809 பேரும் பயனடைந்துள்ளனர். இதன் மூலம், இந்தத் திட்டத்தின் பரந்த தாக்கம் தெளிவாகிறது.

மாநிலத் திட்டக்குழுவின் மதிப்பீடு, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் சமூக ஈடுபாடு மூலம் NCD-களைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாகச் செயல்படுவதாக சுட்டிக்காட்டுகிறது. ஆரம்பகட்ட கண்டறிதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் இறப்பு விகிதத்தை 30% வரை குறைக்கும் என்ற உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இது ஒத்துப்போகிறது. இந்தத் திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் 2,516 அரசு சுகாதார வசதிகளில் செயல்படும் தேசிய தொற்றாத நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் (NPCDCS) இணைந்து, உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, புற்றுநோய்களுக்குப் பரிசோதனை, சிகிச்சை, தொடர்ச்சியான கண்காணிப்பை வழங்குகிறது.

"காசநோய் இல்லாத தமிழ்நாடு- 2025" உத்தி, மற்றொரு நாள்பட்ட நோயான காசநோயைக் குறிவைத்து, தடுப்பு முன்னெடுப்புக்கு மற்றொரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

தாய் மற்றும் சேய் சுகாதாரம், சமூகத்தின் நீண்டகால நலனுக்கு அடித்தளமாக இருப்பதால், அதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நம்மைக் காக்கும் 48 திட்டம், தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, தடுப்பூசி, தவறாத மருத்துவப் பரிசோதனைகளை வலியுறுத்தி, தாய்-குழந்தை இறப்பு விகிதங்களை கணிசமாகக் குறைத்துள்ளது. இந்தத் துறையில் தமிழ்நாட்டின் சாதனை இந்தியாவிலேயே முன்னிலை வகிக்கிறது. வலுவான தாய் சுகாதார அமைப்புகள் சமூக சுகாதார முடிவுகளை மேம்படுத்துவதாக சர்வதேச ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள், தமிழ்நாட்டின் சுகாதார அமைப்பு வெறுமனே பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதோடு நிற்காமல், தடுப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து, இன்றைய தேவைகளையும், NCD-கள் மற்றும் மக்கள்தொகை மாற்றங்களால் எதிர்காலத்தில் எழும் சவால்களையும் தமிழ்நாடு எதிர்கொள்ளத் தயாராக இருப்பதை உறுதி செய்கிறது.

இந்தியாவிற்கான பதில் தமிழ்நாடு

உலகெங்கும் சுகாதாரத் துறை ஒரு பெரும் மாற்றத்தை சந்தித்து வருகிறது என்பது நாம் அறிந்ததே. மருத்துவத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் பாய்ச்சல்கள், உயிர் பிழைப்பு விகிதத்தையும் நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி, புதிய சாத்தியங்களைத் திறந்து வைத்திருக்கின்றன. ஸ்காண்டிநேவிய நாடுகளைப் போல, டிஜிட்டல் மயமாக்கல், டெலிமெடிசின், AI உதவியுடனான நோயறிதலில் முதலீடு செய்யும் நாடுகள் இதன் பலனை அள்ளுகின்றன. தமிழ்நாடும் தனது டிஜிட்டல் சுகாதார முன்னெடுப்புகளால் இந்தப் பாதையில் உறுதியாக நடைபோட்டு வருகிறது. ஒரு புதிய அத்தியாயத்தை உலக அரங்கில் எழுதி வருகிறது. சிறப்பான மருத்துவ மற்றும் செவிலியர் கல்வி, அதிக மருத்துவர்-மக்கள் விகிதம், ஆராய்ச்சிகளில் முதலீடு- இவையே மருத்துவத் துறையில் உலகின் முன்னணி நாடுகளின் அடையாளங்கள். தமிழ்நாடு, மருத்துவ இடங்களைப் பெருக்கி, ஆராய்ச்சி நிதியை உயர்த்தி, இந்த உலகத் தரத்தை நோக்கிப் பயணிக்கிறது. பொது சுகாதார செலவு அதிகரிப்பு சிறந்த முடிவுகளைத் தருவதாக உலகம் உரைக்கிறது; தமிழ்நாட்டின் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடுகள் இந்த உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன- இது வெறும் புள்ளிவிவரம் அல்ல, மக்களின் நம்பிக்கை.

இந்தியாவில் சுகாதாரம் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கிறது. பரந்த, பலதரப்பட்ட மக்கள்தொகைக்கு நகரங்களில் உயர் தொழில்நுட்ப மருத்துவமனைகளுக்கும் கிராமங்களில் முதன்மை சுகாதார மையங்களுக்கும் இடையே சமநிலை அவசியம். தமிழ்நாடு இதற்கு ஒரு பதிலாக முன்நகர்கிறது. நகரும் சுகாதார அலகுகளும் டிஜிட்டல் முயற்சிகளும் அனைவருக்கும் சமமான அணுகலை உறுதி செய்கின்றன. நாட்டில் சுகாதார அணுகல் சீரற்று இருக்கும் இடைவெளியை இது சரிசெய்கிறது. சுகாதார நிபுணர்களின் பற்றாக்குறை இந்தியாவின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்தாலும், தமிழ்நாடு மருத்துவ மற்றும் துணை மருத்துவக் கல்வியைத் தீவிரமாக விரிவாக்கி இதைச் சமாளிக்கிறது. தேசிய தரஉறுதி தரநிலைகளில் (NQAS) பெற்ற 478 சான்றிதழ்களுடன், மருத்துவக் கட்டமைப்பில் மூன்றாம் இடத்தைப் பிடித்து நிற்கிறது-இது ஒரு பெருமை மட்டுமல்ல, பொறுப்பும் கூட. தொற்று மற்றும் தொற்றாத நோய்களின் (NCDs) இரட்டைச் சுமையை சமாளிக்க துல்லியமான உத்திகள் தேவை; தமிழ்நாட்டின் தீவிர பரிசோதனை மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் ஒரு பின்பற்றத்தக்க மாதிரியைத் தருகின்றன.

தொற்றாத நோய்கள் உலகளவில் மரணத்தின் முதன்மைக் காரணமாக உருவெடுத்து, தமிழ்நாடு, இந்தியா, உலக சமூகத்தை ஆழமாகப் பாதிக்கின்றன. கழக அரசு இந்த நோயியல் உண்மைகளை உணர்ந்து, NCD மேலாண்மையில் முன்னோடியாகத் திகழ்கிறது. TN STEPS Survey 2020-ன்படி, தமிழ்நாட்டில் 75% இறப்புகள் NCD-களால் ஏற்படுகின்றன. 18-69 வயதுள்ளவர்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வு, 25% புகையிலைப் பயன்பாடு, 40% உடல் செயல்பாடின்மை, உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு ஆகியவற்றை வெளிப்படுத்தியது. இதய நோய்களுக்கான மொத்த இறப்பு விகிதம் தற்போது இலட்சத்துக்கு 360-430 என்ற அளவில் உயர்ந்து நிற்கிறது-. இது ஒரு எச்சரிக்கை மணி. இதற்கு ஒரு உறுதியான பதிலாக, தமிழ்நாடு பல கோண உத்திகளை அமல்படுத்தியுள்ளது. 2025-2026 பட்ஜெட்டில் நகரும் மருத்துவக் குழுக்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி, நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய் பரிசோதனை முகாம்களை மாநிலம் முழுவதும் நடத்துகிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஒரு புரட்சியாக உருவெடுத்து, 2025 ஏப்ரல் வரை 1.85 கோடி பயனாளிகளுக்கு சேவை செய்துள்ளது. வீட்டு வாசல் சேவையால் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலத் திட்டக்குழு பாராட்டியுள்ளது-இது இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு ஒரு அருமையான மாதிரி.

இந்த முயற்சிகள் உலகளவில் கவனம் பெற்றுள்ளன. 2024-இல் உலக வங்கி, தமிழ்நாட்டின் பொது சுகாதாரத் தலைமைத்துவத்தை-மருந்து கொள்முதல், வெளிப்படையான ஆட்சேர்ப்பு போன்றவற்றைத் தொட்டு-புகழ்ந்தது. 2025 பிப்ரவரியில், மகாராஷ்டிர சுகாதாரக் குழு, காஞ்சிபுரம் தலைமை மருத்துவமனையை ஆய்வு செய்து, தமிழ்நாட்டின் கட்டமைப்பைப் பின்பற்ற விரும்புவதாகக் கூறியது-இது ஒரு பெருமைக்குரிய தருணம்.

இவ்வரசின் தலையாய திட்டமான "முதல்வர் மருந்தகம்" 2025 பிப்ரவரியில் 1,000 கடைகளுடன் தொடங்கப்பட்டு, பொதுவகை மற்றும் பிராண்டட் மருந்துகளை 25% தள்ளுபடியில் வழங்குகிறது. 1,000 மருந்தியல் பட்டதாரிகளைப் பணியமர்த்தி, நீரிழிவு, உயர் ரத்த அழுத்தத்தை இலக்காக்கி, அனைத்துப் பொருளாதாரத் தரப்பினருக்கும் மருந்துகளை எளிதாக்குகிறது. இது குடும்பங்களின் நிதிச் சுமையைக் குறைத்து, சிகிச்சைத் தொடர்ச்சியை உறுதி செய்கிறது-மக்களின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறது.

சுகாதாரத்துறையில் கழக ஆட்சியின் தலைமைத்துவம்

தமிழ்நாட்டு சுகாதாரக் கட்டமைப்பின் பரிணாமம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொலைநோக்குப் பார்வையுடனும், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையுடனும் பிரிக்க முடியாத பிணைப்பில் உள்ளது. சமூக நலன், தொழில்நுட்பப் புதுமை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு பெரிய சீர்திருத்தத் திட்டத்தைக் கழக ஆட்சி முன்னெடுத்து வருகிறது.

சமூக நீதிக்கான கழகத்தின் உறுதிப்பாடு, மக்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் தெளிவாகிறது. மலிவு விலை சிகிச்சைகள், இலவச நோயறிதல், செலவு குறைந்த மருந்து கொள்முதல்-இவை அனைத்தும் பொதுமக்களுக்கு ஆறுதல் தருகின்றன. பெண்கள், குழந்தைகள், முதியவர்களுக்கான தனிப்பட்ட தலையீடுகள்-எடுத்துக்காட்டாக, மக்களைத் தேடி மருத்துவம், சாலை விபத்து பாதிப்பிற்கு உள்ளானோருக்கான இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்கள்- இந்த உள்ளடக்கத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவின் தலையாய பிரச்சினையான, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சிகிச்சைகளில் உள்ள அணுகல் இடைவெளிகளை நிரப்ப இத்திட்டங்கள் கலங்கரை விளக்கங்கள் போன்றவை.

2025-2026 பட்ஜெட்டில் சுகாதாரத்திற்கு மட்டும் 21,906 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது-இது 8.4% உயர்வு. இது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்றவற்றை மக்கள்நலத் திட்டங்களை ஆதரிக்கிறது, 1.4 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பயன் தருகிறது -இது ஒரு புள்ளிவிவரம் மட்டுமல்ல, கழக அரசின் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் அடையாளம்.

இந்தமாற்றத்தின்பின்னணியில்மாண்புமிகுமருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வுத்துறைஅமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் பங்கு மகத்தானது. கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில், வெளிப்படையான பட்ஜெட் ஒதுக்கீடுகள், புதுமையான நிர்வாகம் எனத் தமிழ்நாட்டு முதலமைச்சரின் சீரிய எண்ணம் நிறைவேறும் வகையினில் செயலாற்றிவருகிறார். இதனால், உலகில் உள்ள, தமிழ்நாடு போன்ற வளரும் பொருளாதாரங்களுக்கு, நம் மாநிலம் ஒரு முன்மாதிரியாக உள்ளது.

தமிழ்நாட்டின் சாதனைகள் பாராட்டத்தக்கவை என்றாலும், முன்னோக்கிய பயணம் வாய்ப்புகளையும், சவால்களையும் சுமந்து வருகிறது. புதுமைகளின் வேகத்தைத் தக்கவைக்க, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தொடர்ந்து முதலீடு, உலகளாவிய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு, அரசின் தொடர் ஒத்துழைப்பு என இவை யாவும் அவசியம். "எல்லார்க்கும் எல்லாம்" என்ற முதலமைச்சரின் தத்துவத்துடன், அனைவருக்கும் சிறந்த சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவையை இவ்வரசு உணர்ந்து, எச்சரிக்கையுடன் செயல்படுகிறது.

முதிர்ந்து கொண்டிருக்கும் மக்கள்தொகை, நகர-கிராம வேறுபாடுகள் போன்ற மக்கள்தொகை மாற்றங்களுக்குப் பதிலளிப்பது தொடர்ந்து சவாலாக உள்ளது. முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, முதியோர் பராமரிப்பையும் NCD மேலாண்மைத் திட்டங்களையும் விரிவாக்குவது முன்னுரிமையாகிறது. கிராமப்புற இடைவெளிகளை நிரப்ப, கட்டமைப்பு மற்றும் சமூகத் திட்டங்களில் தொடர்ந்த முதலீடு தேவை, அதற்குப் பொருளாதார வன்மை தேவை. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே தமிழ்நாடு முழுமைக்குமான பரந்துபட்ட வளர்ச்சிக்காக இவ்வரசு உழைத்துவருகிறது, நமக்கான உரிமைகளை மக்கள் வலுவோடு போராடிப் பெற்றுவருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக "கழகம் உழைக்கும், கழகம் வெல்லும், தமிழ்நாடு வெல்லும்"-இது ஒரு முழக்கம் மட்டுமல்ல, உறுதிமொழி!!

நாடு போற்றும்



ஆண்டு

தொடரட்டும் இது பல்லாண்டு

எல்லார்க்கும் எல்லாம்





பொதுத்துறை,
பொது நிர்வாகம்,
இந்திய ஆட்சிப் பணி,
இந்திய காவல் பணி,
இந்திய வனப் பணி,
மற்ற அகில இந்தியப்பணி,
மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
காவல், உள்துறை,
சிறப்பு முயற்சிகள் மற்றும்
மாற்றுத்திறனாளிகள் நலன்



திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாட்டினைச் சார்ந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை ரூ.6.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்வு...

அமலாக்கப்பிரிவு எடுத்த நடவடிக்கையின்படி, 4,79,089 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 4,77,640 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்...

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வரப்பெற்ற 82,329 தீ விபத்து அழைப்புகளிலும், 3,79,757 மீட்பு அழைப்புகளிலும் பணியாற்றி 44,244 மனித உயிர்களையும், ரூ.2,111.40 கோடி மதிப்புள்ள உடைமைகளும் மீட்பு...

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களுக்கு ரூ.2,202.79 கோடி நிதி ஒதுக்கீடு...

ரூ.63,246 கோடியில் 3 வழித்தடங்களுடன் 118.9 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II க்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றம்...

மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், முதலாம் கட்ட முகாமில் நகர்ப்புறத்தில் 9.05 இலட்சம் மனுக்களுக்கும், இரண்டாம் கட்டத்தில் கிராமப்புறத்தில் 12.81 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு...

பொதுத்துறை

அரசியல் ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் ஓய்வூதியம், மருத்துவம், இலவசப் பேருந்து, வீடுகள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியம் 15.08.2024 முதல் ரூ.21,000/–ஆக உயர்த்தப்பட்டது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 64 நபர்கள் பயன்பெறுகின்றனர்.

விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்ப ஓய்வூதியம் 15.08.2024 முதல் ரூ.11,000/– லிருந்து ரூ.11,500/– ஆக உயர்த்தப்பட்டு, 579 நபர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், மருதுபாண்டியர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுவரும் சிறப்பு ஓய்வூதியம் 15.08.2024 முதல் ரூ.10,500/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 143 நபர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

இராணுவம்

தமிழ்நாட்டின் இராணுவ வீரர்களின் மற்றும் துணை இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 20 இலட்சம் ரூபாயிலிருந்து, இருமடங்கு உயர்த்தப்பட்டு 40 இலட்சம் ரூபாயாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை நான்கு மடங்காக உயர்த்தப்பட்டு ரூ.60 ஆயிரம் முதல் ஒரு கோடி ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

பொது

புதுதில்லி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், ரூ.257 கோடி செலவில், புதிய விருந்தினர் இல்லக் கட்டடம், முக்கியப் பிரமுகர்களுக்கான கட்டடம் மற்றும் அலுவலர் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 26.07.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நிர்வாகம் (ம) சட்டமன்றம்

தமிழ்நாடு சட்டமன்ற மற்றும் சட்டமேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி ஒவ்வொரு நிதியாண்டிற்கும் ரூ.50,000லிருந்து ரூ.75,000/– ஆக 01.01.2023 முதல் உயர்த்தி வழங்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்ற (மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கான மாத ஓய்வூதியம் ரூ.25,000/–லிருந்து ரூ.30,000/– ஆக 01.06.2023 முதல் உயர்த்தி வழங்கும் வகையில், தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர், சட்டப்பேரவைத் துணைத் தலைவர், நாடாளுமன்ற செயலாளர், எதிர்கட்சித் தலைவர் மற்றும் அரசு தலைமைக் கொறடா ஆகியோர் வசிக்கும் தனி நபருக்குச் சொந்தமான வீட்டிற்கு அல்லது குத்தகைக்கு எடுத்துள்ள வீட்டிற்குரிய மாத வாடகையை ரூ.70,000லிருந்து ரூ.1,50,000 வரை உயர்த்தி வழங்கி தொடர்புடைய விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காவல் துறை

சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை பல்வேறு அமைப்புகளின் திட்டம் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, அதனடிப்படையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க சுமார் 56,975 எச்சரிக்கைத் தகவல்களை கள அதிகாரிகளுக்கு வழங்கியது.

அனைத்து முக்கிய நிகழ்வுகள் குறித்தும் அரசாங்கத்திற்கு உடனுக்குடன் தெரிவித்து, இது தொடர்பாக சுமார் 19,746 அறிக்கைகள் அனுப்பப்பட்டு நுண்ணறிவுப் பிரிவு எடுத்த சீரிய முயற்சிகள், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு உதவியதுடன், எவ்வித பாதிப்பும் இல்லாமல் அனைத்து போராட்டங்களும் அமைதியாக நடந்து முடிந்ததை உறுதி செய்தன.

சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து, விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலங்கள் மற்றும் பல்வேறு சாதி/அரசியல் கட்சிகளால் அனுசரிக்கப்பட்ட பல்வேறு சாதிய தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவு தினங்கள், தேவர் ஜெயந்தி மற்றும் குரு பூஜை விழாக்கள் போன்ற முக்கிய நிகழ்வுகள் மாநிலம் முழுவதும் அமைதியாக நடந்து முடிந்தன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிரான குற்றங்கள்/வன்கொடுமைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான பிற பாகுபாடு குற்றச்சாட்டுகள் மிகவும் நுட்பமாக கையாளப்பட்டு தகுந்த உதவிகள் வழங்கப்பட்டதன் விளைவாக மாநிலத்தில் பெரிய அளவில் வகுப்புவாத/சாதி மோதல்கள் ஏற்படவில்லை.

கர்நாடகத்திலிருந்து காவிரி நதி நீரைப் பகிர்ந்து கொள்வது, மேகதாதுவின் குறுக்கே அணை கட்டுவது, கேரள மாநிலத்திலிருந்து தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மருத்துவ, காய்கறி, இறைச்சிக் கழிவுகளைக் கொட்டுவது போன்ற பல்வேறு மாநில எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புப் புலனாய்வுத் துறையிலிருந்து பெறப்பட்ட நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, விநாயகர் சிலை ஊர்வலங்கள், ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்பு, மதம் சார்ந்த முக்கிய பண்டிகைகள், பாபர் மசூதி இடிப்பு தினம் மற்றும் பல்வேறு சமுதாய தலைவர்களின் நினைவு நாள் போன்ற நிகழ்வுகளில் விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்தேறின.

வகுப்புவாத பிரச்சினையில் ஈடுபடக்கூடியவர்களின் நடவடிக்கைகள் தலைதூக்காத வகையில் தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் மற்றும் மத அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகளை முடக்கி வைப்பதில் சிறப்புப் பிரிவானது உள்ளூர் காவல் துறையுடன் இணைந்து செயல்பட்டு வந்ததால் மாநிலத்தில் வகுப்புவாதக் கொலைகள், திட்டமிட்ட வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் கலவரங்கள் ஏதும் நடைபெறவில்லை.

வழிபாட்டுத்தலங்கள், கல்லறை மற்றும் இடுகாடு உள்ளிட்ட இடங்களில் பதற்றம் ஏற்படும் சூழலை முன்கூட்டியே அறிந்து மாவட்ட மற்றும் மாநகர காவல் அதிகாரிகளுடன் தகவல்களை உரிய நேரத்தில் பகிர்ந்ததன் விளைவால் வகுப்புவாத மோதல்கள் நிகழாமல் முறியடிக்கப்பட்டன.

ரூ.8.42 கோடியில் சென்னை பெருநகரக் காவல்துறையின் வடக்கு மற்றும் தெற்கு மண்டலத்திற்கு தலா இரண்டு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுகள் உருவாக்கம்.

51 சிறுவர் மற்றும் சிறுமியர் மன்றங்களை உருவாக்க ரூ.38.25 கோடி நிதி அனுமதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக பின்தங்கிய சிறுவர், சிறுமிகளின் நலன் காக்க தேவையான கல்வி உதவிகளை வழங்கவும் இந்த மன்றம் உதவும் **வ**கையில் இந்தத் திட்டம் 17.11.2021 முதல் செயல்படுத்தப்பட்டது.

மதுரை நகரில் உள்ள திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தைப் பிரித்து திருப்பரங்குன்றம் கோயில் காவல் நிலையம் உருவாக்கப்பட்டது.

தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரத்தில் புதிய சிறப்புப் புலனாய்வுப் பிரிவுகளை (SIU) அமைக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது, மேலும், இரண்டு பிரிவுகளும் செயல்படத் தொடங்கியுள்ளன.

Q பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது தனது வழக்குகளின் விசாரணையைத் திறம்படச் செய்ததன் விளைவாகப் பதினைந்து வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

G-20 கூட்டங்கள்/நிகழ்வுகள்: 2023ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பல்வேறு தேதிகளில் சென்னை, மாமல்லபுரம் மற்றும் கோயம்புத்தூரில் G-20 கூட்டங்களின் உலகளாவிய நிகழ்வு, அதாவது (i) பெண்கள்-20 உச்சி மாநாடு, (ii) மூன்றாவது நீடித்த நிலையான நிதி பணிக்குழு (SFWG), (iii) அறிவியல்-20 உச்சி மாநாடு (iv) பேரிடர் அபாயத் தணிப்பு பணிக்குழுக் கூட்டம், (v) 4-ஆவது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நீடித்த நிலையான பணிக்குழு (ECSWG) கூட்டம் மற்றும் (vi) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நிலைத்தன்மை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் பங்கேற்றனர். மேலும், G-20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக அரசு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும்போதுமான முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்து மட்டங்களிலும் கவனமாகத் திட்டமிட்டு எடுக்கப்பட்டதால், எந்தவொரு விரும்பத்தகாத சூழ்நிலைக்கும் இடமளிக்காமல் எந்தவொரு அசம்பாவிதமும் இல்லாமல் நிகழ்ச்சி சீராக நடைபெற்றது.

காவல்துறையை நவீனமாக்கும் திட்டத்தின்கீழ் குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் வலைப்பின்னல் அமைப்பு (CCTNS), ரூ.124 கோடி செலவில் CCTNS 2.0 ஆக மறுசீரமைக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள 1,551 காவல் நிலையங்கள் மற்றும் 372 சிறப்புப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படும். இதனால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொதுமக்கள் ஆன்லைனில் புகார்களைப் பதிவுசெய்யவும், துறைகளுக்கு இடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வசதிகளைப் பெறவும் இயலும்.

சவாலான மற்றும் முக்கியமான ஆன்லைன் குற்ற விசாரணையைக் கையாளவும், சைபர் குற்ற விசாரணையில் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்கவும் சென்னையில் ஒரு மாநில சைபர் குற்றப் புலனாய்வு மையத்தை அரசு அமைக்கும். இந்த மையம் ஆன்லைன் குற்றங்கள், விசாரணை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வை கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தும்.

2022 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல்துறைக்காக புதிய செபக் டக்ரா அணிகளை (ஆண்கள் மற்றும் பெண்கள்) கோர் செல் அறிமுகப்படுத்தியது, மேலும், அவர்கள் பல்வேறு தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். 2022 ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற போட்டிகளில் பெண்கள் அணி வெண்கலப் பதக்கத்தையும், பிப்ரவரி முதல் மார்ச் 2024 வரை மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் இரண்டும் வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

காவல்துறை சிறப்புப் பிரிவின் சீரிய முயற்சியினால், தீவிரவாத தடுப்புப் பிரிவு உட்பட மாநில நுண்ணறிவு அதிகாரிகளின் திறமைகளை அதிகரிக்கும் வகையில் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின்கீழ் புலனாய்வு செய்தல், கிரிப்டோ கரன்சி மற்றும் நிழலுலக இணையதளம், புத்தாக்கப் பயிற்சி மற்றும் சமூகவலைதள நேரடி வகுப்பு, நல்வழிபடுத்தல் வகுப்புகள் உள்ளிட்ட சிறப்பு பயிற்சி வகுப்புகள் அந்தந்த துறை சார்ந்த வல்லுநர்களால் நடத்தப்பட்டன.

புலனாய்வுப் பிரிவுகளில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு அவர்களின் திறன் மேம்பாட்டிற்காக, UAPA (Unlawful Activities (Prevention) Act), டார்க் வெப் மற்றும் எண்முறை நாணயம் (Crypto Currency), நோக்குநிலை பயிற்சி மற்றும் சமூக ஊடக பதிவுசெய்யப்பட்ட பாடநெறி பயிற்சி, தீவிரமயமாக்கல் பயிற்சி (De-radicalization) உள்ளிட்ட பல சிறப்புப் பயிற்சி வகுப்புகள் காவல்துறையின் சிறப்பு பிரிவால் நடத்தப்பட்டன.

சிறப்புப் புலனாய்வு பிரிவின் வரலாற்றில் முதன்முறையாக, அங்கு பணிபுரியும் காவல்துறையினர் மற்றும் மைய கட்டுப்பாட்டு அறையில் பணிபுரியும் காவல்துறையினரின் குடும்ப உறுப்பினர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக மே 2024இல் ஒரு விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது.

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலான காவல்துறையினருக்கு அவர்கள் பணிபுரியும் மாவட்டத்தில் பேருந்துகளில் பயணிக்க நவீன அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை காவலர் முதல் தலைமைக் காவலர் வரை அவர்களின் உடல்நலத்தைப் பேணிக் கொள்ளவும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தைச் செலவிடவும் வாரம் ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் நலன் மற்றும் நல நிதியின்கீழ், இறந்த ஊர்க்காவல் படையினரின் குடும்பங்களுக்கு இழப்பீடு ரூ.15,000 லிருந்து ரூ.1,00,000 ஆகவும், காயமடைந்த ஊர்க்காவல் படையினருக்கு ரூ.10,000 லிருந்து ரூ.50,000 ஆகவும் உயர்த்தப்பட்டு, காவல் சுருக்கெழுத்து பணியகத்தில் உள்ள காவல் நிருபர்களுக்கு ரூ.0.82 கோடி செலவில் 136 மடிக்கணினிகள் ஒதுக்கீடு.

தமிழ்நாடு அரசு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தி, அத்திட்டத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதியிலிருந்து ரூ.26.66 கோடியை ஒப்பளிப்பு செய்து, ஆணை வெளியிடப்பட்டு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன,

ரூ.9.16 கோடி செலவில் 45 இடங்களில் தானியங்கி வாகன பதிவெண் கண்டறியும் கேமராக்கள் பொருத்துதல்.

கூடுதல் ரோந்து இருசக்கர வாகனங்கள் - ரூ.0.906 கோடி செலவில் ரோந்து பணிக்கென 60 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் வாங்குதல்.

ரூ.0.60 கோடி செலவில் சிறுவர் மற்றும் சிறுமியர் மன்றங்கள் அமைத்தல்.

V-6 கொளத்தூர் காவல் நிலையம் மற்றும் பிற அலுவலகங்களுக்கு ரூ.16 கோடி செலவில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவலர் பொதுத் தேர்வு

11,741 + 72 (பின்னடைவு) இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை பொதுத் தேர்வு-2020 மூலம் நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதில்., 5,50,314 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்தனர். இறுதி தற்காலிகத் தேர்வுப் பட்டியல் 26.11.2021 அன்று வெளியிடப்பட்டதில், 11,812 விண்ணப்பதாரர்கள் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

30.06.2022 அன்று 3,552 இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை -2,180 மற்றும் தமிழ் நாடு சிறப்புக் காவல் படை - 1,091), இரண்டாம் நிலை சிறைக் காவலர் (161) மற்றும் தீயணைப்பாளர் (120) பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை பொதுத் தேர்வு-2022 மூலம் நிரப்புவதற்கான



அறிவிப்பு வெளியிடப்பட்டு, 3,66,728 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்ததில், இறுதி தற்காலிகத் தேர்வுப் பட்டியல் 29.03.2023 அன்று வெளியிடப்பட்டதில், 3,552 விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

08.08.2023 அன்று 3,359 இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை -780 மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 1,819), இரண்டாம் நிலை சிறைக் காவலர் (86) மற்றும் தீயணைப்பாளர் (674) பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை பொதுத் தேர்வு-2023 மூலம் நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, 2.81,456 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்ததில், இறுதி தற்காலிகத் தேர்வுப் பட்டியல் 23.09.2024 அன்று வெளியிடப்பட்டதில், 3,358 விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சார்பு ஆய்வாளர்கள் தேர்வு

08.03.2022 அன்று 444 சார்பு ஆய்வாளர் (தாலுகா மற்றும் ஆயுதப்படை)-2022 பதவிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, 2,22.213 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்ததில், தமிழ் மொழி தகுதித் தேர்வு முதன் முறையாக வழிகாட்டுதல்களின்படி நடத்தப்பட்டு, இறுதி தற்காலிகப் பட்டியல் 18.11.2022 அன்று வெளியிடப்பட்டதில். 438 விண்ணப்பதாரர்கள் பொது - 349 (தாலுகா - 317 மற்றும் ஆயுதப்படை - 32) மற்றும் துறை - 89 (தாலுகா - 80 மற்றும் ஆயுதப்படை - 9) தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஒருங்கிணைந்த தேர்வு

05.05.2023 மற்றும் 23.05.2023 ஆகிய தேதிகளில் 750 காலிப்பணியிடங்களுக்கான காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை) (615 + 6 பின்னடைவு காலிப்பணியிடம்) மற்றும் நிலைய அதிகாரிகள், (128 + 1 பின்னடைவு காலிப்பணியிடம்) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான ஒருங்கிணைந்த தேர்வு-2023க்கான அறிவிப்பினை வெளியிட்டது.

முதன் முறையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலைய அதிகாரி, பதவிக்கான அறிவிக்கையை சார்பு ஆய்வாளர் தேர்வுடன் சேர்த்து இவ்வாரியம் வெளியிட்டது.

இத்தேர்விற்கு 1,86,722 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்ததில், இறுதி தற்காலிகப் பட்டியல் 03.10.2024 அன்று வெளியிடப்பட்டதில், சார்பு ஆய்வாளர்கள்-498 (பொது) மற்றும் 123 (துறை) மற்றும் நிலைய அதிகாரிகள் - 103 (பொது) மற்றும் 26 (துறை) உட்பட 750 விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



விளையாட்டுப் பிரிவு ஆளிநர்களுக்கு உடற்தகுதித் தேர்வு

20.12.2024 மற்றும் 24.01.2025 ஆகிய நாள்களில் 29 விளையாட்டுப் பிரிவு ஆளிநர்களுக்கு உடற்கூறு அளத்தல் மற்றும் உடல் தகுதித் தேர்வுகள் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்

3,348 காவல்துறை குடியிருப்புகள் ரூ.561.51 கோடி செலவிலும், 55 காவல் நிலையங்கள் ரூ.62.84 கோடி செலவிலும் மற்றும் 19 இதர காவல்துறை கட்டடங்கள் ரூ.143.34 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

249 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.45.41 கோடி செலவிலும், 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் ரூ.63.61 கோடி செலவிலும் மற்றும் 2 இதர தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்கள் ரூ.2.45 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

64 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.12.03 கோடி செலவிலும் 30 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் இதர கட்டடங்கள் ரூ.33.23 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அமலாக்கப் பிரிவு – குற்றப் புலனாய்வுத் துறை

போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் ஒழிப்புக்கான பல்வேறு பங்குதாரர் துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" என்ற நோக்கத்திற்காக ஒரு மேலாண்மை அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் 15,266 போதைப் பொருள் எதிர்ப்பு மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும், கல்வி நிறுவனங்களில் போதைப் பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தூதர்களாக செயல்படும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் இம்மன்றங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 15,207 போதைப் பொருள் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டனர், போதைப் பொருள் துஷ்பிரயோகத்திலிருந்து மாணவர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக கல்வி நிறுவனங்களைச் சுற்றி சோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமலாக்கப் பிரிவு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக சாராயம் காய்ச்சுதல், கடத்தல் மற்றும் விற்பது தொடர்பான குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளன.

4,79,089 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, 4,77,640 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரூ.5,37,19,560 மதிப்புள்ள 26,85,978 லிட்டர் ஊறல் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ரூ.6,37,01,120 மதிப்புள்ள 15,92,578 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ரூ.1,13,95,400 மதிப்புள்ள 1,13,954 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ரூ.29,56,260 மதிப்புள்ள 1,47,813 லிட்டர் கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

ரூ.68,32,24,967 மதிப்புள்ள 10,16,705 லிட்டர் அளவுள்ள 180 மி.லி இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

93,766.83 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு அது தொடர்புடைய 56,878 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனத் தணிக்கையின் மூலம், மதுவிலக்கு குற்றங்களில் தொடர்புடைய 19 லாரிகள், 740 கார்கள், 164 ஆட்டோக்கள், 32 வேன் மற்றும் 9,255 இருசக்கர வாகனங்கள், 12 படகுகள் உட்பட மொத்தம் 10,822 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுவிலக்கு குற்றங்களில் தொடர்பு உள்ள 488 குற்றவாளிகள் குண்டர்தடுப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XIV / 1982)கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தன்னலமற்று உயிர்களையும், உடமைகளையும் காப்பாற்றும் பணியினை சிறப்பாக செய்து வருகிறது.

07.05.2021 முதல் 31.01.2025 முடிய இத்துறை பணியாளர்கள் 82,329 தீ விபத்து அழைப்புகளிலும், 3,79,757 மீட்பு அழைப்புகளிலும் பணியாற்றி 44,244 மனித உயிர்களையும், ரூ.2,111.40 கோடி மதிப்புள்ள உடைமைகளையும் காப்பாற்றி உள்ளனர்.

பணியாளர் நலன்

தீயணைப்பு பணியாளர்களின் பாதுகாப்பிற்காக ரூ.16.11 கோடி செலவில் தலைக்கவசம் மற்றும் காலணியுடன் கூடிய 1,350 தீ பாதுகாப்பு உடைகள், 662 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 3,000 மீட்பு உடைகள் ஆகியன ஒப்பளிக்கப்பட்டது. மேலும் ரூ.12.34 கோடி செலவினத்தில் தலைக்கவசம் மற்றும் காலணியுடன் கூடிய 500 தீ பாதுகாப்பு உடைகள், 453 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 1,500 மீட்பு உடைகள் கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

பணியாளர்கள் நலன் கருதி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது இடர்பாடு படி மற்றும் மிகைப்பணி ஊதியம் உயர்த்தி வழங்க ஆண்டுதோறும் ரூ.3.03 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணியாளர்களின் சேமநல நிதிக்கான மானியத்தினை ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தியும், மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினத் தொகையின் உச்ச வரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாக உயர்த்தியும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டு இடர் பாதுகாப்பு தொகை உயர்த்தியும், மேலும் பணியாளர்களுக்கு கட்டப்படும் குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தலைநகர தீயணைப்பு நிலையங்களுக்கு 39 உதவி மாவட்ட அலுவலர் பதவிகள் தரம் உயர்த்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நவீன வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

ரூ.70.10 கோடி செலவினத்தில் 75 புதிய நீர்தாங்கி வண்டிகள், 12 அவசரகால சிறிய மீட்பூர்திகள், 25 பெரும தண்ணீர் லாரிகள், 7 அதி உயரழுத்த நீர்தாங்கி வண்டி மற்றும் 1 சிறிய நுரைநகர்வு ஊர்தி, 26 ஈப்புகள், 2 ஆட்களை ஏற்றிச்செல்லும் ஊர்திகள், 3 அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள், 50 இருசக்கர வாகனங்கள், மற்றும் ஒரு மகிழுந்து ஆகியன ஒப்பளிக்கப்பட்டன.

மேலும் ரூ.68.12 கோடி செலவினத்தில் 50 நீர்தாங்கி வண்டிகள், 19 பெரும தண்ணீர் லாரிகள், 3 நுரை தகர்வு ஊர்திகள், 5 அவசரகால மீட்பு ஊர்திகள் மற்றும் 42 மீட்டர் வான்நோக்கி உயரம் ஏணி கொண்ட ஊர்தி -1 கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.4.26 கோடி செலவில் 10 புகைவெளியேற்றும் கருவி, 24 கோம்பி கருவிகள், 4 காற்று அழுத்தும் கருவி, 10 நீரியியல் அழுத்தத்தில் இயங்கும் கருவிகள் ஆகியனவும் தீயணைப்பு சேவைக்காக ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

ரூ.354 இலட்சம் செலவினத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்ககத்தில் உள்ள அவசரகால கட்டளை மையம் (Incident Command Centre) வலுப்படுத்தப்பட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.76.35 இலட்சம் செலவினத்தில், தன்னார்வ தொண்டர்கள் திட்டத்தை வலுப்படுத்த தன்னார்வலர்களுக்கு அடையாள வில்லை (Badge) மற்றும் மதிப்பூதியம் (Honororium) வழங்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடம்

ரூ.78.63 கோடி செலவினத்தில் காஞ்சிபுரம், தேனாம்பேட்டை, திருவையாறு, கடமலைக்குண்டு, இராஜபாளையம், செங்குன்றம், மணலி, வண்ணாரப்பேட்டை, அம்பத்தூர், திருப்பத்தூர், சேலம், ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி, சமயபுரம், மேடவாக்கம், பெரம்பலூர், நீடாமங்கலம், தியாகதுருகம்

ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் மற்றும் காஞ்சிபுரம் / அம்பத்தூர் மாவட்ட அலுவலகம், ஆகியவற்றிற்கு கட்டடங்கள் கட்டுவதற்கும், மேலும் ரூ.63.44 கோடி செலவில் செங்குன்றம், துறையூர், இராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம், சிவகங்கை, பீளமேடு மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 220 குடியிருப்புகள் மற்றும் மேட்டுப்பாளையத்தில் 50 பணியாளர்களுக்கு படை குடியிருப்பு கட்டுவதற்கும் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு கட்டடங்கள் பராமரிப்பு

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.7.04 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

புதிய தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்கள் அமைத்தல்.

ரூ.55 கோடி செலவினத்தில் திங்கள்நகர், கோவைபுதூர், சின்னமனூர், வாய்மேடு, தெள்ளார், அன்னியூர், திருப்பரங்குன்றம், ஏழாயிரம்பண்ணை, கொளத்தூர், காலவாக்கம், கண்ணமங்கலம், ஆட்டையாம்பட்டி, ஊத்துக்குளி, இளையாங்குடி, வையம்பட்டி, குமராட்சி, நயினார்பாளையம், ஒரகடம், திருவெறும்பூர், இராதாபுரம், ரிஷிவந்தியம், ஏரல், கருமத்தம்பட்டி, மடத்துக்குளம், கோவளம், படப்பை, திருநெல்வேலி மாநகரம், மற்றும் புதுவயல் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் சிவகாசி, ஓசூர், தாம்பரம், இராணிப்பேட்டை, பூந்தமல்லி மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய 6 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்களும் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன.

நிர்வாகச் சீரமைப்பு

சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்ட மண்டல அலுவலகங்கள் ரூ.74.60 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் இயக்ககத்தில் சட்ட விவகாரங்களில் உதவிட சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும் புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் தீ ஆணையம் ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது. மேலும், 1985 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தீயணைப்புச் சேவை சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்பட உள்ளது.



வெள்ளம் மற்றும் பேரிடர் மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்வதற்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மோப்ப நாய் படைப் பிரிவில் உள்ள மோப்ப நாய்களுக்கு உணவு மற்றும் நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு கட்டணத்தை ரூ.3.41 இலட்சம் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மாநில பயிற்சிக் கழகம் அமைத்தல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சியினை மேம்படுத்தும் விதமாக ரூ.41.85 கோடி செலவினத்தில் மாநில பயிற்சிக் கழகம் மற்றும் உலகத்தரத்திலான நிகழ்நேர மாதிரி கூடம் ஒன்றும் காலவாக்கத்தில் அமைக்க ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தடய அறிவியல் துறை

தடய அறிவியல் துறையில் இளநிலை அறிவியல் அலுவலர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 62 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 26.07.2021 அன்று பணிநியமன ஆணைவழங்கப்பட்டது.

சென்னையில் அமைந்துள்ள தடய அறிவியல் துறையின் தலைமை ஆய்வகத்தை தடய அறிவியலில் உலகத் தரம்வாய்ந்த ஆய்வகமாக மேம்படுத்துவதற்கு ரூ.8.45 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

ரூ.2.18 கோடி செலவில் அரியலூர் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மற்றும்மயிலாடுதுறை ஆகிய காவல் மாவட்டங்களுக்கு தலா ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உருவாக்கம்.

சென்னை பெருநகர காவல் ஆணையரகம், மற்றும் விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர் காவல் மாவட்டங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டு செயல்பட்டுவரும் நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு ரூ.60.75 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ரூ.7.22 கோடி செலவில் பெண்களுக்கு எதிரான குற்றவழக்குகள் தொடர்பான தடயங்களை விரைந்து ஆய்வு மேற்கொள்ள ஏதுவாக தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிதாக மரபணு ஆய்வுப்பிரிவு தொடங்கப்பட உள்ளது.

ரூ.4.46 கோடி செலவில் கணினி தொடர்பான தடயங்களை விரைந்து ஆய்வு மேற்கொள்ள திருச்சி மற்றும் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் புதிதாக கணினி தடயவியல் பிரிவுகள் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

"தடய மரபணு தேடல் மென்பொருள்" என்ற புதியவகை மென்பொருள் தமிழ்நாடு அரசின் தடய அறிவியல் துறையின் அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 20.11.2021 அன்று வெளியிடப்பட்டு, இம்மென்பொருள் மூலம் துரிதமாக குற்றவாளிகளை கண்டறியவும், மாநிலங்களுக்கிடையே செயல்படும் குற்றவாளிகளையும், காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும், பேரிடர் காலங்களில் இறந்தவர்களை கண்டறியவும் பெரிதும் பயன்படும்.

ரூ.1.05 கோடி செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம் மற்றும் ஆவடி ஆணையரகங்களுக்கென குற்ற நிகழ்விடங்களை ஆய்வு மேற்கொள்ள இரண்டு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூ.7.80 கோடிச்செலவில் புதிதாக தடய மரபணு ஆய்வுப்பிரிவை உருவாக்கவும் மற்றும் தற்போது செயல்பட்டுவரும் கணினி தடயவியல் பிரிவின் ஆய்வை மேம்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.3.71 கோடி செலவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போக்சோ சட்டம் தொடர்பான வழக்குகள் சம்மந்தப்பட்ட சான்றுப்பொருட்களை ஆய்வு செய்ய பிரத்யேக கணினி தடயவியல் அலகு ஒன்று சென்னை தலைமை ஆய்வகத்தில் உருவாக்கம்.

மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ரூ.1.20 கோடி செலவில் உயிரியல் மாதிரிகளின் மரபணு விவரங்களை பெறுவதற்கான அதிநவீன மரபியல் ஆய்வு கருவி வழங்கப்பட்டுள்ளது.

ரூ.2.50 கோடி செலவில் சென்னை தலைமை ஆய்வகத்தின் ஆய்வுத்திறனை குறிப்பாக போதை மருந்து மற்றும் நஞ்சுப் பொருள்களை உயிரியல் மாதிரிகளில் அடையாளம் காண அதிநவீன LC-MS எனும் கருவி

ஒன்று வாங்க அரசு ஒப்புதல். ரூ.3.10 கோடி செலவில் மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் ISO/IEC 17025:2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.3.92 கோடி செலவில் குற்ற நிகழ்விட ஆய்வை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட 14 இயங்கும் தடய அறிவியல் வாகனங்களை 01.07.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடி அசைத்துத் தொடக்கி வைத்தார்.

ரூ.10.15 கோடி செலவில் திருநெல்வேலி. வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிதாக மரபணு ஆய்வுப் பிரிவு உருவாக்கப்பட உள்ளது.

ரூ.3.83 கோடி செலவில் கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் போதை மருந்து ஆய்வு பிரிவுகள் அமைக்கப்பட உள்ளன.

ரூ.25 ஆயிரம் செலவில் தடய அறிவியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் பணிப் பதக்கம் வழங்கப்பட உள்ளது.

ரூ.185.80 இலட்சம் செலவில் குற்றவியல் நீதி பரிபாலன அமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்காக தனிப்பட்ட தடய அறிவியல் இணையதளத்தில் வழக்கு விவரங்கள் மற்றும் அறிவியல் ஆய்வறிக்கைகளை பதிவேற்றம் செய்வதற்குரிய கட்டமைப்பு தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்பட உள்ளது.

ரூ.109 இலட்சம் செலவில் தடய அறிவியல் நிபுணர்கள் காணொளி கூட்டரங்கு வாயிலாக நீதிமன்றங்களில் சாட்சியம் அளிப்பதற்குரிய உட்கட்டமைப்பு தலைமை மற்றும் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்பட உள்ளது.

ரூ.590 இலட்சம் செலவில் விழுப்புரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் ISO/IEC 17025:2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்பட உள்ளது.

சென்னை தலைமை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ரூ.50 இலட்சம் செலவில் குற்ற வழக்குகளில் பெறப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களின் துப்பாக்கியல் ஆய்வுகளை மேற்கொள்ள துப்பாக்கி குண்டின் வேகத்தை அளவிடும் அதிநவீன கருவி வாங்கப்படும்.

National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL) எனும் மத்திய தரச்சான்று வழங்கும் நிறுவனத்தால் 14 பிரத்யேக ஆய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய தடய அறிவியல் துறையின் தலைமை ஆய்வகத்திற்கு ISO/IEC 17025:2017 வழங்கிய தரசான்று 13.05.2022 முதல் தற்போது வரை பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் ஜனவரி – பிப்ரவரி 2024இல் மதுரை, தஞ்சாவூர், மற்றும் வேலூர் ஆகிய வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கும் சர்வதேச தரச்சான்றிதழ் அளிக்கப்பட்டது.

07.10.2024 அன்று, தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிதாக கட்டப்பட்ட மரபணு பிரிவு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி மூலம் திறந்துவைக்கப்பட்டது. இவ்வாய்வகமானது, ஜூன் 2025 முதல் செயல்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

02.12.2024 அன்று, தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு எண் 79 (A) ன்படி, தடய அறிவியல் துறையில் உள்ள, கணினி தடயவியல் அலகுகள் "மின்னணுச் சான்று பகுப்பாய்வளர்" என மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

2021–2022 மற்றும் 2024–2025 ஆகிய நிதியாண்டுகளில் மாற்றுத்தினாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்களுக்கு– ரூ.2,202.79 கோடி நிதி ஒதுக்கீடு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக நேரடியான நிர்வாகப் பொறுப்பில் சமுதாயத்தில் சம உரிமையுடன் செயல்படுகிறார்கள்.

2021–2022 முதல் பல்வேறு திட்டங்களுக்கு அரசாணைகள் மற்றும் செயல் ஆணைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016 மற்றும் திட்டங்களுக்கு உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காத்திருப்புப் பட்டியலில் உள்ள 9,173 தகுதியான மாற்றுத்திறனாளிகளுக்கு 2021–2022 நிதியாண்டில் மாதம் ரூ.1,500 பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 404.64 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு 2,11,391 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரூ.1,773.20 கோடி செலவில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டம் உலக வங்கி உதவியுடன் தொடங்கியது. முதற்கட்டமாக 2022–2023ஆம் நிதியாண்டிற்கு ரூ.17 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்டார அளவில் மற்றும் கிராம அளவில் செயல்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

22 பள்ளிகள் மற்றும் அரசு மறுவாழ்வு இல்லங்களின் கட்டடங்கள் சீரமைப்புக்காக ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு கலைக் கல்லூரியில் பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகள் தொடங்கப்பட்டன.

சென்னை மாவட்டத்தில் ரூ.1.51 கோடி செலவில் கூடுதலாக ஒரு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் அமைக்கப்பட்டது.

சுயதொழில் கடன் உதவி திட்டத்தின் மூலம், 400 பயனாளிகளுக்கு வழங்கும் வகையில் நாளது தேதி வரையில் 219 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

திருமண நிதியுதவி திட்டத்தில், முழுத்தொகையும் ரொக்கமாக வழங்கும் வகையில், கடந்த 4 ஆண்டுகளில் 1,849 மாற்றுத்திறனாளிகளுக்கு, வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் 11,293 பயனாளிகளுக்கு ரூ.5.78 கோடி மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்கங்களில் ரூ.37.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட 75 நபர்கள் பயன்பெறும் வகையில் 3 சிறப்பு இல்லங்கள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

22 அரசு பள்ளி விடுதிகளில் 1,053 மாணாக்கர்களுக்கு சோப்பு, தேங்காய் எண்ணெய் வழங்கும் இதர செலவு ரூ.30/–லிருந்து ரூ.50/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்படுத்தப்படும் பொது கட்டடங்களுக்கான 2 மாநில விருதுகள் ரூ.1.60 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை, விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் செவித்திறன் குறைபாடுடையோருக்கான பள்ளிகளுக்கு ரூ.42,50,000 செலவில் தரம் உயர்த்தப்பட்டது.

அரசு வளாகங்களில் 378 மாற்றுத்திறனாளிகளுக்கு ஆவின் பாலகம் அமைக்க விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

35 மாற்றுத்திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் சைகை மொழிபெயர்ப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4 சதவீதம் இடஒதுக்கீட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க உயர்மட்டக்குழு அமைக்க அரசாணை பெறப்பட்டு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 5,961 மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 2,496 நபர்களுக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் வீடு வழங்கப்பட்டு, 1,299 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளின் வேலைவாய்ப்புகளுக்கான உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70 அறிவுசார் குறையுடையோருக்கான இல்லங்கள் ரூ.1.242.76 கோடியில் செயல்படுகின்றன. 56 மனநலம் பாதிக்கபட்டவர்களுக்கான இல்லங்கள் ரூ.1,019.64 கோடியில் செயல்படுத்தப்படுகின்றன.

மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் வயது 50-லிருந்து 40 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி நிறுவனங்களுக்கு அரசு சம்பள மானியம் வழங்கப்பட்டு. ஊதியங்கள் ரூ.14,000/- லிருந்து ரூ.18,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளன.

கடுமையான இயலாமை, அறிவுசார் குறைபாடு, தசைச்சிதைவுகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்புத் தொகை ரூ.2,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் 2,50,987 பயனாளிகள் பயன்.

1,000 மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டு பங்குதொகை செலுத்த வட்டியில்லா கடன் உதவி ரூ.1.20 கோடி ஒதுக்கீட்டில் "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு கட்டும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு ரூ.14,000/- மதிப்பில் நவீன வாசிக்கும் கருவிகள் ரூ.140 இலட்சத்தில் வழங்கப்பட்டுள்ளன.

500 கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.450 இலட்சம் செலவில் இணைப்புச் சக்கரங்களுடன் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகளின் ஐந்து சதவிகிதம் மாற்றுத்திறனாளிகளுக்கு வணிக வளாகங்களில் ஒதுக்கீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2024-2025 ஆம் ஆண்டில் ரூ.200 இலட்சம் செலவில் விபத்து மருத்துவம் மற்றும் கல்வி உதவித்தொகை 4,022 பயனாளிகளுக்கு ரூ.529.62 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

அரசு நிதியுதவி பெறும் பயிற்சி மையங்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான மதிப்பூதியம் உயர்த்துவதற்காக ரூ.534.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுகிறது.

309 பராமரிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் உணவூட்டு மானியம் ரூ.42/-முதல் ரூ.100/-ஆக உயர்த்தப்பட்டு ரூ.124 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"மீண்டும் இல்லம்" எனும் புதிய திட்டம் முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி, ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ், அரசு பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை இருமடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.700 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 150 பயனாளிகளுக்கான மூன்று இல்லங்களுக்கு ரூ.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8,012 பயனாளிகளுக்கு இணை மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

15 மாவட்டங்களில் சேவைகள் வழங்க 39 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் தொடங்கப்பட்டன, 35 மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு சேவை மையங்கள் (DEIC) ஒருங்கிணைந்த சேவை மையங்களாக (OSCs) மாற்றப்பட்டு, 05.12.2024 அன்று திறக்கப்பட்டன.

150 அண்மை மையங்கள் உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக 10 வருவாய் கோட்ட ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மற்றும் 38 வட்டார ஒருங்கிணைந்த சேவை மையங்கள் 36 மாவட்டங்களில் 37 சமுதாய சேவை வழங்குநர்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 2 மாவட்டங்களில் தேர்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாற்றுத்திறன் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் ரூ.1,00,000/- என 50 மாணவர்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் "முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த ஆசிரியர்களுக்கு "ஹெலன் கெல்லர் விருது" உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் வழங்கப்பட்டது. புறஉலக சிந்தனையற்ற மதிஇறுக்கமுடைய பாதிப்படைந்த 5,081 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சைகை மொழி பாடத்திட்டம் QR code மூலம் அறிந்து கொள்ள ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உணவூட்டு மானியம் ரூ.1,400/- ஆக உயர்த்தப்பட்டு, ரூ.279.96 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு. பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கு ரூ.34.50 இலட்சம் செலவில் கற்பிக்கும் கருவிகள் மற்றும் தொட்டுணரக்கூடிய புத்தகங்கள் வழங்கப்பட்டன. அரசு சிறப்புப் பள்ளிகளில் படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு, சீருடைக்கான மானியத் தொகை ரூ.600/- ஆக உயர்த்தப்பட்டு, 1,154 மாற்றுத்திறன் மாணாக்கர்கள் பயன்.

அறிவுசார் குறைபாடு மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட 1,000 குழந்தைகளுக்கு நவீன இயன்முறை உபகரணம் வழங்கப்படுகிறது. 50 வயதினைக் கடந்த மாற்றுத்திறனாளிகள் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு துறைத்தேர்வு வெளியிடப்பட்டது.

10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை காதொலிக்கருவி, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரெய்லி கைக்கடிகாரங்கள், போன்ற பழுதடைந்த உதவி உபகரணங்களுக்கு, புதியவை வழங்க 25% நிதி ஒதுக்கீடு. 200 மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி உடன் பயிற்சி வழங்கப்படுகிறது. முதற்கட்டமாக சென்னையில் குரூப் - II, II A தேர்வு எழுத 49 மாற்றுத்திறனாளிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

சிறப்பு முயற்சிகள் துறை

ரூ.63,246 கோடிச் செலவில் 3 வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II-ற்கு ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, கட்டுமானப் பணிகளில் கணிசமான முன்னேற்றம்.

34.8 கி.மீ நீளத்திலான கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் -I ஐ, ரூ.10,740 கோடி செலவில் செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்கு அனுப்பி வைப்பு.

31.93கி.மீநீளத்திலானமதுரைமெட்ரோஇரயில்திட்டத்தைரூ.11,368கோடிசெலவில்செயல்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்கு அனுப்பி வைப்பு.

அரசு அமைப்புகளின் நிலங்களில் வணிகரீதியான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனங்களுக்கிடையேயான ஒரு கூட்டு முயற்சி அடிப்படையில் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) உருவாக்கம். ரூ.350 கோடி மதிப்பீட்டில் சென்னை சென்ட்ரல் இரயில்வே நிலையத்திற்கு அருகில் முத்திரை திட்டமான 27 அடுக்குமாடிகள் கொண்ட மத்திய கோபுரக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல். ரூ.9,335 கோடி மதிப்பீட்டில், 15.46 கி.மீ நீளத்தில், சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரையிலான சென்னை மெட்ரோ இரயிலின் நீட்டிப்புத் திட்டத்திற்கு மாநில அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல்.

ரூ.8,779 கோடி மதிப்பீட்டில் 27.9 கி.மீ நீளத்தில் திருப்பெரும்புதூர் வழியாக பூந்தமல்லி புறவழிச் சாலையிலிருந்து சுங்குவார் சத்திரம் வரையிலான மெட்ரோ இரயில் நீட்டிப்பிற்கான ஒப்புதல் பரிசீலனையில். ரூ.9,744 கோடி மதிப்பீட்டில் 21.76 கி.மீ நீளத்தில் ஆவடி வழியாக கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரையிலான மெட்ரோ இரயில் இணைப்பிற்கான ஒப்புதல் பரிசீலனையில்.

மணிக்கு 160 கிமீ வேகத்தில் மித அதிவேக இரயில்களை (Semi High Speed Railway) மண்டல விரைவு போக்குவரத்து அமைப்புகள் மூலம் (i) சென்னை - செங்கல்பட்டு - திண்டிவனம் -விழுப்புரம் (167 கி.மீ) (ii) சென்னை - காஞ்சிபுரம்- வேலூர் (140 கி.மீ) (iii) கோயம்புத்தூர் - திருப்பூர் - ஈரோடு - சேலம் (185 கி.மீ) ஆகிய வழித்தடங்களில் இயக்குவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்காக, ஆலோசகர்களை தேர்வுசெய்ய ஒப்பந்தப்புள்ளி கோரல். வேளச்சேரி வழியாக தாம்பரத்திலிருந்து கிண்டி வரை 21 கி.மீ நீளத்திலும், கலங்கரை விளக்கத்திலிருந்து உயர்நீதிமன்றம் வரை 6 கி.மீ நீளத்திலும் மெட்ரோ இரயிலினை நீட்டிக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்காக ஆலோசகரை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரல்.

மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் ரோப்வே (Ropeway) எனும் உயர் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியகூறுகளைக் கண்டறிய, ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டி, (EOI) விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கான வசதிகளுடன், கத்திப்பாரா மேம்பாலத்திற்கு அடியில் கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கம் டிசம்பர் 2021-இல் தொடக்கம்.

ரூ.34.22 கோடி மதிப்பீட்டில் உலகத்தரத்திற்கு இணையான பொதுமக்கள் பயன்படுத்தும் வசதிகள் அடங்கிய மத்திய சதுக்கத் திட்டத்தின் ஒரு பகுதி மார்ச் 2022-லும் மற்றொரு சுரங்க நடைபாதை பிப்ரவரி 2024-லும் திறப்பு.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையகக் கட்டடம் (மெட்ரோஸ்) அக்டோபர் 2022-இல் தொடக்கம்.

மெட்ரோ இரயில் கட்டுமானத்தினால் பாதிக்கப்பட்ட சென்னை நகர், திரு.வி.க. பூங்கா ரூ.18 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு, ஏப்ரல் 2023இல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறப்பு.

சேலத்தில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகள் அரசின் பரிசீலனையில்.

முதல்வரின் முகவரித் துறை

குறை தீர்க்கும் அமைப்பு

"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குடிமக்கள் நலன் சார்ந்த நிர்வாகத்தை உருவாக்கும் இலக்குடனும், தேர்தல் பிரச்சாரத்தின்போது பெற்ற கோரிக்கை மனுக்களுக்கு, சிறப்பாகவும், உரிய காலத்திலும் தீர்வு வழங்கும் நோக்கத்துடனும், 07.05.2021 அன்று பொறுப்பேற்ற முதல் நாளிலேயே "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்ற 4,57,645 மனுக்களுக்கு, 100 நாள்களுக்குள் வெற்றிகரமாக தீர்வு காணப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற 100ஆவது நாளான 14.08.2021 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சிறப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனுதாரர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார்.

32,283 பட்டா மற்றும் 30,455 சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

மேலும் 19,664 வளர்ச்சிப் பணிகளுக்கான ஒப்புதல் ஆணை, 9,444 வீடுகள் கட்டுவதற்கான நிதியுதவி, மற்றும் ரூ.544.27 கோடி செலவிலான இதர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டன.

முதல்வரின் முகவரித் துறை: குறை தீர்விற்கான முனையம்

தமிழ்நாடு அரசு, குறை தீர்க்கும் அமைப்பினை மேலும் வலுப்படுத்த, 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவிமையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறை தீர்வு மேலாண்மை அமைப்பு மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, முதல்வரின் முகவரித் துறை உருவாக்கியது.

இணையதளம், கைப்பேசிச் செயலி மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1100 உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பெறப்படும் குறை தீர்க்கக் கோரும் மனுக்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ள, விரிவான முதலமைச்சர் உதவிமைய வலைதளம் உருவாக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைந்த இணையதளம், பொது மக்கள் எளிதாக உபயோகப்படுத்தும் வகையிலும், வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை, மனுக்களின் தீர்வு நிலையினை அறியும் வசதி, உரிய காலத்தில் தீர்வு வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

ஒவ்வொரு கோரிக்கை மனுவிற்கும் ஒரு தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட்டு, மனுதாரரின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி வாயிலாக ஒப்புகை அனுப்பப்படுகிறது. இந்த தனித்துவமான எண், மனுவின் நிலையினை அறிய மனுதாரருக்கு உதவுகிறது. இக்கோரிக்கை மனு, 30 நாள்களுக்குள் தீர்வு காண சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

முதலமைச்சரின் உதவி மையம்

2024 மார்ச் மாதம், முதலமைச்சரின் உதவி மையம், 1100 என்ற கட்டணமில்லா எண்ணுடன், சென்னை, கோட்டூர்புரத்தில் தொடங்கப்பட்டது.

இம்மையம் தினமும் 16 மணி நேரம், இரண்டு முறைமாற்றுப் பணிகளில் (shifts) காலை 6:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை, வாரத்தின் ஏழு நாள்களும் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது 120 இருக்கைகளுடன் செயல்பட்டுவரும் இம்மையம், 200 இருக்கைகள் வரை விரிவுபடுத்தும் வசதி கொண்டதாகும். முதலமைச்சரின் உதவி மையத்திற்கு, ஏப்ரல் 1, 2024 முதல் மார்ச் 31, 2025 வரை 25.14 இலட்சம் அழைப்புகள் வரப்பெற்றுள்ளன. மேலும், இம்மையம் மூலம் 6.60 இலட்சம் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களுடன் முதல்வர் திட்டம்

'தேர்ந்தெடுக்கப்பட்ட, மற்றும் பொதுமக்கள் அதிகம் நாடும்' சேவைகளை, பொது மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு, நவம்பர் 2023இல் மக்களுடன் முதல்வர் திட்டத்தைத் தொடங்கியது.

மக்கள், அரசு சேவைகளைப் பெறுவதற்கும், அவர்களின் குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், அவர்கள் எளிதாக அணுகக்கூடிய வகையில் ஊரகப்பகுதிகளில் உள்ள கிராமங்களிலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலும், சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இம்முகாம்களில், மொத்தம் 15 துறைகளைச் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகின்றன, மேலும், இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் 30 நாள்களுக்குள் தீர்வு காணப்படுகின்றன. இத்திட்டம் மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களது நம்பிக்கையை மீட்டெடுத்து, அரசுடனான நல்லுறவை மேம்படுத்துகிறது.

மக்களுடன் முதல்வர் முதற் கட்டம் – நகர்ப்புரம்

முதற்கட்டமாக, 38 மாவட்டங்களின் நகர்ப்புரப் பகுதிகளில், நவம்பர் 2023 முதல் ஜனவரி 2024 வரை 2,058 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 9.05 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, முறையாக தீர்வு காணப்பட்டன. இது பொறுப்பான ஆட்சியை உறுதி செய்கிறது.

மக்களுடன் முதல்வர் இரண்டாம் கட்டம் – ஊரகப் பகுதிகள்

இரண்டாம் கட்டமாக, 37 மாவட்டங்களின் கிராமப்புறப் பகுதிகளில், சூலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரை, 2,344 மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 14.64 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 12.81 இலட்சம் மனுக்கள் தீர்வு காணப்பட்டன. இத்திட்டம், ஏழை எளிய, விளிம்பு நிலையிலிருக்கும், அரசு சேவைகள் சரியாக சென்றடையாத பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்டம்

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூன்றாம் கட்ட முகாம்கள், 2025 சனவரி மாதம் முதல், 24 மாவட்டங்களில் 184 வட்டங்களில் (நிலை-1), ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் அதிக அளவில் வசிக்கும் 1,270 கிராம பஞ்சாயத்துகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம், விரைவில் மீதமுள்ள 14 மாவட்டங்களுக்கும் (நிலை-2), விரிவாக்கம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் நோக்கம், மிகவும் ஏழை, எளிய, எளிதில் அரசின் சேவைகள் சென்றடையாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அரசு வழங்கும், 15 துறைகளின் 44 சேவைகளை அவர்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு சேர்ப்பதாகும். இத்திட்டத்தில், 2025 மார்ச் மாதம் வரை 225 முகாம்கள் நடத்தப்பட்டு, 1.09 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 80,000 மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளன.

மக்களுடன் முதல்வர் திட்டம், நகர்ப்புறங்களில் மட்டுமன்றி, அனைத்து கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கும் சேவைகளை வழங்குவதுடன், திட்டங்கள் சென்றடையாத



கடைக்கோடியில் வசிக்கும் விளிம்புநிலை மக்களை அடையாளம் கண்டு, அரசு சேவைகளை வழங்கும் பயணத்தைத் தொடர்வது, அரசின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

'நீங்கள் நலமா' திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இவ்வரசு, திட்டப்பயன்கள் மக்களுக்குச் சரியாக சென்றடைவதை உறுதிசெய்ய, களஆய்வு செய்வதும், பொது மக்களை நேரடியாகத் தொடர்புகொண்டு நிகழ்நேரப் பின்னூட்டங்களைப் பெறுவதும், மிகவும் அவசியம் என உறுதியாக நம்புகிறது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, 2024 மார்ச் 6ஆம் தேதியன்று "நீங்கள் நலமா" திட்டம் தொடங்கப்பட்டது. இந்த முன்னெடுப்பு மூலம், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அரசுச் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் இணையதள தொலைபேசி அழைப்புகள் மூலம் பயனாளர்களை நேரடியாகத் தொடர்புகொண்டு, அரசுத் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து நிகழ்நேரப் பின்னூட்டங்களைப் பெற்று, மக்கள் அரசு சேவைகளால் மன நிறைவடைகின்றனரா என மதிப்பீடு செய்கின்றனர்.

இந்த நேரடிக் கலந்துரையாடல் மூலம் பெறப்படும் பின்னூட்டம், அரசு சேவைகள் மற்றும் திட்டங்கள், பயனாளிகளுக்கு எவ்வாறு சென்றடைந்துள்ளன என்பதைத் தெளிவாக அறியவும், திட்டங்களை மேலும் சிறப்பாக செயல்படுத்தவும், சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

தற்போது, 12 துறைகளால் வழங்கப்படும் 53 திட்டங்கள் மற்றும் 17 சேவைகள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. பின்வருங்காலங்களில், அனைத்துத் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கும் விரிவுபடுத்தி, ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 2,572 அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்ற பயனாளிகளிடமிருந்து பின்னூட்டம் பெறப்பட்டுள்ளது.






சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள், கடவுசீட்டுகள், மற்றும் சட்டம்



திரு. **துரைமுருகன்** அவர்கள்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்



ரூ.726.642 கோடியில் 99 தடுப்பணைகளில் 73 தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட்டு, 26 தடுப்பணைகள் முடிவுறும் தருவாயில் உள்ளன...

ரூ.660.95 கோடியில் 75 அணைக்கட்டுகளில் 34 அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு 14 அணைக்கட்டுகள் முடிவுறும் தருவாயில் உள்ளன...

ரூ.1,916.417 கோடி மதிப்பீட்டில் அத்திக்கடவு அவினாசித் திட்டம் செயலாக்கம்...

ரூ.345.11 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 19,13,736 கீ.மீ நீளத்தில் தூர்வாரும் பணிகள்...

ரூ.3607.30 கோடி திருத்திய மதிப்பீட்டில், 4,67,345 ஏக்கர் பாசன நிலம் பயன்பெற்று முடிக்கப்பட்டுள்ளன...

நீர்வளத்துறை

மேட்டூர் அணை

2021 ஆம் ஆண்டு காவிரி டெல்டாவில் குறுவை பாசனம் மேற்கொள்வதற்காக மேட்டூர் அணை 12.06.2021 அன்று திறக்கப்பட்டு பாசனத்திற்கு முழுமையாக நீர் வழங்கப்பட்டது.

ஜூன், 2022 ஆரம்பத்திலேயே மேட்டூர் அணையில் 87.42 டி.எம்.சி. நீருடன், நீர்ப்பாசன ஆண்டு 2022-2023-இன் ஆரம்பம் சிறப்பாக அமைந்தது. எனவே, வானிலை முன்னறிவிப்பிற்கேற்ப, அணை முன்கூட்டியே குறுவை பாசனத்திற்காக திறக்கப்பட்டது.

2023-ஆம் ஆண்டு காவிரி டெல்டா குறுவை பயிர்கள் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து 31.05.2023 நிலவரப்படி 69.828 டி.எம்.சி கொள்ளளவு அடிப்படையில் திட்டமிட்டபடி தண்ணீர் 12.06.2023 அன்று திறந்துவிடப்பட்டது.

2024-ஆம் ஆண்டு மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியதால், 28.07.2024 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது.

2021-2022-இல், தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய காவிரி ஆற்று நீர் 177.25 டி.எம்.சிக்கு பதிலாக 281.08 டி.எம்.சி நீர் பில்லிகுண்டுலுவில் பெறப்பட்டது.

2023-2024-இல், நிர்ணயிக்கப்பட்ட 177.25 டி.எம்.சி எதிராக பில்லிகுண்டுலுவில் 81.418 டி.எம்.சி நீர் கிடைக்கப்பெற்றது.

2021-2022-இல், 219 நாள்களுக்கு மேட்டூர் அணையின் நீர் மட்டம் 100 அடிக்கு மேலாகவும், 41 நாள்களுக்கு 120 அடிக்கு மேலாகவும் இருந்தது.

2022-2023-ஆம் ஆண்டு காவிரி படுகை முழுவதும் இரண்டு பருவ மழை காலங்களிலும் நல்ல மழை பெய்தது. ஒரு அரிய நிகழ்வாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் 01.06.2022 முதல் 12.01.2023 வரை மொத்தம் 136 நாள்களுக்கு 120 அடியில் இருந்தது, இதில் தொடர்ச்சியாக 16.07.2022 முதல் 23.09.2022 வரை 70 நாள்களுக்கு 120 அடியில் இருந்தது.

2023-2024 நீர் பாசன ஆண்டில் தக்க முறையில் பயன்படுத்தும் வகையில், மேட்டூர் அணையில்போதுமான நீர் இருப்பை தக்க வைத்து கொண்டதுடன், காவிரி படுகையில் உள்ள மொத்த ஆயக்கட்டிற்கு பாசன பருவம் முடிவடையும் வரை நீர் அளிக்கப்பட்டுள்ளது.

2024-2025-ம் ஆண்டு 30.07.2024, 12.08.2024 மற்றும் 31.12.2024 ஆகிய தினங்களில் மூன்று முறை மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவை எட்டியது (93.470 டி.எம்.சி). காவிரி படுகையில் உள்ள மொத்த ஆயக்கட்டிற்கு பாசனபருவம் முடிவடையும் வரை பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை

மாண்புமிகு உச்சநீதிமன்றம் 07.05.2014 அன்று வழங்கிய தீர்ப்பிற்கு பிறகு, முல்லைப் பெரியாறு அணை நான்காவது முறையாக, அனுமதிக்கப்பட்ட அளவான 142 அடியை, 30.11.2021 அன்று எட்டியது. அன்றிலிருந்து தொடர்ந்து 18 நாள்கள் 142 அடியில் இருந்தது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2022-2023-ஆம் ஆண்டிலும் பருவமழை இயல்பான அளவில் பெய்துள்ளதால், 2014 முதல் ஐந்தாவது முறையாக அனுமதிக்கப்பட்ட 142 அடியை, 27.12.2022 அன்று எட்டியது. அணை அனைத்து வகையிலும் பாதுகாப்பாக இருந்து வருகிறது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் 27.02.2006 மற்றும் 07.05.2014 நாளிட்ட உத்தரவின்படி, 5 வறண்ட மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, முல்லைப் பெரியாறு அணையின் முழுகொள்ளளவான 152 அடிவரை தண்ணீரை தேக்குவதற்கு அணை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

நீர்ப்பாசன ஆண்டு 2021-2022-இல், முல்லைப் பெரியாறு நீர் தேக்கத்தில் இருந்து 31.64 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன ஆண்டு 2022-2023 முல்லைப் பெரியாறு நீர் தேக்கத்தில் இருந்து 27.46 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன ஆண்டு 2023-2024 முல்லைப் பெரியாறு நீர் தேக்கத்தில் இருந்து 18.697 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன ஆண்டு 2024-2025 முல்லைப் பெரியாறு நீர் தேக்கத்தில் இருந்து 20.310 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுகள்

கடந்த நான்காண்டுகளில் 99 தடுப்பணைகள், ரூ.726.642 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 73 தடுப்பணை, படுகை அணை, தரைகீழ் தடுப்பணைகள் கட்டிமுடிக்கப்பட்டு, 26 தடுப்பணை, படுகை அணை, தரைகீழ் தடுப்பணைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கடந்த நான்காண்டுகளில் 75 அணைக்கட்டுகள் ரூ.660.95 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 41 அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டு, 34 அணைக்கட்டுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் புதிய நீரொழுங்கி (மேலணை)

திருச்சிராப்பள்ளி, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே முக்கொம்பில் ஒரு புதிய நீரொழுங்கி ரூ.414 கோடி திருத்திய மதிப்பீட்டில் 12,58,460 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அத்திக்கடவு – அவிநாசி நீரேற்றும் திட்டம்

ரூ.1,916.417 கோடி மதிப்பீட்டில், அத்திக்கடவு -அவிநாசி திட்டம் 3 மாவட்டங்களில் செயல்படுகிறது. இதன் மூலம் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

பவானி ஆற்றின் உபரிநீரை 32 நீர்வளத்துறை குளங்கள், 42 ஊராட்சி ஒன்றிய குளங்கள், 971 குட்டைகளுக்கு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சோதனை ஓட்டம் மூலம் 1,045 குளம் குட்டைகளுக்கும் நீர் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது .

இத்திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 17.08.2024 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

அத்திக்கடவு அவிநாசி திட்டத்தில் 1,045 குளங்களுக்கு உபரி நீரானது நீரேற்று முறையில் நிலத்தடி குழாய்கள் வழியே வழங்கப்படுகிறது.


மேட்டூர் சரபங்கா நீரேற்றும் திட்டம்

ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் 4,238 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி வழங்கும் திட்டம் 96% முடிவடைந்துள்ளது.

2021-2022ஆம் ஆண்டு திப்பம்பட்டி நீரேற்றும் நிலையத்திலிருந்து 79.70 மி. கன அடி உபரி நீர் 7 ஏரிகளுக்கு நீர் வழங்கப்பட்டு 648 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி.

2022-2023ஆம் ஆண்டில், மேட்டூர் நீர்த்தேக்கம் முழு கொள்ளவு அடைந்தது 20 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பி 2,066 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி.

2024-2025ஆம் ஆண்டில், மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியதால் 57 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பி 3363.94 ஏக்கர் பாசன நிலங்களுக்கு பாசனவசதி.



கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே புதிய கதவணை அமைத்தல்

ரூ. 465.4262 கோடி மதிப்பீட்டில், 27,045 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி வழங்க புதிய கதவணை அமைக்கப்பட்டது.

தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு கால்வாய் திட்டம்

ரூ.1,060.76 கோடி திருத்திய மதிப்பீட்டில், 56,933 ஏக்கர் பாசன நிலத்திற்கு பயன்தருகிறது. பணிகள் நிறைவடைந்துள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

காவிரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம் (ERM)

ரூ.230 கோடி மதிப்பீட்டில் 7000 ஏக்கர் பாசன நிலம் மற்றும் 11,000 ஏக்கர் மறைமுக பாசன நிலம் பயனடைந்துள்ளது. ரூ.335.50 கோடி மதிப்பீட்டில் கரூர் மாவட்டத்தில் 20,185 ஏக்கர் பாசன நிலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 3,589 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும். ரூ.184 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டத்தில் 12,786 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும்.

ரூ.706.15 கோடி திருத்திய மதிப்பீட்டில், 2,47,247 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில், 95 சதவீதப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.3607.30 கோடி திருத்திய மதிப்பீட்டில், 4,67,345 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.2,639.15 கோடி மதிப்பீட்டில் 2,27,472 ஏக்கர் பாசன நிலம் பயன்பெறும். 99 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சிறப்பு தூர்வாரும் பணிகள்

(அ) காவிரி டெல்டா மாவட்டங்கள்

காவிரி டெல்டா பகுதிகளான 10 மாவட்டங்களில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு காவிரி கடைமடை பகுதிகளின் அனைத்து இடங்களுக்கும் தண்ணீர் உரிய காலத்தில் சென்றடைந்தது.

கடந்த நான்கு ஆண்டில், ரூ.345.11 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் 19,137.36 கி.மீ நீளத்திற்கு 2,940 தூர்வாரும் பணிகள்

முடிக்கப்பட்டுள்ளன. காவிரி டெல்டா பகுதிகளில் உழவர் குழுக்களுடன் ஒத்துழைத்து தூர்வாருதல், கால்வாய்களின் மண் திட்டுகள் மற்றும் புதர்களை அகற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டப் பாசன வாய்க்கால்கள்

2022-2023ஆம் ஆண்டில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் 56 தூர்வாரும் பணிகள் ரூ.4 கோடி மதிப்பீட்டில், 125 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2023-2024-ஆம் ஆண்டில், ரூ.4 கோடி மதிப்பீட்டில் 94 தூர்வாரும் பணிகள் கோயம்புத்தூர், ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளன.

2024-2025-ஆம் ஆண்டில், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் 26 தூர்வாரும் பணிகள் பரம்பிக்குளம் ஆழியாறு வடிநிலம், அமராவதி மற்றும் கீழ்பவானி உபவடிநிலத்தில் உள்ள வாய்க்கால்களில் முடிக்கப்பட்டுள்ளன.

(இ) தாமிரபரணி, கோதையாறு மற்றும் வைகை வடிநிலம்

2022-2023 ஆம் ஆண்டில், ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2023-2024 மற்றும் 2024-2025-ஆம் ஆண்டுகளில் தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் 100 தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகள்

கடந்த 4 ஆண்டுகளில் சென்னை, காஞ்சிபுரம். செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூ.59.102 கோடி மதிப்பீட்டில் 356 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2023-ஆம் ஆண்டில் கூவம் மற்றும் அடையாறு ஆறுகளில் ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் 12 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ.35 கோடி மதிப்பீட்டில் 167 பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் 13 கால்வாய்களில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

2024-ஆம் ஆண்டில் பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் கொசஸ்தலையாற்றின் முகத்துவாரப் பகுதிகளில் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத் தணிப்புப் பணிகள்

2022-2023ஆம் ஆண்டில், ரூ.250 கோடி மதிப்பீட்டில் 11 பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க அடையாறு மற்றும் கொசஸ்தலையாறுகளை அகலப்படுத்துதல், நீர்வழித்தடங்களை மேம்படுத்துதல் மற்றும் வடிகால்கள் அமைத்தல் போன்ற 8 வெள்ள தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு , 7 பணிகள் முடிவுற்றும் 1 பணி நடைபெற்றும் வருகிறது.

2022-2023-ஆம் ஆண்டில் ரூ.184.22 கோடி மதிப்பீட்டில் சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மிகவும் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் 8 வெள்ள தணிப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன.

2023-2024-ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் 30 அவசிய வெள்ள தணிப்பு பணிகள் ரூ.506.304 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வெவ்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

2023-2024-ஆம் ஆண்டில் ரூ.350 கோடி மதிப்பீட்டில், 2021 மற்றும் 2023- ஆம் ஆண்டுகளில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கூடுதல் 22 வெள்ள தணிப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 6 பணிகள் முடிவுற்றுள்ளன.

2023-2024-ஆம் ஆண்டில் ரூ.280 கோடி மதிப்பீட்டில், 2023-ஆம் ஆண்டில் அதிக கனமழையால் பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் 480 நிரந்தர மறுசீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாகத்தில் உள்ளன.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

ரூ.3,249.12 கோடி திருத்திய மதிப்பீட்டில் மாநிலத்திலுள்ள 66 உபவடிநிலங்களில் 5.43 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில் 2018-ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. ரூ.2,131.34 கோடி மதிப்பீட்டில் 4 கட்டங்களில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்து, நீர் செறிவூட்டும் கிணறுகள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் திட்டமிடப்பட்டுள்ளது. காவிரி கழிமுகப்பகுதி மற்றும் உபவடிநிலங்களில் பாசன வாய்க்கால்களும் மேம்படுத்தப்படவுள்ளன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 57 ஏரிகள் மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால் புனரமைத்தல் ஆகிய பணிகள் ரூ.43.63 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றன.

கட்டம் I

ரூ.743.56 கோடி மதிப்பீட்டில் 18 உபவடிநிலங்களில் 1,325 ஏரிகள் 107 அணைக்கட்டுகள், 42 கிணறுகள் புனரமைத்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் II

ரூ.649.55 கோடி மதிப்பீட்டில் 16 உபவடி நிலங்களில் 903 ஏரிகள், 181 அணைக்கட்டுகள் 37 கிணறுகள் புனரமைத்து 99.6 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் III

ரூ.189.81 கோடி மதிப்பீட்டில் 329 ஏரிகள், 56 அணைக்கட்டுகள் 16 கிணறுகள் புனரமைத்து 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கட்டம் IV

ரூ.346.48 கோடி மதிப்பீட்டில் 9 உபவடிநிலங்களில் 12 ஏரிகள், 11 அணைக்கட்டுகள் 332 கிமீ வாய்க்கால், 202 கிமீ கால்வாய்கள் புனரமைத்து 94 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம்

ஏப்ரல் 2021 முதல் ரூ.404.83 கோடி மதிப்பீட்டில் (60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி) 457 ஏரிகளின் புனரமைப்புப் பணிகளில் 292 பணிகள் முடிக்கப்பட்டு, 165 பணிகள் செயலில் உள்ளன.

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II-கீழ் சாத்தனூர், சோலையாறு, மேல் நீராறு, கெலவரப்பள்ளி மற்றும் பவானிசாகர் அணைகள் ரூ.261.52 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.19.30 கோடி மதிப்பீட்டில் நீர்வளத்துறை 17 அணைகளில் கண்காணிப்பு உபகரணங்கள் பொருத்தும் பணி முடிவுற்று, அமைப்பின் முழு செயல்திறன் மதிப்பிடப்பட உள்ளது. ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் மற்றும் சோலையாறு அணைகளில் நில அதிர்வு கண்காணிப்பு CSIR-NGRI மூலம் செயலாக்கம். 2 பொறியாளர்கள் Dam Engineering இல் முதுகலை பட்டம் பெற்று தற்போது மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் 3 பொறியாளர்கள் மேற்கண்ட நிறுவனத்தில் முதுகலை பட்டப்படிப்பு பயின்று வருகின்றனர்.

விருது

தேசிய நீர் விருது

நீர் மேலாண்மையில் மூன்றாவது சிறந்த மாநிலமாக 2022-இல் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு தேசிய நீர் விருது வழங்கப்பட்டது.



உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு (WHIS) விருதுகள்

2022-இல் (ICID) உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு விருதுகள் காலிங்கராயன் அணைக்கட்டு வீராணம் ஏரி மற்றும் கொள்ளிடம் அணைக்கட்டு ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது.

மத்திய நீர்ப்பாசன மற்றும் எரிசக்தி வாரிய (CBIP) விருது

2022-இல் கட்சமங்கலம் அணைக்கட்டிற்கு சிறந்த திட்டம் / கட்டுமானப் பராமரிப்பு (50 ஆண்டுகள் குறையாமல்) விருது மத்திய நீர்ப்பாசன மற்றும் எரிசக்தி வாரியத்திலிருந்து வழங்கப்பட்டது.

Water Digest இதழின் உலக நீர் விருது

2023-2024 இல், Water Digest உலக நீர் விருதில் அணைகளின் பாதுகாப்பில் சிறப்பு முயற்சிக்கான விருது தமிழ்நாடு நீர்வளத் துறைக்கு வழங்கப்பட்டது.

சட்டமன்றம்

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திறப்பு விழா

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா 02.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது.

"சட்டமன்ற நாயகர்-கலைஞர்" விழாக் குழு - கருத்தரங்கம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பெற்ற "சட்டமன்ற நாயகர்-கலைஞர்" விழாக் குழுவின் மூலம், தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் 120 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில், அக்டோபர் 2023 முதல் ஜனவரி 2024 வரை 'நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது' என்ற தலைப்பில் நடத்தப்பெற்ற கருத்தரங்குகளில் 602 மாணவ, மாணவியர் பங்கேற்று உரையாற்றினர்.

மாநில அளவில், தனித்தனியே பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கிடையே நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் வெற்றிபெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.12.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது திருக்கரங்களால் அன்பளிப்பு மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கி, அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதுமட்டுமன்றி, அவ்வமயம் விழாக் குழுவின் சார்பாக தயாரிக்கப்பட்ட 'சட்டமன்ற நாயகர்-கலைஞர்' சிறப்பு மலர் ஒன்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

மின் நிதிநிலை அறிக்கை (e-Budget) அளித்தல்

2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் முதன்முறையாக சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை முறையே 13.08.2021 மற்றும் 14.08.2021 ஆகிய தேதிகளில் தமிழக வரலாற்றில் முதன் முறையாக மின் நிதிநிலை அறிக்கைகளாக, (e-Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டன.

மின் நிதிநிலை அறிக்கைகள் பேரவையில் அளிக்கப்படும்போது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக ஒவ்வோர் உறுப்பினரின் மேசைகளிலும் All-in-One PC-க்களும், கையடக்க கணினியும் பொருத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டன அல்லது கையாளப்பெற்றன.

பேரவையில் பத்திரிகையாளர்களின் வசதிக்காக பெரிய திரை கொண்ட Display Panels நிறுவப்பட்டு உரிய பகுதிகள் காட்சிப்படுத்தப்பட்டன. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொடுதிரை கையடக்க கணினியில் PDF வடிவிலும் நிதிநிலை உரைகளைக் காணும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவினை நினைவுகூரும் வகையில் அச்சிடப்பட்ட விழா சிறப்பு மலரினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 10.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களுக்கு நவீன மேசைக் கணினிகள் வழங்குதல்

234 சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகங்களில் இ-சேவை மையங்களைத் தொடங்கி வைத்து, அம்மையங்களுக்கான நவீன மேசைக் கணினிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.10.2022 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென நவீன மேசைக் கணினிகள் வழங்கப்பட்டன.

இ-விதான் இணைய முகப்பில் பேரவை நடவடிக்கைகளின் நிகழ்நேர ஒளிபரப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல் ஆகியவை தேசிய இ-விதான் திட்ட செயலியின் இணைய முகப்பில் (Portal) நிகழ்நேர ஒளிபரப்பு (Live streaming) செய்யப்பட்டது. மேலும், வினாக்கள்-விடைகள் நேரமும் நிகழ்நேர முறையில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையை முழுமையாக காகிதமில்லா சட்டமன்றமாக்கிடும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக டிஜிட்டல் ஹவுஸ் (Digital House) திட்டத்தை 12.04.2023 முதல் செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைகளின் மேல் பொருத்தப்பட்டுள்ள தொடுதிரை சிறு கணினிகளில் மின்-புத்தகம் (e-Book) என்ற செயலி உருவாக்கப்பட்டு, இதனைப் பயன்படுத்துவதற்கான பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உருவாக்கப்பட்டு, உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.

பேரவையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், House Controller Module மற்றும் Display Unit Module ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

இதன்மூலம் உரையாற்றும் உறுப்பினர் பெயர், புகைப்படம், பேசு பொருள், துறை, உரையாற்றும் நேரம் உள்ளிட்டவற்றை பேரவை மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ள ஆறு பெரிய திரைகளில் காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை நிகழ்வுகளை முழுவதுமாக நேரடி ஒளிபரப்பு செய்தல்

09.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, தூர்தர்ஷன் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் (Landing Channel) மூலமாக பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற 16-ஆவது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம், 05-01-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரையுடன். நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக 06-01-2022 மற்றும் 07-01-2022 ஆகிய இரண்டு நாள்களிலும் வினாக்கள்-விடைகள் நேரம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மேலும், 07-01-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

Youtube, Twitter, Facebook போன்ற சமூக ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாக வீடியோ தொகுப்பும் வழங்கப்பட்டது.

08.02.2022 அன்று நடைபெற்ற NEET தேர்வு விலக்கு தொடர்பாக சிறப்புக் கூட்ட நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

மேலும், 18.03.2022 முதல் 24.03.2022 வரை, 06.04.2022 முதல் 10.05.2022 வரை, 17.10.2022 முதல் 19.10.2022 வரை, 09.01.2023 முதல் 13.01.2023 வரை, 20.03.2023 முதல் 21.04.2023 வரை, 09.10.2023 முதல் 11.10.2023 வரை, 12.02.2024 முதல் 22.02.2024 வரை, 20.06.2024 முதல் 29.06.2024 வரை, 09.12.2024 முதல் 10.12.2024 வரை 06.01.2025 முதல் 11.01.2025 மற்றும் 14.03.2025 முதல் 29.04.2025 வரையிலான கூட்டத் தொடர்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, அனுமதிக்கப்பட்ட பேரவை நிகழ்வுகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கென பிரத்யேகமாகத் தொடங்கப்பட்ட Youtube Channel-லிலும் 04.05.2022 முதல் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

23.03.2023 அன்று தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022 மறு ஆய்வு செய்தல் தொடர்பான நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

மேலும், 18.11.2023 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட சட்ட முன்வடிவுகளை மறு ஆய்வு செய்தல் தொடர்பான பேரவை நிகழ்வுள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

அன்றாட சட்டமன்ற நிகழ்வுகளின் தொகுப்பினை செவித்திறன் பாதிக்கப்பட்டவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் (Sign Language Interpreters) மூலமாக சைகை மொழியில் பத்து நிமிடங்கள் கொண்டதாக செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாக ஒளிப்பதிவு செய்து, ஊடகங்கள் ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 28.03.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட ஒளிப்பதிவு செய்யும் நிகழ்வு, 17.04.2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறையில், மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையில் தொடங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 18.04.2023 முதல் 21.04.2023 வரை, 09.10.2023 முதல் 11.10.2023 வரை, 18.11.2023 , 12.02.2024 முதல் 22.02.2024 வரை, 20.06.2024 முதல் 29.06.2024 வரை, 09.12.2024 முதல் 10.12.2024 வரை, 06.01.2025 முதல் 01.01.2025 வரை மற்றும் 14.03.2025 வரையிலான நாள்களில் தகுதி வாய்ந்த சைகை மொழிபெயர்ப்பாளர், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் மூலமாக அனுப்பப்பட்டு ஒவ்வொரு நாளும் நடைபெற்ற கூட்ட நிகழ்வு 10 நிமிடங்கள் கொண்டதாக சைகை மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, YouTube Channel மூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

சட்டமன்றப் பேரவை ஆவணங்களைக் கணினிமயமாக்கல்

"சட்டமன்றத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தில் 1921 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படும்" என்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் 13.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மூலம் 1952 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், செய்தித் துணுக்குகள், செயலக வெளியீடுகள், புகைப்படங்கள் ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு அதற்கென புதிதாக வடிவமைக்கப்பட்ட பிரத்யேக 'tnlasdigi-tal.tn.gov.in' என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 25.04.2025 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவப்படி உயர்த்தி வழங்கப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ரூ.20,000/-ஆக வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம் 01.04.2020 முதல் ரூ.25,000/- ஆகவும், மருத்துவப்படி நிதியாண்டிற்கு ரூ.30,000/- இலிருந்து ரூ.50,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அனைத்து சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கும் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் மருத்துவப்படி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.04.2023 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சட்டமன்றப்பேரவை/மேலவைமுன்னாள் உறுப்பினர்களுக்குரூ.25,000/-ஆகவழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம் 01.06.2023 முதல் ரூ.30,000/-ஆகவும் மருத்துவப்படி நிதியாண்டிற்கு ரூ.50,000/--லிருந்து ரூ.75,000/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அனைத்து சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கும் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் மருத்துவப்படி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம்

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் நுழைவாயில் அருகில் புதிய ஆவின் பாலகம் 06.09.2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தை ஒட்டியுள்ள பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக ரூ.4.29 கோடி செலவினத்தில் பொதுப்பணித்துறையால் புதிதாக அமைக்கப்பட்ட இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், புதிய பூங்காக்கள், புதிய மழைநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை, சுவாமி சிவானந்தா சாலை மற்றும் வாலாஜா சாலைகளை இணைக்கும் புதிய உட்புறச் சாலை ஆகியவை 13.09.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பதினாறாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்ட பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் அனைத்து குடியிருப்புகளுக்கும் புதிய திரைச்சீலைகள், புதிய கொசுவலைகள் பொருத்தப்பட்டுள்ளன. புதிய இருக்கைகள் (Sofa sets), புதிய மெத்தைகள், புதிய தலையணைகள், தலையணை உறைகளுடன் கூடிய படுக்கை விரிப்புகள் ஆகியவை அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்குவதற்காகவும், பழுதடைந்த அறைகலன்கள் பழுதுநீக்கம் செய்யவும், ரூ.99,48,500/- செலவினத்தில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் புதிய மின்தூக்கி அமைப்பதற்கு ரூ.1,83,35,000/- செலவினத்தில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக 30 நாள்கள் பதிவு வசதியுடன் கூடிய 84 எண்ணிக்கையிலான கண்காணிப்புக் கேமராக்கள் (CCTV) ரூ.64,92,482/-செலவினத்தில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் கேமராக்கள் பொருத்தும் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளன.

சுவாமி சிவானந்தா சாலை நுழைவு வாயிலின் முகப்பினை அழகுபடுத்தும் விதமாகவும், சட்டமன்றப் பேரவை அமைப்பு எல்லையினை வரையறுக்கும் விதத்திலும் நுழைவாயிலில் "கலைஞர் நூற்றாண்டு வளைவு (Kalaignar Centenary Arch)" என்னும் வாசகத்துடன் கம்பீர தோற்றத்துடன் கூடிய அலங்கார வளைவினை ரூ.11,00,000/-செலவினத்தில் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பொதுப்பணித்துறையின் மூலம் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளன.

சட்டமன்றஉறுப்பினர்கள் குடியிருப்பு வளாகம் மற்றும் சட்டமன்றமுன்னாள் உறுப்பினர்கள் விடுதி ஆகியவற்றில் இயங்கி வரும் 6 மின் மாற்றிகளை (Transformers) இடமாற்றம் செய்வதற்கு ரூ.94,80,100/- செலவினத்தில் பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளன.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் புதிய மின்தூக்கி, இரு குழுக் கூட்ட அறைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், காத்திருப்போர் அறை ஆகிய பணிகளுடன் கூட்ட அரங்கு மேசை, ஒலிபெருக்கியுடன் கூடிய ஒலிவாங்கி, நாற்காலிகள் ஆகியவை வாங்கி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.1,83,35,000 செலவினத்தில் அரசாணை வெளியிடப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திலுள்ள இந்தியன் வங்கி கட்டடத்தின் மேல் புதிதாக முதல் தளம் ரூ.49,83,909 செலவினத்தில் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உபவசதிக் கட்டடத்தின் முதல் தளத்தின் மேல் ரூ.94,47,332 செலவினத்தில் இரண்டு குழுக் கூட்ட அறைகளுக்கான கட்டடம் ஒன்று கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் முன்புறம் உள்ள பிரதான நுழைவாயிலின் எதிரில் ரூ.9,30,436 செலவினத்தில் புதிதாக வரவேற்பறை அமைப்பதற்கு அரசாணைவெளியிடப்பட்டு,தமிழ்நாடுவீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள தொகுப்பின் பின்புறம் ரூ.40,06,430 செலவினத்தில் தரைத்தளத்தில் புதிதாக பேருந்து நிறுத்துமிடம், முதல் தளத்தில் பேரவைச் செயலக ஆவண அறை அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நிறைவடைந்து தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் பிரதான நுழைவாயிலின் இடப்புறத்தில் ரூ.1,50,89,000 செலவினத்தில் புதிதாக 1,000 சதுர அடியில் மருந்தகம் மற்றும் 1,500 சதுர அடியில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சட்டம்

12 நபர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மற்றும் உடற்கல்வி இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

12 உதவிப் பேராசிரியர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு பணிபுரிகின்றனர்.

அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள், இதழ்கள் மற்றும் சட்ட தரவு தளங்கள் ரூபாய் ஒரு கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடி நகரத்தில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு ரூ.92 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அக்கல்லூரிக்கென மாணவ மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.45 கோடி நிதியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், அக்கல்லூரிக்கென தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் புனரமைப்புப் பணிகள் ரூ.10.14 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு தற்போது அக்கட்டடத்தில் அரசு சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் Wi-Fi Zone ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

உதவிப் பேராசிரியர்களுக்கான, பயிற்சிகள் ரூ.14 இலட்சம் சேலவில் நடத்தப்பட்டுள்ளது. 14 அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் கருத்தரங்கு மற்றும் சட்ட மாநாடுகள் நடத்துவதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.28 இலட்சத்துக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கு ரூ.102 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு நிரந்தரக் கட்டடம் கட்டப்படுகிறது.

4 அரசு சட்டக் கல்லூரிகளில் முதுநிலை (எல்.எல்.எம்.) பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 15 அரசு சட்டக் கல்லூரிகளுக்கான நூலகத்திற்கு ரூ.3 கோடிக்கு நிதி ஒப்பளிக்கப்பட்டு, புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொள்ளவும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கென இதுவரையில் மொத்தம் ரூ.2.10 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வேலூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலகக் கட்டடத்திற்கு, ரூ.13.03 கோடிக்கு நிதி ஒப்பளிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO System) 5 அரசு சட்டக் கல்லூரிகளில் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் கால்பந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுத்திடல், பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சட்டப்படிப்பு முடித்த சட்டப் பட்டதாரிகளுக்கு ரூ.40.80 இலட்சம் செலவில் தன்னார்வ பயிற்சித் திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்படுகிறது.

சேலம், நாமக்கல் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளில் ரூ.35.92 இலட்சம் செலவில் கணினி சாதனங்கள் மற்றும் துணைப்பாகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ரூ.1.57 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் அறைகலன்கள் மற்றும் மர இரும்புத் தளவாடங்கள் வாங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

தேனி அரசு சட்டக் கல்லூரியில் ரூ.1.83 கோடி மதிப்பீட்டில், 500 KVA மின்மாற்றி மற்றும் மின்சாதனங்கள் மற்றும் அமைப்புகள் நிறுவப்படுகின்றன.ரூ.3.50 கோடிக்கு தேனி அரசு சட்டக் கல்லூரி மற்றும் விடுதிகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் கல்வியாண்டுகளில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கான 7.5% சிறப்பு உள்ஒதுக்கீட்டின்கீழ், தெரிவு செய்யப்பட்டு சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு ரூ.70.19 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்ட வரலாற்று மாநாடு ஏற்பாடு செய்ய ரூ.4.40 இலட்சம் மீள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.61 இலட்சம் கல்விக் கட்டணம் ஒப்பளிப்பு. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.44.27 இலட்சம் செலவில் செவியுணர் காணொளி ஊடக மையம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டது.தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இணையவெளி- சட்டம் மற்றும் நீதி பாடப்பிரிவில் முதுநிலை சட்டப் படிப்பு (எல்.எல்.எம்) ரூபாய் 1.18 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளது. சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 15 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு சட்டப் புத்தகங்கள் வாங்கிட ரூ.65 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சட்டக் கல்லூரி மற்றும் சீர்மிகு சட்டப் பள்ளி மாணவர்களுக்கு 'வழக்காடுதல் கலை' பயிற்சிக்கு ரூ. 32.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு. திருச்சிராப்பள்ளி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் நான்கு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் ரூ.40 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தொகுப்பு நல்கையாக ரூ.16.29 கோடி நிதி ஒப்பளிப்பு 2021-2024 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் பயிலும் 20 முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு, ரூ.59 இலட்சம் கல்விக் கட்டண சலுகை (2020-2024). தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேர்க்கையில் 50% அகில இந்திய இடஒதுக்கீட்டு இடங்களில் 69% தமிழ்நாடு அரசின் இட ஒதுக்கீடு நடைமுறை.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சர்வதேச நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொள்ள ரூ.5.12 இலட்சம் நிதி உதவி. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் 7.5 விழுக்காடு சிறப்பு உள்ஒதுக்கீட்டின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு ரூ. 50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு (2022-2025). வாஷிங்டனில் நடைபெற்ற மாதிரி நீதிமன்றப் போட்டியில் பங்கேற்ற சீர்மிகு சட்டப்பள்ளி மாணவர்களுக்கு ரூ. 8.80 இலட்சம் நிதி உதவி.

ஆறு அரசு சட்டக் கல்லூரிகளில் 480 மாணவர்களுக்கு கூடுதல் சேர்க்கை (2024-2025). தேனி அரசு சட்டக் கல்லூரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ரூ.58 இலட்சத்துக்கு நிதி ஒப்பளிப்பு. பட்டறைப்பெரும்புதூர், புதுப்பாக்கம் அரசு சட்டக் கல்லூரிகளில் முறையே 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப்படிப்புகள் 2024-2025 முதல் புதிதாக தொடக்கம்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் ரூ.3.50 கோடி நிதி ஒப்பளித்து, கட்டட உபகரணங்கள் மற்றும் மேடை அமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மதுரை சட்டக் கல்லூரியில் பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட ரூ.40.08 கோடியுடன், கூடுதலாக, ரூ.4.61 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 15 அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில் மின்னணு பதிப்புகள், சட்ட இதழ்கள், சட்டப் புத்தகங்கள் மற்றும் இணைய சட்டத் தரவு தளங்கள் வாங்கப்பட்டுள்ளன. 8 இணைப்பேராசிரியர்களுக்கு அரசு சட்டக் கல்லூரிகளில் தற்காலிகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

சீர்மிகு சட்டப்பள்ளியில் 'சொத்துரிமைச்சட்டம்' மற்றும் 'குற்றம் மற்றும் தடயவியல் சட்டம்' என்ற புதிய முதுகலை சட்டப் படிப்புகள் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அரசு சட்டக் கல்லூரிகளில் 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் 'சட்டத்தமிழ்' எனும் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

7.5 விழுக்காடு சிறப்பு உள் ஒதுக்கீட்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்வி மற்றும் இதர கட்டணமாக ரூ.1.38 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 36 உதவிப் பேராசிரியர்களுக்கு பணிமேம்பாடு வழங்கப்பட்டுள்ளது, அதில் 5 உதவிப் பேராசிரியர்களுக்கு இணைப் பேராசிரியர் நிலைக்கு பணி மேம்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 29.08.2018 உருவாக்கப்பட்டு. நீதியரசர் இரா. தாரணி அவர்கள் 05.06.2023 அன்று நியமனம் செய்யப்பட்டு 12.06.2023 அன்று பதவியேற்றார்.

தமிழ்நாடு அரசு 2023 டிசம்பர் 18 -22 வரை மற்றும் 2023 டிசம்பர் 22 வரை ஆட்சிமொழி வார விழாவைக் கொண்டாடி, கருத்தரங்கம் ஒன்றினை, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாக கூட்ட அரங்கில் (பூம்பொழிலில்) நடத்தியது.

இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட கடைகள் மற்றும் நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் அமைத்தல் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முயலும் நபர்கள் மற்றும் இயக்கங்களை ஊக்குவிக்க உரிய திட்டங்களை அரசு மேற்கொள்ளலாம் என பரிந்துரை செய்யப்பட்டது.

"சட்டத்தமிழ்" பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அரசு சட்டக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை (கலைஞர் 100) சிறப்பிக்கும் வகையில், 100 சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை தமிழில் மொழிபெயர்க்க ரூபாய் மூன்று கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.








இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி



திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்



ரூ.4,554 பாரா தடகள விளையாட்டு வீரர்களுக்கு ரூ.151 கோடி ஊக்கத்தொகை...

டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தின்கீழ், ரூ.85.99 கோடி செலவில் 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் 16,798 விளையாட்டுப் பொருள்கள்...

ரூ.162 கோடி செலவில் சென்னை, திருச்சி, மதுரை, நீலகிரியில் புதிய ஒலிம்பிக் அகாடமி...

முதலமைச்சர் கோப்பை 2023 ஆம் ஆண்டில் ரூ.50.86 கோடி நிதி ஒதுக்கீட்டில் 3.67 இலட்சம் வீரர்களும், 2024 ஆம் ஆண்டில் ரூ.83.37 கோடி நிதி ஒதுக்கீட்டில் 11.56 இலட்சம் வீரர்களும் பயன்...

ரூ.256.45 கோடி மதிப்பீட்டில் 74 புதுமைத் திட்டங்களுக்கு ஒப்புதல்..

ஊரகப் பகுதிகளில் 7,58,489 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 59,616 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கம்....

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை

பாரா-தடகள வீரர்கள் உட்பட 4,614 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.152.52 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

எலைட் விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (ELITE)

2023-2024 பட்ஜெட்டில் எலைட் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 27 பயனாளிகள் பயன். மேலும் ரூ.1.25 கோடியிலிருந்து ரூ.7.50 கோடி ஆக நிதி உதவியின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

மிஷன் சதுரங்கம்

2024-2025 ஆம் ஆண்டிற்கான மிஷன் சதுரங்கம் திட்டத்தை நடத்துவதற்காக அரசு ரூ.1.30 கோடிக்கு நிர்வாக ஒப்புதலையும், ரூ.55 இலட்சத்திற்கு நிதி ஒப்புதலையும் வழங்கியுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு

2025 பிப்ரவரி 19 மற்றும் 20 தேதிகளில் சென்னையில் 23 ஆவது தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப்பை நடத்துவதற்காக அரசு ரூ.3,95,03,250 தொகையை அனுமதித்துள்ளது.

ட்ரையத்லான் 2025

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமான சென்னை ட்ரையத்லான் 2025 ஐ 2025 பிப்ரவரி 14 முதல் 16 வரை சென்னையில் நடத்துவதற்காக அரசு ரூ.50,00,000 தொகையை அனுமதித்துள்ளது.

ஹோம் ஆப் செஸ் அகாடெமி

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் ஹோம் ஆப் செஸ் அகாடெமி நிறுவுவதற்கு அரசாங்கம் ரூ.1,46,15,000 நிதி மற்றும் நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது.

உட்கட்டமைப்புகளைப் பராமரித்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உள்கட்டமைப்பைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக ரூ.26,30,39,099 தொகைக்கு நிர்வாக ஒப்புதலையும், ரூ.10,41,83,099 தொகைக்கு நிதி ஒப்புதலையும் அரசு வழங்கியுள்ளது.

விளையாட்டு விடுதிகள் மறுசீரமைப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதிகள் மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ரூ.10 கோடியை அனுமதித்துள்ளது.

சுற்றுச்சுவர் அமைத்தல்

வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ரூ.3 கோடி நிதி மற்றும் நிர்வாக அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

சேலம் விளையாட்டு விடுதி

சேலம் மாவட்டத்தில் உள்ள பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் விளையாட்டு விடுதி அமைக்க அரசு ரூ.7,93,00,000 நிதியை ஒப்பளித்துள்ளது.

செயற்கை இழை வலைகோல் பந்து மைதானம்

மதுரை மாவட்டம் விளையாட்டு வளாகத்தில், கேலரியுடன் கூடிய செயற்கை ஹாக்கி புல்வெளி, உடை மாற்றும் அறை, துணை அடித்தளம் உட்பட பயிற்சி புல்வெளியை மீண்டும் அமைத்தல், ஆர்.சி.சி.வடிகால் அமைப்பு, நடைபாதை, தெளிப்பான் அமைப்பு, சம்ப் ஏற்பாடு, சங்கிலி இணைப்பு வேலி மற்றும் மினி மாஸ்ட் ஏற்பாடுகளுக்காக அரசு ரூ. 20 கோடியை அனுமதித்துள்ளது.

பல்நோக்கு விளையாட்டரங்கம்

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் பயிற்சி மையத்துடன் கூடிய பல்நோக்கு விளையாட்டரங்கம் அமைக்க ரூ.14,77,00,000 நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் அரசு வழங்கியுள்ளது.

விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் SDAT விளையாட்டு விடுதிகளுக்கான விளையாட்டு உபகரணங்களை கொள்முதல் செய்ய அரசு ரூ.4,12,00,000 தொகையை அனுமதித்துள்ளது.

மிஷன் இன்டர்நேஷனல் மெடல் திட்டம் (MIMS)

சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்ல விளையாட்டு திறமைகளை வளர்க்க, மிஷன் இன்டர்நேஷனல் மெடல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கான நிதி உதவி ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 71 பயனாளிகள் பயன்பெற்று. ரூ.5.00 கோடியிலிருந்து ரூ.9.00 கோடியாக நிதி உதவியின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்டம் (CDS)

சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்டத்தில் 101 வீரர்களுக்கு ஆண்டுக்கு உதவித்தொகை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.4.00 இலட்சம் உயர்த்தி வழங்க அரசு ரூ.4.00 கோடியை அனுமதித்துள்ளது.

பயிற்றுநர்கள் நியமனம்

76 புதிய பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 4 வெளிநாட்டு பயிற்சியாளர்கள், 5 நிபுணர் மற்றும் 2 பாரா விளையாட்டு பயிற்சியாளர்கள் உயர்மட்ட பயிற்சி வழங்க நியமிக்கப்பட்டனர்.

விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

தமிழ்நாடு "விளையாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாக" CII விளையாட்டு வணிக விருது 2023 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 2023இல் "விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த அங்கீகரிக்கப்பட்ட மாநிலம்" சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவதற்கான அரசு என இந்து ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் விருதில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு "விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கான சிறந்த மாநிலம்" என தி இந்து ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ் விருதில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முதலமைச்சர் மாநில இளைஞர் விருது

கடந்த 4 ஆண்டுகளில் சிறந்த சமூக சேவைக்காக முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது பெற்றவர்கள் 14 ஆண்கள் மற்றும் 10 பெண்கள் சிறந்த சமூக சேவைக்காக விருது பெற்றுள்ளனர். இது பதக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் ரூ.1,00,000 ரொக்கப் பரிசை உள்ளடக்கியது.

கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் 2023-2024

2023-2024 பட்ஜெட்டின்போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தின்கீழ் அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்தத் திட்டம் 18.02.2024 அன்று மதுரை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கு 85.99 கோடி செலவில் 16,798 விளையாட்டு உபகரண தொகுப்புகள் விநியோகிக்கப்பட்டன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணத் திட்டத்தை" விரிவுபடுத்த ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

கட்டடம் பழுது பார்த்தல் மற்றும் சீரமைப்புப் பணிகள்

திருவண்ணாமலை மாவட்டம், பெண்கள் விளையாட்டு விடுதியில் ரூ.39.90 இலட்சம் செலவில் பழுது மற்றும் புதுப்பித்தல் பணி.

திருவள்ளூர் மாவட்டம் - முகப்பேர் விளையாட்டு வளாகத்தில் ரூ.137.00 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணிகள்.

புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்ட விளையாட்டு அரங்கங்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.

நவீன விளையாட்டரங்கங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டரங்கங்கள் ரூ.300 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள்-2023-க்கு செயற்கை இழை தடகள ஓடுபாதை ரூ.8.64 கோடியில் மறுசீரமைக்கப்பட்டது.



சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து நுங்கம்பாக்கம் டென்னிஸ் மற்றும் வேளச்சேரி நீச்சல் குளம் ஆகியவை ரூ.25 கோடி மதிப்பீட்டில் புரைமைப்பு.

ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் 6 வருட வருடாந்திர பராமரிப்புடன் ஸ்போர்ட்ஸ் LED மின்னொளி விளக்குகள் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டன.

ரூ.9.098 கோடியில் சென்னை, MRK ஹாக்கி விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை ஆடுகளம் மறுசீரமைக்கப்பட்டது.

ரூ.25 கோடியில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் புனரமைக்கப்பட்டது.

புதிய உட்கட்டமைப்பு

வேலூர் மாவட்டத்தில் காட்பாடி கிராமத்தில் பல்நோக்கு திறந்தவெளி அரங்கத்தில் கூடுதல் பணிகளுக்கு ரூ.37 இலட்சம் வழங்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் விளையாட்டு விடுதி கட்டடம் அமைக்க ரூ.67.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் பல்நோக்கு திறந்தவெளி விளையாட்டு வளாகம் அமைக்க கூடுதல் நிதி ரூ.2.79 கோடி வழங்கப்பட்டது.

தேனி, மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ரூ.595 இலட்சம் வழங்கப்பட்டது.

சென்னையில் கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி அமைப்பதற்கு ரூ.7.78 கோடிக்கு நிர்வாக அனுமதியும் ரூ. 5 கோடி நிதியும் வழங்கப்பட்டது.

மதுரையில் எம்.ஜி.ஆர்.மாவட்ட விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை ஓடுதள பாதை மறுசீரமைக்க ரூ.8.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் பளுதூக்கும் பயிற்சி மையம் அமைப்பதற்கு ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், மாவட்ட விளையாட்டரங்கில் டென்னிஸ் மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடத்திற்கு ரூ.85.60 இலட்சம் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 10 இடங்களில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ரூ.30 கோடிக்கு நிர்வாக அனுமதியும், ரூ.25 கோடி நிதியும் வழங்கப்பட்டது.

தென்காசி மாவட்டத்தில், பட்டக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.15 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 18 இடங்களில் சிறு விளையாட்டரங்கங்கள் நிறுவுவதற்கு ரூ.54 கோடி நிர்வாக ஒப்புதல் மற்றும் ரூ. 45.00 கோடி நிதி வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பத்து தொகுதிகளிலும் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கும் மற்றும் ஏற்கெனவே 29 தொகுதிகளிலும் பயன்பாட்டில் உள்ள விளையாட்டரங்களுக்கும் "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, கோவில்பட்டியில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களுக்காக முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க ரூ.7 கோடி வழங்கப்பட்டது.

ஈரோடு, கரட்டுப்பாளையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் அமைத்திட ரூ.1 கோடி வழங்கப்பட்டது.

செங்கல்பட்டு, தென்காசி, கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்க ரூ.75 கோடி வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில், பல்நோக்கு விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.20 கோடி வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் உள்ள பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் விளையாட்டு விடுதி அமைக்க ரூ .7.93 கோடி வழங்கப்பட்டது.

திருச்சி, மதுரை, சேலம், கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.5.00 கோடி வழங்கப்பட்டது.

சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.2.38 கோடி வழங்கப்பட்டன.

திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக ரூ.2.43 கோடி வழங்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்க ரூ.42.90 கோடி வழங்கப்பட்டது.

மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானம் மற்றும் வேளச்சேரி AGP வளாகத்தில் பல்வேறு விளையாட்டு வசதிகள் ஏற்படுத்திட ரூ.2.59 கோடி வழங்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் விளையாட்டு விடுதி அமைக்க ரூ.7.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் பாரம்பரிய தற்காப்புக் கலை மையம் நிறுவுவதற்கு ரூ.11.83 இலட்சம் வழங்கப்பட்டது.

மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் டைவிங் குளம், நீச்சல் குளம் அமைக்க ரூ.12.50 கோடி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் 50Mx25M நீச்சல் குளம் அமைக்க ரூ.6.27 கோடி வழங்கப்பட்டது.

மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உள்ள உடற்பயிற்சி கூடங்களை மேம்படுத்த ரூ.9.78 கோடி வழங்கப்பட்டது.

அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் செயற்கை இழை ஹாக்கி மைதானம் அமைக்க ரூ.20.30 கோடி வழங்கப்பட்டது.

ஒலிம்பிக் அகாடமிகள்

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் புதிய ஒலிம்பிக் அகாடமி அமைக்க ரூ.3.00 கோடி வழங்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமி நிறுவுவதற்கு ரூ.150.00 கோடி நிர்வாக அனுமதியும் ரூ. 20 கோடி நிதியும் வழங்கப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமியை அமைக்க ரூ.6.00 கோடி வழங்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமியை அமைக்க ரூ.3.00 கோடி வழங்கப்பட்டது.



விளையாட்டுத் திறமைகள் மற்றும் அங்கீகாரத்திற்கான (STAR) அகாடமி

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் (STAR) அகாடமிகள் அமைக்க ரூ. 3.68 கோடி வழங்கப்பட்டது.

ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்கில் தமிழக விளையாட்டு வீரர்கள்

17 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.1.19 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

பாராலிம்பிக் 2024 போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 4 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.5.00 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள்

19வது ஆசிய விளையாட்டுகள் 2022இல் தமிழ்நாட்டு வீரர்கள் 28 பதக்கங்களை வென்று ரூ.9.4 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

44 ஆவது செஸ் ஒலிம்பியாட்

44 ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி ரூ. 114.00 கோடி நிதியில் நடத்தப்பட்டது.

மாமல்லபுரத்தில் 44 ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 186 நாடுகளில் 2000 வீரர்கள் பங்கேற்றனர்.

சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி (WTA)

சென்னையில் 12.09.2022-18.09.2022 வரை நடைபெற்ற சென்னை ஓபன் WTA சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டிகளுக்கு ரூ.5.00 கோடி நிதியுதவி.

ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023

12 ஆண்டுகளுக்கு பிறகு 2023 சர்வதேச ஸ்குவாஷ் போட்டி, சென்னையில் நடைபெற்றது. ரூ.2.00 கோடி நிதி வழங்கப்பட்டது.

முதலமைச்சர் கோப்பை 2023

முதலமைச்சர் கோப்பை போட்டிக்காக ரூ.50.86 கோடி நிதி வழங்கப்பட்டது. இதில் 3.67 இலட்சம் வீரர்கள் பங்கேற்றனர்.

முதலமைச்சர் கோப்பை 2024

2024 முதலமைச்சர் கோப்பை போட்டிகளுக்கு ரூ.83.37 கோடி நிதி ஒதுக்கப்பட்டு. 11.56 இலட்சம் பேர் ஆன்லைனில் பதிவுசெய்தனர்.

ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் - 2023

7 ஆவது "ஆசிய சாம்பியன்ஸ் டிராபி (ஆடவர்) சென்னை - 2023" 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் நடைபெற்றது.

ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு இப்போட்டிகளை நடத்தியது.

ரூ.17.33 கோடியில் "ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் (ஆடவர்) 2023" நடத்தப்பட்டது.

சர்வதேச அலைச் சறுக்குப் போட்டி

2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 முதல் 20 வரை மாமல்லபுரத்தில் சர்வதேச அளவிலான உலக சர்ஃபிங் லீக் போட்டிகள் ரூ. 2.68 கோடி செலவில் நடத்தப்பட்டது.

HCL சைக்கிளோத்தான் (CYCLOTHON)

15.10.2023 மற்றும் 06.10.2024 செங்கல்பட்டில் 3 பிரிவுகளில் சைக்ளோத்தான் போட்டிகள் நடைபெற்றன.

அறிஞர் அண்ணா மாரத்தான் போட்டி

இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்த்திடும் நோக்கில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ரூ.38.00 இலட்சத்தில் 07.10.2023 அன்று மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப்போட்டிகள் நடத்தப்பட்டன.

அண்ணா மிதிவண்டிப் போட்டி

அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டிகளுக்கு வழங்கப்படும் நிதி ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ. 38.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு 15.09.2022 அன்று வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

2023-ஆம் ஆண்டு இப்போட்டி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 3 வயது பிரிவுகளில் 14.10.2023 அன்று நடத்தி முடிக்கப்பட்டது.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம்

(TASCON 2023)

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (TASCon 2023) 07.11.2023 மற்றும் 08.11.2023 அன்று சென்னை தாஜ் கோரமண்டலில் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

தந்தை பெரியார் நினைவு கருத்தரங்கம்

விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையில் கருத்துகளைப் பரிமாற தந்தை பெரியார் நினைவுச் சொற்பொழிவு ஆண்டு ஆண்டுதோறும், ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்படுகிறது.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்-2023

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்- 2023 போட்டி ரூ.1.77 கோடி செலவில் இந்தியா, நார்வே, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து நாடுகளில் 8 வீரர்களுடன் நடத்தப்பட்டது.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்-2024

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் சதுரங்க அறக்கட்டளையும் இணைந்து 05.11.2024 முதல் 11.11.2024 வரை சர்வதேச சதுரங்கப் போட்டி நடத்தின.

சதுரங்கப் போட்டி 2024ல் 8 இந்திய கிராண்ட் மாஸ்டர்கள் மற்றும் 8 சர்வதேச கிராண்ட் மாஸ்டர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகள் ரூ.2.61 கோடி செலவில் நடத்தப்பட்டு பரிசுத் தொகை ரூ. 70.00 இலட்சம் வழங்கப்பட்டது.

சென்னை ஃபார்முலா -4 ரேஸ்ஸிங் சர்க்கியூட் 2024

30.08.2024 – 01.09.2024 வரை 3.7 கி.மீ, சுற்றுவட்டத்தில், இப்போட்டியில், ரூ.40 கோடி செலவில் நடத்தப்பட்டது.

தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப்-2024

11.11.2024 முதல் 13.11.2024 வரை இப்போட்டிகள் ரூ.2.36 கோடி செலவில் நடத்தப்பட்டது.

76 ஆவது தேசிய தடகள சைக்கிள் ஓட்டுதல் சாம்பியன்ஷிப்-2024

15.11.2024- 19.11.2024, வரை இப்போட்டிகள் ரூ.75 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி

5 ஆவது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2022-யில் 288 வீரர்கள் பங்கேற்று, 52 பதக்கங்களுடன் தமிழ்நாடு 8 ஆவது இடம் பெற்றது.

6 ஆவது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 ரூ.189.94 கோடி செலவில் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது, இதில் 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு 2வது இடம்பெற்றது.

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள் 2025

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுகள் 2025 கலந்துகொள்ள ரூ. 7.5 இலட்சம் நிதி உதவி தமிழ்நாடு வீரர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு 5 ஆவது இடத்தைப் பிடித்தது.

ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி

மூன்று ஆண்டுகளுக்கு ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆடவர் டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக ஆண்டுக்கு ரூ.1.00 கோடி வீதம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation)

அரசு மற்றும் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த,'தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது.

விளையாட்டு வீரர்களுக்கான உபகரணங்கள் செலவுகள் மற்றும் மருத்துவ செலவுக்கு ரூ.17.31 கோடி வழங்கப்பட்டது.

திறமையான விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள்

சிலம்பம் விளையாட்டு 3% விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்பட்டது.

சர்வதேச போட்டி மற்றும் பாரா ஒலிம்பிக் தேசிய போட்டிகளில் பதக்கங்களை வென்ற 104 விளையாட்டு வீரர்கள் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசு துறைகளில் நியமிக்கப்பட்டனர்.

நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

நலிவடைந்த சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.3,000இல் இருந்து ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டு. 74 வீரர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

விளையாட்டு விடுதி

27 விளையாட்டு விடுதிகள், பள்ளி மாணவர்களுக்காக 6 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான 6 சிறப்பு விளையாட்டு விடுதிகள் மாநிலத்தில் செயல்பட்டு, 2,600 மாணவர்கள் பயன்.

அறிவியல் மதிப்பீடு

விளையாட்டு விடுதி மாணவர்களுக்கான உடற்தகுதி மற்றும் செயல்திறன் குறித்த அறிவியல் அளவுருக்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

முதற் கட்டமாக, சென்னையில் உள்ள விடுதி மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

விளையாட்டு அறிவியல் மையங்கள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 18.02.2024 அன்று மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் (ISSC) நிறுவியுள்ளது.

இந்த மையம் விளையாட்டு காயங்களைத் தடுப்பது, மறுவாழ்வு அளிப்பது மற்றும் வீரர்களின் உடல் தகுதியை மீட்டெடுப்பதை உதவுகிறது. மதுரையைத் தவிர, நீலகிரியில் ஒரு மலை மேலிட பயிற்சி மையம் (HATC) நிறுவப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் விளையாட்டு அறிவியல் மையத்திற்கு உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.3.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இளைய உலக செஸ் சாம்பியனுக்கு விருது

இளைய உலக செஸ் சாம்பியனான டி.குகேஷ், 2024 ஆம் ஆண்டிற்கான கேல் ரத்னா விருதைப் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கான அர்ஜுனா விருது

2024 ஆம் ஆண்டிற்கான அர்ஜுனா விருது 4 தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டது.

38 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு 24 தங்கம் 30 வெள்ளி மற்றும் 30 வெண்கலப் பதக்கங்களுடன் 6 ஆவது இடத்தைப் பிடித்தது.

முதலமைச்சர் கோப்பை திறமையாளர்களுக்கான பயிற்சி முகாம்

முதலமைச்சர் கோப்பை 2024 இல் அடையாளம் காணப்பட்ட திறமையாளர்களுக்கான தீவிர பயிற்சி முகாம் 08.02.2025 முதல் 11.02.2025 வரை சென்னை JNS இல் தடகளம், ஜூடோ, குத்துச்சண்டை பிரிவுகளில் நடத்தப்பட்டது. இதில் ஆண்கள்-30, பெண்கள்-32 பங்கேற்றனர்.

ஆடுகளம் தகவல் மையம் (உதவி மையம்)

ஆடுகளம் தகவல் மையம் 12.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தகவல் வழங்கி சேவை செய்கிறது.

தமிழ்நாடு விளையாட்டு ஆடுகளம் செயலி

TNSPORTS ஆடுகளம் செயலி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உருவாக்கப்பட்ட அதிகாரப்பூர்வ கைபேசி செயலி, விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், பொதுமக்கள், பயிற்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான விரிவான தளமாக செயல்படுகிறது.

மாநில விளையாட்டு சங்கங்களுக்கு நிதி உதவி

மாநில விளையாட்டு சங்கங்களுக்கு நிதி உதவி ரூ.3.31 கோடியிலிருந்து ரூ.4.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

விளையாட்டு சீருடை, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சேவை கட்டணங்கள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் உள்ள விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2,600 ஆகவும், உணவுப்படி ரூ.3,50 ஆகவும், சீருடைப்படி ரூ.6,000 ஆகவும், உபகரண மானியங்கள் ரூ.2,000 ஆகவும் உயர்வு செய்து இதற்கான செலவுத்தொகை ரூ. 92.82 இலட்சத்திலிருந்து ரூ.1.74 கோடியாக உயர்த்தப்பட்டது.

பெண்களுக்கான விளையாட்டு விடுதி (SHE)

வேலூர் மாவட்டம், காட்பாடியில் பெண்களுக்கான விளையாட்டு விடுதி (SHE) அமைப்பதற்காக அரசு ரூ.69.00 இலட்சத்தை வழங்கியுள்ளது.

மலைவாழ் மாணவர்களுக்கான தினசரி பயிற்சி திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலைவாழ் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த தினசரி பயிற்சி திட்டத்தை நடத்துவதற்கும், உலக திறனாளர்கள் கண்டறிவதற்கான திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பதற்கும் அரசு ரூ.25.00 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது.

மின்-ஆளுமை முயற்சிகள்

19.02.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதள சேவைகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட வலைத்தளத்தை தொடங்கி வைத்தார்.

தேசிய மாணவர் படை

குடியரசு தின முகாம்

2023 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில், தமிழ்நாடு இயக்குநரகம் இரண்டாவது இடம் பெற்றது.

2024 ஆம் ஆண்டில், தமிழ்நாடு இயக்குநரகம் ஒட்டுமொத்தமாக மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

2025 ஆம் ஆண்டில், தமிழ்நாடு இயக்குநரகம் 03 தங்கம், 02 வெள்ளி பதக்கங்களுடன் RDC 2025 இல் 3 நிகழ்வுகளில் "சிறந்த NCC இயக்குநரகம்" என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அகில இந்திய விளையாட்டு துப்பாக்கி சுடும் போட்டி & ஜி.வி. மாவ்லங்கார் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப்

அகில இந்திய துப்பாக்கிச் சூடு போட்டி-2022 இல் தமிழ்நாடு இயக்குநரகம் 04 தங்கம், 02 வெள்ளி மற்றும் 01 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. மேலும், அகில இந்திய துப்பாக்கிச் சூடு போட்டி- 2024 இல் தமிழ்நாடு இயக்குநரகம் 03 தங்கம், 03 வெள்ளி மற்றும் 03 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளது.

தமிழ்நாடு தேசிய மாணவர் படை அகில இந்திய ஜி.வி. மாவ்லங்கார் துப்பாக்கிச் சூடு சாம்பியன்ஷிப் -2022 இல் 02 தங்கப் பதக்கங்களை வென்றது மற்றும் 32வது அகில இந்திய ஜி.வி. மாவ்லங்கார் துப்பாக்கிச் சூடு சாம்பியன்ஷிப் -2023 இல் 02 தங்கம், 02 வெள்ளி மற்றும் 04 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

33 ஆவது அகில இந்திய ஜி.வி. மாவ்லங்கார் துப்பாக்கிச் சூடு சாம்பியன்ஷிப் -2024 இல் 02 தங்கம், 01 வெள்ளி மற்றும் 01 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

47 ஆவது தமிழ்நாடு துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப்-2022 இல் தமிழ்நாடு தேசிய மாணவர் படை 16 தங்கம், 02 வெள்ளி மற்றும் 04 வெண்கலப் பதக்கங்களைப் வென்றது. மேலும் 48 ஆவது தமிழ்நாடு துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப்-2023 இல், தமிழ்நாடு தேசிய மாணவர் படை 76 பதக்கங்களை (33 தங்கம், 28 வெள்ளி & 15 வெண்கலம்) வென்று சிறந்து விளங்கினர்.

49 ஆவது தமிழ்நாடு துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப்-2024 இல் 14 தங்கம், 19 வெள்ளி மற்றும் 33 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

அகில இந்திய வாயு சைனிக் முகாம் (AIVSC)

கடந்த நான்கு ஆண்டுகளில் 2021-2024 தமிழ்நாடு இயக்குநரகம் மொத்தம் 11 தங்கம், 02 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

அகில இந்திய நவ் சைனிக் முகாம் (AINSC)

கடந்த நான்கு ஆண்டுகளில் 2021-2024 தமிழ்நாடு இயக்குநரகத்தின் கடற்படைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணவர்கள் 04 தங்கம், 05 வெள்ளிப் பதக்கங்களையும், 10 வெண்கலப் பதக்கங்களையும் வென்றது.

பாய்மரப் படகுப் போட்டி

2022-ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயக்குநரகம் 01 தங்கம் மற்றும் 01 வெண்கலப் பதக்கத்துடன் முதல் இடத்தையும், 2023-ஆம் ஆண்டில் ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளது.

இளைஞர் பரிமாற்றத் திட்டம் (YEP)

2023 இன்கீழ், தமிழ்நாடு இயக்குநரகத்திலிருந்து 08 தேசிய மாணவர் படை மாணவர்கள் ஐக்கிய இராச்சியம், பங்களாதேஷ், வியட்நாம், ரஷ்யா, பூட்டான் மற்றும் நேபாளம் சென்றனர்.

2024 இன்கீழ், தமிழ்நாடு இயக்குநரகத்திலிருந்து 09 தேசிய மாணவர் படை மாணவர்கள் - தேர்ந்தெடுக்கப்பட்டு, ஐக்கிய இராச்சியம், பங்களாதேஷ், வியட்நாம், ரஷ்யா, பூட்டான் மற்றும் நேபாளம் போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்றனர்.

2025 இன்கீழ், தமிழ்நாடு இயக்குநரகத்திலிருந்து 06 தேசிய மாணவர் படை மாணவர்கள் வியட்நாம், மாலத்தீவு, கிர்கிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் நேபாளம் சென்றனர்.

சர்வதேச யோகா தினம் - 21 ஜூன்

தமிழ்நாடு தேசிய மாணவர் படையின் 54,548 மாணவர்கள் மற்றும் 1,364 முன்னாள் மாணவர்கள், 55,887

மாணவர்கள், 49,597 மாணவர்கள் முறையே 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சர்வதேச யோகா தினத்தில் பங்கேற்றனர்.

பாதுகாப்புப் படைகளில் தேசிய மாணவர் படை மாணவர்களின் சேர்க்கை

கடந்த நான்கு ஆண்டுகளில் 2021-2024 வரை தமிழ்நாடு இயக்குநரகத்திலிருந்து 40 தேசிய மாணவர் படை மாணவர்கள் பாதுகாப்புப் படைகளில் அதிகாரிகளாகவும், 725 மாணவர்கள் இதர பதவிகளிலும் சேர்ந்துள்ளனர்.

சமூக சேவை நடவடிக்கைகள்

2021-2022 ஆம் ஆண்டில் 24,140 தேசிய மாணவர்படை மாணவர்கள் ஃபிட் இந்தியா ஓட்டத்தில் பங்கேற்றனர்.

2022-2023 ஆம் ஆண்டில், பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளில் 17,632 தேசிய மாணவர் படை மாணவர்கள் பங்கேற்றனர்.

2023-2024 ஆம் ஆண்டில் 1,460 மாணவர்கள் இரத்த தான முகாமிலும், 1,054 மாணவர்கள் உலக நதி தினத்திலும் பங்கேற்றனர்.

2024-2025 ஆம் ஆண்டில் 2,838 மாணவர்கள் ஒரு மாணக்கர் ஒரு மரம் என்ற நிகழ்வில் பங்கேற்றனர். 1,939 மாணவர்கள் இரத்ததான முகாமிலும் பங்கேற்றனர்.

அறிவிப்புகள்

2022-2023ல் மாணவர் படை மாணவர்களுக்கான சிற்றுண்டி படித்தொகை ரூ.10/-லிருந்து ரூ.25/- ஆக உயர்வு செய்து ரூ.8.43 கோடி வழங்கப்பட்டது.

50 மீட்டர் துப்பாக்கி சுடும் மைதானம் அமைக்க ரூ.1.10 கோடி வழங்கப்பட்டது.

குடியரசு தின முகாம் மற்றும் மத்திய அரசு முகாம்களுக்கு ஆண்டுக்கு ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி நிதி உயர்வு செய்து வழங்கப்பட்டது.

மதுரை மாவட்டம் இடையப்பட்டியில் தேசிய மாணவர் படை பயிற்சி மையத்தில் உள்கட்டமைப்புகளுக்காக ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

செங்கல்பட்டு, மதுராந்தகம் தாலுகா, நீர்பெயர் கிராமத்தில் அமைந்துள்ள நிரந்தர தேசிய மாணவர் படை பயிற்சி முகாமுக்கு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.1 கோடி வழங்கப்பட்டது.

திருச்சி, ஓலையூரில் தேசிய மாணவர் படை நிரந்தரப் பயிற்சி மையம் அமைக்க முதல் கட்டமாக ரூ.1 கோடி நிதி வழங்கப்பட்டது.

தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பயன்பாட்டிற்காக 30 Peep Sight Air Rifles கொள்முதல் செய்ய ரூ.28.24 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு முகாம்களில் சிறந்து விளங்கும் தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.14 இலட்சத்திலிருந்து ரூ.28 இலட்சமாக உயர்த்தப்படுள்ளது.

அரசு மானியங்கள்

13 விளையாட்டு துப்பாக்கிகள் கொள்முதல் செய்ய ரூ.58.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளில் தேசிய மாணவர் படையை விரிவுபடுத்துவதற்காக ரூ.72.98 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

12,000 சுற்றுகள் 0.22mm (Eley Club) மற்றும் 8,400 (Eley Tenex) துப்பாக்கி குண்டுகள் கொள்முதல் செய்ய ரூ.7 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிலிருந்து பெருங்கடல் சாகசப் பயணத்திற்கான உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4.50 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டது.

AAPDA மித்ரா திட்டத்திற்கு 14 நாள்கள் முகாம்களுக்கு ரூ.7.12 இலட்சத்திலிருந்து நிதி வழங்கப்பட்டது.

சென்னை, தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் துப்பாக்கிச் சூடு குழுவினருக்கான கிட்டிங் பொருள்கள் கொள்முதல் செய்ய நிதி ரூ.4 இலட்சம் உயர்வு செய்யப்பட்டது.

2024 ஆம் ஆண்டு முதல் முதலமைச்சரின் பேரணி மற்றும் மாநில பாராட்டு விழா மற்றும் குடியரசு தினப் படையணி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாக நிதி உயர்த்தப்பட்டது.

2024 முதல் குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொள்ளும் அனைத்து தேசிய மாணவர் படை மாணவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சென்னையிலிருந்து புது தில்லிக்கு விமானப் பயண வசதியை மேம்படுத்தி ரூ.27.67 இலட்சம் அனுமதி.

தேசிய மாணவர் படை அதிகாரிகளுக்கான திருத்தப்பட்ட மதிப்பூதிய விகிதங்களை அதிகரிக்க தமிழ்நாடு அரசு ரூ.44,09,520 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் தேசிய மாணவர் படை அதிகாரிகளின் விரிவாக்கத்திற்காக தமிழ்நாடு அரசு ரூ.48,58,000 தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் தேசிய மாணவர் படை அதிகாரிகளுக்கு முகாம்களின்போது 25 சதவிகிதம் மாநில பங்காக உணவு படிகள் தமிழ்நாடு அரசு ரூ.22,52,000 தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ராயல் மெட்ராஸ் யாச்சிங் கிளப் அசோசியேஷன் ஆஃப் இந்தியாவுடன் இணைந்து ஏழு நாள்கள் சென்னையிலிருந்து நாகப்பட்டினம் கடல் பயணம் சென்று திரும்ப தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தொகையை தமிழ்நாடு அரசு ரூ.18,06,500 அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டு நலப்பணித் திட்டம் சாதனைகள்

குடியரசு தின அணிவகுப்பு

2023-2024 ஆம் ஆண்டில் குடியரசு தினவிழா புதுடெல்லியில் தமிழ்நாடு அரசு சார்பாக 13 விருப்பார்வ தொண்டர்கள் மற்றும் 1 திட்ட அலுவலர் பங்கேற்றனர்.

26.01.2024 அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் 140 விருப்பார்வ தொண்டர்கள் 10 திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2024-2025 ஆம் ஆண்டில் குடியரசு தின விழா புதுடெல்லியில் தமிழ்நாடு அரசு சார்பாக 12 தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் 1திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

26.01.2025 அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் 118 தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் 13 திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில சாகச முகாம்

நாட்டுநலப்பணித் திட்ட மாநில சாகச முகாம் 2022, 2023இல் 300 மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

நாட்டு நலப்பணித்திட்ட மாநில சாகச முகாம் 2023-2024-இல் 200 மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

மாநில இளைஞர் விழா

2023 ஆம் ஆண்டு சென்னையில் முதன்முறையாக நாட்டுநலப்பணித் திட்ட மாநில இளைஞர் விழா கலைவாணர் அரங்கம் மற்றும் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. 10 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 18 திட்ட அலுவலர்கள், 200 தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

2025 ஆம் ஆண்டில் சென்னையில் நாட்டு நலப்பணித்திட்ட மாநில இளைஞர் விழா சென்னை, வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இதில் 5 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் 10 திட்ட அலுவலர்கள், 230 தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு கோடி பனை விதைகள் நடும் திட்டம்

2022 - 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 மாவட்டங்களில் 1,076 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கோடி பனை விதைகள் நடப்பட்டன. இதில் 1,00,000 மாணவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு உலக சாதனை விருது பெற்றது.

2023–2024 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம். கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து 38 மாவட்டங்களிலும் உள்ள நீர்நிலைகள் மற்றும் காவிரிக் கரையில் பனை விதைகள் நடும் நெடும் பணிகளில் 18,225 தன்னார்வத் தொண்டர்கள் கலந்து கொண்டு சுமார் 50,000 மரக்கன்றுகளை நட்டனர்.

தேசிய அளவிலான நாட்டு நலப்பணித்திட்ட விருதுகள்

2019–2020: நாட்டு நலப்பணித்திட்டத்தின் தேசிய விருது காமராஜ் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்தது.

2020–2021: நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளருக்கான தேசிய விருது முனைவர் ஆர். ரமேஷ், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

2019–2020: நாட்டு நலப்பணித்திட்ட அலுவலருக்கான தேசிய விருது முனைவர் A. தேவராஜ், காமராஜ் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

2019–2020: நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலருக்கான தேசிய விருது செல்வன் C. ஐய்யனார், பச்சையப்பன் கல்லூரி, சென்னை பல்கலைக்கழகம், சென்னை மற்றும் செல்வன் G.V.நிதிஷ், ஜெருசேலம் பொறியியல் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

2020–2021: நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளருக்கான தேசிய விருது செல்வி ஆர். சுவேஷிகா, பாவை தொழில்நுட்ப கல்லூரி, (அண்ணா பல்கலைக்கழகம்), நாமக்கல்.

மாநில அளவிலான நாட்டு நலப்பணித்திட்ட விருதுகள்

2021–2022 ஆம் ஆண்டிற்கு, 5 திட்ட அலுவலர்கள் மற்றும் 4 தன்னார்வலர்கள் மாநில NSS விருது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு, 7 திட்ட அலுவலர்கள் மற்றும் 4 தன்னார்வலர்கள் மாநில NSS விருது.

நாட்டு நலப்பணித் திட்ட விமான கட்டணம்

2025 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கும் 13 ஆவது நாட்டு நலப்பணித் திட்ட குழுவினருக்கான விமானக் கட்டணமாக ரூ.1.95 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

ரூ. 13.33 கோடி செலவில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம் 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.12.60 கோடி செலவில் மேசைப்பந்து பயிற்சிக்கூடம் 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.14.59 கோடி செலவில் 400 மாணவர்களுக்கு வசதி கொண்ட விடுதி 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.13.12 கோடி செலவில் முதன்மை உயிர் இந்திரவியல் ஆய்வகம் 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.1.60 கோடி செலவில் பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம் 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.51.72 இலட்சத்தில் உணவுக்கூடம் மற்றும் சமையலறைக்கூடம் 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

ரூ.73.00 இலட்சம் செலவில் வாகன நிறுத்தும் வசதி 14.03.2022 அன்று திறக்கப்பட்டது.

சென்னை, மேலக்கோட்டையூரில் ரூ.583.50 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டன.

தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான மைக்ரோலைட் பறக்கும் பயிற்சிக்கு ரூ.2.98 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

03.01.2023 அன்று 400 மீட்டர் ஓடுதளம் மற்றும் பல்நோக்கு பயிற்சிக் கூடம் திறக்கப்பட்டது.

பெண்கள் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்ட ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 03.01.2023 அன்று கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கட்டடங்கள்

ரூ.3.50 கோடி செலவில் 12 ஆசிரியர் குடியிருப்புகள் கட்டப்பட்டன.

ரூ.5.10 கோடி செலவில் பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் கட்டப்பட்டது.

ரூ.7.00 கோடி செலவில் செயற்கை தடகளப் பாதை அமைக்கப்பட்டது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

குறுகிய காலப் பயிற்சி

கடந்த நான்கு ஆண்டுகளில் 30-க்கும் மேற்பட்ட துறைகளில் 2,59,072 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தொடர்பான குறுகிய கால திறன் பயிற்சியை வழங்கியுள்ளது.

முன்கற்றல் அங்கீகாரம் (Recognition of Prior Learning)

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல முகாம்களை நடத்தி கட்டுமானத் துறை, தளவாடம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME), தோல் மற்றும் நூல் தொழில் துறைகள் ஆகியவற்றில் வேலை செய்யும் 1,13,940 தொழிலாளர்களுக்கு முன் கற்றல் அங்கீகாரம் (RPL) சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு:

பேராசிரியர்கள் பயிற்சி திட்டம்: மேற்கு ஆஸ்திரேலிய தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (WA TVET) உடன் இணைந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் இருந்து 15 பேராசிரியர்களை அனுப்பியது. இப்பேராசிரியர்கள் திறன் மேம்பாட்டுக் கழக பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு கருவிகள் உருவாக்கும் பணியினை மேற்கொள்கின்றனர்.

பாடநெறிகளை நிலைப்படுத்தல்: பொதுக் கொள்கை விதிமுறைகளைப் பின்பற்றி 1749 பாடநெறிகளின் பெயர்கள், கால அளவு, தகுதி அளவுகோல்கள் மற்றும் வகைப்பாடுகளை முழுமையாக மதிப்பீடு செய்து நிலைப்படுத்தி முடிக்கப்பட்டது.

மதிப்பீட்டுப் பிரிவு

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மதிப்பீட்டு பிரிவு குறுகிய கால திறன் பயிற்சி (STT) திட்டத்தின்கீழ் 1100 பயனாளர்கள், சீரமைக்கப்பட்ட குறுகியகால திறன் திட்டத்தின்கீழ் 963 பயனாளர்கள், முன் கற்றல் அங்கீகார (RPL) திட்டத்தின்கீழ் 844 பயனாளர்கள் ஆகியோருக்கு மதிப்பீடு நடத்துவதில் முக்கியமான முன்னேற்றங்களைச் சாதித்துள்ளது.

சான்றளிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்களை குழுவாக அமைத்து மற்றும் மதிப்பீட்டு அமைப்பை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைப்பதன் மூலம் 2,907 பயனாளர்களின் மதிப்பீடுகள் நடத்தப்பட்டன.

சமூக நல இல்லங்களில் வசிப்பவர்கள் திறன் பயிற்சி

திறன் பயிற்சி தாம்பரம், சென்னை, கடலூர், சிவகங்கை, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகவல் தொழில்நுட்ப திறன்களுடன் சேர்த்து ஆங்கிலத்தில் தகவல் தொடர்பு மற்றும் அலுவலக வரவேற்பாளர் ஆகிய பாடநெறிகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதர பயிற்சிகள்

5,732 தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், 2,552 முகாம்வாழ் இலங்கை தமிழர்கள், 347 பழங்குடி இளைஞர்கள், 199 மாற்றுத் திறனாளிகள், 1,255 தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வசிக்கும் இளைஞர்கள், 167 முன்னாள் ராணுவ வீரர்கள், 173 மீனவர்கள், 1210 கலைஞர்களுக்கு கலைஞர் கைவினை திட்டத்தின் கீழும், 150 மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கு மூன்று சக்கர வாகன ஓட்டுதல் பயிற்சியும், 164

பெண்களுக்கு மோட்டார் வாகன ஓட்டுநர் பயிற்சியும், 270 நபர்களுக்கு பல்வேறு கைவினை தொழிற்பயிற்சிகளும், 3,671 நபர்களுக்கு குடிநீர் குழாய்களில் திறன் அடிப்படையிலான சிறுபழுது சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பயிற்சியும் என மொத்தம் 15,890 நபர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

வடசென்னை வளர்ச்சித் திட்டம்

திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு முகாமில் வட சென்னை பகுதியைச் சார்ந்த 1,200 பேர் பங்கேற்றனர். அவர்களில் 297 பேர் ஆட் சேர்ப்பு, பயிற்சி மற்றும் பணியமர்த்தல் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசுப் பள்ளி 12ஆம் வகுப்புப் தொழிற்பயிற்சி மாணவர்களின் செயல்முறைத் திறன்களை மேம்படுத்தல்

2,693, 12ஆம் வகுப்பு தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு செயல்முறை திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்லூரி விடுதி மாணவர்களுக்கான ஆங்கிலம் பேசுதல் மற்றும் நற்பண்பு மேம்பாடு திறன்பயிற்சி

இத்திட்டத்தின்கீழ் ஆங்கிலம் பேசுதல் மற்றும் நற்பண்பு மேம்பாடு திறன்பயிற்சி 2,59,072 மாணவர்களுக்கு 2021-2022 முதல் வழங்கப்பட்டுள்ளது.

நான் முதல்வன்

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட நான் முதல்வன் திட்டம், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மாற்றியமைக்கக்கூடிய ஒரு மாபெரும் முயற்சியாகும்.

பொறியியல் கல்லூரிகளில் நான் முதல்வன்

41 கட்டாய திறன் பயிற்சிகள் மொத்தம் 10,91,022 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு 2022-2023ம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது.

18.12.2024 அன்று கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரிகளில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 29 அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ. 30.17 கோடி மதிப்பீட்டில் திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் “நான் முதல்வன்” திட்டம்

2022-2023ம் கல்வியாண்டு முதல் "நான் முதல்வன்" திட்டம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு இது வரை 25,63,235 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பாலிடெக்னிக் கல்லூரிகளில் “நான் முதல்வன்” திட்டம்

அத்திட்டம் பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. 2023-2024 முதல் இதுவரை 8,242 விரிவுரையாளர்களும், 3,77,235 மாணவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) நான் முதல்வன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1,07,341 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு திறன் சார்ந்த அடிப்படை ஆங்கிலப் பாடப் பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர்

மொத்தமாக, இத்திட்டத்தின்கீழ் 41,38,833 மாணவர்களும் 1,00,960 விரிவுரையாளர்களும் பயிற்சி பெற்றுள்ளர்.

நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம் செயல்பாடுகள்:

கடந்த நான்கு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பெற்ற மொத்தம் 2,60,682 மாணவர்களில் 63,949 மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

உயர்கல்வி படிப்பதற்குப் பாலம் அமைக்கும் உயர்வுக்குப் படி (பள்ளிகள்) 2023 மற்றும் 2024

"நான் முதல்வன் உயர்வுக்குப் படி" திட்டத்தின்கீழ் 77,752 மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உயர்கல்விப் பாதைகளுக்கு வெளிச்சமிடும் கல்லூரிக் கனவு 2024

இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் நடைபெற்ற கல்லூரிக்கனவு நிகழ்ச்சி மூலமாகவும், அரசு பள்ளிகளில் நடைபெற்ற உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மூலமாகவும் 1,12,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

நான் முதல்வன் நிரல் திருவிழா:

நிரல் திருவிழா 1.0ல் (Niral Thiruvizha 1.0) மொத்தம் 8,486 குழுக்கள் பங்கேற்றன. அவர்களில் சிறந்த 1,000 திட்டங்கள் மேலும் வளர்ச்சி பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 அணிகளுக்கும்,தங்களுடைய திட்டங்களை செயல்படுத்தும் விதமாக ஒவ்வொரு அணிக்கும் ரூ.10,000 வழங்கப்பட்டது.

இறுதியாக, நிபுணர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறந்த 50 திட்டங்களுக்கு தலா 1,00,000 (Innovation Voucher Fund) ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இதில் 43 அணிகள் தங்கள் நிறுவனங்களை தொடங்கும் பணிகளை வெற்றிகரமாகத் தொடக்கியுள்ளன.

இந்தியத் திறன்போட்டி 2021 (India Skills 2021):

தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் 84 மாணவர்கள் மண்டல அளவிலான போட்டியில் பங்கேற்றனர், இதில் 36 பேர் இந்திய திறன் போட்டி 2021க்கு முன்னேறினர், மேலும் 23 மாணவர்கள் தேசிய அளவிலான போட்டியில் பதக்கங்களை வென்றனர்.

இந்தியத் திறன்போட்டி 2024 (India Skills 2024):

தமிழ்நாட்டில் இருந்து 87 போட்டியாளர்கள் இந்தியா திறன் போட்டியில் கலந்து கொண்டு 6 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள், 9 வெண்கலப் பதக்கங்கள், 17 சிறப்புப் பதக்கங்கள் என மொத்தம் 40 பதக்கங்கள் வென்று தேசிய அளவில் 3 ஆவது இடத்தை பெற்றனர்.

உலகத் திறன்போட்டி 2024 (World Skills 2024):

உலகத் திறன் போட்டி 2024, செப்டம்பர் 10 முதல் 15 வரை பிரான்ஸ், லியோன் நகரத்தில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 போட்டியாளர்கள் இந்தியா சார்பாக பங்கு பெற்றனர்.

Pilot Phase Outcomes (2024)

முதல் முன்னெடுப்பாக பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் தர்ஹம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 100 மாணவர்களுக்கு இணையதளம் மூலமாக செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையில் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்களுள் சிறந்த 25 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு தர்ஹம் பல்கலைக்கழகத்தில் நேரடி பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களில் 13 மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

அடுத்த கட்டமாக, இத்திட்டத்தின்கீழ், ஜப்பான் நாட்டில்தமிழ்நாட்டைச்சார்ந்த 15 மாணவிகள் தொழில்முறை பயிற்சி மேற்கொள்ளப்பட்டு பணிநியமனம் பெற்றுள்ளனர்.

நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் பிரிவு

ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தயாராகும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கான தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகை மற்றும் உறைவிடப் பயிற்சித் திட்டங்கள்.

யு. பி. எஸ். சி (UPSC) குடிமைப் பணித்தேர்வு – 2024

இத்திட்டத்தின்கீழ், 1,000 குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள், குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு அக்டோபர் 2023 முதல், 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படுகிறது.

இதுவரை 1,288 மாணவர்கள் 2024- ஆம் ஆண்டு குடிமைப் பணி முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தலா ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது.

குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 39 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் ஆவர்.

தங்கும் வசதியுடன் கூடிய உறைவிட பயிற்சி 2024-2025

எஸ். எஸ். சி (SSC) மற்றும் ரயில்வே (RRB), தேர்வுகளுக்கான பயிற்சிக்கு, 300 மாணவர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டனர். வங்கிப் பணிதேர்வுகளுக்கான பயிற்சிக்கு 700 மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 15.09.2023 அன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1.15 கோடி மகளிரின் வங்கிக் கணக்கில் மாதந்தோறும் ரூ.1,000 நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.8,123.83 கோடியும், 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.13,721.50 கோடியும் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110-இன்கீழ், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற முக்கிய திட்டத்தினை அறிவித்தார்கள். இதிட்டத்தின்கீழ், இதுவரை 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் உள்ள திட்டங்களின்கீழ் ரூ.14,520.51 கோடி மதிப்பீட்டில் 1,266 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

ஊரகப் பகுதிகளில் உள்ள 7,58,489 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 59,616 சுய உதவிக் குழுக்கள் 2021-2022 முதல் 2023-2024 வரை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குழு அமைப்பதில் 100% தன்னிறைவு அடைந்ததால் 2024-2025ம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படவில்லை.

சுய உதவிக் குழுக்களுக்கு 2021-2022 முதல் 2024-2025 வரை சுழல்நிதியாக (RF) ரூ.67.96 கோடி, சமுதாய முதலீட்டு நிதியாக (CIF) ரூ.801.62 கோடி மற்றும் நலிவுநிலை குறைப்பு நிதியாக (VRF) ரூ.19.90 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

நிதி உள்ளாக்கம்

17,33,696 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக ரூ.10,52,35.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத் திட்டங்கள்

பண்ணை வாழ்வாதாரம்

பல்வேறு விவசாய பயிர்களான (பருப்பு வகைகள், சிறுதானியங்கள், நெல் மற்றும் எண்ணெய் வித்து, பயிர்கள் ஆகியவற்றில்) 100 விதை உற்பத்தி தொகுப்புகளும் பிரத்தியேகமாக 100 விதை உற்பத்தி தொகுப்புகள் சிறுதானிய பயிர்களுக்காகவும் மற்றும் பருப்பு வகைபயிர்கள், எண்ணெய் வித்து பயிர்களில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி செய்வதற்காக பிரத்தியேகமாக 100 தொகுப்புகளும் 1,680 பெண் விவசாயிகளைக் கொண்டு ரூ.600 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

6 இலட்சம் கிராமப்புற வீடுகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்க முருங்கை மற்றும் பப்பாளி நாற்றுகளை எம்.ஜி.என்.ஆர்.ஜி.எஸ் (MGNREGS) ஒருங்கிணைப்பு மூலம் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன.

50 இயற்கை வேளாண் தொகுப்புகள் ரூ.300 இலட்சம் செலவில் அமைக்கப் பதிவுசெய்யப்பட்டு அவர்கள் தங்களின் இயற்கை விவசாய சாகுபடி பொருள்களை விற்பனை செய்வதற்கான சாத்தியகூறு சான்றிதழ்களும் பெற்றுள்ளன.

185 ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள் ரூ.3,330 இலட்சம் நிதி ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ளன, பெண் விவசாயிகளுக்கு தங்கள் விவசாய நடவடிக்கைகளை ஒரு தொகுப்பு அணுகுமுறையில் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்க ஆதரவளிக்கப்பட்டு வருகின்றன.

6,135 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் கூடுதல் வருமானத்தை ஈட்டவும் ரூ.12.270 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளன.

140 சிறுதானிய உற்பத்தி தொகுப்புகள் ரூ.140 இலட்சம் செலவில் பல்வேறு மதிப்பு சேர்க்கப்பட்ட சிறுதானிய தயாரிப்புகளின் உற்பத்தியை மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ளன.

DRDA கட்டிய கொட்டகைகளில் ஐஓடி (இன்டர்நெட் ஆஃப் திங்ஸ்) மூலம் காளான் உற்பத்தியை மேற்கொள்வதில் SHG உறுப்பினர்களை ஆதரிப்பதற்காக 94 காளான் சாகுபடி அலகுகள் DRDA உடன் ஒருங்கிணைந்து ரூ.94 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

723 SHG உறுப்பினர்கள் தோட்டக்கலை துறை மூலம் தென்னை நாற்றங்கால் பராமரிப்பு பயிற்சி பெற்றார்கள். பயிற்சி பெற்ற இந்த உறுப்பினர்களைக்கொண்டு 60 தென்னை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டுக் கோழிகளை தொகுப்பு அடிப்படையில் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் வளர்ப்பதை



ஊக்குவிக்கவும் கூடுதல் வருமானம் ஈட்டவும் ரூ.222 இலட்சம் செலவில் 74 கொல்லைப்புறக் கோழித் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

74 ஆடு வளர்ப்பு தொகுப்புகள் ரூ.1480 இலட்சம் செலவில் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் கொத்து அடிப்படையில் உள்ளூர் ஆடு இனங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கவும் கூடுதல் வருமானம் ஈட்டவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட மகரந்தச் சேர்க்கை மூலம் இயற்கை விவசாயத்தை ஆதரிக்கவும், தேன் மற்றும் பிற துணைப் பொருள்களை பிரித்தெடுப்பதன் மூலம் உறுப்பினர்கள் கூடுதல் வருமானம் பெறவும் ரூ.222 இலட்சம் செலவில் 74 தேனீத் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

பண்ணைசாராத வாழ்வாதாரம்:

தொடக்க கிராம தொழில்முனைவோர் திட்டம் (SVEP)

4,457 நிறுவனங்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 1,782.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:

35,559 சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூபாய் 15,195.56 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

248 தொழில் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, சுழல் நிதியாக 620 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

பிரதம மந்திரி சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் (PMFME) 7,665 நிறுவனங்களுக்கு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் விதை மூலதன நிதி (Seed Captial) ரூ.2,969.31 இலட்சம் நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

குறு நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,447 நிறுவனங்களுக்கு ரூ.882.02 இலட்சத்தில் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமுதாய திறன் பள்ளிகள் மூலமாக 29,164 கிராமப்புற இளைஞர்களுக்கு வாழ்வாதார திறன் வளர்ப்பு பயிற்சிகள் ரூ.1,851.76 இலட்சம் விடுவிக்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்:

7,692 சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூபாய் 7,771.49 இலட்சம் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கூடுகை மற்றும் கூட்டாண்மை:

சமூக பொருளாதார விளிம்பு நிலையில் வாழும் நபர்களை கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அவர்களை தேசிய நீரோட்டத்தில் சேர்ப்பதற்காக இதுவரை 81,630 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளன. (முதியோர், ஊனமுற்றோர், திருநங்கைகள், மற்றும் பழங்குடியினர்) இதன் மூலம் 6,41,230 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

கடந்த நான்காண்டில் உருவாக்கப்பட்டுள்ள 22,092 சிறப்பு சுய உதவிக் குழுக்களில் 16,103 குழுக்களுக்கு நிதி ஆதாரத்தை மேம்படுத்திட ரூ.24.15 கோடி சுழல்நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மக்களிடையே ஊட்டச்சத்தின் அவசியத்தை உணர்த்திடவும், இரத்தசோகை தாக்கத்தை குறைக்கும் வகையிலும் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி இரத்த சோகை இல்லா தமிழகம் உருவாக்கும் நோக்கத்தில் 12,525 ஊராட்சிகளிலும், 388 வட்டாரங்களிலும் மற்றும் 37 மாவட்டங்களிலும் உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த பாரம்பரிய உணவு திருவிழாக்களை கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டு வருகிறது.

இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மகளிருக்கு தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தி வீடுகள் தோறும் ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம் அமைத்திட FNHW திட்டத்தில் இருந்து விதைகள் மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

2024–2025 ஆம் ஆண்டில், மனநலத் திட்டம் (MHP) மாநிலம் முழுவதும் சுகாதார துறையின் மாவட்ட மனநல மருத்துவர்களின் ஒருங்கிணைப்புடன் 37 மாவட்டங்களின் 200 வட்டாரங்களில் 6,442 சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் 1.80 இலட்சம் சுய உதவிக்குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் ஆக மொத்தம் 3.60 இலட்சம் மகளிர்க்கு பயிற்சி அளித்து பல்வேறு மனநலப் பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிந்து, சரியான நேரத்தில் குணப்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடும் நோக்கில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் 188 வட்டாரங்களில் உள்ள 6,043 ஊராட்சிகளில் உள்ள 19.89 இலட்சம் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பயிற்சிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

POSH Act, திருமணச் சட்டங்கள், இந்திய அரசியலமைப்பு, பாரதிய நியாய சன்ஹிதா (BNS), POCSO, குழந்தை திருமண தடைச் சட்டம் உள்ளிட்ட 34 வகையான சட்டத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திட மாவட்ட மற்றும் வட்டார அளவில் 35,000 அலுவலர்கள் மற்றும் சமுதாய வள பணியாளர்களுக்கும் ஊராட்சி அளவில் 5.26 இலட்சம் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளிம்பு நிலையிலுள்ள பழங்குடியினர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கையர்களை கண்டறிந்து அவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட அவர்களுக்கு சமூகத்தில் சம வாய்ப்பு அளித்திடும் நோக்கில் சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு நிர்வாகம், நிதி மேலாண்மை, புத்தகப் பராமரிப்பு பயிற்சி வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, அவர்களுக்கு உகந்த தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட வாழ்வாதார நிதியாக ரூபாய் 306.73 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சித் திட்டம் (DDU-GKY)

திறன் வளர்ப்புப் பயிற்சி

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சி திட்டத்தின் மூலம், 18 முதல் 35 வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு ரூ.188.13 கோடி செலவில் 46,144 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, 22,876 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



வேலைவாய்ப்பு முகாம்

224 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ.9.15 கோடி செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 94,358 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற ஏழை மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 67,664 புதிய சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

59,566 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 59.56 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க புதிதாக 2,622 பகுதி அளவிலான மற்றும் 19 நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1,415 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூபாய் 7.08 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)

சுய வேலைவாய்ப்புத் திட்டம் - தனிநபர் (SEP-I)

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 27,837 தனி நபர்களுக்கு தொழில் தொடங்க ரூபாய் 162.86 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் - குழு (SEP-G)

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 17,264 குழுக்களுக்கு தொழில் தொடங்க ரூபாய் 589.21 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) (SEP-BL)

நகர்ப்புறங்களில் செயல்படும் 79,462 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 9,186.04 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)

27,865 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, ரூ.62.15 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

3,512 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 3,235 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.24.26 கோடி தொடக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

1,002 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 760 தொழில் குழுக்களுக்கு ரூ.5.70 கோடி தொடக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு, ரூ.14.68 கோடி தொடக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

2,526 சமுதாய திறன் பள்ளிகள் (CSS) அமைக்கப்பட்டு, அதில் 51,193 இளைஞர்களுக்கு ரூ.19.30 கோடி செலவில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6,000 சமுதாய பண்ணைப் பள்ளிகள் (CFS) அமைக்கப்பட்டு, அதில் 1,82,337 உற்பத்தியாளர்களுக்கு ரூ.51.01 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

12,701 தொழில்முனைவோர்களுக்கு, தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 3.1 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல்

2022-2023 ஆம் ஆண்டுக்கான பொதுப் பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்ட ஆண்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளமைக்கு 2024-2025 ஆம் ஆண்டுக்கான 9,512 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டன. களப்பணி நடைபெற்றுவருகிறது.

2023-2024 ஆம் ஆண்டுக்கான இறுதி மதிப்பீட்டறிக்கை, 2024-2025 ஆண்டுக்கான முதல் மற்றும் இரண்டாம் முன் மதிப்பீட்டறிக்கைகள் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டன.

2023-2024 ஆம் ஆண்டுக்கான 13 பயிர்களுக்கு சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு, 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, 2024-2025 அறுவடை பயிருக்கு 755 கிராமங்கள் தேர்விடப்பட்டுக் களப்பணி நடைபெற்று வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி 8 பயிர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஆண்டறிக்கை வெளியிடப்பட்டது. 2024-2025 ஆம் ஆண்டிற்குப் பயிர் அறுவடை பரிசோதனைக்கு 630 கிராமங்கள் தேர்விடப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் ஆண்டிற்கான சராசரி விளைச்சல் காரிப் சிறப்பு மற்றும் இராபி பருவத்தில் 1,41,372 பரிசோதனைகளுக்கு 34 வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு கணிக்கப்பட்டுக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

2023-2024 ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு 2024-25 ஆண்டுக்குத் தென்னை பயிருக்கு 382 கிராமங்களும் பாக்குப் பயிருக்கு 108 கிராமங்களும் தேர்விடப்பட்டுக் களப்பணி நடைபெற்று வருகிறது.

3,480 டி.ஆர்.எஸ் கிராமங்களில் 9 முக்கியப் பயிர்களின் பரப்பைக் கொண்டு 2023-2024 ஆண்டிற்கான காரீப், இராபி மற்றும் கோடைப்பருவ மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டு ஒன்றிய அரசால் ரூ.110 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-2024 ஆண்டிற்கான 520 மாதிரி கிராமங்களுக்குப் பயிர்பரப்பாய்வு பணி மேற்கொள்ளப்பட்டு பருவம்-I, II மற்றும் III-க்கான அறிக்கைகள் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11 ஆவது வேளாண்மை கணக்கெடுப்பின் முதல் கட்ட பணி முடிவடைந்து, மே-2024இல் மத்திய அரசால் ஒப்புதல் பெற்றது.

இரண்டாம் கட்ட பணி டிசம்பர் - 2024 இல் தொடங்கி விரைவில் முடிக்கப்பட உள்ளது. மூன்றாம் கட்ட பணி ஜனவரி-2025இல் தொடங்கப்பட்டுள்ளது.

புதிய விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு அடிப்படையில் மூன்று புள்ளியியல் உதவி ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் குடிநீர், சுகாதாரம் மற்றும் வீட்டுவசதி நிலைமைகள் பற்றிய அறிக்கை வெளியீடு.

தமிழ்நாட்டிலுள்ள மாற்றுத்திறனாளிகள் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

TNHPS 2018-2019 அறிக்கை செப்டம்பர் 2022-இல் சென்னை, வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து வெளியிடப்பட்டது.

(2022-23) இல் தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த அடிப்படை ஆய்வு TNHPS அறிக்கை 27.01.2025 அன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த அலை - 1 ஆய்வு (TNEPS) ஆய்வு 2022-இல் J-PAL(SA) நிறுவனம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இணைந்து வெளியிட்டது.

2024 மக்களவைத் தேர்தல், அடிப்படை கணக்கெடுப்பின்அறிக்கை 01.11.2023 அன்று தலைமை தேர்தல் தமிழக அதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

2024 மக்களவைத் தேர்தல் அடிப்படை கணக்கெடுப்பின் வரைவு அறிக்கை 16.12.2024 அன்று தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

"தமிழ்நாடு – நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் – தரவுத்தாள் 2021" அறிக்கை 04.03.2023 அன்று வெளியிடப்பட்டது.

"மாவட்ட நல்லாட்சிக் குறியீடு – தமிழ்நாடு 2021"அறிக்கை 13.10.2023 அன்று அனைத்து அரசு செயலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம்

2015–2016 ஆம் ஆண்டில் 11 மலைப் பகுதிகளை உள்ளடக்கிய ரூ.75 கோடி செலவில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) தொடங்கப்பட்டது.

2023–2024–ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் "கிழக்கு தொடர்ச்சி மலைகளின் பகுதிகள் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்துடன் சேர்க்கப்படும்" என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

50% மற்றும் 11 கிழக்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் 33 வட்டாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2024–2025 ஆம் ஆண்டு முதல் 11 மாவட்டங்கள் SADPகீழ் சேர்க்கப்படுகின்றன.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர், விவசாய நிலங்கள் மனித வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் ஒருங்கிணைப்பை உருவாக்குவது. மனித வாழ்வாதார மேம்பாடு, நீர், நில மேம்பாடு, சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்புகள் மேம்படுத்துதல்.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மண்வளப் பாதுகாப்பு, வனம் மற்றும் சுற்றுச்சூழல், தோட்டக்கலை, வேளாண்மை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஊரகச் சாலைகள், நகர்புற மற்றும் கிராமபுற உள்ளாட்சி மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.75கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்தத் திட்டங்களை மேற்கொள்வதற்காக கடந்த 4 ஆண்டுகளில், 722 திட்டங்களுக்கு ரூ. 21,166.83 கோடி நிதி ஒதுக்கீடு.

2024–2025 ஆம் ஆண்டிற்கு ரூ.38.24 கோடி முன்மொழிவுகள் அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

காடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை மூலம் 136 திட்டங்களுக்கு ரூ. 33.96 கோடி ஒதுக்கீடு.

மண் மற்றும் நீர் பாதுகாப்புக்காக ரூ.67.910 கோடி 215 திட்டங்களுக்கு ரூ.33.96 கோடி ஒதுக்கீடு.

இடைவெளி நிரப்பும் உள்கட்டமைப்புக்காக ரூ.40.873 கோடி 170 திட்டங்களுக்கு ஒதுக்கீடு.

பொதுப்பணித்துறைக்கு ரூ.22.038 கோடி 51 பணிகளுக்கு ஒதுக்கீடு.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 81 பணிகளுக்காக ரூ.20.757 கோடி ஒதுக்கீடு.

பால்வளம், மீன்வளம் மற்றும் கால்நடை வளர்ப்புக்காக 25 பணிகளுக்கு ரூ.11.419 கோடி ஒதுக்கீடு.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் மேம்பாட்டிற்கு 20 பணிகளுக்கு ரூ.2.759 கோடி ஒதுக்கீடு.

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 8 பணிகளுக்காக ரூ.2.336 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளின் மேம்பாட்டுக்காக 8 பணிகளுக்கு ரூ.8.38 கோடி ஒதுக்கீடு.

சுற்றுலா வளர்ச்சிக்காக 3 பணிகளுக்கு ரூ.1,030 கோடி ஒதுக்கீடு.

புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக எரிசக்தி துறைக்கு ரூ.0.900 கோடி ஒதுக்கீடு.

ஈரோடு, கடம்பூர் கிராமத்தில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைக்க ரூ.1.500 கோடி ஒதுக்கீடு.

ஈரோடு, அந்தியூரில் தாமரைக்கரை மடம் சாலை முதல் ஆணைப்போடு சாலைக்கு ரூ.1.0887 கோடி ஒதுக்கீடு.

ஈரோடு மாவட்டத்தில் 26.08.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி தாளவாடி மற்றும் பர்கூர் சந்தையில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு கட்டுமான பணிகளுக்காக ரூ.5.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ரூ. 6.660 கோடி ஒதுக்கீடு செய்து குன்னூர் மற்றும் உதகமண்டலம் வட்டாரத்தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க 21.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நிறைவு.

திருநெல்வேலி மாவட்டத்தில், களக்காடு வட்டாரத்தில் விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு, ரூ.6.492 கோடியில் வாழை ஏல மற்றும் மதிப்பு கூட்டல் மையத்தின் உள்கட்டமைப்புக்கு 12.10.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் மலைப்பாங்கான பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கில் 20 தேயிலை விற்பனை வாகனங்கள் ரூ.3.096 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.12.2021 அன்று தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டார அரசு மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டுமான பணிக்கு ரூ.3.030 கோடி ஒதுக்கீடு செய்து 21.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டி பணிகள் நிறைவு பெற்று மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூரில் அரசு மேல்நிலை மற்றும் உயர் நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வக கட்டடம் ஆண்கள் கழிப்பறை கட்டுவதற்கான பணிகளுக்காக ரூ.1.716 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.05.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள TANTEA தேயிலை தோட்டங்களின் மண் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த ரூ.4 கோடியில் செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகளின் நலனுக்காக, குன்னூரில் உள்ள இன்ட்கோசர்வில் மாநில அளவிலான கலப்பு மற்றும் பேக்கேஜிங் அலகு அமைக்க ரூ.3.297 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீலகிரியில் 26,000 சிறு தேயிலை விவசாயிகளுக்கு 15 தேயிலை சேகரிப்பு வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.2.268 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

திண்டுக்கல், சிறுமலை கிராமத்தில் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, ரூ.6.362 கோடி செலவில் 3 சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி, புளியம்பாறையில் இருந்து கப்பிக்காடு பழங்குடியினர் பகுதிக்கு ரூ.0.98 கோடியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்து மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

திண்டுக்கல், ஆத்தூர் அரசு மருத்துவமனையில் புதிய புறநோயாளிகள் கட்டடம் அமைக்க ரூ.0.90 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

விருதுநகர் ஒருங்கிணைந்த பண்ணைய முறையை ஏற்படுத்த ரூ.0.629 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

திருப்பூர் மாவட்டம் உடுமலை சரகம் மற்றும் மேல்குருமலை 67 பழங்குடியினரின் வீடுகளுக்கான பராமரிப்பு பணிகளுக்காக ரூ.0.804 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் "பைக்காரா மலைத்தொடரில் வடிகால் வசதிகளுடன் பைக்காரா படகு இல்ல சாலையை சீரமைப்பதற்காக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 16 புதிய BS VI-4200 பேருந்துகளை வாங்க ரூ. 5.874 கோடி ஒதுக்கீடு செய்து, 25.02.2024 மாண்புமிகு தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் உதகை ஏரியைத் தூர்வார ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்து 7 கூறுகள் பணி முடிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கான "சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு" திட்டம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் 4 கூறுகள் பணி முடிக்கப்பட்டுள்ளது. 1 பணி நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்தின் 200 ஆவது ஆண்டு விழா தொடர்பாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் நீலகிரி பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் அமைப்பதற்கான திட்டம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு, சத்தியமங்கலத்தில் பேல்டு சிலேஜ் தயாரிக்கும் அமைப்பை நிறுவ ரூ.6.72 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தின் மேல் நீர்நிலைகளில் "டிரவுட் மீன்" இருப்பை அதிகரிக்க, ரூ.0.770 கோடி கருவுற்ற டிரவுட் முட்டைகள் கொள்முதல் செய்து, முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டன.

நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 608 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ரூ.0.804 கோடி மதிப்பீட்டில் உடைகள் வழங்கப்பட்டு பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

மாநில திட்டக் குழு திட்டங்கள்

தமிழ்நாடு புதுமை முயற்சிகள்:

அரசுசார் துறைகளில் புதுமைகளை வளர்ப்பதற்கும் செயல்முறைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான திட்டங்களும் நிதியுதவியையும் வழங்குவதற்காக நிறுவப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 74 புதுமைத் திட்டங்களுக்கு ரூ.256.45 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆளுகைக்கான புத்தாக்க மையம்

இந்தியாவில் முதல் முறையாக அரசு மற்றும் அரசு சார் நிர்வாகங்களில் புதுமையை ஊக்குவிக்கும் திறன் மேம்பாடு, புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரம் மேம்படுத்த சிக்கல்களுக்கு புதுமையான தீர்வுகளை நோக்குடன் ஆளுகைக்கான புத்தாக்க மையம் நிறுவப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் நிதியாண்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம் சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வி ஆகிய வளர்ச்சி குறியீடுகளில் ஏற்றத்தாழ்வுகளைக் களைய மறுசீரமைக்கப்பட்டது.

2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ. 92.53 கோடி மதிப்பிலான 6 திட்டங்கள் குழந்தைகள், பேறுகால மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் திறனை மேம்படுத்த ஒப்பளிக்கப்பட்டன.

"கருவுற்ற நாளிலிருந்து முதல் 1000 நாள்களில் குழந்தையின் ஊட்டச்சத்து நிலையையும், பேறுகால மகளிர் (ம) பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்தும்" திட்டத்தின்கீழ், பயனாளிகள் பயன்.

971 பள்ளிகளில், 493 பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் ஆங்கிலம் மற்றும் கணிதம் திறன்களை மேம்படுத்தும்" திட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

2024-ஆம் ஆண்டு சூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் மாநில அளவில் ஆசிரியர்களுக்கு திறன் மிகு கற்பித்தல் மற்றும் வகுப்பறை மேலாண்மையில் சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

பள்ளிகளுக்கு பருவம் 1 மற்றும் 2-க்கான பாடங்களுக்கு ஊடாடு காணொலி வழங்கப்பட்டு பருவம் 3-க்கான மின்பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2023-2024ஆம் நிதியாண்டில் 2,757 அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகள் வளர்ச்சியைக் கண்காணிக்கும் உபகரணங்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

வளமிகு வட்டாரங்கள் வளர்ச்சித் திட்டம்

2023-2024-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மலைப் பகுதிகளை உள்ளடக்கிய 50 வளமிகு வட்டாரங்களை தேர்ந்தெடுத்து ரூ.2.50 கோடி ஒதுக்கீடு செய்து வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டது.

2024-2025-வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.100 கோடி வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து 737 திட்டங்களுக்கு ரூ. 92.69 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டு 75% நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மாநில கண்காணிப்பு குழு ரூ.4.20 கோடி மதிப்பிலான 25 புதிய வட்டார திட்டங்களை ஆய்வு செய்து மாநில குழுவிற்கு பரிந்துரைத்துள்ளது.

தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம், நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை பாதுகாத்து மக்களுக்கு சிறந்த முறையில் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்கிறது.

07.05.2021 - 31.01.2025 வரையில், 18 ஆராய்ச்சிதிட்டங்கள் மற்றும் மூன்று பயிலரங்குகளுக்கு ரூ.354.47 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டு நிலையான மற்றும் தொழில்துறை வளர்ச்சி, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி, நீர் மற்றும் நிலவள மேலாண்மை, சுற்றுலா மற்றும் பாரம்பரியம், எரிசக்தி உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மீள்தன்மை மற்றும் இயற்கை நிலப்பரப்பு மேலாண்மை போன்ற முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்தி மேம்படுத்தும் நோக்கில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சி முடிவுகள், அரசுத் துறைகளுக்கு வழிகாட்டி, திட்டங்கள் மற்றும் அத்திட்டங்களை மதிப்பிட உதவியுள்ளது.

தமிழ்நாடு வெப்பத் தணிப்பு உத்தி மற்றும் செயல்திட்டம், வெப்ப மேலாண்மைக்கான கொள்கைகள் மற்றும் வெப்ப அலைகளின் தீவிரத்தை மாநில பேரிடராக அறிவித்து இறந்தவர்களுக்கு ரூ.4 இலட்சம் வழங்கப்படுவதை வலியுறுத்துகிறது.

ஜெர்மன் அரசின் நிதியுதவியுடன் GIZ - மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்திற்கு TOSCA கருவி நகரத் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுக்கான ஆராய்ச்சியை எளிதாக்க 28.08.2023 அன்று திறக்கப்பட்டது.

நகர்ப்புற மீட்டெடுத்தலை (Urban Resilience) மேம்படுத்த இயற்கைசார் தீர்வுகளின், வாய்ப்புகள் மற்றும் சவால்களை அடையாளம் காணும் ஒருங்கிணைந்த செயல் உத்தி உருவாக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் ஆதரவுடன், தமிழ்நாட்டின் நகர்ப்புற வெப்பத் தீவு பகுதிகளை கண்டறிந்து வெப்ப நிலையை குறைக்க தணிப்பு உத்திகள் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது.

மாநில மற்றும் சென்னை நகர அதிகாரிகள் குறைந்த கார்பன் உமிழ்வு மண்டலங்களை உருவாக்குவதற்கான கருவி தொகுப்பை பிரிட்டிஷ் துணை உயர் குழுவுடன் இணைந்து உருவாக்கி மாசுபாட்டைக் குறைத்து இந்தியாவின் நிகர பூஜ்ஜிய இலக்கை அடைய உதவுகிறது.

ஆய்வுகள்

தமிழ்நாட்டில் கடலோர சமூகங்களின் சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை அடையாளம் காண்பது நோக்கமாக 14 கடலோர மாவட்டங்களில் ஆய்வு நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் காடுகளின் நிலை குறித்த ஆய்வு, மாவட்ட அளவில் வனப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை குறிக்கிறது.

1991 முதல் 2021 வரை காலநிலை மாற்றத்தின் விளைவுகளும் பாதிப்புகளும் பற்றிய ஆய்வு நடைபெறுகிறது.

நிலப்பயன்பாட்டின் தாக்கம் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளில், 11 நிலப் பயன்பாட்டு இலக்குகளுக்கு குறிகாட்டிகள் நேர்ந்த மாற்றங்களை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சேவைகளின் பொருளாதார மதிப்பீடு- 80 சதுப்பு நிலங்களின் ஆய்வு

தமிழ்நாட்டில் 80 சதுப்பு நிலங்களின் பொருளாதார மதிப்புகளை மதிப்பீடு செய்து 20 ராம்சார் தளங்களை அறிவித்துள்ள நிலையில் நமது மாநிலம் அதிகபட்ச ராம்சார் தளங்களைக் கொண்ட முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள புனிதத் தோப்புகளின் புவியியல் தரவுத் தளத்தை உருவாக்குதல் மற்றும் பல்லுயிர்களை ஆவணப்படுத்துதல்

இந்த ஆய்வு தமிழ்நாட்டில் உள்ள புனித தளங்களை அடையாளம் கொண்டு அவற்றின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பிரச்சனைகள் மற்றும் தீர்வுகளை பரிந்துரைக்க உதவுகிறது.

நிலப்பொருத்தம் மதிப்பீடு- கள்ளக்குறிச்சி மாவட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பயன்படுத்தப்படாத நிலங்களின் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்து. திறமையான நிலப்பயன்பாட்டிற்கும் உதவுகிறது.

மதிப்பீட்டு ஆய்வுகள்

மாநில திட்டக் குழு, அரசின் முன்னோடித் திட்டங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்து பத்து ஆய்வுகளையும் இரண்டு சிறப்பு ஆய்வுகளையும் நடத்தி அறிக்கைகளை அரசிற்கு சமர்ப்பித்துள்ளது.

விடியல் பயணத் திட்டம்

விடியல் பயணத் திட்டத்தின் மாநிலத் திட்டக்குழு இரு கட்டங்களாக ஆய்வு செய்துள்ளது.

முதற்கட்ட ஆய்வுக்காக – சென்னை மாநகர பகுதி மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வாக – நாகை மாவட்ட வேளாண் மண்டலம் மதுரை திருப்பூர் மாவட்டங்களில் தொழிற்துறை மண்டலம்.

பெண் பயணிகளின் வயது, சமூகப்பிரிவு, கல்வித் தகுதி, வருவாய் மற்றும் சராசரி சேமிப்பு அடிப்படையில் செய்யப்பட்டன.

குறைந்த வருவாய் ஈட்டும் பெண்கள் மற்றும் ஊரகப் பகுதியைச் சேர்ந்த பெண் பயணிகள் அதிகம் பயனடைந்துள்ளனர்.

பெண்களின் பணிப் பங்களிப்பு சேமிப்பு உயர்வு, புதிய திறன் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு அணுகும் வல்லமை, ஆகியவை முக்கிய சமூகப் பொருளாதார வெளிப்பாடுகள்.

மேலும், பெண்களின் பயணச் செலவு சேமிப்பு குடும்ப செலவினங்களுக்கு உதவியும், சில்லறை பணவீக்க தாக்கத்தை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

பள்ளிக்கல்வி துறையின் முதன்மைத் திட்டமான இல்லம் தேடிக் கல்வியின் (ITK) வரைவு மதிப்பீடு

கோவிட்–19 ஊரடங்கு காலத்தில் மாணவர்களிடையே கற்றல் இழப்பை ஈடுசெய்ய "இல்லம் தேடி கல்வி" திட்டத்தின் செயல்திறன் மதிப்பீடு செய்ய ஆறு மாவட்டங்களில் 362 பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்ட அறிக்கை 11.02.2023 அன்று அரசுக்கு அளிக்கப்பட்டது.

ஆய்வறிக்கையின் முடிவுகள்

'இல்லம் தேடி கல்வி திட்டம்', இரண்டு இலட்சம் தன்னார்வலர்களை ஈடுபடுத்தி சமூக நீதி அடிப்படையில் சிறந்த சமுதாயத்தை உருவாக்கி, மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (TNUES) செயல்பாடுகள் குறித்த மதிப்பீடுகள்

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் செயல்பாடு விளைவுகள், பயன்கள் மற்றும் இடையூறுகளை மதிப்பீடு செய்து சரிசெய்து விரிவாக்கம் செய்வதற்கான அறிக்கை 12.03.2024 அன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்களின் பருவ இறுதி வினாத் தாள்களின் மதிப்பீடு (கலை, அறிவியல், பொறியியல் படிப்புகள்)

மாநிலப் பல்கலைக்கழகங்களின் வினாத் தாள்கள், ப்ளூம்ஸ் டாக்ஸானாமி (Taxonomy) முறைப்படி, கல்வித் தரத்தைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை திடம் செய்து மாநிலத் திட்டக் குழு ஆய்வு மேற்கொண்டு பரிந்துரைத்தது.

வினாத் தாள்களின் தரம் மேம்படுத்த பயன் சார்ந்த கல்வி செயல்படுத்த வேண்டும்.

மாணவர்களின் அறிவை மதிப்பிட மற்றும் ப்ளூம் ஸ்டாக்ஸானாமி வினாத்தாள்களை வடிவமைக்க தேர்வாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

கடந்த 12.03.2024 அன்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – இத்திட்டத்தினால் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வருகை விகிதம், கற்றல் திறன், வகுப்பறை கற்றலில் ஆர்வத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதாக மாநிலத் திட்டக்குழு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (இரண்டாம் கட்ட இடைநிலை அறிக்கை)

மாநிலத் திட்டக்கழு மாணவர்களின் வருகை, ஈடுபாடு மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்களின் கருத்துகளை திட்டத்தின் தாக்கத்தை ஆராயந்து முடிவு எடுத்தது.

மாணவர்களின் வருகை வகுப்பில் ஆர்வம் கற்றல் திறன் மற்றும் விளையாட்டில் ஈடுபாடு அதிகரித்துள்ளது.

புதுமைப்பெண் திட்டத்தின் மதிப்பீட்டு ஆய்வு

புதுமைப்பெண் திட்டம் 5,095 மாணவியர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்டது, இது உயர்கல்வியில் மாணவிகளின் பங்கைக் காட்டுகிறது.

கள ஆய்வின் முக்கிய முடிவுகள்:

45 சதவீதம் அரசு, 28 சதவீதம் சுயநிதி மற்றும் 21 சதவீதம் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணவிகள் கல்வி பெற்று வருகின்றனர்.

மாணவிகளுக்குத் தங்கள் இலக்குகளை அடைய உதவி செய்யும்.

இளம் வயது திருமணத்தை தவிர்க்கவும், வாழ்க்கை முன்னேற்றத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவிகள் பொறியியல் படிப்பில் சேர வாய்ப்பு பெறுகின்றனர்.

கூடுதல் கல்விச் செலவுகளை எதிர்கொள்ள உதவுவதன் மூலம் குடும்பங்களின் நிதிச் சுமை குறைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் தொற்றா நோய்களுக்கான பராமரிப்பு குறித்த மதிப்பீட்டாய்வு

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஏழைக் குடும்பங்களின் மருத்துவச் செலவினை குறைத்து பரிசோதனை மற்றும் மருந்து பயன்பாட்டை அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டின் பழங்குடி கிராமங்களில் அரசுத் திட்டங்களின் செயல்படுத்தல் திறன் மீதான மதிப்பீட்டு ஆய்வு

கள்ளக்குறிச்சி, சேலம் மற்றும் திருவண்ணாமலையில் அரசு திட்டங்கள் பழங்குடியின மக்களுக்குச் சென்று சாலை இணைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளின் மேம்பாட்டால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதை கண்டறிந்துள்ளது.

எண்ணும் எழுத்தும் திட்டம் செயலாக்கத்தின் மீதான மதிப்பீடு

"எண்ணும் எழுத்தும்" திட்டம் தொடக்கப்பள்ளி செயல்பாடு மற்றும் அதன் மாணவர்களிடையே கற்றல் இடைவெளி குறைப்பதற்காக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. மாநில திட்டக்குழு திட்டத்தின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து இறுதி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. எண்ணும் எழுத்தும் திட்டத்தின் நடைமுறை விளைவுகள் ஆய்வில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மறுஆய்வுக்கு அடித்தளத்தை வழங்கி அதன் செயலாக்கத்தை மேம்படுத்த உதவுகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைகளின் முதல் 1,000 நாள்களில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடுப் பிரச்சினைகள் – ஒருங்கிணைந்த அரசுத் திட்டங்கள் வாயிலாகத் தீர்வு காண்பது குறித்து ஒரு ஆய்வறிக்கை

தாய்மார்கள் மற்றும் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ ஊட்டச்சத்து சேவைகளை ஒருங்கிணைப்பதற்கான நுண் திட்டம் மற்றும் மும்முனை அணுகுமுறையை பரிந்துரைத்துள்ளது.

தமிழ்நாடு வெப்பத் தணிப்பு முறை அறிக்கை (DCS Report)

தமிழ்நாடு வெப்ப அலைகளை, மார்ச் முதல் ஆகஸ்ட் காலங்களில் எதிர்கொள்கிறது. மிதமான வெப்ப மற்றும் குளிர் சூழல். மக்கள் தொழிற்சாலைகளில் இருக்க வேண்டும்.

மின் கட்டமைப்பு உபகரணங்களின் தாங்கும் திறனையும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்த வேண்டும். வெப்ப தணிப்பு முறை (DCS) சுற்றுச்சூழலுக்கு உகந்த குளிரூட்டும் தீர்வாக கருதப்படுகிறது.

மாநில திட்டக் குழு UNEP யின் உதவியுடன், வெப்ப தணிப்பு முறையில் குளிரூட்டும் வாய்ப்புகளுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

வெப்ப தணிப்பு முறை அறிக்கையில் முதலீட்டாளர்கள் மற்றும் குளிர்விக்கும் நிறுவனங்களுக்கு வணிகமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநில செயல் திட்டம் வெப்ப தணிப்பு திட்டங்களின் வளர்ச்சியை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக, விரிவான கொள்கை முன்னெடுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கொள்கை தயாரிப்பு

தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக, மாநில திட்டக் குழு, ஏழு புதிய கொள்கை ஆவணங்களை தயாரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் தொடர்புடைய அரசுத் துறைகளுக்கு அனுப்பியுள்ளது.

தமிழ்நாட்டிற்கான நிலையான நிலப்பயன்பாட்டுக் கொள்கை (வரைவு)

தமிழ்நாட்டின் நிலையான நிலப்பயன்பாட்டு கொள்கை உருவாக்கப்பட்டது. இது உற்பத்தி நோக்கங்களுக்காக தரிசு நிலங்கள் மற்றும் பிற பயன்படுத்தப்படாத நிலங்களை மீட்டெடுக்கும் வகையில் நிலப் பயன்பாடு, நிலம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள நிலையான அணுகுமுறை பரிந்துரைக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சி ஒருங்கிணைக்கப்படுகிறது.

தமிழ்நாடு சுகாதார உரிமைக்கான நலக்கொள்கை (வரைவு):

மாநில திட்டக் குழுவினால் தமிழ்நாடு சுகாதார உரிமைக்கான நலக்கொள்கையை உருவாக்க 23 உறுப்பினர்களுடன் பணிக்குழு அமைக்கப்பட்டது. பணிக்குழு பலமுறை விவாதித்து, சுகாதார உரிமை நலக்கொள்கை வரைவினை உருவாக்கியது.

வரைவினை 27.10.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டது.

திருநர் + கொள்கை :

கொள்கை தொடர்பான விவாதங்களை தொடர்ந்து மகளிர் உரிமைத் துறையின் கருத்துரைகளுடன் இணைத்து 27.10.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கொள்கை வரைவு சமர்ப்பிக்கப்பட்டது.

பொருளாதார மாற்றத்திற்கான தொழில்மயமாக்கல் கொள்கை:

தமிழ்நாட்டினை 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக்கும் நோக்குடன் தொழில்மயமாக்கல் கொள்கை 27.10.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது.

தொழில் வளர்ச்சிக்கான உத்திசார் உடனான சிறு, குறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் மின்வாகனம், தொழில் 4.0, துணிநூல், கைத்தறி, சுற்றுலா, ஆகியவற்றுடன் கூடிய கொள்கை ஆறு ஆவணங்களை உள்ளடக்கியது .

தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கொள்கைகள், திட்டங்களான மின்சார வாகனங்கள், புத்தொழில், தொழில்நுட்பம், சுற்றுலா ஆகிய துறைகளில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில நீர்வள வரைவுக் கொள்கை

இவ்வரைவுக் கொள்கை, பன்முக அணுகுமுறையுடன் மாநில நீர் பற்றிய இடர்ப்பாடுகளை சமாளித்து சுத்தமான நீர் வழங்கல், நீர்வள பாதுகாப்பு மற்றும் ஆக்கப்பூர்வ நீர் பயன்பாட்டை உறுதிசெய்யும்.

சமூக (தெரு) நாய் மேலாண்மை (ம) ஒழுங்கு முறைக்கான வரைவுக் கொள்கை

இவ்வரைவுக் கொள்கை, சமூக (தெரு) நாய்களை மனிதாபிமான முறையில், நிர்வகித்து பொது சுகாதாரத்தை உறுதி செய்யும், நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் மற்றும் முக்கிய பரிந்துரைகளுடன் செயல்படும்.

தமிழ்நாடு வேலைவாய்ப்புக் கொள்கை 2023 –வரைவு:

மாநில திட்டக் குழு "தமிழ்நாடு வேலைவாய்ப்புக் கொள்கை-2023" யின் வரைவினை தயாரித்து, அரசு பரிசீலனைக்காக, சமர்ப்பித்துள்ளது.

உற்பத்தி வேலைவாய்ப்பை அதிகரித்தல், வருமானம் உயர்த்துதல் மற்றும் 8.4% வருடாந்திர பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் இந்த வரைவு கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

பயிலரங்குகள்

தமிழகத்தில் நிலையான கடற்பாசி விவசாயம் - முன்னோக்கிச் செல்லும் வழி

உள்ளூர் கடற்பாசி வளர்ப்பில் வணிக ரீதியான தொழில்நுட்பங்கள் சேமிப்பு வாய்ப்புகள் நிதிக் கட்டுப்பாடுகள், தட்பவெப்ப நிலைகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் உள்ளன. மேலும், கடற்பாசி தொழிலின் ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆரம்ப நிலையில் உள்ளன.

ஜனவரி 2023 இல் கடற்பாசியின் இனங்கள் பல்வகைப்படுத்தல், பல்லுயிர் பெருக்கம் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் தொழில்துறை வாய்ப்புகள், குறித்து பயிலரங்கம் நடத்தப்பட்டது.

வனப்பகுதிகளில் அந்நியக் களைச் செடிகளின் மேலாண்மை

பிப்ரவரி 2023 இல் அந்நிய தாவர இனங்களின் மேலாண்மைக்கான ஆய்வுகள் பரவல் மாற்றங்கள் மற்றும் புவியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யும் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

தென் மாவட்டங்களில் சீமைகருவேல மரங்களின் மேலாண்மை

மார்ச்-2023இல் சீமைகருவேல மரங்களின் பயன்பாடு மேலாண்மை மற்றும் சமூக-பொருளாதார தாக்கங்களைப் பற்றி பயிலரங்கம் நடத்தப்பட்டது.

சட்டசபை அறிவிப்பு 2024-2025

தமிழ்நாடு நிலப் பயன்பாட்டுத் தகவல் அமைப்பு

2024-2025- ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம், தமிழ்நாடு நில பயன்பாட்டு தகவல் அமைப்பை (TNLUIS) உருவாக்கி அரசு முடிவுகளுக்கான தகவல் கருவியாக பயன்படுத்தப்படும்.

பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில் ஆறு மாதச் சான்றிதழ்ப் படிப்பு :

2024-2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பொது கொள்கை மற்றும் மேலாண்மையில் ஆறு மாத சான்றிதழ் படிப்பை 3 ஆண்டுகளுக்கான ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் நடத்த உத்தரவிடப்பட்டது. மார்ச் 2025-ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் நான்கு ஆண்டு சாதனைகள்

திறன் மேம்பாடு:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பாலின தேவைக்கேற்ற திட்டமிடல், தமிழ்நாடு நகர்ப்புற ஆய்வுகள் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் புதுதில்லியில் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் ஆதரவுடன் பேரிடர் மீள்திறன் திட்டமிடலுக்கான பாலின திட்டமிடல் பயிற்சி.

சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுடன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகள் பகிர்வு.

பாலின தேவைக் கேற்ற திட்டமிடல் குறித்த 3 மாநில மற்றும் மாவட்ட அளவிலான பட்டறைகள்.

இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான சர்வதேச மாநாடு.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

ஊராட்சி வளர்ச்சி குறியீடு - துறைகளுடன் கலந்துரையாடல் மற்றும் குறிகாட்டிகளை இறுதி செய்தல்.

மீள்குடியேற்றங்களுக்கான நீடித்த வளர்ச்சி இலக்கு உள்ளூர் மயமாக்குவதல் மற்றும் குறிகாட்டி வெளியிடல்.



நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு மற்றும் தேசிய குறிக்காட்டி வரையறை 4.0 பகுப்பாய்வு அறிக்கைகள்.

பற்பரிமாண வறுமை குறியீடு 2.0 அறிக்கை மற்றும் விவாதம்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் ஆதரவுடன் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஒருங்கிணைப்பு மையம் மே 2023 முதல் செயல்பட்டது.

தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தொலைநோக்கு ஆவணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாநில குறிக்காட்டி வரையறை. ஒருங்கிணைப்பு 2.0 மையத்துடன் உருவாக்கம் மற்றும் வெளியிடல்.

2015-2016 முதல் 2021-2022 வரை நீடித்த வளர்ச்சி இலக்கு தரவின் விரிவான தொகுப்பு கொண்ட தரவுத் தாள் - 2022 தயாரிக்கப்பட்டது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தரவு தாள் தயாரிப்பின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முக்கிய நிகழ்வுகள் மற்றும் பங்கேற்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDGs) தேசிய பயிற்சி திட்டம் - பிப்ரவரி 12-16, 2024இல் நிதி ஆயோக் மற்றும் தேசிய தொழிலாளர் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனத்துடன் நடைபெற்றது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசியபட்டறையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று தரவுகளைப் பற்றி விளக்கினார். நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டு அறிக்கை வெளியீட்டில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்தது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு 4.0 பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

சாத்தியமான குறிகாட்டிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் பிற சமூக அமைப்புகளுடன் கொள்கை அளவிலான தலையீடுகளுக்கான பயிலரங்கில் பங்கேற்பு.

தமிழ்நாடு மாநில செயல் திட்ட காலநிலை மாற்றம் 2.0 விற்கான வரைவு விவாதிக்கப்பட்டு, இறுதி செய்யப்பட்டு உள்ளீடுகள் பகிரப்பட்டன.

யுனிசெப் நடத்திய பேரிடர் மீள் தன்மை மற்றும் மறுமொழி குறித்த பட்டறையில் பல்வேறு பங்குதாரர்களுடன் பங்கேற்றது.

ஃபிரெட்ரிக்-எபர்ட்-ஸ்டிஃப்டுங் (FES), இந்தியா மற்றும் மெட்ராஸ் சமூகப் பணிப் பள்ளி ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்ட முறையான ஆற்றல் மாற்றம் குறித்த கூட்டத்தில் பங்கேற்பு.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை ஏற்பாடு செய்த முதல் 8,000 நாள்களை மையமாக கொண்ட ஊட்டச்சத்து பட்டறையில் பங்கேற்பு.

புதுடில்லியில் நிதி ஆயோக் மற்றும் சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் (IFPRI) நிதியுதவியுடன் இந்தியாவில் ஆரோக்கிய உணவுக் கொள்கை குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றது.

காந்திகிராம கிராமப்புற நிறுவனத்தால் கிராமப்புற மேம்பாட்டுக்கான ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் சுய உதவிக்குழுவின் பங்கு குறித்த மையக் குழு கூட்டத்தில் பங்கேற்றது.

பாலின தேவைகேற்ற திட்டமிடல் நிதிநிலை அறிக்கைக்கான கையேடு தயாரிக்கப்பட்டது.

2024-2025-ஆம் நிதியாண்டின் பாலின வரவு செலவு (GBS) அறிக்கையுடன் பாலின தேவைகேற்ற திட்டமிடல் நிதிநிலை அறிக்கை சேர்க்கப்பட்டது.

முதலமைச்சரின் கண்காணிப்பு பலகையில் குழந்தை தொடர்பான குறிகாட்டிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் பணியாற்ற மாணவர்களுக்கு ஊதியம் இல்லாத பயிற்சி வழங்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (UNICEF) தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடையே பேரிடர் ஆபத்து மீள் தயார் நிலை குறித்த பெரு நிறுவன சமூக பொறுப்பு (CSR) வட்டமேசையில் பங்கேற்று உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TN WESAFE) திட்டத்தின்கீழ், பாலியல் துன்புறுத்துதல் தடுப்பிற்கான (POSH) பட்டறை சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறையின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) ஏற்பாடு செய்த தமிழ்நாடு மின் புவியியல் தகவல் அமைப்பு (TNGIS) பட்டறையில் துறைகளுக்கிடையே தரவைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் பகிரப்பட்டன.

தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TN WESAFE) குழுவுடன் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான மாநிலச் செயல் திட்டம் குறித்து விளக்கக்காட்சி மற்றும் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டன.

சமூக ஊடகங்களில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயல்பாடுகளை உயிர்ப்புடன் வைத்திருத்தல் மூலம் காலாண்டு செய்தி மடல்கள் வழங்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP) மூலம் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) வலைத் தளத்தைத் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (TNSDC) தமிழ்நாட்டில் பயிற்சி ஈடுபாட்டை அதிகரித்தல், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தால் (UNICEF) பள்ளிக் கல்வித் துறையில் மேம்பாடுகளுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன. பிரிட்டிஷ் டெபுடி ஹை கமிஷனுடன் பாலினப் பொறுப்புடன் கூடிய காலநிலை நோக்கிய நடவடிக்கையை சர்வதேச மகளிர் தின நிகழ்வு நடத்தப்பட்டது.

பாலினப் பொறுப்பு குறித்த கொள்கை விளக்கச் சுருக்கம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மாநில மற்றும் மத்திய திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் தயாரித்து அரசுக்கு கொள்கை முடிவுகள் மற்றும் திட்ட மேம்பாடுகளை எடுக்க அரசுக்கு உதவுகிறது.

சாதனைகள்

கடந்த 4 ஆண்டுகளில் மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகள் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெற்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பேரழிவு மற்றும் சமூக பயன்பாட்டில் ஆளில்லா வானூர்திகளின் வடிவமைப்பு மேம்பாடு மற்றும் செயல்பாடு குறித்த மதிப்பீட்டாய்வு.

தமிழ்நாட்டில் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் குறித்த மதிப்பீட்டாய்வு.

தமிழ்நாட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் செவி உள்நரம்பு (Cochlear) உள்ளமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுவர்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

வணிகவரித் துறையால் வழங்கப்படும் பொது சேவைகளின் தர மதிப்பீடு குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

தமிழ்நாட்டில் சிறப்பு பொது விநியோகத் திட்டம் (SPDS) குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட (SADP) பகுதிகளில் 2016 முதல் 2019 வரையுள்ள ஆண்டுகளில் கடந்த 4 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் தாக்கம் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

"ஒருங்கிணைக்கப்பட்ட நிதி மற்றும் முன்னாள் படைவீரருக்கான கருணை நிதியின்கீழ் வழங்கப்படும் உதவி" குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

2017–2018–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் குறுகிய காலக் கடன் செயல்முறை மற்றும் தாக்கம் மதிப்பீட்டு ஆய்வு.

தற்போதுள்ள ஆசிரியர் பயிற்சிமுறை நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களிடையே கேள்வி கேட்கும் கலை குறித்த பயிற்சியின் தாக்கம் மற்றும் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி பெண்கள் தொழில்முனைவு – தமிழ்நாடு மதிப்பீட்டு ஆய்வு.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

2018–2019 மற்றும் 2019–2020 இல் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கான தொழில் வழிகாட்டுதல் திட்டத்தின் தாக்கம் மற்றும் விளைவு குறித்த மதிப்பீடு ஆய்வு.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

மாநிலத்தில் திருமண உதவித் திட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் மதிப்பீட்டு ஆய்வு (புதுமைப்பெண் திட்டம்)

அனைவருக்கும் வீடு திட்டம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை.

தேசிய குழந்தை காப்பகங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ், வழங்கப்படும் பொது காலக்கடன், பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் மற்றும் சுய உதவிக் குழுவிற்கான நுண்கடன் திட்டத்தின் செய்முறை மற்றும் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை.

மாவட்ட கனிம நிதியின்கீழ், எடுக்கப்பட்ட வேலைகளின் சமூகப் பொருளாதார தாக்கத்தின் மதிப்பீடு அறிக்கை.

கைத்தறி தயாரிப்புகளுக்கான சந்தை ஆதரவு மற்றும் லூம் வோல்டு–ன் மதிப்பீட்டு ஆய்வறிக்கை.

கடலோர மீனவர்களின் கடற்பாசி வளர்ப்பின் தாக்கம் குறித்த மதிப்பீட்டு ஆய்வறிக்கை. அம்மா சிமெண்ட் திட்டத்தின் தாக்கம் (TANCEM) குறித்த மதிப்பீட்டு ஆய்வறிக்கை.

மீனவர்களுக்கு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட தொலைத்தொடர்பு சாதனங்களின் பயன் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

கரும்புள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மாநில போக்குவரத்து பிரிவில் அதன் தாக்கம் பற்றிய மதிப்பீடு ஆய்வு.

கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களின் புதிய பள்ளி விடுதிகளின் தேவை மற்றும் பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக மாற்ற வேண்டும் என்பதற்கான மதிப்பீட்டு அறிக்கை.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கான மதிப்பீட்டு அறிக்கை.

தமிழ்நாட்டில் சிற்றுந்துகளின் இயக்கம் குறித்த மதிப்பீட்டாய்வு.




அன்னை தெரசா மகளிர் வளாகம்
அனுபவ அங்காடி
Experience store

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்த ஒருங்கிணைந்த மதிப்பீட்டு ஆய்வு - காலாண்டு II.

மதிய உணவுத் திட்டம் (உணவுப் பட்டியலில் மாற்றம்) குறித்த மதிப்பீட்டாய்வு.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள், பள்ளிப் பைகள் மற்றும் சீருடைகள் விநியோகம் குறித்த மதிப்பீட்டு ஆய்வு.

புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் - 2.0 (AMRUT - 20) பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் (TNCSC) விவசாயிகளுக்கு வழங்கப்படும் நெல் கொள்முதல் ஊக்கத்தொகை பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

பெண்கள் தொழில்துறை கூட்டுறவு சங்கங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

பொது விநியோக மூலம் வழங்கப்பட்ட செறிவூட்டப்பட்ட அரிசி, கேழ்வரகு மற்றும் கோதுமையின் நுகர்வு நிலை பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

ஆதிதிராவிடர்களுக்கு அரசு வழங்கும் இலவச வீட்டுமனை பட்டா மற்றும் அடிப்படை வசதிகள் பெற்றவர்களின் தற்போதைய நிலை பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் (CMUPT) பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

நபார்டு வங்கிக்கடன் உதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக (TNCSC) கிடங்குகள் கட்டுதல் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.

எட்டு வரைவு மதிப்பீட்டு அறிக்கைகள் மாநிலக் குழுவின் ஒப்புதலுக்காக தயார்.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் ரூ.150 கோடியில் பல்வேறு திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வு.

ஒன்பது ஆராய்ச்சி உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர் மற்றும் இரண்டு தட்டச்சர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்:

19 வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.






நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்



திரு. **கே.என்.நேரு** அவர்கள்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்



ரூ.2,300 கோடி செலவினத்தில் கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் நிறைவுபெற்று 30 இலட்சம் மக்கள் பயன்...

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.2,325.02 கோடி செலவில் 1,036 பணிகள் நிறைவு...

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், ரூ.10,797.69 கோடி மதிப்பில் 11 மாநகராட்சிகளில் 730 பணிகள் நிறைவு...

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.8,532.45 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் தேவை நிறைவேற்றப்பட்டு 114.69 இலட்சம் மக்கள் பயன்...

ரூ.1,777.42 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ், 14.75 இலட்சம் மக்கள் பயன்...

பெருநகர சென்னை மாநகராட்சி

பொது சுகாதாரத்துறை

நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள்

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 40 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 2 நகர்ப்புர சமுதாய நலமையங்கள் (UCHC), ஒரு அவசரகால மகப்பேறு மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, 11 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டுமானப் பணிகள் நிறைவு.

25 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய தர உறுதி தரநிலை சான்றுகள் பெறப்பட்டு, 3.87 கோடி புறநோயாளிகள் பயன்.

இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள்

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் சுகாதாரக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் 9 இரத்த சுத்திகரிப்பு நிலையங்கள் 2021-2023 ஆம் ஆண்டில் 99 இயந்திரங்களை கொண்டு 349 நோயாளிகளுக்கு 64,400 இரத்த சுத்திகரிப்புகள், 2023-2024 ஆம் ஆண்டில் 124 இயந்திரங்களை கொண்டு 438 நோயாளிகளுக்கு 47,980 இரத்த சுத்திகரிப்புகள் மற்றும் 2024-2025 ஆம் ஆண்டில் 121 இயந்திரங்களை கொண்டு 435 நோயாளிகளுக்கு 32,053 இரத்த சுத்திகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறப்பு சேவைகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனை

40 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படும் பல்நோக்கு மருத்துவமனை (Poly Clinic) மூலம் 4,50,741 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தொற்றுநோய் மருத்துவமனை

தொற்றுநோய் மருத்துவமனையில் 25,404 நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். 3,19,554 புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இங்குள்ள RTPCR பரிசோதனைக் கூடம் மூலம் 8,160 நோயாளிகள் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறப்பு நிகழாவண்ணம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

140 நகர்ப்புர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள்

140 நகர்ப்புர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அம்மையங்கள் மூலம் 27,85,101 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

சென்னை மாவட்ட பார்வை இழப்புப் தடுப்புச் சங்கம்

56,945 கண்புரை இலவச அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 1,203 கண் நீர் அழுத்த நோய்க்கு இலவச சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 6,264 நீரிழிவு விழித்திரைக்கு கதிர் வீச்சு சிகிச்சைகள். கண் வங்கிகள் மூலம் 6,670 கண்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. கண்ணொளி காப்போம் திட்டம் மூலம் 26,963 மாணவர்களுக்கு இலவசக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்

9,05,552 நபர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்யப்பட்டு, 54,277 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி பொருத்திய 7 நடமாடும் வாகனங்களின் மூலம் 4,37,870 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 496 நபர்களுக்கு காசநோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்

53,25,432 பிறப்பு சான்றிதழ்களும், 42,72,988 இறப்பு சான்றிதழ்களும் சென்னை மாநகராட்சி இணையதளத்திலிருந்து பொதுமக்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

பூச்சித்தடுப்புப் பிரிவு

வாகனத்தில் எடுத்துச் செல்லும் 94 புகை பரப்பும் இயந்திரங்கள், கையினால் எடுத்துச் செல்லும் 324 புகை பரப்பும் இயந்திரங்கள் கொண்டு முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

322 கைத்தெளிப்பான்கள், 156 பேட்டரியினால் இயங்கும் கைத்தெளிப்பான்கள், 2 சிறிய புகைப் பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 54 அதிவேகத் திறன் கொண்ட கைத்தெளிப்பான்களைக் கொண்டு நீர்வழிதடங்களில் உள்ள கொசுப் புழுக்களை கட்டுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்வழித்தடங்களில் 6 ட்ரோன்களைக் கொண்டு கொசுப் புழு நாசினி தெளித்தல்.

9 பைபர் படகுகள் மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்வழிப் பாதைகளில் வளரும் ஆகாயத்தாமரை செடிகளை அகற்றுதல் மற்றும் கொசுப் புழு நாசினி தெளித்தல்.

கால்வாய்களில் வாகனத்தில் மூலம் இயக்க கூடிய 12 அதிவேக திறன் கொண்ட இயந்திரங்கள் மூலம் கொசுப் புழு நாசினி தெளித்தல்.

நகர்ப்புர வீடற்றோருக்கான காப்பகங்கள்

37 வீடற்றோருக்கான காப்பகங்களும், 12 மருத்துவமனை உள்நோயாளிகளின் உடனிருப்பவர்கள் தங்கும் சிறப்புக் காப்பகங்கள் இயங்குகின்றன, 30 காப்பகங்கள் திறக்க நடவடிக்கை.

கால்நடை மருத்துவப் பணிகள்

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த 5 இனக்கட்டுப்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

74,226 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு, 57,851 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

சென்னையில் 4 செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களில் 1,08,298 செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சை 9,196 செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

தெருக்களில் சுற்றித்திரியும் 15,632 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.3,55,94,350/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி மருத்துவம்

பராமரிப்பின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் பயனாளிகளின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் விரிவான "வீட்டு அடிப்படையிலான சுகாதார சேவைகள்" வழங்கப்பட்டு வருகின்றது.

மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள், நோய்த் தடுப்பு மற்றும் முதியோர்களை கவனிக்கும் செவிலியர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்டுகள் அடங்கிய குழுவானது இதற்கான முழுமையான சேவைகளை வழங்கும்.

77,08,560 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 19,08,332 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை

15 மருத்துவ மண்டலங்கள் மூலமாக 16 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள், மூன்று 24 மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தேவையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

4.47 கோடி புறநோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

7,44,966 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சுகப்பிரசவம் 22,586 தாய்மார்களுக்கும், சிசேரியன் மூலம் 18,316 தாய்மார்களுக்கும் பிரசவம் நடைபெற்றுள்ளது.

20,123 கருத்தடை அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளது.

250 வாசக்டெமி (ஆண்களுக்கான கருத்தடை) அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

3,320 மருத்துவ முறையில் பாதுகாப்பான கருக்கலைப்பு நடைபெற்றுள்ளது.

தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி அனைத்து குழந்தைகளுக்கும் இலவசமாக தடுப்பூசி போடப்படுகிறது.

பிசிஜி தடுப்பூசி 2,73,532 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.

பெண்டாவேலண்ட், ரோட்டா, போலியோ தடுப்பூசி 2,85,822 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.

தட்டம்மை ரூபல்லா தடுப்பூசி 2,93,072 குழந்தைகளுக்கு போடப்பட்டுள்ளது.

கருப்பை வாய் புற்றுநோயை ஆரம்பநிலையில் கண்டறியும் பரிசோதனை 4,24,247 பெண்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் மூலம் ரூ.113.09 கோடி செலவிடப்பட்டு 1,82,959 தாய்மார்கள் பயன் பெற்றுள்ளனர்.

ஜனனி சுரக்க்ஷா யோஜனா நிதியுதவித் திட்டம்

ஜனனி சுரக்க்ஷா யோஜனா நிதியுதவித் திட்டத்தின் மூலம் ரூ.1.70 கோடி செலவிடப்பட்டு 31,398 தாய்மார்கள் பயன் பெற்றுள்ளனர்.

கல்வித்துறை

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் 76 பள்ளிகள் ரூ.168.97 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டது.

நிர்பயா திட்டத்தின்கீழ், ரூ.23.66 கோடி செலவில் 132 பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளின் நலனுக்காக கழிப்பறை வசதிகள் மற்றும் பெண் குழந்தைகள் சுகாதாரம் மேம்படுத்த 159 பள்ளிகளுக்குப் பாதுகாப்புடன் நாப்கின்களை பராமரிக்கும் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

நிர்பயா திட்டத்தின்கீழ் ரூ.5.47 கோடி செலவில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்த 159 பள்ளிகளில் கண்காணிப்புக் கேமராக்கள்.

நிர்பயா திட்டத்தின்கீழ் ரூ.6.91 கோடி செலவில் 93 பள்ளிகளில் பெண்குழந்தைகளின் உடல் திறனோடு பல்வேறு போட்டிகளில் பங்குபெற பாதுகாப்பான விளையாட்டுத் திடல்கள் / மைதானம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

போட்டித் தேர்வுகளை (மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், சட்டம் மற்றும் பேஷன் டெக்னாலஜி) எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும் பயிற்சிகள் அளிப்பதற்காக உண்டு உறைவிட மாதிரிப் பள்ளி (STEM ACADEMY OF EXCELLENCE) தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 11ஆம் வகுப்பு பயிலும் 36 மாணவ/மாணவிகள், 12ஆம் வகுப்பு பயிலும் 35 மாணவர்கள் மொத்தம் 71 மாணவ/மாணவியர்கள் கொண்டு வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ரூ.15 கோடி செலவில் Smart City திட்டத்தின் வாயிலாக 15,000 மாணவர்களுக்கு சாய்வு மேசை வழங்கப்பட்டது.

ரூ.1.50 கோடி செலவில் 2,000 ஆசிரியர்களுக்கான ICT பயிற்சி வழங்கப்பட்டது.

மாநில நிதிக்குழு ஆணைய திட்டத்தின் மூலம் 9 பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன.

இரண்டு மையங்களில் இயங்கும் சமுதாயக் கல்லூரிகளின் மூலம் மென்பொருள் கணினி, சுகாதார உதவியாளர்கள், துணை மருத்துவ படிப்புகள், அடுமனை & இனிப்பு தயாரித்தல் மற்றும் சணல் பை உற்பத்தி செய்தல் போன்ற பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

211 சென்னை நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு, பாலின சமத்துவம் குறித்தான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் மாணவர்களுக்கு பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

38 சென்னை உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளில் இணைய தள இணைப்பு (Internet Connection) வழங்கப்பட்டுள்ளது.

281 சென்னை தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் விதமாக ரூ.20 இலட்சம் செலவில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டது.

60 பள்ளிகளுக்கு மாண்டிசோரி உபகரணங்கள் மற்றும் 75 ஆசிரியர்களுக்கு மாண்டிசோரி பயிற்சி அளிக்கப்பட்டது.

ரூ.59 இலட்சத்தில் சிட்டிஸ் (CITIS) திட்டத்தின்கீழ் School Management System (SMS), Learning Resources Repository Management System (LRRMS) மற்றும் ரூ.2.45 கோடியில் School Leadership Development & Transformation (SLDT) சென்னைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் மற்றும் மூத்த ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ மேம்பாட்டிற்கான பயிற்சி.

முதற்கட்டமாக, 30 மாணவர்களுக்கு வெவ்வேறு பள்ளிகளில் இருந்து மட்டைப்பந்து (Cricket) மற்றும் 60 மாணவர்களுக்கு (மூன்று பள்ளிகளில் அதில் ஒன்று மாணவிகள் குழு) கால்பந்து (Football) விளையாட்டுகளில் தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சி.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது கடந்த கல்வியாண்டில் மண்டலம் 1, 3, 4 மற்றும் 5 ஆகியவற்றில் உள்ள 38 பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 5,520 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, 25.08.2023 முதல் விரிவாக்கம் செய்யப்பட்டு, 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களில் உள்ள 356 பள்ளிகளில் பயிலும் 65,013 மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாதிரி ஐக்கிய நாடுகள் (MUN) குழு மற்றும் இளைஞர்கள் பாராளுமன்ற குழுக்கள் (Youth Parliament) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாணவர்களின் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் அனைத்து சென்னைப் பள்ளிகளிலும் "பள்ளி இல்ல நூலகம்" (School Lending Library) திட்டம்.

சென்னைப் பள்ளி மாணவர்களின் ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்தும் நோக்கில் வாரந்தோறும் புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் காலை நேர வழிபாட்டு நிகழ்வுகள் ஆங்கிலத்தில் நடைபெற்று வருகிறது.

நமக்கு நாமே திட்டத்தின் (Namakku Naame Thittam)கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களின் பங்களிப்புடன் இணையதள வசதியுடன் ஸ்மார்ட் வகுப்புகள், தேவைப்படும் பள்ளிகளில் அமைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 22 பள்ளிகளில் 39 ஸ்மார்ட் பலகை ரூ.39 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சென்னைப் பள்ளிகளில், மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வரவும், நாள் முழுவதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கவும், முதல் பாட வேளையின்போது 10 நிமிடம் தினமும் மகிழ்ச்சியான வகுப்புகள் (Happy Class) நடத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்தினை கருத்தில்கொண்டு தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வருடத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அனைத்துப் சென்னைப் பள்ளிகளுக்கும் ரூ.6.27 இலட்சம் செலவில் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளிப் படிப்பிற்குப்பின் அவர்களின் எதிர்காலக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பினைப் பற்றி அறிந்து முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு வழிகாட்டும் விதமாக வழிகாட்டுதல் நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

5,384 பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் ஆவின் பால் தயாரிப்பு தொழிற்சாலை – சோழிங்கநல்லூர், பெரியார் அறிவியல் மையம், Birla Planetarium, அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவற்றினை பார்வையிட்டு ஊக்கம் பெறுவதற்காக ரூ.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ரூ.20 இலட்சம் செலவில் 10 மற்றும் 11ஆம் வகுப்புகளில் 100 சதவிகித மாணவர்களை தேர்ச்சி பெறவைத்தமைக்காக 408 ஆசிரியர்களை IIT மெட்ராஸ், American international School, ஒகேனக்கல், ஏற்காடு, கொடைக்கானல் போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

பள்ளிகள் அளவில் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, சிறந்த அறிவியல் மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனைத்து மண்டலங்கள் அளவில் இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

33 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.29.60 இலட்சம் செலவில் Public Address System வழங்கப்பட்டது.

சென்னை மாநகரப்பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் கணினி ஆய்வகங்களில் ரூ.5 இலட்சம் செலவில் தீயணைப்பான் கருவிகள் (Fire Extinguisher) பொருத்தப்பட்டுள்ளது.

20 பள்ளிகளுக்கு இசைக் கருவிகள் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

தானியங்கி மணி 179 சென்னைப் பள்ளிகளுக்கு ரூ.27.05 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, 2023-2024ஆம் கல்வியாண்டில் ஜனவரி மாதம் முதல் தேர்வு முடியும் (ஏப்ரல் மாதம்) வரை மாலையில் சிறுதீனி (அவித்த சுண்டல் அல்லது பயிறு வகைகள்) ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் 62 மாணவர்கள் 71 பாடங்களில் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். தலா ரூ.10,000 வழங்குவதற்கு ரூ.7,10,000க்கு மன்ற அனுமதி பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

259 பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்படிப்பு தொடர்வதற்காக ஊக்கத்தொகை ரூ.49 இலட்சம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

CITIIS விதிமுறைகளின்படி, பெருநகரச் சென்னை மாநகராட்சியுடன் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் இணைக்கப்பட்ட பள்ளிகளின் முகப்பில் சென்னைப் பள்ளிகளுக்கான சின்னங்கள் (Logo) அமைக்கும் பணி நிறைவடைந்தது. மேலும், Core City சென்னைப் பள்ளிகளிலும் சின்னங்கள் (Logo) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்கள் அனைவருக்கும் ரூ.62,06,647 மதிப்பீட்டில் T.Shirt வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் E-Book அவர்களது வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிவியல் பிரிவு மாணவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் இறுதி வாரத்தில் Inner Wheel of Madras உதவியுடன் உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சென்னைப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் நடத்தப்பட்டு 99 இடைநிலை ஆசிரியர்கள், 78 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 3 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

பணி நிரவல் மூலமாக 120 ஆசிரியர்களைக் கொண்டு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உபரி 195 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக மாற்றப்பட்டது.

ரூ.8 இலட்சம் செலவில் chandrayan 3 மாதிரி அமைப்பை வடிவமைத்து விளக்க இரண்டு திரையரங்கம் அமைக்கப்பட்டு 10,000 சென்னை பள்ளி மாணவர்கள் பயன் பெற்றனர்.

50க்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மாநகராட்சியுடன் இணைந்து சென்னைப் பள்ளிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் (Spoken English, Environmental Science, Robotics, STEM, Sports, Football Coaching, Life Skills, etc....) மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

அனைத்து சென்னை பள்ளிகளில் LKG வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளிச் சீருடைகள் தலா 2 எண்ணிக்கையில் 1,20,175 மாணவ, மாணவிகளுக்கு சீருடை துணிகள் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

ரூ.3.59 கோடி மதிப்பீட்டில், 338 பள்ளிகளில் பயிலும் 64,022 மாணாக்கர்களுக்கு (LKG முதல் 5 ஆம் வகுப்பு வரை) 1 செட் Shoe மற்றும் 2 செட் காலுறைகள் வழங்கப்பட்டது.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி நிலையத்தில் GEM Portal மூலம் புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. மிதிவண்டிகள் மற்றும் சீருடைகளும் வழங்கப்பட்டது.

அனைத்துப் பள்ளிகளிலும் தேவைப்படும் அவசர செலவின தேவைக்காக ரூ.1.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 208 சென்னை தொடக்கப்பள்ளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதமும், 130 சென்னை நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ.30,000/- வீதமும், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 சென்னை மேல்நிலைப் பள்ளிகள் என 81 பள்ளிகளுக்கு தலா ரூ.50,000/- வீதம் வழங்கப்பட்டது.

ரூ.92.95 இலட்சம் மதிப்பீட்டில் 338 பள்ளிகளுக்கு (208 தொடக்க மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகள்) தலா ஐந்து பச்சை வண்ணப் பலகைகள் வீதம் மொத்தம் 1,690 பச்சை வண்ண பலகைகள் வழங்கப்பட்டது.

ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் 35 மேல்நிலைப் பள்ளிகளில் சாரண, சாரணியர் மற்றும் தேசிய மாணவர் படை பயிற்சியில் உள்ள 2,050 மாணாக்கர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது.

ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் 419 சென்னை பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணாக்கர்களுக்கு வண்ண அடையாள அட்டை (ID Card) வழங்கப்பட்டது.

ஆழ்வார்பேட்டை மற்றும் புரசைவாக்கம் பகுதிகளில் செயல்பட்டு வரும் இரண்டு சமுதாயக் கல்லூரிகளில் மகளிருக்கு தொழிற்பயிற்சி அளிக்க பயிற்றுநர்களுக்கு ஊதியம் மற்றும் பயிற்சிக்கான பொருள்களுக்காக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ரூ.47.25 இலட்சம் மதிப்பீட்டில் 338 சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 4 மற்றும் 5-ஆம் வகுப்பில் பயிலும் 24,700 மாணாக்கர்களுக்கு சென்னையை சுற்றியுள்ள கல்வி சம்பந்தப்பட்ட இடங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது.

300 சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG மற்றும் UKG) பயிலும் குழந்தைகளுக்கு பாடத்திட்டத்தினை (Activity Based Learning), எளிதாக புரிந்து கொள்ளும் வகையில், புதிய பாடத்திட்டங்களுடன், விலையில்லா வண்ணப்புத்தகங்கள் ரூ.40.32 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை வழங்க மாநகராட்சிக்குட்பட்ட 10 வட்டாரங்களுக்கு தலா ஒரு ஆலோசகர் வீதம் 10 ஆலோசகர்கள் தற்காலிக பணியாளர்களாக நியமித்து ஆலோசனை வழங்க ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணாக்கர்களை கண்டறிந்து, அவர்தம் விருப்பத்தின்படி, குத்துச்சண்டை, ஜூடோ, கராத்தே, சதுரங்க விளையாட்டு, Carrom, TAEKWONDO, ATHLETIC போன்ற பயிற்சி அளிக்க தகுதி வாய்ந்த தற்காலிக பயிற்சியாளர்கள் நியமித்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்க, மேற்கூறிய போட்டிகளில் கலந்துக்கொள்ள ஏதுவாக மாணாக்கர்களை பயிற்சியாளர் அழைத்துச் சென்று வரும் செலவினங்களுக்காகவும் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

419 சென்னை பள்ளிகளில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் பள்ளிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை காட்சிப்படுத்தி பாராட்டிடவும், மாணாக்கர்களின் வளர்ச்சி மற்றும் வழிகாட்டும் விதமாக பள்ளி ஆண்டு விழா விமரிசையாக கொண்டாட ரூ.28.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

Gender Club செயல்பட்டு வரும் 162 நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கற்றலை எழுத்து வடிவமாக நோக்கும் வகையில் சிந்தனை சிறக்க "தடையை உடை" என்னும் விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு அதற்குரிய புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்க மற்றும் பயிற்சி அளிக்க ரூ.22.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 338 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி 75,793 மாணாக்கர்களுக்கு மொழி வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்களை வளர்க்க, பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி கையேட்டுடன் அளிக்கப்பட்டது. 140 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயின்று வரும் மழலையர் வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் காலை வழிபாட்டுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சியின்போது பள்ளி மாணாக்கர்கள் இசைக்கக் கூடிய வகையில் இசைக்கருவிகள் வழங்க 11 பள்ளிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ரூ.10 இலட்சம் நிதி மதிப்பீட்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 10-ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து 11-ஆம் வகுப்பு மேல்நிலைக் கல்வியை சென்னைப் பள்ளிகளிலேயே தொடரும் 50 மாணாக்கர்களை கல்விச் சுற்றுலாவாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம் போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டது.

ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் 11 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய பிரிண்டர்கள் வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களை தலைவர்களாக கொண்ட "குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்" அனைத்து சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டது.

சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணாக்கர்களின், சமூக நலனில் அவர்தம் பங்களிப்பினை ஊக்குவிக்கும் வகையில் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து முறையாக அகற்றும் விழிப்புணர்வை வாரந்தோறும் பள்ளிகளிலேயே ஆசிரியர்கள் மூலம் கற்றுத்தரப்பட்டது. சென்னைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவர்களிடையே கற்பனைத்திறன், படைப்பாற்றல், வாசிப்புத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் பள்ளி நூலகங்கள் இயக்கி வரும் பள்ளிகளுக்கு "நல்நூலகப்பள்ளி" என்ற பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சென்னைப் பள்ளிகளில் 1,20,175 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். அவர்களின் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் நோக்கோடு அனைத்து மாணவர்களின் வருகையில் கவனம் செலுத்தி மாணாக்கர்களின் வருகையை (EMIS) 95 விழுக்காட்டிற்கு மேல் உயர்த்திட உழைக்கும் பள்ளிகளுக்கு "Excellent School" என்ற பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சென்னைப் பள்ளிகளில் மழலையர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு (UKG) பயின்று மழலையர் படிப்பை நிறைவு செய்யும் 5,944 மாணவ, மாணவியர்களுக்கும், கற்றலைச் சிறப்பாக நிறைவு செய்தமையைப் பாராட்டியும் ஒன்றாம் வகுப்பில் சேருவதற்கான முழு தகுதியைப் பெற்றமையை பாராட்டியும் அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் விழா நடத்தி, மாணவ, மாணவியர்களுக்கு "பட்டம்" சான்று வழங்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மைத்துறை

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் இதுவரை மொத்த அளவான 34.28 இலட்சம் கன மீட்டரில் சுமார் 24 இலட்சம் கன மீட்டர் குப்பை திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-mining) பயனுள்ள பொருள்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைப்புப் பணிகள்.

கொடுங்கையூர் குப்பை கிடங்கில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் பிரித்தெடுக்க ரூ.648.38 கோடி மதிப்பீட்டில் SBM திட்டம் மற்றும் KfW நிறுவன நிதியின்கீழ் மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி. ஒப்பங்கள் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு அதற்கானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை சுமார் 2,37,727 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திடக் கழிவுகளை வீட்டுக்கு வீடு சென்று திறம்பட சேகரிப்பதற்காக 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகிய மண்டலங்களுக்கு 1,684 எண்ணிக்கையில் லித்தியம் அயன் பேட்டரியுடன் கூடிய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் ரூ.42.38 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8க்கு 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட உலோக குப்பைத் தொட்டிகள் 3,850 எண்ணிக்கையில், ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வீடுகள் தோறும் தரம் பிரித்தளிக்கப்படும் குப்பைகளை சேகரிக்க 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட எல்.எல்.டி.பி.இ குப்பைத் தொட்டிகள் 10,000 எண்ணிக்கையில் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 இல் பயன்பாட்டில் உள்ளது. மாதவரத்தில் பொது மக்கள் மற்றும் தனியார் பங்களிப்பில் (PPP mode) நாளொன்றுக்கு 100 டன் ஈரக்கழிவுகளை கொண்டு இயற்கை உயிரி எரிவாயு (பயோ-சி.என்.ஜி.) நிலையம்.

இயந்திரப் பொறியியல் துறை

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 59 எண்ணிக்கையில் கனரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் 30 எண்ணிக்கையில் இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் ரூ.36.52 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை துறை பயன்பாட்டிற்கென வழங்கப்பட்டுள்ளது.

நிர்பயா திட்டத்தின்கீழ், பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்த பெண்களின் பயன்பாட்டிற்கென 15 எண்ணிக்கையில் டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிப்பறைகள் ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மூன்று சக்கர மிதிவண்டிகளுக்கு மாற்றாக 2,034 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் (லித்தியம் அயன் பேட்டரி) தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.37.19 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.5 மீட்டர் அகலத்திற்கு குறைவாக உள்ள சிறிய கால்வாய்களை சுத்தம் செய்ய 2 எண்ணிக்கையிலான ரோபாடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்லேட்டர் ரூ.12.98 கோடி மதிப்பீட்டில் இயந்திரப் பொறியியல் துறையின் மூலதன நிதியின்கீழ் கொள்முதல்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து தடுப்பு மருந்து செலுத்தவும், இனக் கட்டுப்பாடு செய்யவும் கழிவு செய்யும் நிலையில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்றாக புதிதாக 6 எண்ணிக்கையில் நாய்பிடிக்கும் வாகனங்கள் ரூ.57 இலட்சம் செலவினத்திலும், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளில் சுற்றித் திரியும் கால்நடைகளை பிடிக்க 5 எண்ணிக்கையில் மாடு பிடிக்கும் வாகனங்கள் ரூ.1.22 கோடி செலவினத்திலும், இயந்திர பொறியியல் துறையின் மூலதன நிதியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவ பிரிவின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்துடன் ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) ஒன்றின் விலை ரூ.26.93 இலட்சம் வீதம் 3 எண்ணிக்கையில் மரக்கிளை நீக்கும் இயந்திரங்கள் ரூ.0.81 கோடி செலவினத்தில் இயந்திர பொறியியல் துறையின் மூலதன நிதியின்கீழ் கொள்முதல். பெருநகரச் சென்னை மாநகராட்சி அச்சக பிரிவிற்கு 2 எண்ணிக்கையில் Digital Duplicator Machine ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறையின் மூலதன நிதியின்கீழ் கொள்முதல்.

மழைநீர் வடிகால் துறை

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி)

ரூ.2,300 கோடி செலவினத்தில் கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால், 769 கி.மீ. நீளத்தில் ரூ.3,059 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி (ADB) நிதியின்கீழ் 46 சிப்பங்களில் பணிகள். 88.31 சதவிகிதப் பணிகள் நிறைவு. 30 இலட்சம் மக்கள் பயன்.

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கோவளம் வடிநிலப் பகுதி)

கோவளம் வடிநிலப் பகுதியில், M1, M2 மற்றும் M3 என்ற திட்டக் கூறுகளில் ரூ.1,715.25 கோடி மதிப்பீட்டில் 360 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள்.

முதற்கட்டமாக ரூ.150.45 கோடி மதிப்பீட்டில் 39.78 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள். 91.72 சதவிகிதப் பணிகள் நிறைவு.

இரண்டாம் கட்டமாக 9 சிப்பங்கள் ரூ.447.03 கோடி மதிப்பீட்டில் 120.55 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள். 87.34 சதவிகிதப் பணிகள் நிறைவு.

மூன்றாம் கட்டமாக ரூ.760.10 கோடியில் 140.70 கீ.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் அமைக்க 9 சிப்பங்களில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 9 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

சிதிலமடைந்த மழைநீர் வடிகால் இடித்து புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி

உலக வங்கி நிதியின்கீழ், மழைநீர் வடிகால்கள் அமைப்பதற்கு ரூ.120 கோடியில் 44.88 கி.மீ நீளத்தில் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.

உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் 9.81 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.

மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.7.40 கோடியில் 2.05 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைத்தல்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், சர்வதேசத் தரத்திற்கு சென்னை மாநகரை உயர்த்த ரூ.254.61 கோடியில் 55.71 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைத்தல்.





வெள்ள நிவாரண நிதியின்கீழ், ரூ.291.06 கோடியில் 107.59 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைத்தல்.

மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் 59.49 கி.மீ நீளத்திற்கு ரூ.232.35 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைத்தல்.

மூலதன நிதியின்கீழ் T.H. சாலை, இளையா தெரு, ஸ்டீபன்சன் சாலை மற்றும் GKM காலனி பகுதிகளில் 21.96 கி.மீ. நீளத்திற்கு ரூ.110.67 கோடியில் மழைநீர் வடிகால் அமைத்தல்.

நீர்நிலைகள் புனரமைக்கும் பணி

AMRUT 2.0 நிதியில் 5 நீர்நிலைகள் புனரமைக்கும் பணி ரூ.14.48 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள்.

20 நீர்நிலைகள் புனரமைக்கும் பணி சிங்காரச் சென்னை 2023-2024ஆம் ஆண்டு நிதியில் ரூ.10.07 கோடி மதிப்பீட்டில் 5 சிப்பங்களில் புனரமைக்கும் பணிகள்.

19 நீர்நிலைகள் புனரமைக்கும் பணி 2024-2025ஆம் ஆண்டு மூலதன நிதியில் ரூ.24.66 கோடி மதிப்பீட்டில் 19 சிப்பங்களில் புனரமைக்கும் பணிகள்.

சாலைகள் துறை

பேருந்துதட சாலைகள்

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ், ரூ.211.37 கோடி மதிப்பீட்டில் 197.50 கி.மீ நீளமுடைய 221 சாலைப் பணிகள்.

சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ், ரூ.84.57 கோடி மதிப்பீட்டில் 34.83 கி.மீ. நீளமுடைய 57 சாலைப் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.70.68 கோடி மதிப்பீட்டில் 72.56 கி.மீ. நீளமுடைய 102 சாலைப் பணிகள்.

நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ். ரூ.62.13 கோடி மதிப்பீட்டில் 49.14 கி.மீ. நீளமுடைய 69 சாலைப் பணிகள்.

மாநில நிதி ஆணையம் திட்டத்தின்கீழ், ரூ.77.74 கோடி மதிப்பீட்டில் 64.91 கி.மீ. நீளமுடைய 92 சாலைப் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.8.43 கோடி மதிப்பீட்டில் 4,681 பெயர்ப் பலகைகளை புதிதாக டிஜிட்டல் பெயர்ப் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் மெரினாக் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகள் கடல் அலை வரை சென்று பார்வையிட நிரந்தரப் பாதை அமைக்கும் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகள் கடல் அலை வரை சென்று பார்வையிட நிரந்தரப் பாதை அமைக்கும் பணிகள்.

உட்புறச் சாலைகள்

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.386.85 கோடி மதிப்பீட்டில் 711.28 கி.மீ. நீளத்தில் 4,396 உட்புற சாலைப் பணிகள்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.49.40 கோடி மதிப்பிட்டில் 95.54 கி.மீ. நீளத்தில் 710 உட்புறச் சாலைப் பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ், ரூ.18.88 கோடி மதிப்பீட்டில் 47.66 கி.மீ. நீளத்தில் 279 உட்புற சாலைப் பணிகள்.

சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ், ரூ.70.40 கோடி மதிப்பீட்டில் 169.44 கி.மீ. நீளத்தில் 1,102 உட்புற சாலைப் பணிகள்.

மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், ரூ.65.97 கோடி மதிப்பீட்டில் 111 கி.மீ. நீளமுடைய 646 உட்புற சாலைப் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.36.81 கோடி மதிப்பீட்டில் 68.89 கி.மீ. நீளமுடைய 498 சாலைப் பணிகள்.

நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ். ரூ.526.94 கோடி மதிப்பீட்டில் 882.08 கி.மீ. நீளமுடைய 5,801 சாலைப் பணிகள்.

மாநில நிதி ஆணையம் திட்டத்தின்கீழ், ரூ.245.84 கோடி மதிப்பீட்டில் 341.82 கி.மீ. நீளமுடைய 2,052 சாலைப் பணிகள்.

பாலங்கள் துறை

ரூ.888.56 கோடி மதிப்பீட்டில், பாலம், மேம்பாலம், இரயில்வே மேம்பாலம், நடைமேம்பாலம், ஆகாய நடைபாதை, சுரங்கப்பாதை, பெட்டக வடிவ பாலம், பாலம் புனரமைக்கும் பணி, மற்றும் பெட்டக வடிவ பாலம் என 25 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் ரூ.245.31 கோடி மதிப்பீட்டில் 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ரூ.643.25 கோடி மதிப்பீட்டில் 12 பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.741.96 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம், மேம்பாலம் மற்றும் பாலம் என 9 பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சிறப்புத் திட்டங்கள் துறை

முடிக்கப்பட்ட பணிகள்:

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.19.72 கோடி மதிப்பீட்டில் 3 நாய்கள் இன கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கும் பணி.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் 28 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.38.14 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரியைப் புனரமைத்தல், கரைகளில் மின்விளக்குகள், துருப்பிடிக்காத எஃகு கைப்பிடி அமைக்கும் பணிகள்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.7.44 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரியின் நடுவில் தொங்கு பாலம் அமைக்கும் பணி.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.78.55 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்வாரியம் மூலம் தியாகராய நகரில் ஒரு முனை மற்றும் மும்முனை மின்சாரம் ஸ்மார்ட் மீட்டர் நிறுவும் பணி.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.57.82 கோடி மதிப்பீட்டில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ABD பகுதியில் குடிநீர் விநியோகத்தை விரிவாக்கும் பணி.

ரூ.57.76 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் பேரிடர் கட்டுப்பாட்டு மையம் / ஸ்மார்ட் கவர்னன்ஸ் சென்டர் (Smart Governance Centre) பசுமைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

CITIIS திட்டத்தின்கீழ் ரூ.72 கோடி மதிப்பீட்டில் 28 பள்ளிகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

CITIIS திட்டத்தின்கீழ் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் 600 தலைமை ஆசிரியர்களுக்கு மேலாண்மை, Happy Class Room மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்.

CITIIS திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயிற்சி.

CITIIS திட்டத்தின்கீழ் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் XI ஆம் வகுப்பு மற்றும் XIIஆம் வகுப்பு பயிலும் 80 மாணவர்களுக்கு JEE, NEET தேர்வுகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு (TURIF) நிதியின்கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 2.1 கி.மீ. நீளத்தில் கஸ்தூரிபாய் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் முதல் திருவான்மியூர் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் வரை பக்கிங்ஹாம் கால்வாய் வரையில் நடைபாதை மற்றும் மிதிவண்டிப் பாதை அமைத்து சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் பணி.

நடைபெற்று வரும் பணிகள்:

ரூ.4.79 கோடியில் நிர்பயா நிதியின்கீழ், சென்னை பெருநகர மாநகராட்சி மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்ஸ் வழங்கும் திட்டம்.

நிர்பயா நிதியின்கீழ், பாலின நிகர் மேம்பாட்டிற்காக ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் மூன்று கலந்தற்குரியர் நியமிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

ரூ.18.87 கோடி மதிப்பீட்டில் நிர்பயா நிதியின்கீழ், சென்னைப் பள்ளியின் கழிப்பறைகளை மேம்படுத்தும் பணிகள்.

நிர்பயா திட்டத்தின்கீழ் ரூ.4.06 கோடி செலவில் 17 பள்ளிகளில் விளையாட்டுத் திடல்கள் / மைதானம் அமைக்கும் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் விக்டோரியா பொது மண்டபத்தின் அதன் பழமையான தொன்மை மாறாமல் பாதுகாப்பு, புத்துயிர் மற்றும் நில அதிர்வினைத் தாங்கும் வகையில் மறுசீரமைப்புப் பணிகள்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.7.90 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட வில்லிவாக்கம் ஏரிக்கு அருகில், கூடுதல் குளம் அமைக்கும் பணி. மண்டலம்-5, 6 மற்றும் 9இல் (மெரினா) பொது வசதிக்கான கழிப்பறையை வடிவமைத்தல், உருவாக்குதல், நிதி செய்தல், இயக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் (DBFOT) ரூ.430.11 கோடி மதிப்பீட்டில் 372 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகரத் திறன்மிகு போக்குவரத்து திட்டம் (JICA) நிதியின்கீழ், ரூ.530 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகரப் பகுதியில் நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பு திட்டத்தை செயல்படுத்தும் பணிகள்.

பெருநகர சாலைத் திட்டத்தின் (Mega Street) கீழ் ரூ.19.81 கோடி மதிப்பீட்டில் காதர் நவாஸ் கான் (KNK) சாலையில் பணிகள். பெருநகர சாலைத் திட்டத்தின் (Mega Street) கீழ் ரூ.26.23 கோடி மதிப்பீட்டில் மோனிகர் சௌத்ரி (MC) சாலையில் பணிகள்.

பெருநகர சாலைத் திட்டத்தின் (Mega Street) கீழ் ரூ.20.75 கோடி மதிப்பீட்டில் கிண்டி ரேஸ்கோர்ஸ் சாலையில் பணிகள். புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்திலிருந்து QQ திட்ட சாலை வரை) ரூ.64.14 கோடி மதிப்பீட்டில் சாலை மறுசீரமைப்பு பணிகள்.

CITIIS திட்டத்தின்கீழ் 10க்கும் மேற்பட்ட பள்ளிகள் ரூ.49 கோடியில் முழுமையாக மாற்றப்பட்டு வருகின்றன. ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் 'இளம் பருவத்தினருக்கான அதிகாரமளித்தல் மற்றும் உருமாற்றத் திட்டம்' என்ற முன்னோடித் திட்டத்தின் மூலம் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. 200க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் ஸ்மார்ட் போர்டுகளுடன் பொருத்தப்பட உள்ளன.

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான நூலகங்கள் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு (SASCI) திட்டத்தின்கீழ், பொது நூலக இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட 13 இடங்களில் ரூ.2.86 கோடி மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டடம் கட்டுதல்.

மெரினாக் கடற்கரையில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் நீலக் கொடி கடற்கரைத் திட்டத்தை செயல்படுத்துதல்.

மின்துறை

ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரிப்பன் மாளிகையை மாறுபடும் வண்ண விளக்குகளால் (RGB Dynamic lighting) ஒளிரூட்டும் பணி.

வில்லிவாக்கம் குளம், மாறுபடும் வண்ண விளக்குகளால் (Dynamic lighting) ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் ஒளிரூட்டும் பணி. பெண்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட நிர்பயா திட்டத்தின்கீழ் பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மிகவும் துருபிடித்த மற்றும் உயரம் குறைவான தெரு விளக்கு மின் கம்பங்களை மாற்றுவது என ஆக மொத்தம் ரூ.68.99 கோடி மதிப்பீட்டில் 13,579 புதிய தெரு விளக்கு கம்பங்கள் மற்றும் 12,213 எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை

பூங்காக்கள்

சென்னை நகரத்தை அழகுபடுத்தவும், பசுமையை மேம்படுத்தவும், பெருநகரச் சென்னை மாநகராட்சி, குடியிருப்பு நலச் சங்கத்துடன் இணைந்து 3,89,075 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. சிங்காரச் சென்னை திட்டத்தின்கீழ் ரூ.80.66 கோடி மதிப்பில் 206 பூங்காக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு 186 பூங்கா பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் 20 பூங்காக்கள் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் 31 புதிய நீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1 அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM PARK) ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

விளையாட்டுத் திடல்கள்

பெருநகரச் சென்னை மாநகராட்சியின்கீழ் 542 விளையாட்டு மைதானங்கள் பராமரித்து வருகிறது. அதில் 296 குழந்தைகள் விளையாட்டு மைதானங்கள், 246 விளையாட்டு மைதானங்கள் அடங்கும். மேலும் 37 கால்பந்து மைதானங்கள், 33 டென்னிஸ் மைதானங்கள், 68 வாலிபால் மைதானங்கள், 99 பூப்பந்து மைதானங்கள், 30 கூடைப்பந்து மைதானங்கள், 11 கபடி மைதானங்கள், 183 உடற்பயிற்சி கூடங்கள், 3 நீச்சல் குளங்கள் 28 ஸ்கேட்டிங் மைதானங்கள், 9 ∴புட்சல் மைதானங்கள், 4 குத்துச்சண்டை மைதானங்கள், 3 ஹாக்கி மைதானங்கள், மற்றும் 5 மட்டை பந்து மைதானங்கள்.

சிங்காரச் சென்னை திட்டத்தின்கீழ் 110 விளையாட்டு மைதானங்கள் ரூ.45.36 கோடியில் எடுத்துக்கொள்ளப்பட்டு 98 விளையாட்டு மைதானப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும் 12 விளையாட்டுத் திடல்கள் பணி நடைபெற்று வருகிறது.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

பெருநகரச் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின்கீழ் மதிப்பிடப்பட்ட செலவு ரூ.4.5 கோடி மதிப்பில் GCC எல்லையில் வரிசைக்கு அப்பால் உள்ள பக்கின்ஹாம் கால்வாயில் அழகுபடுத்தும் பணிகள் 6 இடங்கள், சாலையோர பூங்காக்கள் மற்றும் அழகுபடுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கட்டடத் துறை

முடிவடைந்த பணிகள்

ரூ.48.17 கோடி மதிப்பீட்டில் 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணி.

ரூ.5.76 கோடி மதிப்பீட்டில் 8 இரவு தங்குமிடம்.

ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்கள்.

ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் 5 லாரி நிலையங்கள் மேம்படுத்தும் பணி.

ரூ.78 இலட்சம் மதிப்பீட்டில் ஐடிஐ (தொழில்துறை பயிற்சி நிறுவனம்) கட்டடப் பணிகள்.

ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் எம்.ஜி.ஆர். நகர் மயான பூமியில் எல்.பி.ஜி. தகனம் அமைக்கும் பணி.

ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு அறை.

மண்ணடி அம்மன் கோயில் தெருவில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டும் பணி.

ரூ.67 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு அலுவலகக் கட்டடம் வார்டு – 178இல் கட்டி முடிக்கப்பட்டது.

லஸ் அவென்யூ பகுதியில் ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் கலை மற்றும் கலாச்சாரக் கட்டடம்.

ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2022–2023) திட்டத்தின்கீழ் ஆடு இறைச்சிக் கூடம் (சைதாப்பேட்டை).

ரூ.3 கோடி மதிப்பீட்டில் நிர்பயா நிதியின்கீழ் காம்தார் நகரில் இரவு தங்கும் விடுதி.

ரூ.50.59 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2021–2022) திட்டத்தின்கீழ் 23 பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள்.

ரூ.6.14 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2021–2022) திட்டத்தின்கீழ் 10 மயான பூமிகள் எல். பி.ஜி. அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மாற்றுதல் திட்டப் பணிகள்.

ரூ.30.88 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2022–2023) திட்டத்தின்கீழ் 11 பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள்.

ரூ.22.40 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2022–2023) திட்டத்தின்கீழ் 27 மயான பூமிகள் உள்ள எல்.பி.ஜி. அமைப்பை மாற்றும் திட்டப் பணிகள்.

ரூ.7.74 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2023–2024) திட்டத்தின்கீழ் 8 பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் மற்றும் ரூ.5.23 கோடி மதிப்பீட்டில் 4 மயான பூமிகள் உள்ள எல்.பி.ஜி. திட்டப் பணிகள்.

ரூ.24.27 கோடி மதிப்பீட்டில் 2 நகர்ப்புர சமூக சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள்.

ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் மீன் சந்தை (லூப் சாலை). மற்றும் ரூ.2.68 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2022–2023) திட்டத்தின்கீழ் ஒரு மீன் சந்தை (சிந்தாதிரிப்பேட்டை).

நடைபெற்று வரும் பணிகள்

ரூ.22 கோடி மதிப்பீட்டில் மூன்று நகர்ப்புர சமூக சுகாதார நிலையங்கள் கட்டும் பணி.

20 எண்ணிக்கையிலான நகர்புற சுகாதார மையங்கள் ரூ.29.46 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகிறது.

ரூ.6.30 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் ஒரு பகுதியினை மேம்படுத்தும் பணி.

ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டம் மற்றும் தேசிய நகர்ப்புர வாழ்வாதாரப் பணி திட்டத்தின்கீழ் தாய்மார்கள் காத்திருப்பு மற்றும் கேண்டீன் கட்டடம் அமைக்கும் பணி.

ரூ.35.69 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 (2022–2023) திட்டத்தின்கீழ் 8 பள்ளிக் கட்டடங்கள் கட்டும் பணி. மற்றும் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் 1 மயான பூமி கட்டுமானப் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 (2023–2024) திட்டத்தின்கீழ் ரூ.41.56 கோடி மதிப்பீட்டில் 25 பள்ளிகள், ரூ.17.33 கோடி மதிப்பீட்டில் 11 மயானபூமிகள் மற்றும் ரூ.46.61 கோடி மதிப்பீட்டில் 6 சமுதாய நலக் கூடங்கள் கட்டும் பணிகள்.

மூலதன நிதியின்கீழ் ரூ.27.70 கோடியில் 19 எண்ணிக்கையிலான கூடுதல் பள்ளி கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் 142 எண்ணிக்கையிலான ரூ.34.81 மதிப்பீட்டில் பள்ளி கட்டங்களை மேம்படுத்தும் பணிகள், 13 எண்ணிக்கையிலான கோசாலைகள் (மாட்டு தொழுவம்) ரூ.18 கோடியில் மதிப்பீட்டில் மூலதன நிதியின்கீழ் நடைபெறுகின்றன.

295 எண்ணிக்கையிலான அம்மா உணவகங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.17.76 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

ரூ.45 கோடியில் புளியந்தோப்பில் அமைந்துள்ள இறைச்சி கூடம் கட்டும் பணியானது வடசென்னை வளர்ச்சி திட்ட நிதியின்கீழ் நடைபெறுகிறது. ரூ.98.02 கோடி மதிப்பீட்டில் 7 பள்ளி கட்டடங்கள், 9 உடற்பயிற்சி கூடங்கள், 1 சமூக நலக்கூடம், 1 நகர்புற சுகாதார மையம் மேம்படுத்தும் பணி, 2 பேருந்து நிலையம், 4 எண்ணிக்கையிலான எரிவாயு தகன மேடைக்கூடம் 1 போதை மறுவாழ்வு மையம் மற்றும் 1 மகப்பேறு மருத்துவ மையம் அமைக்கும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. 1 எண்ணிக்கையிலான விலங்கு பிறப்பு கட்டுப்பாடு மையம் (ரூ.1.5 கோடி) மற்றும் 2 எண்ணிக்கையிலான அறிவு சார் மையம் (ரூ.4.20 கோடி) கட்டும் பணி.

சைதாப்பேட்டையில் அமைந்துள்ள காய்கறி அங்காடியானது ரூ.23.97 கோடி திட்ட மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் நடைபெறுகிறது.

பொதுத்துறை

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் முதல்வரின் முகவரி துறையின் மூலம் 79,781 மனுக்கள் பெறப்பட்டு, 74,178 மனுக்களுக்கு தீர்வு.

953 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.

வருவாய்த்துறை

சொத்துவரி ரூ.5,806.86 கோடியும் மற்றும் தொழில் வரி ரூ.1,830.69 கோடியும் கடந்த நான்கு ஆண்டுகளில் வசூல்.

சமுதாய நலக் கூடம்

சமுதாய நலக்கூடம் இணையதளம் மூலம் முன்பதிவு செய்யும் பணி 14.08.2024 தொடங்கப்பட்டு, பொதுமக்கள் பயன்.

சிங்கன்ன தெரு சிந்தாதிரிப்பேட்டை, சந்திரயோகி சமாதி தெரு, சி.பி.ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை மற்றும் நேவல் மருத்துவமனை சாலை ஆகிய இடங்களில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய சமுதாய நலக்கூடம் கட்டும் பணி.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம்

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 134 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 10 மாநகராட்சிகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,429 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ரூ.2,325.02 கோடி செலவில் 1,036 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

நமக்கு நாமே திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, ரூ.550 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவற்றில் 865 பணிகள் அனுமதிக்கப்பட்டு ரூ.249.07 கோடி மாநகராட்சிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகராட்சிப் பகுதிகளில் 1,522 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.203.90 கோடி அனுமதிக்கப்பட்டு, பொதுமக்கள் பங்களிப்பாக ரூ.171.56 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 2021-2023ஆம் நிதி ஆண்டு வரை 2,04,860 நபர்களுக்கு வேலைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ் 220 உள்ளாட்சிகளில் உள்ள 2,256 பள்ளிகளில் 2,00,472 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.118.59 கோடி நிதி ஒதுக்கீடு.

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்) கீழ், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான செயல் திட்டம், 45,562 தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் (IHHL), 874 பொது கழிப்பறைகள், 614 சிறுநீர் கழிக்கும் இடங்கள், 154 நுண் உரக்கூடங்கள் (Micro Composting Centre) மற்றும் 561 பொருள் மீட்பு வசதிகள் (Material Recovery Facility) கட்ட அனுமதி.

15ஆவது மத்திய நிதிக்குழு மானியத்தின்கீழ் 1,196 மின்கல வாகனங்கள் ரூ.25.13 கோடி மதிப்பீட்டிலும் 968 எண்ணிக்கையிலான இலகு ரக வாகனங்கள் ரூ.70.66 கோடி மதிப்பீட்டிலும் அனுமதிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அம்ரூத் - 2.0 திட்டத்தின்கீழ் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் இதுவரை 3 கட்டங்களில் ரூ.6,513.25 கோடி மதிப்பீட்டில் 446 குடிநீர் பணிகள், பூங்கா மேம்பாடு மற்றும் நீர் நிலைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 308 பணிகள் முடிக்கப்பட்டு 138 பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் 11 மாநகராட்சிகளில் ரூ.10,797.69 கோடி மதிப்பிலான 730 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 708 பணிகள் ரூ.9,441.23 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 22 பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை, மேற்படி 22 பணிகளையும் சேர்த்து ரூ.10,365.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உள்ள பழுதடைந்த 11,872 கி.மீ. நீளமுள்ள சாலைகளில், 9,109 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பல்வேறு திட்டங்களின் மூலம் ரூ.4,509 கோடியில் சீரமைக்க அனுமதி.

உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ், 28 புதிய பேருந்து நிலையப் பணிகள் ரூ.960.17 கோடி திட்ட மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் நாமக்கல்

மாநகராட்சி பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. கூடலூர் (தேனி), மேலூர் மற்றும் குளச்சல் நகராட்சி பேருந்து நிலையம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 9 பேருந்து நிலையங்கள் 90 சதவிகிதமும் மேலும், 8 பேருந்து நிலையங்கள் 85 சதவிகிதத்திற்கு மேலும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இவற்றில் 7 பேருந்து நிலையங்கள் 60 சதவிகிதத்திற்கு மேல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 18 புதிய பேருந்து நிலையங்கள் ரூ.38.74 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மூலதன மானிய நிதியின்கீழ் 9 புதிய பேருந்து நிலையங்கள் ரூ.32.21 கோடி திட்ட மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

புதியதாக தரம் உயர்த்தப்பட்ட 28 நகராட்சிகளுக்குப் புதிய அலுவலகக் கட்டடம்/ கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் சிறப்பு நிதி ஒவ்வொரு நகராட்சிக்கும் தலா ரூ.2 கோடி வீதம் ரூ.56 கோடி நிதி ஒதுக்கீடு 18 நகராட்சிகளுக்கு அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளதுடன், 10 நகராட்சிகளில் அலுவலக கட்டடப்பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பொன்னேரி, குன்றத்தூர், மானாமதுரை, மதுக்கரை, புகழூர், களக்காடு, சுரண்டை நகராட்சிகளில் சிறப்பு நிதியின்கீழ் ரூ.10.46 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, வணிக வளாகக் கட்டடம், சமுதாய நலக்கூடம், திருமண மண்டபம் அமைக்கும் பணிகள்.

அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் 14 மாநகராட்சிகளில் ரூ.3,360.64 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள்.

23 மாநகராட்சிகள் மற்றும் 112 நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகளில் ஏற்கெனவே உள்ள 3,53,696 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் புதிதாக 1,09,193 எண்ணிக்கையிலான LED தெரு விளக்குகள் ரூ.577.28 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை இதுவரை 4,37,666 LED விளக்குகள் நிறுவப்பட்டு 94% பணிகள் நிறைவடைந்துள்ளன.

ரூ.110.46 கோடி மதிப்பீட்டில் 6ஆவது மாநில நிதிக்குழு பரிந்துரையின் படி பள்ளி மேம்பாட்டு மானியத்தில் மாநகராட்சிகளில் 231 புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும்பணிகள்.ரூ.99.45கோடிமதிப்பீட்டில்நகராட்சிகளில்உள்ளபள்ளிகளுக்கு248புதிய வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு 142 பணிகள் முடிக்கப்பெற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு 535 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை மராமத்து செய்யும் பணிகள் ரூ.84.36 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு அனுமதி. 2024-2025 ஆம் ஆண்டில் மாநகராட்சிப் பகுதிகளில் 9 வகுப்பறை மற்றும் கழிப்பறைகள் ரூ.50.65 கோடி மதிப்பீட்டில் நகராட்சிப் பகுதிகளில் 361 வகுப்பறை மற்றும் கழிப்பறைகள் ரூ.53.93 கோடி மதிப்பீட்டில் மராமத்து பணி மேற்கொள்ள அனுமதி. 409 பணிகள் முடிக்கப்பெற்று உள்ளன.

சுற்றுலா நகரங்கள் மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் 2022-2023ஆம் நிதி ஆண்டு முதல் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு சிறப்பு மானியமாக ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.12.05 கோடி நிதி ஒதுக்கீடு.

நகர்ப்புர பசுமையாக்கத்தின்கீழ் 42 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உயிரி செயலாக்கத்தின் (Bio-Mining) கீழ் மீட்டெடுக்கப்பட்ட 132.34 ஏக்கர் நிலத்தில் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் 59,523 மரங்களில் 41 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 57,217 மரங்கள் நடப்பட்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை புற நகர்ப்பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு 99.87 கி.மீ. நீளத்திற்கு ரூ.227.39 கோடி மதிப்பீட்டில் 74 மழைநீர் வடிகால் பணிகளும் முடிவுற்றுள்ளன.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் 177 புதிய தங்குமிடங்கள் ரூ.97.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் தெருவோர வியாபாரிகளுக்கு 4,577 இலகுரக வண்டிகள் ரூ.35.28 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு

வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிகளில் 10 விற்பனை சந்தைகள் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தற்போது தெருவோர வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணிகளை கருத்திற்கொண்டு, புதிதாக 6 மாநகராட்சிகளும், 28 நகராட்சிகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024-2025 ஆம் ஆண்டில் 3 பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், 4 நகராட்சிகள் மாநகராட்சிகளாகவும் தரம் உயர்வு.

தூய்மை பணியாளர் மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியார் துறை மற்றும் நிறுவனங்களில் மலக்கழிவு தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டுள்ள நிரந்தர மற்றும் முறைசாரா தூய்மைப் பணியாளர்கள் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி.

அரசாணை எண்.3(ப) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME2) துறை, நாள். 09.10.2023இன் படி இத்திட்டத்திற்கென ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய வழிகாட்டு நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி ரூ.10 கோடி அரசின் பங்களிப்பும், மீதமுள்ள ரூ.40 கோடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகும். இத்திட்டத்தினை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நகர்ப்புற மேலாண்மை மையம் (Urban Management Centre) அகமதாபாத் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்பட்டு 95,077 தூய்மைப் பணியாளர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரிந்து பணியிடையே காலமான பணியாளர்களின் வாரிசுகளான 1,423 நபர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் மூலமாக கருணை அடிப்படையில் பணி நியமனம்.

அனைத்து வகையான நகர்ப்புர சேவைகளை குடிமக்கள் தங்கள் இல்லங்களிலேயே பெற உறுதிப்படுத்தும் வகையில், 'நமது சேவையில் நகராட்சி மற்றும் மக்கள் சேவையில் மாநகராட்சி' என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

நகராட்சி நிர்வாகத்தில் மின் ஆளுகை மூலம் பணிகளை கையாள்வதற்கு, "மையப்படுத்தப்பட்ட வலைதள மின் ஆளுகை பயன்பாடு" (UTIS - Urban Tree Information System) என்ற சீரிய திட்டம் ரூ.18.31 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 24 மாநகராட்சிகள் மற்றும் 134 நகராட்சிகளில் அனைத்து மின் ஆளுகை சேவைகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கையடக்க சாதனம் மூலம் (Hand Held Device) வரிவசூல் பணிகள் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு இதற்கான இரசீதுகள் பதிவுசெய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு மறைக்குறியாக்கப்பட்ட குறுஞ்செய்தியாக (Encrypted SMS) அனுப்பப்படுகிறது.

24 மாநகராட்சிகள் மற்றும் 134 நகராட்சிகளில் மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாநகராட்சிகளில் இதுவரை பெறப்பட்ட 10,120 மனுக்களில் 97% மனுக்களுக்கும், நகராட்சிகளில் பெறப்பட்ட 34,238 மனுக்களில் 90% மனுக்களுக்குத் தீர்வு.

முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் மாநகராட்சிகளில் இதுவரை பெறப்பட்ட 36,145 மனுக்களில் 86% மனுக்களுக்கும், நகராட்சிகளில் பெறப்பட்ட 66,245 மனுக்களில் 74% மனுக்களுக்குத் தீர்வு.

பேரூராட்சிகள் ஆணையரகம்

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தில் 2021-2022 முதல் 2024-2025-ஆம் ஆண்டு வரை பேரூராட்சிகளுக்கு ரூ.1,570.84 கோடி மதிப்பீட்டில் 2,937 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, பேரூராட்சிகளுக்கு ரூ.148.37 கோடி மதிப்பீட்டில் 1,287 பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் 507 பணிகள் மூலம் 15,95,441 மனித வேலை நாள்கள் உருவாக்கம்.

மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.782.91 கோடி மதிப்பீட்டில் 607 பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நபார்டு நிதி உதவி திட்டத்தின்கீழ் ரூ.802.10 கோடி மதிப்பீட்டில் 671 சாலைப் பணிகள்.

டார்மான்ட் நிதியின்கீழ் ரூ.104.69 கோடி மதிப்பீட்டில் 97 சாலைப் பணிகள்.

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தின்கீழ் ரூ.292.35 கோடி மதிப்பீட்டில் 772 பணிகள். தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.504.87 கோடி மதிப்பீட்டில் 1,380 சாலைப் பணிகள்.

நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.456 கோடி மதிப்பீட்டில் 2,049 சாலைப் பணிகள்.

மாநில நிதிக்குழு (நகர்ப்புர சாலை மேம்பாட்டு நிதி) திட்டத்தின்கீழ் ரூ.217.52 கோடி மதிப்பீட்டில் 724 சாலைப் பணிகள்.

15ஆவது நிதி ஆணைய மானியத் திட்டத்தின்கீழ் ரூ.670.71 கோடி மதிப்பீட்டில் நிபந்தனை மானியத்தின்கீழ் 8,808 பணிகள் மற்றும் ரூ.487.44 கோடி மதிப்பீட்டில் நிபந்தனையற்ற மானியத்தின்கீழ் 5,154 பணிகள் நடைபெற்று வருகின்றன.

15ஆவது நிதி ஆணைய மானியத்தின்கீழ் ரூ.91.15 கோடி மதிப்பீட்டில் 211 தேசிய சுகாதார மைய பணிகள்.

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புரம்) கீழ், 36,581 தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் (IHHL), 378 சமுதாய கழிப்பறைகள் 50 பொது கழிப்பறைகள், 185 சிறுநீர் கழிப்பிடம், 105 உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளில் 410 உர உலர் களமேடை, 391 வளமீட்பு மையம், 51 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், 185 கழிவுநீர் அகற்று வாகனங்கள்.

அம்ரூத் – 2.0 திட்டத்தின்கீழ் ரூ.215.31 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாடு மற்றும் நீர் நிலைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.

ரூ.89.17 கோடி திட்ட மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 42 பேருந்து நிலையங்களும், மூலதன மானிய நிதியின்கீழ் 2 பேருந்து நிலையங்களும் ஆக மொத்தம் 44 பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

439 பேரூராட்சிகளில் ரூ.155.56 கோடி மதிப்பீட்டில், மாநில நகர்ப்புர உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் மின் சேமிப்பு ஆற்றல்மிகு விளக்குகளாக (எல்.இ.டி) மாற்றியமைத்திட பணிகள்.

பள்ளி மேம்பாட்டு மானியத் திட்டம் ரூ.174.04 கோடி மதிப்பீட்டில் 787 எண்ணிக்கையில் மூலதனம் மற்றும் மேம்பாட்டு பணிகள்.

மாநிலத்திலுள்ள 168 பேரூராட்சிகளில் தலா ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.36.96 கோடியில் புதிய நூலக பணிகள்.

சுற்றுலா மேம்பாடு நிதியின்கீழ் 12 பேரூராட்சிகளுக்கு ரூ.6 கோடி நிலையான மானியம் மற்றும் 27 பேரூராட்சிகளுக்கு ரூ.1.50 கோடி வேறுபட்ட மானியம் ஒதுக்கீடு.

தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தின்கீழ் சாலையோர வியாபாரிகளை கண்டறிய கணக்கெடுப்பு பணிகளுக்கு ரூ.2.57 கோடி ஒதுக்கீடு. நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி பேரூராட்சியில் 228 சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் தள்ளுவண்டிகள் விநியோகம். நகர்ப்புற வீடற்றவர்களுக்கு தங்குமிடம் திட்டத்தின்கீழ் 4 பேரூராட்சிகளுக்கு ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல்.

தெருக்களில் ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான உணவு மையங்கள் அமைத்தலின்கீழ் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாமல்லபுரம் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிகள் தேர்வு.

பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்) அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 14,669 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல்.

தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 24,787 முக்கிய தூய்மை பணியாளர்கள் கணக்கெடுக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

அயோத்தி தாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.114.98 கோடி மதிப்பீட்டில் 663 பணிகள்.

பழங்குடியினர் நலத்திட்டத்தின்கீழ் 4 மாவட்டங்களில் பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர்களுக்கு 85 பணிகளுக்கு ரூ.2.03 கோடி நிதி ஒதுக்கீடு.

பேரூராட்சிகளில் பணிபுரிந்த காலத்தில் இயற்கை எய்திய 124 அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்.

2022-ஆம் ஆண்டு சிறப்பாக செயல்பட்ட கருங்குழி, கன்னியாகுமரி மற்றும் சோழவந்தான் மற்றும் 2024ஆம் ஆண்டுக்கு சூலூர், எஸ். கண்ணனூர், கல்லிடைக் குறிச்சி பேரூராட்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது".

2023-ஆம் ஆண்டு சிறப்பாக செயல்பட்ட விக்கிரவாண்டி, ஆலங்குடி மற்றும் சோழவந்தான் பேரூராட்சிகளுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது". 2023-ஆம் ஆண்டு சிறப்பாக செயல்பட்ட கீழ்வேளூர் பேரூராட்சிக்கு ஸ்வச் ஸ்வரகூன் விருது வழங்கும் விழாவில் "ஸ்வச் ஸ்வரகூன் விருது 2023".

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், கடந்த 43 ஆண்டுகளில் முதல் முறையாக நாளொன்றுக்கு சராசரியாக 1,000 மில்லியன் லிட்டர் குடிநீர் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவ மழையின்போது தேங்கியிருந்த மழைநீரை விரைந்து வெளியேற்றுவதற்கு 73 நீர் உறிஞ்சும் வாகனங்களும், கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய 191 ஜெட்ராடிங் இயந்திரங்களும், 45 உறிஞ்சும் திறன் உடைய ஜெட்ராடிங் இயந்திரங்களும், 299 தூர்வாரும் ஆட்டோக்களும், 2,000 களப்பணியாளர்களைக் கொண்டும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட திட்டங்கள்

ரூ.107.74 கோடி மதிப்பீட்டில் பெருநகரச் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், மாத்தூர், ஜல்லடியான்பேட்டை ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவந்த குடிநீர் வழங்கல் பணிகள் முடிக்கப்பட்டு, 76,749 மக்கள் பயன்.

ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர், கூடுதல் கழிவு நீரிறைக்கும் நிலையம் பணிகள் முடிக்கப்பட்டு 2,50,000 மக்கள் பயன்.

ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் கரையோரம் இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

ரூ.170.97 கோடி திட்ட மதிப்பீட்டில் கொடுங்கையூரில் 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு.

ரூ.82.61 கோடி திட்ட மதிப்பீட்டில் புழல், புத்தகரம், சூரப்பட்டு மற்றும் கதிர்வேடு பகுதிகளுக்கான விரிவான குடிநீர் வழங்கல் திட்டம்.

நெசப்பாக்கத்திலிருந்து தினசரி ஒரு கோடி லிட்டர் உயர்தர மறுசுழற்சி நீர் நிலையம் (TTUF) அமைத்தல். போரூரில் 60 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP) - திட்ட மதிப்பீடு ரூ.47.24 கோடி.

ரூ.16.16 கோடியில் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ் அடையாறில் கலக்கும் கழிவுநீரை தடுத்து மாற்று வழிகள் அமைத்தல்.

ரூ.6.36 கோடியில் நந்தனம் விரிவாக்கம், டர்ன்புல்ஸ் ரோடு பகுதியில் கழிவுநீர் அமைப்புடன் இணைத்தல், கழிவுநீர் திட்டப் பணிகள்.

ரூ.5.04 கோடியில் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில் மற்றும் மாம்பலம் கால்வாயில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்கும் பணிகள்.

ரூ.18.73 கோடியில் கிண்டி மற்றும் ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் அடையாறில் நேரடியாக கலக்கும் கழிவுநீரைத் தடுக்கும் பணிகள்.

ரூ.10.62 கோடியில் ஜாபர்கான்பேட்டை மற்றும் சாமியார் தோட்டம் பகுதியில் அடையாறில் நேரடியாக கலக்கும் கழிவுநீரை கழிவுநீரிறைக்கும் நிலையங்களுக்கு அனுப்பும் பணிகள்.

ரூ.4.31 கோடியில் அடையாறில் மழைநீர் வடிகால் மூலமாக கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்க நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள்.

ரூ.14.21 கோடியில் மாம்பலம் கால்வாய் வழியாக அடையாறில் கலக்கும் கழிவுநீரை சுத்திகரிக்க சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணிகள்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகம் ரூ.24.92 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, புகார் பிரிவை மேலும் மேம்படுத்துவதற்காக, ரூ.1.13 கோடியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ரூ.19.98 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், வார்டு-157-இல் விரிவான குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் 46,700 மக்கள் பயன்.

ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், உத்தண்டி விரிவான குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு 8,940 மக்கள் பயன்.

ரூ.73.61 கோடி மதிப்பீட்டில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கான விரிவான குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு 1,50,000 மக்கள் பயன்.

ரூ.41.97 கோடி மதிப்பீட்டில் வளசரவாக்கம் மண்டலம் (பகுதி), வார்டு-149 இராமகிருஷ்ணா நகர் பகுதிக்கு 24 மணி நேரமும் சீரான குடிநீர் விநியோகிக்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 43,800 மக்கள் பயன்.

ரூ.22.40 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், வார்டு-157-இல் மணப்பாக்கம் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 11,910 மக்கள் பயன்.

ரூ.32.29 கோடி மதிப்பீட்டில் வளசரவாக்கம் மண்டலம், இராமாபுரம் தமிழ் நகர் மற்றும் ஆலங்குளம் விரிவான பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 42,570 மக்கள் பயன்.

ரூ.51.98 கோடி மதிப்பீட்டில் வளசரவாக்கம் மண்டலம், நெற்குன்றம் பாதாளச் சாக்கடை திட்டத்தின்கீழ் (பகுதி), கழிவு நீரிறைக்கும் நிலையம் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 79,983 மக்கள் பயன்.

ரூ.170.97 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட நிலையம் முடிக்கப்பட்டு, 7.5 இலட்சம் மக்கள் பயன்.

ரூ.74.12 கோடி மதிப்பீட்டில் நெசப்பாக்கத்தில் 50 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட நிலையம் முடிக்கப்பட்டு, 5 இலட்சம் மக்கள் பயன்.

ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர் மண்டலம், வார்டு-89 மற்றும் வார்டு-92 முகப்பேர் சாலையில் கழிவுநீர் குழாய் விரிவாக்கம் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு, 1,500 மக்கள் பயன்.

ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், வார்டு-158 நந்தம்பாக்கம் பகுதியில், கழிவுநீர் உந்து குழாய் அமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 20,000 மக்கள் பயன்.

ரூ.2.23 கோடி மதிப்பீட்டில், கோடம்பாக்கம் மண்டலம், எம்.ஜி.ஆர் நகர் கால்வாய் பகுதி சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, 2,000 மக்கள் பயன்.

ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் அம்பத்தூர் மண்டலம், வார்டு-93-இல், கழிவுநீர் உந்துகுழாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, 38,256 மக்கள் பயன்.

மாதவரத்தில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.44.35 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 2.48 இலட்சம் மக்கள் பயன்.

நெற்குன்றத்தில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.11.12 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 34,970 மக்கள் பயன்.

இராமாபுரத்தில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.52 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 80,500 மக்கள் பயன்.

மணப்பாக்கத்தில் விரிவான பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.22.40 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 14,800 மக்கள் பயன் பெறுகிறார்கள். நெற்குன்றத்தில் விரிவான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.26.46 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 32,292 மக்கள் பயன் பெறுகிறார்கள்.

ஆலந்தூர் மண்டலம், பணிமனை 162 - கழிவுநீர் உந்து நிலையம் கட்டுதல் ரூ.10.55 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 7,500 மக்கள் பயன். அண்ணா நகர் மண்டலம், வில்லிவாக்கம்

கழிவுநீர் உந்து குழாய்களாக விரிவாக்கும் பணி ரூ.5.36 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 47,718 மக்கள் பயன்.

இராமாபுரத்தில் விரிவான பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.32.12 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 37,930 மக்கள் பயன்.

ரூ.1,516.82 கோடி மதிப்பீட்டில் 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம்.

பகுதி XIV, எல்.பி சாலையில் ரூ.39.26 கோடி மதிப்பீட்டில் உந்து குழாயாக சீரமைக்கும் பணிகள்.

சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின்கீழ், கழிவுநீர் கலத்தல் தடுக்கப்பட்டு, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டில் உள்ளது.

நெற்குன்றம் பகுதிக்கான விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் ரூ.17.61 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 48,475 மக்கள் பயன்.

திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கான விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் ரூ.25.17 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 24,483 மக்கள் பயன்.

திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கான விரிவான பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 5,977 மக்கள் பயன்.

திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கான 8.5 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ரூ.31.06 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 1,14,000 மக்கள் பயன்.

கொளத்தூர் தொகுதி, வார்டு-64 ரூ.19.56 கோடி மதிப்பீட்டிலான பாதாளச் சாக்கடை திட்டம், நவீன கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, 7,000 மக்கள் பயன்.

மடிப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் ரூ.80.45 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 55,362 மக்கள் பயன்.

ரூ.0.68 கோடி மதிப்பீட்டில் பகுதி-8, பணிமனை-101 புதிய அலுவலகக் கட்டடம்.

மணலி மண்டலத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.22.60 கோடி செலவில் முடிக்கப்பட்டது. 18,015 மக்கள் பயன்.

வளசரவாக்கம் மண்டலத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.17.88 கோடி செலவில் முடிக்கப்பட்டது. 23,578 மக்கள் பயன்.

ஆலந்தூர் மண்டலத்தில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.12.56 கோடி செலவில் முடிக்கப்பட்டது. 38,050 மக்கள் பயன்.

ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி விரிவான பாதாளச் சாக்கடை திட்டம் ரூ.35.88 கோடி செலவில் முடிக்கப்பட்டது. 1,08,023 மக்கள் பயன்.

சென்னை நதிகள் சீரமைப்பு திட்ட நிதியின்கீழ் ரூ.27.23 கோடி செலவில் ஒரு நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், 1 இலட்சம் மக்கள் பயன்.

நெசப்பாக்கத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மறுசீரமைப்பு ரூ.28.74 கோடி செலவில் முடிக்கப்பட்டு, 9,40,000 மக்கள் பயன்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள்

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் உள்ள ஓ.எம்.ஆர். சாலையிலிருந்து பெரும்பாக்கம் வடக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பிலுள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த் தேக்க தொட்டிக்கு 400 மி.மீ. விட்டமுள்ள பிரத்தியேக நெகிழிரும்பு குடிநீர் குழாய் அமைக்கும் திட்டம் ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்.

அம்பத்தூர் மண்டலத்தில் வார்டு - 84, 85 மற்றும் 86-க்குட்பட்ட படவட்டம்மன் எஸ்டேட், சிவானந்தா நகர், எம். கே. பி. நகர், அன்னை சத்தியா நகர் பகுதிகளிலுள்ள விடுபட்ட தெருக்களுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ரூ.21.01 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 9,720 மக்கள் பயன்.

கோடம்பாக்கம் மண்டலத்தில் வார்டு – 130, பிள்ளையார் கோயில் தெருவில் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் பக்தவச்சலம் காலனி 1ஆவது தெரு, கங்கை அம்மன் காலனி 2ஆவது தெருவில் கழிவுநீர் குழாய்களை பெரிது படுத்தும் பணிகள் ரூ.4.28 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 29,500 மக்கள் பயன்.

கோடம்பாக்கம் மண்டலத்தில் வார்டு – 133, 134, 135, கோடம்பாக்கம் மற்றும் மேற்கு மாம்பலம் பகுதிகளில் கழிவுநீர் குழாய்களை பெரிதுபடுத்தும் பணிகள் ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 9,000 மக்கள் பயன்.

கோடம்பாக்கம் மண்டலத்தில் வார்டு–137, சூளைப்பள்ளம் – எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளிலுள்ள விடுபட்ட தெருக்களுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் ரூ.6.65 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 15,000 மக்கள் பயன்.

கோடம்பாக்கம் மண்டலத்தில் வார்டு – 138, ஜாபர்கான் பேட்டை பகுதியிலுள்ள சத்தியமூர்த்தி பிளாக் கழிவுநீரகற்று நிலையத்தின் உந்து குழாய் தரம் உயர்த்தி புதுப்பிக்கும் பணிகள் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 3,000 மக்கள் பயன்.

கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 60 மற்றும் 120 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதிய தரக் குறியீடுகளுக்காக புதுப்பித்தல், புனரமைத்தல், மேம்படுத்தும் பணிகள் ரூ.49. 37 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 6.50 இலட்சம் மக்கள் பயன்.

ஆலந்தூர் மண்டலத்திலுள்ள வார்டு – 158, நந்தம்பாக்கம் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ரூ.26.94 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 20,000 மக்கள் பயன்.

பெருங்குடி மண்டலத்திலுள்ள வார்டு – 187 மற்றும் 188 –க்குட்பட்ட ராம்நகர், ராஜலட்சுமி நகர், சதாசிவ நகர் மற்றும் லேக் வியூ ரோடு பகுதிக்கான கழிவு நீர் குழாய்கள், கழிவுநீர் விசை குழாய்கள் மற்றும் கழிவு நீரிறைக்கும் நிலையம் அமைக்கும் மடிப்பாக்கம் பாதாள சாக்கடை திட்டம் ரூ.171.70 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 58,177 மக்கள் பயன். பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட தொடர் தொகுதி முறையில் உயிர் வாயுவின் மூலம் மின் உற்பத்தி செய்யும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் ரூ.88.94 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 6 இலட்சம் மக்கள் பயன்.

பெருங்குடியில் நாளொன்றுக்கு 54 மற்றும் 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதிய தரக் குறியீடுகளுக்காக புதுப்பித்தல், புனரமைத்தல், மேம்படுத்தும் பணிகள் ரூ.48.46 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, சுமார் 6 இலட்சம் மக்கள் பயன். விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் தங்களுடைய வீடுகளிலுள்ள கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்ய கழிவுநீர் ஊர்தியை பதிவுசெய்வதற்கான கைப்பேசி செயலி ரூ.0.27 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் – 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் புதிய குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பை, எளிதாக்கப்பட்ட இணைய வழி மூலம் பெரும் வசதி ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

தூய்மைப் பணியாளர்களைத் தொழில்முனைவோர்களாக மாற்றுதல்

தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின்கீழ், தூய்மைப் பணியாளர்களுக்கு 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை 06.12.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடி அசைத்து வழங்கி தொழில்முனைவோர்களாக அதிகாரமளிக்க செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு மற்றும் வழிகாட்டுதலுக்கிணங்க, தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் சமூக – பொருளாதார மேம்பாடு, கண்ணியமான சுய வேலைவாய்ப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை சென்னை குடிநீர் வாரியம் உறுதி செய்துள்ளது.

பணிநியமனம்

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிநீரகற்று வாரியத்தில் பணியில் இருந்தபோது இறந்த 105 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள்.

அரசினால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகள்:

ரூ.112.67 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல்.

ரூ.2,195.78 கோடி மதிப்பீட்டில் 16 பகுதிகள் மற்றும் மாதவரத்தில் விடுபட்ட தெருக்களுக்கு புதிய பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள்.

ரூ31.54 கோடி மதிப்பீட்டில் கலைஞர் கருணாநிதி நகரில் கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு மேம்படுத்த, சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் நிர்வாக ஒப்புதல்.

ரூ.125.71 கோடி மதிப்பீட்டில் அடையாறு நதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 39 இடங்களில் கழிவுநீர் நேரடியாக கலப்பதைத் தடுக்கும் பொருட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.364.80 கோடி மதிப்பீட்டில் அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயின் 36 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 33 பணிகள் முடிக்கப்பட்டு, 3 பணிகள் நடைபெற்று வருகின்றது.

ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட பகுதி 9இல் அடிக்கடி ஏற்படும் கழிவுநீர் வழிந்தோடல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக ரூ.52.69 கோடி மதிப்பிற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், நிர்வாக ஒப்புதல்.



பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, பகுதி 7இல் பாதாளச் சாக்கடை வசதி ஏற்படுத்த ரூ.18.19 கோடி மதிப்பிற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், நிர்வாக ஒப்புதல்.

பக்கிங்காம் கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, ரூ.101.58 கோடி மதிப்பிற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், நிர்வாக ஒப்புதல்.

குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் பெருமளவு இழப்புகளைக் கண்டறிவதற்கு, சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.43.01 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல்.

ஆலந்தூர் பகுதியில் (பகுதி 12) கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்த அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், ரூ.122.63 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல்.

திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் 39 இயந்திரங்கள், ரூ.9.20 கோடி மதிப்பீட்டில், கொள்முதல்.

வடசென்னையில் பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் நீர் மாசுபாட்டை குறைக்கவும் ரூ.946 கோடியில் புதிய திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பகுதி-8இல், சிட்கோ நகர் மற்றும் ராஜமங்கலத்தில் உள்ள பிரதான குடிநீர் குழாய்களை வலுப்படுத்துதல், மேல்நிலை, கீழ்நிலை நீர்த் தேக்க தொட்டிகளை கட்டுமானம் செய்தல் மற்றும் மத்திய பிரதான குழாய்களிலிருந்து பணிமனைகள் 94 மற்றும் 95 - லிலுள்ள சிட்கோ மற்றும் ராஜமங்கலத்திலுள்ள நீரேற்றும் நிலையம் வரை 1,200 மி. மீ. விட்டம் கொண்ட புதிய பிரதான ஊட்டு குழாய்களை பதிப்பதன் மூலம் குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தும் பணிகள் ரூ.75.11 கோடி மதிப்பீட்டில் சிங்காரச் சென்னை 2.0 நிதியின்கீழ் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசினால் அடிக்கல் நாட்டப்பட்டு நடைபெற்று வரும் பணிகள்

ரூ.256.90 கோடி மதிப்பீட்டில் மடிப்பாக்கம் பகுதியில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள், 58,177 மக்கள் பயன்.

தெற்காசியாவில் முதன்முறையாக, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட மிகப்பெரிய கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்றை பேரூரில் அமைக்கும் ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

பகுதி-14, வார்டு-191, ஜல்லடியம்பேட்டை பகுதியில் சுமார் 23,700 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.92.76 கோடி மதிப்பீட்டில் விரிவான பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள், பகுதி 5, சேப்பாக்கம் தொகுதியில் பணிமனைகள் 62 & 63இல் 37,500 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.5.45 கோடி மதிப்பீட்டிலும், பகுதி 5, பணிமனை எண் 62இல் ரூ.3.05 கோடி மதிப்பீட்டிலான கழிவுநீர் குழாய்களை விரிவாக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன.

ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி பகுதியில் ரூ.278.97 கோடி மதிப்பீட்டில் 33,760 மக்கள் பயன்பெறும் வகையில் புதிதாக இரண்டு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் தொடக்கம்.

கொளத்தூர் தொகுதி, வார்டு-64இல் 5,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.90 கோடி மதிப்பீட்டிலும், வார்டு-65 மற்றும் 68இல் 55,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.44.26 கோடி மதிப்பீட்டிலான கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பகுதி-IV, பணிமனை-47இல் 1,28,356 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.18 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-14 & 15இல் 3,32,670 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.98.28 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-7 பணிமனை-84, இல் 40,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.9.99 கோடி மதிப்பீட்டில், குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், மாத்தூர் மற்றும் புழல் பகுதிகளுக்கு, ரூ.632.50 கோடி மதிப்பீட்டிலும், மாதவரத்தின் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.439.65 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-2, இடையன்சாவடி, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் (வார்டு-15&16) பகுதிகளுக்கு ரூ.238.52 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-15, ஒக்கியம் தொரப்பாக்கம் பகுதிக்கு (வார்டு-193,194&195) ரூ.280.80 கோடி மதிப்பீட்டிலும், சோழிங்கநல்லூர் மண்டலம் - 15, வார்டு 200, செம்மஞ்சேரி பகுதிக்கு ரூ.78.58 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-5 பணிமனை-59 இல் ரூ.2.96 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-5 பணிமனை-62இல் ரூ.0.79 கோடி மதிப்பீட்டிலும், பகுதி-5 பணிமனை-62இல் ரூ.1.85 கோடி மதிப்பீட்டிலான விரிவான பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அம்பத்தூர் மண்டலத்தின் கொரட்டூர் TNHB காலனி 68ஆவது தெருவில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் 2 MLD கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் கட்டுமானப் பணிகள். சுமார் 40,000 பேர் பயன்.

ரூ.59.15 கோடி மதிப்பீட்டில், பகுதி-6, கன்னிகாபுரம் பகுதியில் உள்ள TNUHDB குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணி. 80,000 பேர் பயன்.

பொதுமக்கள் குறை தீர்க்கும் பணி

"முதல்வரின் முகவரி" திட்டத்தின்கீழ், 18.03.2025 வரை பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 19,364 மனுக்களில் 18,131 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மனுக்கள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 1,173 மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொது மக்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்கள்

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி,மதுரை,திருநெல்வேலி,தேனி,திண்டுக்கல்,வேலூர்,கடலூர்,திருப்பத்தூர்,திருவள்ளூர்,கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சார்ந்த 4 மாநகராட்சிகள், 13 நகராட்சிகள், 49 பேரூராட்சிகள் மற்றும் 10,565 ஊரக குடியிருப்புகளுக்கான 71 குடிநீர்த் திட்டங்கள் நாளொன்றுக்கு 751.56 மில்லியன் லிட்டர் (எம்.எல்.டி) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் ரூ.9,011.45 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 121.37 இலட்சம் மக்கள் பயன்.

நிறைவேற்றப்பட்டப் பாதாள சாக்கடைத் திட்டங்கள்

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், தேனி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பத்தூர், செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 3 மாநகராட்சிகள், 8 நகராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகளில் 17 பாதாளச் சாக்கடைத்திட்டங்கள் ரூ.1,777.42 கோடி திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 160.19 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யும்வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.75 இலட்சம் மக்கள் பயன்.







அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட புதிய திட்டங்கள்

அ) குடிநீர்த் திட்டங்கள்

23 மாவட்டங்களைச் சார்ந்த 1 மாநகராட்சி, 9 நகராட்சிகள், 35 பேரூராட்சிகள் மற்றும் 12,604 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 76.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 45 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு ரூ.15,749.01 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல்.

ஆ) பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

6 மாவட்டங்களைச் சார்ந்த 3 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிகளிலுள்ள 8.46 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 7 பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு அம்ரூத் 2.0, ஜெர்மானிய வங்கி, உலக வங்கி, நகர்ப்புற தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.2,690.24 கோடிக்கு நிர்வாக ஒப்புதல்.

விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

ரூ.1,011 கோடி மதிப்பீட்டில் 2 மாவட்டங்களைச் சார்ந்த 1 மாநகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 641 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 8.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 2 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்.

ரூ.32,750.37 கோடி மதிப்பீட்டில் 20 மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள், 11 நகராட்சிகள், 23 பேரூராட்சிகள் மற்றும் 24,021 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 1.46 கோடி மக்கள் பயன்பெறும் வகையில், 20 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்.

தமிழ்நாட்டின் மிக முக்கிய திட்டமான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் இரண்டாம் கட்டத்திற்கு வெளிப்புற நிதியுதவி பெற (EAP funding) நடவடிக்கை.

மறுசீரமைப்பு திட்டங்கள்

ரூ.1,658.35 கோடி மதிப்பீட்டில், 56 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் மறுசீரமைப்பு பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இவற்றில் 52 மறுசீரமைப்பு பணிகள் முடிவுற்று, மேற்படி திட்டங்களில் கூடுதலாக 73.54 MLD குடிநீர் வழங்கப்படும்.

பணி நியமனங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 195 நபர்கள் வெவ்வேறு பதவிகளுக்கு நேரடி பணி நியமனம்.

129 நபர்கள் கருணை அடிப்படையின்கீழ் பணி நியமனம்.






ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்



திரு. **இ.பெரியசாமி** அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்



ஊரக நிர்வாக அனுமதி அளிக்கும் வரம்பு, கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ. 25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ. 50 இலட்சமாகவும் உயர்வு...

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5,347 கோடி மதிப்பீட்டில் 9,995 கி.மீ நீளமுள்ள 12,856 சாலைப் பணிகள்...

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், 2024-2025இல் அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளில் 99,757 வீடுகள் பணிகள் நடைபெற்று வருகின்றன...

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திட்டத்தின்கீழ், ரூ. 261.17 கோடியில் 237 சமத்துவபுரங்கள் சீரமைப்பு மற்றும் ரூ. 50 கோடியில் புதிய சமத்துவபுரங்கள்...

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள 690 கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.10 இலட்சம் சிறப்பு மானியமாக, மொத்தம் ரூ.69 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 278 மலைப்பிரதேச கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.10 இலட்சம் சிறப்பு மானியமாக, மொத்தம் ரூ.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி நிர்வாகத்தில் ஊராட்சித் தலைவர்களின் பணியினைப் பாராட்டும் விதமாக அவர்களுக்கு வழங்கப்படும் மாத மதிப்பூதியம் ரூ.1000 லிருந்து ரூ.2000 ஆக அரசினால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளில் 12,525 கிராம ஊராட்சிகளிலும் கணினிகள் பிரிண்டர்கள் மற்றும் தடையில்லா மின்கலன்கள் (UPS) சாதனம் ஆகியவைகள் கொள்முதல் செய்து பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆண்டிற்கு கட்டாயமாக 4 கிராம சபைகள் நடத்துவதன் வரம்பை 6 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

தற்போது, கிராம ஊராட்சிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் வரம்பு ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாகவும், வட்டார ஊராட்சிகளுக்கு ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 25 இலட்சமாகவும், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ. 20 இலட்சத்திலிருந்து ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாள்களில் அமர்வுப்படித் தொகை 10 மடங்காகவும், கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு அமர்வுபடித் தொகை 5 மடங்காகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

நவம்பர் 1 ஆம் நாளினை உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடிடும் பொருட்டு அரசாணை பிறப்பித்துள்ளது. இந்நாளினை சிறப்பாக கொண்டாடிடும் பொருட்டு அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தில் சிறப்பாக செயல் புரியும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய உத்தமர் காந்தி விருது மீண்டும் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 10 இலட்சத்திற்கான ஊக்கத் தொகையுடன், மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் 37 கிராம ஊராட்சிகளுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக, சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்களுக்கான (CSR) விருதினை அரசு ஏற்படுத்தியுள்ளது.

நம்ம கிராம சபை கைபேசி செயலி:

கிராமசபை நிகழ்வுகளை கண்காணித்திட துறையானது "நம்ம கிராம சபை" என்கிற புதிய கைபேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியத் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டு விட்டன.

ஊராட்சிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படவும் 600 கிராம செயலகங்கள்

கட்டுவதற்கு அரசாணை வழங்கப்பட்டு இதுவரை 492 கிராமச் செயலகங்கள் கட்டும் பணிகள் நிறைவுபெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் உள்ள 11 வகையான வங்கிக் கணக்குகள் PFMS மூலம் இயங்கி வந்தன. தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு (TNPASS) கிராம ஊராட்சிகளின் கணக்குகளின் நிதி பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்திட அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கிராம ஊராட்சிகளின் கணக்குகளை கையாள்வது ஒரே செயலியின் மூலம் ஒன்றாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

15 ஆவது நிதிக்குழு

2021-2022

கிராம ஊராட்சி:- கிராம ஊராட்சியில் எடுக்கப்பட்ட 90,146 பணிகளில் 87,808 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.2114.64 கோடியில் ரூ.2028.39 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார ஊராட்சி:- வட்டார ஊராட்சியில் எடுக்கப்பட்ட 9,904 பணிகளில் 9,797 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.399.81 கோடியில் ரூ.389.21 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சி :-மாவட்ட ஊராட்சியில் எடுக்கப்பட்ட 2,800 பணிகளில் 2,794 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.134.21 கோடியில் ரூ.132.34 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-2023

கிராம ஊராட்சி:- கிராம ஊராட்சியில் எடுக்கப்பட்ட 1,22,323 பணிகளில் 1,14,899 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.2144.04 கோடியில் ரூ.1970.74 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார ஊராட்சி:- வட்டார ஊராட்சியில் எடுக்கப்பட்ட 13,008 பணிகளில் 12,583 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.410.51 கோடியில் ரூ.386.05 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சி :- மாவட்ட ஊராட்சியில் எடுக்கப்பட்ட 3,160 பணிகளில் 3,119 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.138.59 கோடியில் ரூ.135.26 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023-2024

கிராம ஊராட்சி:- கிராம ஊராட்சியில் எடுக்கப்பட்ட 86,452 பணிகளில் 71,119 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.2032.60 கோடியில் ரூ.1,639.82 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார ஊராட்சி:- வட்டார ஊராட்சியில் எடுக்கப்பட்ட 13,548 பணிகளில் 12,308 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.387.86 கோடியில் ரூ.331.38 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சி :-மாவட்ட ஊராட்சியில் எடுக்கப்பட்ட 2,838 பணிகளில் 2626 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.131.57 கோடியில் ரூ.119.06 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2024-2025

கிராம ஊராட்சி:- கிராம ஊராட்சியில் எடுக்கப்பட்ட 89,852 பணிகளில் 40,031 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.2017.60 கோடியில் ரூ.929.52 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார ஊராட்சி:- வட்டார ஊராட்சியில் எடுக்கப்பட்ட 10,307 பணிகளில் 5,442 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.396.02 கோடியில் ரூ.194.52 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சி :- மாவட்ட ஊராட்சியில் எடுக்கப்பட்ட 2,628 பணிகளில் 1,576 பணிகள் முடிவு பெற்றுள்ளன. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.132.02 கோடியில் ரூ.75.95 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரக பகுதிகளிலுள்ள திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாள்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க உறுதி செய்கிறது.

2021-2022ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 31.14 கோடி மனித சக்தி நாள்களில் 34.57 கோடி மனித சக்தி நாள்கள் ரூ.9795.62 கோடி மொத்த செலவினத்தில் எய்தப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2022-2023ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 32 கோடி மனித சக்தி நாள்களில் 33.47 கோடி மனித சக்தி நாள்கள் ரூ.11,421.01 கோடி மொத்த செலவினத்தில் எய்தப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் இரண்டாமிடம் ஆகும்.

2023-2024ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 41 கோடி மனித சக்தி நாள்களில் 40.87 கோடி மனித சக்தி நாள்கள் ரூ.13392.82 கோடி மொத்த செலவினத்தில் எய்தப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் முதலாமிடம் என்பது குறிப்பிடத்தக்கது.

2024-2025ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 20 கோடி மனித சக்தி நாள்களில் இதுவரை 30.61 கோடி மனித சக்தி நாள்கள் ரூ.10,761.70 கோடி மொத்த செலவினத்தில் எய்தப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2021-2022ஆம் ஆண்டு முதல் 2024-25ஆம் ஆண்டு வரை சராசரியாக 69.90 இலட்சம் குடும்பங்களை சேர்ந்த 77.37 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கியதன் மூலம் தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது.

2021-2022 ஆம் ஆண்டில் 79,818 மாற்றுத்திறனாளிகளால் 46.34 இலட்சம் மனித சக்தி நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில் 1,07,446 மாற்றுத்திறனாளிகளால் 55.48 இலட்சம் மனித சக்தி நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் முதலிடம் என்பது குறிப்பிடத்தக்கது.

2023-2024 ஆம் ஆண்டில் 1,17,560 மாற்றுத்திறனாளிகளால் 73.20 இலட்சம் மனித சக்தி நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் முதலிடம் என்பது குறிப்பிடத்தக்கது.

2024-2025 ஆம் ஆண்டிலும் இதுவரை 1,11,673 மாற்றுத்திறனாளிகளால் 60.66 இலட்சம் மனித சக்தி நாள்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் முதலிடம் ஆகும்.

2021-2022 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மனித சக்தி நாள்களில் 85.70% பெண்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில் 86.41% பெண்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2023-2024 ஆம் ஆண்டில் 86.66% பெண்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2024-2025 ஆம் ஆண்டிலும் இதுவரை 86.28% பெண்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் மூன்றாமிடம் ஆகும்.

2021-2022 ஆம் ஆண்டு முதல் 2024-2025 ஆம் ஆண்டு வரை 100 விழுக்காடு ஊதியம், குறித்த காலமான 15 நாள்களுக்குள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. ஊரக பகுதிகளில் உள்ள நீர் மற்றும் நில வளத்தினை மேம்படுத்திட 2021-2022 முதல் 2024-2025 வரை 5,10,778 இயற்கை மற்றும் நீர் வள மேலாண்மை பணிகள் ரூபாய்.28,037.85 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக பகுதிகளில் உள்ள சிறு/குறு/ஆதி திராவிட/பழங்குடியின விவசாயிகள், பெண்களை மட்டும் தலைவியாக கொண்ட ஏழை குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு 2021-2022 முதல் 2024-2025ம் ஆண்டு வரை, 7,45,015 தனி நபர் சொத்து உருவாக்கும் பணிகள் ரூ.5,796.52 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2021-2022 முதல் 2024-2025ம் ஆண்டு வரை, 1,594 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 3,725 அங்கன்வாடி மையங்கள், 465 உணவு தானிய கிடங்குகள், 3,213 பள்ளிகளுக்கு சமையலறை கூடங்கள், 555 மகளிர் சுய உதவி குழுவினர்க்கான தொழிற் கூடங்கள் போன்ற பணிகள் உள்ளிட்ட 18,566 கட்டடங்கள் ரூபாய் 1,290.52 கோடி செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2021-2022 முதல் 2024-2025ம் ஆண்டு வரை ஓரடுக்கு கப்பி சாலை , பேவர் பிளாக், சிமெண்ட் கான்க்ரீட் சாலைகள் மற்றும் மண் சாலைகள் என மொத்தம் 69,460 சாலைகள் ரூபாய் 5,116.18 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II

இத்திட்டத்தின் மூலம், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்பொழுது, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II 2021-2022 முதல் 2025-2026 வரை 5 வருடங்களாக படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-IIன்கீழ் ஒவ்வொரு ஆண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் சம எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகள் (சுமார் 20 விழுக்காடு) தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்டம் மற்றும் மாநில அளவில் இதே அளவீடு பராமரிக்கப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-IIன்கீழ் குறைந்த பட்ச அடிப்படை நிதியாக தலா ரூபாய் 30 இலட்சமும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூபாய் 5 இலட்சமும் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படுகிறது. மக்கள் தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியன கணக்கீடு செய்யப்பட்டு குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள் தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படுகிறது.



மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021-2022, 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

2021-2022 ஆம் ஆண்டில் 22,115 பணிகள் ரூ.1288.41 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்துப்பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் 16,168 பணிகள் ரூ.998.67 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்துப்பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டில் 15,781 பணிகள் ரூ.993.36 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 15,772 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

2024-2025 ஆம் ஆண்டில் 15,708 பணிகள் ரூ.998.38 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 15,353 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 7,924 நூலகங்கள் ரூ.176.02 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் உள்ள 5,000 சிறுபாசன ஏரிகளைப் புதுப்பித்தல்

2024-2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 5,000 சிறுபாசன ஏரிகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் பொது மக்கள் பங்களிப்புடன் புனரமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்/அரசு சாரா அமைப்புகளின் மூலம் 702 சிறுபாசன ஏரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 152 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

சாலைகள் மற்றும் பாலங்கள்

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தி, 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் ரூ.4,000 கோடி செலவில் மேம்பாடு செய்யப்படும். 2022-2023 மற்றும் 2023-2024, ஆகிய இரண்டு ஆண்டுகளில் மேலும் 10,000 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். அதனடிப்படையில், 2024-2025 & 2025-2026 ஆம் ஆண்டிற்கு 2,444 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளன.



கடந்த 2022-2023 முதல் 2025-2026 வரையான ஆண்டுகளில், 11,854 கி.மீ நீளமுள்ள 9,242 சாலைப்பணிகள் ரூ.4,316 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY)

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் தொடக்கத்தில் ஒன்றிய அரசால் 100% நிதியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு முதல் 60% ஒன்றிய நிதி மற்றும் 40% மாநில நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் முடிவுற்ற சாலைகளின் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பிற்கான நிதி மாநில அரசால் வழங்கப்படுகிறது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III-ன்கீழ் தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளில் (2021-2022 முதல் 2024-2025 வரை), பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 4,182 கி.மீ நீளமுள்ள 947 சாலைப்பணிகள் மற்றும் 83 பாலங்கள் கட்டும் பணிக்காக ரூ.3,061 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-2022 முதல் 2024-2025 வரை) 5,014 கி.மீ நீளமுள்ள 1,155 சாலைப்பணிகள் மற்றும் 43 பாலங்கள் ரூ.3,260 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

நபார்டு- ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD -RIDF)

ஊரக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின்கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி" யினை ஒன்றிய அரசு அறிவித்தது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நிதியில், 20% மாநில அரசால் நேரடியாகவும், மீதமுள்ள 80% மாநில அரசால் நபார்டு வங்கியின் கடனாகவும் பெறப்படுகிறது.

2021-2022 முதல் 2024-2025 வரை நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD -RIDF) XXVII, XXVIII, XXIX மற்றும் XXX பகுதிகளில் முறையே ரூ.2,359 கோடி மதிப்பீட்டில் 342 உயர்மட்டப் பாலங்கள் மற்றும் 2005 கிமீ நீளத்திற்கு 1,033 சாலைகள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் (2021 முதல் 2024 வரை), 577 கி.மீ நீளமுள்ள 327 சாலைப்பணிகள் மற்றும் 287 பாலங்கள் ரூ.1134 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகள் மேம்பாடு

நகரங்கள் மற்றும் பேரூராட்சி ஒட்டியுள்ள ஊராட்சி சாலைகள், தெருக்கள், மற்றும் சந்துகளை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு 690 கிராம ஊராட்சிகளை, நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளாக அடையாளம் கண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, 2023-2024 ஆம் ஆண்டில், 708.49 கி.மீ. நீளமுள்ள 2,547 சாலைகள், தெருக்கள், மற்றும் சந்துகள் பணிகளை மேம்படுத்துவதற்காக ரூ.390.24 கோடி நிதியை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் உள்ளூர் திட்டமிடல் ஆணையம் ஆகியவற்றிலிருந்து ஒருங்கிணைத்து பெற அனுமதியளித்துள்ளது.

கடந்த 2023-2024 ஆண்டில் 678.62 கி.மீ நீளமுள்ள 2,461 சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் ரூ.267.01 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

இத்திட்டத்தில், கடந்த 2021-2022 ஆம் ஆண்டில், 1,990 கி.மீ நீளமுள்ள 1360 சாலைப்பணிகள் ரூ.627 கோடி முடிக்கப்பட்டுள்ளன.

உயர்மட்ட பாலங்கள் கட்டுமானத்திற்கான மாநில சிறப்பு நிதி உதவி

2024-2025 ஆம் ஆண்டில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் மூலம் பெறப்பட்ட உயர்மட்ட பாலங்கள் கட்டுமானத்திற்கான கோரிக்கைகள், நீண்ட நாள் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் மற்றும் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு அனைத்து காலங்களுக்கும் பயன்படக்கூடிய இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகிய கோரிக்கைகளை கருத்தில் கொண்டு 18 மாவட்டங்களில் ரூ.177.85 கோடி மதிப்பீட்டில் 34 உயர்மட்ட பாலங்கள் அமைப்பதற்கு மாநில சிறப்பு நிதியின்கீழ் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் (SCPAR)

கடந்த நான்கு ஆண்டுகளில், 98 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு மொத்தம் 453.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் புதிய முயற்சியாக கிராமப்புறங்களில் சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விதமாக, 15 மாவட்டங்களில் உள்ள புறநகர் பகுதிகளில் 45.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 எரிவாயு தகன மேடைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிலிருந்து, மொத்தம் 175 உட்கட்டமைப்பு பணிகள் ரூ.663.24 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின்கீழ் மொத்தம் ரூ.79.75 கோடி மதிப்பீட்டில் 874 வாகனங்கள் வாங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வீடு வழங்கும் திட்டங்கள் (Rural Housing Scheme)

கலைஞரின் கனவு இல்லம் (KKI)

ஊரகப் பகுதிகளில் உள்ள மேற்படி குடிசைகளுக்கு மாற்றாக நிரந்தர கான்கிரீட் வீடுகள் அமைத்துத் தர 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையில், 2,030 ஆம் ஆண்டுக்குள் 'குடிசையில்லா தமிழகம்' உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்வரும் ஆறு ஆண்டுகளில் கிராமப்புறங்களில் எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக, 2024-2025 ஆம் ஆண்டில் ஒரு வீட்டிற்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில், ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டது.

ஒவ்வொரு பயனாளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு 90 மனிதசக்தி நாள்களுக்கும், கழிப்பறை கட்டுவதற்கு 10 மனிதசக்தி நாள்களுக்குமான கூலித்தொகையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிக்கு ஏற்கெனவே கழிப்பறை கட்ட அனுமதி வழங்கப்படாமல் இருந்தால் தூய்மை இந்தியா இயக்கம் - ஊரகம் (SBM - G) மூலம் தனிநபர் வீட்டுக் கழிப்பறை (IHHL) கட்ட ரூ.12,000/- வழங்கப்படும். இவையனைத்தும் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகைக்கு உட்பட்டதாகும்.

தேவைப்படும் பயனாளிகளுக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்/ வணிக வங்கிகள் மூலம் ரூ.50,000/- முதல் ரூ.1,00,000/- வரை கடனுதவி ஏற்படுத்தப்படும்.

கலைஞரின் கனவு இல்லம் 2024-2025 திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகள் அனைத்தும் ஜன்னல் மட்டத்திற்கு மேல் நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது. அதில், 38,035 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 61,965 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம் (RRH)

பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் 2000-2001ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளை பழுது பார்க்கும் பொருட்டு 2024-2025 ஆம் ஆண்டில், ரூ.1041.32 கோடி மதிப்பீட்டில் 1,48,637 வீடுகளை சீரமைக்க அரசால் நிதி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



இந்த சிறப்பு முயற்சியின்கீழ், சிறுபழுதுகள் மேற்கொள்ள வேண்டிய ஓட்டு வீடுகளுக்கு சமவெளி பகுதியில் ரூ.32,000/- மற்றும் மலைபகுதிகளுக்கு ரூ.42,000/- என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பழுது மேற்கொள்ள வேண்டிய ஓட்டு வீடுகளுக்கு சமவெளி பகுதியில் ரூ.70,000/- மற்றும் மலைப்பகுதியில் ரூ.92,000/- என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த தொகை பயனாளிக்கு வழங்கப்படும். சிறுபழுதுகள் மேற்கொள்ள வேண்டிய சாய்தள கான்கிரீட் வீடுகளுக்கு சமவெளி பகுதியில் ரூ.55,000/- மற்றும் மலைபகுதிகளுக்கு ரூ.72,000/- எனவும், பெரும்பழுது மேற்கொள்ள வேண்டிய சாய்தள கான்கிரீட் வீடுகளுக்கு சமவெளி பகுதியில் ரூ.1,50,000/- மற்றும் மலைபகுதியில் ரூ.1,85,000/- எனவும் நிதி ஒதுக்கப்பட்டு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த தொகை பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

2024-2025 ஆம் ஆண்டில், ஊரக வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டத்தின்கீழ், 42,738 எண்ணிக்கை சிறு பழுது, 56,433 எண்ணிக்கை பெரும் பழுது என மொத்தம் 99,171 ஓட்டு வீடு மற்றும் சாய்தள கான்கிரீட் வீடுகளில் பழுதுபார்ப்பு பணிகளுக்காக ரூ.812.50 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, நாளது வரை 96,257 பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மாநில அளவிலான ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கிக் கணக்கிலிருந்து (STATE LEVEL SINGLE NODAL ACCOUNT) பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தவணைத்தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

பெரியார் நினைவு சமத்துவபுரம்

மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படாத 4 சமத்துவபுரங்கள் உட்பட 149 சமத்துவபுரங்களை முதற்கட்டமாக 2021-2022ம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.194.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவுற்று, பயனாளிகளின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. மேலும், இரண்டாம் கட்டமாக 2022-2023ம் ஆண்டில் மீதமுள்ள 88 சமத்துவபுரங்களை சீரமைக்க ரூ.67.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவுற்றது.

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், கொழுவாரி சமத்துவபுரம் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டு 05.04.2022 அன்றும், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலம் பேட்டை ஊராட்சியில் உள்ள கோட்டைவேங்கன்பட்டி சமத்துவபுரம் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டு 08.06.2022 அன்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராமசமுத்திரம் சமத்துவபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், காட்டுக்குளம் சமத்துவபுரம் மற்றும் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், தொளார் சமத்துவபுரங்களின் பணிகள் நிறைவு பெற்று 28.06.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

புதிய சமத்துவபுரங்கள் அமைத்தல்

"பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டத்தின்கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் எட்டு சமத்துவபுரங்கள் புதிதாகக் கட்டுவதற்கு ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புதிய சமத்துவபுரங்களில் 800 வீடுகள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் மற்றும் மீளக்கட்டுதல் 2023

இந்த சிறப்பு செயலாக்க திட்டத்தின்கீழ் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.4 இலட்சமும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளை சீரமைக்க ரூ.2 இலட்சம் வரையிலும் நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், பகுதியாக சேதமடைந்த 1,067 வீடுகளை பழுதுப்பார்ப்பதற்கும், முழுமையாக



சேதமடைந்த 3,599 வீடுகளை மீளக்கட்டுவதற்கும் என மொத்தமாக 4,666 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில், 3,116 வீடுகள் முடிவுற்று, மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் அரசிடமிருந்து ரூ.168.14 கோடி வரப்பெற்று, மாநில அளவிலான ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கிக் கணக்கிலிருந்து (STATE LEVEL SINGLE NODAL ACCOUNT) பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தவணைத்தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இதில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதிபங்களிப்பு 60:40 ஆகும். தமிழ்நாட்டைப் பொருத்தவரை நடைமுறையில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பங்களிப்பு 39:61 ஆக உள்ளது. அதாவது தமிழ்நாடு அரசு பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வழங்கும் நிதிப்பங்களிப்பு 61% ஆகும்.

2016-2017 முதல் 2019-2020 மற்றும் 2021-2022-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் மொத்தமாக 6,42,558 வீடுகள் அனுமதிக்கப்பட்டது. கடந்த 09.05.2021 முதல் நாளதுவரை 3,41,871 வீடுகள் உட்பட மொத்தமாக 6,31,601 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளதால் எதிர்வரும் 31.05.2025-க்குள் அனைத்து வீடுகளும் முடிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசின் பங்குத் தொகை ரூ.4626.42 கோடியும், அதற்கு இணையான மாநிலஅரசின்பங்குதொகைரூ.3084.27கோடியும்,ஆகமொத்தம்ரூ.7710.69கோடிநிதிபெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட நிதியில் நாளதுவரை ரூ.7596.47 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் நாடு அரசால், அலகுத் தொகைக்கு வழங்கப்படும் பங்களிப்புடன் கூடுதலாக ஒரு வீட்டிற்கு கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக ரூ.50,000/- மற்றும் கட்டுமானப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கூலித்தொகை அதிகரிப்பால் ஏற்பட்ட நிதிச் சுமையை குறைக்க கூடுதல் நிதியாக ஒரு வீட்டிற்கு ரூ.70,000/-என மொத்தம் ரூ.1,20,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பில் ரூ.4803.73 கோடி மாநில அரசால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை ரூ.4684.49 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 2024-2025 ஆம் நிதியாண்டில் ஆவாஸ்ப்ள்ஸ் தரவுகளில் உள்ள தகுதியான 17,142 பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, நாளதுவரை 517 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசு ரூ.125.52 கோடியும் அதற்கு இணையாகமாநிலஅரசின்பங்குதொகைரூ.83.68கோடியும்சேர்த்துமொத்தம்ரூ.209.20கோடிஅரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரை திட்ட பயன்பாட்டிற்காக ரூ.69.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பண்டைய பழங்குடியின மக்களுக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM-JANMAN)

இந்திய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகம், பண்டைய பழங்குடியினருக்கான பிரதம மந்திரியின் பெருந்திட்டம் (PM-JANMAN) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை ரூ.2 இலட்சம் என இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தொகை ஒன்றிய மற்றும் மாநில அரசால் 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒன்றிய அரசு வழங்கும் அலகுத்தொகையும் சேர்த்து 300 சதுர அடி கொண்ட வீடு கட்டுவதற்கு சமதளப் பகுதிகளில் ரூ.5.07 இலட்சம், மலைப்பகுதிகளில் ரூ.5.73 இலட்சம் என தொகை தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2023-2024 ஆம் ஆண்டிற்கான இலக்கு 4811 ஆகும். 2024-2025-ஆம் ஆண்டிற்கான இலக்கு 7,136 ஆகும். மொத்தமாக 11,947 ஒதுக்கீட்டில் நாளதுவரை 2,515 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

11,947 வீடுகளுக்கு ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத்தொகை ரூ.238.94 கோடி ஆகும். ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை ரூ.2.00 இலட்சம் என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 60:40 என்ற விகிதத்தில் நிதி பகிர்ந்தளிக்கப்படும். இவை தவிர, சமவெளி வீடுகளுக்கு ரூ.2,68,540/- மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு ரூ.3,34,540/- என கூடுதலாக ரூ.335.95 கோடி ஒதுக்கீடு செய்ய தமிழ் நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 90 மனிதசக்தி நாள்களுக்கான ஒருங்கிணைப்பு ஊதியம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கீழ் தனி நபர் இல்ல கழிப்பறை கட்டுமானத்திற்கு ரூ.12,000/- தகுதியுள்ள பண்டைய பழங்குடியின குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

இதர துறைகளுக்கான வீட்டு வசதித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வீட்டு வசதி திட்டங்கள் தவிர, இத்துறையின் மூலம் சிறப்பு பிரிவினர்களான அதாவது இலங்கை தமிழ் அகதிகள் மற்றும் பழங்குடியினர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வீடுகள்:

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையால் கட்டம் -Iல், 19 மாவட்டங்களில் உள்ள 32 மறுவாழ்வு முகாம்களில் 3,510 வீடுகள் கட்டுவதற்கு ரூ.185.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, 3510 பணிகளும் முடிவுற்றுள்ளது.

கட்டம் -IIல், 18 மாவட்டங்களில் உள்ள 34 மறுவாழ்வு முகாம்களில் 3,919 வீடுகள் கட்டுவதற்கு ரூ.233.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், 938 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் 1,511 வீடுகள் முடிவுறும் நிலையில் உள்ளது. மீதமுள்ள 1,470 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

பழங்குடியினருக்கான வீடுகள்:

பழங்குடியினர் நலத்துறையால் 2022-2023 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில், 3,881 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 176.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட 3,881 வீடுகளில், நாளதுவரை 3,361 வீடுகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

நமக்கு நாமே திட்டம் (ஊரகம்)

பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள், பட்டியல் இனத்தவர்/ பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் அதிக அளவிலான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, அரசு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, பட்டியல் இனத்தவர்/ பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள குறைந்தபட்ச பொது மக்களின் பங்களிப்புத் தொகை, மதிப்பீட்டுத் தொகையில் ஐந்தில் ஒரு பங்காக தளர்த்தியும் அரசு உத்தரவிட்டது. இத்திட்டம் 2021-22 ஆம் ஆண்டில் ரூ.100 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டது.

2022-2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.100 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2023-2024 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.100 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தவிர மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் கூடுதல் நிதியாக ரூ.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2023-2024 ஆம் நிதியாண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.150 கோடி ஆகும்.

2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2021-2022, 2022-2023, 2023-2024 மற்றும் முதல் 2024-2025 வரை நான்கு நிதி ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 6,568 பணிகள் ரூ.654.60 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 6,439 பணிகள் ரூ.608.89 கோடி செலவில் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்பாட்டிற்காக 485 கட்டடங்களும் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் பேருந்து நிழற்குடை/பேருந்து நிலையம், கதிரடிக்கும் களம் போன்ற 18 கட்டடங்களும் மற்றும் இதர கட்டமைப்புகளில் 5,936 பணிகளும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.3 கோடிநிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2021–2022 ஆம் ஆண்டிற்கு ஒரு தொகுதிக்கு மீள ரூ.3 கோடியாக வழங்கப்படும் என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 2021–22ஆம் நிதியாண்டில் அரசால் ரூ.702 கோடி ஒதுக்கப்பட்டு 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் விடுவிக்கப்பட்டது.

2022–2023 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.702 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2023–2024 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.702 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2024–2025 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.702 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2021–2022, 2022–2023, 2023– 2024 மற்றும் 2024–2025 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 37,144 பணிகள் ரூ.2,699.75 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 32,641 பணிகள் ரூ.2,178.68 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்பாட்டிற்காக 5,278 கட்டடங்களும் மற்றும், 1,958 பிறதுறைகான கட்டடங்களும், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பேருந்து நிழற்குடை/பேருந்து நிலையம், எரிமேடை, சுடுகாடுகளுக்கு சுற்றுசுவர் போன்ற உட்கட்டமைப்புகள் ஆகிய 3,102 பணிகளும் மற்றும் இதர கட்டமைப்புகளுக்காக 26,806 பணிகளும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

2021–2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசு புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம்) இத்திட்டத்தினை நவம்பர் 2021–இல் மீள தொடங்கி 2021–2022 ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள மாதங்களுக்கு ஒரு உறுப்பினருக்கு ரூ.2 கோடி என ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும் 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் நிதியாண்டில் இத்திட்டம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு ரூ.5 கோடி வீதம் என்ற நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டது.

17 ஆவது மக்களவை காலத்தில் (2019–2020 முதல் 2023–2024 வரை) இத்திட்டத்தினை செயல்படுத்திட ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தால் ரூ.974 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 8,855 பணிகள் ரூ.768.92 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டன.

2021–2022, 2022–2023, 2023–2024 மற்றும் 2024–2025 ஆம் நிதி ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 9,736 பணிகள் ரூ.855.95 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 8,108 பணிகள் ரூ.649.73 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயன்பாட்டிற்காக 1,000 கட்டடங்களும் மற்றும் 564 பிறதுறைகான கட்டடங்களும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேருந்து நிழற்குடை/ பேருந்து நிலையம் மற்றும் கதிரடிக்கும் களம் ஆகிய 554 பணிகளும் மற்றும் இதர கட்டமைப்புகளுக்காக 6,691 பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றது.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CFSIDS) :-

மாநிலத்தில் 22,249 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் (PUPS) மற்றும் 6,316 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் (PUMS) உள்ளன. மேற்கண்ட பள்ளி கட்டடங்களும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பராமரிப்பு அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2022–2023 –ஆம் ஆண்டில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CFSIDS) கீழ் 2,547 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.825.34 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 2,545 பணிகள் ரூ.807.86 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் ஆண்டில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CFSIDS) கீழ் 562 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.183.37 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 551 பணிகள் ரூ.178.19 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

2024–2025 ஆம் ஆண்டில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CFSIDS) கீழ் 567 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.168.07 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS)

2021-2022 ஆம் ஆண்டிற்கு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (AGAMT) செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், 10,403 பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் ரூ.132.32 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, ரூ.130.36 கோடி செலவில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (AGAMT) செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சியின் தன்னிறைவின் அடிப்படையில், அக்கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், 8,715 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் ரூ.189.42 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, ரூ.186.29 கோடி செலவில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் ஆண்டிற்கு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (AGAMT) செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சியின் தன்னிறைவின் அடிப்படையில், அக்கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், 2360 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் ரூ.58.56 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு ரூ.57.72 கோடி மதிப்பீட்டில் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் ஆண்டிற்கு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (AGAMT) செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சியின் தன்னிறைவின் அடிப்படையில், அக்கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், 2828 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் ரூ.60.19 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. அப்பணிகளில் இதுவரை 2,702 பணிகள் ரூ.54.63 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்தத் தூய்மைக்குப் புத்துயிர் அளித்தல் திட்டம் 2023-2024: (RBIOCGS)

இத்திட்டத்திற்கான நிதி பள்ளி கல்வித் துறையால் . (சமக்ரா சிக்ஷா) வழங்கப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு அரசுப் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்தின்கீழ் 5483 பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் ரூ.121.96 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 5480 பணிகள் 119.74 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டிற்கு அரசுப் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த தூய்மைக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்தின் (RBIOCGS) கீழ் 111 புதிய மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகள் ரூ.42.12 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 104 பணிகள் ரூ.39.64 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

அனைத்து ஊரகக் குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் நோக்கமாகும். அடையாளம் காணப்பட்ட தகுதியுள்ள குடும்பங்களுக்கு தனி நபர் இல்லக் கழிப்பறைகள் (IHHL) கட்டுமானத்திற்காக ரூ.12,000 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டில், மொத்தம் 44,095 தனிநபர் கழிப்பறைகளும், 2022-23 ஆம் ஆண்டில் 1,26,619 கழிப்பறைகளும், 2023-24 ஆம் ஆண்டில் 77,021 கழிப்பறைகளும், மற்றும் 2024-25 ஆம் ஆண்டில் 42,806 கழிப்பறைகளும் கட்டப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 2,90,541 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் ஊரக பகுதிகளில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சமுதாய சுகாதார வளாகங்கள் (CSC):

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில், பொது இடங்கள் மற்றும் பிறகுடியிருப்புகளில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட போதிய இட வசதி இல்லாத காரணத்தினால், அக் குடியிருப்புகளுக்கு சமுதாய சுகாதார வளாகங்கள் மற்றும் சிறிய சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

2021-2022, 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளில், மொத்தம் 4,802 சமூக சுகாதார வளாகங்கள் ரூ.104.19 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளில், பொது இடங்கள் மற்றும் நூலகங்கள், பள்ளிகள் மற்றும் அரசு கட்டடங்கள் போன்றவற்றின் அருகாமையில் 5,444 சிறிய சமுதாய சுகாதார வளாகங்கள் ரூ. 128.62 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை:

பெரிய அளவிலான கழிவுகளை விரைவாகவும் எடுத்துச் செல்லவும், பெரிய கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சிகளின் சிறப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, மின்கலம் வாகனங்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் பெறப்பட்டுள்ளது. அவை முறையான திடக்கழிவு அகற்றலை ஊக்குவிக்கின்றன மற்றும் பொது இடங்களில் குப்பைக் கழிவுகள் குவிப்பதைக் குறைக்கின்றன. இதுவரை 10,288 மின்கலம் வாகனங்கள் / மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தூய்மைக் காவலர்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / வெளிச்சந்தை மூலம் கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தூய்மைக் காவலர்களுக்கு மாதம் ரூ.3,600/- ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. 1.4.2023 முதல் ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நெகிழிக் கழிவு மேலாண்மை:

கிராம ஊராட்சிகளின் சிறப்புத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், வீடுகளில் மறுசுழற்சி செய்யக்கூடிய நெகிழி பொருள்களை பிரித்து தருவதை ஊக்குவிப்பதற்கும், அனைத்து ஊராட்சிகளிலும் 'நேரடி நெகிழி மீள வாங்கும் கொள்கை' தொடங்கப்பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்திற்கு குறைந்தபட்சம் ஒரு நெகிழிக் கழிவு மேலாண்மை அலகு என உள்ளடக்கும் வகையில், 2021-2022, 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டுகளில் 368 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டம் கட்டம்-II இல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகளில் துண்டு, துண்டாக்கப்பட்ட நெகிழிக் கழிவுகள், சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. 2022-2023 முதல் 2024-2025 ஆம் ஆண்டு வரை 2518.62 கிலோ மீட்டர் நீள சாலைகள் இந்நெகிழிக் கழிவுகள் பயன்படுத்தி அமைக்கப்பட்டது.

சாம்பல் நீர் மேலாண்மை

கிராமப்புற வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், வீடுகள் மற்றும் பொது இடங்களில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகள், கைபம்புகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வீணாகும்நீர் முறையாக வெளியேற்றப்படுவதற்கு சாம்பல் நீர் மேலாண்மை 3,485 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திறந்தவெளியில் மலம் கழிதலற்ற நிலையோடு பிரதிபலிக்கும் நடவடிக்கையாக, 2024-2025ம் நிதியாண்டுக்குள் "முன் மாதிரி கிராம ஊராட்சிகள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15வது நிதிக்குழு மானியத்துடன் இணைந்து தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) கட்டம்-IIன்கீழ், பொது இடங்களில் கழிவுநீர் தேங்குவதைத் தடுக்கவும், கழிவுநீர் வெளியேற்றும் நடவடிக்கையை திறம்பட கையாளுவதை உறுதி செய்யவும், சமுதாய உறிஞ்சுக்குழிகள், கிடைமட்ட/ செங்குத்தான வடிகட்டிகள், கட்டப்பட்ட ஈரநிலங்கள் மற்றும் பைட்டோராய்டுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 31,943 சமுதாய உறிஞ்சுக்குழிகள், 5,890 கிடைமட்ட வடிகட்டிகள், 7,062 செங்குத்து வடிகட்டிகள், 150 பைட்டோராய்டுகள் மற்றும் 15 கட்டப்பட்ட ஈரநிலங்கள் கட்டப்பட்டுள்ளது.

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்தல் – ஆர்வமுள்ள கிராம ஊராட்சி

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்து திடக்கழிவு மேலாண்மை அல்லது திரவக் கழிவு மேலாண்மை செய்வதற்கான வசதிகளுடைய 3,284 ஊராட்சிகள் ஆர்வமான கிராம ஊராட்சியாக அறிவிக்கப்பட்டன.

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்தல் – எழுச்சியடையும் ஊராட்சிகள்

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்து திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை ஆகிய இரண்டு வசதிகளும் ஒருங்கே அடைந்த 447 கிராம ஊராட்சிகள் எழுச்சியடையும் ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டன.

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்தல் – முன்மாதிரி ஊராட்சிகள்

திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதுடன் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையுடனும் காட்சிக்கு தூய்மையான கிராமங்களாகும். அதாவது பொது இடங்களில் குப்பைகூளங்கள், கழிவுநீர், நெகிழிக் கழிவுகள் இல்லாதிருத்தலும், தகவல், கல்வி மற்றும் தொடர்பு ஆகியவற்றின் மூலம் சுகாதார செய்திகளை பொதுவில் காட்சிப்படுத்தி திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்து முன் மாதிரி கிராம ஊராட்சிகளாக 9,503 ஊராட்சிகள் அறிவிக்கப்பட்டன.

மலக்கசடு மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்கெனவே உள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு (FSTP) வசதிகளில் கிராமப்புறங்களின் மலக்கசடுகளை மேலாண்மை செய்வதற்காக அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் மற்றும் 649 நகர்ப்புர பகுதிகளுடன் தொகுப்பு விவரணை செய்யப்பட்டு வருகிறது.

9,344 கிராம ஊராட்சிகள் தொகுப்புகளாக்கப்பட்டு 1 முதல் 5 கட்டங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்களுடன் இணைக்கப்படும். இதுவரை 1 முதல் 3 கட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 3,070 கிராம ஊராட்சிகள் தொகுப்புகளாக்கப்பட்டு உடனடியாக நகர்ப்புற சுத்திகரிப்பு நிலையங்களுடன் இணைப்பதன் மூலம் தகுதியான கழிவுநீரை அகற்றும் அமைப்புகளை கொண்டதாக ஊராட்சிகள் அமையும். 10 மலக்கசடு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோபர்தன்

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் கோபர்தன் வாயு உருவாக்கும் அமைப்பினை அமைப்பதற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது, தமிழ்நாட்டில் இதுவரை 132 கோபர்தன் வாயு உற்பத்தி அமைப்புகள் 22 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்:

'நம்ம ஊரு சூப்பரு - Namma Ooru Sooperu' சிறப்பு பிரச்சாரம் மூலம் சுகாதாரம் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி கிராமப்புற சமூகத்தினரிடையே தூய்மையான பழக்க வழக்கங்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்தவும், அதனை நிலைநிறுத்தவும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி மேற்கண்ட சிறப்பு பிரச்சாரம் தொடங்கப்பட்டு அக்டோபர் 2 ம் தேதி வரை நடத்தப்பட்டது.

பிரச்சாரத்தின்போது ஆகஸ்ட் 15, 2022-அக்டோபர் 2, 2022 வரை சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள், 16,829 பொது இடங்கள், 21,775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள், 45,824 அரசு கட்டடங்கள்/ நிறுவனங்கள் 47,949 நீர் நிலைகள், 10,011 சமூக சுகாதார வளாகங்கள், 15,69,348 மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் ஆகியவை பொதுமக்களின் தீவிர பங்கேற்பால் சுத்தம் செய்யப்பட்டன. ஊக்குவிப்பாளர்கள், சுய உதவிக் குழுக்கள் /ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களால் 13,659 பள்ளிகள் மற்றும் 343 கல்லூரிகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பிரச்சார காலத்தில் ஏறத்தாழ 4 இலட்சம் மரங்கள் நடப்பட்டன.

ஒன்றிய அரசின் விருதுகள்:

2021-2022ஆம் ஆண்டு ஸ்வச் சர்வேக்ஷன் கிராமினில் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரத்திற்கான மதிப்பீட்டில் தேசிய அளவில் முன்னணி மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டிற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் மூன்றாம் இடத்திற்கான விருது வழங்கப்பட்டது.

ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தின்கீழ் இடை நிரவல் நிரப்பு நிதி ரூ.134.26 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம், சாலை இணைப்பு, பொருளாதார நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள், உட்பட 525 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஜல் ஜீவன் திட்டம்

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளிலுள்ள 1,25,28,183 வீடுகளில் நாளது வரை 1,11,04,861 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில், 14,89,972 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஜல் ஜீவன் இயக்க ஊரக உட்கட்டமைப்பு பணிகளுடன் கூடிய செலவினம் ரூ.1106.00 கோடி ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில், 26,24,777 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.659.00 கோடி ஆகும்.

2023-2024 ஆம் ஆண்டில், 23,35,276 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.257.55 கோடி ஆகும்.

2024-2025 ஆம் ஆண்டில், 8,48,834 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.256.97 கோடி ஆகும்.






பொதுப்பணிகள் (கட்டடங்கள்) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்



திரு. **எ.வ.வேலு** அவர்கள்
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்



ரூ.120.75 கோடியில் மதுரையில் கலைஞர் நினைவு நூலகக் கட்டடம்...

ரூ.1,393.17 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டடங்கள்...

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.3,858 கோடி மதிப்பீட்டில் 448 கி.மீ. நீள நான்கு வழித்தட சாலைகள்...

ரூ.2,207 கோடி மதிப்பீட்டில் 1,681 கி.மீ. நீளம் இருவழித் தட சாலைகள்...

ரூ.17,154 கோடி மதிப்பீட்டில் 9,620 கி.மீ. நீளம் ரூ.1,161 கோடி மதிப்பீட்டில் 966 பாலம் மற்றும் நிறுவனப் பணிகள்...

பொதுப்பணித்துறை

மதுரையில் ரூ.120.75 கோடி மதிப்பீட்டில், கலைஞர் நினைவு நூலகக் கட்டடப் பணிகள் முடிந்து, பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

ரூ. 1.95 கோடி மதிப்பீட்டில், இந்திய சுதந்திர தின 75-ஆவது ஆண்டினை நினைவு கூறும் வகையில், சென்னையில், நினைவுத்தூண் அமைக்கப்பட்டது.

சென்னை, காமராஜர் சாலையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நினைவு மண்டபம் மற்றும் அருங்காட்சியகம் ரூ.53.73கோடி மதிப்பீட்டில் முடிக்கப்படும்.

ரூ.47.75 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகப் பணிகள் முடிக்கப்பட்டும் பொதுமக்களின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சென்னை, அண்ணாசாலை, அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச்சிலை ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை, கீழக்கரை கிராமத்தில் ரூ. 62.78 கோடி மதிப்பீட்டில் ஜல்லிக்கட்டு அரங்கம் அமைத்து திறக்கப்பட்டுள்ளது.

சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை ரூ.12.69 கோடி மதிப்பீட்டில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

ரூ.152.50 கோடி மதிப்பீட்டில் கோவிட்-19 இரண்டாம் அலையினை எதிர்கொள்ள தமிழகத்தில் 14,683 ஆக்ஸிஜன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள் பொதுப்பணித்துறையால் அமைத்து பொதுமக்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

ரூ.37.82 கோடி மதிப்பீட்டில் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

ரூ.60.784 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு 2 திட்டத்தின்கீழ், 2,096 ஆக்சிஜன் வசதியுடன் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. 50 அரசு 37 மாவட்ட தலைமை மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகள் ஆகியவைப் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

ரூ.240.53 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

ரூ.66.85 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, நுங்கம்பாக்கம் DPI வளாகத்தில் பேராசிரியர் கே. அன்பழகன் நூற்றாண்டு நினைவு வளைவு கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ.264.83 கோடி மதிப்பீட்டில் 71 இடங்களிலும் ரூ.257.37கோடி மதிப்பீட்டில் 69 இடங்களில் பணிமனைகள் அரசு கட்டட பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ரூ. 18.42 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அகழ்பொருட்களை பாதுகாக்க புதிய அருங்காட்சியக கட்டடம் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை சைதாப்பேட்டையில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் M.C.ராஜா மாணவர்களுக்கான புதிய விடுதி கட்டும் பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ரூ.57.46 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப். XXVII திட்டத்தின்கீழ் 88 புதிய கால்நடை மருத்துவ கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இதில் 83 பணிகள் முடிக்கப்பட்டன. 5 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம்,கோவில்பட்டியில் திரு. கி.ராஜநாராயணன் நினைவகம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் திரு.அயோத்திதாச பண்டிதர் மணிமண்டபம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டத்தில் அதியமான் கோட்டத்தினை புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.3.36 கோடி மதிப்பீட்டில் சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் காந்தி மண்டபம் அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் மற்றும் பெரியவர் பக்தவச்சலம் அவர்களின் நினைவு மண்டபங்கள் புனரமைக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.29.61 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

ரூ.21.96 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு வெண்கல திருவுருவச் சிலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் திரு.ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் போட்டித் தேர்வு மாணவர்களின் வசதிக்காக 10 மணிமண்டபங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ. 4.28 கோடி மதிப்பீட்டில் பொள்ளாச்சியில் நீர்வளத் துறை அலுவலக வளாகத்தில் திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர், திரு.சி.சுப்பிரமணியம் மற்றும் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களுக்கு சிலை அமைக்கப்பட்டு வருகிறது.

ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டத்தில், திருமூர்த்தி நகர் உடுமலைப்பேட்டை வட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டது.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறையில் தமிழில் முதல் நாவல் எழுதிய முன்சீப் மாயூரம் திரு.வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டது.

ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம், பவானிசாகரில், தியாகி அய்யா திரு.M.A.ஈஸ்வரன் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டது.

ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் கேரளாவில் வைக்கம் பகுதியில் தந்தை பெரியார் நினைவிடத்தை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் 21 சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டன.

ரூ.4 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலையும் மற்றும் நினைவகமும் அமைக்கப்பட்டன.

ரூ.34.30 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை மூலக்கொத்தளத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு நினைவு மண்டபம்பொலிவேற்றம் செய்திடும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.24.88 கோடி மதிப்பீட்டில் சென்னை, காமராஜர் சாலையில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் புனரமைத்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.

ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தின் இரண்டு மண்டபங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை, சிராவயல் கிராமத்தில் காந்தியடிகள் ஜீவாவுடன் சந்தித்த நினைவாக மணிமண்டபம் அமைக்கப்படுகிறது.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு முழுவுருவச் சிலையுடன் மணிமண்டபம் அமைக்கப்படுகிறது.

ரூ. 8 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை செட்டிநாடு, கால்நடை பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்கம் கோழிக் குஞ்சு பொரிப்பகம் தீவன ஆலை நிறுவப்பட்டன.

ரூ. 9.42 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, அபிஷேகபட்டியில் கால்நடை பண்ணையில் பூர்வீக வளர்ப்பு பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பகத்திற்கு கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ. 25 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப் XXVIII திட்டத்தின்கீழ். 37 புதிய கால்நடை மருத்துவ கட்டடங்கள், 33 பணிகள் முடிக்கப்பட்டு, 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் நீலகிரி, குருத்துக்குளியில் கால்நடைப் பண்ணையில் தனிமைப்படுத்தும் நிலையத்திற்கு சாலை அமைக்கப்பட்டன.

ரூ. 5.95 கோடி மதிப்பீட்டில் சென்னை சைதாப்பேட்டையில் கூடுதல் நாய் வளர்ப்பு பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 16.30 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப் XXIX திட்டத்தின்கீழ் 5 கால்நடை மருத்துவமனைகள், 20 மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 15 பணிகள் முடிக்கப்பட்டு 10 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 100.68 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 7 இடங்களில் கல்வி விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.7 கோடி மதிப்பீட்டில் 88 இடங்களில் விடுதி பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 6 கோடி மதிப்பீட்டில் 57 இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதி பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.742.50 இலட்சம் மதிப்பீட்டில் இராமநாதபுரம் , நயினார்கோவில் மற்றும் கோவிலங்குளத்தில் மறுமதிப்பீடு செய்யப்பட்ட விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 22.21 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூரில் இரண்டு, ஈரோடு தருமபுரி சிவகங்கை காரைக்குடி ஆகிய 5 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் தங்கும் மாணவியர் விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்டும் பணிகளில், 2 முடிக்கப்பட்டு, 3 நடைபெற்று பணிகள் வருகின்றன.

ரூ. 20 கோடி மதிப்பீட்டில் 126 விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1 கோடி மதிப்பீட்டில், 9 சிறுபான்மையினர் விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.16.13 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் DNC கல்லூரிகளில் மாணவ மாணவியர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்டும் பணிகள் 3 நடைபெற்று வருகின்றன.

ரூ2.09 கோடி மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் சுற்றுச்சுவர் கட்டும் பணிகளில் 16 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.6.93 கோடி மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் DNC மாணவர்களுக்கான விடுதியில் 86 பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 28 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.5 கோடி மதிப்பீட்டில் தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு சிறப்பு பராமரிப்பு பணிகளில், 132 பணிகள் முடிக்கப்பட்டு, 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.50.09 கோடி மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ், 92 கள்ளர் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 91 பணிகள் முடிக்கப்பட்டு, 1 பணி நடைபெற்று வருகின்றது.

ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 4 இடங்களில் வக்பு வாரிய மண்டல அலுவலக கட்டடப் பணிகளில் 3 முடிக்கப்பட்டு, 1 பணி நடைபெற்று வருகின்றது.

ரூ. 7.19 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 14.48 கோடி மதிப்பீட்டில் சென்னை, நந்தனத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலகத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரூ. 1.49 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை போளூரில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் அரகண்ட நல்லூரில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 1.95 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி, துறையூரில் வணிகவரி அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் ஈரோடு கோபிசெட்டிபாளையத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, சத்தியமங்கலத்தில் வணிகவரி அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.



ரூ. 14.30 கோடி மதிப்பீட்டில் ஈரோட்டில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் ஒட்டன்சத்திரம் வட்டம் சத்திரப்பட்டியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் மதுரையில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.86 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த வணிகவரி புதுக்கோட்டை–3 மதிப்பீட்டு வட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் சேந்தமங்கலத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், பள்ளியாடியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 4.49 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடியில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் திருத்தணியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 1.91 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம், நாகூரில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டும் பணி கட்டடம் முடிக்கப்பட்டது.

ரூ. 1.89 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 1.86 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர்,˙ பூதலூர் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.20.82 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 4.39 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை, ஆரணி மற்றும் கரூர் குளித்தலை பகுதியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.4.39 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக கட்டடம் மற்றும் துணைப் பதிவாளர் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் நாமக்கல், திருச்செங்கோடு மல்லசமுத்திரத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், ஒரத்தநாடு சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் நடைபெற்று வருகின்றது.

ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி. கயத்தாறு சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.5.68 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம், மயிலம், தஞ்சாவூர் சுவாமிமலை மற்றும் நாகப்பட்டினம் வேதாரண்யம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், முசிறி மற்றும் காட்டுப்புத்தூர், ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் தாலுகா, தா.பழூரில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் கடலூர் பண்ருட்டி, புதுப்பேட்டை மற்றும் குள்ளஞ்சாவடி ஆகிய இடங்களிலும் சார்பதிவாளர் அலுவலகங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.7.61 கோடி மதிப்பீட்டில் கடலூர், நெல்லிக்குப்பம், தருமபுரி, பென்னாகரம், திருச்சி உப்பிலியாபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை சீர்காழி மற்றும் திருச்சி, புள்ளம்பாடி ஆகிய இடங்களில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.72 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் கமுதி மற்றும் மயிலாடுதுறை செம்பனார்கோயில் ஆகிய இடங்களில் புதிய சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் அருப்புக்கோட்டையில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் திருச்சி லால்குடியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.3.33 கோடி மதிப்பீட்டில், மதுரை (தெற்கு), திருமங்கலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.3.51 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர், ஆவடி மற்றும் மதுரை, கள்ளிக்குடி ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ. 1.90 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் கமுதி, பெருநாழியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.84 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி எட்டயபுரத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, சாத்தான்குளம் புதிய சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் மற்றும் மொரப்பநாடு ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டன.

ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, ஆழ்வார்திருநகரியில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி கழுகுமலையில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் ராஜபாளையத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.3.76 கோடி மதிப்பீட்டில் வேலூர், காட்பாடி மற்றும் திருவண்ணாமலை இணை எண். II ஆகிய 2 இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 1.88 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, உத்திரமேரூரில் சார்பதிவாளர் அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம், திண்டிவனத்தில், வல்லம் சார்பதிவாளர் அலுவலக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் மதுரை ,சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.16 கோடி மதிப்பீட்டில் கடலூர், விருத்தாச்சலத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் கடலூர், சிதம்பரத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.28 கோடி மதிப்பீட்டில் கடலூர் பண்ருட்டியில் வணிகவரி அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.78 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், முதுகுளத்தூரில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 2.53 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 14.30 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மொடக்குறிச்சி தாலுகா புதூரில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் சேலம் ஆத்தூரில் (கிராமப்புறம்) மற்றும் ஆத்தூரில் (நகரம்) ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் மயிலாப்பூர் தாலுக்கா அலுவலக வளாகத்தில், தரைத்தளம், சுற்றுச்சுவர், வாகன நிறுத்துமிடம், உள்சாலைகள் மற்றும் புயல்நீர்வடிகால் ஏற்பாடுகளை புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.5.78 கோடி மதிப்பீட்டில் சென்னை, மயிலாப்பூர் தாலுக்கா அலுவலகக் கட்டடத்தின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் உள்ள வணிகவரி அலுவலகங்களைப் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.93 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை ஆரணி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை திருக்கோவிலூரில், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.9.48 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் குடவாசல், பெரம்பலூர் கொளக்காநத்தம், பெரம்பலூர், வாலிகண்டபுரம், கடலூர், மங்கலம்பேட்டை, கடலூர் பரங்கிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம் சரவணம்பட்டியில் உள்ள காந்திபுரம் மாதிரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தாராபுரத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

தேனியில், தரை தளத்தில் கூட்டு சார்பதிவாளர் அலுவலகம் எண்.1 மற்றும் சார்பதிவாளர் அலுவலகம், ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவு அலுவலகக் கட்டடம் மற்றும் முதல் தளத்தில் மாவட்ட பதிவாளர் (நிருவாகம்) மற்றும் மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகத்திற்கான இடம் ரூ.3.52 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம், திண்டிவனம் வட்டம் வல்லத்தில் ரூ.1.87 கோடி செலவில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

திருச்சி, திருச்சிற்றம்பலத்தில் ரூ.20.83 கோடி செலவில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினத்தில் புதிய வணிக வரித்துறை அலுவலகக் கட்டடம் ரூ.2.55 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

தஞ்சாவூரில் உள்ள வணிக வரித்துறை அலுவலகக் கட்டடத்தை புதுப்பிக்கும் பணி ரூ.1.59 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

திருவாரூர், மன்னார்குடியில் ரூ.1.44 கோடி செலவில் வணிக வரித்துறை கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

விருதுநகர், அருப்புக்கோட்டையில் உள்ள உதவி ஆணையர் அலுவலகத்திற்கான வணிக வரித்துறை அலுவலக;க கட்டடம் ரூ.2.18 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

ஈரோடு, பவானியில் ரூ.2.35 கோடி செலவில் வணிக வரித்துறை அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

ஈரோட்டில் ரூ.14.30 கோடி செலவில் ஒருங்கிணைந்த வணிக வரித்துறை அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூரில் தற்போதைய வணிக வரித்துறை வளாகத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள புலனாய்வு பிரிவிற்காக ரூ.11.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த வணிக வரித்துறை அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

தென்காசி, சங்கரன்கோவிலில் ரூ.1.82 கோடி செலவில் வணிக வரித்துறை அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

வேலூரில் உள்ள வணிக வரித்துறை அலுவலகக் கட்டடங்களை புதுப்பிக்கும் பணி ரூ.0.90 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா பிளாட்டினம் ஜூபிலி நினைவு அன்னெக்ஸ் கட்டடத்தில் 13 ஆண்டுகள் பழமையான இரண்டு லிஃப்டுகளை புதுப்பிக்கும் பணி ரூ.0.59 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் பாபநாசத்தில் ரூ.1.60 கோடி செலவில் சார்பதிவாளர் அலுவலகங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.59.52 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், வலங்கைமானில் கடலூர், சிதம்பரத்தில் ஸ்ரீமுஷ்ணத்தில் கடலூர் திட்டக்குடி கடலூர் பெண்ணாடம் கடலூர், மாநகராட்சி மயிலாடுதுறை, சீர்காழி மயிலாடுதுறை, தரங்கம்பாடி, திருவாரூர், கூத்தனூரில் திருவாரூர் திருத்துறைப்பூண்டி கோயம்புத்தூர், சூலூரில் 3 இடங்களிலும், கோயம்புத்தூர் கிணத்துக்கடவில், கரூர் குளித்தலையில் 3 இடங்களில் கட்டும் பணி, சேலம் (கிழக்கு) வலப்பாடி தாலுக்கா நாமக்கல், மகிரிப்பேட்டையில் நாமக்கல், ராசிபுரம், தூத்துக்குடி, ஏரலில் திருநெல்வேலி, மேலப்பாளையம் திருநெல்வேலி வடக்குவீரவநல்லூர், திருநெல்வேலி முக்கூடல், கன்னியாகுமரி முன்சிறையில், தென்காசி சங்கரன்கோவில், தென்காசி பாளையங்கோட்டை, தென்காசி சிவகிரியில் மதுரை, சேட்டிகுளம், மதுரை (வடக்கு) பகுதியில் வேலூர் குடியாத்தத்தில் தென்காசி, பன்போலியில் மயிலாடுதுறை, கொள்ளிடம் ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது

ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல், ஆத்தூர் வட்டத்தில் புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.126 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல், கொடைக்கானல் வட்டத்தில் உள்ள மன்னவனூர் கிராமத்தில் தேசிய அளவிலான கல்வி நிறுவனத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் இதேபோன்று சேலம் மாவட்டத்தில் ரூ. 1.05 கோடி மதிப்பீட்டில் பணி தொடங்கப்படவுள்ளது.

ரூ.17.22 கோடி மதிப்பீட்டில் சென்னை அண்ணாநகரில் தொழிலாளர் ஆணையர் மற்றும் சார்பு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம், இராமநாதபுரம் மாவட்டங்களில் MPC-இல் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.37 கோடி மதிப்பீட்டில், சென்னை (வடக்கு) அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை வசதி அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் திருப்பூரில் அடிப்படை உள்கட்டமைப்புடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.6.63 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் ஒரத்தநாட்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.05 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி பாளையங்கோட்டையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு, ஆலோசனை மையம், மண்டல இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 4.04 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.8.76 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் செம்போடையில் திருச்சி, திருவெறம்பூர், தஞ்சாவூர், திருவையாறு பணிமனை மற்றும் ஆய்வக கட்டுமானம் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.7.47 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் மாவட்டம் கோட்டூரில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், கோட்டூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், நீடாமங்கலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர், குன்னத்தில் புதியஅரசு தொழிற்பயிற்சி நிலையம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

கடலூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையம் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனை ரூ.4.02 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கடலூர் காட்டுமன்னார்கோயிலில் உள்ள அரசு ஐடிஐயில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை ரூ.4.03 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கடலூர் நெய்வேலியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையம் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புப் பணிமனையின் கட்டுமானம் ரூ.4.03 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை விராலிமலையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன்தயாரிக்கப்பட்ட கட்டுமானப் பணிமனை மற்றும் ஆய்வகம் ரூ.4.02 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டையில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன்தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் ரூ.4.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நூலிழையால் கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் ரூ.4.03 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

அரியலூர், ஆண்டிமடத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன்தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் ரூ.8.06 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் உள்ள தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் பணிமனை, வகுப்பறை கட்டடங்களில் முகப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கான சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் கழிப்பறைகள் மற்றும் வேலி அமைப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.08 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரதான பணிமனை கட்டடத்தில் சேதமடைந்த தரை, கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மற்றும் சிமெண்ட் ஓடுகள் சிறப்பு பழுதுபார்ப்பு பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை சீரமைத்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை சீரமைத்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.06 கோடி மதிப்பீட்டில் மதுரை, கே.புதூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ7.46 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை மற்றும் காரைக்குடியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் TTL பணிமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் காரைக்குடியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள அனைத்து கட்டடங்களிலும் சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.7.46 கோடி மதிப்பீட்டில் தேனி மற்றும் போடிநாயக்கனூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.05 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழில் பாதுகாப்பு மேலாண்மை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் (சூலக்கரை) தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் அருப்புக்கோட்டையில் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.04 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் சாத்தூர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.11.19 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் இராமநாதபுரம் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் TTL பணிமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், பரமக்குடியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரதான பணிமனை&மின் நிறுவல், விடுதி, நிர்வாக கட்டடம் மற்றும் வகுப்பறைகளில் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.05 கோடி மதிப்பீட்டில், தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.



ரூ.19.95 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி வேப்பலோடை, திருச்செந்தூர், நாகலாபுரம் மற்றும் திண்டுக்கல் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 7.46 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், பேட்டை மற்றும் இராதாபுரம் ஆகிய தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 3.73 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி நாகர்கோவில் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனையில் எப்பாக்சி தரை தள பூச்சுப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனையில் எப்பாக்சி தரை தள பூச்சுப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 8.10 கோடி மதிப்பீட்டில் தென்காசி மற்றும் கடையநல்லூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல்லில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பிரதான கட்டடத்தில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

0.03 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல்லில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் MMV பணிமனை மற்றும் பிரதான கட்டடம் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல்லில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பணிமனை கட்டடத்தில் கழிப்பறைகள், நீர்வழங்கல், சுகாதார ஏற்பாடுகள் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகியவற்றுக்கு சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.07 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல்லில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பொருத்துநர் (ஃபிட்டர்) மற்றும் MFW வர்த்தக கட்டடங்களில் சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.42 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பிரதான கட்டட மற்றும் பட்டறை கட்டடத்தின் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி, நாகர்கோவிலில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.50கோடிமதிப்பீட்டில்விருதுநகரில்உள்கட்டமைப்புவசதிகளும்மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ. 0.75 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, பேட்டையில் உள்கட்டமைப்பும் அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் மதுரை, கே. புதூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் வகுப்பறை மற்றும் பணிமனை கட்டடம் பழுதுபார்க்கப்பட்டது.

ரூ. 3.88 கோடி மதிப்பீட்டில் நாமக்கல்லில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.4.51 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் கொல்லிமலையில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ. 4.02 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் உடுமலைப்பேட்டையில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையில் தரை தள பூச்சுப் பணி முடிக்கப்பட்டுள்ளது

ரூ. 4.02 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், தாராபுரத்தில் தரை தள பூச்சுப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டடப்பட்டது.

ரூ.7.07 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, கோபிசெட்டிபாளையம் கிராமத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலைய விடுதி கட்டடம் மற்றும் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் ஈரோட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டப்பட்டது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டடம் கட்டப்பட்டது.

ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் ஈரோட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் ஆனைக்கட்டியில் பழங்குடியின மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலைய கட்டடத்தில் சாலை மற்றும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டது.

ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டப்பட்டது.

ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் பெண்களுக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 100 மாணவர்களுக்கான உணவருந்தும் வசதியுடன் விடுதிகள் கட்டப்பட்டது.

ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் பெண்கள் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மண்டல இணை இயக்குனர் அலுவலகம் கட்டப்பட்டது.

ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.4.02 கோடி மதிப்பீட்டில் சேலம், மேட்டூர் அணை அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் சேலம் கருமந்துரை அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டப்பட்டது.

ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரையை புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சேலம் மேட்டூர் அணையில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கழிப்பறைகள் தொகுதி மற்றும் நிர்வாக கட்டடம், மற்றும் வர்ணப் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, ஓசூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.8.96 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி தென்கனிக்கோட்டை புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி ஓசூர் அரசு தொழிற்பயிற்சி வளாகத்தில் மாணவர் விடுதி, வணிக ஆய்வகம் மற்றும் பணிமனை மறுசீரமைத்தல் பணி முடிக்கப்பட்டன.

ரூ.5.38 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டம் பந்தலூர் தாலுகாவில் உப்பட்டி அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு, பணிமனை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டப்பட்டது.

ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் நீலகிரி குன்னூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் தருமபுரியில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டது.

ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.10கோடி மதிப்பீட்டில்திருப்பூர்,தாராபுரத்தில்உள்ளஅரசுதொழிற்பயிற்சிநிலையத்தில் மின் அறையின் மீது சேதமடைந்த கூரையை சரிசெய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது

ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தாராபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிமனை வகுப்பறை கட்டப்பட்டது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்களின் கழிப்பறைகள்புதுப்பிக்கப்பட்டது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தாராபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கூரை சிமெண்ட் ஓடுகள் புதுப்பிக்கப்பட்டது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தாராபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கழிப்பறை புதுப்பிக்கப்பட்டது.

ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

ரூ. 0.09 கோடி மதிப்பீட்டில் நீலகிரி, குன்னூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் விடுதி கட்டடத்தின் சிறப்பு பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.07 கோடி மதிப்பீட்டில் நீலகிரி குன்னூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் விடுதி கட்டடத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் பழுதுபார்க்கப்பட்டது.

ரூ.0.06 கோடி மதிப்பீட்டில் நீலகிரி குன்னூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இரண்டாவது தள மொட்டை கல்நார் தகடு கூரை அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் நீலகிரி குன்னூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாக அலுவலகத்தில் கசிவுள்ள கூரை, தரைத்தளம், கதவுகள், ஜன்னல்கள், உட்புற மற்றும் வெளிப்புற சுவர் வர்ணம் பூசுதல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 51.44 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம், வடசென்னை, செங்கல்பட்டு மற்றும் பெரும்பாக்கம், வேலூர், இராணிப்பேட்டை, அரக்கோணம், திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், ஜமுனாமரத்தூர், திருவண்ணாமலை தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணி மற்றும் ஆய்வகம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.1.40 கோடி மதிப்பீட்டில், சென்னை அம்பத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டியில் ஆண்களுக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பிரதான கட்டடம் மற்றும் 3 பணிமனை கொட்டகை 3 மேம்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.1.கோடி மதிப்பீட்டில் திருச்சி திருவெறும்பூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிமனையைப் புதுப்பித்தல் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், தாராபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.0.32 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் தொழிற்பயிற்சி நிலைய கட்டத்தில் பணிமனை கூரையில் புதுப்பித்து மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.0.26 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் அலுவலக அறை, முதல் தள வகுப்பறைகள் பிரதான கட்டடம் மகளிர் பணியாளர் கழிப்பறை புதுப்பித்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.5.18 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகம் கட்டப்பட்டுள்ளது.

ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தின் MPCஇல் தொழிலாளர் துறைக்கான அடிப்படை உள்கட்டமைப்புடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டப்பட்டுள்ளது.

ரூ. 6.51 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கட்டப்பட்டுள்ளது,

ரூ. 0.75 கோடி மதிப்பீட்டில் அரியலூரில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி நடைபெறுகின்றது.

ரூ.21.49 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை, கடலாடி, ஒட்டன்சத்திரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிமனை மற்றும் வகுப்பறை கட்டப்படுகின்றது.

ரூ.0.06 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், தாராபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பழைய பணிமனை கட்டத்தில் மின் கேபிள் அகழி மற்றும் தரைத்தளத்தைப் பழுதுபார்க்கும் பணி நடைபெறுகின்றது.

ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் நீலகிரி குன்னூரில் அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கொல்லர் வர்த்தக பணிமனை கட்டத்தில் சிறப்பு பழுதுபார்க்கும் பணி நடைபெறுகின்றது.

ரூ.1.34 கோடி மதிப்பீட்டில் திருப்பத்தூர் வாணியம்பாடியில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சுற்றுச்சுவர், பிடுமன்சாலை, சைக்கிள்கொட்டகை, கேரேஜ், வடிகால், நுழைவு வளைவு மற்றும் பாதுகாப்புஅறை கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.8.34 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை மானாமதுரையில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு பணிமனை மற்றும் ஆய்வகம் கட்டப்பட்டு வருகிறது.

ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் சென்னை வடசென்னையில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ.38.24 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை, ஒட்டன்சத்திரம், கடலாடி, தேன்கனிக்கோட்டை மற்றும் குன்னம் ஆகிய ஐந்து இடங்களில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கட்டப்படுகிறது.

ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் சேலம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின்கீழ் நவீன பிரேத பரிசோதனைக் கட்டடம் கட்டுதல் மற்றும் கருவிகள் வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.1,393.17 கோடி மதிப்பீட்டில் பத்து மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டும் பணி முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி, களக்காடு அரசு மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின்கீழ் விஷ முறிவு சிகிச்சை மையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ,1.05 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை செங்கம், கடலூர், விருத்தாச்சலம், தருமபுரி, பாலக்கோடு ஆகிய அரசு மருத்துவமனைகளில் உலக வங்கி திட்டத்தின்கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு தொடங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் தேனி, இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு உலக வங்கி திட்டத்தின்கீழ் செவிலியர் குடியிருப்பு (இரட்டை வகை) அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.60 கோடி மதிப்பீட்டில் பத்தமடை பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்புகள் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் (இரட்டை வகை) கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 0.90 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம், திருச்சி திருவரங்கம் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் 25 அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக ஒலி புகா அறை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ. 5 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை – வந்தவாசி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை புதிய கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் – உத்திரமேரூர் அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.125 கோடி மதிப்பீட்டில் சென்னை – கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க உலக வங்கி திட்டத்தின்கீழ் புதிய டவர் பிளாக் கட்டடம் மற்றும் கருவிகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.55.07 கோடி மதிப்பீட்டில் சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில் உலக வங்கி திட்டத்தின்கீழ் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை, திருப்பத்தூர் மற்றும் விருதுநகர் சாத்தூர் அரசு மருத்துவமனைகளில் உலக வங்கி திட்டத்தின்கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு தொடங்கும் பணிகள்.

ரூ.100 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான உயர்தர மையக் கூடுதல் தளங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது.

ரூ. 10 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்பு பிரிவிற்கு 100 படுக்கைகள் கொண்ட புதிய கூடுதல் கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.20.10 கோடி மதிப்பீட்டில், தேனி, உத்தமபாளையம், பெரியகுளம் மற்றும் புதுக்கோட்டை, திருமயம் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர முன்முயற்சி மையக் கட்டடம் மேம்படுத்தும் பணி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 40.30 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை, பென்னாகரம், மணப்பாறை, துறையூர் மற்றும் அவினாசி ஆகிய இடங்களில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் மையம் மேம்படுத்துவதற்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளன.



ரூ.30 கோடி மதிப்பீட்டில் சென்னை, தண்டையார்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் மையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 66.87 இலட்சம் மதிப்பீட்டில் செங்கல்பட்டு நந்திவரம் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் நவீன தடுப்பூசி சேமிப்புக் கிடங்கு கட்டடம் கட்டடப்பட்டது.

ரூ.20 கோடி மதிப்பீட்டில் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டது.

ரூ.194 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, திருவாரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி சிவகங்கை ஆகிய ஐந்து மற்றும் கடலூர் மாவட்டம், மேலூர் ஒட்டன்சத்திரம், சீர்காழி ஆகிய 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.34 கோடி மதிப்பீட்டில் கடலூர் அரசு மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட புதிய தீவிர சிகிச்சை பிரிவு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 126 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டான், திருத்தணி மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயத்தப்பட்டுள்ளது.

ரூ.720.85 கோடி மதிப்பீட்டில் 15 அரசு மருத்துவமனைகள், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

ரூ.142 கோடி மதிப்பீட்டில் ஐந்து மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 20 கோடி மதிப்பீட்டில் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல ஆராய்ச்சி மையம் 400 படுக்கை வசதியுடன் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் கடலூர், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்தும் கட்டடங்கள் கட்டப்பட்டன.

ரூ.41 கோடி மதிப்பீட்டில் சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம் ஆகிய பட்டுக்கோட்டை கம்பம் 3 அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு சேவைகள் மேம்படுத்துவதற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.7 கோடி மதிப்பீட்டில் லால்குடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் தாய் சேய் நல பிரிவினை மேம்படுத்த புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.54 கோடி மதிப்பீட்டில் சென்னை, கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை மற்றும் ஆர்.எஸ்.ஆர்.எம். அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் தாய் சேய் நல பிரிவுகளை மேம்படுத்த புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ. 64.90 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய மாணவியர் விடுதி கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் எட்டு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் 7 மாவட்ட மருத்துவக் கல்லூரிகளில் கட்டணப் படுக்கைகள் (Pay Ward) அமைக்கப்பட்டுள்ளன.

ரூ. 632 கோடி மதிப்பீட்டில் ஜப்பானின் நிதி உதவியுடன் சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மூன்று புதிய மூன்றாம் நிலை மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன. திருவள்ளூர், சேலம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு புதிய இரண்டாம் நிலை மருத்துவமனை கட்டப்பட்டுள்ளன. திருப்பூரில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் கொடைக்கானல், அரசு மருத்துவமனையில் உடற்கூறாய்வு மையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ. 2.35 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறையில் மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

ரூ. 60 கோடி மதிப்பீட்டில் சென்னை – இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் புதிய நரம்பியல் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 10 கோடி மதிப்பீட்டில் 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ரூ.2 கோடி மதிப்பீட்டில் 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த சுகாதார ஆய்வகங்கள் அமைக்கும் பணிகளில், வள்ளியூர் மற்றும் பழனியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை, செங்கம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ.9 கோடி மதிப்பீட்டில் தென்காசி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவுக்கான கூடுதல் தளம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.110 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் விரிவான சிகிச்சை பிரிவுகளில் மற்றும் கண் சிகிச்சை பிரிவுகளில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை வசதிக ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 67.83 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் புதிய பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.67.76 கோடி மதிப்பீட்டில் ஈரோட்டில் அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிறப்பு மருத்துவமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் சென்னை, திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் கூடுதல் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ரூ.35 கோடி மதிப்பீட்டில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் (TNIMHANS) மையக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

ரூ.34.45 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை திண்டிவனம், தாம்பரம், திருவில்லிப்புத்தூர், அம்பாசமுத்திரம் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இடங்களில் புதிய தாய்சேய் நல கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.58 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஓட்டேரி, கன்னியாகுமரி, சிதம்பரம் மாவட்டங்களில் கட்டப்படுகின்றன.

ரூ.100 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஐந்து இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.35.81 கோடி மதிப்பீட்டில் இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.7 கோடி மதிப்பீட்டில் கோவில்பட்டி, காஞ்சிபுரம், சீர்காழி உள்ளிட்ட ஏழு அரசு மருத்துவமனைகளில் புதிய ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.80 கோடி மதிப்பீட்டில் 16 அரசு மருத்துவமனைகளில் 15 கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.4.94 கோடி மதிப்பீட்டில் சென்னையில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.59 கோடி மதிப்பீட்டில் – மதுரை மாவட்டம் பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை புதிய உட்கட்டமைப்பு கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ. 6 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் – விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

ரூ.147 கோடி மதிப்பீட்டில் சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில், நர்சிங் பள்ளி மற்றும் விடுதி கட்டடம் மற்றும் புதிய உயர் சிறப்பு தீவிர மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.53 கோடி மதிப்பீட்டில் சென்னை – எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் டவர் பிளாக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையில் புதிய மகப்பேறு குழந்தைகள் நல மருத்துவமனை கட்டடத்தின் கூடுதல் தளங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.56.50கோடி மதிப்பீட்டில் சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கூடுதல் தளங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.54.82 கோடி மதிப்பீட்டில் சென்னை பெரியார் நகரில் அரசு புறநகர் மருத்துவமனைக்கான கூடுதல் தளங்கள் கட்டி முடிக்கப்பட்டது.

ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 31.08 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் உள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நர்சிங் பள்ளி மற்றும் விடுதிக் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் மற்றும் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம் முசிறியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.41.70 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையக் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.9.65 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மழைநீர்வடிகால் மற்றும் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.100 கோடி மதிப்பீட்டில் அரியலூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், தேனி, சேலம் மற்றும் ஏறத்தாழ 6 இடங்களில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.34 கோடி மதிப்பீட்டில் ஈரோடு பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டு வருகின்றது.

ரூ.20 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் நசரத்பேட்டை அரசு மருத்துவமனையின் விபத்து பிரிவில் சாலை மற்றும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூ.8.28 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, கீழ்ப்பாக்கம், வேலூர், செய்யூர் மற்றும் பல இடங்களில் அரசு மருத்துவமனைகளில் உடற்கூறாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கந்தனூர் மற்றும் கொல்லி மலை அரசு மருத்துவமனைகளிலும் உடற்கூறாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ரூ.20 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.7.23 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் கொடைக்கானல் துணை அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு, மருத்துவர் குடியிருப்புகள் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளன.

ரூ.40 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி, தேனி, பெரம்பலூர் மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.20 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.2 கோடி மதிப்பீட்டில் வேதாரண்யம் – நாகப்பட்டினம், காரைக்குடி – சிவகங்கை மாவட்டங்களில் அரசு மருத்துவமனைகளில் மாவட்ட ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.8.23 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவிற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.95.59 கோடி மதிப்பீட்டில் ஆர்.எஸ்.ஆர்.எம்.அரசு மருத்துவமனையில் தொகுதி ஏ மற்றும் பி இல் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) திட்டத்தின்கீழ் பேரணாம்பேட்டை அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

ரூ. 373.96 கோடி மதிப்பீட்டில் வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் பல இடங்களில் அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.197.81 கோடியில் வேலூர் பென்ட்லேண்ட் அரசு மருத்துவமனையில் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் நுண்ணுயிரியல் ஆய்வகம் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் கதிரியக்கத் துறையை வலுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.11.63 கோடி மதிப்பீட்டில் சென்னையில் இராயபுரத்தில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் லிப்ட் மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் சென்னை, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி வளாகத்தில் கூடுதல் குடியிருப்புகள் கட்டப்பட்டன.

ரூ.4.28கோடிமதிப்பீட்டில்சென்னைஉயர்நீதிமன்றமதுரைகிளையில்வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாக கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ. 2.89 கோடி மதிப்பீட்டில் வேலூர் சத்துவாச்சாரி நீதிமன்ற வளாகத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் குழந்தை சாட்சிகளை விசாரிக்கும் மையக் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ. 2.97 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூரில் பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் குழந்தை சாட்சிகளை விசாரிக்கும் மையம் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ. 3.18 கோடி மதிப்பீட்டில், தேனி, லஷ்மிபுரம் நீதிமன்ற வளாகத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி மற்றும் குழந்தை சாட்சிகளை மையக் கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் தருமபுரி நீதிமன்ற வளாகத்தில் நிரந்தர லோக் அதாலத் தலைவர் மற்றும் செயலாளர் மாவட்ட சட்ட ஆணையத்திற்கான குடியிருப்புகள் கட்டப்பட்டன.

ரூ.20.24 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்ற புதிய ஒன்பது மாடிக் கட்டடம் கட்டப்பட்டது.

ரூ.23.12 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

ரூ. 59.43 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் இரண்டு பன்னடுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் இணைப்பு கட்டடம் புதுப்பிக்கப்பட்டது.

ரூ. 0.96 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் சீனிவாசபுரத்தில் வணிக நீதிமன்றம் மற்றும் வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம் மாநகராட்சி சமுதாய கூட கட்டத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் முடிவுற்றன.

ரூ. 315 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்றத்தில் துணை நீதிமன்றத்தில் பல அடுக்குகள் கொண்ட ஒருங்கிணைந்த கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.100.45 கோடி மதிப்பீட்டில் காரைக்குடி அரசு சட்டக் கல்லூரியில் மாணவ, மாணவியர் விடுதி மற்றும் நிரந்தர கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 14.92 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் பாரம்பரிய நீதிமன்றக் கட்டடத்தில் பாதுகாப்பு புதுப்பிப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ. 13.56 கோடி மதிப்பீட்டில் உள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை பெஞ்ச் வளாகத்தில் 8 தனி நபர் வகை நீதிபதி பங்களாக்கள் கட்டும் பணிகள் முடிவுற்றன.

ரூ.4.69 கோடி மதிப்பீட்டில் மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 8 நீதிமன்ற அரங்குகள்/அதிகாரிகள் அலுவலகங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம், விக்கிரவாண்டியில் இரண்டு நீதித்துறை அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிவுற்றன.

ரூ. 15.62 கோடி மதிப்பீட்டில் கடலூர், குறிஞ்சிப்பாடியில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ1.75 கோடி மதிப்பீட்டில் கடலூர், திட்டக்குடியில் துணை நீதிபதி குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிவுற்றன.

ரூ.16.05 கோடி மதிப்பீட்டில், மதுரை, பேரையூரில் இரண்டு நீதிமன்றங்கள் மற்றும் குடியிருப்புகளுடன் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



ரூ.11.70 கோடி மதிப்பீட்டில் தேனி, ஆண்டிபட்டியில் சைக்கிள் கொட்டகையுடன் கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.11.23 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், மேட்டுப்பாளையத்தில் குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் துணை நீதிமன்றம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.5.76 கோடி மதிப்பீட்டில், திருவள்ளூர், பள்ளிப்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 12.38 கோடி மதிப்பீட்டில், சிவகங்கை, மானாமதுரையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் இரு சக்கர வாகனக் கொட்டகை கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 8.93 கோடி மதிப்பீட்டில், சிவகங்கையில் தற்போதுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கூடுதலாக 4 நீதிமன்ற கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.55.15 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர், பொள்ளாச்சியில் 10 நீதிமன்ற அறைகளுடன் ஒருங்கிணைந்த கட்டடம் மற்றும் 5 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி நாகர்கோவிலில் மாவட்ட பழைய நீதிமன்றக் கட்டட சீரமைப்பு பணிகள் முடிவுற்றன.

ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணையக் கட்டடத்தில் முதல் தளத்தை புதுப்பித்தல் பணிகள் முடிவுற்றன.

மதுரையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக்கிளை வளாகத்தில் ரூ.17.60 கோடி மதிப்பீட்டில், வி.ஐ.பி. மாளிகை கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ. 3.29 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் பாதிக்கப்படக்கூடிய சாட்சிகள் விசாரணை மையம் மற்றும் குழந்தைகள் சாட்சி மைய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.12.38 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், இராமேஸ்வரத்தில் நீதிமன்றக் குடியிருப்புக் மற்றும் விருந்தினர் மாளிகை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.5.98 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி பூதப்பாண்டியில் நீதிமன்றம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.34.97 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நீதிமன்றத்தில் பாரம்பரிய பிரதான கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் பாதுகாப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.6.30 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் பாரம்பரிய மாவட்ட நீதிமன்ற கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் முடிவுற்றன.

ரூ.0.27 கோடி மதிப்பீட்டில் நாமக்கல், திருசெங்கோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மின் தூக்கி அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.52 கோடி மதிப்பீட்டில் நாமக்கல், இராசிபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மின் தூக்கி அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு கூடுதல் வசதிகளை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 7.87 கோடி மதிப்பீட்டில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை பெஞ்ச் வளாகத்தில் அடுக்குமாடி குடியிருப்பு வகை நீதிபதிகள் பங்களாவிற்கு கூடுதல் வசதிகள் வழங்கும் பணி நடைப்பெற்று வருகிறது.

ரூ. 2.16 கோடி மதிப்பீட்டில், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் மல்லிகை வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை அகாடமி வளாகத்தில், உயர் நீதிமன்ற விருந்தினர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.36.50 கோடி மதிப்பீட்டில், சென்னை கிரீன்வேஸ் சாலையில் உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகளுக்கான பங்களாக்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.11.34 கோடி மதிப்பீட்டில், சென்னை கிரீன்வேஸ் சாலையில் V.I.P கள் தங்குவதற்கு மூன்று பங்களாக்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.34 கோடி மதிப்பீட்டில், நாமக்கல்லில் நீதித்துறை அலுவலர்கள் குடியிருப்பு மற்றும் திருச்செங்கோட்டில் உள்ள நீதித்துறை அலுவலர்கள் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.0.55 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவையாறு நீதிமன்ற கட்டடங்களில் சேமக் காப்பறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 0.44 கோடி மதிப்பீட்டில், திருப்பத்தூரில் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளுக்கான நீதிமன்றம் புதுப்பித்தல் மற்றும் வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.37 கோடி மதிப்பீட்டில், சென்னை உயர் நீதிமன்றத்தின் இணைப்புக் கட்டடத்தின் முதல் மற்றும் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள நீதிமன்ற அரங்குகள் ஒலி காப்பு முறைமை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.9.19 கோடி மதிப்பீட்டில் இராமேஸ்வரத்தில் மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.49.28 கோடி மதிப்பீட்டில், பொன்னேரி தாலுகாவில் பஞ்செட்டியில் 6 கோர்ட் ஹால்கள் மற்றும் பார் அசோசியேஷனை கொண்ட நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.48 கோடி மதிப்பீட்டில், இராமநாதபுரம், முதுகுளத்தூரில் நீதிமன்ற கட்டடத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வுதள வசதி ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.9.68 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர், குதிரைவண்டி பாரம்பரிய நீதிமன்ற கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.6.46 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மத்தியஸ்தம் மற்றும் சமரச மைய 5வது மாடி மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.38.55 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நீதிமன்ற, பழைய சட்டக் கல்லூரி வளாகத்தில் 5 மாடி கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் மதுரையில் சென்னை உயர் நீதிமன்ற நிர்வாகத் தொகுதியின் மேற்கூரையில் தேய்ந்து போன அழுத்தப்பட்ட ஓடுகளை அகற்றுதல் மற்றும் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.8.57 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் வளாகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 19.07 கோடி மதிப்பீட்டில் சென்னை ராஜா அண்ணாமலைபுரம், தாமரை வளாகத்தில் விருந்தினர் மாளிகை மற்றும் மண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 9.97 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், மாவட்டம் கமுதியில், மாவட்ட முனிசிப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், கமுதியில் மாவட்ட முனிசிஃப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.41 கோடி மதிப்பீட்டில் ஈரோடு, சத்தியமங்கலத்தில், 5 நீதிமன்றங்கள் மற்றும் 5 நீதித்துறை அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.22.61 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம், உத்திரமேரூரில் மாவட்ட முன்சிஃப் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றக் கட்டடம், பொதுக் கழிப்பறை, கேன்டீன் இருசக்கர வாகனக் கொட்டகை இரண்டு நீதித்துறை அலுவலர் குடியிருப்புகள் ஆகியவை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.19.71 கோடி மதிப்பீட்டில் அரியலூர், செந்துறையில் இரண்டு நீதிமன்றங்கள் மற்றும் இரண்டு நீதித்துறை அலுவலர் குடியிருப்புகளுடன் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.54.96 கோடி மதிப்பீட்டில், கோவை, அவிநாசி சாலையில் குழந்தை சாட்சிகள், பாதிக்கப்படக் கூடிய சாட்சிகளுக்கான 12 நீதிமன்றங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் நீதிமன்ற வளாகத்தில் 33 சட்ட அறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.3.89 கோடி மதிப்பீட்டில் ஈரோடு பவானியில் IV வது கூடுதல் மாவட்ட நீதிபதிகளுக்கு குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.8.70 கோடி மதிப்பீட்டில் நாமக்கல்லில் 5 நீதித்துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ. 1.33 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டையில் துணை நீதிபதி குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.17.81 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டத்தில் நான்கு நீதிமன்றங்கள், கூடுதல் வசதிகளுடன் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.3.58 கோடி மதிப்பீட்டில் மாவட்ட நீதித்துறையின் அனைத்து நீதிமன்றக் கட்டடங்களின் கட்டாய அணுகல் தணிக்கை, மாற்றுத் திறனாளிகள் வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 166 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் நீதிமன்ற கட்டடம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 76.61 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம், கீழக்கரை வட்டம், குதக்கோட்டை கிராமத்தில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ. 6.46 கோடி மதிப்பீட்டில் வேலூர் காட்பாடியில் அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 89.01 கோடி மதிப்பீட்டில் தேனியில் அரசு சட்டக் கல்லூரி மற்றும் மாணவ, மாணவியர் விடுதி கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 3.5 கோடி மதிப்பீட்டில் மதுரை அரசு சட்டக் கல்லூயில் வகுப்பறைகள், ஆசிரியர்கள் அறை, கூட்ட அறை மற்றும் மேடை அமைப்பு பணிகள் முடிவுற்றது.

ரூ. 5.85 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் அரசு சட்டக் கல்லூரி கூடுதல் வகுப்பறை கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தேனி அரசு சட்டக் கல்லூரிக்கென ரூ. 0.58 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

விழுப்பும், விக்கிரவாண்டியில் ரூ.17.86 கோடி மதிப்பீட்டில் இரண்டு நீதிமன்றங்கள் கொண்ட ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடலூர், நெய்வேலியில் ரூ. 18.24 கோடி மதிப்பீட்டில் அதிகாரிகள் குடியிருப்புகள் போன்ற இதர வசதிகளுடன் மூன்று நீதிமன்றங்கள் கொண்ட கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

நீலகிரி, உதகமண்டலத்தில் ரூ.37.79 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள், வழக்கறிஞர் சங்க கட்டடம், வக்கீல் எழுத்தர் கட்டடம் மற்றும் 49 சட்ட அறைகள் கட்டுதல் பணிகள் முடிவுற்றது.

ரூ.0.38 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் குளிரூட்டி அமைத்தல் பணிகள் முடிவுற்றது.

ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் விழுப்புரம் செஞ்சி மற்றும் கள்ளக்குறிச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் குளிரூட்டி அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.32 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் வேடசந்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மின் தூக்கி வசதி பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் வேலூர் சத்துவாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் மூன்று எண்கள் 13 நபர்கள் பயணிக்கும் மின் தூக்கி மற்றும் ஒன்று, எண் 13 நபர்கள் பயணிகளுக்கான மின் தூக்கி பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.43 கோடி மதிப்பீட்டில் சேலம், மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு 2 எண்.10 நபர்கள் கொள்ளளவு கொண்ட பயணிகள் மின் தூக்கி வசதி பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.82 கோடி மதிப்பீட்டில் கோவை, மேட்டுப்பாளையத்தில் துணை நீதிபதி குடியிருப்புகள் கட்டுதல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 25.50 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் ரெட் ∴பீல்டில் 26 நீதித்துறை அதிகாரிகள் குடியிருப்புகள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை, மானாமதுரையில் ரூ. 0.38 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டட வளாகத்தில் சுற்றுச்சுவர் மற்றும் அணுகு சாலை பணிகள் முடிக்கப்பட்டது.

சேலம், மேட்டூரில் ரூ.0.17 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டட வளாகத்தில் பொதுக்கழிப்பறை மற்றும் வாகனக் கூடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.29 கோடி மதிப்பீட்டில் சேலம், ஆத்தூர் கூடுதல் மாவட்ட நீதிபதிகள் நீதிமன்றம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.55 கோடி ஈரோடு மொடக்குறிச்சி தாலுகாவில் மகளிர் சுயஉதவிக்குழு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 2.30 கோடி மதிப்பீட்டில் தருமபுரி நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்- II பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 101.55 கோடி மதிப்பீட்டில் சேலத்தில் அரசு சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதி கட்டடங்கள் பணிகள் முடிவுற்றது.

ரூ. 40.08 கோடி மதிப்பீட்டில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் கல்வி மற்றும் நிர்வாக தொகுதி கட்டுமானம் பணிகள் முடிவுற்றது.

ரூ. 92.31 கோடி மதிப்பீட்டில் நாமக்கல், அரசு சட்டக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதி கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் திருப்பத்தூர் மாவட்டத்தில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 6.25 கோடி மதிப்பீட்டில் செய்யாறு மற்றும் ஜமுனாமரத்தூர் இடங்களில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை, செய்யாறு கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி முடிவுற்றன.

ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கான குடியிருப்பு கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.4.67 கோடி மதிப்பீட்டில் சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் பணிகள், மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ. 23.05 கோடி மதிப்பீட்டில் சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகம் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ.54.25 கோடி மதிப்பீட்டில் வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, விருதுநகர், வாணியம்பாடி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு மாளிகை மற்றும் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.93.28 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடியில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ.11.87 கோடி மதிப்பீட்டில் நீலகிரி உதகமண்டலத்தில் அரசு அலுவலர்களுக்கான 50 குடியிருப்புகள் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ. 0.40 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடியில் பொதுப்பணித்துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகக் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ. 2.73 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சியில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகக் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ. 3.69 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.5.21 கோடி மதிப்பீட்டில் நீலகிரி கோத்தகிரியில் 16 குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 99.77 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் புதிய பல அடுக்கு "சி" வகையில் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை தலைமைச் செயலகத்தில் நவீனமயமாக்கும். மற்றும் பணிகள் முடிவுற்றன.

ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் சென்னை தண்டையார்பேட்டையில் 9 பிளாக்குகளை புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்றன.

ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சியில் அரசு பணியாளர் பயிற்சி நிலையத்தில் மேம்படுத்துதல் பணி முடிவுற்றன.

ரூ.88.49 கோடி மதிப்பீட்டில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் 'பி வகை' வகை அடுக்கு மாடி குடியிருப்பு கட்டும் பணி முடிவுற்றது.

ரூ.23.49 கோடி மதிப்பீட்டில் சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் சாலை மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்தும் பணி முடிவுற்றது.

ரூ.102.80 கோடி மதிப்பீட்டில் சென்னை சைதாப்பேட்டையில், புதிய "சி" வகை குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.4.81 கோடி மதிப்பீட்டில் கடலூரில் 3 துணை பிரிவு மற்றும் 5 பிரிவு அலுவலக உட்பட கட்டுமான பணிகள் முடிவுற்றது.

ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவாரூரில் பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு குடியிருப்பு கட்டும் பணிகள் முடிவுற்றது.



ரூ.67.88 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை சேப்பாக்கத்தில் பொதுப்பணித்துறை வளாகத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு உணவருந்தும் கூடம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

ரூ. 2.37 கோடி மதிப்பீட்டில், தேனியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.45 கோடி மதிப்பீட்டில், திண்டுக்கல்லில் மின் உபகோட்ட அலுவலகக் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.75 கோடி மதிப்பீட்டில், மதுரை, தல்லாகுளம் பொதுப்பணித்துறை வளாகத்தில், கட்டடங்கள் (C&M) கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 7.87 கோடி மதிப்பீட்டில், கள்ளக்குறிச்சியில் சுற்றுலா மாளிகை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 3.21 கோடி மதிப்பீட்டில், திருச்சியில் A,B,C சுற்றுலா மாளிகை புனரமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ. 4.08 கோடி மதிப்பீட்டில், சென்னையில், IAS அதிகாரிகள் உணவகத்தில் கூடுதல் தளம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ. 34.49 கோடி மதிப்பீட்டில் சென்னை தண்டையார்பேட்டையில் 96 பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டையில் ஆய்வு மாளிகை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.7.32 கோடி மதிப்பீட்டில், ஈரோடு பெருந்துறை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கட்டடம், இராமநாதபுரம் மண்டபம் கலோனியல் பங்களா, புதுக்கோட்டை திருமயம் சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளி மற்றும் நாகர்கோவில் கைரேகை பதிவு அலுவலக பாரம்பரிய கட்டடங்களுக்கு, பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 96.42 கோடி மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி மற்றும் பல இடங்களில் பாரம்பரிய கட்டடங்களுக்கு புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.45.77 கோடி மதிப்பீட்டில், சென்னை மனநலக் காப்பகத்தில் கிண்டியில் கிங் இன்ஸ்டிடியூட் கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புதுக்கோட்டையில் பொது அலுவலகம், தஞ்சாவூரில், பழைய நீதிமன்றம், காரைக்குடியில் சங்கரபதி கோட்டை, சேப்பாக்கத்தில் ஆவண கோபுரம் பாரம்பரியக் கட்டடங்களுக்கு பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மதுரையில் மாவட்ட பதிவாளர் அலுவலகம் (தெற்கு) ரூ. 3.98 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற உள்ளது.

தஞ்சாவூர், திருவையாறு சென்னை சேப்பாக்கம், கிண்டி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் பாரம்பரிய கட்டடத்தை புதுப்பித்து, மறுசீரமைத்து பாதுகாக்கும் பணிகள் ரூ. 69.40 கோடிக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் ஓரத்தநாட்டில் தமிழ்நாடு நில அளவை பயிற்சி நிலையத்தில் கூடுதல் வசதிகள் மற்றும் சிறப்பு பழுது பார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ. 10.08 கோடி மதிப்பீட்டில் அரியலூர், காஞ்சிபுரம் விருதுநகர் ஆகிய 3 தாலுக்கா அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டது.

ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர் விழுப்புரம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை மாவட்டங்களில் 5 வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.

ரூ.6.10 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி, திருவட்டாறு மற்றும் கிள்ளியூர் ஆகிய 2 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளது.

ரூ. 1.07 கோடி மதிப்பீட்டில் 7 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டப்பட்டது.

ரூ. 5.92 கோடி மதிப்பீட்டில் 28 வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டப்பட்டது.

ரூ.144.48 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிவற்றது.

ரூ.7.39 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மயிலாடுதுறை மாவட்டங்களில் 2 வருவாய் கோட்ட அலுவலகங்கள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 1.97 கோடி மதிப்பீட்டில் தென்காசி நாகப்பட்டினம், மயிலாடுதுறை 3 வருவாய் கோட்ட குடியிருப்புகள் கட்டப்பட்டது.

ரூ. 11.29 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், செங்கல்பட்டு, தஞ்சாவூர் 3 இடங்களில் தாலுக்கா அலுவலக கட்டடங்கள் முடிக்கப்பட்டது.

ரூ.0.38 கோடி மதிப்பீட்டில் திருவாரூரில் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது.

ரூ.0.29 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு வண்டலூர் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது.

ரூ. 36.62 கோடி மதிப்பீட்டில் தருமபுரி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.12.18 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவக வளாகத்தில் GDP அரங்கம் மற்றும் கூடுதல் அலுவலக வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 6.35 கோடி மதிப்பீட்டில், நாகப்பட்டினம் தாலுக்காவில், நம்பையார் நகரில் புயல் பாதுகாப்பு மையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.4.01கோடிமதிப்பீட்டில்நாகப்பட்டினத்தில்அலுவலககட்டடம்கட்டும்பணிமுடிக்கப்பட்டுள்ளது.

ரூ.114.72 கோடி மதிப்பீட்டில் திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடத்திற்கு அடிப்படை வசதிகள் வழங்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 3.05 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் – ஆர்.எஸ். மங்களத்தில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 3.76 கோடி மதிப்பீட்டில், திருச்சி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிக்கப்படுள்ளது.

ரூ.0.16 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம் 18/1 சமயம் குடிகாட்டில் புதிய கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ.0.41 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.21 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், இராமபுரத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.4.80 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் தாலுக்கா அலுவலகக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், மன்னார்குடியில் தாலுக்கா அலுவலக கட்டடம் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 2.97 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தின் மாஸ்டர் பிளான் காம்ப்ளக்ஸில் EVM மற்றும் VVPAT-களைச் சரியாகச் சேமிப்பதற்கான கிடங்கு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 2.01 கோடி மதிப்பீட்டில் திருவாரூரில் 8 வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

0.15 கோடி மதிப்பீட்டில் திருவாரூர் ∴பிர்கா சர்வேயர்களுக்கான அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.29 கோடி மதிப்பீட்டில் திருவாரூரில் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.16 கோடி மதிப்பீட்டில் திருவாரூரில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், கோட்டூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.17 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூரில் ∴பிர்கா சர்வேயர்களுக்கான அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் கடலூர் புத்தூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.16 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறையில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 4.57 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறையில் தாலுக்கா அலுவலக கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 1.24 கோடி மதிப்பீட்டில் மதுரை, சிவகங்கை, மற்றும் மயிலாடுதுறை வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் தேனியில் தற்போதைய ஆட்சியர் அலுவலகத்தில் புதிய கூட்ட அரங்கம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.31 கோடி மதிப்பீட்டில் தேனி, கொடங்கிப்பட்டியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.18 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் வட்டாட்சியர் குடியிருப்புடன் கூடிய தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.70.57 கோடி மதிப்பீட்டில் விருதுநகர், மாஸ்டர் பிளான் காம்ப்ளக்சில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ.2.95 கோடி மதிப்பீட்டில், விருதுநகர், இராமநாதபுரத்தில் பல்வேறு பகுதிகளில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ2.88 கோடி மதிப்பீட்டில் விளாத்திகுளத்தில் தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் தாலுக்கா அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.27 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், கரடிவாவியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிவுற்றது.

ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் திருப்பூர், காங்கேயத்தில் உள்ள பாடியூரில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.37 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் (தெற்கு) RDO அலுவலகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.15 கோடி மதிப்பீட்டில் போகம்பட்டியில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.19 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், கவுண்டம்பாளையத்தில் நில அளவை மற்றும் நிலஆவணத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள் வழங்குதல் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.27 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் வரப்பட்டியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் சேலம், செம்மண்டபட்டி கிராமத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 3.05 கோடி மதிப்பீட்டில் கரூரில் தாலுக்கா அலுவலக கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் கரூர், அரவக்குறிச்சியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் தருமபுரி, பாளையத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.5.02 கோடி மதிப்பீட்டில் தருமபுரி பென்னாகரத்தில் புதிய தாலுக்கா பென்னாகரத்தில் புதிய தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 3.48 கோடி மதிப்பீட்டில் நீலகிரி, உதகமண்டலத்தில் புதிய தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 1.01 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.15 கோடி மதிப்பீட்டில் பொம்மிக்குப்பத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.31 கோடி மதிப்பீட்டில் திருப்பத்தூர் தூதிபட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.31 கோடி மதிப்பீட்டில் வேலூர், திருவாலத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 11.59 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தாலுக்கா அலுவலகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ. 0.15 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர், மீஞ்சூரில் கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.42 கோடி மதிப்பீட்டில், வானகரத்தில், வாயநல்லூர், மதுரவாயல், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விருதுநகர், விழுப்புரம், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.66 கோடி மதிப்பீட்டில் கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் திருச்சி, லால்குடியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.9.37 கோடி மதிப்பீட்டில் விருதுநகர், மதுரை மாவட்டத்தில் தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.42 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரத்தில் கீழியூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.15 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் எஸ். ஆண்டக்குடியில் கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.74 கோடி மதிப்பீட்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.8.79 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் தூத்துக்குடி மேற்கு தாலுக்கா அலுவலக கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.70 கோடி மதிப்பீட்டில் மதுரை, விருதுநகர் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.0.41 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் கீரம்பூரில் சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளை கிணறு வசதிகளுடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 4.95 கோடி மதிப்பீட்டில் சேலம், தலைவாசலில் புதிய தாலுக்கா அலுவலக கட்டடம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.97 கோடி மதிப்பீட்டில் தருமபுரி மற்றும் உதகக்கோட்டை வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 119 கோடி மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம் தென்காசியில் புதிய ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.35 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 2.22 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் புதிய தாலுக்கா அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ. 0.63 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரில் குழந்தைகள் கண்காணிப்பு இல்லத்தில் கூடுதல் சுற்றுச் சுவற்றினை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 8.17 கோடி மதிப்பீட்டில் சென்னை மயிலாப்பூரில் லேடி வெலிங்டன் வளாகத்தில் சமூக நலத்துறை இயக்குனரகத்திற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

ரூ. 15.95 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, ஆத்தூர் அரசு மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில்"அரசு பாதுகாப்பு இல்லம்" அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 27 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு, ஆத்தூரில் சமூக வலுவூட்டலுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 331.20 இலட்சம் மதிப்பீட்டில் சேலம், மதுரை, திருச்சி மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சக புனரமைத்தல் மற்றும் சிறப்புப் பராமரிப்பு நிறைவடைந்துள்ளன.

ரூ. 94 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை அரசு மைய அச்சகத்தில் அமைந்துள்ள கோமாரி கட்டடத்தினை புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் சென்னை தண்டையார்பேட்டையில் 96 பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.1.25 கோடியில் சென்னையில் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுமார் ஐம்பது கோடி மதிப்புள்ள காகிதங்கள் மற்றும் எழுதுபொருள்கள் உள்ள அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடத்தை புதுப்பிக்கும் பணி முடிவுற்றது.

ரூ.21.25 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மைய அச்சகம், சென்னை-1 வளாகத்தில் CTP இயந்திரம் நிறுவிட உள்கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டன.



ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு இசைக் கல்லூரியில் உள்ள பாரம்பரிய பிராடி கேசில் கட்டடத்தினை புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் சென்னை அடையாறில் உள்ள இயல் இசை நாடக மன்றத்தினை புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டத்தில் மாவட்ட இசைப்பள்ளி கட்டும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் சென்னை, அடையாறில் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அருங்காட்சியக கலையரங்கத்தினை புனரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ. 5 கோடி மதிப்பீட்டில் சேலம் அஸ்தம்பட்டி கிராமத்தில் புதிய அரசு அருங்காட்சியக கட்டடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி நினைவு அருங்காட்சியத்தினை பராமரிப்பு, சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை தரங்கம்பாடியில் அமைந்துள்ள டேனிஷ் கோட்டையினை சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் மதுரையில் அமைந்துள்ள பாரம்பரிய கட்டடமான திருமலை நாயக்கர் மஹாலினை மேம்படுத்திடும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ.6.95 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரில் அமைந்துள்ள தர்பார் ஹாலினை பராமரித்தல் மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் தொல்பொருட்களை பாதுகாக்க புதிய அருங்காட்சியக கட்டட வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது.

ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர், பட்டறைபெரும்புதூரில் புதிய தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.4.46 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை, தரங்கம்பாடியில் அமைந்துள்ள கவர்னர் மாளிகையினை பராமரித்தல் மற்றும் சீரமைத்தல் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.9.43 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரில் அமைந்துள்ள சார்ஜா மாடி புராதான கட்டடத்தினை சீரமைத்து மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகத்தை அரசுக்கு சொந்தமான பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி மாற்றியமைப்பதற்கு பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் விழுப்புரத்தில் மாவட்டத்தில் உள்ள முதன்மை திட்ட வளாகத்தில் புதிய அரசு அருங்காட்சியகம் அமைத்திட பணிகள் தொடங்கப்படவுள்ளன.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் அரியலூரில் உள்ள புதையுயிரி படிம அருங்காட்சியக வளாகத்தில் கருப்பொருள் பூங்கா அமைத்தல் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் அரசு அருங்காட்சியகத்தினை சொந்த கட்டடத்திற்கு இடம் மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.36 கோடி மதிப்பீட்டில் சென்னை கிண்டியில் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கான கட்டடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் சேலம் வாழப்பாடி தாலுகாவில் உள்ள வாழப்பட்டியில் மோட்டார் வாகன ஆய்வாளர் பிரிவு வாகன ஆய்வாளர் அலுவலக கட்டடம் கட்டுதல் பணி முடிவுற்றது

ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் நாமக்கல்லில் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் சோதனை தடத்துடன் சொந்த கட்டடம் கட்டும்பணி முடிவுற்றது.

ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டத்தில் R.T.O பிரிவு அலுவலக கட்டடம் மற்றும் மோட்டார் சோதனை தடம் கட்டுதல் பணி முடிவுற்றது.

ரூ.5.68 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை, நாமக்கல், திருச்சி, தூத்துக்குடி, தேனி, திருவண்ணாமலை, ஆரணியில் சார்கருவூல அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டும் பணி நடைபெற்று முடிவுற்றது.

ரூ.13.39 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர், சிவகங்கை, மதுரை, திருவாரூர் மன்னார்குடியில் ஆகிய மாவட்டங்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கான ஓட்டுநர் சோதனை தடத்துடன் கூடிய சொந்த கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.78 கோடி மதிப்பீட்டில், மதுரை மாவட்டத்தில், நாகமலை புதுக்கோட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.58 கோடி மதிப்பீட்டில், மார்த்தாண்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் ஓட்டுநர் சோதனை தடத்துடன் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.3.79 கோடி மதிப்பீட்டில், நாகர்கோவிலில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் ஓட்டுநர் சோதனை தடத்துடன் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.0.26 கோடி மதிப்பீட்டில், கோயம்புத்தூர், பொள்ளாச்சி தாலுக்காவில், கோபாலபுரத்தில் "Weigh in Motion" இயந்திரம் நிறுவப்பட்டது.

ரூ. 3.79 கோடி மதிப்பீட்டில் , கோயம்புத்தூர், மேட்டுப்பாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றம் ஓட்டுநர் சோதனை தடத்துடன் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.42 கோடி மதிப்பீட்டில், திருவள்ளூர், குப்பம் கிராமத்தில் திருத்தணியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக பிரிவு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.2.10 கோடி மதிப்பீட்டில், திருப்பூர், அவிநாசியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.11.14 கோடி மதிப்பீட்டில் , கோயம்புத்தூர் மாவட்டம் உக்கடத்தில் TNSTC வளாகத்தில் கேரேஜ் பணிமனை, ஓய்வெடுக்கும் அறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.43.34 கோடி மதிப்பீட்டில், பல பாரம்பரிய கட்டடங்கள், நினைவுச்சின்னங்கள் – பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன வளாகத்தில், பல கட்டடங்கள் ஆகியவற்றின் புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலிக்கு சிலை அமைக்கப்பட்டது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேளி அம்பலத்திற்கு சிலை அமைக்கப்பட்டது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் தென்காசி, விஸ்வநாதபேரியில் சுதந்திரப் போராட்ட வீரர்/ வீராங்கனை வெண்ணி காலாடிக்கு சிலை மற்றும் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது.

ரூ. 0.95 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் அரசு அச்சக கட்டடங்களின் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் காமராஜர் சாலை, சென்னை அரசு எழுதுபொருள் அலுவலக வளாகத்தில் சேதமடைந்த சுவர்கள், கூரைகள், கழிப்பறைகள் மற்றும் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள்.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், மன்னார்குடியில் திரு. லீ குவான் யூ அவர்களுக்கு முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 3 கோடி மதிப்பீட்டில் அரியலூர் கீழப்பழவூர் மொழிப்போர் தியாகி சின்னசாமி நினைவு மண்டபம் மற்றும் வெண்கல சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் கடலூர் சிதம்பரத்தில் பெரியார் இளையபெருமாள் நூற்றாண்டு நினைவு மண்டபம் கட்டப்பட உள்ளது.

ரூ.0.51 கோடி மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டத்தில் கவிஞர் முடியரசன் அவர்களின் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் சென்னை, காந்தி மண்டபம் வளாகத்தில் இராணி வேலுநாச்சியார் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் சிவகங்கையில் மருது சகோதரர்களுக்கு சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.50 இலட்சம் செலவில் சர் ஜான் ஹூபர்ட் மார்ஷலுக்கு சென்னை நகரில் சிலை பணி முடிவுற்றது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் விஞ்ஞானி ஜி.டி. நாயுடு அவர்களுக்கு சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்த சியான் பால் அவர்களின் சிலையுடன் மணிமண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 0.50 கோடி மதிப்பீட்டில் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், பட்டுக்கோட்டையில் தியாகி வி.நாடி முத்துப்பிள்ளை அவர்களுக்கு சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கரூர் சி. முத்துசாமி அவர்களுக்கு சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.50 கோடி செலவில் சென்னை, கொளத்தூரில் தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழக உதவி ஆணையர் அலுவலகம் கட்டப்பட்டது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் மதுரை அரசு கண்காணிப்பு இல்லத்தில் கூடுதல் தங்குமிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் சேலம், மதுரை, திருநெல்வேலி அரசு கண்காணிப்பு இல்லம் மற்றும் ஆத்தூர், செங்கல்பட்டு அரசு பாதுகாப்பு இல்லங்களில் தனி கழிவறை வசதிகளுடன் கூடிய அறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் அரசு குழந்தைகள் இல்லங்கள் 18 இடங்களில் வாயில் காப்பாளர்கள் பயன்பாட்டிற்காக அரசு குழந்தைகள் இல்லங்களின் தனி கழிப்பறை வசதிகளுடன் கூடிய அறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.





ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சென்னை, சேலம், கடலூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய 6 அரசு கண்காணிப்பு இல்ல கட்டடங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர், கோவை மற்றும் சேலம் அரசு குழந்தைகள் இல்லங்களில் புதிய சமையலறைகள் மற்றும் உணவுக்கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் வேலூர் அருங்காட்சியகம் புதிய தொழில்நுட்பம் மற்றும் காட்சிப்பொருட்களுடன் கூடிய புதிய அரங்குகளுடன் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் தென்காசி குற்றாலத்தில் நாட்டுப்புற கலை பழங்குடியினர் அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருகின்றது.

ரூ.0.49 கோடி மதிப்பீட்டில் கடலூர் அரசு அருங்காட்சியகத்தில் கலைப்பொருட்கள் மற்றும் மாதிரிகள் அமைப்புகளின் காட்சியை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.6.81 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் செயல்படும் அரசு அருங்காட்சியகத்தை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.2 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகம் கட்டடத்தை இடமாற்றம் செய்தல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.57கோடி மதிப்பீட்டில் விருதுநகர், திருநெல்வேலி மாவட்டங்களில் பாறைக் குடைவரைக் கோயில்களில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் திருமலை நாயக்கர் அரண்மனையில் புதிய ஒளிச்சிற்பக் கூடம் மற்றும் மழைநீர் வடிகால், நவீன கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரூ.2.74 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மனோரா நினைவுச் சின்னத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முகப்பு விளக்குகள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் மாமல்லபுரம் அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரியில் பழைய கட்டடங்களின் புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.10 கோடி மதிப்பில் 59 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளுக்கு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.39 கோடி மதிப்பில் மதுரை, சென்னை மற்றும் திருச்சியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த பொது சமையலறையை பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3 கோடி மதிப்பில் தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் 29 கள்ளர் பள்ளி கட்டடங்களில் சிறப்பு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.3.88 கோடி மதிப்பில் 37 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பெண்கள் விடுதியில் கட்டடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.44.50 கோடி மதிப்பில் சென்னை சைதாப்பேட்டை எம்.சி. ராஜா விடுதியில் புதிய விடுதிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ. 11.90 கோடி மதிப்பில் சென்னை அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக 40 வகுப்பறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.245 கோடி மதிப்பில் கோயம்புத்தூரில் பிரம்மாண்ட நூலகம் மற்றும் அறிவியல் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

ரூ.7.45 கோடி மதிப்பில் இராணிப்பேட்டை மாவட்ட நூலகம் கட்டுமானம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ரூ.74.27 கோடி மதிப்பில் 440 அரசு பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.235 கோடி மதிப்பில் திருச்சி மாநகரில் மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.3.70 கோடி மதிப்பில் காஞ்சிபுரத்தில் மாவட்ட நூலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.484.26 கோடி மதிப்பில் 280 அரசு பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.3.96 கோடி மதிப்பில் கடலூரில் சிறுபாண்மையினர் நலத்துறைக்கு விடுதி கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.

ரூ.3.48 கோடி மதிப்பில் ராஜா அண்ணாமலைபுரத்தில் பி.எஸ்.கே.ஆர். சாலையில் அண்ணா மேலாண்மை நிலையத்தில் கூடுதல் பணியாளர்கள் குடியிருப்பு கட்டும் பணி முடிவுற்றது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

முடிக்கப்பட்ட பணிகள்: சாலைப் பணிகள்:

ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 3,858 கோடி மதிப்பில் 448 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள் மற்றும் ரூ.2,207 கோடி மதிப்பில் 1,681 கி.மீ. நீளமுள்ள இரு வழித் தட சாலைகள்.

நகரப்பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ், ரூ.731 கோடி மதிப்பில் 164 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள்.

ரூ.17,154 கோடி மதிப்பில் 9,620 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.1,161 கோடி மதிப்பில் 996 பாலம் / சிறுபாலப் பணிகள்.

ரூ.2,074 கோடி மதிப்பில் சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 6,805 கி.மீ. நீள சாலைகளில் ஓடுதள பரப்பினை மேம்படுத்தும் பணிகள்.

ரூ.662 கோடி மதிப்பில் 1,652 சாலைப் பாதுகாப்பு பணிகள்.

புறவழிச்சாலை/இணைப்புச்சாலை

ரூ307.8 கோடி மதிப்பில் பத்து புறவழிச்சாலைகளான மணச்சநல்லூர் (கட்டம்-1) இலுப்பூர், பார்த்திபனூர், ராசிபுரம் கட்டம்-1 பிரிவு-2, திருத்துறைப்பூண்டி கட்டம்-1, பவானி கட்டம்-II, முதுகளத்தூர், திருத்தணி, குன்னூர் மற்றும் நாமக்கல் கட்டம்-I.

ரூ. 20.85 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம் வில்லரசம்பட்டி வழியாக திண்டல் சந்திப்பிலிருந்து - கனிராவுத்தர்குளம் செல்லும் சாலை, ரூ. 1.97 கோடி மதிப்பில் ஜவான்ஸ் பவன் சாலை மேம்பாடு மற்றும் ரூ.41.89 கோடி மதிப்பில் பசுமலையில் இணைப்புச்சாலை.

ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துதல்

ரூ. 4,907.17 கோடி மதிப்பில் 5,064.53 கி.மீ நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்வு.

பன்னாட்டு நிதி உதவித் திட்டங்கள்

சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தின்கீழ், 5 பணிகளான ரூ.240.06 கோடி மதிப்பில் நக்கசேலம் மற்றும் குரும்பலூர் புறவழிச்சாலைகளுடன் கூடிய துறையூர் -பெரம்பலூர் சாலை, ரூ.349.94 கோடி மதிப்பில் மோகனூர்- நாமக்கல் - சேந்தமங்கலம் - ராசிபுரம் சாலை, ரூ. 251.29 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் - உளுந்தூர்பேட்டை சாலை, ரூ.238.90 கோடி மதிப்பில் தஞ்சாவூர்- மன்னார்குடி சாலை மற்றும் ரூ.250.51 கோடி மதிப்பில் மேலூர்- திருப்பத்தூர் சாலை மேம்பாடு.

தமிழ்நாடு சாலை மேம்பாடு திட்டம்-IIன்கீழ், ரூ.129.94 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை, ரூ.144.64 கோடி மதிப்பில் ஓமலூர்-மேச்சேரி சாலை, ரூ.104.70 கோடி மதிப்பில் சித்தோடு - ஈரோடு சாலை மற்றும் ரூ.176.58 கோடி மதிப்பில் திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலை மேம்பாடு.

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் வண்டலூர்-வாலாஜாபாத் சாலையை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித் தடச் சாலையாக ரூ. 180.09 கோடி மதிப்பில் மேம்பாடு.

தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றுதல்:

ரூ.1,372 கோடி மதிப்பில் 1,049 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மாற்றும் பணிகள்.

உயர்மட்டப் பாலங்கள்

ரூ.17.04 கோடி மதிப்பில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை எரையூர் சாலை, செய்யார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டபாலம்.

ரூ. 90.96 கோடி மதிப்பில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்ட பாலம்.

ரூ.27.92 கோடி மதிப்பில் பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம்.

ரூ.8.00 கோடி மதிப்பில் பவானி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம்.

ரூ.58.64 கோடி மதிப்பில் சென்னையில், திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.10.05 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம் அருங்குறுக்கை அருகே கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.11.85 கோடி மதிப்பில் கடலூர் மாவட்டம் திட்டக்குடி - சிறுப்பாக்கம் சாலையில் வெலிங்டன் நீர்தேக்கம் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.6.10 கோடி மதிப்பில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி - வடபாலை சாலையில் வராக நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.16.51 கோடி மதிப்பில் விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் - காவணிப்பாக்கம் சாலையில் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.





ரூ.9.58 கோடி மதிப்பில் சேலம் மாவட்டம் முள்ளுவாடியில் வசிஷ்டா நதியின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.21.56 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் – காஞ்சிபுரம் சாலையில் செய்யாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.33.76 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம் கீழ்பவானி கால்வாயின் குறுக்கே 8 உயர்மட்ட பாலங்கள்.

ரூ.18.57 கோடி மதிப்பில் திருத்தணி-நாகலாபுரம் சாலையில் கொசஸ்தலையார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.6.04 கோடி மதிப்பில் வல்லம் காலபெரம்பூர் சாலையில் முதலமுத்துவாரி கால்வாய் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.9.64 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார்கோவில் சாலையில் அம்புலியார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.8.05 கோடி மதிப்பில் காலகம் – ஆவுடையார்கோவில் சாலையில் அம்புலியார் கிளை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.3.35 கோடி மதிப்பில் பேரமங்கலம் – கீழவாடி சாலையில் உப்பார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.19.48 கோடி மதிப்பில் பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.2.36 கோடி மதிப்பில் அவிநாசி – திருப்பூர் – பல்லடம் – பொள்ளாச்சி – கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ 47/10-இல் உயர்மட்ட பாலம்,

ரூ.11.06 கோடி மதிப்பில் களகம் – ஆவுடையார்கோவில் சாலையில் மருதங்குடி ஆற்றின் குறுக்கே உயர் மட்டபாலம்.

ரூ.8.07 கோடி மதிப்பில் களகம் – ஆவுடையார்கோவில் சாலையில் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.9.29 கோடி மதிப்பில் பெருமகளூர் – அத்தாணி சாலை முடியனாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.13.60 கோடி மதிப்பில் மன்னார்குடி – சேதுபாவாசத்திரம் சாலையில் மகாராஜா சமுத்திரம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.2.63 கோடி மதிப்பில் அவிநாசி – திருப்பூர் பல்லடம் பொள்ளாச்சி கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ 47/6-இல் உயர்மட்ட பாலம்.

ரூ.6.37 கோடி மதிப்பில் பட்டுக்கோட்டை பேராவூரணி அறந்தாங்கி சாலையில் பூனைகுத்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.

ரூ.9.50 கோடி மதிப்பில் வாரணாசி – கன்னியாகுமரி சாலையில் குண்டாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம்.

ரூ.19.00 கோடி மதிப்பில் மன்னடிமங்கலம் மற்றும் இரும்பாடி இடையில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம்.

ரூ.36.50 கோடி மதிப்பில் சித்தூர்-திருத்தணி சாலையில் உயர்மட்டப்பாலம்.

ரூ.2.00 கோடி மதிப்பில் தவசி-வல்லம் சாலையில் உயர்மட்டப்பாலம்.

நபார்டு கடனுதவி மற்றும் மாநில நிதியுதவி திட்டத்தின்கீழ் நபார்டு அலகின் மூலம் ரூ1,137.62 கோடி மதிப்பில் 278 பாலங்கள்.

சாலை மேம்பாலங்கள்:

ரூ. 93.50 கோடி மதிப்பில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம்.

ரூ.67.00 கோடி மதிப்பில் வேளச்சேரி, விஜயநகரம் சந்திப்பில் தரமணி இணைப்பு சாலையிலிருந்து வேளச்சேரி புறவழிச்சாலை செல்லும் இரண்டாம் அடுக்கு பாலப்பகுதிப் பணி மற்றும் ரூ.78.49 கோடி மதிப்பில் வேளச்சேரி புறவழிச்சாலையிலிருந்து வேளச்சேரி- தாம்பரம் சாலையை இணைக்கும் முதல் அடுக்கு பாலப்பகுதிப் பணி.

ரூ.95.21 கோடி மதிப்பில் மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் மேம்பாலம் அமைக்கும் பணியில் தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் பாலப்பகுதி.

ரூ.53.12 கோடி மதிப்பில் மதுரை – தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம்.

ரூ. 20 கோடியில் சென்னையில் இந்திரா நகர் சந்திப்பில் 'யு' வடிவிலான மேம்பாலம்.

ரூ.140.49 கோடி மதிப்பில் கோயம்புத்தூர் உக்கடம்- ஆத்துப்பாலத்தில் சாலை மேம்பாலம் மற்றும் ரூ.265.44 கோடி மதிப்பில் உக்கடம்-ஆத்துப்பாலம் நீட்சிப்பணி.

இரயில்வே மேம்பாலங்கள்/ இரயில்வே கீழ்ப்பாலம்:

ரூ.52.98 கோடி மதிப்பில் அண்ணனூர் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.25.74 கோடி மதிப்பில் கடம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் கடம்பத்தூர் – திருவாலங்காடு இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம்.

சென்னை – பொன்னேரிக்கரை காஞ்சிபுரம் சாலையில் ரூ.59.63 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.37.12 கோடி மதிப்பில் ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் – கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.20.96 கோடி மதிப்பில் ஒலக்கூர் பீடர் இரயில்வே மேம்பாலம்.

கடலூர்-சித்தூர் சாலையில் ரூ.22.63 கோடி மதிப்பில், திருவெண்ணைநல்லூர் – பரிக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.

ரூ. 22.27 கோடி மதிப்பில் டி.கே.விகோட்டா சாலையிலிருந்து விரிஞ்சிபுரம் செல்லும் சாலையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.38.74 கோடி மதிப்பில் பாண்டி கிருஷ்ணகிரி சாலையில் தண்டரை திருவண்ணாமலை இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

ரூ.48.48 கோடி மதிப்பில் பொள்ளாச்சி பாலக்காடு சாலையில் பொள்ளாச்சி-கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

பெருங்களத்தூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் ரூ.37.00 கோடி மதிப்பில் செங்கல்பட்டிலிருந்து சென்னை செல்லும் பாலப்பகுதி பணி, ரூ.24.80 கோடி மதிப்பில் பெருங்களத்தூரில் இரயில்வே மேம்பாலம் சீனிவாச ராகவன் தெரு பாலப்பகுதி பணி மற்றும் ரூ.60.13 கோடி மதிப்பில் சென்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் பாலப்பகுதி பணி.

தொளசம்பட்டி சாலையில் ரூ.24.81 கோடி மதிப்பில் ஓமலூர் மற்றும் மேச்சேரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம் (கடவு எண்-15).

பழைய NH-7 சாலையில் ரூ.12.08 கோடி மதிப்பில் சிவாடி மற்றும் தருமபுரி இரயில்வே நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

சங்ககிரி – மேச்சேரி சாலையில் ரூ.30.13 கோடி மதிப்பில் ஓமலூர்-மேச்சேரி இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம் (கடவு எண்-18).

ரூ.33.09 கோடி மதிப்பில் புட்லூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.48.26 கோடி மதிப்பில் திருப்பூர் ஊத்துக்குளி இரயில் நிலையங்ளுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

சூரமங்கலம்-ஓமலூர் சாலையில் ரூ.23.28 கோடி மதிப்பில் மேக்னசைட்-ஓமலூர் இரயில் நிலையங்ளுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.121.91 கோடி மதிப்பில் சேலம் அஸ்தம்பட்டி – செர்ரி சாலையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.22.17 கோடி மதிப்பில் சோழவந்தான் வலையப்பட்டி சாலை (வழி ஆண்டிப்பட்டி) இரயில்வே மேம்பாலம்.

ரூ.87.98 கோடி மதிப்பில் திண்டுக்கல் மணக்காட்டூர் சாலையில் திண்டுக்கல் – அக்கரைப்பட்டி, எரியோடு – திண்டுக்கல் மற்றும் தாமரைப்பாடி – திண்டுக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.41.90 கோடி மதிப்பில் இராஜபாளையம் – வெம்பக்கோட்டை சாலையில் இராஜபாளையம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.23.91 கோடி மதிப்பில் பாளையங்கோட்டை– சிவந்திப்பட்டி சாலையில் பாளையங்கோட்டை செய்துங்கநல்லூர் இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.23.39 கோடி மதிப்பில் இராமநாதபுரம் – கீழக்கரை சாலையில் இராமநாதபுரம் – உச்சிபுளி இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

ரூ.92.40 கோடி மதிப்பில் சேலம் புதிய புறவழிச்சாலை சேலம் டவுன் மற்றும் சேலம் கிழக்கு இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.31.94 கோடி மதிப்பில் லட்சுமி அம்மாள்புரம் – நாவிதம்பட்டி சாலையில் மேல்பட்டி – வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

ரூ.30.18 கோடி மதிப்பில் கண்ணாடிக்குப்பம் அய்யனூர் சாலையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.14.52 கோடி மதிப்பில் நான்குநேரி ஏர்வாடி–வள்ளியூர் – விஜயாபதி சாலையில் நான்குநேரி – வள்ளியூர் இரயில்வே நிலையங்களுக்கிடையில் இரயில்வே கீழ்ப்பாலம்.

ரூ.20.58 கோடி மதிப்பில் ஆவடி – பட்டாபிராம் இரயில் நிலையங்களுக்கு இடையில் இந்து கல்லூரி இரயில் நிலையத்திற்கு அருகில் இரயில்வே கீழ்பாலம்.

நடை மேம்பாலம்

தாம்பரத்தில் ரூ.6.29 கோடி மதிப்பில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்கும் பணியில் இரயில்வே பகுதி பணிகள்.

ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சக நிதி பணிகள்.

ரூ.3,909.16 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைகளில் ஆண்டு திட்டத்தின்கீழ் 88 சாலை மற்றும் 16 பாலப்பணிகள்.

ரூ.152.55 கோடி மதிப்பில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலையில் 8 சாலைப்பணிகள்.

இதர பணிகள்

சாலைகளில் கண்டறியப்படும் பள்ளங்களை பொதுமக்கள் உதவியுடன் கண்டறிய "நம்ம சாலை செயலி" உருவாக்கப்பட்டு, பள்ளங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு புத்தாக்க முன் முயற்சிகள்(TANII) திட்டத்தின்கீழ் உறுதி செய்யப்பட்ட துணைத் தளத்தின் (Sub Base) மீது அமைக்கப்பட்ட தார்ச் சாலையின் தன்மை குறித்த ஆய்வு, பாலத்தின் செயல்திறனை கருவிகள் மூலம் கண்காணித்தல், கற்கலவை சாலைகளில் நீராற்றும் சேர்மங்களின் செயல்திறன் குறித்த ஆய்வு, சணல் இழை வலுவூட்டப்பட்ட குளிர் நிலக்கீல் கலவைகளின் செயல்திறன் குறித்த ஆய்வு நிறைவடைந்துள்ளன.

379 பொறியாளர்கள் மற்றும் 112 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும், விரிவான பயிற்சித் திட்டத்தின் (CTP) கீழ் 2,881 பொறியாளர்கள் மற்றும் 832 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



பெருநகர சென்னை மாநகராட்சியின் 368 பொறியாளர்களுக்கும், 40 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொறியாளர்களுக்கும், 41 துணை ஆட்சியர்கள் (பயிற்சி) மற்றும் தலைமைச் செயலகத்தின் 134 பதிவு அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர் விருதுநகர், கரூர், திருப்பூர், திருவாரூர், நாகப்பட்டினம், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், திண்டுக்கல், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 22 மாவட்டங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

454 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை,நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பாதுகாப்புப் பொறியாளர்கள் மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டன.

நியமனங்கள்

84 உதவிப்பொறியாளர்கள், 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 182 உதவியாளர்கள், 3 தணிக்கை உதவியாளர்கள், 67 இளநிலை உதவியாளர்கள், 6 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் நிலை-3 மற்றும் 49 தட்டச்சர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், 4 உதவியாளர்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் நேரடியாகவும், 3 உதவி வரைவாளர், 45 இளநிலை உதவியாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் கருணை அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

நடைபெற்று வரும் முக்கிய பணிகள்

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 2,807 கோடி மதிப்பில் 383 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள் மற்றும் ரூ.709 கோடி மதிப்பில் 357 கி.மீ. நீளமுள்ள இரு வழித் தட சாலைகள்.

நகரப்பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ், ரூ.234 கோடி மதிப்பில் 47 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள்.

கோயம்புத்தூர் மேற்குவட்டச்சாலை,மன்னார்குடி - கட்டம்-I,அம்பாசமுத்திரம், திருச்செங்கோடு (I &II), பவானி (கட்டம் -I), நாமக்கல் (கட்டம் -II & கட்டம் -III,)



பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை, அருப்புக் கோட்டை மேற்கு புறவழிச்சாலை, கமுதி, சிவகங்கை- கட்டம் I, உத்திரமேரூர், துறையூர் கட்டம் -II,, தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை (இரு பகுதிகள்) மற்றும் திருப்போரூர்/ கேளம்பாக்கம் ஆகிய பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.944.21 கோடி மதிப்பில் 812.8 கி.மீ நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தும் பணிகள்.

ரூ.331 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 373 சாலைப் பாதுகாப்பு பணிகள்.

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.8,076 கோடி மதிப்பில் 2,264 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.694 கோடி மதிப்பில் 69 பாலம் / சிறுபாலப் பணிகள்.

ரூ.763.80 கோடி மதிப்பில் 134 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மாற்றும் பணிகள்.

ரூ.375.32 கோடி மதிப்பில் நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ் 32 உயர்மட்ட பாலங்கள் மற்றும் ரூ.596.64 கோடி மதிப்பில் மாநில நிதி திட்டத்தின்கீழ் 19 உயர்மட்ட பாலங்கள்.

ரூ.1791.23 கோடி மதிப்பில் கோயம்புத்தூரில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.

ரூ.621 கோடி மதிப்பில் சென்னையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்ட சாலை.

ரூ.25.52 கோடி மதிப்பில் படப்பையில் சாலை மேம்பாலம்.

ரூ.190.40 கோடி மதிப்பில் மதுரையில் கோரிப்பாளையம் சந்திப்பில் சாலை மேம்பாலம்.

ரூ.150.28 கோடி மதிப்பில் மதுரையில் மதுரை-தொண்டி சாலையில் சாலை மேம்பாலம்.

ரூ.2,105.49 கோடி மதிப்பில் 41 இரயில்வே மேம்பாலங்கள்/ இரயில்வே கீழ்பாலங்கள் கட்டும் பணிகள்.

ரூ. 27.5 கோடி மதிப்பில் டைடல் பார்க் சந்திப்பில் "U" வடிவிலான மேம்பாலம்.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகள்

ரூ60.69 கோடி மதிப்பில் சென்னையில் சர்தார் படேல் சாலையுடன் ராஜீவ்காந்தி சாலை இணையும் மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம்.

ரூ314.48 கோடி மதிப்பில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ45.50 கோடி மதிப்பில் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை.

ரூ.30.67 கோடி மதிப்பில் 2 நடைமேம்பாலங்கள் (நெல்சன்-மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் செந்தில் நகர் சந்திப்பு) ரூ.139.17 கோடி மதிப்பில் உள் வட்டச் சாலையிலுள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணி.

சாலை இணைப்பு முக்கியம்

தேசிய நெடுஞ்சாலை ஆணையத் திட்டங்களுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம். எங்களைப் போன்ற தொழில்மயமான மாநிலத்திற்கு, சாலை இணைப்பின் முக்கியத்துவத்தை நாங்கள் முழுமையாக உணர்ந்துள்ளோம். எனவே, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க அனைத்துத் துறைகளுக்கும் உரிய அறிவுரைகளை நான் வழங்கியுள்ளேன்.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை மற்றும் தரிசு நில மேம்பாடு



திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள்
மாண்புமிகு வேளாண்மை மற்றும்
உழவர் நலத்துறை அமைச்சர்



457.08 இலட்சம் மெ.டன் உணவு தானிய உற்பத்தி எய்தி சாதனை...

குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.276.84 கோடி ஒதுக்கீடு...

ரூ.60.66 கோடியில் விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு 2,57,878 பயனாளிகள் பயன்...

ரூ.181.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிறுதானிய சாகுபடிப் பரப்பு மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம் மூலம் 9,73,186 விவசாயிகள் பயன்...

வேளாண்மைத்துறை

உணவு தானிய உற்பத்தி

கடந்த நான்கு ஆண்டுகளில் 457.08 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி சாதனை அடையப்பட்டுள்ளது.

நெல் சாகுபடி

கடந்த நான்கு ஆண்டுகளில் நெல் சாகுபடியானது 86.10 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 298.12 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் (2021– 2024).

குறுவை தொகுப்பு திட்டம் நிதி ஒதுக்கீடு – ரூ.276.84 கோடி.

செலவினம் : ரூ.271.56 கோடி.

நெல் விதை விநியோகம் : 9,689 மெ.டன்.

உர விநியோகம் : 83,501 மெ.டன்.

பசுந்தாள் விதை விநியோகம் : 604 மெ.டன்.

மாற்றுப் பயிர் சாகுபடி – சிறுதானியங்கள் : 8,700 ஏக்கர்.

மாற்றுப் பயிர் சாகுபடி – பயறு : 35,132 ஏக்கர்.

மாற்றுப் பயிர் சாகுபடி – எண்ணெய்வித்துக்கள் : 3,800 ஏக்கர்.

பயறு நுண்ணூட்ட உரக்கலவை : 9,900 ஏக்கர்.

நெல் நுண்ணூட்ட உரக்கலவை : 7,425 ஏக்கர்.

ஜிங்க் சல்பேட் விநியோகம் : 24,750 ஏக்கர்.

ஜிப்சம் விநியோகம் : 24,750 ஏக்கர்.

வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை

நெல் நடவு இயந்திரம் : 168 எண்கள்

பவர் வீடர் : 49 எண்கள்

நெல் அறுவடை இயந்திரம் : 69 எண்கள்

நெல்கட்டும் இயந்திரம் (பேலர்) : 69 எண்கள்

பவர் டில்லர் : 266 எண்கள்

பவர் வீடர் : 839 எண்கள்

டிராக்டர் : 128 எண்கள்

ரோட்டவேட்டர் : 50 எண்கள்

கொத்துக் கலப்பை : 10 எண்கள்

நெல் கதிரடிக்கும் இயந்திரம் : 20 எண்கள்

ட்ரோன் : 5 எண்கள்

டிராக்டரால் இயங்கும் விதை மற்றும் உரமிடும் கருவி : 2 எண்கள்

மனிதனால் இயக்கக்கூடிய விதை மற்றும் உரமிடும் கருவி : 21 எண்கள்

சூரியசக்தி பம்பு செட் : 50

பண்ணைக்குட்டைகள் : 88

நான்காண்டுகளில் மொத்த பணிகள்: 12,51,836

விவசாயிகளுக்கு தார்பாய்களை 50 சதவிகித மானியத்தில் வழங்குதல்

நிதி ஒதுக்கீடு : ரூ.14.98 கோடி

நிதி சாதனை : ரூ. 14.96 கோடி

பொருள் சாதனை : 1,74,884 எண்கள்

பயனாளிகள் : 1,74,884 விவசாயிகள்

நெல் உற்பத்தியை உயர்த்த துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குதல்

நிதி ஒதுக்கீடு : ரூ.22. கோடி

நிதி சாதனை : ரூ.21.768 கோடி

பொருள் சாதனை : 7,62,296 ஏக்கர்

பயனாளிகள் : 7,96,878 விவசாயிகள்

உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு – அரிசி

கடந்த நான்காண்டுகளில், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு – அரிசி திட்டத்தின்கீழ், ரூ.21.580 கோடி செலவினத்தில், 3,68,837 ஏக்கரில் செயல் விளக்கத் திடல்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு, 1,67,536 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – நெல்

கடந்த நான்காண்டுகளில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் – நெல் திட்டத்தின்கீழ் ரூபாய் 60.73 கோடி செலவினத்தில் 9,31,586 ஏக்கரில் விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு 2,64,864 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

சிறுதானியங்கள்

கடந்த நான்காண்டுகளில், சிறுதானியப் பயிர்கள் சாகுபடியானது இதுநாள் வரை 38.09 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 146.62 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

திட்டசெயல்பாடுகள்

கடந்த நான்காண்டுகளில், 20 இலட்சம் ஏக்கர் பரப்பில் சிறுதானியங்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் 4.02 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு தொகுப்பு செயல்விளக்கத் திடல் அமைத்தல், 2,935 மெ.டன் உயர் விளைச்சல் இரக விதை மற்றும் வீரிய ஒட்டு இரக விதை விநியோகம், 4,121 மெ.டன் விதை உற்பத்தி மானியம், 10.57 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக் கலவை மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் விநியோகம், 68,666 ஏக்கர் பரப்பளவிற்கு உழவு மானியம், 57,919 ஏக்கர் சாகுபடி பரப்பு மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் மூலம் சிறுதானிய சாகுபடிக்கு மாற்றுதல், 29,885 ஏக்கர் சாகுபடி பரப்பு நெல்லுக்கு பின் சிறுதானிய சாகுபடி செய்தல் ஆகிய திட்டக்கூறுகள் 50 சதவீத மானியத்தில் ரூ.189.57 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 13,93,602 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த நான்காண்டுகளில் திட்ட சாதனை

சிறுதானிய சாகுபடி பரப்பு 60,471 ஏக்கரிலிருந்து 63,803 ஏக்கராக அதிகரித்துள்ளது.

மக்காச்சோளம் சாகுபடி பரப்பு 9.88 இலட்சம் ஏக்கரிலிருந்து 12.02 இலட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.மக்காச்சோளம் உற்பத்தி 25.64 இலட்சம் மெ.டன்னிலிருந்து 29.89 மெ.டன்னாக அதிகரித்துள்ளது.வரகு உற்பத்தித் திறன் 506 கி/ஏக்கரிலிருந்து 705 கி/ ஏக்கராக அதிகரித்துள்ளது.இத்திட்டம், செயல்படுத்தியதன் மூலம், 2023-2024ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீட்டின் படி, இந்திய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் (1,390 கி/ஏக்கர்) முதல் இடத்திலும், கேழ்வரகு சாகுபடி பரப்பு (1.75 இலட்சம் ஏக்கர்) மற்றும் உற்பத்தியில் (2.44 இலட்சம்.மெ.டன்) இரண்டாம் இடத்திலும், சிறுதானியங்கள் உற்பத்தித் திறனில் (514 கி/ஏக்கர்) மூன்றாவது இடத்திலும், கம்பு உற்பத்தித் திறனில் (992 கி/ஏக்கர்) நான்காவது இடத்திலும் அமைந்து சாதனை அடையப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

சிறுதானிய சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின்கீழ், 13.50 இலட்சம் ஏக்கர் பரப்பில், 200 சிறுதானிய உழவர் குழுக்கள் உருவாக்குதல், 200 தொழில்நுட்ப பயிற்சிகள் அளித்தல், 2.54 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், 90 சிறுதானிய மதிப்புக் கூட்டுதல் மையம் அமைத்தல், 200 வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்தல், 8,800 ஏக்கர் தரிசு நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றுதல், 27,525 குவிண்டால் உயர் விளைச்சல் இரக விதை மற்றும் வீரிய ஒட்டு இரக விதை விநியோகம், 41,218 குவிண்டாலுக்கு விதை உற்பத்தி மானியம், 8.86 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக் கலவை மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் விநியோகம், 55,676 ஏக்கர் சாகுபடி பரப்பு மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் மூலம் சிறுதானிய சாகுபடிக்கு மாற்றுதல், 29,885 ஏக்கர் சாகுபடி பரப்பு நெல்லுக்கு பின் சிறுதானிய சாகுபடி செய்தல் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கிட ரூ.181.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் மூன்று துறைகளை ஒருங்கிணைத்து 9,73,186 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பயறுவகைப் பயிர்கள்

கடந்த நான்காண்டுகளில், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு – பயறுவகைகள் மற்றும் நெல் தரிசில் பயறு சாகுபடி ஆகிய திட்டங்களின்கீழ், ரூ.139.17 கோடி நிதியில் 19.65 இலட்சம் ஏக்கர் பரப்பில் 8,16,436 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இதன் மூலம் 2020-2021இல் 589 கிலோ/எக்டர் என்று இருந்த பயறுவகைகளின் உற்பத்தி திறன் 2024-2025இல் 645 கிலோ/எக்டர் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

துவரை பரப்பு மற்றும் உற்பத்தியை மேம்படுத்த செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்:

மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – துவரை சாகுபடி பரப்பு விரிவாக்க இயக்கம்:

2024-2025ஆம் ஆண்டில் 70,000 ஏக்கர் பரப்பில் 64,728 விவசாயிகளுக்கு துவரையை தனிப்பயிர், வரப்புப்பயிர் மற்றும் ஊடுபயிராக பயிரிட ரூ.17.50 கோடி நிதியில் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – துவரை உள்ளிட்ட பிற பயறு வகைகள் பரப்பு மற்றும் உற்பத்தி விரிவாக்கம்

2024-2025ஆம் ஆண்டில் 24,000 ஏக்கர் பரப்பில் 13,833 விவசாயிகளுக்கு குழித்தட்டு முறையில் நடவுத்துவரை சாகுபடி செய்வதை ஊக்குவிக்க 7 கோடியே 44 இலட்சம் ரூபாய் நிதியில் இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பிற பயறு வகைகள் சாகுபடியை ஊக்குவிக்க 6,000 ஏக்கர் பரப்பில் 5,460 விவசாயிகளுக்கு ரூ.1.50 கோடி நிதியில் விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.



தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் நடவு துவரை சாகுபடி திட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் மட்டும் 2 ஆண்டுகளில் 14 கோடி ரூபாய் நிதியில் 38,888 ஏக்கர் பரப்பில் 16,110 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.ஒட்டுமொத்தமாக துவரை பயிருக்கு மட்டும் இந்த நான்காண்டுகளில் ரூ.38.94 கோடி நிதி ஒதுக்கப்பட்டு துவரை பயிர் சாகுபடி பெருமளவில் மேம்படுத்தப்பட்டது.

மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம்– குறைந்த நீர் தேவையுள்ள பயிர்களை ஊக்குவித்திட மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம்நான்காண்டுகளில், ரூ.26.63 கோடி நிதியில் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 329 ஏக்கர் பரப்பில் 1,73,667 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.இதன் மூலம் மாற்றுப்பயிர் சாகுபடியில் 73,268 ஏக்கரில் 55,554 விவசாயிகள் சிறுதானியங்களையும், 1,21,151 ஏக்கரில் 1,02,249 விவசாயிகள் பயறுவகைகளையும், 23,350 ஏக்கரில் 15,864 விவசாயிகள் எண்ணெய்வித்துப் பயிர்களையும் சாகுபடி செய்துள்ளனர்.

எண்ணெய்வித்துப் பயிர்கள்

கடந்த நான்காண்டுகளில், எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடியானது இதுநாள் வரை 16.86 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 39.01 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம்

கடந்த நான்காண்டுகளில், எண்ணெய்வித்துக்கள் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்க ரூ.11.50 இலட்சம் ஏக்கரில் 50,113 குவிண்டால் சான்று விதை உற்பத்தி மானியம், 39,372 குவிண்டால் சான்று விதை விநியோகம், 1.20 இலட்சம் ஏக்கரில் தொகுப்பு செயல் விளக்கத்திடல்கள் மற்றும் 9.82 இலட்சம் ஏக்கரில் இடுபொருட்கள் விநியோகம் மற்றும் 16,655 எண்களில் இயந்திரங்கள் விநியோகம் ஆகிய திட்டக்கூறுகள் ரூ 113.09 கோடி நிதி செலவினத்தில் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 4,82,620 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

எள்

2024–2025ஆம் நிதியாண்டில் எள் பரப்பு மற்றும் மகசூல் அதிகரித்திட சிறப்பு கவனம் செலுத்திடும் வகையில் 25,000 ஏக்கர் பரப்பளவிற்கு விதை, மாங்கனீசு சல்பேட், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் போன்ற இடுபொருள்கள் அறுவடை சார்ந்த மானியம் அடங்கிய தொகுப்பு, எள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.1,200 மானியத்தில் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 20,000 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

சூரியகாந்தி

2024–2025ஆம் நிதியாண்டில் சூரியகாந்தி சாகுபடி பரப்பினை அதிகரித்திட 12,500 ஏக்கர் பரப்பளவில் விதை மற்றும் பராமரிப்பிற்கு ஏக்கருக்கு ரூ.1,600 வீதம் ரூ.2 கோடி நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தியதில் 12,000 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

ஆமணக்கு

2024–2025ஆம் நிதியாண்டில் 1,500 ஏக்கர் பரப்பளவில் அதிக விளைச்சல் தரும் வீரிய ஒட்டு இரக ஆமணக்கு விதைகள், திரவ இயற்கை உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் போன்ற இடுபொருள்கள், வரிசை நடவு அடங்கிய தொகுப்பு ஏக்கருக்கு ரூபாய் 1,200 வீதம் ரூ.18 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தியதில் 1,200 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நிலக்கடலை

நிலக்கடலை பயிருக்கு மட்டுமே 2024–2025ஆம் நிதியாண்டில் ரூ,43.81 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.28.75 கோடி செலவில் 2 இலட்சத்து 55 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்த 1,00,010 விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் இரக விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக்கலவை போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம் ரூ.113.09 கோடி நிதியில் 11.50 இலட்சம் ஏக்கர் பரப்பில் 4,82,620 பயனாளிகள் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்ற பயிர்சாகுபடியில் பயனடைந்துள்ளனர்.

பருத்தி

கடந்த நான்காண்டுகளில் பருத்தி சாகுபடியானது 5.53 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 10.85 இலட்சம் பொதிகள் உற்பத்தி அடையப்பட்டது.

பலன் தரும் பருத்தி சாகுபடி

கடந்த நான்காண்டுகளில் இத்திட்டமானது 5,47,243 ஏக்கர் பரப்பளவில் ரூ.45.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு 2,21,029 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நுண்ணீர் பாசனத் திட்டம்

நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் பயிரின் இடைவெளியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

வேளாண் பயிர்களுக்கென 2021-2022 முதல் 2024-2025 வரையிலான நான்கு ஆண்டுகளில் 1,95,537 விவசாயிகளுக்கு 4,76,515 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,356.57 கோடி நிதி செலவினத்தில் நுண்ணீர் பாசன அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

விதை உற்பத்தியும் விநியோகமும்

2021 – 2022ஆம் ஆண்டு முதல் 2024 – 2025 வரை 97,24,468 ஏக்கர் பரப்பளவிற்கு நெல் 69,476 மெ.டன், சிறுதானியங்கள் 4,688 மெ.டன், பயறு வகைகள் 20,480 மெ.டன் எண்ணெய்வித்துக்கள் 17,173 மெ.டன் மற்றும் பருத்தி 104 மெ.டன் ஆக மொத்தம் 1,12,988 மெ.டன் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 48,62,234 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் கருவிகள் வழங்குதல்

2021-2022 முதல் 2023-2024ஆம் ஆண்டு வரை சிறு, குறு விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் மொத்தம் 2,35,318 வேளாண் கருவி தொகுப்புகள் ரூ.39.71 கோடி செலவில் 2,35,318 பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

உயர் விளைச்சல் கொண்ட பிற மாநில சான்று விதைகளைக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்குதல்.

உயர் விளைச்சல் தரக்கூடிய பிற மாநில வேளாண் பல்கலைக்கழகங்களால் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டிற்கு அறிவிக்கைசெய்யப்பட்ட பத்தாண்டுக்குட்பட்ட சான்று விதைகள் நெல் 4,227 மெ.டன், சிறுதானியங்கள் 646 மெ.டன், பயறுவகைகள் 180 மெ.டன், எண்ணெய் வித்துக்கள் 1,613 மெ.டன் மற்றும் பருத்தி 7 மெ.டன் ஆக மொத்தம் 6,673 மெ.டன் சான்று விதைகள் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் வாயிலாக கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,86,493 விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரக்கூடிய பிற மாநில இரகங்களின் விதைகள் விநியோகம் செய்யப்பட்டு 2,37,447 ஏக்கர் பரப்பளவிற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மிக சன்ன இரக நெற்பயிர் சாகுபடியைப் பரவலாக்குதல்

2024-2025ஆம் ஆண்டில் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில், அதிக சந்தை விலை கொண்ட மிக சன்ன வகை நெல் இரகங்களான NLR 34449, BPT 5204, JGL 1798, RNR 15048, மேம்படுத்தபட்ட வெள்ளை பொன்னி மற்றும் CO 55 சாகுபடியினை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட 4,227 மெட்ரிக் டன் மிக சன்ன வகை உயர் விளைச்சல் நெல் இரகங்களின் சான்று விதைகள் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானியத்தில் 1,12,717 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 2,08,814 ஏக்கரில் மிக சன்ன இரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அரசு விதைப்பண்ணைகளில் உயிர்ம வேளாண் முறையில் விதை உற்பத்தி செய்தல்

2024-2025ஆம் ஆண்டில் உயிர்ம வேளாண்மை மேற்கொள்ளத் தேவையான சான்று விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் அரசு விதைப்பண்ணைகளில் 20 ஏக்கரில் உயிர்ம வேளாண் முறையில் சிறுதானியங்கள், பயறு வகைகளின் விதைகள் உற்பத்தி செய்வதற்கு விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. உயிர்ம வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்படும் விதைகள் 3 ஆண்டு காலத்திற்கு பின்னர் உயிர்ம வேளாண்மை முறையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு

பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளின்கீழ் கட்டுப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் பயிர்வாரியான பூச்சி, நோய் தாக்குதல் மற்றும் மேலாண்மை குறித்த பல்வேறு பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 29,22,844 லிட்டர் திரவ பூச்சிக்கொல்லி மருந்துகளும் மற்றும் 13,613 மெ.டன். தூள் பூச்சிக்கொல்லி மருந்துகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர்பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்கவும் உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கவும்போதுமான அளவு தரமான உயிரியல் பூச்சிக்கொல்லிகள் இடர்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்திடும் பொருட்டு, உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் 15,54,135 கி.கி, டிரைக்கோடெர்மா விரிடி 13,21,456 கி.கி, மெட்டாரைசியம் அனிசோபிலே 13,40,830 கி.கி,பெவேரியா பேஸியானா 74,763 கி.கி, என்.பி.வி. (நியூக்ளியர்பாலி ஹைட்ரோசிஸ்வைரஸ்) 22,518 லிட்டர், டிரைகோகிரம்மா கைலோனிஸ் மற்றும் கிரைசோபெர்லா போன்ற உயிரியல் பூச்சிக்கொல்லிகள் 22 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் 2 ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள் மற்றும் 5 கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் வாயிலாக உயிரியல் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

2021 – 2022ஆம் ஆண்டில் 32,389 எக்டர் பரப்பளவில், மக்காச்சோளப் பயிரில், அமெரிக்கன் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட ரூ.20 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, 77,399 விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



தென்னையில், வெள்ளை சுருள் ஈ கட்டுப்படுத்திட 2021-2022ஆம் ஆண்டில், சுமார் 8,097 ஏக்கர் பரப்பளவில், ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல், கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள், 15,366 விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு, தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

மாறிவரும் காலநிலைகளினால் பயிர்களில் திடீரென்று ஏற்படும் பூச்சி, நோய் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் 2022-2023ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறப்பு நிதியிலிருந்து, ரூ.25 இலட்சம் நிதி அரியலூர் மாவட்டத்திற்கு 625 ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரில் ஏற்பட்ட "நுனிசிறுத்தல் (பொக்காபோங்) நோய் மற்றும் மாவுப்பூச்சி" தாக்குதலைக் கட்டுப்படுத்த வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகம் செய்தல்

தமிழ்நாட்டில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகளின் தரத்தினை உறுதி செய்திடவும், தரமான பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதை உறுதி செய்திடும் பொருட்டும் ஆண்டுதோறும் 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகள் எடுக்கப்பட்டு 12 பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்களில் தரப்பரிசோதனை செய்யப்படுகிறது.

நடந்த நான்காண்டுகளில் 83,581 மாதிரிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 514 மாதிரிகள் தரமற்றதாக அறிவிக்கப்பட்டது. இவற்றில் 369 மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதியாணை வழங்கப்பட்டது மற்றும் 66 தரமற்ற மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 79 தரமற்ற மாதிரிகளுக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

உரம்

நான்காண்டுகளில் 40.70 இலட்சம் மெ. டன் யூரியா, 10.13 இலட்சம் மெ. டன் டிஏபி, 7.70 இலட்சம் மெ.டன் பொட்டாஷ், 28.93 இலட்சம் மெ.டன் காம்ப்ளக்ஸ் மற்றும் 3.09 இலட்சம் மெ.டன் சூப்பர் பாஸ்பேட் உரங்கள் பயிர் சாகுபடிக்காக விவசாய பெருங்குடி மக்களுக்கு உரம் நிறுவனங்களால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

உர விநியோகம்

விவசாய பெருங்குடி மக்களுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு ஆண்டுதோறும் 27,080 உரமாதிரிகள் கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களில் எடுக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 அங்கக உர பரிசோதனை ஆய்வகம், 1 உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மூலம் உரங்களின் தர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த நான்காண்டுகளில், 1,03,320 உரமாதிரிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பிப்ரவரி மாதம் முடிய 95,559 உரமாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு 2,614 உரமாதிரிகள் தரத்தில் குறைபாடு என கண்டறியப்பட்டுள்ளது. அவற்றை தயார் செய்த நிறுவனங்களின் மீது சத்துக் குறைபாடுகளுக்கேற்ப உர விற்பனையாளர் /உர உற்பத்தியாளர்கள் மீது 1,829 துறை ரீதியான நடவடிக்கைகளும், 133 சட்டரீதியான நடிவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த நான்காண்டுகளில், மொத்த உர விற்பனை நிலையங்களில் 3,044 ஆய்வுகளும், சில்லறை உர விற்பனை நிலையங்களில் 40,345 ஆய்வுகளும், கலப்பு உர உற்பத்தி நிலையங்களில் 249 ஆய்வுகளும், உரம் சேமிப்பு கிடங்கு, மாநில எல்லை மற்றும் தொழிற்சாலை போன்ற இதர இனங்களில் 550 ஆய்வுகளும் என மொத்தம் 44,188 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வில், கடைகள் உரிய உர உரிமம் பெறாமல் உர விற்பனை செய்வது, மானிய உரங்களுடன் இதர விவசாய இடுபொருள் வலுக்கட்டாயமாக விற்பனை செய்யப்படுவது, அதிகபட்ச சில்லறை விலையை விட கூடுதலாக அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவது மற்றும் இதர உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985 விதிமீறல்களுக்கு 286 உர உரிமங்கள் தற்காலிகமாகவும், 12 உர உரிமங்கள் நிரந்தரமாகவும் இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், 12 சட்ட ரீதியான நடவடிக்கைகளும், 1487 இதர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-2022 முதல் நான்கு ஆண்டிற்கு 10,187 கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் சர்க்கரைத்துறை ஆகிய துறைகள் மூலம் ரூ.786.64 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.573.61 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டு, 51.128 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2021-2022 முதல் 2024-2025 வரை அனைத்துத் துறைகளுக்கான ஒட்டுமொத்த சாதனை சுருக்கம்

வேளாண்வளர்ச்சித் திட்டமானது 2021-2022ஆம் ஆண்டு முதல் 2024-2025ஆம் ஆண்டு வரையில் நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் ரூ.786.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு, 1,905 தரிசுநிலத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. 925 தரிசுநிலத் தொகுப்புகளில் நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு, 47,097 ஏக்கர் தரிசு நிலங்கள் வேளாண்மை மற்றும் பல்லாண்டு பயிர் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு 1,615 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதில் 1,048 மின்னிணைப்புகளும், 264 சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 46.08 இலட்சம் தென்னங்கன்றுகள், 16.04 இலட்சம் பழச் செடித்தொகுப்புகள், 5.70 இலட்சம் வீட்டுத் தோட்டக் காய்கறி விதைத்தளைகள், 1.23 இலட்சம் தெளிப்பான்கள் மற்றும் 1,526 விசை உழுவை இயந்திரங்கள், 23,805 ஏக்கர் பரப்பளவில் தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் முட்புதர்களை அகற்றி சமன்செய்து உழுதல், 3,24,346.75 ஏக்கர் பரப்பளவில் வரப்புபயறு உளுந்து விதைகள், 1,49,435 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைத்த பயிர் மேலாண்மை செயல்விளக்கங்கள், விநியோகிக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 8,509 சிறுபாசனக்குளங்கள், ஊருணிகள், வரத்துக் கால்வாய்கள், நீர் சேமிப்புக் கட்டுமானங்கள் தூர் வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 485 உலர் கலன்களுடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, முக்கிய ஒன்றிய, மாநில அரசுத் திட்டங்களில் 80 சதவீத நிதி இலக்குகள் இக்கிராமங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை, இத்திட்டங்களின்கீழ் 51.128 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

மானாவாரி நிலங்களின் மேம்பாட்டிற்காக முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் என்ற திட்டம் 2021-2022ஆம் ஆண்டு சுமார் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ரூ.128.41 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இதில், 3,08,518 சிறு குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

மேலும், 2022-2023ஆம் ஆண்டில் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் 66 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இதில், 2,81,631 சிறு குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

இத்திட்டத்தில் 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் 8.02 இலட்சம் ஏக்கரில் சிறுதானியங்கள், 5.10 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகள், 1.22 இலட்சம் ஏக்கரில் எண்ணெய்வித்து பயிர்கள், 66 ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், 26.67 இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு நடவு செய்யப்பட்டுள்ளன. இதில், 5,90,149 சிறு குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

2021-2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம் என்ற புதிய வேளாண் சார்ந்த காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

கடந்த நான்காண்டுகளில், வனத்துறையின் பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்திலிருந்து ரூ.22.68 கோடி நிதி செலவினத்தில், 211.17 இலட்சம் மரக்கன்றுகள் இலவசமாக 1,09,291 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.



வேளாண் காடுகள் திட்டம்

கடந்த நான்காண்டுகளில், ஒன்றிய அரசின் புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி வேளாண் காடு திட்டத்தின்கீழ் 51 சிறிய, 21 பெரிய, 20 உயர் தொழில்நுட்ப (Hi-Tech) நாற்றங்கால்கள் அமைத்தல், 175 ஏற்கெனவே உள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் மற்றும் 1 திசு வளர்ப்பு நாற்றங்கால்கள் அமைத்தல் ஆகிய இனங்களுக்கு ரூ.28.29 கோடி நிதி செலவினத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது

உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை கௌரவிப்பதற்காக "சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது", மூன்று உயிர்ம விவசாயிகளுக்கு 2023-2024ஆம் ஆண்டில், ரூ.5.22 இலட்சம் நிதி செலவினத்தில் வழங்கப்பட்டது.

2024-2025ஆம் ஆண்டில், ரூ.5.22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, மூன்று விவசாயிகள் சிறந்த உயிர்ம விவசாயிகளாக நம்மாழ்வார் விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மையம் அமைத்தல்

பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், மீன் அமிலம் போன்ற உயிர்ம வேளாண் இடுபொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதை ஊக்குவிப்பதற்காக, "இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மையம் அமைத்தல்" திட்டம் 2022-2024 ஆம் ஆண்டுகளில் மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டு, ரூபாய் இரண்டு கோடி நிதி செலவினத்தில் 200 மையங்கள் நிறுவப்பட்டன.

மேலும், 2024-2025ஆம் ஆண்டில், "முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 உயிர்ம வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 5,192 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

மண்வளத்தை பேணிக்காக்கவும், மக்கள் நலம் காக்கும் விதமாக உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செயல்முறைகளை ஊக்கப்படுத்திடவும்" முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்" 2024-2025ஆம் ஆண்டில் ரூபாய் 185.817 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

பசுந்தாள் உர விதைகள் விநியோகம்

"முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" திட்டத்தின்கீழ் பசுந்தாள் உர விதைகள் வழங்குதல் திட்டத்தில் ரூ. 20/- கோடி நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு 4,000 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தற்போது வரை ரூ.19.98 கோடி செலவினத்தில் 4,000 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் 2,00,000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மண்புழு உரம் தயாரித்தல் மையம் அமைத்தல்

மண்புழு உரப் பயன்பாட்டினை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதற்காக "மண்புழு உரம் தயாரித்தல் மையம் அமைத்தல்" திட்டம் வேளாண்மைத்துறை மூலமாக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 10,000 விவசாயிகளுக்கு மொத்தம் 20,000 மண் புழு உரப்படுக்கைகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வரை 20,000 மண்புழு உரப்படுக்கைகள் ரூ.5.98 கோடி செலவில் வழங்கப்பட்டு 10,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தோட்டக்கலைத்துறையின் மூலம் 416 நிரந்தர மண்புழு உரத்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 3,048 மண்புழு உரப்படுக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக ரூ.2.98 கோடி செலவினத்தில் இத்திட்டத்தின்கீழ் 3,464 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மண்வள அட்டைகள் வழங்குதல்:

2024-2025ஆம் ஆண்டில் 3,54,280 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.12 கோடிநிதியில் 4,00,000 மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

களர், அமில நிலங்களை சீர்படுத்தி பயிர்களில் உற்பத்தியை பெருக்குதல்.

மண் நலம் மற்றும் வளம் திட்டத்தின்கீழ் மண்ணை சீர்படுத்துவதற்கு 51,557 ஏக்கர் பரப்பில் உள்ள களர் மற்றும் அமில நிலங்களை தேர்வு செய்து சீர்திருத்த ரூ.13.123 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 42,793 ஏக்கர் பரப்பளவில் களர் மற்றும் அமில நிலங்கள் ரூ.7.142 கோடி செலவில் சீர்திருத்தப்பட்டு 10,743 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண் பயிர்களுக்கு திரவ உயிர் உரம் வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு 500 மில்லிலிட்டர் என்ற அளவில் 6.66 இலட்சம் ஏக்கருக்கு 3.33 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் 50 சதவீதம் மானியத்தில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2 இலட்சத்து 93 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.4.71 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயல் சூழல் ஆய்வு மூலம் நன்மை தரும் பூச்சிகளைக் கண்டறிந்து நெற்பயிரில் இரசாயன மருந்துகளின் பயன்பாட்டினைக் குறைத்தல்.

நெற்பயிரில், 700 செயல் விளக்கத் திடல்களில் விவசாயிகளுடன் இணைந்து வயல் சூழல் ஆய்வு மேற்கொண்டு சுற்றுச்சூழல் அடிப்படையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சிகளும் பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

வேளாண் காடுகள் வாயிலாக வேப்ப மரக் கன்றுகள் நடுதலை ஊக்குவித்தல்

விவசாயிகளிடையே வேப்பமரம் வளர்ப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் இத்திட்டத்தின்கீழ், ரூ.2 கோடி செலவில் 10 இலட்சம் வேப்பமரக் கன்றுகள் 10,132 விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

உயிரி பூச்சிக்கொல்லி பண்புடைய ஆடாதொடா, நொச்சி நடவுப்பொருட்கள் வழங்கி விவசாயிகளை ஊக்குவித்தல்.

விவசாயிகள் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை கடைபிடிப்பதை ஊக்குவிக்கும் வகையில், உயிர்ம வேளாண்மை பூச்சி விரட்டியாகவும் மற்றும் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பதற்கும் 2024 – 2025ஆம் ஆண்டு ஆடாதொடா மற்றும் நொச்சி கன்றுகள் தலா 25 இலட்சம் வீதம் மொத்தம் 50 இலட்சம் கன்றுகள் ரூபாய் ஒரு கோடி செலவில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை, 50 இலட்சம் நடவுக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

மருத்துவ குணங்கள் கொண்ட மரபுசார் நெல் இரகங்கள் சாகுபடி செய்தல்

2024–2025ஆம் ஆண்டில் மருத்துவ குணங்கள் கொண்ட பாரம்பரிய நெல் இரகம் 1,000 ஏக்கர் பரப்பளவிற்கு சாகுபடி செய்ய 20 மெட்ரின் டன் விதை விநியோகம் 50 சதவீத மானியத்தில் 1,285 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

2024–2025ஆம் ஆண்டில் 200 மெடன் பாரம்பரிய நெல் விதைகள் 50 இலட்சம் ரூபாய் மானியத்தில் 16,154 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

சிறுதானியங்கள், பயறுவகைகளின் பாரம்பரிய இரகங்களைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டின் பாரம்பரிய சிறுதானிய இரகங்கள் மற்றும் பயறு இரகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு 2024 – 2025ஆம் ஆண்டில் 13 அரசு விதைப்பண்ணைகளில் தலைவிரிச்சான் சோளம், வெள்ளை சோளம், இருங்குசோளம், செஞ்சோளம், வெண்சுருட்டை கேழ்வரகு, கருஞ்சுருட்டை கேழ்வரகு, குருவிக்காரான் கம்பு, பெரும்சாமை, சடைசாமை, கருஞ்சிட்டன்சாமை, நாட்டுதுவரை, மலைத்துவரை, தட்டைவரகு, பூவாடன் கேழ்வரகு, சித்தன்சாமை, காக்காசோளம், கரிகட்டைகேழ்வரகு, காட்டுகம்பு, மிதி உளுந்து, நாட்டு உளுந்து, கொடிஉளுந்து ஆகிய இரகங்கள் 20 ஏக்கர் பரப்பில் பயிரிட்டு இதுவரை 1.63 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு 407 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணைத்திடல் உருவாக்குதல்

விவசாயிகளுக்கு உயிர்ம வேளாண்மை விவசாயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வட்டாரத்திற்கு ஒன்று வீதம், 385 வட்டாரத்திற்கு 385 மாதிரிப் பண்ணைத் திடல்கள் ரூ.38.50 இலட்சம் செலவினத்தில் அமைக்கப்பட்டது.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம் உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல்

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது பண்ணை மேலாண்மை, உயிர்ம வேளாண்மை இடுபொருள் உற்பத்தி, தர உத்தரவாதத்துடன், புதுமையான வழிமுறைகள்



மூலம் மதிப்பு கூட்டல் மற்றும் நேரடி சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் தொகுப்பு அணுகுமுறை மூலம் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக 35,815 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், சந்தைப்படுத்துதல், வர்த்தக பெயரிடுதல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ரூ.25.86 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின் மூலம் 28,468 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மையம் அமைத்தல்

பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், மீன் அமிலம் போன்ற உயிர்ம வேளாண் இடுபொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதை ஊக்குவிப்பதற்காக, இத்திட்டத்தில் 100 குழுக்கள் மூலமாக ரூ.1 கோடி செலவில் 100 இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,655 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண் காடுகள்

இத்திட்டத்தின்கீழ், 26-சிறிய, 8-பெரிய நாற்றங்கால்கள், 14-உயர் தொழில்நுட்ப (Hi-Tech) நாற்றங்கால் மற்றும் 44- ஏற்கெனவே உள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகியவை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையால் மொத்தம் ரூ.13.155 கோடி நிதி செலவினத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணையம்

இத்திட்டத்தின்கீழ், ஆண்டு முழுவதும் விவசாயிகள் வருமானம் ஈட்டிடும் வகையில் பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள், தேனீ வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் செயல்படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின்கீழ், 14,000 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் ரூ.42 கோடி நிதி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், 14,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மானாவாரி நிலத்தில் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், மானாவாரி நிலத்தில் திரவ உயிரி தூண்டி (Bio stimulant) மூலம் மகசூலை அதிகரிப்பதற்காக மானாவாரி விவசாயிகளுக்கு ரூ.21 கோடி நிதி செலவினத்தில், 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு திரவ உயிரி தூண்டி (Bio stimulant) 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்துத் தொகுப்பு விநியோகம்:

ஊட்டச்சத்து தொகுப்பு விநியோகம் திட்ட இனத்தில் ரூ.3.85 கோடி நிதி செலவில் இதுவரை 8,84,938 ஊட்டச்சத்து நிறைந்த பழக்கன்று தளைகள் தோட்டக்கலைத் துறையால் 8,84,938 பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

இத்திட்டத்தின்கீழ் வேளாண்மைத்துறையின்கீழ் செயல்படும் 33 அரசு விதைப்பண்ணைகளில் 16 வகையான பாரம்பரிய நெல் இரகங்கள் 200 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2022-2023ஆம் ஆண்டு முதல் 2024-2025ஆம் ஆண்டு வரை 700 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீத மானியத்தில் 35,000 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யும் வகையில் 59,509 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பாரம்பரிய நெல் சாகுபடியின் மூலம் விவசாயிகள் 85 சதவீதம் வரை கூடுதல் வருவாய் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் ஆண்டு முதல் 2024-2025 ஆண்டு வரையில் 1,19,333 ஏக்கர் பயிர் செயல்விளக்கத் திடல்கள், 2,918 உழவர் பண்ணைப் பள்ளிகள், 154 விதை கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.55.84 கோடி நிதி சாதனை அடையப்பட்டு, 1,55,010 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)

கடந்த நான்கு ஆண்டுகளில் அட்மா திட்டத்தின்கீழ் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 31,596 பயிற்சிகள், 7,535 கண்டுணர் பயணங்கள், 1,771 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 38,758 செயல் விளக்கத் திடல்கள் போன்றவை ரூ.83.36 கோடி செலவில் நடத்தப்பட்டு 16,45,403 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

கடந்த நான்காண்டுகளில் 149 இலட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பு காப்பீடு செய்யப்பட்டு சுமார் 66 இலட்சம் விவசாயிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் 8.0 இலட்சம் கடன் பெறும் விவசாயிகளும் 58.00 இலட்சம் கடன் பெறா விவசாயிகளும் அடங்குவர். 2020-2021ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் காப்பீட்டுக் கட்டணம் ரூ.1,594 கோடி மற்றும் இழப்பீட்டுத் தொகை ரூ.2,685 கோடி, 13.21 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.கடந்த நான்கு ஆண்டுகளில் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.5,810 கோடி தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இதில் ரூ.5,393 கோடி இழப்பீட்டுத் தொகையாக 31 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மண் நல மேலாண்மை

'தமிழ் மண்வளம்' இணைய முகப்பு

தமிழ் மண்வளம் என்னும் இணைய முகப்பு 28.06.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை தமிழ் மண்வளம் இணைய முகப்பு மூலம் 2.60 இலட்சம் மண்வள அட்டைகள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – மண் நலம் மற்றும் வளம்

2022-2023 முதல் 2024-2025 வரை 7,38,730 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.23.484 கோடியில் 10,80,723 மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

களர், அமில நிலங்களை சீர்படுத்தி பயிர்களில் உற்பத்தியைப் பெருக்குதல்

மண் நலம் மற்றும் வளம் திட்டத்தின்கீழ் மண்ணை சீர்படுத்துவதற்கு 51,557 ஏக்கர் பரப்பில் உள்ள களர் மற்றும் அமில நிலங்களை தேர்வு செய்து சீர்திருத்த ரூ.13.123 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 42,793 ஏக்கர் பரப்பளவில் களர் மற்றும் அமில நிலங்கள் ரூ.7.142 கோடி செலவில் சீர்திருத்தப்பட்டு 10,743 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

ஆய்வகங்களுக்கான தேசிய சோதனை மற்றும் அங்கீகார வாரியத்தின் அங்கீகாரம் பெற மேற்கொண்ட நடவடிக்கைகள்

2023-2024 மற்றும் 2024-2025ஆம் நிதி ஆண்டுகளில் மண் நலம் மற்றும் வளம் திட்டத்தில் ரூ.5.181 கோடி செலவில் 36 மண்பரிசோதனை நிலையங்கள் மற்றும் ஒரு மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், குடுமியான்மலைக்கும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு 2024-2025ஆம் ஆண்டு தேசிய சோதனை மற்றும் அங்கீகார வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், 16 நடமாடும் மண்ஆய்வுக்கூடங்கள், 2 அங்கக உரபரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் ஒரு உயிர்உரங்கள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு தேசிய சோதனை மற்றும் அங்கீகார வாரியத்தில் அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஆய்வகங்களுக்கான தேசிய சோதனை மற்றும் அங்கீகார வாரியத்தின் அங்கீகாரம் பெறுவதற்காக 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய நிதி ஆண்டுகளில் ரூ.8.08 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 14 உரகட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 10 பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்கள் வலுப்படுத்தப்பட்டு 13 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 பூச்சிக்கொல்லி பரிசோதனை நிலையங்களுக்கு தேசிய சோதனை மற்றும் அங்கீகார வாரியத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

உயிரியில் காரணி தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாட்டில் திருச்சியில் உயிரியில் காரணி தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் 2021-2022ஆம் ஆண்டு ரூ.2.475 கோடி செலவில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நிறுவப்பட்டு 2024-2025ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

வேளாண் பயிர்களுக்கு திரவ உயிர் உரம் வழங்குதல்

உயிர் உரங்களை 2024-2025ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 500 மில்லிலிட்டர் என்ற அளவில் 6.66 இலட்சம் ஏக்கருக்கு 3.33 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் 50 சதவீதம் மானியத்தில் ரூ.5 கோடி நிதி செலவினத்தில் 2 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் விநியோகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.4.99 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளைஞர்களைத் தொழில்முனைவோராக்குதல்

2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை, இளைஞர்களை வேளாண் தொழில்முனைவோராக்குதல் திட்டத்தின்கீழ், வேளாண் சார்ந்த தொழில் தொடங்கிய 435 பட்டதாரி இளைஞர்களுக்கு, ரூ. 4.35 கோடி பின்னேற்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை பேரிடர்களால் ஏற்பட்ட வேளாண் பயிர் சேதத்திற்கு நிவாரணம் வழங்கப்பட்ட விவரம்

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில், 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டு வரை, இயற்கை இடர்பாடுகளால் 28.94 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட வேளாண் பயிர் சேதங்களுக்கு, ரூ.1,379.44 கோடி நிவாரணமாக 18.10 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுப்பண்ணையம்

2021-2022ஆம் நிதி ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 1.10 இலட்சம் சிறு குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் 1,100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் அமைக்கப்பட்டு, ஒரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு மூலதன நிதியாக ரூ.5 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு ரூ.59.41 கோடி மாநில அரசின் நிதியில் 65 டிராக்டர்கள், 391 பவர் டில்லர்கள், 853 களையெடுக்கும் இயந்திரங்கள், 527 சுழற்கலப்பைகள், 34 கொத்துக்கலப்பைகள் மற்றும் 1,160 இதர இயந்திரங்கள் என மொத்தம் 3,030 பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் இவ்வியந்திரங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

ஒருங்கிணைந்த பண்ணையம்

இத்திட்டத்தின்கீழ் ஆண்டு முழுவதும் விவசாயிகள் வருமானம் ஈட்டிடும் வகையில் பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள், தேனீ வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் செயல்படுத்தப்படுகிறது ஆக மொத்தம் நான்காண்டுகளில் ரூ.210.01 கோடி நிதியில் 56,712 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 56,712 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம் உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல்

பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது பண்ணை மேலாண்மை, உயிர்ம வேளாண்மை இடுபொருள் உற்பத்தி, தர உத்தரவாதத்துடன், புதுமையான வழிமுறைகள் மூலம் மதிப்பு

கூட்டல் மற்றும் நேரடி சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் தொகுப்பு அணுகுமுறை மூலம் உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2023-2024ஆம் ஆண்டில் 35,815 ஏக்கர் பரப்பளவில் 725 அங்கக வேளாண் குழுக்கள் ரூ.26.04 கோடி செலவில் உருவாக்கப்பட்டது.

2024-2025 ஆம் ஆண்டில், இரண்டாம் ஆண்டு செயல்பாடுகளான விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், சந்தைப்படுத்துதல், வர்த்தக பெயரிடுதல், மதிப்புக்கூட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ரூ.25.86 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ரூ.51.90 கோடி நிதி செலவில் செய்யப்பட்டு 35,815 ஏக்கரில் உயிர்ம வேளாண்மை ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 28,468 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைத் துறையில் உள்ள மின்னணு செயல்பாடுகள்

விவசாயிகளின் நில விவரங்களோடு அவர்களின் ஆதார் எண் இணைக்கப்பட்டு, ஒருங்கிணைந்த விவசாயிகள் தரவுதளம் அக்ரிஸ்டாக் (AGRISTACK) திட்டத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டு முதல் 17,164 வருவாய் கிராமங்களில் உள்ள விளைநிலங்களுக்கு புவியிட குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இப்புவியிடக் குறியீடு கொண்டு அனைத்து வருவாய் கிராமங்களில் பயிர் சாகுபடி பரப்பு கணக்கீடு மின்னணு முறையில் பதிவுசெய்யப்படுகிறது.

கடந்த காரிப் பருவத்தில் 35 % (1.72 கோடி), இரபி பருவத்தில் இதுவரை 95 % (3.85 கோடி) நில உடைமைகளில் மின்னணு முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023இல் 20,09,738 விவசாயிகள், 2023-2024இல் 25,86,246 விவசாயிகள், 2024-2025இல் 12,92,465 விவசாயிகள் ஆக மொத்தம் 58,88,449 விவசாயிகள் பல்வேறு திட்டங்களில் பயன்பெற முன்பதிவு செய்துள்ளனர்.

மேலும் 7,331 விவசாயிகள் தென்னங்கன்றுகள் பெறுவதற்கும், 2022-2023ஆம் ஆண்டு முதல் 20,406 விவசாய கூலித் தொழிலாளர்கள் வேளாண் பணிகளுக்காகவும் உழவர் செயலியைப் பயன்படுத்தி உள்ளனர்.

385வேளாண்விரிவாக்கமையங்களில்விற்பனைமுனையக்(POS)கருவிகள் நிறுவப்பட்டுள்ளது. 2022-2023இல் ரூ.1.08 இலட்சம், 2023-2024இல் ரூ.94.41 இலட்சம், 2024-2025இல் ரூ.3,975 இலட்சம் என ரூ.4,071 இலட்சம் மதிப்பிலான இடுபொருட்களுக்கு விவசாயிகளின் பங்களிப்பு தொகை பணமில்லா பரிவர்த்தனை மூலம் பெறப்பட்டுள்ளது.

385 வேளாண் விரிவாக்க மையங்களில் வேளாண் இ-சேவை மையம் அமைப்பதற்கு வன் பொருள் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி

2021-2022ஆம் ஆண்டில் நிலக்கடலை, கரும்பு, பருத்தி, சோளம், கம்பு, உளுந்து, துவரை, பச்சைப்பயறு, மக்காச்சோளம் ஆகிய 9 பயிர்களில் அதிக மகசூல் பெற்ற முதல் இரண்டு விவசாயிகள் என மொத்தம் 18 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.2.70 இலட்சம் மதிப்பில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. 2022-2023ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.70 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு 18 விவசாயிகள் பயனடைந்தனர்.

2023-2024ஆம் ஆண்டில் நிலக்கடலை,கரும்பு,கம்பு,உளுந்து,துவரை,பச்சைப்பயறு,இராகி,எள், தினை, சாமை, குதிரைவாலி ஆகிய 11 பயிர்களில் அதிக மகசூல் பெற்ற முதல் மூன்று விவசாயிகள் என மொத்தம் 33 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.55 இலட்சம் மதிப்பில் பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டம், 2024-2025ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பயிர் அறுவடைக்கான கடைசி தேதியான 15.03.2025க்குப் பிறகு அறுவடை அறிக்கைகள் பெறப்பட்டு மகசூலின் அடிப்படையில் 85 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு 2025-2026

கடந்த இரண்டு ஆண்டுகளில், 4,986 கிராம ஊராட்சிகளில் 4,986 "கிராம வேளாண் முன்னேற்றக் குழுக்கள்" அமைக்கப்பட்டு ரூ.4.986 கோடி ரூபாய் செலவினத்தில் 14,980 பயிற்சிகள் 1,76,280 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம் – செயல்விளக்கம்

2024-2025ஆம் ஆண்டில்"ஒரு கிராமம் ஒரு பயிர்" என்ற திட்டத்தின்கீழ் 15,280 வருவாய் கிராமங்களில் 5 முதல் 10 ஏக்கர் பரப்பளவில் ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று தேர்வு செய்து முக்கிய வேளாண் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 1.40 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் அனைத்து பயிர்களிலும் செயல்விளக்கம் அமைக்கப்பட்டு 63,778 விவசாயிகள் பயன்பெற்றனர். மேலும், நன்மை மற்றும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேறுபடுத்துவதற்காக, 15,280 "நிரந்தரப் பூச்சிக் கண்காணிப்புத் திடல்கள்" வயல்களில் அமைக்கப்பட்டு, பயனுள்ள பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் நாட்டில் அதிகபட்சமாக 118.55 இலட்சம் மெ.டன் வேளாண் விளைப்பொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்டு ரூ.582.71 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 5,838 விவசாயிகள் பொருளீட்டுகடனாக ரூ.145.77 கோடியும், 928 வியாபாரிகள் ரூ.16.53 கோடியும் பெற்று பயனடைந்துள்ளனர். விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடனானது ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.351.93 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் புதிதாக 157 ஒழுங்குமுறை விற்பனைகூடங்கள் மின்னணு தேசிய வேளாண் இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதுவரை 213 ஒழுங்குமுறை விற்பனைகூடங்கள் மின்னணு தேசிய வேளாண் இணையதளத்தில் இணைக்கப்பட்டு ரூ.6,635.91 கோடி மதிப்பிலான 22.71 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 19 இலட்சத்து 22 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் வர்த்தகம் மேற்கொள்ள ஏதுவாக ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் 8,047 வணிகர்களுக்கும், 730 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

உழவர் சந்தை

உழவர் சந்தைகளில் நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.10 கோடி மதிப்புள்ள 2,300 மெட்ரிக் டன் காய்கனிகள் 8,000விவசாயிகளால்மூன்று இலட்சத்திற்கும்அதிகமான நுகர்வோர்களுக்குவிற்பனைசெய்யப்படுகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் 125 உழவர் சந்தைகள் ரூ.35.68 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு தினந்தோறும் 7,212 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். ரூ.8.28 கோடி செலவில் புதிதாக 14 உழவர் சந்தைகள் தோற்றுவிக்கப்பட்டு தினந்தோறும் 300 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். Gpay, Phonepe, Paytm போன்ற மின்னணு பரிவர்த்தனைகள் உழவர் சந்தைகளில் ஊக்குவிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மதிப்புக் கூட்டும் மையங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காக சிறுதானியங்கள் பதப்படுத்தும் நிலையமானது ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் அமைக்கப்பட்டு மலைவாழ் மக்கள் பயனடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டம், எடப்பள்ளியில் ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியில் விளையும் மிளகினை விவசாயிகள் பதப்படுத்தும் வகையில், மிளகிற்கான பதப்படுத்தும் மையம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.



தஞ்சாவூர் மாவட்டத்தில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தென்னை மதிப்புக் கூட்டும் மையம், ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டியிலும், திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திலும் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில் தரம் பிரிப்பு கூடம் மற்றும் மதிப்பு கூட்டும் இயந்திரங்களுடன் கூடிய வாழை ஏல மையம் ரூ.6.47 கோடி மதிப்பீட்டில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம் தெள்ளானந்தல் பகுதியில் சமையல் எண்ணெய்க்கான நவீன சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய சந்தை ஊக்குவிக்கும் மையம் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

தாளவாடி மற்றும் பர்கூரில் காய்கறி மற்றும் பழங்களை சேமிக்க 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்குகள் ரூ.5.64 கோடி மதிப்பீட்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சந்தை நுண்ணறிவு பற்றிய விழிப்புணர்வு மற்றும் விவசாயிகள், தொழில்முனைவோர்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான பயிற்சி கூடத்துடன் கூடிய, வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் உழவர் ஆலோசனை மையம் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் ரூ.11.76 கோடி மதிப்பீட்டில் 14 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு 5 மஞ்சள் வேகவைக்கும் மற்றும் 2 மெருகூட்டும் இயந்திரங்கள், தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு 2 மஞ்சள் வேகவைக்கும் மற்றும் 2 மெருகூட்டும் இயந்திரங்கள், கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு 1 மஞ்சள் வேகவைக்கும் மற்றும் 1 மெருகூட்டும் இயந்திரம் ரூ.2.12 கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் வழங்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்றுவருகின்றன.

விரிவாக்கத் தொடர் மேலாண்மைத் திட்டம், இரண்டாம் கட்டத்தில் நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் மையங்கள் அமைக்கப்பட்டு சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களை (Market Integration Partner) தேர்வு செய்து செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வணிகம் செய்வதற்கு இடைநிலை மூலதன உதவி திட்டத்தின்கீழ் 456 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.39.99 கோடி மூலதன உதவி, கடன் உத்தரவாதம் திட்டத்தின்கீழ் 47 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.6.72 கோடி கடன் உத்தரவாதம் மற்றும் சலுகையுடன் கூடிய சுழல் நிதி திட்டத்தின்கீழ் 245 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.31.54 கோடி நிதியுதவி தமிழக அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருள்களை விற்பனை செய்ய மாநகராட்சிகளில் 50 சிறப்பு அங்காடிகள் ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

310 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2 கோடி செலவில் சிறந்த வேளாண் நடைமுறைகள், நிறுவன நிர்வாகம், வணிக மேலாண்மை, கணக்கு பராமரிப்பு, ஏற்றுமதி சந்தை, போன்றவற்றில் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயணங்கள் ஆகியவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு 2,120 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைப்பொருட்களை மதிப்புக்கூட்டி, சிப்பமிட்டு, முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு ஏதுவாக இந்திய சிப்பமிடுதல் நிறுவனம் (Indian Institute of Packaging) மூலமாக சிப்பமிடுதல் மற்றும் முத்திரையிடுதல் பயிற்சி (Packaging and Branding) ரூ.25 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டு 636 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைப்பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களை சந்தைப்படுத்த வேளாண் வணிகத்திருவிழா, சென்னை வர்த்தக மையத்தில் 08.07.2023 மற்றும் 09.07.2023 ஆகிய நாள்களில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 86 கடைகள் அமைத்து ரூ.2.50 கோடி மதிப்பிலான விளை பொருள்களை விற்பனை செய்து 4,120 விவசாயிகள் மற்றும் 1.83 இலட்சம் நுகர்வோர்கள் பயன்பெற்றனர்.

37 மாவட்டங்களில் ரூ.1.02 கோடி செலவில் விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டு பயிற்சி தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம் (NITEM-T) மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 14 அணிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு 560 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

கிராம அளவில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துறையால் இத்திட்டத்தின்கீழ் உலர்களங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2021-2024ஆம் ஆண்டுகளில் 285 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் ரூ.53.43 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, 82,328 விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

2024-2025ஆம் ஆண்டில் 200 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

"தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்" – சிறுதானியங்கள் முதன்மைப் பதப்படுத்தும் மையம்"

சிறுதானியங்கள் அதிகம் உற்பத்தியாகும் 25 மாவட்டங்களில் "தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறுதானியங்கள்

முதன்மை பதப்படுத்தும் மையங்கள் நிறுவுவதற்கான நிதி ஆதரவு, இயந்திரங்களுக்கு மட்டும் 75% மானியத்துடன் வழங்கப்படுகிறது (அதிகபட்சம் ரூ.18.75 இலட்சம் / மையம் வரை).

2023-2024ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 24 சிறுதானியங்கள் முதன்மை பதப்படுத்தும் மையங்கள் ரூ.251.68 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF)

வேளாண் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர்களுக்கு இந்த திட்டத்தில் 3 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி வரை கடன் உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், இதுவரை 7,749 கடன் விண்ணப்பங்கள் மூலம் ரூ.2533.97 கோடி ஒப்பளிக்கப்பட்டு 7,749 விவசாயிகள் மற்றும் வேளாண் தொழில்முனைவோர் பயனடைந்து வருகின்றனர்.

வேளாண் உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் 1,000 மெ.டன் இ - நாம் பரிவர்த்தனை கூடங்கள் தலா ரூ.2 கோடி மதிப்பீட்டில், ஈரோடு விற்பனை குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும் தாளவாடி, நம்பியூர் மற்றும் சித்தோடு ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும், வேளாண் உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் 250 மெ. டன் குளிர் பதன கிடங்குகள் தலா ரூ.1.96 கோடி மதிப்பீட்டில், ஈரோடு விற்பனை குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும் சித்தோடு, வெள்ளாங்கோயில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களிலும், வெப்பிலி துணை ஒழுங்கு முறை விற்பனை கூடத்திலும் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

விலை ஆதரவுத் திட்டம்

விலை வீழ்ச்சி காலங்களில் விவசாயிகளைப் பாதுகாக்க குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொப்பரை மற்றும் பயறுவகைகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் கொள்முதல் செய்யப்பட்ட விளைபொருட்களுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

2021 முதல் 2024 வரை 8,310 மெ.டன் பச்சைப்பயறு 7,724 விவசாயிகளிடமிருந்து ரூ.63.95 கோடி மதிப்பிலும் மற்றும் 33 மெ.டன் துவரை 55 விவசாயிகளிடமிருந்து ரூ.21 இலட்சம் மதிப்பிலும் ஆக மொத்தம் 8,343 மெ.டன் பயறு வகைகள் 7,779 விவசாயிகளிடமிருந்து ரூ.64.16 கோடி மதிப்பில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

2021 முதல் 2024 வரை 1.467 இலட்சம் மெ.டன் கொப்பரை 1.01 இலட்சம் விவசாயிகளிடமிருந்து ரூ.1591.53 கோடி மதிப்பிலும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டான் சிப்காட் தொழிற் பூங்காவில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் ரூ.77.02 கோடி திட்ட மதிப்பீட்டில் அடிப்படை மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகளுடன் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வுணவுப் பூங்காவில் 28 ஏக்கர் பரப்பளவில் உணவு பதப்படுத்தும் தொழில் மனைகள் அமைக்கும் பொருட்டு தொழில்முனைவோருக்கு குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. இதுவரை 14 ஏக்கர் நிலம் ஒப்பந்தம் முறையில் தொழில்முனைவோருக்கு விடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொழில் மனைகளை குத்தகைக்கு விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம் மற்றும் மதுரை ஆகிய ஏழு இடங்களில், தலா 10 ஏக்கர் பரப்பளவில் வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு நிலம் குத்தகைக்கு விடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வேளாண் ஏற்றுமதி

தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் வேளாண் மற்றும் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியின் பங்களிப்பினை அதிகரிக்கும் பொருட்டு, வேளாண் ஏற்றுமதி தொடர்பான கருத்தரங்குகள் ரூ.50 இலட்சம் நிதி செலவில் 10 மாவட்டங்களில் நடத்தப்பட்டதில் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO), வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உட்பட 5,000 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்துள்ளனர்.

மாநிலத்தின் தனித்துவமான விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 35 விளைபொருட்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

ரூ.6 இலட்சம் செலவில் வேளாண் ஏற்றுமதி நடைமுறைகள் குறித்த சிறப்பு பயிற்சிகள் விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நடத்தப்பட்டது. இதன் வாயிலாக விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/ வர்த்தகர்கள்/ ஏற்றுமதியாளர்கள் உட்பட 200 பயனாளிகள் பங்கேற்று பயன் அடைந்துள்ளனர்.

2024-2025ஆம் ஆண்டில் விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், இறக்குமதி - ஏற்றுமதி குறியீடு (IEC)/ பதிவு மற்றும் உறுப்பினர் சான்றிதழ் (RCMC) / டிஜிட்டல் கையொப்பம் (Digital signature) / FSSAI உரிமம் (License) போன்ற சான்றிதழ்களைப் பெற ஏதுவாக ஒரு விவசாயி/உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000/- வீதம் 80 பயனாளிகளுக்கு ரூ.5.37 இலட்சம் மாநில அரசு நிதியில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையம் மூலம் ரூ.58.66 இலட்சம் செலவில் 3,249 அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 130 பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

தேசிய தோட்டக்கலை இயக்கம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத் திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 நிதி பங்களிப்புடன் ஒரு உபதிட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் 1,89,255.46 எக்டர் பரப்பு, 17,11,217 சதுர மீட்டர் மற்றும் 2,31,958 எண்கள் கொண்ட திட்டப் பொருள் இலக்கின்கீழ் ரூ.574.265 கோடி நிதி செலவில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 3,25,178 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - விரிவான திட்ட அறிக்கை (DPR)

கடந்த 4 ஆண்டுகளில் பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் - விரிவான திட்ட அறிக்கையின்கீழ் 1.42 இலட்சம் எக்டர் பரப்பு, 4,19,000 சதுர மீட்டர் மற்றும் 246 எண்கள் கொண்ட திட்ட பொருள் இலக்கின்கீழ் ரூ.188.788 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 1,71,848 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

கடந்த 4 ஆண்டுகளில் மானாவாரி பகுதி மேம்பாடு திட்டமானது ரூ. 76.254 கோடி நிதியில் 21,863 எண்களில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 21,050 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம்

கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.39,90 இலட்சம் நிதியில் 199.95 எக்டர் பரப்பளவில் மாற்றுப்பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 295 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்காடுகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டம் ரூ.6.45 கோடி நிதி ஒதுக்கீட்டில் 75 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நாற்றங்கால் அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வழங்கப்படுகிறது. இதுவரை 7,650 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம் (TN-IAMP)

கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் 43.018 எக்டர் பரப்பு, 1,307 எண்கள் மற்றும் 34,500 சதுர மீட்டர் கொண்ட திட்டப் பொருள் இலக்கின்கீழ் ரூ.121.22 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 55,287 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தேசிய மூங்கில் இயக்கம் (NBM)

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய மூங்கில் இயக்கத் திட்டத்தில் பரப்பு விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு திட்ட இனங்களின்கீழ் 1,391 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு ரூ.7.73 கோடி நிதி மானியத்தில் 2,417 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப் பனைத் திட்டம் (NMEO- OP)

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய சமையல் எண்ணெய் -எண்ணெய் பனை திட்டத்தின்கீழ் 1,400 எக்டர் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு, பராமரிப்பு மற்றும் ஊடுபயிர், அறுவடை இயந்திர கருவிகள் ஆகிய திட்ட இனக்கூறுகளுடன் இத்திட்டம் ரூ.7.80 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 4,241 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தென்னை வளர்ச்சி வாரியத் திட்டம்

தென்னையில் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவியுடன் கடந்த நான்கு நிதியாண்டுகளில் 13,153 எக்டர் பரப்பு மற்றும் 33,06,258 எண்கள் கொண்ட திட்ட இனங்களின்கீழ் ரூ.47.954 கோடி நிதி இனத்தில் 22,901 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தென்னை வேர்வாடல் நோய் மீட்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நோய் தாக்கிய மரங்களை வெட்டி அகற்றுதல், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல் மற்றும் நோய் தாக்கிய தென்னந்தோப்புகளை புத்தாக்கம் செய்ய இடுபொருட்கள் வழங்குதல் போன்ற இனங்களில் நாளது தேதிவரை 3,953 எக்டர் பரப்பில் ரூ.18.48 கோடி நிதி செலவினத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, 6,274 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

தோட்டக்கலைப் பயிர்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடுத் திட்டத்தில் (PMFBY) பதிவுசெய்த விவசாயிகள்

கடந்த 4 ஆண்டுகளில், பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தின்கீழ் 5,15,156 விவசாயிகள் பதிவுசெய்து 1,62,438 எக்டர் பரப்பளவு தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு விவரம்

கடந்த 4 ஆண்டுகளில், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் வழியே ரூ.182.45 கோடி இழப்பீட்டு தொகையாக 67,427 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின்கீழ் 67,041.43 எக்டர் பரப்பு, 2,48,000 சதுர மீட்டர் மற்றும் 17,42,049 எண்கள் கொண்ட திட்டப் பொருள் இலக்கின்கீழ் ரூ.130.68 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 16,88,109 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டம் ரூ.4.82 கோடி நிதியில் தோட்டக்கலை துறை மூலம் பனை விதைகள் விநியோகம் (32 இலட்சம்), பனங்கன்றுகள் விநியோகம் (17,221 எண்கள்), பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் (292 எண்கள்) போன்ற திட்ட இனங்களும் மற்றும் பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (850 நபர்கள்), மகளிருக்கு பனை ஓலை தயாரிக்கும் பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (450 நபர்கள்) போன்ற திட்ட இனங்களுடன் செயல்படுத்தப்பட்டு இதுவரை 63,390 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் (KAVIADP)

கடந்த நான்கு ஆண்டுகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 44,250 எக்டர் பரப்பு மற்றும் 22,77,046 எண்கள் கொண்ட திட்டப் பொருள் இலக்கின்கீழ் ரூ.87 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 23,32,421 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், பூங்கா மற்றும் தோட்டங்களின் சாதனை விவரங்கள் (SHF – PARKS & GARDENS)

கடந்த நான்கு வருடங்களில், 118.89 கோடி நடவுச்செடிகள், இதில் 99.12 கோடி குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், 1018 மெ.டன் உண்மைநிலை காய்கறி விதைகள்(Truthfully labelled seeds) மற்றும் 3835 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

தோட்டக்கலைப் பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களை பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றன.

2021–2022 முதல் 2024–2025 வரை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் நடத்தப்பட்ட கோடை விழா, மலர் கண்காட்சி மற்றும் இதர தோட்டக்கலை சார்ந்த விழாக்களை 15,27,249 பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

தென்னை நாற்றுப் பண்ணைகள்

தோட்டக்கலை துறையின்கீழ் செயல்பட்டு வரும் 23 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள் மற்றும் 16 தென்னை ஒட்டு மையங்கள் மூலம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும் நேரடி விற்பனை மூலமாகவும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 50,32,186 தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள்

தர்மபுரி, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள் மூலம் தென்னைப் பயிரைத் தாக்கும் கருந்தலைப்புழுவை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த பிராக்கானிட் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டு தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தென்னை ஒட்டு வளர்ப்பு மையங்கள் மூலம் 528.05 இலட்சம் பிராக்கானிட் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டு தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களின் சேதாரத்திற்கான இழப்பீட்டு நிவாரணம்

டவ்தேவ் புயல் 2021: மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ரூ.91 இலட்சம் பாதிக்கப்பட்ட 1,067 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

யாஸ் புயல் 2021: கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 140.45 எக்டர் பரப்பிலான தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ரூ.28 இலட்சம் பாதிக்கப்பட்ட 596 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது



வடகிழக்கு பருவ மழை 2021: 32 மாவட்டங்களில் 19122.87 எக்டர் பரப்பளவில் 40,033 விவசாயிகளின் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில நிதியின் கீழ் ரூ.4,023.21 இலட்சம் பாதிக்கப்பட்ட 40,033 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

சூறைக்காற்றுடன் கூடிய கனமழை 2021: கடலூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களிலுள்ள 146.11 எக்டர் பரப்பிலான தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.27 இலட்சம் பாதிக்கப்பட்ட 497 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பருவம் தவறிய மழை ஜனவரி 2021: தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 17817.72 எக்டர் பரப்பளவு பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.1797.14 இலட்சம் பாதிக்கப்பட்ட 25,396 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

சூறைக்காற்றுடன் கூடிய கனமழை 2022: நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 176.40 எக்டர் பரப்பிளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.23.81 இலட்சம் பாதிக்கப்பட்ட 654 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது

தென் மேற்கு பருவ மழை 2022: 19 மாவட்டங்களில் 628.28 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.86.197 இலட்சம் பாதிக்கப்பட்ட 2,040 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வட கிழக்கு பருவ மழை 2022: 22 மாவட்டங்களில் 399.79 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.52.884 இலட்சம் பாதிக்கப்பட்ட 1,088 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மாண்டஸ் புயல் 2022: 10 மாவட்டங்களில் 1244.37 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.175.228 இலட்சம் பாதிக்கப்பட்ட 3,716 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

சூறைக்காற்றுடன் கூடிய கனமழை 2023: 22 மாவட்டங்களில் 3447.17 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.461.08 இலட்சம் பாதிக்கப்பட்ட 6,934 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மிக்ஜாம் புயல் 2023: 7 மாவட்டங்களில் 1,452.344 எக்டர் பரப்பிலான தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.269.94 இலட்சம் பாதிக்கப்பட்ட 4,311 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழையின்போது தென்மாவட்டங்களில் பெய்த அதிகனமழை 2023: 8 மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலைப் பயிர்கள் 38840.2247 எக்டர் பரப்பளவில் பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, இடுபொருள் நிவாரணமாக, மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.4,124.74 இலட்சம் பாதிக்கப்பட்ட 62,735 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பருவ நிலை மாற்றத்தினால் விருதுநகர் மாவட்டத்தில் மா பயிர் பாதிப்பு 2023: விருதுநகர் மாவட்டத்தில் மா பயிர் 144.455 எக்டர் பரப்பளவு பாதிப்புக்குள்ளானது. மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.26 இலட்சம் பாதிக்கப்பட்ட 155 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதத்தில் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை 2023: 17 மாவட்டங்களில் 245.047 எக்டர் பரப்பிளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 652 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.33.89 இலட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை 2023: தமிழகத்தில் 2023 ஆம் ஆண்டு பெய்த வட கிழக்கு பருவ மழையினால் 10 மாவட்டங்களில் 80.516 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 200 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.12.14 லட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

பருவம் தவறிய மழை – ஜனவரி 2024: 6 மாவட்டங்களில் 1,891.20 எக்டர் பரப்பளவு பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 2,026 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.321.78 இலட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

பயிர் பாதிப்பு சூறைக்காற்றுடன் கூடிய கனமழை 2024: 26 மாவட்டங்களில் 1,394.651 எக்டர் பரப்பிளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 3715 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.238.61 இலட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

∴பெங்கல் சூறாவளி 2024: 15 மாவட்டங்களில் 67,870.843 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. அதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 1,16,578 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.13,341.68 இலட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

தென்மேற்கு பருவ மழை 2024: 26 மாவட்டங்களில் 430.869 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. அதனை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட 1,168 விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.74.83 இலட்சம் இடுபொருள் நிவாரணம் வழங்கப்பட்டது.

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு (Area Coverage)

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவைதாளித பயிர்கள், மருத்துவ பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலர்கள் ஆகியவை 16.09 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 234.69 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

வேளாண்மைப் பொறியியல் துறை

இ-வாடகை ஆன்லைன் செயலி

இ-வாடகை ஆன்லைன் செயலி 08.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த 2021-2022 முதல் 2024-2025 வரை 1,98,357 முன்பதிவுகள் செய்யப்பட்டு, இ-வாடகை செயலியின் மூலம் விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். மேலும், ரூ.126.80 கோடி முன்பணமாக பெறப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறைக்குப் புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்தல்

2021-2022 முதல் 2024-2025 வரை மொத்தமாக 1,652 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.72.05 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண் இயந்திரமயமாக்கல்

தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டம்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டில் இதுவரை மொத்தமாக 62,820 விவசாயிகளுக்கு ரூ.499.45 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை கிராம அளவிலான 1,072 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாய குழுக்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.84.62 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டில் இதுவரை வட்டார அளவிலான 133 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்கள், விவசாய குழுக்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.11.94 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டில் இதுவரை கரும்பு சாகுபடிக்கான 104 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க விவசாய குழுக்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.45.03 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2021-2022 முதல் 2024-2025 ஆம் ஆண்டில் இதுவரை வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.641.04 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்தி பராமரித்தலும், அமைத்தலும் (TAWDEVA-WDF)

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் (இதுவரை) மொத்தமாக ரூ.8.45 கோடி செலவில் 3,704 நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் பராமரிக்கப்பட்டுள்ளது. மேலும், 94 புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ரூ.118.34 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சூரிய மின் வேலி அமைத்தல்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டில் (இதுவரை) மொத்தமாக 340 விவசாயிகளுக்கு சூரிய மின் வேலிகள் அமைக்கப்பட்டு ரூ.3.30 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகைத் திட்டத்தினை வலுப்படுத்த வேளாண் இயந்திரக் கூடாரங்கள் அமைத்தல்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் (இதுவரை) மொத்தமாக 100 வேளாண் இயந்திரக் கூடாரங்கள் ரூ.20.38 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

வேளாண்மை/தோட்டக்கலைத் துறைகளின் மூலம் உருவாக்கப்பட்ட 925 தொகுப்பிலுள்ள விவசாய குழுக்களுக்கு 859 ஆழ்துளை/ குழாய்க் கிணறுகளும் 120 திறந்தவெளிக் கிணறுகளும் ரூ.73.15 கோடி நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

1,615 தனிப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் ரூ.95.26 கோடி நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2,382 பண்ணைக் குட்டைகள் ரூ.29.16 கோடி நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 8,509 சிறுபாசன குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்து கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டுமானங்களை ரூ.60.45 கோடி நிதி செலவில் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது. 1,526 பயனாளிகளுக்கு விசை உழுவை இயந்திரங்கள் ரூ.12.749 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

243 நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் ரூ.95 இலட்சம் நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 132 வேளாண் இயந்திரங்கள் ரூ.7.68 கோடி நிதி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, மொத்தமாக ரூ.279.94 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக 3,171 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட்டு ரூ.65.5 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

சூரிய கூடார உலர்த்திகள்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக 390 விவசாயிகளுக்கு சூரிய கூடார உலர்த்திகள் ரூ.8.63 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம் – பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, 913 பண்ணைக் குட்டைகள் ரூ.7.74 கோடி மானியத்தில் 810 விவசாயிகள் பயன்பெறும் வகையில் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, 5,020 விவசாயிகளுக்கு ரூ.6.49 கோடி மானியத்தில் புதிய மோட்டார் பம்பு செட்டுகள் வழங்கப்பட்டுள்ளது.

"சி", "டி" பிரிவு வாய்க்கால்களில் தூர்வாருதல்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, ரூ.19.97 கோடி நிதி செலவில் 5,427 கிலோமீட்டர் நீளத்திற்கு, 2,10,052 விவசாயிகள் பயன்பெறும் வகையில் தூர்வாரும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, 32,847 மீட்டர், நிலமேம்பாட்டுப் பணிகள், 496 எண்கள் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்புப் பணிகள் ரூ.50.93 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் தயாரித்தல்

ரூ.29.99 இலட்சத்தில் 56 எண்ணிக்கையிலான கருவிகள் உருவாக்கம். மேலும், புதுமையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பேரிடர் மேலாண்மைப் பணிகள்

கடந்த 2023ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக்ஜாம் புயலின்போது, வேளாண்மைப் பொறியியல் துறையின் பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள் 10,465 மணி நேரத்திற்கும், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, 7,490 மணி நேரத்திற்கும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மேலும் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 3,765.4 ஏக்கர் நிலப் பரப்பளவிற்கு மணல் திட்டுக்கள் அகற்றும் பணிகள் ரூ.5.26 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், 2,580 விவசாயிகள் பயடைந்துள்ளனர்.

ஊரக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, 777 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.26.76 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

புதிய வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துதல்

கடந்த 2021-2022 முதல் 2024-2025ஆம் ஆண்டுகளில் இதுவரை மொத்தமாக, 151 செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டு திட்டம் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரப் பராமரிப்பு முகாம்

தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் தயாரிப்பு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறைகளை விவசாயிகள் அறிந்து கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 36 மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

உழவர் செயலியில் தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர் விவரங்கள் பதிவேற்றம் செய்தல்

தனியாருக்குச் சொந்தமான 4,456 அறுவடை செய்யும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 45,849 டிராக்டர் உரிமையாளர்கள், 4,322 மெக்கானிக்குகள், 8201 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 52 டிராக் வகை மண் அள்ளும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 78 டிரோன்களின் உரிமையாளர்கள், 294 சுழல் விசைத்துளைக் கருவிகளின் உரிமையாளர்கள் மற்றும் 184 கரும்பு அறுவடை செய்யும் இயந்திரங்களின் உரிமையாளர்களின் பெயர், அலைபேசி எண் போன்ற விவரங்கள் வட்டாரம் மற்றும் மாவட்ட வாரியாக உழவர் செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, விவசாயிகள் நேரடியாக தொடர்பு கொண்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில் படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி

வேளாண் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், சென்னையில் அமைந்துள்ள மாநில வேளாண் இயந்திரங்களுக்கான தகவல் மையத்தில், 26 குழுக்களாக மொத்தம் 515 படித்த இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திட்ட விழிப்புணர்வு முகாம்கள்

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் மற்றும் மழைநீர் சேகரிப்புத் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளுக்கு, வேளாண் அறிவியல் நிலையத்துடன் இணைந்து வேளாண்மைப் பொறியியல் துறையால் நடத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 1860 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைப் பொறியியல் தொடர்பான அரசுத் திட்டங்களின் சிறப்பம்சங்களை விவசாயிகளுக்கு எளிதில் கொண்டு செல்லும் வகையில், நடப்பாண்டில் தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வேளாண் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 13,517 இளங்கலை மாணாக்கர்களுக்கும், 1,619 முதுகலை மாணாக்கர்களுக்கும், 704 முனைவர் மாணவர்களுக்கும், 668 வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்பு மாணாக்கர்களுக்கும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளில் கல்வியை சிறப்பாக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு வழங்கிய 7.5% மாணாக்கர் இடஒதுக்கீட்டின் கீழ் இதுவரை 1,368 மாணாக்கர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.

கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.4,000 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகளும் ஒரு தோட்டக்கலைக் கல்லூரியும் 2021ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2021ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ள தமிழ் வழி கல்வி திட்டத்தின் கீழ் 274 மாணாக்கர்கள் தமிழ் வழி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை படிப்பு பயின்று வருகின்றனர்.

2021ஆம் ஆண்டில், திருச்சி மாவட்டம் குமுளூரில் உள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஈராண்டு வேளாண் பொறியியல் பட்டயப் படிப்பிற்காக பண்ணை இயந்திரமயமாக்கலில் மனித வள மேம்பாட்டுக்கான நிதிச் செலவு ரூ.100 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் தங்களது படிப்பின் ஒரு பகுதியை வெளி நாடுகளில் சென்று பயிலும் இரட்டை கல்வித்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 28 இளங்கலை, 2 முதுகலை, 3 முனைவர் மாணாக்கர்கள் வெளி நாடுகளில் மேற்படிப்பினை பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து வேளாண்மை உறுப்புக் கல்லூரிகளுக்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொண்ட 698 மாணாக்கர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இளங்கலை மாணாக்கர்களின் பட்டறிவினை உயர்த்திடும் நோக்கில் ஒரு மாணவர்-ஒரு வேளாண் குடும்பம் திட்டம் தொடங்கப்பட்டு 2,395 முதலாமாண்டு இளங்கலை மாணாக்கர்கள் வேளாண் குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

வேளாண் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த நான்கு ஆண்டுகளில், 60 புதிய பயிர் வகைகளையும், 14 தொழில்நுட்பங்களையும் மற்றும் 11 பண்ணைக் கருவிகளையும் வெளியிட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் 2021ஆம் ஆண்டில் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டது.

இயற்கை வேளாண்மை ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டு முதற்கட்டமாக ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறை நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளத்தில் உள்ள வ. உ. சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் குட்டை பனை இரகங்களின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் வளர்ச்சிக்காக 2023ஆம் ஆண்டில் ரூ.1,500 இலட்சம் ஒதுக்கப்பட்டு புதிய பனை ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கிள்ளிகுளம் வ. உ. சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய வாழை ஆராய்ச்சி நிலையம் 2023ஆம் ஆண்டில் ரூ.1,500 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரிப் பயிர்களில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக 2021ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையில் தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம், இயற்கை வளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்களை கணினிமயமாக்க 2021இல் ரூ.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பழ உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடைப் பின்சார் சேதங்களை குறைப்பதற்கும் நானோ தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் டிஜிட்டல் வேளாண்மையை ஊக்குவிக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகவும் 2021ஆம் ஆண்டில், ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வேளாண்மை வளர்ச்சி மண்டலத்தின் கீழ் தமிழ்நாட்டில் களர் மற்றும் உவர் நிலங்களுக்கு ஏற்ற பயிர் இரகங்களைக் கண்டறிந்து, மேம்படுத்தப்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்காக 2022ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

காவிரிப் படுகை மண்டலத்தில் சிக்கனமாக நீர் உபயோகித்தல் மற்றும் சிறந்த பயிர் சுழற்சிகளின் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த 2022-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படாத சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்குதல் மற்றும் பரவலாக்கும் திட்டத்தினை செயல்படுத்த 2024-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.292.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நுண்ணுயிர் தொழில்நுட்பங்கள் மற்றும் கரிம வேளாண் உத்திகளைப் பயன்படுத்தி மண்வளத்தை மேம்படையச் செய்வதற்காக 2024ஆம் ஆண்டில் ரூ.328.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயாளிக்கு ஏற்ற, சத்துக்கள் செறிவூட்டப்பட்ட மற்றும் நேரடி நெல்விதைப்புக்கு ஏற்ற நெல் இரகங்களை உருவாக்குவதற்காக 2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.157.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலர் சாகுபடியாளர்களின் வருமானத்தை மேம்படுத்த நிலசம்பங்கி, செவ்வந்தி மற்றும் ரோஜா பயிர்களில் புதிய வகை இரகங்களை உருவாக்குவதற்காக 2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.61.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காய்கறி மற்றும் தோட்டக்கலைப்பயிர்களில் ட்ரோன் மூலம் இடுபொருட்களை தெளிக்கும் தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்காக 2024 -ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.138.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு மற்றும் வெங்காயம் சாகுபடியில் இயந்திரமயமாக்கல் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி பண்ணைகளில் பண்ணை இயந்திரங்களின் வாடகை மையம் நிறுவுவதற்காக 2024-ஆம் ஆண்டில் ரூ.188.32 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண் விரிவாக்கம்

உழவர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் பல்கலைக்கழக பயிற்சி மையங்களை மேம்படுத்திட ரூ.50 இலட்சம் 2021 இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் தொழில்நுட்ப இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களை மறுசீரமைக்க 2021-ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மை அறிவியல் நிலையங்களில் ஒற்றை சாளர விற்பனை மையங்களை நிறுவுவதற்கு 2021ஆம் ஆண்டில், ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆளில்லா வானூர்திக் கழகத்தின் (UAVC) சேவையைப் பயன்படுத்தி, வேளாண்மை அறிவியல் நிலையங்களில் வேளாண் தொழில்நுட்ப முகமை (ATMA) மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு நானோ தயாரிப்புகளை பிரபலப்படுத்துதல் மற்றும் செயல்விளக்கம் செய்தல் ஆகிய பணிகள் 2021ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) ஊக்குவிக்கவும், சிறு மற்றும் குறுவிவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை மேம்படுத்த ஒரு துறை ஒரு உழவர் உற்பத்தியாளர் அமைப்பு தத்தெடுப்புத் திட்டம் தொடங்கப்பட்டு இதுவரை 112 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

வேளாண் விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துவதற்காக, மண்டல அளவில் 389 வேளாண் விஞ்ஞானிகள் நியமிக்கப்பட்டு தென்னை வாடல் நோய், தென்னை ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ, மரவள்ளி மாவுப்பூச்சி, மக்காச்சோள படைப்புழு தாக்கம் உள்ளிட்ட பல்வேறு மதிப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் கோயம்புத்தூரில் மாநில அளவிலான உழவர் தினவிழா மற்றும் கண்காட்சி 26.09.2024 முதல் 29.09.2024 வரை நடத்தப்பட்டது. வேளாண் கண்காட்சியினை உழவர்கள், வேளாண் தொழில்முனைவோர், மாணாக்கர்கள் உட்பட 32,000-க்கும் மேற்பட்டோர் கண்டு பயன்பெற்றனர்.

வேளாண் வணிக மேம்பாட்டு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வேளாண் வணிகத்தில் மாணாக்கர்கள் தொழில்முனைவோராக ஊக்குவிப்பதற்காக 2021ஆம் ஆண்டில், ரூ.130 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளில் மாணாக்கர்கள் தொழில்முனைவோர்களை உருவாக்க 89 தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுப் பாடங்கள் தொடங்கப்பட்டு இதுவரை 63 மாணாக்கர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் .

திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் 57 பட்டய / சான்றிதழ் படிப்புகள் மூலம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கற்றல் திட்டத்தின் வாயிலாக 2,383 பல்வேறு துறைகளைச் சார்ந்த பங்குதாரர்களும், உழவர்களும், தொழில்முனைவோர்களும் வேளாண்மையில் பட்டயப் பட்டம் பெற்றுள்ளனர்.

பாதுகாக்கப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள், தோட்டக்கலை பயிர்களில் ஹைட்ரோபோனிக்ஸ், ஆளில்லா வானூர்தி தொழில்நுட்பம், ஸ்மார்ட் வேளாண்மை போன்ற பட்டயப் படிப்புகளும், கரும்பு சாகுபடி, அலங்கார தோட்டம் அமைத்தல், தோட்டக்கலை நாற்றங்கால் நுட்பங்கள், காளான் வளர்ப்பு, அங்கக வேளாண்மை போன்ற சான்றிதழ் படிப்புகளும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கற்றல் முறையில் புதிதாக கடந்தாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும்மேம்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வைப்பு நிதியாக ரூ.100 கோடி 2023ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பனை சாகுபடி செய்யும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, பனைமரம் பற்றிய புதுமையான ஆராய்ச்சி மற்றும் மதிப்பு கூட்டல் திட்டத்திற்காக தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளத்தில் உள்ள வ. உ. சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 2021ஆம் ஆண்டில், ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட புதிய இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக 2021ஆம் ஆண்டில், ரூ.557 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் தரமான விதை உற்பத்தியை மேம்படுத்த 2021ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகளைக் கண்டறிந்து டிஜிட்டல் மயமாக்குவதற்காக 2023ஆம் ஆண்டில், ரூபாய் 300 இலட்சம் நிதி பூச்சி அருங்காட்சியகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் சிறப்பு வகைத் தோட்டங்களை உருவாக்குதல், பலப்படுத்துதல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக 2023ஆம் ஆண்டில், ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தரவரிசை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2023ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) பட்டியலில் இரண்டாவது சிறந்த மாநில வேளாண் பல்கலைக்கழகமாகவும், இந்தியாவில் ஐந்தாவது சிறந்த நிறுவனமாகவும் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2023ஆம் ஆண்டிற்கான தொழில்துறை பயன்பாட்டில் புதுமைகளைப் புகுத்தியமைக்காக உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் (WURI) 51-100 இடத்திற்குள் முன்னேறியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2024ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) பட்டியலில் இரண்டாவது சிறந்த மாநில வேளாண் பல்கலைக்கழகமாகவும், இந்தியாவில் ஆறாவது சிறந்த நிறுவனமாகவும் தரவரிசைபடுத்தப்பட்டுள்ளது.

2023 மற்றும் 2024ஆம் ஆண்டு, இந்தியா டுடே (India Today) எம்.டி.ஆர்.ஏ வின் கல்வி, ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு, தலைமைத்துவ மேம்பாடு, தொழில் முன்னேற்றம் மற்றும் வேலைவாய்ப்பு குறித்த ஆய்வின்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் பல்கலைக்கழகங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2024இல் புகழ்பெற்ற 'கியூ எஸ் வேர்ல்ட் ராங்கிங் சிஸ்டம்' (QS World University Ranking) பட்டியலிடப்பட்ட தரவரிசையில் ஆசியப் பல்கலைக்கழகங்களில் ஒட்டுமொத்த தரவரிசைப் பட்டியலில் 301-350 இடத்தையும் தெற்கு ஆசியப் பல்கலைக்கழகங்களில் 73 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2024 இல், புகழ் பெற்ற டைம்ஸ் உயர் கல்வி (Times Higher Education) தரவரிசை உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் ஆசியப் பல்கலைக்கழகங்களில் 601+ மற்றும் உலகப் பல்கலைக்கழகங்களில் மத்தியில் 1,501 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் 2024ஆம் ஆண்டிற்கான தொழில்முனைவோர் புதுமைக்கான உலக பல்கலைக்கழக தரவரிசையில் (WURI) 67 ஆவது இடத்தையும், புதுமைக்கான உலக பல்கலைக்கழக தரவரிசையில் 170 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

விருதுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2021 ஆம் ஆண்டில் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளில் சிறந்து விளங்கியமைக்காக புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால், புது தில்லியில் "சர்தார் படேல் சிறந்த கல்வி நிறுவன விருது" வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2021 -ஆம் ஆண்டில் புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் "பசுமை மற்றும் தூய்மையான வளாக விருது" வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு, புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் தோட்டக்கலை மற்றும் வனத்துறைக்கான மூதறிவியல் பிரிவில் அதிக எண்ணிக்கையில் கல்வி உதவித்தொகை விருதினை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2021ஆம் ஆண்டில் புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலால் வழங்கப்பட்ட வேளாண் பொறியியலில் மூதறிவியல் கல்வி உதவித்தொகை விருதினைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2021ஆம் ஆண்டில், அகில இந்திய வேளாண்மை மாணவர் சங்கத்தால் ஆண்டுதோறும் 6,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வி அளித்தமைக்காகவும்,

மாநிலத்தின் உணவுதானிய உற்பத்தியை அதிகரிக்க 850 இரகங்கள் மற்றும் 1,500 தொழில்நுட்பங்களை உருவாக்கியதற்காகவும் "சிறந்த பல்கலைக்கழக நிறுவன விருது" வழங்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பினால் (FICCI), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு "ஆண்டின் சிறந்த பல்கலைக்கழக விருது" வழங்கப்பட்டுள்ளது.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2022ஆம் ஆண்டில் இந்திய அரசு – தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கான திட்டத்தை (MIDH) வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக "சிறந்த செயல்திறன் கொண்ட பல்கலைக்கழக விருது" வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2022ஆம் ஆண்டிற்கான 'வேளாண் துறையில் நீர் பயன்பாட்டுத்திறனில் சிறந்து விளங்கியதற்காக "TERI – IWA – UNDP நீர் நிலைத்தன்மை விருது" வழங்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2022ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஒரு குழு ஒரே இடத்தில் 4 மணி நேரத்தில் 6,03,009 மரக்கன்றுகளை வெற்றிகரமாக நட்டு முடித்தமைக்காக "எலைட் உலக சாதனை" புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

2023ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மக்காச்சோள படைப் புழுவுக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்காகவும், கந்தகம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் மீதான மண் வளத்தை வரைபடமாக்குதல் போன்ற சிறந்த ஆராய்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டு "SKOCH ஆர்டர் ஆஃப் மெரிட் விருது" வழங்கப்பட்டது.

2023 –ஆம் ஆண்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்முனைவோர் கல்வியை ஊக்குவித்தமைக்காக "சிறந்த தென்னிந்திய கல்வி நிறுவனம் விருது", குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வர்த்தக அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விருதுநகர் மாவட்டத்தில் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலையம், 2023ஆம் ஆண்டில் அதிக கட்டுரைகளை வெளியிட்டதற்காகவும், அதிகமான உழவர்களை தரவு தரத்தில் கொண்டிருப்பதற்காகவும், அதிக அளவு விதைகளை விதை மையம் வாயிலாக விநியோகம் செய்ததற்காகவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வேளாண் ஆராய்ச்சித் திட்டங்களை (AICRP) செயல்படுத்துவதில் இப்பல்கலைக்கழகம் இந்திய அளவில் முன்னோடியாக திகழ்கிறது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் "அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டங்களுக்கான 6 விருதுகளை" இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், புதுமையான நீர் சேகரிப்பு பொறியியல் நடைமுறைகள், வேளாண்மை நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் நீர் விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்பாடு செய்ததற்காக 2023 – ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் விருதில் சிறந்த நிறுவனம் (பள்ளி அல்லது கல்லூரி தவிர) பிரிவில் முதல் பரிசை வென்றுள்ளது. புதுமையான திறன் மேம்பாட்டு முன்முயற்சிக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2024ஆம் ஆண்டிற்கான "எகனாமிக் டைம்ஸ் எஜுகேஷன் எக்ஸலன்ஸ் விருது" வழங்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் சிறந்த மைய விருது (முதல் இடம்) கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை

விதைச் சான்றளிப்பு:

கடந்த நான்கு ஆண்டுகளில், விதைப்பண்ணைகள் 2,78,375 ஹெக்டேர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவுசெய்யப்பட்டு 5,37,662 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

விதை ஆய்வு :

கடந்த நான்கு ஆண்டுகளில் விதை விற்பனை மையங்களில் 3,68,647 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 3,86,365 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுகளின்போது, தரக்குறைவான விதை மற்றும் விதை விதிகளை மீறிய செயல்கள் கண்டறியப்பட்டு 8,801 மெட்ரிக் டன் விதைகளுக்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

விதைப் பரிசோதனை

கடந்த நான்கு ஆண்டுகளில், 34 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் 4,59,243 விதை மாதிரிகளின் தரங்கள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டது.

உயிர்மச் சான்றளிப்பு

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட ஒரு சான்றிதழ் அமைப்பாகும். இத்துறையில் உயிர்ம பண்ணையம் செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம் (NPOP) மற்றும் பங்களிப்பு உத்திரவாதத் திட்டங்களின் (PGS) கீழ் விவசாயிகளை பதிவுசெய்து வாய்ப்புச் சான்றிதழ் வழங்குகிறது.

தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம் (NPOP)

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் கீழ், 77,395 விவசாயிகளின் 3,67,335 ஏக்கர் பரப்பு பதிவுசெய்யப்பட்டு வாய்ப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பங்களிப்பு உத்திரவாதத் திட்டம் (PGS)

கடந்த மூன்று ஆண்டுகளில் பங்களிப்பு உத்திரவாதத் திட்டத்தின் கீழ் 28,591 விவசாயிகளின் 38,548 ஏக்கர் பரப்பு பதிவுசெய்யப்பட்டு வாய்ப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

I. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் "நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டம் – 2.0 (WDC – PMKSY 2.0) ஒன்றிய மாநில அரசின் பங்களிப்போடு (60:40) கடந்த 2021–2022 முதல் பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு

மாவட்டங்களில் உள்ள 275 நீர்வடிப்பகுதிகளில் 1.30 இலட்சம் எக்டர் பரப்பில் ரூ.286.73 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-2022 முதல் இது வரை ரூ.268.99 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1,20,477 விவசாயிகள் நேரடியாகவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 269 கிராமங்களின் மக்கள் அனைவரும் பயனடைந்துள்ளனர்.

II. சுனை நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

2023-2024ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பிரதம மந்திரி நீர்வடிப்பகுதி மேம்பாடு 2.0 திட்டத்தின் கீழ், ரூ.14 கோடி மதிப்பிலான சுனை நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்த ஒப்பளிக்கப்பட்டதில் இதுவரை ரூ.12.405 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள 8 கிராம மக்கள் அனைவரும் பயனடைந்துள்ளனர்.

தன்னிறைவு

அரசின் பொருளாதாரமும், தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும்.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்







வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை



திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள்
மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்



சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், 9,46,265 பயனாளிகளுக்கு புதிய ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டு பயன்...

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 5,37,505 பயனாளிகளுக்கு ரூ.670.98 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டு பயன்...

இணையவழிப் பட்டா மாறுதல்கள் 72,72,236 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு பயன்...

10,26,734 இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு பயன்...

சமுகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வுதியம் ரூ.1,200 ஆக உயர்வு...

வருவாய்

1. சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் தகுதியுள்ள 9,46,270 பயனாளிகளுக்கு புதிதாக ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்று வரும் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக 01.01.2023 முதல் அரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இதர ஓய்வூதியத் திட்டங்களின் (மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டங்கள் தவிர்த்து) கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியமானது 01.08.2023 முதல் ரூ.1,000/-த்திலிருந்து ரூ.1,200/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி, 1,74,073 நபர்கள் கூடுதலாக பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 07.05.2021 முதல் 25.04.2025 வரை 5,79,758 பயனாளிகளுக்கு பல்வேறுத் திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ. 719.84கோடி உதவித்தொகைவழங்கப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புதிட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் ஆகஸ்ட் 2023 முதல் ரூ. 1,000/-த்திலிருந்து ரூ.1,200/-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

இணையவழி பட்டா மாறுதல்

நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, 'தமிழ்நிலம்' எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணைய வழி பட்டா மாறுதல் திட்டம் 2014 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 07.05.2021 முதல் 25.04.2025 வரையான காலத்தில் 1,11,97,466 உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல்கள் (கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில்) செய்யப்பட்டுள்ளன. தள்ளுபடி விழுக்காடு முந்தைய ஆண்டுகளில் 31% என இருந்ததை தற்போது 17% என குறைக்கப்பட்டுள்ளது.

புல எல்லை அளவீட்டிற்கான இணையவழிச் சேவை :

புல எல்லைகளை அளந்து அத்துக்காட்டக் கோரும் திட்டத்தில் இருந்த பல்வேறு குறைபாடுகள் மற்றும் தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதி 2023-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. புல எல்லைகளை அத்துக்காட்டுவதற்கான பணித்தொடர் முழுமையாக கணினிப்படுத்தப்பட்டு இணையவழிப்படுத்தப்பட்டுள்ளது. 31.03.2025 வரை பெறப்பட்ட 2,57,239 மனுக்களில் 1,81,324 மனுக்களுக்கான புல எல்லைகள் அளந்து அத்துகாட்டப்பட்டுள்ளது.

இணையவழி நத்தம் பட்டா மாறுதல்:

2023இல் நத்தம் பட்டா விண்ணப்பம் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 4 ஆண்டுகளில் 5,23,399 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு 3,80,466 நத்தம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகளை உட்பிரிவு செய்வதற்கான இணையவழிச் சேவை:

18.01.2023இல் தமிழ் நிலம் மென்பொருள், அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகளை ஒரே புலத்தணிக்கை வாயிலாக உட்பிரிவு செய்து கடந்த 4 ஆண்டுகளில் 7,618 ஒட்டுமொத்த உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தானியங்கி முறையில் நிலஆவண மாற்றம்

நிலம் தொடர்பான சொத்துக்களின் பத்திரப்பதிவு குறித்த விவரங்களை இணைய வழியே "தமிழ்நிலம்" மென்பொருளுக்கு அனுப்பி பட்டா மாற்ற நடவடிக்கைகளை தொடங்கும் பொருட்டு இணையம் சார்ந்த "தமிழ்நிலம்" மென்பொருள், பத்திரப்பதிவுத்துறையின் இணையம் சார்ந்த "STAR 2.0" மென்பொருளுடன் 2018-ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்டது. உட்பிரிவு செய்ய வேண்டிய தேவை இல்லாத நில உரிமை மாற்றங்களை தானியங்கியாக நில ஆவணங்களில் மேற்கொள்ள தானியங்கி பட்டா மாறுதல் முறை 2021-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பத்திரப்பதிவுத்துறையில் நிலப்பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்பட்டவுடன் தானியங்கியான நில உரிமை மாற்றத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதால், இவ்வகையான பட்டா மாற்றங்களுக்காக மனுதாரர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனியே மனு செய்ய வேண்டிய நிலை இனி ஏற்படாது.

பொதுமக்கள் கிராம வரைபடங்களை https://tnlandsurvey.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இலவச வீட்டுமனைப் பட்டா

வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நத்தம் நிலங்கள் இல்லாத சூழ்நிலையில் அரசுப் புறம்போக்கு நிலங்களை நத்தமாக வகைப்படுத்தி பட்டா வழங்கப்படுகிறது.

பெண்களுக்கு அதிகாரமளிக்க கடந்த 4 ஆண்டுகளில் 10,26,734 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் குறிப்பாக ஆதிதிராவிடர்/பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டத்தின் கீழ் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல், சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கில் குடியிருந்துவரும் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல் மற்றும் நகரளவை திட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டா வழங்குதல் என மொத்தம் 10,26,734 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இருளர், நரிக்குறவர்கள் போன்ற விளிம்புநிலை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



சிறப்பு வரன்முறை திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம்

சென்னை மற்றும் சூழ்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக விரிவான கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 29,187 ஆக்கிரமிப்புகளும், பிற மாவட்டங்களிலுள்ள நகப்புறப்பகுதிகளில் 57,084 ஆக்கிரமிப்புகளும் கண்டறியப்பட்டன. (மொத்தம் 86,271)

சென்னை மற்றும் அதன் சூழ்பகுதிகள், மாவட்ட தலைமையிடங்கள்/ மாநகராட்சிகள்/ நகராட்சிகள் எல்லையிலிருந்து 16கி.மீ./8கி.மீதொலைவிற்குட்பட்ட மாவட்ட தலைமையிடங்கள்/ மாநகராட்சிகள்/ நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இலவச வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு விதிக்கப்பட்ட தடையாணையை தளர்வு செய்யப்பட்டது. இத்திட்டமானது, 31.12.2025 வரை செயல்படுத்தப்படும்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 21.02.2025இல் தெரிவித்துள்ளவாறு மாவட்ட அளவிலான குழு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி, சென்னை மற்றும் சூழ்பகுதிகளில் 29,187 ஆக்கிரமிப்புகளில் 3,055 பட்டாக்களும், பிற மாவட்டங்களின் நகர்ப்புறப்பகுதிகளில் 57,084 ஆக்கிரமிப்புகளில் 13,174 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்புகள் வருவாய் நிர்வாகம்

தஞ்சாவூர், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை வருவாய் வட்டங்களை சீரமைத்து திருவோணத்தை தலைமையிடமாகக் கொண்டு திருவோணம் வருவாய் வட்டம் உருவாக்கம்.

கள்ளக்குறிச்சி சங்கராபுரம் மற்றும் திருக்கோவிலூர் வருவாய் வட்டங்களை சீரமைத்து வாணாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வாணாபுரம் வட்டம் உருவாக்கம்.

சென்னை அயனாவரம் வருவாய் வட்டம் சீரமைக்கப்பட்டு கொளத்தூரை தலைமையிடமாக கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டது.

ரூ.10 கோடியில் 114 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிர்வாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு ரூ.12.24 கோடி மதிப்பீட்டில் 136 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, முதற்கட்டமாக 51 வாகனங்கள் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) மற்றும் வட்டாட்சியர் (பொது) அவர்களின் பயன்பாட்டிற்கு கொள்முதல் செய்ய ரூ.4.57 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3 கோட்டாட்சியர் அலுவலகம், 5 வட்டாட்சியர் அலுவலகம் & 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டடங்களுக்கு ரூ. 46.76 கோடி நிர்வாக அனுமதியும் ரூ. 14.02 கோடி நிதி அனுமதி வழங்கி கட்டடங்களுக்கான ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட ரூ.70.57 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்ட ரூ.7.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் மேற்கண்டகட்டடங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டரங்கம் மற்றும் கூடுதல் அலுவலக கட்டடங்கள் கட்ட ரூ.12.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஐந்து வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் எட்டு வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.25.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இதில் 4 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் 7 வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

ரூ.48.70 கோடி 10 வட்டாட்சியர் அலுவலக கட்டடங்களை அனுமதித்து 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் திறக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெறுகின்றன.

ரூ. 15.25 கோடி 50 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்கான கட்டடங்களுக்குஅனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 46 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் நடைபெற்றுவருகின்றன.

3 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், 5 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் 25வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன்கூடியகுடியிருப்பு கட்டடம் கட்ட மொத்தம் ரூ.46.76 கோடி நிர்வாக அனுமதியும் தற்போது 30 விழுக்காடு ரூ.14.02 கோடி நிதி அனுமதியும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டடங்கள்கட்ட ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் மற்றும் கோயம்புத்தூர், நாமக்கல், திருவாரூர், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட நில அளவை அலுவலகங்கள் ஆகியவற்றில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.65.09 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் குறுவட்ட அளவர்களை எளிதாக அணுகுவதற்கும் குறுவட்ட அளவர்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பினை அளிக்கும் பொருட்டு கடந்த 4 ஆண்டுகளில் குறுவட்ட அளவர்களின் பயன்பாட்டிற்கு 65 அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

புல எல்லைகளை (F-Line) அளந்து காட்டுவதற்கு இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கான சேவையை 20.11.2023 முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்கள் வேளாண்மைத்துறை, தொழில் மற்றும் வர்த்தகத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம், மின்னணு நீதிமன்றங்கள், வருவாய் நிர்வாகம், பதிவுத்துறை, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, வேளாண் கணக்கெடுப்பு துறை, உணவுப்பொருள் வழங்கல் துறை, இந்து சமய அறநிலையத்துறை, சர்க்கரை துறை மற்றும் நீலகிரி மாவட்ட நிர்வாகம் ஆகிய துறைகளுக்கு இணைய வழியே பகிரப்பட்டுள்ளன.

மாநில ஆவண காப்பகத்தில் உள்ள 20 மாவட்டங்களுக்கான UDR புலப்படங்கள் ஒளிபிம்ப நகல் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் நத்தம் புலப்படம் நத்தம் அடங்கல், நத்தம் சிட்டா ஆகியவற்றை ஒளிபிம்ப நகல் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்ட பழமையான நில ஆவணங்களை பராமரிக்க இணையம் சார்ந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களின் ஊரக கிராமங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, நில ஆவணங்களில் உள்ள பிழைகளை நீக்கக் கோரிய 46,387 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புற நில ஆவணங்களில் பிழைகள் 7,02,173 தீர்வு செய்யப்பட்டுள்ளன.

அனைத்து பிளாக் வரை படங்களும்(TSLR Sketchs) கணினிப்படுத்தப்பட்டு, அவற்றை இணைய வழிச்சேவை வாயிலாக பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் புவியியல் தகவல் அமைப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

152 வகையீட்டு பூகோள நிலைகலன் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு நில அளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

"Tamil Nilam Geo Info" எனும் அலைபேசிச் செயலி 09.01.2025இல் அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

257 வட்டங்களின் நத்தம் நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு இணையவழிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நாமக்கல், நாரைக்கிணறு, மத்துரூட்டி மற்றும் மங்களாபுரம் மலைக் கிராமங்களில் அசல் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு 2023-24ஆம் ஆண்டு 1500 குடும்பங்களில் 862 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடலூர், விருத்தாசலம் வட்டம், நெய்வேலி லிக்னைட் நிறுவனத்திற்காக நில எடுப்பு செய்ததில் மறு குடியமர்வு செய்யப்பட்ட விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் வசிக்கும் 3,543 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அக்கிராமங்களில் அசல் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு 2023-24-ஆம் ஆண்டில் 1,423 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர், திருவிடைமருதூர் வட்டம், திருப்புவனம் கிராமத்தில் அரசு-புறம்போக்கு என பதிவுசெய்யப்பட்டுள்ள நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் மக்கள் பயன்பெறும் வகையில் நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு 2023-24 ஆம் ஆண்டில் 191 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் மற்றும் நகரம், வார்டு A முதல் E வரையிலுள்ள 'சர்க்கார்-புறம்போக்கு நத்தம்' புலங்களில் 70 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வரை4,191 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புஞ்சை புகழூர் வடக்கு மற்றும் நஞ்சை புகழூர் கிராமங்களில் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 242 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிவகங்கை, திருப்பத்தூர் மற்றும் காரைக்குடி வட்டங்களிலுள்ள 3 கிராமங்களில் மனை வாடகை (Ground Rent) விதிக்கப்பட்டு பட்டா வழங்கப்படாமல் அரசு-புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் 15,000 மக்கள் பயன்பெறும் வகையில் நிலவரித்திட்டப் பணி தொடங்கப்பட்டு தற்போது வரை 7,746 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருப்பத்தூர், வெங்களாபுரம் கிராமத்தில் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது வரை 170 பட்டாக்கள் வழங்க தயார் நிலையில் உள்ளன.

திட்டங்கள்

நில உரிமை மாற்றம்

அரசு நிலங்களை பொதுப் பயன்பாட்டிற்காகவும், அவற்றின் திட்டங்களுக்காகவும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சில நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம்போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. நில உரிமை மாற்றத்தின்போது வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் சந்தை நிலமதிப்பு வகுலுடன், நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

பொது நலன் கருதி, குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்காக அரசு நிலங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அவ்வாறே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தும் திட்டத்திற்காக அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம்செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசு நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கெனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது, அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (TANSIDCO)

தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும் இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பான நிலப்பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காகவும், தொழில்முனைவோருக்கு பட்டா வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி புஞ்சை என வகைபாடு மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது மற்றும் உரிய நில வருவாய் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

கடந்த 4 ஆண்டுகளில் 261 இனங்களில் 3254 ஏக்கர் அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்ய அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன,

நிலக் குத்தகை

951 மொத்த குத்தகை இனங்களில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப்பட்ட 380 குத்தகை இனங்கள் பிரிக்கப்பட்டு, அதில் புதுப்பிக்கப்படாத 261 குத்தகை இனங்கள் ஆக்கிரமிப்புகளாக கருதி குத்தகை இரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 571 குத்தகை இனங்களில், நடப்புக் குத்தகையில் ரூ.60.56 கோடியும், நிலுவைக் குத்தகையில் ரூ.49.71 கோடியும் என மொத்தம் ரூ.110.27 கோடி கடந்த 4 ஆண்டுகளில் குத்தகை தொகையாக தனியர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது.

அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தும்பொருட்டு,அரசின் கூடுதல்தலைமைச்செயலாளர்/வருவாய்மற்றும்பேரிடர் மேலாண்மைத்துறை அவர்களின் தலைமையில் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், வரைவு புதிய நிலக் குத்தகை கொள்கை உருவாக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.அரசின் வருவாயை அதிகரிக்கவும், மாறிவரும் காலத்திற்கு ஏற்ப அரசு நிலத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக குத்தகை தொகையை நிர்ணயம் செய்வதற்கான புதிய நிலக் குத்தகை கணக்கீடு முறை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களை ஆக்கிரமிப்பின்றி காப்பது மற்றும் பராமரிப்பது வருவாய்த் துறையின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அரசின் இதர துறைகளான கட்டுப்பாட்டில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட சமந்தப்பட்ட துறை செயல்படும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசு நிலங்களில் ஆக்கிரமணங்கள் அகற்றுதல் தொடர்பான மனுக்களை விரைந்து தீர்வு காண வழிவகை செய்திட, வட்ட, கோட்ட (மேல்முறையீடு) மற்றும் மாவட்ட (சீராய்வு) குழுக்கள் உருவாக்கப்பட்டன. தற்போது, தற்போதைய மாநில அரசு பொறுப்பேற்றவுடன், இக்குழுக்களை மாற்றிஅமைத்து,புதிதாக,கோட்ட கண்காணிப்புகுழு(வருவாய்கோட்டாட்சியர்தலைமையிலும்), மாவட்ட கண்காணிப்பு குழு (மாவட்ட ஆட்சியர் தலைமையிலும்) மாநில வழிகாட்டும் குழு (அரசின் தலைமைச் செயலர் தலைமையிலும்), அமைத்து துரிதமான முறையில், அரசின் நீர்நிலை மற்றும் இதர புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை கண்டறிந்து, நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டது. இதுவரை 42108.54794 ஹெக்டர்ஸ் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றும் செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு 16675.3181 hectare நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் இதர அரசு புறம்போக்கு ஆக்கிரமிப்புகளில் உள்ள நிலங்கள்அகற்றப்பட்டன.

அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் நிதி

அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாப்பு நிதியாக, வழிகாட்டி நெறிமுறைகளுடன் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அடுத்த நிதியாண்டிலும் மேற்கண்ட அதே தொகை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும், (மாநகராட்சிகள் உட்பட), அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றவும், வேலியிட்டு, அவைகளை பாதுகாக்கவும், நிதி பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டது.

இச்சிறப்பு நிதி மூலம் இதுவரை, 729.83605 ஹெக்டர்ஸ் அரசு புறம்போக்கு நிலங்கள் மீட்கப்பட்டு வேலி அமைக்கப்பட்டுள்ளன. அரசு நிதியினை உபயோகித்து வேலி அமைக்கப்பட்ட மேற்படி நிலங்களின் தோராய நில மதிப்பு ரூ.1,363.23 கோடி ஆகும்.

நில மாற்றம்

கடந்த 4 ஆண்டுகளில் 188 இனங்களில் 1,320 ஏக்கர் அரசு நிலங்கள் நில மாற்றம் செய்ய அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன

நில எடுப்பு

கடந்த 4 ஆண்டுகளில் 14326 ஹெக்டேர் நிலங்களுக்கு இறுதி ஆணை வெளியிடப்பட்டு ரூ.20,325 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

(i) டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (DILRMP)

ஒன்றிய அரசின் திட்டமான "டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (DILRMP)" தமிழ்நாட்டில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

ஒரத்தநாடு, நில அளவை பயிற்சி மையத்தில் உட்கட்டமைப்புகள். ரூ.17.91 இலட்சத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ரூ.153.98 இலட்சம் செலவில் DILRMP பயிற்சி மையம் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள நில அளவை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில்(CSTAR) நிறுவப்பட்டுள்ளது.

ரூ.60 இலட்சம் செலவில் மண்டல நில அளவை பயிற்சி மையங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இணையம் சார்ந்த வருவாய் நீதிமன்ற மேலாண்மை அமைப்பினை செயல்படுத்தும் பொருட்டு 447 வருவாய்த்துறையின் அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் ரூ.339.52 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

பழமையான நில ஆவணங்களை ஒளிபிம்ப நகலெடுத்தல்

கையினால் தயாரிக்கப்பட்ட பழமையான ஆவணங்களை ஒளிபிம்ப நகலெடுத்து பராமரிக்கும் பணி சென்னையில் உள்ள ஆவணக் காப்பகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம் மற்றும் மாவட்ட நில அளவை அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் 48.22 இலட்சம் தாட்கள் ஒளிபிம்ப நகல் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

(ii) நில அளவை / மறு நில அளவை

நடப்பு நேர இயக்கவியல் (RTK) வலையமைப்பின் அடிப்படையில் நிலஅளவைப்பணிகளை விரைவாகவும், சென்டிமீட்டர் அளவிற்குத் துல்லியமாகவும் மேற்கொள்ள ஏதுவாக, மாநிலம் முழுமையையும் முக்கோணங்களாக பிரித்து, 74 இடங்களில் தொடர்ந்தியங்கும் தொடர்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, அவை இவ்வியக்ககத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி ஆகிய நவீன நிலஅளவைக் கருவிகளைப் பயன்படுத்தி 'நடப்புநேர இயக்கவியல்' (Real Time Kinematic) தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மறுநிலஅளவைப்பணி கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இதுவரை முறையே 346.85 சதுர கிலோ மீட்டர், 212.25 சதுர கிலோ மீட்டர் மற்றும் 752.64 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு அளவை செய்யப்பட்டுள்ளது.

நகரளவை

வேலூர் ஆகிய நகரங்களில் நிறைவு பெற்று, கூடலூர் தவிர இதர நகரங்கள் இணைவழி சேவைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. பெரம்பலூர் நகரத்தில் நகரளவைப் பணி நிறைவு பெற்றுள்ளது. தற்பொழுது இந்த ஆவணங்கள் கைப்பிரதி ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு கூராய்வு செய்யப்பட்டு வருகின்றன. வேலூர் மாநகராட்சியில் நகர அளவைப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவியைப் பயன்படுத்தி நீர்நிலைகளை நவீன நில அளவை செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் வரையில் 14,116 நீர்நிலைகளின் எல்லைகள் அளவை செய்யப்பட்டு, அவற்றில் 11,658 நீர்நிலைகளின் வரைபடங்கள், அரசுத் துறைகள் மற்றும் பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளும் பொருட்டு https://tngis.tn.gov.in/waterbodies/ எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணி

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் வருவாய் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலைக்கு மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கவும், மாவட்ட வருவாய் நிர்வாக பராமரிப்பிற்கென ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும் வருவாய் பின்தொடர் பணி நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப்பணியின் அனைத்து நிலைகளும் கணினிமயமாக்கப்பட்டு குடிமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி, கடந்த நான்காண்டுகளில் 6,66,564 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

01.03.2024-இன்படி சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப்பட்டா வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்ற விவரம்.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப்பட்டா பெறுவதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களை தீர்க்க மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 18 இதர உறுப்பினர்களைக் கொண்ட மாநில அளவிலான உயர்நிலை குழு அமைக்கப்பட்டது. மாநில அளவிலான உயர்நிலை குழுவின் அறிவுரைகளின்படி துறைத் தலைவர்கள் மற்றும் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் இணைந்து பணிகளை மேற்கொண்டதன் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மனை இடங்களில் 1166 பட்டாக்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனை இடங்களில் 1318 பட்டாக்கள் நகர நிலவரித்திட்டத்தின் கீழ் 53,768 பட்டாக்கள் ஒரு முறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் 450 பட்டாக்கள் மற்றும் 19,114 பட்டாக்கள், நகர நிலஅளவை ஆவணங்களில் தனியார் நிலங்கள் சர்க்கார் நஞ்சை/புஞ்சை என தவறாக பதிவாகியுள்ளதை சரி செய்து ரயத்துவாரி நஞ்சை/புஞ்சை என வகைபாடு மாற்றம் செய்யப்பட்டு 3253 பட்டாக்கள். ஆக மொத்தம் 25.04.2025 வரை 1,36,149 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் வழங்கப்படவேண்டிய வீட்டு மனைப் பட்டாக்களை பொது மக்களுக்கு விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(vii) நத்தம் நிலவரித்திட்டப் பணி

தூத்துக்குடி திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயல் கிராமத்தில் அரசு-புறம்போக்கு என பதிவுசெய்யப்பட்ட நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்து வரும் மக்கள் பயன்படும் வகையில் அந்நிலத்தை நத்தம் என வகைப்பாடு மாற்றம் செய்து நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு 2022-23 ஆம் ஆண்டில் 840 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடக்கு மேலூர், வேலுடையான்பட்டு மற்றும் வடக்குத்து கிராமங்களில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தால் நில எடுப்பில் பாதிக்கப்பட்ட 4,169 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்று நிலத்தில் நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது வரை 1,700 பட்டாக்கள் வழங்க தயார் நிலையில் உள்ளன.

மனித வள மேலாண்மை

வருவாய் நிர்வாகம்

மாவட்ட வருவாய் அலுவலர் பதவி உயர்வு

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு 69 துணை ஆட்சியர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2024ஆம் ஆண்டு மாவட்ட வருவாய் அலுவலர் பதவிக்கான பட்டியலில் 47 துணை ஆட்சியர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர்

கடந்த 4 ஆண்டுகளில் 227 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் நிலையில் பதவி உயர்வு வழங்கி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2024-2025ஆம் ஆண்டு தேர்ந்தோர் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டு 98 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 40 துணை ஆட்சியர்களுக்கு பிப்ரவரி, 2025இல் பணி நியமனம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

சிறப்பு வட்டாட்சியர் (ச.பா.தி)

2022-2023 ஆம் ஆண்டு அறிவிப்பின் படி சென்னை மாவட்டத்தில் மாதவரம் வட்டம், கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி வட்டம், கருர் மாவட்டத்தில் கடவூர் வட்டம் நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி வட்டம், ஈரோடு மாவட்டம் தாளவாடி வட்டம், தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் வட்டம் என எட்டு வட்டங்களில் புதிதாக 8 தனி வட்டாட்சியர் (ச.பா.தி) பணியிடங்கள் சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற மக்களுக்கு அரசின் திட்டங்கள் சென்றடைய தனி வட்டாட்சியர் (ச.பா.தி) பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதுநிலை வருவாய் ஆய்வாளர் / இளநிலை வருவாய் ஆய்வாளர்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொகுதி II-A பிரிவில் 2021-2022 ஆம் நிதியாண்டில் 183 நேரடி உதவியாளர் பணியிடங்களும் 2022-2023 -ம் நிதியாண்டில் 111 பணியிடங்களும் 2023-2024-ம் நிதியாண்டில் 124 நேரடி உதவியாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி-4 பிரிவில் (இளநிலை வருவாய் ஆய்வாளர்-577, சுருக்கெழுத்து தட்டச்சர் 26, தட்டச்சர்-485) பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராம நிர்வாக அலுவலர்கள்

274 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, காலியாக உள்ள 274 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கான மாவட்டங்களுக்கு இடையேயான ஒரு வழி / மனமொத்த இரு வழி மாறுதல்கள் இணையதளம் வாயிலாக மேற்கொள்ள புதியதொரு மென்பொருள் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட மாறுதல்களுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, 710 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஒரு வழி மாவட்ட மாறுதல் வழங்கியும், 166 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மனமொத்த இரு வழி மாவட்ட மாறுதல் வழங்கியும் இணையதளம் மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அலுவலக உதவியாளர்

கடந்த 4 ஆண்டுகளில் 564 அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்பிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்

முன்றாண்டுகளுக்கு உட்பட்ட 2020-2021 ஆம் ஆண்டுக்கான 2,748 கிராம உதவியாளர் காலிப்பணிடங்கள் அரசால் நிரப்பப்பட்டது.

முன்றாண்டுகளுக்கு மேற்பட்ட 2,299 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு ஆணைப் பிறப்பிக்கப்பட்டு, அதனை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற இனங்கள்

சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் பணிபுரியும் மாற்றுதிறனாளி கிராம உதவியாளர்களுக்கு ரூ.2500/- ஊர்திப்படி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை சார்ந்த பல்வேறு சான்றிதழ்களை மக்கள் எளிதில் பெற ஏதுவாக 27 வகையான சான்றிதழ்கள் தற்போது இணையவழி வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

வருவாய்த்துறை, அதன் செயல்திறனை மேம்படுத்தவும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் பொதுமக்களுக்கு சேவை வழங்கலை மேம்படுத்தவும், மின் அலுவலக முறையை செயல்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலை பெற்று வருகிறது. எனவே, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், கோட்ட அலுவலகங்கள் மற்றும் 45 வட்ட அலுவலகங்களில் TNEGA மூலம் 2,655 கணினிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

கடந்த 4 ஆண்டுகளில் 795 நில அளவர் பணியிடம், 301 வரைவாளர் பணியிடம், 1 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டனர் மற்றும் பல்வேறு பணியிடங்கள் மூலம் மொத்தம் 9 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டன.

2023-2024 மற்றும் 2024-2025 ஆகிய ஆண்டுகளுக்கு 785 நில அளவர், 277 வரைவாளர், 12 இளநிலை உதவியாளர், 01 தட்டச்சர் மற்றும் 04 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளின் காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 12 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் இத்துறையில் உதவி இயக்குநர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் கூடுதல் இயக்குநர் 2, இணை இயக்குநர் 4, துணை இயக்குநர் 6, உதவி இயக்குநர் 38 மற்றும் நிர்வாக அலுவலர் 6 காலியிடங்கள் நிரப்பப்பட்டன.

இத்துறையில் களப்பணியாளர்களுக்கு நில அளவைப்பணியில் உதவிகரமாக செயலாற்றும் பொருட்டு 707 பணியாளர்கள் வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் புல உதவியாளர்களாக (11 மாதங்களுக்கு) பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பயிற்சி

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு நிலஅளவைப் பயிற்சி நிலையத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு துறையைச் சார்ந்த 5,404 அலுவலர்களுக்குநிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நில அளவைத் துறையில் நவீனத் தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு வருவதை முன்னிட்டு, இத்துறையின் அலுவலர்களுக்கு நவீன நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படும் என 2022-2023 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றக் கூட்டத் தொடரில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, நில அளவைத் துறையைச் சேர்ந்த 63 அலுவலர்களுக்கு National Institute for Geo-informatics Science and Technology, Hyderabad - இலும் மற்றும் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலும், நவீன நில அளவைத் தொழில்நுட்பப் பயிற்சி (Training in modern survey methodologies) பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பொறியியலில் பட்டயம் மற்றும் கட்டுமானப் பொறியியலில் இளங்கலை பட்டம் பெற்ற நபர்கள் மற்றும் ஐடிஐ சான்றிதழ் பெற்றவர்களுக்கு நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கான மூன்று மாத கால நில அளவைப் பயிற்சி, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலுள்ள நிலஅளவைப் பயிற்சி நிலையம் மற்றும் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்திலுள்ள நிலஅளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றில் கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்டு, 1,097 நபர்களுக்கு நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 350 உரிமம் பெற்ற நில அளவர்கள் இணைய வழி பட்டா மாறுதல் பணியில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மற்றும் 457 நபர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் பலதரப்பட்ட நில அளவைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பேரிடர் மேலாண்மை

வானிலை முன்னறிவிப்புக்கான கட்டமைப்பை வலுப்படுத்துதல்

தமிழ்நாட்டில் நிகழ்நேர மழை அளவை கணக்கிட 1,400 தானியங்கி மழை மானிகளையும், 100 தானியங்கி வானிலை நிலையங்களையும் கொண்ட நிகழ்நேர தரவு கையகப்படுத்தல் அமைப்பு ரூ. 32.48 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வானிலையை மிகத்துல்லியமாககணிக்க 2 ரேடார்கள் அமைக்க ரூ.56.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் நிலஅதிர்வு உணர் திறனை மேம்படுத்துவதற்காக விழுப்புரம், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் புதிதாக நான்கு நில அதிர்வு உணர்விகளை நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின்னல் தாக்கத்தினை துல்லியமாக கணித்து முன்னெச்சரிக்கையினை விரைந்து வழங்க கூடுதலாக மூன்று மின்னல் உணர்விகளை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பேரிடர் பாதித்த பகுதிகளுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு, உபரகரணங்கள் மற்றும் தகவல்களை திரட்ட உதவும் வகையில் தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மை தரவுதளம் (State Emergency Management Database) அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கையை வழங்க புயல் சீற்ற மாதிரி (Storm Surge Model) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

TN-Alert செயலி பயனர் சார்ந்த கைபேசி செயலியாக உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி இருப்பிடம் சார்ந்த வானிலை தகவல்கள், பாதிக்கப்படக்கூடிய இடங்கள், நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு, மழை அளவு, புகார் பதிவு மற்றும் புகார் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம், பேரிடர் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் மழையினால் ஏற்படும் தெரு அளவிலான வெள்ளம் மற்றும் சுரங்கப்பாதைகளில் மழை நீர் தேங்கியுள்ள விவரம் போன்றவற்றை வழங்குகிறது.

TN-Smart இணையதளத்தை மேம்படுத்தவும், TN-Alert செயலியைஉருவாக்கவும், பல்துறை வல்லுநர்கள் கொண்டதொழில்நுட்பக்குழுஅமைக்கவும்ரூ.12.37 கோடி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

12 பல்துறை வல்லுநர்களை கொண்ட தொழில்நுட்ப குழு மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் செயல்பட்டு வருகிறது.

சென்னை வடிநிலப் பகுதிகளுக்கு, இணையவழியில் (Web based) நிகழ்நேர (Real time) வெள்ள முன்னறிவிப்பு மற்றும் ஏரிகளில் நீர்திறப்பு மேலாண்மைக்கான வழிகாட்டுதல்கள் வழங்க, ரூ.105.63 கோடி மதிப்பீட்டில் சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு அமைப்பு (Chennai Real Time Flood Forecasting System) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திறன் மேம்பாட்டுக்கான பயிற்சிகள்

பேரிடர் மீட்புப் படைகளுக்கு உதவுவதற்காக 5500 சமூக தன்னார்வலர்களுக்கு பல்வேறு பேரிடர்கள், மீட்பு நடவடிக்கை மற்றும் முதலுதவி பற்றிய அடிப்படை ஆப்தா மித்ரா பயிற்சி அளிக்கப்பட்டு தேவையான முதலுதவி, பேரிடர் மீட்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.



சமூக அளவிலான முதல் நிலை மீட்பாளர்களை உருவாக்கும் பொருட்டு, 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் 65,000 முதல்நிலை மீட்பாளர்க்குக்கு பயிற்சி மற்றும் தேவையான முதலுதவி பொருள்களும், உபகரணங்களும் ரூ.20.42 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் மொத்தம் 1,23,297 முதல் நிலை மீட்பாளர்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 2,626 பாம்பு பிடிப்பதில் பயிற்சி பெற்றவர்கள், 16,105 நீச்சல் வீரர்கள் மற்றும் 13,482 நபர்கள் மரம் வெட்டுவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள்.

மீனவர்களுக்கும், மீன்வளத்துறை அலுவலர்களுக்கும் பேரிடர் மீட்பு பயிற்சி அளிக்க ரூ.1.07 கோடி நிதி ஒதுக்கீடு.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் அமைந்துள்ள கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் 80 தன்னார்வலர்கள் கண்டறியப்பட்டு, 40 நபர்களுக்கு முதலுதவி பயிற்சி, 40 நபர்களுக்கு பேரிடர் மீட்பு பயிற்சி ஆக மொத்தம் 9680 தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.6.04 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளில் எளிதில் வெள்ள பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 500 குடியிருப்போர் நலச் சங்கங்களிலிருந்து 11,000 தன்னார்வலர்களைக் கண்டறிந்து பயிற்சி அளிக்க அரசால் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மூலம் ரூ.90 இலட்சம் செலவில் மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ள 2,302 அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 134 வீரர்களுக்கு பல்வேறு சிறப்பு முகமைகள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

முப்படைகள் மற்றும் பேரிடர் மேலாண்மை முகமைகளின் முயற்சிகளை ஒருங்கிணைக்கும் வகையில், தேசிய அளவிலான ஒருங்கிணைந்த கருத்தரங்கு மற்றும் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 18 மற்றும் 19 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் ஒருங்கிணைந்து நடத்தியது. இந்த கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்கள், ஒன்றிய பிரதேசங்கள் மற்றும் தேசிய அமைப்புகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் ஒன்றிணைந்து, சுனாமியால் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேளாங்கண்ணி மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் வானகிரி கிராமங்களில் சுனாமி ஏற்படும் நேர்வுகளில் தகவல் தொடர்பை உறுதி செய்யவும், சுனாமி ஆயத்த நிலையை மேம்படுத்தவும் 05.11.2024 அன்று சுனாமி ஒத்திகைப் பயிற்சி நடத்தப்பட்டது.

திறன் மேம்பாட்டுக்கான உபகரணங்கள்

வருவாய்த்துறையின், 14 கடலோர மாவட்டங்களில் 38 வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு 2 கிலோவாட் திறன் கொண்ட 38 மின்னாக்கிகள் ரூ.41 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அவசர செயல்பாட்டு மையங்களை வலுப்படுத்த, ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அதிவேக அச்சுப்பொறிகள் (Printers) வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் (TNDRF) திறன்களை மேம்படுத்துவதற்காக தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் ரூ.4.49 கோடி அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு கடந்த 4 ஆண்டுகளில் வரை தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக மொத்தம் ரூ.158.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

சென்னை பெருநகர காவல் துறைக்கு ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் நவீன தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில், மீட்பு பணிக்கான அத்தியாவசிய கருவிகள் வாங்குவதற்காக சென்னை மாநகர காவல் துறைக்கு ரூ.74.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30 மாவட்டங்களில் அனலாக் (Analogue) VHF ரிப்பீட்டர்களை, டிஜிட்டல் ரிப்பீட்டர்களாக ரூ.5.06 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தபட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மீட்பு வாகனங்கள், மரம் அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ.6.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான முன்னெச்சரிக்கைகள் வழங்கப்பட்ட விவரம்

பேரிடர் காலங்களில், புயல், வெள்ளம், பருவமழை மற்றும் இதர இடர்பாடுகள் குறித்த முன்னெச்சரிக்கை தகவலை மக்களின் பாதுகாப்பு கருதி, பொதுவான எச்சரிக்கை நடைமுறையின் (CAP – Common Alert Protocol) மூலம் 19.68 கோடி நபர்களின் செல்லிடப்பேசிகளுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது.

TN-Alert செயலி இருப்பிடம் சார்ந்த வானிலை தகவல்கள், ஆங்கிலம் மற்றும் தமிழில் வழங்குகிறது இந்த செயலியை ஆண்டிராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ் இயங்குதளங்களில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் 437 இடங்களில் கடைக்கோடி மக்களையும் வானிலைமுன்னெச்சரிக்கை சென்றடையும் வகையில் அபாய ஒலி மற்றும் நேரலை அல்லது பதிவுசெய்யப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பினை ஒலிபரப்பும் வசதி உள்ளது.

டிசம்பர் 2024 இல் ∴பெஞ்சல் புயலின்போது, மீனவர்கள், கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களுக்கு பதிவுசெய்யப்பட்ட மற்றும் நேரடி எச்சரிக்கை செய்திகள் முன்னெச்சரிக்கை அமைப்பு மூலம் மணிக்கு ஒருமுறை ஒளிபரப்பட்டது,

பேரிடர் காலங்களில், X, முகநூல், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்தி முன்னறிவிப்புகள், எச்சரிக்கைகள் மற்றும் வானிலை குறித்த தகவல்களை உடனடியாக பரப்புகிறது. 2024 வடகிழக்கு பருவமழையின்போது, பேரிடர் தொடர்பான 275 செய்திகள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன.

மீட்பு மற்றும் நிவாரணம்

பாதிப்பிற்குள்ளாகும் இடங்களிலிருந்து பொது மக்களை முன் கூட்டியே அழைத்து வந்து நிவாரண முகாம்களில் தங்க வைத்ததன் காரணமாக உயிர் சேதம் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

09.12.2022 அன்று இரவு மாமல்லபுரம் அருகே கரை கடந்த மாண்டஸ் புயலின்போது 3,771 குடும்பங்களைச் சார்ந்த 10,843 நபர்கள் 216 நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டனர். மிக்ஜாம் புயலின்போது பொதுமக்கள் பாதுகாப்பு கருதி 52,981 நபர்கள் முன்கூட்டியே 411 நிவாரண மையங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர்.

தென்மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை மற்றும் பெருவெள்ளத்தின்போது 24,273 நபர்கள், 114 நிவாரண மையங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர் .ஃபெஞ்சல் புயலின்போது 547 நிவாரண மையங்களில் 43,294 நபர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர்.

பேரிடர் மீட்பு மையங்கள் அமைக்கும் பணி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நம்பியார் நகர் பகுதியில் ரூ.6.35 கோடி மதிப்பீட்டில் பேரிடர் மீட்பு மையம் கட்டப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம், திருமைலாடி மற்றும் முதலைமேடு கிராமங்களில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் இரண்டு பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் 2 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்ட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ரூ.36 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர், மணலி மற்றும் தாம்பரம் பகுதிகளில் மண்டல மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் கட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு ஆலந்தூர் பகுதியில் பேரிடர் மீட்பு நிவாரணம் அமைக்க ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு, சேதமடைந்த குடிசை வீடுகளுக்கான நிவாரணத் தொகை

மிக்ஜாம் புயல், தென்மாவட்டங்களில் கனமழை மற்றும் பெருவெள்ளம், .ஃபெஞ்சல் புயலால் இறந்தவர்கள் குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட நிவாரணமாக ரூ.5 இலட்சமும், முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.10,000மும் வழங்கப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.25.64 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட கால்நடை இறப்பிற்க்கு ரூ.33.87 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக ஏற்பட்ட குடிசைகள் / வீடுகள் சேதத்திற்காக ரூ.56.73 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.16.34 கோடி செலவில் அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருள்கள் அடங்கிய நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.7.23 கோடி செலவில் பால் பவுடர் வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார நிவாரணம்

மயிலாடுதுறை மாவட்டத்தில், சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பு அடைந்த 1,61,647 குடும்பங்களுக்கு ரூ.1,000/- வீதம் ரூ.16.1647 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

மிக்ஜாம் புயல் - பாதிக்கப்பட்ட 24,25,336 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/- வாழ்வாதார நிவாரணம் வழங்க ரூ.1,486.9374 கோடி.

மிக்ஜாம் புயல் - நிவாரணம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களுள் தகுதியான 2,68,869 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/-வாழ்வாதார நிவாரணம் வழங்க ரூ.39.5121 கோடி

மிக்ஜாம் புயல் - எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணம் வழங்க ரூ.1.1512 கோடி.

தென் மாவட்டங்களில் கனமழை மற்றும் பெருவெள்ளம் - மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட 6,63,760 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/-வீதம் மற்றும் மிதமாக பாதிக்கப்பட்ட 14,31,164 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,000/- வீதம் வாழ்வாதார நிவாரணம் வழங்க ரூ.541.3724 கோடி.

விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 7,07,728 குடும்பங்களுக்கு தலா ரூ.2,000 வீதம் ரூ.141.54 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

வேளாண்பயிர்களுக்கு சேத நிவாரணம்

பருவம் தவறிய மழையால், 9 மாவட்டங்களில் 93,873 ஹெக்டேர் பரப்பில் வேளாண் பயிர்கள் சேதமடைந்ததற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி, பாதிக்கப்பட்ட 1,33,907 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.112.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை காலத்தில், 4803.24 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களுக்கு நிவாரணமாக 6,426 விவசாயிகளுக்கு ரூ.6.42 கோடி நிதி ஒதுக்கீடும்,

வேலூர் மாவட்டத்தில் 12.12 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களுக்கு நிவாரணமாக 30 விவசாயிகளுக்கு ரூ.1,63,620/ ஆம் நிதி ஒதுக்கீடு.

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 2,783.175 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களுக்கு நிவாரணமாக 3,957 விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.3.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2022 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில், 37,755.6546 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களுக்கு நிவாரணமாக 48593 விவசாயிகளுக்கு ரூ.50.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மாண்டஸ் புயலின் காரணமாக, 22 மாவட்டங்களில் சேதமடைந்துள்ள 5491.84 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள வேளாண் பயிர்களுக்கு ரூ.7.34 கோடி நிவாரணத் தொகை மிதமான வேளாண் வறட்சியின் காரணமாக பாதிப்பிற்குள்ளான 1,55,316.3325 ஹெக்டேர் பயிர்களுக்கு 2,09,808 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.198.26 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

குறைவான மழைப்பொழிவின் காரணமாக பாதிப்பிற்குள்ளான 72,595 ஹெக்டேர் பயிர்களுக்கு 1,15,791 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.73.79 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 26723 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கான நிவாரணம் வழங்க ரூ.45.44 கோடி.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட வேளாண் 1,64,866 ஹெக்டேர் பயிர்களுக்கான நிவாரணம் வழங்க ரூ.160.42 கோடி.

∴பெஞ்சல் புயலால் பாதிப்பிற்குள்ளான 3,13,115 ஹெக்டேர் பயிர்களுக்கு 5,26,280 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.453.88 கோடி நிவாரணத் தொகை.

தென்மேற்கு பருவமழை 2024இல் 9781.65 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கு 16,901 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.16.59 கோடி நிவாரணம். கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக சேதமடைந்த 12,39,693.004 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கு 15,98,481 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.1,398.35 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களுக்கு சேத நிவாரணம்

2022 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை காலத்தில், 628.28 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணமாக 2,040 விவசாயிகளுக்கு ரூ.86,19,700/-ம்,

மேலும் 2022 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில், 399.79 ஹெக்டேர் பரப்பில் சேதமடைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணமாக 1,088 விவசாயிகளுக்கு ரூ.52,88,400/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்டஸ் புயலின் காரணமாக, 10 மாவட்டங்களில் சேதமடைந்த 1244.4 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.1.75 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 1452 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கான நிவாரணம் வழங்க ரூ.2.70 கோடி.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட வேளாண் 38840 ஹெக்டேர் பயிர்களுக்கான நிவாரணம் வழங்க ரூ.41.25 கோடி.

ஃபெஞ்சல் புயலால் பாதிப்பிற்குள்ளான 67,870 ஹெக்டேர் பயிர்களுக்கு 1,16,578 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.133.42 கோடி நிவாரணத் தொகை. தென்மேற்கு பருவமழை 2024இல் 430.86 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்களுக்கு 1,168 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.74,82,900/- நிவாரணம்.

கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக சேதமடைந்த 1,38,813.8292 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்களுக்கு 2,08,515 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.196.9 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு நிவாரணம்

மாண்டஸ் புயலினால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, சென்னை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 6 வல்லம் / ஃபைபர் படகுகள் முழுமையாகவும், 31 பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 76 இயந்திரப் படகுகள் முழுமையாகவும், 136 படகுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. மேலும், 932 வலைகள் சேதமடைந்துள்ளன. மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு ரூ.467.04 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக மீன் பிடி படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கான நிவாரணம் வழங்க ரூ.28.1093 கோடி.கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பேரிடர்களின் காரணமாக சேதமடைந்த மீன் பிடி படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கான நிவாரணம் வழங்கும் பொருட்டு மொத்தம் ரூ.41.519 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக சீரமைப்பு

மாண்டஸ் புயலினால் பாதிக்கப்பட்ட மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வாரியத்தின் உள்கட்டமைப்புகளை சீர் செய்வதற்கு ரூ.1.27கோடி- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க ரூ.130 கோடி.

ஃபெஞ்சல் புயலால் பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2021-22 ஆம் ஆண்டு முதல் பேரிடர்களால் ஏற்பட்ட உள்கட்டமைப்பு சேதங்களை தற்காலிகமாக சீரமைக்க மொத்தம் ரூ.600.09 கோடி தமிழ்நாடுஅரசு வழங்கியுள்ளது.

பேரிடர் தணிப்புப் பணிகள்

பேரிடரை திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன், மழைநீர் வடிகால் மற்றும் மூடு வடிகால் அமைத்தல், வெள்ளத் தடுப்புப் பணிகள் போன்ற பல்வேறு தணிப்புப் பணிகளுக்காக மாநில அரசு மொத்தம் ரூ.916.15 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்க மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ.373.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீழ்திருக்கழிப்பாலை மற்றும் சின்ன காரமேடு ஆகிய கிராமங்களில் கொள்ளிடம் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இடது கரை பலவீனம் அடைந்து 17 கிராமங்கள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றன. இதனை நிரந்தரமாக தடுக்கும் பொருட்டு

கொள்ளிடம் ஆற்றின் இடதுபக்க மண் கரைகள் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் அலைக்கற்களைக் கொண்டு பலப்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ.7.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இரும்புலியூர் ஏரியிலிருந்து ஜி.எஸ்.டி. சாலை வரை பெரிய வாய்க்கால் அமைக்க மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ.96.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டத்தில் கீழ் பரவனார் வரை வெள்ளக்கரை அமைப்பது மற்றும் அறுவால்மூக்கு முதல் கடற்பகுதி வரை புதிய வெள்ள மாற்றுக் கால்வாய் அமைக்க மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 81.128 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்டம் பிச்சாவரம் அருகே உப்பனார் வாய்க்காலின் குறுக்கே புதிய தடுப்பனை கட்டும் பணிக்காக மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி மாநகராட்சியின் எட்டயபுரம் சாலையில் சங்கரைப்பேரி பெரிய பள்ளம் வரை மழைநீர் வடிகால் அமைக்க மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 12.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்க மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ரூ.304.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் பிரத்யேக ஒதுக்கீட்டிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் வெள்ள அபாயக் குறைப்புக்கு ரூ.561.29 கோடியை விடுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல் தவணையாக ரூ.128.82 கோடியை விடுவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் பிரத்யேக ஒதுக்கீட்டிலிருந்து தமிழ்நாட்டில் வறட்சி தணிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.111.00 கோடி விடுவிக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், விரைவில் நிதி விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தீயணைப்புத் துறையினை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் பிரத்யேக ஒதுக்கீட்டிலிருந்துதமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ஒன்றிய அரசால் ரூ.112 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

குறைதீர்ப்பு

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் வரப்பெற்ற 14,333 புகார்கள் மீது தீர்வு காணப்பட்டது.

மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி 1077 க்கு வரப்பெற்ற 17,911 புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

சிறப்பு முன்னெடுப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைத்து,உயிரிழப்பு,பொதுசொத்துக்கள் மற்றும்அதிமுக்கியத்துவம்வாய்ந்தஉட்கட்டமைப்புகளின் சேதம் ஆகியவற்றைத் தவிர்த்தல் குறித்த அம்சங்கள் கொண்ட மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையினை வெளியிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இயற்கை பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு ஆகிய செயல்பாடுகள் குறித்தும் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான பரிந்துரைகளும் கொண்ட தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2023-ஐ வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு மாநில அவசரகால செயல்பாட்டு மையம் ரூ.5.13 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வெப்ப அலையால் பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு வெப்ப அலை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி நிலச்சரிவு அபாயத் தணிப்பு குறித்தான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆகியவை, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையுடன் (JICA) இணைந்து, தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

நிலச்சீர்திருத்தம்

கடந்த 4 ஆண்டுகளில் 133.77 ஏக்கர் பூமிதான நிலங்கள் தகுதியின் அடிப்படையில் 92 பயனாளிகளுக்கு விவசாயம் மற்றும் 1,342 பயனாளிகளுக்கு வீட்டுமனைகளுக்காகவும் பூமிதான வாரியத்தின் ஒப்புதலின் பேரில் விநியோக பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசு துறை மற்றும் பொது பயன்பாட்டிற்காக 211.99 ஏக்கர் பூமிதான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பூமிதான நிலங்களை தகுதியற்ற நபர்கள், ஆக்கிரமிப்பு செய்த நிலையில் அதனை அகற்றுவதற்கான துரித நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 693.21 ஏக்கர் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது.

வருவாய் நீதிமன்றம்

பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உட்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன.

31.03.2024 அன்று 3,221 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 01.04.2024 முதல் 28.02.2025 வரை 2,443 வழக்குகள் வரப்பெற்று, மொத்தம் நிலுவையில் உள்ள 5,664 வழக்குகளில் 01.05.2021 முதல் 25.04.2025 வரை 2,065 வழக்குகள் முடிக்கப்பட்டன.

நகர்ப்புற நில உச்சவரம்பு (ம) நகர்ப்புற நில வரித் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் பசலி 1431-இல் ரூ.16.26 கோடி, பசலி 1432-இல் ரூ.9.65 கோடி, பசலி 1433-இல் ரூ.9.39 கோடி மற்றும் பசலி 1434-இல் ரூ.10.41 கோடி என மொத்தம் ரூ.45.71 கோடி நகர்ப்புற நிலவரித் தொகை வசூல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

'அறியாக் கிரயம் பெற்றோர்' திட்டத்தின் கீழ் மே மாதம் 2021 முதல் மார்ச் மாதம் 2025 வரை வரன்முறை செய்ய அரசால் இசைவளிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை 2125 வரன்முறை செய்ய இசைவளிக்கப்பட்ட நிலங்களின் நேர்வுகளில் மொத்தப் பரப்பளவு 6.00 இலட்சம் சதுர மீட்டர்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.22.52 கோடி நிலமதிப்புத் தொகையாக அறியாமல் கிரயம் பெற்ற மனுதாரர்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.



பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு புதிய உச்சம்

9.69%



சாதனை வளர்ச்சி வீதம்

தமிழ்நாடு 2024-25 ஆம் ஆண்டில் 9.69% வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம். கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி.

குவியும் முதலீடுகள் - பெருகும் வேலைவாய்ப்புகள் (2021-2025)

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் : 895
முதலீடுகள் : ரூ.10,14,368 கோடி
வேலைவாய்ப்புகள் : 32,04,895

சீரான வளர்ச்சி

2021-22 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8%- க்கும் அதிகமான வளர்ச்சி வீதத்துடன் நிலையான பொருளாதார முன்னேற்றம்

எதிர்கால இலக்கு

நீடித்த வளர்ச்சி மற்றும் அதிகரிக்கும் முதலீடுகள் மூலம் 2032-33 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற நிலையினைத் தமிழ்நாடு அடையும்.


எல்லார்க்கும் எல்லாம் !



நிதித்துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் தொல்லியல் துறை, சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் காலநிலை மாற்றம்



திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல்
காலநிலை மாற்றத் துறை அமைச்சர்



ரூ.125 கோடி முன்பணமாக ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்திற்கு வழங்கல்...

அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு...

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.992.42 கோடி அளவிற்கு 2,30,545 பயனாளிகள் பயன்...

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.137.96 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டு, 2,527 குடும்பங்கள் பயன்...

திருநெல்வேலியில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகம்....

நிதித்துறை

கருவூலக் கணக்கு ஆணையரகம்

ஓய்வூதியப் பிரிவு

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

மாத சந்தா தொகையானது ரூ. 80/- லிருந்து ரூ. 150/- ஆக, 01.07.2021 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. சந்தா தொகையின் அடிப்படையில் சராசரியாக மாதந்தோறும் பெறப்படும் ரூ.6.50 கோடி சுமார் 1,300 மறைந்த ஓய்வூதியர்களின் குடும்ப உறுப்பினர்கள்/ நியமனதாரர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

மறைந்த ஓய்வூதியர்களின் குடும்ப நலன் கருதி, ரூ.125 கோடி முன்பணமாக அரசு கணக்கிலிருந்து தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசு நல்கிய ஆதரவின் அடிப்படையில், நிலுவையிலிருந்த 25,000 கேட்புகள் நேர் செய்யப்பட்டு, தொகை உரிய பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 25,000 ஓய்வூதியர்களின் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

களஞ்சியம் 2.0 - ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம்

அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக திருவாளர் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற முகமை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக திருவாளர் விப்ரோ நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தேவையான கணினி கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம், முதற்கட்டமாக கரூர் மாவட்டத்தில் ஜனவரி 2020இல் தொடக்கப்பட்டு படிப்படியாக அனைத்து மாவட்டக் கருவூலங்களிலும் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் அனைத்தும் IFHRMS மூலமாக பெறப்பட்டு ரிசர்வ் வங்கியின் (RBI) இ-குபேர் (e-kuber portal) வழியாக பயனாளர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் IFHRMS இன் வாயிலாக, அனைத்து மாவட்ட கருவூலகங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மூலம் பட்டியல் தயார் செய்து ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின் செலுத்துச்சீட்டு (e-Challan) மூலமாக பொதுமக்கள் / அரசு துறை நிறுவனங்கள்/ உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை அரசிற்கு செலுத்த வேண்டிய வரவினங்களை, மின் வரவுகளாக (e-Receipt) 24 x 7 மணிநேரமும் தங்குதடையின்றி இணையத்தின் மூலம் (www.karuvoolam.tn.gov.in) செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்சேவைகளுக்காக பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய நான்கு வங்கிகள் திரட்டல் வங்கிகளாக (Aggregator Banks) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வங்கிகளின் வாயிலாக அரசின் வருவாய்கள் பெறப்பட்டு, அரசின் ரிசர்வ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மேலும் தற்பொழுது கனரா வங்கியையும் இம்முறையில் ஒருங்கிணைக்கும் கடைசி கட்ட பணிகள் மேற்கொள்ளக்கப்பட்டு வருகிறது.

கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின்வரவாக (e-challan) மின் செலுத்துச்சீட்டு மூலமாக பெறுவதற்கான நடைமுறை அரசின் வருவாய் ஈட்டும் முக்கிய துறைகளான வணிகவரித்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒப்பளிப்பு செய்யும் நபர்களின் தனித்துவ அடையாளப்படுத்துதல்/ மின்னணு கையொப்ப சான்றிதழ் (DSC) மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

காப்பறை மற்றும் முத்திரைத் தாள் மேலாண்மை சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

34 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் (Old Age Pension) IFHRMS மென்பொருள் வாயிலாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

முத்துலெட்சுமி திட்டத்தின் கீழ் பயன்பெறும் 8 இலட்சம் பயனாளிகள் IFHRMS இன் மூலமாக நேரடியாக வங்கிக் கணக்கில் பணப்பலன்களை பெற்று வருகின்றனர்.


மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

OPPAS – ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டத்தில், ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின் ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பொது வருங்கால வைப்புநிதிக்கான கருத்துருக்கள் அனுப்பி உரிய கொடுப்பாணைகளை மின்னணு தரவுகளாக பெற்று கணினி வாயிலாக பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஓய்வுபெற்ற ஊழியர்கள் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விரைவாகவும், துல்லியமாகவும், வெளிப்படைத் தன்மையோடும் வழங்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

DAAS (Digital Auditing and Accounting System) – மின் செலவுச்சீட்டு (e-Voucher) தரவைப் பயன்படுத்தி மாநில கணக்காயர் அவர்களின் தணிக்கை மற்றும் கணக்கியலை மேற்கொள்ள எண்ணியல் தணிக்கை மற்றும் கணக்குகளை தொகுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் செலவுச்சீட்டுகளை (Voucher) காகிதமின்றி அனுப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல் தவணையாக சம்பள பட்டியல்கள் சமர்ப்பித்தலில் இருந்து 01.02.2025 முதல் மாநில கணக்காயரிடம் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

களஞ்சியம் கைபேசி செயலி பயன்பாடு: களஞ்சியம், நேரம் மற்றும் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சுய விவரத் தேவைகளை எளிதாக்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட களஞ்சியம் கைபேசி செயலி மூலம் பணியாளர்கள் விடுப்பு கோரி விண்ணப்பித்தல் மற்றும் அனுமதித்தல், குறுகிய காலக் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான கோரிக்கை மற்றும் ஓய்வூதிய கருத்துரு அனுப்பக் கோரி விண்ணப்பம், பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இருப்புத்தொகை விவரம் , வைப்பு நிதி விவரம் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்யும் நடைமுறையை (பழைய / புதிய) தேர்ந்தெடுத்தல் போன்ற சேவைகளை பெறலாம்.



மேலும், ஓய்வூதியம் பெறுவோர் இணையவழி நேர்காணல், பண்டிகை முன்பணம் மற்றும் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தை மாற்றம் செய்யும் கோரிக்கை, வருமான வரி பிடித்தம் செய்யும் நடைமுறையை (பழைய / புதிய) தேர்ந்தெடுக்கும் விருப்பம் போன்ற சேவைகளையும் பெறலாம்.

பாரத ரிசர்வ் வங்கி (RBI) இன் NEFT/RTGS வசதி: RBI இன் NEFT/RTGS வசதியானது IFHRMS இல் 24.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல் அரசின் வருவாய் இனங்களை (Receipts) உடனடியாக அரசாங்கக் கணக்கில் நேரடியாக பெற உதவுகிறது.

போலி பயனாளிகள் சரிபார்ப்பு நடைமுறை: CMUPT, OAP & கைம்பெண் உதவித் தொகை, SSN-IG OAP, SSN-IG (SCP) போன்ற அரசாங்கத் திட்டங்களில் போலி பயனாளிகளைக் கண்டறியவும் மற்றும் ஒரே பயனாளிக்குப் பலமுறை பணம் வழங்கப்படுவதை சரிபார்த்து, இரட்டிப்பு பணம் மற்றும் மோசடியான பட்டியல்கள் காசாக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வருமான வரி தானியங்கி கணக்கீடு: வருமான வரி சட்டம் 1961-ன் படி, ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு மற்றும் முதலீடு தொடர்பான விவரங்களை களஞ்சியம் (IFHRMS 2.0) இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதன் மூலம் ஒவ்வொரு மாதமும் வருமான வரியை சம தவணைகளில் பிடித்தம் செய்ய களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் வழிவகை எளிமைபடுத்தப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS): பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (CPS) பணிபுரிந்து, வயது முதிர்வு / விருப்ப ஓய்வுபெறும் ஊழியர்களுக்கான இறுதித் தொகை களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருள் வாயிலாக பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஓய்வூதியத் திட்டம்: பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பை NSDL க்கு செலுத்துவதற்கான பட்டியல் தயார் செய்வதற்கான வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இணையவழி நேர்காணல்: ஓய்வூதியம் பெறுவோர் ஜீவன் பிரமான் மூலம் வாழ்நாள் சான்றிதழைச் சமர்ப்பித்து, நேர்காணல் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தற்போது, களஞ்சியம் (IFHRMS 2.0) கைபேசி செயலியில், ஓய்வூதியம் பெறுவோர் உயிர்வாழ் சான்றிதழை ஆதார் சரிபார்ப்பு (Pensioner Mustering Face app) மூலம் சமர்ப்பிக்கும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

SNA-SPARSH (State & Central Sponsored Schemes-ன் (Shared Schemes) பணப் பயன்கள் டிசம்பர் 2024 முதல் வழங்கப்பட்டு வருகிறது.





ஒருங்கிணைப்புத் திட்டங்கள் :

களஞ்சியம் (IFHRMS 2.0) உடன் போக்குவரத்து துறை மற்றும் பதிவுத்துறை போன்ற வருவாய் ஈட்டும் துறைகளின் முழு ஒருங்கிணைத்தல்.

TANGEDCO உடன் ஒருங்கிணைத்தல். நான்கு மாவட்டங்கள் முன்னோடி மாவட்டங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஈரோட்டில் செயல்படுத்தப்பட்டு. மாவட்டங்களான இராணிப்பேட்டை , தேனி, மயிலாடுதுறையில் செயல்படுத்தப்பட்டு, ஏனைய மாவட்டங்களில் 01.04.2025 முதல் செயல்படுத்தப்பட்டது.

BSNL பட்டியல்களுக்கு பணம் செலுத்தும் வசதி IFHRMS மூலமாக 01.04.2025 முதல் கருவூல கணக்குத்துறை முன்னோடி துறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு சோதனைகள் நடைபெற்று வருகிறது.

அனைத்து துறைகளிலும் மின் பதிவேடுகளை செழுமைப்படுத்துதல். வருமான வரி அறிக்கை தாக்கல் (24Q, 24G மற்றும் 26Q) பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் தாக்கல் செய்யப்பட வேண்டிய காலமுறை வருமானக் கணக்கு அறிக்கை (24Q, 24G மற்றும் 26Q) வருமானவரி துறை மென்பொருளுடன் ஒருங்கிணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அனைத்து திட்டம் மற்றும் திட்டம் சாரா பயனாளிகளின் தகவல்களை திரட்டி Global Beneficiary Master உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10 இலட்சம் பயனாளர்கள் வரை ஒரே பட்டியலின் மூலமாக பணப்பலன்களை கோரும் விதமாக, பெரும் பட்டியல் தயாரிப்பு முறை உருவாக்கப்பட்டு வருகிறது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2021

அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள் விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) 2021-2025 வரை மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு மாதமும் பணியாளரிடமிருந்து ஜூலை 2021 மாதத்திலிருந்து அவர்களது மாதாந்திர ஊதியத்தில் ரூ.300/- (ரூ.295/- காப்பீட்டு சந்தா + ரூ.5/- சிறப்பின நோய்கள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படும் எதிர்பாரா செலவுகளுக்காக நிதி மூலதன சந்தா) பிடித்தம் செய்யப்படுகிறது.

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் சிகிச்சை பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது

சில நோய்களையும், சில சிகிச்சைகளையும் சிறப்பினமாக கருதி அதற்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், கூடுதலாக ரூ.10,00,000/- மூலதன நிதியிலிருந்து வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்குறிப்பிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கான மொத்த காப்பீட்டு உச்சவரம்பு ரூ.20,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் அவசர தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருத்துவ வசதிகளின் தரம் அறியப்படாத நிலையில், ஒரு அரசு ஊழியர் தெளிவான மனநிலையில் அத்தகைய மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது கீழ்நிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75% அளவிற்கு மருத்துவ செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து ரூ.10 இலட்சம் வரை கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைபடுத்தவும் TNNHIS இணையதளம் மற்றும் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கென கைபேசி செயலி (Mobile Application) ஆகியவை தொடங்கி வைக்கப்பட்டது.

மருத்துவ கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவ, ஊரக நலப்பணிகள் இயக்குநர்களின் கட்டுபாட்டில் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் பணியாளர்களுக்கு செயல்படுத்திட வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு, அரசு மருத்துவமனைகளில் பயனாளிகள் கட்டணமில்லா சிகிச்சையினை பெறலாம்.

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற அரசு ஊழியர்களுக்கு இதுவரை 7,45,067 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

203 மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள 1,366 மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்கள் மூலம் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் - 2021இல் 2,80,606 பயனாளிகள் ரூ.1,346.21 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

2021 – 2025 நிதி ஆண்டுகளில் ரூ.90.61 இலட்சம் தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதியின் கீழ் பயனாளிகளுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்-19 சிகிச்சைக்கு ரூ.5 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) ஏற்படுத்தப்பட்டு. ரூ.90 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, பட்டியலிடப்படாத மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்-19 சிகிச்சைக்கு நிதிய மூலதனம் (corpus fund) ஏற்படுத்தப்பட்டு, ரூ.11.15 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டுகளுக்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2022, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலமாக 01.07.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உள்பட) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நான்காண்டுகளுக்கு (2022-2026) ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) வரை மருத்துவ காப்பீட்டு உதவியினைப் பெறலாம். இதற்காக ரூ.497/- சந்தா தொகையாக ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களிடமிருந்து அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

சில நோய்களையும், சில சிகிச்சைகளையும் சிறப்பினமாக கருதி அதற்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் அவசர தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருத்துவ வசதிகளின் தரம் அறியப்படாத நிலையில், ஒரு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் தெளிவான மனநிலையில் அத்தகைய மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது அதேநிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75% அளவிற்கு மருத்துவ செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக டயாலிசிஸ் மற்றும் கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்ந்து ரூ.10,00,000 வரை காசில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற ஓய்வூதியதாரர்களுக்கு / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு இதுவரை 6,92,708 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தவும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கென கைபேசி செயலி (Mobile Application) ஆகியவை தொடங்கி வைக்கப்பட்டது.

மருத்துவ கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவ, ஊரக நலப்பணிகள் இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு, அரசு மருத்துவமனைகளில் ஓய்வூதியதாரர்கள் கட்டணமில்லா சிகிச்சையினை பெறலாம்.

203 மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள 1,364 மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் 16 கதிரியக்க சிகிச்சை மையங்கள் மூலம் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 2,52,759 பயனாளிகள் ரூ.1,081.59 கோடி அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

2022 – 2025 நிதி ஆண்டுகளில் ரூ.8.51 கோடி தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதியின் கீழ் பயனாளிகளுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பட்டியிலிடப்பட்ட மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்-19 சிகிச்சைக்கு 2.5 கோடிக்கான தொகுப்பு நிதிய மூலதனம் (corpus fund) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை அவ்வகையின் கீழ் ரூ.87.50 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பட்டியிலிடப்படாத மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்-19 சிகிச்சைக்கு நிதிய மூலதனம் (corpus fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் இதுவரை ரூ.17.47 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும் ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்

தமிழ்நாடு அரசு மூலம் ஓய்வூதியம் பெறுவோர் ஆண்டு முழுவதும் தங்களது நேர்காணல் செய்துகொள்ள அரசு ஆணை நடைமுறையானது 01.07.2023-முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் ஓய்வூதியர்கள் தாங்கள் ஓய்வுபெற்ற மாதத்திலும் குடும்ப ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதியம் தொடங்கப்பட்ட மாதத்திலும் தங்களது வருடாந்திர நேர்காணலை செய்துவருகின்றனர்.

இதன்மூலம் ஓய்வூதியர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் / இடையூறுகள் குறைக்கப்பட்டு உயிர்வாழ்ச்சான்று சமர்ப்பிக்கும் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

பணி ஓய்வூதியத்தை குடும்ப ஓய்வூதியமாக மாற்றம் செய்வதை எளிமையாக்குதல்

புதிய படிவம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது ஓய்வூதியம் பெறும் பணி ஓய்வூதியரிடம் அவர்களது கணவன் / மனைவி தொடர்பான விவரங்கள் பெற்று ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை தளத்தில் (IFHRMS) பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

பணி ஓய்வூதியம் பெறுபவர் மரணம் ஏற்பட்டால் எந்த கூடுதல் விவரங்களும் பெறாமல் பணி ஓய்வூதியத்தை குடும்ப ஓய்வூதியமாக மாற்றும் நடைமுறை உருவாக்கப்பட்டு, சிவில் ஓய்வூதியர் இறப்பிற்கு பின்பு குடும்ப ஓய்வூதியம் தொடங்கும் முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கருவூலங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல் / புதிய கருவூலங்கள் ஏற்படுத்துதல், மாவட்ட கருவூலங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்:-

திருநெல்வேலி மாவட்ட கருவூலத்திற்கு சொந்த கட்டடம் ரூ.352 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்ட கருவூலத்திற்கு சொந்த கட்டடம் ரூ.276 இலட்சம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் மாவட்ட கருவூலத்திற்கு சொந்த கட்டடம் ரூ.496 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணச்சநல்லூர் சார் நிலை கருவூலம் ரூ. 102 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சார் நிலை கருவூலம் ரூ. 85.89 இலட்சம் மதிப்பீட்டிலும், மயிலாடுதுறை சார் நிலை கருவூலம் ரூ. ரூ. 99.10 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சார் நிலை கருவூலம் ரூ. 99.75 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம், திருபுவனம் புதிய சார் நிலை கருவூலம் ரூ. 87.80 இலட்சம் மதிப்பீட்டிலும் கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் புதிய சார் நிலை கருவூலம் ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் புதிய சார் நிலை கருவூலம் ரூ. 132 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கொடுமுடி புதிய சார் நிலை கருவூலம் ரூ. 106 இலட்சம் மதிப்பீட்டிலும் திறந்து வைக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் புதிய சார் நிலை கருவூலம் ரூ.101.91 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் புதிய சார் நிலை கருவூலம் ரூ.94,90,062 மதிப்பீட்டில் கட்டப்பட்டு 07.02.2024 திறந்து வைக்கப்பட்டது.

திருச்சி மாவட்டம், தொட்டியம் புதிய சார் நிலை கருவூலம் ரூ.1,41,90,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி புதிய சார் நிலை கருவூலம் ரூ.1,26,50,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

புதிய மாவட்டக் கருவூலங்கள் ஏற்படுத்துதல்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட கருவூலம் மயிலாடுதுறை அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அந்த புதிய மாவட்டத்தில் புதிய மாவட்ட கருவூலம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த நிதித்துறை வளாக கட்டடத்திற்கு பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை என பெயர் சூட்டப்பட்டது :-

நிதித்துறையின் ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகக் கட்டடத்திற்கு பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை என பெயர் சூட்டப்பட்டு கட்டடத்தின் தரைத்தளத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது சிலையும் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு கோடல் நடைமுறையை மீண்டும் எழுதுதல்/திருத்தம் செய்தல்

தமிழ்நாடு கருவூல விதிகள் மற்றும் கையேடுகளைத் திருத்துவதற்கும், புதுப்பிப்பதற்கும் ஒரு குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கான தற்போதைய கோடல் நடைமுறைகளை மறுபரிசீலனை செய்ய / மீண்டும் எழுதுவதற்கான விரிவான முன்மொழிவை இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) சமர்ப்பித்துள்ளது.

திட்டத்திற்கான தொடக்க அறிக்கையை ICAI ARF சமர்ப்பித்தது. 02.09.2023 அன்று நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையரால் கோடல் விதிகளை மாற்றி எழுதும் முறை குறித்து விளக்கப்பட்டது.

அரசாங்கத்தின் முதன்மைச் செயலாளர், நிதித் துறை முன்மொழியப்பட்ட முறைக்கு ஒப்புக்கொண்டது மற்றும் ICAI ARF குழு அறிவுறுத்தல்களின்படி கருவூலக் விதிகள் மற்றும் கையேடுகளை மீண்டும் எழுதுதல் / திருத்தத் தொடங்கியுள்ளது. ரசீதுகள், ஓய்வூதிய பலன்கள், பொது, கடன்கள் மற்றும் முன்பணங்கள், வைப்புத்தொகை, காப்பறை செயல்பாடுகள், மூலதனச் செலவு, விநியோகம், மாநில கணக்காயர் தொடர்பாக, நிதிநிலை அறிக்கை போன்ற வணிகச் செயல்முறைக்கான வரைவு அறிக்கையை நிறுவனம் சமர்ப்பித்துள்ளது.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையின் கணக்கு விதிகள், கருவூல கையேடு மற்றும், சம்பளம் மற்றும் கணக்கு கையேடு ஆகியவற்றின் இறுதி அறிக்கை மாநிலக்கணக்காயர், சென்னை அவர்களின் பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டு ICAI-ARF குழு சமர்ப்பித்த இறுதி அறிக்கை ஒப்புதலுக்காக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பு (TNPFTS)

பணம் செலுத்துதல், கண்காணிப்பு, கணக்கியல், நல்லிணக்கம் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றுக்கான ஒரு முடிவு முதல் முடிவு வரையிலான தீர்வை வழங்கும் ஒரு அமைப்பாகும். இது நிதிகளைக் கண்காணிப்பதற்கும் அவற்றின் கடைசி மைல் பயன்பாட்டைக் கண்காணிப்பதற்கும் ஒரு சீரான தளத்தை வழங்குகிறது.

19 துறைகளுக்குட்பட்ட 65 திட்டங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. முக்கிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் ஒருங்கிணைக்கும் பணிகள் முடிந்தது. மேலும், கடிதங்கள் மற்றும் முகமைகள் வங்கிக் கணக்குகளும் இந்த இணையதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு, தொகுதி-I மற்றும் II-ஐ மீண்டும் எழுதுதல்/திருத்தம் செய்தல்

தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு, தொகுதி- I & II ஐத் திருத்த/திருத்தி எழுதுவதற்கான நிர்வாக அனுமதி மற்றும் நிதி அனுமதியை அரசாங்கம் ரூ.52,82,345/- செலவில் வழங்கியுள்ளது.

இந்த பணி இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்திடம் (ICAI-ARF) ஒப்படைக்கப்பட்டது. 09.01.2025 அன்று அரசு செயலாளருடன் (செலவு) முதற்கட்ட கூட்டம் நடைபெற்றது.

ICAI-ARF விரிவான விவாதத்திற்குப் பிறகு, வணிக செயல்முறையின்அடிப்படையில் விதி தொகுப்பு, தொகுதி I & II ஐ மீண்டும் எழுத ஒப்புக்கொண்டது மற்றும் மார்ச்-2025 இல் அரசாங்கத்திடம் ஒரு தொடக்க அறிக்கை வழங்கப்பட்டது.

29.01.2025 முதல் வருவாய் ரசீதுகளைப் புரிந்துகொள்வதற்காக பங்குதாரர்களுடன் ஆரம்ப விவாதங்கள் தொடங்கியது மற்றும் அரசு நிர்ணயித்த காலக்கெடுவின்படி திட்டம் முடிக்கப்படும்.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் உள்ள நேரடி நியமனக் கணக்கு அலுவலர்களுக்கான காலிப் பணியிடங்கள் குறித்த தற்போதைய நிலை மற்றும் அவற்றை நிரப்ப மேற்கொண்ட நடவடிக்கை

2022 ஆம் ஆண்டிற்கான கருவூலம் மற்றும் கணக்கு துறையில் உள்ள நேரடி நியமன கணக்கு அலுவலர்களுக்கான 23 காலி பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமன கணக்கு அலுவலர் காலியிடத்திற்கு 16 நபர்களை தற்காலிகமாக தேர்வு செய்துள்ளது.

நேரடியாக தெரிவு செய்யப்பட்ட 16 கணக்கு அலுவலர்களுக்கு ஆறுமாத பயிற்சிகாலம் முடிந்து பணியிட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 7 காலி பணியிடங்களை நிரப்புவதற்காக அறிவிப்பு செய்யப்பட்டு, நேரடி நியமன கணக்கு அலுவலர் காலியிடத்திற்கு 5 நபர்களை தற்காலிகமாக தேர்வு செய்துள்ளது. நேரடியாக தெரிவு செய்யப்பட்ட 5 கணக்கு அலுவலர்களுக்கு ஆறுமாத பயிற்சி காலம் முடிந்த பணியிட ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 15 காலி பணியிடங்களையும் நிரப்புவதற்காக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

திறன் மேம்பாடு - கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை அதிகாரிகளுக்கு அறிவுப் பரிமாற்றம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கருவூலம் மற்றும் கணக்குத் துறையானது, அலுவலர்களின் வேலை திறனை மேம்படுத்த, அந்தந்த துறைகளில் தற்போதைய மாற்றங்களுக்கேற்றவாறு பணிபுரிய ஏதுவாக புத்தாக்க பயிற்சி அளிக்க அரசால் திட்டமிடப்பட்டு இப்பயிற்சியானது 2022 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

புத்தாக்கம் மற்றும் தேவை அடிப்படையிலான பயிற்சி

அலுவலர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களின் திறன் மேம்பாட்டிற்கும் பயிற்சிகளை வழங்க இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்துடன் (ICAI) புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டது. 2022 முதல் 2023 வரை 5 பிரிவுகளாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ரூ.30 இலட்சம் ஒதுக்கீட்டு செய்யப்பட்டதின் படி 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான புத்தாக்க பயிற்சி இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலம் (ICAI) துறை அலுவலர்களுக்கு 5 அணிகளாக பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், தேவை அடிப்படையிலான பயிற்சிகள் இந்திய தொழில்நுட்ப கழகம் சென்னையில் (IIT, Madras) 2 அணிகளாக வழங்கப்பட்டன.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

நிதித்துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறைகளை சார்ந்த உயர் அலுவலர்களுக்கு நடப்பு நிதியாண்டிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குவதற்கு ரூ.16,19,500/-ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடுத்த நிதி ஆண்டிற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ரூ.86,92,000/- ஐ பெறுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

திறன் மேம்பாட்டு பயிற்சியானது 12 தொகுதிகளாக (நடப்பு நிதியாண்டில் 2 அணிகளும், அடுத்த நிதியாண்டில் 10 அணிகளும்) இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலம் (ICAI) மற்றும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மூலம் வழங்கப்பட்டும். இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலம் (ICAI) 1 அணிக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இத்தகைய பயிற்சிகள் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற அரசு உத்தரவிட்டுள்ளது.

நேரடி நியமனக் கணக்காளர்கள் மற்றும் கணக்காளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி

நடப்பு நிதியாண்டில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட நேரடி கணக்கர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு புகுமுகப் பயிற்சி மற்றும் IFHRMS பயிற்சி அளிப்பதற்காக ரூ.1,19,43,300/-ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியானது 12 தொகுதிகளாக வழங்கப்படும். அதன் அடிப்படையில் புகுமுகப் பயிற்சி மற்றும் IFHRMS பயிற்சிகள் 10 அணிகளாக 570 புதிதாக நியமனம் செய்யப்பட்ட நேரடி கணக்கர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பதவி உயர்வு பெற்ற உதவிக் கணக்கு அலுவலர்களுக்கான அறிமுகப் பயிற்சி

கருவூலத் துறையின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்காக, புதிதாக பதவி உயர்வு பெற்ற உதவி கணக்கு அலுவலர்களுக்கு, பல்வேறு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் (PSUs), கார்ப்பரேஷன்கள், சட்டப்பூர்வ நிறுவனங்கள் போன்ற அரசு நிறுவனங்களில் பணிபுரியும்போது தேவைப்படும் துறை சார்ந்த நிபுணத்துவத்தை நிரப்ப அவர்களுக்கு ஒரு மாத கால அறிமுகப் பயிற்சி அளிப்பது இன்றியமையாததாக உள்ளது.

எனவே, துறை சார்ந்த நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கும், தங்கள் பணிகளைப் பற்றிய தெளிவான புரிதலை உணரவும், உதவி கணக்கு அலுவலர்களுக்கு ஒரு மாத கால அறிமுகப் பயிற்சி வழங்கப்படலாம், இது அவர்களின் புதிய பதவிகளுக்கு ஏற்ப பணியாற்ற உதவுகிறது.

நடப்பு நிதியாண்டில் (2024-2025) ரூ.7,57,680/-ஐ ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிதாக பதவி உயர்வு பெற்ற 47 உதவி கணக்கு அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சியானது (முதல் அணி) 03.02.2025 முதல் 28.02.2025 வரை சென்னையில் உள்ள இந்திய பட்டயக் கணக்காளர்கள் (ICAI) நிறுவனத்தில் வழங்கப்பட்டது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

பணியாளரின் சந்தாத் தொகை அவரது அடிப்படை சம்பளம் + அகவிலைப்படியில் 10% சதவிகிதத்தில் பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

பின்னர், பணியாளர்களின் சந்தாத் தொகைக்கு நிகரான அரசின் பங்குத் தொகை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

பணியாளர்களின் இருப்பில் உள்ள சந்தாத் தொகை, சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்ட மாதத்திலிருந்து பொது வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்படும் வட்டி விகிதத்தில் வட்டியை ஈனுகிறது.

பணியாளர்களின் சந்தாத் தொகை, அரசின் பங்குத் தொகை மற்றும் இருப்பின் மீதான வட்டி ஆகியவை அடங்கிய பங்களிப்பு ஓய்வூதியத்தின் இறுதி ஒப்பளிப்பு, பணி ஓய்வு, பணித்துறப்பு, பணி இறப்பு, பணி முறிவு ஆகியவற்றிற்குப் பின் பணியாளர்களுக்கு கருவூலம் மற்றும் கணக்குத் துறையின் ஆணையர் அவர்களால் வழங்கப்படுகிறது.

இதுவரை, 43,906 நபர்களுக்கு ரூ. 4,381.06 கோடி அளவிலான பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி ஒப்பளிப்புகள், கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆணையரகத்தின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டப் பிரிவால் வழங்கப்பட்டுள்ளன.

அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS)

தற்பொழுது, அடிப்படை சம்பளம் + அகவிலைப்படியில் 10% சம்மந்தப்பட்ட அலுவலர்களின் சந்தாத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்டு, அவர்களின் அடிப்படை சம்பளம் + அகவிலைப்படியில் 14% அரசின் இணைப் பங்களிப்பாக இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படுகிறது.

என்.எஸ்.டி.எல். (NSDL) நிறுவனத்தை மைய ஆவண வைப்பு நிறுவனமாக (Central Record Keeping Agency) நியமனம் செய்தும், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையத்தினை (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளராகவும் (Pension Fund Manager) மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் (Annuity Service Provider) நியமித்தும் 28.06.2017 அன்று தமிழ்நாடு அரசினால் ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

319 அகில இந்திய பணி அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதியத்திட்ட சந்தாத் தொகை மற்றும் அரசின் இணை பங்களிப்பு தொகையாக ரூ.68.89 கோடி என்.எஸ்.டி.எல் (NSDL) நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

தலைமை தணிக்கை இயக்குநர்

தணிக்கைத் துறைகளில் அடிப்படைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என இந்த அரசு அறிவித்ததன் அடிப்படையில் அதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அனைத்து தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத் துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் 6 நபர்கள் மற்றும் இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் 868 நபர்கள், உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி ஆய்வாளர் 44 நபர்கள், இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கைத் துறை தணிக்கை ஆய்வாளர் 29 நபர்கள் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட மற்றும் பதவி உயர்வு பெற்ற மொத்தம் 947 பணியாளர்களுக்கு ரூ.4,68,39,938/- அனுமதிக்கப்பட்டு ஒருங்கிணைந்த அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

தலைமை தணிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் தீவிர கண்காணிப்பின் கீழ் உட்படுத்துவதற்கு, இணைய அடிப்படையிலான ஒருங்கிணைந்த தணிக்கை மேலாண்மை அமைப்பினை (CAMS) உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்ட செயலாக்கத்தினை பாரபட்சமற்ற முறையில் மதிப்பீடு செய்யவும், திட்ட செயலாக்கத்திற்கான பொறுப்புடைமையை அதிகரித்திடும் பொருட்டும் செயல்திறன் தணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் 12 செயல்திறன் தணிக்கை அறிக்கைகளும் மாநில அரசு தணிக்கைத் துறையால் 10 செயல்திறன் தணிக்கை அறிக்கைகளும் பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையால் 4 செயல்திறன் தணிக்கை அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

தணிக்கை நடைமுறையினை எளிதாக்கும் பொருட்டும் சிறிய நிறுவனங்களின் தணிக்கையினை இலகுவாக்குதற்கும் சரிபார்ப்பு பட்டியல் அடிப்படையிலான தணிக்கை முறை நடப்பு நிதியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசின் தணிக்கை செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த, வருடாந்திர தணிக்கை திட்டங்கள், இடர் அடிப்படையிலான தணிக்கை உத்திகள், புள்ளியியல் மாதிரி முறைகள், IDEA தரவு பகுப்பாய்வு மென்பொருள் ஐந்து தணிக்கை துறைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத்துறை

கடந்த நான்காண்டுகளில் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் மிக அதிக அளவில் சிறுசேமிப்பு வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம், அஞ்சலக தொடர் வைப்பு திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் ஆகிய திட்டங்களில் சிறுசேமிப்பு வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும், மகளிர் முகவர்கள்(MPKBY), மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும், நிலை முகவர்கள் (SAS) ஆகியோருக்கு ரூ.9.68 இலட்சம் செலவில் வெகுமதிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

உலக சிக்கன நாள் கொண்டாட்டங்கள்

உலக சிக்கன நாள் விழாவில் மாணவர் / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை, ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டும், மாவட்ட அளவில் கட்டுரை, நாடகம், நடனம் மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு, சிறந்து விளங்கும் முதல் மூன்று மாணவ / மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தலா ரூ.3.30 இலட்சம் செலவில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பு நாடகங்கள் :

பொது மக்களிடையே சிறுசேமிப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குறிப்பாக கிராமப்புற மக்களை அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ஈர்க்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகளில் சிறுசேமிப்பு குறித்து நாடகங்கள் நடத்த ஒவ்வொரு ஆண்டும் ரூ.10 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

அரசு பொருட்காட்சிகள்

2022–2023 ரூ.2.38 இலட்சமும், 2023–2024 ரூ.2.50 இலட்சமும், 2024–2025 ரூ.2.70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், சென்னை அரசு நடத்தும் பொருள்காட்சிகளில் சிறுசேமிப்புத்துறை பங்கேற்று, அரங்குகளில், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும், சிறுசேமிப்புத்துறை செயலாற்றி வருகிறது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ.699,28,73,151/- நன்கொடையாக பெறப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்தொற்று இரண்டாம் அலையின்போது அரசு மருத்துவமனைகளுக்கு ரெம்டெசிவிர் மருந்து, திரவ ஆக்ஸிஜன் உருளைகள், ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், மின்பணிகளுக்கு தேவையான டீசல் ஜெனரேட்டர்கள், இதர மருத்துவ கருவிகள், ஆர்.டி.பி.சி.ஆர்.உபகரணங்களை வாங்குவதற்காகவும்,கொரோனா மூன்றாம் அலை முன்னெச்சரிக்கை முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ரூ.259,96,00,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கருப்பு பூஞ்சை நோய் சிகிச்சைக்காக ஆம்போடெரிசின் உள்ளிட்ட அனைத்து உயிர் காக்கும் மருந்துகளையும் வாங்குவதற்காக ரூ.25,00,00,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கு காலத்தில் வீதிகளில் போதிய உணவு கிடைக்காமல் அல்லல்படும் ஆதரவற்ற கால்நடைகளுக்கு தீவனப் பொருள்களை கொள்முதல் செய்வதற்காக ரூ.9,20,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பினால் பெற்றோர் இருவரையும் இழந்த 401 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5,00,000/- வீதம் வைப்பீடு செய்வதற்காக ரூ.20,05,00,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19பெருந்தொற்றுபாதிப்பினால்தாய்அல்லதுதந்தையை இழந்த 15,365 குழந்தைகளுக்கு தலா ரூ.3,00,000/- வீதம் ரூ.4,16,45,94,000/- நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று பாதிப்பினால் தாய் அல்லது தந்தையை இழந்த முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் 9 குழந்தைகளுக்கு தலா ரூ.3,00,000/- வீதம் ரூ.27,00,000/- நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்தொற்றால் உயிரிழந்த 25 செய்தியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு (4 நபர்களுக்கு தலா ரூ.5,00,000/- வீதமும் மற்றும் 21 நபர்களுக்கு தலா ரூ.10,00,000/- வீதமும்) மொத்தம் ரூ.2,30,00,000/- நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்று தடுப்புப்பணியின்போது கொரோனா தொற்றால் உயிரிழந்த முன்களஅரசுப் பணியாளர்கள் 447 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ-25,00,000/- வீதம் ரூ.1,11,75,00,000/- நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோய் பணியின்போது எதிர்பாராத விதமாக விபத்தில் உயிரிழந்த அரசு பணியாளர்கள், கொரோனா நோய்தொற்றினால் உயிரிழந்த தற்காலிக முன்கள ஒப்பந்த பணியாளர்கள் 26 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5,00,000/- வீதம் ரூ.1,30,00,000/- நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் தவறி விழுந்தது, வெடி மற்றும் தீ விபத்து, மின்சாரம் தாக்கியது, பாம்பு/ விஷப்பூச்சி கடித்தது போன்ற பல்வேறு எதிர்பாரா நிகழ்வுகளில் உயிரிழந்த 2,122 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.23,37,62,900/- நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி பயிலும் 225 ஏழை எளிய மாணவர்களுக்கு (தலா ரூ.50,000/-அல்லது ரூ.25,000/- வீதம்) ரூ.1,12,75,000/- தொழிற்கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் காயமடைந்த / உயிரிழந்த 2,583 நபர் / குடும்பங்களுக்கு சிறப்பு நிகழ்வாக கருதி ரூ.139,45,04,802/- நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF)

TNSF பொதுமக்கள் வாங்கக்கூடிய மலிவு விலை இல்லங்கள் மற்றும் தங்கும் இடங்களை உருவாக்க, தனியார் மற்றும் பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்பு திட்டங்களில் கீழ்கண்ட முறைகளில் முதலீடு செய்கிறது:

பொருளாதாரத்தில் பின்தங்கியோர், குறைந்த மற்றும் நடுத்தர குடும்பத்தினருக்கான மலிவான வீட்டு வசதி,

தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி,

உழைக்கும் பெண்களுக்கு தங்கும் வசதி,

முதியோர் மற்றும் உதவி நாடுவோர்களுக்கான தங்கும் வசதி,

மாணவர்கள் மற்றும் கூட்டாக தங்கும் (co-living) வசதி.

தோழி - உழைக்கும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள்

ஒரு முன்னோடி திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசு, TNIFCMஇன் TNSF மூலம் 1,800 படுக்கைகள் கொண்ட 16 பணிபுரியும் பெண்கள் விடுதிகளை உருவாக்க நிதி அளித்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதற்கட்ட விடுதிகள் 2023-ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்டங்களில் திறக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் 4,300 படுக்கைகள் கொண்ட விடுதிகள் உருவாகும் பணி நடைபெற்று வருகிறது.

தொழில் மையங்களில் தங்கும் விடுதிகள் திட்டம்:

மின்னணு பொருள்கள் தயாரிக்கும் நிறுவனத்துடன் இணைந்து 14,308 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் விடுதி உருவாக்க ஒரு பிரத்யேக சிறப்பு நிறுவனம் (SPV) அமைக்கப்பட்டு, 6,000 படுக்கைகள் கொண்ட திட்டத்தின் முதல் கட்டம் தங்குவதற்கு தயாராக உள்ளது.

தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (SIPCOT உடன் இணைந்து) மூலம் 5 SIPCOT இல் 4,300 படுக்கைகள் கொண்ட தொழில்துறை வீட்டுத் திட்டங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு முழுவதும் 2,800 படுக்கைகள் கொண்ட தொழில்துறை குடியிருப்புகளை உருவாக்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மலிவு விலை வீடுகள் துறையில், திருமழிசையில் ஒரு தனியார் டெவலப்பருக்கு 2,300 மலிவு விலை வீடுகள் திட்டத்திற்கும், ஆம்பூரில் 1,000 யூனிட் திட்டத்திற்கும் TNSF நிதியளித்துள்ளது.

பொள்ளாச்சியில் 80 அலகுகள் கொண்ட முதியோர் வாடகை வீட்டுத் திட்டத்திற்கும் TNSF நிதியளித்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் நான்கு நகர்ப்புற மையங்களில் மலிவு விலை வீட்டுத் திட்டங்கள் மற்றும் வாடகை விடுதிகள் உருவாக்க TNIFMC சர்வதேச நிதி நிறுவனத்துடன் (International Finance Corporation) கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

TNSF முதலீடுகளின் மூலம்:

25,000க்கும் அதிகமான மலிவு வாடகை வீட்டு வசதிகள்.

3,000க்கும் மேலான மலிவு வீடுகளுக்கான பணி நடைபெறுகிறது.

பசுமை சான்றிதழின் கீழ் சுமார் 1 மில்லியன் சதுர அடி கட்டமைப்பு உருவாக்குதல்.

எங்கள் திட்டங்களின் மூலம் 30,000க்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெற்றுள்ளனர்.

சுமார் 185 MT கார்பன் உமிழ்வைக் குறைத்தல்.

தமிழ்நாடு வளர்ந்துவரும் துறை விதை நிதியம் (TN Emerging Sector Seed Fund)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் TNESSF 23 ஜனவரி, 2023 அன்று தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம், தமிழ்நாடு அரசு, TIDCO மற்றும் TIDEL பூங்கா ஆதரவுடன் தமிழ்நாடு சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களில் (MSMEs) முதலீடு செய்வதற்கு TNESSF அமைக்கப்பட்டு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் இந்நிதியில் ரூ.5 கோடி முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது.

TNESSFஇன் முக்கிய கவனமாக, வான்வெளி மற்றும் பாதுகாப்பு, காலநிலை தொழில்நுட்பம்/மின் வாகனம், மருந்து உற்பத்தி/உயிரி தொழில்நுட்பம், எண்முறை தளங்கள்/இணையம் 3.0, செயற்கை நுண்ணறிவு/இயந்திர கற்றல் மற்றும் ஆழ் தொழில்நுட்பம், மேம்பட்ட உற்பத்தி, வேளாண் தொழில்நுட்பம்/வேளாண் வர்த்தகம் ஆகிய துறைகளாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு இதுவரை 13 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 51.6 கோடி மதிப்பில் முதலீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக 2023–ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தமிழ்நாட்டில் முன்னிலை முதலீட்டாளராக (வென்ச்சர் இன்டலிஜென்ஸ் தரவுத்தளத்தின்படி) உள்ளது.

இந்த முதலீடுகள் மூலம், ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் இணைந்து, இந்த நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தாக்கங்கள்:

விநியோக சங்கிலியில் உணவு கழிவுகளை சுமார் 12% குறைத்தல்.

800 MT கார்பன் உமிழ்வைக் குறைத்தல்.



இறுதி நிலை பயன்பாட்டிற்கு 1,000 க்கும் அதிகமான EV வாகனங்கள்.

முதலீடு செய்துள்ள நிறுவனங்களில் 30% பெண் தொழில்முனைவோரால் நிறுவப்பட்டவையாக உள்ளது.

30,000 வேலைவாய்ப்புகள் ஏற்பட உள்ளது.

தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TN Green Climate Fund)

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் 03 ஆகஸ்ட் 2023 அன்று TNGCF நிறுவுவதற்கு இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) அனுமதியைப் பெற்றுள்ளது. இந்த நிதியானது ரூ.800 கோடி மதிப்பிலான சாத்தியமான முதலீட்டு வாய்ப்புடைய 24 திட்டங்களை ஆய்வுக்கு கொண்டுள்ளது. நிதியின் வாழ்நாள் முழுவதும் 25 மில்லியன் மெட்ரிக் டன் கார்பன் வெளியேற்றத்தை குறைக்க இந்த நிதி இலக்கை நிர்ணயித்துள்ளது, இதன்மூலம் 2070க்கு முன் நிகர பூஜ்ஜியத்தை அடைவதற்கான தமிழ்நாடு அரசின் இலக்குக்கு பங்களிக்கிறது.

தொல்லியல் துறை

ரூ.16.93 கோடியில் சர்ஜாமாடி, தஞ்சாவூர், டேனிஷ்கோட்டை, தரங்கம்பாடி மற்றும் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொற்கையின் கரையோரப் பகுதிகளில் முன்கள ஆய்வு ரூ.150 இலட்சத்தில் மேற்கொள்ளத் திட்டம். இதில் தொல்லியல் துறையால் ரூ.64 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, இரண்டு கட்ட கள ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் அகழாய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ளத் தொடரும் செலவினமாக ரூ.5 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிவகங்கை மாவட்டம், கீழடியில் புதிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு 34 புதிய பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு பணியாற்றிவருகிறார்கள்.

தொல்பொருட்கள் மற்றும் கல்வெட்டுகளை மின்னணு முறையில் ஸ்கேன் செய்ய ரூ.60 இலட்சத்தில் இரண்டு உயர்நிலை கையடக்க 3D ஸ்கேனர் மற்றும் உபகரணங்கள்.

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருள்களைக் காட்சிப்படுத்த திருநெல்வேலி நகரில் 13 ஏக்கர் பரப்பளவில் ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் "பொருநை அருங்காட்சியகம்" அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டது.

45-ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் 5,000 சதுர அடியில் அமைக்கப்பட்ட பொருநை கண்காட்சி அரங்கு ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின்போது கிடைத்த அரிய தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் லித்திக் டெக்னாலஜி எனப்படும் கற்தொழில்நுட்பம் குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம்.

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2022-ஆம் ஆண்டில் "பண்டைய தமிழ்ப்பண்பாடும் மரபும்" என்னும் தலைப்பிலும் 2023-ஆம் ஆண்டில் "தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளில் தற்கால முன்னேற்றங்கள்"என்னும் தலைப்பிலும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

உலக மரபு வார விழாவினை (2022 நவம்பர் 19-25) கொண்டாடும் வகையில் இத்துறையின் அனைத்து அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்கள் வாயிலாக தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பணிப்பட்டறைகள், போட்டிகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் போன்றவை நிகழ்த்தப்பட்டன.

அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள்களின் சிறப்புக் கண்காட்சி சிவகங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் ரூ.18.42 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தரம் வாய்ந்த புதிய அகழ்வைப்பகத்தினை 05.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்து பார்வையிட்டார்கள்.

தொல்லியல் துறையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடிடும் வகையில் துறையின் சார்பில் தஞ்சையில் செப்டம்பர் 2023-இல் "அண்மைக்கால ஆய்வுகள் காட்டும் தமிழக வரலாறு" என்ற தலைப்பில் மாநிலக் கருத்தரங்கமும், மதுரையில் நவம்பர் 2023-இல் "தொல்லியல் நோக்கில் பண்பாட்டு வளர்ச்சியின் பிரதிபலிப்பு"என்றதலைப்பில்தேசியகருத்தரங்கமும்,சென்னையில்டிசம்பர்2023-இல்"தொன்மைத் தமிழகம்" என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கமும் மற்றும் பள்ளி மாணவர்களிடையே "பண்டைத் தமிழ்ச் சமூகம்" என்ற தலைப்பில் கட்டுரை போட்டிகள் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ்வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல்பழங்கால அகழ்வைப்பகம், தருமபுரியில் உள்ள நடுகற்கள் அகழ்வைப்பகம் ஆகிய மூன்று அகழ்வைப்பகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட பொதுப்பணித் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின்தொன்மையானபண்பாட்டுமரபுகளைகாலவரிசைப்படிஅறிந்துகொள்வதற்காக தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் வரலாற்று நிலவரைபடத் தொகுதி (Atlas) தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிந்துவெளி முத்திரைகளுக்கும் குறியீடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆய்வு செய்வதற்கான பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துகளை ஆவணப்படுத்துதல், மின்பதிப்பாக்கம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்சுழி, புதுப்பட்டி, சேவல்பட்டி, பதினாலாம்பேர் மற்றும் மூவறை வென்றான் ஆகிய இடங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ள சிந்துவெளி ஆய்வு மையத்திற்கு அகழாய்வு மற்றும் பிற திட்டங்கள் மூலம் தொல்லியல் துறையால் உருவாக்கப்பட்ட அறிவுச் செல்வத்தினை அடையாளம் காணுதல், இணைத்தல், தொகுத்தல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு நிதி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் சார்பில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு 05.01.2025 முதல் 07.01.2025 வரை மூன்று நாள்களுக்கு சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வினை 05.01.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு பின்வரும் மூன்று முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

திருச்சுழி, புதுப்பட்டி, சேவல்பட்டி, பதினாலாம்பேர் மற்றும் மூவறை வென்றான் ஆகிய இடங்கள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ள சிந்துவெளி ஆய்வு மையத்திற்கு அகழாய்வு மற்றும் பிற திட்டங்கள் மூலம் தொல்லியல் துறையால் உருவாக்கப்பட்ட அறிவுச் செல்வத்தினை அடையாளம் காணுதல், இணைத்தல், தொகுத்தல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு நிதி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் சார்பில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு பின்வரும் மூன்று முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை தெளிவாகப் புரிந்துகொள்ள உதவும் வழிவகையைக் கண்டறியும் அமைப்பு அல்லது நபருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்து ஆய்வு மையமும் இணைந்து மேற்கொள்ளும் வகையில், சிந்துவெளி பண்பாடு குறித்தான ஆராய்ச்சிக்கு அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்களின் பெயரில் ஆய்வு இருக்கை அமைக்கும் பொருட்டு இரண்டு கோடி ரூபாய் நிதி நல்கை வழங்கப்படும்.

தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகம் அறிந்து கொள்ளும் வகையில் அயராது உழைக்கும் தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி கல்வெட்டியல் ஆய்வாளர்கள் மற்றும் நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இரும்பின் தொன்மை என்ற நூல் வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக உலகளவில் இரும்புத் தாதுவிலிருந்து, இரும்பை பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் இருந்தே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பெருமையோடு அறிவிக்கப்பட்டது.

கங்கைகொண்டசோழபுரத்தில் ரூ. 22.10 கோடி மதிப்பில் ஒரு அருங்காட்சியகம் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.01.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கீழடி அகழாய்வுத் தளத்தில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் ரூ.17.10 கோடி செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.01.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தொல் மரபணுவியல் ஆய்வகம் மூலம் தொல்மரபியல் ஆய்வு மேற்கொள்ள ரூ.3 கோடி நிதி நல்கை செய்யப்பட்டுள்ளது.

தேசிய கடல்சார் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, கொற்கை மற்றும் சங்ககாலப் பாண்டியரின் துறைமுகமான அழகன்குளம் ஆகிய பகுதிகளின் கடலோரங்களில் ரூ.65 இலட்சம் செலவில் முன்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளிக்கொணரும் கல்வெட்டு முனைப்புத் திட்டம் (ஐந்தாண்டுத் திட்டம்) ரூ.3.5 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் அடிப்படை வசதிகள் ஆகியவை ரூ.2.80 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மனோரா நினைவுச் சின்னத்தில் உட்கட்டமைப்பு மற்றும் முகப்பு மின் விளக்குகள் மற்றும் பண்டைய நுழைவாயில் போன்ற கதவுகள் ஆகியவை ரூ.2.75 கோடி செலவில் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்திட ஏதுவாக புதிதாக அருங்காட்சியகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நொய்யல் ஆற்றின் வடக்கு கரையில் இருக்கும் கொடுமணல் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அடுத்த தலைமுறையினர் அறிந்துகொள்ள, காட்சிப்படுத்திட கொடுமணலில் தகவல் மையம் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பில் அருங்காட்சியகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

தமிழ்நாடு அரசு, காலநிலை மாற்ற தணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.500 கோடிச் செலவில் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படும் என அறிவித்தது. மாநிலத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும், நீண்ட கால அடிப்படையில் அவற்றை மீட்டெடுப்பதற்கும் தேசிய அளவில் முதன்முறையாக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, பெங்களூருவில் உள்ள இந்திய மனிதக் குடியிருப்புகளுக்கான நிறுவனத்துடன் இணைந்து, சென்னை, கோயம்புத்தூர், கரூர், ஈரோடு, திருப்பூர், கடலூர், கும்பகோணம், சிவகாசி, வேலூர், நாகர்கோவில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், சேலம், ஆவடி, திருச்சி, திண்டுக்கல், மதுரை, தாம்பரம் மற்றும் ஓசூர் ஆகிய தமிழ்நாட்டின் 21 மாநகராட்சிகளிலும் "ஆற்றல் திறன் கொண்ட வாழ்விடங்கள்" குறித்த பட்டறைகளை கட்டுமான நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு நலச் சங்கங்களுக்கு நடத்தியது.

நாகப்பட்டினத்திலுள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயம் மற்றும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆகிய இடங்களில் காலநிலை மீள்தன்மை மற்றும் நிலையான நடவடிக்கைகளை இணைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைக்கு இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்திற்கான விரிவான திட்ட அறிக்கை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் மற்றும் அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தின் பேராயர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஸ்டான்லி, மற்றும் ராஜீவ் காந்தி ஆகிய மருத்துவக் கல்லூரிகளில் நிலையான நடவடிக்கைகளுடன் காலநிலை மீள்தன்மையை சேர்ப்பதற்காக உரிய நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது. கடலோர மண்டல மேலாண்மையில்



வெளிப்படைத்தன்மைக்காக, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையானது. தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மைக் குழுமத்திற்காக www.tnsczma.tngov.in என்ற தனித்தொரு வலைதளம் ஒன்றை புதிதாக தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசானது அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கு மதிப்புமிக்க நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான நோக்கத்திற்காக மொத்தம் ரூ.100 கோடி செலவில் செயல்படுத்தியிருப்பதாக அறிவித்தது. தற்போது, சென்னை மெரினா கடற்கரை, அரியாமான் கடற்கரை, இராமநாதபுரம், இராமேஸ்வரம் கடற்கரை, நாகப்பட்டினம் மற்றும் சில்வர் கடற்கரை, கடலூர் ஆகிய கடற்கரைகளில் செயல்திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது, மீதமுள்ள ஆறு கடற்கரைக்களுக்கு அடிப்படை ஆய்வும் மற்றும் விரிவான திட்ட அறிக்கையும் (DPR) தயாரிக்கப்பட்டு வருகிறது.

காலநிலை மையமானது காலநிலை மாதிரியாக்கத்திற்கான உயர் செயல்திறன் கணக்கீட்டு வசதிகள், தொகுப்பு மற்றும் துணைக் கருவிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த காலநிலை மையமானது அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கார்பன் செறிவூட்டல் திட்டமானது திடக்கழிவுகளிலிருந்து பெறப்பட்ட ஊட்டச்சத்து நிறைந்த மண்ணை பயன்படுத்துவது மூலம் கார்பனை சேமித்து தாவரங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்ட திட்டமாகும். உயிர்க்கழிவிருந்து பெறப்பட்ட ஊட்டச்சத்து நிறைந்த மண்ணைக் கொண்டு மதுரப்பாக்கம் காப்புக் காடுகளில் சுமார் 6000 மரக் கன்றுகள் 2023 அக்டோபர் முதல் வாரத்தில் நடவு செய்யப்பட்டுள்ளன.

காலநிலை எதிர்வினையை அடிமட்ட அளவில் வலுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு, மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் தலைவராகவும் மற்றும் மாவட்ட வன அலுவலர் மாவட்ட காலநிலை அதிகாரியாகவும் செயல்படுவார்கள்.

தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பசுமைப் புத்தாய்வு திட்டத்திற்கு ரூ.6 கோடியை ஒதுக்கியுள்ளது. மாவட்ட நிர்வாகத்திற்கு உறுதுணையாக அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த 40 பசுமை தோழர்கள் தேர்வு செய்யப்பட்டு முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டம் செயல்படுத்தப்பட்டது. மொத்தம் 40 பசுமை தோழர்கள் தேர்வு செய்யப்பட்டு, 3, ஆகஸ்டு 2023-இல், மாநில அளவில் 2 பசுமை தோழர்கள், ஒரு மாவட்டத்திற்கு ஒரு பசுமை தோழர் வீதம் 38 மாவட்டங்களுக்கு 38 பசுமை தோழர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் ஜூலை 2025 வரை 2 ஆண்டுகள் பணியாற்றுவார்கள்.

பசுமை பள்ளிகள் சூரிய ஒளியைப் பயன்படுத்துதல் மற்றும் சூரிய சக்தி பம்புகளைப் பயன்படுத்துதல், சூரிய சக்தி ஆழ்துளை கிணறு அமைத்தல், மழை நீர் சேகரிப்பு திட்டம், உரம் தயாரித்தல், காய்கறித் தோட்டம் உருவாக்குதல், மருத்துவத் தோட்டம் மற்றும் பழ மரங்களை நடுதல், நீர் பயன்பாட்டைக் குறைத்தல், கழிவு நீரை மறுசுழற்சி செய்தல், பிளாஸ்டிக் இல்லாத சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு பசுமை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் கீழ் 25 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் வீதம் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தால் விடுவிக்கப்பட்டது. 2023-2024 ஆம் ஆண்டிற்கான பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் கீழ் 46 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் வீதம் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தால் விடுவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 2023-2024 ஆம் ஆண்டிற்கான பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் கீழ் 26 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ஒரு பள்ளிக்கு ரூ.20 இலட்சம் வீதம் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தால் விடுவிக்கப்பட்டது. மேலும் 2024-2025 ஆம் ஆண்டிற்கான பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் கீழ் 100 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் வளாகத்தில் நிலையான நடைமுறைகள் மற்றும் பசுமை உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக ஒரு பள்ளிக்கு தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு பசுமைக் கரங்கள் திட்டம் தமிழ்நாட்டில் இயற்கை சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நகரங்களுக்கான பசுமை குறியீடு திட்டம் தமிழ்நாடு அரசால் தொடக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், மாவட்டங்கள் மற்றும் நகராட்சிகள் முழுவதும் பயனுள்ள காலநிலை நிர்வாகத்தை நிறுவனமயமாக்குவதற்கு இந்தத் திட்டம் மிகவும் முக்கியமானது தமிழ்நாடு மற்றும் அதற்கு அப்பாலும் காலநிலைக்கு ஏற்ற எதிர்காலத்திற்கு உதவக்கூடிய சுற்றுச்சூழல்

கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது நிலையான தமிழ்நாடு திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது மாநிலத்தில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணிக்க மாணவர்கள், தனி நபர்கள், குழுக்கள் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை கண்டறியும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

அரசு மாண்புமிகு முதலமைச்சர் நீர்நிலைப் பாதுகாவலர் விருதினை அறிவித்துள்ளது.

மாநிலத்தின் நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கு தங்களை அர்பணித்துக்கொண்ட தனிநபர்/ நிறுவனங்கள் / தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகள் ஆகியோரை கௌரவிக்கும் நோக்கில் ரூ.1 இலட்சம் பரிசாகவும் மற்றும் விருதும் வழங்கப்படுகிறது.

அரசு நாள்தோறும் நலவாழ்வு திட்டம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டமானது மாநிலம் முழுவதும் உள்ள சமூகங்களுக்கான சுகாதார விளைவுகளை மேம்படுத்த பல்வேறு துறைகளிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாநிலம் முழுவதும் தொடர்ச்சியான காற்று மற்றும் நீர் தர கண்காணிப்பு நிலையங்களை நிறுவி அதன் மூலம் விரைவான மாசு கண்காணிப்பு மற்றும் அவற்றை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு சுற்றுச்சூழல் கண்காணிப்பை மேம்படுத்தியுள்ளது.

நிகழ் நேர நீர் தரக் கண்காணிப்பு நிலையங்கள் ஆற்று நீரின் தரத்தினை தொடர்ந்து கண்காணித்து அதன் தரவுகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் பதிவேற்ற ஏதுவாக செயல்படுகிறது. இதன் மூலம் மாசு காரணிகள் கண்டறியப்பட்டு தொழிற்சாலை செயல்பாடுகளின் தாக்கம் மதிப்பிடப்படுகிறது. மேலும், இது நதி நீரின் தரத்தை பாதுகாக்க பயனுள்ள மாசு குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. இக்கண்காணிப்பு நிலையங்கள், காலிங்கராயன் கால்வாய், பவானி, நொய்யல் ஆறுகள் மற்றும் தென்பெண்ணை உள்ளிட்ட ஆற்றின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் உரிய நேரத்தில் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இப்பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2024 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்தை வாரியம் நிறுவி, அபாயகர கழிவுகள், மருத்துவ கழிவுகள், மின்னணு கழிவுகள், தொழில்துறை கழிவுகள் மற்றும் "குறுங்காடுகள்" ஆகியவற்றை கண்காணிக்கிறது. இது, இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை, இணையவழி புகார் மனு நிவாரண முறைமை, இணையவழி வழக்குகள் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை, ஒருங்கிணைந்த ஆய்வகக் கண்காணிப்பு போன்ற செயலிகளை ஒருங்கிணைக்கிறது. மேலும், 38 தொடர் சுற்றுச்சூழல் காற்று தர கண்காணிப்பு நிலையங்கள், நிகழ் நேர உமிழ்வு கண்காணிப்பு மற்றும் தொழிற்சாலை கழிவு நீர் கண்காணிப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. கூடுதலாக, இதில் ஆறுகளின் நீர் தரத்தை கண்காணித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளால் இயக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPs) ஆகியவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வையிடப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் குறிப்பிடத்தக்க திட்டமாக 2021-இல் அறிமுகமான "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த துணிபையை நெகிழிக்கு மாற்றாக பயன்படுத்த ஊக்குவிக்கிறது. சமூகம் சார்ந்த இப்பிரச்சாரமானது, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக மஞ்சப்பைகளை பரவலாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. இது அந்ததந்த பகுதிகளில் தயாரிக்கப்படும் சுற்றுச்சூழல் மாற்று பொருள்களின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதன் மூலம் பொது மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் உடன் இணைந்து, சென்னையில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில்

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், சுற்றுச்சூழல் மாற்று பொருள்களை ஊக்குவிக்கும் தேசிய கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. நாட்டிலேயே முதன்முறையாக இந்த நிகழ்வின் மூலம் பிளாஸ்டிக்கிற்கு மாற்று தயாரிப்புகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு ஊக்கமளித்து பொதுமக்கள் மத்தியில் இந்த மாற்று பொருள்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த தேசிய கண்காட்சி நாடு முழுவதும் உள்ள பங்கேற்பாளர்களால் பெரும் வரவேற்பைப் பெற்றது. 5,000க்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்துகொண்டனர், மேலும் 170-க்கும் அதிகமான அரங்குகள் நிறுவப்பட்டன. இக்கண்காட்சியில், பிளாஸ்டிக்கிற்கு மாற்றாகும் பொருள்களை விற்பனை செய்யும் வணிகர்கள், மாற்று தயாரிப்பு இயந்திரங்கள் மற்றும் மாசு கண்காணிக்கும் கருவிகளின் உற்பத்தியாளர்கள், நிதியியல் நிறுவனங்கள் ஆகியோர் பங்கேற்றனர். இக்கண்காட்சியின் ஒரு பகுதியாக, முக்கிய பேச்சாளர்கள் மற்றும் முன்னணி கல்வி, தொழில் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கொண்ட ஐந்து குழு விவாதங்கள் நடத்தப்பட்டன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களின் பயன்பாட்டை மேம்படுத்த, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பொது இடங்களில் "தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள்" நிறுவப்பட்டுள்ளன. இது நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு இதன் மூலம் பல்வேறு மாநிலங்களில் பின்பற்றப்பட்ட ஒரு முன்முயற்சியாகும். மார்ச் 2025 நிலவரப்படி, 38 மாவட்டங்களில் 203 இயந்திரங்கள் நிறுவப்பட்டு 4.2 இலட்சம் துணிப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 அக்டோபரில் "மஞ்சப்பை படையணி" (Manjappai Brigade) சென்னை மாநகரத்தில் அறிமுகமாகி, மின்சார இருசக்கர வாகனங்கள் மூலம் பிளாஸ்டிக் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. முதற் கட்டமாக 14,000 இடங்களில் 1,25,000 மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது விரிவுப்படுத்தப்பட்டு, 44 சுற்றுச்சூழல் வீரர்கள் சென்னை (மெரினா கடற்கரையில் செயல்படும் "நீலப்படையணி" உட்பட), ஊட்டி, கோயம்புத்தூர் மற்றும் கொடைக்கானலில் செயல்பட்டு வருகின்றனர்.

நெகிழி தடுப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை இயக்கத்தை வலுப்படுத்த, சென்னையின் பெசன்ட் நகர் மற்றும் நீலாங்கரை கடற்கரையில் "மஞ்சப்பை கியோஸ்க்" (Manjappai Kiosks) நிறுவப்பட்டுள்ளது. இவை சூரிய ஆற்றலில் இயங்கும் நிலையங்களாக செயல்பட்டு, மஞ்சப்பை விற்பனை இயந்திரம், பிளாஸ்டிக் மீள்வாங்கும் இயந்திரம் மற்றும் விழிப்புணர்வு வீடியோக்களை கொண்டு இயங்கின்றன. மேலும் இம்மையங்கள் மூலம், வாரந்தோறும் பள்ளி குழந்தைகளுக்கு பிளாஸ்டிக் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இம்முயற்சியின் நிலைத்தன்மை மற்றும் நீண்ட கால செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் ஒழுங்கமைப்பதற்கும் உள்ளூர் தொழிற்சாலைகளுடன் கூட்டாண்மைகள் நிறுவப்பட்டுள்ளன.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் மற்றொரு முக்கிய முயற்சியாக, 25.01.2025 அன்று மாநிலம் தழுவிய விரிவான தூய்மைப்படுத்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு இயக்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இயக்கம் மூன்று முதன்மை செயல்பாடுகளை உள்ளடக்கியது: பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து அகற்றுவதை உறுதி செய்வதற்கான பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம், பொது இடங்களை சுத்தம் செய்வதில் பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்டோரை ஈடுபடுத்துதல், பிளாஸ்டிக் மாசுபாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஆகியனவாகும். இந்த செயல்பாடு 2025 ஆம் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் 4-ஆவது சனிக்கிழமையன்று அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நகர பஞ்சாயத்துகள் மற்றும் கிராமத் தொகுதிகளில் நடத்தப்பட்டு பிளாஸ்டிக் மாசுபாட்டைக் கையாள்வதில் குடிமக்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் தொடர்ச்சியான ஈடுபாட்டை உறுதி செய்யும்.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் 13.11.2024 அன்று "சுற்றுச்சூழல் மாற்று தீர்வுகள் மாநாடு" (Eco-Alternatives Conclave) நிகழ்வை நடத்தியது. இந்த மாநாட்டில் உற்பத்தியாளர்கள், தொழில் நிபுணர்கள், மற்றும் அரசியல் நிலைப்பாட்டாளர்களை ஒன்றிணைத்து, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களுக்கான தடையை பயனுள்ள முறையில் செயல்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் மாற்று தொழில்களை வலுப்படுத்தும் உத்திகள்

குறித்து கலந்துரையாடப்பட்டது. நிகழ்வின்போது, புதுப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர் அடைவுப் பட்டியல் (Eco-Alternatives Directory) வெளியிடப்பட்டது. இதில் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களைச் சேர்ந்த 358 சுற்றுச்சூழலுக்கு தகுந்த பிளாஸ்டிக் மாற்று தயாரிப்பாளர்கள் பற்றிய மாவட்ட வாரியான விவரங்கள் அடங்கியுள்ளன.

சென்னை மாநகராட்சியின் மண்டலம் 13 & 14 இல், கழிவு சேகரிப்பை அதிகரிக்கவும், சுழற்சிபொருளாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் குப்பை சேகரிப்பாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும், சுழற்சி பொருளாதாரத்தில் குப்பை சேகரிப்பவர்களை பிரதானப்படுத்துதல் என்ற திடடத்தினைச் செயல்படுத்தியுள்ளது.

ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும், கார்பனை திறம்பட சேகரிப்பதற்கும், நாட்டு மர வகைகளைக் கொண்ட 1,000 குறுங்காடுகள் தொழிற்சாலைகளால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த முன்முயற்சி காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கும், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் நோக்கங்களை அடையவும் உதவுகிறது.

தொழிற்சாலைகளுக்கான தன்னார்வ பசுமை மதிப்பீடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.02.2025 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் செயல்திறன் மதிப்பிடப்பட்டு, சுத்தமான மற்றும் பசுமையான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படும். இந்த மதிப்பீட்டு முறையானது, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய சுற்றுச்சூழல் தரநிலைகளுடன் நிலையான நடைமுறைகளை நோக்கி தொழிற்சாலைகள் செல்வற்கு ஒரு ஊக்குவிப்பாக அமையும். பசுமை மதிப்பீடு மூலம் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளின் "பசுமை தடம்" மதிப்பீடு செய்யப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் முயற்சிகளுக்கு வழி வகுக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.02.2025 அன்று இணையவழி கழிவு பரிமாற்ற தளத்தை தொடக்கி வைத்தார். இது கழிவு உற்பத்தியாளர், கழிவு வாங்குபவர் (மறுசுழற்சி செய்பவர்), கழிவு மேலாண்மை நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைக்கும் இணைதள அடிப்படையிலான முயற்சியாகும். இது விலைமதிப்பற்ற மூலப்பொருட்கள்/வளங்களைப் பாதுகாக்கவும், சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவும்.

எண்ணெய் கசிவு மற்றும் அம்மோனியா வாயு கசிவு உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் சம்பவங்களைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 2024 ஆம் ஆண்டில் மணலி-எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றத்தை (MERRC) நிறுவியுள்ளது. இந்த சிறப்பு நோக்க வாகனம் சுற்றுச்சூழலை மறுசீரமைக்கும் வகையில் பசுமைப்படுத்துதல், நீர்நிலை மற்றும் சதுப்புநில சீரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை, மாசுக்கட்டுப்பாடு, மற்றும் சமூக உள்கட்டமைப்பு வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் (TNAU) இணைந்து, மண் தர வரைபடங்களை தயாரிக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம், தொழிற்சாலை மண்டலங்களைச் சுற்றியுள்ள மண்ணின் தரத்தை மதிப்பிடுவதையும், நிலச் சீரழிவைத் தடுப்பதையும் மற்றும் நிலையான நில பயன்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கடல் பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுக்கவும், கடல் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மீன் வலை முன்முயற்சிகளை (TNFI) மேற்கொள்ள அறிவுறுத்தியது. இந்த புதிய முயற்சியின் கீழ், முதல் கைவிடப்பட்ட மீன்வலை சேகரிப்பு மையம் 2024 ஆகஸ்ட் 14 அன்று சென்னை காசிமேட்டில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மையம் கைவிடப்பட்ட மீன்வலைகள் மற்றும் கடல் பிளாஸ்டிக் குப்பைகளை சேகரிக்கிறது, அவை பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன, இதுவரை சுமார் 10,000 கிலோ மீன் வலைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நிலைத்தன்மை பற்றிய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையால் வழிநடத்தப்படும் இந்த முயற்சியானது 14 கடலோர மாவட்டங்களில் இதேபோன்ற மையங்களுடன் விரிவடைந்து, கழிவுகளை மதிப்புமிக்க வளங்களாக மாற்றுவதன் மூலம் சுழற்சி பொருளாதாரத்தை வளர்க்கும்.






நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்



திரு. **எஸ்.ரகுபதி** அவர்கள்
மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர்



ரூ.3 கோடியில் உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் தமிழில் மொழிபெயர்ப்பு...

ரூ.1,082.23 கோடி செலவில் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ...

ரூ.151.66 கோடி செலவில் மாவட்ட நீதித்துறையில் 73 புதிய நீதிமன்றங்கள் ...

மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள்/ நியமனதாரர்கள் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதற்கான தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து, ரூ.10 இலட்சத்திற்கு உயர்வு...

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்துறை

ரூ.28.80 இலட்சம் தொடர் செலவினத்தில், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் பணிபுரியும் 24 மனநல ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியம் ரூ.15,000/- லிருந்து ரூ.25,000/-ஆக உயர்வு.

சிறைவாசிகளின் தேநீர் விடுதியில், வாரம் ஒன்றிற்கு சிறைவாசிகள் செலவு செய்யும் தொகையின் உச்சவரம்பினை, 'அ' மற்றும் 'ஆ' வகுப்பு சிறைவாசிகளுக்கு முறையே ரூ. 750/-லிருந்து ரூ. 1,000/- ஆகவும், மற்றும் ரூ. 450/-லிருந்து ரூ.750/- ஆகவும் உயர்வு.

ரூ.39 இலட்சம் கூடுதல் தொடர் செலவினத்தில், சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தொகை ரூ. 50/-லிருந்து ரூ. 100/- ஆக உயர்வு.

ரூ.21.60 இலட்சம் தொடர் செலவீனத்தில் அனைத்து மத்திய சிறைகள் (வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை தவிர), மாவட்ட சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் 12 சமூக இயல் வல்லுநர்களை, மாதம் ரூ.15,000/- மதிப்பூதியம் அடிப்படையில் நியமனம்.

அனைத்து வகையான சிறைவாசிகளையும் நல்வழிப்படுத்தி மறுவாழ்வு அளிக்க, "சீர்திருத்த சிறகுகள்" என்கிற புதிய திட்டம் ரூ.100.00 இலட்சம் செலவினத்தில் தொடக்க ரூ.93,72,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மத்திய சிறைகள் மற்றும் அனைத்து பெண்கள் தனிச்சிறைகளில் போதை ஒழிப்பு மறுவாழ்வு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் பெண்கள் தனிச்சிறைகளில் தலா ஒரு பெண் நல அலுவலர் பணியிடத்தினை ஆண்டுக்கு ரூ. 35.22 இலட்சம் தொடர் செலவினத்தில் உருவாக்கப்பட்டு,தற்பொழுது நல்ல முறையில் பணி செய்து வருகின்றனர்.

சிறைக் களப்பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தவும், காலத்தின் தேவைக்கேற்ப அவர்களை ஆயத்தப்படுத்தவும், சார்நிலை அலுவலர்களுக்கு (முதல் தலைமை காவலர்கள், உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை சிறை அலுவலர்கள் ஆகியோருக்கு) புத்தாக்கப் பயிற்சி மற்றும் இதர பதவி நிலைக்கான புத்தாக்கப் பயிற்சி (ஆர்சிஓஆர்) (முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டாம் நிலை காவலர்களுக்கு) ஆகிய இரண்டு வகையான புத்தாக்கப் பயிற்சிகள் திருச்சிராப்பள்ளி தற்காலிக சிறைக் காவலர் பயிற்சி மையம் மற்றும் சென்னை சிறைத்துறை தலைமையகத்தில் 08.04.2024 முதல் நடத்தப்பட்டு வருகின்றன.

ரூ.3.24 கோடி தொடர் செலவினத்தில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் களப்பணியாளர்களின் நலனுக்காக மிகை நேர பணிக்கான ஊதியம் ரூ.200/- லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு, 2,252 முதல் மற்றும் இரண்டாம் நிலை காவலர்கள் பயன்.

ரூ.83.48 இலட்சம் தொடர் செலவினத்தில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் களப்பணியாளர்களின் நலனுக்காக இடர்படி ரூ.900/- லிருந்து ரூ.1,000/- ஆக சிறை அலுவலர் முதல் சிறைகண்காணிப்பாளர் வரை மற்றும் ரூ.800/- லிருந்து ரூ.1,000/- ஆக இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரை உயர்த்தி வழங்கப்பட்டு, 3,526 களப்பணியாளர்கள் பயன்.

நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் ஆண்டுக்கு ரூ.26.00 கோடி கூடுதல் செலவில் சிறைவாசிகளுக்கான உணவு முறையானது மாற்றியமைத்திட அரசாணை வழங்கப்பட்டு, சிறைவாசிகளுக்கான உணவுமுறை திட்டம் புழல் மத்திய சிறை-II-இல் 05.06.2023 அன்று அமல்படுத்தப்பட்டது.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் நிர்வாகத்தை மேம்படுத்தும் பொருட்டு சிறைத்துறை துணைத் தலைவர் (தலைமையிடம்) என்ற பதவியை சிறைத்துறை துறை தலைவர் (தலைமையிடம்) என்று தரம் உயர்த்தும் பொருட்டு சிறைத்துறை தலைவர் (தலைமையிடம்) என்ற பதவி உருவாக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

சிறைவாசிகளின் மன அழுத்தத்தை குறைக்கவும் அவர்கள் தவறுகளை உணர்ந்து மேலும் குற்றங்களில் ஈடுபடுவதை தடுத்திடும் பொருட்டும், சிறைவாசிகள் தமது குடும்ப உறுப்பினர்கள் நண்பர்கள், வழக்குரைஞர்கள் ஆகியோரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளசிறைகளில் பொதுத்துறை நிறுவனங்களின் உதவியுடன் குரல் மற்றும் காணொளி தொலைபேசி வசதி அமைக்க அனுமதியும்,தற்போது வழங்கப்பட்டு வரும் தொலைபேசி வசதிக்கான கால அளவை மாதத்திற்கு 8 லிருந்து 10 முறை என 3 நாள்களுக்கு ஒரு முறை பயன்படுத்தவும், அதிகபட்சம் பேசுவதற்கான கால அளவை மாதத்திற்கு 56 நிமிடங்களிலிருந்து 120 நிமிடங்களாகவும் (ஒரு அழைப்பிற்கு 12 நிமிடங்கள் வீதம்) என உயர்த்தியும் அரசாணை பிறப்பித்துள்ளது. மேலும், புதிதாக 124 எண்கள் தொலைபேசி இயந்திரங்கள் சிறைகளில் நிறுவப்பட்டுள்ளது.

புழல் மத்திய சிறை-2இல் விசாரணை சிறைவாசிகளை நாள்தோறும் 1,000-த்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வருவதால். சிறைவாசிகள் சந்திப்பை எளிமைப்படுத்தும் விதமாகவும் இதற்கு முன்பதிவு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டு, 10 இணைப்புகள் கொண்ட தொலைபேசி எண் 044-26590000 நிறுவப்பட்டு, பார்வையாளர்கள் ஒரு நாள் முன்னதாக சிறைவாசியின் PID எண்ணைக் குறிப்பிட்டு முன் பதிவுசெய்வதன் மூலம் பார்வையாளர்கள் காலதாமதமின்றியும் கூட்ட நேரிசல் இன்றியும் தங்கள் உறவினர்களை சந்திக்கலாம்.

சிறைவாசிகளால் தயாரிக்கப்படும் சிறை சந்தை பொருள்களை "Freedom" என்ற குறியீட்டு பெயரில் தமிழ்நாடு காவலர் அங்காடிகளில் விற்பனை செய்வதற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டு சிறைத்துறை மற்றும் காவல்துறை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு தற்போதுதமிழ்நாடு காவலர் அங்காடிகளில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயின்சஸ் நிறுவனம், பிரயாஸ், சமூக நீதி மையம், காமன் காஸ், காமன் வெல்த் மனித உரிமை முன்முயற்சி, தக்ஷ, சட்டக் கொள்கைக்கான மையம் (விதி) ஆகியவற்றுடன் இணைந்து இந்திய நீதித்துறை அறிக்கையை வெளியிட்டது, அதில் தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை 2022-ஆம் ஆண்டில் இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது. நெரிசல் இல்லாத சிறைகள், சிறை துறையில் பெண் ஊழியர்கள் அதிக அளவில் நியமனம் மற்றும் குறைவானகாலி பணியிடங்கள் ஆகிய காரணிகளால் தமிழகத்தின் சிறைத் துறை நாட்டிலேயே முதலிடத்தை எட்டியுள்ளது என்று இந்திய நீதி அறிக்கை (IJR) தெரிவித்துள்ளது. தமிழ்நாடு சிறைத்துறை 2019-ம் ஆண்டில் 10 ஆவது இடத்தையும், 2020 இல் ஆறாவது இடத்தையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இது கணிசமான முன்னேற்றமாகும்.

தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகள் நலச்சங்கத்தின் மறுவாழ்வு பணியின் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்திரு.மு.க.ஸ்டாலின்அவர்கள் 18.05.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமன்னிப்பில் சிறையிலிருந்து முன்விடுதலை செய்யப்பட்ட 660 முன்னாள் சிறைவாசிகளுக்கு தமிழ்நாடு சிறைமீண்டோர் நலச்சங்கத்தின் சார்பில் சுயதொழில் தொடங்கிட 3 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும், 18.02.2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு ரூ.3 கோடி 75 லட்சம்நிதியுதவி வழங்கப்பட்டது.

இதன் மூலம் விடுதலை செய்யப்பட்ட 1,410 சிறைவாசிகள் சுயதொழில் செய்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, சீரிய மறுவாழ்வு பெற்று மீண்டும் குற்றச்செயலில் ஈடுபடாமல் சமூகத்தில் புதிய வாழ்க்கையைத் தொடங்கிட வழிவகுக்கும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறையின் நோக்கம், சிறைவாசிகளை பாதுகாப்பது மட்டுமின்றி அவர்களை சீர்திருத்தி சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாக செயல்படவும், அவர்கள் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடாமல் தடுக்கும் நோக்கத்துடன் "சிறைகளில் கலை" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "சிறைகளில் கலை" என்ற திட்டத்தின் தொடக்க விழா புழல், மத்திய சிறை-1ல் 26.06.2023 அன்று தொடக்கி வைக்கப்பட்டது.

சிறைகளில் கலை என்ற திட்டத்தில் சிறைவாசிகளுக்கு ஆழ்நிலை தியானம், யோகா, இசை, நாடகம், இலக்கியம் மற்றும் விளையாட்டு போன்ற பயிற்சிகள் டெல்லி தேசிய சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் சுமனசா அறக்கட்டளை நிறுவனத்தினர் இணைந்து பயிற்சிகள் வழங்கப்பட்டன. 03.10.2024 அன்று இத்திட்டத்தின் கீழ் ஒரு வருட பயிற்சி பெற்ற 40 சிறைவாசிகளுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது. சிறைவாசிகள் ஈட்டும் ஊதியத்திலிருந்து அவர்கள் கணக்கிற்கு பங்கீடு செய்யப்படும் தொகையின் விகிதத்தை 50 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்பட்டது. சிறைகளில் உள்ள சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறை அலுவலர்கள் ஆகியோரிடம் கோவிட்-19 பெருந்தொற்று பரவலை தடுக்க பல்வேறு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், 10 மற்றும் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையை நிறைவு செய்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து சில வழிகாட்டுதல்களை வெளியிட்டது. இத்திட்டதின் கீழ், 2022ஆம் ஆண்டு 319 நபர்கள், 2023 ஆம் ஆண்டு 30 நபர்கள், 27.02.2025 அன்று 19 நபர்கள் என 368 சிறைவாசிகள் விடுதலை செய்பட்டுள்ளனர்.இதுவரை 360 (9 முஸ்லிம் கைதிகள் உட்பட) ஆயுள் தண்டனை சிறைவாசிகள், சமூகத்தில் நல்லமுறையில் வாழ்க்கை நடத்திட முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு நீதிபதி. திரு.என்.ஆதிநாதன் குழுவின் அறிக்கையை உரிய முறையில் பரிசீலித்து மற்றும் 15.09.2023 அன்று டாக்டர் பேரறிஞர் அண்ணாவின் 115-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சிறைவாசிகளை முன்விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்திட சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. 14 மற்றும் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையை நிறைவு செய்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து ஆணை பெறப்பட்டுள்ளது. வழக்குகளின் அடிப்படையில் பரிசீலனை செய்து இதுவரை 235 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் சமூகத்தில் நல்முறையில் வாழ்க்கை நடத்திட முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய அரசின் சிறைச்சாலைகள் மாதிரி கையேடு, 2016 பரிசீலித்து, தமிழ்நாடு சிறைச்சாலை விதிகள் 1983ன் விதிகளுடன் இசைந்து "தமிழ்நாடு சிறைச்சாலை விதிகள், 2024"-ஆக தமிழ்நாடு அரசு மாற்றியமைத்துள்ளது. திருச்சிராப்பள்ளியில் மாநில சீர்திருத்த நிர்வாகப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.101.89 இலட்சம் செலவில் 9 மத்தியசிறைகள், 5 பெண்கள்



தனிச்சிறைகளில் சிறைகளில் உள்ள சிறைவாசிகள் தங்கள் குழந்தைகளை அருகில் சந்திக்க ஏதுவாக குழந்தை நேய நேர்காணல் அறைகளை அமைக்கப்பட்டுள்ளது. 9 மத்தியசிறைகளுக்கு வெளிச்சுற்று பாதுகாப்பிற்காக சுற்றுக் காவல் வாகனம் ரூ.81.00 செலவில் பெற்று வழங்கப்படும். கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை மற்றும் கோயம்புத்தூர் மகளிர் சிறப்பு சிறைச்சாலையை கோயம்புத்தூர் வடக்கு தாலுகாவில் உள்ள பில்லிச்சி கிராமத்திற்கு மாற்றுவதற்கு 95 ஏக்கரில் ரூ.327.33 கோடி மதிப்பீட்டில் புதிய சிறை வளாகம் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

நீதி நிர்வாகம்

நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புக் கட்டடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

2021–2022 முதல் 2024–2025 வரை, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளான, மின்தூக்கி வசதி, குளிர்சாதன வசதி முதலியவை ஏற்படுத்துவதற்காக ரூ.1,082.23 கோடிக்கு அரசு ஒப்பளிப்பு.

புதிய நீதிமன்றங்கள் ஒப்பளித்தல்

2021–2022 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதித்துறையில் 29 புதிய நீதிமன்றங்கள் 501 பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளுடன் அமைப்பதற்கு, ரூ.42.03 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2022–2023 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதித்துறையில் 29 புதிய நீதிமன்றங்கள் 1,021 பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளுடன் அமைப்பதற்கு, ரூ.84.84 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை. 2023–2024 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதித்துறையில் 6 புதிய நீதிமன்றங்கள் 95 பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளுடன் அமைப்பதற்கு, ரூ.09.12 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை. 2024–2025 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதித்துறையில் 9 புதிய நீதிமன்றங்கள், 72 பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளுடன் அமைப்பதற்கு, ரூ.15.67 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை.

கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தல்

2021–2022ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களுக்கு 98 கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை.

2022–2023ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களுக்கு. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளைக்கு ஒப்பளிக்கப்பட்ட 5 பணியிடங்களையும் சேர்த்து 88 கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை. 2023–2024 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களுக்கு. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளைக்கு ஒப்பளிக்கப்பட்ட 4 பணியிடங்களையும் சேர்த்து 39 கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளன.2024–2025 ஆம் நிதியாண்டில், மாவட்ட நீதிமன்றங்களுக்கு 22 கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை.

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வாங்குதல்

2021–2022, 2022–2023, 2023–204 மற்றும் 2024–2025ஆம் நிதியாண்டுகளில், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை பயன்பாட்டிற்கென கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்ய ரூ.37,94,47,304/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணைகீழமை நீதிமன்றங்களின் பயன்பாட்டிற்கென கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்ய ரூ.66,66,02,247/–க்கும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை.

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியின் மூலம் மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள்/ நியமனதாரர்கள் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதற்கான தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து, ரூ.10 இலட்சத்திற்கு உயர்வு. இந்நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத்தை ரூ.8 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி, அரசு ஆணை.

2022-2023-ஆம் ஆண்டில், நிதி பற்றாக்குறையின் காரணமாக, உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்க வேண்டிய நிதியுதவி நிலுவையில் இருந்தது. இதனை முழுமையாக வழங்க ஏதுவாக, ரூ.5.72 கோடி நிதியினை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் குழுமத்தால் நிர்வாகிக்கப்படும் தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிக்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டு, மேற்காணும் நலநிதிக்கு கூடுதலாக ரூ.7,00,00,000/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி. தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதி மூலம் உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவையில் உள்ள நிதி உதவியை வழங்குவதற்கு ரூ.10. கோடி கூடுதல் நிதியினை அரசு ஒப்பளிப்பு.

இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நல நிதிச் சட்டம், 1999-ன் சட்டப்பிரிவு 16(2)-ஐ திருத்தம் செய்து வழக்குரைஞர்களின் நல நிதியை ரூ.4 லட்சத்திலிருந்து ரூ.7 லட்சமாக உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

குற்ற வழக்கு தொடர்வுத் துறை இயக்குநரகத்திற்குக் கூடுதல் பதவிகள் ஒப்பளித்தல்

திருவள்ளூர் மாவட்டத்தில் 4 பணியிடங்கள் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய ஒரு குற்றவழக்கு தொடர்வு துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தோற்றுவித்து அரசு ஒப்பளிப்பு.

2019-2020 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 41 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அரசு உதவி வழக்கு நடத்துனர்கள் நிலை-IIஆக பணிநியமனம்.

கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு 8 பணியிடங்கள் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய இரண்டு குற்றவழக்கு தொடர்வுத் துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் ரூ.69,85,228/- செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய குற்றவியல் சட்டங்களை ஆராய்வதற்கான ஒரு நபர் குழு

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு.எம்.சத்தியநாராயணன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழுவானது பாரதிய நியாய சன்ஹிதா, 2023 (மத்தியசட்டம் 45/2023), பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023 (மத்தியசட்டம் 46/2023), மற்றும் பாரதிய சாக்ஷ்யா அதிநியம், 2023 (மத்தியசட்டம் 47/2023) ஆகிய புதிய குற்றவியல் சட்டங்களை ஆய்வுசெய்து மற்றும் அதன் பரிந்துரைகளை சமர்ப்பிக்க பின்வரும் வரம்புகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டுள்ளது:-

(i) தற்போது சமஸ்கிருதத்தில் உள்ள மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் பெயரை நடைமுறையில் உள்ளபடி மாநில அளவில் பெயரை மாற்ற பரிந்துரைத்தல்;

(ii) அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் கருத்தில் கொண்டு இந்த புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில திருத்தமைவுகளை பரிந்துரைத்தல்.

இது தொடர்பாக ஒரு விரிவான அறிக்கையை அரசுக்கு சமர்பிப்பதற்காக, பிரத்யேக இணையதளம் மூலம் பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை குழு ஆராய்ந்து வருகிறது.

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

விவசாயிகளுக்கான திட்டங்கள்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக்காக 08.07.2024 அன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். விவசாயிகள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் தேவைக்காக இ-சேவை மையங்கள் மூலமாக குளங்களில் வண்டல்மண் மற்றும் களிமண்ணை எடுக்க அனுமதி வழங்கப்படுகிறது 25.01.2025 நிலவரப்படி, மொத்தம் 21,069 குளங்களில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதில்

7,372 நீர்நிலைகள் நீர்வளத்துறைக்கும், 13,697 நீர்நிலைகள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கும் சொந்தமானது. இதில் உள்ள கனிம அளவு 4,460 இலட்சம் கன மீட்டர் ஆகும். விவசாயிகள் மற்றும் மண்பாண்ட தொழிலாளர்களிடமிருந்து மொத்தம் 76,704 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் மொத்தம் 67.88 இலட்சம் கன மீட்டர் கனிமத்திற்கான 71% விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள விவசாயிகள் மற்றும் மண்பாண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 54,147 ஆகும்.

கைவிடப்பட்ட சுரங்கங்கள் மற்றும் குவாரிகளின் மேலாண்மை

2021-22-இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டம், கோடைக்காலத்தில் பொதுமக்களின் நலனுக்காக, கைவிடப்பட்ட 354 குவாரிகள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம், சிக்கராயபுரம் மற்றும் மலையம்பாக்கம் கிராமங்களில் கைவிடப்பட்ட குவாரிகள் நீர் தேக்கங்களாக மாற்றப்படுகின்றன.

சுரங்க விருதுகள்

2022-2023ல் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) சுரங்கப் பாதுகாப்பு வார விழாவின்போது 9 முதல் பரிசுகளும் மற்றும் 10 இரண்டாம் பரிசுகளை பெற்றது. ஒட்டுமொத்த செயல் திறனுக்கான ஒரு பரிசும் பெற்றுள்ளது. 2023-2024இல் 4 முதல் பரிசுகள் 5 இரண்டாம் பரிசுகள் பெற்றன.

சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள்

நிலையான சுரங்க மேலாண்மை கொண்ட ஓர் முன்மாதிரி நிறுவனமாக விளங்க, தமிழ்நாடு கனிம நிறுவனம் 2022-2023 இல் ரூ.112 இலட்சம் மற்றும் 2023-2024 இல் ரூ.17.5 இலட்சங்கள் செலவழித்து சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 28.09.2022 அன்று, வேலூர் மாவட்ட மகிமண்டலம் குவாரியில் 10,000 மரக்கன்றுகள் நடப்பட்டது.



எல்லார்க்கும் எல்லாம்

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி இந்த நாட்டை வளர்க்கும் ஆட்சியாக இந்த ஆட்சி செயல்பட்டு வருகிறது. எழை, எளிய விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காகவும். பட்டியலின. பழங்குடியின. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேன்மைக்காகவும் எத்தனையோ திட்டங்களை இந்த ஆட்சி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

மு.க.ஸ்டாலின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத்திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)



திரு. **சு. முத்துசாமி** அவர்கள்
மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்



ரூ.3,567.61 கோடி மதிப்பீட்டில் 16,246 அலகுகள் உள்ளடங்கிய 103 திட்டங்கள் முடிவு...

5,978 ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும் 9,807 விற்பனைப் பத்திரங்கள் தமிழில் வழங்கப்பட்டுள்ளன...

ரூ.6,201.93 கோடி செலவில் நகர்ப்புரப் பகுதிகளில் 43,841 அடுக்குமாடிக் குடியிருப்புகள் முடிவுற்றும் 70,009 குடியிருப்புப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன...

ஒற்றைச் சாளர முறையில் 14,937 மனைப் பிரிவு மற்றும் 5,573 கட்டட விண்ணப்பங்களுக்கு; தீர்வு...

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

6,109 ஒதுக்கீட்டு ஆணைகள் மற்றும் 10,278 விற்பனை பத்திரங்கள் தமிழில் வழங்கப்பட்டுள்ளது.

வட்டி தள்ளுபடி திட்டம் நவம்பர் 2022-இல் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.8.91 கோடியில் 650 ஒதுக்கீடுதாரர்கள் பயன்.ரூ.4,298.88 கோடி மதிப்பீட்டில் 17,486 அலகுகள் உள்ளடங்கிய 105 திட்டங்கள் பல்வேறு இடங்களில் முடிக்கப்பட்டது.

ரூ.218.61 கோடி மதிப்பீட்டில் 286 அலகுகள் உள்ளடங்கிய 5 திட்டங்கள் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர் சட்டம் 1994-இல், 2022 ஆம் ஆண்டில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அதன் கீழ் விதிகள் உருவாக்கம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நிலம் கையகப்படுத்தலில் உள்ள நீண்டகால பிரச்சினைகளைத் தீர்க்க, "முதலமைச்சரின் முன்னோடித் திட்டத்தை" அறிமுகப்படுத்தி, ஒரு சிறப்புக் குழுவை நியமித்து, 2,502 ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் கருணை அடிப்படையில் 99 நபர்களுக்கு பணி நியமனமும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 65 நபர்களுக்கும் பணி நியமனம்.

முதலில் வருவோருக்கு முதலில் முன்னுரிமைத் திட்டம் ஜூலை 2023-இல் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.475.02 கோடி மதிப்பீட்டில் 819 குடியிருப்புகள் விற்பனை.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)

1,173 சங்கங்களில், 159 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும், 569 நகர்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும், ஆக மொத்தம் 728 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

ரூ.33.16கோடிகூட்டுறவுவீட்டுவசதிசங்கங்கள்மூலம்கட்டுமானமற்றும் அடமானக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. ரூ.137.48 கோடி மனைப்பிரிவு திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.3,864 நபர்களுக்கு ரூ.56.29 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 4,850நபர்களுக்கு ரூ.619.54 கோடி பொது மக்கள் மற்றும் சங்கங்களிடமிருந்து ஈட்டிய வைப்பீடுகள்.

ஒரு முறை கடன் தீர்வுத் தள்ளுபடித் திட்டம்

ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் ரூ.149.98 கோடி அசல் மற்றும் வட்டி வசூல் செய்யப்பட்டு, ரூ.511.82 கோடி சங்க உறுப்பினர்களுக்கு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. 7,195 உறுப்பினர்களின் அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. ரூ.192.34 கோடி தவணை தவறிய தொகைக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவக் காப்பீடுத் திட்டத்தின் மூலம் ரூ.41.59 இலட்சத்தில் 65 சங்க உறுப்பினர்களுக்குத் 2,665 குடும்ப உறுப்பினர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

சட்டமன்ற அறிவிப்புகள் நிறைவேற்றம்

2021-2022 ஆம் அறிவிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டம் மடிப்பாக்கத்தில் உள்ள கார்த்திகேயபுரம் கூட்டுறவு சங்கத்தின் சமுதாய நலக்கூடத்தில் மின்தூக்கி குளிர்சாதன வசதி மற்றும் இதர நவீன வசதிகளுடன் ரூ.105.95 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும் பணி முடிவுற்று திறந்து வைக்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 58 தொடக்க கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் அரசு இ-சேவை மையங்கள் தொடங்கப்படும் பணி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காட்பாடி கூட்டுறவு நகரமைப்புச் சங்கத்திற்கு சொந்தமான நிலத்தில் ரூ.103.96 இலட்சம் மதிப்பீட்டில் 24 கடைகள் கொண்ட கூட்டுறவு வணிக வளாகம் திறந்து வைக்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, செங்கல்பட்டு மண்டல கட்டுப்பாட்டில் இயங்கும் ஆதம்பாக்கம் கூட்டுறவு கட்டட சங்கத்திற்கு சொந்தமான 15,796 சதுரடி கொண்ட காலிமனையில் இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன் மூலம் சில்லறை விற்பனை நிலையம், திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 2024 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் இரண்டும் சேர்த்து 4,25,000 லிட்டர் விற்பனை.

ஜனவரி 2025 ஆம் மாதம் மட்டும் ஆதம்பாக்கம் கூட்டுறவு கட்டட சங்கத்தின் மூலம் செயல்படும் எரிபொருள் நிரப்பும் மையம் 4 இலட்சம் லிட்டர் விற்பனை செய்து முதல் எரிபொருள் நிரப்பும் மையம் என்ற சிறப்பினை பெற்றுள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன் நிறுவனத்தினரால் பாராட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 2025 வரை 27.79 இலட்சம் லிட்டர் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டு, 35.57 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

அயற்பணி / நிரந்தரப் பணி:

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் 85 எண்ணிக்கையிலான தகுதியான பணியாளர்கள் நிரந்தர ஈர்ப்பு / அயற்பணியில் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம்

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குள் அமையும் 10 மண்டலங்களுக்கான மண்டல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் 7 சதவிகிதமாக உள்ள திட்டப் பகுதியை 22 சதவிகிதமாக உயர்த்திட 111 முழுமைத் திட்டங்கள் மறுஆய்வுக்கும், 24 நகரங்களுக்கு புதிய முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டும் வருகின்றன. ஒற்றைச் சாளர முறை மூலம் 14,937 மனைப்பிரிவு விண்ணப்பங்களுக்கும் 5,573 கட்டட விண்ணப்பங்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. செப்டம்பர் 2023 முதல் ஒற்றைச் சாளர முறை மூலம் நேரடியாக கட்டடம் மற்றும் மனைப்பிரிவுகளுக்கு இறுதி அனுமதிகளை வழங்கி வருகின்றது. கூடுதலாக, தடையின்மை சான்று (NOCs) வழங்கும் அனைத்துத் தொடர்புடைய துறைகளும் இத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

ஒற்றைச் சாளர முறையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தடையின்மை சான்று (NOC) வழங்கும் துறைகளுக்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு, தாமதமின்றி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒற்றைச் சாளர முறையில் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் Guidance Bureau மூலமாக விண்ணப்பித்த 621 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.உடனடி ஒப்புதல் பெறுவதற்கான சுயசான்றிதழ் திட்டத்தை 22.07.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, அதிகபட்சமாக 2,500 சதுர அடி பரப்பளவு உள்ள மனையிடத்தில் 3,500 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் கட்டடங்களுக்கு சுயசான்றிதழ் முறையில் அனுமதி பெற்றுக்கொள்ளலாம். 54,108 கட்டடங்களுக்கு சுயசான்றிதழ் திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.திட்டமில்லாப் பகுதிகளில் அனுமதியின்றி கட்டப்பட்டு இயங்கி வரும் கல்வி நிறுவன கட்டடங்களை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் 2,206 பள்ளிக் கட்டடங்களும் மற்றும் 346 கல்லூரிக் கட்டடங்களும் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதி (TNCDBR) 2019-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதிலிருந்து பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தரைத்தளம் மற்றும் 2 தளங்கள் அல்லது தூண்தளம் மற்றும் 3 தளங்கள் கொண்ட கட்டடங்களுக்கு தற்போதுள்ள 12 மீட்டர் உயரக் கட்டுப்பாட்டை பக்கத் திறவிடம் அளவுகளில் மாற்றமின்றியும் தெளிவான உயரத்தை வழங்கவும், (Clear Height) 14 மீட்டராக உயர்வு.

750 ச.மீ-க்கு உட்பட்ட குடியிருப்பு கட்டடங்களுக்கு கட்டட முடிவு சான்று பெறும் குடியிருப்புகளின் எண்ணிக்கையை 3-லிருந்து 8 குடியிருப்புகளாக உயர்த்தி கட்டட முடிவு சான்று பெறுவதிலிருந்து விலக்கு.300 சதுர மீட்டர் மற்றும் கட்டட உயரம் 14 மீட்டருக்கு மிகாமல் உள்ள சிறிய அளவிலான வணிக கட்டடங்களுக்கு கட்டட முடிவு சான்று பெறுவதிலிருந்து விலக்கு. மனைப்பிரிவுகளுக்கான குறைந்தபட்ச அணுகு சாலையின் அகலம் பேரூராட்சிகளுக்கு 7 மீட்டரில் இருந்து 6.5 மீட்டராகவும், கிராம பஞ்சாயத்துகளுக்கு 7 மீட்டரில் இருந்து 6 மீட்டராகவும் குறைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தொழிற்சாலைகளுக்கான தளப் பரப்பு குறியீடு (FSI) 1.5ல் இருந்து 2.0 ஆக உயர்த்தியும், தொழில் பூங்காக்களுக்குள் அதிகம் உயரம் இல்லாத (NHRB) தங்கும் விடுதிகள் / தங்குமிடங்களை கட்டவும் சிறப்பு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மலையிட பாதுகாப்புக் குழுமம் (HACA) பகுதிகளில் திட்ட அனுமதி பெறுவதை எளிமையாக்க, வேளாண் பொறியியல் துறையின் தடையின்மை சான்று (NOC) பெறுவதிலிருந்து விலக்கு.

திட்ட அனுமதி பெறப்பட்டதிலிருந்து கட்டடம் கட்டிமுடிப்பதற்கான கால அவகாசம் 5 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக காலநீட்டிப்பு.

மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியின் கீழ் ரூ.3,323.77 கோடி மதிப்பீட்டில், 56 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 13 மாவட்டங்களில் உள்ள 276 புறநகர் கிராம ஊராட்சிகளில் சாலைகள், தெருக்கள் மற்றும் வழித்தடங்கள் அமைக்க ரூ.100.37 கோடி உள்ளூர் திட்ட குழும நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது."கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்-2023" க்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழும நிதியிலிருந்து ரூ.18.57 கோடி விடுவிப்பு.கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் 1 ஏக்கருக்கு மேல் நகர்ப்புற காடுகள், நகர் ஊரமைப்புத் துறையால் உருவாக்கம்.

அங்கீகாரமற்ற கட்டுமானங்கள் மற்றும் விதிமீறல் கட்டடங்கள் பெருகுவதை தடுக்கவும், ஒழுங்குபடுத்தவும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கப்பிரிவு உருவாக்கம். அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE), 2022-2023 கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் இளங்கலை திட்டமிடல் (B.Plan) படிப்பை அறிமுகப்படுத்த ரூ.2 கோடி நிதி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு விடுவிப்பு. 2023-2024 ஆண்டிற்கான தொடரும் செலவினமாக ரூ.42.70 இலட்சம் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நகர் ஊரமைப்பு சொந்த அலுவலக கட்டடம், ரூ.19.40 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட சொந்த அலுவலக கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது. 18 மாவட்டங்களுக்கு சொந்த அலுவலக கட்டடங்கள் கட்ட ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு. அதில் தென்காசி, புதுக்கோட்டை, விருதுநகர், நாகப்பட்டினம் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சொந்த அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகிறது. உதவி இயக்குநர் மற்றும் கட்டட கலை / திட்ட உதவியாளருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட உதவி இயக்குநர்-28, கட்டடக்கலை / திட்ட உதவியாளர்-4, அளவர் / உதவி வரைவாளர்-55, இளநிலை உதவியாளர்-7, தட்டச்சர்-1, சுருக்கெழுத்து தட்டச்சர்-2 பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை

இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் போன்ற சாராவி உற்பத்தியினை கண்காணிப்பதை உறுதி செய்திடவும், அவற்றை தவறான நோக்கத்திற்காக பயன்படுத்துவதை தடுக்கவும்,தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937-ன் கீழ் ஆயத்தீர்வை பொருள்களுக்கு ஆயத்தீர்வை வசூலிக்கப்படுவதை கண்காணிக்கவும், உற்பத்தி நிறுவனங்கள், இரசாயன ஆலைகள் மற்றும் துணை வட்டாட்சியர்கள், ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும் இப்பணிகளை கவனிக்கும் பொருட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மெத்தனால் மற்றும் இதர கரைப்பான்கள் கண்காணிப்புக் குழு

மெத்தனால் மற்றும் இதர கரைப்பான்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றை கண்காணிக்கும் பொருட்டும், தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில்உள்ளஅனைத்துமாவட்டங்களிலும்அந்தந்தமாவட்ட வருவாய்அலுவலர்தலைமையில், உதவி ஆணையர் (கலால்)/துணை ஆணையர் (கலால்), காவல் கூடுதல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு) / காவல் துணை கண்காணிப்பாளர் (மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு), துணை ஆணையர் (உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை) / மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் அலுவலர் உறுப்பினர்களுடன் மாவட்ட அளவிலான குழுவை அமைக்க ஆணையிட்டுள்ளது.

அதன்படி, அனைத்து மாவட்டங்களிலும், மெத்தனால் மற்றும் கரைப்பான் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

2023-2024ஆம் நிதியாண்டில், மனந் திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு உதவித்தொகை தனியர் ஒருவருக்கு ரூ.30,000/- லிருந்து 50,000/- ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டு ரூ.2.45 கோடி அரசால் மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் நிதியாண்டில், மனந் திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு உதவித்தொகை தலா ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டு, ரூ.4.92 கோடி அரசால் மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, 07.05.2021 முதல் 31.01.2025 வரை 2,810 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 11.37 கோடி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையினை மின் ஆளுமைமயமாக்குதல்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் மின் ஆளுமை நடவடிக்கைகளின் கீழ் 74 சேவைகளை இணையவழி மூலமாக வழங்கும் வகையில் கணினி மயமாக்குவதற்கு ரூ.2,99,72,000 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும், துணை ஆணையர் / உதவி ஆணையர் (கலால்), கோட்ட கலால் அலுவலர் அலுவலகங்கள் மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரக அலுவலகத்திற்கும் கணினி மற்றும் அதன் தொடர்பான இதர உபகரணங்களை கொள்முதல் செய்யப்பட்டு, இணைய வழி சேவை வழங்கும் பணிகள் தேசிய தகவல் தொழில்நுட்ப மையம் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மதுவிலக்கு மற்றும்ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்தினை மேம்படுத்தி நவீனமயமாக்குதல்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரக அலுவலகத்தினை மேம்படுத்தி நவீனமயமாக்கவும், மின் இணைப்பு வசதிகளை பொதுப்பணித்துறையின் மூலம் புதுப்பித்து மேம்படுத்துவதற்கும் ரூ.1.93 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, பொதுப்பணித்துறை மூலம் நவீனமயமாக்கும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

பி ஹெவி மொலாசஸ் மற்றும் கரும்புச்சாறிலிருந்து எத்தனால் உற்பத்திக்கு சான்றளிக்கும் அதிகாரம் எளிமைப்படுத்தப்பட்டு வடிப்பாலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நீர் ஆதராங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் முதல் 5 கிலோ மீட்டர் தூரம் வரை தொழிற்சாலைகள் நிறுவப்படுவதைத் தடுக்கும் 1989 மற்றும் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகளிலிருந்து ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கழிவுநீர் வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய எத்தனால் ஆலை அமைக்க விலக்களித்து புதிய எத்தனால் ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேத்தியாத்தோப்பு மற்றும் கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு ஆகிய இரண்டு ஆலைகளில் 60 KLPD எத்தனால் உற்பத்தி தொடங்கிட அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச் சூழல் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.








கூட்டுறவுத் துறை

திரு. **கே ஆர்.பெரியகருப்பன்** அவர்கள்
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்



12.55 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.4,822.36 கோடி பொது நகைக் கடன் தள்ளுபடி...

1,01,807 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 10,55,970 மகளிர் பயன் பெறும் வகையில் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி...

25% தள்ளுபடியில் மக்கள் பயன்பெறும் வகையில் 1,000 "முதல்வர் மருந்தகங்கள்"...

11,88,440 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கால்நடை வளர்ப்புக்காக ரூ.6,372.02 கோடிக் கடன்...

பொது நகைக் கடன் தள்ளுபடி 2021

கூட்டுறவு நிறுவனங்களில் குடும்ப அட்டையின்படி ஒரு குடும்பத்தில் 5 பவுனுக்கு உட்பட்டு (மொத்த எடை 40 கிராமுக்கு உட்பட்டு) பொது நகைக் கடன் பெற்று 31.03.2021ஆம் நாள் வரை நிலுவையிலிருந்த பொது நகைக் கடன் தொகை ரூ.6,000 கோடியை (தோராயமாக) தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

12.55 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.4,890 கோடி அளவிற்கு தள்ளுபடி சான்றிதழுடன், அவர்கள் அடமானம் வைத்த நகைகளும் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

தள்ளுபடித் தொகையில் 2021-2022ஆம் ஆண்டில் ரூ.1,215.58 கோடியும், 2022-2023ஆம் ஆண்டிற்கு ரூ.2,000 கோடியும், 2023-2024ஆம் ஆண்டில் ரூ.1,000 கோடியும், 2024-2025ஆம் ஆண்டில் ரூ.606.78 கோடியும் ஆக மொத்தம் ரூ.4,822.36 கோடி அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி 2021

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில், 31.03.2021 அன்றைய தேதியில் நிலுவை உள்ள கடன் தொகை ரூ.2,755.99 கோடியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 1,01,807 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 10,55,970 மகளிர் பயன்பெற்றுள்ளனர். 2021-2022ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும், 2022-2023ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும், 2023-2024ஆம் ஆண்டில் ரூ.600 கோடியும், 2024-2025ஆம் ஆண்டில் ரூ.313.87 கோடியும் ஆக மொத்தம் ரூ.2,113.87 கோடி அரசால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பயிர்க் கடன்

விவசாயிகளின் கடன் தேவைகளை பூர்த்தி செய்யவும் மற்றும் கடன் சுமையை குறைக்கும் விதத்திலும், பயிர்க் கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. 07.05.2021 முதல் 31.01.2025 வரை 66,24,955 விவசாயிகளுக்கு ரூ.53,340.60 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

உழவர் கடன் அட்டைத் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கான நடைமுறை மூலதனக் கடன்

2021-2022 ஆம் ஆண்டு முதல் கால்நடை வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த இதர பணிகளுக்கு பராமரிப்புக் கடன் வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

பயிர்க் கடனுக்கு வழங்கப்படுவது போன்று இக்கடனை சொந்த நிதியிலிருந்து வழங்கும் கூட்டுறவு வங்கிகளுக்கு 2% வட்டி மானியமும் (Interest Subvention - IS) மற்றும் உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்துபவர்களுக்கு 7% வட்டி ஊக்கத் தொகையும் (Prompt Repayment Incentive - PRI) வழங்கப்படுகிறது. 07.05.2021 முதல் 31.01.2025 வரை 11,88,440 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகளுக்காக ரூ.6,372.02 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக் கடன்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உச்ச வரம்பு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 07.05.2021 முதல் 31.01.2025 வரை 1,90,499 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,997.07 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்கள்

கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் சமூக பொருளாதார நலனை மேம்படுத்துதல், நிதிச்சுதந்திரம் அளித்தல் மற்றும் சுயசார்படையச் செய்தல் போன்றவற்றை கருத்தில் கொண்டு குறைந்த வட்டி விகிதத்தில் அதாவது ஆண்டிற்கு 5% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

07.05.2021 முதல் 31.01.2025 வரை 19,358 கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு 5 சதவீத வட்டியில் ரூ.63.22 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்கள்

மாற்றுத்திறனாளிகளை சுயசார்புடையவர்களாக மாற்றவும், நிதி சுதந்திரத்தை வளர்க்கவும், 07.05.2021 முதல் 31.01.2025 வரை 47,221 பயனாளிகளுக்கு ரூ.225.94 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்கள் மற்றும் மகளிர் தொழில்முனைவோர் கடன்கள்

07.05.2021 முதல் 31.01.2025 வரை சமூக நீதியை மேம்படுத்த 16,578 பணிபுரியும் பெண்களுக்கு ரூ.470.01 கோடியும், 49,000 மகளிர் தொழில்முனைவோருக்கு ரூ.283.27 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தவணை தவறிய பண்ணை சாராக் கடன்கள் மற்றும் இதர நீண்ட கால நிலுவை இனங்களுக்கு சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் 2023

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன. கடன்தாரர்களின் வட்டி சுமையைக் குறைக்கவும், கூட்டுறவு நிறுவனங்களில் நீண்ட காலமாக வசூல் ஆகாமல் நிலுவையுள்ள தவணை தவறிய கடன்களை வசூல் செய்து இந்நிறுவனங்களின் நிதிநிலையைப் பலப்படுத்தவும் பண்ணைசாராக் கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வுத் திட்டம் கொண்டுவரப்படும் என 2023-2024-ஆம் ஆண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக 12.09.2024 வரையிலும், முழு நிலுவைத் தொகையை செலுத்துவதற்காக 12.03.2025 வரையிலும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள கடன் வரம்பினை உயர்த்துதல்

கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வரும் நகைக் கடன், சம்பளக் கடன், சிறு வணிக கடன், கல்விக் கடன், தானிய ஈட்டுக் கடன், சுய உதவிக்குழு கடன் மற்றும் வீட்டு வசதிக் கடன்களின் உச்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள சில விதிகளைத் தளர்த்துதல்

உழவர் கடன் அட்டை - பயிர்க்கடன் வழங்குதலுக்கென தொடர்புறுத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் சில தளர்வுகள் அளிக்கப்பட்டு திருத்திய மாதிரி ஒழுங்குமுறை விதிகள் 16.04.2024 அன்று தொடர்புறுத்தப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு நபர் பிணையமின்றி கடன் பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, அவர்களது வீட்டு ஒதுக்கீடு ஆணை/ஒய்வூதிய ஆணையினை பிணையமாக வைத்தாலேபோதுமானது.

புதிய திட்டங்கள்

தமிழ் மகள் திட்டம்

குடும்பத்திற்காக அயராது உழைக்கும் மகளிரை கௌரவிக்கும் பொருட்டு, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்' கீழ் உரிமைத் தொகை பெறுவதற்காக இதுவரை 8 இலட்சத்து 35 ஆயிரம் வங்கிக் கணக்குகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகையில் ஒரு சிறிய பங்கு 'தமிழ் மகள்' என்ற தொடர் வைப்பீட்டு திட்டத்தில் (Recurring Deposit) சேமிக்கப்பட்டு, ஆண்டு இறுதியில் கணிசமான தொகை நியாயமான வட்டியுடன் கிடைக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிள்ளைகளின் கல்விக்கட்டணம், புத்தகங்கள், ஆடைகள் வாங்குவது போன்ற செலவுகளுக்கு இத்தொகை பேருதவியாக இருப்பது இத்திட்டத்தின் மறைமுக பலனாகும்.

இதுவரை 31,928 'தமிழ் மகள்' தொடர் வைப்புக் கணக்குகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ளன.

நாட்டுப்புறக் கலைஞர் கடன்

நாட்டுப்புற கலைஞர்களின் சமூக, பொருளாதார மற்றும் நிதிநிலைமையை மேம்படுத்தும் பொருட்டு இக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024ஆம் நிதியாண்டில் 2,018 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.8.22 கோடி அளவிலான கடனும், நடப்பு நிதியாண்டில் 31.01.2025 வரை 2,476 நாட்டுப்புற கலைஞர்களுக்கு ரூ.10.58 கோடி அளவிலான கடனும் வழங்கப்பட்டுள்ளது.

சிறகுகள் சிறப்புக் கடன் திட்டம்

சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மாற்றுப்பாலினத்தவர்கள், அவர்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை நிதிச் சேவைகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களைக் களைந்து, அவர்களின் பொருளாதார ரீதியான உள்ளடக்கத்தை உறுதி செய்யும் பொருட்டு 'சிறகுகள்' சிறப்புக்கடன் திட்டம் நவம்பர் 2024-இல் அறிமுகப்படுத்தப்பட்டு, 5% அளவிலான மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ரூ.1,00,000 வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 31.01.2025 வரை 105 மாற்றுப் பாலினத்தவர்களுக்கு ரூ.1.14 கோடி அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடித் திட்டம் (AABCS)

அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம், பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியின தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசால் 01.04.2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் தொழில்முனைவோர் தங்கள் தொழிலைத் தொடங்க அல்லது மேம்படுத்துவதற்காக பெறும் கடனுக்கான மூலதன மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கான கடனுக்கு வட்டி மானியமும் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம், இத்திட்டத்தின்கீழ் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வாங்குவதற்காக 31.01.2025 வரை 86 தொழில்முனைவோருக்கு ரூ.52.34 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகனங்களை 06.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், முதல் தலைமுறை தொழில்முனைவோரின் முதல் தொழில் முயற்சிக்குக் கை கொடுக்கவும் ஊக்கமளிக்கவும் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசால் சிறப்புற செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மூலதன மானியமும், கடனுக்கான வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம், இத்திட்டத்தின்கீழ் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வாங்குவதற்காக 31.01.2025 வரை 13 தொழில்முனைவோருக்கு ரூ.8.56 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகனங்களை 06.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

பேரிடர் நிவாரண நடவடிக்கைகள்

மிக்ஜாம் புயல் நிவாரண நடவடிக்கை

புயல் பாதித்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தனி நபருக்கு ரூ.10,000 வரை சிறப்பு சிறு வணிக கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில், 14,647 சிறு வியாபாரிகளுக்கு, ரூ.14.64 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதே கடன் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள சிறு வியாபாரிகளுக்கு தனிநபருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை 10,301 சிறு வியாபாரிகளுக்கு ரூ.26.12 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கால்நடைகளை வாங்குவதற்காக 5,966 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புக் கடன் ரூ.26.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஃபெங்கல் புயல் நிவாரண நடவடிக்கை

புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தனிநபருக்கு ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை சிறப்பு சிறு வணிக கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில், 339 சிறு வியாபாரிகளுக்கு, ரூ. 1.69 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்சேவை மையங்களாக மாற்றுதல்

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து வேளாண் உட்கட்டமைப்பு நிதியின்கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் நிதியுதவி பெற்று, பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. ரூ.565.42 கோடி மதிப்பிலான 5,420 திட்டப்பணிகள் 2,841 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் நிறைவேற்றப்பட்டு அவை பல்சேவை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

திட்டத்தைச் செயல்படுத்தும் திட்டமுறை

இந்த திட்டத்தை செயல்படுத்த வாழ்திறனுள்ள / இலாபம் ஈட்டிடும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.

நிதி ஆதாரம்

வேளாண் உள்கட்டமைப்பு நிதியின் கீழ் நபார்டு வங்கியிலிருந்து கடன் வழங்கப்படுகிறது. திட்டச் செலவில் 90% வரை கடன் வரம்புக்கு 4% வட்டி விகிதம், ரூ.2 கோடி வரை கடன் வரம்புக்கு 3% வட்டி மானியம் கிடைக்கும். எனவே, சங்கங்கள் செலுத்த வேண்டிய இறுதி வட்டி வெறும் 1% மட்டுமே. இந்த மானியம் அதிகபட்சம் ஏழு ஆண்டுகளுக்கு கிடைக்கும்.

இலக்கு எய்தப்பட்டது

31.01.2025 வரை ரூ.585.62 கோடி மதிப்புள்ள 5,561 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அதில், ரூ.565.42 கோடி மதிப்புள்ள 5,420 திட்டப்பணிகள் 2,841 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ரூ.20.19 கோடி மீதமுள்ள 141 திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வெற்றிக்கதை

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் லாபம் ஈட்டுகின்றன. மேற்படி சங்கங்கள் மூலம் வாடகைக்கு விடப்படும் வேளாண் இயந்திரங்களை கூட்டுறவுத்துறையின் "Coopஇ-வாடகை" செயலி மற்றும் வேளாண்துறையின் "உழவர்" செயலி ஆகியவற்றிலும், நேரிலும் முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும், இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 2 இலட்சம் விவசாயிகள் / பயனாளிகள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண் விளைபொருள் விற்பனை

தமிழ்நாட்டில் செயல்படும் 115 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.3,639.71 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த விற்பனைத் திட்டம்

நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த கடன்திட்டத்தில், ரூ.403.93 கோடி அளவிற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது.

தானிய ஈட்டுக்கடன்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.392.52 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

நகைக்கடன்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.2,089.90 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன.

மொத்தப் புரள் வணிகம்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.10,283.21 கோடி அளவிற்கு வணிகம் செய்துள்ளன.

புதிய முயற்சிகள்

கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து தயாரிப்புகளையும் விற்பனை செய்வதற்கு ஒரு பொதுவான கைப்பேசி செயலி (Mobile App) 06.07.2023 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

புதிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைத்தல்

விவசாய உறுப்பினர்களின் நலன் கருதி, 2023-2024ஆம் ஆண்டில் 3 புதிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

பயிர்க்கடன்

தமிழ்நாட்டில் செயல்படும் 40 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.658.98கோடி அளவிற்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய காலக் கடன்

ரூ.42.25 கோடி அளவிற்கு பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் மத்தியக் காலக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக் கடன்

பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.64.61 கோடி அளவிற்கு சுய உதவிக் குழுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நகைக்கடன்

பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.355.47 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டு மற்றும் கட்டுப்பாடற்ற பொருள் விற்பனை

ரூ.30.02 கோடி அளவிற்கு கட்டுப்பாட்டு பொருள்களும், ரூ.21.17 கோடி அளவிற்கு கட்டுப்பாடற்ற பொருள்களும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் விற்பனைசெய்யப்பட்டுள்ளன.

விவசாய இடுபொருள் விற்பனை

பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.35.32 கோடி அளவிற்கு விவசாய இடுபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

புதிய பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, 2023-2024ஆம் ஆண்டில் 14 புதிய பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு திட்டமிடவும், அதிக வருமானம் மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை உறுதிசெய்யவும், நிறுவனப் பொருள்களின் விற்பனையை மேம்படுத்தவும், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பல்வேறு செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், 40 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அளவிலான பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் தொடக்கப்பட்டது. இவ்விணையம் 03.08.2022 அன்று பதிவுசெய்யப்பட்டு, 01.11.2022 முதல் செயல்பட்டு வருகிறது.

இரு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல்

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஆகிய இரு இடங்களில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படும் கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசமாக தொழிற்கல்வி வழங்குவதற்காக 2021-2022ஆம் ஆண்டில் அரசு ரூ.19.05 இலட்சமும் 2022-2023ஆம் ஆண்டில் ரூ.19.45 இலட்சமும் நிதி உதவி வழங்கி உள்ளது.

திண்டுக்கல்லில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலரும்) ஆரம்பித்தல்

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் 2022-2023ஆம் கல்வியாண்டில் ஒரு புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 02.09.2022இல் தொடங்கப்பட்டு, 5 பிரிவுகளில் 263 மாணவர்களும் 2023-2024ஆம் கல்வியாண்டில் 7 பிரிவுகளில் 294 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரியில் 1,100 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

புதிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்

மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் தொடங்கப்பட்டு 11.07.2023 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 38 மாவட்டங்களில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் செயல்பட்டு வருகிறது.

புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையம் தொடக்கப்பட்டு 2023-2024ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 27 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் 7 துணைப்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றது.

கூட்டுறவுத் துறைக்கான ஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை

கூட்டுறவுத் துறைக்கான ஒருங்கிணைந்த பயிற்சிக் கொள்கை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் 23.08.2023 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்

2022-ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைக் கடைகளில் 5,748 விற்பனையாளர்கள் மற்றும் 981 கட்டுநர்கள் என மொத்தம் 6,729 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2023-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் 2,403 உதவியாளர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2024-ஆம் ஆண்டில் நியாயவிலைக் கடைகளில் காலிப்பணியிடமாக உள்ள 2,527 விற்பனையாளர் மற்றும் 826 கட்டுநர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலமாக 07.10.2024 அன்று வெளியிடப்பட்டது. விற்பனையாளர் பணியிடத்திற்கு 2,47,306 விண்ணப்பங்களும், கட்டுநர் பணியிடத்திற்கு 35,421 விண்ணப்பங்களும் பெறப்பட்டு சென்னையைத் தவிர 37 மாவட்டங்களில் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நிறைவடைந்துள்ளது.

ஆக மொத்தம் இதுவரை 9,132 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டும், 3,353 காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கும் தொடர்புடைய மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள்

நோக்கம்

2021-2022-ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாநிலம் முழுவதும் ஒரே விதமான வண்ணம் மற்றும் தனித்துவமான பெயர் பலகைகளுடன் 70 புதிய மாதிரி கூட்டுறவு மருந்தகங்கள் 16.12.2021 அன்று திறந்து வைக்கப்பட்டன.

திட்டச் செயல்பாடு

தற்போது தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலமாக 380 கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் ஒரு மக்கள் மருந்தகம் (ஜன் ஔஷதி கேந்திரா), தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், இம்மருந்தகங்களில் 20 விழுக்காடு வரை தள்ளுபடி அளித்து மருந்துகளை விற்பனை செய்வதன் மூலம் ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் பயனடைகின்றனர்.

இந்த 70 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் 31.01.2025 வரை ரூ.37.83 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2021-2022 நிதியாண்டு முதல் 31.01.2025 வரை கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 380 மருந்தகங்கள் மூலம் ரூ.631.60 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

செயல்திட்டத்தின் விளைவு

2021-2022 நிதியாண்டு முதல் 31.01.2025 வரை 1,25,55,010 பொதுமக்கள் ரூ.107.3 கோடி அளவிற்கு தள்ளுபடியின் பயனை பெற்றுள்ளனர். கூட்டுறவு மருந்தகங்கள் வழங்கும் தள்ளுபடியால் தனியார் மருந்தகங்களும் தள்ளுபடி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மைய மருந்துக் கொள்முதல்

நோக்கம்

கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் மருந்தகங்களுக்கு, தனித்தனியே மருந்து நிறுவனங்களின் உள்ளூர் விநியோகஸ்தர்களிடமிருந்து மருந்துப்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வந்தன. கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களின் தேவைப்பட்டியல் தனித்தனியே வழங்கப்பட்டதால், மருந்து நிறுவனங்களிடமிருந்து அதிகமான விளிம்பினைப் பெற இயலவில்லை. இவ்விடர்பாட்டினை களையும் விதமாக, கூட்டுறவு மருந்தகங்களுக்கு மருந்து கொள்முதலுக்கென மைய மருந்து கொள்முதல் தொடங்கப்பட்டது. மைய மருந்து கொள்முதல் 18.02.2022 முதல் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது.

திட்டச் செயல்பாடு

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மைய மருந்து கொள்முதலுக்கு Nodal நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமானது 21 மருந்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், அனைத்து கூட்டுறவு மருந்தகங்களிலிருந்தும் தேவைப்பட்டியலைப் பெற்று, ஒருங்கிணைத்து, அதனடிப்படையில் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவைபட்டியல் அளிக்கும்.

செயல்திட்டத்தின் விளைவு

மைய மருந்து கொள்முதலைச் செயல்படுத்துவதன் மூலம், 380 கூட்டுறவு மருந்தகங்களிலும் பிராண்டட் மருந்துகள் மற்றும் ஜெனரிக் மருந்துகள் பொது மக்களுக்கு குறைவான விலையில் விற்பனைக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

மைய மருந்து கொள்முதல் திட்டத்தின் மூலம் 2024-2025ஆம் ஆண்டில் 31.01.2025 வரை, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.313.96 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சந்தைக் குறுக்கீடு நடவடிக்கை

நோக்கம்

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, தேவையின் அடிப்படையில், நுகர்வோர் கூட்டுறவுகள் சந்தை குறுக்கீடு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

திட்டச் செயல்பாடு மற்றும் விளைவு

நவம்பர் 2021-இல் பெய்த வடகிழக்கு பருவமழை மற்றும் வெள்ளத்தின்போது, தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை வானளாவ உயர்ந்தது. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் (நகரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் உட்பட) மூலம் 150 மெட்ரிக் டன் தக்காளி மற்றும் 1,100 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.4 கோடி மதிப்பிற்கு நுகர்வோருக்கு விற்கப்பட்டு, அதன் மூலம் வெளிச்சந்தையில் ஒரு கிலோவுக்கு ரூ.120- ரூ.150ஆக இருந்த தக்காளியின் விற்பனை விலை வெகுவாகக் குறைந்து ஒரு கிலோவுக்கு ரூ.40- ரூ.50ஆக கட்டுப்படுத்தப்பட்டது.

மே மற்றும் ஜூன் 2022 மாதங்களில் ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் பெய்த கனமழையால் தக்காளி வரத்து குறைந்து வெளிச்சந்தையில் விலை அதிகரித்தது. இதன் தொடர்ச்சியாக சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலம் 89 மெட்ரிக் டன் தக்காளி ரூ.0.64 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.

செப்டம்பர் 2022-ஆம் ஆண்டு பெய்த தென்மேற்குப் பருவமழை காரணமாக அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்து விலை அதிகரித்தது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலம் ரூ.0.13 கோடி அளவுக்கு 37 மெட்ரிக் டன் தக்காளி 65 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டது.

2023 ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடுவது கணிசமாக குறைந்தது. இதனால் அண்டை மாநிலங்களிலிருந்து தக்காளி வரத்து குறைந்து, தக்காளியின் விலை கிலோ ரூ.160 வரை உயர்ந்தது. தக்காளியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் விதமாக, கூட்டுறவுத் துறை நடத்தும் 65 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் நியாயவிலைக்கடைகள் மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, 472 மெட்ரிக் டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு ரூ.3.35 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது.

2023 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களிலிருந்து வெங்காயத்தின் வரத்து குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்பட்டது. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக வெளிச்சந்தையில் நிலவும் வெங்காயத்தின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் விதமாக NAFED –இடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), வெங்காயத்தை கொள்முதல் செய்து கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 53 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கிலோ ரூ.30/- என்ற விலையில் ரூ.0.16 கோடி மதிப்பிற்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

2024 அக்டோபர் மாதத்தில் தக்காளியின் வரத்து குறைவால் விலை கிலோ ரூ.100/- வரை உயர்ந்தது. விலையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக கூட்டுறவுத்துறை நடத்தும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகளில் அதிகபட்ச விலையாக ரூ.60/- நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

நோக்கம்

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு சத்தான காலை உணவு வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, காலை உணவு வழங்கும் திட்டம் முதற்கட்டமாக 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்க பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கியும், தற்போது ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டும் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது..

திட்டப் பயன்

இத்திட்டத்தின் கீழ், 2024-2025-ஆம் ஆண்டு ஜனவரி 2025 வரை ரூ.11.72 கோடி மதிப்பிலான இருமுறை வருக்கப்பட்ட ரவை, சம்பா ரவை மற்றும் சேமியா உள்ளிட்ட பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் மூலமாக 32,284 அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 17,00,000 மாணவ, மாணவியருக்கு சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் காலை உணவு தயாரிக்க, மதிய உணவு மையங்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

முதல்வர் மருந்தகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர தின உரையில் 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் எனவும் இதன் மூலம் ஜெனரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள், நியூட்டராசெட்டிகல்ஸ் மற்றும் இந்திய மருந்துகள் மக்களுக்கு 25% தள்ளுபடி விலையில் மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

முதல்வர் மருந்தகம் தொடங்கிட ரூ.30 கோடி தொகை கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது.



பசுமை வழித்தடம்

பெரிய மாவட்டங்களை காய்கனி கடைகளுடன் இணைத்து விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் "பசுமை வழித்தடங்கள் அமைக்கப்படும்."

நியாயமான விலையில் நல்ல தரமான காய்கறிகளை வழங்கிடவும், தமிழ்நாடு முழுவதும் உள்ள பெரிய நகரங்களில் புதிய பண்ணை பசுமை காய்கறி கடைகள் தொடக்கப்படும். பசுமை வழித்தடம் (சிறப்பு வழித்தடம்) உருவாக்கப்பட்டு காய்கறிகள் அதிகம் விளையும் ஊட்டி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் புதிய கடைகள் இவ்வழியில் தொடங்கப்பட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

பொது விநியோகத் திட்டம்

2,08,24,176 அரிசி அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 வீதம் கொரோனா நிவாரண உதவித் தொகை இரண்டு தவணையாக மே மற்றும் ஜூன் 2021 மாதங்களில் வழங்கப்பட்டது.

2,07,70,332 அரிசி அட்டைதாரர்களுக்கு, 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய கொரோனா நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டது.

2022-ஆம் ஆண்டில் 2,12,17,756 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு, 20 பொருள்கள் மற்றும் ஒரு முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு நியாய விலைக் கடைகளில் பனைவெல்லம் விற்பனை செய்யப்படுகின்றது. அக்டோபர் 2021 முதல் ஜனவரி 2025 வரை ரூ.1.91 கோடி மதிப்பிலான பனை வெல்லம் நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஜூன் 2022 முதல் ஜனவரி 2025 வரை ரூ.2.48 கோடி மதிப்பிலான சிறுதானியங்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நியாயவிலைக்கடைகளில் முழுமையான தர மேலாண்மையை உறுதி செய்வதற்காக கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் நியாய விலைக்கடைகளுக்கு ISO தரச்சான்றிதழ் பெறப்பட்டு வருகிறது. இதுவரை 10,140 நியாய விலைக் கடைகளுக்கு ISO:9001 சான்றிதழும், 2,059 நியாய விலைக் கடைகளுக்கு ISO:28000 சான்றிதழும் பெறப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதிலும் உள்ள நியாயவிலைக் கடைகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பொலிவுறச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இதுவரை 5,435 நியாயவிலைக் கடைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



2023-ஆம் ஆண்டில் 2,14,67,500 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு மற்றும் ரூ.1000/- ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

மாநிலம் முழுவதும் மே 2021 முதல் ஜனவரி 2025 வரை 563 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1,188 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட மொத்தம் 1,751 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும், மே 2021 முதல் ஜனவரி 2025 வரை 721 நியாய விலைக்கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனையின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் UPI முறையைப் பயன்படுத்தி ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை, 10,605 நியாய விலைக் கடைகளில் UPI முறையைப் பயன்படுத்தி ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் வெள்ள நிவாரணத் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000 வீதம் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 18,60,911 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணத் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000 வீதம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதி கனமழையால் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட வட்டங்களில் உள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 6,36,970 குடும்பங்களுக்கும் மற்றும் ரூ.1,000 வீதம் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள், தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழையால் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 13,38,269 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது.

2024ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு மற்றும் ரூ.1,000 ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 2,03,25,644 அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

2025ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 1,94,35,771 அரிசி

குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

ஊரகக் கிடங்குக் கட்டுமானம்

அறுவடைக்காலங்களில் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை சேமித்து வைக்கவும், குறைந்த விலையில் விற்பனை செய்வதைத் தவிர்க்கவும் கூட்டுறவு நிறுவனங்களில் 5,44,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,044 கிடங்குகள் நியாயமான வாடகையில் விவசாயிகளுக்கு பயன்பாட்டில் உள்ளன.

2024-2025ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் இராமநாதபுரத்தில் வேளாண் இடுபொருட்கள் சேமிக்க 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 7%, குறைந்த வட்டிவிகிதத்தில் தானிய ஈட்டுக்கடன் வழங்க சேமிப்பு கிடங்கு மேம்பாடு மற்றும் வளர்ச்சி ஒழுங்குமுறை ஆணையத்திடம் (WDRA) 1,175 கிடங்குகள் பதிவுசெய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இவை தவிர இதர கிடங்குகளையும் பதிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுடெல்லியில் நடைபெற்ற கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) தோற்றுவிக்கப்பட்ட நாள் (Foundation Day) விழாவின்போது, கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளை கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவுசெய்ததற்காக, இந்திய அரசின் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தால் தமிழ்நாட்டிற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

உர விநியோகம்

விவசாயிகளின் வேளாண் உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, கூட்டுறவு சங்கங்கள் உரங்களை விநியோகம் செய்து வருகின்றன. இதனை, பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் மற்றும் ரொக்கத்திற்கும், இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. உரங்களின் மொத்த சந்தைத் தேவையில் 25% கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.3.72 இலட்சம் மதிப்பில் 20,29,859 மெ.டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் 2023

டெல்டா விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், அவர்களின் வருவாயை நிலைநிறுத்தவும், சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், கடலூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில், டெல்டா மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 5,96,738 விவசாய பயனாளிகளுக்கு (ஒரு பயனாளிக்கு 2 ஏக்கர் உச்சவரம்புடன்) உரங்கள் (36,606 மெ.டன் யூரியா, 31,265 மெ.டன் டிஏபி மற்றும் 15,620 மெ.டன் எம்ஒபி) இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.








குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்



திரு. **தா.மோ.அன்பரசன்** அவர்கள்
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்



ரூ.259.17 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், 2,386 தூய்மைப் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்...

7,297 பயனாளிகளுக்கு கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் ரூ.138 கோடி கடனுதவி...

கோயம்புத்தூரில் ரூ.126.12 கோடியில் தங்கநகைப் பூங்கா...

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5.77 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்...

அயோத்திதாசர் பண்டிதர் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் வாழும் 57,890 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.100 கோடியில் உட்கட்டமைப்பு வசதிகள்...

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம், உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களை தொடங்கிடவும், விரிவுபடுத்திடவும் மானியத்துடன் கூடிய கடனுதவி.

"அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்" தொடங்கப்பட்டு, ரூ.259.17 கோடி மானியமாக வழங்கப்பட்டு, இதில் தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் 177 பயனாளிகள் உட்பட 2,386 பயனாளிகள் பயன்.

பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தவும் இத்திட்டத்தின் கீழ் 10,841 பயனாளிகளுக்கு ரூ.630.98 கோடி கடனாகவும் ரூ.213.51 கோடி மானியமாகவும் விடுவிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இந்திய அளவில் தமிழ்நாடு சிறந்த செயல்பாட்டாளராக அறிவிப்பு.

தமிழ்நாடு கடன் உத்திரவாதத் திட்டத்தின் கீழ் 42,188 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.7,719.51 கோடி மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. ரூ.725.18 கோடிக்கு இத்திட்டத்தின்கீழ் உத்திரவாதம்.

இந்திய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைய பெற்ற மாநிலங்களில் 32 இலட்சம் உத்யம் பதிவுகளுடன் தமிழ்நாடு 3ஆவது இடம்.

மூலதன மானியமாக 9,302 பயனாளிகளுக்கு ரூ.1,159.41 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தனிநபர் முதலீட்டு மானியம் ரூ.400.91 கோடி கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்டு, இதில், தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.6.37 கோடி மானியம் உட்பட 4,134 தொழில்முனைவோர்கள் பயன்.

படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான, வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 11,686 பயனாளிகளுக்கு ரூ.128.25 கோடி மானியம்.

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.347.33 கோடி மானியத்துடன் 13,849 தொழில்முனைவோர் பயன்.

மதிப்பு கூட்டுதல், தொழில்நுட்ப மேம்பாடு, தரம், சந்தை வாய்ப்பு மற்றும் சேமிப்புக்கிடங்கு போன்றவற்றினை மேம்படுத்திடும் பொருட்டு பொது வசதி மையத்தினை ஏற்படுத்திட குறுந்தொழில் குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 45 குழுமங்கள் ரூ.221.94 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.177.87 கோடி அரசு மானியம் வழங்கிட ஒப்புதல்.

3,168 நிறுவனங்களுக்கு ரூ.29.51 கோடி குறைந்தழுத்த மின் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

253 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5.91 கோடி ஊதியப் பட்டியல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பின் முனை வட்டி மானியமாக 2,976 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.17.19 கோடி வழங்கப்பட்டுள்ளது

916 நிறுவனங்களுக்கு ரூ.7.72 கோடி ஆற்றல் தணிக்கை, ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்ட மானியம்.

820 நிறுவனங்களுக்கு ரூ.8.97 கோடி தரச் சான்றிதழ் பெறுவதற்கான மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

12 சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மூலதன சந்தைகளிலிருந்து நிதி திரட்டுவதற்காக அவர்கள் செலவிட்ட ரூ.313.48 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

97 நிறுவனங்களுக்குக் காப்புரிமை பதிவு, வர்த்தக முத்திரை பதிவுக்காகவும் ரூ.46.96 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்க குழுக்கள் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களால் விநியோகிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான பட்டியல் தொகையை விரைந்து பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. 232 வசதியாக்கக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு 2,343 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.432.65 கோடி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களால் வழங்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தொகையினை விரைந்து பெறும் வகையில், தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை (TN-TReDS) எனப்படும் திட்டம் தொடங்கப்பட்டது. TN-TReDS திட்டத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் 1,280 குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பட்டியல்களுக்கு ரூ.3,638.39 கோடி பட்டுவாடா.

தாய்கோ வங்கி மூலம் குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 10% இலிருந்து 7% குறைக்கப்பட்ட விகிதத்தில் வட்டி கடன் உதவியை (ரூ.20 இலட்சம் வரை) எளிதாக அணுகும் நோக்கத்துடன் "கலைஞர் கடன் உதவித் திட்டம் (KCS)" என்று அழைக்கப்படும் ஒரு புதிய முதன்மைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறன்களை மேம்படுத்தவும் ஆதரிக்கவும் நிறுவன மேம்பாட்டுக் கடன்கள்/ பணி மூலதன காலக் கடனை அனுமதிக்கும் "கலைஞர் கைவினைத் திட்டத்திற்கு" ரூ.75 கோடி ஒதுக்கீடு.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் நவீனமயமாக்கல் பணிகள் RIDF கட்டம் - I திட்டத்தின்கீழ் ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

சேகோசர்வ் சங்கத்தில் ஜவ்வரிசி தயாரிப்புகளின் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கவும், ஜவ்வரிசியில் தயாரிக்கப்படும் பல்வகை உணவுகள் குறித்த விழிப்புணர்வை உள்ளூர் மக்களிடையே ஏற்படுத்துவதற்காக நேரடி விற்பனை முனையம் ரூ.33.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

கைவினைஞர்களின் முற்போக்கான வளர்ச்சிக்கு "கலைஞர் கைவினை திட்டம்" திட்டத்தின் கீழ், மரவேலைப்பாடுகள், நகை செய்தல், சிற்பவேலைப்பாடுகள், கண்ணாடி வேலைப்பாடுகள், இசைக்கருவிகள் தயாரித்தல், மணி வேலைப்பாடுகள் உள்ளிட்ட 25 வகையான வர்த்தகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற குறைந்தபட்ச வயது 35 ஆகும். இத்திட்டத்தில் ரூ.3 இலட்சம் வரை கடனுதவி, 25% மானியத்துடன், அதிகபட்ச மானியமாக ரூ.50,000 /- வழங்கப்படும். நடப்பு நிதி ஆண்டில் ரூ.138 கோடி கடனுதவி பெறத்தக்க ரூ.28 கோடி மானியத்திற்கான 7,297 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான 8 புதிய தொழிற்பேட்டைகள் 7 மாவட்டங்களில் 450.37 ஏக்கர் மொத்த பரப்பில் 693 தொழில்மனைகள் தொழில்முனைவோர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில்முனைவோர்களுக்கு ரூ.713.37 கோடி மதிப்பிலான 2,539 தொழில்மனைகள் மற்றும் தொழிற்கூட அலகுகள் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் ஒதுக்கீடு.

ஒன்பது மாவட்டங்களில் 408.44 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.211.19 கோடி மதிப்பில் 11 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2024-2025 ஆண்டில் மேலும், மூன்று மாவட்டங்களில் 80.43 ஏக்கர் நிலப்பரப்பில் 31.85 கோடி மதிப்பில் மூன்று புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு நிலம் பெற நடவடிக்கை.

122 தொழிற்பேட்டைகளில் அதிக விலை மதிப்பின் காரணமாக 371 ஏக்கர் பரப்பளவில் 1,341 தொழில்மனைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்தது. இவற்றினை நிவர்த்தி செய்ய திருத்திய மனை மதிப்பீட்டு கொள்கை வெளியிடப்பட்டது. இத்திருத்திய மனை மதிப்பீட்டு கொள்கையின் படி பல தொழிற்பேட்டைகளில் மனை மதிப்பானது 5% முதல் 75% வரை குறைக்கப்பட்டு 900 தொழிற்மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கொசிமா (COSIEMA) மூலம் கோயம்புத்தூர் மாவட்டம் சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில் ரூ.9.06 கோடி அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்க அடிப்படை உட்கட்டமைப்பு அமைக்கும் பணிகள் நிறைவுற்று விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் 316.04 ஏக்கர் பரப்பில் அறிஞர் அண்ணா தொழிற் கூட்டுறவு தொழிற்பேட்டையில் ரூ.24.61 கோடி திட்ட மதிப்பில் ரூ.10 கோடி அரசு மானியத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக முதல்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்று மூன்றாம் மற்றும் நான்காம் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்டம் மதவேடு கிராமத்தில் 11.57 ஏக்கரில் ரூ.4.40 கோடி திட்ட மதிப்பில், ரூ.3.30 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

23 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 21 சிட்கோ தொழிற்பேட்டைகளில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்க ஏதுவாக 1,937.37 ஏக்கர் நிலத்திற்கு அதிகாரம் பெற்ற குழுவின் ஒப்புதல் பெற்று இரயத்துவாரி வகையாக மாற்றம்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 1.212 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.29.47 கோடி திட்ட மதிப்பில் 810 பணியாளர்கள் தங்குவதற்காக தரைதளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகள் முடிவுற்றது.

கோயம்புத்தூர் மாவட்ட பணியாளர்களுக்கு தங்குமிட வசதி அளிக்கும் பொருட்டு, குறிச்சி தொழிற்பேட்டையில் 1.49 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.23.05 கோடி திட்ட மதிப்பில் 528 பணியாளர்கள் தங்குவதற்காக தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதி அமைப்பதற்கு கட்டுமானப் பணிகள் நிறைவுற்றுள்ளது.

சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு சிட்கோ நிறுவனம் வெள்ளி கொலுசு உற்பத்தியாளர்களுக்கு தேவையான பணியிடத்தை வழங்கும் வகையில் ரூ.25.29 கோடி திட்ட மதிப்பில் 1.20 ஏக்கர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் 100 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகம்.

தமிழ்நாடு சிட்கோ, தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் நிலம் கண்டறியப்பட்டு தொழில்முனைவோர் கூட்டமைப்பினர்களுடன் இணைந்து 1.2 ஏக்கர் நிலத்தில் ரூ.47.62 கோடி திட்ட மதிப்பில் ரூ.33.33 கோடி மானியத்துடன் துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம் அமைக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.126.12 கோடி திட்ட மதிப்பீட்டில் தங்க நகை பூங்கா (7 அடுக்குமாடி தொழிற்கூட வளாகம்) நிறுவப்படும். இத்திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

"தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை செப்டம்பர் 2023, 20ஆம் தேதி அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் 8,461 புத்தொழில் நிறுவனங்கள் DPIIT தளத்தில் புதிதாகப் பதிவு.

2021-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032. தற்போது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 10,493-ஐக் கடந்துள்ளது. இதில் சுமார் 49% நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது. 2022ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் புத்தொழில் தரவரிசை பட்டியலில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு தேர்வு. "ஸ்டார்ட்அப் ஜீனோம்" அமைப்பு வெளியிட்ட "உலகளாவிய புத்தொழில் சூழமைவு அறிக்கை 2024"-இன்படி சிறந்த புத்தொழில் சூழமைவு கொண்ட இடங்களில் ஆசியா அளவில் சென்னை 18-ஆவது இடம்.

புத்தொழில் நிறுவனங்களுக்கான தொழில்வளர் காப்பகங்களின் எண்ணிக்கையை பொருத்தவரை தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. நிதி ஆயோக்கின் கீழ் செயல்படும் அடல் இன்னோவேஷன் மிஷன் (ஏஐஎம்) புத்தாக்க சூழமைவு சிறப்பாக உள்ள மாநிலங்களில் முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை அங்கீகரித்துள்ளது.

புத்தொழில் ஆதார நிதி (TANSEED) திட்டத்தின் கீழ் 169 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.18.79 கோடி நிதி.

அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும் பொருட்டு 2022-2023 ஆம் நிதி ஆண்டு பட்டியலின/பழங்குடியினரால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக வழங்க ரூ.30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு. 2023-2024 ஆம் நிதி ஆண்டில் இந்த சிறப்பு நிதியானது ரூ.50 கோடியாக உயர்வு. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 41 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.56.63 கோடி பங்கு முதலீடு.

வட்டார புத்தொழில் மையங்கள் சென்னை, மதுரை. ஈரோடு, திருநெல்வேலி, ஓசூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், கோவை மற்றும் திருச்சி ஆகிய 10 நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன.

கோயமுத்தூரில் "தமிழ்நாடு புத்தொழில் திருவிழா 2023" நடைபெற்றது. 21 ஆயிரம் பார்வையாளர்களோடு, 450 புத்தொழில் நிறுவனங்கள் அவர்களின் தயாரிப்புகள் மற்றும் புத்தாக்கத்தை காட்சிப்படுத்த கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு இத்திருவிழாவில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

முதலீடுகள் தேவைப்படும் புத்தொழில் நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் இணைக்கும் நோக்கத்தில் முதலீட்டாளர் இணைப்புத் தளம் (TANFUND) உள்ளது. இன்றுவரை 209 முதலீட்டு நிறுவனங்களும், 4,705 புத்தொழில் நிறுவனங்களும் பதிவுசெய்துள்ளன. இத்தளத்தின் வாயிலாக 1,019 புத்தொழில் நிறுவனங்களை முதலீட்டாளர்களுடன் இணைக்கும் வகையில் 137 முதலீட்டாளர் சந்திப்பு. நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, இதன் மூலம் புத்தொழில் நிறுவனங்கள் ரூ.115.15 கோடி நிதி. புத்தொழில் நிறுவனங்களுக்குத் தகுந்த வழிகாட்டுதலை அளிக்கும் நோக்கில் வழிகாட்டி தளம் MentorTN தொடங்கப்பட்டுள்ளது. 320 துறைசார் வல்லுநர்கள் வழிகாட்டுநர்களாக இணைந்துள்ளனர். 1,048 புத்தொழில் நிறுவனங்கள் இதில் பதிவுசெய்துள்ளன. புத்தொழில் நிறுவனங்களுக்கு 393 மணி நேரம் ஆலோசனைகள் இத்தளத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன.

"தொழிலி" - பயிற்சி முகாம்கள் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. திறன் மேம்பாடு, புத்தொழில் சிந்தனை மற்றும் புத்தொழில் தொடங்கி அவற்றை வெற்றிகரமாக நடத்துவது உள்ளிட்ட வாய்ப்புகளை ஏற்படுத்தும் விதமாக இந்த பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர், கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் சென்னையில் நடத்தப்பட்ட நான்கு பயிற்சிப்பட்டறைகள் மூலம் 200 பெண்கள் பயனடைந்துள்ளனர்.



மகளிரால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு, தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்திக் கொள்வதன் பொருட்டு ஏற்படும் செலவினங்களுக்காக நிதி உதவி இதுவரை 15 நிறுவனங்களுக்கு ரூ.14.70 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2-ஆம், 3-ஆம் மற்றும் 4-ஆம் நிலை நகரங்களில் 100 தொடக்க நிலை தொழில் வளர் காப்பகங்களை (Pre Incubation Centers) அமைக்க ஆதரவு அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு, முதல் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 25 நிறுவனங்களுக்கு தலா ரூ.7.5 இலட்சம் வீதம் ரூ.1.87 கோடி நிதி வழங்குவதற்கான ஒப்புதல்.

துபாயில் "உலகளாவிய புத்தொழில் வள ஒருங்கிணைப்பு மையம்" தொடங்கப்பட்டுள்ளது. நாட்டிற்கு வெளியே கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை தெரிந்து கொள்ளும் பொருட்டு புத்தொழில் நிறுவனங்கள் உள்ளடக்கிய சிறப்பு அமர்வுகள் நடத்தப்படுகின்றன. மேலும், இந்த நிதி ஆண்டில் அமெரிக்க மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள்.

புத்தொழில் நிறுவனங்களுக்கு வணிக மாதிரிகள், சந்தைப்படுத்துதல், நிதி, குழு உருவாக்கம் உள்ளிட்ட நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முக்கியமான செயல்களில் திறன்களை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை இத்திட்டம் கொண்டுள்ளது. தற்போது தமிழ்நாடு பட்டியலினத்தவர்/ பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் முதலீடு பெற்ற 33 நிறுவனங்கள் இம்மையத்தின் வாயிலாக பயன்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புத்தொழில்முனைவோர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில்கள் அளிக்கும் வகையில் தொலைபேசி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்முனைவு ஆர்வலர்களின் சந்தேகங்களுக்கு இந்த மையம் தேவையான விளக்கங்களை அளித்து அவர்களுக்கு உரிய வழி காட்டுகிறது.

இளைஞர்களிடையே தொழில்முனைவை ஊக்குவிக்கும் வகையில் "தடை அதை உடை" மற்றும் "ஆடுகளம்" ஆகிய இரண்டு முக்கிய நிகழ்வுகள் அனைத்து வட்டார மையங்கள் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு, இதுவரையில் 790 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு இதன் மூலம் 97,403 தொழில்முனைவோர், தொழில்முனைவு ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் பயன்.

நான் முதல்வன் திட்டத்துடன் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் இணைந்து நிரல் திருவிழா 2024 நடத்தப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் புத்தாக்க தொழில்முனைவு சிந்தனையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். தமிழ்நாட்டில் புத்தாக்கத்தை உருவாக்கும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வின் இறுதிப் போட்டி செப்டம்பர், 2024-இல் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற 144 போட்டியாளர்களிடமிருந்து 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கேற்ற 144 பேரது வணிக யோசனைகளும் வழிகாட்டிகளின் உதவியோடு செம்மைப்படுத்தப்பட்டு, புத்தொழில் நிறுவனங்களாக அதனை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இளைய தலைமுறையினருக்கான (NEEDS, UYEGP, AABCS) தொழில் முன்னேற்றத்தை ஆதரிப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் பயிற்சித் திட்டங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன. தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் (EDP) கீழ் இதுவரை 12,719 தொழில்முனைவோர்களுக்குப் பயிற்சி.

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (ஒருங்கிணைப்பு) கீழ், 37,378 பயனாளிகளுக்குத் தொழில்முனைவோர் பயிற்சி.

தமிழ்நாட்டின் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களிடையே தொழில்முனைவு மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை வளர்க்க, பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டமானது, UNICEF மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டு இதுவரை, 5.77 இலட்சம் பள்ளி மாணவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்று பயன்.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் புத்தாக்கத் திறனை மேம்படுத்துவதற்காக, புத்தாக்கப் பற்றுச்சீட்டு திட்டத்தின் கீழ் 520 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.13.37 கோடி மானியம்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் ரூ.395 கோடிக்கு உற்பத்தியும் மற்றும் ரூ.397 கோடிக்கு விற்பனை.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

நகர ஏழை குடும்பங்களுக்காக 79,158 தனி வீடுகள் ரூ.2,374.74 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் முறையின்கீழ் 2,03,289 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 67,506 வீடுகளுக்கானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நகர்ப்புற பகுதிகளில் 46,929 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றும் 66,921 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள இத்திட்டப்பணிகளுக்காக ரூ. 8,014.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 2,745 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.536.82 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டும் பணிகள். நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் நகரில் 520 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.81.57 கோடி திட்ட மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒரு பகுதியாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 2,210 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.420.69 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல்.

தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 7029 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. 13,922 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 28,643 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் 2024-2025ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு. 6,424 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.51.49 கோடி செலவில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் 117 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் உள்ள 76,434 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் முடிவுற்றுள்ளன. ரூ86.38 கோடி செலவில், அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான புனரமைப்புப் பணிகள். அயோத்திதாசப் பண்டிதர் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் வாழும் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில், 64 அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளில் உள்ள 57,890 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகள்.

57,258 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு ஆணைகள் பல்வேறு திட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன. 5,392 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 2024 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த 24,589 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள். மேலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளை நன்முறையில் பராமரிக்க 695 குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.








தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்



திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்



ரூ.4.70 கோடி செலவில் இலக்கிய மாமணி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி, தகைசால் தமிழர் விருது, முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்த் தொண்டு விருது என 254 விருதுகள்...

பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், பணிக்கொடை ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ. 4 இலட்சமாக உயர்வு...

ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல்" விருது...

ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் 2,035 கலைஞர்களுக்கு மாவட்டக் கலைமன்ற விருதுகள்...

ரூ. 6 கோடி மதிப்பீட்டில் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகப் பாரம்பரியக் கட்டடம் மீட்டுருவாக்கம்...

தமிழ் வளர்ச்சித்துறை

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

விருதுகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1971ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில், ஆண்டுதோறும் தைத்திங்கள் 2ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளன்று வழங்கப்படும் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த நான்காண்டுகளில் 28 அறிஞர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இதற்கென 75.89 இலட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் கபிலர் விருது, கம்பர் விருது, உ.வே.சா. விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு. போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, அம்மா இலக்கிய விருது, காரைக்கால் அம்மையார் விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (10), சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலை அடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது, உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வழங்கப்படும் இலக்கிய விருது, இலக்கண விருது, மொழியியல் விருது ஆகிய விருது பெறும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத்தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு கடந்த நான்காண்டுகளில் 84 அறிஞர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இதற்கென செலவினம் ரூபாய் 2 கோடியே 17 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் தமிழ் வளர்ச்சிக்காக தொண்டாற்றிவரும் 114 தமிழ்ஆர்வலர்கள்/அறிஞர்களுக்கு ரூபாய் 34 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்ச் செம்மல் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் தமிழமைப்புகளை நிறுவி தமிழ்த்தொண்டாற்றும் சீரிய அமைப்புகளுக்கு தமிழ்த்தாய் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4 தமிழ் அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறப்பு விருது

மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டினை முன்னிட்டு அவரது வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த 6 அறிஞர்களுக்கு 2021ஆம் ஆண்டில் சிறப்பு நேர்வாக பாரதி நினைவு நூற்றாண்டு விருது ரூ.18.60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

புதிய விருதுகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆம் பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு விருதாளர் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ரூ.5 இலட்சம் மற்றும் ஒரு சவரன் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. 2023ஆம் ஆண்டு, மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினைச் சிறப்பிக்கும் வகையில், சிறப்பு நேர்வாக கூடுதலாக மூன்று அறிஞர்கள் தெரிவு செய்யப்பெற்ற வகையில் நான்காண்டுகளில் 12 அறிஞர்களுக்கு ரூபாய் 69.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் 150ஆம் பிறந்த நாளை முன்னிட்டு அவரது பெயரில் புதிய விருது தோற்றுவிக்கப்பட்டு விருதுத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2021-ஆம் ஆண்டிற்குரிய விருது 15.11.2022அன்று வழங்கப்பட்டது.

தகைசால் தமிழர் விருது என்ற புதிய விருது 2021ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு விருதுத்தொகை ரூ.10 இலட்சம் வீதம் கடந்த நான்காண்டுகளில் ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4 அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் புதிய விருது தோற்றுவிக்கப்பட்டு விருது வழங்கிட ரூபாய் 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 15.01.2025 அன்று வழங்கப்பட்டது. கடந்த நான்காண்டுகளில் எழுதுகோல் விருதுகள் வழங்கிட மொத்தம் ரூபாய் 4 கோடியே 70 இலட்சத்து 23 ஆயிரம் ஒதுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

அரசு அலுவலகங்களில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு அறிஞர்கள் குழுவால் ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப்பயன்பாடு ஆகிய பொருண்மைகளில் கடந்த நான்காண்டுகளில் 152 பயிற்சி வகுப்புகள் மற்றும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்திட ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956-ஆம் நாளை நினைவுகூரும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நினைவூட்டி நடைமுறைப்படுத்த வலியுறுத்தவும் விழிப்புணர்வூட்டவும் மாவட்டங்கள் தோறும் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 21 முதல் 27 வரை ஒரு வாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 38 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் நடத்திட நான்காண்டுகளில் ரூபாய் ஒரு கோடியே 52 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் உலக மக்கள் அனைவரிடமும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கில் கடந்த நான்காண்டுகளில் 32 அறிஞர்களின் 1,442 நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு நூலுரிமைத் தொகையாக ரூபாய் 3 கோடியே 79 இலட்சம் 35 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் எழுதி வெளிவந்த அனைத்துப் படைப்புகளும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் நூலுரிமைத் தொகையின்றி நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளது.

சிறந்த நூல் பரிசு

தனித்துவமிக்க தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் சிறந்த படைப்புகளைப் படைத்த நூலாசிரியர்களுக்கும் பரிசுத்தொகையாக ரூ.30,000/-மும் அவற்றை வெளியிடும் பதிப்பகத்தாரர்களுக்கு பரிசுத்தொகையாக ரூ.10,000/-மும் வழங்கப்பட்டு வந்தன.



2024-2025 ஆம் ஆண்டு முதல் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பெற்ற சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியருக்கு பரிசுத்தொகை ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாகவும் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 07.02.2025 ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

கடந்த நான்காண்டுகளில் 226 நூலாசிரியர்கள் மற்றும் 221 பதிப்பகத்தார்களுக்கு பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு கோடியே நான்கு இலட்சத்து பதினைந்தாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

கனவு இல்லம் – (இலக்கியப் பிரிவு)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கனவு இல்லம் திட்டம் வாயிலாக, சாகித்திய அகாதெமி, ஞானபீட, தொல்காப்பியர், கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது (தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு மட்டும்) மற்றும் நோபல் பரிசு இலக்கியம் (தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியப் பணிகளுக்கு பெற்றிருப்பின்) ஆகிய விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு கனவு இல்லம் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள்/வீடுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த நான்காண்டுகளில் 22 அறிஞர்களுக்கு ரூபாய் 29 கோடியே 65 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் கனவு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கனவு இல்லம் – (மொழிபெயர்ப்பு பிரிவு)

கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக, தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற விருதாளர்களுக்கு அதிக அளவாக ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலான இல்லம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2024-2025ஆம் ஆண்டில் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு ரூபாய் 3 கோடியே 76 இலட்சத்து 43 ஆயிரம் நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

திருக்குறள் பரிசு

ஆண்டுதோறும் திருக்குறள் முற்றோதல் (மனப்பாடம்) செய்யும் மாணவர்களில் 70 மாணவர்களுக்கு மட்டும் பரிசுத் தொகை வழங்குதல் என்ற உச்சவரம்பு நீக்கப்பட்டு முற்றோதல் செய்யும் அனைவருக்கும் பரிசுத் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/-ஆக உயர்த்தி கடந்த நான்காண்டுகளில் 598 மாணவச் செல்வங்களுக்கு ரூபாய் 87 இலட்சத்து 72 ஆயிரம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

போட்டிகள்

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துகளையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டு, கடந்த நான்காண்டுகளில் போட்டிகள் நடத்தி பரிசுத்தொகை வழங்கிட ரூபாய் 2 கோடியே 72 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களிடையே தமிழ் இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில் 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் திறனறித் தேர்வு நடத்திட ஆணையிடப்பட்டு, தெரிவு செய்யப்படும் 1,500 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக திங்கள்தோறும் ரூ.1,500/- வீதம் 22 திங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வோர் ஆண்டும் தேர்வு நடத்திடவும், ஊக்கத்தொகை வழங்கிடவும் கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 14 கோடியே 93 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை அதிகரிக்க, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றங்கள் புதிதாக தோற்றுவித்து மாணவர்களிடையே தமிழ் சார்ந்த போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தவும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வைப்புத்தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் 100 கல்லூரிகளுக்கு ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் ரூபாய் 50 இலட்சம் வைப்பு நிதியிலிருந்து கவிஞர் தமிழ்ஒளியின் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை ஒப்பித்தல் மற்றும் பேச்சுப்போட்டிகள் ஆண்டுதோறும் சுழற்சிமுறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்திட ஆணையிடப்பட்டு முதன்முறையாக கடலூரில் 27.07.2024 அன்று ரூ.3,25,000/- செலவில் நடத்தப்பெற்ற போட்டியில் 247 மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

உதவித்தொகை

300 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், 1 எல்லைக் காவலர், 1 தமிழறிஞர், 49 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் மற்றும் 110 தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் என மொத்தம் 461 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.



பேருந்துப் பயணச் சலுகை

691 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச்சலுகை வழங்கிட ரூபாய் ஒரு கோடியே 44 இலட்சத்து 9 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள்

2022–2023ஆம் ஆண்டு, 2023–2024 மற்றும் 2024–2025ஆம் ஆண்டுகளுக்கான இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிகள் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும் நடத்தப்பெற்றன இதற்கென மொத்தம் ரூபாய் 60 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி மாணவர்கள் பயனுறும் வகையில் திங்கள்தோறும் 2023–2024ஆம் ஆண்டு முதல் இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென 38 மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6,218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றங்களை மேம்படுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்திட ஒவ்வொரு பள்ளிக்கும் ரூபாய் 9,000/– வீதம் நான்காண்டுகளில் ரூபாய் 16 கோடியே 78 இலட்சத்து 86 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழால் முடியும் என்ற தலைப்பில் 200 மாணவர்களுக்கு 24 அறிஞர்களை அழைத்து 3 நாள்கள் நடத்தப்படும் வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி நடத்திட ரூபாய் 46 இலட்சத்து 65 ஆயிரம் வழங்கப்பட்டு பயிற்சிகள் நடத்தப்பெற்று வருகிறது.

இலக்கிய விழாக்கள் / கூட்டங்கள்

தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்களால் பெயர் சூட்டிய ஜூலை 18–ஆம் நாளினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "தமிழ்நாடு நாளாகக்" கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டதற்கிணங்க ஆண்டுதோறும் தமிழ்நாடு நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2022ஆம் ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். 2023ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியிலும், 2024ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்திலும் தமிழ்நாடு நாள் நிகழ்ச்சிகள் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தலைமையில் நடத்தப்பெற்றன.

தமிழ்நாடு நாள் விழாவின் ஓர் அங்கமாக அறிஞர்களை அழைத்து கருத்தரங்கம் நடத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு நாள் விழா தொடர்பில் 38 மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட / மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சத்து 66 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று உள்ளூர் இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து கடந்த நான்காண்டுகளில் 27 மாவட்டங்களில் ரூபாய் 33 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கடந்த காலங்களில் பிறமொழித் திணிப்பால் தாய்மொழி தமிழுக்கு வந்த ஆபத்தை எதிர்த்து தங்கள் இன்னுயிரை ஈந்த மொழித்தீரர்களின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் ஜனவரித் திங்கள் 25–ஆம் நாள் "தமிழ்மொழித் தியாகிகள் நாளாக" கடைபிடித்திட ஆணையிடப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.01.2025 ஆம் நாளன்று சென்னை, மூலக்கொத்தளத்தில் திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரின் பொலிவேற்றம் செய்யப்பட்ட நினைவிடத்தில் மலர் வணக்கம் செய்யப்பட்டது. கிண்டியில் அமைந்துள்ள தியாகிகள் நினைவிடத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் மலர் வணக்கம் செய்யப்பட்டது.

மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை 01.01.2000 அன்று திறந்து வைக்கப்பட்டு

25 ஆண்டுகள் நிறைவையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் வெள்ளிவிழா நிகழ்ச்சி கொண்டாட ரூபாய் 1 கோடியே 38 இலட்சத்து 92 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 30.12.2024, 31.12.2024 ஆகிய இரண்டு நாள்கள் சிறப்பாக கொண்டாடப்பெற்றது. தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பட்டிமன்றம், கருத்தரங்கம், திருக்குறள் கண்காட்சி நடத்தப்பெற்றதுடன் திருக்குறள் நெறிபரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத்தொகை ரூ.25,000/-மும் நற்சான்றும் வழங்கி பாராட்டினார்கள்.

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுதந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் "செம்மொழிநாள் விழா"வாகக் கொண்டாடிடவும் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் செம்மொழித் தமிழ் தொடர்பில் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட ரூபாய் 1 கோடியே 86 இலட்சத்து 84 ஆயிரம் நிதியொப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

ஒப்பரிய தமிழ்ப் பணிகள் புரிந்து ஓங்குபுகழ்பெற்ற உயர்தனிப் பெரும்புலவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் பிறந்தநாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.12.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டு 21.02.2025 அன்று மாநிலக் கல்லூரியில் ரூபாய் 5 இலட்சம் செலவில் கருத்தரங்கம் மற்றும் பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.

பிற மாநிலம் / அயல்நாடுகளுக்கு நிதியுதவி வழங்குதல்

அமெரிக்காவிலுள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூபாய் 4 கோடி வழங்கப்பட்டது.

ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்த்துறை தொடர்ந்து செயற்படுவதற்கு ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சம் வழங்கப்பட்டது.

புதுதில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு 2022இல் ரூபாய் ஐந்து கோடியும். 2024இல் ரூபாய் 38,99,896/-ம் வழங்கப்பட்டு, 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

நவி மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு ரூபாய் 75 இலட்சம் வழங்கப்பட்டது.

ஒரிசா மாநிலத்தில் இயங்கி வரும் புவனேஸ்வர் தமிழ்ச் சங்கக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கப்பட்டது.

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கத்தினை புனரமைப்பு செய்திட ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

பிற பணிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.11.2021 அன்று எல்லைப் போராட்டத் தியாகிகள் 76 பேருக்கு சிறப்பு நேர்வாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 76 இலட்சம் வழங்கப்பட்டது.

தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூபாய் 75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ் பரப்புரைக் கழகம் திட்டத்தினைச் செயற்படுத்திட தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூபாய் 2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துகள் ரூபாய் 15 இலட்சம் செலவில் எழிலேடாக வெளியிடப்பட்டது.

புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகளை இணைய தளத்தில் பதிவேற்றிட தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூபாய் 10



இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய நூல்களைச் சந்திப் பிரித்து உரையுடன் தொகுப்பு நூலாக வெளியிட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சமும் வழங்கப்பட்டது. முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சந்தி பிரிக்கப்பட்ட பத்துப்பாட்டு நூல்கள் 06.01.2023 அன்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் சந்தி பிரிக்கப்பட்ட குறுந்தொகை, பதிற்றுப்பத்து மற்றும் இறையனார் அகப்பொருள் நூல்கள் 18.01.2024 அன்றும் வெளியிடப்பட்டன.

தந்தை பெரியார் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு-21 இந்திய, உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளைத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக வெளியிட ரூபாய் 29.05 இலட்சம் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக 10 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 18.01.2024 அன்று வெளியிடப்பட்டன.

பாரீசு பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் மற்றும் செருமனி மூன்சென் தமிழ்ச் சங்கத்தில் நூலகங்களை அமைப்பதற்கு ரூபாய் 13 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் படைப்புகள் எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக வெளியிட ரூபாய் 51 இலட்சம் நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு முதல் பத்து தொகுதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2025 அன்று வெளியிடப்பட்டது.

உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச்சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்திட 2024-2025 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம், உத்தமம் நிறுவனம் மற்றும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து 15.12.2022 முதல் 17.12.2022 வரை நடத்திய 21ஆவது தமிழ் இணைய மாநாட்டிற்கு ரூ.5,00,000/- வழங்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் வாழும் 275 தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் சிறப்பு உதவித் தொகையாக ரூ.10,000 வீதம் வழங்கும் நிகழ்வு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 31.01.2024 அன்று திருப்பூர் மாவட்டம், செங்கப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டு 275 பேருக்கு ஒருமுறை சிறப்பு உதவித்தொகை வழங்கிட ரூ.27,50,000/- வழங்கப்பட்டது.

சங்கப்பெரும் புலவர் கணியன் பூங்குன்றனார் அவர்களின் நினைவாக சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் மகிபாலன்பட்டியில் 276.75 சதுர அடி பரப்பளவில் ரூ.23.26 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்ட நினைவுத்தூண் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூபாய் 7 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்பீட்டில் மார்பளவு சிலை நிறுவப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

சங்கப் பெரும்புலவர் கபிலர் நினைவாக கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் ரூபாய் 13 இலட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் நிறுவப்பட்ட நினைவுத்தூண் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 07.03.2024 அன்று காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

கவிஞர் முடியரசன் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.01.2025 அன்று அடிக்கல் நாட்டு விழா காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையில் நேரடி நியமனம் மூலம் நிறைவு செய்யப்படும் 13 உதவி இயக்குநர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வுகள் நடத்தி நிறைவு செய்திட ஆணையிடப்பட்டு, 18.11.2024, 19.11.2024 ஆகிய நாள்களில் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

நிருவாக சீரமைப்பு

தமிழ் வளர்ச்சித் துறையில் தற்போது சேலம் மற்றும் திருநெல்வேலி என இரண்டு மண்டலங்கள் செயற்பட்டு வருகின்றன. நிர்வாக வசதிக்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி என ஆறு மண்டலங்கள் துணை இயக்குநர்கள் பொறுப்பில் செயல்படும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

சொற்குவை வலைத்தளம்

தமிழிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஒரே தளத்தின்கீழ் தொகுத்து மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கும் நோக்கில் சொற்குவை வலைத்தளத்தில் (sorkuvai.tn.gov.in) 2025 மார்ச் வரை 15,33,669 தமிழ்ச்சொற்கள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன.

வெளியீடுகள்

மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, நடைமுறைத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, தமிழ் – தமிழ் கையடக்க அகராதி, தமிழ் மரபுத்தொடர் அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி ஆகிய 7 அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் திருந்திய பதிப்பு 7 தொகுதிகள், மருத்துவக் கலைச்சொல் அகராதி, வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி ஆகியவை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 08.11.2023ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வில் வெளியிடப்பட்டுள்ளன.

அரசு அலுவலகங்களுக்கான ஆட்சிச்சொல் அகராதி 3 தொகுதிகளாகக் காலமேம்படுத்தம் செய்யப்பட்டும், அரசுத் துறைகளுக்கான ஆட்சிச்சொல் குறுநூல்கள் அச்சிடப்பெற்றும் உரிய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. தமிழ்நாட்டிற்கு வரும் பிறமொழியினர் தங்களது செல்பேசியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய பன்மொழி அகராதியுடன் கூடிய "தமிழ்ப்பேசி" குறுஞ்செயலி (Tamilpaesi – Application) மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 08.11.2023ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்க் கலைக்கழகம்

மக்களிடம் புழக்கத்திலுள்ள பிறமொழிச் சொற்களுக்கான தூயதமிழ்க் கலைச்சொற்களை இவ்வியக்ககத் தமிழ் கலைக்கழகம் வடிவமைத்து வழங்குகிறது. இக்கலைக்கழகத்தால் மாதம் இரு கூட்டங்கள் என்ற வகையில் 2021 மே முதல் 2025 மார்ச் வரை 178 கூட்டங்கள் நடத்தப்பட்டு 51,622 தமிழ்க் கலைச்சொற்களுக்கு வல்லுநர்குழுவின் ஏற்புக்குப்பின் 'சொற்குவை' வலைத்தளம் வழியாக மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன.

துறைதோறும் கலைச்சொற்கள்

அரசுத்துறைசார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்களை இணையத்தில் அறிமுகம் செய்யும் வகையில் 16 துறைகளில் கலைச்சொல் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 6,101 கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

பல்வேறு துறைசார்ந்த தமிழ்க் கலைச்சொற்களை அந்தந்தத் துறை சார்ந்த வல்லுநர்களின் உதவியுடன் வடிவமைத்துத் தொகுத்து, சொற்குவை வலைத்தளத்தில் சேர்க்கும் வகையில் கணினித்துறை, அருங்காட்சியகம், கல்வெட்டியல், தொல்லியல் துறைகள், நெசவுத்துறை, பட்டுவளர்ச்சித்துறை, கால்நடைத்துறை, வேளாண்மைத்துறை ஆகிய துறைசார் வல்லுநர் குழுக்கூட்டங்கள் நடத்தப்பெற்று 5,263 தமிழ்க் கலைச்சொற்கள் பெறப்பட்டுள்ளன.

தமிழ் அகராதியியல் நாள் விழா

வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் அவரது பிறந்தநாளான நவம்பர் 8ஆம் நாள் "தமிழ் அகராதியியல் நாள் விழா" வாகக் கொண்டாடப்பட்டு, 'அகராதி ஆய்வு மலர்' அச்சிட்டு வழங்கப்பட்டுவருகின்றன.

பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் ஓவியப்போட்டி மற்றும் சொல்லாக்கப் போட்டி நடத்தப்பட்டு, வெற்றியாளர்களுக்கு முதற்பரிசாக ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/-மும் வழங்கப்படுகின்றன. மேலும், மாநில அளவில் தனித்தமிழ்ப் பற்றாளர்கள் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டு 'தூயதமிழ்ப் பற்றாளர்' சான்றிதழுடன் தலா ரூ. 5000/- பரிசுத்தொகையும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில், 2021-2024 வரை 16 மாணவர்களுக்கு ரூ.1,20,000/-பரிசுத்தொகையும், 12 தமிழறிஞர்களுக்கு ரூ.60,000/- பரிசுத்தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

விருதுகள்

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கிவரும் தகுதிவாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்குத் 'தேவநேயப் பாவாணர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், வழங்கப்பட்டுவருகின்றன. 2021-2024 வரையில் 4 அறிஞர்களுக்குத் தொகை ரூ.8,00,000/-வழங்கப்பட்டுள்ளது.



வீரமாமுனிவர் நெறியில் அவர்தம் படைப்பு நடையில் சிற்றிலக்கியங்கள், மொழி பெயர்ப்புகள் உருவாக்கி, தமிழ் அகராதித்துறையில் சிறந்து விளங்கி, தமிழ் அகராதிகளையும் வெளியிட்டுள்ள, வெளிநாடு (அ) உள்நாட்டைச் சார்ந்த அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு 'வீரமாமுனிவர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் ரூ.4,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தூயதமிழ்ச் சொற்களைக் கொண்டு செய்திகளை வெளியிடும் ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில், அச்சு ஊடகம் மற்றும் காட்சி என இரு ஊடகங்களுக்குத் 'தூயதமிழ் ஊடக விருதும்', விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரமும், ரூ.25ஆயிரம் மதிப்பிலான தங்கப் பதக்கமும், வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் ரூ.4,75,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 7 ஊடகங்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

தூயதமிழ்ச் சொற்களைக் கொண்டு கவிதை இயற்றும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் மரபுக்கவிஞர் மற்றும் புதுக்கவிஞர் என இரண்டு பேருக்கு 'நற்றமிழ்ப் பாவலர் விருதும்', விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரமும், ரூ.25 ஆயிரம் மதிப்பிலான தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் ரூ.6,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 8அறிஞர்களுக்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நடைமுறை வாழ்க்கையில் பிறமொழிக் கலப்பின்றித் தூயதமிழில் பேசுவோரை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் ஒருவருக்குத் "தூயதமிழ் பற்றாளர் விருதும்" விருதுத்தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. கடந்த நான்காண்டுகளில் ரூ.21,40,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு 107 அறிஞர்களுக்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சொல்வயல் - மின்னிதழ்

சொல்லாய்வுகள், துறைக் கலைச்சொற்கள், அகராதியில், மொழியியல் சார்ந்த கட்டுரைகள், தமிழ்மொழி குறித்த செய்திகள், இயக்ககச் செற்பாடுகள் உள்ளிட்டவற்றைக் கொண்ட "சொல்வயல்" மின்னிதழ் சொற்குவை வலைத்தளத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டுவருகிறது. இந்த வலைத்தளத்தை 2,35,285 பயனாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

2021 மே முதல் 2025 மார்ச் வரை 58 மின்னிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

படைப்பாக்க உரிமத்தில் வெளியிடல்

அகரமுதலி இயக்ககத்தின் அகராதிகள், கலைச்சொற்கள், தமிழ் மின் நூல்கள்,சொல்வயல் மின்னிதழ், அகராதி ஆய்வு மலர் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தின்கீழ், சொற்குவை வலைத்தளத்திலும், விக்கிப்பீடியா (Wikipedia), விக்கிமூலத்தில் (Wikisource) ஆகிய விக்சனரி பொதுத் தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்

கல்லூரி மாணவர்களிடையே சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்குவிக்கும் நோக்கில் 'சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்' செயற்படுத்தப்பட்டு வருகிறது. 2021-2023 வரையில் 600 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்க் கலைச்சொல்லாக்கம், தனித்தமிழ்ப் பயன்பாடு குறித்து தேர்ந்த அறிஞர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக இதுவரையில் ரூ.6,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

இந்தோ - ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி

இந்தோ - ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நான்கு ஆண்டுக்காலத்தில் உருவாக்கி வெளியிட தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு ரூ.4,90,58,513/- வழங்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

1970–ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு கடந்த நான்காண்டுகளில் ஊதியம், திட்டப்பணிகள் மற்றும் ஓய்வூதியத்திற்கென நல்கை மானியமாக ரூபாய் 22 கோடியே 21 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக அயல்நாட்டு அறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் எழுதிய "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்னும் நூல் பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகம் வாயிலாக அச்சிடப் பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.02.2022 அன்று வெளியிடப்பட்டது.

பாரதியின் வாழ்வைச் சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக் கதை நூல், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தெரிவு செய்து தமிழ்நாட்டின் புகழ்ப்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவிய நூல், மற்றும் பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களின் ஆங்கில மொழிபெயப்பு நூல்கள் வெளியிடப்பட்டன.

திருக்குறள் நெறிபோற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற 15 ஓவியர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசாக ரூ.40 ஆயிரமும் வழங்கிட ரூபாய் 6 இலட்சமும் ஓவியங்களைக் காட்சிப்படுத்திட ரூபாய் 4 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டன.

ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய கிரேக்கக் காப்பியங்கள் ரூ.9.10 இலட்சம் நிதி நல்கையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 12.07.2023 அன்று வெளியிடப்பட்டன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகம் ரூபாய் 50 இலட்சம் செலவில் கணினிமயமாக்கி மேம்படுத்தப்பட்டுள்ளது.

பெருநகரச் சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி (ம) நடுநிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான "மொழியியல் நுணுக்கப் பயிற்சி அளிக்க ரூபாய் 2.95 இலட்சம் வழங்கப்பட்டது.

பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்களில் தெரிவு செய்யப்பட்ட நூல்களை ஒலி நூல்களாக மாற்றம் செய்து ரூபாய் 10 இலட்சம் செலவில் வெளியிடப்பட்டது.

'கவிஞர் தமிழ்ஒளி படைப்புவெளி' எனும் பொருண்மையில் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டுப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு 35 கட்டுரையாளர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டது.

9 அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் ஒரு தேசியக் கருத்தரங்கமும் இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்குகளும் நடத்தப்பெற்றன.

முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் 8 மாணவர்களுக்கு திங்கள்தோறும்

ரூ. 5,000/- வீதமும், 30 முதுகலை தமிழ் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு திங்கள்தோறும் ரூ. 2,000/- வீதமும், 10 சுவடிப் பட்டய மாணவர்களுக்கு திங்கள் தோறும் ரூ. 3,000/- வீதமும் ஆய்வு உதவித் தொகை வழங்கப்படுகின்றன.

உலகத் தமிழ்ச் சங்கம்

ஊதியம் மற்றும் திட்டப் பணிகளுக்கென ரூ.5 கோடியே 59 இலட்சத்து 95 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

மதுரையில் சங்க கால இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை வாரந்தோறும் 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த நான்காண்டுகளில் 65 தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

திங்கள்தோறும் தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கும் விதமாக, தமிழ் நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த நான்காண்டுகளில் 81 நூல்கள் அரங்கேற்றம் செய்யப் பெற்றுள்ளன.

வளர் தமிழ் ஆய்வு மன்றத்துடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.

சிங்கப்பூர் கல்வி அமைச்சகத்தின் சார்பில் தமிழகத்திற்கு வருகைதந்த சிங்கப்பூர் தமிழ் மாணவர்கள் 30 பேர் பங்கேற்ற சிறப்புப் பயிலரங்கம் நடத்தப்பெற்றது.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்

எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் சனவரித் திங்கள் நிறுவனர் நாள் விழா தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றது.

'உலகக் கவிஞர் மாநாடு' உலகத் தமிழ்ச் சங்கத்தில் 2024ஆம் ஆண்டு நவம்பர் 21,22 ஆகிய நாள்களில் நடத்தப்பெற்றது. இதில் 20 நாடுகளில் இருந்து கவிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர், குமரகுரு பன்முகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் இணைந்து ஈரோடு, திருப்பூர், நீலகிரி, கோயம்புத்தூர் தமிழாசிரியர்கள், மாணவர்கள் பங்குபெற்ற புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பெற்றது.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தினைப் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 17.50இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தைப் பலர் அறியும்வண்ணம் கொண்டு செல்லும் நோக்கத்தில் திங்கள்தோறும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. தன்னார்வ அடிப்படையில் இதுவரை 8 சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்றுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கல்வி நிலை மற்றும் அலுவல் நிலைப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும், ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பலன்களை வழங்குவதற்காகவும் தொகுப்பு நல்கையாக ரூபாய் 129 கோடியே 31 இலட்சத்து 03 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

249 முனைவர் பட்ட மாணவர்களும், 45 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும், முதுநிலைப் பட்டப்படிப்பில் 450 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டப்படிப்பில் 326 மாணவர்களும் இளங்கல்வியியல் பட்டப்படிப்பில் 282 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் பட்டப்படிப்பில் 4 மாணவர்களும் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 20 பேர் மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 25 பேருக்கும் திங்கள்தோறும் ரூ.2,000/-உதவித்தொகை வழங்குவதற்காக ரூபாய் 91 இலட்சத்து 54 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பண்பாட்டு மையம்

இசை, நாட்டியம் மற்றும் மரபுக்கலையில் படிநிலை வகுப்புகள் நடத்துவதற்காக கடந்த நான்காண்டுகளில் வெளிநாடு மற்றும் உள்நாட்டில் 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் சுமார் 5,783 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்று பயின்றுவருகின்றனர்.

தமிழ் வளர் மையம்

உலகளவில் தமிழ் மொழியினைப் பரப்புவதற்காகவும், அதனைப் பாதுகாக்கவும் தமிழ் வளர் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் வழி கடந்த நான்காண்டுகளில் இளங்கலை, முதுகலை, பட்டய மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடத்துவதற்கு 13 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதன் மூலம் சுமார் 1258 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பெற்றுள்ளனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத்தமிழ் நூலினைப் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளில் மொழிபெயர்க்க ரூ.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக்கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் அமைத்தல், கல்வெட்டுகள் காட்டும் தமிழ்க் கலைப் பண்பாடுக் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளுதல், கைவினைப் பொருள்கள் தயாரித்திடப் பயிற்சிகள் அளித்தல் ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.2.11 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து ரூபாய் ஒரு கோடியே 49 இலட்சத்து 99 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர்புள்ளிகளைப் பெறும் வகையில் கட்டடங்கள் மேம்பாட்டுப் பணிகள், அலுவலகக் கட்டடம், நூலகக் கட்டடம், கூத்துக்களரி வளாகம், 'த' மற்றும் 'நா' வடிவக் கட்டடங்கள் சிறப்புச் சீர்காப்புப் பணிகளுக்கான ரூ.1.50 கோடியும், ஆய்வுத்திட்டம் மேற்கொள்வதற்காக ரூ.50.00 இலட்சமும் என மொத்தம் ரூ.2.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் யோகா மையம் அமைக்கப்பட்டு அதன்வழி அருகில் உள்ள அரசுப் பள்ளிகள், மாற்றுத்திறனாளிகளுக்குரிய அரசுப் பள்ளிகள், தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், சுமார் 400 மாணவர்களுக்கு யோகாப் பயிற்சிகள் அளிக்க ரூ.1,50,000/- வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 07.03.2024 அன்று காணொளி வாயிலாக தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூ. 5,03,57,000/- மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாமன்னன் இராசராசச் சோழன் பன்னோக்குக் கூடம், உள்விளையாட்டு அரங்கம், கூடுதல் மகளிர் விடுதி, பழைய ஆடவர் விடுதி முதல் தளம் மற்றும் குறளோவியம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஒலி-ஒளிப் பதிவுக்கூடம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை

பொருட்காட்சி

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் 150-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில் அன்னாருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நடமாடும் புகைப்படக் கண்காட்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

38 மாவட்டங்களில் அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி மேற்கொள்ள மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.10,000/- வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.3.80 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

இந்திய விடுதலைக்காக பாடுபட்ட தேசத் தலைவர்களைப் போற்றும் வகையிலும், அவர்களை சிறப்பிக்கும் வகையிலும் விடுதலைப் போரில் தமிழகம் என்ற தலைப்பில் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில், புகைப்படக் கண்காட்சி ரூ.15.99 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

2022-ஆம் ஆண்டு அரசின் அரும்பணிகள் அணிவகுப்பு குறித்து ஓயா உழைப்பின் ஓராண்டு என்ற தலைப்பில் அரசுத் துறைகளை ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.10,00,000/- வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.3.80 கோடி செலவில் நடத்தப்பட்டது.

அரசு பொருட்காட்சியின் மூலம் நான்காண்டுகளில் ரூ.5,79,09,000/- வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டுள்ளது.

தனியார் பொருள்காட்சியின் மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியாக ரூபாய் 10 கோடியே 71 இலட்சத்து 71,000 செலுத்தப்பட்டுள்ளது.

75-ஆவது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக, இந்திய விடுதலைப் போரில் பங்கு பெற்ற தியாகிகளின் வீரப்பெருமைகளை நினைவு கூர்ந்து போற்றும் வகையில் விடுதலைப் போரில் தமிழகம் என்ற புகைப்படக் கண்காட்சி சென்னை கோயம்பேடு புறகர்ப் பேருந்து நிலைய வளாகத்தில் நடத்தப்பட்டது.

2022-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் விடுதலைப்போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பினைப் பறை சாற்றும் விதமாக 3 அலங்கார ஊர்திகள் டெல்லியில் நிராகரிக்கப்பட்டதால் அனைத்து மாவட்ட மக்களும் கண்டு பயன்பெறும் வண்ணம் 3 அலங்கார ஊர்திகளும் பெரும்பான்மையான மாவட்டங்களுக்கு சென்று பொதுமக்கள் பார்வையிட்டனர்.

2022 ஆம் ஆண்டு திரைப்படங்களில் இடம்பெற்ற மகாகவி பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம் பெறும் இசைக் கச்சேரி திரையில் பாரதி என்ற நிகழ்வாக ரூ.60,00,000/- செலவில் சென்னையில் நடைபெற்றது.

புதுடெல்லியில் 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம் என்கிற கருப்பொருளின் அடிப்படையில் தமிழகத்தின் 7 பெண் சாதனையாளர்களை முன்னிலைப்படுத்திய அலங்கார ஊர்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

சென்னையில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான குடியரசு தின விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்திக்கு மூன்றாம் பரிசினைப் பெற்றது.

2023ஆம் ஆண்டு சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 47-ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் "கி. ராஜாநாராயணன்" அவர்களின் மணிமண்டபத்தின் மாதிரி செய்தி மக்கள் தொடர்புத்துறை அரங்கமாக வடிவமைக்கப்பட்டு சிறந்த புதுமையான கருத்துக்கான இரண்டாம் பரிசினைப் பெற்றது.

நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் நினைவைப் போற்றும் வகையில் சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் / தியாகிகள் குறித்த முப்பரிமாண ஒலி/ஒளி கண்காட்சி சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 18 நாள்கள் நடைபெற்றது.

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னை கலைவாணர் அரங்கத்தில் அன்னாரின் பெயரில் இன்னிசைக் கச்சேரி நடத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டிரூ.41.04 இலட்சத்தில் இலச்சினை வெளியிடப்பட்டது.

புதுடெல்லியில், 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் குடவோலை முறை தேர்தலை மையப்படுத்தி பங்கேற்ற தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு மூன்றாவது பரிசும் மற்றும் கலை நிகழ்ச்சிக்கு முதல் பரிசும் பெறப்பட்டது. சென்னையில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான குடியரசு தினவிழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தியில் மதுரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் மாதிரி வடிவமைக்கப்பட்டு இடம் பெற்றது.

2024 ஆம் ஆண்டு சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 48-ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில், கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் மாதிரி வடிவமைக்கப்பட்டு இடம் பெற்றது. 2024-ஆம் ஆண்டு மூன்றாண்டில் அரசின் அரும்பணிகள் தொகுப்பாக அரசு பல துறைகளை ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளும் நடத்திட மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூபாய் மூன்று இலட்சம் வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூ.1.14 கோடி செலவில் நடத்தப்பட்டது.

2024ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய பன்னாட்டு வர்த்தக கண்காட்சியில் பங்குபெற்று தமிழ்நாடு அரங்கம் சிறந்த கருப்பொருளுக்கான பரிசினை வென்றது குறிப்பிடத்தக்கதாகும்.



சென்னையில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான குடியரசு தினவிழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தியில் அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் புனரமைக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் வைக்கம் ஆகியவற்றை நினைவு கூறும் வகையில் மாதிரி வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆண்டு (2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 49-ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில், கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய 25ஆவது ஆண்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதன் மாதிரி வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய 25ஆவது ஆண்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் புகைப்பட கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது.

அரசு விழாக்கள்

விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ் வளர்ச்சிக்காக உழைத்த அறிஞர் பெருமக்கள் மற்றும் சான்றோர் ஆகியோரின் அருமை பெருமைகளைப் போற்றிப் பாராட்டுகின்ற வகையில், அவர்களின் பிறந்த நாள்கள் ஆண்டுதோறும் அரசு விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் 43 விழாக்களும், மாவட்ட அளவில் 90 விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழறிஞர்கள், முன்னாள் பிரதமர்கள், முன்னாள் முதலமைச்சர்கள் ஆகியோரின் பிறந்த நாள்கள் ஆண்டுதோறும் மாநில அளவில் 4 அரசு விழாக்களும், மாவட்ட அளவில் 11 அரசு விழாக்களும் கொண்டாட ஆணையிடப்பட்டுள்ளது.

மாநில அளவில், மாண்புமிகு முதலமைச்சர் பங்கேற்கும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 30,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாகவும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 20,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் நடைபெறும் விழா ஒன்றிற்குச் செலவினமாக 25,000 ரூபாய் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை அனைத்து தரப்பு மக்களும் அறிந்து பயனடைகின்ற வகையில், வரலாற்றில் முதன்முறையாக வீரமங்கை வேலுநாச்சியாரின்



இசையார்ந்த நாட்டிய நாடகம் செய்தித்துறை, கலைப்பண்பாட்டுத் துறை, இயல் இசை நாடக மன்றம் ஆகிய துறைகளால் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 13.08.2022 அன்று நடைபெற்ற விழாவில், இலச்சியினை வெளியிட்டு நாடகத்தை தொடங்கி வைத்து பார்வையிட்டார். மேலும் ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் இந்நாடகம் நடத்தப்பட்டு பொதுமக்களின் பாராட்டுகளைப் பெற்றது.

2024-2025ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகள்

"திவான்பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாளான ஜூலை திங்கள் 7ஆம் நாள் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

"சுதந்திரப் போராட்டத் தியாகி அஞ்சலை அம்மாள் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1ஆம் நாள் கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

"டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் பிறந்த நாளான ஜூலை திங்கள் 30ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடி தங்கள் இன்னுயிரை ஈந்த 16 வீர தியாகிகளுக்கு ஏப்ரல் திங்கள் 3-ஆம் நாள் மதுரை மாவட்டத்தில் ஆண்டுதோறும் நினைவு நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

திராவிடப் பேரொளி "அயோத்திதாச பண்டிதர்" பிறந்த நாளான மே 20-ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

முன்னாள் பிரதமரும் சமூகநீதிக் காவலருமான மறைந்த வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 25 ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி இம்மானுவேல் சேகரனார் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 9ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது".

"அல்லாள இளைய நாயக்கர் பிறந்த நாளான தைத் திங்கள் 1ஆம் நாள் நாமக்கல் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"சுதந்திரப் போராட்டத் தியாகி கு.மு. அண்ணல் தங்கோ பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள் வேலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் திங்கள் 1 ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் பிறந்த நாளான ஜூன் திங்கள் 1ஆம் நாள் திருச்சி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

"எழுத்தாளர் கி.ராஜநாராயணன் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டிற்கான செய்தித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகளான மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகவும் மற்றும் மேனாள் சென்னை மாகாண முதலமைச்சர் ப.சுப்பராயன் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் சென்னையில் ஆண்டுதோறும் அரசு விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்துதித்த நாளான ஜூன் 3ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில் அன்னாரது பிறந்த நாளான ஜூன் 10-ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்று நிகழ்வுகள் குறித்த புகைப்படக் கண்காட்சிகள், கலைநிகழ்ச்சிகள், மேடை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள் ஆகியவை தமிழ்நாடு முழுவதும் சிறப்புற நடத்தப்பட்டன.

மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகளில் பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி-வினா போட்டி, ஓவியப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளும், இளைஞர்களுக்கான குழுவிளையாட்டுப் போட்டி (கபடி, கால்பந்து, கைப்பந்து) தொடர்ந்து நடத்தப்பட்டது.

75-ஆவது சுதந்திர தின அமுதப் பெருவிழாவினை முன்னிட்டு, சென்னையில் அரசின் பல துறைகளை ஒருங்கிணைத்து மாரத்தான் ஓட்டம், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தொடங்கி வைத்த நாளான 7.10.1961-ஆம் நாளை "பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தினம்" என அறிவித்து, ஆண்டுதோறும், இந்நாளில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோர்களுக்கு இந்நாளில் அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

பரம்பிக்குளம் ஆழியாறு அணையினை சிறப்பாகக் கட்டி முடித்த தலைமைப் பொறியாளரான திரு. ஆனந்தராவ் அவர்களுக்கு வால்பாறையில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அதே நாளில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150 ஆவது பிறந்த நாள் விழாவினையொட்டி வெளியிட்ட பின்வரும் 14 அறிவிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி மாநகரில், முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை, இனி "வ.உ.சிதம்பரனார் சாலை" என அழைக்கப்படும்."வ.உ.சிதம்பரனார் சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டது.

தனது வாழ்நாளின் முக்கிய நாள்களைக் கோவைச் சிறையிலே வாழ்ந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய திருவுருவச் சிலையானது கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் ஒலி-ஒளி காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையிலே திரையிடப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்பட உயர்கல்வித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்து புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைத்திட பள்ளிக்கல்வித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலையரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக்கல்வித் துறை/பொதுப்பணித்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு சிறந்த பங்காற்றிவரும் தமிழர் ஒருவருக்கு "கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது" ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிட தொழில் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18-ஆம் தேதி தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5 2022 வரை தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசு கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150-ஆவது பிறந்த நாளைச் சிறப்பிக்கின்ற வகையில் அன்னாரின் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள் மற்றும் காணொலிகளைக் கொண்ட நடமாடும் பேருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் அனுப்பப்பட்டு இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

தமிழ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணைய வழி கருத்தரங்கம் தமிழ் வளர்ச்சித் துறை வழியாக நடைபெற்றது.

தமிழ் நிகர் நிலை கல்விக் கழகத்தின் வாயிலாக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை முழுவதும் இணையத்திலேயே மின்மயப்படுத்திட தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.09.2021 அன்று மகாகவி பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக வெளியிடப்பட்ட பின்வரும் 14 அறிவிப்புகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாகக்' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 லட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்டது.

மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மூத்த ஆய்வாளர் திரு.சீனி.விசுவநாதன்



அவர்களுக்கும், பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுக்கும் தலா 3 லட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மகாகவி பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாரதியாரின் படைப்புகள், பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டது.

மகாகவி பாரதியாரின் நூல்கள், அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டையபுரம், திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு பள்ளிக்கல்வித் துறையால் ஏற்படுத்தப்பட்டது.

உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து மகாகவி பாரதி குறித்த நிகழ்வுகள் 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டு திரைப்படங்களில் இடம்பெற்ற மகாகவி பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம் பெறும் இசைக் கச்சேரி "திரையில் பாரதி" என்ற நிகழ்வாக 60 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் நடைபெற்றது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மகாகவி பாரதியார் பெயரில் ஆய்விருக்கை உயர்கல்வித் துறையால் அமைக்கப்பட்டது.

உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் 18 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, மார்பளவுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நூற்றாண்டினைச் சிறப்பிக்கின்ற வகையில், அன்னாரின் வாழ்க்கை வரலாறு குறித்த நாடகங்கள் சென்னை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பட்டு இலட்சக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்துள்ளனர்.

மகாகவி பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளை பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்துகளில் எழுதியும் வரைந்தும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு 'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா' என ஊரக வளர்ச்சித் துறையால் பெயர் சூட்டப்பட்டது.

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு சென்னை, பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று அக்டோபர் 2021 முதல் ஆகஸ்டு 2022 வரை ஓராண்டிற்கு வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

நினைவகங்கள்

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், விடுதலைப் போராட்ட தியாகிகள், மொழிப் போர் தியாகிகள், மிகச்சிறந்த ஆளுமை மிக்க தலைவர்கள், தமிழ்வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அறிஞர் பெருமக்கள், இசை மேதைகள் ஆகியோர்களின் நினைவுகளை போற்றிப் பெருமைப்படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 93 நினைவகங்கள், 38 சிலைகள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 2 நினைவுச் சின்னம், 1 நினைவு வளைவு ஆகியன அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் உலகமே வியந்து போற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் நவீன விளக்கப்படங்களுடன் கூடிய நினைவிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பொது மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சென்னை அண்ணா சாலையில், அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 1 கோடியே 70 இலட்சம் செலவில் பிரம்மாண்டமான திருவுருவச் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் ரூபாய் 2 கோடியே 7 இலட்சம் செலவில் திருவுருவச் சிலையும், நூலகத்துடன் கூடிய நினைவரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன.

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு நினைவாக, உத்தரப் பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு தமிழக அரசின் சார்பில் ரூபாய் 18 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு அன்னாரின் மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன தூத்துக்குடியின் தந்தை எனப் போற்றப்படும் ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், எம்.ஜி.ஆர் பூங்காவில் ரூ. 77 இலட்சத்து 87 ஆயிரம் செலவில் குவிமாடத்துடன் கூடிய திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் வாழ்ந்த தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் அமைந்துள்ள நினைவு இல்லம் ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் புனரமைப்பு பணிகளும், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி-ஒளிக்காட்சி அமைப்புகள் ரூபாய் 73 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு ரூபாய் 40 இலட்சம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

முல்லை பெரியாறு அணை அமைத்திட தன் வாழ்வை அர்ப்பணித்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இங்கிலாந்து நாட்டில் அவர் பிறந்த ஊரான கேம்பர்ளி நகரில் அன்னாருக்கு மார்பளவுச் சிலை 33 இலட்சத்து ரூபாய் 66 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரம், டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையில் உள்ள பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தினையும், அம்மணிமண்டப வளாகத்தில் உள்ள நூலகத்தையும் 13.10.2023 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவ்வளாகத்தில் அன்னாருடைய திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் கோயம்புத்தூர் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் ரூபாய் 43 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமரும், சமூக நீதிக் காவலருமான திரு.வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் ரூபாய் 52 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் திருவுருவச் சிலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்து போராடியதால் 1920-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 தியாகிகளை கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, பெருங்காமநல்லூரில் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் தியாகிகள் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தில், கம்பீர தோற்றத்துடன் கூடிய வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் புதிய திருவுருவலச் சிலை ரூபாய் 48 இலட்சத்து 66 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் அகராதியின் தந்தை என போற்றப்படும் வீரமாமுனிவருக்கு தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன் பட்டிகிராமம், புனித பரலோகமாதா ஆலய வளாகத்தில் ரூபாய் 1 கோடி செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், நீதிக்கட்சியின் வைரத்தூண் என்று அழைக்கப்பட்ட சர்.ஏ.டி.பன்னீர்செல்வம், எம்.கே.தியாகராஜபாகவதர் ஆகியோருக்கு திருச்சிராப்பள்ளி மாநகரின் மத்திய பேருந்துநிலையம் அருகில் ரூபாய் 4 கோடியே 3 இலட்சம் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திவான் பகதூர் திராவிடமணி இரட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கத்தில் ரூபாய் 2 கோடியே 18 இலட்சம் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது

விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 70 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் தீண்டாமைக்கு எதிராக உத்தமர் காந்தியடிகளின் அழைப்பினை ஏற்று, தந்தை பெரியார் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்ட வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் கேரளமாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தினை 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மிகப்பிரம்மாண்டமான அளவில் மேம்படுத்தப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் பொது மக்களுக்கான காத்திருப்புக் கூடம் மற்றும் வழித்தடத்தில் நிரந்தரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளிவிளக்காக மட்டுமல்ல, நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய அய்யா இளைய பெருமாள் அவர்களின் நூற்றாண்டினைப் போற்றும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ரூபாய் 5 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய நினைவரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் க.அன்பழகனார் அவர்களுக்குப் பெருமைச் சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை செயல்படும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் அன்பழகனார் வளாகத்தில் ரூபாய் 37 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களின் 175வது ஆண்டு விழாவின் நினைவாக, அன்னாருக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 2 கோடியே 48 இலட்சம் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை நகரில் மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு ரூபாய் 3 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிங்கப்பூரின் முதல் பிரதமர் மறைந்த லீ குவான் யூ அவர்களுக்கு திருவாரூர் மாவட்டம், மன்னார் குடியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் ரூபாய் 3 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுதந்திரப் போராட்ட காலத்தில் உத்தமர் காந்தியடிகளும், பொதுவுடைமை வீரர் ஜீவாவும் சந்தித்து பேசிய சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் அச்சந்திப்பு நினைவாக ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாக சிறை வைக்கப்பட்டிருந்த 'ஆறுக்குட்டி'கிராமத்தில் தந்தை பெரியார் நினைவிடம் ரூபாய் 3 கோடி 99 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் முடிவுற்ற மற்றும் பணிகள் நடைபெற்று வரும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பன்முக ஆற்றல் கொண்ட தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் ரூபாய் 65 இலட்சத்து 76 ஆயிரம் செலவில் திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் மாணவர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 10 மணிமண்டபங்களில் (தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், தர்மபுரி, மொழிஞாயிறு தேவநேய பாவாணர் மணிமண்டபம், மதுரை, தமிழிசை மூவர் மணிமண்டபம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மணிமண்டபம், தஞ்சாவூர், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவுஇல்லம், திருவாரூர், மகாகவி பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம், திருநெல்வேலி, இராமசாமி படையாச்சியார் மணிமண்டபம், கடலூர், பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மண்டபம், உடுமலைப் பேட்டை திருப்பூர், சுவாமி சகஜானந்தா மண்டபம், சிதம்பரம்) அடிப்படை வசதிகள் ரூபாய் 1 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டு தூக்குக் கயிற்றினை ஏற்றுக் கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டபவளாகத்தில் ரூபாய் 18 இலட்சம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 34 இலட்சம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு கடலூர் மாவட்டம், மாநகராட்சி முதுநகர் காந்தி பூங்காவில் ரூபாய் 25 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் 21 இலட்சத்து 95 ஆயிரம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றிய வருமான வங்கக்கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் ரூபாய் 29 இலட்சம் 62 ஆயிரம் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

பெண் சமூகச் சீர்திருத்தவாதியும், எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்க மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடியுமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூபாய் 15 இலட்சத்து 97 ஆயிரம் செலவில் வெண்கல திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும் தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாருக்கு புதுக்கோட்டையில் ரூபாய் 9 இலட்சத்து 84 ஆயிரம் செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நிதிஅமைச்சருமான நடமாடும் பல்கலைக்கழகம் மறைந்த நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், ரூபாய் 9 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் மார்பளவு வெண்கலச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. பிரபல பின்னணிப் பாடகர் பத்மஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்னாருக்கு மதுரை மாநகரில் 46 இலட்சத்து ரூபாய் 68 ஆயிரம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞரும் தேசியப் போராட்டத் தியாகி, உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தின் வழிநடைப் பாடல் ஆசிரியருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நாமக்கல் நகரில் உள்ள அன்னாரது நினைவு இல்லத்தில் ரூபாய் 20 இலட்சம் செலவில் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போரட்ட வீரர்கள், மொழிப் போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்களில் 360 டிகிரி புகைப்படம் எடுக்கப்பட்டு வலைதளத்தில்

பதிவேற்றம் செய்யப்படுதல், விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) பொருத்தப்படுதல், அத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album) புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படுத்துதல், 15 மணிமண்டபங்களில் அகண்ட திரைத் தொலைக்காட்சி அமைக்கப்பட்டு குறும்படங்கள் ஒளிபரப்புதல் ஆகிய பணிகள் ரூ.1 கோடியே 25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் மொழி மீது தீராதபற்று கொண்டு, வடமொழிப்பெயர்களைத் தமிழ்ப்படுத்தியவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான கு.மு. அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவினை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி, 6 நினைவிடங்களில் (தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், தருமபுரி, சுதந்திரப் போராட்ட தியாகி கொடிகாத்த குமரன் நினைவகம், திருப்பூர், வீரமங்கை வேலுநாச்சியார் நினைவுமண்டபம், சிவகங்கை, மகாகவி பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி, இராமசாமி படையாட்சியர் மணிமண்டபம், கடலூர், காமராஜர் நூற்றாண்டு மணிமண்டபம், விருதுநகர்) ஒலி-ஒளிக்காட்சி அமைப்புகள் ரூபாய் 33 இலட்சத்து 45 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள காந்தி அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவுமண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவுமண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவுமண்டபம் ஆகியவை ரூபாய் 3 கோடியே 36 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வள்ளல் அதியமான் கோட்டம் ரூபாய் 98 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர் தளிபாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் ரூபாய் 2 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

மன்னர் பூலித்தேவர் படையின் முக்கியத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான வெண்ணிகாலாடி அவர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து அதைத் தகர்த்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச்சிலை ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த ஈரோடு தொகுதியின் மேனாள் சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்ட வீரருமான உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு ரூபாய் 3 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

வீரமங்கை வேலுநாச்சியார் மற்றும் மாமன்னர் மருது சகோதரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்குச் சிவகங்கை மாவட்டத்தில் திருவுருவச்சிலை 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழில்முதல்நாவல்எழுதியமாயூரம்முன்சீப்வேதநாயகம்அவர்களுக்குமயிலாடுதுறையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப்பணிகளின்போது (P.A.P-Parambikulam Aliyar Project) எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவுமண்டபம் கோயம்புத்தூர்

மாவட்டம், ஆழியார் நகரில் ரூபாய் 2 கோடியே 30 இலட்சம் செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட உதவிடும் வகையில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கமும், மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோருக்குத் திருவுருவச் சிலைகள் நிறுவிடும் பணிகளும் ரூபாய் 4 கோடியே 28 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டபத்தில் ரூபாய் 17 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வள்ளுவத்தையும், வள்ளுவரையும் பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான சென்னை வள்ளுவர் கோட்டத்தினை இக்காலச் சூழலுக்கு ஏற்றவாறு அதிநவீன முறையில் காட்சிப்படுத்திட ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிதன் உயிரைத் துறந்த வருமான தியாகி கொடிகாத்த குமரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைத்திட பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழி மீது தீராத பற்று கொண்டு, இந்தித் திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திராவிட இயக்கத் தீரர்களான, மறைந்த டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டாக்டர். டி.எம்.நாயர் ஆகியோரின் சிறப்புகள், தொண்டுகள், பெருமைகளை நினைவு கூறும் வகையிலும், எதிர்காலத் தலைமுறையினர் அறியும் வகையிலும் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்று ஆவணமாகத் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் ரூபாய் 2 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் அமைத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2024-2025 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள்

சிவகங்கை பகுதியின் இராணியும் ஆங்கிலேயர்களை வெற்றிகண்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனையுமான இராணி வேலுநாச்சியார் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டு வருகிறது.

தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 1 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் முதன் முதலில் அச்சு இயந்திரத்தை நிறுவி தமிழுக்குப் பெருமை சேர்த்த சீகன்பால்கு அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராகப் பணிபுரிந்த சர்.ஜான் ஹூபர்ட் மார்ஷல் அவர்களுக்குச் சென்னையில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைக்கப்பட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.02.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. அறிவியல் விஞ்ஞானி ஜி.டி நாயுடு அவர்களுக்குக் கோயம்புத்தூரில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேனாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தியாவின் இரும்பு பெண்மணி என போற்றப்படும் ஒரே பெண் பிரதமரும், தீர்க்கமான வெளியுறவுக் கொள்கையை கொண்டவரும், பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவருமான இந்திராகாந்தி அம்மையாருக்கு சென்னையில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டுசிறைசென்றவரும், பொதுமக்களால் "தென்னாட்டு ஜவகர்" என்று அழைக்கப்பட்டவருமான பட்டுக்கோட்டை தியாகி வை. நாடி முத்துப்பிள்ளை அவர்களுக்குப் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டையில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

காவேரி மீட்புக் குழுவில் இணைந்து போராடியவரும், விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டவருமான கரூர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்ட சி.முத்துசாமி அவர்களுக்கு கரூர் மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை அமைத்திட பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

33 மணிமண்டபங்கள் / அரங்கங்களில் பாதுகாப்பு மற்றும் தூய்மைப் பணிகள் உள்ளிட்ட மேலாண்மைப் பணிகள் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மணிமண்டபங்கள்/அரங்கங்களில் பராமரிப்புப் பணிகள் முதற்கட்டமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிறபணிகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 2000 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட தமிழிசை மும்மூர்த்திகளான முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் மற்றும் மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோரின் நினைவினை போற்றிடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மூவர் மணிமண்டபம் 47 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை காமராஜர் சாலையில் உள்ள டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவச்சிலை 04.02.2022 அன்று செய்தி மக்கள் தொடர்புத் துறைவசம் ஒப்படைக்கப்பட்டது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வரலாற்றில் முதன் முறையாக, துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மணிமண்டபங்கள், நினைவகங்கள்,அரங்கங்கள், நினைவுத்தூண்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் மற்றும் புகைப்படங்களுடன்



அடங்கிய நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட காலப்பேழை புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்ட இந்த காலப்பேழை புத்தகமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில் அமைந்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தின் கிழக்கு முன்வாயில் பகுதியில், அன்னாருக்கு ரூபாய் 39 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் புதிய திருவுருவச்சிலை அமைக்கப்பட்டது.

நம்நாட்டு விடுதலைக்கு வித்திட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதிக் கருத்துகளை வளர்த்த தலைவர்களின் திருவுருவச் சிலைகள் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் நிறுவப்பட்டுள்ள தலைவர்கள் மற்றும் தமிழறிஞர்களின் 20 திருவுருவச் சிலைகளானது ரூபாய் 20 இலட்சத்து 72 ஆயிரம் செலவில் பொன் நிறம் பூசப்பட்டு புதுபொலிவுடன் காட்சியளிக்கிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் படைத்தளபதி வீரன் பொல்லான் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் உள்ள தியாகி சீனிவாசராவ் நினைவகத்தில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மற்றும் மின் பணிகள் ரூபாய் 23 இலட்சத்து 5 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதன் வெள்ளிவிழா கொண்டாட்டத்தினை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காந்தி நினைவு மண்டபம் மற்றும் காமராஜர் மணிமண்டபம் ஆகியவற்றில் புனரமைப்புப் பணிகள் ரூபாய் 74 இலட்சத்து 09 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் உள்ள தியாகி சீனிவாசராவ் நினைவகத்தில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மற்றும் மின் பராமரிப்புப் பணிகள் ரூபாய் 23 இலட்சத்து 05 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

சமூக ஊடக மையம்

செய்தி மக்கள் தொடர்பு துறையின்(TNDIPR) சமூக ஊடக மையமானது தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டு கலைவாணர் அரங்கத்தில் இரண்டாவது தளத்தில் 10.01.2024 முதல் செயல்பட்டு வருகிறது. இம்மையமானது, அரசின் முக்கிய அறிவிப்புகள், சாதனைகள் மற்றும் நேர்மறை செய்திகளை, சமூக ஊடகத் தளங்கள் (X, Instagram, Facebook, YouTube மற்றும் WhatsApp) வழியாக மக்களுக்கு வழங்குவதில் ஒரு முக்கிய பங்கு செயல்படுகிறது.

TNDIPR சமூக ஊடக மையத்தில், பல்வேறு அரசுத் துறைகளின் முக்கிய புதுப்பிக்கப்பட்ட தகவல்கள், தொலைக்காட்சியில் இருந்து வரும் செய்தி பிரசுரங்கள், சமூக ஊடக செய்திகள் மற்றும் அச்சு ஊடகங்கள் (செய்திதாள் மற்றும் பத்திரிக்கைகள்) தேர்ந்தெடுத்து, ஆக்கபூர்வமான வீடியோக்கள்(Videos),ரீல்ஸ்(Reels),அட்டைகள்(Cards)மற்றும்பேனர்களாக(Banner) மாற்றப்படுகின்றன.TNDIPR சமூக ஊடக மையம், அரசுத் துறைகளுடன் இணைந்து அரசாங்கத்தின் அடிப்படை உள்கட்டமைப்புகள் மற்றும் அரசு திட்டங்களின் பயனாளர்களின் கருத்துகளை பதிவுசெய்கிறது. இந்த முக்கிய தகவல்களை பொது மக்கள் எளிதான முறையில் அணுகும்படி சமூக ஊடகங்களில் பரவலாக பகிரப்பட்டு அணுகல் உறுதிப்படுத்தப்படுகிறது.

மேலும், அரசு நலத்திட்டங்களின் விவரங்கள் துறை அதிகாரிகளிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டு, பொதுமக்கள் அவற்றை எளிதாக அறிந்துகொள்ளக் கூடிய வகையில் வழங்கப்படுகின்றன. இந்த அணுகுமுறை, அரசு மற்றும் பொதுமக்கள் இடையிலான தொடர்பை வலுப்படுத்தி, வெளிப்படைத்தன்மை மற்றும் எளிய அணுகல் முறையை ஊக்குவிக்கின்றது.

TNDIPR சமூக ஊடக மையத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

TNDIPR சமூக ஊடக மையம் தமிழ்நாடு அரசின் 37 துறைகளின் முன்முயற்சிகளை உள்ளடக்கிய 5,824 வீடியோக்கள், ரீல்ஸ்கள் மற்றும் படைப்புகளை வெற்றிகரமாக உருவாக்கி பகிர்ந்துள்ளது. இவை TN-DIPR சமூக ஊடக தளங்களில் பகிரப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்தை கணிசமாக அதிகரித்துள்ளது.

கூடுதலாக, செய்தி வெளியீடுகள், அரசு நிகழ்வுகள் மற்றும் பல்வேறு திட்டங்களின் சாதனைகள் தொடர்பான மொத்தம் 7,088 உயர்தர படைப்புகள் 38 மாவட்டங்களில் பகிரப்பட்டுள்ளன, இது தமிழ்நாடு அரசின் முதன்மை திட்டங்கள் மக்களிடையே அங்கீகாரத்தைப் பெறுவதை உறுதி செய்கிறது.

முகநூல் (Facebook)

அதிகரித்துள்ள பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை- முப்பத்து நான்காயிரத்து ஐநூறாக (34,500) உயர்ந்துள்ளது. பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை- பத்து இலட்சம் (10,00,000).

இன்ஸ்டாகிராம்(Instagram)

அதிகரித்துள்ள பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை- இருபத்தி ஆறாயிரத்து எழுநூறாக (26,700) உயர்ந்துள்ளது. பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை- இருபது லட்சத்து இருபத்தெட்டாயிரம் (20,28,000).

எக்ஸ் வலைதளம் (X)

அதிகரித்துள்ள பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை- முப்பத்து மூவாயிரத்து முந்நூறாக (33,300) உயர்ந்துள்ளது. பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை- இருபது லட்சத்து இருபத்தெட்டாயிரம் (20,28,000)

யூடியூப் சேனல் (Youtube)

அதிகரித்துள்ள பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை- முப்பத்து மூவாயிரத்து முந்நூறாக (33,300) உயர்ந்துள்ளது. பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை- இருபது லட்சத்து எண்பதாயிரம்

புலனம் (வாட்ஸ்ஆப்)சேனல் (Whatsapp)

புலனம் (வாட்ஸ் ஆப்) சேனல் 10-06-2024 அன்று மக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டது. அன்று முதல் அதனை பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை- தொண்ணூறாயிரத்து இருநூறாக (90,200) உயர்ந்துள்ளது.

மக்கள் பங்கேற்புடன் விழிப்புணர்வுப் போட்டிகள்

TNDIPR சமூக ஊடக மையம், அரசு திட்டங்கள் குறித்து புதுமையான விழிப்புணர்வு போட்டிகளை நடத்தி, பொதுமக்களை ஈடுபடுத்தியதில் முக்கியமான முன்னேற்றங்களை காட்டியுள்ளது. இந்த போட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு அரசின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டதுடன், அவர்களின் ஈடுபாடு மற்றும் திட்டங்களை குறித்த சிந்தனையை ஊக்குவித்துள்ளது.

முக்கிய விழிப்புணர்வுப் போட்டிகள்:

ரீல்ஸ் (Reels) போட்டிகள்

"போதையில்லா தமிழ்நாடு" விழிப்புணர்வுப் போட்டி, திருக்குறள் போட்டிகள், "பொங்கல் - உழவும் மரபும்" கலைப்போட்டிகள்

லவ் டிஎன்(LoveTN) போட்டிகள்

ரீல்ஸ் (Reels) போட்டிகள்:

TNDIPR சமூக ஊடக மையம், அரசின் பல்வேறு திட்டங்கள் பற்றி விழிப்புணர்வை அதிகரிக்க ஒரு தனித்துவமான ரீல்ஸ் போட்டியை ஏற்பாடு செய்தது. இந்த போட்டியில் 729 நபர்கள் ஆர்வமுடன்

தங்கள் படைப்புகளை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தனர். இவற்றில் 12 சிறந்த படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு TNDIPR சமூக ஊடக மையத்திலிருந்து பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

"போதையில்லா தமிழ்நாடு" விழிப்புணர்வுப் போட்டி:

போதையில்லா தமிழ்நாடு என்ற மாண்புமிகு தமிழ்நாடுமுதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை ஆதரிக்கும் வகையில், TNDIPR இன் சமூக ஊடக மையம் ஐந்து பிரிவுகளில் விழிப்புணர்வு போட்டிகளை நடத்தியது. தமிழ்நாடு முழுவதும் 3,934 பங்கேற்பாளர்கள் தங்கள் படைப்பாற்றலை அனுப்பினர்.அவற்றில் 14 சிறந்த படைப்புகள் அங்கீகரிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களால் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது.

திருக்குறள் போட்டிகள்

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை கொண்டாடும் பொருட்டு, TNDIPR சமூக ஊடக மையம் சார்பில் திருக்குறள் போட்டிகள் ஏழு பிரிவுகளில் நடத்தப்பட்டது. இப்போட்டியில் 19,932 நபர்கள் ஊக்கமுடன் பங்கேற்று, தங்கள் படைப்புகளை மின்னஞ்சல் மூலம் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சமூக ஊடக மையத்திற்கு அனுப்பிவைத்தனர். இதில் 45 படைப்புகள் சிறந்த படைப்புகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களால் 2025 ஜனவரி 10 அன்று பாராட்டு சான்றிதழும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது.

"பொங்கல் – உழவும் மரபும்" கலைப்போட்டிகள்:

தமிழ்நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் விவசாய மரபுகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, TNDIPR சமூக ஊடக மையம் "பொங்கல் – உழவும் மரபும்" என்ற தலைப்பில் கலைப் போட்டிகளை ஏற்பாடு செய்தது. 6,154 பங்கேற்பாளர்களுடன், சிறந்த 36 படைப்பாளிகளுக்கு பிப்ரவரி 10, 2025 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி கௌரவித்தார்.

TNDIPR சமூக ஊடக மையம் நடத்திய போட்டிகளில் மொத்தம் 33,238 பங்கேற்பாளர்கள் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியதோடு, அரசு திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் முக்கியமான பங்கு வகித்துள்ளனர்.

149 சிறந்த வெற்றியாளர்கள், அவர்களின் படைப்புகளின் அடிப்படையில் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களால் பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களுடன் பாராட்டப்பட்டனர்.

TNDIPR சமூக ஊடக மையம், சமூக ஊடகங்கள் மற்றும் புதுமையான தகவல் பரிமாற்றங்களை பயன்படுத்தி, மின் ஆளுமையில் புதிய முன்னேற்றங்களை கண்டுவருகிறது. பொதுமக்களை ஈடுபடுத்தி, வெளிப்படைத்தன்மையை அதிகரித்து, அரசின் நலத்திட்டங்களை சிறப்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதன் மூலம், TNDIPR சமூக ஊடக மையமானது அரசு மற்றும் மக்களிடையே உள்ள இடைவேளையை குறைப்பதற்கான ஒரு முக்கிய கருவியாக தன்னை நிறுவியுள்ளது.

மாநில செய்தி நிலையம்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாநிலச் செய்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலச் செய்தி நிலையத்தில் அனைவரும் படித்து பயன்பெரும் வகையில் ஏறத்தாழ 73,642 நூல்கள் அடங்கிய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்நூலகம், பொது மக்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் e-granthalaya என்ற தேசிய

தகவல் மையத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மென்பொருள் வாயிலாகத் தேவையான நூல்களை உடனடியாகக் கண்டறிந்து படித்துப் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலகம் போட்டித்தேர்வுகளுக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு அரசின் மின்நூலகம் அமைத்தல் என்ற திட்டத்தின்படி, பொது நூலக இயக்கத்தின் சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் வாயிலாக மாநிலச் செய்தி நிலையத்தில் உள்ள சுமார் 2,500 நூல்கள் காப்புரிமைச் சட்டத்திற்கு உட்படாத வகையில்மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மாநிலச் செய்தி நிலையத்தின் இரண்டாவது மாடியில் கூட்டரங்கு ஒன்று செயல்பட்டு வருகிறது. இக்கூட்டரங்கில் துறை சார்ந்த முக்கிய கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

திரைப்பட விருதுகள், திரைப்பட மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

திரைப்பட விருதுகள்

2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 04.09.2022 அன்று நடைபெற்றது. அவ்விழாவில் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் 23 நபர்களுக்கு காசோலையும், 160 நபர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 06.03.2024 அன்று நடைபெற்றது. அவ்விழாவில் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் 5 நபர்களுக்கு காசோலையும், 29 நபர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

சின்னத்திரை விருதுகள்

04.09.2022 அன்று நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் சின்னத்திரை விருதுகள் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்கள் 20 நபர்களுக்கு காசோலையும், 81 தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தலா 3 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் விருதுகள் 04.09.2022 அன்று நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 2008 – 2009 ஆம் கல்வியாண்டு முதல் 2013–2014 ஆம் கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 30 நபர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரொக்கம் ரூபாய் ஐந்தாயிரம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

06.03.2024 அன்று நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 2014 – 2015 ஆம் கல்வியாண்டுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 5 நபர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரொக்கம் ரூபாய் ஐந்தாயிரம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது

2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட திரு.ஆரூர்தாஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2022 அன்று அவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று ரூபாய் 10 இலட்சத்திற்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

2023 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது கவிஞர் மு. மேத்தா அவர்களுக்கும், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையை போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக கூடுதலாக திரைப்பட பின்னனி பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 10 இலட்சத்திற்க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி

2021–ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

2022–ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

2023-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.85 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

2024-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.85 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்திய சர்வதேச திரைப்பட விழா- கோவா

2022-ஆம் ஆண்டு தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.12 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2023-ஆம் ஆண்டு தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2024-ஆம் ஆண்டு தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் எ கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் மற்றும் சட்டமன்ற பேரவை நிகழ்வுகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்து அதனை தொகுத்து உடனுக்குடன் மக்களுக்கு சென்றடையும் வண்ணம் தனியார் தொலைக்காட்சிகளுக்கு நேரலையாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து தொகுத்து வாரச் செய்தி மலராகவும், குறும்படங்களாகவும் தயாரித்து அனைத்து திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள எல்.இ.டி திரை வாகனங்களில் (LED VAN) திரையிடும் பணியினை செவ்வெனே செய்து வருகின்றது. தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்கள் அவர்களின் நிகழ்ச்சிகள் அடங்கிய 7,700 வீடியோ ஒளிநாடாக்கள் (Video Cassette) எண்மியாக்கம் செய்து பாதுகாத்து வைக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தொகுத்து இது நாள் வரை தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலமாக 48 குறும்படங்களும், பிற அரசுத்துறைகளின் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு குறும்படங்கள் 79 என ஆக மொத்தம் 127 குறும்படங்கள் அனைத்து திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள எல்.இ.டி திரை வாகனங்களில் (LED VAN)



திரையிடப்படுகின்றன. மேலும், சமூக ஊடகங்களிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை தொடர்ந்து பாரதியாரின் படைப்புகளை நாடக வடிவில் சென்னை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருச்சி, சேலம் ஆகிய 5 மாவட்டங்களில் நடத்தி அதனை தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் வீடியோ ஒளிப்பதிவு செய்து சமூக வலைதளத்தின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு மக்களை சென்றடைந்துள்ளது.

தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வரும் ஊடக மையத்தை மேம்படுத்தும் வகையில், நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப கருவிகள் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்களில் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த குறும்படங்கள் தயாரித்து ஒளிபரப்பப்பட்டு வருகிறது. தலைவர்களின் விவரம் பின்வருமாறு: மகாகவி பாரதியார் – திருவல்லிக்கோணி, மொழிப்போர் தியாகிகள் சர்தார் வல்லபாய் பட்டேல், திருப்பூர் குமரன், வீரமங்கை வேலுநாச்சியார், மகாகவி பாரதியார் – எட்டயபுரம், வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, தியாகி வாஞ்சிநாதன், மகாத்மா காந்தி, மாமன்னர்கள் ஹைதர் அலி – திப்பு சுல்தான், தீரன் சின்னமலை, கர்ம வீரர் காமராஜர், நடிகர் திலகம் சிவாஜி, இரட்டைமலை சீனிவாசன், பெரியார் – அண்ணா ஆகிய 15 தலைவர்கள். இக்குறும்படங்கள் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக எல்.இ.டி திரை வாகனங்களில் (LED VAN) ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

You Tubeல் இதுவரை 3590 அரசு நிகழ்ச்சிகள் குறித்த வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்ட பணிகள் விவரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் ரூ.5,09,12,896/- மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளம், பழைய மாணவர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை, படப்பிடிப்புக் கட்டடங்கள் ஆகியவை முழுமையாக புனரமைக்கப்பட்டும், படப்பிடிப்புத் தளத்தில் மையப்படுத்தப்பட்ட குளிர் சாதனக் கருவிகள் புதிதாக அமைக்கும் பணிகள், இரண்டு புதிய மின்மாற்றிகள், இதர மின் சீரமைப்பு போன்ற பணிகள் புனரமைக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் சீரமைத்தல், பராமரிப்புப் பணிகள், பழுதடைந்த கட்டடங்கள் மற்றும் மின்கலன்கள் சீரமைப்பு, மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.1.58/- கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவ/மாணவியர் அதிகளவில் பயின்று வருவதால், மாணவ/மாணவியர் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்காக உணவு அருந்தும் அறை (Dinning Hall) அமைக்கும் பணி ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தினை நவீனத் தொழில்நுட்பத்துடன் உட்கட்டமைப்பை மேம்படுத்திடவும், பாடத்திட்டங்களை தரம் உயர்த்தி, இந்நிறுவனத்தினை உலகத்தரத்திற்கு உயர்த்திடவும் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாணவர் கல்வி நலன் கருதி பாடத்திட்டங்கள் தரம் உயர்த்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களின் நலன் கருதி இறுதித் திட்ட குறும்படப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினம் ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.50,000/-லிருந்து ரூ.1.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

21.11.2023 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்ககழகத்தின் வேந்தருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணை வேந்தருமான மாண்புமிகு தமிழ் வளர்ச்சி,கலை, பண்பாடு மற்றும் செய்தித் துறை அமைச்சர் ஆகியோர்களால் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் 2016-2020, 2017-2021, 2018-2022 மற்றும் 2019-2023 ஆகிய பருவ ஆண்டுகளில் பயின்ற 300 மாணவ /மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் நவீன தொழில்நுட்பங்களுடன் மூன்று படப்பிடிப்பு தளங்கள் ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத் துறையில் பல்வேறு நிலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் நலன்களைப் பேணிடும் வகையில். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் 27,257 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நலவாரிய உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவி, விபத்து ஈட்டுறுதித் திட்டம் உள்ளிட்ட 22 வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

896 உறுப்பினர்களுக்கு ரூ.44,19,750/- நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர் நலன்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, கொரோனா வைரஸ் நோய் தொற்று (Covid-19) தடுப்பு நடவடிக்கையாக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு தலா ரூ.5,000/- வீதம் 5,782 நபர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை ரூ.2,89,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, கொரோனா தொற்று மூலம் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.5,00,000/-ஐ ரூ.10,00,000/-ஆக உயர்த்தி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு 27 நபர்களுக்கு சுமார் ரூ.2 கோடியே 45 இலட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, நலவாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் அளிப்பதற்காக பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, 8 கூட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதுநாள் வரை 3,409 பத்திரிகையாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல வாரியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இதுநாள் வரை 123 நபர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கிடவும், 44 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப உதவி நிதியாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், செய்தியாளர், புகைப்படக்காரர் மற்றும் பிழைத்திருத்துபவர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நேரத்தில் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க குடும்ப உதவி நிதி ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.



சிறந்த இதழியலாளருக்கு, ஆண்டு தோறும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய கலைஞர் எழுதுகோல் விருது வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, பெண்மையைப் போற்றும் வகையில், சிறந்த பெண் ஊடகவியலாளருக்கு சிறப்பு விருதாக திருமதி.அஜிதா சாரங்கராஜ் அவர்களுக்கு 2023-ஆம் ஆண்டிற்கு கலைஞர் எழுதுகோல் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கீச்சகம் (Twitter), படவரி (Instagram) முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, சமூக ஊடகப் பணிகளை மேற்கொள்வதற்கு "சமூக ஊடகப்பிரிவு" என்ற தனிப்பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் தங்களின் துறை சார்ந்த தொழிற்தகுதியை மேம்படுத்திக் கொள்வதற்கும் திறன்மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவும் ஆண்டுதோறும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ. 4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுவரும் மருத்துவ உதவித் தொகை ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது

பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.10,000 லிருந்து ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,000 லிருந்து ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

புகைப்படப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகளை நவீனமுறையில் புகைப்படம் மற்றும் காணொளிகளைப் பதிவுசெய்திட 48 இலட்சம் ரூபாய் செலவில் 6 அதிநவீன புகைப்படக் கருவிகள் (Digital Still Camera/ ஒளிப்பதிவு கருவி (Digital Video Camera) ஆகியவை வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பிரிவில் 50 இலட்சம் ரூபாய் செலவில், முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் தொடர்பான ஆண்டு வாரியான அனைத்துப் பழமையான புகைப்படச் சுருள்களும் எண்மியமாக்கப்பட்டு (Digitalization) பாதுகாக்கப்பட்டுள்ளன.

தமிழரசு அச்சகம்

கடந்த நான்காண்டுகளில் 54 சிறப்பு வெளியீடுகள் 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு;

1	மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை
2	'தலை நிமிரும் தமிழகம் -நூற்றாண்டின் திசையில் நூறு நாள்கள்' எனும் 100 நாள் சாதனை மலர்
3	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 13.09.2021 வரை)
4	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை)
5	நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் – நூற்றாண்டு நிறைவு விழா சிலைத் திறப்பு சிறப்பு மலர்
6	மக்களுக்குத் தேவையெனில் மக்கள் நலனை முன்னிறுத்தி கடந்த அ.தி.மு.க.ஆட்சியில் செயல்படுத்தப்படாத அறிவிப்புகளையும் சேர்த்து நிறைவேற்றுவோம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பதிலுரை.
7	நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம் – ஓராண்டு சாதனை மலர் (தமிழ்)
8	Sustained Journey towards all round growth (one year achievements- English)
9	"முதலாண்டு முத்தான தொடக்கம் இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்" - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுப் பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்விதி 110இன் கீழ் ஆற்றிய உரை (07.05.2022).
10	கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி – காலப்பேழை
11	அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிடமாடல் அரசு
12	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (13.05.2021 முதல் 30.12.2021 வரை) – தொகுப்பு-1
13	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (30.12.2021 முதல் 05.04.2022 வரை) – தொகுப்பு-2
14	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள் (12.05.2021 முதல் 10.05.2022 வரை)
15	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 09.05.2022 வரை)
16	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு-1
17	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு-2
18	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு – தொகுப்பு-3
19	தமிழ்நாடு நாள் ஜூலை 18 சிறப்பு மலர் 2022
20	நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி 2022
21	வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு சிறப்பு மலர் 2022
22	பாரதி நினைவு நூற்றாண்டு மலர் 2022
23	இலக்கியமலர் – 2023
24	ஈழல்லா ஆட்சி ஈராண்டே சாட்சி - சாதனை மலர் (தமிழ்)

25	ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி - சாதனை மலர் (ஆங்கிலம்)
26	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதிர்த்த முத்துக்கள்
27	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (11.05.2022 முதல் 28.07.2022 வரை) தொகுப்பு - 3
28	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (29.07.2022 முதல் 30.09.2022 வரை) தொகுப்பு - 4
29	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (05.10.2022 முதல் 09.02.2023 வரை) தொகுப்பு - 5
30	மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (18.02.2023 முதல் 27.04.2023 வரை) தொகுப்பு - 6
31	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை (18.10.2022 முதல் 21.04.2023)
32	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 21.04.2023)
33	விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு (தமிழ்)
34	Tamil Nadu's Contribution To The Freedom Struggle (English)
35	இதழாளர் கலைஞர் - நூற்றாண்டு மலர்
36	வைக்கம் போராட்டம் (1924 - 2023) நூற்றாண்டு மலர் (தமிழ்)
37	வைக்கம் போராட்டம் (1924 - 2023) நூற்றாண்டு மலர் (ஆங்கிலம்)
38	வைக்கம் போராட்டம் (1924 - 2023) நூற்றாண்டு மலர் (மலையாளம்)
39	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 1
40	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 2
41	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் ஜூன் – 2024 தொகுதி – 3
42	காலப்பேழை – நினைவகங்களின் தொகுப்பு 2023
43	தலைசிறந்த மூன்றாண்டு தலைநிமிர்ந்த தமிழ்நாடு – மூன்றாண்டு சாதனை மலர் (தமிழ்) (14.08.2024)
44	Triumphant three years Tamil Nadu rises high – Three year Achievement (English)
45	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை (08.05.2023 முதல் 27.09.2023 வரை) தொகுப்பு – 7
46	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரை (02.10.2023 முதல் 14.03.2024 வரை) தொகுப்பு – 8
47	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடுசட்டமன்றப் பேரவையில் விதி 110 இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 11.10.2023 வரை)
48	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை (08.10.2023 முதல் 22.02.2024 வரை)
49	மக்கள் போற்றும் மகத்தான திட்டங்கள்
50	அமெரிக்காவில் நம் முதல்வர் ஓய்வறியா உழைப்பு...ஒரு ட்ரில்லியன் டாலர் இலக்கு
51	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் பொன்மொழிகள்





52	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் 2024-தமிழ்
53	கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் 2024-ஆங்கிலம்
54	அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலர்-2025

மடிப்பேடுகள்

விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய இலட்சம் மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு,பொதுமக்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், செய்தி மக்கள் தொடர்பு துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 82 நினைவகங்கள் பற்றிய குறிப்புகளை விரைவுதுலங்கல் குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்து படித்து தெரிந்து கொள்ளும் வசதி தொடக்கி வைக்கப்பட்டு, இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2021 (India International Trade Fair 2021) மற்றும் 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா (Film Bazaar 2022 Goa), (55th International Film Festival of India – 2024 Goa) ஆகியவை பற்றிய குறிப்புகள் 50,000 எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள்

'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக, "தலை நிமிரும் தமிழகம் பேரு சொல்லும் நூறு நாள்கள்" என்ற தலைப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் ஐந்து வகையான சுவரொட்டிகள் 50,000 அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு முக்கிய இடங்களில் விளம்பரப் படுத்தப்பட்டன.

இதர வெளியீட்டுப் பணிகள்

'தமிழரசு' மாத இதழ் பணிகளைத் தவிர்த்து, சிறுதொலைபேசிக் கையேடு, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நலவாரியம், திரைப்படத் துறையினர் நலவாரியம் போன்ற இதரப் பிரிவுகளுக்குரிய மடிப்பேடுகள், சுவரொட்டிகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு ஆண்டும் தலா 25,000 அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இணையதளம் மற்றும் அரசு இ-சேவை மையங்களில் பதிவுசெய்தால் இல்லம் தேடி வரும் 'தமிழரசு' மாத இதழ்

'தமிழரசு' மாத இதழினை பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், இளைய தலைமுறையினர் போட்டித் தேர்வுக்கு தயாராகும் பள்ளி மாணவ, மாணவியர்அதிக அளவில் வாசிக்கின்றனர். புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும் www.tamilarasu.org என்ற இணையதளம் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் வாயிலாகப் பதிவுசெய்து 'தமிழரசு' மாத இதழினை அஞ்சல் வழியாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

'தமிழரசு' மாத இதழின் வெற்றிப் பயணம்

55 ஆண்டுகளைக் கடந்து தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து வரும் 'தமிழரசு' (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாத இதழானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் ஆக உயர்ந்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

முதன்முறையாக 'தமிழரசு' சிறப்பு மலர்கள் புத்தகக் கண்காட்சியில் விற்பனை

'தமிழரசு' அச்சகத்தின் 55 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக, 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக தொகுத்து வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களில் விற்பனைக்கானவற்றை சலுகை விலையில்

அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெறும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கேற்ற 'தமிழரசு' அரங்கில் முதல் சிறப்பு மலர் விற்பனையினைத் தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து வரும் ஆண்டுகளில் விற்பனை நடைபெற்று வருகிறது.

இனிவரும் காலங்களிலும், இளைய தலைமுறையினர் தங்களின் படிக்கும் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில், சிறப்பு மலர்களை குறைந்த கட்டணத்தில் விற்பனை செய்யும் பணியினைத் தொடர்ந்து 'தமிழரசு' அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழரசு அச்சகத்திற்கு வாங்கப்பட்ட புதிய இயந்திரங்கள்

புதிய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப தமிழரசு அச்சகத்திற்கு ரூ. 56.64 இலட்சம் செலவில் புதிய காகிதம் வெட்டும் இயந்திரமும், (Paper cutting Machine), ரூ. 54.28 இலட்சம் செலவில் புதிய மடிப்பு இயந்திரமும் (Folding Machine) ரூ. 69.62 இலட்சம் செலவில் எண்மிய உற்பத்தி அச்சுப்பொறி (Digital Production Printer) ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. பல்வேறு காலக்கட்டத்தில் தமிழரசு அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க, "சிற்றுண்டிப் படியினை" ரூ. 400 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக தமிழரசு அச்சகத்தின் முகப்பில் "கலைஞர் நூற்றாண்டு நினைவு தோரணவாயில்" மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவு சிலை ஆகியவை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டு மொத்தம் 58 உறுப்பினர்களுக்கு ரூ.6,38,250/-க்கு நலத்திட்டஉதவிகள் வழங்கப்பட்டது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள் அச்சிடும் பணி மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கான அச்சுப்பணி செயலாக்கத்தின் மூலம் ரூ.74.77 கோடி மற்றும் பெயர் மாற்ற அறிவிக்கைகள் மற்றும் அரசிதழ்கள் வெளியீடு விற்பனை மூலம் ரூ.6.53 கோடி என மொத்தம் ரூ.81.30 கோடி அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

சென்னை அரசு மைய அச்சகத்தில் பழுதடைந்திருந்த பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், சேலம், திருச்சி, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய பழுதடைந்திருந்த அரசு கிளை அச்சக கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.4.55 கோடி மதிப்பில் பொதுப் பணித்துறையின் மூலம் புனரமைக்கப்பட்டு 100 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகத்தில் கட்டட பாரமரிப்பு பணிக்காக ரூ.19.83 இலட்சம் மதிப்பீட்டில் மின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 2021-2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.18,00,000/- மதிப்பீட்டில் சுமை ஊர்தி கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ரூ.5,00,000/- மதிப்பீட்டில் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper bailing Machine) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை, தண்டையார்பேட்டையில் ரூ.34.54 கோடி செலவில் அரசு அச்சக ஊழியர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பொதுப்பணித்துறையினரால் கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும், அடிப்படை தேவைகளான மின்தூக்கி , குடிநீர் இணைப்பு மற்றும் இடிதாங்கி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ரூ.4.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணி துறை வாயிலாக பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு முதல் முறையாக காகித தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, ரூ.55 இலட்சம் செலவில் ஆய்வகம் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள தொகைக்கு தரக்கட்டுப்பாட்டு கருவிகள் விரைவில் கொள்முதல் செய்யப்பட உள்ளது.



சென்னை, அரசு எழுதுபொருள் கிடங்கு அலுவலகம், புனரமைப்பதற்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித்துறையின் மூலம் 90 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 2022-23 - ஆம் நிதி ஆண்டில் ரூ.1.15 கோடி மதிப்பில் நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை, அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு ரூ.95.89 இலட்சம் மதிப்பில் ஆறு எண்ணிக்கை கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Black and White Inkjet Digital Production Printer), கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு ரூ.59.35 இலட்சம் மதிப்பில் இரண்டு எண்ணிக்கை நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து கிளை அச்சகங்களுக்கும் ரூ.20.59 இலட்சம் மதிப்பில் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets), கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு 2023-2024ஆம் நிதி ஆண்டில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது,

சேலம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகங்களில் 2023-24 - ஆம் நிதி ஆண்டில் ரூ.13.27 இலட்சம் மதிப்பில், இரண்டு எண்கள் காகித உருளையை ஏற்றும் தள்ளுவண்டிகள் (Hydraulic Reel Loading Trolley) நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சேலம் மற்றும் மதுரை அரசு கிளை அச்சகங்களுக்கு தலா நான்கு எண்ணிக்கை என மொத்தம் எட்டு நியூமேடிக் தண்டுகள் (8 No's of Pneumatic Shaft) நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சேலம், மதுரை, திருச்சி மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களுக்கு தலா இரண்டு எண்ணிக்கை என மொத்தம் எட்டு ஹைட்ராலிக் நகரும் அடிமேடைகள் (8 No's of Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மதுரை அரசு கிளை அச்சகத்தில் 15 எண்ணிக்கை கையினால் எண்களிடும் இயந்திரங்கள் (Hand Numbering Machine) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

விருத்தாசலம், சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களில் அப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் பெயர் திருத்தம் / மாற்றம் தொடர்பான விவரங்களை தமிழ்நாடு

அரசிதழில் விளம்புகை செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டு பொது மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு Sheet fed CPC 4 Colour இயந்திரம் கொள்முதல் செய்திட ரூ.8.50,00,000/- மற்றும் அதற்கான உட்கட்டமைப்பு மின்பராமரிப்பு பணிகளுக்கு ரூ.60,00,000/- என மொத்தம் ரூ.9,10,00,000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Spot UV Machine ஒன்று ரூ.29,99,560/- மதிப்பில் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவில் வெள்ளை காகிதத்தில் பார்வைப்படிகளை அச்சிடுதல் மற்றும் நகலெடுத்தல் பணிக்காக A3 Monochrome Laser Printer இரண்டு எண்ணிக்கைகள் ரூ.3,26,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை அரசு மைய அச்சகத்தில் பெரிய அளவிலான வண்ண பார்வைப் படிகள் அச்சிடுதல் பணிக்காக Large Format Plotter Type Printer ஒன்று ரூ.2,09,998/- மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Polymer Rubber Stamp Making Machine (Chemical Free) ஒன்று ரூ.2,04,022/- மதிப்பில் கொள்முதல் செய்து ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு நிரலாக்க வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) ஒன்று ரூ.80,53,500/- மதிப்பில் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு Envelope Punching Machine ஒன்று ரூ.4,72,000/- மதிப்பில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு அரசு கிளை அச்சகம் அமைப்பதற்கு ரூ.1.45 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 11.06.2025 அன்று முதல் செயல்படுகிறது.மேலும், இங்கு பொதுமக்களின் பெயர் திருத்தம் / மாற்றம் செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகம், மதுரை சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அரசு கிளை அச்சகங்களுக்கு ரூ.37,33,358/- மதிப்பில் முன் அச்சுப்பிரிவிற்கு தேவைப்படும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, அரசு மைய அச்சகம், மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகம் ஆகியவற்றிற்கு RO Water Plant 3 எண்ணிக்கை ரூ.10,44,000/- மதிப்பில் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு CCTV Cameras ரூ.3,13,585/- மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை, அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவிற்கு தேவையான Adobe CC மென்பொருள் ரூ.14,51,400/- மதிப்பிலும் மற்றும் CorelDraw மென்பொருள் ரூ.6,23,040/- மதிப்பிலும் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆணையரகம் மற்றும் அரசு அச்சகங்களுக்கு அலுமினியம் ஏணி-4 எண்ணிக்கைகள் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு ஹைட்ராலிக் ஏணி (Hydraulic Ladder) - 2 எண்ணிக்கைகள் ரூ.5,40,000/- மதிப்பில் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் 2021, 2022, 2023 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் கருணை அடிப்படையில் முறையே 4, 2, 8 மற்றும் 1 என 15 நபர்களுக்கும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் நேரடி நியமன முறையில் முறையே 2 மற்றும் 19 பேர் என 21 நபர்களுக்கும் ஆக மொத்தம் 36 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கலை மற்றும் பண்பாட்டுத் துறை

2022-2023

75வது சுதந்திர ஆண்டையொட்டி ரூ.164 இலட்சம் செலவில் 75 நாட்டுப்புறக் கலை வடிவங்களை 75 ஒளிப்படங்களாக தயாரித்து இணையவழியில் வெளியிடப்படும் பணி தொடங்கப்பட்டு, இதுகாறும் 70 ஒளிப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

'கால் கொண்ட கவிதைகள்' என்ற பெயரில் விரைவு தகவல் குறியீட்டு முறையுடன் நாள்காட்டி வெளியீடு.

ரூ.51.58 இலட்சம் மதிப்பில், 1,023 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் 1,000 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.3,000/- நிதியுதவி.

மறைந்த புகழ்பெற்ற 18 கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை குடும்ப பாராமரிப்பு நிதியாக தலா ரூ.25,000/-

மகாகவி பாரதியாரின் 100-ஆவது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஓவியப்போட்டி.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் புகழ்பெற்ற கலைஞரான திரு எம்.கே.தியாகராஜ பாகவதரின் பேரன் திரு சாய்ராம் என்பவருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதியுதவி.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2022 ஆம் ஆண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னையில் தொடக்கி வைக்கப்பட்ட 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற அலங்கார ஊர்திகள் சென்ற தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலை பண்பாட்டுத்துறையின் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்திய கலைஞர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பூதியம்.

சுற்றுலாத்துறை மற்றும் தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, கலைஞர்களுக்கு ரூ.44.30 இலட்சம் மதிப்பூதியம் வழங்கியமை. நம்ம ஊரு திருவிழா என்ற பெயரில் பிரமாண்டமான நாட்டுப்புறக் கலை விழா 500 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.

துபாயில் நடந்த உலக வர்த்தக கண்காட்சியில் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டது.

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக வழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்வு, ரூ.71 இலட்சத்தில் 525 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

2022-2023

சண்டிகர் தமிழ்சங்கத்தில் நடைபெற்ற சித்திரை திருவிழாவில், 20 கலைஞர்களைக் கொண்டு தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக 28.04.2022 முதல் 02.05.2022 வரை கலை நிகழ்ச்சிகள் மாநிலங்களிடையே கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

நீலகிரி மாவட்டம் உதகையில் 07.05.2022 மற்றும் 25.05.2022 ஆகிய நாள்களில் நடைபெற்ற கோடை விழாவில், கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.3 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் 23.05.2022 முதல் 31.05.2022 வரை நடைபெற்ற கோடை விழாவில், மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.2.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 29.05.2022 முதல் 31.05.2022 வரை நடைபெற்ற கோடை விழாவில், சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாங்கனிவிழாவில், சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

சென்னையில் 18.07.2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவில் ரூ.5.35 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் 21.07.2022 அன்று காஞ்சிபுரம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக அயல்மாநிலங்களில் கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ் ரூ.1.14 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

உலக செஸ் ஒலிம்பியாட் ஜோதி ஓட்டத்தில், 25.07.2022 அன்று இராமநாதபுரம் மற்றும் மதுரையில், மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாகவும், தொடர்ந்து 26.07.2022 மற்றும் 28.07.2022 வரை சென்னையில் காஞ்சிபுரம் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.2.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் 02.08.2022 மற்றும் 03.08.2022 ஆகிய நாள்களில் நடைபெற்ற வல்வில் ஓரி விழாவில் ரூ.1.50 இலட்சம் செலவிலும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் 02.08.2022 முதல் 4.8.2022 வரை நடைபெற்ற ஆடிப்பெருக்கு விழாவில் ரூ.1.50 இலட்சம் செலவிலும் சேலம் மண்டல கலை பண்பாட்டு மையத்தால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தென்காசி மாவட்டம் குற்றலாத்தில் 05.08.2022 முதல் 12.08.2022 வரை நடைபெற்ற சாரல் விழாவில், திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையத்தால் ரூ.4.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

75-ஆவது சுதந்திர தின விழாவையொட்டி, முதல் பெண் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீர மங்கை வேலு நாச்சியாரின் நினைவாக, சென்னை கலைவாணர் அரங்கில் 13.08.2022 அன்று வரலாற்று நாட்டிய நாடகம் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய நகரங்களிலும் நடத்தப்பட்டன.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையத்தில் 75வது சுதந்திரத் திருநாள் அமுதப்பெருவிழாவினை முன்னிட்டு 15.08.2022 அன்று கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.



'கலை சங்கமம்' என்னும் கலை விழாவினை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 17.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, பூங்காக்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் தமிழ்நாட்டில் மக்கள் கூடும் இடங்கள் போன்ற பல்வேறு இடங்களில் வார இறுதி நாள்களில் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் ஆதரவற்ற நிலையில் வாழும் கலைமாமணி விருது பெற்ற 10 நபர்களுக்கு ஒருமுறை பொற்கிழி நிதியுதவி ரூ.10 இலட்சம் மதிப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.10.2022 அன்று வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் 500 நாட்டுப்புற கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.10.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூரில் நடைபெற்ற தேசிய லோங்ரங் கலை விழாவில் 10.10.2022 முதல் 12.10.2022 வரையும், 17.10.2022 முதல் 19.10.2022 வரையும் என 60 மதுரை மற்றும் சேலம் மண்டலத்தை சேர்ந்த 60 கலைஞர்களைக் கொண்டு நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் ரூ.9.70 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

இராஜராஜ சோழனின் பிறந்த தினமாக ஐப்பசி சதய நட்சத்திரம் 1037-ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக ரூ.1.50 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

அரசு இசை, கவின் கலை மற்றும் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரிகளில் முதன்முறையாக வளாக நேர்காணல் நடத்தப்பட்டு 173 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 10.11.2022 முதல் 12.11.2022 வரை நடைபெற்ற மைய அரசின் 'ஒன்றே பாரதம், ஒப்பிலா பாரதம்' திட்டத்தில் தமிழகத்தினை சார்ந்த 60 கலைஞர்களைக் கொண்டு ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மலேசியாவில், பழமையான இந்திய புலம்பெயர் சங்கங்கள் நிறுவப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூறும் வகையில் 02.12.2022 முதல் 06.12.2022 வரை மலேசியாவின் சபா, சரவாக் ஆகிய நகரங்களில் அயல்நாடுகளுக்கிடையே கலைப்பரிமாற்றம் திட்டத்தின் கீழ் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்காக மதுரையில் மாநில அளவிலான குளிர்கால முகாம் ரூ.4 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. கலை பண்பாட்டுத் துறையின் ஏழு மண்டல கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக ரூ.15 இலட்சம் செலவில் மார்கழி இசைவிழா கலை நிகழ்ச்சிகள் ஏழு இடங்களில் நடத்தப்பட்டன.

'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புற கலை விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.01.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, சென்னையின் 18 இடங்களில் 14.01.2023 முதல் 17.01.2023 வரை சுமார் 1,000 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் ரூ.5.62 கோடி செலவில் நடத்தப்பட்டது.

புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 14.01.2023, 15.01.2023 ஆகிய நாள்களில் நடைபெற்ற பொங்கல் கலைவிழாவிலும், புதுதில்லி சட்டமன்ற பேரவையில் 17.01.2023 அன்று நடைபெற்ற விழாவில் ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2023 ஜனவரியில் 'உலக மரபு' வாரத்தின்போது மதுரை, தஞ்சாவூர், மாமல்லபுரம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் ரூ.6.50 இலட்சம் மதிப்பிட்டில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

01.02.2023 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் நடைபெற்ற தைப்பூசத் திருவிழாவினை முன்னிட்டு ரூ.3 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சென்னை மற்றும் மாமல்லபுரத்தில் 31.01.2023 முதல் 02.02.2023 வரை நடைபெற்ற 'ஜி 20 கல்வி பணிக்குழுக் கூட்டங்களின்'போதும், 23.03.2023 மற்றும் 24,03,2023 ஆகிய நாள்களில்

நடைபெற்ற 'ஜி-20 நிதி பணிக்குழு கூட்டங்களின்'போதும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்பட்டன.

துபாயில் 18.03.2023 முதல் 20.03.2023 வரை நடைபெற்ற உலகப் பொருளாதார உச்சி மாநாடு மற்றும் ஒன்பதாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலையான பரதநாட்டியம் மற்றும் பெரியமேளம் கருவியிசை நிகழ்ச்சிகள் ஆகியன ரூ.11.50 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

7 தனியார் கலை அமைப்புகளுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.11.90 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக ரூ.71 இலட்சத்தில் 400 கலைஞர்களுக்கு மாவட்டக் கலை மன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

2023-2024

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறையின் வாயிலாக மருத்துவ சுற்றுலா உச்சி மாநாடு-2023, 29.04.2023இல் 60-க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

மலேசியா தலைநகர் கோலாலம்பூர் ஸ்ரீமகா மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழாவில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் 23.06.2023 முதல் 25.06.2023 வரை 13 கலைஞர்களைக் கொண்டு மங்கல இசை, தேவாரம் பாடல் நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டது.

ஜி-20 மாநாட்டின்போது (Disaster Management Working Group Meeting, Sustainable Energy Environment Climate Change) கலை பண்பாட்டுத்துறையின் வாயிலாக 24.07.2023, 26.07.2023, 27.07.2023 மற்றும் 28.07.2023 ஆகிய நாள்களில் 200-க்கும் மேற்பட்டக் கலைஞர்களைக் கொண்டு பரதநாட்டியம், கருவியிசை, நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 கலைஞர்களுக்கு நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர ஓய்வூதிய நிதியுதவி பெறுதவற்கான ஆணை 29.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக கலைமாமணி விருது பெற்று வறிய நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு 29.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொற்கிழி விருதுத் தொகை ரூ.1 இலட்சம் வீதம், ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு 29.10.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு ஒரு கலைஞருக்கு ரூ.10,000/-வீதம் ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

மாநிலங்களுக்கிடையே கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ், ஜெய்பூர், ஜவகர் கலா கேந்திராவால் நடத்தப்பட்ட தேசிய கிராமியக் கலைவிழா-லோக்ரங் - 29.10.2023 முதல் 08.11.2023 வரை திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக 26 கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் பயின்ற 3,448 மாணாக்கர்களுக்கு 21.11.2023 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பட்டங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் நல்கை தொகை ரூ.2.03 கோடியினை, ரூ.3 கோடியாக உயர்த்தியும், பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையம் (Research Centre), நூலகம் (Library) மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்பு முறை (Learning Management System) ஆகியவற்றினை அமைத்திட ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா 13.01.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, சென்னையில் 18 இடங்களில் 14.01.2024 முதல் 17.01.2024 வரை 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கலைஞர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான வகையில் கொண்டாடும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. மேலும், 'கலைஞர் பண்பாட்டு பாசறை' என்னும் தலைப்பில் 09.02.2024 அன்று கடலூரில் நடைபெற்ற நிறைவு விழாவில் 100 புகைப்படக் கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும் மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில் நடைபெற்றது.

மரபு வழி மற்றும் நவீனபாணி கலைப்பிரிவுகளில் புகழ்பெற்ற ஓவிய, சிற்ப கலை வல்லுநர்களை பாராட்டும் வகையில் 10.10.2023 அன்று 2020-2021 ஆண்டுக்கான 6 கலைஞர்களுக்கும், 05.02.2024 அன்று 2021-2022 முதல் 2023-2024 வரையிலான ஆண்டுகளுக்கான 18 கலைஞர்களுக்கும் தலா 1 இலட்சத்திற்கான காசோலையும், செப்புப்பட்டயமும் ('கலைச்செம்மல் விருது') வழங்கப்பட்டது.

சீர்காழி, மாவட்ட அரசு இசைப் பள்ளியின் புதிய கட்டடம் 04.03.2024 அன்றும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடம் 08.03.2024 அன்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக ரூ.90.30 இலட்சத்தில் 660 கலைஞர்களுக்கு மாவட்டக் கலை மன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

2024-2025

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் சார்பில் 941 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை 24.07.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மாவட்டம் வாரியாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் 06.08.2024 அன்று நடைபெற்ற ஒலிம்பிக்-2024 நிகழ்வில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் 07 கலைஞர்களைக் கொண்டு ரூ.4.84 இலட்சம் செலவில் செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டது.

சிங்கப்பூரில் ஆனந்தா மரபு கலை மற்றும் இசை நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 'சிங்கை மரபிசை விழா ஆனந்த கொண்டாட்டம்-2024 என்ற நிகழ்வில் கலை பண்பாட்டுத்துறை சார்பாக 30.08.2024 முதல் 31.08.2024 வரை 18 கலைஞர்களைக் கொண்டு ரூ.14.85 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

இராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூரில் நடைபெற்ற தேசிய லோங்ரங் கலை விழாவில் 21.10.2024 முதல் 23.10.2024 வரையும் திருச்சிராப்பள்ளி மண்டலத்தை சேர்ந்த 31 கலைஞர்களைக் கொண்டு நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் ரூ.5.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

இலங்கையில் 14.12.2024 அன்று நடைபெற்ற சர்வதேச தமிழ் வானொலி (பிரான்சின்) 28ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் 20 கலைஞர்களைக் கொண்டு ரூ.6.48 இலட்சம் செலவில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டது.

தெலுங்கானா தமிழ்ச் சங்கத்தின் 6ஆம் ஆண்டு விழாவில் 22.12.2024, 23.12.2024 ஆகிய நாள்களில் ஐதராபாத்தில் கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக 30 கலைஞர்களைக் கொண்டு பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் ரூ.2.70 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா எனும் பிரம்மாண்ட கலை விழாவினை 13.01.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னையில் 18 இடங்களில் 14.01.2025 முதல் 17.01.2025 வரை 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு ரூ.6.30 கோடி செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் கலைவிழாவில் 13.01.2025 முதல் 15.01.2025 வரை தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையத்தின் வாயிலாக 25 கலைஞர்களைக் கொண்டு ரூ.4.80 இலட்சத்தில் கிராமிய பல்சுவை கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு மாமல்லபுரம்,கடற்கரை கோயில் வளாகத்தில் 250 பரதநாட்டியக் கலைஞர்கள் மற்றும் 250 கிராமியக் கலைஞர்கள் என மொத்தம் 500 கலைஞர்களை கொண்டு நாட்டிய சங்கமம் எனும் பிரம்மாண்ட கலை விழாவினை 24.01.2025 அன்று ரூ.2 கோடி செலவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் சிறப்புடன் நடத்தி முடிக்கப்பட்டது.

மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக ரூ.63 இலட்சத்தில் 450 கலைஞர்களுக்கு மாவட்டக் கலை மன்ற விருதுகள் வழங்கப்பட்டன.

அருங்காட்சியகங்கள் துறை

2021-2022 ஆம் ஆண்டு 75-ஆவது சுதந்திரதின விழாவில். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், மதுரை காந்தி நினைவு அருங்காட்சியக பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி மேம்படுத்த ரூ.6 கோடி, அறிவித்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக ரூ.3 கோடிக்கு அரசாணை பெறப்பட்டு, பொதுப்பணித் துறை மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

2021-22 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில், தேசிய கலைக்கூடத்தின் முன்பாக கலை வடிவங்களின் மேல் முப்பரிணாம லேசர் ஒலி ஒளி அமைக்க ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு. ரூ.4.56 கோடிக்கான அரசாணை பெறப்பட்டு, இப்பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய அருங்காட்சியகங்கள் அமைத்திட விழுப்புரம் அருங்காட்சியகத்திற்கு ரூ.5.6 கோடிக்கு நிர்வாக அனுமதி ஆணை பெறப்பட்டது. மேலும், இராமநாதபுரம் அருங்காட்சியகத்திற்கு, இராமநாதபுரம் - இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் 5 ஏக்கர் இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள பாரம்பரிய அருங்காட்சியகக் கலையரங்கத்தை, பழமை மாறாமல் இருக்கைகள், ஒலி, ஒளி அமைப்பு, குளிர்சாதன வசதி, தீத்தடுப்பு வசதிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்த, ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முழுவதும் முடிவடைந்து,



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தயார் நிலையில் உள்ளது.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில், நாணயவில் காட்சிக்கூடத்திற்கு அருகில் உள்ள பாரம்பரிய கட்டடத்தை பழமை மாறாமல் மேம்படுத்தப்படுத்தி உணவகம் அமைக்க ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முழுவதும் முடிவடைந்து, மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் உணவகம் நடத்தப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட அருங்காட்சியகத்தை பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணிக்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்ட அருங்காட்சியகத்தை பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணிக்காக ரூ. 1.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை அருங்காட்சியக வளாகத்தில் உள்ள வேதியியல் பாதுகாப்புப் பிரிவை நவீனப்படுத்த ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு, நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் பணிகள் நிறைவுற்றுள்ளன.

சென்னை அருங்காட்சியக வளாக சுற்றுச் சுவர் பழுது பார்க்கும் பணிக்காக ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் பணிகள் நிறைவுற்றுள்ளன.

வேலூர், அரசு அருங்காட்சியக காட்சிக் கூடங்களை பார்வையாளர் வசதிகளுடன் நவீன காட்சியமைப்பு மற்றும் ஊடாடும் தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள, ரூ.96,88,363/- கோடி நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு, பொதுப் பணித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன.

கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தை மேம்படுத்த ரூ.48,49,367/-க்கு நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு, பொதுப் பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளன.

ரூ.41.78 இலட்சம் செலவில் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள "ஹுமாயூன் மஹாலில்" புதிதாக சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்க ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள வளர்கலைக்கூடத்தில், கலைஞர் அவர்களின் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும்செய்தித்துறை அமைச்சர் திரு மு.பெ.சாமிநாதன் அவர்களால் பொதுமக்கள் பார்வைக்கு 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அருங்காட்சியக பார்வை நேரம் காலை 10.30 முதல் மாலை 6.30 மணிவரை என்று மாற்றம் செய்யப்பட்டு, நுழைவுக் கட்டணத்தில் ரூ.15/- என்பதை ரூ.50 ஆக மாற்றம் செய்யப்பட்டதால் அருங்காட்சியக வருவாய் மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

'மாபெரும் சோழர் அருங்காட்சியகம்' - தஞ்சாவூரில் அமைக்க 2023-24 ஆம்ஆண்டு அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டம் நீலகிரி தெற்குத்தோட்டம் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அரசு அருங்காட்சியகங்கள் துறைக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப் திருவாளர் RDX, அசோக் நகர், சென்னை என்ற நிறுவனம் மூலம் ரூ.54 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.








மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்



திருமதி **பி.கீதா ஜீவன்** அவர்கள்
மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர்
உரிமைத்துறை அமைச்சர்



ரூ.4.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் 18,53,798 குழந்தைகள் பயன் பெறும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்...

புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், 4.86 இலட்சம் மாணவிகள் பயன்...

தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் ரூ.179.59 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு 3.80 இலட்சம் மாணவர்கள் பயன்...

ரூ.26 கோடி மதிப்பீட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் மகளிருக்கான தோழி விடுதிகள்...

ரூ. 311.77 கோடி செலவில் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 1,24,674 பெண் குழந்தைகள் பயன்...

சத்துணவுத் திட்டம்

மதிய உணவு திட்டம் என்பது அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மைத் திட்டமாகும். இத்திட்டம் பள்ளி செல்லும் குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்கிறது இது மாணவர்களின் பசியை போக்குவது மட்டுமல்லாமல் இந்தியாவின் எதிர்கால குடிமகனாக இருக்கும் குழந்தைகளை ஊட்டச்சத்துடன் உருவாக்குவதன் மூலம் தேசத்தை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.

பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியாவில் மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகும்.

1989-லிருந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் சத்துணவு திட்டத்தில் முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் பள்ளி குழந்தைகளின் விருப்பத்தின்படி செவ்வாய் கிழமை முதல் மற்றும் மூன்றாம் வாரம் வழங்கப்பட்டு வந்த கருப்பு கொண்டைக் கடலை புலாவ், தக்காளி மசாலா முட்டைக்கு பதிலாக சாதம், கருப்பு கொண்டை கடலை கிரேவி, தக்காளி மசாலா முட்டையும் இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் வழங்கப்படும் மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம், மிளகு முட்டைக்கு பதிலாக சாதம், காய்கறி சாம்பார், மிளகு முட்டையும் வழங்கப்பட்டு வருகிறது.

2024 -2025 ம் ஆண்டில் பள்ளி சத்துணவு மையங்களில் சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட பள்ளி சத்துணவு மையங்களுக்கு இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக் கவசம், ஒரு நகவெட்டி, 5 கைதுடைக்கும் துண்டுகள் 6 கிருமி நாசினி சோப்புகள் ஆகியவை அடங்கிய சுகாதார பேழை ரூ.19.55 இலட்சத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் தமிழ் நாடு சமூக தணிக்கை சங்கம் மூலமாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு 954 சத்துணவு மையங்களில் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் 2024 -2025 ம் ஆண்டில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021 -2022 முதல் 2024 - 2025 வரை பள்ளிகளில் 42,71,953 மாணவ, மாணவிகள் மதிய உணவு திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம்

இந்தியாவிலேயே பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை வழங்கி பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்து, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 07.05.2022 அன்று அறிவிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், கிராம ஊராட்சி மற்றும் மலைப் பகுதிகளில் 1 - 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 1545 அரசு பள்ளிகளில் 1.15 இலட்சம் மாணவர்கள் பயன்அடையும் வகையில் முன்னோடி திட்டமாக 15.09.2022, அன்று மதுரை மாவட்டத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. பின்னர் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் விடுபட்டுள்ள அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 01.03.2023 அன்று விரிவாக்கம் செய்யப்பட்டது .



பின்னர் இத்திட்டம் 30,995 அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் 1853798 குழந்தைகளை உள்ளடக்கி 25.8.2023 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.404.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

மேலும் 2024-25-ம் ஆண்டு முதல் கூடுதலாக கிராமபுறங்களில் உள்ள 4,154 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு ரூ. 82.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3,990 பள்ளிகளில் உள்ள 2,20,543 குழந்தைகளை உள்ளடக்கிய கிராமப்புறங்களில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளின் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் ரூ.600.49 கோடி கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு CMBFS விரிவாக்கம் உட்பட முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை செயல்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலம்

பெண் கல்வியைப் போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தைத் தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், நல்ல குடிமக்களைப் பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தைச் சார்ந்தவராகவும், உருவாக அடித்தளமாக விளங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி புதுமைப் பெண் திட்டமானது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் 05.09.2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டை விட 2023-2024 கல்வியாண்டில் உயர்கல்விக்கு சேர்ந்த மாணவிகளின் எண்ணிக்கை கணிசமான உயர்ந்துள்ளது. இது மேலும் 30,000 க்கும் மேற்பட்ட பெண்கள் உயர்கல்வியைத் தொடர ஊக்குவித்துள்ளது.

2022-ஆம் ஆண்டு நிலவரப்படி, 2.09 இலட்சம் மாணவிகளும், 2023-2024-ஆம் ஆண்டில், 2.73 இலட்சம் மாணவிகளும் பயனடைந்த நிலையில், 2024-2025-ஆம் நிதியாண்டில் 4.06 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் தற்போது வரை 4.86 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ், 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.100.11 கோடியும், 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.271.66 கோடியும், 2024-2025-ஆம் நிதியாண்டில் மார்ச் 2025 வரை ரூ.350.04 கோடியும் மாணவிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

புதுமை பெண் திட்டமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் (தமிழ் வழிக் கல்வி) பள்ளிகளில் படித்த அனைத்து மாணவியர்களையும் (100%) மாணவர்களை உயர்கல்வியைத் தொடர ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், இத்திட்டமானது, உயர்கல்வியை இடைநிறுத்தம் செய்த 11,682 மாணவிகள் மீண்டும் உயர்கல்வியில் சேர்ந்து பட்டப்படிப்பை தொடர ஊக்குவித்துள்ளது.

தமிழ்ப் புதல்வன் திட்டம் - 2024

அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை ஊக்குவித்திடவும், அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் சேர்ந்து படித்து வரும் அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1,000/- ஊக்கத் தொகையினை வழங்கும் "தமிழ்ப்புதல்வன்" என்னும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

உயரிய நோக்கம் கொண்ட இத்திட்டத்தை நிறைவேற்றிட வரும் நிதியாண்டில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 3.80 இலட்சம் மாணவர்கள் ஆகஸ்ட் மாதம் முதல் ரூ.1,000 ஊக்கத் தொகை பெற்று பயனடைந்து வரும் நிலையில், மார்ச்-2025 வரை ரூ.181.47 கோடி ஊக்கதொகையாக வழங்கப்பட்டுள்ளது.



கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு பாதுகாப்பும், சுயமாக வாழ அவர்களின் பொருளாதார தேவைகளையும் பூர்த்தி செய்திடவும் டாக்டர் கலைஞர் அவர்களால் 1989-ஆம் ஆண்டு ரூ5,000/-, 1996இல் ரூ10,000/-, 1997இல் ரூ15,000/- 2007இல் ரூ20,000/- மற்றும் 2010இல் ரூ25,000/-மாகவும் படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்தினை சேர்த்து வழங்கப்பட்டது.

பட்டப்படிப்பு,பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.25,000/- திலிருந்து ரூ.50,000/-மாக உயர்த்தப்பட்டு, அத்துடன் 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் சேர்த்து வழங்கப்பட்டது.

இவ்வாறு ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- நிதியுதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்க நாணயமானது 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சாதி, மத, வேற்றுமைகளை ஒழித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இந்த திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 8,143 கலப்புத் திருமண தம்பதிகளுக்கு 8 கிராம் (22 காரட் தங்க நாணயத்துடன்), நிதியுதவித் தொகையாக ரூபாய் 63.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 3461 பயனாளிகளுக்கு ரூ.1911.59 இலட்சம் மதிப்பீட்டில் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயம் மற்றும் நிதியுதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண திருமண நிதியுதவித் திட்டம்

விதவை மறுமணம் மூலம் இவர்களின் மறுவாழ்வை உறுதி செய்யவும், அவர்களின் சமுதாய அந்தஸ்தை உயர்த்தவும் 1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்திக் கீழ் மறுமணம் செய்து கொள்ளும் விதவைகளுக்கு முதன் முதலில் ரூ.5,000/-க்கான தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்பட்டது, பின்னர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 1997 முதல் திருமண நிதியுதவி தொகையாக ரூ.7,000/-மும், 1999-இல் ரூ.10,000/-மாகவும், 2007-இல் ரூ.15,000/-மாகவும், 2008-இல் ரூ.20,000/-மாகவும் மற்றும் 2010-இல் ரூ.20,000/- என்பது ரூ.25,000/-மாகவும் படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்தினை சேர்த்து வழங்கப்பட்டது.

பட்டப்படிப்பு,பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.25,000/- திலிருந்து ரூ.50,000/-மாக உயர்த்தப்பட்டு, அத்துடன் 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் சேர்த்து வழங்கப்பட்டது.

இவ்வாறு ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- நிதியுதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்க நாணயமானது 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கைம்பெண்களின் மறுவாழ்வை உறுதி செய்திடும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 101 கைம்பெண்கள் மறுமணம் செய்துள்ளனர். இவர்களுக்கு 8 கிராம் (22 காரட் தங்க நாணயத்துடன்), நிதியுதவித் தொகையாக ரூபாய் 66.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 11 பயனாளிகளுக்கு ரூ.17.75 இலட்சம் மதிப்பீட்டில் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயம் மற்றும் நிதியுதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

எட்டாம் வகுப்பு வரை படித்திருந்தால், அவர்களின் திருமணத்தின்போது நிதியுதவி வழங்கிடும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தினை 1989-இல் ரூ.5,000 நிதியுதவித் தொகையுடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்னர் 1996இல் இத்திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவி பெற கல்வித் தகுதி 10-ஆம் வகுப்பாகவும், திருமண நிதியுதவி ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டது. பின்பு 2006-இல் ரூ.15,000, 2008-இல் ரூ.20,000 மற்றும் 2010-இல் ரூ.20,000/-ஆக படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

ஈ.வெ.ரா மணியம்மையார் நினைவு விதவை மகள்திருமண நிதியுதவித் திட்டம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் 13.07.1990-ன்படி ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகையான ரூ.1,000/-னை ரூ.2000/-மாக உயர்த்தி வழங்கியுள்ளார்.

ஏழை விதவை தாய்மார்களின் துயரின் உயர்ந்த கலைஞர் அவர்கள் 30.05.1997 நாளன்று நிதியுதவித் தொகையினை ரூ.3000/-மாக உயர்த்தியும், 23.06.1998 நாளன்று ரூ.5000/-மாக உயர்த்தியும், மீண்டும் அடுத்த ஓராண்டு காலத்திற்குள்ளாகவே 27.09.1999 நாளன்று ரூ.7,000/- மாக உயர்த்தியும், 21.09.2007 நாளன்று ரூ.15,000/- மாகவும், 20.11.2008 நாள் முதல் ரூ.20,000/-மாகவும் மற்றும் 21.06.2010 நாள் முதல் ரூ.25,000/-மாகவும் படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் 10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயம் சேர்த்து வழங்கப்பட்டது.

பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.25,000/- திலிருந்து ரூ.50,000/-மாக உயர்த்தப்பட்டு,அத்துடன் 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் சேர்த்து வழங்கப்பட்டது. இவ்வாறு ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- நிதியுதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்க நாணயமானது 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது ஏழை கைம்பெண்கள் தனது மகளின் திருமணத்தை எவ்வித சிரமுமின்றி நடத்த உதவும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இந்த திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 28618 ஏழை விதவை தாய்மார்களுக்கு அவர்தம் மகளின் திருமணத்திற்கு 8 கிராம் (22 காரட் தங்க நாணயத்துடன்), நிதியுதவித் தொகையாக ரூபாய் 252.77 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 4171 பயனாளிகளுக்கு ரூ.5703.10 இலட்சம் மதிப்பீட்டில் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயம் மற்றும் நிதியுதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்

தாய், தந்தையற்ற நிராதரவான பெண்களின் திருமண நிலையை உறுதி செய்திட உதவிடும் நோக்கத்தில் ஏற்கெனவே ரூ.2,000/-மாக வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகையினை, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 07.05.1997 நாள் முதல் ரூ.3,000/-மாக உயர்த்தி வழங்கப்பட்ட நிதியுதவித் தொகையானது மீண்டும் 03.08.2007 நாள் முதல் ரூ.15,000/-மாகவும், பின்பு 20.11.2008 நாள் முதல் ரூ20,000/-மாக உயர்த்தியும் மற்றும் 21.06.2010 நாளின்படி ரூ.25,000/- என படிப்படியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் 10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் சேர்த்து வழங்கப்பட்டது.

பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.25,000/- திலிருந்து ரூ.50,000/-மாக உயர்த்தப்பட்டு, அத்துடன் 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் சேர்த்து வழங்கப்பட்டது.

இவ்வாறு ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- நிதியுதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்க நாணயமானது, 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது

தாய் தந்தை இல்லாத ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி அளிக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இந்த திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 3127 ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு 8 கிராம் (22 காரட் தங்க நாணயத்துடன்), நிதியுதவித் தொகையாக ரூ. 28.22 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் 293 பயனாளிகளுக்கு ரூ.489.71 இலட்சம் மதிப்பீட்டில் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயம் மற்றும் நிதியுதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

திருநங்கைகள் நல வாரியம்

திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டு மனைப்பட்டா, மருத்துவ காப்பீட்டு அட்டை, தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடங்கிட மானியம், சுய உதவிக்குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்தல் மற்றும் 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,500/- வீதம் ஓய்வூதியத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகளுக்கான சிறப்பு விருது

திருநங்கைகள் தங்களது சொந்த முயற்சியில் படித்து, தனித் திறமை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறி திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவைபுரிந்து, அவர்களுள் முன்மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15-ஆம் நாளன்று "திருநங்கைகளுக்கான சிறப்பு விருது" ரூ.1,00,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழுடன் வழங்கப்பட்டு வருகிறது.

கைபேசி செயலி

திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக, அனைத்து திருநங்கைகளும் தங்களது சுயவிவரங்களை பதிவுசெய்து கொள்ள சிறப்பு முயற்சியாக 2021-ஆம் ஆண்டு "திருநங்கை" என்னும் கைபேசி செயலியானது உருவாக்கப்பட்டு, அவர்களின் சுய விவரங்கள் பதிவுசெய்யப்பட்டு அடையாள அட்டை பெறுவது எளிமையாக்கப்பட்டு 9,789 திருநங்கைகள் அடையாள அட்டையினைப் பெற்றுள்ளனர்.

சுயதொழில் மானியம்

திருநங்கைகள் வாழ்வாதாரத்தை பொருளாதார ரீதியாக உயர்த்தி, சமுகத்தில் அவர்களுக்கு அங்கீகாரத்தினை வழங்கும் நோக்கத்துடன், அவர்கள் சொந்த தொழில் தொடங்க மானிய வழங்கும் திட்டத்தினைன் மூலம் அவர்கள் தொடங்கும் தொழிலின் தேவைக்கேற்ப ரூ.50,000/- வரை வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகள் சொந்த தொழில் தொடங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய நிதியாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 811 திருநங்கைகள் சுயதொழில் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர்.

கோவிட்-19 நிவாரண உதவித் தொகை

கோவிட்-19 இரண்டாம் அலை அச்சுறுத்தல் காலத்தில், திருநங்கைகள் நல வாரியத்தின் கீழ் அடையாள அட்டை பெற்ற குடும்ப அட்டை இல்லாத திருநங்கைகளுக்கு முதற்கட்டமாக 8493 திருநங்கைகளுக்கு தலா ரூ.2,000/-மும், இரண்டாம் கட்ட நிவாரண உதவித்தொகையாக 8,591 திருநங்கைகளுக்கு தலா ரூ.2,000/-ம் வீதம் ரூ.3.40 கோடி செலவினத்தில் வழங்கப்பட்டுள்ளது.

திருநங்கைகளுக்கான கல்வி கனவுத் திட்டம்

திருநங்கைகளும் மற்றவர்களைப் போன்றே சமமாக உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை உறுதி செய்யும் விதமாக 2024-2025-ஆம் நிதியாண்டு முதல் உயர்கல்வி பயில விரும்பும் திருநங்கைகளுக்கான கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம் உட்பட அனைத்து செலவினங்களையும் திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டிற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 4 திருநங்கைகளுக்கு கல்விக் கட்டணத் தொகை திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

திருநங்கைகளுக்கான ஓய்வூதியம்

தங்களது வாழ்வாதார செலவுகளுக்கு வருமானம் ஈட்ட இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந் தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையினை ரூ.1,500/- ஆக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு 1311 திருநங்கைகளுக்கு ஓய்வூதியமாக ரூ.1.53 கோடியும், 2023-2024-ஆம் நிதியாண்டில் 1,482 திருநங்கைகளுக்கு ரூ.2.49 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டிற்கு ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளதில் 1,599 திருநங்கைகளுக்கு மார்ச்-2025 மாதம் வரை ரூ.281.76 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிர் விடுதி

தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாதல் ஆகியவை நகரங்களில் பெருகிவரும் வேலைவாய்ப்புகள் பெண்களின் வேலைவாய்ப்பிற்கான வழிகளை அதிகரித்துள்ளன. வேலை செய்யும் இடத்திற்கு அருகில் பாதுகாப்பான தங்கும் இடங்களின் தேவையை அதிகரிப்பதுடன், தொழில் துறை பகுதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற வேலைவாய்ப்பு மையங்களுக்கு அருகில் பணிபுரியும் மகளிர் விடுதியை உருவாக்குவதன் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பணி நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிற நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வரும் பெண்களுக்கு நியாயமான வாடகையில் பாதுகாப்பான தங்கும் வசதி அளிக்கும் நோக்கத்துடன் 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் உரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்த பட்சம் ஒரு பணிபுரியும் மகளிர் விடுதியை உருவாக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பணிபுரியும்மகளிருக்கானஅரசுவிடுதிகள் தற்காலசூழ்நிலைக்கேற்பஉள்ளுறைவோர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சிறப்பு மற்றும் நவீன வசதிகளை வழங்கும் நோக்கில், தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் -TNWWHCL தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 16 மாவட்டங்களில் 19 தோழி விடுதிகள் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் தோழி என்ற அடையாள பெயருடன் முத்திரை பதிக்கும் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில் 699 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.31.08 கோடி செலவில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்டு, 13.07.2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது 686 பணிபுரியும் மகளிர் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

இரண்டாம் கட்டமாக, ஓசூர், திருவண்ணாமலை மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் (செங்கல்பட்டு) ஆகிய 3 இடங்களில் 432 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.35.87 கோடி செலவில் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டப்பட்டு வருகின்றன.

சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் அடையாறு (சென்னை) ஆகிய 7 இடங்களில் 476 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் சீரமைப்பு பணிகள் ரூ.4.21 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 13.07.2023 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இவ்விடுதிகளில் 362 பணிபுரியும் மகளிர் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

2024-2025 ஆம் ஆண்டில் திருப்பூர், திருவள்ளூர், புதுக்கோட்டை கோயம்புத்தூர், மதுரை மற்றும் தூத்துக்குடி போன்ற 6 இடங்களில் செயல்படும் விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் சீரமைப்பு பணிகள் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் பணிபுரியும் மகளிர் நலனுக்காக கூடுதல் பணிபுரியும் மகளிர் விடுதிகள் ரூ.26 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் நலத்துறையினால் கட்டப்பட்டு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் அயனம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் 146 படுக்கை வசதிகள் கொண்ட பணிபுரியும் மகளிர் விடுதிகள் ரூ.1.59 கோடி திட்ட



மதிப்பீட்டில் புதுப்பித்து மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 16.10.2024 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இவ்விடுதிகளில் 81 பணிபுரியும் மகளிர் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை

சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்று மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை- 2024 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21. 02.2024 அன்று வெளியிடப்பட்டது.

சமூக அதிகாரமளித்தல் பிரிவில், பெண்களுக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சமவாய்ப்பு, திறன் பயிற்சி அளித்தல், அவர்களின் சுகாதாரம், ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், அவர்களுக்கு எதிரான வன்கொடுமை மற்றும் பாகுபாடுகளை களைதல், 24 மணிநேர உதவி எண்களை பராமரித்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், நலத்திட்ட உதவிகள் அனைவரையும் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளுதல், பணியிடங்களில் பாதுகாப்பும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றை உறுதி செய்திடும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அதிகாரமளித்தல் பிரிவில், மகளிருக்கு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கிட பல்வேறு துறைகள் இணைந்து அவர்களுக்கு தேவையான திறன்வளர்ப்பு பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், திட்டங்கள் செயல்படுத்துவதை விளக்குகிறது. விவசாயம், அமைப்பு சாரா தொழில்களில், பெண்களுக்கு சரிநிகர் பணிவாய்ப்புகளும், சம ஊதியமும் வழங்குதல், மகளிருக்கு எளிய முறையில் குறைந்த வட்டியில் வங்கி கடன் மற்றும் மானியம், எண்ம மற்றும் பண பரிவர்த்தனை பயிற்சி, புத்தொழில் தொடங்கிட மகளிருக்கு முன்னுரிமை. அவர்களின் தயாரிப்புகளுக்கு தனித்துவ வணிகக்குறியீடு மற்றும் சுற்று சூழலுக்கு உகந்த மரபுசாரா பசுமை எரிசக்தி எளிதில் கிடைக்க செய்தல் போன்றவை உறுதி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.அரசியல் அதிகாரமளித்தல் பிரிவில், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு பெற்ற மகளிருக்கு திறன் பயிற்சி, தலைமை பண்பு பயிற்சி, வெளிமாவட்டங்கள் / வெளி மாநிலங்களுக்கு களப்பயணம் மூலம் அனுபவ அறிவு பெற்று புதுமையான உத்திகளை செயல்படுத்துவதை ஊக்குவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வளரிளம் பெண்கள் / மகளிருக்கு மருத்துவ பரிசோதனை, சிகிச்சை, சிறப்பு வல்லுநர்களுடன் ஆலோசனை, அங்கன்வாடி பணியாளர்கள், சுகாதார செவிலியர்கள், சுயஉதவிக் குழுக்கள்/கூட்டமைப்பு போன்ற அமைப்புகளுக்கு பயிற்சி அளித்து, கிராமங்களில் மனநலம் பாதிக்கப்படும் பெண்களை ஆரம்ப கட்ட நிலையிலேயே கண்டறிந்து மனநல ஆலோசகர்களுடன் இணைத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

மாநில மகளிர் கொள்கை செயல்படுத்துவதன் மூலம் கல்வி, வேலைவாய்ப்பு, திறன் வளர்ப்பு ஆகியவற்றில் மகளிரின் நிலை மேம்படும்.

மகளிருக்கான அதிகாரம் அளித்தல் மையம் (HUB for Empowerment of Women)

மாநில மற்றும் மாவட்ட அளவில் துறைகளிடையே பெண்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைப்பதே மகளிருக்கான அதிகாரம் அளித்தல் மையத்தின் முக்கிய நோக்கமாகும். சுகாதாரம், பராமரிப்பு, தரமான கல்வி, தொழில் மற்றும் தொழில்சார் ஆலோசனை, பயிற்சி, நிதிமேலாண்மை, தொழில்முனைவு, வங்கி இணைப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் மின்னிலக்க கல்வியறிவு ஆகியவற்றில் சமமான வாய்ப்புகள் உள்ளிட்ட பெண்களின் மேம்பாடு மற்றும் அதிகாரமளித்தலுக்கான திட்டங்களுடனும், பல்வேறு அமைப்புகளுடன் பெண்களை இணைக்கவும், சேர்க்கவும், வழிகாட்டிடவும் துணைபுரிகின்றன. மாநில அளவிலும் தமிழநாட்டில் 38 மாவட்டங்களிலும் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநில மற்றும் மாவட்ட மகளிருக்கான அதிகாரம் அளித்தல் மையம்

மாநில மற்றும் மாவட்ட அளவிலான மகளிருக்கான அதிகாரம் அளித்தல் மையங்களில் பாலினம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மற்றும் துறைகளுடன் ஒருங்கிணைப்பு நிதி சார்ந்த கல்வியறிவு நிர்வாக பணிகள் மேற்கொள்ள பணியாளர்களுடன் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட தோறும் இதுவரை 24,132 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன பெண்கள் பாதுகாப்பு, நிதி மேலாண்மை, வேலைவாய்ப்பு, சட்ட விழிப்புணர்வு, தொழில்முனைவு, சுகாதார மேம்பாடு, தரமான கல்வி, டிஜிட்டல் கல்வியறிவு, சமூக பாதுகாப்பு ஆகிய இலக்குகளின் கீழ் (60:40) நிதி ஒதுக்கீட்டின் படி இம்மையம் செயல்படுகிறது.



ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)

குடும்பம் சமூகம் பணியிடத்தில் தனியார் மற்றும் பொது இடங்களில், வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, ஒருங்கிணைந்த ஆதரவையும், உதவியையும் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். உடல்ரீதியாக, பாலின ரீதியாக, உணர்வுரீதியாக, மனரீதியான, பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, எந்தப்பாகுபாடுமின்றி ஆதரவும் ஊக்கமும் வழங்கி இம்மையங்கள் உதவி புரிந்து வருகின்றன . தமிழ்நாட்டில் மொத்தம் 48 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மாவட்ட தலைமை மருத்துவமனை / மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த சேவை மையத்தில் மருத்துவ உதவி, காவல்துறை உதவி, உளவியல்-சமூக ஆதரவு/ஆலோசனை, சட்ட உதவி/ஆலோசனை, தங்குமிடம் வீடியோ கான்பரன்சிங் வசதி, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசரகால உதவி மற்றும் மீட்பு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 48 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம் மற்றும் கூடுதலாக 10 மையங்கள் திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருப்பூர், மதுரை, சேலம், தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் செயல்பட்டு வருகின்றன. 1,00,869 வழக்குகள் செப்டம்பர் 2024 தீர்வு செய்யப்பட்டு சேவைகள் வழங்கப் பட்டுள்ளது.

சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

2024-2025 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், 3766 பயனாளிகளுக்கு ரூ.2.08 கோடி செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், நாடு முழுவதும் உள்ள பெண் குழந்தைகளுக்கான அனைத்து நலத் திட்டங்களுக்கும் முன்னோடியாக உள்ளது. இந்த புதுமையான திட்டம் பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிப்பது, குழந்தைத் திருமணங்களை தடுப்பது மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2001 ஆம் ஆண்டில் பெண் குழந்தைகளுக்கு அதிக பணப்பலன்களை வழங்குவதற்காக இந்தத் திட்டம் மேலும் மறுசீரமைக்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்களான, பெண் சிசுக்கொலையை தடுத்தல், குழந்தை திருமணங்களை தடுத்தல், பெண் கல்வியை மேம்படுத்துதல், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை மாற்றுதல், சிறு குடும்ப முறையை ஊக்குவித்தல், குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல்

2023-2024 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 92.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024-2025 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 92.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.83.45 கோடி செலவில் 33,359 பெண் குழந்தைகளும், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.89.18 கோடி செலவில் 35,674 பெண் குழந்தைகளும், 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.92.00 கோடி செலவில் 36,800 பெண் குழந்தைகளும், 2024-2025 ஆம் நிதியாண்டில் ரூ.47.14 கோடி செலவில் 18,841 பெண் குழந்தைகளும் பயனடைந்துள்ளனர்.

2021-2022 ஆண்டில் 30,114 பெண் குழந்தைகளுக்கு ரூ.90.18 கோடியும், 2022-2023 ஆண்டில் 66,383 பெண் குழந்தைகளுக்கு ரூ.146.39 கோடியும், 2023-2024 ஆண்டில் 72,160 பெண் குழந்தைகளுக்கு ரூ.165.93 கோடியும், 2024-2025 நிதியாண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் 2024 வரை 35,702 பெண் குழந்தைகளுக்கு ரூ.160.05 கோடி முதிர்வு தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம்-2006

குழந்தை திருமண தடைச்சட்டமானது 2006-ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தை திருமணத்தை தடைசெய்யவும், திருமணத்தால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவும், மறுவாழ்வு அளித்திடவும், குழந்தை திருமணத்தை தூண்டுபவர்கள், ஊக்குவிப்பவர்கள் (ம) நடத்துபவர்களுக்கு கடுமையான தண்டனைகளை உறுதி செய்யவும் உகந்த வழிவகைகளை கொண்டிருக்கிறது. குழந்தை திருமணங்களை அறவே ஒழித்திட, தமிழ்நாடு குழந்தை திருமண தடுப்பு விதிகள், 2009, மாநில அரசால் உருவாக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பு 30.12.2009இல் வெளியிடப்பட்டது.

குழந்தை திருமணங்களால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் இலவச உதவி எண்கள் ஆகியவற்றை உணர்த்திடும் வகையான சுவரொட்டிகள் அச்சடித்து அனைத்து களப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு, பொது கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் காட்சிப்படுத்தி குழந்தை திருமணங்களை ஒழித்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில ஆதார மையத்தின் உதவியுடன் "இளந்தென்றல் பெட்டகம்" என்ற 23 வகையான பயிற்சி கையேடுகளை உள்ளூர் மொழியிலும் குழந்தை திருமணங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் அடங்கிய 4 குறும்படங்கள் தயாரித்தும் குழந்தை திருமணம் தடுப்பு சார்ந்த அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பாலினம் சார்ந்த வன்முறை, குழந்தை திருமணங்கள் ஆகியவை குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை தடுப்பதற்கான நிலையான வழிகாட்டி செயல்முறைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

குழந்தை திருமணத்தின் பாதிப்புகள், குழந்தை திருமண தடைச் சட்டம்-2006, குழந்தைகள் உதவி எண் ஆகியன குறித்து, குழந்தை திருமணங்கள் அதிகமாக நடைபெறும் வட்டாரங்களில் களப்பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த சேவை மையங்கள் வாயிலாகவும், குழந்தை திருமணத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன் நேரடியாக களத்திற்கு சென்று குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்படுகிறது.

பல்வேறு கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு ஏற்படுத்தப்பட்டு, கூட்டங்கள் நடத்தப்பட்டு, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் குற்றங்களை களைய, தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், 1,178 பெண் குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/- வீதம், மூன்று மாதகால தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது.

சமூக வலைதளத்தில் ஒரு பிரிவாக இத்துறையின் மூலம் "தமிழ் மகளிர் குரல் - சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என்னும் தனிவலையொளி உருவாக்கப்பட்டு, விழிப்புணர்வு குறும்படங்கள், பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2021 ஜனவரி முதல் ஜனவரி 2025 வரை 9,215 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

முதியோர் நலன்

முதியோர் இல்லங்கள் (Old Age Home)

ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் 40 முதியோர்கள் தங்கி பயனடையும் வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியம் ரூ.300-லிருந்து ரூ.1,200 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மாநிலத்தில் 23 முதியோர் இல்லங்கள் மூலம் 773 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கென 2024-25ம் நிதியாண்டில் ரூ.117.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.110.88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கான ஒருங்கிணைந்த வளாகங்கள் (Integrated Complex)

மாநில அரசின் மானியம் 75:25 (அரசு: தொண்டு நிறுவனம்) என்ற விகிதத்தில் ஒருங்கிணைந்த வளாகங்கள் 44 செயல்பட்டு வருகிறது. அதில் 1,915 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். ஆண்டுக்கு ரூ.662.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2021 – 2022 ஆம் ஆண்டில் 989 முதியோர்களும், 959 குழந்தைகளும் என 1,948 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2022 – 2023 ஆம் ஆண்டில் 1,032 முதியோர்களும், 901 குழந்தைகளும் என 1,933 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2023 – 2024 ஆம் ஆண்டில் 1,033 முதியோர்களும், 882 குழந்தைகளும் என 1,915 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

2024 – 2025 ஆம் ஆண்டில் 1,007 முதியோர்களும், 847 குழந்தைகளும் என 1,854 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். ஒன்றிய அரசு மானியம் பெறும் ஒருங்கிணைந்த மூத்த குடிமக்கள் திட்டத்தின்கீழ் 66 இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. அதில் 3,060 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். மேலும், தனியார் நிறுவனத்தால் 450 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது.

முதியோர்களுக்கான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்

முதியோர்களுக்கான கொடுஞ்செயல் எதிர்ப்புத் தினம் ஜூன் 15 அனுசரிக்க மாநில மற்றும் மாவட்டங்களில் முதியோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரூ.17 இலட்சம் செலவில் முதியோர் வன் கொடுமை குறித்த விழிப்புணர்வுகள் நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் தினம் அக்டோபர் 1

சர்வதேச முதியோர் தினம் அக்டோபர் 1 அன்று மாநில மற்றும் மாவட்டங்களில் ரூ. 20.67 இலட்சம் செலவில் முதியோர்கள் சிறப்பாக கவுரவிக்கப்பட்டனர்.

"மாநில மூத்த குடிமக்கள் கொள்கை-2023"

"மாநில மூத்த குடிமக்கள் கொள்கை-2023" மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் 27.09.2023 அன்று வெளியிடப்பட்டது.

மூத்த குடிமக்களுக்கான தேசிய செயல்திட்டம் (NAPSrC)

ஒன்றிய அரசின் நிதி உதவி பெறும் திட்டமான மூத்த குடிமக்கள் நலனுக்கான தேசிய செயல் திட்டத்தினை செயல்படுத்த 2019-2020ம் ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.1,18,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மூத்த குடிமக்களுக்கான தரவு தளத்தை உருவாக்குதல்

பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

மூத்த குடிமக்களுக்கான கைபேசி செயலி உருவாக்குதல்,

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் 27.09.2023 அன்று கைபேசி செயலி தொடங்கப்பெற்றது.

மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம்.

மூன்று வகையான போஸ்டர்ஸ் (Posters) 6,000 Posters அச்சிட்டு மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது.

திறன் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

38 மாவட்டங்களுக்கும் பணம் பிரித்து வழங்கப்பட்டு, MWPSC Act தொடர்பாக, மாவட்ட சமூக நல அலுவலர்களால் ஒரு நாள் பயிற்சி பட்டறை சுகாதார அலுவலர்கள், தீயணைப்பு துறை அதிகாரிகள், மாவட்ட அளவிலான மூத்த குழு உறுப்பினர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு துறையில் தனியார் பங்குதாரர்கள் ஆகியோர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. மாநில அளவில் அனைத்து RDO's Online பயிற்சி நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லி மலையில் நடமாடும் மருத்துவப் பிரிவு

இந்த Mobile Medicare Unit (MMU) என்பது இந்தியாவில் வறுமையில் வாழும் பின்தங்கிய முதியவர்களுக்கு இலவச சுகாதாரப் பாதுகாப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்துகளை வழங்குதல். நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையின் கிராமப் புறங்களில் உள்ள தொலைதூர கிராமங்களில் வசிக்கும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் சுகாதார சேவைகளை வீட்டு வாசலில் அவர்கள் வசிக்கும் இடங்களில் கொண்டு செல்லும் திட்டமாகும். கொல்லி மலையில் 14.03.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

முதியோர் இல்லங்களைப் பதிவுசெய்தல்

முதியோர் இல்லங்களை பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை இணைய வழியாக மேற்கொள்ள வலைதள முகப்பு (www.seniorcitizenhomes.tnsocialwelfare.tn.gov.in) உருவாக்கி மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் 13.09.2024 அன்று தொடங்கப்பெற்றது.

மூத்த குடிமக்களுக்கான மாநில செயல்திட்டத்திற்கான 15,39,500/- ஒதுக்கீடு செய்யப்பட்டு முதியோர்களுக்கான கண் அறுவை சிகிச்சை செய்ய மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாணை எண்.(ப) எண்.115, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சநக(1) துறை, நாள். 16.07.2024ன்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மகளிர் குறுகிய காலத் தங்குமிடம் (சக்தி சதன்)

இக்கட்டான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு மகளிர் குறுகிய கால தங்கும் இல்லங்கள் (சக்தி சதன்) என்ற திட்டம் சமூக நலத் துறையின் மூலம் ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப் படுகிறது.

இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசால் 60:40 (ஒன்றிய அரசு : மாநில அரசு) என்ற வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உணவு, உடை, தங்குமிடம், ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வில்லங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து வகையான பெண்களும் தங்க அனுமதிக்கலாம். 55 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்வில்லங்களில் 60 வயது வரை தங்க வைக்கப்பட்டு, பின்னர் தேவைப்படின் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவர்.

ஒரு மகளிர் குறுகிய கால தங்கும் இல்லத்தில் (சக்தி சதன்) 50 பெண்கள் தங்கும் வகையில் தமிழ்நாட்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் 36 மகளிர் குறுகிய கால தங்கும் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் மானியம் பெற்று தொண்டு நிறுவனங்களால்நடத்தப் பெறும் மகளிர் குறுகிய கால தங்கும் இல்லங்களில், 2021-2022 ஆம் ஆண்டில், ரூ.4,85,09,374 மதிப்பில் 1,046 பயனாளிகளும், 2022-2023 ஆம் ஆண்டில், ரூ. 11,67,32,400 மதிப்பில் 1,129 பயனாளிகளும், 2023-2024 ஆம் ஆண்டில், ரூ. 6,18,00,600 மதிப்பில் 1,281 பயனாளிகளும் பயன் பெற்றனர்.

2024 - 2025 ஆம் ஆண்டில், ரூ. 8,41,50,000 மதிப்பில் 1,520 பயனாளிகள் பயன் பெற்றனர்.

2024-2025 ஆம் ஆண்டின் அறிவிப்பு

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களால் அனைத்து முதியோர் இல்லங்கள், மகளிர் விடுதிகள் பதிவு மற்றும் உரிமம் பெறும் நடைமுறையில் எளிய ஆளுமை (Simple Governance) திட்டம் மூலம் எளிதாக்கப்படும்.

ஆதரவற்ற முதியோர் நலனுக்காக 7 சுற்றுலா தலங்களில் உள்ள 6 முதியோர் இல்லங்களில், சிறப்பு தங்கும் வசதிகள் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதியோர் ஆரோக்கியத்துடன், சுறுசுறுப்பாக வாழ, மாநில அரசு மானியம் பெறும் 23 முதியோர் இல்லங்கள் மற்றும் 44 ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள 2,020 முதியோர் பயனடையும் வகையில் 40.20 இலட்சம் ரூபாய் மதிப்பில், யோகா, மூச்சுப் பயிற்சி, தியானப் பயிற்சி போன்றவை தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் துறை

முதன்மை அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களில் 25 சதவீத பணியிடங்களை விதவைகள்/கணவனால் கைவிடப்பட்டோரை கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் பணியிடங்கள் முறையே நியமனம் செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகள் மைய உதவியாளர்களுக்கு ஓய்வு பெறும் வயது 58 வயதிலிருந்து 60 வயது ஆக உயர்த்தி 01.12.2021 முதல் ஆணையிடப்பட்டுள்ளது.

5 வருடம் பணி முடித்த குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு அங்கன்வாடி பணியாளராக பதவி உயர்வு வழங்கிட அரசாணை பெறப்பட்டுள்ளது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ரூ.2,31,53,400/- (60%) மற்றும் மாநில அரசால் ரூ. 1,54,35,600/- (40%) ஆக மொத்தம் ரூ.3,85,89,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 53,359 அங்கன்வாடி ஊழியர்கள் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்திலும், 60,828 அங்கன்வாடி ஊழியர்கள் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்திலும் பயனடைந்து வருகிறார்கள்.

குழந்தை மையங்களில் பணிபுரிந்து வருகையில் பணியிடையே காலமான குறு அங்கன்வாடிப் பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர்களின் தகுதி வாய்ந்த பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அங்கன்வாடிப் பணியாளராக பணிநியமனம் செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2021 முதல் 10 வருடம் பணி முடித்து 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற தகுதியான 3,369 அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் 5 வருடம் பணி முடித்த 3,660 குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு அங்கன்வாடி பணியாளர்களாக பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.

2022 -2023 நிதியாண்டில் ரூ.8.44 கோடி 60:40 முறையில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு 84,462 அங்கன்வாடி ஊழியர்களுக்கு 1,68,924 (84462 x 2) சீருடை சேலைகள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்பட்டுள்ளது.

2023 - 2024 நிதியாண்டில் ரூ. 8.16 கோடி 60:40 முறையில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு 81,648 அங்கன்வாடி ஊழியர்களுக்கு 1,63,296 (81648 x 2) சீருடை சேலைகள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 நிதியாண்டில் ரூ.8.16 கோடி 60:40 முறையில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு வட்டாரத்தில் சீருடை சேலைகள் மற்றும் மேலங்கிகள் (over coat) விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குழந்தைகளுக்கு BIS தரத்திலான சத்துமாவு வழங்குதல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் பயனாளிகளில் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த தமிழக அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இரண்டு வெவ்வேறு கலவைகளில் ஒன்று 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், மற்றொரு கலவை பாலூட்டும் தாய்மார்கள் / கர்ப்பிணி பெண்களுக்கு ஒரு வருடத்தில் 300 நாள்களுக்கு ஜனவரி 2023 முதல் அங்கன்வாடி மையங்கள் மூலம் சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது 6 மாதம் முதல் 6 வயது வரையிலான 21,25,749 குழந்தைகளுக்கும், 2,90,809 கர்ப்பிணி பெண்கள் மற்றும் 2,73,321 பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது. BIS 11536:2022 தரத்திலான சத்துமாவு குழந்தைகளுக்கு வழங்கப்படுவது, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. மேலும் 2 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவில் ஏலக்காய் மற்றும் வெண்ணிலா சுவை சேர்க்கப்படுகிறது.

மேலும், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள சுமார் 58,897 குழந்தைகளின் கூடுதல் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்ய ஏதுவாக சத்துமாவுடன் செறிவூட்டப்பட்ட பிஸ்கெட்டு ஜூன் 2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

வளரிளம் பெண்களுக்கான திட்டம்

முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலுள்ள குழந்தைகள் மையங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள 14 முதல் 18 வயதுக்குட்பட்ட 45,692 வளரிளம் பெண்களுக்கு வளரிளம் பெண்களுக்கான திட்டத்தின் கீழ் சத்துமாவு வருடத்திற்கு 300 நாள்களுக்கு வீட்டிற்கே எடுத்துச் சென்று உண்ணும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் டிசம்பர் 2023 மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அங்கன்வாடி குழந்தைகளுக்கு சூடான சமைத்த மதிய உணவு வழங்குவதற்கான உணவூட்டு செலவினம் உயர்த்தி வழங்குதல்.

குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பெறும் 2 முதல் 6 வயதுடைய குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் சூடான சமைத்த மதிய உணவு வழங்கப்படுகிறது.

இந்த சூடான மதிய உணவு வழங்குவதற்காக காய்கறி உப்பு, தாளிதப் பொருள்கள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட தினசரி உணவூட்டுச் செலவினம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் 04.11.2019இல், பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.1.24 உணவூட்டுச் செலவினம் உயர்த்தி வழங்கப்பட்டிருந்தது.

தற்போதுள்ள காய்கறி, தாளிதப் பொருள்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பயனாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டுச் செலவினம் 23.01.2024 முதல் ரூ.2.39 என அரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 10,91,197 குழந்தைகள் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடமும் ரூ.41.14 கோடி அரசால் கூடுதலாக செலவிடப்படுகிறது.

1 முதல் 2 வயதுடைய குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்குதல்

குழந்தைகள் மையங்களில் பதிவுசெய்துள்ள 1 முதல் 2 வயதுடைய மிகவும் சிறிய குழந்தைகளுக்கு கூடுதலான ஊட்டச்சத்து அளிக்கும் நோக்கத்தில் 15.07.2007 முதல் வாரத்திற்கு ஒரு முட்டை வழங்கப்பட்டு வந்தது.

தற்போது, குழந்தைகளுக்கு கூடுதலான புரதச்சத்து அளித்து அவர்களின் மன மற்றும் உடல் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் நவம்பர் 2022 முதல் அந்த எண்ணிக்கையானது வாரத்திற்கு மூன்று முட்டைகள் என உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

1 முதல் 2 வயதுடைய சுமார் 6.94,630 குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ரூ.64.06 கோடி ஒவ்வொரு வருடமும் அரசால் செலவிடப்பட்டு வருகிறது.

ரூ.7.76 கோடி செலவில் 7,757 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.10,000/- வீதத்தில் மின்வசதி ஏற்படுத்தப்பட்டது. 2024-2025 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி செலவில் 669 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.15,000/- வீதத்தில் மின்வசதி ஏற்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

கிராமப்புற, நகர்ப்புற மற்றும் பெருநகர பகுதிகளில் வாடகை கட்டடங்களில் செயல்படும் 7,827 குழந்தைகள் மையங்களின் வாடகையினை உயர்த்தி அதற்காக ரூ.53.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் அரசு சொந்த கட்டடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகையாக தலா ரூ.3,000/- வீதம் ரூ.38.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,26,850 அங்கன்வாடி மைய பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் அரசு சொந்த கட்டடங்களில் செயல்படும் 2,884 குழந்தைகள் மையங்களுக்கு சிறிய பழுது நீக்க பணிகளுக்கான தொகையாக தலா ரூ.40,000/- வீதம் ரூ.11.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.86.76 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான 30,41,629 குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் ரூ.32.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 486 குழந்தைகள் நல மையங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டாரத்தில் 122 குழந்தைகள் நல மையங்களில் பயனடைந்து வரும் 9,088 முன்பருவ குழந்தைகளுக்கு ரூ.80.38 இலட்சம் மதிப்பீட்டில் முன்பருவ கல்வி குழந்தைகளுக்கு 2 ஜோடி ஸ்வெட்டர், 2 தொப்பிகள், 2 ஜோடி காலுறைகள் (சாக்ஸ்) மற்றும் 608 அங்கன்வாடி மையங்களுக்கு பாய்கள் வழங்கப்பட்டு அதன்மூலம் குழந்தைகளின் வருகையை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 6,390 மையங்களில் காய்கறி தோட்டம் அமைத்தல், எல்.இ.டி. டிவி, மழைநீர் வடிகால் அமைப்பு, குடிநீர் வடிகட்டி / நீர் சுத்திகரிப்பான், மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ரூ. 62.49 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு சீர்மிகு குழந்தைகள் மையங்களாக (சாக்க்ஷம் அங்கன்வாடி) தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.123.86 கோடி செலவில் 54,449 குழந்தைகள் மையங்களுக்கும் முன்பருவக் கல்வி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இளம்சிறார் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு உணவூட்டும் முறைகளை மேம்படுத்தி ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைப்பதற்கு, அங்கன்வாடி மையங்களில் பயன்பெறும் 0-2 வயதுடைய குழந்தைகளின் பெற்றோர் மற்றும் குழந்தைகளை பேணுவோருக்கு, சுயமதிப்பீட்டுத் தாள்கள் வடிவமைக்கப்பட்டு 8,35,246 எண்ணிக்கையிலான சுயமதிப்பீட்டுத் தாள்கள் ரூ. 1,29,63,853/- செலவில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

2021-2022ம் ஆண்டிற்கு, 3,77,050 எண்ணிக்கைகள் முன்பருவக் கல்வி ஆய்வுத் தாள் அட்டைகள், 4,91,947 எண்ணிக்கைகள் செயல்பாட்டுப் புத்தகங்கள் (2-3, 3-4 (ம) 4-5 வயதிற்கானது), 1,14,170 எண்ணிக்கைகள் முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ்கள், 4,13,458 எண்ணிக்கைகள் குழந்தை விவரத் தொகுப்பு புத்தகங்கள் மற்றும் 9,79,902 எண்ணிக்கைகள் விளையாட்டின் மூலம் கற்றல் புத்தகம் 0-3 வயதுடைய குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பேணுவோருக்கு ரூ.2,93,15,076/- செலவில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024ம் ஆண்டிற்கு ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்ற தலைப்பின் கீழ், 7,16,945 எண்ணிக்கைகள் முன்பருவக் கல்வி ஆய்வு தாள் அட்டை, 8,53,658 எண்ணிக்கைகள் செயல்பாட்டுப் புத்தகங்கள் (2-3, 3-4 (ம) 4-5 வயதிற்கானது), 1,91,387 எண்ணிக்கைகள் முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ்கள், ரூ.1,87,23,514/- செலவில் ஜெம் போர்டல் மூலம் அச்சிட்டு வழங்குவதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

களப்பணியாளர்களுக்கான பயிற்சி

2023-2024ம் ஆண்டிற்கு ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு தொடர்பான பயிற்சி (முதற்கட்டம்) ரூ.25.16 இலட்சம் செலவில் 37 குழுக்களாக 1,480 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2024-2025ம் ஆண்டிற்கு ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு தொடர்பான பயிற்சி ரூ.47.60 இலட்சம் செலவில் 70 குழுக்களாக 2,800 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் குறித்து 3,800 வளரிளம் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட ரூ.47.50 இலட்சம் செலவில் விழிப்புணர்வு முகாம்" அனைத்து மாவட்டங்களில் தலா 100 வளர்இளம் பெண்கள் வீதம் 2 பயிற்சி பிரிவு என பகிர்ந்தளிக்கப்பட்டு 3,800 வளரிளம் பெண்களுக்கு 76 விழிப்புணர்வு பயிற்சி முகாம் (ஒரு நாள் பயிற்சி) நடத்திட ரூ.47.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் இரத்தசோகை விழிப்புணர்வு, தன்சுத்தம் மற்றும் BMI மற்றும் HB நிலை ஊட்டச்சத்து மதிப்பீடு அறிதல், ARSH (இளம்வயது இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கியம்), குழந்தை திருமண தடைச் சட்டம், குழந்தைகள் உதவி எண் மற்றும் பெண்கள் உதவி எண் வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து அவசியம், உயர்கல்வி தொழில்

ஆலோசனை, மாதவிடாய் சுழற்சி மற்றும் சுய பராமரிப்பை பராமரிக்க செயலி போன்றவற்றை குறித்து துறை சார்ந்த வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வளரிளம் பெண்கள் Focused Block Development Programme வட்டாரங்களில், தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி நடத்தப்பட்டது.

"பச்சிளம் குழந்தைகளுக்கு சத்தான உணவு ஊட்டுதல் முக்கியத்துவம் குறித்து பாலூட்டும் தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, ரூ. 50 இலட்சம் மதிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 2,500 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிலரங்கம் (workshop)" அனைத்து மாவட்டங்களில் 2,500 அங்கன்வாடி பணியாளர்களுக்கு பயிலரங்கம் நடத்திட ரூ.50 இலட்சம் (நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 2,500 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிலரங்கம் நடத்தப்பட்டது.

ஊட்டச்சத்தை உறுதி செய்

ரூ.22.20 கோடி நிதி பொருட் செலவில், 0- 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.11.2024 அன்று அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் இரண்டாம் கட்ட நிகழ்வை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ராஷ்டிரிய பால் ஸ்வஸ்திய கார்யகிரம் (RBSK) மருத்துவர்கள் மூலம் குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு அரசு ஊட்டச்சத்து மறுவாழ்வு மையங்கள் மற்றும் மாவட்ட ஆரம்ப கால இடையீட்டு மையங்கள் மூலம் தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சி குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு பிறந்த 6 மாதங்களிலேயே மருத்துவ உதவி மற்றும் ஊட்டச்சத்து இணைந்து கிடைக்கப்பெறுகிறது.

இந்த "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 40,249 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பொருள்கள் அடங்கிய பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் நிலை

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்துறை சார்பாக 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு வளர்ச்சி கண்காணிப்பு (எடை மற்றும் உயரம் கண்காணித்தல்)முகாம் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்து குழந்தைகளையும் வளர்ச்சி கண்காணிப்பு மூலமாக அவர்களின் ஊட்டச்சத்து நிலையை கண்டறிவதற்காக பிரத்தேயகமாக இத்திட்டம் செயல்படுத்தபட்டது.

இத்திட்டத்தில் 6 வயதிற்குட்பட்ட 37,79,407 குழந்தைகளின் எடை மற்றும் வளர்ச்சியினை கண்காணிப்பு செய்ததில் 9,30,610 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுயுடையவர்கள் என கண்டறியப்பட்டது.



ஊட்டச்சத்து இடையீறு வழங்குதல்

43,200 குழந்தைகளுக்கு உயர் சிகிச்சைக்காக மாவட்ட "தொடக்கநிலை" இடையீட்டு சேவை மையம் (District Early Intervention Centre- DEIC) பரிந்துரைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கபட்டு முன்னேறியுள்ளனர்.

பிறந்தது முதல் 6 மாதம் வரையுள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள தீவிர ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 93,200 குழந்தைகளுக்கு ரூ.18.68 கோடி செலவில் சிறப்பு ஊட்டச்சத்து உணவு (RUTF) வழங்கப்பட்டது.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய (0-6 மாத) குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட சேவைகளினால் 0-6 மாத குழந்தைகளில் 74.1% குழந்தைகள் இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளனர்.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 6 மாதம் முதல் 6 வயது வரை குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட சேவைகளினால் 45.31% குழந்தைகள் இயல்பு நிலைக்கும் 32% குழந்தைகள் மிதமான நிலைக்கும் முன்னேறியுள்ளனர்.

ஊட்டச்சத்து பெட்டகமானது 0-6 வயதிற்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள 26,215 குழந்தைகளின் தாய்மார்களுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்களும், மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 50,490 குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஒரு ஊட்டச்சத்து பெட்டகம் வீதம் மொத்தம் 1,02,920 ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இதுவரையிலும் 61,693 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு அவர்கள் தொடர்ந்து அங்கன்வாடி ஊழியர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஜனவரி 2025 மாத நிலவரப்படி 57.9% சதவீதம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு நிலையில் இருந்து இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளனர். மீதம் 42.1% சதவீதம் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை முன்னேற்றிட தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட பயனாளிகளான கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளின் சேவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முறையாக அவை பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்யவும் கருத்துகளைப் பெறுவதற்கும், கல்வி அளிப்பதற்கும் ஒரு பயனாளி சேவை மையம் ரூ.1.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, செயலியுடன் இணைக்கப்பட்ட எடை, உயரம் அளவீட்டு 1,000 ICT அடிப்படையிலான ஸ்மார்ட் எடை கருவிகள் 434 வட்டாரங்களுக்கு ரூ.84.49 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

மாநில முன்னெடுப்புத் திட்டமாக, TN-ICDS என்ற புதிய செயலி தமிழ்நாடு மிண்ணணு ஆளுமை நிறுவனம் ஒருங்கிணைப்புடன் உருவாக்கப்பட்டு முதற்கட்டமாக, சுகாதார துறையின் PICME செயலியில் பதிவேற்றம் செய்யப்படும். தமிழ்நாட்டில் பிறக்கும் அனைத்து குழந்தைகளும் TN-ICDS செயலிக்கு கொணர்ந்து அவர்களின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படும். அனைத்து அங்கன்வாடி சேவைகளையும் இச்செயலியில் இணைக்கப்பட்டு நிகழ்நேர கண்காணிப்பு மூலம் தகவல் பரிமாற்றம் செய்ய நடவடிக்கையில் உள்ளது.

மின்சார இரயில் வண்டியில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் விளம்பரம் தென்னக இரயில் நிர்வாகத்திடம் 9 பெட்டிகள் கொண்ட இரயில் தொடரை ஒரு வருடத்திற்கு ரூ.25 இலட்சத்திற்கு வாடகைக்கு எடுத்து இரயில் பெட்டிகளில் ஒட்ட வேண்டிய விளம்பர பதாகைகள் தயார் செய்யவும் அதனை சார்ந்த செலவினங்களுக்கு ரூ. 6.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

குழந்தைகளிடையே ஏற்படும் இரத்தசோகை தவிர்த்திட மிக எளிமையான வழிமுறை கைகழுவுதல் ஆகும். கைகளை சுத்தமாக வைத்திருத்தல், நகங்களை வளர விடாமல் தன்

சுத்தம் பேணுதல் போன்ற நற்பழக்கங்களை குழந்தைகள் மற்றும் பெற்றோர்களிடையே ஏற்படுத்த 20 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் கைகழுவுதல் மற்றும் தன் சுத்தம் குறித்த விழிப்புணர்வினை நடமாடும் ஊர்திகள், தெருமுறை விழிப்புணர்வு நாடகங்கள், பொம்மலாட்டம், குறும்படங்கள் போன்ற தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்த ரூ.4.75 கோடி நிதி ஒதுக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையங்கள் மூலம் பயன்பெறும் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் விவரங்களை பதியவும், அவர்களின் ஊட்டச்சத்து வளர்ச்சியினை நிகழ்நேர கண்காணிப்பதற்காவும் 6,640 அங்கன்வாடி பணியாளர்களுக்கு திறன்கைபேசிகள் ரூ.5.08 கோடி செலவீனத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையங்கள் மூலம் பயன்பெறும் பிறந்த சில நாள்களே ஆன குழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer) 18,573 மையங்களுக்கும், குழந்தைகள் (ம) பெண்களின் உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer) 40,241 மையங்களுக்கும், தாய் மற்றும் குழந்தையை எடை எடுக்கும் கருவி, (Mother & Child Digital Weighing Scale) 41,789 மையங்களுக்கும், மற்றும் குழந்தைகளின் எடையை அளவிடும் கருவி (Infant Weighing Scale) 18,573 மையங்களுக்கும், என மொத்தம் ரூ. 25.63 கோடி செலவீனத்தில் வளர்ச்சி கண்காணிக்கும் கருவிகள் குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை பின்வருபவர்களுக்கான சேவைகளை வழங்குகிறது:-

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள்

ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர்

ஒழுக்க நெறிபிறழ்தல் தடுப்பு சட்டம், 1956-ன் கீழ் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிர்

கடத்தப்பட்டு வணிகரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் மகளிர் மற்றும் குழந்தைகள்

போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள்

கொரோனா நோய் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகள்

பாலியல் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்

வழங்கப்படும் சேவைகள்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகள், ஒழுக்க நெறிபிறழ்தல் சட்டம்,1956-ன் கீழ் மீட்கப்பட்ட பாதிப்புக்கு உள்ளான மகளிர் மற்றும் சிறுமியர்,, பாலியல் அபாயத்தை எதிர்நோக்கும் பெண்குழந்தைகள் மற்றும் மகளிர் ஆகிய அனைவரையும் மீட்டு அவர்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம் முதலானவற்றை வழங்குதல்.

இலக்கின் வரையறைக்குள் வரும் அனைத்து நபர்களுக்கும் அவரவர் தேவைக்கேற்றபடி முறைசார் மற்றும் முறைசாராக்கல்வி வழங்குதல். யோகாசனப் பயிற்சிகுழு மற்றும் தியானப் பயிற்சி மற்றும் தனிநபர் ஆற்றுப்படுத்துதல் மற்றும் பெற்றோர்களுக்கான ஆலோசனை போன்ற சமூக உளவியல் சேவைகளை வழங்குதல்

வாழ்க்கைத்திறன் மற்றும் நவீன தொழிற்திறன் பயிற்சியளித்தல் மூலம் மறுவாழ்விற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

இல்லத்தில் இருந்து வீடேறும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு நிதியுதவி வழங்குதல்.தொழிற்பயிற்சியின் வாயிலாக தேவையான வருமானத்தை ஈட்டுவதற்கான வழிவகைச் செய்தல் மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் ஆகிய இனங்களில் தொடர் நடவடிக்கை எடுத்தல்.

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சட்ட உதவி மற்றும் இழப்பீடு வழங்குதல்.

கொரோனா நோய் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கான நிவாரண நிதி மற்றும் பராமரிப்பு மானியம் வழங்குதல்.

கொரோனா நோய் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கான நிவாரண நிதி மற்றும் பராமரிப்பு மானியம் வழங்குதல்.

போதை மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

குழந்தை உதவி எண்(1098) சேவைகள் வழங்குதல்.

தொட்டில் குழந்தை திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

இரவல் பெறுவோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள்.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையால் நடைமுறைப்படுத்தப்படும்/ நிர்வகிக்கப்படும் / செயல்படுத்தப்படும் சட்டங்கள்

இளைஞர் நீதிச் சட்டம்(குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) 2015.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012.

ஒழுக்க நெறி பிறழ்தல் தடுப்பு சட்டம் 1956.

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005.

கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, கொரோனா நோய் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த 402 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.20.10 கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை குழந்தைகளுக்கு அவர்தம்18 வயது நிறைவு செய்யும்போது வட்டியுடன் வழங்கப்படும்.

கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 15,364 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3.00 இலட்சம் வீதம் ரூ.460.92 கோடி மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளின் 9 குழந்தைகளுக்கு தலா ரூ.3.00 இலட்சம் வீதம் ரூ.0.27 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 368 குழந்தைகளுக்கு மாத பராமரிப்பு தொகையாக ரூ.3,000/- வீதம் ரூ.3.60 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012-இன் கீழ், "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு நிதி" அரசால் உருவாக்கப்பட்டு, பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட 5407 குழந்தைகளுக்கு ரூ.80.87 கோடி இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012-யை திறம்பட செயல்படுத்த, சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையத்தின் (Integrated Training Centre for Social Empowerment) மூலம் மண்டல அளவிலான ஐந்து இடங்களிலும் மற்றும் மாநில அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டங்களையும் நடத்தப்பட்டு ஒவ்வொரு காரணிக்கும் தொடர்புடைய துறைகளின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளது. மேலும் குழந்தை நலக் குழு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் மற்றும் ஆதரவு நபர்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் தயார் செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் 18 ஜூன் 2024 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து போக்ஸோ வழக்குகளுக்கான தரவுத்தளத்தை உருவாக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டு நிதி கண்காணிக்கப்படுகிறது.

குழந்தைகளை குடும்ப சூழலில் வைத்து பராமரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் ஆண்டில் 1,148 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000/- வீதம் ரூ.1..38 கோடி மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் 1,112 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000/- வீதம் ரூ.2..63 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் நிதியாண்டில் 1012 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000/- வீதம் ரூ.2.18 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம் 2021 இல் நிறுவப்பட்ட, பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன், உரிமை, மேம்பாடு மற்றும் அதிகார மளித்தல் குறித்து சமூகநலத்துறையைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்க இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஆத்தூரில், 27 கோடிரூபாய் செலவில், புதியகட்டடம் கட்டும் நடைபெற்று வருகிறது. சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம் மூலம் நாளது தேதி வரை 110 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 6580 பங்கேற்பாளர்கள் பயன் பெற்றுள்ளனர். இம்மையத்திற்காக ஆத்தூரில், 27 கோடி ரூபாய் செலவில், புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 10.03.2025 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாற்றத்தின் முகவர்களான வளரிளம் பருவத்தினர் தமிழகத்தின் ஒவ்வொருமாவட்டத்திலும் உருவாக்கப்பட்டு, திறனளிக்கப்பட்டு, குழந்தைகள் பாதுகாப்பு குறித்த செய்திகளை எடுத்துச் செல்ல உரிய பயிற்சியாளர்களாக உருவாக்கப்பட்டு, குழந்தைகள் பாலியல் துன்புறுதல் நிகழும் சூழ்நிலைகளில் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற நடத்தை குறித்த அமர்வுகளில் கலந்து கொண்டனர். 2022 ஆம் ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் 205 வளரிளம் சாம்பியன்கள் (Adolescent champions) உருவாக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.11.2021 அன்று வெளியிடப்பட்டது.

மது (ம) போதை பழக்கத்திற்கு ஆளான சிறார்களை இப்பழக்கத்திலிருந்து விடுவித்து சிகிச்சை அளிப்பதற்கு 15 படுக்கை வசதி கொண்ட குழந்தைகள் மறுவாழ்வுக்கான பிரேத்யேக போதை மையங்கள் சென்னை மற்றும் திருநெல்வேலியில் ரூ.21.54 இலட்சம் மதிப்பீட்டிலும் மேலும், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டத்தில் ரூ.68.87 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 13 மையங்கள் உள்ளன.



தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் 34 இளைஞர் நீதிகுழுமங்கள் (புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தென்காசி மாவட்ட இளைஞர் நீதிக்குழுமம் உட்பட) அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், இளைஞர் நீதி குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழும்ங்கள் ஆகியவற்றை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கப்பட்டு, 6 புதிய மாவட்டங்களிலும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, தென்காசி, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 6 மாவட்டங்களில் குழந்தை நலக் குழுவும் மயிலாடுதுறை, தென்காசி மாவட்டத்தில் இளைஞர் நீதி குழுமம் ஆகியவை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 4 கோடியே 79 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கடலூர் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் 1 கோடி ரூபாய் செலவில் முதல் தளம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆத்தூரில் "பாதுகாப்பு இடம்" புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.15.95 கோடி நிதி கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் 10.03.2025 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. .

சென்னை மாவட்டத்தில் ரூ.68.53 இலட்சம் செலவில் கூடுதலாக ஒரு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

குழந்தை பாதுகாப்பு தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (Child Protection Information Monitoring and Management System – CPIMMS) 10.09.2022 அன்று தொடங்கப்பட்ட, குழந்தைகள் காப்பகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நிகழ்நேர விவரங்களை உடனுக்குடன்பதிவு செய்கிறது.

குழந்தைகள் இல்லங்கள் அதிகளவில் உள்ள 6 மாவட்டங்களில் அவ்வில்லக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் குழந்தைகளின் திறன்கள் மற்றும் விருப்பங்களை கண்டறிந்து, அவர்களின் தொடர் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் பயிற்சி போன்றவற்றிற்கான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் அமைக்க ரூ.48.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வாழ்வியல் வழிகாட்டு மையங்கள் செயல்பட்டு வருகிறது.



மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெற்று பராமரிக்கும் அரசு பெண் பணியாளர் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாள்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது.தஞ்சாவூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு கூடுதல் பாதுகாப்பு வசதியுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.63,52,175/- நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, இந்நிலையில் சுற்றுச்சுவர் கட்டி முடிவடைந்துள்ளது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 34 அரசு குழந்தைகள் இல்லத்திற்கு திறன் பலகைகள் வழங்குவதற்கு ரூ.55.00 லட்சம் நிதி ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டு திறன் பலகைகள் கொள்முதல் செய்யப்பட்டு குழந்தைகளின் பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் செயல்படும் 12 வள மையங்களுக்கு 2023-24-ஆம் ஆண்டிற்கு ரூ.6,23,800/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம் மூலம் பல்நோக்கு சுகாதார பணியாளர் (ANM Training) பயிற்சியானது ஈராண்டு பயிற்சியாக வழங்கப்பட்டு, குழந்தைகள் இல்லத்தில் தங்கி கல்வி பயிலும் / பயின்ற பெண் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு மொத்தம் 63 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 2021-23 ஆம் ஆண்டு பயிற்சி பெற்ற 63 மாணவிகளில் 30 மாணவிகள் தனியார் மருத்துவமனையில் பணியில் சேர்ந்துள்ளனர்.

சென்னை இராயபுரம், மற்றும் தூத்துக்குடியில் உள்ள தட்டப்பாறை இல்லங்களில் புதிய கட்டடங்கள் கட்ட தலா ரூ.7 கோடி செலவில் அரசாணை பெறப்பட்டு இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்லத்தில் கட்டுமானம் தொடங்கி நடந்து வருகிறது. தட்டப்பாறை இல்லத்தில் கட்டடம் கட்ட பொது பணித்துறையினர் மூலமாக டென்டர் நடவடிக்கை இறுதி செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது,

குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் , மகளிர் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு நிபுணர்கள் / சேவை வழங்குநர்கள் வாயிலாக மனரீதியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு தேவையின் அடிப்படையில் உரிய பயிற்சிகள், தேவையின் அடிப்படையில் 1 கோடி செலவினத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 50 நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு 01.10.2024 முதல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.



அனைத்து அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் , அரசினர் சிறப்பு இல்லங்கள், மற்றும் பாதுகாப்பு இடங்களில் அனுமதிக்கப்படும் சிறார்களை ஆக்கப்பூர்வமான வகையில் ஈடுபடுத்தவும் மற்றும் அவர்களை மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாத வகையில் நல்வழிப்படத்தவும் அடிப்படை பயிற்சி (Basic Training Module) ரூ.2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு, முதற் கட்டமாக 5 அரசினர் கூர்நோக்கு இல்லங்கள், மற்றும் பாதுகாப்பு இல்லத்திற்கு ரூ.64.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படை பயிற்சி 01.09.2024 முதல் நடைபெற்று வருகிறது.

சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களில் உள்ள ஊட்டசத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக தாய்பால் வழங்குவதற்கு பால் வங்கியுடன் சிறப்பு நிறுவனங்களை இணைக்க அரசாணை பெறப்பட்டு, அனைத்து சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களும் தாய்பால் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைபிரசவத்தால், எடை குறைவு, ஊட்டசத்து குறைபாடு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு போன்றவற்றால் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களில் ஏற்படும் இறப்பு விகிதத்தை குறைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன் (TANSIM) உடன் இணைந்து ஸ்டார்ட்அப் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அரசாணைகள் வெளியிட்டு, 3 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மூலம் அரசினர் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, மொத்தம் 476 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்பில் பெற்றோர் இருவரையும் இழந்த 3 குழந்தைகளுக்கு தலா 5 லட்சம் வீதமும், பெற்றோர்களில் ஒருவரை இழந்த 35 குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் வீதமும் ஆக மொத்தம் ரூ.1,20 கோடி அக்குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்விற்காக அவர்களின் பெயர்களில் வைப்பீடு செய்வதற்கு ஏதுவாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்பில் பெற்றோர் இருவரையும் இழந்த 4 குழந்தைகளுக்கு அவர்களின் 18 வயது முடியும் வரை மாதம் ரூ.5000./வீதம் 151 மாதங்களுக்கு ரூ.7,55,000./-நிதி வழங்க அரசாணை பெறப்பட்டுள்ளது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இணைந்து நடத்திய நான் முதல்வன் கல்லூரிக்கனவு 2024 குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களிலிருந்து உயர்நிலை தேர்வு முடித்த குழந்தைகள் பங்கேற்றனர். இதன் மூலம் 123 மாணவ மாணவிகள் 2024-2025 கல்வியாண்டில் கல்லூரியில் இணைந்து கல்வி பயின்று வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அரசினர் மாணவர்களுக்கான சிறப்பு இல்ல மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்க்காக Dover India Pvt Ltd நிறுவனத்தின் சார்பாக ரூபாய் 20 இலட்சம் நிதி உதவியுடன் Our Shoulders Foundation சார்பாக பேக்கரி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சென்னை, அரசு கூர்நோக்கு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்ட சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துதல், மது மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுவித்தல், திறன் மேம்பாடு ஆகிய செயல்பாடுகள் மூலம் அவர்கள் மீண்டும் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடாமல் நல்வழிப்படுத்துவதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனமான PRISM மூலம், "பாதை" என்ற திட்டத்தைச் ரூ.40.00 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கு மாநில அளவிலான விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சி போட்டிகள் சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 11.02.2025 மற்றும் 12.02.2025 ஆகிய நாள்களில் ரூபாய் 25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு வெற்றி கோப்பை, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.






மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு



திரு. **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்** அவர்கள்
மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்



இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட 129 விசைப்படகு மற்றும் 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு ரூ.6.84 கோடி ஒப்பளிப்பு...

ரூ.50 கோடிச் செலவில் திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள 13 கிராமங்களில் புதிய மீன் இறங்கு தளங்கள்...

ரூ.23.28 கோடி நிதியில் 23,280 சிறப்புக் கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 26.02 இலட்சம் விவசாயிகளின் 240.92 இலட்சம் கால்நடைகள் பயன்...

43,425 கிராம முகாம்கள் நடத்தப்பட்டு 5,46,754 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்...

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

கடல் மீன்வளம்

இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு பல்வேறு கடற்படை தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு மீட்க இயலாத நிலையில் உள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதமும் மொத்தம் ரூ.6.84 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் 2018 முதல் 2023ஆம் ஆண்டு வரை கைப்பற்றப்பட்டு மீட்க இயலாத நிலையில் அங்கு நெடுங்காலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 107 விசைப்படகு உரிமையாளர்களுக்கு நிவாரணத் தொகையினை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சம் வீதமும், 16 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு ரூ.1.50 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சம் வீதமும் உயர்த்தப்பட்ட விகிதத்தில் மொத்தம் ரூ.6.74 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடலில் மீன் பிடிக்கும்போது காணாமல் போகும் தமிழ்நாடு மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித் தொகையினை ரூ.250/-யிலிருந்து ரூ.350/- ஆக உயர்த்தி மாதமொன்றுக்கு ஒரு மீனவர் குடுமபத்திற்கு ரூ.10,500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

கடலில் மீன் பிடிக்கும்போது அண்டை நாட்டு அரசால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித்தொகையினை ரூ.250/-யிலிருந்து ரூ.350/- ஆக உயர்த்தி மாதமொன்றுக்கு ஒரு மீனவர் குடும்பத்திற்கு ரூ.10,500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

01.06.2020 முதல் 18.10.2021வரை மீனவர் குழு விபத்து காப்பீடு இல்லாத காலத்தில் இறந்த 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு விபத்து காப்பீடு நிவாரணத்தொகை தலா ரூ.2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.4.10 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டது. அவற்றில் 176 இறந்த மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.2 இலட்சம் வீதமும் மற்றும் நிரந்தர ஊனமடைந்த ஒரு மீனவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும் ஆக மொத்தம் ரூ.3.53 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக 2016ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான காலங்களில் மீன்பிடிக்கையில் எதிர்பாராமல் விபத்தில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை கிடைக்கப்பெறாமல் நிலுவையில் உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிட தலா ரூ.2 இலட்சம் வீதம் ரூ.50 இலட்சம் மற்றும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1 கோடி கொண்டு சுழல்நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட 'மாண்டஸ்' புயலினால் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக ரூ.4.67 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

05.12.2023 அன்று எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் கச்சா எண்ணெய் கலந்ததால் எண்ணூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்களின் மீன்பிடிப் படகுகள், வலைகள் சேதமடைந்ததைத் தொடர்ந்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு நிவாரணத் தொகை ரூ.3.66 கோடி ஒப்பளிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் காரணமாக 04.12.2023 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட படகுகள், வாகனம், கிரேன் ஆகியவற்றுக்கான வாடகைக் கட்டணம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கான உணவுப்படியாக மொத்தம் ரூ.1.70 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் காரணமாக சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக ரூ.12.88 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 15.12.2023 முதல் 17.12.2023 வரை பெய்த அதிகனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட படகுகள், வாகனம், கிரேன் ஆகியவற்றுக்கான வாடகை கட்டணம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கான உணவுப்படியாக மொத்தம் ரூ.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பெருவெள்ளத்தினால் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக ரூ.14.53 கோடி ஒப்பளிக்கப்பட்டு தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம், விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் மற்றும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் மீனவருக்கு மருத்துவ செலவினங்களுக்கு ரூ.25,000 வீதம் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டிற்கு 5,23,237 உறுப்பினர்களுக்கு மாநில அரசின் (40% சந்தாத் தொகை) பங்குத்தொகையாக ரூ.1.20 கோடியும். 2022-2023ஆம் ஆண்டிற்கு 5,43,949 உறுப்பினர்களுக்கு ரூ.1.58 கோடியும், 2023-2024ஆம் ஆண்டிற்கு 5,58,966 உறுப்பினர்களுக்கு ரூ.2.12 கோடியும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டிற்கு 5,73,183 உறுப்பினர்களுக்குமாநிலஅரசின் பங்குத்தொகையாக ரூ.1.92 கோடி (40% சந்தாத்தொகை) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.01.06.2024 முதல் 31.05.2025 வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.

மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டு முதல் நாளது தேதிவரை பல்வேறு நிகழ்வுகளில் மீன்பிடிக்கையில் மற்றும் விபத்தில் இறந்த / ஊனமடைந்த 333 மீனவர்களின் குடும்பத்தாருக்கு காப்புறுதி நிவாரணத் தொகையாக ரூ.15.78 கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடிக்கையில் பல்வேறு நிகழ்வுகளில் காணாமல் போன மீனவர்கள் / கடலில் மூழ்கி இறந்து போன மீனவர்கள் மற்றும் இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்த மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.53.70 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவ இளைஞர்கள் குடிமைப்பணிகளில் சேருவதற்காக அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்தில் 6 மாத கால சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 39 மீனவ மாணவர்களுக்கு ரூ.5.20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டில் 1,71,234 மீனவ குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.85.61 கோடியும், 2022-2023ஆம் ஆண்டில் 1,78,322 மீனவ குடும்பங்களுக்கு ரூ.89.16 கோடியும், மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் 1,67,007 மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்காலநிவாரணத் தொகையாக ரூ.83.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் நிவாரணத் தொகையினை ரூ.5,000 லிருந்து ரூ.8,000 ஆக உயர்த்தி வழங்கிட அரசின் நிர்வாக ஒப்புதல் ஆணை பெறப்பட்டதனைத் தொடர்ந்து, நடப்பாண்டில் மீனவக் குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ.8,000 வீதம் 14 கடலோர மாவட்டங்களை சார்ந்த 1,78,362 கடலோர மீனவ குடும்பங்களுக்கு ரூ.142.68 கோடி தடைக்கால நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி குறைவு காலத்திற்கான சிறப்பு உதவித்தொகையினை குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000 யிலிருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி 2021-2022ஆம் ஆண்டு முதல் வழங்கிட அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் ஆண்டில் 1,85,560 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.111.33 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2022-2023ஆம் ஆண்டில் 1,86,049 மீனவர்களுக்கு ரூ.111.62 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டில் 1,75,737 மீனவர்களுக்கு ரூ.105.44 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2024-2025ஆம் ஆண்டில் 1,79,147 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்கிட ரூ.107.48 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையிலான 11 கடலோர மாவட்டங்களை சார்ந்த 1.17 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ.70.48 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை 2022-2023ஆம் ஆண்டு முதல் மாநில அரசு திட்டமாக செயல்படுத்திட அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. 2021-2022ஆம் ஆண்டில், 2,07,869 மீனவர்களுக்கு ரூ.62.19 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2022-2023ஆம் ஆண்டில், 2,05,491 மீனவர்களுக்கு ரூ.61.43 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டில் 1,97,746 மீனவர்களுக்கு ரூ.59.25 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2024-2025ஆம் ஆண்டில் 2,10,850 மீனவப் பயனாளிகளுக்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிட ரூ.63.25 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையிலான 11 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1.44 இலட்சம் மீனவப் பயனாளிகளுக்கு ரூ.43.25 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் ஆண்டில், 2,07,150 மீனவர் மகளிருக்கு ரூ.61.98 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2022-2023ஆம் ஆண்டில், 2,06,252 மீனவ மகளிருக்கு ரூ.61.70 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டில் 1,95,696 மீனவர்களுக்கு ரூ.58.64 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 2024-2025ஆம் ஆண்டில் 2,03,294 மீனவப் பயனாளிகளுக்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிட ரூ.60.99 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் வரையிலான 11 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1.37 இலட்சம் மீனவ பயனாளிகளுக்கு ரூ.41.22 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமாக்கும் திட்டத்தின் கீழ் 40 விழுக்காடு மானியத்தில் 2022 - 2023ஆம் ஆண்டிற்கு ரூ.9.60 கோடி செலவினத்தில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,591 உட்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டிற்கு ரூ.12 கோடி திட்டமதிப்பீட்டில் ரூ.4.80 கோடி 40 விழுக்காடு மானியத்தில் 1,000 உட்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மீனவப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு ரூ.6 கோடி 75 விழுக்காடு மானியத்தில் 40,000 உயிர்காப்பு சட்டைகள் (Life Jackets) வழங்கிட அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உயிர்காப்பு சட்டை ஒன்றின் இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மீனவப் பயனாளிகளிடமிருந்து பயனாளிகள் பங்குத் தொகை வசூலிக்கப்படுகிறது.

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரங்களை திரவ எரிவாயு மூலம் இயந்திரங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 175 மண்ணெண்ணெய் இயந்திரங்களை ரூ.1.90 கோடி திட்ட மதிப்பீட்டில் மாற்றம் செய்திட அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

பிரதமமந்திரிமீன்வளமேம்பாட்டுத்திட்டத்தின்கீழ்(2020–2021)நாட்டுப்படகிற்குமாற்றாக 10 மீட்டர் மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், மீன்பிடிவலைகள் மற்றும் குளிர்காப்பு பெட்டிகள் 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிட அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.3.45 கோடி மானியத்தில் 174 படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 26 மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிட பணிகள் நடைபெற்று வருகிறது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2021–2022) நாட்டுப்படகிற்கு மாற்றாக 300 எண்ணிக்கையிலான 12 மீட்டர் மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், மீன்பிடிவலைகள் மற்றும் குளிர்காப்பு பெட்டிகள் 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிட ரூ.6.50 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.3.90 கோடி மானியத்தில் 220 கண்ணாடி நாரிழைப்படகுகள் மற்றும் பிற மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 80 கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களை மீனவப் பயனாளிகளுக்கு வழங்கிட பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2022–2023) அண்மை கடற்பகுதியில் மீன்வளத்தினை அதிகரித்திடும் பொருட்டு சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி (பாக் வளைகுடா அல்லாத மாவட்டங்களில்) ஆகிய மாவட்டங்களில் 49 மீனவ கிராமங்களில் 200 அலகுகள் செயற்கை மீன் உறைவிடங்கள் ரூ.62 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2020 – 2021), கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.1.42 கோடி மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.1.42 கோடி மானியத் தொகை 1,311 மீனவ மகளிருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.



ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2020-2021), கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.23 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு இதுவரை ரூ.21.99 இலட்சம் மானியத் தொகை 30 மீனவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2021 - 2022), மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கடல் மீன் குஞ்சு வளர்த்தெடுத்தல் மையம் அமைத்திட அரசால் 2 அலகுகளுக்கு ரூ.12 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.10.32 இலட்சம் மானியத்தொகை 2 அலகிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2021-2022), மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு 50 அலகுகளுக்கு அரசால் ரூ.108 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.56.02 இலட்சம் மானியத்தொகை 40 அலகுகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2021 - 2022), நவீன உயிர்கூழ்ம (Bio - floc) குளங்களில் இறால் வளர்த்தல் மற்றும் உள்ளீட்டுக்கு மானியம் வழங்குதல் திட்டத்திற்கு 25 அலகுகளுக்கு அரசால் ரூ. 187.20 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.135.26 இலட்சம் மானியத் தொகை 18 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2021 - 2022), "உவர்நீர் இறால் வளர்ப்பிற்கு புதிய குளங்கள் கட்டுதல்" திட்டத்திற்கு 100 ஹெக்டேருக்கு அரசால் ரூ.342.40 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.37.93 இலட்சம் மானியத்தொகை 09 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2021 - 2022), "புதிதாக கட்டப்பட்ட உவர்நீர் இறால் வளர்ப்பு குளங்களில் இறால் வளர்த்தலுக்கு உள்ளீடுகளுக்கு மானியம் வழங்குதல்" திட்டத்திற்கு 100 ஹெக்டேருக்கு அரசால் ரூ.256.80 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.29.40 இலட்சம் மானியத்தொகை 9 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2022 - 2023) கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.34.80 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.34.79 இலட்சம் மானியத் தொகை 330 மீனவ மகளிருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2022-23) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு 25 அலகுகளுக்கு அரசால் ரூ. 55 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.13.94 இலட்சம் மானியத்தொகை 10 அலகுகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2022-2023) இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பல்நோக்கு கடல்பாசி பூங்கா அமைத்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.127.71 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டம் வளமாவூரில் விதைப்பாசி உற்பத்திக்கான கட்டுமானப்பணிகள்

நடைபெற்று வருகிறது. தற்போது 50 விழுக்காடு பணிகள் முடிவடைந்து ரூ.17.16 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில், 75 ஹெக்டேரில் கடற்பாசி பதனப்படுத்தும் பூங்காவும் அமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் கடற்பாசியினை பதப்படுத்திடவும், மதிப்புகூட்டிய பொருள்கள் தயாரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடற்பாசி வளர்க்கப்படும் கடலோர மீனவ கிராமங்களில் கடற்பாசி உலர்தளம், அணுகுசாலை, ஓய்வுக்கூடம் அமைத்துத்தரப்படவுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2023 – 2024), கடலோர மாவட்டங்களான செங்கல்பட்டு, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவைகள் மற்றும் கயிறு மூலம் கடற்பாசி வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.23.92 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.20.73 இலட்சம் மானியத் தொகை 222 மீனவ மகளிருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2023–24), மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மிதவை கூண்டுகளில் கடல் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு 17 அலகுகளுக்கு அரசால் ரூ.47 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.4.86 இலட்சம் மானியத்தொகை 2 அலகுகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2023 – 2024), நவீன உயிர்கூழ்ம (Bio – floc) குளங்களில் இறால் வளர்த்தல் மற்றும் உள்ளீட்டுக்கு மானியம் வழங்குதல் திட்டத்திற்கு, 16 அலகுகளுக்கு அரசால் ரூ. 151.20 இலட்சம் மானியமாக வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை ரூ.10.45 இலட்சம் மானியத் தொகை ஒரு பயனாளிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 13 அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து 2636.77 கோடி நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன

மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 46 அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளில் 33.05 கோடி மீன்விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டைகளில் கூட்டு மீன் வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை ரக மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு மானியம் வழங்கும் திட்டம் ரூ.25.25 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

பண்ணைக்குட்டைகளில், நீர் சேமிப்புத்திறனை அதிகரித்திட ஏதுவாக பாலித்தீன் உறையிடுதல் மற்றும் மீன்வளர்த்திட உள்ளீட்டு செலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.75.75 இலட்சம் அரசால் விடுவிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

பண்ணைகுட்டைகளில் விரால் மீன்வளர்ப்பு மேற்கொள்ள உள்ளீட்டு செலவின மானியம் வழங்கும் திட்டத்திற்கென ரூ.30.30 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ரூ.4.50 கோடி செலவில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன் பண்ணையில் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சுவளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.70 இலட்சம் செலவில் சேலம் மாவட்டம் ஆனைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளது.

ரூ.32 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறு–II அரசு மீன் பண்ணை மேம்படுத்தப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணை ரூ.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.



பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-2021

தமிழ்நாட்டில் 2 தனியார் நன்னீர் மீன் குஞ்சு பொரிப்பகங்கள் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு அரசால் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

புதியதாக தனியார் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் 10 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத் தொகை அரசால் ரூ.32.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 100 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத் தொகை ரூ.5.06 கோடி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

10 உயிர் கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.1.32 கோடி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நீரினை மறு சுழற்சி முறையில் (RAS) சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு செய்தல் திட்டத்தின் கீழ் ரூ.69 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் இராமநதி மற்றும் கடலூர் மாவட்டம் லால்பேட்டை ஆகிய இடங்களில் அரசால் ரூ 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு "சினைமீன்வங்கி" அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை 5 நீர்த்தேக்கங்களில் செயல்படுத்திட அரசால் ரூ.11.08 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் முடியும் நிலையில் உள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021-2022

தமிழ்நாட்டில் 8 தனியார் நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட அரசால் ரூ.95 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

புதியதாக தனியார் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் 40 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட ஏதுவாக அரசால் ரூ.137.20 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 85 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத்தொகை ரூ.4.48 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

100 உயிர்கூம்ப (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள அரசால் ரூ.3.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

2021–2022 ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள காவிரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் 40 இலட்சம் நாட்டின மீன் குஞ்சு விரலிகள் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டு இத்திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2022-2023

புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 10 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத்தொகை வழங்கிட ரூ.57.20 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் 3 சிறிய அளவிலான (2 டன்/தினசரி) மீன் தீவன ஆலை அமைத்திடவும், ஒரு பெரிய அளவிலான (20 டன்/தினசரி) மீன் தீவன ஆலை அமைத்திடவும் ரூ.1.22 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாட்டில் 2022–2023ஆம் ஆண்டு ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் 40 இலட்சம் நாட்டின மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆறுகளில் இருப்பு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 40 இலட்சம் மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு காவிரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2023-2024

புதியதாக தனியார் மீன்வளர்ப்பு குளங்கள் 20 ஹெக்டேர் பரப்பளவில் அமைத்திட மற்றும் உள்ளீட்டு மானியத்தொகை வழங்கிட ரூ.1.10 கோடி விடுவிக்கப்பட்டு, திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

நீரினை மறுசுழற்சி முறையில் (RAS) சிறிய அளவிலான தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு செய்தல் திட்டத்தின் கீழ் 3 அலகிற்கு ரூ.12 இலட்சம் மானியம் விடுவிக்கப்பட்டு, திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

25 உயிர்கூம்ப (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.94.50 இலட்சம் விடுவிக்கப்பட்டு, திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு சிறிய அளவிலான (2 டன் / தினசரி) மீன் தீவன ஆலை மற்றும் ஒரு அலகு நடுத்தர அளவிலான (8 டன் / தினசரி) மீன் தீவன ஆலை அமைத்திட ரூ.78 இலட்சம் மானியம் விடுவிக்கப்பட்டு, திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

மாநில நிதி

2022–2023ஆம் ஆண்டிற்கு மாநிலத்தில் 550 அலகுகள் பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியமாக வழங்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரிக்கும் வகையில் மீன்பிடி உபகரணங்கள் (மீன்பிடிவலை / பரிசல்) கொள்முதல் செய்திட, 2023–2024ஆம் ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரிக்கும் வகையில் மீன்பிடி உபகரணங்கள் (மீன்பிடிவலை / பரிசல்) கொள்முதல் செய்திட, 2024–2025ஆம் ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

2024–2025ஆம் ஆண்டிற்கு உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்களில் ஒரு கோடி மீன் குஞ்சுகளை இருப்பு வைப்பதற்காக ரூ.75 இலட்சம் தொகைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது, மேலும் இந்தத் திட்டம் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தருவைகுளம் மீன் இறங்குதளத்தை மீன்பிடித் துறைமுகமாக தரம் உயர்த்துவதற்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைப் பணிகளுக்கு ரூ.75 இலட்சம் செலவில் அரசிடமிருந்து நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.8.36 கோடி மதிப்பீட்டில் பல்வேறு உள்நாட்டு மீன்வளத் திட்டங்கள் 2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2023-2024, 2024-2025 ஆண்டுகளில் ரூ.5.79 கோடி செலவில் பல்வேறு உள்நாட்டு மீன்வளத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வண்ணமீன்வளர்ப்பு

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொல்லைப்புற, நடுத்தர மற்றும் ஒருங்கிணைந்த வண்ணமீன் வளர்ப்புக்காக ரூ.9.27 கோடி மானியம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

நவீன முறையில் மீன் சந்தைப்படுத்துதல்

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் செயல்படுத்தப்படும், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குளிரூட்டப்பட்ட நான்கு சக்கர வாகனம், குளிர்காப்பிடப்பட்ட வாகனம், உயிர் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்க ரூ.17.47 கோடி மானியம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகள்

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கடன் மூலம் (NABARD) ரூ.742.96 கோடிக்கு 7 கடலோர மாவட்டங்களில் மீன் பிடி இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள் மற்றும் கடலரிப்பை தடுக்க சுவர் அமைக்கும் பணிகள் 30 இடங்களில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 14 இடங்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகப்பகுதியை ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்தி சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.30 இலட்சம் செலவில், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தின் முகத்துவாரத்தில் மீன்பிடித் தொழிலுக்கு சென்று திரும்பும் படகுகளை கண்காணித்திட சக்தி வாய்ந்த இழுவை இயந்திரம்" (power winch) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டம், சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க மீன்வள நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்து திட்டப்பணி நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் அலை தடுப்புச்சுவர் நீட்டிப்புப் பணிக்கு (Phase III) மீன் வள நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.116 கோடி ஒதுக்கீடு செய்து திட்டப்பணி நடைபெற்று வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகம் மேம்பாட்டுப் பணிக்காக பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ.26.26 கோடி ஒதுக்கீடு செய்து மேம்பாட்டுப்பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் புதிய மீன்பண்ணை கட்டுமானம், புனரமைத்தல் மற்றும் நவீன மயமாக்கும் பணிகளுக்கு ரூ.60.20 கோடி நிதி ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அணையில் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.8 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ணமீன் காட்சியகம் மற்றும் வண்ணமீன் சில்லரை விற்பனையகம் நிறுவும் பணிக்கு ரூ.5 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மீன்வள நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் நீலகிரி மாவட்டம், அவலாஞ்சியில் உள்ள அரசு ட்ரவுட் மீன் பண்ணை நவீன மயமாக்கும் பணிக்கு ரூ.2.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்குளத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) திட்டத்தில் 13 கிராமங்களில் ரூ.56 கோடி செலவில் புதிதாக மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகளுக்கு ரூ.10 கோடி செலவில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) திட்டத்தின் கீழ் "நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகள்" - ரூ.81 கோடிக்கு ஒதுக்கீடு செய்து மேம்பாட்டுப்பணி நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், அரங்கங்குப்பம் மற்றும் கூனங்குப்பம், சென்னை மாவட்டம், தாழங்குப்பம் மற்றும் நெட்டுக்குப்பம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடி துறைமுகத்தை தூர்வாரி ஆழப்படுத்தி சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.31.37 கோடி செலவில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் மூலம் மேம்பாட்டுப் பணி நடைபெற்று வருகிறது.

மாநில நிதி உதவித் திட்டத்தின் கீழ் "கன்னியாகுமரி மாவட்டம், விவேகானந்தா பாறை படகு நிறுத்தம் முனையத்தில் புதிய படகுகள் நிறுத்திட கூடுதல் படகு அணையும் தளம் அமைக்கும் பணிகள் ரூ.7 கோடிக்கு ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.



தூத்துக்குடி மாவட்டம், அமலி நகர் கிராமம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் கீழகடியப்பட்டிணம் கிராமத்தில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் ரூ.93 கோடி செலவில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் மற்றும் மீன் இறங்குதளம் மேம்படுத்துதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கீழப்பட்டிணச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் தலா ரூ.7 கோடி செலவில் அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் ரூ.41 கோடி செலவில் அலை தடுப்புச் சுவர் நீட்டிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், ஜகதாப்பட்டிணம் மற்றும் கோட்டைப்பட்டிணத்தில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் ரூ.20 கோடி செலவில் மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம், இறையுமான்துறை கிராமம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், கூட்டப்புளி மற்றும் கூடுதாழை கிராமங்களில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் ரூ.97.25 கோடி செலவில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன் மூலம் (NABARD) ரூ.227 கோடிக்கு 6 கடலோர மாவட்டங்களில் 10 இடங்களில் மீன் பிடி இறங்குதளங்கள் அமைக்கும் பணிகள், மீன் பிடி இறங்குதளங்கள் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மா நகர் கிராமத்தில் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவி கீழ் ரூ.20 கோடி செலவில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், சென்னை மீன் விற்பனைப் பிரிவிலிருந்து இணையதளம் மற்றும் கைபேசி வாயிலாக 07.05.2021 முதல் 31.12.2024 வரையிலான காலங்களில் 33,922 கேட்புகளை ஏற்று 58.97 டன் மீன்கள் ரூ.3.02 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நவீன மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனையகங்கள் வாயிலாக 1,919.35 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.60.09 கோடிக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

வரிவிலக்களிக்கப்பட்ட 3,02,719.480 கிலோலிட்டர் உயர்வேக டீசல் எரியெண்ணெய் கடல் மீனவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மானிய விலையில் கடல் மீனவர்களுக்கு41,862.310 கிலோலிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் 3,667 பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கம் வாயிலாக 2632.49 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.24.34 கோடி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வாயிலாக வருவாய் ஈட்டப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிட்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட பதிவு பெற்ற 2404 நாட்டுப்படகுகளுக்கு 07.05.2021 முதல் 31.01.2025 வரை 14 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலம் 27,250 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் ரூ.128.28 கோடி மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் கடலோர மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள 18 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 07.05.2021 முதல் 31.01.2025 வரை 93,605 கிலோ லிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல். 871 மீன்பிடி விசைப்படகுகளுக்கும் மற்றும் 4,270 இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு ரூ.21.17 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ். 60 சதவிகித மானியத்தில் மொத்தம் ரூ.8.77 இலட்சத்தில் உலர் மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் 100 மீனவ மகளிர் குழுக்களுக்கு மீன் விற்பனைக்குத் தேவையான அன்னக்கூடை. எடைபோடும் கருவி. குடை மற்றும் நாரிழைபாய் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மீன் உபபொருட்கள் தயாரித்தல் மற்றும் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 1,205 மீனவ மகளிருக்கு நுண் கடன் தொகையாக ரூ.193 இலட்சம் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.8.80 கோடி செலவில் 5 இடங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், அமைக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.489.88 இலட்சம் மானியத்தில் மீன் விற்பனை செய்ய குளிர்சாதனப் பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் 1264 பயனாளிகளுக்கும், ரூ.46.28 இலட்சம் மானியத்தில் குளிர்சாதனப் பெட்டியுடன் கூடிய 32 மூன்று சக்கர வாகனங்களும், ரூ.12 இலட்சம் மானியத்தில் சில்லரை மீன் விற்பனைக்காக 3 மீன் விற்பனை நிலையங்களும், ரூ.13.53 இலட்சம் மானியத்தில் குளிரூட்டும் வசதியுடன் கூடிய நான்கு 2 சக்கர வாகனங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாநில அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் 2023-2024இல் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும்கன்னியாகுமரிமாவட்டமீனவப்பயனாளிகளுக்குரூ.1.44கோடிமானியவிலையில் 333 உட்/வெளிப்பொருத்தம் இயந்திரங்கள் இணையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

2024-2025இல் தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவப் பயனாளிகளுக்கு ரூ.1.56 கோடி மானிய விலையில் 683 உட்/வெளிப்பொருத்தம் இயந்திரங்கள் இணையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

மீன்பிடித் தொழிலுக்கு செல்லும் மீனவப் பயனாளிகளுக்குத் தேவையான குளிர்காப்புப்பெட்டி, உயிர்காக்கும் உடை, உயிர்காக்கும் மிதவை மற்றும் மீன்பிடி தூண்டில் முள்கள் ரூ. 1.39 கோடி மதிப்பிலான பொருள்கள் கூட்டுறவு விற்பனை மையத்தின் வாயிலாக நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக 17,933 பயனாளிகளுக்கு பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித் தொகை திட்டங்களின்கீழ் ரூ.23.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

மாநில அரசின் "புதுமைப்பெண் திட்டம்" மற்றும் "தமிழ்ப் புதல்வன் திட்டம்"

'தமிழ்நாடு அரசின் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி புதுமை பெண் உறுதித் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தில் மொத்தம் 125 மாணவிகள் பயனாளிகளாக உள்ளனர். நடப்பு கல்வியாண்டில் புதுமை பெண் திட்டத்தின் கீழ் 50 மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தின்கீழ் 101 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

மாநில அரசின் 'நான் முதல்வன்' திட்டம்

மாணவர்களுக்கு மீன்வளக் கல்வி, மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, 25.06.2022 அன்று சென்னையில் "கல்லூரி கனவுகள்" என்ற தலைப்பில் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், மீன்வளக் கல்வியின் சிறப்பினை தமிழ்நாடு முழுவதும் வந்திருந்த மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். இதன் மூலம் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர்.

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் அறுபத்து எட்டு (68) மாணவர்களுக்கும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் இருபத்தி எட்டு (28) மாணவர்களுக்கும் உயர்கல்வி பற்றிய ஆர்வத்தை தூண்டும் விதமாக தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமான டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு 24.02.2024 மற்றும் 29.02.2024 அன்று வருகை தந்து விவரங்களை தெரிந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021-2024ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் ரூ.2,378.88 இலட்சம் மதிப்பிலான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள். விவரங்கள் பின்வருமாறு,

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (NABARD) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு (RIDF XXV) நிதியுதவியுடன் 04.01.2024 அன்று ரூ.715 இலட்சம் மதிப்பில் மாணவர்கள் தங்கும் விடுதி திறந்து வைத்தார்

04.01.2024 அன்று தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (NABARD) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு (RIDF XXVII) நிதியுதவியின் மூலம் ரூ.450 இலட்சம் மதிப்பில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு நிர்வாக கட்டடத்தின் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட இரண்டாம் தளம் திறந்து வைத்தார்.

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (NABARD) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு (RIDF XXV) நிதியிலிருந்து பெறப்பட்டு திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர் விடுதிக் கட்டடம் ரூ.520 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு 08.03.2024 அன்று திறந்து வைத்தார்.

தேனி மாவட்டம், குல்லாபுரத்தில் மாநில அரசு நிதி ரூ.174 இலட்சம் மூலம் அயிரைமீன் ஆராய்ச்சி மையம் கட்டப்பட்டு 08.03.2024 அன்று திறந்து வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகத்திற்கு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (NABARD) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு (RIDF XXVII) நிதியின் மூலம் ரூ.1,282.57 இலட்சத்தில் 20.08.2024 அன்று திறந்து வைத்தார்.

சென்னை மாதவரத்தில் மீன்வள தொழில்நுட்பம் துணை தொழில் கல்வி நிலையத்தில் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் முதன்மை கட்டடமும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் ரூ.160 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆழ்கடல் செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி விசைப்படகை 09.03.2023 அன்று திறந்து வைத்தார்.

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி(NABARD) நிதியுதவியுடன் ரூ.639.71 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி. ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவ - மாணவியர் விடுதிக் கட்டடத்தில் முதல் மற்றும் இரண்டாம் தளம் கூடுதல் கட்டடத்தை 09.03.2023 அன்று திறந்து வைத்தார்.

சீனியப்ப தர்கா, மண்டபம் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட (NADP) நிதியுதவியுடன் ரூ.117 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகத்துடன் கூடிய பயிற்சி கட்டடம் மற்றும் ஆய்வகக் கட்டடத்தையும் தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

பயிற்சிக் கூடத்துடன் கூடிய ஆய்வகக் கட்டடத்தையும் 09.03.2023 அன்று திறந்து வைத்தார். பல்கலைக்கழகவளாகத்தில் உள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரியில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) நிதியுதவியுடன் ரூ.730 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதி கட்டடம் மற்றும் மாணவியர் விடுதி கட்டடம் ஆகியவற்றை 29.09.2023 அன்று திறந்து வைத்தார்.

20.10.2022 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறில் ரூ.4.20 இலட்சத்தில் டாக்டர் எம்.ஜி. ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர் குடியிருப்புகளையும், நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரியின் தற்போதைய கட்டடத்தின் முதல் தளத்தையும் ரூ.9 கோடி மதிப்பில் திறந்து வைத்தார்

18.10.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் உள்ள மீன் வளர்ப்பு தொழில் காப்பகம் மற்றும் தொழில் பயிற்சி இயக்கக வளாகத்தில் ரூ.731.74 இலட்சத்தில் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலையக் கட்டடம் திறந்து வைத்தார் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரத்தில் ரூ.250 இலட்சத்தில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்ட கட்டடங்கள்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்பு பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 10.01.2024 அன்று ரூ.350 இலட்சம் மதிப்பில் பின்வரும் கட்டடங்களை திறந்து வைத்தார்.

ஓரடியம்பலம், தலைஞாயிறில் உள்ள டாக்டர் எம்.ஜி. ஆர் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாநில அரசு நிதி மூலம் ரூ.100 இலட்சத்தில், விவசாயிகள் பயிற்சி மையம் திறந்து வைத்தார்

தலைஞாயிறில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாநில அரசு நிதியின் மூலம் ரூ.100 இலட்சத்தில் தொழில் வழிகாட்டும் மையம் திறந்துவைக்கப்பட்டது

டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கடல்சார் பொறியியல் பட்டறை மாநில அரசு நிதி மூலம் ரூ.150 இலட்சம் மதிப்பில் திறந்துவைத்தார்.

நடைமுறையில் உள்ள திட்டங்கள்

தற்போது 31 ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.2426.7 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன, அவற்றில் 9 திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ரூ.1669.29 இலட்சம் மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் (TANII), தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNI-





AMP), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் (TNSCST), தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII) மற்றும் மாநில அரசு நிதி ஆகிய நிதி நிறுவனங்களின் மூலம் நிதி அளிக்கப்பட்டது .

மத்திய அரசு மற்றும் பிற நிறுவனங்களின் நிதியுதவியுடன் கூடிய 21 திட்டங்கள் (ரூ.757.41 இலட்சம்) பல்கலைக்கழகத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY)இந்தியப் பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பு (INCOIS) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், (NCCR) இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் (ICMR) இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR), USAID அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சித் துறை (DSIR) ஆகியவை நிதியளிப்பு முகமைகளாகும்.

பல்வேறு மற்றும் பன்னாட்டு தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ரூ.38.03 இலட்சம் மதிப்பிலான தொழில் நிறுவன இணைப்பின் கீழ் 12 தொழில் துறை – இயக்கத் திட்டங்கள் தற்சமயம் உள்ளன.

கல்வி

பட்டமளிப்பு

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழா 18.09.2024 அன்று நாகப்பட்டினம் பல்கலைக்கழக அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 391 பட்டதாரிகளுக்கு (நேரில் மற்றும் வராத நிலையில்) பட்டங்கள் வழங்கப்பட்டன மற்றும் மொத்தம் 28 மாணவர்களுக்கு வெவ்வேறு பிரிவுகளின் கீழ் 58 பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சேர்க்கை:

நடப்புக் கல்வியாண்டில் (2024-2025) தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் வழங்கும் ஒன்பது இளங்கலைப் படிப்புகளில் 360 மாணவர்களும், முதுகலை படிப்புகளில் 69 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். முனைவர் பட்டப்படிப்பில், 26 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பல்கலைக்கழகத்தின் தற்போதைய மாணவர் எண்ணிக்கை 1,635 ஆகும்.

மாணவர்களின் சாதனை

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஐந்து மாணவர்கள் வேளாண் விஞ்ஞானிகள் ஆட்சேர்ப்பு வாரியம் (ASRB) நடத்திய தேர்வில் தேர்ச்சி பெற்று 2021-2024ஆம் ஆண்டுகளில் வேளாண் ஆராய்ச்சி சேவைகளில் சேர்ந்துள்ளனர்.

2021-2024ஆம் ஆண்டுகளில், புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய அகில இந்திய நுழைவுத் தேர்வில் நூற்று முப்பத்தொன்பது மாணவர்கள் முதுகலை படிப்புகள் மற்றும் முனைவர் பட்டப் படிப்புகளில் சேருவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் புதுமைத் திறன் அங்கீகாரம்

தமிழ்நாடு தொடக்க மற்றும் புதுமை இயக்கம் நடத்திய 'Fish Tank' என்ற போட்டியில் இளநிலை மீன்வளப் பொறியியல் பட்டப்படிப்பு (B.Tech) மாணவர் ஒருவர், மிதி தொழில்நுட்ப மீன் செதில் நீக்கும் கருவி (Pedal Tech Descaling Machine) என்ற புதுமையான யோசனையை முன் வைத்ததற்காக ரூபாய் ஒரு இலட்சம் பரிசு பெற்றுள்ளனர். மூன்று இளநிலை தொழிற்கல்வி (B.Voc) மாணவர்கள், கம்பி வட சறுக்கு வழி மூலம் மீன்களை கரை சேர்த்தல் மற்றும் சூரிய மின்கல அடுக்கில் இயங்கும் படகு ஆகிய புதுமையான கண்டுபிடிப்புகளுக்காக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் – தமிழ்நாடு நடத்திய 'ஹேக்கத்தான்' போட்டியில் வென்று ரூபாய் ஒரு இலட்சம் பரிசு பெற்றுள்ளார்கள்.

ஆராய்ச்சி

காப்புரிமைகள்

2022-2023ஆம் ஆண்டில், 16 வடிவமைப்பு காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டன. 2024-2025ஆம் ஆண்டில், பொறியியல் துறையின் கீழ் மூன்று காப்புரிமை வடிவமைப்புகளுக்கு அனுமதிக்கப்பட்டு காப்புரிமைகள் வழங்கப்பட்டது. 2021-2022ஆம் ஆண்டில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) தொழில்நுட்பத் துறையின் கீழ் இரண்டு காப்புரிமை ஒப்புதலைப் பெற்றது மற்றும் 2022-2023ஆம் ஆண்டில், பொறியியல் துறையின்கீழ் ஒரு வடிவமைப்பிற்கு காப்புரிமை அங்கீகரிக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் பல சர்வதேச மற்றும் தேசிய தொழில்நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. சர்வதேச தொழில் நிறுவனங்களுடன் ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் ஒரு சர்வதேச கல்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் தேசிய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மற்றறும் தொழில்துறை நிறுவனங்களுடன் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும், பேராசிரியர்கள் - மாணவர்கள் பரிமாற்றம் செய்யவும் 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

தேசிய அளவில், 37 தொழில்நிறுவனங்கள், 21 கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

வெளியிடப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள்:

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 18 புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு, 12.02.2025 அன்று மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் பொங்கல் பண்டிகையின்போது வெளியிடப்பட்டது.

- வரிவீரால் மீனுக்கான எளிய முறை இனப்பெருக்க தொழில்நுட்பம்
- மீன் / இறால் குஞ்சு பொரிப்பவர்களுக்கு உணவாகும் நுண்பாசி திறள் வளர்ப்பின் புதிய செயல்முறை
- TNJFU-விரால் மீன் தீவனம்
- TNJFU-கொடுவா மீன் தீவனம்
- கடற்பாசி தூள் சேர்க்கப்பட்ட ஐஸ்கிரீம் கோன்கள்
- கடற்பாசி தூள் சேர்க்கப்பட்ட உண்ணக்கூடிய காப்பி கோப்பைகள்
- கடற்பாசி சாறு சேர்க்கப்பட்ட சாக்லேட்
- கடற்பாசி தூள் சேர்க்கப்பட்ட சோப்.
- கடற்பாசி சாறு சேர்க்கப்பட்ட முகப்பூச்சு
- கடற்பாசி சாறு சேர்க்கப்பட்ட உடல் தூய்மையாக்கி.
- கடற்பாசி சாறு சேர்க்கப்பட்ட முடி தூய்மையாக்கி.
- கடற்பாசி சாறு சேர்க்கப்பட்ட கை தூய்மையாக்கி.
- பச்சை நிற மசாலா பொருள்களின் காரச் சுவை கொண்ட இறால் சிற்றுண்டி (உண்ண தயாராக உள்ள சிற்றுண்டி)
- உப்புக்கார சுவை கொண்ட இறால் சிற்றுண்டி (உண்ண தயாராக உள்ள சிற்றுண்டி)
- பாலாடைகட்டி மற்றும் மசாலா சுவை கொண்ட இறால் சிற்றுண்டி (உண்ண தயாராக உள்ள சிற்றுண்டி)
- மசாலா சுவை கொண்ட இறால் சிற்றுண்டி (உண்ண தயாராக உள்ள சிற்றுண்டி)
- புகையூட்டப்பட்ட இறால் சிற்றுண்டி (உண்ண தயாராக உள்ள சிற்றுண்டி)
- பன்னடுக்குப் பையில் வெப்ப பதனம் செய்யப்பட்ட மீன் குழம்பு (தென்னிந்தியா மற்றும் ஸ்ரீலங்கா மீன் குழம்பு)

ஆராய்ச்சி முடிவுகள்

மீன் பண்ணையில் தூய-வழி சினை மீன் உள்நாட்டு சினை மீன்களின் வளர்ச்சி, மேலாண்மை மற்றும் நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்யப்பட்டது. சினை மீன் மையத்தில் 320 எண்ணிக்கையிலான மரபணு மூலம் மேம்படுத்தப்பட்ட GIFT சினை மீன்களை (F1, F2, F3, F4, மற்றும் F5) ஐந்து தலைமுறைகளாகப் பராமரித்தது, (தூய-வழி சினை மீன்).

ஜூன் 2023 மற்றும் மார்ச் 2024க்கு இடையில் கோடியக்கரை சதுப்பு நிலம் மற்றும் முத்துப்பேட்டை சதுப்புநில பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் கடலில் இருந்து சேகரிக்கப்பட்ட உயிரினங்களில் இருந்து மொத்தம் 52 நுண்நெகிழிகள் கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் (TANII) திட்டத்தின் கீழ் செயற்கை பவளப்பாறைகள் மற்றும் மீன்களை திரட்டும் செயற்கை பவளப்பாறைகளை நிறுவி, பழவேற்காடு ஏரியில் மீன் பிடித்தலில் மாதத்திற்கு 1.2 முதல் 12 டன் வரை கூடுதல் மீன் பிடிக்கப்பட்டு மீனவ மக்களின் வருமானம் மேம்படுத்தப்பட்டது.

ஆமை இனங்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்காக ஆன்லைன் வலைப்பதிவுகள் மற்றும் மொபைல் ஆண்ட்ராய்டு செயலி உருவாக்கப்பட்டது.

கடற்பாசி மூலம் காபி கோப்பைகள் மற்றும் ஐஸ்கிரீம் கூம்புகள் ஆகிய இரண்டு தயாரிப்புகள் உருவாக்கப்பட்டன.

முக்கிய ஆராய்ச்சி முடிவுகள்

பழவேற்காடு கடல் பகுதியில் செயற்கைப் பவளப்பாறைகள் நிறுவப்பட்டதின் மூலம், மீன்கள் பவளப்பாறைகளால் ஈர்க்கப்பட்டு மீன் திரள்வு ஏற்பட்டு அதன்மூலம் மீன்பிடிப்பு அதிகரித்து வருமானத்தை மேம்படுத்தி உள்ளது. இதற்கு ரூ.4.31 கோடி தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் (TNIAMP) கீழ் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் ஐந்து தலைமுறை இனப்பெருக்கத்திற்கு பிறகு தனித்துவமான (Pureline) கலப்படமில்லாத மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா சினை மீன்கள் வெற்றிகரமாக பிரித்தெடுக்கப்பட்டது.

அயிரைமீன் குஞ்சுகள் விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மீன் வளர்ப்போருக்கு பெரிய அளவில் அயிரைமீன் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் வழங்கப்பட்டது. மேலும், மீன் இருப்பு செய்தல், தீவனம் மற்றும் நிரந்தர மேலாண்மை தொடர்பான தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்பட்டன. இத்திட்டம் ரூ.2.68 கோடி மதிப்பீட்டில் தமிழக அரசின் நிதியுதவியில் வழங்கப்பட்டது.

மாநில திட்டக்குழுவின் கீழ் தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் (TNSLURB) மூலம் ரூ.15.18 இலட்சம் நிதியில், எளிய வழியில் வரி விரால் மீன் இனப்பெருக்க தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு, வரி விரால் மீன் குஞ்சு உற்பத்தி செயல்முறை விளக்கங்கள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பத்திற்கான மாநில மாநில மன்றம் (TNSCST) மூலம் ரூ.1.75 இலட்சம் நிதியுதவியுடன், நீர் உயிரின வளர்ப்பு குளங்களில் வெளியேறும் கழிவு நீரிலிருந்து பர்கோல்டேரியா, ரைசோபாக்டீரியம், அக்ரோபாக்டீரியம் ஆகிய மூன்று சீர்கோடு தன்மையை குறைக்கும் பாக்டீரியா இனங்கள் பிரித்தெடுக்கப்பட்டு, இதன் மூலம் மீன்வளர்ப்பு கழிவுநீர் சுத்திகரிக்கும் பாக்டீரியா கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

பழவேற்காட்டில் நண்டு குஞ்சு பொரிப்பகம் அமைக்கப்பட்டு 224 விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் பண்ணை உள்ளீட்டு பொருள்கள் வழங்கப்பட்டது. இதற்காக பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் (PMMSY) கீழ், ரூ. 1.16 கோடி நிதி பெறப்பட்டது.

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் வழங்கிய ரூ.50 இலட்சம் நிதியுதவியில், ஒரு சென்டிமீட்டர் நீளமுள்ள சிவப்பு கடற்பாசி திசுக்கள், நுண் பாசி ஊட்டச்சத்து ஊடகம் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகளை கொண்டு வளர்க்கப்பட்டு, அதன் வளர்ச்சி ஆய்வகத்தில் எவ்வாறு உள்ளது என பரிசோதனை செய்யப்பட்டது.

மாதவரம் மீன் நோய் கண்டறிதல் ஆய்வகத்தின் மூலம் திலேப்பியா மீன் வளர்ப்பில், நோய் ஏற்படுத்தக்கூடிய புதிய வகை திலேப்பியா பார்வோ லேக் வைரஸ் (TiLV) மற்றும் திலேப்பியா பார்வோ வைரஸ் (TiPV) போன்றவற்றை கண்டறியவும், அதனை தடுக்கும் முறைகளும், பரிந்துரைக்கப்பட்டது. தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ.1.31 கோடி நிதியுதவியில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் "கடல் பொருள்களின் தொழில் வழிகாட்டும் மையம் " மூலம் கடற்பாசி அடிப்படையிலான அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பில் இருபத்தேழு தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டனர்.

ஹெர்பலைஸ் ஹெல்த் கேர் என்கிற உற்பத்தியாளருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. கடற்பாசியிலிருந்து எடுக்கப்பட்ட சாறு அல்லது பொடியைப் பயன்படுத்தி முககளிம்பு, ஃபேஷியல் ஜெல், கை கழுவும் சோப்பு போன்ற கடல்பாசி அடிப்படையிலான அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன .

மேம்படுத்தப்பட்ட பைகளில் அடைக்கப்பட்ட மீன் குழம்பு பற்றிய தொழில்நுட்பம் ரூ.50,000/- மதிப்பில் பிரிட்டோ சீ ஃபுட், தூத்துக்குடி, நிறுவனத்திற்கு வணிகமாக்கப்பட்டது மற்றும் ஐந்து சுவையுள்ள இறால் தயாரிப்புகள் குறித்த தொழில்நுட்பம் ரூபாய் ஒரு இலட்சத்தில் கொல்கத்தாவில் உள்ள Vantage Nutriments இல் வணிகமயமாக்கப்பட்டது

விரிவாக்கம்

மீனவர்களுக்கான விரிவாக்க சேவைகள்

மாவட்ட திறன் மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்துஆழ்கடல் மீன்பிடி நுட்பங்கள் மற்றும் கடல் இயந்திரங்கள் பராமரிப்பு கடலில் உயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக 36 மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் பெற்றவர்கள் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியிலும், தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்திலும் மீன் படகு ஓட்டிவருகின்றனர். ஒட்டுமொத்தமாக, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3,759 மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடித் தொழில்நுட்பங்கள் குறித்து கப்பலில் பயிற்சி அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, செவுள் வலை வடிவமைத்தல், வலை பின்னுதல் மற்றும் வலையை சரிசெய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது . பங்குபெற்ற 90 மீனவர் பெண்களுக்கு அனுபவம் வாய்ந்த தலைவர் (ஸ்கிப்பர்) மற்றும் உதவி கப்பல் அதிகாரி பயிற்சி அளித்தனர். பயிற்சி பெற்ற 10 மீனவப் பெண்கள், தூத்துக்குடி மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலகத்திலிருந்து வங்கிக் கடன் மற்றும் மானியங்கள் மூலம் புதிய தொழில் தொடங்கியுள்ளனர்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஊழியர்களுக்கு விரிவாக்க சேவை

மாநில மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் 47 களப்பணியாளர்களுக்கு தரமான மீன் குஞ்சுகள் கண்டறிவதற்கான பயிற்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 193 மீன் விவசாயிகளுக்கு நல்ல மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்கலைகழகத்தின்-மாதவரம் வளாகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் நடத்தப்பட்டது.

மீன் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருக்கு விரிவாக்க சேவைகள்

பல்கலைக்கழகத்தின் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையங்கள் மூலம் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் 4,810 பயனாளிகளுக்கு நன்னீர் மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, அயிரை மீன் வளர்ப்பு, போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. கூடுதலாக மீன் வளர்க்க தேவையான குளம் அமைத்திட, மீன் தீவன மேலாண்மை, மீன் நோய் மேலாண்மை போன்றவற்றில் 800க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மீன் விவசாயிகளுக்கு தொலைபேசி மற்றும் களத்தில் சென்றும் தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

மீன் பண்ணையாளர்களை ஊக்குவிக்க, பல்கலைக்கழகம் டிஜிட்டல் ப்ளூ ஹப் மின் விரிவாக்க மையத்தை ரூ.50 இலட்சம் செலவில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் நிதியுதவியில் நிறுவியுள்ளது. இந்த மையத்தில் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்கள் பற்றிய 25 டிஜிட்டல் உள்ளடக்கங்கள் உருவாக்கப்பட்டன.

ஒட்டுமொத்தமாக 859 பயிற்சி நிகழ்வுகள் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகள், நிறுவனங்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் நடத்தப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள 43,176 பயனாளிகளான (மீனவர்கள், மீன் பண்ணையாளர்கள், மீனவ மகளிர்கள், தொழில்முனைவோர் மற்றும் பிற பங்குதாரர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

தேசிய அளவில் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU) மற்றும் தமிழ்நாடு அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகியவை இணைந்து "தமிழ்நாட்டில் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் உற்பத்தி (FAPTN'24) – நிலை மற்றும் முன்னோக்கி செல்லுதல்" என்ற தலைப்பில் ஆலோசனைப் பட்டறை 30.11.2024 அன்று மீன்வள முதுகலை படிப்புகள் கல்லூரி, வாணியஞ்சாவடி, சென்னையில் நடைபெற்றது.

தொழில் நிறுவன உச்சி மாநாடு, 2024

இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் உள்ள நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், இயக்குநர்கள், மேலாளர்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தலைவர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் உட்பட தொழில் வல்லுநர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது,ஷெங் லாங் பயோடெக் (இந்தியா) பிரைவேட்.லிமிடெட்,திருவள்ளூர் மற்றும் அகீர் பயோமரைன் இந்தியா பிரைவேட் லிமிடெட், மும்பை ஆகியவற்றுடன் ஒத்துழைப்புடன் கூடிய கூட்டு ஆராய்ச்சி மற்றும் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி வசதிகளைப் பயன்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கம்

தமிழ்நாடு டாக்டர்.ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் மற்றும் ஆசிய மீன்வள சங்கம் (இந்தியக் கிளை) இணைந்து 12ஆவது மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கத்தை சென்னையில் மே 5, 2022 முதல் மே 7, 2022 வரை ஏற்பாடு செய்திருந்தது. தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வேந்தர்,மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கருத்தரங்கத்தை 05.05.2022 அன்று தொடங்கி வைத்தார். பல்வேறு மத்திய மற்றும் மாநில மீன்வள நிறுவனங்களைச் சேர்ந்த 741 பிரதிநிதிகள் பங்கேற்றனர். மேலும் "மீன் பண்ணையாளர்கள் சந்திப்பு"07.05.2022 அன்று நடத்தப்பட்டது, இதில் பல்வேறு மாநிலங்களில் இருந்து 200 மீன் பண்ணையாளர்கள் பங்கேற்றனர்.

கால்நடைப் பராமரிப்புத்துறை

சிறப்புக் கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்

சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் திட்டத்தின்கீழ் ரூ.23.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் 23,280 முகாம்கள் நடத்தப்பட்டு 26.02 இலட்சம் விவசாயிகளின் 240.92 இலட்சம் கால்நடைகள் /கோழியினங்கள் பயனடைந்துள்ளன.

கோழிவளர்ப்பு

தேசிய வேளாண் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், ரூ.1472.90 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், 36 மாவட்டங்களில் உள்ள 1,983 பயனாளிகளுக்கு தலா 500/1000 நாட்டுக்கோழிக்குஞ்சுகள், ஒரு மாதத்திற்குத் தேவையான தீவனம் மற்றும் குஞ்சுபொரிப்பான் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடியில் கறிக்கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் குறைந்த முதலீடு தொழில்நுட்பம் கொண்ட கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டன.

கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பில் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்தவும் நாட்டினக் கோழி வளர்ப்பை பிரபலப்படுத்துவதற்காகவும், 2022-2023ஆம் ஆண்டு முதல் கிராமப்புறங்களில் 250 கோழிகள் கொண்ட சிறிய அளவிலான நாட்டுக் கோழிப் பண்ணைகள் நிறுவ 50% மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022 – 2023ஆம் நிதியாண்டில் ரூபாய் 180 இலட்சம் செலவில், சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள், 50 சதவிகித மானியத்தில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், கடலூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 10 மாவட்டங்களில் நிறுவப்பட்டன.

இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2023-2024ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 26 மாவட்டங்களில் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) சிறிய அளவிலான (250 கோழிகள் / அலகு) 100 நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகள் ரூ.170 இலட்சம் செலவில் 50 சதவிகித மானியத்தில் நிறுவப்பட்டன. நடப்பு ஆண்டில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களைத் தவிர தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.160 இலட்சம் செலவில் 100 சிறிய அளவிலான நாட்டுக் கோழிப்பண்ணை அலகுகள் நிறுவப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில், அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப் பண்ணையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 60:40 என்ற வீதத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன், நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் ரூ.942.31 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில், செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில், மாநில அரசின் நிதியில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், கோழிக் குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன ஆலை ரூ.1381.92 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கவும், கிராமப்புறங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நடப்பு நிதியாண்டில் ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த/ ஆதரவற்ற / கைவிடப்பட்ட 38,700 பெண் பயனாளிகளுக்கு 4 வார வயதுடைய 40 நாட்டினக் கோழி குஞ்சுகள் 50% மானியத்தில் வழங்க, சென்னையில் உள்ள செயிண்ட் தாமஸ் மவுண்ட் ஊராட்சி ஒன்றியத்தை தவிர தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 பயனாளிகள் வீதம் ரூ.624 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. ஒரு பயனாளிக்கு 50% பின் மானியமாக ரூ.1,600/- வழங்கப்படுகிறது.

சைதாப்பேட்டை நாய் வளர்ப்புப் பிரிவை வலுப்படுத்துதல்

தமிழ்நாட்டின் நாட்டு நாய் இனங்களான கன்னி, ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை ஆகியவற்றைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்வதற்காக, சென்னை, சைதாப்பேட்டையில் செயல்பட்டு வரும் நாய் வளர்ப்புப் பிரிவு மொத்தம் ரூ.595 இலட்சம் செலவில் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

தடுப்பூசிப் பணிகள்

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் 6 சுற்றுகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு சுற்றிலும் தலா 86 இலட்சம் தகுதியுள்ள மாட்டினத்திற்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், 4 முதல் 8 மாத வயதுடைய 19.81 இலட்சம் கிடேரி கன்றுகளுக்கு கன்றுவீச்சு நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அஸ்காட் (ASCAD) திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தலா 124.99 இலட்சம் கால்நடைகளுக்கு அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பை நோய் மற்றும் ஆட்டம்மை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

ஆட்டுக்கொல்லி நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 152.03 இலட்சம் ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கிளாசிக்கல் பன்றி காய்ச்சல் தடுப்பு திட்டத்தின் கீழ், 50,800 பன்றிகளுக்கு கிளாசிக்கல் பன்றி காய்ச்சல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தீவன மேம்பாடு

2021-2022ஆம் ஆண்டில் 125 விவசாயிகளின் வயல்களில், ரூபாய் 1.17 கோடி மதிப்பீட்டில் மானாவாரிப் பகுதிகளில் பருவகாலத்தில் அதிகம் கிடைக்கும் பசுந்தீவனத்தை ஊறுகாய் புல்லாக பதப்படுத்தி பசுந்தீவனம் கிடைக்காத வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்கு தீவனம் அளித்திட 125 மாதிரி ஊறுகாய்புல் தயாரிக்கும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில் வணிகரீதியில் ஊறுகாய்புல் தயாரிக்கும் ஒரு அலகிற்கு, தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு, அலகு நிறுவப்பட்ட பிறகு 25 சதவீத மானியமாக ரூ. 10.50 இலட்சம் என்ற விகிதத்தில் கோவை, சேலம், திருநெல்வேலி (ம) திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தலா 1 பயனாளி தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் ரூ. 42 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு இத்திட்டம் நிறைவு பெற்றது.

2023-2024ஆம் ஆண்டில் கால்நடை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தீவன உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த அறிவுத்திறனை மேம்படுத்திட கால்நடைத்துறையின் 60 அலுவலர்களுக்கு 5 நாள்கள் கொண்ட பயிற்சி ஜான்சியிலுள்ள இந்திய புல்வெளி மற்றும் தீவன ஆராய்ச்சி நிலையத்தில் (IGFRI) ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

2022 முதல் 2024ஆம் ஆண்டுகளில் சென்னை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 4,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு முன்னோடித் திட்டமாக விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப தோப்புகள்/ பழத்தோட்டங்களில் பல்லாண்டுத்தீவனப்புற்கள் / தானிய வகைகளுடன் ஊடுபயிராக சாகுபடிசெய்திட ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000 வழங்கப்பட்டு தற்போது, இத்திட்டத்தில் 4,000 ஏக்கரில் தீவனபயிர் உற்பத்தி செய்யப்பட்டு, இதில் 5,377 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் ரூ.120 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு. நிறைவு பெற்றது. 2024-2025இல் இந்தத் திட்டம் 5,000 ஏக்கரில் ரூ1.66 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் தீவன விரயத்தை குறைத்து நறுக்கப்பட்ட தீவனங்களைக் கால்நடைகளுக்கு வழங்கும் பொருட்டு 50 சதவீத மானிய விலையில் மாநிலம் முழுவதும் மின்சாரத்தால் இயங்கும் 3,000 புல்நறுக்கும் கருவிகள் 3,000 சிறு குறு விவசாயிகளுக்கு ரூ.4.80 கோடி செலவில் வழங்கப்பட்டு இத்திட்டம் நிறைவு பெற்றது.

கால்நடைத்துறையின் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கடந்த நான்கு ஆண்டுகளில் 7300 மெட்ரிக் டன் பசுந்தீவனமும், 74 இலட்சம் பசுந்தீவன புல் கரணைகளும் உற்பத்தி செய்யப்பட்டு பண்ணைப் பயன்பாட்டிற்கும் விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டிலும், தீவன விரயத்தைக் குறைக்கவும், கால்நடைகளின் செரிமானத் தன்மையை அதிகரிக்கவும் 3,000 சிறுகுறு விவசாயிகளுக்கு 50% மானியத்தில் 3,000 புல்நறுக்கும் கருவிகள் ரூ 4.83 கோடி செலவில் வழங்கப்படவுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டும் கால்நடைகளுக்கு தடையின்றி பசுந்தீவனம் கிடைத்திடும் பொருட்டும் விவசாயிகளின் 4,000 ஏக்கர் இறவை நிலங்களில் ரூ1.10 கோடி செலவில் பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய 50% மானியத்தில் அதிக மகசூல் தரும் தானிய வகை மற்றும் பயிறு வகை தீவன விதைகள், உரச்செலவுகள் மற்றும் இடை உழவுப்பணி செலவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு ஆண்டுக்கு சுமார் 2.40 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டும், கால்நடைகளுக்கு தடையின்றி பசுந்தீவனம் கிடைத்திடும் பொருட்டும் ரூ.1.55 கோடி செலவில் விவசாயிகளின் 10,000 ஏக்கர் மானாவாரி நிலங்களில் பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய

50% மானியத்தில் அதிக மகசூல் தரும் தானிய வகை மற்றும் பயிறு வகை பசுந்தீவன விதைகள் மற்றும் உரச்செலவுகள் வழங்கப்பட்டு ஒரு ஏக்கருக்கு 10 மெட்ரிக் டன் வீதம் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு பசுந்தீவனம் குறைந்த விலையில் வழங்கும் பொருட்டு சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மாவட்ட கால்நடைப்பண்ணையில் 100 ஏக்கரில் அதிக மகசூல் அளிக்கும் பசுந்தீவனம் ரூ.5 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் 120 கால்நடைத் துறை அலுவலர்களுக்கு தீவன அபிவிருத்தியில் உள்ள சமீபத்திய புதுமையான தொழில்நுட்பம் குறித்த 3 நாள்கள் பயிற்சியானது கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

கால்நடைப் பண்ணை

கால்நடைபண்ணைகளின்மூலம்2,637செம்மறியாட்டுக்குட்டிகள்,2,176வெள்ளாட்டுக்குட்டிகள், 2,510 பன்றிக்குட்டிகள் மற்றும் 572 கன்றுகள் கால்நடை வளர்ப்போருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

214.56 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடெங்கும் செயற்கை முறை கருவூட்டல் பணிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் தங்கள் செம்மறியாட்டின் மரபுத்தன்மையை மேம்படுத்திட 2,154 மேச்சேரி செம்மறியாட்டுக் குட்டிகள் வழங்கப்பட்டன- திட்டம் நிறைவுற்றது.

ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று தொழில்நுட்பம் / ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் வழி 1,012 கருக்கள் (271 கருக்கள் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் வழி) சேகரிக்கப்பட்டு அவற்றில் 950 கருக்கள் (230 கருக்கள் ஆய்வுகூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் வழி) வேறு பசுக்களில் மாற்றம் செய்யப்பட்டு 105 கன்றுகள் (7 கன்றுகள் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் வழி) உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கட்டடப்பணிகள் (NABARD)

கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வண்ணம் நபார்டு வங்கி நிதியுதவியுடன் நபார்டு RIDF (25,27,28 மற்றும் 30) திட்டங்களின் கீழ் 252 கால்நடை நிலையங்களுக்கு ரூபாய் 141.82 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு தற்போது வரை 225 கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய 27 பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநில நிதி உதவியுடன் ரூ. 14.64 கோடி செலவில் 10 களக் கண்காணிப்பு அலுவலக கட்டடங்கள், 2 கால்நடை பன்முக மருத்துவமனைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.12 கோடி செலவில் 4 ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்ப் பாசன வேளாண்மை நவீன மயமாக்கல்

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 47 உப வடிநிலப் பகுதிகளில், 4,49,984 உறைவிந்து குச்சிகள் பயன்படுத்தி செயற்கை முறை கருவூட்டல்களும், 7,137 பாலினம் பிரிக்கப்பட்ட உறை விந்து குச்சிகள் பயன்படுத்தி கருவூட்டல்களும், 37,430 மரபணு வரையறுக்கப்பட்ட உறை விந்து குச்சிகள் பயன்படுத்தி கருவூட்டல்களும் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. மேலும் 23,341 கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது, 26,569 கன்றுகளுக்கு தாது உப்புக் கட்டிகள் வழங்கப்பட்டது. 31,302 கால்நடைகளுக்கு மடிவீக்க நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 10,445 கால்நடைகளுக்கு மடிநோய் சிகிச்சை

அளிக்கப்பட்டது. மேலும், 3,981 மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, 42,893 திட்டமிட்ட இனப்பெருக்க சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இது தவிர 3,843.5 ஹெக்டர் விவசாயிகளின் நிலத்திற்கு தீவன விதை விநியோகம் செய்து தீவன சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது.

நடமாடும் கால்நடை மருத்துவப்பிரிவு

குறிக்கோள்கள்

நிர்ணயிக்கப்பட்ட செயல் திட்டத்தின் அடிப்படையில் (ஒரு நாளைக்கு 2 கிராமங்கள் வீதம்) கால்நடை மருந்தகத்திலிருந்து தொலை தூரப்பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கால்நடைகளுக்கு வழக்கமான கால்நடை சேவைகளை வழங்கும் பொருட்டு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் இல்லத்திற்கே சென்று அவர்களின் கால்நடைகளுக்கு தேவையான மருத்துவச்சிகிச்சைகள், சிறு அறுவை சிகிச்சைகள், செயற்கைமுறை கருவூட்டல் மூலம் கருவுறுதலை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதன் மூலம் கால்நடைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்களை உபயோகிப்பதன் மூலம் கால்நடை வளர்ப்பை லாபகரமான தொழிலாக விவசாயிகளுக்கு கற்பித்தல்.

திட்ட விவரங்கள்

ஒரு இலட்சம் கால்நடைகளுக்கு ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி வீதம் 2.45 கோடி கால்நடைகளை பாதுகாக்க மொத்தம் 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் பயன்பாட்டில் உள்ளன.

நோய்கண்டறிதல், சிகிச்சை மற்றும் சிறு அறுவை சிகிச்சை, ஒலி-ஒளி காட்சி அமைப்பு கருவிகள் மற்றும் கால்நடைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான பிற அடிப்படை உபகரணங்களுடன் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிக்கேற்ப தனிப் பயனாக்கப்பட்ட ஊர்திகள்.

ஒவ்வொரு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியிலும் ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை மருத்துவ உதவியாளர் மற்றும் ஒரு ஊர்தி ஓட்டுநர் (கால்நடை பராமரிப்பு பணியாளர்) உள்ளிட்ட மூவர் அமர்ந்து பணியாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஊர்திகள்.

அழைப்பு மையத்தில் நான்கு கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 12 அழைப்பு நிர்வாகிகள் இருப்பர்.

1962 என்ற பிரத்யேக கட்டணமில்லா இலவச தொலைபேசி எண் மூலம் விவசாயிகளிடமிருந்து அழைப்பு மையத்தில் பெறப்பட்ட தொலைபேசி அழைப்பின் மூலம் விவசாயிகளின் இல்லத்திற்கே சென்று அவசர கால்நடை மருத்துவ சிகிச்சை சேவைகள் வழங்கும்.

அழைப்பு மையத்திற்கான கட்டணமில்லா இலவச தொலைபேசி எண் 1962.

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி வாங்குவதற்கு 100% தொடரா செலவினத்தொகை ஒன்றிய பங்களிப்பில் நிறுவப்பட்டது. ஊர்திகளின் பராமரிப்பு மற்றும் செயலபாட்டிற்கான தொடர் செலவினங்களுக்காக மத்திய மாநில பங்களிப்பு 60:40 ஆகும்.

சாதனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நடமாடும் கால்நடை மருத்துப்பிரிவு 20.08.2024 அன்று கொடியசைத்து தொடக்கி வைக்கப்பட்டது.

31.01.2025 வரை, நடத்தப்பட்ட 43,425 கிராம முகாம்களில் 5,46,754 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

நிர்வாகப் பணிகள்

உதவி இயக்குநர் பதவி உயர்வு -2021-2022 (01.07.2021) 44 கால்நடை உதவி மருத்துவர்களை உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2023-2024 உதவி இயக்குநர் பதவி உயர்வு (01.07.2023) 91 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2023-2024 துணை இயக்குநர் பதவி உயர்வு (01.07.2023) 42 உதவி இயக்குநர்களுக்கு துணை இயக்குநர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2023-2024 இணை இயக்குநர் பதவி உயர்வு (01.07.2023) 20 துணை இயக்குநர்களுக்கு இணை இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.2023-2024 கூடுதல் இயக்குநர் பதவி உயர்வு (01.07.2023) 5 இணை இயக்குநர்களுக்கு கூடுதல் இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

2019-2020 துணை இயக்குநர் பதவி உயர்வு (01.07.2019) 18 உதவி இயக்குநர்களுக்கு இயக்குநர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.(நாள் 28.04.2023)இத்துறையில் 2021ஆம் ஆண்டு 25 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் ஆராய்ச்சி உதவியாளர்களாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டு பணியில்சேர்ந்து கொண்டனர்.

இத்துறையில் 2022ஆம் ஆண்டு 1,111 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு கால்நடை உதவி மருத்துவர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு, 1,111 கால்நடை உதவி மருத்துவர்கள் பணியில் சேர்ந்து கொண்டனர்

இத்துறையில் 2024ஆம் ஆண்டு 697 கால்நடை மருத்துவப்பட்டதாரிகளுக்கு கால்நடை உதவி மருத்துவர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு, 697 கால்நடை உதவி மருத்துவர்கள் பணியில் சேர்ந்து கொண்டனர்.

இத்துறையில் 2024ஆம் ஆண்டு 12 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு ஆராய்ச்சி உதவியாளர்களாக, இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டது.

8 இளநிலை உதவியாளர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 15 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 10 தட்டச்சர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழியாக நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது,

149 உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

10 கண்காணிப்பாளர்களுக்கு மேலாளர் பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

இத்துறையில் கால்நடை ஆய்வாளர் நிலை I பணிபுரியும் 69 நபர்களுக்கு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்களாக பதவி உயர்வில் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது.

இத்துறையில் கால்நடை ஆய்வாளர் நிலை 2 பணிபுரியும் 308 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை-1 ஆக பதவி உயர்வில் பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது.

5 இரவு காவலர் 24 அலுவலக உதவியாளர், 4 பதிவறை எழுத்தர், 2 தூய்மைப் பணியாளர் பதவிகள் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டன. இத்துறையில் பணிபுரியும் பதிவறை எழுத்தர்களில் 6 நபர்களுக்கு பதிவுரு உதவியாளர்களாக நிலை உயர்த்தி நியமிக்கப்பட்டனர்.

புதிய கால்நடை நிலையங்கள் தோற்றுவித்தல்

ரூ.63.75 இலட்சம் மதிப்பீட்டில் 25 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள் பார்வை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ரூ.61.80 இலட்சம் மதிப்பீட்டில் 50 புதிய பார்வை கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / எருதுவிடும் விழா / வடமாடு நிகழ்வுகள்

5,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சமூக பண்பாட்டுப் பழக்கங்களுடன் வரலாற்று தொடர்பு கொண்ட ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / எருதுவிடும் விழா / வடமாடு நிகழ்வுகள் தமிழ்நாடு

பிராணிகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள் 2017இன் வரையறைகளுக்கு உட்பட்டு வருடந்தோறும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை நடத்தப்படுகின்றன. 2021ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை மொத்தம் 1,211 (ஜல்லிக்கட்டு / மஞ்சுவிரட்டு / எருதுவிடும் விழா / வடமாடு) நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

தமிழ்நாடு பிராணிகள் நலவாரியம்

தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் மூலம் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டம் 16.01.2023 அன்று திருவள்ளுவர் தினத்தில் தொடங்கப்பட்டது, கைவிடப்பட்ட மற்றும் அவதியுறும் கால்நடைகளின் உணவு தேவை மருத்துவ உதவி ஆம்புலன்ஸ் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தினால் பெறப்பட்ட விலங்குகள் நலப்பிரச்சனைகள் தொடர்பான 993 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. திருச்சி மற்றும் சென்னை உள்ளாட்சி அமைப்புகளுடன் பணிபுரியும் 26 நாய் பிடிப்பவர்கள் மற்றும் கால்நடைகளை கையாள்பவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியுடன் இணைந்து 03.06.2024 அன்று வெறி நாய் கடி தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. விலங்கினங்களின் கோடைகால தாகம் தீர்க்கும் பொருட்டு 1000 தண்ணீர் தொட்டிகள் விலங்கு நல ஆர்வலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் விநியோகிக்கப்பட்டு விலங்குகளின் நலம் பேணப்பட்டுள்ளது. பிராணிகள் இன விருத்தி கட்டுப்பாடு செய்யும் பொருட்டு அதற்காக பிராணிகள் இனவிருத்தி கட்டுப்பாடு மையங்கள் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கால்நடை பன்முக மருத்துவமனைகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் கால்நடை காப்பீடு திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக ரூ.18.87 கோடி செலவில் 4.10 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு (பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி) காப்பீடு செய்யப்பட்டுள்ளது .

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணையில் ரூ.4.55 கோடியில் ஆய்வுக்கூட கருத்தரித்தல் மற்றும் கருமாற்றும் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் 105 கன்றுகள் (சிவப்புசிந்தி –88, காங்கேயம்–14 மற்றும் புலிகுளம் –3) உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் பகுதி II இன் கீழ் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினை பயன்படுத்தி 11.33 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 15.54 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டது.

தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் IIIஇன் கீழ் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்த காளைகளின் உறைவிந்தினைப் பயன்படுத்தி 13.07 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 13.66 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டன.

தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் IVஇன் கீழ் இத்திட்டத்தின் நான்காம் கட்டம் 01.08.2022 முதல் 31.05.2023 வரையில் 15.79 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் என்ற இலக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தும் காலம் நீட்டிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 37.87 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் மூலம் 18.73 இலட்சம் பயனாளிகளின் 25.14 இலட்சம் கால்நடைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணையில் ரூ47.50 கோடி மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளில் 7.20 இலட்சம் பாலின பிரிக்கப்பட்ட விந்து உற்பத்தி செய்ய, பாலின பிரிக்க வசதிகள் எற்படுத்தபட்டுள்ளது. இதுவரை 4.45 இலட்சம் டோஸ்கள் தயாரிக்கப்பட்டு, கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பாலின பிரிக்கபட்ட விந்து கொண்டு செயற்கைக் கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாலின பிரிக்கப்பட்ட விந்து கொண்டு மொத்தம் 48,250 செயற்கை கருவூட்டல்கள் பதிவாகியுள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையத்தை பலப்படுத்த புதிய விந்து பதப்படுத்தும் வசதி ஏற்படுத்தும் பணிகள் ரூ.9.75 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை வலுப்படுத்த புதிய விந்து சேகரிப்பு முற்றம், உறைந்த விந்து விநியோகமையம், காளைகளைக் கழுவுதல் மற்றும் காத்திருப்புபகுதி, கண்ணாடிப் பொருள்கள் கிருமி நீக்கம் செய்யும் அறை மற்றும் சேகரிப்பு முற்றத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுதல், கட்டடங்களுக்கு சிறப்பு பழுது நீக்கப் பணிகள் மற்றும் உயிர் பாதுகாப்பு வசதிகள், வேலி அமைக்கும் பணிகள் ரூ.6 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு 142 விண்ணப்பங்களை அங்கீகரித்துள்ளது. இதன் மொத்த திட்டச் செலவு ரூ.93.17 கோடி. மானியமாக ரூ.40.65 கோடி ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இதில் ரூ.8.87 கோடி தொழில்முனைவோருக்கு முதல் மற்றும் இரண்டாம் தவணை மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியல் 2020இன்படி மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையில் 12ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. இதனை 06.12.2021அன்று மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம். கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளத்தின் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்தி, தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் உறுப்பினரான இல்லுமி ஜீன் எனும் தொடக்க நிலை நிறுவனத்தின் மூலம், கள அளவில் நாய்களைத் தாக்கும் இரத்த ஓரணு ஒட்டுண்ணிகளைக் கண்டறியும் சேவையைத் தொடக்கியுள்ளது.

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் கூடுதல் கல்விக்கூட கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் மாண்புமிகு மீன்வளம் -மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் 10.07.2021 அன்று அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 2021-2022ஆம் ஆண்டு நிதிக் கூட்டத் தொடரில் தமிழ்நாடு அரசு அறிவித்த பின்வரும் புதிய வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

ரூ.1.49 கோடியில் கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்.

ரூ.1.80 கோடியில் தருமபுரி மாவட்டத்தில், திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.

ரூ.1.52 கோடியில் தமிழ்நாட்டின் சிறுவிடை கோழியின வள மையம் நிறுவுதல். ரூ.1.97 கோடியில் தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவுதல்.

ரூ.2.50 கோடியில் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தின் வளாக வசதிகளை மேம்படுத்துதல்.

ரூ.1.61 கோடியில் விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் நிறுவுதல்.

சேலம்கருப்புவெள்ளாட்டினைப்பாதுகாக்கும்இலக்குடன்தேசியவேளாண்அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பண்ணைக் கட்டடங்களை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் 08.03.2022 அன்று திறந்து வைத்தார்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள வெறிநோய் (ரேபிஸ்) நோயறிதல் ஆய்வகத்திற்கான ISO/IEC 17025:2017 எனும் NABL அங்கீகாரம் 2024வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2022–2023ஆம் ஆண்டில், தேசிய மாட்டினப்பெருக்க திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு, ரூ.551.40 இலட்சம் செலவில் பின்வரும் புதிய திட்டங்களை இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்திட அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டின மாடுகள் வளர்ப்பினைப் பிரபலப்படுத்துவதற்கென நாட்டின மாடுகள் பிரிவினை நிறுவுதல்.

நீலகிரி மலையில் அழிந்து வரும் தோடா எருமைகளின் நிலைப்புத் தன்மைக்காக பழங்குடியினருடன் கூடிய சமூகப் பங்கேற்பு அணுகுமுறை.

2022–2023 பட்ஜெட் கூட்டத் தொடரில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள பின்வரும் ஐந்து புதிய திட்டங்களை ரூ.548.97 இலட்சத்தில் இப்பல்கலைக்கழகம் செயல்படுத்துகிறது.

கரூர் மாவட்டத்தில் புறக்கடை கோழி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் நிறுவுதல்.

உம்பளாச்சேரி மாடுகளின் இனத்தைப் பல்துறை அணுகுமுறையின் மூலம் அதன் பூர்வீக வாழ்விடங்களில் பாதுகாத்தல் – கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு.

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின நாய்களுக்கான இனப்பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தென்காசி மாவட்டத்தில் நிறுவுதல்.

கிராமப்புற முன்னேற்றத்திற்கான வெண்பன்றி இனப்பெருக்கம் மற்றும் உள்ளீட்டு மையம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுதல்.

நாட்டுக்குட்டை மாடுகளுக்கான பாதுகாப்பு மையம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் அமைத்தல்.

இப்பல்கலைக்கழகம், 27.09.2022 மற்றும் 28.09.2022 ஆகிய தேதிகளில் அதன் உறுப்புக் கல்லூரிகளில் வெறிநோய்த் தடுப்பு தடுப்பூசி திட்டத்தை நடத்தியதன் மூலமாக 4388 நாய்கள் பயனடைந்தன.

18.10.2022 அன்று 'என் விரல் நுனியில் என் நூலகம்' எனும் செயலி தொடக்கம்.

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூ.189.49 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்ட புதிய கட்டடங்களை 09.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள்.

உடுமலைபேட்டை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.82.13 கோடி மதிப்பில் கல்வி கட்டுமானங்கள் உட்பட புதிய கட்டடங்கள்.

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.11.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவப் பயிற்சிக்கூடம், விலங்குகள் வழி பரவும் நோயறி ஆய்வகம் உட்பட புதிய கட்டடங்கள்.

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.7.14 கோடி மதிப்பீட்டிலான மாணவர் மற்றும் மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடங்கள்.

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.4.15 கோடி செலவில் ஊரக கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள நவீன சிகிச்சை வசதிகளுடன் கூடிய மண்டல கால்நடை சிறப்பு மருத்துவமனை.

சென்னை, மாதவரத்தில் தேசிய கால்நடை இயக்ககத்தின் கீழ் ரூ.2 கோடி மதிப்பீட்டிலான கால்நடை இறைச்சி உடலங்க பயன்பாட்டு ஆலை

ஓக்லஹோமா மாகாணப் பல்கலைக்கழகம், ஸ்டில்வாட்டர், அமெரிக்காவைச் சேர்ந்த பத்து மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் 14.06.2023 முதல் 14.07.2023 வரை மருத்துவப் பயிற்சி பெற்றனர்.

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு B.V.Sc. & A.H. பயிலும் மாணவர் எஸ்.லட்சுமணன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய முதுகலை மாணவர் சேர்க்கைக்கான 2023ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத் தேர்வில் (ICAR AIEEA PG 2023) கால்நடை உயிர்த் தொழில்நுட்பம் பாடப் பிரிவில் முதல் இடம் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய தரவரிசை நிறுவனத்தின் (NIRF) தரவரிசைப் பட்டியல்-2022இல் இந்தியாவின் அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களில் 12ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

26.07.2023 அன்று ராஜ்பவனில் நடைபெற்ற தமிழ்நாட்டின் உயர்கல்வியில் சிறந்து விளங்கும் நிறுவனம்/பல்கலைக்கழகங்களுக்கான பாராட்டுக் கூட்டத்தில் இப்பல்கலைக்கழகம் பங்கேற்றது. இந்நிகழ்வில், தேசிய தரவரிசைப் பட்டியல் (NIRF) 2022இல் 12ஆவது இடத்தினை (விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறையில்) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பெற்றமைக்காக பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

ICAR நிதியுதவியுடன் செயல்படும் பல்கலைக்கழக நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2022-2023ஆம் ஆண்டில், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கோடுவெளி, உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மொத்தம் 28 மாணவர்கள் 4-6 வாரங்களுக்கு அமெரிக்காவின் ஓக்லஹோமா மாகாணப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றனர்.

கால்நடை ஒட்டுண்ணிகளின் முன்னேற்றத்திற்கான உலக சங்கத்துடன் இணைந்து, "ஒட்டுண்ணிகள்: உலகளாவிய பாதிப்புகள், உள்ளூர் தீர்வுகள்" என்ற தலைப்பில் 29ஆவது சர்வதேச மாநாடு சென்னையில் 20.08.2023 முதல் 24.08.2023 வரை நடத்தப்பட்டதில் 56 நாடுகளில் இருந்து 350 அறிவியலறிஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கோடுவெளியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரி, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் FSSAIஆல் Eat Right Campus என சான்றளிக்கப்பட்டது.

செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம், சாண்டிநல்லாவின் உதவியுடன் அழிந்து வரும் தோடா இனத்தை பாதுகாத்ததற்காக திரு. ரஞ்சித் குட்டன், தோடா விவசாயி அவர்கள் கர்னாலில் உள்ள தேசிய கால்நடை மரபணு வளப் பணியகத்திடம் இருந்து 23.12.2023அன்று இன பாதுகாப்பு விருதைப் பெற்றார்.

ரூ.9 இலட்சம் செலவில் "இலாபகரமான நாட்டின கால்நடை வளர்ப்பிற்கான மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள்" எனும் திட்டத்தினை ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்திட ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்ககத் திட்டத்தின் கீழ் ரூ.345.71 இலட்ச மதிப்பீட்டில் கீழ்க்குறிப்பிட்ட ஆறு திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பன்றியின பார்வோ நச்சுயிரியின் தொற்று கண்காணிப்பு, மூலக்கூறு பகுப்பாய்வு மற்றும் தடுப்பூசி தயாரித்தல். நாட்டின மற்றும் உயர்ரக பன்றி வளர்ப்பாளர்களுக்கான நிலையான வாழ்வாதாரத்திற்கான தொழில்நுட்பத் தலையீடுகள்.

தமிழ்நாட்டின் உள்நாட்டு ஆட்டினங்களில் ஒட்டுண்ணி நோய்த்தொற்றுக்கு (Haemonchus contortus) எதிரான மரபணு எதிர்ப்பை மதிப்பீடு செய்தல். தமிழ்நாட்டின் வெள்ளாடுகளின் தீவனப் பற்றாக்குறையைப் போக்க வேளாண்-தொழில்துறை உபப் பொருள்களிலிருந்து தீவனம் அல்லாத நார்ச்சத்து அடிப்படையிலான மொத்த கலப்பு தீவனங்களை (TMR) உருவாக்குதல்.

இலாபகரமான உள்நாட்டு கால்நடை வளர்ப்பிற்கான மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தும் உத்திகள் துல்லியமான அஃப்லாடாக்சின் B1 அளவீட்டிற்கு மக்காச்சோளத்தின் பொருத்தமான மாதிரி அளவை தீர்மானித்தல்

ஆலம்பாடி கால்நடை ஆராய்ச்சி நிலையம், தருமபுரி; கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், திருநெல்வேலி, ஒரத்தநாடு மற்றும் தேனி; தடுப்பூசி ஆராய்ச்சி மையம்-நச்சுயிரித் தடுப்பூசிகள், கோழி ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக்கழக கண்டுபிடிப்பு மற்றும் கருவி மையம், மாதவரம் பால் பண்ணை; உணவு மற்றும் பால் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள ரூ.33.11 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு மற்றும் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.08.2024அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தேசிய தரவரிசை நிறுவனத்தின் (NIRF) தரவரிசைப் பட்டியல்-2023இல் இந்தியாவின் அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களில் 17ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள வெறிநோய் (ரேபிஸ்) நோயறிதல் ஆய்வகத்திற்கான ISO/IEC 17025:2017 எனும் NABL அங்கீகாரம் 2028 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது . 2023ஆம் ஆண்டிற்கான மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள்/ மத்திய வேளாண் பல்கலைக்கழகங்கள் / நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கான தென் பிராந்தியத்தின் சிறந்த CeRA பயன்பாட்டிற்கான பாராட்டுச் சான்றிதழை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. 22.01.2025அன்று ரூ.2500 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் பெண்கள் விடுதி கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

தொழில்நுட்பப் பரிமாற்றம்

பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட 5 தடுப்பூசிகள் தயாரிப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் நோய்க்காரணிகள் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கென தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

கறவை மேலாண்மை நடைமுறைகளில் போதிய திறனை கறவைமாடு வளர்ப்போரிடையே ஊக்குவிக்கும் நோக்குடன் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்திட இப்பல்கலைக்கழகம் திருமலா பால் பொருள்கள் தனியார் நிறுவனம், சென்னை மற்றும் அசிஸ்ட் டெவெலப்மெண்ட் சொல்யூஷன்ஸ், சென்னை நிறுவனங்களுடன் 03.09.2021அன்று முக்கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

உயிர்த் தொழில்நுட்பத் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் முனைப்புடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 06.07.2022 அன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (டிட்கோ) டைசெல் பயோபார்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் செயல் பாட்டில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் 16.08.2022 முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் யுனிவெர்சிடாஸ் பிரவிஜெயா, இந்தோனேசியாவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் 23.01.2023 அன்று கையெழுத்திடப்பட்டது. இதன் காலவரையறை ஐந்தாண்டுகள் ஆகும்.

தமிழ்நாடு மாநிலம் முழுவதும் உள்ள 129 கோவில்களில் மூன்றாண்டுகளுக்கு கோசாலைகளை இணைந்து பராமரிக்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை 25.01.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. பெண் சுய உதவிக்குழுக்களுக்கு உணவு பதப்படுத்துதல் மற்றும் பேக்கரி பொருள்கள் உற்பத்தியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகமும் 21.10.2024 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இதன் காலவரையறை மூன்றாண்டுகள் ஆகும். கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் இணைந்து செயல்படும் இலக்குடன் தமிழ்நாடு கால்நடை

மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் தாம்பரத்திலுள்ள தேசிய சித்தா நிறுவனமும் 26.12.2024 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளன. இதன் காலவரையறை ஐந்து வருடங்கள் ஆகும். கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் மேலும் 33 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

காப்புரிமை

இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கிய கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள 19 தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன.

கோழித் தோல் கொழுப்பிலிருந்து பெறப்பட்ட எண்ணெயில் இருந்து உயிரி டீசல் உற்பத்தி. பறவையினங்களைத் தாக்கும் புற்றுநோய் நச்சுயிரிகளைக் கண்டறிய பன்முனை பிசிஆர் பிரைமர்கள். ஆந்த்ராக்ஸ் நச்சுயிரித் தடுப்பூசியின் ஊநீர்ப் பகுப்பாய்வு செய்வதற்கான அகார் ஜெல் இம்யூனோடிப்யூசன் சோதனை சாதனம். மாண்டனைடு உறிஞ்சப்பட்ட ஆந்த்ராக்ஸ் ஸ்போர் தடுப்பூசியை தயாரிப்பதற்கான ஒரு செயல்முறை. முட்டைகளின் இருப்புத் திறனை அதிகரிக்க முட்டைத் தட்டுகளில் பூசுவதற்கான கலவை தயாரிக்கும் முறை.

வெள்ளைக் கழிச்சல் நோயை உண்டாக்கும் குறிப்பிட்ட மரபணுவிற்கு எதிரான ஓரணு ஊடகத் தடுப்பூசி. சியா விதைகளில் இருந்து பெறப்பட்ட ஒமேகா-3 கொழுப்பு அமிலத்துடன் செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து சாக்லேட். முலாம்பழம் கொண்டு செறிவூட்டப்பட்ட, குறைந்த கலோரி மற்றும் கொழுப்புடைய தினை சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம். கறவை மாடுகளில் அசையூண் இரைப்பை நொதித்தல் மற்றும் மீத்தேன் உமிழ்வைத் தணிப்பதற்கான கலவை.

உண்ணிகளைக் கட்டுப்படுத்த டைமெதிகான் உருவாக்கம் மற்றும் அதன் செயல்முறை. கால்நடைகளின் தகவலை கால்நடைகளில் பதிக்க உதவும் பச்சை குத்தும் ஊசிகளுடன் ஒரு சுத்தியல். நாயினங்களின் இரத்த சிகப்பணுக்கள்/ தட்டுக்களுடன் பிணைக்கப்பட்ட நோயெதிர்ப்புக் காரணிகளைக் கண்டறிதல் மற்றும் அதற்கான சாதனம் உருவாக்கம். காயமடைந்த விலங்கைத் தூக்கிச் செல்வதற்கான இயந்திர அகலத்தை சரிசெய்யக்கூடிய இரட்டை ஒருங்கிணைப்பு சாதனம். கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை ஊர்தி மற்றும் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை ஏற்றிச் செல்லும் முறை. கால்நடைகளை இறைச்சியாக்குவதற்கு முன் உணர்விழக்கச் செய்யப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தால் இயங்கக் கூடிய கருவி.

மண்ணில்லா தீவன சாகுபடிக்கான சாதனம் மற்றும் முறை. பல்வேறு வயதுள்ள ஆட்டுக்குட்டிகளுக்கு பல்வேறு அளவுகளில் திரவ உணவை சேமித்து வழங்குவதற்குப் பயன்படும் இலகுவான சிறிய கருவி. கோழி முட்டையில் கரு வளர்ச்சியைக் கண்காணிக்கும் இலகுவான சிறிய சாதனம். காயம்பட்ட கால்நடைகளின் நோயறிந்து சிகிச்சை அளிக்கும்போது அவற்றை அடைத்து வைப்பதற்கான சாதனம்.





வனம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்



திரு. **ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்** அவர்கள்
மாண்புமிகு வனம் மற்றும்
கதர் துறை அமைச்சர்



ஈரோடு மாவட்டம் அந்தியூர், கோபிசெட்டிபாளையத்தில் 80,567 ஹெக்டேர் வனப்பரப்பில் தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்"...

ரூ.7 கோடி செலவில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் உயிர்ப்பன்மை - ஆய்வகம் மற்றும் சூழல் பூங்கா...

ரூ.25 கோடியில் மரக்காணத்தில் சர்வதேச பறவைகள் பாதுகாப்பு மையம்...

ரூ.40.94 கோடியில் தஞ்சாவூர் மனோராவில் சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம்...

ரூ.25 கோடி மதிப்பீட்டில் 100 கிராமங்களில் பசுமை பூங்காக்கள்...

வனத்துறை

வன விலங்கினப் பாதுகாப்பு

நாட்டிலேயே அதிக ஆசிய யானைகள் வசிக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இத்தகைய விலைமதிப்பற்ற யானைகளின் உயிரினை மின் கசிவின் மூலம் இழக்காவண்ணம் பாதுகாக்க, தமிழ்நாடு மின்வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள், 2023 அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

வன உயிரின வார விழா 2022-க்கு முன்பாக, இயற்கைக்கு மாறான மற்றும் தடுக்கக்கூடிய மரணங்கள் தொடர்பான சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கும், தகுந்த நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும், காடுகளில் யானைகளின் இறப்பை பற்றிய விரிவான பகுப்பாய்வை நடத்துவதற்கான இந்தியாவின் முதல் யானை இறப்பு தணிக்கை கட்டமைப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டு நடைமுறையில் உள்ளது.

கோவையில், கேரள மாநிலம் பாலக்காட்டை ஒட்டியுள்ள மதுக்கரை பகுதியில் உள்ள இரயில் பாதைகளில் யானைகள் இறப்பதைத் தவிர்க்க செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பு ரூ. 7.24 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.8.28 கோடி மதிப்பீட்டில், யானைகள் இரயில் தண்டவாளத்தில் நடமாடாமல் தடுக்கவும், விபத்துக்கள் ஏற்படா வண்ணம் தடுக்கவும், கோவை மதுக்கரை வனப்பகுதியில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஆளில்லா விமானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2024இல் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிட்டார். (யானைகள் எண்ணிக்கை-3,063),

தெப்பகாடு யானைகள் முகாமில் நவீன யானைகள் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மையம் அமைக்கும் திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது.

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழி கமுதி யானைகள் முகாமை ரூபாய் 5 கோடி செலவில் மேம்படுத்த அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில், சாடிவயல் பகுதியில், யானைகள் பராமரிக்கத் தேவையான தங்கும் இடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுடன் ஒரு புதிய யானைகள் முகாம் ரூபாய் 8 கோடி செலவில் அமைக்கப்படும்,

வன மற்றும் வனஉயிரினக் குற்றங்களை கண்டறிந்து தடுப்பதற்காக தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு சென்னை, கோவை, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டல அலுவலகங்களுடன் நிறுவப்பட்டு திறம்பட செயல்பட்டு வருகின்றன.

கட்டளைக் கட்டுப்பாட்டு மையம்: தமிழ்நாடு வனப்படையின் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 2023-2024 நிதியாண்டில் வனப்பகுதிகளில் இருந்து, மனித வசிப்பிடங்களுக்குள் வரும் வன உயிரினங்களை கண்காணிக்க, 6 கோடி ரூபாய் செலவில், செயற்கை நுண்ணறிவு பொருத்தப்பட்ட சென்சார் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேற்படி உபகரணங்கள் தோராயமாக 90 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தை, தென்காவிரி வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் உள்ள 80,567 ஹெக்டேர் வனப்பரப்பில் "தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்" என்னும் புதிய சரணாலயத்தை இந்த அரசு 30.01.2024 நாளிட்ட அரசாணை 19இல் அறிவிக்கை செய்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் தாலுகாவில் வானூரிலுள்ள 5151.6 ஹெக்டேர் கழுவேழி சதுப்பு நிலத்தை 16-ஆவது பறவைகள் சரணாலயமாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் நஞ்சராயன் குளம் 125.86 ஹெக்டேர் 17-ஆவது பறவைகள் சரணாலயமாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

புலிகாட் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ரூ.3.70 கோடி செலவில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரியலூரில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தை ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ரூ.1 கோடி செலவில் மேம்படுத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ராம்சார் தளம் - வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் 9.3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு ஆணை வெளியிட்டுள்ளது

கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக ரூ.6 கோடி செலவில் ராம்சார் தளம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்தியாவின் முதல் தேவாங்கு சரணலயமாக, கடலூர் தேவாங்கு சரணாலயத்தை அறிவித்து 11,806 ஹெக்டேர் பரப்பளவில் திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில, அமைந்துள்ளது. இவ்வினங்கள் மிகுந்த அழிவிற்கு உள்ளாகும் நிலையில் உள்ளது.

ஆமைகள் பாதுகாக்கும் முயற்சியில், சென்னையில், ரூ.16.85 கோடி செலவில் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கி 68,640 ஹெக்டேர் பரப்பளவில், ஒரு புதிய தென் காவிரி வனவிலங்கு சரணாலயத்தை தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ளது.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் (காக்காச்சி, அம்பாசமுத்திரம் சரகம் சிங்கம்பட்டி) உயிர்ப்பன்மை - ஆய்வகம் மற்றும் சூழல் பூங்கா ரூபாய் 7 கோடி செலவில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

91 மாவூத் மற்றும் காவடியர்களுக்கு கலாச்சார பண்பாட்டு முறையில் வீடுகள் கட்டித்கொடுக்க தமிழ்நாடு அரசு தீர்மானித்து ரூ.9.1 கோடி செலவில் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு வருகின்றன.

மரக்காணத்தில் ரூ.25 கோடி செலவில் சர்வதேச பறவைகள் பாதுகாப்பு மையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூரில் உள்ள மனோராவில் ரூ.40.94 கோடியில் சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ.10 கோடி மதிப்பீட்டில், 2023-2024ஆம் ஆண்டிற்கான TANII திட்டத்தின் கீழ் யானைகள் நடமாட்ட எச்சரிக்கை வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் யானைகளின் நடமாட்டத்தைத் கண்காணிக்கவும், மனித-யானை மோதலை நிவர்த்தி செய்யவும், மின்சாரம் தாக்கி யானைகள் இறப்பதைத் தடுக்கும் விதமாக பூமிக்கடியில் 15 கி.மீ. தூரத்திற்கு முதுமலை புலிகள் காப்பகத்தின் உள்பகுதியில் பூமிக்கு கீழ் 11 கே.வி. மின்சார லைன் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முதல் கடல் உயரடுக்கு படை, மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்கா மற்றும் பால்க் விரிகுடா பகுதி உட்பட இரண்டு பிரிவுகளுடன் அமைப்பதற்கான ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது.

வனம் மற்றும் வனஉயிரினக் குற்றங்களை மிகவும் திறமையாக மற்றும் திறம்பட கண்டறிவதற்காகவும், வனம் மற்றும் வனஉயிரினப் பாதுகாப்பில் போரிடும் வலிமையை சேர்ப்பதற்காகவும், வனம் மற்றும் வனஉயிரினப் பிரிவுகளில் வளர்ப்பு, பயிற்சி மற்றும் பணி ஈடுபடுத்தல் ஆகியவற்றிற்காக 2021-2022இல் ஆறு வனஉயிரின மோப்ப நாய் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் மாநில வன விலங்கினை பாதுகாத்தல், அதன் வாழ்விடத்தை

விரிவுப்படுத்துதல் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 2021-2022 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு நீலகிரி வரையாடு திட்டத்தை ரூ.25.13 கோடியில் செயல்படுத்தி வருகிறது. 16.11.2022 அன்று நடைபெற்ற வன உயிரினங்களுக்கான மாநில வாரியக் கூட்டத்தின்போது, அந்நிய களைத் தாவரங்களை, அகற்றுதல் மற்றும் மறுசீரமைப்பு செய்தலுக்கான கொள்கை (TN-PIPER) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்தியாவில் முதன்முறையாக வனஉயிரின கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு, மாநில அளவிலான ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

மனித-விலங்கு மோதல்களின் மீது மனித இறப்பிற்கான இழப்பீட்டை ரூ.10 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஏ.ஜே.டி. ஜான்சிங் வன உயிரினப் பாதுகாப்பு விருது 25 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையுடன் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

நெல்லை வனவிலங்கு சரணாலயம் மற்றும் கங்கைகொண்டான் புள்ளி மான்கள் சரணாலயம் ஆகியவற்றிற்கு சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டல கண்காணிப்பு குழுக்களை அரசு அமைத்துள்ளது.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் சிறந்த மேலாண்மை மற்றும் மேம்பாட்டிற்காக நிலையான உயிரியல் பூங்கா மேம்பாட்டுக் குழுவினை அரசு அமைத்துள்ளது.

வனவிலங்குகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்காக ரூ.1 கோடி மதிப்பீட்டில் தண்ணீர் தொட்டிகளை தூர்வாருவதற்கு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காகாவும், தேசிய பூங்காக்கள்/வனவிலங்கு சரணாலயங்கள்/பறவைகள் சரணாலயங்கள் ஆகியவற்றிற்கான ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை செயல்படுத்த ரூ.44.1 கோடி அளவில் நிர்வாக அனுமதியும், 2024-2025-ஆம் ஆண்டிற்கான முதல் தவணையாக ரூ.11 கோடியும் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு அழிந்து வரும் இனங்கள் பாதுகாப்பு நிதி" ரூ.50 கோடி வைப்புத் தொகையுடன் நிறுவப்பட்டுள்ளது.

தேன்கனிக்கோட்டை தாலுகாவில் யானைகள் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக இரும்பு கம்பி கயிறு வேலி அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மான்களுக்கான புல்வெளிகளை அகற்றி மறுசீரமைக்க ரூ.7.50 இலட்சம் நிதி கேம்பா (CAMPA) திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கல்லூரி வைகை அணை வளாகத்தில் புல் வகைகள் மற்றும் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டது.

1,197 கிலோ மீட்டர்கள் பரப்பளவில் அகஸ்தியர் யானைகள் காப்பகம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் ஆமைகளை பாதுகாப்பதில் தமிழ்நாடு வனத்துறை தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இடப்பெயர்வு பருவமான 2023-2025 வரையில் 8,67,048 முட்டைகள் சேகரிக்கப்பட்டு 7,47,983 குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன.

மனித-வனவிலங்கு மோதலைக் குறைக்க அரசு பெரிய அளவில் முயற்சிகளை எடுத்துள்ளது. மனித-வனவிலங்கு மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக இழப்பீடு வழங்குவதை உறுதி செய்வதற்காக 10 கோடி ரூபாய் கார்பஸ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி வரையாடுகளின் கணக்கெடுப்பு அறிக்கை 2024இல் வெளியிடப்பட்டு, அதில் 1,083 எண்ணிக்கையில் நீலகிரி வரையாடுகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள பறவைகள் சரணாலயங்களின் ஒருங்கிணைந்த நிர்வாகத்தை மேற்பார்வையிட தமிழ்நாடு மாநில பறவை ஆணையத்தை அரசு அமைத்துள்ளது.

வனப் பாதுகாப்பு

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள லாங்வுட் ஷோலா வனப்பகுதிக்கு "குயின்ஸ் காமன்வெல்த் கேனோபி" அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சர்வதேச அங்கீகாரம், உலகெங்கிலும் உள்ள வனத் திட்டங்களுடன் இணைந்து பழமையான காடுகளின் வளர்ச்சிக்கு உதவும். லாங்வுட் ஷோலா

காடு ஒரு காலத்தில் ஆக்கிரமிப்பு மற்றும் மனித ஊடுருவல்களால் கைப்பற்றப்பட்டிருந்தது, தற்போது கெய்ர்ன் ஹில் என்ற மாற்று இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் ரூ.481.148 கோடி செலவில் தமிழ்நாட்டின் சீரழிந்த வன நிலப்பரப்பை மீட்டெடுப்பதற்கான கட்டம் -1 திட்டத்தை 2021-2022 முதல் 2025-2026 வரை செயல்படுத்துவதற்காக, உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடம்பூர் கிராமத்தில் 137.65.0 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் தாவரவியல் பூங்கா அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ரூ.1 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

கிண்டி தேசிய பூங்காவை குழந்தைகள் இயற்கை பூங்காவாக ரூ.20 கோடியில் மறுவடிவமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2022-2025 ஆம் ஆண்டிற்கான வனப்படையின் நவீனமயமாக்கல் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ரூ.52.83 கோடி செலவில் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது

காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)" எனும் புதிய திட்டத்தினை 2022-2023 முதல் 2029-2030 வரையிலான 8 ஆண்டு காலத்தில் ரூ.920.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு வனப்பகுதி அனுபவக் கழகம் மூலம் சூழல் சுற்றுலாவை மேம்படுத்த அரசு கருதுகிறது.

ஜலகம்பாறை அருவி வனத்துறை மூலம் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.08.2024ல் திறந்து வைக்கப்பட்டது.

சேத்துமடை (கோயம்புத்தூர் மாவட்டம்), மணவணூர் மற்றும் தடியன் குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), ஏலகிரி (திருப்பத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகள் சூழல் சுற்றுலாத் தலங்களாக தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும். தங்கும் இடங்கள், வனங்களைப் பற்றிய விழிப்புணர்வு மையங்கள் போன்ற பல வசதிகள் இத்தலங்களில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் வரும் வருவாய் அப்பகுதியின் வளர்ச்சிக்காகச் செலவிடப்படும்.

ரூ.25 கோடி செலவில் பள்ளிகரணை பாதுகாப்பு மையத்தை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.



16.08.2024 நாளிட்ட அரசாணையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மன்னார் வளைகுடா உயிர்க்கோள மையம் காப்பக அறக்கட்டளையில் கீழ் உள்ள சமூக அமைப்பின் மூலம் இராமஸ்வரம் தீவில் சமூக சுற்றுலா ரூ.15 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என ஆணைகள் வெளியிடப்பட்டது.

கொடைக்கானலில் அனுமதிக்கப்பட வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை குறித்த ஆய்வை ஐஐடி சென்னைக்கு ரூ.2.09 கோடி வழங்கவும் நீலகிரி மலையின் ஆய்வை ஐஐஎம் பெங்களூருக்கு ரூ.1.50 கோடி செலவில் வழங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள கரையச்சள்ளி தீவுகளில் அலையாத்தி காடுகளை பாதுகாப்பதற்கும் பவளப்பாறைகளை மீட்டெடுப்பதற்கும் பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, கிரையோஜெனிக் வசதிகளுடன் கூடிய பூர்வீக இன விதைப் பெட்டகத்தை நிறுவுவதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது.

மலையேற்ற வரைபடத்துடன் கூடிய 40 மலையேற்றப் பாதைகளில் அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக, மலையேற்றப் பாதைகள் அடையாளம் காணப்பட்டு அரசால் ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது.

24.10.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள் (Trek Tamil Nadu Logo) www.trektamilnadu.com என்ற இணையதளம் மற்றும் அதன் சின்னத்தினை தொடங்கி வைத்தார்.

கூடலூர் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆர்கிடேரியங்களை மேம்படுத்த ரூ.3 கோடி செலவில் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் கொல்லி மலையில் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரவு வான் பூங்கா அமைக்கப்படும்.

தமிழ்நாடு வனத்தீ முகாமைத்துவ தகவல் முறை (TNFFMIS) உருவாக்கப்பட்டு, கள அளவில் நேரடி கண்காணிப்பு மற்றும் வனத்தீ தடுப்பிற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நிலப்பரப்பு நிலை தீர்மான ஆதரவு முறை (Geospatial Decision Support System) ArcGIS Enterprise மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதுமையான டிஜிட்டல் தளம் தரவுகளின் வரைபட மயமாக்கலை பயன்படுத்தி வன மேலாண்மையில் தகவல் சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. இது புல நிலை பணியாளர்களால் Survey123 பயன்பாடு மூலம் வழங்கப்படும் கட்டமைப்பு மற்றும் துறையின் சொத்துக்கள் / ஆதாரங்கள் குறித்த தகவல்களை ஒருங்கிணைக்கிறது.

கடந்த சில வருடங்களில் வனத்துறை 7,896 ஹெக்டர் உள்ளடக்கிய 62 புதிய காப்புக்காடுகளை அறிவிக்கை செய்துள்ளது.

விருதுகள் மற்றும் வெகுமதிகள்:

பெரிய உயிரியல் பூங்காக்கள் பிரிவின் கீழ் மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தின் மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டில் 82% பெற்று தற்போது நாட்டிலுள்ள 147 பெரிய உயிரியல் பூங்காக்களில் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, முதன்மை உயிரியல் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் திட்ட யானைப் பிரிவின் முதல் கஜ்கௌரவ் விருதை ஆனைமலை மலைப்பகுதியைச் சேர்ந்த மலசார் பழங்குடியினர் பெற்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டு உலகளாவிய புலிகள் தினத்தன்று, MDT23 புலியை மீட்டு கைப்பற்றியதற்காக, முதுமலை புலிகள் காப்பக முன்னணி பணியாளர்கள் வெகுமதிகளைப் பெற்றுள்ளனர்.

புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் சர்வதேச TX2 விருதைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு பசுமை இயக்கம்

தமிழ்நாட்டிலுள்ள 100 கிராமங்களில், மரகதப் பூஞ்சோலைகள் என்ற பெயரில் 100 கிராமங்களில் பசுமை பூங்காக்கள் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் உருவாக்க தமிழ்நாடு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 83 மரகதப் பூஞ்சோலைகள் உருவாக்க ரூ.19.77 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

பசுமைதமிழ்நாடு இயக்கத்தின் கீழ், இதுவரை அனைத்து அரசு துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் மாநிலம் முழுவதும் 10.92 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் மூலம், நகர்ப்புறங்கள், புறநகர்ப் பகுதிகள், கல்வி நிறுவனங்கள், விவசாய நிலங்கள் மற்றும் தரங்குன்றிய வனப்பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு நிலப்பரப்புகளில் 1.34 கோடி மனித நாள்கள் பசுமை வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தை பொதுமக்களுடன் இணைக்க, கட்டணமில்லா எண் 1800-599-7634 மற்றும் இணையதளம் (www.greentnmission.com) தொடங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள நாற்றுப்பண்ணைகளில் நாற்றுகள் கிடைப்பது குறித்த தகவல்களை வழங்குவதற்காக ஒரு பிரத்யேக நர்சரி இணையதளம் மற்றும் ஒரு செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் முதன்மைத் திட்டமான பசுமை தமிழ்நாடு இயக்கம், மக்கள் இயக்கமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசு பசுமை தமிழ்நாடு இயக்கத்தை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்துடன் (MGNREGA) உடன் இணைத்துள்ளது.

தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் பசுமையாக்கும் பணிகளை மேலும் மேம்படுத்தும் நடவடிக்கையாக ஐந்து இடங்களில் உயர்தொழில்நுட்ப நாற்றாங்கால் அமைக்கும் பணிக்காக ரூ.7.5 கோடி நிதி வனப்படை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் அரசினால் ஒதுக்கீடு செய்து கடந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் (TN-SHORE)

கடல் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும், கடல் மாசினை தடுக்கவும், கடல் அரிப்பை தடுக்கவும் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தினை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. இந்த இயக்கம், உலக வங்கி நிதி உதவியுடன், ரூ.1675 கோடி (2025-2030) முதலீட்டில் வரும் 5 ஆண்டுகளில் கடலோர பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துதல், கரையோரப் பாதுகாப்பு, வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், மாசு குறைப்பு, திட்ட மேலாண்மை போன்றவைகள் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு ஈரநில இயக்கம்

2022 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 19 புதிய ராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் ராம்சர் தளங்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மாநிலம், நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை தணிக்கும் நோக்கில் நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மரம் வளர்த்தலை ஊக்குவித்தலின் கீழ் ரூ.9,033.69 இலட்சம் மதிப்பில் 137 கோடி நாற்றுகள் வளர்க்கப்பட்டு, 38 மாவட்டங்களில் உள்ள பண்ணை நிலங்கள். கல்வி நிறுவனங்கள் மற்றும் சமுதாய நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.

சூழல் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் 4 சூழல் சுற்றுலா தலங்களான (1) குரும்பம்பட்டி ஏற்காடு, (2) ஐயூர் தேன்கனிக்கோட்டை ஓகேனக்கல் நீர்வீழ்ச்சி (3) கொல்லிமலை மருத்துவத் தாவர பாதுகாப்புப்பகுதி ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி மற்றும் (4) ஏலகிரி அமிர்தி ஜமுனாமரத்தூர் பீமன்நீர்வீழ்ச்சி - குள்ளர் குகை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை கூடலூரில் மரபணு தோட்டம் ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு சிறந்த சூழல் சுற்றுலா சேவைகளை வழங்கும் வகையில் சூழல் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகள் ரூ.1159.18 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவின்போது சிறந்த மண் பொம்மைகள் தயாரிக்கும் கைவினைஞரை தேர்வு செய்து ரூ.5,000 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. "ஆதிரை கலெக்சன்ஸ்" எனும் பெயரில் பிளாக் பிரிண்ட் முறையில் அச்சிட்ட இரகங்கள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கண்டனூர் கிராமத்தில் உள்ள கதர் வளாகத்தினை ரூ.45.80 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்து 9 அலகுகள் தொடக்கி வைக்கப்பட்டு, சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

02.10.2023 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் சிறந்த நூற்பாளர், கதர் நெசவாளர் மற்றும் பட்டு நெசவாளர் ஆகியோருக்கு தலா ரூ.25,000/- வீதம் ரொக்க பரிசும், பாராட்டு கேடயமும் வழங்கப்பட்டது.

02.10.2022 அன்று காந்தி ஜெயந்தி விழா மற்றும் கதர் சிறப்பு விற்பனை தொடக்க விழாவில்"ஆதிரை கலெக்சன்ஸ் 2.0"எனும் பெயரில் கதர் வேட்டி மற்றும் ரெடிமேட் சட்டை (அரைக்கை/முழுக்கை) இணைந்த Combo Pack, King size மெத்தை விரிப்பு, Printed புடவைகள், எம்ப்ராய்டரி வேலைப்பாடுகள் கொண்ட பட்டுப் புடவை விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

கோவை பிரதானம், ஆர்.எஸ். புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 3 கதர் அங்காடிகள் ரூ.23 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட நூடுல்ஸ்களை பயன்படுத்தி "காதி ப்ராக்ரென்ஸ்" (Khadi Fragrance) எனும் பெயரில் ரோஸ், லாவெண்டர், சந்தனம் மற்றும் செஞ்சந்தனம் எனும் 4 வகை நறுமணங்களில் புதியவகை குளியல் சோப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை, குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவின்போது ஒளி ஊடுருவல் சோப்பு (Transparent Soap), ஜவ்வாது வாசனை திரவம் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

கண்கவரும் லேபிள்களுடன் கூடிய புதிய வடிவிலான கண்ணாடி பாட்டில்களில் "காதித் தேன்" அறிமுகப்படுத்தப்பட்டது.

"காதி மலை தேன்" (Hill Honey) எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டு, விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேனை கிலோ ஒன்றுக்கு ரூ.140/-லிருந்து ரூ.155/- ஆக 2023-2024-ம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

காதி கோல்டு (Khadi Gold) எனும் பெயரில் சிறுதானிய வகைகளான (Minor Millets) - தினை, சாமை, வரகு, கேழ்வரகு, குதிரை வாலி மற்றும் மூங்கில் அரிசி வகைகள் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா தச்சு கருமார அலகில் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் கதர் கிராமப் பொருள்கள் மற்றும் பனைப் பொருள்களுக்கான விற்பனைக் காட்சிக் கூடம் தொடக்கி வைக்கப்பட்டு, விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்காலப் பராமரிப்புத் தொகையாக ரூ.5.91 கோடி, 11,822 மண்பாண்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.5,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது. சென்னை குறளகம் கதர் அங்காடியில் நவராத்திரி கொலு பொம்மை கண்காட்சியின்போது 35 கடைகள் அமைக்கப்பட்டு ரூ.76.05 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. காதி கிராமப் பொருள்கள் மற்றும் பனைப் பொருள்களை விற்பனை செய்திட, மண்டல வாரியாக / மாவட்ட வாரியாக 9 நிறுவனங்கள்/ தனி நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, மொத்த விற்பனை முகவர்களுக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இணைய வழி விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு ஏற்கெனவே www.khadi.org மற்றும் www.tnkhadi.com எனும் இரு இணையதளங்கள் உருவாக்கப்பட்டு ஆன்ட்ராய்டு மற்றும் iOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

அமேசான் (Amazon) மற்றும் பிளிப்கார்ட் (Flipkart), போன்ற மின் வணிகத் (e-Commerce) தளங்கள் வாயிலாக காதி கிராமப் பொருள்கள் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், பனைப் பொருள் வளர்ச்சி வாரிய அனைத்து அலகுகளில் நடைபெற்று வரும் உற்பத்தி காட்சிகளுடன் மட்பாண்ட தொழில் செய்யப்படும் காட்சிகள், தேசப்பிதா அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விடுக்கப்படும் வேண்டுகோள்கள், கதர் வாரியத்தால் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள், கதர் அங்காடிகளின் காட்சிகள், கதர் வாரிய பொருள்களின் காட்சிகள், பனை வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலை பின்னும் காட்சிகளுடன் அனைத்திற்கும் முத்தாய்ப்பாக மேல மாசிவீதியில் செயல்படும் கதரங்காடியில் ஒரு சரித்திர நிகழ்வான அண்ணல் காந்தியடிகளின் மேலாடை துறந்த நிகழ்வுகள் ஆகியன கொண்ட சிறப்பு காணொளி காட்சி மற்றும் வாரியப் பொருள்கள் குறித்து அச்சிடப்பட்ட வண்ணமிகு துண்டு பிரசுரங்களை 04.01.2025 அன்று மலேசியாவில் உள்ள பினாங்கு மாநிலத்தில் நடைபெற்ற கண்காட்சியில் மாண்புமிகு பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் வெளியிட, மாண்புமிகு பினாங்கு மாநில முதலமைச்சர் திரு.சோவ் கோன் இயோவ் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனைப் பொருள்களை சந்தைப்படுத்தும் பொருட்டு 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனை பொருள் விற்பனை கூடங்கள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கும், மகளிருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 32 இலட்சம் பனை விதைகள் ரூ.96 இலட்சம் செலவில், அரசு தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் 350 மகளிர்க்கு பனை ஓலைப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சியும் உபகரணங்களும் ரூ.29.15 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

பனைப் பொருள்கள் குறிப்பாக பதநீர் விற்பனையினை அதிகரிக்க வேண்டி 10 தள்ளு வண்டிகள் மற்றும் 5 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.15 இலட்சம் செலவில் மதுரை, விருதுநகர், திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல சம்மேளனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.






சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சர்க்கரை, கரும்புத்தீர்வை, கரும்புப்பயிர் மேம்பாடு



திரு **ஆர்.ராஜேந்திரன்** அவர்கள்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்



ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு 3D லேசர் தொழில்நுட்ப ஒளியூட்டுதல்...

ரூ.17.58 கோடி மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டம், ஓகேனக்கல் அருவி, பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாக மேம்படுத்தல்...

மயிலாடுதுறை மாவட்டம், பாரம்பரியமான பூம்புகாரைப் புதுப்பிக்க ரூ.23.60 கோடி ஒதுக்கீடு...

ரூ.11.35 கோடி மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம், குற்றால அருவிப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டு வசதிகள்...

சுற்றுலாத்துறை

தமிழ்நாட்டின் உள்ள சுற்றுலா இடங்களை "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம்" மேம்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலியார்குப்பம் படகு இல்லத்தின் தீவுப் பகுதியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கடற்கரையோர மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் 3D லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டுதல் நிறுவப்பட்டு, 30.12.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணிகள் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை பராமரிக்க ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

ரூ.2.23 கோடி செலவில் சுற்றுச்சூழல் சாகச தங்குமிடம் மற்றும் திறந்த வெளிமுகாம்கள் அமைக்கும் பணிகள் முடிவுற்று 26.11.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கபட்டது.

ஜவ்வாது மலையை முதன்மை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும் பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் அங்கு சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் அமைக்கவும் ரூ.2.91 கோடி செலவில் மேம்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களை சுற்றுலா தலங்களாக மேம்படுத்துவதற்காக ரூ.8.06 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொன்னியாறு அணை பகுதியில், பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. சித்தாறு அணையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி அணைக்கட்டு பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதலுக்கு ரூ.3.00கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டம், ஆண்டிபாளையம் ஏரிப்பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதலுக்கு ரூ.1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று 26.11.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கபட்டது.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதலுக்கு ரூ.17.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று 26.11.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கபட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு அருவி பகுதியை மேம்படுத்த ரூ.7.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முட்டம் கடற்கரை பகுதியில் பணிகள் நிறைவடைந்து 26.11.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திற்பரப்பு அருவியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மயிலாடுதுறை மாவட்டம், பாரம்பரிய நகரமான பூம்புகாரை புதுப்பித்தலுக்கு ரூ.23.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 85% பணிகள் முடிவுற்று, இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

தென்காசிமாவட்டம்,குற்றாலம்அருவிப்பகுதியில்சுற்றுலாவசதிகள்ஏற்படுத்துதலுக்காக ரூ.11.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்டம், பிச்சாவரம் படகு இல்லப் பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.14.07 கோடி இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI)-யிடம் கடன் பெறுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், முத்துக்குடா பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.3.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

தருமபுரி மாவட்டம், வத்தல்மலை பகுதியினை பல்வேறு வசதிகள் கொண்ட சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதலுக்காக ரூ.2.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று, 26.11.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கபட்டது.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.62.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு 24.01.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கபட்டது.

சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் "ஆன்மீக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா" அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தலுக்காக ரூ.1.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தலுக்காக ரூ.1.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு புதிய காட்சிமுனைகள் அமைத்தல் மற்றும் தற்போதைய காட்சிமுனைகளை மேம்படுத்துவதற்கு ரூ.11.46 கோடிக்கு அரசாணை வெளியிடப்பட்டு ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிபாலம் பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமான அரியலூர் மாவட்ட கங்கைகொண்ட சோழபுரம் கோயில் நுழைவு வளாகம், வாகன நிறுத்துமிடம், வழிகாட்டுப் பலகை, மின் வாகனங்கள் மற்றும் பிற வசதிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய பழங்கால சமணதலங்களில் ஒன்றான சித்தன்னவாசல், ரூ.3.90 கோடி செலவில் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்காடு நிலச்சீரமைப்பு, காட்சிமுனை, உள்கட்டமைப்பு மற்றும் பிற சுற்றுலா வசதிகளுடன் ரூ. 9.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனுஷ்கோடி பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்த ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஏரியில் படகு குழாம் உள்ளிட்ட சுற்றுலா வசதிகளுடன் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

உதகமண்டலம் ஏரிப்பகுதியில், பார்வையாளர் மாடம், நடைபாதை இருக்கைகள், மின்விளக்கு போன்ற பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரத்தில் உள்ள தொண்டி கடற்கரை, கன்னியாகுமரியில் சங்குதுறை, சொத்தவிளை கடற்கரை பகுதி, சூரிய காட்சிமுனை மற்றும் தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் கடற்கரை பகுதிகளில் பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்த ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டம், உல்லாடாவில் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்துதல், கேத்தி மைனல்லா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஹார்ன்பில் பகுதியில் காட்சிமுனை அமைத்தல் ஆகிய பணிகளை மேம்படுத்த ரூ.2.83 கோடி மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 12.11.2021 முதல் 15.11.2021 வரை மெக்சிகோவில் உள்ள லியோனில் "சர்வதேச பலூன் திருவிழாவில் பங்கேற்றது.

தமிழ்நாடு சுற்றுலா 29.07.2022 முதல் 31.07.2022 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்ற "தமிழ்நாடு சர்வதேச காத்தாடி விழா-2022"க்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 07.11.2022 முதல் 9.11.2022 வரை லண்டனில் நடைபெற்ற உலகப் பயணச் சந்தை-2022 (WTM-2022) மற்றும் விளம்பர முகாம்களில் பங்கேற்றது.

"இந்திய நாட்டிய விழா 2022-2023" மாமல்லபுரத்தில் 23.12.2022 முதல் 12.01.2023 வரை கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை 07.03.2023 முதல் 09.03.2023 வரை பெர்லினில் நடைபெற்ற "ITB-2022"இல் பங்கேற்றது.

தமிழ்நாடு சுற்றுலா 29.04.2023 முதல் 14.05.2023 "சென்னை விழா-2023"னை சென்னையில் நடத்தியது.

தமிழ்நாடு சுற்றுலா 04.08.2023 முதல் 06.08.2023 வரை கன்னியாகுமரியில் நடைபெற்ற "தமிழ்நாடு சர்வதேச காத்தாடி விழா-2023"க்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா 26.10.2023 முதல் 29.10.2023 வரை ஜப்பானில் நடைபெற்ற "JATA Tourism Expo-2023"ல் பங்கேற்றது.

"இந்திய நாட்டிய விழா 2023-2024" மாமல்லபுரத்தில் 22.12.2023 முதல் 21.01.2024 வரை கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா 15.08.2024 முதல் 18.08.2024 வரை மாமல்லபுரத்தில் நடைபெற்ற "தமிழ்நாடு சர்வதேச காத்தாடி விழா-2024"க்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

பிரான்சின் பாரீஸ் நகரில் 17.09.2024 முதல் 19.09.2024 வரை நடைபெற்ற "IFTM-Top Resa 2024"ல் சுற்றுலாத்துறை பங்கேற்றது.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் 05.11.2024 முதல் 07.11.2024 வரை நடைபெற்ற உலக பயண சந்தை (WTM)ல் சுற்றுலாத்துறை பங்கேற்றது.

"இந்திய நாட்டிய விழா 2024-2025" மாமல்லபுரத்தில் 22.12.2024 முதல் 20.01.2025 வரை கொண்டாடப்பட்டது.

"தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா 2025-யில் சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

75 ஆவது சுதந்திர திருநாள் அமுத பெரு விழாவை செயல்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, சுற்றுலாத் துறையானது, மாநிலத்தின் எண்ணற்ற சுற்றுலா வளங்களை காட்சிப்படுத்தும் வகையில், பல்வேறு மின்னணு ஊடகங்களில் 75 விளம்பர காணொளிகள் இந்தத் தலைப்புகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

சுற்றுலாத் தலங்களின் மனதை மயக்கும் நிலப்பரப்புகள், பழமையான கலாச்சார பாரம்பரியம், பிரமிக்க வைக்கும் கட்டடக்கலை, அழகிய கடற்கரைகள், மயக்கும் நீர்வீழ்ச்சிகள்,

பாரம்பரிய கலைகள், புகழ்பெற்ற கைவினைப்பொருட்கள் மற்றும் உணவு வகைகளை கவரும் வகையில், காணொலிகளால் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா, மாநிலத்தின் சுற்றுலா தலங்களை மேம்படுத்துவதற்காக AR / VR அடிப்படையிலான சிறு புத்தகங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை செயற்கை நுண்ணறிவு மற்றும் மெய்நிகர் உண்மையிலான போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை செயல்படுத்தும் வகையில் இணைக்கப்பட்டுள்ளது.

ஏழாவது ITCTA கண்காட்சி மற்றும் மாநாட்டின் ஒரு பகுதியாக 20.08.2021 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா மாநாடு மற்றும் பயண விருதுகளில் (ITCTA) "ஆன்மீக மற்றும் கோயில் சுற்றுலாவை" ஊக்குவித்ததற்கான விருதினை தமிழ்நாடு சுற்றுலாத் துறை வென்றது.

இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2021இல், சிறந்த மலைப்பகுதி வகைப்பாட்டிற்கான விருதை தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூருக்கும், சிறந்த விழாவிற்கான விருதினை பொங்கல் விழாவிற்கும், இயற்கை எழில் கொஞ்சும் சாலை வகைப்பாட்டிற்கான விருது நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைக்கும் வழங்கப்பட்டது.


பசிபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கம் (PATWA) 28.03.2022 அன்று புதுடெல்லியில் நடத்திய சஃபாரி இந்தியா தெற்காசிய சுற்றுலா விருதுகள் 2021இல் "ஆன்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பெற்றது.

இந்தியாவில் பிரமிக்க வைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் புதுடெல்லியில் அவுட்லுக் டிராவலர் விருதுகள் -2022 விழாவில் நீலகிரி மாவட்டம். குன்னூர் "வெள்ளி" விருதை 24.8.2022 அன்று பெற்றது.

"ஆன்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதினை 16.11.2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற டிராவல் + லீஷர் இந்தியா மற்றும் தெற்காசியாவின் 11ஆவது பதிப்பு விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

"சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்ததற்கும், சேவைத் தரத்தை மேம்படுத்தியதற்கும்" சுற்றுலாப் பிரிவில் "வெள்ளி" விருதை 88ஆவது SKOCH உச்சிமாநாட்டில் 18.1.2023 அன்று தமிழ்நாடு சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

24.02.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் - 2022 விழாவில் சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரைத் தலத்திற்கான விருது கன்னியாகுமரி மாவட்டத்தின் லெமூர் கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.



"இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு 8.3.2023 அன்று பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் 2023 நிகழ்ச்சியில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) வழங்கப்பட்டது.

"இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) 8.3.2023 அன்று பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.

இந்தியப் பொறுப்பியல் சுற்றுலா விருதுகள் 2023 (India Responsible Tourism Awards 2023) மாநாடு தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வைத் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் ஒருங்கிணைப்புடன் அவுட்லுக் டிராவலர் ஏற்பாடு செய்தது. 17.03.2023 அன்று உதகமண்டலத்தில் நடந்த IRTA 2023 விழாவில், தங்கும் உறைவிடப்பிரிவின் (Homestay) கீழ் நிலையான தலைமைத்துவத்தில் சிறிய உள்ளூர் தங்கும் விடுதிப் பிரிவில், "ஜேக்கப் அண்ட் க்ளோஸ்டர் :பார்ம்ஸ், சென்னை" க்கு வெள்ளி விருது வழங்கப்பட்டது.

26.10.2023 அன்று ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்ற ஜப்பான் சுற்றுலா எக்ஸ்போவின் 7வது பதிப்பில், ஜப்பான் சுற்றுலா விருதுகளின் மதிப்புமிக்க "செயற்குழு விருது" என்ற விருதினை தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

புது தில்லியில் 30.11.2023 அன்று நடைபெற்ற எகனாமிக் டைம்ஸ் (ET) 2023 டிராவல் அண்ட் டூரிஸம் விருதுகள் 2 ஆவது பதிப்பில் "யாத்திரை மற்றும் பாரம்பரியத் தலம்" என்ற விருதினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை பெற்றுள்ளது.

புது தில்லியில் 08.12.2023 அன்று நடைபெற்ற அவுட்லுக் டிராவலர் விருதுகள் 2023ல் சிறந்த உள் மாநில சாலைப் பயண வழிகளுக்கான வெள்ளி விருதினை பாம்பன் பாலம் முதல் இராமேஸ்வரம் வழித்தடத்திற்கும், இந்தியாவின் சிறந்த பாரம்பரியத் தலத்திற்கான வெள்ளி விருதினை தஞ்சாவூர் மற்றும் அரியலூர் பெரிய கோயில்களுக்காக தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு வழங்கப்பட்டது.

புதுதில்லியில் 29.02.2024 அன்று நடைபெற்ற இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2023இல் தமிழ்நாட்டின் ஏற்காடுக்கு சிறந்த இயற்கை காட்சிகளைக் கொண்ட சாலைக்கான விருது பெறப்பட்டது.

ITB பெர்லினில் 06.03.2024 அன்று நடைபெற்ற விழாவில் பசுபிக் பகுதி சுற்றுலா எழுத்தாளர்கள் சங்கத்தால் (PATWA) சர்வதேச பயண விருதுகள் தமிழ்நாடு கலாச்சாரத் தலத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.

சுற்றுலாத்துறை வரலாற்றிலேயே முதன்முறையாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் குறித்த புள்ளி விவரங்கள் ஜனவரி-2024 முதல் மாதந்தோறும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை இணையதளத்தில் பதிவேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதுதில்லியில் 28.03.2025 அன்று நடைபெற்ற இந்தியா டுடே "சுற்றுலா விருதுகள்-2025" நிகழ்வில் சிறந்த பாரம்பரிய இடமாக (Best Heritage Destination) தமிழ்நாட்டிலுள்ள செட்டிநாடு தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதினை தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முதன்முறையாக தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் தமிழ்நாடு பயணச்சந்தை மார்ச் 21.03.2025 முதல் 23.03.2025 வரை தொடர்ந்து மூன்று நாள்கள் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உள்ள உல்லாடா, நீலகிரி மாவட்டம் மற்றும் வேட்டைக்காரன்புதூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய கிராமங்களுக்கு சிறந்த சுற்றுலா கிராமங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் வெண்கல பிரிவில் விருதுகள் 27.09.2023 அன்று புது தில்லியில் வழங்கப்பட்டன. மத்திய அமைச்சகத்தின் சிறந்த சுற்றுலா கிராம போட்டியின் 2024 பதிப்பில், தமிழ்நாட்டில் இருந்து பின்வரும் கிராமங்கள் சிறந்த சுற்றுலா கிராமங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாரம்பரிய பிரிவில் கீழடி கிராமம், சிவகங்கை மாவட்டம், ஆன்மிகம் மற்றும் ஆரோக்கிய பிரிவில் மேல்கலிங்கம்பட்டி கிராமம், நாமக்கல் மாவட்டத்திற்கு விருதுகள் 27.09.2024 அன்று மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் புது தில்லியில் வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த ஆண்டு மருத்துவச் சுற்றுலா மாநாடு 2025, சென்னையில் உள்ள லீலா பேலஸ்இல் 04.04.2025 மற்றும் 05.04.2025 ஆகிய இரண்டு நாள்கள் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, சுகாதாரத் துறையுடன் இணைந்து மற்றும் பிற மருத்துவச் சுற்றுலா பங்குதாரர்களுடன் ஒருங்கிணைத்து விழா சிறப்பாக நடைபெற்றது.

சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு பதிவுகள் மேற்கொள்வதற்கான திட்டம்

பல்வேறு சுற்றுலா செயல்பாட்டாளர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பான சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்தவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்வதற்கும் புதிய திட்டத்தை சுற்றுலாத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை

சுற்றுலாத் தொழிலில் வேலைவாய்ப்புகளை வழங்குவதில் ஒரு முன்னணி மாநிலமாக திகழவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால் 26.09.2023 அன்று வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் புதிதாக கட்டப்பட்ட 15 அறைகள் மற்றும் பல்நோக்கு அரங்கம் கொண்ட கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.09.2022 அன்று திறக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

சென்னையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, திறந்தவெளி உணவகத்திற்கு மக்களை ஈர்க்கும் வண்ணம் ரூ.90.10 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி திரையரங்கத்துடன் கூடிய நவீன மையமாக்கப்பட்ட திறந்தவெளி உணவகமாக புனரமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

நீலக்கொடி கடற்கரை கோவளத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 20' x 25' அளவில் முன் கட்டமைக்கப்பட்ட வசதி மையம் அமைக்கப்பட்டது.

வண்டலூர் உயிரியல் பூங்காவில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 20' x 25' அளவில் முன் கட்டமைக்கப்பட்ட வசதி மையம் அமைக்கப்பட்டது.

ஓட்டல் தமிழ்நாடு, திருச்செந்தூரில் ரூ.38.10 இலட்சம் செலவில் மாநாட்டு அரங்கின் மேல் உணவு கூடம் கட்டப்பட்டது.

முதலியார்குப்பத்தில் உள்ள படகு இல்லத்தில் உயர் தொழில்நுட்ப மிதக்கும் படகு குழாம் (தீவு ஓரம்) ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

முட்டுக்காடு படகு இல்லத்தில் மரப் படகு ஜெட்டியுடன் கூடிய உயர் தொழில்நுட்ப மிதக்கும் படகு ஜெட்டி ரூ.34.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

ஓட்டல் தமிழ்நாடு, மதுரை–2ல் உள்ள அறைகளில் இருபத்தி இரண்டு கழிவறைகளை ரூ.43.00 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்.

ஓட்டல் தமிழ்நாடு மதுரை–2 ல் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கூடுதல் விருந்து மண்டபங்கள், விருந்து கூடம், நவீன சமையலறை, சாப்பாட்டு அறைகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளுடன் பணிகள் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளது

ஓட்டல் தமிழ்நாடு குன்னூரில் ரூ.83.65 இலட்சம் மதிப்பீட்டில் 10 அறைகள் மேம்படுத்தப்பட்டது.

ஓட்டல் தமிழ்நாடு மதுரை – II இல் 22 அறைகளில் உள்ள கழிப்பறைகள் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டது. ஓட்டல்தமிழ்நாடு, ஊட்டியில் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் 25 அறைகள் மற்றும் 7 காட்டேஜ்கள்முறையாகமேம்படுத்தப்படும்.

ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டி (அலகு – I), இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி விடுதிகளுக்கு ரூ.64.20 இலட்சம் மதிப்பீட்டில் வெளிப்புறச் சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டது.

அனைத்து த.சு.வ.கழக ஓட்டல்களுக்கும் ரூ.35.37 இலட்சம் மதிப்பீட்டில் உணவு பரிமாறும் மற்றும் இதர சாதனங்கள் வாங்கப்பட்டது.

ஓட்டல் தமிழ்நாடு, மதுரை-I, மதுரை-II, இராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, குற்றாலம், திருவண்ணாமலை மற்றும் கொடைக்கானலுக்கு ரூ.38.70 இலட்சம் மதிப்பீட்டில்108 தொலைகாட்சி பெட்டிகள் வாங்கப்பட்டது.

கோயம்புத்தூர், வாலாங்குளம் ஏரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் புதிதாக ஒர் படகு இல்லம் திறந்து மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

படகு இல்லம், முட்டுக்காடு மற்றும் முதலியார் குப்பத்திற்கு 2 வாட்டர் ஸ்கூட்டர்கள் வாங்கப்பட்டது.

படகு இல்லம், கொடைக்கானல் மற்றும் ஊட்டியில் 2 இருக்கைகள் கொண்ட மிதி படகுகள் (12 Nos) மற்றும் 4 இருக்கைகள் கொண்ட மிதி படகுகள் (21 Nos) வாங்கப்பட்டது.

த.சு.வ.கழக படகு, ஊட்டி, பைக்காரா ரூ.85.46 இலட்சம் மதிப்பீட்டில் 37 பல்வேறு விதமான படகுகள் வாங்கப்பட்டுள்ளது.

முட்டுக்காட்டில் உள்ள 2 டெக் 200பேக்ஸ் மிதக்கும் உணவகப் படகுத் திட்டத்தின் மேம்பாடு மற்றும் செயல்பாடு, பிபிபி முறையில், வடிவமைப்பு, உருவாக்கம், நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் (டிபிஎஃப்ஓஎம்) மாதிரியில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. அடிப்படையில். தனியார் பொது கூட்டாண்மை (PPP) அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு 10% மொத்த வருவாய் பங்கு அடிப்படையில், அனைத்து பணிகளும் 07.01.2025 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரால் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிபாளையம் ஏரியில் உணவகம், படகு முன்பதிவு கவுன்டர் மற்றும் கழிப்பறைகளுடன் கூடிய கட்டடம் ரூ.1.47 மதிப்பீட்டில் படகு சவாரி மற்றும் இதர வசதிகள் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல்மலையை சுற்றுலாத் தலமாக தருமபுரி மாவட்டத்தில் சாகச நடவடிக்கைகளுடன் மேம்படுத்துதல் ரூ.2.23 மதிப்பீட்டில் நுழைவு வளைவு, உணவகம் மற்றும் வரவேற்பு, பேவர் பிளாக் சாலைப் அனைத்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் ஏரியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில், முடிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள ஹரித்ராநதி கோவில் குளத்தின் மேம்பாடு, படகு சவாரி மற்றும் இதர வசதிகளுடன் கூடிய சுற்றுலா தலமாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியை ஒரு முழுமையான சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு வசதிகளுடன் கொல்லி மலையை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மாற்றுதல் ரூ.2.28 மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் கடற்கரையை மேம்படுத்த ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு வசதிகளுடன் ஏலகிரியை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல் ரூ.2.98 மதிப்பீட்டில் நுழைவு வளைவு, பாதை, உணவகம் மற்றும் வரவேற்பு, தள மேம்பாடு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகார் புனரமைக்கப்படும் மற்றும் மறுசீரமைப்பு.

ரூ.12.79 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையில் 3D ப்ரொஜெக்ஷன் மேப்பிங்கை வழங்குதல்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் "108 திவ்யா தேச சுற்றுலாவிற்காக பிரத்யேகமாக காபி டேபிள் புத்தகங்கத்தினை தயாரித்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து சுற்றுலா பயணிகளுக்காக 52 வகையான தொகுப்பு சுற்றுலாக்களை இயக்கி வருகின்றது. மேலும், சுற்றுலா பயணிகளின் வேண்டுதலுக்கு

இணங்க 11 வகையான புதிதாக தொகுப்பு சுற்றுலாக்களை கடந்த மூன்று ஆண்டு காலங்களில் தொடங்கி இயக்கி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், M/s. Secret Temples, Rajasthan நிறுவனத்துடன் இணைந்து 4 நாள்கள் யுனெஸ்கோ ஹெரிட்டேஜ் சுற்றுலாவை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பிரபலமற்ற சுற்றுலா தலங்களை மேம்படுத்தும் நோக்கில் வலைதளங்களில் செல்வாக்கு பெற்ற 10 நபர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்காக "டிஸ்கவர் தமிழ்நாடு சுற்றுலா-3வது முறையாக" வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின், சுற்றுலா பிரிவின் வருவாய் கடந்த ஆண்டுகளை காட்டிலும் பல்வேறு சிறப்பு செயல்பாடுகளின் மூலம் 2023-2024 ஆம் நிதி ஆண்டிற்கான வருவாய் ரூ.28.69 கோடியாக அதிகரித்துள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறையின் மூலம் இயக்கி வரும் கள்ளர் சீரமைப்பு பள்ளி மாணவர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் மூன்று நாள்கள் சிறப்பு சுற்றுலா மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஒரு நாள் மற்றும் மூன்று நாள்கள் சிறப்பு கல்வி சுற்றுலாக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

2024-2025 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (TTDC) சார்பில், புதிதாக 35 இருக்கைகள் கொண்ட சொகுசு பேருந்துகள் நான்கும், 18 இருக்கைகள் கொண்ட பேருந்து ஒன்றும் ரூபாய் 292.84 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது.

2024 - 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சமூக ஊடகங்களில் அதிக பயனாளர்கள் கொண்ட சிறந்த 10 நபர்களைக் கொண்டு "டிஸ்கவர் தமிழ்நாடு சுற்றுப்பயணத்தின் 4வது பதிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில் TTDC 03 நாள்கள் திருச்செந்தூர்- இராமேஸ்வரம்-உத்திரகோசமங்கை சுற்றுப்பயணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய்த்தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்காக 15 நாள்களுக்கு சிறப்பு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவை (வேர்களைத் தேடி) இயக்கி வருகிறது.

TTDC சுற்றுலாப் பிரிவு கடந்த ஆண்டுகளை விட 2024 ஆம் ஆண்டு (மார்ச் 2024 வரை) 28.69 கோடி வருவாய் அதிகமாக ஈட்டியுள்ளது.



சர்வதேச மற்றும் தேசிய அளவிலான ஜம்பூரி 2025, கல்வித்துறை மூலம் திருச்சியில் சிப்காட் மணப்பாறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் 43 இருக்கைகள் கொண்ட 2 புதிய வால்வோ (Volvo Bus) சொகுசுப் பேருந்துகள் வாங்கப்பட்டு கடந்த 29.11.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பெர்லின், ஜெர்மனியில் மார்ச் 7 முதல் 9 வரை நடைபெற்ற ITB-2023 ல் (Internationale Tourismusbranche) பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மலேசியாவின், கோலாலம்பூரில் உள்ள மலேசியா சர்வதேச வர்த்தக மற்றும் கண்காட்சி மையத்தில் (MITEC) கடந்த மார்ச் மாதம் 17 முதல் 19 வரை நடைபெற்ற MATTA FAIR-2023 பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், புது தில்லியில் உள்ள பிரகத் தைமயத்தில் உள்ள சர்வதேச கண்காட்சி மாநாட்டு மையத்தில் (IECC) 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை நடைபெற்ற PATTA Travel Mart 2023ல் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஐப்பானின் ஒசாகாவில் 2023 அக்டோபர் 26 முதல் 29 வரை நடைபெற்ற ஜடா டூரிசம் எக்ஸ்போவில் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், போர்ச்சுகலின் லிஸ்பனில் மாட்ரிட் 2024 ஜனவரி 24 முதல் 28 வரை நடைபெற்ற FITUR-2024 மற்றும் பார்சிலோனா நடைப்பெற்ற சாலை நிகழ்ச்சிகள் ஜனவரி 28 மற்றும் 29, 2024 இல் பங்கேற்று தமிழ்நாடு சுற்றுலாவை பற்றி விளம்பரப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 25.11.2023 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் "பல்வேறு கழக நிறுவனங்களின் நாயகர்" என்ற தலைப்பில் நடைப்பெற்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அரங்கம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மின்னாளுமை செயல்பாடு மூலம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய தகவல்களையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயக்கும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை உடன் நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் இணையதளத்தை (www.ttdconline.com) புதுபித்து பல மேம்படுத்துதல்களை செய்து கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளச்சிக் கழகத்தால் நடத்தப்படும் 26 ஓட்டல்கள் மற்றும் அனைத்துச் சுற்றுலாக்களை ஆன்லைனில் பதிவுசெய்யும் சேவை மூலம் மே 2021 முதல் ஜனவரி 2025 வரைக்கான காலக்கட்டத்தில் ரூ.1,29,27,82,494/- வருவாய்யை ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணையதளத்தை www.ttdconline.com புதுப்பித்து அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களின் ஓட்டல் மேலாண்மை மென்பொருள் அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு சுற்றுலா பயனிகளின் சேவைக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள், ஆலயம் ஓட்டல்கள் மற்றும் தொகுப்பு சுற்றுலாக்கள் ஆகியவற்றை சுற்றுலா பயணிகள் தங்கள் வீட்டில் இருந்தபடியே முன்பதிவு செய்ய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணையதளத்தை முன்னனி ஆன்லைன் பயணத்திரட்டிகளுடன் (OTA) like Makemytrip, Goibibo, Agoda-யுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தங்களுடைய ஆன்லைன் முன்பதிவு செய்யும் வசதியை TTD ஆன்லைன் முறையுடன் இணைத்து பயணிகளுக்கு திருப்பதி தரிசனத்திற்கு பார் குறியீடு (Bar Code) வசதியுடன் கூடிய பயணச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் திருப்பதியில் பயணிகளின் அடையாளச்சீட்டை கணினியில் கண்காணிக்கப்பட்டு அவர்களின் தரிசனத்திற்கு உடனடியாக அனுமதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து படகு இல்லங்களிலும் ஆன்லைன் மூலம் படகு சவாரிகளை முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. படகு இல்லங்களில் படகு சவாரி நேரத்தை கண்காணிப்பதற்கும், சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்வதற்கான கட்டணத்தொகையை எளிதில் செலுத்துவதற்காகவும் மற்றும் தலைமை

அலுவலகத்திலிருந்து படகு இல்லங்களில் உள்ள படகுகளின் சவாரி விவரங்களை அறியவும் புதிய படகு இல்ல மேலாண்மை மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தீவுத்திடல், சென்னையில் நடைபெறும் வர்த்தக பொருட்காட்சிக்கென www.ttdcfair.com என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் சுற்றுலா பயணிகள் பொருட்காட்சி நுழைவுசீட்டை வரிசையில் காத்திருக்காமல் தங்கள் கைபேசி மூலம் பதிவுசெய்து நுழைவாயிலில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இயக்கப்பட்டு வரும் அனைத்து ஓட்டல்கள் மற்றும் சுற்றலாக்களின் பயணீட்டாளர்களின் கருத்துகளைப் பதிவுசெய்ய ஒருங்கிணைந்த டேஷ்போர்டு (Dashboard) மற்றும் அறிக்கையிடல் பட்டியலை நிறுவி OTAகள், Google மற்றும் Appi Feedback போன்ற அனைத்து கருத்துகளையும் ஒருங்கிணைத்து மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மேலாண்மை மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் "சுற்றுலா" என்ற பெயரில் கைபேசி செயலி ஒன்றை வடிவமைத்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா தளங்கள் பற்றிய தகவல்களை அறிவதற்கும், தங்கும் விடுதி, பதிவுசெய்வதற்கும், போக்குவரத்து தகவல்களை அறிவதற்கும், ஜி.பி.எஸ் (GPS) பயன்படுத்தி இருப்பிடம் மற்றும் உள்ளூர் ஈர்ப்புகள் போன்றவற்றை பற்றிய தகவல்களை எளிதாக பெறுவதற்கும் இச்செயலி உதவிகரமாக இருக்கும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா மற்றும் ஹோட்டல் ஆகிய இரண்டிற்கும் ஆன்லைனில் முன்பதிவு செய்த வாடிக்கையார்களின் வாட்ஸ் ஆப் எண்ணுக்கு முன்பதிவு உறுதிப்படுத்தல் செய்திகளை அனுப்புவதற்கு ஆன்லைன் முன்பதிவு முறையுடன் வாட்ஸ்ஆப்பை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வளர்ச்சிக் கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துகளைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களில் ஒரு பின்னுட்ட செயல்முறை (Feedback mechanism) அமைப்பை நிறுவியுள்ளது.

இது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக உள்ளது.

செப்டம்பர் 2021 முதல் ஜனவரி 2024 வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 5,266 வாடிக்கையாளர்களிடம் கருத்துகள் பெறப்பட்டு, நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பிரத்தியேகமான அடிப்படையில் சுற்றுலா Helpline சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முப்பரிமாண தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள 5 யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்களை உருவாக்கி இணையதளம் மூலம் பயணாளிகளுக்கு பயன்படும்படி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது டிஜிட்டல் செயல்பாடுகளை சமூக ஊடக கையாளுதல்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சமூக ஊடகங்களான ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் சந்தைப்படுத்துதல் மேம்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத்திடலில் 2022, 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் நடைப்பெற்ற சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் மூலம் ரூ.18.11 கோடி வருவாய் ஈட்டியது.

அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயம்,திருநெல்வேலி மாவட்டம் தெற்கு கள்ளிக்குளம்,தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை,திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதிமற்றும்சிவகங்கை மாவட்டம் பிரான்மலை ஆகிய இடங்களில் சுற்றுலாஅடிப்படை வசதிகளை அமைப்பதற்கு ரூ.8.27 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிபாலம், பல்வேறு சுற்றுலா வசதிகளுடன் மேம்படுத்த ரூ.3.50 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ள பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுலா தலமான இரண்டாம் கட்டத்தில் ஏலகிரி மேம்பாடு ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கன்னியாகுமரி, கொடைக்கானல், கிருஷ்ணகிரி, ஏற்காடு மற்றும் பிச்சாவரம் ஆகிய இடங்களில் உள்ள ஹோட்டல் தமிழ்நாடு மேம்படுத்த ரூ.650.05 இலட்சம் மதிப்பீட்டில் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், முதலியார்குப்பம் தீவில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் அமைப்பதற்கு ரூ. 120 இலட்சம் மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காட்டை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சர்க்கரைத்துறை

சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடி பரப்பு 2019-2020 நடவுப் பருவத்தில் 0.95 இலட்சம் எக்டராக இருந்த கரும்பு பதிவு பரப்பு 2024-2025 அரவைப் பருவத்தில் 0.99 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது.

கரும்பு அரவை

2020-21 அரவைப் பருவத்தில் 98.67 இலட்சம் மெ.டன்களாக இருந்த கரும்பு அரவை 2023-2024 அரவைப் பருவத்தில் 123.09 இலட்சம் மெ.டன்னாக அதிகரித்துள்ளது.

சர்க்கரைக் கட்டுமானம்

பதினோரு ஆண்டுகளுக்கு பிறகு 2022-2023 அரவைப்பருவத்தில் 9.27% என்ற அதிகபட்ச சர்க்கரை கட்டுமானம் பெறப்பட்டுள்ளது.

கரும்பு விலை

2015-16 அரவைப் பருவம் முதல் கரும்பு விவசாயிகள் பெற்று வந்த நிலையான கரும்பு விலையான டன் ஒன்றுக்கு ரூ.2750 இருந்து 2024-2025 அரவைப் பருவத்திருக்கு ரூ.3,500ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

வழிவகைக்கடன்

2021- 22 பருவம் முதல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளுக்கு வழிவகைக் கடனாக கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு கிரைய நிலுவைத் தொகை வழங்குவதற்கும் தொழிலாளர்களுக்கு சம்பள நிலுவைத்தொகை வழங்குவதற்கும், ஆலை பழுது பார்ப்பு பணி மேற்கொள்வதற்கும் நிதி உதவியாக ரூ.694.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தானியங்கி எடைமேடை

15 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி எடை மேடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன ஆய்வகங்கள்

நிதியாண்டில் 15 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் மூன்று கோடி மதிப்பீட்டில் நவீனஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கரும்பு அறுவடை இயந்திரங்கள்

கரும்பு அறுவடை கூலியை குறைத்திட 144 அறுவடை இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகை நேரிடையாக வங்கி கணக்கில் வழங்கியது, கரும்பு இடைக்கால உற்பத்தி ஊக்கத்தொகையாக ரூ.33.31 கோடி, சுமார் 91,120 விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக வழங்கப்பட்டுள்ளது,

கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை

2020–21 முதல் 2023–24 கரும்பு அரவை பருவங்கள் வரை சுமார் 4,79,030 கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக ரூ.814.79 கோடி சிறப்பு ஊக்கத்தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளது

கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டம்

கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டத்தில் அதிக மகசூல், அதிக சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக்கரும்பு, திசுவளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள் ஆகியவை 2,037 விவசாயிகளுக்கு ரூபாய் இரண்டு கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நுண்ணீர்ப் பாசனத்திட்டம்

நுண்ணீர்ப் பாசனத்திட்டத்தின் மூலம் கரும்பு சாகுபடியில் 21,452.04 எக்டர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டு 20,044 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் (NADP) அதிகமகசூல், சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் வல்லுநர் விதைக்கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள், ஒரு பருவிதைக் கரும்பு ஆகியவை 17,385 விவசாயிகளுக்கு ரூ.24.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம்

கலைஞரின் அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் அதிகமகசூல், சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களின் பருசீவல் நாற்றுக்கள், ஒரு பருவிதைக் கரும்பு ஆகியவை 2,630 விவசாயிகளுக்கு ரூ.1.90 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

காட்டுப்பன்றி விரட்டி

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு பதிவுசெய்துள்ள விவசாயிகளுக்கு, காட்டுப்பன்றியின் சேதங்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டும் "காட்டுப் பன்றி விரட்டி" திரவத்தை எக்டர் ஒன்றுக்கு ரூ.2250/- மானியத்தில் 2000 எக்டர் பரப்பளவில் மொத்தம் ரூ.45 இலட்சம் ஒதுக்கீடு செய்து திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைக்கழிவு மண்ணை ஊட்டம் ஏற்றிய உரமாக மாற்றும் திட்டம்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும் கழிவு மண்ணை ஊட்டம் ஏற்றிய உரமாக தரம் உயர்த்தி கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஊதிய உயர்வு

கூட்டுறவுமற்றும்பொதுத்துறைசர்க்கரைஆலைகளில்ஊதியகுழுவின்(WageBoard)கீழ்பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர படிகளை மறுசீரமைத்து அடிப்படை ஊதியத்தில் 35 விழுக்காடு சிறப்பு ஊதியமாக வழங்கி ஆணையிடப்பட்டது.

ஆலைகள் பெற்ற தேசிய விருதுகள்

சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த சிறந்த செயல் திறனுக்கான முதலிட விருதும், 2022-2023 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலை முதலிட விருதும் பெற்றது.

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான கரும்பு அபிவிருத்திக்கான வெள்ளி விருதும், 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதி மேலாண்மையில் முதல் விருதும் பெற்றது, செங்கல்வாரயன் கூட்டுறவு சர்க்கர் ஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான நிதி மேலாண்மையில் முதல்விருது பெற்றது. தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் விருது பெற்றது.

சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான கரும்பு அபிவிருத்திக்கான வெள்ளி விருதும், 2022-2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த அபிவிருத்திக்கான தங்க விருதும், 2023-2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த தொழில்நுட்பசெயல்பாட்டு தங்க விருதும் பெற்றது.

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை 2023-2024 ஆம் ஆண்டுக்கான கரும்பு மேலாண்மைக்கானவெள்ளிவிருது பெற்றது. கள்ளகுறிச்சி .2 கூட்டுறவுசர்க்கரைஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த சிறந்த செயல் திறனுக்கான விருதும் (தொழில்நுட்பம்), 2022-2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த தொழில்நுட்ப செயல்பாட்டு வெள்ளி விருதும், 2023-2024 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த சிறந்த செயல் திறனுக்கான விருதும் (தொழில்நுட்பம்) பெற்றது.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 2023-2024 ஆம் ஆண்டுக்கான இணை மின்திட்டத்தில் சிறப்பான செயல்பாட்டிற்காக வெண்கல விருது பெற்றது.



நில விருது

சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை 2022-2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த செயல்பாட்டிற்கான வெள்ளி விருது பெற்றது.

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை 2021-2022 ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு சங்கத்திற்கான 69 வது அகில இந்திய கூட்டுறவு வார விழா விருதும், 2022-2023 ஆம் ஆண்டுக்கான மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு சங்கத்திற்கான 70 வது அகில இந்திய கூட்டுறவு வார விழா விருது பெற்றது.

இணைமின்திட்டம்

தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 12 மெ.வாட் இணைமின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் முடிக்கப்பட்டு 13.11.2021 அன்று முதல் பயன் பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் இணைமின் திட்டப்பணிகள் 2015 ம் வருடம் மே மாதம் முதல் நடைபெறாமல் இருந்த 6 ஆலைகளில் முதற்கட்டமாக எம்.ஆர்.கே. கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி -2 ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மீண்டும் பணிகள் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் எம்.ஆர்.கே, கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 15 மெ.வாட் இணைமின் உற்பத்தி திட்டம் முடிக்கப் பெற்று 31.12.2023 முதல் இயங்கி வருகிறது.

ஆய்வுக் கூடங்களை நவீனமயமாக்குதல்

2022-23 ஆம் ஆண்டு வேளாண்மை - உழவர் நலத்துறையின் அறிவிப்பின்படி 13 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வு கூடங்கள் தலா ரூ. 20 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு 13 சர்க்கரை ஆலைகளுக்கு ரூ. 260 இலட்சம் அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்று தற்போது ஆலைகளின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

கரும்புத்தீர்வை, கரும்புப்பயிர் மேம்பாடு

2021-22 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடியானது, 1.48 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 109 மெட்ரிக் டன்/எக்டர் என்ற அளவில் மகசூல் பெறப்பட்டு 161.67 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடியானது, 1.59 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 111 மெட்ரிக் டன்/எக்டர் என்ற அளவில் மகசூல் பெறப்பட்டு 176.58 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

2023-24 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடியானது 1.52 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 105 மெட்ரிக் டன்/எக்டர் என்ற அளவில் மகசூல் பெறப்பட்டு 159.90 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

2024-25 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடியானது இதுநாள் வரை 1.39 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, பொருளியல் மற்றும் புள்ளிஇயல் துறையின் இரண்டாம் முன்மதிப்பீட்டின் படி 105 மெட்ரிக் டன்/எக்டர் என்ற அளவில் மகசூல் பெறப்பட்டு 145.95 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்டது.

திட்டச் செயல்பாடுகள்:

கரும்பு பயிரில் புதிய தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 2021-22 ஆம் ஆண்டில் ஒன்றிய மற்றும் மாநில நிதி பகிர்வுடன் ரூ.0.41 கோடி நிதி ஒதுக்கீட்டில், 975 ஏக்கர் பரப்பளவில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (கரும்பு) செயல்படுத்தப்பட்டு 964 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



2022-23 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி திறனை பெருக்கிட இத்திட்டமானது ரூ.0.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,087 விவசாயிகளுக்கு 2,970 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது.

2023-24 ஆம் ஆண்டில் 2,580 ஏக்கர் பரப்பளவில் ரூ.0.55 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 1,003 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நடப்பு 2024-25 ஆம் ஆண்டில், பயறு வகை ஊடுபயிர் சாகுபடி செயல்விளக்கங்கள், திசு வளர்ப்பு நாற்று உற்பத்தி மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் விநியோகம் ஆகிய இனங்களின் கீழ் ரூ.0.68 கோடி நிதி செலவில் 2,658 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு 994 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2021-22 முதல் 2024-25 வரை நான்காண்டுகளில் திட்டமானது 9,183 ஏக்கர் பரப்பளவில் ரூ.2.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு 4,048 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கரும்பு சாகுபடிக்கான வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

2021-2022 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடிக்கான 15 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களுக்கு ரூ.6.14 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடிக்கான 15 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களுக்கு ரூ.6.85 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடிக்கான 65 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களுக்கு ரூ.29.32 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில் இதுவரை கரும்பு சாகுபடிக்கான 9 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களுக்கு ரூ.2.72 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டில் இதுவரை கரும்பு சாகுபடிக்கான104 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க தொழில்முனைவோர்களுக்கு ரூ.45.03 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டில் இதுவரை வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.641.04 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.








உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக்கட்டுப்பாடு



திரு. **அர. சக்கரபாணி** அவர்கள்
மாண்புமிகு உணவு மற்றும்
உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்



கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நிவாரணத் தொகை இரண்டு கட்டமாக ரூ.2,000 வீதம் 4,16,78,975 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு பயன்...

17,70,796 பயனாளிகளுக்குப் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன...

பொருளாதார நெருக்கடியில் கடுமையான சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை நாட்டு மக்களுக்கு 40,000 மெ.டன் அரிசி ரூ.134 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது...

ரூ.358.77 கோடி மதிப்பீட்டில் 4,21,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட 254 நெல் சேமிப்புத் தளங்கள்...

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

கொரோனா பெருந்தொற்று நிவாரணத் தொகை வழங்குதல்

கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நிவாரணத் தொகையாக மே 2021-ம் மாதம் முதல் தவணையாக தலா ரூ.2,000/- வீதம் 2,08,42,716 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் ஜூன் 2021ஆம் மாதம் இரண்டாம் தவணையாக தலா ரூ.2,000/- வீதம் 2,08,36,259 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் 14 மளிகைப்பொருட்கள் வழங்குதல்

மேலும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் நியாய விலைக் கடைகளின் மூலம் 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு 2,07,70,726 (99.12%) குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

கைவிரல்ரேகைப் பதிவு (Biometric) முறையில் பொது விநியோகத் திட்டம்

அத்தியாவசியப் பொருள்கள் தகுதியான பயனாளிகளுக்கு கொண்டு சேர்க்கப்படுவதை கைவிரல் ரேகை பதிவு மூலம் உறுதி செய்யப்படுகிறது, சராசரியாக ஒவ்வொரு மாதமும் 99% பரிவர்த்தனைகள் கைவிரல் ரேகை அங்கீகார முறையில் நடைபெற்று வருகின்றன.

மிக்ஜாம் புயல் நிவாரணம் 2023

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் அதிகனமழையும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ரொக்கமாக வழங்கப்பட்டது.

மழை வெள்ள நிவாரணம் 2023

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அதி கன மழையால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதியில் உள்ள மக்களுக்கு ரூ.6,000/- ரொக்கம் மற்றும் அரிசி 5 கிலோ வழங்கப்பட்டது. கன மழையால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி, திருநெல்வேலி , தென்காசி மற்றும் தூத்துக்குடி பகுதியில் உள்ள மக்களுக்கு ரூ.1,000/- ரொக்கமாக வழங்கப்பட்டது.

பெஞ்சல் புயல் நிவாரணம் 2024

தமிழ்நாட்டில் 2024 நவம்பர் 26 முதல் வீசத் தொடங்கிய பெஞ்சல் புயலின் காரணமாக பரவலான அதி கனமழைப்பொழிவினால், தென்பெண்ணையாற்றில் வெள்ளம் ஏற்பட்டு. விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெஞ்சல் புயல் மற்றும் அதி கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் இரண்டு நாள்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் நிவாரண உதவித் தொகையாக ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கமாக வழங்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 கி.கி. அரிசி, ஒரு கி.கி. பருப்பு வழங்கப்பட்டது. கூடுதலாக, மேற்படி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு கி.கி. சர்க்கரை வழங்கப்பட்டது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கேழ்வரகு விநியோகம்:

2023-2024 பட்ஜெட்டில் சட்டசபையில் அறிவிக்கப்பட்டபடி, குடும்ப அட்டைதாரர்களுக்கு தினைப் பயிறு உற்பத்தியை ஊக்குவிக்கவும், சத்தான ஊட்டச்சத்து நுகர்வினை உறுதி செய்யவும், மாநில பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு கேழ்வரகு தானியமானது மே 2023 முதல் சோதனை அடிப்படையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒரு குடும்பத்திற்கு அரிசி உரிமைக்கு பதிலாக 2 கிலோ கேழ்வரகு என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

வழித்தட மேலாண்மை.

இந்திய உணவு கழக கிடங்குகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிற்கும், பின்னர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு உணவு தானியங்கள் கொண்டு செல்வதில் உள்ள போக்குவரத்து செலவுகளை குறைக்கும் பொருட்டு வழித்தட மேலாண்மை திட்டம் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த போக்குவரத்து விநியோக சங்கிலியில் மேம்பட்ட வழிதட முறைகள் மூலம் உகந்த வழிகளைக் கண்டறிந்து உணவு தானியங்களின் தடையற்ற குறைந்த எரிபொருள் செலவுடன் நியாய விலைக் கடைகளுக்கு உணவு தானியங்கள் கொண்டு செல்லப்படுகிறது.

ஏப்ரல் 2024ஆம் மாதம் முதல் 25 மாவட்டங்களில் 1,871 நியாயவிலை அங்காடிகளில் வழிதட மேலாண்மை செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழித்தட மேம்பாடு திட்டம் வெற்றிகரமாக தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டதையடுத்து ரூ.26,54,425/- (ரூபாய் இருபத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நானூற்று இருபத்தைந்து மட்டும்) போக்குவரத்து செலவினத்தில் சேமிப்பு எய்தப்பட்டுள்ளது.

உணவு பொதுவிநியோக சங்கிலி வழித்தட மேலாண்மைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக 05.12.2024 அன்று ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட "அன்னசக்ரா" என்னும் விழாவில் மாண்புமிகு மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு விருதளித்து கவுரவிக்கப்பட்டது.

வடகிழக்கு பருவ மழையினால் பாதிப்படையும் குடும்பங்களுக்கு அரசின் புயல் / வெள்ள நிவாரண உதவி 828 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் சில தேடுதல் மீட்பு உபகரணங்களை இயக்குவதற்கு மண்ணெண்ணெய் அவசியத் தேவை என்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு தீயணைப்புத் துறையினருக்கு சிறப்பினமாகக் கருதி 11,230 லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

புதிய முழு நேர / பகுதி நேர நியாய விலை அங்காடிகளின் விவரங்கள்

மே-2021 முதல் 31.01.2025 வரையிலும், 763 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 1,555 பகுதி நேர நியாய விலைக் கடைகள் உட்பட, 2,318 புதிய நியாய விலைக் கடைகள் குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்கென புதிதாக திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

முன்மாதிரி நியாயவிலைக் கடைகள்

நியாய விலைக் கடைகளின் உட்புற மற்றும் வெளிப்புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக 3,139 நியாய விலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 5,000 நியாய விலைக் கடைகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 31.01.2025 வரை 4,498 நியாய விலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 502 நியாய விலைக் கடைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10,140 நியாயவிலைக் கடைகள் தரமேலாண்மைப் பராமரிப்பிற்கான ISO:9001 தரச்சான்றும், 2,059 நியாயவிலைக் கடைகள் பாதுகாப்பான உணவு சங்கிலி மற்றும் சேமிப்பு முறைக்காக ISO:28000 தரச்சான்றிதழ்களையும் பெற்றுள்ளன.

மின்னணுக் குடும்ப அட்டை விநியோகம்

மே 2021 முதல் ஜனவரி 2025 வரை 17,70,796 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நகல் குடும்ப அட்டை அஞ்சல் வழியில் அனுப்பப்படுதல்

நகல் மின்னணு குடும்ப அட்டைகள் அஞ்சல் வழியாக குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடத்திற்கு அனுப்பிவைத்திடும் திட்டம் 05.04.2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகல் மின்னணு குடும்ப அட்டைகள் அஞ்சல் வழியாக பயனாளிகளின் இருப்பிடத்திற்கு அனுப்பும் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, குடும்ப அட்டைதாரர் ஆன்லைனில் விண்ணப்பிக்கவும் மற்றும் ஆன்லைன் மூலமாக ரூ.50 செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 05.04.2023 முதல் 31.01.2025 வரை 7,38,778 நகல் மின்னணு குடும்ப அட்டைகள் அஞ்சல் வழியாக பயனாளிகளின் இருப்பிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



புதியதாக கொளத்தூர் மண்டலம் தோற்றுவித்தல்

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், 25.08.2021 அன்று நடைபெற்ற இத்துறையின் மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது "ஒரு கோடி ரூபாய் செலவில் துணை ஆணையாளர் (ந) வடக்கு சரகத்தில் புதிதாக கொளத்தூர் மண்டலம் தோற்றுவிக்கப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதன்படி பெரம்பூர் மற்றும் வில்லிவாக்கம் மண்டலங்களிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து, ஒருங்கிணைத்து பொது மக்கள் நலன் கருதி புதிதாக கொளத்தூர் மண்டலம் 65 நியாய விலைக் கடைகளுடன் தோற்றுவிக்கப்பட்டது. புதிய கொளத்தூர் மண்டலம் தோற்றுவிக்கப்பட்டு 12.01.2022 முதல் செயல்பட்டு வருகிறது.

அலுவலகங்களுக்குப் புதிய வாகனம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆணையாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் மாவட்ட வழங்கல் அலுவலகங்கள் கடலூர், கன்னியாகுமரி, கோயம்புத்தூர், நீலகிரி (பறக்கும்படை), உதவி ஆணையாளர் அலுவலகங்கள் மயிலாப்பூர் மற்றும் பரங்கிமலை ஆகிய அலுவலகங்களில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக புதிய 6 வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.48,37,416 நிதி ஒப்பளிப்பு செய்து மேற்படி அலுவலகங்களுக்கு புதிய வாகனம் பெற்று வழங்கப்பட்டது.

கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் சொந்தக் கட்டடம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட ஏதுவாக, ரூ.2.5 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.08.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பொதுப்பணித்துறையின் மூலம் கட்டுமானப் பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் 26.08.2024 அன்று திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

நுகர்வோர் முனையம்

மாநிலம் முழுவதும் நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய டிஜிட்டல் பலகையினை ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாவட்டங்களைப் பொருத்தவரையில் பொதுமக்களாகிய நுகர்வோர்கள் தினந்தோறும் அரசின் அனைத்துத் துறை சார்ந்த சேவைகளைப் பெறுவதற்கு பெரும் திரளாக கூடக்கூடிய இடங்களில் பிரதான இடமான அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகங்களில் மற்றும் சென்னை நகரத்தைப் பொருத்தவரையில் துணை ஆணையாளர் நகரம் வடக்கு/தெற்கு அலுவலகங்களின் கீழ் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் 6 உதவி ஆணையாளர்கள் அலுவலகங்களில் டிஜிட்டல் பலகை அமைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுதானிய உணவுத் திருவிழா

2023ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா. சபையினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறுதானிய உணவுத் திருவிழா நிகழ்ச்சியினை சிறப்பாகக் கொண்டாடிட ஏதுவாக ரூ.40,00,000/- நிதி உப ஒதுக்கீடு செய்யப்பட்டது. பொது மக்களாகிய நுகர்வோர்களிடையே பாரம்பரிய உணவான சிறுதானியங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, அனைத்து மாவட்டங்களிலும் சிறுதானிய உணவுத் திருவிழா நடத்தப்பட்டது. மாநில அளவிலான "சிறுதானிய உணவு திருவிழா" திண்டுக்கல் மாவட்டத்தில் 29.01.2025 அன்று மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்-2019இன் சிறப்பம்சங்கள் குறித்து வட்டார அளவில் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல்

2024 - 2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 2019இன் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய (நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்) விழிப்புணர்வினை 388 ஊராட்சி ஒன்றியங்களில் (வட்டாரம்) உள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு, பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ள ஏதுவாக ரூ.1,00,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்போது வரை வட்டாரத்திற்கு 100 மகளிர் சுய உதவிக்குழு வீதம் 162 வட்டாரங்களில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 2023

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ஐ பின்பற்றி தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 2023 உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

"நுகர்வோர் உறுதிமொழி"

தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் ஆகிய நுகர்வோர் தின விழாக்களில் "நுகர்வோர் உறுதிமொழியினை அனைத்துத் துறைகள் மற்றும் பள்ளி/கல்லூரிகளில் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு விருதுகள் 2022-2023 மற்றும் 2023-2024

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சேவையில் நற்பணி புரிந்தமைக்காக சிறந்த மாவட்டம், சிறந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பு, சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்றம் பள்ளி மற்றும் கல்லூரி ஆகிய நான்கு பிரிவுகளில், முறையே 2022-2023 மற்றும் 2023-2024ஆம் ஆண்டுகளுக்கான நுகர்வோர் பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017 தொடர்பான விழிப்புணர்வு பயிற்சி வழங்குதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017 தொடர்பாக பொதுவிநியோகத் திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் / அலுவலர்களுக்கு ரூ.71,40,000/- செலவில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017 தொடர்பாக விழிப்புணர்வு பயிற்சி சென்னை, ஈரோடு மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் அண்ணா நிர்வாகப் பணியாளர் பயிற்சி கல்லூரி மூலம் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 1,840 அலுவலர்கள் /பணியாளர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

குறைதீர்க்கும் மாதாந்திர பொது விநியோகத் திட்ட முகாம்

மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலனை செய்து துரிதமாக தீர்வு காணும் விதமாக 07.05.2021 முதல் 25.01.2025 வரை வட்ட அளவில் நடைபெற்ற மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர்க்கும் நாள் முகாம்களில் நகல் அட்டை, புதிய குடும்ப அட்டை, முகவரி மாற்றம், பெயர் சேர்த்தல், உள்ளிட்ட 2,60,379 கோரிக்கைகள் பெறப்பட்டு 2,60,379 இனங்களும் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்ட முழுக்கணினி மயமாக்கல்

பொது விநியோகத் திட்ட சேவைகளை துரிதமாகவும், துல்லியமாகவும் வழங்கும் பொருட்டு நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கு அச்சடிக்கப்பட்ட ரசீது (Print Receipt) வழங்கும் வசதி, ஒருங்கிணைக்கப்பட்ட விரல்ரேகை சரிபார்ப்பு வசதி மற்றும் கண்கருவிழி சரிபார்ப்பு வசதி உள்ளிட்ட கூடுதல் நவீன வசதிகளுடன் கூடிய 27,000 விற்பனை முனைய இயந்திரங்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கைவிரல் ரேகை சரியாக பதிவாகாத அட்டைதாரர்களும் கண்கருவிழி சரிபார்ப்பிற்குப் பின்பு அவர்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை மகிழ்வுடன் பெற்றுச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், குடும்ப



அட்டைதாரர்கள் தாங்கள் பெற்றுக் கொள்ளும் அத்தியாவசியப் பொருள்களின் விவரங்களை சரிபார்க்கும் வகையில் நியாயவிலை கடையில் உடனுக்குடன் ரசீதும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியும் அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், உணவுத்துறையின் வரலாற்றுப் பின்னணி

தமிழ்நாட்டில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையில் பொது விநியோகத்திட்டத்தின்கீழ் (Public Distribution System) விநியோகிப்பதற்கு ஏதுவாக அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற உணவுப்பொருட்களை கொள்முதல் செய்து கிடங்குகளில் பாதுகாப்பான முறையில் சேமித்து தரமான பொருள்களை விநியோகம் செய்திடும் பணியினை மேற்கொள்வதற்கென ஒரு நிறுவனம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் கருதி, 1972ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இந்தியாவிற்கே முன்னோடியாக "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்" தொடங்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப்பொருட்கள் நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்களின் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு கழகத்திற்கு சொந்தமான நவீன அரிசி ஆலைகள் மற்றும் தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்யப்பட்டு பொது விநியோகத்திட்டத்திற்கு அரிசி வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் நேரடி கொள்முதல் நிலையங்களின் மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு தரமான அரிசி பொது விநியோகத்திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இவை தவிர பொது மக்கள் நலன் கருதி அமுதம் சில்லரை அங்காடிகள், அமுதம் பல்பொருள் அங்காடிகள், எரிவாயு முகமைகள், பெட்ரோல் பங்குகள் ஆகியவற்றை திறம்பட நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம் "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்" என்ற பெயரில் நிறுவனங்கள் சட்டம், 1956 சட்டப்பிரிவு 25-ன் கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) 01.04.2010 அன்று பதிவுசெய்யப்பட்டு "ஆதாயம் இல்லை; இழப்பு இல்லை" என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

நெல் கொள்முதல் மற்றும் ஊக்கத்தொகை

விவசாயிகளுக்கு விளைபொருட்களுக்கான சரியான விலையை வழங்கிடும் நோக்கத்திலும், பொது விநியோகத்திட்ட பயன்பாட்டிற்கான அரிசியினைப் பெறுவதற்கும், நெல்லிற்கான விலையினை உயர்த்துவது அவசியமாகிறது.

அதனடிப்படையில், ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையுடன், 2012ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் ஊக்கத் தொகையாக சன்னரக நெல்லிற்கு ரூ.70/-ம் பொது ரகத்திற்கு ரூ.50/- ம் தொடர்ந்து வழங்கி வந்த நிலையில், 2021 ஆம் ஆண்டு தற்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு ஊக்கத் தொகையினை குவிண்டால் ஒன்றுக்கு சன்னரக நெல்லுக்கு ரூ.100/-ம் பொது ரக நெல்லுக்கு ரூ.75/- ம் உயர்த்தி விவசாயிகள் பயனடையும் வகையில் உத்தரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அடுத்த கொள்முதல் பருவத்திலும் (2023 - 2024) ஊக்கத் தொகையினை மேலும் உயர்த்தி சன்ன ரக நெல்லுக்கு ரூ.107/-ம் பொது ரக நெல்லுக்கு ரூ.82/-ம் உயர்த்தி உத்தரவிடப்பட்டது.

மூன்றாவது முறையாக நடப்பு 2024-2025 கொள்முதல் பருவத்திலும் ஊக்கத் தொகையினை மேலும் உயர்த்தி சன்ன ரக நெல்லுக்கு ரூ.130/-ம் பொது ரக நெல்லுக்கு ரூ.105/-ம் உயர்த்தி, ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரக நெல்லுக்கு ரூ.2,320/-ம் மற்றும் பொது ரக நெல்லுக்கு ரூ.2,300/-ம் சேர்த்து, குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரக நெல்லுக்கு ரூ.2, 450/-க்கும் மற்றும் பொது ரக நெல்லுக்கு ரூ.2405/-க்கும் விலை நிர்ணயம் செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது நடப்பு கே.எம்.எஸ் 2024 - 2025 பருவத்தில் 01.09.2024 முதல் 31.01.2025 வரையிலான காலங்களில் 1,22,532 விவசாயிகளிடமிருந்து 8,84,484 மெ.டன் (சன்ன ரகம் 5,92,245 மெ.டன் மற்றும் பொது ரகம் 2,92,239 மெ.டன்) நெல் கொள்முதல் செய்யப்பட்டு ஆதார விலையாக ரூ.2,046.16 கோடி மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.107.68 கோடியும் ஆக மொத்தம் ரூ.2,153.84 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொள்முதல் நடவடிக்கைகளில் இடைத்தரகர்களின் தலையீட்டைக் குறைக்க ஆதார் அங்கீகாரம் மூலம் ஜூன் 2023 முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 கழக நவீன அரிசி ஆலைகள் 52,500 மெ.டன் மாதாந்திர அரவைத்திறனுடனும் 623 தனியார் அரவை ஆலைகள் 10,92,482 மெ.டன் மாதாந்திர அரவைத்திறனுடன் நெல் அரவை செய்து வருகின்றனர்.

21 கழக நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் 623 தனியார் அரவை ஆலைகளிலும் கருப்பு மற்றும் பழுப்பு அரிசி நீக்கும் இயந்திரம் (Color Sorter) பொருத்தப்பட்டு உற்பத்தி செய்யப்படும் கண்டுமுதல் அரிசி கல், குருணை மற்றும் கருப்பு அரிசி நீக்கி தரமான கண்டுமுதல் அரிசி பெறப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

செறிவூட்டப்பட்ட அரிசியினை பொது விநியோகத்திட்டத்திற்கு வழங்க ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளதன் பேரில் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் 623 அரவை ஆலைகளிலும் கலவை இயந்திரம் (Blending Unit) பொருத்தப்பட்டு நெல் அரவை செய்யப்பட்டு வருகிறது. மேலும், 21 கழக நவீன அரிசி ஆலைகளில் 20 அரவை ஆலைகளில் கலவை இயந்திரம் பொருத்தப்பட்டு அரவை செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஒரு நவீன அரிசி ஆலையில் கலவை இயந்திரம் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஒரு குவிண்டால் புழுங்கல் நெல் அரவை செய்ய ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வரும் அரவைக் கூலி ரூ.20/- மற்றும் பச்சரிசி குவிண்டால் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் அரவை கூலி ரூ.10/-உடன் மாநில அரசு 26.08.2021 முதல் ஊக்கத்தொகையாக முறையே புழுங்கல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20/-ம் பச்சை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.15/-ம் ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது.

உழவர் உதவி மையம்

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உழவர் பெருமக்கள் தங்களின் குறைகளை தெரிவித்து உடனடியாக நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் "உழவர் உதவி மையம்" எனும் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உழவர் பெருமக்கள் 1800 - 599 - 3540 (6 இணைப்புகள்) என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு நெல் விற்பனை செய்வது தொடர்பான புகார்கள்/ விளக்கங்கள்/ ஆலோசனைகள் பெறலாம். இச்சேவை தொடங்கப்பட்டு 21.10.2021 முதல் 31.01.2025 வரை 13,883 அழைப்புகள் பெறப்பட்டு தொடர்புடைய மண்டல அலுவலகங்களால் தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

2023ஆம் ஆண்டில் பொது விநியோகத்திட்டத்தின்கீழ் ராகி விநியோகம்:

நோக்கம்

விவசாயிகள் சிறுதானிய உற்பத்தியினைப் பெருக்குவதை ஊக்கப்படுத்துவது, நியாயமான விலை வழங்குவது மற்றும் பொது மக்களின் ஊட்டச்சத்து நுகர்வினை உறுதி செய்வது.

பயன் மற்றும் மக்களிடம் ஏற்பட்ட தாக்கம்

சிறுதானியங்களின் உற்பத்தியினைப் பெருக்கிட ஊக்கமளிக்கவும் மற்றும் குடும்ப அட்டைதாரர்களின் சிறுதானிய நுகர்வினை உறுதி செய்திடவும், தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மாநில அரசின் பொது விநியோகத்திட்டத்தின்கீழ் பரீட்சார்த்த அடிப்படையில் மே-2023 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரிசிக்கு பதிலாக 2 கிலோ ராகி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய நிலை

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பரீட்சார்த்த முறையில் கே.எம்.எஸ் 2022-2023 கொள்முதல் பருவத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மண்டலங்களில் விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.

கேழ்வரகு கொள்முதல் விவசாயிகளிடம் வரவேற்பினைப் பெற்ற நிலையில், கேழ்வரகு கொள்முதல் செய்வதை விரிவுபடுத்தும் பொருட்டு, ஈரோடு மற்றும் சேலம் மண்டலங்களை இணைத்து கே.எம்.எஸ். 2023 - 2024ஆம் கொள்முதல் பருவத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் விவசாயிகளிடமிருந்து 1,889 மெ.டன். கேழ்வரகு ரூ.7.27 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டது.

நடப்பு கொள்முதல் கே.எம்.எஸ். 2024-2025 பருவத்தில் 01.11.2024 முதல் 31.01.2025 வரையில் மேற்தெரிவித்த மண்டலங்களில் விவசாயிகளிடமிருந்து 221 மெ.டன். கேழ்வரகு ரூ.95 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையினை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மின்னணு பரிவர்த்தனை முறையில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு வெங்காயம் மற்றும் தக்காளி விற்பனை

நோக்கம்

வெளிச்சந்தையில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விலையேற்றம் நிகழும் காலங்களில் தற்காலிகமாக அமுதம் மக்கள் அங்காடிகள் மூலம் மலிவு விலையில் பொது மக்களுக்கு காய்கறி விற்பனை செய்வது.

பயன் மற்றும் மக்களிடம் ஏற்பட்ட தாக்கம்

அதனடிப்படையில், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அமுதம் மக்கள் அங்காடிகளில் 34,280 கிலோ தக்காளி ரூ.20,39,730/- மதிப்பிலும் 10,410 கிலோ வெங்காயம் ரூ.5,560/- மதிப்பிலும் பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மலிவு விலையில் வெங்காயம் மற்றும் தக்காளி விற்பனை செய்யப்பட்டதால், பொது மக்கள் விருப்பத்துடன் வாங்கி பயனடைந்ததால் அரசுக்கு நற்பெயரும் இத்திட்டத்திற்கு பெரும் வரவேற்பும் கிடைக்கப்பெற்றுள்ளது.

சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு

தமிழர் திருநாளாம் 2022ஆம் ஆண்டு தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 21 மளிகைப் பொருள்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு, நெய், மஞ்சள்தூள், மிளகாய்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், மிளகு, புளி, கடலை பருப்பு, உளுந்தம்பருப்பு, ரவை, கோதுமை மாவு, உப்பு, முழு கரும்பு மற்றும் துணிப்பை வழங்க ரூ.1204.93 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்து 2,15,67,122 எண்ணிக்கையிலான அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அமுதம் நியாய விலை அங்காடிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் திருநாளாம் 2023ஆம் ஆண்டு தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரையுடன் ரொக்கப்பணம் ரூ.1000/- மற்றும் முழு நீளக்கரும்பு வீதம் வழங்கிட ரூ.2,429.05 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்து 2,19,33,342 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

தமிழர் திருநாளாம் 2024ஆம் ஆண்டு தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் (2,19,51,748) மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் (19,365) ஆக மொத்தம் 2,19,71,113 குடும்பத்தினருக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரையுடன் ரொக்கப்பணம் ரூ.1,000/- மற்றும் ஒரு முழுக்கரும்பினையும் வழங்கிட, ரூ.2,436.19 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

தமிழர் திருநாளாம் 2025ஆம் ஆண்டு தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆக மொத்தம் (2,20,94,585) குடும்பத்தினருக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பினையும் வழங்கிட, ரூ.249.75 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

சிறப்பு பொது விநியோகத் திட்டம்

நோக்கம்

வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படும் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் விலையினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மானிய விலையில் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கிட 2007ஆம் ஆண்டில் மேனாள் முதல்வர் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் சிறப்பு பொது விநியோகத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

பயன் மற்றும் மக்களிடம் ஏற்பட்ட தாக்கம்

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் கனடா துவரம் பருப்பு மற்றும் பாமாயில் சமையல் எண்ணெய் ஆகியவற்றை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதில் மத்திய அரசு மானியம் வழங்கி வந்ததை நிறுத்தியபோதிலும், அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியினை கட்டுப்படுத்தும் நோக்கிலும் மற்றும் ஏழை எளிய மக்கள் பயனடையும் நோக்கிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு பருப்பினையும் மற்றும் பாமாயில் சமையல் எண்ணெய் ஆகியவற்றை சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 100% குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கவும் மற்றும் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு பருப்பினையும் மற்றும் பாமாயில் சமையல் எண்ணெய் ஆகியவற்றை ஆறு மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கி ஜூலை 2024 முதல் ஜூன் 2025 வரையிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சராசரியாக மாதந்தோறும் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு 20,000 (இருபதாயிரம்) மெ.டன்னும், செறிவூட்டப்பட்ட பாமாயில் சமையல் எண்ணெய் 2,00,00,000 (இரண்டு கோடி) - 1 லிட்டர் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு ரூ.30/- என்ற விலையிலும் மற்றும் ஒரு லிட்டர் செறிவூட்டப்பட்ட ஆர்பிடி பாமாயில் எண்ணெய் பாக்கெட் ரூ.25/- என்ற விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது.

வெளிச்சந்தையில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.190/- க்கும், ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் ரூ.135/- க்கும் விற்பனை செய்யப்படும் நிலையில், சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின்கீழ் முறையே ரூ.30/- மற்றும் ரூ.25/- க்கு மானிய விலையில் விற்பனை செய்யப்படுவதால், இத்திட்டம் மக்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

தற்போதைய நிலை:

இதனால் ஒரு மாதத்திற்கு ரூ.380 கோடி வீதம் வருடத்திற்கு ரூ.4,560 கோடி அரசிற்கு கூடுதலாக செலவீனம் ஏற்படுகிறது. கூடுதல் செலவினம் ஏற்பட்டபோதிலும், இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசே இச்செலவினத்தை ஏற்று சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நிதி நெருக்கடியிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் ஜூன்-2025ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத்திட்டம் – சர்க்கரை:

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தோராயமாக 35,500 மெ.டன் சர்க்கரை வழங்கப்பட்டு வந்தது. ஒரு மாதத்திற்கு 10,820 மெ.டன்னிற்கு மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.18.50/- வீதம் மானியமாக 31.03.2017 வரை ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வந்தது.

01.06.2017 முதல் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்-2013 தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் 18.64 இலட்சம் AAY குடும்ப அட்டைகளுக்கு மட்டும் ஒரு கிலோ சர்க்கரைக்கு ரூ.18.50/- மானியமாக வழங்கப்படும் என ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. இதனால், ஒன்றிய அரசின் மானியம் மாதத்திற்கு ரூ.20 கோடியிலிருந்து ரூ.3.45 கோடியாக குறைந்துள்ளது. மேலும் லெவி சர்க்கரை ஒதுக்கீடு நிறுத்தப்பட்டதினாலும், சர்க்கரை ஒதுக்கீட்டிற்கான மானியம் 01.06.2017 முதல் மாதத்திற்கு 10,820 மெ.டன்னிலிருந்து 1,864.6 மெ.டன் ஆக குறைத்து வழங்கப்பட்டதாலும், பொது விநியோகத் திட்டத்திற்கு சராசரியாக மாதந்தோறும் வழங்கப்படும் 34,000 மெ.டன் சர்க்கரைக்கு வருடத்திற்கு ரூ.1,300 கோடி தமிழ்நாடு அரசுக்கு கூடுதல் மானிய சுமை ஏற்பட்டுள்ளது.

எனவே, கூடுதல் செலவினத்தை கட்டுப்படுத்த AAY குடும்ப அட்டை அல்லாதவர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.25/- என 01.11.2017 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தற்போதைய சராசரி மாதாந்திர சர்க்கரை ஒதுக்கீட்டின் அளவு 32,000 மெ.டன் ஆகும். இவ்வாறு சர்க்கரையின் விலை மாற்றி அமைக்கப்பட்ட பிறகும் அரசு கொள்முதல் செய்யும் சர்க்கரையின் விலையான ஒரு கிலோ ரூ.40/-க்கும் AAY அல்லாத இதர குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் விற்பனை விலையான ஒரு கிலோ ரூ.25/-க்கும் உள்ள வித்தியாச தொகையான ரூ.15/-யும் AAY குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.8 மாநில அரசு மானியத்துடன் வழங்கி வருகிறது.

கோதுமை

ஒன்றிய அரசினால் தமிழ்நாட்டிற்கு ஜூலை-2020 வரை மாதந்தோறும் 13485,093 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013-இன்படி கோதுமை ஒதுக்கீடு ஆகஸ்ட்-2020 முதல் 30647.933 மெட்ரிக் டன் என்ற அளவில் அதிகரித்து ஒதுக்கீடு செய்து வந்தது.

இந்நிலையில் கடந்த ஜூன்-2022 முதல் ஜூலை-2023 வரையிலான மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 8,532.354 மெ.டன் கோதுமை ஒதுக்கீடும், மேலும் ஆகஸ்ட் 2023 முதல் செப்டம்பர் 2023 வரை 8,576.030 மெ.டன் ஒதுக்கீடும், அக்டோபர் 2024 முதல் பிப்ரவரி 2025வரை 17,100.377 மெ.டன் கோதுமை ஒதுக்கீடும், மார்ச் 2025 முதல் 8,576.024 மெ.டன் கோதுமை ஒன்றிய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பெறப்பட்டு வருகிறது.

அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் 5 கிலோ வீதமும் நியாய விலைக் கடைகளில் இருப்பின் அளவினைப் பொறுத்து அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்தின்பேரில் அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி - ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கோதுமை வழங்கப்படுகிறது. மாவட்ட தலைமையிடங்கள் - ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கோதுமை வழங்கப்படும்.

அதன்படி அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்தின்பேரில் அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

மே-2021 முதல் பிப்ரவரி-2025 வரை 9,02,786.702 மெ.டன் கோதுமை விலையில்லாமல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

அமுதம் பல்பொருள் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மளிகை, பானவகை, அழகுசாதனப் பொருள்கள் மற்றும் அதிக அளவில் விற்பனையாகும் நுகர்வோர் பொருள்களை நியாயமான விலையில் 80 பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இப்பல்பொருள் அங்காடிகளில் மே-2021 முதல் ஜனவரி-2025 வரை ரூ.105,69,32,474/- மதிப்பிலான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



அமுதம் பல்பொருள் அங்காடிகள் நவீனப்படுத்துதல்

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் சென்னை கோபாலபுரம் மற்றும் அண்ணாநகரில் இயங்கி வரும் அமுதம் மக்கள் அங்காடிகளை ரூ.50 இலட்சம் செலவில் 2023-2024 நிதி ஆண்டில் நவீன மயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு கோபாலபுரம் மக்கள் அங்காடி நவீன மயமாக்கப்பட்டு கடந்த 08.07.2023 அன்று தொடங்கப்பட்டது. தற்போது அண்ணாநகர் அங்காடியும் நவீன மயமாக்கப்பட்டு கடந்த 12.09.2024 முதல் சீரிய முறையில் விற்பனை நடைபெற்று வருகிறது.

பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. மே-2021 முதல் ஜனவரி-2025 வரை நிகர லாபம் ரூ.1.69 கோடி ஆகும். தற்போது கரூர் மண்டலம் கிருஷ்ணாபுரத்தில், ஒரு புதிய பெட்ரோல்/டீசல் வழங்கு நிலையம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் 28.01.2025 அன்று தொடக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு உருளை விநியோக முகவராக செயல்படுகிறது. மே-2021 முதல் ஜனவரி-2025 வரை நிகர லாபம் ரூ.5.36 கோடி ஆகும்.

அம்மா உணவகம் - மானிய விலையில் மாநகராட்சிக்கு அரிசி மற்றும் கோதுமை வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மலிவு விலை சிற்றுண்டி திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி மூலம் ஏழை எளிய மக்களுக்காக சிற்றுண்டி உணவகங்கள் 19.02.2013 அன்று திறக்கப்பட்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அனைத்து மண்டலங்களுக்கும் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அரிசி மற்றும் கோதுமை சென்னை மாவட்டத்திலுள்ள அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மே-2021 முதல் ஜனவரி-2025 வரை 6,339.231 மெ.டன் அரிசியும், 669 மெ.டன் கோதுமையும் மானிய விலையில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அம்மா உணவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரமலான் நோன்பு பச்சரிசி

புனித ரமலான் மாதத்தில் நோன்பு நோக்கும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு கஞ்சி தயாரிக்க ஒவ்வொரு ஆண்டும் பள்ளிவாசல்களுக்கு தமிழ்நாடு அரசால் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களது மொத்த அனுமதியின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.1/- வீதம் பச்சரிசி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில், 2021 முதல் 2024ஆம் ஆண்டுகளில் 26,869.743 மெ.டன். பச்சரிசி ரமலான் நோன்புக்காக இஸ்லாமியப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.கொரோனா நோய் தொற்று நிமித்தம் நிவாரண உதவித் தொகை அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000/- இரண்டு தவணைகளாக வழங்கப்பட்டது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.05.2021 அன்று கொரோனா வைரஸ் தொற்று நிவாரணம் குறித்த அறிவிப்பினை வெளியிட்டதன் அடிப்படையில் கொரோனா நோய் தொற்றின் காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், ரூ.4,153.39 கோடி செலவில், மே-2021 ஆம் மாதத்தில் 2,07,66,950 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.2,000/- நிவாரணத் தொகையினை முதல் தவணையாக வழங்கப்பட்டது. மேலும், புதிய அரிசி பெறும் 2,14,950 கூடுதல் குடும்ப அட்டைகளுக்கு தலா

ரூ.2,000/- வீதம் வழங்கிட ரூ.42.99 கோடி கூடுதலாக விடுவித்து ஆணையிடப்பட்டது. அதன்படி அமுதம் சில்லரை அங்காடிகள் மூலம் 13,65,397 எண்ணிக்கையிலான அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டது.

மேலும், இரண்டாவது தவணையாக நடைமுறையில் இருந்த 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.2,000/- நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.4196.38 கோடி நிவாரணத் தொகை வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அமுதம் சில்லரை அங்காடிகள் மூலம் இரண்டாம் தவணையாக 13,64,065 எண்ணிக்கையிலான அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டது.

இலங்கை நாட்டு மக்களுக்கு 40,000 மெ.டன் அரிசி அனுப்பப்பட்ட விவரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க பொருளாதார நெருக்கடியால் கடுமையாக சிரமங்களை எதிர்கொள்ளும் இலங்கை நாட்டு மக்களுக்கு உதவும் பொருட்டு ரூ.134 கோடி செலவில் 40,000 மெ. டன் அரிசி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி அரிசி (Par Boiled rice viz.Co-51, ADT-45, and Andhra Ponni) கிலோ ஒன்றுக்கு ரூ.33.50 என்ற விலையில் தமிழ்நாட்டிலுள்ள அரவை ஆலைகளிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்து சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் வாயிலாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மிக்ஜாங் புயல் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் :

கடந்த 2023ஆம் ஆண்டில், டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தினங்களில் வீசிய மிக்ஜாங் புயலினால் ஏற்பட்ட கனமழையினால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/- வீதம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 24,78,229 குடும்பங்களுக்கு ரூ.1486.94 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி 23,18,232 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரணத்தொகை கோரி பெறப்பட்ட 2,68,869 குடும்பங்களுக்கு தலா ரூ. 6,000/- நிவாரணத் தொகை வழங்கிட. அதன்படி 2,54,841 குடும்பங்களுக்கு தலா ரூ.6000/- வீதம் நேரடி வங்கி கணக்கின் மூலம் பயனாளிகளுக்கு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி :

26.12.2023இன்படி 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் பெய்த அதிகன மழையினால், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில், மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில் இரண்டு நாள்களுக்கு மேல் வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை இழந்த 6,63,760 குடும்பங்களுக்கு ரூ.6,000/- 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது. மற்றும் திருநெல்வேலி,தூத்துக்குடி கன்னியாகுமரி, மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில், இதர வட்டங்களில், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மொத்தம் 14,31,164 குடும்பங்களுக்கு தலா ரூ.1,000/- வீதம் 92% பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேட்டி சேலை வழங்கும் திட்டம்:

2024ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் பயனாளிகளுக்கு வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் 9,40,888 வேட்டிகள், 23,88,600 சேலைகள் மற்றும் 2025ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு, அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் மற்றும், முதியோர் ஓய்வூதியத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் பயனாளிகளுக்கும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் 1,77,22,993 வேட்டிகள், 1,77,64,477 சேலைகள் ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற வேட்டி மற்றும் சேலைகளை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் இறக்கம் செய்யப்பட்டு நியாய விலைக் கடைகளின் மூலமாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும், முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது.



இயற்கை இடர்பாடுகள் நிவாரணம் ஃபெஞ்சல் புயல்-2024

வடகிழக்குப் பருவ மழை 2024 தொடங்கிய நிலையில் அதன் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 5 கிலோ அரிசிப் பைகள் தயார் செய்திட அரசு அறிவுறுத்தலின்படி, 5 கிலோ அரிசிப் பைகள் தயார் செய்து கழக கிடங்குகளில் இருப்பில் வைக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் கடந்த 26 நவம்பர் 2024 முதல் வடமாவட்டங்களில் வீசத்தொடங்கிய ஃபெஞ்சல் புயலின் காரணமாக பரவலான அதி கனமழைப்பொழிவு ஏற்பட்டது. இந்தப்புயல் கரையை கடந்து குறிப்பாக விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அதிக கனமழை காரணமாகவும் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டு பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கு முதற்கட்டமாக 7,00,000 எண்ணம் 5 கிலோ அரிசி பைகள், ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ சர்க்கரை ஆகியவை நிவாரணப் பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் அதிக கனமழை காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசிப் பைகள் ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ சர்க்கரை உள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 5,00,000 எண்ணம் 5 கிலோ அரிசி பைகள் தயார் செய்து கழகக் கிடங்குகளில் இருப்பில் உள்ளது.

கழக நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 52,500 மெ.டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. அரிசியின் தரத்தை மேம்படுத்திட 21 ஆலைகளையும் 3 கட்டங்களாக நவீன மயமாக்கப்பட்டு அதில் 20 ஆலைகள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மீதமுள்ள ஒரு ஆலையில் நவீன மயமாக்கல் பணிகள் நடைபெற்று வருகிறது.

கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (Colour Sorter Machine)

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் தரம் உயர்த்தும் உயரிய நோக்கத்தில் கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டர் மிஷின்) 21 நவீன அரிசி

ஆலைகளுக்கு வழங்கப்பட்டு, அதில் 20 நவீன அரிசி ஆலைகளில் நல்ல முறையில் இயங்கிக் கொண்டுள்ளது. மீதமுள்ள ஒரு நவீன அரிசி ஆலையின் தரம் பிரிக்கும் இயந்திரம் நிர்மானம் செய்யப்படும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கட்டுமானப் பணிகள்

வட்டச் செயல்முறைக் கிடங்குகள் மற்றும் கூடுதல் கிடங்குகள் கட்டுதல் :

தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை வட்ட அளவில் உறுதி செய்திடும் விதமாக அனைத்து வட்டங்களிலும் செயல்முறை கிடங்குகள் படிப்படியாக அமைக்கப்படுவதால் இயக்கச்செலவினம் வெகுவாக குறைக்கப்படுகிறது. 2021 – 2022 முதல் 2024 – 2025ஆம் நிதியாண்டு காலத்தில் 22 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள் மொத்தம் 58500 மெ.டன் கொள்ளளவில் ரூ.114.78 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கும், 37 கூடுதல் கிடங்குகள் மொத்தம் 42,750 மெ.டன் கொள்ளளவில் ரூ.85 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி இதுவரை 8 மாவட்டங்களில் 22 எண்ணிக்கையிலான மொத்தம் 26,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள் ரூ.48.04 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுதல் :

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக டெல்டா மற்றும் டெல்டா அல்லாத நெல் சாகுபடி அதிகமுள்ள மாவட்டங்களில் அறுவடை காலங்களில் விவசாயிகளின் நலன் கருதி 4.000 க்கும் மேற்பட்ட நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. இவற்றில் 731 நிலையங்களுக்கு மட்டுமே நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில் வாடகை அடிப்படையில் நேரடி கொள்முதல் நிலையங்கள் தற்காலிகமாக கீற்றுக் கொட்டகை மற்றும் திறந்தவெளி கோயில் நிலங்கள் போன்றவற்றில் திறந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, விவசாயிகளின் நலன்கருதி நெல் சாகுபடி அதிகமுள்ள இடங்களில் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையங்களை அரசு படிப்படியாக நிறுவி வருகிறது.

2021-2022 முதல் 2024-2025 வரையிலான காலத்திற்கு 80 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடனும், 200 எண்ணிக்கையிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி இதுவரை 144 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மொத்தம் ரூ.70.43 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல்சேமிப்பு தளங்கள் அமைத்தல் :

விவசாயிகளின் கடின உழைப்பில் விளைவிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படும் "ஒரு நெல்மணிக்கூட வீணாகக்கூடாது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதனை தொடர்ந்து, கொள்முதல் செய்யப்படும் நெல்மணிகள் புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்து இருந்து பாதுகாத்திடவும், கொள்முதல் பணிகளை துரிதப்படுத்தவும் 2022-2023 முதல் 2024-2025 மொத்தம் 28 வளாகங்களில் 254 எண்ணிக்கையிலான 4,21,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட நவீன நெல் சேமிப்பு தளங்கள் ரூ.358.77 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவிடன் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி இதுவரை 12 மாவட்டங்களில் 3,62,850 மெ.டன் கொள்ளளவில் ரூ.285.25 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல்சேமிப்பு தளங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளில் ரூ.47.82 கோடி மதிப்பீட்டிலான 40,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.25.70 கோடி மதிப்பீட்டிலான 18,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 வளாகங்களின் பணிகளை நபார்டு (NABARD) திட்டத்தில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரக்கட்டுப்பாடு பணிகள்:

கடந்த நான்கு ஆண்டுகளில் 70,975 புதிய தார்பாலின் உறைகளும், (LDBP COVERS), 79,000 எண்ணம் புதிய தார்பாலின் பாய்களும் (LDBP SHEETS) மற்றும் 18,250 புதிய இரும்பு இடைச்செருகு கட்டைகளும் (MS Steel Crates) கொள்முதல் செய்யப்பட்டு கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. புதிய தார்பாலின் உறைகள் (LDBP COVERS) மற்றும் தார்பாலின் பாய்கள் (LDBP SHEETS) கொண்டு, கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் மழை மற்றும் பிற காரணிகளால் சேதமடையாமல் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டு வருகிறது.

07.05.2021 முதல் 31.01.2025 வரை 2,101 ஈரப்பதமானிகளும் (Moisture Meters without printer-1,651), (Moisture Meters with printer-450), மற்றும் 1,815 நெல்தூற்றும் இயந்திரங்களும் (Winnowing Machines) கொள்முதல் செய்யப்பட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு தரமான நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மண்டல தலைமை தரக்கட்டுப்பாடு அலுவலர்களால் கழக கிடங்குகள் மற்றும் நியாயவிலை அங்காடிகளில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் மூலம் பொது விநியோகத்திட்ட பயனாளிகளுக்கு தரமான பொருள்கள் வழங்கப்பட்டு வருவதை உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 200 இளநிலை தர ஆய்வாளர்களுக்கு சென்னை, அண்ணாநகரில் உள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்தில் 05.06.2023 முதல் 07.07.2023 வரை தரக்கட்டுப்பாடு தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், ஹைதராபாத்தில் உள்ள இந்திய தானிய சேமிப்பு மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் 05.02.2024 முதல் 09.02.2024 வரை 8 தரக்கட்டுப்பாடு பணியாளர்களுக்கு தரக்கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், புதிதாக நிறுவப்பட்ட "கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக்கூடத்திற்கு" NABL அங்கீகாரம் பெற, 3 தரக்கட்டுப்பாடு அலுவலர்கள் 14.05.2024 முதல் 17.05.2024 வரை சென்னை, தரமணியில் உள்ள இந்திய தர நிர்ணய அமைப்பில் (BIS) 'IS/ISO/IEC 17025:2017-ன்படி ஆய்வக தர மேலாண்மை அமைப்பு மற்றும் உட்தணிக்கை குறித்து பயிற்சி பெற்றனர்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பின்படி கோயம்புத்தூர் மண்டலம், கருமத்தம்பட்டி கிடங்கு வளாகத்தில் நவீன தானிய பரிசோதனைக்கூடம் அமைக்கும் பணி ரூ.4.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று, "கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக்கூடம்"எனப் பெயரிடப்பட்டு கடந்த 23.09.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

களப்பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்குவது

2024-2025ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் அமுதம் சில்லரை அங்காடிகள் / அமுதம் பல்பொருள் அங்காடிகள், கிடங்குகள், பெட்ரோல் /டீசல் பங்குகள், எரிவாயு முகமைகள், மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மற்றும் இதர களப்பணியிடங்களில் பணிபுரிந்து வரும் களப்பணியாளர்களை பொது மக்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில் பட்டியல் எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், எடையாளர்கள் மற்றும் காவலர்களை உள்ளடக்கிய 4,710

பணியாளர்களுக்கு ரூ.2 கோடியே 7 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 20.02.2025 அன்று மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டு, அனைத்து மண்டலங்களிலும் உள்ள களப்பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இராணிப்பேட்டை, திருமங்கலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கூடுதல் கிடங்குகள் தலா 3,400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.09.2023 அன்று திறந்துவைக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த கொள்ளளவு 7.60 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 7.71 இலட்சம் மெட்ரிக் டன்னாக தற்போது உயர்ந்துள்ளது.

புதிதாக திருவாரூர் சேமிப்பு கிடங்கு அலுவலகம் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 13.05.2022 அன்று பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளை பதிவுசெய்ததற்காக 31.10.2022 அன்று தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு புது தில்லியிலுள்ள கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையம் முதல் பரிசு வழங்கி கௌரவித்தது.


30 முதல் 50 மெ.டன் எடையளவுடைய 11 மின்னணு எடைமேடைகள் 60 மெ.டன் எடைமேடைகளாக ரூ.2 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

பல்லடம் சேமிப்புக் கிடங்கில் கூடுதலாக 3,400 மெ.டன் கொள்ளளவில் கூடுதல் கிடங்கு கட்டுமானம் அரியலூர் மற்றும் திருப்பத்தூரில் தலா 3,400 மெ.டன் கொள்ளளவில் புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.09.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட 9 சேமிப்புக் கிடங்குகளில் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்க்கும் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.22.30 கோடி ஒதுக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேமிப்புக் கிடங்கு மேலாண்மைத் திட்டப்பணி (Warehousing Management System) நடைமுறைப்படுத்த அனைத்து சேமிப்பு கிடங்குகளிலும் ரூ.2.28 கோடி செலவில் முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.





சேமிப்புக் கிடங்குகளில் சேமித்துள்ள சரக்குகளின் பாதுகாப்பினை மேம்படுத்திட அனைத்துக் கிடங்குகளிலும் கிடங்கு கொள்ளளவிற்கு ஏற்ப கண்காணிப்பு கேமராக்கள் சுமார் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு தலைமை அலுவலகத்தில் கிடங்குகளின் அன்றாட நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2023-2024ஆம் நிதி ஆண்டில் ரூ.133.85 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது வரலாற்று சாதனையாகும். இந்நிதியாண்டில் ரூ.39.22 கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டியுள்ளது. இந்நிறுவன வரலாற்றில் இது உயர்ந்தபட்ச தொகையாகும்.

இந்நிறுவன பங்குதாரர்களான தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஈவுத்தொகையாக மொத்தம் ரூ.11.76 கோடி ரூபாய் 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கு வழங்கியுள்ளது. இது கடந்த காலத்தைவிட அதிகபட்ச தொகையாகும்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள்:

07.05.2021 முதல் 31.01.2025 வரையிலான காலகட்டத்தில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் மொத்தம் 34,072 வழக்குகள் பல்வேறு அலகுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில் ரூ.9.54 கோடி மதிப்பில் 1,68,961 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி ரூ.9.06 இலட்சம் மதிப்பில் 60,420 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ரூ.62.08 இலட்சம் மதிப்பில் 6,898 சமையல் எரிவாயு உருளைகள் மற்றும் ரூ.14.66 கோடி மதிப்பிலான மற்ற பொது விநியோகத் திட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு ரூ.27.07 கோடி ஆகும். இக்குற்றங்களில் ஈடுபட்ட 35,000 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 6,914 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன மற்றும் 7,727 வாகனங்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் 285 நபர்கள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலப்பட டீசல் விற்பனையைத் தடுக்க, மாநிலம் முழுவதும் தீவிர மற்றும் சிறப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக 128 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் 16,59,229 லிட்டர் கலப்பட டீசல் மற்றும் 122 வாகனங்கள் மேற்கூறிய காலகட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

2 புதிய மண்டலங்கள், 8 புதிய சரகங்கள், 6 புதிய அலகுகள் மற்றும் 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கம்:

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகளை செம்மையாக கண்காணிப்பதற்கு ஏதுவாக காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதிதாக கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 2 மண்டலங்களும், காவல் துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், விருதுநகர், திருநெல்வேலி ஆகிய 8 புதிய சரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களான கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் புதிதாக 6 அலகுகள் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன. அண்டை மாநில மற்றும் மாவட்ட எல்லையோரங்களில் நடைபெறும் பொது விநியோகத் திட்ட பொருள்கள் கடத்தலைத் தடுக்க திருவள்ளூர், பொள்ளாச்சி மற்றும் உத்தமபாளையம் ஆகிய பகுதிகளில் இத்துறையின் 3 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் உருவாக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

புதிய பணியிடங்கள் உருவாக்கம்:

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் பணியினை மேலும் செம்மையாக்க 2 காவல் கண்காணிப்பாளர்கள், 8 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 6 காவல் உதவி ஆய்வாளர்கள், 6 தலைமைக் காவலர்கள், 12 முதல் நிலைக் காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1 பிரிவு கண்காணிப்பாளர், 1 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர்கள், மற்றும் 1 தட்டச்சர் என மொத்தம் 45 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

புதிதாகக் கணிப்பொறிகள், அச்சுப்பொறி மற்றும் படியெடுக்கும் உபகரணங்கள் வழங்குதல்:

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகள் மற்றும் தலைமையிடத்திற்கு 10 வருடங்களுக்கு முன்பாக வழங்கப்பட்ட கணிப்பொறிகள், அச்சுப்பொறி மற்றும் படியெடுக்கும் இயந்திரங்களுக்கு மாற்றாக நவீன கணிப்பொறிகள், அச்சுப்பொறிகள் மற்றும் படியெடுக்கும் இயந்திரங்கள் ரூ.52.50 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டது.

காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி:

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் புதிதாக பணியமர்த்தப்படும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955 மற்றும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980 ஆகியவற்றைக் குறித்து புத்தாக்கப் பயிற்சி ரூ.9.93 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டது. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் வரலாற்றில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகள் மற்றும் சிறப்பு சுற்றுக் காவல் படைகளுக்கு உடையில் பொருத்திக் கொள்ளும் கண்காணிப்புக் கேமரா (Body-worn Camera) வழங்குதல்:

பொது விநியோகத் திட்ட பொருள்களை கடத்துவதாக சந்தேகிக்கப்படும் வாகனங்களின் இயக்கங்களை கண்காணிப்பதற்காக எல்லையோர மாவட்ட மற்றும் மாநிலங்களின் அருகில் அமைந்துள்ள தணிக்கைச் சாவடிகள் மற்றும் சுங்கச் சாவடிகளில் செல்லும் வாகனங்களை கண்காணிக்க ரூ.18.30 இலட்சம் செலவில் உடையில் பொருத்திக்கொள்ளும் கண்காணிப்பு கேமராக்கள் (Body-worn cameras) வாங்கப்பட்டு மாநில மற்றும் மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் அமைந்துள்ள குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலகுகளுக்கும் மற்றும் சிறப்பு சுற்றுக் காவல் படைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கட்டணமில்லா தொலைபேசி எண் சேவை - 1800 595 5950:

பொது விநியோகத் திட்ட பொருள்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் குறித்து பொது மக்கள் நேரடியாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறைக்கு புகார் அளிக்க ஏதுவாக 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் (1800 599 5950) 17.02.2023 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 17.02.2023 முதல் 31.01.2025 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 826 அழைப்புகள் பெறப்பட்டு, அதில் 191 வழக்குகள் பதியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த தலைவர் மற்றும் உறுப்பினர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் நிரப்பப்பட்டுள்ளன.

மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த 31 தலைவர் மற்றும் 57 உறுப்பினர் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் முழு வீச்சில் செயல்பட துரித நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த நுகர்வோர் வழக்குகள் விரைந்து முடிக்கப்பட்டு தற்பொழுது 19 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் 100 க்கும் குறைவான வழக்குகள் நிலுவையில் இருப்பது தற்போதைய தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய சாதனை ஆகும். தமிழ்நாடு அரசால் நுகர்வோர் வழக்குகள் அதிகமாக நிலுவையில் உள்ள சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், நாகர்கோயில் மற்றும் தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில், 9 - கூடுதல் மாவட்ட ஆணையங்கள் உருவாக்கப்பட்டு, நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைத்து, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019இல் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவான 90 நாள்களுக்குள் நுகர்வோர்களுக்கு விரைவாக தீர்ப்புகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது தமிழ்நாடு அரசின் தனித்துவமான சாதனையாகும்.

தமிழ்நாடு அரசால், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் அதிகமான வழக்குகள் முடிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்குவதற்கு ஏதுவாக மாதம் ரூ.60,000/- வீதம் வருடத்திற்கு ரூ.21.60 இலட்சம் செலவில் மூன்று சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத் தலைவர் அவர்களால் பகரப்படும் தீர்ப்புகள் விரைவாக தட்டச்சு செய்து தீர்ப்புகளின் நகல்கள் உரிய நேரத்தில் நுகர்வோர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு வழங்கி வருவது அரசினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சாதனை ஆகும்.



இதே போன்று, நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களிலும் கூடுதலாக தலா ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.35,000/- வீதம் நியமனம் செய்யப்பட்டு, தீர்ப்புகளின் நகல்கள் நுகர்வோர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்கு அரசினால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்துறையில், மாவட்ட ஆணையங்களில் உள்ள சுருக்கெழுத்து தட்டச்சர் காலிப் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் பணி நியமன ஒதுக்கீடு தாமதமான சமயங்களில், மாவட்ட ஆணையங்களில் பகரப்படும் தீர்ப்புகளின் நகல்கள் வழக்கறிஞர்களுக்கும் / வழக்காடிகளுக்கும் தங்குதடையின்றி கிடைப்பதற்காக, தமிழ்நாடு, 11 - சுருக்கெழுத்துத் தட்டச்சர்களை ஒப்பந்த அடிப்படையில், மாதம் ரூ.35,000/- வீதம் நியமித்து, அவ்வப்போது அரசாணை வெளியிட்டு, மாவட்ட ஆணையங்கள் சிறப்பாக செயல்பட நடவடிக்கைகள் மேற்கொண்டது .

தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியால், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீட்டு வழக்குகள், நுகர்வோர் வழக்குகள் மற்றும் சீராய்வு மனுக்கள் மிக அதிக அளவில் தீர்வு காணப்பட்டு வழக்குகள் விரைந்து முடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, முடிவுற்ற வழக்குக் கட்டுகள் / கோப்புகளை, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019இன் கீழ் இயற்றப்பட்டுள்ள நுகர்வோர்பா துகாப்பு (நுகர்வோர் ஆணையம் நடைமுறை) ஒழுங்குமுறை விதிகள், 2020இல் குறிப்பிட்டுள்ளவாறு முறையாக பராமரிப்பதற்காக 20- எஃகு நிலை அடுக்கங்கள் (Steel Racks) தமிழ்நாடு சிறு தொழில் கழகம் லிமிடெட் (TANSI) நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்காக தொகை ரூ.1.66 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாகவும், தீர்ப்புகளின் நகல்கள்நு கர்வோர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்கு ஏதுவாகவும் அலுவலகப் பயன்பாட்டிற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் கொண்ட இரண்டு ஒளிப்பட இயந்திரம் / ஒளிநகல் இயந்திரங்கள் (HP Photocopier / Xerox Machine) எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேசன் ஆஃப் தமிழ்நாடு லிமிடெட் (ELCOT) மூலமாக புதிதாக வாங்குவதற்கு ரூ.4.35 இலட்சம் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





கைத்தறி மற்றும் துணிநூல், பூதானம் மற்றும் கிராமதானம்



திரு **ஆர்.காந்தி** அவர்கள்
மாண்புமிகு கைத்தறி மற்றும்
துணிநூல்துறை அமைச்சர்



ரூ.44.69 கோடி மதிப்பில் ஆரணியில் 20.53 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா...

ரூ.4.46 கோடி மதிப்பில் கரூர், விருதுநகர், மதுரை, சிவகங்கை, தென்காசி மாவட்டங்களில் சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலைகள்...

ரூ.3 கோடி மதிப்பில் ஈரோடு மாவட்டம், காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய நெசவு கூடம்...

கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த முதியோர் ஓய்வூதியம் ரூ. 1,200 ஆக உயர்வு, 28,340 கைத்தறி நெசவாளர்கள் பயன்...

கைத்தறி , கைத்திறன் மற்றும் துணிநூல் துறை

ஈரோடு மாவட்டம், காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.3 கோடி மதிப்பில் புதிய நெசவு கூடம், ஈரோடு மாவட்டம், சென்னிமலை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.1.20 கோடி மதிப்பில் சங்க காட்சியறையுடன் கூடிய புதிய கிட்டங்கி மற்றும் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த விற்பனை வளாகம்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் பகுதியில் ரூ.58.61 இலட்சம் மதிப்பில் பொது வசதி மையம்,

கரூர் மாவட்டத்தில் ரூ.74.11 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலை,

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை மற்றும் இராமச்சந்திராபுரம் பகுதியில் முறையே ரூ.71.64 இலட்சம் மற்றும் ரூ.71.95 இலட்சம் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலைகள்

மதுரை மாவட்டம், ப்பி. தொட்டியப்பட்டி பகுதியில் ரூ.72.06 இலட்சம், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி பகுதியில் ரூ.84.37 இலட்சம், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் பகுதியில் ரூ.72.11 இலட்சம், மதிப்பீட்டில் பூஜ்ய நிலை சாயக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய சாயச்சாலைகள்.

கரூர் சாயச்சாலையில், ரூ.20.40 இலட்சம் மதிப்பில் சீஸ் வடிவ நூல் சாயமிடும் இயந்திரம் நிறுவப்பட்டு, வணிக ரீதியான ஏற்றுமதி இரகங்களுக்கு சாயமிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், தமிழ்நாடு சரிகை ஆலையின் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், உட்கட்டமைப்புகளை வலுப்படுத்திடவும் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சரிகை ஆலை புனரமைப்பு.

பட்டு சேலைகளுக்கு புகழ் பெற்று விளங்கும் ஆரணி பகுதியில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா அமைக்க 20.53 ஏக்கர் நிலம் ரூ.2.70 கோடி மதிப்பிற்கு எஸ்.பி.வியால் கொள்முதல் செய்யப்பட்டு நிதி தேவைக்கான திட்ட அறிக்கை பெறப்பட்டு முதற்கட்டமாக நெசவுதறிக் கூடம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.44.69 கோடி மதிப்பிற்கு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தறி தொழிலை நிலை நிறுத்தவும் இளைய தலைமுறையினை கைத்தறி தொழிலில் ஈடுபடுத்தி அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றிடவும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய 10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் சிறுமுகை (கோவை), சென்னிமலை (ஈரோடு), அருப்புக்கோட்டை (விருதுநகர்), ஜெயம்கொண்டம் (பெரம்பலூர்), சின்னாளபட்டி மற்றும் நரிக்கல்பட்டி (திண்டுக்கல்), ஓரிக்கை (காஞ்சிபுரம்), எமனேஸ்வரம் (பரமக்குடி), கரூர், சேலம் மற்றும் குடியாத்தம் (வேலூர்) ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்து உலகளாவிய அளவில் முன்னிலைப்படுத்தி உலக வரைபடத்தில் இடம்பெறும் விதமாகவும், தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் "ஒரு மாவட்டம் ஒரு பொருள்" என்ற அடிப்படையில் "ஊரக கலைஞர்கள் தங்கள் பொருள்களை சந்தைப்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாகவும் "ஒருங்கிணைந்த வளாகம்", சென்னை எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனையகம் அமைந்துள்ள தில்லையாடி வள்ளியம்மை வளாகத்தில் உள்ள 5.84 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியில் 4.5 இலட்சம் சதுரடி பரப்பளவில் பல் அடுக்குமாடி கட்டடம் ரூ.227 கோடி மதிப்பீட்டில்

ஒரு கலாச்சார திறன் மையமாக ஒன்றிய அரசின் நிதி ரூ.223 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ரூ.4 கோடிஅமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, முதற்கட்டமாகரூ.111.50கோடி ஒன்றியஅரசால்31.01.2024அன்றுஒப்பளிப்புசெய்யப்பட்டுள்ளது.

விசைத்தறிகளில் உற்பத்தி மேற்கொள்ளப்படும்போது அவ்வப்போது நூலிழைகள் அறுந்து உற்பத்தி திறன் குறைவதால், உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் 5,000 விசைத்தறிகளில் மின்னணு பலகைகள் (Electronic Panel Board) கொள்முதல் செய்ய ரூ.6.00 கோடி மானியத்தொகை வழங்கப்பட்டு மின்னணு பலகைகள் நிறுவப்பட்டுள்ளது.

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் நெசவாளர் காலனியில் அமைந்துள்ள நெசவாளர் சேவை மையத்தில் அமைக்கப்பட்டு, 101 மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையத்தில் பழுது நீக்கப்பட்டுள்ளன.

ஜவுளி தொழில்முனைவோர்களுக்கான அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் முதன்முறையாக 46 நிறுவனங்களுக்கு 10 விழுக்காடு கூடுதல் மூலதன மானியத்தொகை ரூ.24.52 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிலுவையிலுள்ள தள்ளுபடி மானியத் தொகையினை தீர்வு செய்ய ரூ.218.11 கோடி மற்றும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கோ-ஆப்டெக்ஸ் மற்றும் 850க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடைந்துள்ளன. ரூ.1010.1 கோடி தள்ளுபடி மானியமாக அரசால் நிதி ஒதுக்கீடு.

கைத்தறிகளுக்கான பிரத்யேக சந்தைப் பிரிவை உருவாக்கி, விற்பனையை ஊக்குவிக்க, "ஹேண்ட்லூம்ஸ் ஆப் இந்தியா" என்ற பெயரில் கைத்தறி விற்பனை இணைவு அங்காடி முதற்கட்டமாக கோயம்புத்தூரில் 12.05.2023 அன்றும் சென்னையில் 31.12.2024 அன்றும் திறக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் கைத்தறி உபபொருட்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு கோ-ஆப்டெக்ஸ் மூலம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை எழும்பூர், கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் உபபொருட்கள் விற்பனையகம் (Accessories Store) அமைக்கப்பட்டு, 07.08.2023 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்தும் திட்டத்தின்கீழ் 302 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் 'கைத்தறி இரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டமானது' துறையால் நடத்தப்பட்டு, கைத்தறி இரகங்களின் பாரம்பரியம் மற்றும் கலைநயம் குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்டு, ரூ.3.72 கோடிக்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெசவுப் பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் திட்டத்தின்கீழ், 3 கட்டங்களில் 300 இளைஞர்களுக்கு (நெசவு பின்னணி சார்ந்த 159 நபர்கள் மற்றும் நெசவு பின்னணி சாராத 141 நபர்கள்) நெசவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களின் வடிவமைப்பு திறனை மேம்படுத்திட ஏதுவாக 300 நெசவாளர்களுக்கு வடிவமைப்பு திறன் பயிற்சி நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம், சென்னை மற்றும் இன்ஷ்ட்டியூட் ஆப் கோ-ஆப்ரேட்டிவ் மேனேஜ்மென்ட் மதுரை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மின் வணிகம் மூலம் கைத்தறி தொழிலை முன்னேற்ற ஏதுவாக 300 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் வணிகம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய பணியாளர்களுக்கு 350 விற்பனை பணியாளர்களுக்கு விற்பனை திறன் மேம்படுத்த பயிற்சி சர்தார் வல்லபாய் படேல் பன்னாட்டு நெசவு மற்றும் மேலாண்மைப்பள்ளி கோயம்புதூர் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 44 வடிவமைப்பாளர்களுக்கு அகமதாபாத்தில் அமைந்துள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் ஈரோடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களின்விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக தேசிய ஆடை அலங்கார தொழிட்நுட்ப நிறுவனத்தின் வாயிலாக 1,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் தங்கள் இரசனைக்கேற்ற சேலை வடிவமைப்புகளை செய்து கொள்ளும் வசதி காஞ்சிபுரம், அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.10 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு உருப்படிக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுவந்த நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியில் 01.11.2021 முதல் கைத்தறி சேலை ஒன்றுக்கு ரூ.20.50-லிருந்து ரூ.26.67-ஆகவும், பெடல்தறி சேலை ஒன்றுக்கு ரூ.20.50-லிருந்து ரூ.26.67-ஆகவும், கைத்தறி வேட்டி ஒன்றுக்கு ரூ.10.30-லிருந்து ரூ.12.36-ஆகவும், பெடல்தறி வேட்டி ஒன்றுக்கு ரூ.10.30-லிருந்து ரூ.12.36-ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பொங்கல் 2022 பண்டிகையின்போது, பயனாளிகளுக்கு 179.59 இலட்சம் சேலைகளும், 179.36 வேட்டிகளும் வழங்கும் பொருட்டு, ரூ.493.69 கோடி அரசால் விடுவிக்கப்பட்டது.

பொங்கல்-2023 பண்டிகையின்போது, உடுத்துவதற்கு வசதியாகவும், மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் விதமாகவும், இருக்கும் படியாக 10 மாறுப்பட்ட வண்ணங்களில் 15 விதமான மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளுடனும் 177.64 சேலைகளும், 5 மாறுபட்ட வண்ணங்களில் 1 அங்குல கரையுடன் 177.23 வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கும் பொருட்டு, 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.624.22 கோடி அரசால் விடுவிக்கப்பட்டது.

கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நூல் விநியோகிப்பாளர் ஆகியோருக்கு வழங்கப்படாமல் இருந்த நிலுவைத் தொகைகளை வழங்கும் பொருட்டு, அரசு கூடுதலாக ரூ.148.71 கோடியினை 2022-23-ஆம் ஆண்டு விடுவித்து வழங்கியுள்ளது.

பொங்கல் 2024 பண்டிகைக்கு 1.77 கோடி சேலைகள் மற்றும் 1.77 கோடி வேட்டிகள் உற்பத்தி பணிகள் 31.12.2023 அன்று நிறைவுபெற்று பொங்கல் திருநாளில் பொங்கல் தொகுப்புடன் வேட்டி மற்றும் சேலைகள் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது.

சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் மற்றும் டிரில் வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 09.11.2021 முதல் கைத்தறி கேஸ்மெண்ட் இரகத்தில் மீட்டருக்கு ரூ.4.32-லிருந்துரூ.4.89-ஆகவும், பெடல்தறி கேஸ்மெண்ட் இரகத்தில் மீட்டருக்கு ரூ.4.32-லிருந்து ரூ.4.89-ஆகவும், கைத்தறி டிரில் இரகத்தில் மீட்டருக்கு ரூ.3.81-லிருந்து ரூ.4.69-ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது

கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 200 அலகுகள் வரை வழங்கப்பட்ட விலையில்லா மின்சாரம் 300 அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 முதல் 2023-2024 வரை 75,364 கைத்தறி நெசவாளர்களுக்கு, ரூ.25.51 கோடி செலவில் விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 700 அலகுகள் வரை வழங்கப்பட்ட விலையில்லா மின்சாரம் 1000 அலகுகளாக உயர்த்தியும், மானிய விலையிலும் வழங்கப்படுகிறது.

2021-2022 முதல் 2023-2024 வரை 1,62,799 விசைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 1,241.78 கோடி செலவில் விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 60 வயது நிரம்பிய கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் முதியோர் ஓய்வூதியம் 01.08.2023 முதல் மாதமொன்றுக்கு ரூ.1000/-லிருந்து ரூ.1200/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு, வருகிறது. இதன்மூலம் 28,340 கைத்தறி நெசவாளர்கள் பயன்.

முதியோர் ஓய்வூதியமாக மொத்தம் ரூ.104 கோடிவழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் காலமான கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்திற்கு ரூ.1,000/- வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியம்

ரூ.1,200/- ஆக உயர்த்திவழங்கப்பட்டு 1,157 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பயன். குடும்ப ஓய்வூதியமாக மொத்தம் ரூ.4.29 கோடிவழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசால் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின்கீழ், நெசவாளர்களுக்கு முத்ரா திட்டம் மூலம் கடன் வழங்குவதில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில், நெசவாளர்களுக்கு ரூ.132.40 கோடி மதிப்பில் 27,010 முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2016-2017-ஆம் ஆண்டிற்கு இத்திட்டம் தொடங்கப்பட்டபோது இருந்த சராசரி தனிநபர் கடன் தொகை ரூ.44,918/- 2024-2025-ஆம் ஆண்டில் ரூ.57,630/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கைத்தறிநெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 01.01.2022 முதல் அடிப்படை கூலியில் 10 விழுக்காடு உயர்வும், அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்வும் (145 விழுக்காடிலிருந்து 155 விழுக்காடாக) வழங்கப்பட்டது. 01.05.2023 முதல் அடிப்படை கூலியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 01.08.2024 முதல் 10 சதவீதம் அகவிலைப்படியில் உயர்த்தி வழங்கப்பட்டது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 82,847 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்

டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கைத்தறி நெசவாளர்கள் மிகுதியாக உள்ள பகுதிகளில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் இணைந்து நெசவாளர்களுக்கென 100 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 118 முகாம்கள் நடத்தப்பட்டு 34,873 பயனாளிகள் பயன்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் இயற்கை எய்தும்போது வழங்கப்படும் ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்வு.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் 1,033 நிரந்தரப் பணியாளர்களுக்கு 5ஆவது ஊதிய விகிதம் அமல்படுத்தப்பட்டு, ஊதிய மறுநிர்ணயம் செய்து ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் 246 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 406 சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் தற்காலிக பணியாளர்கள்பணிநிரந்தரம்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் சந்தா செலுத்தப்பட வேண்டிய கால அளவினை 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு49,046 உறுப்பினர்கள் பயன்.



சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அரசின் பங்காக ரூ.31.13 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

தோடர் பழங்குடியின மக்களின் நலனுக்காக முதன்முறையாக நீலகிரி மாவட்டத்தில் தோடா எம்பிராய்டரி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

312 தோடா பழங்குடியினர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு பயன்.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்க ரூ.50 இலட்சம் செலவில் தேசிய தகவலியியல் மையத்தால் (NIC) மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, 9ஆவது தேசிய கைத்தறி தினத்தில் பருத்திச் சங்கங்களுக்கான மென்பொருள் தொகுதி தொடக்கம்

பட்டு சங்கங்களுக்கான மென்பொருள் தொகுதி உருவாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க 43 கைத்தறி இரகங்கள் மற்றும் புவிசார் குறியீடு பதிவு பெற்ற 10 கைத்தறி இரகங்கள் என 53 பிரத்யேக பாரம்பரிய கைத்தறி இரகங்களின் உற்பத்தி செயல்முறை ரூ.1.00 கோடி திட்ட மதிப்பில் மின்னணுமயமாக்கல் மற்றும் ஆவணப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநில அளவிலான இளம் வடிவமைப்பாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ், போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட முதல் மூன்று இளம் வடிவமைப்பாளர்களுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசாக ரூ.75,000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.50,000/- வீதம் வழங்கப்பட்டது.

ஜவுளி மதிப்புத் தொடரின் அனைத்து பிரிவுகளுக்கும் ஊக்கமளிக்கும் பொருட்டும், பதனிடுதல் பிரிவு மற்றும் தொழில்நுட்ப ஜவுளி பிரிவு போன்ற புத்தெழுச்சிப் பிரிவுகளுக்கு (Sun Rise Sector) ஊக்கமளிக்கும் வகையில் தற்போதைய அரசால், கைத்தறி மற்றும் துணிநூல் துறையினை இரண்டாகப் பிரித்து துணிநூல் துறை தனியாக உருவாக்கப்பட்டு 25.10.2021 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா குறைந்தபட்சம் 3 தொழிற்கூடங்களுடனும் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படவேண்டும் என தகுதி வரம்புகள் திருத்தியமைக்கப்பட்டன. ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கான திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள், ஆய்வுக் கூடம், வடிவமைப்பு மையம், பயிற்சி மையம் காப்பகம், உணவகம், பணியாளர்கள் விடுதி உள்ளிட்ட பிற கூறுகளுக்கு மானியம் வழங்குவதோடு கூடுதலாக தொழிற்கூடங்களுக்கும் அரசு மானியம் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் ரூ.16,910.31 இலட்சம் மதிப்பீட்டிலான 17 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முழு ஜவுளி மதிப்பு தொடரினையும் உள்ளடக்கிய ஒரு ஜவுளி நகரம் சென்னைக்கு அருகில் நிறுவப்பட உள்ளது.

சென்னை :பெதர்ஸ் ஹோட்டலில் இரண்டு நாள் தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்தான சர்வதேச கருத்தரங்கம் இந்திய அரசு ஜவுளி அமைச்சகம் மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்புடன் இணைந்து தொழில்நுட்ப ஜவுளி கருத்தரங்கு ஹோட்டல் லீ மெரிடீயன், கோவையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை, தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகம் (SITRA) மற்றும் PSG iTech ஆகியவற்றுடன் இணைந்து கோயம்புத்தூரில் உள்ள ஹோட்டல் ஜென்னிஸ் ரெசிடென்சியில் தொழில்நுட்ப ஜவுளிகள் குறித்த இரண்டு நாள் பயிலரங்கம் ஒன்றை நடத்தியது.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை முன்னிட்டு ஜவுளித் துறையில் ரூ.5000.00 கோடி மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்க அரசால் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரூ.5041.57 கோடி மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பட்டு வளர்ச்சித் துறை தொடர்பாக 21,001.55 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்த 13,516 பயனாளிகளுக்கு ரூ. 2497.07 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தனி பட்டுப்புழுவளர்ப்பு குடில் அமைத்த 3,811 பட்டு விவசாயிகளுக்கு ரூ.4,091.55 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

5,520 பட்டு விவசாயிகளுக்கு ரூ.2,353.750 இலட்சம் மதிப்பில் நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

800 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு ரூ.280 இலட்சம் மதிப்பில் பவர் டில்லர்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிகள், சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/- முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது.

மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத்தொகைகள் ரூ.25,000/-, ரூ.20,000/-, ரூ.15,000/- முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்கு 14 அரசு பட்டுப் பண்ணைகளில் ரூ.98 இலட்சம் மதிப்பில் 14 இளம்புழுவளர்ப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளது.

380 பட்டு விவசாயிகளின் 600.40 ஏக்கர் பரப்பிலான மல்பெரி தோட்டங்களில் சொட்டுநீர்ப்பாசன அமைப்பு நிறுவிய வகையில் ரூ.92.381 இலட்சம் மாநில அரசின் பங்குத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

400 முனைகள் கொண்ட 8 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட தொழில்முனைவோர்களுக்கு மாநில அரசின் பங்குத்தொகை ரூ.284.201 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் 100 இலட்சம் பட்டுமுட்டைகள் பதனம் செய்யும் திறன் கொண்ட பல்நிலை குளிர்பதன அலகு நிறுவப்பட்டுள்ளது. இதற்கென மாநில அரசின் பங்குத் தொகை ரூ.223.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிடும் தனியார் தொழில்முனைவோர்களுக்கு உதவித் தொகை வழங்கிடவும், மாநில அரசால் ரூ.33.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 15 பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளது.

அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் 6895.991 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.33,497.958 இலட்சம் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம் மூலம் 464.494 மெட்ரிக் டன் முறுக்கேற்றிய பட்டு நூல் ரூ.22,802.959 இலட்சம் மதிப்பில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில் புதிதாக அரசு பட்டுக்கூடு அங்காடி தொடங்கப்பட்டு, 344.602 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.1493.22 இலட்சம் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. இப்பட்டுக்கூடு அங்காடியில் வசூலிக்கப்பட்ட வரிகள் மூலம் அரசுக்கு ரூ.22.398 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது 14 முக்கிய பூம்புகார் விற்பனை நிலையங்கள், 8 சிறிய விற்பனை கூடங்கள் மற்றும் மின் வணிகத்தின் மூலமாக ஏப்ரல் 2021 முதல் ஜனவரி 2025 –ஆம் ஆண்டு வரை ரூ.15,327.57 இலட்சம் விற்பனையை ஈட்டியுள்ளது.

நாச்சியார்கோவில், மதுரை, வாகைக்குளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள 7 பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புனரமைத்து, அனைத்து வசதிகளுடன் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டு இந்த உற்பத்தி மையங்கள்தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 3.50கோடிசெலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

14 தமிழ்நாடு கைவினைப் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களை அங்கீகரிக்கும் பொருட்டு, 7 வகையான விருதுகளை வழங்குகின்றது.

65 வயதுக்கு மேற்பட்ட 9 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகள் மற்றும் சிறந்த 9 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகள் விருதாளர்களுக்கு வழங்கப்பட்டது.

துபாய் எக்ஸ்போ திடலில் அமைந்துள்ள இந்திய கூட்டரங்கில் தமிழ்நாடு வாரமாக நிகழ்வுகள் நடத்தப்பட்டு, பூம்புகார் கைவினைப் பொருள்களை காட்சிப்படுத்தி, செய்முறை விளக்கம் செய்து மேலும் மெய்நிகர் தோற்ற கருவிகளால் கைவினைப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.

பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொது வசதி மையங்களில் ஒன்று கூடி இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதியை பயன்படுத்தி, இங்குள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம்கைவினைப்பொருட்களை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கைத்திறத் தொழில்களுக்காக பொது வசதி மையங்கள் காஞ்சிபுரம் – காகிதக் கூழ்பொம்மைகள், அரும்பாவூர் – மரச்சிற்பங்கள், தம்மம்பட்டி – மரச்சிற்பங்கள், அம்பாசமுத்திரம் – மரவர்ண கடைசல் மற்றும் ஆசனூர் – ஒன்னிக்குச்சி ஆகிய 5 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கும் விதமாக திருநெல்வேலி மாவட்டம் பத்தமடையில் கோரைப் பாய்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் களிமண் பொம்மைகள் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்களுடன் கூடிய 2 பொது வசதி மையங்கள் தமிழ்நாடு அரசின் நிதியுதவி தலா ரூ.47.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொது வசதி மையங்களில் சுமார் 2,500 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

களிமண் கைவினைப் பொருள்களுக்கான பொது பயன்பாட்டு மையம் காருகுறிச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

44ஆவது உலக சதுரங்கப் போட்டியை முன்னிட்டு மாமல்லபுரத்தில் தொடக்கப்பட்ட கண்காட்சியில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட "மாமல்லபுரம் கடற்கரை கோயில்" மற்றும்

"சதுரங்க தம்பி" போன்ற கலைப்பொருட்களுடன் திருவள்ளுவர், பாரதியார் போன்ற தமிழ் சார்ந்த பெரியோர்களின் சிலைகள், வரலாற்று சின்னங்கள், ஓவியங்கள் கண்காட்சியின் மூலமாகவும், பூம்புகார் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் விற்பனை செய்யப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் கைவினைஞர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் கைவினைஞர்களின் நலனுக்காகவும், அவர்களுக்கு அரசின் திட்டங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைக் கொண்டாடும் வகையில் கைவினைப் பொருள்களை 3D தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டு, நினைவுப்பரிசுகளாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

மாமல்லபுரம் அர்ஜுனன் தபசு ஐந்து ரதம், கடற்கரைக்கோயில் ஜல்லிக்கட்டு, தமிழ்நாட்டின்பாரம்பரியநடனங்கள்,தாராசுரம்கோயில்,கீழடி போன்றதமிழ்நாடடின்முக்கிய நினைவுச் சின்னங்களை சித்தரிக்கும் வகையில் நினைவுப் பொருள்கள் வடிவமைக்கப்பட்டு, சந்தைப்படுத்துவதன் மூலம் வருவாய் ஈட்டப்படுகிறது. கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவின்போது பூம்புகார் விற்பனை கூடத்திற்காக புதிய பரிசுப் பொருள்களான பேனல்கள், சிலைகள் மேஜை அலங்கார நினைவுச் சின்னங்கள், பிரிட்ஜ் காந்தகங்கள், திருக்குறளால் ஈர்க்கப்பட்ட சொற்றொடர்கள் மற்றும் வாசகங்கள் உள்ளிட்ட பல்வேறு மாதிரிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அய்யன் திருவள்ளுவரைப் போற்றும் வகையில் பிரத்யேக தொகுப்பு ஒன்று விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுள்ளது.

யாழி பேனா தாங்கி,நம்ம சென்னை, போன்ற முக்கிய அடையாளங்களையும் மற்றும் கலாச்சார பாரம்பரியங்களையும் கொண்டுள்ளது. மேலும், திருவண்ணாமலையார் பேனல், தாராசுரம், கீழடி ஃப்ரிட்ஜ் மேக்னட், தமிழ்நாட்டின் நடனங்கள், தஞ்சாவூர் பெரிய கோயில் ஃப்ரிட்ஜ் மேக்னட் என ஒவ்வொரு பகுதியும் மாநிலத்தின் கட்டடக்கலை மற்றும் கலாச்சார செழுமையை பிரதிபலிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2024-25 ஆம் ஆண்டில் 01 ஏப்ரல் 2024முதல் 31 மார்ச் 2025 வரை ரூ.223.12 கோடி சில்லரை விற்பனை ஈட்டியள்ளது. இது கடந்த ஆண்டு நடைபெற்ற ரூ.214.48 கோடி விற்பனையை விட ரூ.13.64 கோடி அதிகமாகும்.

கோ-ஆப்டெக்ஸ் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் சென்னை நகரின் பெரிய வணிக வளாகம் மற்றும் பிற வணிக கூடங்கள் அமைந்துள்ள வேளச்சேரி, ஆவடி மற்றும் தேனாம்பேட்டை பகுதியிலும் மற்றும் வாரணாசி, உத்திரபிரதேசத்திலும் புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் புதிதாக கட்டப்பட்ட திருநெல்வேலி மற்றும் ஒசூர் விற்பனை நிலையங்கள் தொடக்கி வைக்கப்பட்டது.

கோ-ஆப்டெக்ஸ் இரகங்களை சிறப்பான முறையில் காட்சிப்படுத்தி அவற்றின் சிறப்புகளை வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக்காட்டும் வகையிலும் மேலும் அதன் விற்பனையை அதிகப்படுத்தும் வகையில் விற்பனை நிலையங்களுக்கு குறிப்பாக சேலை இரகங்களை காட்சிபடுத்த 200 காட்சி பொம்மைகள் வழங்கப்பட்டுள்ளது.

15 கைத்தறி சங்கங்கள் மற்றும் 26 விசைத்தறி சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸில் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 142 கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே கைத்தறி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு ரூ. 2.45 இலட்சம் அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

கோயம்புத்தூர் லூம் வேர்ல்ட் கைத்தறி வளாகத்தில் அனைத்து மாநிலங்களின் தனித்துவமான கைத்தறி தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக 2023-ஆம் ஆண்டில் "ஹேண்ட்லூம்ஸ் ஆஃப் இந்தியா" எனும் விற்பனை நிலையம் திறக்கப்பட்டது.

வாடிக்கையாளர்களுக்கு கைத்தறி நெசவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 25 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள், 20 நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் மற்றும் 5 லூம் வேல்டு விற்பனை நிலையங்கள் என 50 மேசைத்தறிகள் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை விற்பனை நிலையத்தில் 2023-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மெய்நிகர் ஆடை காட்சி இயந்திரத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் ஆடைகளை அணிந்து பார்ப்பது மூலமாக பார்ப்பதினால் சிறந்த காட்சிப்படுத்தலுடன், குறைந்த நேரத்தில் பல எண்ணிக்கையிலான ஆடைகளை அணிந்து வாடிக்கையாளர்கள் பார்க்க இயலும்.

கோ-ஆப்டெக்ஸ் "பட்டுத் திருவிழா" சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, சென்னை, தங்கம் பட்டு மாளிகை, சேலம் மற்றும் முல்லை, கடலூர் விற்பனை நிலையங்களில் நடைபெற்று. ரூ. 135.27இலட்சம் மதிப்பிலான பட்டுஇரகங்கள் விற்பனை நடைபெற்றுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி மைதானத்தில் தமிழக கைத்தறி நெசவாளர்களின் கைத்தறி தயாரிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் கைத்தறி தினம் கொண்டாடப்பட்டது. மேலும் இந்த விழாவில் NID/NIFT வடிவமைப்பாளர்களால் உருவாக்கப்பட்ட புதிய வடிவமைப்பு பட்டு மற்றும் பருத்தி வேலைகளின் ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலக வணிக வளாகத்தில் பிரத்யேக இரகங்களுக்காக நவீனப்படுத்தப்பட்ட 8 புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு கோ-ஆப்டெக்ஸ் வணிக வளாகம் சென்னையில் தேசிய கைத்தறி கண்காட்சி-2022 நடைபெற்று, 100க்கும் மேற்பட்ட அரங்குகளில் தமிழ்நாடு மற்றும் 10 பிற மாநிலங்களிலிருந்தும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கலந்து கொண்டு ரூ.3.52 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகளின் விற்பனை நடைபெற்றுள்ளது.

தேசிய கைத்தறி கண்காட்சி 2023, கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி திடலில் நடத்தப்பட்டு, 115-ற்கும் மேற்பட்ட அரங்குகளில் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கலந்து கொண்டு ரூ.3.76 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகளின் விற்பனை நடைபெற்றுள்ளது.

புதிய இரக அபிவிருத்தி செயல்பாட்டின் ஒரு பகுதியாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் NID/NIFT போன்ற புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற எட்டு, பகுதிநேர வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்தி, அவர்களை கோயம்புத்தூர், சேலம், காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை, மற்றும் ஈரோடு உற்பத்தி மண்டலங்களில் பணியமர்த்தியது.

2022-23-ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் 500 புதிய வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளது.

விற்பனையை அதிகரிக்கும் வகையில் தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) மற்றும் தேசிய உடையலங்கார தொழில்நுட்பக் கல்லூரி (NIFT)-களில் பயின்ற வடிவமைப்பாளர்களை கொண்டு பிரத்யேக வடிவமைப்புகளில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் முதலியன "தமிழ் தறி" எனும் பெயரில் சிறப்பு தொகுப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது.

"ஜரிகை உத்திரவாத அட்டை" முதன்முறையாக கோ-ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டு, காஞ்சிபுரம் சுத்த பட்டு, சுத்த ஜரிகை சேலைகளின் ஜரிகை தரம் பரிசோதிக்கப்பட்டு, காஞ்சிபுரம் சுத்த பட்டு, சுத்த ஜரிகை சேலைகளில் ஜரிகை உத்தரவாத அட்டை இணைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகள் உயர்ந்த தரத்தன்மைகளான சருமத்திற்கு இதம், மிருதுத்தன்மை, மற்றும் எளிதாக தூய்மைபடுத்துதல் ஆகிய அம்சங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டு சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தோடா தயாரிப்புகளை கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வணிக வளாகத்தில் செயல்படும் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு காட்சிப்படுத்தியுள்ளது.

சென்னையில் செயல்படும் "சத்யஜோதி பார்வை திறனற்றவர்களுக்கான பயிற்சி பட்டறை நிறுவனத்துடன்" புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பார்வை திறனற்ற பெண்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலை மேம்படவும் உதவுகிறது.

எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், இயற்கை இழைகளால் அலங்கரிக்கப்பட்ட 100 சேலைகள், 50 ஸ்டோல்கள், 100 சுடிதார் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஏற்றுமதி இரகங்கள், அதிக மதிப்புள்ள பட்டு இரகங்கள் மற்றும் புவிசார் குறியீடு பெற்ற இரகங்கள் உற்பத்தியாகும் தறிகளில் IOT சாதனம் பல்வேறு உற்பத்தி மண்டலங்களில் உள்ள 150 கைத்தறிகளில் பொருத்தப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக கூட்ட அரங்கை புதுப்பித்தும், பிரதான நுழைவாயிலில் அலங்கார வளைவு அமைத்தும், பாதையில் ஒளிரும் விளம்பர பதாகைகள் நிறுவி பிரகாசமாக இருக்கும்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெங்களூரு மண்டலத்தில் உள்ள பசவன்குடி, விஜயநகர் மற்றும் ராம்மந்திர் என 3 விற்பனை நிலையங்களின் நவீனமயமாக்கலினால் விற்பனையானது 2020-21-ஆம் ஆண்டை விட 47 சதவீதம் அதிகரித்து ரூ. 4.63 கோடி விற்பனை நடைபெற்றுள்ளது.

தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் பீகார் மாநிலங்களில் 18 விற்பனை நிலையங்கள் முழுமையாக நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

விற்பனை நிலையங்களின் பொலிவை மேம்படுத்தவும், அதன்மூலம் வாடிக்கையாளர்களின் வருகை எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் 15 விற்பனை நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

AMET பல்கலைகழகம், சென்னை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மூலம் 2022 ஆம் ஆண்டு காந்தி பிறந்த நாளில் "கைகொடுப்போம் காதிக்கும், கைத்தறிக்கும்" திட்டத்தின் மூலம் ரூ. 83.29 இலட்சம் மதிப்பிலான கோ-ஆப்டெக்ஸ் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு ரூ. 9.49 கோடி மற்றும் ரூ.11.57 கோடி இலாபம் ஈட்டியுள்ளது மேலும் 2023.24 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.9.53 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை கட்டடங்களில் செயல்படும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த வாடகை நிலுவை தொகை ரூ.2.20 கோடி வழங்கப்பட்டு நேர் செய்யப்பட்டுள்ளது.

வளர்ச்சி

வளர்ச்சி என்பது என்னால் மட்டும் ஆனதல்ல. என்னை முதலமைச்சராக ஏற்றி வைத்து, ஒவ்வொரு துறையையும் தங்களது ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் வளர்த்து வரும் எனது அருமை அமைச்சரவை சகாக்களால்தான் இந்த வெற்றியையும் உயர்வையும் பெற்று வருகிறோம்.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்










மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு



திரு. **மா.சுப்பிரமணியன்** அவர்கள்
மாண்புமிகு மருத்துவம் மற்றும்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்



ரூ.240 கோடி மதிப்பீட்டில் 1,000 படுக்கைகள் மற்றும் 15 அறுவை சிகிச்சை அரங்குகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையின் செயல்பாடு தொடக்கம்...

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ் 2,14,52,599 பயனாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்...

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் 2021-2022இல் 9,06,427, 2022-2023இல் 15,08,469, 2024-2025இல் 15,43,150 நபர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு பயன்...

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 29,95,098 பயனாளிகளுக்கு ரூ.3,755.53 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு பயன்...

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்

சென்னை, பெரியார் நகர், அரசு புற மருத்துவமனை ரூ.6.52 கோடி செலவில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக மாற்றப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, டிசம்பர் 2024 வரை 23,45,054 வெளிநோயாளிகளுக்கும் மற்றும் 1,44,402 உள்நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 300 படுக்கைகள் கொண்ட முழு உடல் பரிசோதனை மையம், விபத்து மற்றும் காயம் சிகிச்சை பிரிவு, தொற்று நோய் பிரிவு, டயாலிசிஸ் சிகிச்சை பிரிவு, மறுவாழ்வு மையத்திற்கான இரத்த வங்கி என (G1-G3) தளங்கள் ரூ.71.81 கோடி செலவிலும் மற்றும் ரூ.54.82 கோடி செலவில் 260 படுக்கைகள் கொண்ட மூன்று கூடுதல் தளங்களின் (G4 -G6) கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தும் "வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்கு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.84.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 560 படுக்கைகள் கொண்ட G1 முதல் G6 வரையிலான தளங்கள் 27.2.2025 அன்று திறப்பு.

ரூ.34.6 கோடி செலவில் தமிழ்நாடு அரசு ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 15.03.2022 அன்று ரோபோடிக் அறுவை சிகிச்சை தொடங்கப்பட்டு 336 (சிறுநீரகவியல் – 60, புற்றுநோய் அறுவை சிகிச்சை – 129, நாளமில்லா சுரப்பி அறுவை சிகிச்சை – 83, இருதயம் மற்றும் நெஞ்சக அறுவை சிகிச்சை – 49 மற்றும் குடல் அறுவை சிசிக்சை – 15) நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கும், 4 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100 மருத்துவ சேர்க்கைக்கும் தேசிய மருத்துவ ஆணையத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டு 5,800 மாணவர்கள் மருத்துவர்களாகும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒட்டுமொத்த சேவைகளுக்கான தகவல்களுக்கான டிஜிட்டல் காட்சிப் பலகை பொருத்தப்பட்டுள்ளது.

அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட 5,62,058 நபர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டது 20,097 நோயாளிகளுக்கு நோய் கண்டறியப்பட்டன.

20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனநலம் பாதிக்கப்பட்ட உதவியற்ற மீட்பு சேவை மையங்கள் நிறுவப்பட்டு 9983 நபர்கள் பயனடைந்துள்ளனர். குழந்தைகள் இணையத்திற்கு அடிமையாவதைத் தடுக்க, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மனநல நிபுணர்கள் குழுவால் சிறப்பு ஆலோசனை வழங்கப்பட்டு 39,960 குழந்தைகள் பயன். முதியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் அறிவாற்றல் மறுவாழ்வுக்காக அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் பகல்நேர பராமரிப்பு மையங்கள் நிறுவப்பட்டு 26,454 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் உள்ள குழந்தைகளுக்கு செவித்திறன் பரிசோதனை சேவைகள் வழங்கப்பட்டு 5,36,235 குழந்தைகள் பயன்.

தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம் அமைக்கப்பட்டு இதுநாள் வரை 14,717 நபர்கள் பயன்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சிமையம் ரூ.2.44 கோடி செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக மேம்படுத்தப்பட்டுள்ளது,

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் படுக்கை புண் சிகிச்சைக்காக 10 பிரத்தியேக படுக்கைகளுடன் தனிசிகிச்சைபிரிவு (BED SORE BEDS) உருவாக்கப்பட்டு டிசம்பர் 2024 வரை 7,362 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்,

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை (KCSSH) திறந்து வைக்கப்பட்டது. ரூ.240 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 1,000 படுக்கைகள் மற்றம் 15 அறுவை சிகிச்சை அரங்குகளுடன் செயல்பட தொடங்கியுள்ளது. ரூ.206.08 கோடி மதிப்பீட்டில் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 4,58,207 புறநோயாளிகள் மற்றும் 1,58,346 உள்நோயாளிகள் பயன்.

காரப்பேட்டை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான சிறப்புமையம் ரூ.120கோடி மதிப்பீட்டில் 750 படுக்கை வசதிகளுடன் G+2கட்டடங்கள் பணிகள் நிறைவடைந்துள்ளது. கூடுதலாக மூன்று தளங்கள் (G3-G5) கட்ட ரூ.120கோடி மதிப்பீட்டில் கட்டட பணிகள் நடைபெற்றுவருகிறது. ரூ.32 கோடியில் சிறப்பு உபகரணங்கள் கொள்முதல்.

சென்னை, கலைஞர் கருணாநிதிநகர், அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் ரூ.27.95கோடியில்நிர்வாக(ம)நிதிஅனுமதிவழங்கப்பட்டு3,84,422புறநோயாளிகளும் மற்றும் 40,191 உள்நோயாளிகளும் பயன்.

அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் புறநோயாளிகளின் பிரிவுகளின் நுழைவுவாயிலில் "வைட்டல்ஸ்பே" என்ற தனிப்பிரிவு உருவாக்கம்.

புதுக்கோட்டையில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ரூ.67.83 கோடி செலவில் அமைக்கப்பட்டு உபகரணங்களை கொள்முதல் செய்ய ரூ.5.08 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 54,655 புறநோயாளிகள் பயன். 50 மாணவர்கள் தென் தமிழகத்தில் பல் மருத்துவர்களாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

"மருத்துவத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மருத்துவ மாநாடு நடத்தப்பட்டது. "மருத்துவத்தின் எதிர்காலம்" என்ற கருப்பொருளின் சுருக்கங்கள் விவாதிக்கப்பட்டன.

மருத்துவக்கல்வி இயக்ககம் 36 மருத்துவக்கல்லூரி மற்றும் அதனை சார்ந்த மருத்துவமனைகளுடன் இயங்கிவருகிறது. "மருத்துவக்கல்வி இயக்ககம்", என்ற பெயர் "மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என பெயர் மாற்றம்,

அரசு பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்ற மாணவ மாணவியர்களுக்கு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடாக மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பதற்கு இடஒதுக்கீடு 2,382 மாணவ மாணவியர்களுக்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பதற்கு வசதியாக ரூ.264.72 கோடியில் சுழல் நிதி உருவாக்கப்பட்டு அம்மாணவர்களின் கல்வி கட்டணம். உணவு கட்டணம் மற்றும் விடுதி கட்டணம் போன்ற செலவினத்தை அரசே ஏற்று வருகிறது.

தமிழ்நாடு தேர்வுக்குழுவால் மருத்துவம் (MBBS) பிரிவில் 31,412 மாணவர்கள், பல் மருத்துவம் (BDS) பிரிவில் 8,426 மாணவர்கள், மருத்துவ பட்ட மேற்படிப்பு (எம். டி /எம். எஸ்) பிரிவில் 9,253 மாணவர்கள், பல் மருத்துவ பட்ட மேற்ப்படிப்பு (எம்.டி. எஸ்) பிரிவில் 1,435 மாணவர்கள், மருத்துவம் சார்ந்த பட்ட படிப்பு (Para Medical Degree Courses) பிரிவில் 10,929 மாணவர்களுக்கான சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில், புதிய உயர் அடுக்கு கட்டடத்திற்கு (Tower Block) ரூ.125 கோடி ஒதுக்கீடு.





JICA (ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம்) திட்டத்திக் கீழ் மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி, சென்னை கீழ்பாக்கம் ஆகிய ஐந்து புதிய மருத்துவமனைகள், கட்டடங்கள் ரூ.1046.15 கோடியில் திறப்பு.

அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்க்கென தனிஅறை.

அனைத்து அரசு மருத்துவ கல்லூரி, பல் மருத்துவ கல்லூரி, செவிலியர் மற்றும் துணை மருத்துவக் கல்லூரிகளிலும் "மனம்" என்ற பெயரில் "மனநல ஆதரவு மன்றத்தை" உருவாக்கம்.

2021–2022ஆம் ஆண்டு முதல் அரசு கோயம்புத்தூர் மருத்துவ கல்லூரியில் மருத்துவ மாணவர் சேர்க்கை 150 இடங்களிலிருந்து 200 இடங்கள் ஆக உயர்வு.

20 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 45 சிறப்பு பிரிவுகளில் 243 பட்ட மேற்படிப்பு இடங்கள் (M.D./M.S.,), மேலும், 9 அரசு மருத்துவ கல்லூரிகளில் 20 உயர்சிறப்பு பிரிவுகளில் 43 பட்ட மேற்படிப்பு இடங்கள் (D.M/M.Ch) கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளது தமிழ்நாடு அரசு பல் நோக்கு மருத்துவமனையில் புதிதாக 4 பிரிவுகளில் தலா 2 இடங்கள் வீதம் 8 இடங்களுடன் டி.ஆர்.என்.பி. (DrNB) உயர்சிறப்பு பிரிவு படிப்புகள் தொடக்கம். சென்னைமருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் உள்ள நர்சிங் கல்லூரியில் 2022–23 ஆம் ஆண்டு முதல் போஸ்ட் பேசிக் டிப்ளமோ (Post Basic Diploma in Neonatal Nursing Course) தொடங்கப்பட்டு 120 மாணவர்கள் பயன்.

ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் உள்ள நர்சிங் கல்லூரிகளில் போஸ்ட் பேசிக் டிப்ளமோ கிரிட்டிக்கல் கேர் (Post Basic Diploma in Critical Care Course) டிப்ளமோ தொடங்கப்பட்டு 200 மாணவர்கள் பயன்.

அரசின் தீவிர நடவடிக்கையால், அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முதியோர் பராமரிப்பு சேவை உதவியாளர்களுக்கான புதிய சான்றிதழ் படிப்பு தொடங்கப்பட்டு 232 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருந்தியல் கல்லூரியில் எம்.பார்ம் முதுநிலை இடங்கள் 45லிருந்து 85ஆக உயர்வு.

ரூ.11.74 கோடியில் CeMONC சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்க நிதி ஒதுக்கீடு.

சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் CeMONC க்கான புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.24 கோடி ஒதுக்கப்பட்டு (G+2) கட்டடத்துடன் மேலும் இரண்டு தளங்கள் கட்டுமானப்பணி.

தேசிய முதியோர் நல மையம்

கிண்டியில் ஒன்றிய அரசின் மானியத்துடன் ரூ.151.17 கோடி முதலீட்டில், 200 படுக்கைகளுடன் முதியோர்களின் மருத்துவப் பராமரிப்பிற்காக பிரத்தியேகமாக தேசிய முதியோர் நல மையம். இம்மையம், புது தில்லியில் அமைந்துள்ள AIIMS மருத்துவமனைக்கு அடுத்ததாக முதியோர்களுக்கான இரண்டாவது பிரத்தியேக மையமாகும்.

புதியதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள்

அரசு புறநகர் மருத்துவமனை - பெரியார் நகர், சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை-கிண்டி, அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை - புதுக்கோட்டை, தேசிய முதியோர் நலமையம்- கிண்டி, 11 புதிய மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, கடலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் 848 நிரந்தர பணியிடங்கள், 171 புற ஆதாரம் பணியிடங்கள் மற்றும் 1,278 ஒப்பந்தப் பணியிடங்கள் என மொத்தமாக 2,297 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம்

கொரோனா-19 பெருந்தொற்று காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் 2,160 செவிலியர்களும் மற்றும் ஒப்பந்த முறையில் பணியாற்றி வந்த 1,200 செவிலியர்களுக்கு பணி நிரந்தரம்.

மருத்துவ தேர்வாணையின் மூலம் இதுநாள் வரை 3,009 செவிலியர்கள், 986 மருந்தாளுநர்கள், 194 இருட்டறை உதவியாளர் புதிதாக பணி நியமனம்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் 555 நேரடி உதவியாளர்கள், 505 இளநிலை உதவியாளர்கள், 142 தட்டச்சர், 195 சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-III) புதிதாக பணி நியமனம்.

கருணையடிப்படையில் 74 இளநிலை உதவியாளர்கள், 9 தட்டச்சர்கள் புதிதாக பணி நியமனம்.

கொரோனா-19 பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த 129 அரசு முன்கள நிலை பணியாளர்கள் / 28 தனியார் முன்கள பணியாளர்களுக்கு பிரதான் மந்திரி கரிப் கல்யாண் திட்டம் வாயிலாக ரூ.78.50 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 19 அரசு மருத்துவமனைகள் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்வு. 6 அரசு தலைமை மருத்துவமனைகள் தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக தரம் உயர்த்துவற்கு மொத்தம் ரூ.1018.85 கோடி நிதி ஒதுக்கீடு.

7 மருத்துவமனைகளில் தாய்சேய் நலக்கட்டிடம் கட்டுவதற்கு ரூ.67.30 கோடி நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை ஸ்ரீரங்கம் (திருச்சி மாவட்டம்) (ம) அரசு மருத்துவமனை மேட்டுப்பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகியவற்றில் நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU) அமைப்பதற்கு ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

6 அரசு மருத்துவமனைகளில் ரூ.11.62 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை, உத்திரமேரூர் (காஞ்சிபுரம் மாவட்டம்), ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டட நிதி ஒதுக்கீடு. அரசு மருத்துவமனை களக்காடு (திருநெல்வேலி மாவட்டம்), ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் விஷமுறிவு சிசிக்சை மையம் அமைக்க நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை வந்தவாசி, (திருவண்ணாமலை மாவட்டம்) ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை செங்கோட்டை (தென்காசி மாவட்டம்) இரத்த சேமிப்பு அலகு ரூ.15,00 இலட்சம் நிறுவிட நிதி ஒதுக்கீடு.

4 அரசு தலைமை மருத்துவமனைகள் ரூ.20.78 இலட்சம் செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான பதிவேடுகள் நிறுவுதலுக்கான நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை ஏற்காடு (சேலம் மாவட்டம்) ரூ.1.05 கோடி செலவில் நவீன பிரேத பரிசோதனை கட்டடம் மற்றும் உபகரணங்கள் வழங்க நிதி ஒதுக்கீடு.

அரசு தலைமை மருத்துவமனை கடலூர், (கடலூர் மாவட்டத்தில்) 100 படுக்கைகள் கொண்ட தீவிர அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவதற்கு ரூ.40.05 கோடி மற்றும் அரசு மருத்துவமனை, ஒட்டன்சத்திரம் திண்டுக்கல் மாவட்டம், அரசு மருத்துவமனை சீர்காழி, (மயிலாடுதுறை மாவட்டம்), அரசு மருத்துவமனை ஊத்தங்கரை, (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் அரசு மருத்துவமனை மேலூர் (மதுரை மாவட்டம்) ஆகியவற்றில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர அவசர சிகிச்சை ஏற்படுத்துவதற்கு ரூ.95 கோடி நிதி ஒதுக்கீடு. 11 அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைப்பதற்கு ரூ.12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனை, உத்தமபாளையம், (தேனி மாவட்டம்) ரூ.4 கோடி செலவில் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு. அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, பெரியகுளம், (தேனி மாவட்டம்) ரூ.8 கோடி செலவில் மேம்படுத்த நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை, திருமயம் (புதுக்கோட்டை மாவட்டம்) ரூ.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை பிரிவிற்கு (Trauma Emergency Care Centre) ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு. அரசு தலைமை மருத்துவமனை, பரமக்குடி இராமநாதபுரம் மாவட்டம் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.9 கோடி நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை, சிவகாசி விருதுநகர் மாவட்டம் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் தாய்சேய் நலக்கட்டடம் கட்ட ரூ.32.54 கோடி நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை தேன்கனிக்கோட்டை கிருஷ்ணகிரி மாவட்டம் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு.

50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைபிரிவு அரசு மருத்துவமனை, பரமத்திவேலூர் அரக்கோணம், அரசு மருத்துவமனை உளுந்துர் பேட்டை, கட்டடங்கள் கட்ட ரூ.71.25 கோடி நிதியும்மற்றும்ஒருங்கிணைந்தஆய்வகங்கள் அரசு மருத்துவமனை பாலக்கோடு,காஞ்சிபுரம், சீர்காழி, குன்னூர், மன்னார்குடி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் கட்டடங்கள் கட்ட ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனை பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் அரசு மருத்துவமனை கம்பம் தேனி மாவட்டம் தாய்சேய் நலக்கட்டடம் கட்ட ரூ.4.80 கோடி நிதி ஒதுக்கீடு.

அரசு மருத்துவமனை விஜயபுரம், திருவாரூர் மாவட்டம், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல புதிய கட்டடம் கட்ட ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனை செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான உபகணரங்களுடன் கூடிய கட்டடம் கட்ட ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு.

திருவள்ளூர் மாவட்டம், நாசரத்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ரூ.1.30 கோடி செலவில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு ரூ.3.22 கோடியில் சிடி ஸ்கேன் கருவிகள் கொள்முதல் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அரசு மருத்துவமனையில் ரூ.4 கோடியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை (TAEI) கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அரசு மருத்துவமனையில் ரூ.4.72 கோடியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை (TAEI) கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

திருச்சி மாவட்டம் முசிறியில் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை முயற்சி (TAEI) மையம் ரூ.1.62 கோடியில் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.20 கோடியில் 50 படுக்கை கொண்ட தீவிர சிகிச்சைப்பிரிவு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

6 மாவட்ட அரசு அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்டுதல் மற்றும் 6 அரசு மருத்துவமனைகளில் ரூ75.00 கோடி செலவில் கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை,

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்

விரிவான இல்லம் தேடி வரும் மருத்துவ சேவைகள் வாயிலாக, நோய் சிகிச்சைக்கான தொடர் கவனிப்பு, நிலையான சேவைகளை உறுதி செய்வதுடன் குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களின் சுகாதார தேவைகளை கண்டறிந்து ஆவண செய்ய உதவுகிறது.

மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தில் சமூகத்தை மையப்படுத்தும் களப்பணியாளர்கள்

தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகத்தின் (TNCDW) கீழ் செயல்படும் 8,713 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் மற்றும் 2,256 மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் என மொத்தமாக 10,969 நபர்கள் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற துணை சுகாதார மையங்களில் முறையே ஈடுபட்டுள்ளனர்.

வட்டார அளவில், 463 நோய்த் தடுப்பு சிகிச்சை செவிலியர்கள் மற்றும் 463 இயன்முறை சிகிச்சையாளர்கள் கொண்ட குழுவானது இல்லம் தேடி சென்று நோய்த் தடுப்பு சிகிச்சை மற்றும் இயன்முறை சிகிச்சைகளை மாநிலம் முழுவதும் வழங்குகிறார்கள்.

மருத்துவ மையங்களின் தரத்திக்கேற்ப தொற்றா நோய்களுக்கான மருத்துவ சேவையை வழங்க ஆரம்ப சுகாதார மையங்களில் ஒரு செவிலியர், அரசு மருத்துவமனைகளில் இரண்டு செவிலியர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரண்டு செவிலியர்கள் வீதம் மொத்தம் 2,892 செவிலியர்கள் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

திட்டத்தின் நிதி ஒதுக்கீடு

தொற்றா நோய்களுக்காக மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.681.64 கோடி ஒதுக்கீடு.

2021-2022 நிதியாண்டில் ரூ.232.34 கோடியும், 2022-2023இல் ரூ.204.04 கோடியும், 2023-2024இல் ரூ.196.22 கோடியும் ஆக மொத்தம் ரூ.632.60 கோடி செலவிடப்பட்டுள்ளது.



திட்டத்தின் செயல்திறன்

"மக்களை தேடி மருத்துவம்" திட்டம் 19.12.2024 அன்று இரண்டு கோடியாவது பயனாளி என்ற இலக்கை கடந்து, திட்டத்தின் கீழ் 2,14,52,599 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு பார்வைத்திறனில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டு இருந்தால் அவர்களையும் மறுபரிசோதனை செய்து புதிய கண்ணாடி வழங்கப்படுகிறது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் கண் மருத்துவ உதவியாளர்கள் மூலம் 83,94,071 பள்ளி குழந்தைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டு 5,16,871 கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டது. 'தாய் சேய் நல பரிசு பெட்டகத் திட்டம் 2024-2025 தாய் சேய் நல பரிசு பெட்டகத்திட்டம் அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கப்பட்டது.பிரசவித்த தாய்மார்களுக்கு 16 வகை சுகாதார பொருள்கள் வழங்க ரூ.67.35 கோடி நிதி ஒதுக்கீடு. 2021-2022ஆம் ஆண்டு 3,52,601 தாய்மார்களுக்கும், 2022-2023ஆம் ஆண்டு 5,00,000 தாய்மார்களுக்கும், 2023-2024ஆம் ஆண்டு 5,00,000 தாய்மார்களுக்கும், 2024-2025ஆம் ஆண்டு 1,87,176 தாய்மார்களும் பயன்.

நடமாடும் மருத்துவமனைத் திட்டம்

மிக தொலைவில் உள்ள கிராமங்களுக்கு குறிப்பிட்ட நாள்களில் மாதந்தோறும் சென்று நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளித்திட, 476 நடமாடும் மருத்துவக்குழு வாகனங்கள் செயல்பட்டு வருகின்றது.

ஒரு மாதத்திற்கு ஒரு வட்டாரத்தில் 40 முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்களுக்கு ஒரு மாதத்திற்கான மருந்துகள் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், ஏற்கெனவே செயல்பட்டு வரும் 389 நடமாடும் மருத்துவமனை வாகனங்களுக்கு பதிலாக புதிதாக 389 வாகனங்கள் 70.02 கோடி ரூபாய் தேசிய நலவாழ்வு குழுமம் நிதி ஒதுக்கீட்டில் வாங்கப்பட்டுள்ளது.

2021-2022ஆம் நிதியாண்டில் 2.41 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு 1.84 கோடி மக்கள் பயன். 2022-2023ஆம் நிதியாண்டில் 2,57,173 முகாம்கள் நடத்தப்பட்டு, 1,87,45,131 மக்கள் பயன். 2023-2024ஆம் நிதியாண்டில் 2,44,118 முகாம்கள் நடத்தப்பட்டு 1,96,10,940 மக்கள் பயன்.

2024-2025ஆம் நிதியாண்டில் 1,79,012 முகாம்கள் நடத்தப்பட்டு 1,52,85,388 மக்கள் பயன்.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

2021-2022ஆம் நிதியாண்டில் 1,260 முகாம்கள் நடத்தப்பட்டு 9,06,427 பயனாளிகள் பயன். 2022-2023ஆம் நிதியாண்டில், 1532 முகாம்கள் நடத்தப்பட்டு 15,08,469 பயன். 2023-2024ஆம் நிதியாண்டில் 1,253 முகாம்கள் நடத்தப்பட்டு 12,54,430 பயனாளிகள் பயன். 2024-2025ஆம் நிதியாண்டில் 1,528 முகாம்கள் நடத்தப்பட்டு 15,43,150 பயனாளிகள் பயன்.

அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்

(ஒருங்கிணைந்த முதல்நிலை சுகாதார பராமரிப்பு சேவைகள்)

அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின்கீழ், 4,848 துணை சுகாதார நிலையங்களும், 1,384 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும், 460 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் 500 நகர்புற நிலையங்களும் நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டு 12 வகை அத்தியாவசிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

4,848 இடைநிலை சுகாதார பணியாளர்களை (MLHPs) மற்றும் 2448 பலநோக்கு சுகாதார பணியாளர் நிலை-II ஆகியோர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம்.

சேவைகள் மற்றும் விரிவாக்கப்பட்ட சேவைகளின் தொகுப்பு விவரங்கள் மற்றும் தினசரி தரவு பதிவுகளை ஆயுஷ்மான் பாரத் வெப் போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த புறநோயாளிகள் எண்ணிக்கை 11,81,22,943.

தொற்றா நோய் சேவைகளின் (NCD) மூலம் உயர் இரத்த அழுத்த சோதனை 15,33,66,231 நபர்களுக்கும், நீரிழிவு நோய் சோதனை 12,71,63,581 நபர்களுக்கும், வாய்வழி புற்று நோய் சோதனை 6,35,08,202 நபர்களுக்கும், மார்பக புற்று நோய் சோதனை 2,39,98,904 நபர்களுக்கும், கர்ப்பப்பை வாய்புற்று நோய் 1,80,60,898 நபர்களுக்கும் செய்யப்பட்டுள்ளது.

நலவாழ்வு சேவைகள் (Wellness Activity) மூலம் 8,48,79,659 நபர்கள் பயன்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி (Training)

அனைத்து களப்பணியாளர்களுக்கும் மாவட்ட அளவிலான திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் எண்முறை (Digital) சுகாதார பதிவுகள் சீரான இடைவெளியில் நடத்தப்படுவது மட்டுமல்லாமல் திறன் மேம்பாட்டு பயிற்சியின் விவரங்களை SASHAKT போர்டலில் தினசரி தரவுகளை பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

தொலைதூர மருத்துவ சேவை

தமிழ்நாடு ஒன்றிய அரசினால் பொது மக்களுக்கு அதிகபடியான தொலைதூர மருத்துவ சேவை வழங்கியதற்காக முதன்மை மாநில விருது வாரணாசியில் நடைபெற்ற "அனைவருக்கும் நலவாழ்வு திட்ட" நாளான 10.12.2022 அன்று வழங்கப்பட்டது.

சுகாதார முகாம் : (Health Mela)

நலவாழ்வு மையங்களின் மூலம் 5,92,389 சுகாதார முகாம்களின் மூலம் 9,61,58,545 நபர்கள் பயன். சமுதாய சுகாதார மையங்களின் மூலம் 15,825 சுகாதார முகாம்களின் மூலம் 1,09,43,551 நபர்கள் பயன்.

நோயாளிகள் நல்லாதரவுக் குழு (PSG)

நோயாளிகள் நல்லாதரவு குழு (PSG) என்பது தொற்றா நோய்களை பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய்க்கட்டுப்படுத்துவதற்காக சமூக அளவில் உருவாக்கப்பட்ட குழுவாகும்.

பயன்பாட்டில் உள்ள 4,848 குழக்களின் மூலம் 6,57,571 நோயாளிகள் நல்லாதரவு கூட்டங்கள் நடத்தப்பட்டு 1,06,66,056 நபர்கள் பங்கேற்றார்கள்.

மக்கள் நலவாழ்வு குழு (MNK) / ஜன் ஆரோக்கிய சமிதி (JAS)

மக்கள் நலவாழ்வு குழு என்பது சமுதாய பங்களிப்புடன் துணை சுகாதார நலவாழ்வு மையங்கள் மூலம் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

8,713 அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும், மக்கள் நலவாழ்வு குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது. 1,15,516 மக்கள் நலவாழ்வு கூட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட நகர்புற நலவாழ்வு மையங்கள் (UHWCs)

708 நகர்புற நல வாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு 500 நகர்புற நல வாழ்வு மையங்கள் திறப்பு.

நகர்புற நல வாழ்வு மையங்கள் மூலம் 1,83,90,404 நபர்கள் பயன். 500 மருத்துவ அலுவலர்கள், 500 செவிலியர்கள், 500 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 500 மருத்துவமனை பணியாளர்கள் மொத்தமாக 2,000 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாட்டுத் திட்டம்

டெங்கு

டெங்குவை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய தடுப்பு மற்றும் கண்காணிப்பு மருத்துவமனைகளின் எண்ணிக்கை (SSH)31இல் இருந்து 47ஆக உயர்வு. 2022ஆம் ஆண்டில் 2,65,834 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 6,430 நோயாளிகள், 2023ஆம் ஆண்டு 4,17,017 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 9,121 நோயாளிகள், 2024ஆம் ஆண்டு 3,48,709 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 27,378 நோயாளிகள் மற்றும் 2025ஆம் ஆண்டு (06.02.2025 வரை) 32,302 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 2,975 நோயாளிகள் கண்டறியப்பட்டு குணப்படுத்தப் பட்டுள்ளனர்.

மலேரியா

தேசிய மலேரியா நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2023ஆம் ஆண்டில் 1,26,49,263 நபர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, அதில் 384 நபர்களுக்கு மலேரியா உறுதி செய்யப்பட்டு பூரண சிகிச்சை அளிக்கப்பட்டு அனைவரும் குணமடைந்துள்ளனர்.

2024ஆம் ஆண்டு 1,24,92,293 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 347 நபர்களுக்கு மலேரியா உறுதி செய்யப்பட்டு, பூரண சிகிச்சை அளிக்கப்பட்டு அனைவரும் நலமுடன் உள்ளனர்.

2025ஆம் ஆண்டு (06.02.2025) வரை 5,71,996 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, 9 நபர்களுக்கு மலேரியா உறுதி செய்யப்பட்டு, பூரண சிகிச்சை அளிக்கப்பட்டு அனைவரும் நலமுடன் உள்ளனர்.

தமிழ்நாட்டில் மலேரியா நோய் ஒழிப்பை நோக்கி எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்காக 2021ஆம் ஆண்டு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

யானைக்கால் நோய்

தமிழ்நாட்டின் முன்னோடித்திட்டமான யானைக்கால் நோய் நிலை-IV இன் கீழ் உள்ள 8,023 நோயாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்பட்டு வருடந்தோறும் ரூ.9.62 கோடி ஒதுக்கீடு. தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத்திட்டம் மாநில மற்றும் மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் மூலம்ச ட்டமீறல் செய்தவர்களின் எண்ணிக்கை : 1,90,346, தண்டனையாக வசூலித்த தொகை: ரூ. 3,06,64,650/-. நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை 17,433 நபர்களுக்கு 928 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

பள்ளி செயல்பாடு

புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் என அறிவிக்கப்பட்ட பள்ளிகள் 44,056. புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் என அறிவிக்கப்பட்ட கல்லூரிகள் 2,074.

புகையிலைப் பழக்கத்திலிருந்து விடுபடுதல்:

1,54,226 நபர்கள் ஆலோசனை பெற்று, 3,663 நபர்கள் மருந்து சிகிச்சை பெற்று, 1,659 நபர்கள் புகை பழக்கத்திலிருந்து விடுபட்டுள்ளார்கள்.

மாதவிடாய் கால சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்

1.30 கோடி வளரிளம் பெண்களும், 15.22 இலட்சம் பிரசவித்த தாய்மார்களும், 781 அரசு நிறுவனங்களில் 2.20 கோடி பெண் உள்நோயாளிகள் இனப்பெருக்க வயது பிரிவிலும், 9,000 பெண் சிறை கைதிகளும், 300 சென்னை மனநல மருத்துவமனையில் உள்ள பெண் உள் நோயாளிகளும் ஆக மொத்தம் 3.65 கோடி பெண்கள் பயன்பெற ரூ.339.3 கோடி நிதி ஒதுக்கீடு.

தடுப்பூசித் திட்டம்

தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து ஒவ்வொரு வருடமும், 9.58 இலட்சம் கர்ப்பிணி பெண்கள் மற்றும் 8.76 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர். பொது சுகாதார பணியாளர்கள் திறன்பட செயல்பட்டதினால், தமிழ்நாட்டில் தடுப்பூசி சாதனை 99 சதவிகித விழுக்காடு அடைந்துள்ளது தமிழ்நாட்டில் முழுமையாக தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 90.4 சதவிகிதமாக உயர்வு.

சிறப்பான தடுப்பூசித் திட்டங்கள்

தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்

போலியோ வைரஸ் வகை 2 முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட நிலையில், போலியோ வைரஸ் வகை 1 ஒழிப்பதற்காக மத்திய அரசு ஒவ்வொரு வருடமும் தீவிர பல்ஸ் போலியோ முகாம் நடத்தி வருகிறது.

"மிஷன் இந்திரதனுஷ்" சிறப்பு தடுப்பூசி திட்டத்தின் மூலம் 60,773 கர்ப்பிணி பெண்கள் மற்றும் 2,48,522 குழந்தைகள் பயன்.

சுகாதார பணியாளர்களுக்கு 2022 முதல் இன்று வரை 1.47,794 தவணைகள் வழங்கப்பட்டுள்ளன.

கோவிட் தடுப்பூசி

மத்திய அரசிடமிருந்து இன்று வரை 11.93 கோடி டோஸ்களும் கோவிட் தடுப்பூசிகள் பெறப்பட்டு, தமிழக அரசின் அறிவுரைப்படி, இதுவரை 38 மெகா கோவிட் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு 5.51 கோடி டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளது.

12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 12.75 கோடி டோஸ்கள் கோவிட் தடுப்பூசி மூலம் பயன். இதில் முதல் தவணை 96.62 சதவிகிதமும், இரண்டாம் தவணை 90.32 சதவிகிதமும் மற்றும் முன்னெச்சரிக்கை தவணை 16.99 சதவிகிதம் ஆகும்.

தமிழ்நாட்டில் U-WIN மென்பொருள் விரிவுபடுத்தப்பட்டு 7.61 இலட்சம் சான்றிதழ்கள் உருவாக்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சான்றிதழானது ஒரு கண்காணிப்பு கருவியாகவும் மற்றும் தேவைப்படும் இடங்களில் தடுப்பூசி போட்டதற்கான ஆதாரமாகவும் பயனாளிக்கு வழங்கப்பட்டு 10,71,393 நபர்கள் பயன்.

தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்கள் (VPD)

2022ஆம் ஆண்டில் சந்தேதிக்கப்பட்ட 2,289 நபர்களில் 101 நபர்கள் தட்டம்மை நோய்கள் மற்றும் சந்தேதிக்கப்பட்ட 111 நபர்களில் 16 நபர்கள் தொண்டை அடைப்பான் நோய் உறுதி செய்யப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டில் சந்தேதிக்கப்பட்ட 6,588 நபர்களில் 1,137 நபர்கள் தட்டம்மை நோய்கள் மற்றும் 101 நபர்களில் 1 நபர் தொண்டை அடைப்பான் நோய் உறுதி செய்யப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் 5,250 நபர்களில் 788 நபர்கள் தட்டம்மை நோய்கள் மற்றும் 106 நபர்களில் 13 நபர்கள் தொண்டை அடைப்பான் நோய் உறுதி செய்யப்பட்டது.

போலியோ, கக்குவான் இருமல் மற்றும் இரணஜன்னி ஆகிய நோய்கள் இல்லாத நிலை உள்ளது.

மகப்பேறு ஊட்டச்சத்துப் பெட்டகம்

ஊட்டச்சத்து நலபெட்டகங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.3,755.53 கோடியில் 29,59,466 கர்ப்பிணி பெண்களுக்கு 50,12,986 எண்ணிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் சாதனைகள்:

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 21 – உலக அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்பு தினத்தினை முன்னிட்டு வானொலி மற்றும் பத்திரிக்கை விளம்பரம் வாயிலாக அயோடின் உப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வளரிளம் பருவத்தினர் நலத் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 757 இளம் பருவத்தினருக்கு உகந்த சுகாதார மருத்துவ மனைகள் நிறுவப்பட்டுள்ளன.

சாதனை விவரம்

7,88,068 வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ சிகிச்சையும், 7,56,030 பேருக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. வளரிளம் பருவத்திற்கான சிறப்பு மருத்துவ முகாம் 19 வயதுடைய இளம் பருவ ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்காக 34,222 சுகாதார (ம) விழிப்புணர்வு முகாம்களும், அதில் 33,44,417 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டனர். அதில் 18,29,353 வளரிளம் பெண்களும், 15,15,064 வளரிளம் ஆண்களும் அடங்குவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் 29,95,098 பயனாளிகளுக்கு ரூ.3,755.53 கோடி செலவினமும் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய கார்யக்ரம்

"ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்திய கார்யக்ரம்" என்பது மத்திய அரசு முன்னெடுத்துள்ள பள்ளிக்குழந்தைகள் உடல் நலம் பேணுவதற்கானதொரு திட்டமாகும்.

69.52 இலட்சம் பள்ளிக்குழந்தைகளை வருடத்திற்கு ஒருமுறையும், 39.43 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகளை வருடத்திற்கு இருமுறையும் பரிசோதனை செய்யப்படுகின்றனர். இதை கல்வி மேலாண்மைத் தகவல் மையம் (EMIS) மூலம் கண்காணிக்கப்படுகிறது,

குழந்தை பிறந்து 48 மணி நேரத்திற்குள் பரிசோதனை செய்வரின் மூலம், பரிசோதிக்கப்பட்ட 21,136 குழந்தைகளில், 413 குழந்தைகள் பிறவி குறைபாடுகளுடன் அடையாளங்காணப்பட்டு மேற்சிகிச்சைக்காக உயர் சிகிச்சை மையங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் குழந்தை மரண வீதத்தைக் குறைத்து, நீண்டகால ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையின் 15ஆவது நிதிக் குழு மானியத்தில் ரூ.943.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் இதுவரை 894 கட்டடங்கள் திறப்பு. 306 கட்டடங்கள் திறக்க தயார் நிலையிலும் 943 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தேசிய நலக்குழுமம் தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டத்தின் கீழ் ரூ.94.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் 73,121 கட்டடங்கள் திறப்பு, 15 பணிகள் திறக்க தயார் நிலையிலும், 40 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொ.அ.ஈ.)

16 மாவட்டங்களில் 19 புதிய தொ.அ.ஈ. மருந்தகம் தொடங்கப்பட்டு 71,832 காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை

மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 112 சித்தா உதவி மருத்துவ அலுவலர்கள், 13 ஓமியோபதி உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் 5 ஆயுர்வேதா உதவி மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் ஆணை.

மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 79 மருந்தாளுநர்கள் மற்றும் 47 சிகிச்சை உதவியாளர்களுக்கும் மற்றும் தேசிய ஊரக நலத் திட்டத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட 359 மருந்து வழங்குநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் 4 இளநிலை உதவியாளர்கள் மற்றும் ஒரு தட்டச்சர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பதிவு பெற்ற பரம்பரை இந்திய மருத்துவ முறை வைத்தியர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.1,000/- லிருந்து ரூ.3,000/- ஆக உயர்வு.

ரூ.2.24 இலட்சம் செலவில் திண்டுக்கல் மாவட்டத்தில் 13.10.2022 அன்று 300 விவசாயிகளுக்கு மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பயிற்சி பட்டறை.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனையில் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரழிவு நோய்களுக்கு இந்திய மருத்துவ மற்றும் ஓமியோபதி மருந்துகள் வழங்கும் திட்டம் தொடக்கம்.

ரூ.32 கோடி செலவில், 110 எண்ணிக்கையிலான இந்திய மருத்துவ முறை பிரிவுகள் ஆயுஷ் நலவாழ்வு மையங்களாக தரம் உயர்வு.

மதுரை மாவட்டம், பொதும்பு நலவாரிய மையம் தொடக்கம்.

ரூ.70 இலட்சம் செலவில் ஆலத்தூரில் செயல்படும் டாம்கால் நிறுவனத்தின் உற்பத்தி அலகில் சூரிய ஆற்றலை பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ள ஆணை. மதுரை, தேனி, விருதுநகர் ஆகிய 3 மாவட்டங்களில் மாணவர்களிடையே மூலிகைகள் மற்றும் மருத்துவ தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசு பள்ளிகளில் தமிழ்நாடு மாநில மருத்துவ தாவர வாரியத்தின் மூலம் "இலஞ்சி மன்றம்" நிறுவப்பட்டது. முதற்கட்டமாக ரூ.46.64 இலட்சம் ஒப்புதல்.

நாமக்கல் மாவட்டத்தில் ரூ.2 கோடி செலவில் 60 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனை நிறுவப்பட்டது.

ஓமியோபதி துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 59 சிகிச்சை உதவியாளர்களுக்கு (ஆண்–29, பெண்–30) யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவுகளில் சிகிச்சை உதவியாளர்களாக பணி நியமனம்.

100 இந்தியமுறை மருத்துவமனைகள் ரூ.12.98 கோடி செலவில் ஆயுஷ் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களாக தரம் உயர்வு.

ரூ.6 கோடி செலவில், 30 இந்திய மருத்துவ நிலையங்களில் வெளி நோயாளர்கள் பிரிவுகளை மேம்படுத்த அரசு ஆணை.

தேசிய ஆயுஷ் திட்டத்தின்கீழ் தேசிய எலும்பு தசைசிதைவு நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டம் 49 சித்த மருத்துவப் பிரிவுகளிலும், 1 ஊரக மருந்தகத்திலும் ரூ.450 இலட்சம் செலவில் அரசு ஆணை.

ஈரோடு காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், திருப்பூர், வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மாவட்ட சித்த மருத்துவ மனைகளை ரூ.1.75 கோடியில் தரம் உயர்வு.

பழங்குடியினர் வாழும் 10 இடங்களில் நடமாடும் சித்த மருத்துவமனைகள் ரூ.94.25 இலட்சம் செலவில் திறப்பு.

சென்னையில் செயல்படும் அரசு சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்லூரிகளில் ஸ்மார்ட் கிளாஸ் அறைகள் செயல்படுகின்றன,

கடலூர் மாவட்டம் நடுவீரப்பட்டில் அரசு அரம்ப சுகாதார நிலையத்தில் புதிய சித்த மருத்துவ கட்டடம் ரூ.30 இலட்சம் செலவில் கட்ட கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

ரூ.10 இலட்சம் செலவில் ஆயுஷ் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்/உதவி மருத்துவ அலுவலர் /மருத்துவ ஆலோசகர்களின் திறன் மேம்பாட்டிற்க்கான பயிற்சி பட்டறை பயற்சி அளிக்க 1,300 மருத்துவர்களுக்கு ஒரு தொகுதிக்கு 100 மருத்த்துவர்கள் வீதம் அகில இந்திய யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம், செங்கல்பட்டில் நடத்தப்பட்டது

இந்திய மருத்துவம் ஓமியோபதி துறை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உடன் இணைந்து மருந்துகள் தேவைப்பட்டியல் சமர்ப்பிப்பது தொடர்பான பயன்பாட்டினை நெறிமுறைப்படுத்துவதற்காக ஆயுஷ் ஒரு வலைதள செயல்பாட்டினை உருவாக்கியுள்ளது.

நோயாளர்கள் உடனாளர்கள் தங்கும் வசதியுடன் கூடிய கட்டடம் ரூ.90 இலட்கம் செலவில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டார் அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரியில் PMJVK நிதியின் மூலம் கட்டப்பட்டது.

ரூ.35.63 கோடி செலவில் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள். ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசினர் சித்த மருத்துவ கல்லூரி மருத்துவனையில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள்.

சித்த மருத்துவத்தின் மூலம் புற்று நோயினை கட்டுபடுத்துதல் மற்றும் தற்போது வழக்கத்தில் உள்ள புற்று நோய்க்கான மருத்துவ முறைகளை நோயாளர்களின் உடல்நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் புற்று நோய் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

நவீன தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி இந்திய மருத்துவமுறை சிகிச்சைகளை மேம்படுத்தி வழங்க இந்திய தொழில்நுட்ப கழகத்துடன் (IIT Madras) புரிந்துணர்வு ஒப்பந்தம்.

இந்திய மருத்துவ முறை மருந்துகளின் தரத்தை உறுதி செய்து தரச் சான்றிதழ் வழங்க இந்திய மருத்துவம் – ஓமியோபதி ஆணையரகம் மற்றும் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய குழுவிற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

இந்திய மருந்தகங்களுக்கான செயல்பாட்டு வழிமுறைகள் அடங்கிய கையேடு வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 300 இந்திய மருத்துவ முறை மருத்துவ பிரிவுகள் ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் ஆயுஷ் நல வாழ்வு மையங்களாக தரம் உயர்வு.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையை வலுப்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த 50 படுக்கைகள் கொண்ட கட்டடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 5 மாவட்ட மருத்துவமனைகளில் செயல்படும் ஆயுஷ் பிரிவிற்கு கட்டடங்களும் தேவையான அறைகலன்கள் மற்றும் உபகரணங்கள்.

ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் இந்திய மருத்துவத் துறையின் கீழ் செயல்படும் மாநில மருந்துகள் பகுப்பாய்வு ஆய்வகத்தினை வலுப்படுத்தும் பணிகள்.

திருநெல்வேலி மாவட்டம் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சித்த மருந்துகள் உற்பத்தி செய்யும் நிலைய சீரமைப்பிற்கு ரூ.1.60 கோடி வழங்கப்பட்டது.

ரூ.1.35 கோடி செலவில் செங்கல்பட்டு சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் உள்ள டாம்ப்கால் கட்டடத்தில் புதிய கட்டணப் பிரிவுகள்.

இந்திய மருத்துவமுறை மருத்துவத்தினை பயிலும் மாணவர்களிடையே ஆராய்ச்சி மற்றும் புதிய மருந்துகளை கண்டுபிடிப்பை ஊக்குவிப்பதற்காக ரூபாய் 6.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இந்திய மருத்துவமுறை மற்றும் அலோபதி மருத்துவமுறையுடன் ஒருங்கிணைந்த சிகிச்சை வழங்க காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் 133 ஆசிரியர்களுக்கு பயிற்றுவிக்கும் திறனை அதிகரிக்க பயிற்சி.

அரசு ஆயுஷ் மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகளுக்கு இந்திய மருத்துவ முறையின்படி பராம்பரிய சிறப்பு உணவு அறிமுகம்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப யுக்திகளைக் கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் தொழில்நுட்ப அறிவை பகிர்வதற்கும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

குடும்பநல இயக்ககம்

பேறுகால பின் கவனிப்பு கருத்தடை வளையம் பொருத்துதலில் தேசிய அளவில் சிறப்பான பங்களிப்பு செய்தமைக்காக தமிழ்நாடு அரசுக்கு தேசிய குடும்பக்கட்டுப்பாடு உச்சி மாநாடு 2022-இன்போது, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் முதல் பரிசு வழங்கியுள்ளது.

9,17,470 பெண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள், 4,072 ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள், தேவைபடுகின்ற தாய்மார்களுக்கு 15,69,039 காப்பர்1 பொருத்தப்பட்டுள்ளது, தகுதியான தாய்மார்களுக்கு 5,47,179 சாயா மாத்திரைகள்

வழங்கப்பட்டுள்ளது. தகுதியான தாய்மார்களுக்கு 2,38,349 அந்தாரா ஊசிகள் செலுத்தப்பட்டுள்ளது. தகுதியான தாய்மார்களுக்கு 1,50,316 அவசர கால மாத்திரைகைள் வழங்கப்பட்டுள்ளது.

NFHS V படி தமிழ்நாட்டின் நவீன கருத்தடை பயன்படுத்துபவர்களின் விகிதம் 52,6% இருந்து 65.5%ஆக குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடைந்துள்ளது.

NFHS V படி கருத்தடைகளுக்கான பூர்த்தி செய்யப்படாத தேவை 10.1/-லிருந்து 7.5%ஆக குறைந்துள்ளது.

நமது மாநிலத்தின் மொத்த கருவள விகிதம் 1.8லிருந்து 1.4ஆக குறைக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை

உணவு பொருள்களின் தரம் இத்துறையின் கீழ் இயங்கும் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள ஆறு உணவு ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்படுகிறது. தேசிய அங்கீகார வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்டு ஆய்வறிக்கையின் அடிப்படையில் வழக்குகள் தொடரப்படுகின்றன.

உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் (License and Registration Certificate):

ரூ.12 இலட்சம் வரை உள்ள நிறுவனங்கள் பதிவு சான்றிதழ்,

ரூ.12 இலட்சம் முதல் 20 கோடி வரை உள்ள நிறுவனங்கள் உரிமம்.

20 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டுகிற ஏற்றுமதி, இறக்குமதி செய்கிற உணவு நிறுவனங்கள் மற்றும் மத்திய நிறுவனங்கள் ஆகியவை மத்திய உரிமம் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

இணையதளம் மூலம் உரிமம் மற்றும் பதிவு சான்று வழங்கப்படுகிறது. உரிமம் மற்றும் பதிவு சான்று வழங்குவதற்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1,35,149 உணவு வணிகர்களுக்கு உணவு உரிமம் (License) வழங்கப்பட்டுள்ளது.

5,86,284 உணவு வணிகர்களுக்கு பதிவு சான்றிதழ் (Registration Certificates) வழங்கப்பட்டுள்ளது.

3,009 உரிமம் / பதிவு சான்றிதழ் முகாம் நடத்தப்பட்டன.

தகவல் / கல்வி / தொடர்பு மற்றும் விழிப்புணர்வு (Information Education Communication)



பொதுமக்களுக்கு பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதி செய்ய 26,282 விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு 27,46,306 பேர் பங்கேற்றார்கள்.

அமலாக்க நடவடிக்கைகள் (Enforcement Activities)

நியமன அலுவலர்கள் / உணவு பாதுகாப்பு அலுவலர்கள், அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவு தயாரிப்பு நிறுவனங்கள், சேமித்து வைக்கும் இடங்கள், விற்பனையாளர்களை தொடர்ச்சியாக 72,550 சட்ட ரீதியான உணவு, மாதிரிகள் ஆய்வு செய்து 15,680 மாதிரிகள் பாதுகாப்பற்றது (ம) தரம் குறைவானது என கண்டறியப்பட்டது.

நீதி வழியில் தீர்ப்பு வழங்கும் அலுவலர் நீதிமன்றத்தில் (Adjudication Cases) பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் விவரம்

10,831 பதிவுசெய்யப்பட்ட உரிமையியல் வழக்குகளில். 10,215 முடிவு செய்யப்பட்ட வழக்குகளில், ரூ.10,41,79,349 அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்ற வழக்குகள் (Criminal Cases)

3,660 பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில், 2,037 தீர்ப்புகள் வழங்கப்பட்டு ரூ. 5,35,74,000 அபராதம் விதிக்கப்பட்டது.

சிறு குற்றச் செயல்களுக்குத் தீர்வு செய்தல் (Compounding Offence)

12 இலட்சத்திற்கும் குறைவாக வருவாய் ஈட்டும் உணவு வணிகர்கள் செய்யும் குற்றங்களுக்கு ரூ.1,00,000/- வரை அபராதம்.

55,792 கண்டறியப்பட்ட குற்றங்களில் ரூ.69,66,27,900/- அபராதம் விதிக்கப்பட்டது.

புகையிலை மற்றும் நிக்கோட்டினை சேர்மானமாக கொண்ட உணவுப் பொருள்கள் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

388.137 டன் உணவு பாதுகாப்பு துறையால் கைப்பற்றப்பட்டது.

60 உரிமையியல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, ரூ.6,47,500/- அபராதம் விதிக்கப்பட்டு 36 தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

503 பதிவுசெய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளில், ரூ.34,89,500/- அபராதம் விதிக்கப்பட்டு, 124 தீர்ப்பு வழங்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்களை விற்பனை செய்பவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராத தொகை ரூ.66,09,93,200/-

குறை தீர்க்கும் முறை (Complaint Redressal)

வாட்ஸ் ஆப் செயலி மூலம் பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 30,604

உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றிதழ் (Food Safety Training and Certification) (FoSTaC)

54,439 அங்கன் வாடி மையங்களுக்கு, ரூ.32 லட்சம் செலவில் உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றிதழ் (FOSTAC) வழங்கப்பட்டுள்ளது.

(Food Safety Compliance through Regular Inspection System)

(FoSCoRIS):டிஜிட்டல் மற்றும் இணைய வழியில் இருப்பிடம் இணைக்கப்பட்ட அடிப்படையிலான 2,66,946 ஆய்வுகள் நடத்தப்பட்டது. கடவுளுக்கு சுகாதாரம் மற்றும் சுத்தமான பிரசாதம் வழங்குதல் (Blissful Hygienic Offering to God) (BHOG) 754 கோவில்களில் கடவுளுக்கு படைக்கப்படும் பிரசாதத்தினை சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்து 1,083 சான்றிதழ்களில் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார மதிப்பீடு (Hygiene Rating)

"சுகாதார மதிப்பீடு" திட்டத்தின் கீழ் 9,774 சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. சுத்தமான தெரு உணவு மையம் (Clean Street Food Hub) 108 சுத்தமான தெரு உணவு மையம். சுத்தமான பழம்

மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம் (Clean Fruit and Vegetable Market) 150 சுத்தமான பழம் மற்றும் காய்கறிகள் விற்பனை வளாகம் என்னும் சான்று வழங்கப்பட்டுள்ளது. உண்ணத்தகுந்த வளாகம் (EAT RIGHT CAMPUS) உண்ணத்தகுந்த வளாகம் குறித்து வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 1,294,

சமையல் எண்ணெய் மறுபயன்பாடு (Repurpose Used Cooking Oil)

சேகரம் செய்யப்பட்ட, மறு பயன்பாடு செய்யப்பட்ட சமையல் எண்ணெயின் அளவு 13,232.793 கிலோ லிட்டர் உபரி உணவை வீணாக்காமல் பயன்படுத்துவோம் (Safe Food Share Food) உபரி உணவுகள் பெறப்பட்டு எளியோருக்கு வழங்கப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை 1,79,943.

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால், 2021-2022ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலாவது மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருது மற்றும் சான்றிதழ்.

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட உண்ணத் தகுந்த உணவு குறித்த போட்டியில் தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சீபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினை பெற்றுள்ளது. 2022-2023ஆம் ஆண்டிற்கான மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாம் மாநிலமாக தேர்வு.

2022-2023ஆம் ஆண்டு நடத்தப்பட்ட Eat Right Challenge-போட்டியில் இந்திய அளவில் 13 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினை பெற்றுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் இந்திய அளவில் முதலிடம் பிடித்துள்ளது.

மனித வளம் மற்றும் நிறுவனங்களைப் பற்றிய தரவுகள், தர மதிப்பீடு செய்ததில், 2023-2024ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருது மற்றும் சான்றிதழ் பெற்றுள்ளது.

மருந்துக் கட்டுப்பாடு நிர்வாக இயக்குநரகம்

மத்திய நிதியுதவி திட்டத்தின் கீழ் மாநில மருந்துகள் ஒழுங்குமுறை அமைப்பை வலுப்படுத்தல் மூலம் ரூபாய் 29.67 கோடி மதிப்பீட்டில் (ஒன்றிய அரசு பங்கு ரூ.17.802 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.11.868 கோடி) A மற்றும் B வகை மருத்துவ சாதனங்களை பரிசோதிப்பதற்காக பிரத்யேகமாக உலகத்தரம் வாய்ந்த மருந்துப் பரிசோதனை ஆய்வகம் ஒன்று கோயம்புத்தூரில் நிறுவப்பட உள்ளது. தனியார் மருத்துவமனைகளில் இருந்து அவசரகால மருத்துவ ஆக்சிஜனின் கோரிக்கை பெறப்பட்டவுடன், கிடைக்க ஏற்பாடு.



அனைத்து புதிய திட்டங்களின் செயல்படுத்தப்பட்ட சாதனைகள்

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான 60:40 நிதியுதவி விகிதத்தில், 2023-2024 நிதியாண்டில், ஒன்றிய அரசு ரூ.6.48 கோடியையும், மாநில அரசானது ரூ.10.8 கோடியையும் விடுவித்துள்ளது.

2024-2025 நிதியாண்டில், மருத்துவ சாதனங்களை பரிசோதிப்பதற்காக மருந்துப் பரிசோதனை ஆய்வகம் கோயம்புத்தூரில் நிறுவ ஒன்றிய அரசு தனது நிதியாக (60% பங்கு) ரூ.17.802 கோடியையும், மாநில அரசானது ரூ.11.868 கோடியையும் விடுவித்துள்ளது.

7 மாவட்டங்களில் மருந்துக் கட்டுப்பாட்டு மண்டல அலுவலகத்திற்கு புதிய மருந்துகள் ஆய்வுக்கூடக் கட்டடம் கட்ட ரூ.31.20 கோடி நிதி.

விற்பனை நிறுவனங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை 2,67,553ஆகவும், உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை 5,638ஆகவும், மருத்துவமனை மற்றும் மருந்து கிடங்குகளில் ஆய்வுகளின் எண்ணிக்கை 9,956ஆகவும், இரத்த நிலையங்கள் மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்களில் ஆய்வுகளின் எண்ணிக்கை 3,446 என 2,86,593 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை உட்பட தமிழகம் முழுவதும் சிறப்புப் படை அமைக்கப்பட்டு, திடீர் சோதனை நடத்தப்பட்டதில் மருத்துவரின் மருந்துச் சீட்டு இல்லாமலும் விற்பனை ரசீதுகள் இல்லாமலும் அடிமை மற்றும் போதை பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்து பொருள்களை விற்பனை செய்த 59 மருந்து கடைகள் மீது சட்ட நடவடிக்கை.

ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் 16 மருந்து கடைகள் மீதும், கருக்கலைப்பு மாத்திரைகளை தவறாக பயன்படுத்துதல் பற்றி கண்டறிய திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களில் 19 மருந்து கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 454 கடைகளில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, டபென்டடால், நைட்ரசீபம், அல்பிரசோலம் போன்ற அடிமை மற்றும் போதை பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகளை மருந்து சீட்டு இல்லாமலும் விற்பனை இரசீதுகள் இல்லாமலும் விற்பனை செய்த குற்றத்திற்காக 97 கடைகள் மீது சட்ட நடவடிக்கை.

522 கடைகளில் இருமல் மருந்துகளை மருந்து சீட்டு இல்லாமலும் விற்பனை இரசீதுகள் இல்லாமலும் விற்பனை செய்த குற்றத்திற்காக 37 கடைகள் மீது சட்ட நடவடிக்கை.

அடிமை மற்றும் போதை பழக்கத்தை ஏற்படுத்தும் இருமல் மருந்துகளை உரிமம் இல்லாத நபர்களுக்கு விற்ற குற்றத்திற்காக 6 மொத்த மருந்து விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

அடிமை மற்றும் போதை பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகளை மருந்து சீட்டு இல்லாமலும் விற்பனை இரசீதுகள் இல்லாமலும் விற்பனை செய்த 64 மருந்துகடைகளின் உரிமங்கள் இரத்து. 699 கடைகளின் உரிமங்கள் தற்காலிக முடக்கம்.

மருந்துகள்விதிகள் 1945இன்திருத்தப்பட்டஅட்டவணைMஐதிறம்படசெயல்படுத்துவதற்கான மாநிலம் முழுவதும் உள்ள 110 உற்பத்தி நிறுவனங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டு ரூ.43,47,726 மதிப்பீட்டிலான மருந்துகள் கைப்பற்றப்பட்டது மருந்துகள் ஆய்வுக்கூடம், மதுரை மதுரையில் ரூ.20 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த மருந்துகள் ஆய்வுக்கூடம்.

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

உபயோகப்படுத்தப்பட்ட 108 அவசர ஊர்திகளை தேவைப்படும் பிற திட்டங்களுக்கு முறையான மற்றும் வெளிப்படையான வழிமுறைகளை பின்பற்றி மாற்றுவதற்கும் வாகன பொது சேர்ம திட்டம். கருத்து கேட்பு திட்டத்தின் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட ஓட்டுநர்களின் மொத்த எண்ணிக்கை 9,339.மின்னணு ஏலமுறையில் தீர்வு செய்யப்பட்ட மொத்த கழிவு வாகனங்களின் எண்ணிக்கை 971.

ஏழு சிறு பணிமனைகள் புதிதாக தொடங்கப்பட்டு தற்போது அப்பணிமனைகள் அந்தந்த இடங்களில் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. வாகன தணிக்கை 3,000-க்கும் மேற்பட்ட

வாகனங்களுக்கான தணிக்கை முடிவுகளின் அடிப்படையில் துறைவாரியான தரவு பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட இயக்குநரகங்களுக்கு மேல் நடவடிக்கை.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

2022-2023ஆம் ஆண்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளுக்காக தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் தமிழ்நாடு "சிறந்த செயல்திறன் மாநிலம்" என விருது பெற்றுள்ளது.

தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம்

ரூ.15.30 கோடி செலவில், 9 டெலிகோபால்ட் கருவிகள் 9 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ரூ.3.04 கோடி செலவில், பிராகி தெரபி கருவி 2 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ரூ.22 கோடி செலவில், LINAC கருவி சேலம் மருத்துவமனையில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

பெட் சிடி கருவிகள் 5 மருத்துவமனைகளில் (PPP Mode) நிறுவப்பட்டு பயன்பாட்டில்உ ள்ளது. ரூ.67.5 கோடி செலவில், 20 சி.டி கருவிகள் 20 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ரூ.103 கோடி செலவில், 13 எம்.ஆர்.ஐ கருவிகள் 13 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

உலக வங்கியின் உதவியுடன், தமிழ் நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின் (TNHSRP) மதிப்பீடு 2,854.74 கோடி ரூபாய் ஆகும். உலக வங்கியின் பங்களிப்பு ரூ.1,998.32 கோடி (70%) மற்றும் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு ரூ. 856.42 கோடி (30%) ஆகும். இத்திட்டத்திற்காக, உலக வங்கி இதுவரை, 1578.80 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

திட்ட சாதனைகள் (மே 2021 முதல் 31.01.2024)

1,000 படுக்கை வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் நினைவு பன்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்குரூ.146.52கோடிமதிப்பீட்டில்நவீனமருத்துவஉபகரணங்கள்வழங்கப்பட்டுள்ளது. சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் பயிலும் மாணவர்களுக்கு ரூ.132.24 கோடி மதிப்பீட்டில் தங்கும் விடுதி.

சென்னை - அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக அனைத்து வசதிகளுடன் ரூ. 64.90 கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்கு புற்றுநோய் சிகிச்சைக்கு தேவையான அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூ.32 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

அவசர சிகிச்சைத்துறை - 25 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் . ரூ.19.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தரம் உயர்வு.

46 விபத்து மற்றும் அவசர கால சிகிச்சை மருத்துவமனைகள் ரூபாய் 16.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது (மனிதவளம், உபகரணங்கள்)

உடனுக்குடன் இணைய வழி பதிவேற்றம் செய்வதற்கு 1,806 ஊரக சுகாதார நிலையங்களுக்கு தலா ஒரு மடிக்கணினி ரூ.15.92 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.15 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையம்.

7 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் Pay Wards.

அவசர சிகிச்சைத்துறை - 11 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 9.26 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை.



சென்னை - எழும்பூர்-மண்டல கண் மருத்துவவியல் நிலையம் மற்றும் அரசினர் கண் மருத்துவமனைக்கு பொது மக்களின் நலன் கருதி ரூபாய் 8.00 கோடி மதிப்பீட்டில் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

உணவு பரிசோதனை கூடம் ரூபாய் 7.58 கோடி மதிப்பீட்டில் 6 மாவட்டங்களில் தரம் உயர்வு.

மதுரை மாவட்டம் - பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனையில் புதிய உட்கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் அமைத்து மேம்படுத்த நடவடிக்கை.

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கான தனிப்பிரிவு ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை.

தர மேம்பாட்டு பணிகளை ஒருங்கிணைக்க மருத்துவமனை மேலாண்மை அலுவலர்கள் ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் பணி அமர்தப்பட்டுள்ளனர்.

விபத்து காய பதிவேடு - அனைத்து மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் 24 மாவட்ட சுகாதார பேரவை மற்றும் 1 மாநில சுகாதார பேரவை நடத்த நடவடிக்கை.

சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) தரச்சான்றிதழ் பெறுவதற்காக ரூபாய் 1.45 கோடி மதிப்பீட்டில் நவீன ஆய்வக உபகரணங்கள் வழங்க நடவடிக்கை.

ரூ.14.14 கோடி மதிப்பீட்டில் 12 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் குடியிருப்பு.

ரூ.1 கோடி மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம் பழனி அரசு மருத்துவமனைக்கு டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி.

அரசு மருத்துவமனை - உளுந்தூர்பேட்டை -நவீன பிரேதபரிசோதனை கூடம் ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை.

சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிறார்களுக்கான காதுவால் நரம்பு உள்வைப்பு (Cochlear Implant) அறுவை சிகிச்சைக்கான ரூபாய் 0.95 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள்.

ஆரம்பசுகாதாரநிலையம்-வளையான்குளம்(மதுரை),கிளியனூர்மற்றும்முருக்கேரி(விழுப்புரம்) - அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூ.0.71 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நுண்துளை எலும்பு அறுவை சிகிச்சை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சைக்கான ரூபாய் 0.70 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை.

ரூ.0.65 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அதிநவீன லேப்ரோஸ்கோபி & ப்ரோன்கோஸ்கோபி (Bronchoscopy) மருத்துவக்கருவிகள்.

அரசு மருத்துவமனை - ஊத்துக்குளி - காது மூக்கு தொண்டை அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூபாய் 0.57 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

நடப்போம் நலம் பெறுவோம் (Health walk)- இதர செலவினங்கள் ரூபாய் 0.57 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

காரைக்குடி மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கண் மருத்துவ சிகிச்சைக்கான நவீன உபகரணங்கள் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் - பரதராமி (வேலூர்) - சுற்றுச்சுவர் ரூ.0.47 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை.

தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை ரூ.0.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள (Work place screening) நடவடிக்கை.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எலிக்கொல்லி மருந்தினை உட்கொள்வதால் ஏற்படும் உடல் பாதிப்பு மற்றும் இறப்பினை குறைக்கும் நோக்கில் அதிநவீன இரத்த சுத்திகரிப்பு உபகரணம் ரூ.0.33 கோடி மதிப்பீட்டில் (Plasmapheresis Machine) வழங்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனை - விக்கிரவாண்டி (விழுப்புரம்) - சுற்றுச்சுவர் ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள பிரேத பரிசோதனை கூடத்தை ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் அமைந்துள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்பு கட்டடங்களை ரூ.0.24 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை.

திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமையப் பெற்ற புதிய 500 படுக்கை வசதிகள் கொண்ட பிரிவிற்கு இரத்த சேமிப்பு அலகிற்கான (Blood Storage Unit) நவீன உபகரணங்கள் ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

அரசு மருத்துவமனை - குளச்சல் (கன்னியாகுமரி) - அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் ரூ.0.09 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

அரசு மருத்துவமனை - பூதப்பாண்டி (கன்னியாகுமரி) - சூரிய ஒளி நீர் வெப்பகலன் (Solar water Heating system) ரூ.0.05 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை.

அரசு மருத்துவமனை - திண்டிவனம் - புற்றுநோய்க்கான மருத்துவ சிகிச்சையை (Day Care Chemotherapy) ரூ.0.04 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த நடவடிக்கை.

விருதாச்சலம் அரசு மருத்துவமனையில் ரூ.0.98 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

செங்கம் அரசு மருத்துவமனையில் ரூ.0.98 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

பாலக்கோடு அரசு மருத்துவமனைகளில் ரூ.0.98 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

சென்னை - பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் ரூ.4.71 கோடி மதிப்பீட்டில் மனிதவளங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.0.98 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையமாக தரம் உயர்வு.

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.0.30 கோடி மதிப்பீட்டில் நடமாடும் இரத்த சேமிப்பு வாகனம்.

ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு அரசு மருத்துவமனையில் விஷ முறிவு சிகிச்சை மையம்.

தேனி மாவட்டம் – இராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர இலவச சிகிச்சை வழங்கும் பொருட்டு, ரூ.0.30 கோடி மதிப்பீடில் செவிலியர் குடியிருப்பு.

சென்னை– கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.125 கோடி மதிப்பீட்டில் உயர் சிறப்புச் சிகிச்சை வழங்க புதிய கட்டடம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதல் தளங்கள் அமைக்கும் கட்டடப் பணிகள்.

சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை,விபத்து காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்க ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம். சென்னை– ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நரம்பியல் சிறப்புச் சிகிச்சை வழங்க ரூ.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்.

சிவகங்கை மாவட்டம்–திருப்பத்துர் அரசு மருத்துவமனையில் ரூ.4.34 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டட பணிகள். விருதுநகர் மாவட்டம்– சாத்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.4.34 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டட பணிகள். புதுக்கோட்டை மாவட்டம்–திருமயம் அரசு மருத்துவமனையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டட பணிகள்.

தேனி மாவட்டம்–பெரியகுளம் அரசு மருத்துவமனையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டட பணிகள்.

தேனி மாவட்டம்–உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சையை மேம்படுத்த புதிய கட்டட பணிகள்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேருர் அரசு மருத்துவமனையை மேம்படுத்தும் பொருட்டு ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரகால சிகிச்சையை மேம்படுத்தும் பொருட்டு ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள்.

தருமபுரி மாவட்டம் அரூர் அரசு மருத்துவமனைக்கு CT scan மற்றும் C – arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கொள்முதல்.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 11.74 கோடி மதிப்பீட்டில் புதிதாக CEmONC கட்டடம்.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை மற்றும் பெண்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனை போன்ற சேவைகள் வழங்க ரூ.1,65 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் கொள்முதல்.

தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.45 கோடி மதிப்பீட்டில் புதிய புற்றுநோய் சிகிச்சை பிரிவு கட்டடம்.

ரூ0.20 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு C – arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசை (Fracture Table) வழங்கப்படவுள்ளது. சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனையில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் நவீன பிரேத பரிசோதனை மையத்திற்கான கட்டடம்.

திருச்சி மாவட்டம் – மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு உயர்சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.31.08 கோடி மதிப்பீட்டில் விடுதியுடன் கூடிய செவிலியர் பயிற்சிப் பள்ளி கட்டடம்.

ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் சென்னை – அரசு அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனையுடன் இணைந்த அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணி.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அரசு மருத்துவமனையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம்.

திருவாரூர் மாவட்டம், விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்.

கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு, ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள் சீரமைப்பு மற்றும் ரூ.0.55 கோடி மதிப்பீட்டில் பொது அறுவை சிகிச்சைக்கு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.45 கோடி நீராவி சலவை (Steam Laundry) வசதிகள்.

ரூ.58.55 கோடி மதிப்பீட்டில் 138 அவசரகால ஊர்திகள் (108 AMBULANCE) மக்கள் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்பட்டுள்ளது

சென்னை – கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மையத்திற்கு ரூ.11.43 கோடி மதிப்பீட்டில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க நடவடிக்கை.

NABH தரம் அங்கிகாரம் பெற ரூ.14.46 கோடி மதிப்பீட்டில் 5 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் சிறப்பு வசதிகளுடன் தரம் உயர்வு.

கன்னியாகுமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்த நவீன மருத்துவ உபகரணங்கள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை.

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

ரூ.192.39 கோடியில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில், 22580 சதுர மீட்டர் பரப்பில் 22 நவீன அறுவை அரங்குகள் +1 ஹைப்ரிட் அறுவை அரங்கு மற்றும் 234 கூடுதல் படுக்கைகள் ஏழு தளங்களில் அமைக்கப்பட்ட அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்பட்டு ரூ.125.46 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.200.66 கோடியில் சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஏழுதளங்கள் 24,973 சதுர மீட்டர் பரப்பில் 15 நவீன அறுவை அரங்குகள் +1 ஹைப்ரிட் அறுவை அரங்கு மற்றும் 441 கூடுதல் படுக்கைகள் கொண்ட 7 தளங்களில் அடுக்கு மாடிக் கட்டடம் ரூ.162.21 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ.169.11 கோடிகள் செலவில் 20617 சதுர மீட்டர் பரப்பில் 7 தளங்கள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடத்தில் 10 நவீன அறுவை அரங்குகள் மற்றும் 277 கூடுதல் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இம்மருத்துவமனைக்கு ரூ.122.60 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி அரசு மருத்துவமனையில் – 5040.45 சதுர மீட்டர் பரப்பில் ரூ.38.74 கோடி செலவில் 4 தளங்களில் மூன்று நவீன அறுவை அரங்குகள், தீவிர கண்காணிப்பு பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் 80 படுக்கைகள் கொண்ட அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டு, ரூ.10.12 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டம் வேலம்பாளையம்அரசு மருத்துவமனையில், 5780 சதுர மீட்டர் பரப்பில் ரூ.41.95 கோடி செலவில் 4 தளங்களில் மூன்று நவீன அறுவை அரங்குகள், தீவிர கண்காணிப்பு பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் 91 படுக்கைகளும் கொண்ட அடுக்குமாடி கட்டடம். ரூ.6.73 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் அரசு அம்மாபேட்டை புறநகர் மருத்துவமனையில், 5,725 சதுர மீட்டர் பரப்பில் ரூ.40.19 கோடி செலவில் 3 தளங்களில் மூன்று நவீன அறுவை அரங்குகள், தீவிர கண்காணிப்பு பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் 85 படுக்கைகளும் கொண்ட அடுக்குமாடி கட்டடம் ரூ.6.13 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் அரசு கண்டியப்பேரி புறநகர் மருத்துவமனையில், 5,636 சதுர மீட்டர் பரப்பில் ரூ.40.84 கோடி செலவில் 3 தளங்களில் மூன்று நவீன அறுவை அரங்குகள், தீவிர கண்காணிப்பு பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் 105 படுக்கைகளும் கொண்ட அடுக்குமாடி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனைக்கு ரூ.6.79 கோடி செலவில் நவீன உயர் சிகிச்சை மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.200.98 கோடியில் நவீன உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 3 மாவட்ட தலைமையக மருத்துவமனைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,20,000/-ஆக உயர்வு. ரூ.5 இலட்சம் வரை காப்பீட்டு தொகை வழங்கப்பட்டு தமிழகத்தில் 1.48 கோடி குடும்பங்கள் பயனாளியாக உள்ளனர்.

இத்திட்டத்தில் 2,053 சிகிச்சை முறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதில் 8 சிறப்பு உயர் சிகிச்சை முறைகளும், 52 முழுமையான பரிசோதனை முறைகளும் 11 தொடர் சிகிச்சை முறைகளும் அடங்கும். 1,232 தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் 943 என 2,175 மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 07.05.2021 முதல் 31.01.2025 வரை 77,55,129 பயனாளிகள் ரூ.5,388.07 கோடி காப்பீட்டு தொகையில் பயனடைந்துள்ளனர். இதில் அரசு மருத்துவமனைகளில் 23,33,949 பயனாளிகளுக்கு ரூ.2,483 கோடி காப்பீட்டு செலவில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் 11.01.2012 முதல் 28.02.2025 வரை 16,628 பயனாளிகளுக்கு 1,408.37 கோடி ரூபாய் காப்பீட்டு திட்ட தொகுப்பு நிதியில் சிறப்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்

தமிழ்நாட்டின் எல்லைக்குள் விபத்தில் முதல் 48 மணி நேரத்திற்குள் காயமடைவோர் அனைவருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட 101 மருத்துவ சிகிச்சை முறைகள் இலவச சிகிச்சை பெற வழி வகை செய்யும் திட்டமே நம்மை காக்கும் - 48 ஆகும். மேலும் இத்திட்டத்தில் ரூ.2 இலட்சம் வரை கட்டணமில்லா சிகிச்சை பெறலாம். வெளிநாட்டவர், வெளி மாநிலத்தார் என்ற எவ்வித பாகுபாடுமின்றி காயமடைந்த அனைவருக்கும் சிகிச்சை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 3,44,427 பயனாளிகளுக்கு 304.02 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்களின் இன்னுயிர் காக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் 3,18,285பயனாளிகள் 260.97 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

108 – அவசர கால மேலாண்மை சேவைகள்

542 எண்ணிக்கையிலான அவசர கால ஊர்திகள், கோவிட்-19 தொற்றுநோய்க்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்டு 6,30,549 பயனாளிகள் பயன்.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் அவசர கால ஊர்திகள் மூலம் மருத்துவமனைகளுக்கு மற்றும் தேவைப்படும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

கொரோனா காலகட்டத்தின்போது 108 அவசர கால ஊர்தி சேவை பணியாளர்கள் கொரோனா தடுப்பு முதன்மைப் பணியாளர்களாக (Frontline Warriors) செயல்பட்டதற்கும் மற்றும் இடைவிடாத பங்களிப்புக்காகவும் தமிழக அரசு ரூ.15,000/- சிறப்பு கொடுப்பனவாக அறிவித்துள்ளது.

அவசர கால சேவைகளின் செயல்பாடுகளை திறம்பட செயல்படுத்த, 515 கூடுதலாக புதிய அவசர கால ஊர்திகள் மாற்று வாகனமாகவும் மற்றும் புதிய நிலைநிறுத்தும் இடமாகவும் படிப்படியாக 1,303-இலிருந்து 1,353ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மிக்ஜாங் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,342 பேரையும், தென் மாவட்ட பகுதிகளில் 1,323 பேரையும் 108 அவசர கால ஊர்தி சேவை மூலம் மீட்க முடிந்தது.

கர்ப்பிணித்தாய்மார்கள் 18,25,880 பயன். சாலை போக்குவரத்து விபத்துக்குள்ளானவர்கள் 12,18,014 மற்றும் இதர அவசரகால பயனாளிகள் 42,14,687 நபர்கள் பயன்.

பச்சிளங்குழந்தைகளுக்கான சேவை மூலம் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 83,322. இருச்சக்கர முதலுதவி வாகனம் மூலம் 1,44,403 பயனாளிகளும் மற்றும் மலை மற்றும் நிலப்பரப்பு பகுதிகளில் 3,75,109 பயனாளிகளும் பயன்.

NK48 திட்டம் மூலம் 3,33,547 பயனாளிகள் பயன்.

104 தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

கோவிட்-19 பெருந்தொற்று இரண்டாம் கால கட்டத்தில் தமிழ்நாடு அரசு NHM-இல் (தேசிய நல்வாழ்வு குழுமம்) உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மையத்துடன் 104 HHL சேவை ஒருங்கிணைந்து சேவை வழங்கப்பட்டது, படுக்கை வசதிகள் கிடைப்பது மற்றும் O2 சிலிண்டர் தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் சேவை வழங்கப்பட்டது.

கொரோனா நோய்த்தொற்று இரண்டாம் கால கட்டத்தின்போது கொரோனா தொடர்புடைய அழைப்புகள் மூலம் 6,75,737 பயனாளிகள் பயன்.

104 மருத்துவ உதவி சேவை மையம் தற்கொலை தடுப்பு ஆலோசனை மூலமாக 3,86,171 நீட் தேர்வு மாணவர்களுக்கு ஆலோசனை.

3,98,925 TAEI பயனாளிகள் பயன்.

உக்ரைன் போரினால் நாடு திரும்பிய 1,524 மாணவர்களுக்கு மன அழுத்தம் நீங்க ஆலோசனை.

102 - இலவச தாய்சேய் நல ஊர்தி சேவை (JSSK)

18 ஜனவரி 2024 மற்றும் பிப்ரவரி 4, 2025 ஆகிய ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 49 இலவச தாய்சேய் நல ஊர்திகள் பொதுமக்களுக்காக தொடங்கப்பட்டு JSSK சேவையானது சீரான மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்பாடுகளுக்காக வழங்கப்பட்டது.

9,48,715 பிரசவித்த தாய்மார்கள் தாய்சேய் நல ஊர்திகள் மூலம் பயனடைந்துள்ளனர்.

38 மாவட்டங்களில் தற்போது 109 இலவச தாய்சேய் நல ஊர்திகள் இயக்கப்படுகின்றன.

14416 டெலி-மனஸ் நட்புடன் உங்களோடு - மனநல சேவை

"நட்புடன் உங்களோடு - மனநல சேவை - 14,416 உதவி எண்" - 24/7 கட்டணமில்லா மனநல உதவி எண் அனைத்து இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் NMHPஇன் டிஜிட்டல் அங்கமாகச் செயல்படும் விரிவான மனநலச் சேவைகளை வழங்குகிறது.

அனைவருக்கும் மனநல சுகாதார சேவைகளை துரிதமாக அடையச் செய்ய டெலி மனஸ் மையம்-2 நிறுவ முடிவு செய்யப்பட்டது. 2,00,882 பயனாளிகள் பயன்.

155377 – இலவச அமரர் ஊர்தி சேவை

38 மாவட்டங்களில் தற்போது 195 இலவச அமரர் ஊர்தி வாகனங்கள் இயக்கப்படுகின்றன. 5,89,375 இறந்தவர்களின் உடல்கள் இந்தச் சேவையின் மூலம் கொண்டு செல்லப்பட்டது.

தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம்

TRANSTAN – சாதனைகள்

தமிழ்நாடு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையம் ஒரு தானியங்கி இணையதளம் மற்றும் செயலியை உருவாக்கியது. பயன்பாட்டின் பெயர் "VIDIYAL" "விடியல்".

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.22 இலட்சம் வரை அனுமதி.

கோவிட் தொற்றுநோய்களின்போது கூட, 161 நன்கொடையாளர்களிடமிருந்து 1,097 உறுப்புகள் மற்றும் திசுக்கள் பயன்படுத்தப்பட்டன.

670 நன்கொடையாளர்களிடமிருந்து 290 இதயம், 347 நுரையீரல், 570 கல்லீரல், 1,157 சிறுநீரகம் என மொத்தம் 3,873 உறுப்புகள் மற்றும் திசுக்கள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் 13 திசு வங்கிகள் உள்ளன.

நன்கொடையாளர் பாராட்டு மற்றும் TRANSTAN ஆண்டு புத்தகம் 2023-2024 வெளியிடப்பட்டது,

மூளைச்சாவு அடைந்த உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதிச் சடங்குகளில் அரசு மரியாதை செலுத்தப்படுகிறது.

தேசிய அளவில்,தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக உறுப்பு தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டதற்காகவும் மற்றும் 2023இல் எட்டாவது முறையாகவும், ஒன்றிய அரசின் தேசிய விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.

மக்களைத் தேடி மருத்துவம்

"மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டம் 200 இலட்சம் பயனாளிகளைக் கடந்து, பொது சுகாதார சேவையில் மற்றொரு முக்கிய மைல்கல்லை அடைந்துள்ளது. திட்டத்தின் கீழ் மொத்தம் 2,17,97,498 பயனாளிகள் முதன்முறை சேவைகளையும் 4,40,22,676 பயனாளிகள் தொடர் சேவைகளையும் பெற்று பயன்.

நீரிழிவு பாத மருத்துவ மையம் நிறுவுதல்

537 மில்லியன் நபர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கு ரூ.1,45,73,060 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள வட்டார மருத்துவமனைகளில் தேசிய நல்வாழ்வு குழும நிதி ஒதுக்கீட்டின்படி ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் பாத மருத்துவ மையங்கள் நிறுவப்பட்டன.

திட்டத்தின் சாதனைகள்

"பாதம் பாதுகாப்போம் திட்டத்தின் கீழ் ரூ.2.34 கோடி செலவில் 2,336 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நீரிழிவு நோயாளிகளுக்கு பாத பரிசோதனை செய்ய போதிய வசதிகள் நிறுவப்பட உள்ளன.

100 அரசு மருத்துவமனைகளில் மற்றும் 35 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.3.12 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.

15 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், ரூ.17.46 கோடி செலவில் நீரிழிவு கால் அறுவை சிகிச்சை சேவைகளை வலுப்படுத்த தேவையான உபகரணங்கள் கொள்முதல் .

70,531 நீரிழிவு நோயாளிகளின் பாதங்கள் பரிசோதனை செய்யப்பட்டு 14,201 நோயாளிகளுக்கு தக்க சமயத்திலான இடையீட்டுகள் செய்யப்பட்டு கால் இழப்புகள் தடுக்கப்பட்டது.

தற்போது 15 மாவட்டங்களில் PLEX சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 4 புதிய மாவட்டங்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கப்படும்- இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.5,65,43,323 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

18 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் எலிபசை உட்கொண்ட 1,720 நோயாளிகளுக்கு PLEX சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 64.4 % உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.

மாரடைப்பு சிகிச்சை மற்றும் கட்டுபாட்டுக்கான திட்டத்திற்கு ரூ.27,19,27,384 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு மேற்கொள்ளப்பட்டு 1,19,889 நபர்கள் பயன்.

4 மருத்துவமனைகளில் (திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை மற்றும் ராமநாதபுரம்) அவசர இருதய சிகிச்சைக்கான கேத் லேப்கள் அனுமதி.

தமிழகம் முழுவதும் 25.01.2025 வரை 14,417 நோயாளிகளுக்கு அவசர சிகிச்சைக்காக "இருதய பாதுகாப்பு கூட்டு மருந்து" அளிக்கப்பட்டு, இருதய உயர் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

மகப்பேறு நலன்

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசியை பரிந்துரை செய்து செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

அனைத்து விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்தப்பட்டுள்ளது.

PICME.3.0 மேம்படுத்தப்பட்ட மென்பொருள் மூலம், அனைத்து மருத்துவமனைகளிலும் கர்ப்பகால சிக்கல்கள் உள்ள தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகள் இம்மென்பொருள் மூலம் கண்காணிக்கப்படுகின்றனர்.

மேம்படுத்தப்பட்ட PICME 3.0 மென்பொருளில் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் 102 அழைப்பு மையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு கர்ப்பகால சிக்கல்கள் உள்ள தாய்மார்கள் கண்காணிக்கப்படுகின்றனர்.

பிரசவிக்கும் மருத்துவமனையை திட்டமிடல் நெறிமுறையை கண்காணித்து செயல்படுத்த மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

மகப்பேறு இறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்காக மாநில பணிக்குழு குழு மற்றும் மாவட்ட பணிக்குழு குழு நிறுவப்பட்டுள்ளன.

அனைத்து பிரசவ மையங்களிலும் பிரசவிக்கும் மருத்துவமனையை திட்டமிட உதவி மையம் நிறுவப்பட்டுள்ளது.

மாநில மற்றும் மாவட்ட அளவில் மகப்பேறு இறப்பு தணிக்கை நடத்தப்படுகிறது.

அறுவை சிகிச்சை பிரசவ விகிதத்தைக் குறைக்கும் வகையில், சமூக மகப்பேறு மையம், கஸ்தூர்பா காந்தி மருத்துவமனையில் பிரசவத்திற்குப் பின் தாய்மார்களை பராமரிப்பதற்காக 3 பிரசவ அறைகள், ஒரு வகையறுக்கும் அறை மற்றும் நான்கு கண்காணிப்பு படுக்கை அறைகள் செலவு ரூ.51.95 இலட்சம் ஆகும்.

சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனையில் கருத்தரிப்பு மையம் திறப்பு. தேசிய தர உறுதி நிர்ணய (NQAS) சான்றளிப்புத் திட்டத்தின் கீழ், 10 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் (DHQH). 62 அரசு துணை மாவட்ட மருத்துவமனைகள் (SDH). 122 அரசு சமூக சுகாதார நிலையங்கள் (CHC). 456 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC). 120 அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC) மற்றும் 5 சுகாதார துணைமையங்கள் (HSC-HWC) என மொத்தம் 775 மருத்துவமனைகள் தேசிய அளவில் சான்றளிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 250 அரசு சமுதாய சுகாதார மையங்களில் செயல்படுத்தியதற்காக தேசிய அளவில் முதல் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 100 அரசு மருத்துவமனைகளுக்கு மேல் தேசிய தர உறுதி நிர்ணய திட்டம் (NQAS) செயல்படுத்தியதற்காக தேசிய அளவிலான இரண்டாம் நிலை விருதினை ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம் வழங்கியுள்ளது. 2023ஆம் ஆண்டில் - மாநிலத்தில் நோயாளிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை சிறப்பாக செயல்படுத்தியதற்காக விருது வழங்கப்பட்டது.

2024ஆம் ஆண்டில் - தமிழ்நாட்டிற்கு தேசிய தர உறுதி நிர்ணய திட்டத்தினை (NQAS) சிறப்பாக செயல்படுத்தி சான்றிதழ் பெற்றதற்காக 4 மருத்துவ நிலையங்களுக்கு விருது வழங்கப்பட்டது.

தேசிய நகர்ப்புற நலக் குழுமம் (NUHM)

பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவைகள்

128 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ சேவைகள் பிரிவு நிறுவப்பட்டுள்ளன. மருந்துகள் விநியோகம், மருத்துவ ஆய்வுகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட சேவைகளின் மூலம் 13,85,516 நபர்கள் பயனடைந்துள்ளனர். அனைத்து 128 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 25 வகையான பல்நோக்கு சிறப்பு மருந்துகளும் 17 வகையான சிறப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டு 13,85,516 பேர் பயன்.

நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

நகர்ப்புற மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக, ரூ.177 கோடி செலவில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை (U-HWCs) நிறுவுவதற்கான 500 மையங்கள் மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் துணைப் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டுவருகின்றன. 2,42,95,734 பயனாளிகள் 12 விரிவான சுகாதார சேவைகளை பெற்றுள்ளனர். மீதமுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்கான உள்கட்டமைப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

தேசிய வைரஸ் கல்லீரல் அழற்சி கட்டுப்பாட்டுத் திட்டம்

தேசிய வைரஸ் கல்லீரல் அழற்சி கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ், பதிவுசெய்யப்பட்ட 37,85,966 கர்ப்பிணி தாய்மார்களில், 36,01,449 தாய்மார்களுக்கு ஹெபடைடிஸ்-பி பரிசோதனை பரிசோதிக்கப்பட்ட 36,01,449 கர்ப்பிணித் தாய்மார்களில் 4,485 தாய்மார்களுக்கு ஹெபடைடிஸ்-பி தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டு பாதிக்கப்பட்ட 1,924 குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் பி இம்முனோகுளோபுலின் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து

"ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின்மூ லம் 16,253 மிக குறைவான ஊட்டச்சத்து குறைபாடு (SAM) உள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு, தேவையான ஊட்டச்சத்து வழங்கப்பட்டது.

தேசிய பள்ளி சிறார் நலத் திட்டம் (RBSK)

2021 முதல் 2025 வரை, பிறந்த குழந்தைகளைப் பரிசோதிக்கும் இடங்களில், புதிதாகப் பிறந்த 18,20,765 குழந்தைகளுக்கு பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளது.

RBSK திட்டத்தின் கீழ் பள்ளி ஆசிரியர்கள் 2,35,44,103 குழந்தைகளை பரிசோதித்து 1,24,36,491 குழந்தைகளை பரிந்துரைத்துள்ளனர், அவர்களில் 70,37,066 குழந்தைகள் RBSK குழுக்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 4,10,938 குழந்தைகள் 4 வித குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் DEIC க்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். 27,00,658 குழந்தைகள் பிறப்பு குறைபாடுகளுடன் பிறந்ததை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 9,547 குழந்தைகள் முக்கிய பிறப்பு குறைபாடுகளுடன் பிறந்ததை கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சைக்காக அடையாளம் காணப்பட்டனர். 8,345 குழந்தைகள் முக்கிய பிறப்பு குறைபாடுகளுக்காக அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (EMIS)

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சுகாதார தரவு உட்பட 18 வயது வரை உள்ள குழந்தைகளின் விவரங்கள் பள்ளிக் கல்வியின் (EMIS) மென்பொருளில் பதிவுசெய்யப்பட்டு பெயர் பட்டியல் பராமரிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநிலப் பார்வை இழப்பு தடுப்பு சங்கம்

9,63,726 நோயாளிகளுக்கு அவசரகால முற்றிய கண் புரை அறுவை சிகிக்சைகள் 93 அரசு மருத்துவமனைகள் மற்றும் 87 தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு செயற்கை IOL லென்ஸ் இத்திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டுள்ளது.

33 கண் வங்கிகள் மூலம் சுமார் 31,777 கண்கள் தானமாக பெறப்பட்டு கண் கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்பட்டு இணைய செயலி உருவாக்கியதின் மூலம் சென்ற ஆண்டு சுமார் 10,000 கண் கொடையாளர்கள் தங்கள் கண்களை தானம் செய்வதற்கு பதிவுசெய்துள்ளனர்.

பள்ளிசிறார்களுக்கு கண் பரிசோதனை செய்து சுமார் 7,83,396 மாணவர்களுக்கு இவலசமாக மூக்கு கண் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. முதியோர்களுக்கு கிட்ட பார்வை குறைபாடுகளை சரி செய்வதற்கு 50,000 கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் "மண்டல கண் சிகிச்சை மையம்" சுமார் ரூபாய் 16.5 கோடி செலவில் கட்டுமான பணிகள். சென்னை மண்டல கண் சிகிச்சை நிலையத்தில் ரூ.65.60 கோடி செலவில் இருநூறாண்டு விழா கட்டடம் கட்டப்பட்டு, ரூ.8 கோடி செலவில் உயர்தர உபகரணங்கள் வழங்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. 5 அரசு மருத்துவமனைகளில் புதிய கண் அறுவை அரங்கம் மற்றும் கண் வார்டுகள் ரூ.350 இலட்சம் செலவில் கட்டுமான பணிகள் நிறைவடைந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு அற்பணிக்கப்பட்டுள்ளது. 13 மாவட்டங்களில் ரூ.390 இலட்சம் செலவில் நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளளது. 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் 16 துணை மாவட்ட மருத்துவமனைகள் 3 கண் வங்கிகள் என மொத்தம் ரூ.785 இலட்சம் செலவில் கண் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நடமாடும் மருத்துவக் குழு (MMU)

நடமாடும் மருத்துவக் குழு (MMU) தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதிதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள் ரூ.70.02 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டன. 396 நடமாடும் மருத்துவக் குழு நடத்திய 6,39,603 முகாம்களில் 35,05,24,570 மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் கீழ் செய்த சாதனைகள்

அனைவருக்கும் நலவாழ்வு திட்டமானது (UHC) 4,848 துணை சுகாதார நிலையங்கள், 1,384 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 650 ஆயுஷ் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. நகர்ப்புறத்தில் 500 நகர்ப்புற மருத்துவ நலவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 7,842 சுகாதார நிலையங்களை அரசு வெற்றிகரமாக நலவாழ்வு மையங்களாக மாற்றியுள்ளது. 12 விரிவான சுகாதார சேவைகளை வழங்கி வருகிறது. செவிலியர் (Staff Nurse) தகுதிக்கு இணையான இடை-நிலை சுகாதார பணியிடங்கள் உருவாக்கப்பட்டு (MLHP) 4,848 துணை சுகாதார நிலையங்களில் புதிதாக நியமனம். அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ், டிசம்பர் 12, 2021 அன்று நடந்த 'சுதந்திர தின அமுத பெருவிழா' பிரச்சாரத்தில் தமிழ்நாடு தொற்றா நோய் பரிசோதனையில் முதலிடத்தையும், ஆரோகியத்தை மேம்படுத்தும் உடற்பயிற்சி வழங்குவதில் மூன்றாம் இடத்தையும் வென்றுள்ளது.

2022ஆம் ஆண்டு கிராமப்புறங்களில் மருத்துவ நலவாழ்வு நிலையங்கள் மூலம் அதிக எண்ணிக்கையிலான தொலைதூர மருத்துவ சேவையை (Tele Consultation) வழங்கியதற்காக மிகப்பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு 'முதல்' இடத்தை வென்றுள்ளது. "மக்கள் நலவாழ்வு குழு" (MNK)அமைக்கப்பட்டு, 8,713 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மனநலத் திட்டம்

DMHP குழு விழிப்புணர்வு உருவாக்கும் நடவடிக்கைகள் 2022-2025வரை 19.82 இலட்சம் பேர் DMHP கிளினிக்குகள் மூலம் சேவைகளைப் பெற்றுள்ளனர். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 25 புதிய இறப்பு மறுசீரமைப்பு மையங்கள் நிறுவப்பட்டு, 2023-ஏப்ரல் 2025வரை 2.97 இலட்சம் நோயாளிகள் போதைப்பொருள் மறுசீரமைப்பு சேவைகளைப் பெற்றுள்ளனர். அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் (ECRC) தற்போது மாநிலத்தில் 17 ECRC மையங்கள் செயல்பட்டு 4,315 வீடற்ற நபர்களை மீட்டுள்ளன.

டெலி-மனஸ்/நட்புதன் உங்களோடு மன நல சேவை என்ற முயற்சி தொடங்கப்பட்டு 14,416 என்ற கட்டணமில்லா எண் மூலம் 24/7 தொலைபேசி ஆலோசனையை வழங்குகிறது. மனநல சேவைகளை கோரி மொத்தம் 2,27,901 அழைப்புகளை இந்த பிரிவுகள் வழங்கியுள்ளன. 2023 ஆம் ஆண்டில் பெரிய மாநிலப் பிரிவில் அதிக எண்ணிக்கையிலான அழைப்புகளைப் பெற்றதற்காக தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டது.

மாணவர்களின் மன ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் வலுப்படுத்த, மனநல நல்லாதரவு மன்றம் தொடக்கம். விரிவான மனநல சேவைகளை வழங்குவதற்காக தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் (TNIMHANS), ரூ.40 கோடி மதிப்பீட்டில் கட்டுமானத்தில் உள்ளது.

குழந்தை நலம்

2008ஆம் ஆண்டில் 10ஆக இருந்த சிறப்பு பச்சிளங் குழந்தை பராமரிப்பு பிரிவுகள் (SNCU) எண்ணிக்கையை 2024-2025ஆம் ஆண்டில் 88ஆக உயர்வு.

விரிவான பாலூட்டுதல் மேலாண்மை மையங்கள் மற்றும் பாலூட்டுதல் மேலாண்மை அலகுகளை 24 அலகுகளிலிருந்து 45 அலகுகளாக உயர்த்தி 2023-2024ஆம் ஆண்டில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் முதல் பரிசை மாநிலம் வென்றது. இரத்த சோகை முக்த் பாரத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு இரண்டு இரண்டாம் நிலை பரிசுகளை பெற்றுள்ளது. 2022-2023ஆம் ஆண்டிற்கான "சிறந்த இரத்த சோகை இல்லா பாரதம் திட்டம்" பிரிவில் இரத்த சோகை வாரியர்ஸ் என ஒரு இரண்டாம் பரிசும், "5 வயதுக்குட்பட்ட ஆரோக்கியமான குழந்தைகள்" பிரிவில் இரத்த சோகை வாரியர்ஸ் என மற்றொரு இரண்டாம் பரிசும் பெற்றுள்ளது.

தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்தை சிறப்பிக்க கருத்தரித்தல் முதல் இரண்டு வயது வரை ஆரோக்கியமான 1,000 நாள்களை உறுதி செய்ய பெற்றோர் பயன்பாட்டு செயலி தொடங்கப்பட்டுள்ளது.

பிறவி குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிய,எளிய முறையில் மரபணு பரிசோதனைகள் இதுவரை, 4,659 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு 2,335 பேர் கூடுதல் சிகிச்சைக்காக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

குழந்தை இறப்பு விகிதத்தை (IMR) கணிசமாகக் குறைத்துள்ளது. தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதத்தை (IMR) 1,000 பிறப்புகளுக்கு 28ஆக இருந்த தேசிய சராசரியிலிருந்து (SRS) 1,000 பிறப்புகளுக்கு 13 ஆகவும், HMIS மாநில அறிக்கை 2024இன் படி 1,000 பிறப்புகளுக்கு 8 ஆகவும் கணிசமாகக் குறைத்துள்ளது.

புற்றுநோய் பரிசோதனை

மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அழைப்பிதழ் அட்டைகளை விநியோகிப்பதோடு, வீடுகளில் இருக்கும் பெண்களை பரிசோதனைக்கு முன்வருமாறு அறிவுறுத்துகின்றனர். கூடுதலாக, ரூ.3.32 கோடி ரூபாய் மதிப்புள்ள உபகரணங்கள் மற்றும் ஆய்வக வேதிப்பொருட்கள் சமூகம் சார்ந்த புற்றுநோய் கண்டறிதல் திட்டத்தை செயல்படுத்த 451 சுகாதார துணை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

18,25,126-க்கும் மேற்பட்ட நபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர், அவர்களில் 7,10,457 பேர் பரிசோதிக்கப்பட்டு 312 நபர்களுக்கு புற்றுநோய் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் ரூ.27 கோடி செலவில் எடுக்கப்பட்டு வருகின்றன.

உட்கட்டமைப்பு மேம்படுத்துதல்

15ஆவது நிதிக்குழு மானியங்கள் (15th Finance Commission Grants for Health)

2021-2022ஆம் நிதியாண்டில் ரூ.805.93 கோடி, 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.801.21 கோடி, 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.838.94 கோடி மற்றும் 2024-2025ஆம் நிதியாண்டில் ரூ.870.40 கோடி என மொத்தமாக ரூ.3,316.48 கோடி ஒதுக்கீடு. இந்த மானியங்களின் கீழ், மொத்தம் 2,251 உட்கட்டமைப்பு பணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவசர கால COVID-19 பதிலளிப்பு தயார்நிலைதொகுப்பு - II (ECRP-II) இந்தத்திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் நிதியாண்டில்மொத்தம் ரூ.799 கோடி நிதி ஒதுக்கீட்டில், மாநில பங்காக ரூ.266.32 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் விரைவான நடவடிக்கைகள் COVID-19 தொற்றுநோயை திறமையாக நிருவகிக்க உதவியுள்ளன.

இரண்டாம் நிலை சுகாதார நிறுவனங்களில் கட்டமைப்பு மேம்பாடு

19அரசு துணைமாவட்ட மருத்துவமனைகள்,அரசு மாவட்ட தலைமைமருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், 6 அரசு துணை மாவட்ட மருத்துவமனைகள் கூடுதல் வசதிகளுடன் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்வு.

இந்த திட்டத்திற்காக தேசிய நலவாழ்வு குழுமத்தின் (NHM) கீழ் மொத்தம் ரூ.1,018.85 கோடி நிதி ஒதுக்கீடு. மகப்பேறு மற்றும் குழந்தை மருத்துவத்தை மேம்படுத்த, 20 அரசு மருத்துவமனைகள் மற்றும் குழந்தைகள் நலப் (MCH) பிரிவுகள் உருவாக்கப்பட்டு இதற்காக ரூ.211.55 கோடி நிதி ஒதுக்கீடு. 2023-2024ஆம் நிதியாண்டில் 28 அரசு மாவட்ட மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்களை அமைப்பதற்காக ரூ.161 கோடி ஒதுக்கீடு. 2024-2025ஆம் நிதியாண்டில் 44 மாவட்ட மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்காக ரூ.154 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு திட்டம் (PMABHIM)

இத்திட்டத்தின் (PMABHIM) கீழ், தமிழ்நாட்டிற்கு ரூ.3,001.29 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ், 38 மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகங்கள் (DIPHLs), 4 நூறு படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (CCBs), 32 ஐம்பது படுக்கைகள் கொண்ட சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்க அனுமதி.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (MRB)

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 18,144 உதவி மருத்துவர்கள், 13,287 செவிலியர்கள், 10,343 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் உள்ளடக்கிய 41,774 பணியாளர்கள் தேர்வு செய்யப்படுள்ளனர்.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2024 -2025ஆம் ஆண்டில் 5 பதவிகளுக்கு மொத்தம் 3,703 பணியிடங்களை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டிற்கு 16 பணி பிரிவுகளில் 4,733 பணியிடங்களுக்கான தேர்வுகள் 2025 டிசம்பர் மாதத்திற்குள் முடித்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இலக்கு

அனைவருக்கும் உயர்கல்வி சமூக மேம்பாடு, தொழில் வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் சீராக வளர வேண்டும் என்பதே எமது அரசின் இலக்கு ஆகும். மூன்றும் ஒன்றாக வளர்வதுதான் சீரான வளர்ச்சி.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்




Register



வணிகவரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு



திரு. **பி.மூர்த்தி** அவர்கள்
மாண்புமிகு வணிகவரி மற்றும்
பதிவுத்துறை அமைச்சர்



ரூ.1,11,062.04 கோடி வரி வருவாய் கூடுதலாக வசூல்...

தமிழ்நாடு வணிகர் நலவாரியத்தில் மறைந்த உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல உதவித்தொகை ரூ.3 இலட்மாக உயர்வு...

1,865 முதல் சான்றிட்ட நகல் இணைய வழியில் விண்ணப்பிக்கும் திட்டம் அறிமுகம்...

பொதுமக்கள் வசதிக்காகப் புதிய 8 சார் பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்...

வணிகவரித் துறை

வருவாய் விவரங்கள் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு இல்லாமல்)

2020-2021ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த வரி வருவாயான ரூ.85,867.86 கோடியுடன் ஒப்பிடுகையில், 2021-2022ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.97,856.83 கோடி மொத்த வரி வருவாயில் கூடுதலாக ரூ.11,988.97 கோடியும், 2022-2023ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.1,17,435.48 கோடி மொத்த வரி வருவாயில் கூடுதலாக ரூ.31,567.62 கோடியும், 2023-24-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.1,26,005.92 கோடி மொத்த வரி வருவாயில் கூடுதலாக ரூ.40,138.06 கோடியும், 2024-2025ஆம் ஆண்டில் (ஜனவரி 2025 வரை) வசூலிக்கப்பட்ட ரூ.1,13,235.25 கோடி மொத்த வரி வருவாயில் கூடுதலாக ரூ.27,367.39 கோடியும், திரளாக கடந்த நான்கு ஆண்டுகளில் (ஜனவரி 2025 வரை) ஆக மொத்தம் ரூ.1,11,062.04 கோடி வரி வருவாய் கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் (ஜனவரி 2025 வரை) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வசூலில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம், அனைத்து இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தை விட ஒவ்வொரு மாதமும் 2 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதம் வரை அதிகமாக நிலைத்துள்ளது.

நிர்வாக சீர்திருத்தங்கள்

2022-2023ஆம் ஆண்டில், வரி விவர அறிக்கைகளைத் தாமதமாக தாக்கல் செய்பவர்களையும், அறிக்கைகள் தாக்கல் செய்யாதவர்களையும் வரி செலுத்த தவறியவர்களையும் தொலைபேசி மூலம் அழைத்து உரிய காலத்தில் வரி விவர அறிக்கைகளைத் தாக்கல் செய்திடவும் வரியினை செலுத்திடவும் நினைவூட்டுவதற்காக 40 நபர்களைக் கொண்ட 'அழைப்பு மையம்' ஒன்று தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக அமைக்கப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில், வணிகத்தை எளிதாக்க, வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தின் இயக்குநர் தலைமையில் "எளிய வணிகப்பிரிவு" நிறுவப்பட்டு, அதன் பொருட்டு இயக்குநர் பதவி கூடுதல் ஆணையராக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில், துறையின் வெட்டு விளிம்பு நிலையில் மனித வளத்தை அதிகரிக்கவும் 1,000 உதவியாளர் பணியிடங்களை, 840 துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் 160 வணிகவரி அலுவலர் பணியிடங்களாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், ஏழு புதிய நிர்வாகக் கோட்டங்களும் ஆறு புதிய நுண்ணறிவுக் கோட்டங்களும், உருவாக்கப்பட்டு துறை மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்த பட்சம் ஒரு வணிகவரி மாவட்டம் உருவாக்கும் நோக்கில், 13 புதிய வணிகவரி மாவட்டங்கள் வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக உருவாக்கப்பட்டன.

2023-2024-ஆம் ஆண்டில், நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பதவி உயர்வுகள் துறையின் பல்வேறு நிலைகளில் வழங்கப்பட்டு, 7 கூடுதல் ஆணையர்கள், 23 இணை ஆணையர்கள், 76 துணை

ஆணையர்கள், 96 உதவி ஆணையர்கள், 296 மாநில வரி அலுவலர்கள் மற்றும் 975 துணை மாநில வரி அலுவலர்கள் ஆகியோருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில், சேவைப் பிரிவில் துறை வாரியான பகுப்பாய்வு மேற்கொள்ளுதல், புதிய பதிவு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்றவற்றின் மீது கவனம் செலுத்த 3 புதிய பணியிடங்கள் மற்றும் 4 மறு அமர்த்துதல் பணியிடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள சேவை வரிப் பிரிவானது, சேவைகள் பகுப்பாய்வுப் பிரிவு என மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரி ஆய்வுக் குழு

2022-2023ஆம் ஆண்டில், வரி பகுப்பாய்வு மற்றும் துறை வாரியான பகுப்பாய்வு மேற்கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வருவாயை அதிகரிப்பதற்காக, வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் வரி ஆய்வுக் குழு (TRU) நிறுவப்பட்டுள்ளது.

இப்பிரிவினை பலப்படுத்த, ஒரு கூடுதல் ஆணையர் (வரி ஆய்வு) பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், கூடுதல் ஆணையர் (வரி ஆய்வு) அவர்களின் கீழ் இயங்கும் தரவு பகுப்பாய்வுப் பிரிவிற்கு 11 புதிய பணியிடங்கள் மற்றும் 24 மறு அமர்த்துதல் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (IGST) தீர்வுக்கான பகுப்பாய்வை வரி ஆய்வுக் குழு மேற்கொண்டு வருவதன் விளைவாக, ஏப்ரல் 2024 முதல் ஜனவரி 2025 வரை ரூ. 3,475.43 கோடி கூடுதல் வருவாயாகப் பெறப்பட்டுள்ளது.

தணிக்கைப் பிரிவு

2022-2023ஆம் ஆண்டில், மாநில கணக்காயர் தணிக்கை பத்திகளின் தீர்வு மற்றும் வரி செலுத்துவோர் மீதான GST தணிக்கையை மேற்பார்வையிட ஒரு கூடுதல் ஆணையரின் தலைமையில், வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் ஒரு தணிக்கைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் பல்வேறு அளவுருக்களைக் கருத்தில் கொண்டு 4151 இனங்கள் தணிக்கைக்கு தேர்வு செய்யப்பட்டு, 2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டில் (ஜனவரி 2025 வரை) ரூ.463.17 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

நுண்ணறிவுப் பிரிவு

நுண்ணறிவுப் பிரிவில் இருந்த சுற்றும் படைகளின் எண்ணிக்கை 53-இல் இருந்து 100-ஆக உயர்த்தியது, 100 புதிய வாகனங்கள் மற்றும் 100 ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) அலகுகள் (கையடக்க முனையங்கள்) சுற்றும் படைகளுக்கு வழங்கியது போன்ற பல்வேறு முனைவுகளின் காரணமாக 2020-2021ஆம் ஆண்டில் ரூபாய் 11.69 கோடியாக இருந்த சுற்றும் படைகளின் வருவாய் வசூல் 2023-2024 ஆண்டில் ரூ.238.94 கோடியாக உயர்ந்துள்ளது,

2022-2023ஆம் ஆண்டில் ரூ.3.06 கோடி நிதி அனுமதி வழங்கப்பட்டு சுற்றும் படைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், உறுதுணையாக செயல்படவும், ஒரு மாநில அளவிலான 'மைய கட்டுப்பாட்டு அறை' நிறுவப்பட்டுள்ளது.

சரக்குகள் வழங்காமல் விலைப் பட்டியல் மட்டும் வழங்கிய வரிசெலுத்துவோரை கண்டறியும் பொருட்டு, 14.03.2024 மற்றும் 02.07.2024 ஆகிய நாள்களில் மாநிலம் தழுவிய ஒரு நாள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில், ரூ.2,061.76 கோடி அளவிலான உள்ளீட்டு வரி வரவு கொண்ட 669 பதிவு பெற்ற நிறுவனங்கள் முகவரியில் இயங்காத நிறுவனங்களாக கண்டறியப்பட்டு, அவற்றின் மீது ஜனவரி 2025 வரை ரூ.1,836.64 கோடி தண்டத்தொகை விதிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

2023-2024ஆம் ஆண்டில், மாநிலத்திற்கு வருவாய் ஈட்டவும், வருவாய் வளர்ச்சியை மேம்படுத்தவும், வருவாய் இழப்பினை ஆய்வு செய்யவும், இந்திய தொழில்நுட்ப நிறுவனம்-ஹைதராபாத் (IIT-Hyderabad)-இன் பெரும் தரவுகளின் பகுப்பாய்வு தீர்வு சேவைகளை 07.12.2023 முதல் மூன்றாண்டுகளுக்கு பயன்படுத்துவதற்கு வணிகவரித் துறைக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் அந்நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் (MoU) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம், 2018-2019, 2019-2020 மற்றும் 2020-2021 வரிவிதிப்பு ஆண்டிற்கான வரிவிவர அறிக்கைகள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டங்களின் கீழ் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, ரூ.3,445.11 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், வருவாயினை அதிகரிக்கவும், தரவு பகுப்பாய்விற்கு உறுதுணையாகவும், மேற்பார்வையிடவும் வரி பகுப்பாய்வு/ துறை வாரியான பகுப்பாய்வை மேற்கொள்வதற்காகவும், கூடுதல் ஆணையர் (கணினி) பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில், பெரும் தரவுகளின் பகுப்பாய்வுத் திட்டத்தை செயல்படுத்திட வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் ஒரு 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் அல்லாத சரக்குகளை கையாளும் வணிகர்களின் பதிவு, வரி விவர அறிக்கைகளை தாக்கல் செய்தல் மற்றும் வரி செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளை எளிதாக்கிட 01.11.2024 முதல் மேம்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டு வரி இணைய முகப்பு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பெட்ரோல் மீதான வரி விகிதக் குறைப்பு

தமிழ்நாட்டில் பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 15% + ரூ.13.02 என்று இருந்த வரியை 13% + ரூ.11.52 ஆக 14.08.2021 முதல் குறைக்கப்பட்டு, பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டது.

சமாதானத் திட்டம்

வணிகர்கள் பயனடையும் வகையிலும் முந்தைய சட்டங்களின் கீழான வரி நிலுவைகளை வசூல் செய்திடவும், 16.10.2023 முதல் 31.03.2024 வரை தமிழ்நாடு (வரி நிலுவைகள் தீர்வு) சட்டம், 2023 (சட்டம் எண் 24/2023) என்னும் சமாதானத் திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ரூ.50,000 வரை நிலுவைத் தொகை உள்ள 1,15,805 இனங்களில் மொத்தக் கேட்புத் தொகையான ரூ. 142.57 கோடியை தள்ளுபடி செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.50,000 க்கும் மேல் நிலுவைத் தொகை உள்ள 13,118 இனங்களில் மொத்த கேட்புத் தொகையான ரூ.771.51 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு ரூ.249.53 கோடி வசூல் செய்யப்பட்டு உள்ளது, இது கடந்த ஆறு சமாதானத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் இதுவரை வசூலான அதிகபட்ச தொகையாகும்.

சமாதானத் திட்டத்தை தவிர, கடந்த நான்கு ஆண்டுகளில், பல்வேறு முந்தைய சட்டங்களின் கீழ் ரூ.171.83 கோடி அளவிலான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் 2,258 வணிகர்கள் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை மேற்கொள்ள 16.06.2021 முதல் இணையவழி வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் வாழ்நாள் உறுப்பினராவதற்கு பதிவுக் கட்டணம் ரூ.500 செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் 31.03.2022 வரை விலக்களிக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி 40,994 வணிகர்கள் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு, திருமண உதவி ரூ.10,000 மற்றும் விபத்துக் கால உதவி ரூ.25,000 ஆகிய இரு புதிய உதவி நலத் திட்டங்கள் 16.11.2021 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் மறைந்த உறுப்பினர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல உதவித் தொகையான ஒரு இலட்சம் ரூபாய், 30.05.2022 முதல், ரூ.3 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வணிகத் தலங்களில் ஏற்படும் தீ விபத்திற்கு வழங்கப்பட்டு வரும் தீ விபத்து இழப்பீட்டு உதவித் தொகையான ரூ.5,000, 30.05.2022 முதல் ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

உள்கட்டமைப்பு & கட்டடங்கள்

கடந்த நான்கு ஆண்டுகளில் (ஜனவரி 2025 வரை), உள்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், கட்டடங்களைக் கட்டுவதற்கும், புனரமைப்பு செய்வதற்கும் வணிகவரித் துறைக்கு ரூ.148.74 கோடி மொத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய முனைவுகள்

புதிதாக பதிவு பெற்ற வரி செலுத்துவோருடன் நல்லுறவை வளர்க்கும் விதமாகவும், போலி பட்டியல் வழங்குவோரை கட்டுப்படுத்தவும், ஏப்ரல் 2024 முதல் புதிதாக பதிவுசெய்த வரி செலுத்துவோருக்கு வரவேற்பு கடிதங்களை அனுப்பும் நடைமுறை ஜூலை 2024 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஜனவரி 2025 வரை, 57,136 வரிசெலுத்துவோருக்கு வரவேற்பு கடிதங்கள் அனுப்பப்பட்டதில், 3,374 முகவரியில் இயங்காத வரிசெலுத்துவோரின் பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்டும், 68 பதிவுச் சான்றுகள் இடைநீக்கம் செய்யப்பட்டும் உள்ளது.

முகவரியில் இயங்காத பதிவுபெற்ற நபர்கள் மற்றும் பதிவு பெறாத நபர்களை கண்டறியும் பொருட்டு, ஆகஸ்ட் 2024 முதல் தெரு தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முனைவின் விளைவாக, 4,03,516 வணிக இடங்களில் (ஜனவரி 2025 வரை) தெரு தணிக்கை செய்யப்பட்டு 2,316 வரிசெலுத்துவோர்கள் முகவரியில் இயங்காதவர்கள் என்றும், 3,859 பதிவு பெறாத நபர்கள் என்றும் தணிக்கையின்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் வருவாயைப் பெருக்கவும், வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வரி ஏய்ப்பைத் தடுக்கவும், நாட்டிலேயே முதல் முறையாக போன்பே, ரேஜர்பே, பேடிஎம், கூகுள்பே, ஃப்ரிசார்ஜ் போன்ற பண பரிவர்த்தனை திரட்டிகளிடமிருந்து (payment aggregators) தரவுகளைப் பெற்று பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இப்பகுப்பாய்வின் வாயிலாக, 2023-2024ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சத்திற்கும் மேலான வருவாய் பெற்றுள்ள 25,979 பதிவு பெறாத மற்றும் பதிவு இரத்து செய்யப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களில் தகுதியுடைய நபர்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் கொண்டு வர கள ஆய்வுப் பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது.

ஒன்றிணைந்த கட்டண இடைமுகம் (UPI) மற்றும் பற்று/வரவு அட்டைகள் (Debit/Credit cards) மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை செலுத்தும் முறை 07.11.2024 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறுதலில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்த, புதிய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி புதிய பதிவு பெறுவதற்கான விண்ணப்பங்களுக்கு ஆதார் சரிபார்ப்பு முறையும் பயோமெட்ரிக் சரிபார்ப்பு முறையும் இணைக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் 41 இடங்களில் 55 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஜனவரி 28, 2025 முதல் செயல்படத் தொடங்கியுள்ள இம்மையங்கள், 18 கோட்டங்களில் உள்ள 338 வணிகவரி அலுவலகங்களுடன் ஒத்திசைக்கப்பட்டு, வரி செலுத்துவோருக்கு தடையற்ற அணுகுதலை உறுதிப்படுத்திட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பின்புல தளத்துடன் (Back Office Portal) இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வணிகவரி கையேடுகளின் நான்காவது பதிப்பு 2019ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டபின், 31.03.2024 வரை புதுப்பிக்கப்பட்ட கையேடுகளின் ஐந்தாவது பதிப்பு (5 தொகுப்புகள்) நவம்பர் 2024இல் வெளியிடப்பட்டது.

பதிவுத்துறை

தட்கல் டோக்கன் முறை

பொதுமக்கள் பொதுவாக சுபமுகூர்த்தநாள்கள்/நேரங்களில் ஆவணப்பதிவு மேற்கொள்ள விரும்புகின்றனர். இதனை கருத்தில் கொண்டு முன்னுரிமை அளித்து பதிவுசெய்வதற்காக 2022-2023ஆம் ஆண்டில் தட்கல் முன்பதிவு டோக்கனுக்கு ரூ.5,000 செலுத்தி பதிவுசெய்வதற்கான திட்டத்தினை அரசு அறிவித்தது. இத்திட்டம் அதிக எண்ணிக்கையிலான ஆவணப்பதிவு நடைபெறும் 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.09.2022 அன்று முதற்கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை 12,792 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து ரூ.6.39 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பதிவு செய்யும்போது மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை:

ஆவணங்களைப் பதிவுசெய்வதில் முதலில் வருவோருக்கு முன்னுரிமை (First In First Out) முறையில் சார்பதிவாளர் அலுவலகங்களில் நேர வரிசை கிரமமாக பின்பற்றப்பட்டு ஆவணங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு வருகை தரும் மூத்த குடிமக்களின் நலன் கருதி பதிவிற்கு வருகை தரும் பொதுமக்களில் 70 வயதைத் தாண்டிய மூத்த குடிமக்கள் அலுவலகத்திற்கு வருகை புரிந்தவுடன் அவர்களது சுற்றுக்கு காத்திருக்காமல் உடன் பதிவு நடவடிக்கை முடித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இணையவழி அட்டவணை திருத்தம்

இணையவழி பதிவு செயல்முறையின் பலனை விரிவுபடுத்தம் செயல்முறையாக, வில்லங்கச் சான்று மற்றும் திருமண சான்றில் ஏதேனும் திருத்தம் தேவைப்படும் நேர்வில் எங்கிருந்தும் இணையவழியில் திருத்தம் கோர இயலும். அதன் பின்னர் சார்பதிவாளர் கூர்ந்தாய்வு செய்து அனுப்பும் நேர்வில் மாவட்டப்பதிவாளர்/ பதிவுத்துறைத் தலைவர் ஒப்புதலுக்குப் பிறகு, திருத்தங்கள் சான்றிதழ்களில் பிரதிபலிக்கும். இதன் முக்கிய அம்சம் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவுசெய்யும் பொதுமக்களின் நேரடி வருகையைத் தவிர்ப்பதோடு, பொதுமக்களின் பயணச் செலவு மற்றும் நேரத்தையும் குறைக்கிறது.

அரசு நிலங்களைப் பதிவுசெய்வதைத் தடுத்தல்

அரசு நிலங்கள், கோவில் நிலங்கள், வக்ஃப் போர்டு நிலங்கள், உள்ளாட்சிக்கு சொந்தமான நிலங்கள், நீர்நிலை நிலங்கள், இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான நிலங்கள் போன்ற தடைசெய்யப்பட்ட சொத்துக்கள் இணையத்தில் உள்ளிடப்பட்டால், ஆரம்ப நிலையிலேயே தானாகப் பதிவுசெய்வதைத் தடுக்கும் திட்டத்தினை 2022-2023இல் அரசு அறிவித்தது. அரசு நிலங்கள் போன்றவற்றை தானாகப் பதிவுசெய்வதைத் தடை செய்யும் வகையில் மென்பொருள், உருவாக்கப்பட்டது. STAR 2.0 மென்பொருள், நிலத்தின் விவரங்களை அந்நிலங்கள் அரசு நிலங்களா, இந்துசமய அறநிலையத்துறை நிலங்களா, வக்ஃப் நிலங்களா என வருவாய்துறையின் தமிழ்நிலம் மென்பொருளுடன் நிகழ் நேரத்தில் ஒப்பிட்டு பார்க்கப்படுகிறது. '0' மதிப்புள்ள அரசு நிலங்களைத் தானாகப் பதிவுசெய்வதைத் தடை செய்வதற்கான மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இத்திட்டம் 27.02.2023 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியம் தொடர்பான ஆவணங்களில் பெயர் மாற்றம்

ஆவணம் பதிவுசெய்த பிறகு, தற்போதைய ஆவணதாரரின் பெயர் மாற்றம் தொடர்பாக மின் வாரிய பெயர் மாற்றத்திற்கு தமிழ்நாடு மின் வாரியம், சொத்து வரி பெயர் மாற்றத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மெட்ரோ நீர் மற்றும் கழிவுநீர் பெயர் மாற்றத்திற்கு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியம் போன்ற பிற தொடர்புடைய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை எளிமைப்படுத்த துறையின் மென்பொருளில் தானியங்கி முறை பெயர் மாற்றத்திற்கான முதற்கட்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசதி நீண்ட செயல்முறையை எளிதாக்குதல் நேரத்தை சேமித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டது.

07.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னைப் மாநகராட்சி சொத்து வரி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியம் ஆகியவற்றில் ஆவணப்பதிவின்போதே பெயர் மாற்றத்திற்கான தானியங்கி விண்ணப்ப வசதியைத் தொடங்கி வைத்தார்.

கூடுதல் ஐபி கேமரா வாங்குதல் மற்றும் பதிவு அறையில் பொருத்துதல்

ஐபி கேமரா விரிவாக்கத் திட்டத்தின் கீழ் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் கூடுதலாக *3* ஐபி கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளது. அரசால் கூடுதலாக பதிவறையில் *2* ஐபி கேமராக்கள் பொறுத்த நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் பதிவுகளை சேதப்படுத்துதல் போன்றவைகளைத் தடுக்க சார்பதிவாளர் அலுவலக பதிவறையில் *2* ஐபி கேமராக்கள் பொருத்தும் திட்டம் *17.02.2024* அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்டது.

பெயர் அழைக்கும் டோக்கன் கருவி

சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப்பதிவிற்காக வரும் பொதுமக்கள் அவர்களின் பதிவிற்கான நிலையை அறிய வேண்டியுள்ளது. இதற்காக *2021-2022* ஆம் ஆண்டு மானியக் கூட்டத்தொடரில் பெயர் அழைக்கும் டோக்கன் கருவி பொருத்துவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு பொதுமக்கள் பயனடையும் விதமாக, பெயர் மற்றும் வில்லை எண் காட்சிப்படுத்தி ஒலிபெருக்கி மூலம் அழைக்கும் திட்டம் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் பொருத்தப்பட்டுள்ளது.

அரசாணை எண். *151*, நாள் *17.11.2021* மூலம் ரூ.*2.45* கோடியும், அரசாணை எண். *57* நாள் *29.05.2023*. மூலம் ரூ.*3.63* கோடியும் அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் ரூ.*3,31,59,880/-* செலவில் எல்காட் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது,அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் பெயரிட்டு அழைக்கும் கருவிகள் நிறுவப்பட்டு *29.02.2024* முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1865ஆம் ஆண்டு முதல் சான்றளிக்கப்பட்ட நகல் இணையதளத்தில் பெறுவது

கணினிமயமாக்கல் காலத்திற்கு முன்னர் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதை எளிதாக்குவதற்காக, அதாவது துறை தொடங்கப்பட்ட *1865*ஆம் ஆண்டு முதல் பதிவுசெய்யப்பட்ட புத்தக தொகுதிகளில் பராமரிக்கப்படும் அனைத்து ஆவணங்களும் ஒளிவருடல் செய்யப்பட்டு மத்திய சேவையகத்திற்கு மாற்றப்பட்டது. *1865* முதல் சான்றிட்ட நகல் இணையவழியில் விண்ணப்பிக்கும் திட்டம் *2023-2024*ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் *17.02.2024* அன்று தொடக்கி வைக்கப்பட்டது.

நாளது வரை *18,98,435* ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணையவழியில் வழங்கப்பட்டுள்ளன.



ஆவணத்தின் எழுதிக்கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் கைவிரல் ரேகை/கருவிழி ஆதார் விவரங்களுடன் சரிபார்த்தல்

ஒப்புதல் அடிப்படையிலான ஆதார் அடையாளம் முறை செயல்படுத்தப்படுகிறது. ஆவணத்தைப் பதிவுசெய்யும்போது, ஆவணம் எழுதிக் கொடுப்பவர் மற்றும் வாங்குபவரின் கைவிரல் ரேகை எடுக்கப்படுகிறது. அவர்களின் கைவிரல் ரேகை அவர்களின் ஆதார் விவரங்களுடன் நிகழ்நேர அடிப்படையில் ஒப்பிட்டு சரிபார்ப்பது ஆள்மாறாட்டத்தைத் தடுக்கிறது. கைவிரல் ரேகை பொருந்தாத நிகழ்வுகளுக்கு, ஆதார் விவரங்களை கருவிழியுடன் ஒப்பிடுவது பின்பற்றப்படுகிறது. இந்த ஒப்புதல் அடிப்படையிலான ஆதார் அடையாளத் திட்டம் அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை UIDAI-ன் அங்கீகரிக்கப்பட்ட பயனர் நிறுவனம் மற்றும் இந்தத் துறை துணை-அங்கீகார பயனர் நிறுவனம் ஆகும்.

சிறிய உரலியைப் பயன்படுத்தி பதிவுசெய்பவர்களின் கைபேசி எண்ணுக்கு வில்லங்கச் சான்று விவரங்களை அனுப்புதல்

இந்தத் துறை CSDE-வாடிக்கையாளர் திருப்தி வழங்கல் அனுபவம் மற்றும் மின் ஆளுமைப் பயன்பாட்டில் முன்னோடியாக உள்ளது. சொத்துப் பதிவில் வில்லங்கச் சான்று முக்கியமானது. எனவே விரைவான மற்றும் துரிதமான சேவை வழங்கலுக்காக 2023-2024ஆம் ஆண்டில் சிறிய உரலியைப் பயன்படுத்தி பதிவு செயல்முறை முடிந்த மறுநாளே எழுதிப் பெறுபவர் வசதிக்காக அவரது கைபேசி எண்ணுக்கு சொத்தின் வில்லங்கச் சான்று விவரங்கள் அனுப்பும் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் 19.02.2024 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது. குடிமக்கள் தங்கள் கைபேசியில் உள்ள வில்லங்கச் சான்று விவரங்களை பதிவிறக்கம் செய்து சரிபார்க்கலாம். அசல் பத்திரத்தை ஒப்பிடும்போது வில்லங்கச் சான்றில் ஏதேனும் திருத்தம் தேவைப்பட்டால், இணையவழியில் குடிமக்கள் "அட்டவணை திருத்த மனு" மூலம் விண்ணப்பிக்கலாம்.

நம்பிக்கை இணையம் தொழில்நுட்பம்

முதற்கட்டமாக 01.05.2023 முதல் பதிவுசெய்யப்பட்ட அனைத்து டிஜிட்டல் ஆவணங்களுக்கும் 13.06.2023 முதல் நம்பிக்கை இணையம் தொழில்நுட்பம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையின் கீழ் மின்னணு மயமாக்கப்பட்ட ஆவணங்களில் நேர முத்திரைகள் இருப்பதால், பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மை திருத்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மோசடிகளுக்கு இடமளிக்காமல் உறுதி செய்யப்படுகிறது. டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

நம்பிக்கை இணையம் தொழில்நுட்பத்தின் வாயிலாக இதுவரை 1.06 கோடி ஆவணங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

மின்னணு முத்திரைத் தாள்

முத்திரைத் தீர்வை செலுத்துவதற்கான மாற்று முறையாக M/s SHCIL மூலம் மின்னணு முத்திரை தீர்வை செலுத்தும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் 27.05.2010 அன்று சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. ஒரு மின்னணு முத்திரை தாள் எந்த மதிப்புக்கும் பயன்படுத்தலாம். மின்னணு முத்திரையின் கீழ், நீதித்துறை மற்றும் நீதிசாரா மின்னணு முத்திரைத் தாள்கள் வழங்கப்படுகின்றன. பல தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் M/s SHCIL இன் அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையமாக செயல்படுகின்றன. இத்திட்டத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளித்து, மீதமுள்ள 456 சார் பதிவாளர் அலுவலகங்களில் மின்னணு முத்திரை வசதிகளை 0.50% தரகு தொகையுடன் விரிவுபடுத்தியது (அனைத்து வரிகளும் தவிர), தற்போது, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு முத்திரை தாள்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நிதி ஆண்டுகளில் ரூ.1,486.23 கோடி மதிப்புள்ள மின்னணு முத்திரை தாள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தகவல் மையம்

பதிவுத்துறையின் சேவைகள் தொடர்பான தெளிவுரைகள் பதிவு குறித்த விவரங்கள் ஆகியவற்றை யூடியூப் காணொளி, புலனம் மூலம் வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. பதிவுத்துறை இணையதளமான www.tnreginet.gov.in இத்துறையால் வழங்கப்படும் சேவைகளை விளக்கும் காணொளிகள் உள்ளன. இத்திட்டத்தினை 2022-2023 ஆம் ஆண்டில் அரசு அறிவித்து, ரூ.16,93,300/- (தொடரா செலவினம்) மற்றும் ரூ.7,25,700/- (தொடரும் செலவினம்) -க்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. யூடியூபில் 15 வீடியோக்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. வாட்ஸ்அப் சாட்போட்டை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ஒருங்கிணைந்த சேவை மையம்

பதிவுச் சேவைகளான வழிகாட்டு மதிப்பு அறிதல், இணையவழி கட்டணங்கள் செலுத்துதல், முன்பதிவு வில்லைகள் பதிவுசெய்தல் ஆவணங்களை உருவாக்குதல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சோதனை அடிப்படையில் ஒருங்கிணைந்த சேவை மையத்தை அமைப்பதற்கு, ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் தெரிவு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுடன் ஒருங்கிணைந்த சேவை மையத்தை அமைக்க சென்னை (நொளம்பூர்) மற்றும் கோயம்புத்தூரில்(கணபதி) இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT) மூலம் மையங்களுக்கு கணினி மற்றும் கணினி பாகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1975க்கு முன் அட்டவணை II பதிவுகள் மின்னணு மயமாக்கல்

1865 முதல் சட்டப்படி மதிப்புமிக்க ஆவணங்களின் களஞ்சியமாக இந்தத் துறை உள்ளது. பொதுமக்கள் 1950 முதல் 1974 வரையிலான காலத்திற்கு அதிகமான வில்லங்கச் சான்றுகள் விண்ணப்பிக்க விரும்புகிறார்கள். தற்போது, 1975க்கு முந்தைய காலத்திற்கான வில்லங்கச் சான்று கைமுறையாக வழங்கப்படுகிறது. 01.01.1950 முதல் 31.12.1974 வரையிலான காலத்திற்கு 2,22,81,112 அட்டவணை II பதிவுகளை ரூ.36.58 கோடி செலவில் மின்னணு மயமாக்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

ஸ்டார் 3.0 திட்டம்

தற்போதைய தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கு முறையைப் பயன்படுத்திகணினிமயமாக்கலில்அடுத்தகட்டசேவைகளுக்காக,ஸ்டார்2.0இன்மறுசீரமைப்பு முன்மொழியப்பட்டு2023-2024ஆம்ஆண்டில்அறிவிக்கப்பட்டது.5ஆண்டுSTAR3.0திட்டத்திற்கு ரூ.323.45 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆலோசகர் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆவணம் மற்றும் திருமணப் பதிவின் வீடியோவை புலனம் மூலம் அனுப்புதல்

ஐபி கேமரா திட்டத்தின் கீழ், ஆவணங்கள்/திருமணப் பதிவுசெய்பவர்களுக்கு நெகிழ்வட்டுக்கள் வழங்கப்படுகின்றன. கூடுதல் வசதியாக, நெகிழ்வட்டுடன் கூடுதலாக புலனம் மூலம் பதிவு பொதுமக்களுக்கு காணொளி அனுப்பும் திட்டம் 2023-2024 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி இயக்குநரகம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம் ஆகியவற்றில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்ப வசதி

ஆவணத்தை பதிவுசெய்யும்போது பேரூராட்சி இயக்குநரகம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம் ஆகியவற்றில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்ப வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய சொத்தினை வாங்கிய உரிமையாளர்கள் தாங்கள் வாங்கிய சொத்தின் விகிதாச்சாரப்படி திரும்ப செலுத்தவும், மேலும் ஆவணங்களைப் பதிவுசெய்ய அனுமதித்தல்

ஏற்கெனவே பதிவுசெய்து திரும்பிய ஆவணங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் தொடர்பாக உறுதிசெய்யப்பட்ட தணிக்கை மொத்தப் பரப்பில் இருந்து அடுத்தடுத்து வாங்குபவருக்குச் சொந்தமான சொத்தின் அளவிற்கு விகிதாசாரப்படி இழப்பீட்டை கணக்கீடு செய்து அதனை திரும்ப செலுத்தும் நிலையில் சொத்தின் விகிதாச்சார அளவு தொடர்பான அடுத்த ஆவணங்களைப் பதிவுசெய்ய அனுமதிக்கவும், இவ்வாறு உறுதிசெய்யப்பட்ட இழப்பு தொடர்பாக அடுத்தடுத்து வாங்குபவர்களுக்கு அரசு பெரும் நிவாரணம் அளித்து,அவர்களின் அடுத்த ஆவணங்களை தங்களுடைய சொத்தின் விகிதாச்சார அடிப்படையில் இழப்பை மட்டும் வசூலிக்க அனுமதித்துள்ளது.

மின்னணு வழிமுறைகள் மூலம் பத்திரங்களைப் பதிவுக்கு தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்வது குறித்து பதிவுச் சட்டம், 1908இன் பிரிவு 32, 34, 35 மற்றும் 69 க்குத் திருத்தம்.

பதிவுச் சட்டம், 1908இல் தேவையான திருத்தங்கள் மற்றும் மின்னணு வடிவத்தில் சில கட்டாயமாகப் பதிவுசெய்யக்கூடிய ஆவணங்களை ஆன்லைனில் பதிவுசெய்வது தொடர்பான விதிகளில், எழுதிக் கொடுப்பவர்கள், வாங்குபவர்கள், சாட்சிகள் ஆகியோர்கள் நேரடியாக சார்பதிவகத்திற்கு வந்து பதிவுக்கு தாக்கல் செய்வதிலிருந்து பதிவுச் சட்டத்தின் பிரிவு 32, 34 மற்றும் 35 இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மின்னணு வடிவத்தில் இணைய வழியில் பதிவுசெய்யக்கூடிய ஆவணங்களின் பட்டியல்

வங்கிகள் எழுதிக்கொடுக்கும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு

பொது அதிகார இரத்து ஆவணங்கள்

சிவில் நீதிமன்றம் மற்றும் கடன் தீர்ப்பாணையம் எழுதிக்கொடுக்கும் விற்பனைச்சான்று

வங்கிகளில் SARFAESI சட்டத்தின்படி எழுதிக்கொடுக்கப்படும் விற்பனை ஆவணம்

அரசுக்கு/உள்ளாட்சி/ ஆணையத்திற்கு எழுதிக்கொடுக்கப்படும் தான ஆவணங்கள்

அரசுக்கு/உள்ளாட்சி/ ஆணையத்திற்கு எழுதிக்கொடுக்கப்படும் குத்தகை ஆவணங்கள்

வங்கிகளுக்கு செயல்படுத்தப்படும் அடமான ஆவணம்

அரசு ஊழியர்கள் அரசுக்கு எழுதிக்கொடுக்கும் அடமான ஆவணம்

இந்தியாவிற்கு வெளியே எழுதிக்கொடுக்கும் பொது அதிகார விற்பனை ஆவணம்

வங்கியில் ஏற்கெனவே எழுதிக் கொடுக்கப்பட்ட உரிமை ஆவணங்களின் ஒப்புடைப்பு தொடர்பான ரசீது ஆவணங்கள்

வங்கியில் ஏற்கெனவே எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான தொடர்பான ரசீது ஆவணங்கள்

அரசு ஊழியர்களால் அரசுக்கு ஏற்கெனவே எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான தொடர்பான ரசீது ஆவணங்கள்

அரசு ஊழியர்களால் அரசுக்கு ஏற்கெனவே எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான தொடர்பான மறுவிக்கிரைய ஆவணங்கள்

அரசுக்கு/உள்ளாட்சி/ஆணையத்திற்கு ஏற்கெனவே எழுதிக்கொடுத்த குத்தகை ஆவணங்களுக்கு மீள ஒப்படைப்பு செய்யப்படும் குத்தகை ஒப்படைப்பு ஆவணங்கள்

அரசுக்கு/உள்ளாட்சி/ ஆணையத்திற்கு ஏற்கெனவே எழுதிக்கொடுத்த குத்தகை ஆவணங்களுக்கு குத்தகை மாற்றம் செய்யப்படும் ஆவணங்கள்

குடியிருப்பு நோக்கத்திற்காக எழுதிக்கொடுக்கப்படும் வாடகை ஒப்பந்தம் ஆவணங்கள், குத்தகை ஆவணங்கள், உள்வாடகை ஒப்பந்தம்/குத்தகை ஆவணங்கள் ஆகியவை 5 வருட காலம் வரை பதிவுக் கட்டணங்கள் 4% முதல் 2% வரை குறைப்பு

விற்பனை, தானம், பரிவர்த்தனை மற்றும் குடும்பம் நபர்கள் அல்லாத செட்டில்மெண்ட் பத்திரங்களின் பதிவு தொடர்பான பதிவுக் கட்டணத்தை 4% லிருந்து 2% ஆக குறைத்துள்ளது.

புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம்

நிருவாகக் காரணங்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மதுரை மண்டலத்தைப் பிரித்து இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு 29.12.2022 முதல் இயங்கி வருகிறது. மேலும் சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து செங்கல்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு 27.04.2023 முதல் இயங்கி வருகிறது.

புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்

பொது மக்களின் நலன் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்காக ரூ.3.17 கோடி தொடர் செலவினத்தில் திருவள்ளூர், திருப்பத்தூர், பெரம்பலூர், திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் புதிதாக பதிவு மாவட்டங்கள் உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட 5 பதிவு மாவட்டங்களும் 26.04.2022 முதல் இயங்கி வருகிறது.

மேலும் தென்சென்னை பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதிதாக தாம்பரம் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதிதாக கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு) பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு 27.04.2023 முதல் இயங்கி வருகிறது.

புதிய தணிக்கை அலகுகள் உருவாக்கம்

சேலம் (கிழக்கு), கோபிசெட்டிபாளையம் மற்றும் காரைக்குடி பதிவு மாவட்டங்களில் புதிய தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் தோற்றுவிக்க ரூ.80.33 இலட்சம் தொடர் செலவினத்தில் உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு சேலம் (கிழக்கு) தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகம் 12.07.2023 முதலும், கோபிசெட்டிபாளையம் தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகம் 14.07.2023 முதலும் மற்றும் காரைக்குடி தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகம் 17.07.2023 முதலும் இயங்கி வருகின்றன.

புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்

கடந்த நான்கு ஆண்டுகளில் 8 சார்பதிவாளர் அலுவலகங்கள் பொது மக்களின் வசதிக்காக புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

சார்பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைப்பு

சார்பதிவாளர் அலுவலக எல்லைகளை வருவாய் மாவட்டங்களுக்கு ஏற்ப சீரமைத்துக் கொள்ள அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. 2022-2023ஆம் ஆண்டில் மதுரை வருவாய் மாவட்டத்தில் மதுரை (தெற்கு) மற்றும் மதுரை (வடக்கு) பதிவு மாவட்டங்களில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள், வருவாய் வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைப்பு

2021-2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில், வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் சீரமைக்கப்படும் என்று அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக அரசாணை பிறப்பிக்கப்பட்டு மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, விருதுநகர், பாளையங்கோட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் அரியலூர் பதிவு மாவட்டங்களில் உள்ள குக்கிராமங்கள் சம்பந்தப்பட்ட வருவாய் கிராமங்களுடன் இணைப்பதற்கான அரசாணைகள் பெறப்பட்டு வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமையும் வண்ணம் சீரமைக்கப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இந்திய கிறித்துவ திருமண சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்களால் வழங்கப்படுதல்

கிறித்துவ பொதுமக்களின் நலன் கருதி, இந்திய கிறித்துவ திருமணச் சான்று வடிப்புகளின் உண்மை நகல்களை வழங்குவதற்கான அதிகாரம் பதிவுத்துறையில் உள்ள 11 மண்டல துணைப்பதிவுத்துறை தலைவர்களுக்கு அரசாணை வழங்கப்பட்டு, இத்திட்டம் 26.04.2022 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்திய கிறித்துவ திருமண பதிவு மேற்கொள்ள புதிய வசதி

இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872இன்படி இந்திய கிறித்துவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் கிறித்துவ குருமார்களும் மற்றும் திருமணத்தை நடத்தி வைக்க அரசு உரிமம் பெற்ற உரிமதாரர்களும் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருமணத்தைப் பதிவுசெய்து கொள்வதற்கான புதிய நடைமுறை 28.09.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் அலுவலகத்திற்கு வருகை புரியாமல் இணையவழி திருமணச் சான்றுகளின் உண்மை வடிப்புகளை பெற்று கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம் 2022

ஆவண எழுத்தர்களின் நலனுக்காக, ஓய்வுதிய பலன், விபத்துக்கால மரண பலன். நிரந்தர/ பகுதி ஊன பலன், இயற்கை மரண பலன், மகப்பேறு பலன், ஈமச்சடங்கு உதவி பலன் மற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி பலன், உறுப்பினர்களுக்கு மூக்குக்கண்ணாடி பலன் போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்திட ஒரு நல நிதியம் அமைக்கப்பட்டது. இதற்காக தமிழ்நாடு ஆவண எழுத்தர் நலநிதியச் சட்டம் 2022 மற்றும் அதன் விதிகள் இயற்றப்பட்டது.

அதன்படி ஆவண எழுத்தர்கள் மற்றும் அன்னார்களின் குடும்பத்தின் நலனுக்காக தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நலநிதியம் 02.12.2022 முதல் அரசால் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் உறுப்பினர்களாக சேர விருப்பம் தெரிவிக்கும் ஆவண எழுத்தர்களிடம் வசூலிக்கப்படும் நுழைவுக்கட்டணம் ரூ.1,000 மற்றும் பதிவுத்துறையில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரூ.10 வீதம் தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நலநிதியத்திற்கு பங்களிப்பாக வசூலிக்கப்படுகிறது. ஆவண எழுத்தர் நலநிதியத்தின் நிதியானது தமிழ்நாடு ஆவண எழுத்தர் நலநிதியக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஆவண எழுத்தர் நலநிதியக் குழுவானது பதிவுத்துறை தலைவரை அலுவல் சாரா தலைவராகவும், கூடுதல் சீட்டுப்பதிவாளரை அலுவல் சாரா செயலாளராகவும், பதிவுத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளரை (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலை) அலுவல் சாரா பொருளாளராகவும், பதிவுத்துறை பயிற்சி நிலைய இயக்குநர். (துணைப் பதிவுத்துறை தலைவர் நிலை), பதிவுத்துறை தலைவர் அலுவலக கணக்கு அலுவலர் ஆகியோரை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் மற்றும் ஆவண எழுத்தர்கள் சங்கத்திலிருந்து அரசால் நியமிக்கப்படும் 4 நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் நிறுவப்பட்டுள்ளது.

31.01.2025 அன்றுள்ளபடி மொத்தமுள்ள 4,618 ஆவண எழுத்தர்களில் 3,075 ஆவண எழுத்தர்கள் நிதியத்தின் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 2024-2025ஆம் (ஜனவரி வரை) நிதியாண்டில் சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் மூலம் ரூ.278.18 இலட்சம் தமிழ்நாடு ஆவண எழுத்தர் நலநிதிய பங்களிப்பாக வசூலிக்கப்பட்டுள்ளது.

புதிய துறை அலுவலகக் கட்டடங்கள்.

ஜூன் 2021 முதல் ஜனவரி 2025 வரை பதிவுத் துறையில் 45 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களும், 3 ஒருங்கிணைந்த மாவட்டப் பதிவாளர் (நிருவாகம் மற்றும் தணிக்கை) கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.











EMERGENCY EXIT



போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம் மற்றும் மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு



திரு. **எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள்
மாண்புமிகு போக்குவரத்து
மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்



கடந்த நான்காண்டுகளில் மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் 662.68 கோடி பயண நடைகள் மேற்கொள்ளப்பட்டு மகளிர் பயன்...

ரூ.3,905.23 கோடி ஒதுக்கீட்டில் 8,000 புதிய பேருந்துகள் கொள்முதல்...

ரூ.171.05 கோடி ஒதுக்கீட்டில், அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களின் 14 ஆவது ஊதிய ஒப்பந்தம் ...

முழுமையாக நிறைவேற்றம்... பணியின்போது இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்குக் குடும்பநல நிதி ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு...

மின்னகம் என்ற மாநில அளவிலான மின் நுகர்வோர் சேவை மையம் மூலம் 34,24,677 புகார்களுக்குத் தீர்வு...

விடியல் பயணம் மகளிருக்கான கட்டணமில்லாப் பயண வசதி

விடியல் பயணத் திட்டம் மகளிரின் வாழ்வில் விளக்கேற்றும் திட்டம் என்று அனைவராலும் பாராட்டப்படுகிற திட்டம்.

விடியல்பயணத்திட்டம்மூலம்மகளிர்பயணக்கட்டணமில்லாமல், சுயமாக பயணித்து தங்களின் குடும்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுக்க முடிகின்றன. இது அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் ஆய்வுகளின் மூலம், மகளிர் பயணிகள் மாதாந்திரச் செலவில் ரூ.888/- சேமிக்கின்றனர்.

31.03.2025 வரையில் 662.68 கோடி பயண நடைகள் மகளிரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாதாரண நகரப் பேருந்துகளில் மகளிர் மற்றும் திருநங்கைகள், 40 சதவிகிதம் மேல் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கு கட்டணமில்லா பயண வசதி.

மகளிர்க்காக சாதாரணக் கட்டணப் பேருந்துகள் இளஞ்சிகப்பு (பிங்க் நிறம்) வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

9,622 நகரப் பேருந்துகளில், 7,367 பேருந்துகள் சாதாரணக் கட்டண சமவெளி நகரப் பேருந்துகளாக 5,602 வழித்தடங்களில் தினசரி இயக்கப்படுகின்றன. இது மொத்த நகரப் பேருந்துகளில் 77 % ஆகும்;

487 மலைப்பகுதி / பகுதி மலைப்பகுதி பேருந்துகளில், 169 சாதாரண கட்டண மலைப்பகுதி / பேருந்துகளாக 110 வழித்தடங்களில் தினசரி இயக்கப்படுகின்றன.

5,712 வழித்தடங்களில் தினசரி 7,536 பேருந்துகள் தினசரி இயக்கப்படுகின்றனர்.

ஒரு நாளைக்கு 58.61 இலட்சம் மகளிர் பயணிக்கின்றனர். சாதாரணக் கட்டண பயணிகளில் மகளிர் பயணிகளின் சதவிகிதம் 66.43 ஆகும்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்கள் சராசரியாக நாளொன்றிற்கு 52,792 நபர்கள் பயணிக்கின்றனர்.

மூன்றாம் பாலினத்தவர்கள் 3,169 நபர்கள் பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்கள் மீண்டும் இயக்குதல் 420 புதிய வழித்தடங்களில், 805 பேருந்துகள் புதிய வழித்தடங்களிலும் / வழித்தடம் நீட்டித்தல் மூலம் இயக்கப்படுகிறது.

542 வழித்தடங்களில், 664 பேருந்துகள் மூலம் நிறுத்தப்பட்ட பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலைய இணைப்புப் பேருந்து

மெட்ரோ இரயில் பயணிகள், விரைவாக பயணம் மேற்கொள்ள மாநகர் போக்குவரத்துக் கழக இணைப்பு சிற்றுந்துகள், சென்னையில் 30 மெட்ரோ இரயில் நிலையங்களை இணைத்து 56 சிற்றுந்து சேவைகள் தொடக்கம். விழாக்காலங்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்



விழாக் காலங்களில் சென்னையிலிருந்து, முக்கிய நகரங்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகிறன்றன.

சென்னை மற்றும் முக்கிய நகரங்களில், முக்கிய இடங்களிலிருந்து காலை முதல் நள்ளிரவு வரை கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

விழாக்காலங்களில் பேருந்து மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களை அறிந்து கொள்ள மக்கள் கூடும் இடங்களில் தகவல்மையங்கள் மற்றும் 24 மணிநேர பயணிகள் குறைதீர்ப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் குறை தீர்க்கும் வசதி

ஒருங்கிணைந்த கட்டணமில்லா தொலைப்பேசி எண் (149) அறிமுகபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக முன்பதிவு செய்யும் பயணிகளின் கைபேசிக்கு Feed back இணைப்பு பயணத்தின் முன்பாக அனுப்பப்படும். இதன் மூலம் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணவர்கள் பேருந்து படிக்கட்டில் பயணம் செய்வதை தவிர்க்க, பள்ளி அலுவலர்களுடன், Whatsapp Group அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்ய மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் Grievance Whatsapp Group ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்த தொகை

கடந்த 4 ஆண்டுகளில் மகளிர் பேருந்துகளுக்கான பயணக் கட்டண இழப்பீடாக ரூ.10,160.6260 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மகளிர் பேருந்துக்கான பயணக் கட்டண இழப்பீடாக ரூ.10,160.6260 கோடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கி உள்ளது. 2025-2026 நிதி ஆண்டிற்கு, நிதிநிலை அறிக்கையில் ரூ.3,600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் டீசல் செலவு அதிகரிப்பு விலையை ஈடு செய்ய இழப்பீடாக ரூ.6,284.2453 கோடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கி உள்ளது. 2025-2026 நிதி ஆண்டிற்கு நிதிநிலை அறிக்கையில் ரூ.1,857 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் பள்ளி கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் கட்டணமில்லா

பயணத்திற்கு இழப்பீடாக ரூ.5,807.0679 கோடியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கி உள்ளது. 2025-2026 நிதி ஆண்டிற்கு நிதி நிலை அறிக்கையில் ரூ.1,782 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

புதிய பேருந்துகள் மற்றும் பழைய பேருந்துகளைப் புதுப்பித்தல்

கடந்த நான்காண்டில் 8,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.3,905.23 கோடி ஒதுக்கீடு.

ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுடன் 2,166 BS-VI டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்யப்படுகிறது.

SADP திட்டத்தில் 16 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

உலக வங்கி உதவியுடன் மாநகர் போக்குவரத்து கழகத்தில், மொத்த விலை ஒப்பந்தத்தின் (GCC) மூலம் உத்தேசித்துள்ள 1,225 மின்சார பேருந்துகளில் 26.02.2024 அன்று 625 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டு ஜூலை 2025 முதல் மின்சார பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 600 பேருந்துகளுக்கு ஒப்பந்தப்புள்ளி 11.02. 2025 கோரப்பட்டுள்ளது.

11,907 புதிய பேருந்துகளில் 3,325 புதிய பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளனர்.

2025-2026 ஆம் நிதி ஆண்டில் 754 பழைய பேருந்துகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2025-2026 ஆம் நிதி ஆண்டில் 754 பழைய பேருந்துகளை புதுப்பிக்க ரூ.125.40 கோடி ஒதுக்கீடு செய்து புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 8 முதல் 11 வயதுடைய 1,419 பழைய பேருந்துகள் பொலிவேற்றம் (facelift) செய்ய ரூ.42.57 கோடி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1,500 பேருந்துகளில் 1,500 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

தற்போது 22 சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது, 746 சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு (CNG)புதிய பேருந்துகள் வாங்கவும், 1000 BS IV பேருந்துகளில் எஞ்சின் மறுசீரமைப்புச் செய்து சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகளாக இயக்கவும் என மொத்தம் 1,768 சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துகளாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய முயற்சிகள்

நடவடிக்கை: தமிழ்நாடு அரசு உலக வங்கி, AIIB, JICA, KfW போன்ற அமைப்புகளின் உதவியுடன் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. CCP-SUSP திட்டத்தின் கீழ், 4 ஆண்டுகள் பயணிகளின் தேவைகள் மற்றும் திருப்தி அளவை ஆய்வு செய்து, திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் பயண முறைகள், சேவை தரம், மற்றும் பயண அனுபவத்தை மேம்படுத்தும், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

2023-2024ஆம் ஆண்டில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு தொகை ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பராமரிப்பு, எரிபொருள் மற்றும் இதர செலவுகள் மற்றும் 35 இலட்சம் பயணிகளுக்கான சேவை சிறப்பாக வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு, மாநகர போக்குவரத்துக் கழகத்தின் ஆறு பணிமனைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.111.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம், மின்சார பேருந்துகளுக்கான வசதிகள் உருவாக்கப்படுவது மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்படும்.

சென்னையில் ஆலந்தூரிலிருந்து விமான நிலையம் வரை "பேருந்து சிக்னல் முன்னுரிமை அமைப்பு" அறிமுகம் செய்யப்படுகிறது. இந்த திட்டம் பயண நேரம் குறைத்து, எரிபொருள் செலவையும் கார்பன் வெளியீட்டையும் குறைக்கும் வகையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு பேருந்துகளில் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்ய 2,500 பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா மற்றும் அவசர அழைப்பு பொத்தான் பொருத்தப்படவுள்ளது. 2,500 போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இத்திட்டத்தின் கீழ் வருகிறது. தற்போது 2,330 பேருந்துகள் மற்றும் பணிமனைகள், பேருந்து நிலையங்கள் என மொத்தமாக 63 இடங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டு, மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு உணவகங்களை நடத்துவதற்கான முன்னுரிமை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



அரசு விரைவுப் போக்குவரத்து பேருந்துகளில் பெண்களுக்கென பிரத்யேக இருக்கைகள் 08.05.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுபோதுமான இருக்கைகள் தனியாக பயணம் செய்ய ஊக்குவிக்கப்படுகிறது.

TNSTC வலைத்தளத்தின் மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் திட்டம் பொதுமக்களின் வரவேற்புடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

OTRS மூலம் தினசரி 18,000 பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யப்படுகின்றன.

200 கி.மீ. தொலைவு மற்றும் அதற்கு மேல் இயக்கும் பேருந்துகளின் இருக்கைகள் OTRS இணையதளத்தில் முன்பதிவு செய்யும் சேவை வாக்கம் செய்யப்பட்டுள்ளது.

OTRS மூலம் முன்பதிவு செய்த பயணிகளுக்கு ஒவ்வொரு மாதமும் பரிசுகள் வழங்கப்படும். மொத்தமாக, ரூ.50,000 பரிசு வழங்கப்படுகிறது.

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில், சென்னை பேருந்து செயலி (Chennai Bus App) அறிமுகப்படுத்தப்பட்டு IOS Version (Apple Mobile) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர், அரசு விரைவு போக்குவரத்து கழகம் தமிழ்நாடு லிமிடெட் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட் ஆகிய போக்குவரத்து கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்செயலியினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) லிமிட்டெட்டில் சோதனை முயற்சிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திட்டத்தினை மற்ற நான்கு அரசு போக்குவரத்து கழக பேருந்துகளிலும் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை, சென்னை பேருந்து செயலியை 11,93,669 நபர்கள் பதிவிறக்கம் செய்து பயனடைந்துள்ளனர்.

GPS மூலம் பேருந்து நிறுத்தங்களின் பெயர்கள் அறிவிப்புகள் வழங்கப்பட்டு, 959 பேருந்துகளில் இது செயல்படுத்தப்பட்டுள்ளது.

329 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) போக்குவரத்துக் கழக அலுவலகங்கள் மற்றும், பணிமனைகள் மற்றும் இதர இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் 100% மின்னனு வருகைப்பதிவு செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான பொது இணையதளம் (Common Website) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் "சிங்கார சென்னை அட்டை" 2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது, பணமில்லா பயணத்தை செயல்படுத்தும். சுலபமான பயண அனுபவத்தை வழங்கும்.

வணிக மேலாண்மை மென்பொருள் (Enterprise Resource Planning ERP) க்கான ஒப்பந்தம் வெளியிடப்பட்டு மேலாண்மை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

KFW ஜெர்மனி வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 16 பேருந்து முனையங்களில் இணையவழி தகவல் அமைப்பு செயல்படுத்தப்படுகிறது.

JICA நிதியுதவியுடன் தொழில்நுட்பம் மூலம் GPS வாகனங்களின் நகர்வுகளை கண்காணிக்கும் திட்டம் சென்னையில் சோதனை இயக்கம் நடைபெறுகிறது.

8 பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் தகவல் பலகை நிறுவப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

பயண கட்டணச் சலுகை பெறுபவர்கள் (மாற்றுத்திறனாளிகள், புற்றுநோயாளிகள் மற்றும் இதர) பயண கட்டணச் சலுகை அனுமதிச் சீட்டுகளை பெறுவதற்கு (100% இலவசம். 75%, 50% மூன்றில் ஒரு பங்கு கட்டணமில்லா வில்லைகள் (Free Token) போன்றவை) அரசுப் போக்குவரத்து கழகங்களின் பயணச்சீட்டு வழங்கும் இடங்களுக்கு சென்று வாங்கி செல்கின்றனர். இதனை தவிர்க்க அரசு இ-சேவை மையம் வாயிலாக இணையதள பயணச்சீட்டு வழங்கும் ஏற்பாட்டுமுறை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் முதல் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பிற போக்குவரத்துக் கழகத்திற்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மின் பயணச்சீட்டு வழங்கும் ETM (Electronic Ticketing Machine), திட்டம் பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து மாநகர் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களில், அறிமுகம்.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் உயிர்வாழ் சான்றிதழை இ-சேவை மூலம் சமர்ப்பித்தல் வசதி அறிமுகம்.

மாநகர் போக்குவரத்து கழக பணியாளர்களுக்கான செயலி நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் விடுப்பு விண்ணப்பங்களை எளிதாக பரிமாற முடியும்.

சென்னை மாநகரில், தனி வாகனங்களை பயன்படுத்துவோருக்கான, உயர்தர பேருந்து சேவைகளை அறிமுகப்படுத்தும் சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து கதவுகளிலும் தானியங்கி கதவுகளை பொருத்துவதின் மூலம் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நகரப் பேருந்துகளின் கீழ்ப்பகுதியில் பாதுகாப்பு அரண்கள் Safety Guard Under Run protection பொருத்தப்படுவதால் பயணிகள், பாதசாரிகள் மற்றும் இரு சக்கர வாகனத்தில் பயணிப்பவர்கள் பேருந்தின் பின்புற சக்கரங்களில் விழாமல் தடுத்து, உயிரிழப்பு மற்றும் பெரிய காயங்கள் ஏற்படுவது பெருமளவில் குறையும். நகரப் பேருந்துகளில், மொத்தமுள்ள 9,776 பேருந்துகளில், 8,664 பேருந்துகளில் Under Run protection (88.6%) பொருத்தப்பட்டுள்ளது.

பேருந்து பயணச்சலுகைத் திட்டங்கள்

5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் திட்டம் அறிமுகம்.

இணையவழிப் பயணச்சீட்டு வாயிலாக முன்பதிவு செய்த பயணிகளுக்கு 10% தள்ளுபடியுடன் இருவழிப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு ஐந்து முறைக்கு மேல் பயணம் செய்யும்போது அடுத்த தொடர் பயணங்களுக்கு 50% கட்டணச்சலுகை வழங்கப்படுகிறது.

கிளாம்பாக்கம் வழியாக 4 மணி நேரத்தில் பயணம் செய்ய ரூ.40/- மட்டும் கூடுதலாக செலுத்தி கிளாம்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சென்ற வர முடியும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் பெண்களுக்கென 4 இருக்கைகள் பேருந்துகளில் ஒதுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மாநகர் போக்குவரத்துக் கழகம், (Travel As You Please Ticket) திட்டத்தை அனைத்து நகரப் பேருந்துகளிலும் விரிவாக்கம்.

சுற்றுலா பயணிகளுக்கு சிறப்புப் பேருந்து இயக்கம்.
நவகிரக சிறப்புப் பேருந்து.

நவகிரக கோவில்களுக்கு செல்ல சிறப்பு பேருந்து சேவைக்கு பயணக் கட்டணமாக நபர் ஒன்றிற்கு ரூபாய் 750, நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது

கோடை கால சிறப்பு சுற்றுலா பேருந்து

உதகையில் கோடை காலத்தில் சுற்றுலா நெரிசலை தவிர்க்க இ-பாஸ் மூலம் மட்டுமே வருகை தடுக்கப்பட்டது. இதனால் கோவை கோட்டம் சிறப்பு பேருந்துகளை இயக்கியது இதன்மூலம். வாகன எண்ணிக்கை குறைந்ததால், காற்றின் தர குறியீடு 91இல் இருந்து 67 ஆக குறைந்துள்ளது.

கோடை காலம் முழுவதும் கொடைக்கானலில் குடும்பத்துடன் சுற்றுலா செல்ல மதுரை கோட்டம் சிறப்பு பேருந்துகள் மூலம் பெரியவர்களுக்கு ரூ.150 சிறியவர்களுக்கு ரூ.75 கட்டணத்தில் சேவை வழங்கப்படுகிறது.

47 ஆவது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியினை முன்னிட்டு, சேலம் கோட்டம் மூலமாக சுற்றுலா தளங்களை குடும்பத்தினருடன் பாதுகாப்பாக கண்டு களிக்க சிறப்பு பேருந்துகளை ரூ.300 கட்டணத்தில் இயக்குகிறது.

போக்குவரத்துக் கழகங்களில் இதர வருவாயை ஈட்டுதல்

சென்னை, திருச்சி மற்றும் மதுரை சிப்பம் (Parcel) / மற்றும் தூதஞ்சல் (Courier) அனுப்பும் திட்டம் அறிமுகம்.

பேருந்துகளில் பயணசுமைப் பெட்டிகளுக்கு இளைஞர்களுக்கு மாதத்திற்கு ரூ.6,000 வாடகை ஏற்று வழங்கப்படுகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் டீசல் மற்றும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களை இராமநாதபுரம் மற்றும் அத்தனூரில் தொங்கப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்து கழக கட்டடங்களில் 7 இடங்களில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவப்பட்டு, விரிவாக்க நடவடிக்கைகள்.

சாலையோர மோட்டல்களில் பேருந்துகளை நிறுத்துவதன் மூலம் வருமானம் ஈட்டுதல்

கோவை கழகத்தில் தயாரிக்கப்பட்ட வர்ணம் (சேரன் பெயிண்ட்) விற்பனை (Factory Outlet) சிட்கோ (குறிச்சி) சில்லரை விற்பனை நிலையம் தொடக்கம்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், சிப்பம் மற்றும் சரக்கு அனுப்பும் சேவையை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதர திட்டங்கள்

புதிய பணிமனை மற்றும் பணிமனையை மேம்படுத்தல்

மாநகர் போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் கீழ் 16 பேருந்து பணிமனைகள் நவீனமயமாக்கும் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, வடபழனி, திருவான்மியூர், வியாசர்பாடி பணிமனைகள் மேம்படுத்தப்படுகினறன.

அண்ணா நகர், வடபழனி, கே.கே.நகர், மந்தவெளி பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்கப்படுகின்றன.

இதர போக்குவரத்துக் கழகங்கள்

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) திட்டத்தின் கீழ் குன்னம் நகரில், புதிய பேருந்து பணிமனை 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.55 கோடிச் செலவில் தொடக்கம்.

சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதி மூலம் ரூ.2.50 கோடியில் கோத்தகிரி பணிமனை புதிய கட்டடம் மற்றும் தொழிலாளர் ஓய்வறை கட்டடம் தொடக்கம்.

ரூ.5.42 கோடியில் கூடலூர் பேருந்து நிலையம் மற்றும் பணிமனை புதிய கட்டடம் தொடக்கம்.

குமுளியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பணிமனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து பேருந்துகளிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் அதன் விளக்கவுரையுடன் பொருத்தப்பட்டுள்ளது.'

ஒவ்வொரு பணிமனைக்கும் ரூ.10 இலட்சம் வீதம் செலவில், மொத்தம் ரூ.10 கோடியில் 100 பணிமனைகளில் நவீன வசதிகளுடன் ஓய்வு அறைகளை (Crew Rest Room) மேம்படுத்த நடவடிக்கை.

ஒவ்வொரு பணிமனைக்கும் ரூ.10 இலட்சம் வீதம் செலவில் மொத்தம் ரூ.10 கோடியில் 100 பேருந்து சுத்தம் செய்ய தானியங்கி இயந்திரங்கள் மற்றும் தூசகற்றும் இயந்திரம் (Vacuum Cleaner) கொள்முதல்.

ரூ.8 கோடியில் எட்டு பணிமனைகளில் தொழில்நுட்ப உபகரணங்களுடன் பராமரிப்பு சேவையை மேம்படுத்துகிறது.

ஓட்டுநருடன் நடத்துநர் பணியிடங்கள்

அரசாணை பிறப்பிக்கப்பட்ட 3,959 ஓட்டுனருடன் நடத்துனர் பணியிடங்களில் 685 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு, 3,274 ஓட்டுநர் மற்றும் நடத்துனர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழிநுட்பப் பணியாளர் காலிப்பணியிடங்கள்:

அரசாணை பிறப்பிக்கப்பட்ட 537 தொழில்நுட்ப பணியாளர் காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) மூலம் நிரப்புவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உதவி மேலாளர் (சட்டம்) மற்றும் உதவி மேலாளர் (கணக்கு) காலிப் பணியிடங்கள்

14 உதவி மேலாளர் (சட்டம்) மற்றும் 11 உதவி மேலாளர் (கணக்கு) தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. மீதமுள்ள பணியிடங்கள் நிரப்ப தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடவடிக்கை.

விருதுகள்

"சென்னை பஸ் ஆப் செயலிக்கு மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு "சிறந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (ITS)" விருது வழங்கப்பட்டது.

பயணிகளுக்கான குறை தீர்வு முறைகள் Whatsapp மற்றும் இணையதளம் மூலம் செயல்படுத்தப்படு பரவலான வரவேற்பு பெற்றது. 2022 ஆம் ஆண்டு Urban Infra Group Publication மூலம் விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் புதுடில்லியில் வழங்கப்பட்டது.

42 ஓட்டுநர்களுக்கு விபத்தில்லாமல் பணிபுரிந்தமைக்கு இந்திய அரசு விருதுகள் வழங்கிய நிலையில். அதில் தமிழ்நாடு 14 ஓட்டுநர்களுக்கு Heros on the Road என்ற விருதுகள் பெற்றது.

2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 17 தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. அதில் மதுரை 6 விருதுகள், கும்பகோணம் 5 விருதுகள் கிடைத்தன, விரைவு-3, சேலம்-2, விழுப்புரம்-1.

2023-2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்திற்கு 19 தேசிய விருதுகள் வழங்கப்பட்டன, அதில் மாநகர்-2, விரைவு-3, விழுப்புரம்-1, சேலம்-4, கும்பகோணம்-5 மற்றும் மதுரை-4.

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில், "நம்ம பயணி" என்ற டாஷ்போர்டு பயணச்சீட்டு பரிவர்த்தனைகளை கண்காணித்து முன்பதிவு செயல்முறையை எளிதாக்குகிறது. இந்த செயல்பாடுக்கு டெல்லியில் நடைபெற்ற "SKOCH" விருது வழங்கப்பட்டது.

பணியாளர் நலன்

அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 5% ஊதிய உயர்வு, 14ஆவது ஊதிய ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்டது.

பணியின்போது இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு குடும்பநல நிதி ரூ.3 இலட்சத்தில் இருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு.

சாதாரண பேருந்துகளின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களின் வசூல் இரட்டிப்பாக உயர்வு.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களின் மிகைப்பணி ஊதியம் (Double duty wages) ஓட்டுநர்களுக்கு ரூ.700-ம் நடத்துனர்களுக்கு ரூ.690-ம் ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகளின் இயக்க எண்ணிக்கையை அதிகரிக்க ஒய்வுபெற்ற ஓட்டுநர்களுக்கு ரூ.700-ம் நடத்துனர்களுக்கு ரூ.690-ம் ஆக வழங்கி பயன்படுத்தப்படுகிறது.

சேம ஓட்டுநர்களின் தினசரி ஊதியம் ஜூலை 2024 முதல் ரூ.436/- இருந்து ரூ882/- ஆக உயர்வு.

சேம நடத்துனர்கள் ஊதியம் ஜூலை 2024 முதல் ரூ.429/- இருந்து ரூ.872/- ஆக உயர்வு.

தினக்கூலி இளநிலை தொழிலாளர் தினசரி ஊதியம் ஜூலை 2024 முதல் ரூ.429/- இருந்து ரூ.872/- ஆக உயர்வு.

14ஆவது ஊதிய நிலுவை தொகையான ரூ. 171.05 கோடி வழங்கப்பட்டது.

கொரோனா பெருந்துயர் காலத்தில் முழு அடைப்பின்போது தன்னுயிரையும் கருதாமல் பணிபுரிந்த தொழிலாளர்களை சிறப்பிக்கும் வகையில், சிறப்பு ஊக்கத் தொகையயாக ரூ.17.15 கோடி வழங்கப்பட்டுள்ளன.

14 ஆவது ஊதிய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற பணியாளர்களுக்குப் பணப் பலன்கள்

மே-2020 முதல் மார்ச்-2021 வரை 1,241 பணியாளர்களுக்கு ரூ.242.67 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

ஏப்ரல்-2021 முதல் மார்ச்-2022 வரை 1,853 பணியாளர்களுக்கு ரூ.308.45 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

ஏப்ரல்-2022 முதல் நவம்பர்-2022 வரை 3,414 பணியாளர்களுக்கு ரூ.1,031.32 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை பணியில் உயிரிழந்து 210 தொழிலாளர்களுக்கு ரூ.32.84 கோடி ஓய்வூதிய பணப் பலன்கள் வழங்கப்பட்டுள்ளது.

CPS திட்டத்தின் கீழ் டிசம்பர் 2022 -2024 வரை ரூ.38.74 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

2022-2023 வரை 1,279 பணியாளர்களுக்கு ரூ.372.06 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

ஏப்ரல்-2023-இல் 695 பணியாளர்களுக்கு ரூ.206.63 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

மே-2023-இல் 1,111 பணியாளர்களுக்கு ரூ.396.09 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

ஜூன் 2023-இல் 799 பணியாளர்களுக்கு ரூ.265.4400 கோடி பணப் பலன்கள் வழங்கப்பட்டது.

அரசு போக்குவரத்துக் கழக 313 பணிமனைகளில் 150 இடங்களில் குளிர்சாதன வசதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், இதுவரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியின்போது இறந்த பணியாளர்களின் 1.016 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 136 ஓட்டுநர் / ஓட்டுனருடன் நடத்துனர், 860 நடத்துனர்கள், 1 நிர்வாகப் பணியாளர் மற்றும் 19 தொழிநுட்ப பணியாளர்கள் அடங்கும்.

10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ / மாணவியருக்கு முறையே ரூ.1,500, ரூ.1,000 மற்றும் ரூ.500 என ஆண்டுதோறும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

மருத்துவ பரிசோதனைகள் முகாம்கள் அரசு மருத்துவமனைகளுடன் நடைபெறுகிறது.

சென்னை மாநகர போக்குவரத்து கழகங்களில் மின்விசிறி பொருத்தும் பணி நடைபெறுகிறது.

மாநகரப் போக்குவரத்துக் கழக பணியாளர்களின் நலனை கருதி சேமிப்பு சம்பளக் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் மூலம், எந்த ஒரு கூடுதல் தொகையும் செலுத்தாமல் காப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்திட ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக கனரா வங்கி, இந்தியன் வங்கி, பேங்க் ஆப் பரோடா உள்ளிட்ட வங்கிகளுடன் காப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

சாதனைகள்

மகளிர் சுயஉதவி குழுக்கள் தயாரிக்கும் பொருள்களை சந்தைப்படுத்தும் முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், இந்த குழுக்கள் தயாரித்த பொருள்களை மகளிர் நகரப் பேருந்துகள் மற்றும் சாதாரண புறநகர் பேருந்துகளில் 100 கிமீ வரையிலான தூரத்திற்கு 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இந்த புதிய நடைமுறை 08.03.2025 முதல் அமலுக்கு வருகிறது. இதன் மூலம் பெண்கள் குழுக்களின் வணிக செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுவதுடன், அவர்களின் பொருள்கள் சந்தைகளுக்கு எளிதாக அடைய வழிவகை செய்யப்படுகிறது. இந்த சலுகை, மகளிர் சுயஉதவி குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது 76 பெண் நடத்துனர்கள் பணியாற்றி வருகின்றனர். பெண் நடத்துனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணை உள்ளத்துடன் நடத்துனர்களின் பணிக்கு160 cmஎன்ற உயரத்தகுதி 150 cm ஆக குறைக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. இதன்படி, 67 ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த பெண் நடத்துனர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் வைக்கம் போராட்ட நினைவாக வைக்கத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து 01.01.2025 முதல் இயக்கப்பட்டது.

சென்னையில் உள்ள மாநகர் பேருந்துகள், மெட்ரோ ரயில் மற்றும் பிற பொதுப் போக்குவரத்து வழிகளில் ஒருங்கிணைந்த கட்டண முறைக்காக சிங்கார சென்னை அட்டை ஜனவரி 7, 2025 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய பொது இயக்க அட்டை (NCMC) கட்டமைப்பின் கீழ் செயல்படும். இது, பணமில்லா பரிவர்த்தனை பயணத்தை செயல்படுத்தி, காத்திருப்பு நேரத்தைக் குறைக்கும், பயணிகள் வசதியை மேம்படுத்த தமிழ்நாடு அரசு இதை படிப்படியாக விரிவுபடுத்துகிறது. இந்த திட்டம் நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்தி, பயணிகளுக்கு சுலபமான பயண அனுபவத்தை வழங்கும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

275 மருத்துவ முகாம்களில் 29,911 நபர்களும் மற்றும் 19 இரத்ததான முகாம்கள் மூலம் 1,361 நபர்களும் பங்கேற்றனர்.

104 இடங்களில் மன அழுத்த நிவாரண பயிற்சிகளின் மூலம் 20,257 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் பயன்பெற்றனர்.

கடந்த 25 ஆண்டுகளாக விபத்தில்லாமல் பணியாற்றிய 20 ஓட்டுநர்களுக்கு தங்க நாணயமும், 10 வருடங்களாக பணியாற்றிய 1,069 ஓட்டுநர்களுக்கு வெள்ளி நாணயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புத் துறை

வருவாய்ஈட்டுதல்

சாலைவரிகள், உபரிவரிகள், பசுமைவரிகள், சாலைப் பாதுகாப்பு வரிகள், இணக்கக் கட்டணங்கள், அபராதங்கள் மற்றும் சேவை வரிகளின் மூலம். 07.05.2021 முதல் 31.12.2024 வரையிலான வருவாய் ரூ.29,572 கோடி ஆகும்.

போக்குவரத்துத் துறை சார்ந்த அலுவலகங்களுக்கு புதிய சொந்தக் கட்டடங்கள்

சென்னை, கிண்டியில் போக்குவரத்து மற்றும் சாலைப் போக்குவரத்து ஆணையரகத்திற்கு ரூ.41.9 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

ஈரோடு மாவட்டம், நாமக்கல் (வடக்கு), வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு), வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

மதுரை மாவட்டம், மேலூர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் புதிய சொந்தக் கட்டடம்.

போக்குவரத்துத் துறை சார்ந்த புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள்

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) இராஜபாளையத்தில் திறந்து வைப்பு.

தென்காசி மாவட்டம், தென்காசி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கான புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் (பகுதி அலுவலகம்) ஆலங்குளத்தில் திறந்து வைப்பு.

பள்ளி வாகனங்களில் கேமரா பொருத்துதல்

ஒவ்வொரு பள்ளி வாகனமும் பள்ளி குழந்தைகளில் பாதுகாப்பு நலன் கருதி முன்புறம் மற்றும் பின்புறம் கேமராவுடன் கூடிய சென்சார் கருவி பொருத்தப்பட்டு இயக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



145 எண்ணிக்கையில் இலகுரக மோட்டார் வாகனங்கள் கொள்முதல்

சொந்த இலகுரக வாகனங்கள் இல்லாத பொதுமக்கள் நலன்கருதி, அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளார் (பகுதி) அலுவலகங்களுக்கும் மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு, 145 எண்ணிக்கையில் இலகுரக மோட்டார் வாகனங்கள் (LMV – Motor Car) ரூ.625 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சாலைப் பாதுகாப்பில் நற்கருணை வீரன் விருது வழங்குதல்

சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களின் உயிரை காப்பாற்றும் நற்கருணை கொண்ட நபர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒன்றிய அரசால் பாராட்டுச் சான்றும் மற்றும் ரூ.5,000/- ரொக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சட்டமன்றத்தில் 2023-2024ஆம் நிதியாண்டில் உரிய அறிவிப்பு வெளியிடப்பட்டு, மாநில அரசின் பங்களிப்பாக சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து கூடுதல் தொகையாக ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகிறது.

சிற்றுந்துகளுக்கான புதிய விரிவான திட்டம் – 2024

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் சாலை போக்குவரத்தினை மேம்படுத்துவதும், கடைக்கோடியில் இருக்கின்ற மக்களும் பயன்பெறும் பொருட்டு அனைத்து கிராமங்களின் போக்குவரத்து இணைப்புகளை உறுதி செய்வதும் ஆகும். பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, இத்திட்டம் திறன்மிக்க, நிறைவான, பொருளாதார மற்றும் ஒருங்கிணைந்த சாலைப் போக்குவரத்து சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகிறது. ஒவ்வொரு வழித்தடமும் அதிகப்பட்சமாக 25 கி.மீ. தூரமும், அதில் போக்குவரத்து சேவையில்லாத வழித்தடத்தில் பயணிக்கும் தூரம் 65%க்கு குறைவில்லாமலும், மீதமுள்ள பகுதி சேவையுள்ள வழித்தடமாகவும் கருத்தில் கொள்ளப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கான சேவைகள் 01.05.2025 முதல் தொடங்கப்படும்.

எரிசக்தித்துறை

தமிழ்நாடுமின்பகிர்மானக்கழகம்

விவசாய மின் இணைப்புகள்

2021-2022 ஆம் ஆண்டில் ரூ.803 கோடி செலவில் 2.13 இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் ஓராண்டில் வழங்கப்பட்டு சரித்திர சாதனை நிகழ்த்தப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டில், பொது மற்றும் சிறப்பு வரிசையின் கீழ் 50,589 விவசாய மின் இணைப்புகள் 87,420 ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி, ரூ.825.73 கோடி செலவில் வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில் 50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயித்து, 18,975 விவசாய மின் இணைப்புகள் 37,931 ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி ரூ.311.18 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில், 15,000 விவசாய மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயித்து, 13,320 விவசாய மின் இணைப்புகள் ரூ.244.19 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 92,158 குதிரை திறனுடைய விவசாய மின் பளு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டு, 29,530 ஏக்கர் விவசாய நிலங்கள் கூடுதலாக பாசன வசதி பெற்றுள்ளது.

மின்னகம்

"மின்னகம்" என்ற மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட மின் நுகர்வோர் சேவை மையம் 94987 94987 என்ற கைபேசி எண்ணுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.06.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதில், நுகர்வோர்கள் மின்சாரத் துறை சார்ந்த 37 விதமான புகார்களையும் பதிவுசெய்யலாம்.

34,32,084 புகார்களில் 34,24,677 புகார்களுக்கு (99.78%) தீர்வு.

மின் நிறுவு திறன்

32,595 மெகாவாட்டாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறன் தற்போது 39,770 மெகாவாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச மின் தேவை

மின் கட்டமைப்பு, 30.04.2024 அன்று ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 454.32 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும் மற்றும் 02.05.2024 அன்று 20,830 மெகாவாட் உச்ச மின் தேவையையும் எவ்வித தடங்கலுமின்றி பூர்த்தி செய்துள்ளது.

மாநிலம் முழுவதும் 24 மணி நேரமும் தடையில்லா சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

30.07.2024 அன்று காற்றாலை மூலம் பெறப்பட்ட மின்சாரம் 5,899 மெகாவாட். மேலும் 09.07.2022 அன்று காற்றாலை மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 120.25 மில்லியன் யூனிட்டுகள்.

16.02.2025 அன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் பெறப்பட்ட அதிகபட்ச மின்சாரம் 6,579 மெகாவாட். மேலும் 11.02.2025 அன்று சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகபட்ச மின் உற்பத்தி 48.20 மில்லியன் யூனிட்டுகள்.

2021-2022 ஆம் ஆண்டிலிருந்து 5,998 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள், தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டு, சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறன் 10,510 மெகாவாட்டாக அதிகரிப்பு.

2021-2022 ஆம் ஆண்டில் கூரை மேல் நிறுவப்பட்ட சூரிய மின் சக்தி திறனுக்காக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து (MNRE) பெறப்பட்ட ஊக்கத்தொகை ரூ. 7.9 கோடி.

12 மெகாவாட் தருமபுரி மற்றும் 15 மெகாவாட் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை மின் திட்டம் இயக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமான பழைய திறனற்ற 27.67 மெகாவாட் காற்றாலைகள் மீண்டும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காற்றாலை மின் திட்டங்களுக்கான மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை 2024 காற்றாலை உற்பத்தியாளர்களை பழைய காற்றாலைகளை மீண்டும் இயக்க ஊக்குவிப்பதற்காக பேட்டரி சேமிப்பகத்துடன் கூடிய காற்றாலை சூரிய கலப்பின உற்பத்தி நிறுவுவதற்கான தேர்வு அரசால் வெளியிடப்பட்டது.

மின் உற்பத்தி

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களின் மூலம் 2020-2021 ல், உற்பத்தி செய்யப்பட்ட 15,554 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், 2021-2022 ஆம் ஆண்டில் 20,391 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது. இது 31.1% கூடுதலாகும்.

2022-2023 ஆம் ஆண்டில் 22,689 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்தது. இது 11.27% கூடுதலாகும். மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் 25,516 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இது 12.46% கூடுதலாகும்.

மோயார் புனல் மின் உற்பத்தி நிலையத்தின் அலகு Iஐ 12 மெகாவாட்டிலிருந்து 14 மெகாவாட்டாக உயர்த்தியதன் மூலம் 2 மெகாவாட் திறன் கூடுதலாக மின் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி 2021-2022, 2022-2023 & 2024-2025 ஆண்டுகளில் மத்திய மின் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 1,660.36, 2,261.08 மற்றும் 499.48 மில்லியன் யூனிட்கள் முறையே கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ல் அதிகபட்ச மின் உற்பத்தியாக 6,174.08 மில்லியன் யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

16 புனல் மின் நிலையங்களில் முந்தைய அதிக பட்ச மின் உற்பத்தியை விட கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம், அலகு - 1 தொடங்கப்பட்டதிலிருந்து அலகு சுமை காரணி (PLF) 100.83% ஆக 08.12.2022 அன்று சாதனை படைத்துள்ளது. மேலும் 95 மெகாவாட் என நிர்ணயிக்கப்பட்ட திறனை விட அதிகமாக, 97 மெகாவாட் திறன் 04.12.2022 அன்று அடைந்தது.

குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம், 2023-2024 ஆம் நிதியாண்டில் அதிகபட்ச வருடாந்திர உற்பத்தியாக 694.614 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ளது.

நிலக்கரி

மகாநதி நிலக்கரி நிறுவனம் மற்றும் சிங்கரேணி நிலக்கரி நிறுவனங்களிடமிருந்து 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் நிதி ஆண்டுகளில் முறையே 172.38 இலட்சம் டன் மற்றும் 192.67 இலட்சம் டன் கிடைக்கப்பெற்றது.

2023-2024 ஆம் ஆண்டில் 208.48 இலட்சம் டன் நிலக்கரி கிடைக்கப்பெற்றது. இது கடந்த பத்தாண்டுகளில் அதிகபட்சமாகும்.

2024-2025ஆம் ஆண்டில் 213.72 இலட்சம் டன் நிலக்கரி கிடைக்கப்பெற்றது.

கங்காவரம் மற்றும் தாம்ரா துறைமுகங்கள் மூலம் நிலக்கரி கப்பல்களில் ஏற்றி விரைவாக இறக்கு துறைமுகங்களுக்கு கொண்டுவரப்பட்டது.

கூடுதல் அளவு நிலக்கரியைக் கையாளும் பொருட்டு 2022-2023 ஆம் ஆண்டில் பாரதீப் துறைமுகத்தில் இரண்டு (2) கூடுதல் பெர்த்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டில், மிக அதிக அளவு நிலக்கரி (அதாவது 19 மில்லியன் டன்கள்) குறைந்த எண்ணிக்கையிலான கப்பல்கள் மூலம், கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டது.

மின் உற்பத்தி திட்டங்கள்

இரண்டு எண்ணிக்கை அனல் மின் திட்டங்களுக்கான பணிகள் மற்றும் இரண்டு எண்ணிக்கை புனல் மின் திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி துறைமுகம் தளம்-1-இல் அதிக கொள்ளளவு கொண்ட புதிய இரண்டு நிலக்கரி கையாளும் இயந்திரங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.01.2023 அன்று தொடக்கி வைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.



வட சென்னை அனல் மின் நிலையம் -III திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.03.2024அன்றுதொடங்கிவைக்கப்பட்டு,நிலக்கரியின்மூலமாக 17.03.2024அன்றுசெயலாக்கத்திக்கு கொண்டு வரப்பட்டது. மேலும், முழு மின் உற்பத்தி 27.06.2024 அன்று எட்டப்பட்டது.

வட சென்னை அனல் மின் நிலையம் -Iஇ ல் இருந்து கரி துகள்கள் வட சென்னை அனல் மின் திட்டம் -III -ஐ பாதிக்காமல் இருப்பதற்காக, தூசித் திரை (Dust Screen) ரூ. 38 கோடி செலவில் அமைப்பதற்கான பணி நிறைவு பெற்றது.

தொடர் கண்காணிப்பின் காரணமாக குந்தா நீரேற்று புனல் மின் திட்டத்தின் (4x125 மெகாவாட்) பணிகள் 20% இலிருந்து 83.50% ஆக முன்னேறியுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தொடர் கண்காணிப்பின் காரணமாக கொல்லிமலை நீர் மின் திட்டத்தின் (1x20 மெகாவாட்) பணிகள் 23% இலிருந்து 85.75% ஆக முன்னேறியுள்ளது.

15 எண்ணிக்கை நீரேற்று புனல் மின் திட்டங்களை (14,500 மெகாவாட்) செயல்படுத்த அடையாளம் காணப்பட்டுள்ளன. 12 எண்ணிக்கை நீரேற்று புனல் மின் திட்டங்களை பொது தனியார் கூட்டாண்மை முறையில் (PPP) செயல்படுத்துவதற்கு அங்கீகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மேல் பவானி (4x250 மெகாவாட்) நீரேற்று புனல் மின் திட்டம் என். டி.இ.சி.எல் (NTECL) கூட்டு முயற்சியில் (Joint Venture) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபுனல் மின் திட்டக்கொள்கை 2024- இந்த கொள்கையானது 100 கிலோவாட் முதல் 10 மெகாவாட் வரை தனியார் துறை மூலம் சிறுபுனல் திட்டங்களை செயல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நீரேற்று புனல் மின் திட்டங்களை அமைப்பதற்கான கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.

மின் தொடரமைப்பு

65 புதிய துணை மின் நிலையங்கள் 11,078 எம்.வி.ஏ. நிறுவு திறனுடன் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

11,341 எம்.வி.ஏ அளவிற்கு 457 கூடுதல் மற்றும் திறன் அதிகரிக்கப்பட்ட மின்மாற்றிகள் இயக்கத்திலுள்ள 400 கி.வோ, 230 கி.வோ மற்றும் 110 கி.வோ துணை மின் நிலையங்களில் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

3,654.99 சுற்று கி.மீ. மிக உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

மின் தொடரமைப்பு கட்டுமானத்தில் தரமான மின் ஓட்டத்திற்காக மிக முக்கிய துணை மின் நிலையங்களில் 2,750 எம்.வி.ஏ.ஆர் திறனில் 17 எண்ணிக்கை எதிர்வினைகலன்கள் மற்றும் 214 எம். வி.ஏ.ஆர் திறனில் 19 எண்ணிக்கை மின்தேக்கிகள் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இரண்டு இயக்குதல் வட்டங்கள் மற்றும் இரண்டு புதிய கருவி காத்தல் மற்றும் தகவல் தொடர்பு வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எவ்வித மின் தடங்கலுமின்றி உயர் மின் அழுத்த கோபுரங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் மின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு புதிய Hot lines கோட்டம் கொரட்டூரில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழு புதிய, கருவி காத்தல் மற்றும் தகவல் தொடர்பு (Protection & Communication) கோட்டங்கள், 11 உபகோட்டங்கள் மற்றும் 24 பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன,

சென்னை கிண்டியில் கூடுதலாக ஒரு வளிம காப்பு உபகோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம், திருவண்ணாமலை, கரூர், தஞ்சாவூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிதாக ஆறு ஹாட்லைன் பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகம்

நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளான மின் இணைப்பு வழங்குதல், கணக்கீடு மற்றும் வசூல் தவறுகளை சரிசெய்தல் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில்

மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் பயனாக 2022-23 ஆண்டிற்கான நுகர்வோர் சேவை மதிப்பீட்டில், பல புள்ளிகள் முன்னேறி, ஒட்டு மொத்த தர வரிசையில் 'A' தர வரிசை பெற்று ஒன்றிய அரசின் பாராட்டை பெற்றுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிற்கும் 'A' மதிப்பீடு பெற்றுள்ளது.

தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கரூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருவள்ளூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக மின் பகிர்மான வட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

சேப்பாக்கம், சோழிங்கநல்லூர், பல்லாவரம், தேன்கனிக்கோட்டை, பென்னாகரம், திருவெண்ணெய்நல்லூர், ஊத்துக்குளி, வேடசந்தூர், ஜெயங்கொண்டம், சாத்தூர் மற்றும் கெங்கவல்லி ஆகிய புதிய கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

61 புதிய மின்பகிர்மானப் பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

51 எண்ணிக்கையிலான புதிய 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டு இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

33/11 கி.வோ துணை மின் நிலையங்களில் 34 எண்ணிக்கை கூடுதல் மின் மாற்றிகள்/ தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

23,069 கி.மீ உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அதிக மின்பளுவுள்ள பகுதிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் நிலவிய பகுதிகளில் தடையின்றி சீரான மின்சாரம் வழங்குவதற்காக 20,380 மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, மொத்தம் 74,815 மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன.

45,367 கி.மீ தாழ்வழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

டெல்டா மாவட்டங்களின் கடலோரம் அருகில் அமைந்துள்ள துணை மின் நிலையங்களுக்கு இடையே செல்லும் 33 கே.வி. மேல் நிலை உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றி அமைத்து 9 எண்ணம் ஆதார மின்னூட்டிகள் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில், கரூர் தான்தோன்றிமலை அருள்மிகு ஸ்ரீகல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோவில், ஸ்ரீவில்லிப்புத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில், திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் திருக்கோவில் மற்றும் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய தேரோடும் வீதிகளில் உள்ள மேலே செல்லும் உயரழுத்த மின் கம்பிகள் புதைவட மின்பாதைகளாக மாற்றி அமைத்து இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

5,433 எண்ணம் வளையச் சுற்றுத்தர அமைப்புகள் இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மதுரையில் புதிய மின்மாற்றி எண்ணெய் பரிசோதனை 13.09.2023 அன்று ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

மின் மீட்டர்கள் மற்றும் சிடி, பிடி ஆகியவற்றின் சோதனை மற்றும் அளவுத்திருத்தத்திற்காக சென்னையில் ஒரு நிலையான ஆய்வகத்தையும், திருநெல்வேலி மற்றும் உடுமலைப்பேட்டையில் தலா ஒரு நடமாடும் ஆய்வகங்களும் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் திருநெல்வேலியில் உள்ள இரு ஆய்வகங்களுக்கும், சோதனை மற்றும் அளவுத்திருத்தம் ஆகிய இரண்டிற்கும் தேசிய அங்கீகாரம் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை, மாண்டோஸ் சூறாவளி, மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத மழை போன்ற இயற்கை பேரிடர்களின்போது மின்கம்பங்கள், மின் பாதைகள் மற்றும் மின்மாற்றிகளில் ஏற்பட்ட சேதங்கள் விரைவாக சரி செய்யப்பட்டு, மிகக் குறுகிய காலத்தில் மின் விநியோகம் சீர் செய்யப்பட்டது.

∴பெஞ்சல் புயல் காரணமாக ஏற்பட்ட மின் கட்டமைப்பின் சேதங்களை 8,000 எண்ணம் உள்ளூர் மற்றும் வெளியூர் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் துணையுடன் போர்கால அடிப்படையில்

துரிதமாக செயல்பட்டு மூன்று நாள்களுக்குள் அனைத்து சேதங்களும் சரிசெய்யப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டது.

சென்னையில், மழைக்காலங்களின்போது மழை நீர் தேங்கும் இடங்களில் உள்ள மின் தூண் பெட்டிகள் கண்டறியப்பட்டு, 7,241 மின்தூண் பெட்டிகள் தரை மட்டத்திலிருந்து 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

மழைக் காலங்களின்போதும் சீரான மின்சாரம் வழங்குவதற்காக, துணை மின் நிலையங்களில் உள்ள 41 திறன் மின் மாற்றிகளின் அடித்தளம் 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் மேம்பாட்டுப் பணிகள்

மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண் இணைக்கும் பணி மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

புதிய விவசாய மின் இணைப்பு, கட்டண மாற்றம், பெயர் மாற்றம், சோலாரை சோலார் அல்லாததாக மாற்றுதல் மற்றும் மின் ரசீது பதிவிறக்கம் போன்ற அனைத்து தாழ்வழுத்த சேவைகளுக்கான வசதி ஆன்லைன் விண்ணப்ப போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது.

ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கிப் பரிமாற்றம் மூலம் ஆன்லைனில் திரும்ப பெறுவதற்கான மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நுகர்வோருக்கு பணம் செலுத்துவதற்காக ஒற்றை கட்டண நுழைவாயில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தாழ்வழுத்த தொழில்துறை நுகர்வோருக்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் பரிமாற்ற சமர்ப்பிப்பதற்கான ஒற்றைச் சாளர போர்டல்.

நிறுவன வளத் திட்டமிடல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட TANGEDCO, TANTRANSCO, TNEB Ltd இன் இணையதளங்கள்.

வீட்டு உபயோக நுகர்வோருக்கான தேசிய சோலார் ரூஃப் டாப் போர்ட்டலுடன் ஒருங்கிணைப்பு.

நுகர்வோருக்கு மறு வடிவமைப்பு செய்யப்பட்ட கைபேசி பயன்பாடு, கணக்கீட்டாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்களுக்கான மின் பயன்பாடு, மதிப்பீட்டிற்கான கைபேசி செயலி, விநியோக பிரிவு அலுவலகங்களுக்கான தினசரி வேலை ஒதுக்கீடு மற்றும் செயல்படுத்துதலுக்கான கைபேசி செயலி. டிஜிட்டல் லைஃப் சான்றிதழ் சமர்ப்பிப்புடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

மின் திருட்டை ஆன்லைன் மூலம் பதிவுசெய்யும் வசதி.

நுகர்வோருக்குத் திட்டமிடப்பட்ட மின் விநியோகத் தடைகள் பற்றிய SMS.

அனைத்து கள சொத்துக்களின் விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த இந்தியாவின் முதல் டிஸ்காம் ஆக நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

பிற மென் பொருள் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கள பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ஜி.ஐ.எஸ் இணைய முகப்பு செயல்படுத்தப்பட்டது.

புதிய மின் இணைப்பு மென் பொருளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, புதிய மின் நுகர்வோரின் விவரங்களை விடுபடாமல் வரைபடமாக்குவதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மின் இணைப்பு பாதிக்கப்பட்ட பகுதிகளை மின் தடம் வாரியாக வரைபடத்தில் நேரடி காட்சியாக மாறும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மிக உயரழுத்த சொத்துக்களை டிஜிட்டல் மயமாக்கும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

நுகர்வோர் இருப்பிடத்தை மறு சரிபார்ப்பு செய்வதற்கும் தகவல் அட்டவணைப்படுத்துவதற்கும் வாரிய பொறியாளர்களை கொண்டு உருவாக்கப்பட்ட "TNEB GIS" கைபேசி செயலி அறிமுகம்.

களப்பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் முன்னோடி முயற்சியான "TNEB SAFETY" என்ற கைபேசி செயலி அறிமுகம்.

புவியியல் தகவல் முறைமையை வாரிய பொறியாளர்களை பயன்படுத்தி செயல்படுத்தியதன் விளைவாக ரூ. 200 கோடி செலவு சேமிப்பு ஏற்பட்டுள்ளது,

தி.நகர் பொலிவுறு நகரம் எ.பி.டி பகுதியில் 1.3 இலட்சம் நுகர்வோர்களுக்கு எ.எம்.ஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஸ்மார்ட் மீட்டரிங்கில் முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது வணிகச் செயல்பாட்டை நெறிப்படுத்தியுள்ளது ஒரு புதுமையான சாதனையாகும்.

சமூக ஊடக மேலாண்மை செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கண்ணாடி ஒளியிழை தொடர்பு வலைப்பின்னல் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் 120 இடங்களுக்கு இணைப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

முக அடையாள வருகை பதிவேட்டு முறை செயலாக்கம் தலைமையகத்தில் செயல்படுத்தப்பட்டது.

விருதுகள்

நிறுவன வள திட்டமிடல் (ERP) செயல்படுத்தியதற்கு 2022 இல் – SKOTCH தங்க விருது.

தொழில்நுட்பத்துடன் கூடிய தானியங்கி மின் அளவிகள் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் பொருத்தியதற்கான வெள்ளி SKOTCH விருது.

இந்திய ஸ்மார்ட் கிரிட் ∴போரம் இன்னோவேஷின் விருது 2023 (Indian Smart Grid Forum Innovation Award 2023) இல் பங்கேற்று புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களில் தானியங்கி மின் அளவிகள் பொருத்தி செயல்படுத்தியமைக்கான வைர விருதைப் பெற்றுள்ளது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" குழுமத்தின் எக்ஸ்பிரஸ் கம்ப்யூட்டர் ஐடி எக்ஸலன்ஸ் விருது மற்றும் ஜிஐஎஸ் அமலாக்கத்திற்காக ஸ்கோச் "ஆர்டர் ஆஃப் மெரிட்" விருது ஆகியவற்றைப் பெற்றது.

பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரியை கையாள்வதில் 2021-2022 ஆம் ஆண்டிற்கான "சிறந்த ஏற்றுமதியாளர்" (10.90 MMT) என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விருது.

"இந்திய விண்ட் எனர்ஜி ∴போரம் லீடர்ஷிப் விருதுகள் 2023" (India Wind Energy Forum Leadership Awards 2023) என்ற அமைப்பில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கு (RE Generators) தானியங்கி மின் அளவிகளை (AMR) பொருத்தியதற்கான "இந்த ஆண்டின் மிகவும் முற்போக்கான நிலை" என்ற வணிகச் சிறப்பு விருதைப் பெற்றது.

2022-2023 ம் ஆண்டில் 15.32 மில்லியன் மெட்ரிக்டன் நிலக்கரியினை பாரதீப் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டு "சிறந்த ஏற்றுமதியாளர் விருது" - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு பாரதீப் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.

2022-2023-ம் ஆண்டில் 8.02 மில்லியன் மெட்ரிக்டன் நிலக்கரியினை எண்ணூர் / காமராஜர் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டு "சிறந்த வணிக கூட்டாளர் விருது"-தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு காமராஜர் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.

கப்பலிலிருந்து ஒரே நாளில் 61,940 மெட்ரிக்டன் நிலக்கரியினை இறக்கி சாதனை படைத்ததற்காக "சாதனை விருது" காமராஜர் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.

2023-2024 ம் ஆண்டில் 13.36 மில்லியன் மெட்ரிக்டன் நிலக்கரியினை பாரதீப் துறைமுகத்தில் கையாண்டதன் பொருட்டு "சிறந்த ஏற்றுமதியாளர் விருது" - பாரதீப் துறைமுகத்தால் வழங்கப்பட்டது.

காரைக்கால் துறைமுகத்தில் நிலக்கரியை கையாள்வதில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான "பாராட்டு கேடயம்" வருடாந்திர வர்த்தக சந்திப்பு 2024-ன்போது வழங்கப்பட்டது.

வணிக ஆதரவு பங்குதாரராக சிறந்து விளங்குதல்-க்கான 'போக்குவரத்து செயல்திறனில் சிறந்து விளங்குவதற்கான விருது 2023-2024' வ.உ.சி. துறைமுகத்தால் தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு வழங்கப்பட்டது.

சேமிப்பு

2021–2022 ஆம் நிதியாண்டில் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் திறமையான செயல்பாடு, வட்டி விகிதம் குறைப்பு, உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ரூ.2,745 கோடி சேமிப்பு.

2022–2023 ஆம் நிதியாண்டில் அனல் மின் நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகளை குறைத்தல், நிலக்கரி கையாளும் கட்டணத்தில் சேமிப்பு, நிலக்கரி போக்குவரத்து கப்பல்களை குறைந்த மதிப்பிலான வாடகையில் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்தல், கூடுதல் கொள்ளளவு கப்பல்களை இயக்குதல், கடன்களுக்கான வட்டி விகிதங்கள் குறைப்பு, மத்திய மின் தொடரமைப்பு கட்டண குறைப்பு, உலர் சாம்பல் விற்பனை மூலம் வருவாய் பெருக்கம், மின் பரிமாற்ற ஏற்பாடு ஆகியவற்றின் மூலம் ரூ. 1,090 கோடி சேமிப்பு.

மின் கட்டண திருத்தத்திற்குப் பின் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்

மின் நுகர்வோர்களுக்கு நிலைக் கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவதில் இருந்து முழுவிலக்கு அளிக்கப்பட்டு, நுகர்வோர்களிடம் இருந்து மின் பயன்பாட்டு கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள 2.41 கோடி வீட்டு மின் நுகர்வோர்கள் பயன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் மட்டுமே, இலவசம் என்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு, இரு மாதங்களுக்கு 300 யூனிட்டுகள் இலவசம் என உயர்த்தி வழங்கப்பட்டு, 72,300 கைத்தறி நுகர்வோர்கள் பயன்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 750 யூனிட்டுகள் இலவசம் என்ற நிலை மாற்றப்பட்டு இரு மாதங்களுக்கு 1,000 யூனிட்டுகள் இலவசம் என உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின் கட்டண உயர்வில் 35 காசுகள்/ யூனிட் இரு மாதங்களுக்கு 1,001 யூனிட் முதல் 1,500 யூனிட் வரை மற்றும் 70 காசுகள் / யூனிட் இரு மாதங்களுக்கு 1,500 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள மின் நுகர்வுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள 1,57,512 விசைத்தறி நுகர்வோர்கள் இந்த அரசை மனதார பாராட்டி வருகின்றனர்.

விசைத்தறிகளுக்கு 1,001 முதல் 1,500 யூனிட் மற்றும் 1500 யூனிட்டுக்கு மேல் உள்ள விகிதபடிகளுக்கு, நிலையான கட்டணத்தில் 50% மானியம் வழங்கப்படுகிறது. அதாவது நிலையான கட்டணம் ஒரு கிலோ வாட்டிற்கு இரு மாதங்களுக்கு ரூ.214 ல் – 50% மானியத்துடன் ரூ.107 / கிலோவாட் தமிழ்நாடு அரசு வழங்குவதால் நுகர்வோர்களிடமிருந்து இரு மாதங்களுக்கு ஒரு கிலோ வாட்டிற்கு ரூ.107 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட இரண்டு சலுகைகளால் தமிழக அரசு 2024–2025 நிதியாண்டிற்கு ரூ.571.09 கோடி மானியமாக வழங்குகிறது.

பருவகால தேவைக்கு ஏற்ப மாறும் தன்மையுள்ள மின்பளுவை கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு நிலைக்கட்டணத்தை குறைத்துக் கொள்ளும் வகையில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவினை குறைத்துக் கொள்ளவும், மேலும் தேவைப்படும்போது அனுமதிக்கப்பட்ட மின்பளு வரை உயர்த்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக எவ்வித கூடுதல் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. இச்சலுகையை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறை பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் தொழிற்துறை நுகர்வோர்களின் நிலைக்கட்டணம் பெருமளவு குறையும்.

ஆரம்பத்தில் தாழ்வழுத்த சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு உச்ச நேர மின் நுகர்விற்கான கட்டணமானது 25 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக குறைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் 08.11.2022 நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் MSME இன் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கூடுதல் சலுகையாக ஸ்மார்ட் மீட்டர் (Smart meter) பொருத்தப்படும் வரை உச்ச நேர நுகர்வுக்கான (25%) கூடுதல் மின் கட்டணம் வசூலிக்கப்படாது என அறிவித்துள்ளது. இந்த குறைக்கப்பட்ட கட்டணங்களை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது. இதனால் சுமார் 3.63 இலட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை நுகர்வோர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

2023-2024 ஆம் நிதி ஆண்டிற்கான மின் கட்டண ஆணைக்கு ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 23 வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டுக்கு பதிலாக ஆகஸ்ட் 2022 முதல் ஏப்ரல் 2023 வரையிலான நுகர்வோர் விலைக் குறியீட்டைக் கருத்தில் கொள்ளுமாறு கொள்கை உத்தரவு பிறப்பித்தது. இதன் மூலம் மின் கட்டண உயர்வு 4.7% இல் இருந்து 2.18% ஆக குறைக்கப்பட்டது. எனவே, இந்த குறைக்கப்பட்ட மின் கட்டணத்தினால் அனைத்து 3.30 கோடி நுகர்வோர்கள் பயன்.

2.36 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு,01.07.2023 முதல் 2.18% மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. இதனால் ஏற்பட்ட கூடுதல் மின் மானிய நிதிச் சுமையான ரூ.268.04 கோடியை ஏற்றுக்கொண்டது.

சிறிய வீட்டு நுகர்வோர்கள் பயனளிக்கும் வகையில், தமிழக அரசு சிலவகை, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு, கட்டணச் சலுகையாக தாழ்வழுத்த வீதப்பட்டி I D யின் கீழ் உள்ள பொதுவான வசதிகளுக்கான கட்டணத்தை யூனிட் ஒன்றிக்கு ரூ.8.55 லிருந்து ரூ.5.75 ஆக குறைத்து ரூ.2.80ஐ மானியமாக வழங்குகிறது.

இதற்காக புதிதாக தாழ்வழுத்த வீதப்பட்டி IE அறிமுகப்படுத்தி 01.11.2023 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீதப்பட்டி மின்தூக்கி வசதி இல்லாத அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது விநியோகம் அதாவது 10 குடியிருப்பாளர்களுக்கு குறைவாகவோ அல்லது சமமாகவோ மற்றும் பொதுவான விளக்குகள் மற்றும் நீர் விநியோகத்திற்காக மூன்று தளங்களுக்கு குறைவாகவோ அல்லது சமமாகவோ உள்ள சிறிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பொருந்தும்.

LT III B ன் கீழ் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்திக்கான வலையமைப்பு கட்டணத்தினை 50% (Solar Roof top Network Charges) குறைத்துள்ளது. இந்த 50% குறைக்கப்பட்ட வலையமைப்பு கட்டணத்தினால் இதுவரை தமிழ்நாட்டில் உள்ள 2,481 தொழில் நிறுவனங்கள் பயன்.

பொதுமக்களிடம் படிக்கும் திறனை மேம்படுத்தும் விதமாக வணிக ரீதியில் இயங்காத நூலகங்களுக்கான மின் கட்டணத்தினை மானியம் இல்லா வீட்டு விகிதப்பட்டியலில் கணக்கீடு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 30% கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் இயங்கிவரும் பல நூலகங்கள் பயனடைந்துள்ளன.

மின் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு 12 உதவி மின் ஆய்வாளர்களுக்கும், 8 இளநிலை மின் ஆய்வாளர்களுக்கும் பணி அமர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மின் நுகர்வோர்,மின் வழங்குவோர்,மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மின் ஒப்பந்ததாரர்கள் பயனடையும் வகையில் அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடத்திற்கு, ஆய்வுக் கூடத்திற்கான தேசிய அங்கீகார வாரியத்தில் இருந்து ஐ.எஸ்.ஓ. - 17025 (ISO - 17025 சர்வதேச தர சான்றிதழ்) தரச்சான்று பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

புதுமையான திட்டம்

144 இ-கோர்ட் வளாகங்களில் 2.75 மெகாவாட் திறன் கொண்ட மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவும் பணிகள் நிறைவடைந்து, மேலும் மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, தடையில்லா மின்சாரத்திற்காக டீசல் ஜெனரேட்டர் நுகர்வு குறைக்கப்பட்டுள்ளது.

முதன்மைத் திட்டத்தின் சாதனை

மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை திட்டம்-II

இந்திய அரசின் மானியத்துடன் அனைத்து வீடுகளிலும் மேற்கூரை சூரிய அமைப்புகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.70 கோடியில் 10 மெகாவாட்டில் 9.8 மெகாவாட் 2,360 வீட்டுப் பயனாளிகள் மேற்கூரை சூரிய சக்தியை ஏற்றுக்கொண்டனர்.

மேல்நிலை மற்றும் முதுநிலை மேல்நிலைப் பள்ளிகளில் சூரிய மேற்கூரை அமைப்புகளை நிறுவுதல் (Samagrashiksha) (2021-2022)

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மேற்கூரை சூரிய ஒளி அமைப்புகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ரூ.6 கோடியில் 1,259 கி.வா. மொத்த திறன் கொண்டு, 332 பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகத்தில் 300 கிலோவாட் சூரியமேற்கூரை அமைப்புகளை நிறுவுதல். (2021-2022)

புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சக்தி ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, தங்கள் சொந்த மின்சாரத்தை உருவாக்குதலின் கீழ் ரூ. 1.70 கோடி செலவில் 300 கிலோவாட் சூரியமேற்கூரை நிறுவப்பட்டது.

சோலார் அடிப்படையிலான EV சார்ஜிங் நிலையத்தை நிறுவுதல்: (2021-2022)

TEDA ஆனது DPI வளாகத்தில்ரூ .10 இலட்சம் செலவில் சோதனை அடிப்படையிலான 25 கி.வா. சோலார் அடிப்படையிலான EV சார்ஜிங் நிலையத்தை நிறுவியுள்ளது.

TAMPCOL வளாகத்தில் 110 கிலோவாட் சூரியமேற்கூரை அமைப்புகள் மற்றும் 50 சூரிய மின்சக்தி தெரு விளக்குகளை நிறுவுதல் (2022-2023)

புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சக்தி ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, தங்கள் சொந்த மின்சாரத்தை உருவாக்குதலின் கீழ், 110 கிலோவாட் சூரியமேற்கூரை நிறுவப்பட்டது, ரூ.66 இலட்சம் செலவில் 50 சூரிய மின்சக்தி தெரு விளக்குகள் நிறுவப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சூரியமேற்கூரை 65 கிலோவாட் நிறுவுதல் (2022-2023)

புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சக்தி ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, தங்கள் சொந்த மின்சாரத்தை உருவாக்குதலலின் கீழ், ரூ. 40 இலட்சம் செலவில் நிறுவல் பணி நிறைவடைந்து சூரியமேற்கூரை (65 கி.வா) இயக்கப்பட்டது.

அரசு கட்டடங்களிலும் சூரியமயமாக்கல் (2024-2025)


அனைத்து அரசு கட்டடங்களிலும் சூரியமேற்கூரைகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தலின் கீழ், 20 மெகாவாட் இலக்கு கொள்ளவில் ரூ.15 கோடி செலவில் 144 இ-கோர்ட் வளாகங்களில் 2.75 மெகாவாட் ஒட்டுமொத்த திறனுக்கான பணிகள் நிறைவடைந்துள்ளன.

ருர்பன் பில்டிங் - National Rurban Mission (NRuM), DRDA, சிங்கப்பெருமாள் கோயில், Cluster, செங்கல்பட்டில் 11 இடத்தில் சூரியமேற்கூரை 70 கிலோவாட் நிறுவுதல் (2024-2025)

புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சக்தி ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, தங்கள் சொந்த மின்சாரத்தை உருவாக்குதலின் கீழ், ரூ. 40 இலட்சம் செலவில் நிறுவல் பணி நிறைவடைந்து சூரியமேற்கூரை (70 கி.வா) இயக்கப்பட்டது.








இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்



திரு. **பி.கே. சேகர்பாபு** அவர்கள்
மாண்புமிகு இந்துசமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்



ரூ. 5,515.54 கோடி மதிப்பீட்டில் 12,202 திருக்கோயில்களில் 23,234 திருப்பணிகள்...

திருக்கோயில்கள் சார்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய 1,100 இணைகளுக்குச் சீர் வரிசைகளுடன் திருமணம்...

நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தின் கீழ் 13 திருக்கோயில்களில் ஒரு இலட்சம் பக்தர்கள் பயன்...

ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் வைப்புத்தொகை ரூ. 2.50 இலட்சமாக உயர்வு...

திருக்கோயில்களில் பெறப்பட்ட தங்க முதலீட்டுத் திட்டம் 13 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு ரூ. 257.22 கோடி வங்கியில் முதலீடு...

ரூ. 7,138.55 கோடி மதிப்பீட்டிலான 7,430.97 ஏக்கர் அற நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்பு...

இந்து சமய அறநிலையங்கள் துறை

திருக்குட முழுக்கு

கடந்த 07.05.2021 முதல் 03.02.2025 முடிய 2,504 திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவுற்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

திருப்பணி

ரூ.5,515.54 கோடி மதிப்பீட்டிலான 23,234 திருப்பணிகள் 12,202 திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள் ரூ.1,260.76 கோடி மதிப்பீட்டிலான 9,899 பணிகள் உபயதாரர் நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா பேரிடர் காலம் மற்றும் கனமழை நாள்களில் உதவிகள்

கொரோனா பேரிடர் காலத்தில் திருக்கோயில் அர்ச்சகர்கள்/ பட்டாச்சாரியார்கள்/ பூசாரிகளுக்கு 10 கிலோ அரிசி, 15 வகை மளிகை பொருள்களுடன் ரூ.4,000 நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.

உணவு தேவைப்படுவோரின் பசியினை போக்கும் விதமாக சுமார் 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 17.12.2023, 18.12.2023 நாள்களில் பெய்த கனமழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கு திருக்கோயில்களின் சார்பில் 51,360 உணவுப்பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோயில்கள் சார்பாகத் திருமணங்கள்

திருக்கோயில்கள் சார்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு சீர்வரிசைகளுடன் திருமணங்கள் நடத்தி வைக்கும் பொருட்டு, 2022-2023-ஆம் ஆண்டு ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணம் நடத்தப்படும் என்றும், இதற்கான செலவினத்தை திருக்கோயில்களே ஏற்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

கடந்த 04.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான திருமண மண்டபத்தில் 31 இணைகளுக்கு சீர்வரிசை பொருள்களுடன் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் 500 இணைகளுக்கு மிகச்சிறப்பாக திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டு திருக்கோயில்கள் சார்பாக 600 இணைகளுக்கு நான்கு கிராம் பொன்தாலி, பட்டுபுடவை, பட்டுவேட்டி உள்பட ரூ.50,000/- மதிப்புள்ள சீர்வரிசைகளுடன் திருமணம் நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன் முதற்கட்டமாக 07.07.2023 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட 34 இணைகளுக்கு சென்னை இராஜா அண்ணாமலைபுரம் பசுமை வழிச்சாலை அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 237 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக 11.09.2023 அன்று மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் தலைமையில் 20 இணைகளுக்கு சென்னை, திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 11.09.2023 அன்று தமிழ்நாடு முழுவதும் 185 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது. இன்று வரை 598 திருமணங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

24.11.2023 அன்று அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சிறிய திருமண மண்டபத்தில் 2 இணைகளுக்கான திருமண விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து 1,100 இணைகளுக்கு திருமணம் நடத்திமுடிக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆண்டு திருக்கோயில்கள் சார்பாக 700 இணைகளுக்கு நான்கு கிராம் பொன்தாலி, பட்டுபுடவை, பட்டுவேட்டி உள்பட ரூ.60,000/- மதிப்புள்ள சீர்வரிசைகளுடன் திருமணம் நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக 21.10.2024 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட 31 இணைகளுக்கு சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 443 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் பக்தர்களுக்கு அன்னதானம்:

திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் பசியாறிச் செல்லும் பொருட்டு திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் 2002 ஆம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்டது.

நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்

ஸ்ரீரங்கம் மற்றும் பழனி திருச்செந்தூர், திருத்தணி, சமயபுரம் மதுரை, இராமேஸ்வரம், திருவண்ணாமலை, பெரியபாளையம், மேல்மலையனூர், ஆனைமலை கள்ளழகர் மற்றும் மருதமலை ஆகிய 13 திருக்கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



தற்போது 758 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருவேளை அன்னதானம் திட்டம்

இத்திட்டத்தின் முலம் நாள் ஒன்றுக்கு சுமார் 1,00,000 பக்தர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

பழநி திருக்கோயில் நடத்தும் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியருக்குக் காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் :

பழநி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025 ஆண்டு மேற்படி மாணவ, மாணவியருக்கு கட்டணம் இல்லாமல் மதிய சிற்றுண்டியும் வழங்கப்பட்டு வருகிறது.

நாள் முழுவதும் பிரசாதம்

திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கும் திட்டம் 25 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆன்மிகப் பயணம்

மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆன்மீக பயணம் சென்று வரும் பக்தர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்படுகிறது மற்றும் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட தலா 1,000 பக்தர்கள் அரசு நிதியில் ஆன்மீகப் பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர். அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 1,622 பக்தர்கள் இதுவரை அரசு நிதியில் அழைத்துச் செல்லப்பட்டனர். 2022-2023 ஆம் ஆண்டில், 200 பக்தர்கள் இராமேசுவரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலிருந்து காசி, அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஆன்மிகப் பயணமாக அரசு நிதி ரூ.50 இலட்சம் செலவில் அழைத்துச்செல்லப்பட்டனர்.

2023-2024 ஆம் நிதியாண்டில் அரசு நிதி ரூ.75 இலட்சம் செலவில் 300 பக்தர்கள் இராமேஸ்வரம் - காசி ஆன்மிக பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 2024-2025 ஆம் நிதியாண்டில் அரசு நிதி ரூ.1 கோடியே 5 இலட்சம் செலவில் 420 பக்தர்கள் இராமேஸ்வரம் - காசி ஆன்மிக பயணத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மருத்துவ மையம்

கடந்த நான்காண்டில் 15 திருக்கோயில்களில் மருத்துவ மையம் ஏற்படுத்தப்பட்டது.

2023-2024 ஆம் நிதியாண்டில் 06.03.2024 அன்று மேலும் 2 திருக்கோயில்களில் மருத்துவமையம் ஏற்படுத்தப்பட்டது.

அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம்

திருக்கோயில்களில் இறைவனுக்கு ஆற்றும் சேவையில் சாதிபாகுபாடின்றி தகுதியுள்ள அனைவருக்கும் சமவாய்ப்பினை வழங்கும் "அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" என்ற கலைஞர் அவர்களின் திட்டத்தின்படி தற்போது வரை 29 அர்ச்சர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2022-2023ல் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் சேர்ந்து, அர்ச்சகர் பயிற்சி முடித்த 3 பெண்கள் உட்பட 94 பயிற்சி பெற்ற அனைத்து சாதியைச் சேர்ந்த அர்ச்சகர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

பெண் ஓதுவார்கள் நியமனம்

இதுவரை 42 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர்களுள் 11 பெண் ஓதுவார்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒரு கால பூஜைத் திட்டம்

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் ஒருகால பூஜை கூட செய்ய நிதி வசதியில்லாத 12,959 திருக்கோயில்களுக்கு ரூ.1,00,000/- முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையிலிருந்து பூஜை செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

2021-2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு முதலீட்டு தொகை



ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு அதற்கான தொகை அரசு மானியமாக ரூ.130 கோடி வழங்கப்பட்டு, அந்தந்த திருக்கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

2021–2022 நிதியாண்டில் ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு முதன்முறையாக மாத ஊக்கத்தொகை ரூ.1,000/– வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டு இத்திட்டமானது மேலும் 2,000 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு அதற்கான தொகை ரூ.40 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டது.

2023–2024 ஆம் ஆண்டு மேலும் 2000 திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தை செயல்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2 லட்சம் வீதம், அரசு மானியம் ரூ.30 கோடியும், பொதுநல நிதி ரூ.10 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 17,000 திருக்கோயில்கள் பயன்பெறும்.

இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ள 2,000 திருக்கோயில்களுக்கான முதலீட்டு தொகை ரூ.40 கோடிக்கான காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால், 01.11.2023 அன்று தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் வசம் வழங்கப்பட்டது.

2024 – 2025 ஆண்டு ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் வைப்புத்தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது. மேலும், இவ்வாண்டு 1,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது. இதற்கான மொத்த செலவினம் ரூ.110 கோடி அரசு நிதியாக வழங்கப்படவுள்ளது.

ஒருகால பூஜை திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகளின் நலன்கருதி கடந்த ஆண்டு மற்றும் நடப்பாண்டில் 900 மாணவர்களுக்கு மேற்படிப்பிற்காக தலா ரூ.10,000/– கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணி

2021–2022 ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதி தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு ரூ. 25 கோடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

2022–2023 ஆதிதிராவிடர் திருக்கோயில் திருப்பணிக்கான நிதி உதவி ரூ.2 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 10 திருக்கோயில்களுக்கு 10.07.2023 அன்று வழங்கப்பட்டு மீதமுள்ள திருக்கோயில்களுக்கும் தலா ரூ.2 இலட்சம் வீதம் (கூடுதல் ரூபாய் 25 கோடி) வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு 1,250 திருக்கோயில் பட்டியல் இறுதி செய்யப்பட்டு திருப்பணிக்கான நிதியுதவி ரூ.2 லட்சம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 10 திருக்கோயில்களுக்கு 14.08.2024 அன்று வழங்கப்பட உள்ளது.

2024-2025 ஆம் நிதியாண்டில் 1250 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்வதற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி

இவ்வரசு பொறுப்பேற்றபின் 2021-2022 ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதி தலா ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு ரூ. 25 கோடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

2022-2023 கிராமப்புற திருக்கோயில் திருப்பணிக்கான நிதி உதவி ரூ.2 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 10 திருக்கோயில்களுக்கு 10.07.2023 அன்று வழங்கப்பட்டு மீதமுள்ள திருக்கோயில்களுக்கும் தலா ரூ.2 இலட்சம் வீதம் (கூடுதல் ரூபாய் 25 கோடி) வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு 1,250 திருக்கோயில் பட்டியல் இறுதி செய்யப்பட்டு திருப்பணிக்கான நிதியுதவி ரூ.2 இலட்சம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 10 திருக்கோயில்களுக்கு 14.08.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

2024 - 2025 ஆம் நிதியாண்டில் 1,250 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்வதற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களின் திருப்பணி

ரூ.431,55 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 274 திருக்கோயில்களின் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

கம்பிவட ஊர்திகள்

பக்தர்கள் மலைமீதுள்ள சுவாமியை விரைவாக தரிசனம் செய்யும் பொருட்டு, பழனி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி வசதி இயக்கப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டம், அய்யர்மலை, அருள்மிகு இரத்தனகிரீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.9.10 கோடி மதிப்பீட்டிலும் சோளிங்கர், அருள்மிகு யோகநரசிம்மர் திருக்கோயிலில் ரூ.20.30 கோடி மதிப்பீட்டிலும் கம்பிவட ஊர்தி அமைக்கும் பணி முடிவுற்று பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளது.

இதேபோன்று பழனி மற்றும் இடும்பன் மலை இடையே கம்பிவட ஊர்தி (ரூ.34 கோடி), அனுவாவி (ரூ.16 கோடி), திருநீர்மலை (ரூ.10.00 கோடி) மற்றும் திருக்கழுக்குன்றம் (ரூ.20.50 கோடி) ஆகிய திருக்கோயில்களில் கம்பிவட ஊர்தி அமைத்திட சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கும்பகோணம், சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.3.55 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.5.20 கோடி மதிப்பீட்டிலும் மின்தூக்கி அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்கலச்சிற்றுந்துகள்

14 திருக்கோயில்களில் பொது மக்களின் பயன்பாட்காக 32 மின்கலச்சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ளன.

திருக்கோயில்களின் நிர்வாகச் செலவினங்களுக்கு அரசு மானியம்

2021-2022 நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிர்வாக செலவுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.3 கோடி அரசு மானியம் ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024 நிதியாண்டில் அரசு மானியம் ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 24.11.2023 அன்று வழங்கப்பட்டது.

2024-2025 நிதியாண்டில் அரசு மானியம் ரூ.8 கோடியிலிருந்து ரூ.13 கோடியாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

2021-2022 நிதியாண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிர்வாக செலவுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1 கோடி அரசு மானியம் ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024 நிதியாண்டில் அரசு மானியம் ரூ.3 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

2024-2025 நிதியாண்டில் அரசு மானியம் ரூ.5 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

2022-2023 நிதியாண்டில் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ள 88 திருக்கோயில்களின் நிர்வாக செலவுகளுக்கு முதன் முறையாக ரூ.3 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது.

2024-2025 நிதியாண்டில் அரசு மானியம் ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

தங்க முதலீட்டுத் திட்டம்

திருக்கோயில்களில் காணிக்கையாக பெறப்பட்டு பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன்இனங்கள் ஒய்வு பெற்ற நீதியரசர்கள் தலைமையில், ஒன்றிய அரசிற்கு சொந்தாமான உருக்காலையில் உருக்கி 24 கேரட் தங்கக் கட்டிகளாக மாற்றப்பட்டு, பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யப்படுகிறது.

இத்திட்டம் 13 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு ரூ.257.22 கோடி மதிப்புள்ள சுத்த தங்கம் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

472 கிலோ 107 கிராம் 030 மில்லி கிராம் எடைகொண்ட சுத்த தங்க கட்டியின் வட்டிதொகை ரூ.6,30,96,671 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

மேலும் 7 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 249 கிலோ 831 கிராம் 900 மில்லி கிராம் எடையுள்ள பலமாற்று பொன் இனங்கள் ஒன்றிய அரசின் தங்க உருக்காலைக்கு கொண்டு செல்லப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான 526 கிலோ, 435 கிராம் மும்பைக்கு எடுத்து சென்று ஒன்றிய அரசு உருக்காலையில் உருக்கப்பட்டது.

கல்வி நிறுவனங்கள்

பழநி, பள்ளி கல்லூரி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் :

பழநி திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025 ஆண்டு மாணவ, மாணவியருக்கு கட்டணம் இல்லாமல் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்கள்

திருக்கோயில்கள் சார்பில் ஒரு பல்தொழில்நுட்ப கல்லூரி உட்பட 10 கல்லூரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருக்கோயில்கள் சார்பில் 25 பள்ளிகளும், திருமடங்களின் சார்பில் 7 பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளி, கல்லூரிகள் – ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பணிகள்

கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.189.48 கோடியில் மொத்த பணிகள் 222 இல் 99 பணிகள் நிறைவடைந்துள்ளன. 123 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆக்கிரமிப்பிலிருந்து நில மீட்பு

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம்/ கட்டடம்/மனை ஆகியவற்றில் இருந்த ஆக்கிரமிப்புகள்

அகற்றப்பட்டு 07.05.2021 முதல் 31.01.2025 வரையிலான காலத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட மொத்த பரப்பளவு 7,430.97 ஏக்கர். இவற்றின் மொத்த மதிப்பு சுமார் ரூ.7,138.55 கோடி ஆகும்.

நில அளவை

திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்யும் பணியில் நவீன ரோவர் கருவிகள் (DGPS) பயன்படுத்தப்பட்டு வருகிறது. 08.09.2021 முதல் 31.01.2025 வரை 1,80,970.34 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. நிலஅளவை பணியில் 172 உரிமம் பெற்ற நில அளவையர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நில அளவீடு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1,17,642 எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன.

அன்னைத் தமிழில் வழிபாடு

திருக்கோயில்களில் அன்னைத்தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக 48 முதுநிலை திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு, தற்போது 294 திருக்கோயில்களில் அன்னைதமிழில் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

அன்னைத் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு அர்ச்சனை செய்யும் அர்ச்சர்களுக்கு அர்ச்சனை கட்டணத்தில் 60 விழுக்காடு பங்கு தொகையாக வழங்கப்படுகிறது.

14 போற்றி நூல்களை பதிப்பிக்கச் செய்து இவ்வரசு இத்திட்டத்திற்கு மேலும் வலுசேர்த்துள்ளது.

தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம்

இந்து சமய அறநிலையத்துறையின் தலைமை அலுவலகத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அலுவலக கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.05.2023 இல் திறந்து வைக்கப்பட்டது.

அரிய புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிடுதல்

இந்து சமய அறநிலையத்துறை பதிப்பகப்பிரிவு தொடங்கப்பட்டு முதற்கட்டமாக 108 நூல்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.01.2023 அன்று வெளியிடப்பட்டு, சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்திலும் புத்தக விற்பனை நிலையம் தொடங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் 108 பெரிய திருக்கோயில்களில் தொடங்கப்பட்டுள்ள புத்தக விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட 108 அரிய நூல்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று வெளியிடப்பட்டது.

103 திருக்கோயில்களில் உள்ள புத்தக விற்பனை நிலையங்களில் மேற்கண்ட நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக 100 புத்தக விற்பனை நிலையங்களை திருக்கோயில்களில் ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2024-2025 அறிவிப்பின்படி, மூன்றாம் கட்டமாக 300 அரிய நூல்கள் மறுபதிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிப்பகப் பிரிவின் மூலம் வெளியிடப்பட்டுள்ள 216 அரிய பக்தி நூல்களை உலகெங்கிலுமுள்ள ஆன்மீக அன்பர்கள் படித்து பயன்பெறும் வகையில் மின் நூல்களாக (E-Book) வெளியிடப்பட உள்ளது.

அருளாளர்கள் விழா
வள்ளலார் முப்பெரும் விழா

வள்ளலாரின் 200 ஆவது ஆண்டு பிறந்தநாள், தர்மசாலை தொடங்கி 156 வது ஆண்டு மற்றும் ஜோதிதரிசனத்தின் 152வது ஆண்டு ஆகிய முப்பெரும் விழா 2022 அக்டோபர் மாதம் முதல் 52 வாரங்கள் கொண்டாடப்பட்டது.



முதல் வார நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பட்டு, வள்ளலார் 200 இலட்சினை, தபால்உறை, சிறப்பு மலர் ஆகியவை வெளியிடப்பட்டன. 52 வார விழாவின்போதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. இவ்விழா செலவிற்காக அரசு மானியம் ரூ.3.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

வள்ளலார் 200 ஐம்பத்து இரண்டு வார தொடர் அறநிகழ்வின் நிறைவுவிழா 05.10.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதே மையத்திற்கான ஆணையினை விழா சிறப்புகுழுவின் தலைவரிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்

ஒருங்கிணைந்த திருக்கோயில் நிர்வாக மேலாண்மைத்திட்டம் ITMS திருக்கோயில் பக்தர்களுக்கான சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிர்வாக மேலாண்மை திட்டம் ஆகியவற்றிற்கான வலைதளம் முகப்பு இத்துறையால் 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திருக்கோயில் நிர்வாகம் சிலைகள்/ உலோகத்திருமேனிகள் மற்றும் நில ஆவணங்கள் ஆகியவற்றை பதிவேற்றம் செய்வதற்கும் நிலங்கள் மீட்பு, வழக்குகள் திருக்கோயில் சொத்துக்கள், அன்னதான திட்டம், கேட்புவகுல் நிலுவை விவரம் போன்ற பல விவரங்களுக்கு தனித்தனி தொகுப்புகள் (Moduls) நடைமுறையில் உள்ளன.

திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ரூ.121.43 கோடி மதிப்பீட்டில் 16 திருக்கோயில்களில் 24 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, ரூ.50.79 கோடி செலவில் 7 திருக்கோயில்களில் 15 முடிவுற்ற திட்டப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் 13 கோடி ரூபாய்க்கான காசோலையை சுசீந்திரம் - கன்னியாகுமரி தேவஸ்தான திருக்கோயில்கள் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கோ.இராமகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் உள்ள 225 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் 8 கோடி ரூபாய்க்கான காசோலையை புதுக்கோட்டை மாவட்ட திருக்கோயில்களின் தக்கார்/ உதவி ஆணையர் திரு. வே.சுரேஷ் அவர்களிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான நிர்வாகத்திலுள்ள 88 திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் 6 கோடி ரூபாய்க்கான காசோலையை தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் திரு. சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே அவர்களிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17,000 ஒருகால பூஜை திட்ட திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி, கூடுதலாக 1,000 திருக்கோயில்களை ஒருகால பூஜை திட்டத்தில் இணைத்திட அரசு மானியம் ரூ. 110 கோடிக்கான காசோலை, விரிவுப்படுத்தப்பட்ட ஒருகால பூஜைத் திட்டத் திருக்கோயில்களுக்கான ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய பக்தி நூல்கள் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் கூடுதலாக 100 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21 திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில் திருக்கோயிலுக்கு பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகளை பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்ததற்கான அடையாளமாக சமயபுரம், பழனி, ஆனைமலை ஆகிய திருக்கோயில்களின் அறங்காவலர் குழு தலைவர்கள், இணை ஆணையர்கள் உதவி ஆணையர் ஆகியோரிடம் தங்க முதலீட்டிற்கான பத்திரங்களை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை வெளியிட்டார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட அனுமதி விண்ணப்ப முறை (PPA) மே மாதம் 2022 ஆம் ஆண்டு முதல் இணையவழி வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தடையின்மைச் சான்று வழங்கும் 17 துறைகள் ஒன்றைச் காளர தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், 15 உதவித் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் 15 திட்ட உதவியாளர்கள் – நிலை 1 உட்பட 30 அலுவலர்களை நியமனம். 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) வாயிலாக 12 உதவிப் பொறியாளர்கள் நியமனம். 2022 ஆம் ஆண்டில் 10 ஓட்டுநர்களுக்கான காலிப் பணியிடங்கள் நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. பெண் ஓட்டுநர் ஒருவரும் நியமனம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மாறும் தன்மையையும் வளர்ந்து வரும் தொழில்முறைத் தரநிலைகளையும் கருத்தில் கொண்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பணிகள் சமகாலத் தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு திருத்தம் செய்யப்பட்டது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் (DTCP) இணைந்து, அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் துறையில் (SAP) புதிதாக இளநிலைத் திட்டமிடல் பட்டப்படிப்பு 2022–2023 ஆம் கல்வியாண்டில் 33 மாணவர்களும், 2023–2024 ஆம் கல்வியாண்டில் 30 மாணவர்களும் 2024–2025 ஆம் கல்வியாண்டில் 28 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடர்பான மக்களின் குறைகளைப் பெறுவதற்கும் செயலாக்குவதற்கும், 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், சமூக ஊடகங்கள் மற்றும் இணையவழி குறைகளைவு முறையை (வாட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் வழியாக) அறிமுகம்.

நகர்ப்புறத் திட்டங்களை உருவாக்குதல்

சென்னை பெருநகர் பகுதிக்கான மூன்றாம் முழுமை திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. திட்டத்தின் பகுதியாக 28 ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

8 புதிய நகரங்களை அடையாளங்கண்டு, அவற்றிற்கான புது நகர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நடவடிக்கை.

வெளி வட்டச் சாலைக்கு இருபுறமும் 1 கிலோமீட்டர் தொலைவு வரை அமைந்துள்ள வழித்தடத்தில் விரிவான வளர்ச்சித் திட்டம்.

நிலத்தொகுப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு நிதித் தொகுப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜார்ஜ் டவுன் பகுதிக்கான உள்ளூர் பகுதி திட்டம் உருவாக்கம்.

திட்டப்பணிகள் மற்றும் திட்டங்கள்

பேருந்து முனையங்கள்

கிளாம்பாக்கத்தில் ஜிஎஸ்டி சாலையை ஒட்டி 88.52 ஏக்கர் பரப்பளவில் இந்தியாவிலேயே மிகப்பெரிய பேருந்து முனையமாக ரூ.393.74 கோடி திட்ட மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் (KCBT) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்பட்டு 30.12.2023 அன்று மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

24.79 ஏக்கர் பரப்பில், ரூ.427 கோடி திட்ட மதிப்பீட்டில் குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம் அமைக்கப்பட்டு விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மாமல்லபுரத்தில் புதிய பேருந்து நிலையம் ரூ.90.50 கோடி திட்ட மதிப்பீட்டில் 6.9 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டில் 9.95 ஏக்கர் பரப்பளவில் ரூ.97 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

நகரின் சமச்சீர் மற்றும் சமத்துவ வளர்ச்சியை உறுதி செய்ய, வடசென்னை பகுதியில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், வளர்ச்சியில் உட்கட்டமைப்பு பற்றாக்குறை மற்றும் இடைவெளிகள் கண்டறியப்பட்டு அவற்றை சரிசெய்வதற்காக, மொத்தம் ரூபாய் 6,858 கோடி மதிப்பீட்டில் 10 அரசு துறைகளின் கீழ் மொத்தம் 252 திட்டங்கள் இனங்காணப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.2,138.95 கோடி மதிப்பீட்டில் 135 திட்டங்களுக்கு பங்களிக்கிறது.

சென்னை கடற்கரை மறுமலர்ச்சி மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தின் (CSRRPL) ஒரு பகுதியாக அக்கரை, ஈஞ்சம்பாக்கம், காசிமேடு, திருவொற்றியூர் ஆகிய 4 கடற்கரைகள். மேலும், பெசன்ட் நகர், எண்ணூர் மற்றும் கோவளம் கடற்கரைகளை மேம்படுத்துவதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வாயிலாக கிளாம்பாக்கத்திலும் போரூரிலும் தலா ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் இரண்டு நீர் உறிஞ்சிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

70 சமூக உட்கட்டமைப்பு சார்ந்த திட்டப்பணிகளைச் செயற்படுத்துவதற்கு 2023-2024 மற்றும் 2024-2025-ஆம் நிதியாண்டில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் முடிவு செய்யப்பட்டு பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூ.113 கோடி திட்ட மதிப்பீட்டில் பொது கண்காட்சி மைய உட்கட்டமைபை தீவுத்திடலில் 7.95 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைத்து வருகிறது. இயற்கைக் காட்சிகளுடன் கூடிய நகர்ப்புற பொது சதுக்கம், கண்காட்சி அரங்குகள் மற்றும் திறந்தவெளி திரையரங்குகள் போன்ற வசதிகள். வடசென்னையில் 3.94 ஏக்கர் பரப்பளவில் ரூ. 53.50 கோடி மதிப்பீட்டில் வண்ண மீன் வர்த்தக மையம். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பணியாளர்களின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான தளிரகம் என்னும் மழலையர் காப்பகம், தொடங்கப்பட்டது.

கோயம்பேட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கட்டடத்தின் கோபுரம்- III இந்தியப் பசுமைக் கட்டடக் கழகத்தின் (IGBC) சான்றிதழுடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. சென்னை மண்டலத்தின் முதல் அரசு அலுவலக பசுமை கட்டடம் என்ற சிறப்பைப் பெறுகிறது. கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் முனையம் சார்ந்த வசதிகளை மக்கள் எளிதாகத் தெரிந்துகொண்டு பயன்படுத்தும் வண்ணம் ஒரு செயலியை உருவாக்கியுள்ளது.






தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்



டாக்டர் **கோவி செழியன்** அவர்கள்
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்



2021-2022இல் 7.5% உள் ஒதுக்கீட்டில் 6,613 மாணாக்கர்களும், 2022-2023இல் 7.5% உள் ஒதுக்கீட்டில் 14,997 மாணாக்கர்களும், 2023-2024இல் 7.5% உள் ஒதுக்கீட்டில் 24,359 மாணாக்கர்களும், 2024-2025இல் 7.5% உள் ஒதுக்கீட்டில் 35,126 மாணாக்கர்களும் பயன்...

அனைத்து பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.229.79 கோடி ஒதுக்கீடு...

தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ், 2024-2025ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 1,66,058 மாணவர்கள் பயன்...

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், 2024-2025ஆம் கல்வியாண்டில் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 2,59,806 மாணவியர்கள் பயன்...

தொழில்நுட்பக் கல்வித்துறை

திட்டங்கள்

அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 7.5% உள்ஒதுக்கீடு அளித்தல்

அரசு பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக, இளநிலை தொழிற்கல்வி படிப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் மாணாக்கர்கள் சேர்க்கை பெறுவதற்காக அரசுப் பள்ளிகள் சட்டம் 2021-ன்கீழ் இயற்றப்பட்டது. சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் போன்ற முழுக்கட்டணத்தையும் அரசே ஏற்கும்.

இத்திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் ஆண்டில் 6,613 மாணாக்கர்கள் ரூ.5,626 இலட்சம் செலவினத்திலும், 2022-2023 ஆம் ஆண்டில் 14,997 மாணாக்கர்கள் ரூ.12,908 இலட்சம் செலவினத்திலும், 2023-2024 ஆம் ஆண்டில் 24,359 மாணாக்கர்கள் ரூ.211.04 இலட்சம் செலவினத்திலும், 2024-2025 ஆம் ஆண்டில் 35,126 மாணாக்கர்கள் ரூ.299.45 இலட்சம் செலவினத்திலும் பயன்.

முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு உதவித் தொகை

இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில், முழுச் செலவையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பை தொடர்ந்து. 2021-2022-ஆம் கல்வியாண்டில் ஒரு மாணாக்கரும், 2022-2023-ஆம் கல்வியாண்டில் ஒரு மாணாக்கரும், 2023-2024-ஆம் கல்வியாண்டில் இரண்டு மாணாக்கர்களுக்கும், 2024-2025-ஆம் கல்வியாண்டில் இரண்டு மாணாக்கர்களும் இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி அளித்தல்

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளை (பி.இ./பி.டெக்) மேற்கொள்ள ஊக்குவிக்க, மாணாக்கர்களுக்கு அவர் பயிலும் காலத்தில் ஒரு முறை ரூ.50,000/- அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 32 மாணாக்கர்கள் ரூ.16 இலட்சம் செலவினத்திலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 127 மாணாக்கர்கள் ரூ.63.25 இலட்சம் செலவினத்திலும், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 26 மாணாக்கர்கள் ரூ.13 இலட்சம் செலவினத்திலும் பயன்.

இலவச பேருந்து கட்டண சலுகை வழங்குதல்

கட்டணமில்லா பேருந்து பயணச்சலுகை திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் ஆண்டில் 38,231 மாணாக்கர்களும், 2022-2023 ஆம் ஆண்டில் 40,180 மாணாக்கர்களும், 2023-2024 ஆம் ஆண்டில் 40,231 மாணாக்கர்களும், 2024-2025 ஆம் ஆண்டில் 46,362 மாணாக்கர்களும் பயன்.

இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்

பாடப் புத்தகங்கள் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கும் இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 11,839 மாணாக்கர்கள் ரூ.37.97 இலட்சம் செலவினத்திலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 12,398 மாணாக்கர்கள் ரூ.42.31 இலட்சம் செலவினத்திலும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 12,250 மாணாக்கர்கள் ரூ.38 இலட்சம் செலவினத்திலும் பயன்.

கல்வி கட்டண விலக்கு அளித்தல்

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து அரசு விலக்களித்தல் திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 42,479 மாணாக்கர்களும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 43,123 மாணாக்கர்களும், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 45,204 மாணாக்கர்களும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 45,851 மாணாக்கர்களும் பயன்.

முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச்சலுகை

மாநிலத்திலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் நேரடி சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச்சலுகை (Tuition Fee Concession) வழங்கும் திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 1,46,559 மாணாக்கர்கள் ரூ.35,334 இலட்சம் செலவினத்திலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 1,45,695 மாணாக்கர்கள் ரூ.35,611 இலட்சம் செலவினத்திலும், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 1,57,342 மாணாக்கர்கள் ரூ.37,931 இலட்சம் செலவினத்திலும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 1,56,125 மாணாக்கர்கள் ரூ.37,933 இலட்சம் செலவினத்திலும் பயன்.

அரசு பொறியியற் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தொழிலக உட்பயிற்சி வழங்குதல்

அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு தொடர் செலவினமாக ரூ.16.60 கோடி நிதி ஒதுக்கீடு. ஒவ்வொரு ஆண்டும் 10,000 மாணாக்கர்களுக்கு தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த 25 நாள்களுக்கு தொழிலக உட்பயிற்சி அளிப்பதற்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.16,600/- வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2021 முதல் 2025 வரை 40,000 மாணாக்கர்கள் ரூ.6,640 இலட்சம் செலவினத்தில் பயன்.

பட்ட மேற்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்

அரசு பொறியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பயிலும் 600 மாணக்கர்களுக்கு, மாதாந்திர உதவித் தொகையாக ரூ.6,000 வழங்க தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 600-லிருந்து 1,200-ஆக உயர்வு. 2021-2022 ஆம் கல்வியாண்டில் 666 மாணாக்கர்கள் ரூ.479.52 இலட்சம் செலவினத்திலும், 2022-2023 ஆம் கல்வியாண்டில் 921 மாணாக்கர்கள் ரூ.663.12 இலட்சம் செலவினத்திலும், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 973 மாணாக்கர்கள் ரூ.700.56 இலட்சம் செலவினத்திலும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 986 மாணாக்கர்கள் ரூ.709.92 இலட்சம் செலவினத்தில் பயன்.

போட்டித் தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளித்தல்

2021-2022-ஆம் ஆண்டிலிருந்து 11 அரசு பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 500 மாணாக்கர்களுக்கு போட்டித் தேர்வுகளான, CAT / GMAT / GRE / IELTS மற்றும் TOEFL தேர்வுகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க ரூ.42.12 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு. தற்பொழுது. இதனை 1,400 மாணாக்கர்களுக்கு என ரூ.119 இலட்சமாக உயர்த்தப்பட்டு நிதி ஒப்பளிப்பு. இத்திட்டத்தின் கீழ், 2021-2022 ஆம் கல்வியாண்டில் 500 மாணாக்கர்கள் ரூ.42.125 இலட்சம் செலவினத்திலும், 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 815 மாணாக்கர்கள் ரூ.61.218 இலட்சம் செலவினத்திலும், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 1,400 மாணாக்கர்கள் ரூ.119 இலட்சம் செலவினத்திலும் பயன்.

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவி தொகை வழங்கும் திட்டம்

உயர்கல்வியில் ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2023-2024-ஆம் கல்வியாண்டில் 85,409 பொறியியல் கல்லூரி மாணாக்கர்களும், 42,249 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களும் பயன்.

முயற்சிகள் மற்றும் இதர திட்டங்கள்

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் இயங்கிவரும் சுயநிதி பொறியியல் கல்லூரியான சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்ப கல்லூரியினை, நிதி நெருக்கடி மற்றும் அக்கல்லூரியில் பணிபுரிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் அக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, 2021-2022-ம் கல்வியாண்டு முதல் அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சாலை போக்குவரத்து நிறுவன கட்டுப்பாட்டின் கீழ் சென்னை குரோம்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், பாளையம்கோட்டை ஆகிய இடங்களில் இயங்கி வந்த சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை, அக்கல்லூரியில் உள்ள நிதி நெருக்கடியினாலும், அங்கு பணிபுரிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நலன் கருதியும், 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணக்கர்களுக்கு ஜெர்மானிய, பிரஞ்சு, ஜப்பானிய மொழிகள் கற்றுதரப்படுகிறது. 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் கல்வியாண்டுகளில் அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் 1,200 மாணாக்கர்கள் பயன்.

சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில்ஆகியஇடங்களில்உள்ளஅரசுபலவகைதொழில்நுட்பக்கல்லூரிகளில்,அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறைகளில் தமிழ் வழியில் பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, 2022-2023ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்வழி கல்வி மூலம் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசு வேலைகளில் வேலை வாய்ப்பினை பெற உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு ரூ.3 கோடி செலவில் தொழில்துறை தேவை அடிப்படையிலான படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், 3,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு குறுகியகால திறன்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023-2024 ஆம் கல்வியாண்டிலிருந்து "முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்காக (கலை, அறிவியல் மற்றும் பொறியியல் போன்றவை) தொடர் மானியமாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு.

சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள 6 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஸ்னைடர் எலக்ட்ரிக் நிறுவனத்துடன் இணைந்து ரூ.10 கோடி செலவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிதியுதவியுடன் உலக திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ.80 கோடி செலவில் உள்விளையாட்டு வசதிகளுடன் கூடிய அரங்கம் கட்டும் பணி.

தமிழ்நாட்டில் உள்ள 50 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு, மாணாக்கர்களின் அறிவை மேம்படுத்தவும், புத்தக அறிவை நடைமுறையில் பயன்படுத்தவும் உதவுகிறது. மேலும், மென்பொருள் மற்றும்

உருவகப்படுத்துதல் மூலம் இணைய பாதுகாப்பு (Cyber Security) பயிற்சி, கேஸ் கட்டிங் செயல்முறை (Gas Cutting Process), Forklift பயிற்சி, ஒடுங்குமுறை உற்பத்தி (Lean Manufacturing), கட்டட பாதுகாப்பு, கியர்பாக்ஸ் (Gear Box), மின்னாக்கி (Power Generator) என பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் இந்த திறன்மிகு வகுப்பறைகள் மூலம் வழங்கப்படுகிறது.

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் காலியாக உள்ள 1,060 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வுகள் நடத்தப்பட்டு, 1,033 விரிவுரையாளர்கள் பணி நியமனம்.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ள 10 ISRO விஞ்ஞானிகளுக்கு அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைக்காக தலா ரூ.25 இலட்சம் ரொக்கத் தொகையை வழங்கி கௌரவித்துள்ளது.

உயர்கல்வித்துறையில் நிறுவன வள திட்டமிடல் மென்பொருளுடன் ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பைச் (LMS & ERP) செயல்படுத்த ரூ.172.50 கோடி செலவில் 14 மாநிலப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் ஆகியவற்றின் டிஜிட்டல் மாற்றம்.

மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க புதிய சாண்ட்விச் டிப்ளமோ பாட திட்டங்கள் அதாவது சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியில் ECE (SWC) டிப்ளமோ, மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், டெக்ஸ்டைல் டிப்ளமோ (SWC) அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கரூர், கோயம்புத்தூரில் உள்ள பெண்களுக்கான அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கணினி அறிவியல் பொறியியல் டிப்ளமோ (SWC) மற்றும் விழுப்புரம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ (SWC) ஆகியவை அந்தந்த இடங்களின் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப GUIDANCE-TamilNadu உதவியுடன் தொழில்துறைகளின் தேவைகள் அடையாளம் காணப்பட்டு 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த 7 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 31 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 100 Mbps அளவுள்ள தனித்துவ இணைய இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய பாலிடெக்னிக் கல்லூரியில் மாற்றுத்திறனாளி மாணவர்களின் நலனுக்கானவும், அவர்கள் தொழில்நுட்ப வேலைகளில் ஈடுபடும் வகையிலும் சமூக வளர்ச்சிக்காகவும் ரூ.50 இலட்சம் செலவில் புதிய திறன் பயிற்சி மையம்.

அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிதாக தொடங்கப்பட்ட 30 பாடப்பிரிவுகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை ரூ.8.74 கோடியில் கொள்முதல்.



தொழில்துறையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், உழைக்கும் மக்கள் தங்கள் தகுதியை ஒரே நேரத்தில் வேலை செய்துக்கொண்டே மேம்படுத்துவதற்கும். கல்வி பயிலும் பொழுதே வருமானம் ஈட்டும் பட்டயப் படிப்புகள், அதாவது Diploma in Digital Manufacturing Course 2023-2024 கல்வியாண்டு முதல் 5 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் அறிமுகம்.

அதே போல, கல்வி பயிலும் பொழுதே வருமானம் ஈட்டும் பட்டயப் படிப்பான, அதாவது Diploma in Renewable Energy Course 2025-2026-ஆம் கல்வியாண்டு முதல் 8 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்த நடவடிக்கை.

வட சென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.36.50 கோடி செலவில், சென்னை, திருவொற்றியூரில் ஒரு புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லலூரியினை வரும் 2025-2026-ஆம் கல்வியாண்டுமல் நிறுவ நடவடிக்கை.

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிலகங்களை மேம்படுத்தவும், மாணாக்கர்கள் சேர்க்கையை உயர்த்தவும், நவீன தொழில்நுட்பக்ங்களை வழங்கவும், அச்சு தொழில்நுட்பப் பயிலகத்தில் பொதிகட்டுதல் தொழில்நுட்பம் பட்டயப் படிப்பும் வேதியியல் தொழில்நுட்பப் பயிலகத்தில், நில எண்ணெய் வேதிப்பொறியியல் பட்டயப் படிப்பும், தோல் தொழில்நுட்பப் பயிலகத்தில், காலணி தொழில்நுட்பம், தோல் மற்றும் அலங்கார தொழில்நுட்பம் பட்டயப் படிப்புகளும் மற்றும் நெசவு தொழில்நுட்பப் பயிலகத்தில், அலங்கார மற்றும் ஆடை தொழில்நுட்பம், ஆயத்த ஆடை தொழில்நுட்பம் பட்டயப் படிப்புகளும், 2025-2026-ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படவுள்ளன.

செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்பங்களில் மாணாக்கர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும், திறமையான மனித வளத்தினை உருவாக்குவதற்கும், கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியற் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகங்களை ரூ.4 கோடி மதிப்பீட்டில் நிறுவ நடவடிக்கை.

மின்சார வாகன வடிவமைப்பு மற்றம் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருள்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியற் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் நிறுவ நடவடிக்கை.

மாணாக்கர்கள் பொருள்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க, காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியற் கல்லூரியில் பொருள்களின் இணையம் ஆய்வகம் ரூ.1.84 கோடி மதிப்பீட்டில் நிறுவ நடவடிக்கை.

பொருள் கழிவுகள், சரக்கு மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை குறைப்பதற்கும், தொழில்துறை, அரசு மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஆராய்ச்சி மற்றம் மேம்பாட்டை ஒருங்கிணைத்து நிலையான தயாரிப்புகளுக்கான மேம்பாடு, குறைந்த செலவில் அதிக உற்பத்தித்திறனை அளிப்பதற்கும், வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியற் கல்லூரியில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் நிறுவ நடவடிக்கை.

சிறப்புத் திட்டங்கள்

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் / அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தவும், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், கழிவறை வசதிகள் மற்றும் விடுதி வசதிகள் போன்ற பணிகள் ஏற்படுத்துவதற்கு அரசால் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.229.79 கோடி நிதி ஒப்பளிப்பு.

மேலும், கோயம்புத்தூரில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 300 பேர் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடமும், ஈரோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் 200 பேர்

தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடமும் மற்றும் மைய பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சிறப்பு பயிலக மாணாக்கர்களுக்காக சென்னை மைய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் 300 பேர் தங்கும் வகையில் கூடுதல் ஆண்கள் விடுதிக் கட்டடமும், ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை.

தொழில்திறன் அடிப்படையிலான புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் ஆய்வகம், பொருள்களின் இணைய ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் பிற ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.50 கோடி செலவில் கொள்முதல்.

மகளிருக்கான பட்டய படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

மாணவியர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தினை (Gross Enrolment Ratio) அதிகரிப்பதற்கும், பட்டயப்படிப்பில் மாணவியர்களை அதிகளவில் சேர்ப்பதற்கும், உயர்கல்வியில் மாணவியர்கள் சேர்வதற்கு ஊக்குவிப்பதற்கும், சென்னை மைய பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (கணினி கொண்டு வடிவமைத்தல்) பாடப்பிரிவு, சென்னை மாநில வணிகப் பயிலகத்தில் அலுவலக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவு, கோவை அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இதய துடிப்பு பதிவி தொழில்நுட்ப பாடப்பிரிவு,

மதுரை தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இணையவலை வடிவமைப்பு தொழில்நுட்ப பாடப்பிரிவு, நாகர்கோவில் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் உயிர் மருத்துவ மின்னனுவியல் பாடப்பிரிவு மற்றும் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் அகவனப்பியல் பாடப்பிரிவு என மகளிருக்கான பட்டயப் படிப்புகளை 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகம்.

அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல்

தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்பவும் மற்றும் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், புதிய பட்டயப்படிப்புகளான ஆடை வடிவமைப்பு பட்டயப் படிப்பினை கரூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், வேளாண்மை பொறியியல் பட்டயப் படிப்பினை அரியலூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், இயந்திர மின்னணுவியல் பட்டயப் படிப்பினை ஊத்தங்கரை அரசு பலவகை



தொழில்நுட்பக் கல்லூரியிலும், தளவாட தொழில்நுட்ப பட்டயபடிப்பினை தூத்துக்குடி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், மதுரை, தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், புத்தூர், சீனிவாச சுப்புராயா பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும் மற்றும் தானியங்கி பொறியியல் (சான்ட்விச்) பட்டயப்படிப்பினை வேலூர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், சென்னை, மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகம்.

தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்ட மறுகட்டமைப்பு

அடுத்துவரும் தலைமுறையை தொழில்நுட்பத் திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கவும், தொழில்நுட்பத்தின் பயனை அறுவடைசெய்யவும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க ஊக்குவிக்கவும், தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகியோரிடமிருந்து கருத்துகளை பெற்று பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்ட மறுகட்டமைப்பானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடத்திட்ட மறுகட்டமைப்பானது மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனையும் தொழில்முனையும் திறனையும் மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இப்புதிய பாடத்திட்டமானது 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

4 சிறப்பு பயிலகங்களில் புதிதாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப 6 புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்துதல்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிலகங்களை மேம்படுத்தவும், மாணாக்கர்கள் சேர்க்கையை உயர்த்தவும், நவீன தொழில்நுட்பக்கங்களை வழங்கவும், அச்சு தொழில்நுட்பப் பயிலகத்தில் பொதிகட்டுதல் தொழில்நுட்பம் பட்டயப் படிப்பும் வேதியியல் தொழில்நுட்பப் பயிலகத்தில், நில எண்ணெய் வேதிப்பொறியியல் பட்டயப் படிப்பும், தோல் தொழில்நுட்பப் பயிலகத்தில், காலணி தொழில்நுட்பம், தோல் மற்றும் அலங்கார தொழில்நுட்பம் பட்டயப் படிப்புகளும் மற்றும் நெசவு தொழில்நுட்பப் பயிலகத்தில்,. அலங்கார மற்றும் ஆடை தொழில்நுட்பம், ஆயத்த ஆடை தொழில்நுட்பம் பட்டயப் படிப்புகளும், 2025-2026-ஆம் கல்வியாண்டு முதல் தொடக்கம்.

டிசம்பர் 2023 இல் அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளங்களைச் சமாளிக்க தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

டிசம்பர் 2023-இல் மைச்சாங் புயல் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. சான்றிதழ்களை இழந்த மாணாக்கர்கள் அவர்களின் விவரங்களை சமர்ப்பிப்பதற்கும், அவர்கள் சமர்ப்பித்த விவரங்களை சேகரிப்பதற்கும் www.mycertificates.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டு, இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த மாணாக்கர்களுக்கு கட்டணம் இல்லாமல் சான்றிதழ்களின் நகலினைவழங்கநடவடிக்கை.4,268பல்கலைக்கழகமாணாக்கருக்கும்,275கல்லூரிமாணாக்கருக்கும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் 2,053 மாணாக்கருக்கும், பள்ளிக்கல்வித்துறை மூலம் 270 மாணாக்கருக்கும்,அரசு பள்ளித் தேர்வுகள் மூலம் 6,137 மாணாக்கருக்கும்,தொழிற்பயிச்சி மூலம் 14 மாணாக்கருக்கும் என மொத்தம் 13,017 மாணாக்கர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரிக் கல்வி இயக்ககம்

30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் ரூ.391.39 கோடி நிதி ஒப்பளிப்பு. இதில் 14 கல்லூரிகளின் நிரந்தரக் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டு, மாணாக்கர்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், 4 கல்லூரிகளின் நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகள் முடிவுற்று திறப்பு விழாவிற்கு தயாராக உள்ளன. மீதமுள்ள 12 கல்லூரிகளின் நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

17 அரசுக் கலைக் கல்லூரிகளில் செயல்படும் மின்னணு நூலகங்களில் தற்காலத்திற்கேற்ப மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய 10 புதிய கணினிகள் ரூ.85 இலட்சம் செலவில் ELCOT வாயிலாக வழங்கப்பட்டு மாணாக்கர்கள் பயன்பாட்டில் உள்ளது.

புதிதாக 10 அரசுக் கலைக் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ரூ.93 இலட்சம் செலவில் கணினி மற்றும் கணினி உபகரணங்கள் ELCOT வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு மாணாக்கர்கள் பயன்பாட்டில் உள்ளது.



புதுக்கோட்டை, மாமன்னர் கல்லூரியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நூலகக் கட்டடம் ரூ.6 கோடி மதிப்பில் கட்டுவதற்கு ரூ.4 கோடி நிதி ஒப்பளிப்பும் மீதத் தொகையான ரூ.2 கோடி கல்லூரி அளவில் செலவு மேற்கொள்ளவும், நிர்வாக அனுமதியும் வழங்கி கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ளது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தற்காலிகமாகப் பணிபுரிந்து வரும் கணினி பயிற்சி திட்டப் பயிற்றுநர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியத்தினை ரூ.4,000/- இருந்து ரூ.10,000/- ஆக உயர்வு.

சென்னை, மாநிலக் கல்லூரியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ/மாணவியர்களுக்கென, அக்கல்லூரி வளாகத்தில் புதிதாக விடுதி கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.21.60 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு. இக்கட்டடப்பணி முடிக்கப்பட்டு 04.12.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, மாநிலக் கல்லூரியில் 5,564 சதுர மீட்டர் பரப்பளவில் சுமார் 2,046 பேர் அமரக்கூடிய வகையில் "முத்தமிழறிஞர் கலைஞர்" பெயரில் மாபெரும் அரங்கம் (Auditorium) கட்டுவதற்கு ரூ.63 கோடிக்கு நிதி ஒதுக்கீடு.

சென்னை, இராணிமேரிக் கல்லூரி மாணவியர் தங்கி பயில ஏதுவாக அக்கல்லூரி வளாகத்திற்குள்ளேயே 9,956.10 சதுர மீட்டர் பரப்பளவில் 401 மாணவிகள் பயன்பெறும் வகையில் தரை தளம் முதல் 6 தளங்கள் அடங்கிய விடுதி கட்டடம் கட்டுவதற்கு ரூ.42 கோடிக்கு நிதி ஒதுக்கீடு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட கட்டடப் பணிகளில் 3 கல்லூரிகளில் (தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, பரமக்குடி - அரசு கலைக் கல்லூரி, திருப்பூர், எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி) சுற்றுச்சுவர், வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.41.61 கோடி நிதி ஒப்பளிப்பு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இணையதள வசதியினை மேற்கொள்ள தொடரா செலவினமாக 2023-2024 இல் ரூ.12 கோடி நிதி ஒப்பளிப்பு. பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவாரூர், திரு.வி.க. அரசு கலைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்கள் நலனை கருத்தில் கொண்டு, "கலைஞர் நூற்றாண்டு விழாக் கட்டடம்" என்ற பெயரில் 21 கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்கு மட்டும் ரூ.5.77 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு. கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவியர்களின் உடல் நலனை பாதுகாக்கும் நோக்கில் அனைத்து கல்லூரிகளிலும் தனி ஓய்வறையினை Recliner Chair. திரைச் சீலை (Window Screen), கண்ணாடி, இருக்கைகள் / நாற்காலிகள், உணவருந்தும் மேசை,

முதலுதவி பெட்டி / அடிப்படை மருந்துகள் போன்ற வசதிகளுடன் அமைப்பதற்கு ஒரு கல்லூரிக்கு ரூ.95,500/- வீதம் 171 கல்லூரிக்கு மொத்தம் ரூ.163.30 இலட்சம் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு. பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு பொறியியல் / பல்தொழில்நுட்ப கல்லூரிகள் / கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வன்பொருள் வாங்குவதற்கு ரூ.172.50 கோடி நிதி ஒதுக்கீடு.

முதற்கட்டம் – கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 208 ஆய்வகங்கள், 18 வகுப்பறைகள் 15 கழிவறை தொகுதிகள், ஆழ்துணை கிணறுடன் கூடிய தண்ணீர் தொட்டி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு. 55 அரசு கல்லூரிகளுள் 53 கல்லூரிகளில் பணிகள் நிறைவுற்றன, 2 கல்லூரிகளில் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

இரண்டாம் கட்டம் – கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் 34 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 268 வகுப்பறைகள், 36 ஆய்வகங்கள் 25 கழிவறை தொகுதிகள், நூலக கட்டடம், மின்னணு நூலக கட்டடம், சுற்றுச் சுவர், சமையலறை தொகுதி கட்டடம், சிற்றுண்டி கட்டடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு. 34 அரசு கல்லூரிகளுள் 11 கல்லூரிகளில் பணிகள் நிறைவுற்றன, 23 கல்லூரிகளில் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

மூன்றாம் கட்டம் – கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கி வரும் 31 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 16 ஆய்வகங்கள், 192 வகுப்பறைகள் 24 கழிவறை தொகுதிகள், 12 ஆழ்துணை கிணறுடன் கூடிய தண்ணீர் தொட்டி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.100.15 கோடி நிதி ஒதுக்கீடு. கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை–108, பாரதி மகளிர் கல்லூரிக்கு 25 வகுப்பறைள், 11 ஆய்வகங்கள் 7 ஆசிரியர் அறைகள், 2 நூலக கட்டடங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு. பணிகள் நிறைவுபெற்று 22.08.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பாரதி மகளிர் கல்லூரிக்கு உடைந்த மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள சுற்றுச்சுவரினை புனரமைத்து கட்டுவதற்கு பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.27 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவொற்றியூர், ரெட்டியார்சத்திரம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் செயல்படும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.56.90 கோடி நிதி ஒதுக்கீடு.

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித் தொகைத் (CMRF) திட்டத்தின் கலைப்புலம் மற்றும் சமூக அறிவியல் பாடப்பிரிவில் 60 மாணவர்கள் மற்றும் அறிவியல் பாடப்பிரிவில் 60 மாணவர்களென மொத்தம் 120 மாணவர்களுக்கு, மாதாந்திர உதவித் தொகையாக ரூ.25,000/- மற்றும் கலைப்புலம் மற்றும் சமூக அறிவியல் பாடப்பிரிவு மற்றும் அறிவியல் பாடப்பிரிவுக்கு எதிர்பாராச் செலவினமாக முறையே ரூ.10,000 மற்றும் ரூ.12,000/- என 2024–2025ஆம் நிதியாண்டிற்கு ரூ.9.60 கோடி நிதி ஒப்பளிப்பு.

2024–2025ஆம் கல்வியாண்டு முதல் ஆராய்ச்சி மாணவர்களின் சேர்ச்கை எண்ணிக்கை 120–லிருந்து, 180–ஆக உயர்வு.

இத்திட்டத்தினை மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்தும் வகையில், பின்வரும் திருத்தம் கோரி அரசுக்குக் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் (CMRF) திட்டத்தின் கீழ் 69% இட ஒதுக்கீடு வழங்குதல்,

முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகைத் (CMRF) திட்ட மாநில அளவிலான தகுதித்தேர்வில் கேள்விக்குறி மற்றும் எழுத்துத் தேர்வு என்பதற்குப் பதிலாக 3 மணி நேரம் 100 கேள்விக்குறித் தேர்வாக மட்டும் மாற்றுதல், இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் மாணவ / மாணவியர் இத்திட்டத்தின் முழுப்பலனையும் அடையும் வகையில் காத்திருப்புப் பட்டியல் 1:1 என்ற விகிதத்தில் தயாரித்தல் ஆகிய திருத்தங்கள் கோரப்பட்டுள்ளன.

மாணவர்களைத் தகுதித் தேர்வு மூலம் தேர்வு செய்யும் பொருட்டு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு நடத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டேராடூனில் உள்ள ராஷ்டிரிய இந்திய ராணுவக் கல்லூரியில் படிக்கும் தமிழ்நாட்டை சேர்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகையின் அளவு ரூ.12,000/-லிருந்து ஆண்டுக்கு ரூ.40,000/- ஆக உயர்வு. 2022-2023 ஆம் கல்வியாண்டில் 7 மாணவர்களுக்கு ரூ.2.8 இலட்சம், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 3 மாணவர்களுக்கு ரூ.0.96 இலட்சம் என மொத்தம் 10 மாணவர்களுக்கு ரூ.3.76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர அரசால் உதவித்தொகை.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை ஆராய்ச்சிப் படிப்புகளில் சேர்ந்தவர்களில், பெற்ற மதிப்பெண்கள், படித்த பாடம் மற்றும் வகுப்புவாரி முறை ஆகியவற்றின் அடிப்படையில் 120 பேர் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.5,000/- வீதம் ஆண்டுக்கு ரூ.60,000/- கல்லூரி முதல்வர் மூலம் வழங்கப்படும். 2022-2023 ஆம் ஆண்டு வரை மாணவர்களுக்கு ரூ.525.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டு முதல் இந்த ஆராய்ச்சி மாணவர்களுக்கான Ph.D. உதவித்தொகை நிறுத்தப்பட்டு புதிய திட்டமாக முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை (CMRF) என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

மத்திய அரசின் உதவித்தொகை திட்டங்கள்

தேசிய உதவித்தொகை வலைத்தளம் (NSP) மற்றும் பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மூலம் நேரடியாக பயனாளிகளுக்கு மத்திய அரசின் அமைச்சகம் கீழ் செயல்படும் உயர்கல்வித் துறை மூலம் 2023-2024 ஆம் கல்வியாண்டில் 15,528 மாணவர்களுக்கு ரூ.19.076 கோடி வழங்கப்பட்டுள்ளது.

48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கான 7,500 எண்ணிக்கையிலான இருக்கையுடன் கூடிய மேசைகளை (Steel Dual Desk for Students) டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ.8,54,17,500/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணாக்கர் பயன்பாட்டில் உள்ளன.

68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கான 12,930 எண்ணிக்கையிலான இருக்கையுடன் கூடிய மேசைகள் (Steel Dual Desk for Students), 862 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள் (Teachers Table for Class Room) மற்றும் 862 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் (Ceramic Board) ஆகிய மூன்று தளவாடங்களை டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ.16,21,28,408/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

29 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி வகுப்பறைகளுக்கான 579 ஆசிரியர் மேசைகள், 726 ஆசிரியர் நாற்காலிகள், ஆசிரியப் பணியாளர்கள் அறைகளுக்கான 668 மேசைகள், 351 செராமிக் கரும்பலகைகள், நூலகங்களுக்கான 352 மேசைகள், நூலகங்களுக்கான 1,459 நாற்காலிகள், 971 கணினி மேசைகள், 1,318 கணினி நாற்காலிகள், 254 அறிவிப்பு பலகைகள் (Notice Board) மற்றும் நூலகத்திற்கான 691 அலமாரிகள் (Cup Board (Glass)) ஆகிய 10 தளவாட இனங்களை டான்சி நிறுவனத்திடம் வாங்குவதற்கு ரூ.4,84,16,772/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் (அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் உட்பட) பயிலும் மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கான

2469 எண்ணிக்கையிலான இருக்கையுடன் கூடிய மேசைகள் (Steel Dual Desk for Students), 371 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள் (Teachers Table for Class Room) மற்றும் 125 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் (Ceramic Board) ஆகிய மூன்று தளவாடங்களை டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ.3,64,99,245/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

28 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறைகளுக்குத் தேவையான 6,690 எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் அமரும் இருக்கையுடன் கூடிய மேசைகள் (Steel Dual Desk for Students), 446 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள் (Teachers Table for class Room), 446 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் (Ceramic Boards) ஆகிய மூன்று தளவாட இனங்களை டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ.9.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அரசாணை வாயிலாக 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளிலிருந்து அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட 27 அரசு கல்லூரிகள் என ஆக மொத்தம் 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் வகுப்பறைகளுக்கு தேவையான 4,900 எண்ணிக்கையிலான இருக்கையுடன் கூடிய மேசைகள், 1,155 எண்ணிக்கையிலான ஆசிரியர் மேசைகள், 612 எண்ணிக்கையிலான செராமிக் பலகைகள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூ.6,74,30,403/- நிதி ஒதுக்கீடு.

தமிழ்வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கும் ஊக்கத்தொகை.

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்வழி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு. கல்வி ஊக்கத் தொகையாக ரூ.400/- லிருந்து ரூ.900/-ஆக உயர்வு 2024-2025 ஆம் கல்வியாண்டில் 33,258 மாணவர்களுக்கு ரூ.2,99,32,200/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

கௌரவ விரிவுரையாளர்கள் (இரண்டாம் சுழற்சி)

2024-2025 ஆம் கல்வியாண்டிற்கு இரண்டாம் சுழற்சி பாடப்பிரிவுகளை நடத்த 1661 கௌரவ விரிவுரையாளர்களை மாதம் ஒன்றிற்கு ரூ.25,000/- என்ற தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நியமிக்க அனுமதி ஏப்ரல்-2024 மற்றும் ஜூன்-2024 முதல் மார்ச்-2025 வரை 11 மாதங்களுக்கு ரூ.45,67,75,000/- நிதி ஒதுக்கீடும், ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு உழைப்பூதியம் ரூ.32,50,800/- நிதி ஒதுக்கீடு என மொத்தம் ரூ.46,00,25,800/- நிதி ஒதுக்கீடு.

புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 2024-2025 ஆம் கல்வியாண்டில் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,59,806 மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற்றுள்ளனர்.

தமிழ்ப் புதல்வன் திட்டம்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் 2024-2025 ஆம் கல்வியாண்டில் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,66,058 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் தகுதி பெற்றுள்ளனர்.

50 புதிய சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு அரசாணைகள் பெறப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி நலன் கருதி அரசு கல்லூரிகளில் 1,895 கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தி ஆணை. பல்வேறு கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப்பேராசிரியர் பணியிடங்களில் 1,726 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 4,000 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்ப ஆணை.

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்பூதியத்தினை ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- ம் ஆக உயர்வு.

2024-2025ஆம் கல்வியாண்டில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்வில் 397 விண்ணப்பம் பெறப்பட்டதில் 198 ஆசிரியர்களுக்கு இடமாறுதல்.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களிடையே ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் வகையில், "சிறு ஆராய்ச்சி திட்டத்தின்" கீழ் 25 ஆய்வுத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ.ஒரு இலட்சம் வீதம் வழங்கப்பட்டது.

கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கான "மாணவர் குறு திட்டத்தின்" கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களது ஆராய்ச்சித் திட்டத்தினை தொடர்வதற்காக தலா ரூ.15,000/- ஆராய்ச்சி நிதியாக வழங்கப்பட்டது.

13 மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளுக்கான பாடத்திட்டத்தை சீரமைக்கும் பணி தொடக்கம்.

தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கு / பயிலரங்கம் / மாநாடு நடத்த பகுதி நிதியுதவி.

62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், மென் திறன் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு 500 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க, ஆண்டுதோறும், ரூ.1.55 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

24 அரசு கல்லூரிகளில் "மெதுவாக கற்கும் மாணவர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு சிறப்பு கவனம்" அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

6 பல்கலைக்கழகங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களின் இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படுகிறது.

31 இணைத்தன்மைக் குழுவில், பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பு நோக்கத்திற்காக 1,035 படிப்புகளும், உயர் கல்வி பயில 167 படிப்புகளும் இணையானது / இணையற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

10 பல்கலைக்கழகங்களில் 10 மாநில திறன் மேம்பாடு மற்றும் நான் முதல்வன் திட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிறப்பு கூட்டம் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் நடத்தியது. அரசின் வழிகாட்டுதலின்படி திறன் மேம்பாட்டு ஆணையம் தயாரித்த மிகச் சிறப்பான நான் முதல்வன் பாடத்திட்டம் பட்டப்படிப்பில் 2, 4 மற்றும் 6 ஆகிய பருவ (semester) பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு நான் முதல்வன் திட்ட பாடங்களுக்கு கிரிடிட் (credit) வழங்கப்பட்டு அது கால அட்டவணையில் (time table) சேர்க்கப்பட்டு மாணவர்களுக்கு பயன்படும் வகையில் உருவாக்கம்.

தமிழ்நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் தேசிய தரவரிசை பட்டியல், டைம்ஸ் உயர்கல்வி மற்றும் குவாக்ரெல்லி சைமண்ட்ஸ் தரவரிசையில் பங்கேற்கவும், தேசிய கல்வி மற்றும் தரமதிப்பீடு மன்ற அங்கீகாரங்களுக்கு விண்ணப்பிக்கவும் பயிற்சி பட்டறைகளை நடத்துவதன் மூலம் ஊக்குவிக்க இம்மன்றம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனங்களில் திறனடைவு சார்ந்த கற்பித்தல் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் தேர்வு மதிப்பீட்டு முறையில் சீர்திருத்தங்களை இம்மன்றம் அறிமுகப்படுத்தியுள்ளது.

செயல்திறனை கணிசமாக மேம்படுத்தும் பொருட்டு முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சிக்கான கட்டமைக்கப்பட்ட கால அளவை அறிமுகப்படுத்துவதன் மூலம் இம்மன்றம் ஆராய்ச்சியை வலுப்படுத்தியுள்ளது.

இம்மன்றம், ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி அளித்து பட்டறைகள் மூலமாக உள்சேவை பயிற்சியினை பாரம்பரிய மதிப்பீட்டு முறைகளிலிருந்து கற்றல் பலன் அடிப்படையில் பாடத்திட்ட கட்டமைப்பு (LOCF) மூலமாக பாடநிர்ணய கட்டமைப்பு அணுகுமுறைக்கான மாற்றத்தினை செயல்படுத்துகிறது.






தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்



முனைவர் **பழனிவேல் தியாக ராஜன்** அவர்கள்
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்



தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் கீழ் ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் மூலம் 66,43,278 பரிவர்த்தனைகள்...

இ-சேவை மையங்கள் கீழ், 425 சேவைகளின் மூலம் 3,79,94,166 பரிவர்த்தனைகள்...

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சந்தாதாரர்களின் எண்ணிக்கை உயர்த்தும் வகையில் 50 இலட்சம் உயர் வரையறை செட்டப் பாக்ஸ்கள்...

தமிழ் இணையக் கல்விக்கழகம் மாணவர்களை ஒருங்கிணைத்து இணையவழித் தமிழ் கல்வியை வழங்க உலக நாடுகளில் 71 தொடர்பு மையங்கள் தொடக்கம்...

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளர்ச்சி

திருச்சி, நாவல்பட்டில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் (தரை + 4 தளங்கள்).

UMAGINE சென்னை 2023, சென்னை வர்த்தக மையத்தில் சுமார் 18,000 பங்கேற்பாளர்கள், 250க்கும் மேற்பட்ட பேச்சாளர்களுடன் 120 அமர்வுகளும், UMAGINE தமிழ்நாடு 2024, சுமார் 24,500 பங்கேற்பாளர்கள் 150க்கும் மேற்பட்ட பேச்சாளர்களுடன் 60 அமர்வுகளும், UMAGINE தமிழ்நாடு 2025, சென்னை வர்த்தக மையத்தில் சுமார் 13,000 பங்கேற்பாளர்கள் 170க்கும் மேற்பட்ட பேச்சாளர்களுடன் 46 அமர்வுகள் நடத்தப்பட்டன.

2024-2025 நிதியாண்டில் 1,12,910 மரக்கன்றுகளை நடுவதன் மூலம் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களில் பசுமை பரப்பினை உருவாக்கியுள்ளது.

விளாங்குறிச்சி ELCOSEZ கோயம்புத்தூரில் 2,66,710 சதுர அடி பரப்பில் தகவல் தொழில்நுட்ப கட்டடம்.

8 இடங்களிலுள்ள 628.89 ஏக்கர் நிலங்கள் குத்தகையின் அடிப்படையில் 42 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)

இணையதள அலைவரிசையை 1 Gbpsலிருந்து 10 Gbps ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது.

TNSDC II - சர்வர் ஹால்-2-இல் கூடுதலாக 56 அடுக்குகள் (Racks) மற்றும்போதுமான உட்கட்டமைப்புடன் விரிவாக்கம்.

TNSDCயில் 1,040 TB அளவில் சேமிப்பகப் பகுதி நெட்வொர்க்கின் (SAN) திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

e-Office, TANGEDCO, TNPDS பொது விநியோகத்திட்டம் போன்ற முக்கியமான பயன்பாடுகளுக்கு மெய்நிகர் இயந்திரங்கள் (Virtual Machines) வழங்கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளின் வலை பயன்பாட்டு செயலிகளின் புதிய பதிவேற்றங்கள் 231லிருந்து 439 ஆக அதிகரிப்பு.

தமிழ்நாடு மாநில வலையமைப்பு (TNSWAN)

மாநில வலையமைப்பு (TNSWAN), TANFINET நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அனைத்து பயனர் போக்குவரத்தும் TANFINET மூலம் அனுப்பப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN)

அரசுத் துறைகளில் 36 தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் (CISO) மற்றும் 103 தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் (ISO) நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு செயல்பாட்டு மையம் (Security Operations Center) நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுத்துறைகளின் 3,350+ அலுவலர்களுக்கு அவர்களின் பணிக்களத்தின்படி தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் தொகுதிகளுடன் 130+ பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்டம் (CCMP) ஆவணம் தயாரிக்கும் பணி செயல்முறையில் உள்ளது.

பல்வேறு ஏஜென்சிகளால் புகாரளிக்கப்பட்ட 695 எண்ணிக்கையிலான பாதிப்புகள் மற்றும் 114 சம்பவங்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது.

CSA-TN ஆல் கண்டறியப்பட்ட சந்தேகத்திற்கிடமான IP கள், தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்குப் புகாரளிக்கப்பட்டு, 71,402 IP கள் தடுக்கப்பட்டுள்ளன.

உதவி மையம் 044-24962400 Ext. 303-இல் நிறுவப்பட்டுள்ளது. info.csatn@tn.gov.in & incident.csatn@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் உதவி அளிக்கப்படுகிறது.

சிவில் சர்வீஸ் பயிற்சி நிறுவனத்தின் (CSTI) கணினி பயிற்றுநர்களுக்கு இணைய பாதுகாப்பு பயிற்சி மற்றும் அரசு அதிகாரிகளுக்கு அவர்களின் வழக்கமான வகுப்பு அமர்வுகளில் பயிற்சி.

இணைய பாதுகாப்பு கொள்கை 2.0 (CSP 2.0) வெளியீடு.

பொது இலவச அருகலை

பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொது இடங்களில் இலவச Wi-Fi அணுகல் புள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

2023-2024ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடற்கரைகள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், பூங்காக்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இதுவரை 1,388 இலவச அருகலை (Wi-Fi) அணுகல் புள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டில் தாம்பரம், ஆவடி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு உட்பட்ட பகுதியில், 301 இலவச Wi-Fi அணுகல் புள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு

தமிழ்நாடு தொலைத்தொடர்பு உள்கட்டமைப்புக் கொள்கை-2022 வெளியிட்டது.

அரசு வழிகாட்டுதலின்படி, எல்காட் நிறுவனம் தொலைதொடர்பு கோபுரம் எழுப்புதல் ஆப்டிகல்ஃபைபர் கேபிள் நிறுவுவதற்கான வழித்தட அனுமதியை வழங்குவதற்காக நிகழ் நிலை இணைய முகப்பினை (online portal) உருவாக்கி, வெளிப்படையான முறையில் காலக்கெடுவுடன் முறைபடுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

தொலைதொடர்பு குறித்த குறைகள் மற்றும் வழித்தட அனுமதி அளிக்கும் இணையம் சார்ந்த இடர்களை களைவதற்காக, எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநரை அதிகாரியாக அரசு நியமனம்.

31.01.2025 வரை வழங்கியுள்ள அனுமதியின் நிலை குறித்த விவரங்கள்:

ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள உள்கட்டமைப்பை முறைப்படுத்துதல் தொடர்பான 45,498 விண்ணப்பங்களுள் 33,082 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

புதிய உள்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான 11,507 விண்ணப்பங்களுள் 4,517 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நிரந்தர ஆதார் பதிவு மையம்

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) கீழ் இயங்கும் ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் (PECs):

எல்காட் நிறுவனம் 266 நிரந்தரப் பதிவு மையங்களை 38 மாவட்ட ஆட்சியரகங்கள், 15 மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள், 34 மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், 112 நகராட்சி அலுவலகங்கள், 6 மாநகராட்சி பிரிவு அலுவலகங்கள், 13 பேரூராட்சி அலுவலகங்கள், 3 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், 31 வட்டார வளர்ச்சி அலுவலகம், 8 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், 1 சிறப்பு நகரம் (நெய்வேலி), 1 கருவூல அலுவலகம், 3 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் மற்றும் 1 பொதுவைப்பு நிதி அலுவலகங்களில் நிறுவியுள்ளது.

மே 2021 முதல் ஜனவரி 2025 வரையிலான காலத்திற்கான மொத்த பரிவர்த்தனையின் எண்ணிக்கை 66,43,278 ஆகும்.

சமக்ர சிக்ஷாவின் கீழ் கல்வித் தொகுதிகளில் ஆதார் சேவை மையங்கள் நிறுவப்பட்ட விவரங்கள்:

பள்ளி மாணவர்களுக்கு ஆதார் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக, அனைத்து 414 கல்வித் தொகுதிகளிலும் 770 இடங்களில் ஆதார் சேவை மையத்தை நிறுவ, எல்காட் நிறுவனத்தை ஒரு பதிவு முகவராக சமக்ர சிக்ஷா, பள்ளி கல்வித்துறை தேர்வு செய்துள்ளது.

ஜனவரி 2022 முதல் ஜூலை 2023, பிப்ரவரி 2024 முதல் ஜனவரி 2025 வரையிலான பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 25,24,528 ஆகும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)

தரவு தூய்மை:

திறமையான, வெளிப்படையான மற்றும் தடையற்ற சேவைகளை குடிமக்கள் பெறுவதற்கு உதவியாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தரவு தூய்மை திட்டத்தை மேற்கொள்வதற்கான முகமை ஆணையமாக நியமிக்கப்பட்டுள்ளது.

உத்தி மற்றும் சாதனைகள்:

கூட்டுறவு நகைக்கடன் மற்றும் சுய உதவிக் குழுக்கடன் தரவை பகுப்பாய்வு செய்து, தகுதியான பயனாளிகளுக்குச் சேவை வழங்குவதன் மூலம் தள்ளுபடி திட்டங்களில் ஆயிரக்கணக்கான கோடிகளைச் சேமித்தது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் அட்டைகள் இல்லாத வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, புதிய முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட கார்டுகளை வழங்க சுகாதாரத்துறைக்கு தரவு பகிரப்படுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் (KMUT):

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் ஆதார் எண் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்ச்சியாக சரிபார்க்கப்பட்டு 99.13% பயனாளிகளுக்கு வெற்றிகரமாக உரிமைத் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 1.14 கோடி பயனாளிகள் பயன்.

புதுமைப் பெண் திட்டம் & தமிழ்ப் புதல்வன் திட்டம்:

தரவு தூய்மை குழு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கான தகுதியான பயனாளிகளைக் கண்டறிய உதவியது. 3.5 இலட்சம் பயனாளிகள் தரவுத்தொகுப்பின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இ-சேவை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, பல்வேறு அரசு துறைகளின் சேவை திட்டம் வாயிலாக குடிமக்களை மையப்படுத்திய சேவைகளை, மாநிலம் முழுவதும் அமைந்துள்ள இ-சேவை மையங்கள் மூலம் ஆன்லைன் முறையில் வழங்கி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதிசெய்கிறது.

உத்திகள் மற்றும் சாதனைகள்:

2021 ஆம் ஆண்டில், இ-சேவை 116 சேவைகளை வழங்கி வந்தது. தற்போது 425 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்த பரிவர்த்தனை 3,79,94,166 ஆகும்.

"அனைவருக்கும் இ-சேவை" திட்டத்தின் கீழ் "26,311" இ-சேவை பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளது. EFA பரிவர்த்தனைகள் 2024-ஆம் ஆண்டில் 24% அதிகரித்துள்ளது.

குடிமக்களின் குறைகளை தீர்க்க தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் 10 பணியாளர்களுடன் "18004256000" என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் சேவைகளை வழங்க தொடங்கியது. மேலும், 2024 மே மாதம் முதல் கைவிடப்பட்ட அழைப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க, 20 பணியாளர்களாக அதிகரித்தன் மூலம் கைவிடப்பட்ட அழைப்புகளுக்கான தீர்வுக்காணப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்காக நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களுக்குள் நுழைவதற்கான மின்னணு அனுமதிச் சீட்டை (E-Pass) தமிழ்நாடு மின்

ஆளுமை முகமையானது செயல்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது 5 நாள்களுக்குள் QR குறியீட்டுடன் கூடிய E-Pass இணையதளத்தை உருவாக்கி, அதன் மூலம் 13,24,534 இ-பாஸ் உருவாக்கப்பட்டு, மொத்தம் 71,46,075 பயணிகள் இதைப் பயன்படுத்தி பதிவுசெய்துள்ளனர்.

முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலி மற்றும் நிகழ் நேர தகவல் பலகை

இந்த செயலி இத்திட்ட செயல்முறையின் முக்கிய தரவுகளை பதிவுசெய்ய பயன்படுகிறது. இதில் சமையலுக்கு முன் செயல்பாடுகள், சமையலுக்கான பின், சரக்கு மேலாண்மை, தரச் சரிபார்ப்பு, தேவை முன்கணிப்பு மற்றும் நிதி மேலாண்மை உள்ளிட்டவை அடங்கும்.

மேலும், உணவு தயாரிக்கும் செயல்முறையின் நேரத்தைக் கண்காணித்து, சமையல் தொடங்கும் தருணத்திலிருந்து உணவு பரிமாறப்படும் வரை முழு நேர தகவல்களும் செயலியில் பதிவுசெய்யப்பட வேண்டும்.

உணவு வழங்கும் வாகனத்தின் தரவுகள் GPS மூலம் சேகரிக்கப்பட்டு, தகவல் பலகையில் கண்காணிக்கப்படுகின்றன. மேலும், 34,987 பள்ளிகளின் இடம் தொடர்பான தகவல்கள் தரவுத்தளத்திற்கு அனுப்பப்பட்டு, தகவல் பலகையின் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில உதவித் தொகை இணையதளம் (TNSSP)

தமிழ்நாடு மாநில உதவித் தொகை இணையதளம் (TNSSP) என்பது மாநிலத்தின் பல்வேறு துறைகள் வழங்கும் உதவித் தொகை திட்டங்களுக்கு ஒரே சாளரத்திலிருந்து அணுகுமாற்றம் செய்யக்கூடிய ஒரு தளமாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) உருவாக்கியுள்ளது.

மாணவர்களின் அடிப்படை விவரங்கள், ஆதார் eKYC, eSevai சேவைகள் மூலம் சாதிச் சான்று, வருமானச் சான்று மற்றும் முதல் பட்டதாரி சான்றுகளை சரிபார்த்தல், கல்வி தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகை வழங்குதல் ஆகியவை UMIS தரவுத்தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட விவரங்கள் ஆகும்.

உதவித் தொகையை நேரடியாக பரிவர்த்தனை செய்வதற்காக DBT-PFMS உடன் ஒருங்கிணைக்கப்பட்டு SFTP மூலம் செயல்படுத்தப்பட்டது.

TNSSP இணையதளத்தில் முக்கிய நான்கு நலத்துறைகள் - ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இணைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு (UMIS)

மாணவர் தகவல் களஞ்சியமாக மட்டுமல்லாமல், UMIS ஒரு சக்திவாய்ந்த முடிவு ஆதரவு அமைப்பாக செயல்படுகிறது. விரிவான அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வுகள் மூலம் தரவு



சார்ந்த முடிவுகள் மற்றும் கல்வி செயல்முறைகளை மேம்படுத்துவதற்கு UMIS ஆட்சியாளர்களுக்கு பயன்படுகிறது. கல்லூரிகளில் மாணவர்களை பதிவுசெய்வதற்கு மட்டுமின்றி ஆதார் மூலம் மாணவர்களின் விவரங்களைச் சரிபார்க்கவும் உதவுகிறது. இந்த அமைப்பு உதவித்தொகை மற்றும் பிற ஏற்பாடுகளை அரசாங்கத்தால் உடனடியாக வழங்க வழிவகை செய்கிறது.

பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு (UMIS) அதன் விரிவான சேவைகள் மற்றும் ஆதரவுடன் கல்வித் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

UMIS-இன் செயல்திறனை வெளிப்படுத்தும் முக்கிய புள்ளி விவரங்கள்:

29 துறைத் தலைவர்கள் (HODs) அமைப்பின் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகளால் பயனடைகின்றனர்.

77 பல்கலைக்கழகங்களுக்கு மேம்பட்ட மேலாண்மை கருவிகள் மூலம் அவற்றை மேம்படுத்துதல்.

5,434 கல்லூரிகளின் நிர்வாகப் பணிகள் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுதல்.

UMIS மூலம் 28,77,927 மாணவர்கள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மின் அலுவலகம் (DoTN)

தமிழ்நாடு அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் மின்-அலுவலக திட்டத்தை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்த தொடங்கியது. இன்றுவரை, 292 துறை அலுவலகங்களில் மின்-அலுவலகம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தமாக, 93,545 பயனர்கள், பெயர் அடிப்படையிலான பயனர் உள்நுழைவு ID வழங்கப்பட்டு, 42,57,058 மின்-கோப்புகள் மாநில அரசு அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இது, அரசு அலுவலகங்களில் செயல்திறன் வாய்ந்த மின்னணு கோப்பு மேலாண்மையினை நிரூபிக்கிறது.

இந்த மின்னணு கோப்பு மேலாண்மை அமைப்பு 'காகிதமற்ற' அலுவலகங்களை உருவாக்க உதவுகிறது. இது கோப்புகளை விரைவாக கையாளவும் நிர்வாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இத்திட்டம், குடிமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, திறன்மிக்க நிர்வாகத்தை நோக்கி நமது மாநிலத்தை வழிநடத்துகிறது.

நேரடிப் பயன் பரிமாற்ற தளம் (DBT)

நேரடிப் பயன் பரிமாற்ற தளம் என்பது மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களுக்கான நேரடிப் பயன் பரிமாற்றங்களை செயலாக்குவதற்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளமாகும்.

ஆதார் சரிபார்ப்பு,பெயர் சரிபார்ப்பு,வங்கிக் கணக்கு இணைப்பு நிலை உள்ளிட்ட பயனாளர்களுக்கு பணப் பலன்களை நேரடி பரிமாற்றம் செய்ய தேவையான அனைத்து சரிபார்ப்புகளும் இந்த தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

சரிபார்ப்புகளை மேற்கொண்டு,துறைகளிடமிருந்து ஒப்புதல் பெற்றபிறகு,ஆதார் அடிப்படையிலான நேரடி பயன் பரிமாற்ற முறை மூலம் பயனாளர்களின் வங்கிக் கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்படும்.

பொது நிதி மேலாண்மை அமைப்புடன் (PFMS) நேரடி பயன் பரிமாற்ற இணையதளம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மாநில ஒருங்கிணைப்பு முகமையுடன் (SNA) நேரடி பயன் பரிமாற்ற தளம் (DBT) ஒருங்கிணைந்து (DBT-SNA), பல்வேறு மாநில அரசின் SSS நல திட்டங்களான முதியோர் ஓய்வூதியம் (OAP), தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் (KMUT), ஆதிதிராவிடர் (ADW) மற்றும் பழங்குடியினர் மாணவிகளுக்கான ஊக்கத்தொகை. மொத்தத்தில் 14,50,83,391 பயனாளிகளுக்கு பணப் பலன்களை நேரடி பயன் பரிமாற்ற தளம் (DBT-SNA) மூலமாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

பொது நிதி மேலாண்மை அமைப்புடன் (PFMS) நேரடி பயன் பரிமாற்ற தளம் (DBT) ஒருங்கிணைந்து (DBT-PFMS), பல்வேறு மத்திய, மாநில அரசின் நல திட்டங்களான-பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ-மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் 4,10,148 மாணவ /மாணவியருக்கு பணப் பலன்களை நேரடி பயன்பரிமாற்ற தளம் (DBT-PFMS) மூலமாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மாற்றம் (Digital Transformation - DiTN)

டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம் விரைவாக, கண்காணித்து அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையில் அமைந்த வெளிப்படையான நிர்வாகத்தை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

துறைகள் மூலம் IT மதிப்பீடு இணையதளத்தில் (IT ASSESSMENT PORTAL) உள்ளிடப்பட்ட தரவுகளிலிருந்து பகுப்பாய்வு/கவனிப்புகள் சேகரிக்கப்படுகின்றன. பின்வரும் அளவுருக்களை மையமாகக் கொண்டு, துறைகள் உள்ளிட்ட விவரங்களின் அடிப்படையில் பரிந்துரைகள் முன்மொழியப்படுகின்றன:

PMU / IT பணியாளர் விவரங்கள்

பாதுகாப்புத் தணிக்கை, SSL ஒப்பந்த கால விவரங்கள்

வலைத்தளம் / வலைத்தளவிண்ணப்ப இருப்பிட விவரங்கள்

IT Assets-க்கான AMC கால விவரங்கள்

ஒருங்கிணைப்பு சேவைகள் (SMS, WhatsApp, e-sign)

ESD சேவைகள்

பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்து HOD களிடமிருந்து நடவடிக்கை அறிக்கை கோரப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது டிஜிட்டல் தமிழ்நாடு திட்டத்தை செயல்படுத்த "தகவல் தொழில்நுட்ப மதிப்பீடு இணையம் (IT Assessment Portal) வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அனைத்து துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை எட்டுவதற்கு கீழ்க்கண்ட விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

திட்ட தகவல் சுயவிவரம் (Project Information Profile)

நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப சுயவிவரம் (Organization IT Profile)

மின்னணு சேவைகள் விநியோகம் (ESD Services)

நிறுவன தகவல் தொழில்நுட்ப சுயவிவரத்தில் மொத்தம் 240 துறைத் தலைவர்கள் (HODs) பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

திட்டத் தகவல் சுயவிவரத்தில் மொத்தம் 388 விண்ணப்ப விவரங்கள் கைப்பற்றப்பட்டன.

ESD சுயவிவரத்தில் மொத்தம் 451 ESD சேவை விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

மின்னஞ்சல் சேவை

பல்வேறு அரசு அலகுகளில் பல்வேறு பதவிகளில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 'tn.gov.in' என்ற இணையதள முகவரி (domain) பெயருடன் கூடிய மின்னஞ்சல் முகவரிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது வரை சுமார் 1,48,400 மின்னஞ்சல் முகவரிகள் உருவாக்கப்பட்டுள்ளன

ஆதார் சேவைகள்

ஆதார் அங்கீகாரத்தின் நோக்கம் டிஜிட்டல், ஆன்லைன் அடையாள தளத்தை வழங்குவதாகும், இதன் மூலம் ஆதார் எண் வைத்திருப்பவர்களின் அடையாளத்தை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் உடனடியாக சரிபார்க்க முடியும்.

ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக உள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, அங்கீகரிப்பு பயனர் முகமை (AUA) / e-KYC பயனர் முகமை (KUA) சேவைகளை அரசு துறைகளுக்கு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆதார் கட்டண பால அமைப்பு (APBS) முறையின் மூலம் நேரடியாக பல்வேறு நலத்திட்டங்கள் பயனாளர்களுக்கு சென்றடைகிறது.

அரசாங்கத்தின் ஒரு திட்டத்தில் ஒரு பயனாளி ஒன்றுக்கு மேற்பட்ட முறை பயன் பெறுவதை ஆதார் சரிபார்ப்பு முறை தடுக்கிறது.

2024ஆம் ஆண்டு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குதலின்போது 2,97,83,356 குடும்ப அட்டைதாரர்கள் ஆதார் பயோமெட்ரிக் மூலம் சரிபார்க்கப்பட்டனர்.

இதுவரை 91,90,818 பதிவுதாரர்களின் (01.01.2023 முதல் 31.12.2023 வரை) விவரங்கள் பதிவு நேரத்தின்போது ஆதார் பயோமெட்ரிக்ஸ் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளன.

மேலும், புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பிக்கும்போது 34,92,560 விண்ணப்பதாரர்களின் விவரங்கள் ஆதார் பயோமெட்ரிக்ஸ் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 29.12.2023 முதல் ஆதார் அங்கீகாரம் மூலம் நியாயவிலைக் கடைகள் வழியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு வெள்ள நிவாரண மானியம் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை விநியோகித்துள்ளது.

குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் நவம்பர், 2023-இல், 38 மாவட்டங்களுக்கும் 4,29,08,025 மாதாந்திர பரிவர்த்தனையை அங்கீகரிக்கிறது.

தமிழ்நாடு மின்ஆளுமை முகமையானது முகம் வழி அங்கீகாரத்தை (Face Auth) மாநில உதவித் தொகை இணைய முகப்பில் செயல்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை புதிய முகவடிவ அங்கீகாரம் முறைச் (Face Auth eKYC) செயலியை உருவாக்கி, கல்வி உதவித்தொகைப்பெறும் மாணவரின் ஆதார் விவரங்களைச் சரிபார்ப்பதற்கு (eKYC) ஜனவரி 29 முதல் மார்ச் 02, 2024 வரை பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து செயல்பட்டு நிறைவேற்றியது.

2025 ஆம் ஆண்டு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குதலின்போது (09.01.2025 - 13.01.2025) 2,27,42,002 குடும்ப அட்டைதாரர்கள் ஆதார் பயோமெட்ரிக் மூலம் சரிபார்க்கப்பட்டனர்.

இதுவரை 83,48,703 பதிவுதாரர்களின் (01.01.2024 முதல் 31.12.2024 வரை) விவரங்கள் பதிவு நேரத்தின்போது ஆதார் பயோமெட்ரிக்ஸ் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளன.

மேலும், 2024 ஆம் ஆண்டு புதிய மின் இணைப்புக்கு விண்ணப்பிக்கும்போது 13,57,238 விண்ணப்பதாரர்களின் விவரங்கள் ஆதார் பயோமெட்ரிக்ஸ் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளன.

வாட்ஸ்அப் சேவை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை 26 அரசு துறைகளை வாட்ஸ்அப் சேவையில் இணைத்துள்ளது.

வாட்ஸ் ஆப் சேவை மூலம் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்ட செய்தி 22,79,136 கைபேசி எண்களுக்கு அனுப்பப்பட்டது.

இஸ்ரோ விஞ்ஞானிகளை கவுரவித்த நிகழ்ச்சி 57,37,826 கைபேசி எண்களுக்கு அனுப்பப்பட்டது.

சென்னையில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டி அழைப்பு 45,75,549 கைபேசி எண்களுக்கு அனுப்பப்பட்டது.

மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் திறக்கப்பட்ட செய்தி 1,50,45,994 கைபேசி எண்களுக்கு அனுப்பப்பட்டது.

திறன் போட்டி (Skill Competition) தொடர்பான செய்தி 6,88,546 கைபேசி எண்களுக்கு அனுப்பப்பட்டது.

பட்ஜெட் தொடர்பான செய்தி 2,15,34,827 குடிமக்களுக்கு அனுப்பப்பட்டது.

கலைஞர் மகளிர் உரிமை தொகை தொடர்பான வீடியோ செய்தி 1,59,82,428 மொபைல் எண்களுக்கு அனுப்பப்பட்டது.

வாட்ஸ் ஆப் சேவை மூலம் 2,87,85,308 செய்திகள் சென்னை மாநகராட்சியிலிருந்து குடிமக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1,32,67,641 செய்திகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திலிருந்து குடிமக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு கல்வித் துறையிலிருந்து 2,79,37,776 செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியிலிருந்து வரி செலுத்துவோருக்கு 1,18,10,840 செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

குறுஞ்செய்தி சேவை

மாநிலத்தின் குடிமக்கள் / அதிகாரிகளுக்கு 261 கோடி (ஜனவரி 2022 – டிசம்பர் 2024) செய்திகளை வெற்றிகரமாக வழங்கியுள்ளது.

மாநிலத்தின் முதன்மைத் திட்டங்களான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் போன்றவற்றை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) குறுஞ்செய்தி நுழைவாயில் சேவைகளை வழங்குகிறது. மேலும், இ-சேவை, மின்-மாவட்டம், முதல்வரின் முகவரி, மாநில உதவித்தொகை திட்டம், பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு, வேளாண்மை உள்ளீட்டு முறையின் விவசாயி ஆன்லைன் பதிவு போன்ற சில முக்கியமான பயன்பாடுகளுக்கும் வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 229 சேனல்களை (147 கட்டணமில்லா சேனல்கள் + 82 கட்டண சேனல்கள்) ரூ.140 + GST என்ற குறைந்த கட்டணத்தில் டிஜிட்டல் முறையில் வழங்குகிறது. இதில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ரூ.70 + GST என்ற வருவாய் பங்கீடும், உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு ரூ.70 + GST என்ற வருவாய் பங்கீடு முறையும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது..

சந்தாதாரர் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கு 50 இலட்சம் உயர் வரையறை செட்டப்பாக்ஸ்கள் வழங்க ஒப்பந்த புள்ளி இறுதிசெய்யபட்டு முதற்கட்டமாக 2 இலட்சம் உயர்வரை செட்டப்பாக்ஸ்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கேபிள்டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்

கேபிள் டிவி தொழிலாளர்கள் நலவாரியம் என்பதனை மறுசீரமைப்பு செய்து "தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்" என மறுபெயரிடப்பட்டு கேபிள் டிவி தொழிலாளர்களோடு, உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களும் பயன்பெறும் வகையில் தகுதியான நபர்களை உறுபினர்களாக சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 2,362 எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் 1,490 விண்ணப்பங்கள்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA)

கல்விப்பிரிவு

தொடர்பு மையங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம், உலகநாடுகளில் தொடர்பு மையங்கள் ஏற்படுத்தி, அவற்றின் மூலம் மாணவர்களை ஒருங்கிணைத்து இணையவழித் தமிழ்க்கல்வியை வழங்கி வருகிறது. துபாய், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பஹ்ரைன், மொசாம்பிக், மியான்மர், நைஜீரியா, ஓமன், மாலத்தீவு, ஸ்காட்லாந்து, தென் கொரியா, சுவீடன், தைவான், தாய்லாந்து, நெதர்லாந்து, உகாண்டா, ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய ராச்சியம், அமெரிக்கா, சாம்பியா மற்றும் இந்தியா முதலான நாடுகளில் 71 தொடர்பு மையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. பிற நாடுகளில் தொடர்பு மையங்கள் தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள்

இணையவழி தமிழ்க் கல்வி பாடத்திட்டம் அகரம், இகரம், உகரம், முகரம், சிகரம் என 5 நிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ் கற்கும் மாணவர்களுக்கு நிலை1- முதல் பருவத்திற்கான பாடநூல்கள், துணைக் கருவிகள் வெளியீட்டு விழாவும், தமிழ்ப் பரப்புரைக் கழகச் செயல்பாடுகளின் தொடக்க விழாவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்ப் பரப்புரைக் கழகப் பணிகள்

நாட்டுப்புறக் கலைகளான சிலம்பாட்ட பயிற்சிக்கான அடிப்படை பயிற்சி காணொலிகளாகப் படமாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தேவாரம், திருவாசத்தில் பாடப்பெற்ற பாடல்கள் இசைக்கோர்ப்புடன் பாரம்பரிய முறையில் ஓதுவார்களைக் கொண்டு பாடச்செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சி

அயலக மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக ஆசிரியர் பட்டயப் பயிற்சி என்ற கல்வித்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படுகிறது.

இணையவழித் தமிழ் வகுப்புகள்

இணையவழியில் தமிழ் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு இணையவழியில் தமிழ்வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இணையவழி மரபுவழிப் பண்ணிசைப் பயிற்சி

தமிழ் பண்பாட்டுப் பணிகளில் ஒன்றாக தேவாரம், திருவாசகத்தைப் பாடத்திட்டமாக்கி மரபுவழிப் பண்ணிசைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

பேச்சுத் தமிழ் பயிற்சி

தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுப் பரப்புரை திட்டத்தின் ஒரு பகுதியாக, பேச்சுத் தமிழ் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, இந்திவழிப் பேச்சுத் தமிழ் பாடத்திட்டம் வகுக்கப்பட்டு, அப்பாடங்கள் 14 காணொலிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியானது மத்திய அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு புலம்பெயர்ந்தோருக்கு இந்தி வழியில் பேச்சுத் தமிழ் கற்றுத்தரப்பட்டு வருகின்றன.

உயர்கல்வி

"தமிழைப் பிழையின்றி எழுதுவோம்" என்ற தமிழ் இலக்கண புத்தகம் வெளியிடப்பட்டது.

இளநிலைத் தமிழியல் பட்டக்கல்விக்கான பாடத்திட்டம் சீராய்வு செய்யப்பட்டு, பாடங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதியதாக முதுகலைத் தமிழ்ப் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பயன்படும் வண்ணம் "கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும்" என்ற நூல் வெளியிடப்பட்டது.

பிறபணிகள்

தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் பொருண்மையைக் கொண்டு குறளோவியம் என்ற பெயரில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, 365 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருக்குறள் குறளோவியம் தினசரி நாள்காட்டிப் புத்தகமாக அச்சிடப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது.

திருக்குறள் குறளோவியக் கண்காட்சி, சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்றது.

சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் உள்ள அறிவுச் செல்வங்களை இன்றைய தலைமுறை பெறும் வகையில் 366 பாடல்களைத் தேர்ந்தெடுத்து ஓவியங்களாக வரைந்து,

விளக்கவுரை மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் சங்கத்தமிழ் நாள்காட்டிப் புத்தகமாக அச்சிடப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வுப்பிரிவு

கடந்த நான்கு ஆண்டுகளில் சான்றிதழ், மேற்சான்றிதழ் மற்றும் பட்டப்படிப்பில் 22,247 மாணவர்கள் பதிவுசெய்து 11,632 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

மின்நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் அரிய ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மின் நூலகம் ஒன்றை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது. 76,306 புத்தகங்கள் மற்றும் பருவவெளியீடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 1,06,575 புத்தகங்கள் மற்றும் பருவவெளியீடுகள் MARC21 முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 16,200 புத்தகங்கள் உருபடத்திலிருந்து தேடுதல் வசதி கொண்ட PDF கோப்புகளாக (searchable pdf) மாற்றப்பட்டுள்ளன. மேலும், மின்நூலகத்தை பார்வை குறைபாடுடையவர்களும் பயன்படுத்தும் வகையில் உள்ளடக்க தமிழ் மின்நூலகமாக மாற்றும் பொருட்டு ரூ.1 கோடியை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அச்சு நூல்களின் 12.85 இலட்சம் பக்கங்கள் எழுத்துணரித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரைவடிவில் மாற்றப்பட்டுள்ளன. மேலும், பிழைத்திருத்தம், படத்தலைப்பு உருவாக்கம் மற்றும் உள்ளடக்கப் பக்கங்களாக மாற்றம் செய்து doc, epub, daisy ஆகிய கோப்புகளாக 1,30,000 பக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரிய ஒளி-ஒலி ஆவணங்கள், ஒளிப்படங்கள், பிற வரலாற்று ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்ய அரசு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 6,974 ஒளிப்படங்கள் மற்றும் 800 மணி நேரம் கொண்ட ஒளி-ஒலி ஆவணங்கள்மின்னுருவாக்கப்பட்டுள்ளன.

'கப்பலோட்டியத் தமிழன்' வ.உ. சிதம்பரனார் அவர்கள் 150-ஆவது பிறந்தநாள் - நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் மின்மயமாக்கம்.

வ.உ.சி. படைப்புகள் மின்னுருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150 ஆவது பிறந்த நாள் விழாவினையொட்டி, 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட 14 அறிவிப்புகளில், "தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வாயிலாகக் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும்" என்பதும் ஒன்றாகும்.

அதனடிப்படையில், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள், அவர் தொடர்புடைய நூல்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள் மற்றும் இதர ஆவணங்கள் போன்றவை பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு மொத்தம் 127 ஆவணங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

வ.உ.சி-யால் படைக்கப்பட்டவை: வ.உ.சி. எழுதிய நூல்கள்-11, வ.உ.சி. பதிப்புகள்-7, வ.உ.சி. உரை எழுதிய நூல்கள்-3, வ.உ.சி. மொழியாக்கங்கள்-4,

வ.உ.சி. பற்றிய நூல்கள்: வ.உ.சி. வரலாற்று நூல்கள்-20, வ.உ.சி. நூற்றாண்டுப் பதிவுகள்-6, வ.உ.சி. மலர்கள்-2, வ.உ.சி. குறித்த கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு-1, வ.உ.சி. ஆய்வு நூல்கள்-5, பிற நூல்கள்-6,

கையெழுத்துப் பிரதிகள்-7, ஒளிப்படங்கள்-17, ஒளி-ஒலி ஆவணங்கள், பிற ஆவணங்கள்-38, வாழ்க்கைக் குறிப்பு.

மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின்நூலக இணையதளத்தில் வ.உ.சி. யின் 150 ஆவது பிறந்த நாள் விழா சிறப்பு இணையப்பக்கமாக (https://www.tamildigitallibrary.in/voc) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையப்பக்கம் பொது மக்கள் மற்றும் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.11.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இதுவரை, 127 நூல்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள், ஆவணங்கள் மற்றும் பல்லூடக ஆவணங்கள் மின்னுருவாக்கப்பட்டுள்ளன.

வ.உ. சிதம்பரனார் 150-ஆவது பிறந்தநாள் சிறப்பு இணையப்பக்கம் 18.11.2022 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. (https://www.tamildigitallibrary.in/voc)

புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகளை ஆவணப்படுத்துதல்

புகழ்பெற்ற 38 தலைவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகள் மின்னுருவாக்கப்பட்டு இணையதளத்தில் அனைவரும் அணுகும் வகையில் ஆவணமாக்கப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'கலைஞர் கருவூலம்' என்ற சிறப்பு இணையப் பக்கம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து 'கலைஞர் கருவூலம்' என்ற சிறப்பு இணையப் பக்கம் (https://www.tamildigitallibrary.in/kalaignar/) தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பக்கத்தில் இலக்கியம், இதழியல், உரைகள், திரைப்படங்கள், காலப்பேழை, 'கலைஞர் குறித்து' எனும் தலைப்புகளின் கீழ் கலைஞரின் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள், கட்டுரைகள், தன்வரலாறு, இலக்கிய உரைகள், நடத்திய இதழ்களின் பிரதிகள், ஆண்டு மலர்கள், கடிதங்கள், கேலிச்சித்திரங்கள், சட்டமன்ற உரைகள், சொற்பொழிவுகள், நேர்காணல், திரைக்கதை வசனங்கள், பாடல்களின் தொகுப்புகள், புகைப்படங்கள், ஒலிப்பேழைகள், காணொலிகள், கலைஞர் குறித்த நூல்கள் மற்றும் கலைஞர் குறித்த கட்டுரைகள் என மொத்தம் 955 அரிய உள்ளடக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

கணினித் தமிழ் - ஆய்வு மற்றும் உருவாக்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினித் தமிழ்த் தொடர்பான எண்ணற்ற மென்பொருள்களை உருவாக்கி இலவசமாகப் பொதுப் பயன்பாட்டிற்கு வழங்கி வருகிறது. அப்பணிகளைத் தொடர்ந்து தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.10.2021 அன்று 'கீழடி - விசைப்பலகை - (Keezhadi - Keyboard)' மற்றும் 'தமிழி - ஒருங்குறி மாற்றி (Tamizhi - Unicode Converter)' என்ற இரு மென்பொருட்கள் வெளியிடப்பட்டுள்ளது.



கீழடி – விசைப்பலகை தமிழ்99 விசைப்பலகை (Tamil99), ஒலிபெயர்ப்பு விசைப்பலகை (Phonetic), பழைய தட்டச்சு விசைப்பலகை (Old Typewriter) ஆகியவற்றை உள்ளடக்கியது.

தமிழி – ஒருங்குறி மாற்றி

இம்மென்பொருள் வானவில்-அவ்வையார், TAB, TAM போன்ற குறியாக்கத்தில் உருவான எழுத்துருக்களை ஒருங்குறிக்கு மாற்றவல்லது. மேலும் doc, docx, xls, ppt. pptx போன்ற அமைப்புகளில் உள்ள ஆவணங்களையும் மாற்றுகின்றது.

தமிழ் இலக்கியப் பதிப்பி

இந்த இலக்கியப் பதிப்பி தமிழ் இலக்கியங்களுக்கு சொல்லடைவு மற்றும் தொடரடைவு தொகுக்க உதவுகிறது.

கல்வெட்டுப் படிப்பான்

இம்மென்பொருள் 6 ஆம் நூற்றாண்டு முதல் 10 நூற்றாண்டு வரையுள்ள காஞ்சிபுரம் மாவட்ட கல்வெட்டுகளைத் தற்காலத் தமிழில் மாற்றுகிறது.

தமிழ்க் கற்றுணரி

இவ்விளையாட்டுச் செயலி மூலம் தமிழ் வினைச் சொற்களை எளிதில் கற்க முடிகிறது.

கணினித் தமிழ் மென்பொருள் உருவாக்கம்

தமிழ் கணிப்பொறி மென்பொருள் மேம்பாட்டிற்காக ரூ.110.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 7 மென்பொருட்கள் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் 1 மென்பொருளான 'கலைஞர் தமிழ்ச் சொற்றொடர் பகுப்பி' கணித்தமிழ்24 என்ற பன்னாட்டு மாநாட்டின்போதும், 3 மென்பொருள்கள் 2024 ஆகஸ்டு மாதத்தில் வெளியிடப்பட்டன.

கணித்தமிழ்24 – பன்னாட்டுக் கருத்தரங்கம்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் நடத்தப்பட்ட தமிழிணையம் 1999-க்குப் பின் 25 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் கணித்தமிழ் – பன்னாட்டுக் கணினித் தமிழ் மாநாடு 8 முதல் 10 பிப்ரவரி 2024 தேதிகளில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்பட்டது. இதில் 10 நாடுகளிலிருந்தும் மற்றும் இந்தியாவின் 8 மாநிலங்களிலிருந்தும் -50க்கும் மேற்பட்ட அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். மொத்தம் 1,800 கணித்தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு

மாதந்தோறும் கணித்தமிழ்த் தொடர்பான சொற்பொழிவுகளை உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் பயன் பெறும் வகையில் அவர்களுக்குத் தமிழ்க் கற்றல், கற்பித்தல், மின்-நூலகம், கலை,மரபு மற்றும் பண்பாடு போன்றவைகளை அறிஞர் பெருமக்களைக் கொண்டு விரிவுரையாற்ற ஏதுவாக அரசாணைப் பிறப்பிக்கப்பட்டு முதல் நிகழ்ச்சியாக ஜனவரி -2025இல் எத்திராஜ் மகளிர் கல்லூரியில் முதல் சொற்பொழிவு தொடங்கி வைக்கப்பட்டது.

கணித்தமிழ் காலாண்டு மின்-இதழ்

கணினித் தமிழில் என்னென்ன முன்னேற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழில் மென்பொருள் உருவாக்குவோர் புரிந்துகொண்டு பயன்பெறும் வகையில் ஒரு காலாண்டு மின்-இதழ் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் மூலம் பாரத்நெட் திட்டம் செயல்படுத்தப்பட்டு 12,525 கிராம பஞ்சாயத்துகளை கண்ணாடி இழை வடத்தின் (OFC) மூலம் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாரத்நெட் இறுதிகட்ட இணைய இணைப்பின் மூலம் பாரத்நெட் உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி அரசு நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் இல்லங்களை இணைப்பதையே நோக்கமாக கொண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு 13.10.2023 அன்று தமிழ்நாடு கண்ணாடிஇழை வலையமைப்பு நிறுவனத்தை விருப்ப கொள்முதல் முகவராக நியமித்தது.

பாரத்நெட் திட்டம்:

இத்திட்டத்தினை செயல்படுத்திட புவியியல் ரீதியாக நான்கு தொகுப்புகளாக (A, B, C மற்றும் D) பிரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், மாநிலத்தின் 91 சதவிகித கிராம பஞ்சாயத்துகள் அதன் அருகில் உள்ள தொகுதியில் உள்ள இணைய இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட இணைய இணைப்பு :

இறுதிகட்ட இணைய இணைப்பு (LMC) திட்டத்தைச் செயல்படுத்த இணைய சேவை வழங்குநர் (System Integrators) நியமனம். அனைத்து மாவட்ட தலைமையகங்களும், ஊராட்சி ஒன்றிய தலைமையகத்தில் உள்ள பாரத்நெட் இருப்புப்புள்ளி முணையத்துடன் (PoP) இணைக்க முன்மொழியப்பட்டுள்ளன.

இணைய இணைப்புச் சேவைகளை எளிதாக பராமரிக்க தமிழ்நாடு கண்ணாடிஇழை வலையமைப்பு நிறுவனமானது 17.04.2023 அன்று தொலைத்தொடர்புத் துறையிடமிருந்து (DoT) ISP வகுப்பு B உரிமத்தை பெற்றுள்ளது.

தொழில் பங்கீட்டாளர்கள் உரிமம் பதிவு:

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனமானது அதிவேக அலைக்கற்றையுடன் கூடிய இணைய சேவைகளை வழங்குவதில் ஒத்துழைக்க தொழில் பங்கீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு தற்போது செயல்பாடு மற்றும் பராமரிப்பு (Operation & Maintenance)-ன்கீழ் உள்ள 960 கிராம பஞ்சாயத்துகளுக்கு (GPs) தொழில் பங்கீட்டு நியமன அறிவிப்பு டிசம்பர் 2024 ,4 அன்று வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு:

முன்னதாக எல்காட் நிறுவனமானது தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) இணைப்பு சேவைகளை வழங்கி வந்தது. மேலும், அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஆணையின் அடிப்படையில் 1,876 அரசு அலுவலகங்கள் 14.11.2023 முதல் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பாரத்நெட் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஒப்பந்தப்புள்ளியின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இணைய சேவை வழங்குநர்களைக் கொண்டு TNSWAN இணைப்புகள் அனைத்தும் கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையம்

தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15 மே 2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், தற்போது ~80க்கும் மேற்பட்ட ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதுடன், பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் வணிக அம்சங்களுக்காக 2000-க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்களுக்கு வழிகாட்டுகிறது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் ஜிக்சா (ஒருங்கிணைந்த புத்தொழில்முனைவு - கல்வி - தொழில் - முதலீட்டாளர் பணிக்கான கூட்டுப் புத்தாக்க நுழைவு வாயில்) இயங்குதளமானது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 24 பிப்ரவரி 2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், புத்தொழில் நிறுவனங்களை தொழில், கல்வி மற்றும் அரசு ஆகியவற்றுடன் இணைத்து, முக்கோண வலைப்பின்னல் மாதிரியில் புத்தாக்க வசதி செய்தலை நோக்கமாக கொண்டு 137 நிறுவனங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ~5,000க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களை இணைத்துள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், முன்- தொழில் வளர்காப்பக நிகழ்வு (BEACON); செயற்கை நுண்ணறிவு குறித்த தொழில் வளர்காப்பக நிகழ்வு (PATHFINDER), புத்தொழில் நிறுவனங்களுக்கான 3Ms, அதாவது, பணம் (Money), சந்தை (Market) மற்றும் வழிகாட்டுதல் (Mentorship) ஆகியவற்றை வழங்கிடும் முடுக்க நிகழ்வு (iAccelerate) போன்ற 131 நிகழ்வுகள் மற்றும் சமூக ஈடுபாடுகளை நடத்தியுள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், 18 ஆழ்நிலை மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்ப உருவாக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

25 ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தொழில் வளர்காப்பகங்களுடன் கூட்டாண்மைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது.

இம்மையத்தால் ஆதரவளிக்கப்படும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பப் புத்தொழில்முனைவோரின் ஒரு துணிகர முயற்சிக்கு ரூ.40 இலட்சம் வரை முதலீடு செய்வதற்காக பவுண்டேஷன் (ஆழ்நிலை தொழில்நுட்ப மேம்பாட்டினைக் கட்டவிழ்த்தலுக்கான நிதி வாய்ப்புகள் மற்றும் புத்தாக்க உருமாற்றம்) நிதியினை ஏற்படுத்தியுள்ளது.

ஷார்ஜா ஆராய்ச்சி தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் பூங்கா, ரோசெஸ்டர் தொழில்நுட்ப நிறுவனம், துபாய் வளாகம் போன்ற நிறுவனங்கள் இணைந்த தமிழ்நாடு - ஐக்கிய அமீரகப் புத்தாக்கம் மற்றும் புத்தொழில் நிறுவனப் பாலமானது. அக்டோபர் 2024 இல் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு - சிங்கப்பூர் மற்றும் தமிழ்நாடு - மேற்கு ஆஸ்திரேலியா புத்தாக்கம் மற்றும் புத்தொழில் நிறுவனப் பாலங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

செயற்கை நுண்ணறிவுக்கான சிறப்பு மையத்தை அமைப்பதுடன், தொழில், கல்வி, புத்தொழில் நிறுவன இணைப்பை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கத்தையும் செயல்படுத்துகிறது.

பிற மாநிலங்களிலிருந்து சிறந்த மூலவளங்களைப் பெற, சி-டாக், கேரளா ஸ்டார்ட் அப் மிஷன், டி-ஹப், டி-வொர்க்ஸ் போன்றவற்றுடன் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், கல்வி மற்றும் புத்தொழில் நிறுவனங்களை இணைத்து, புத்தாக்க சவால்களை அவ்வப்போது தீர்வு செய்வதற்காக, ரோல்ஸ் ராய்ஸ், தமிழ்நாடு அரசின், புத்தாக்க ஆளுமை மையம், அமேசான் வலைதள சேவை, ∴பின்புளு போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களுடன் தொழில் மற்றும் சமூகப் பொருளாதார சவால்களை நடத்துகிறது.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், ஓசூர், திருநெல்வேலி மற்றும் சேலம் போன்ற 2 மற்றும் -3ஆம் நிலை நகரங்களிலும் விரிவாக்கம் அடைந்து வருகிறது. தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

குளோபல் டெக்னாலஜிஃபோரம்

2021-2022 ஆம் ஆண்டில் குளோபல் டெக்னாலஜி∴போரம் -2020' மாநாடு ஐந்து நாள்களுக்கு நடத்தப்பட்டது. இதில் 51 முக்கிய பேச்சாளர்கள் மற்றும் 21 சர்வதேச பேச்சாளர்கள் பங்கேற்றனர்.

2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த 50,000 மாணவர்கள் புதுமையான அனுபவக் கற்றலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முதல் முன்முயற்சியாக "நாளைய திறன்" உள்ளது.

இளைஞர் திறன் மேம்பாடு

2023-2024ஆம் ஆண்டில் கல்லூரி மாணவர்களின் சுயமாக கற்கும் பழக்கத்தை வளர்ப்பதற்கும், முன்னணி தொழில்நுட்பங்களின் அடிப்படைகளை மாணவர்களே கற்கும் வகையிலும் «நியூ இந்தியா லேர்னதான் 2023" ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பில் 2,23,507 மாணவர்கள் பங்கேற்று 2,78,670 ஆன்லைன் சான்றிதழ் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

மாணவர்களிடையே படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்பத் திறனை ஊக்குவிப்பதற்கு "மேக்-எ-தான்" என்னும் போட்டி நடத்தப்பட்டது. 484 மாணவர்கள் "மேக்-எ-தான்"-இல் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாணவர்களுக்காக "இளைஞர் பேச்சு உச்சி மாநாடு 2023" நடத்தப்பட்டது. சென்னை, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, மதுரை, புதுச்சேரி உள்ளிட்ட 7 மண்டலங்களில் "யூத் டாக்" நடைபெற்றது.

2024-2025-ஆம் ஆண்டில், BRIDGE கருத்தரங்குகள், Skill-A-Thon 2024, Learnathon 2024 போன்ற முக்கியமான முயற்சிகளை ICT அகாடமி வெற்றிகரமாக நிகழ்த்தியது. உலகளாவிய தொழில்துறை நிறுவனங்களின் ஆதரவுடன் ICT Academy "Learnathon 2024" நிகழ்வை நடத்தியது. மொத்தம் 1,61,539 மாணவர்கள் இந்த நிகழ்வுக்கு பதிவுசெய்தனர், மேலும் 2,06,942 மாணவர்கள் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

ICT Academy வெற்றிகரமாக Skill-A-Thon 2024 ஐ நடத்தியது. 81,234 மாணவர்கள் பதிவுசெய்துக்கொண்டு, 20,779 மாணவர்கள் தொழில்முனைவு சான்றிதழ்களை பெற்று, தங்களின் திறன்களை மேம்படுத்தி, பணியியல் வாய்ப்புகளை விரிவாக்கினர்.

வடிவமைப்பு சிந்தனை மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும்படி, ICT அகாடமியின் 24 மணி நேர "இந்தியா டிசைன் வீக்" என்ற சவாலை நடத்தியது. 87 அணிகள் இந்த சவாலில் பங்கேற்றன.

ICT அகாடமி இரண்டு மதிப்புமிக்க BRIDGE மாநாடுகளை தமிழ்நாட்டில் நடத்தியது. இம்மாநாட்டில் கல்வியாளர்கள் மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

ICT அகாடமி தமிழ்நாடு அரசின் கணக்காய்வு இயக்குநரின் 911 பணியாளர்களுக்கு மைக்ரோசாஃப்ட் ஆஃபிஸ் 365 (Microsoft Office 365) பயிற்சி வழங்கியது.

ICT அகாடமி, சென்னை போர்ட் டிரஸ்ட்டின் 385 ஊழியர்களுக்கு மைக்ரோசாஃப்ட் ஆஃபிஸ் பயிற்சியை வழங்கியது.

தமிழ்நாடு மாணவர்களுக்காக "இளைஞர் பேச்சு உச்சி மாநாடு 2024" நடத்தப்பட்டது. 20,562 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

ICT அகாடமி மற்றும் KYN Hood இணைந்து Kynnovate 2025 ஹேக்கத்தான் நடத்தியது. இந்த போட்டியில் 353 அணிகள் பங்கேற்று, அதில் 18 அணிகள் இறுதி சுற்றுக்கு முன்னேறின. முதல் 5 இடங்களை பிடித்த அணிகளுக்கு UmagineTN 25-இல் பரிசளிக்கப்பட்டது.

ICT அகாடமி, Openweaver மற்றும் CII இணைந்து Openweaver ஹேக்கத்தான் நடத்தினர். 4,141 குழுக்கள் கலந்து கொண்டு, 125 குழுக்கள் ஹேக்கத்தானின் அடுத்த நிலைக்கு தேர்வு செய்யப்பட்டு, அதில் முதன்மை 3 இடங்களைப் பெற்ற குழுக்களுக்கு CII Connect Salem நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டன. ICT அகாடமி, UmagineTN 25 நிகழ்வில் மென் கணினி ஆய்விதழின் கீழ் "Advances in GEN AI and Deep Learning" என்கிற சிறப்பிதழை வெளியிட்டது.

ICT அகாடமி, தமிழ்நாடு முழுவதும் 102 அரசாங்க தொழில் பயிற்சி நிறுவனங்களின் (ITI) நிறுவனத் தலைவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MoU) பரிமாற்றம் செய்துள்ளது. இதன் மூலம் 16 உறுப்பினர் சேவைகளை வழங்க உள்ளது.


Thir
Hon'ble Ch






கணித்தமிழ்24
மாநாடு



2025



சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்



திரு. **எஸ்.எம். நாசர்** அவர்கள்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



ஆண்டுதோறும் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 100 வக்ஃப் நிறுவனங்கள் புனரமைத்தல்..

சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூ.200.57 கோடி மதிப்பீட்டில் கடன் வழங்கப்பட்டு 30,641 பயனாளிகள் பயன்.....

104 முகாம்களில் 57,457 இலங்கை தமிழர்கள் மற்றும் 32,828 முகாம்களுக்கு வெளியேயுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நலத்திட்டங்கள் உயர்வு...

ஜெருசலேம் புனித பயணத்திற்கு வழங்கப்படும் மானியம் ரூ.60,000 ஆக உயர்வு.....

சிறுபான்மையினர் நலன்

2021 - 2022

2021-2022ஆம் ஆண்டிலிருந்து, சிறுபான்மையினர் விடுதி மாணவ மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.61.60 இலட்சம் செலவில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.175.05 இலட்சம் செலவில் தோற்றுவிக்கப்பட்டன.

2021-2022ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் கூடுதலாக முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன்படி, தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களும், கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களும் கூடுதலாக தொடங்கப்பட்டுள்ளன.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட 10,583 உறுப்பினர்களுக்கு ரூ.543.64 இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் அருட்சகோதரிகள் மற்றும் கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.37,000 லிருந்து ரூ.60,000 ஆக ரூ.11.50 இலட்சம் செலவில் 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 6,034 சிறுபான்மையின பயனாளிகளுக்கு ரூ.36.18 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கான ஆண்டு நிர்வாக மானியம் ரூ.2.50 கோடி வழங்கப்படுகிறது. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகையின் அடிப்படையில் 5% ஊக்கத் தொகையினை கூடுதல் மானியமாக 2022-2023 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில், 4 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு ரூ.64 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூரில் வக்ஃப் சரக அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு ட்ரோன்களைப் (Drone) பயன்படுத்தி GPS/GIS மேப்பிங் செய்யப்பட்டு வருகிறது. பள்ளி வாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியம் 2021-2022ஆம் ஆண்டில் ரூ.6 கோடியாகஉயர்த்தி வழங்கப்பட்டு, 77 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. 2022-2023ஆம் ஆண்டில் 3 புராதன தர்காக்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.6 கோடி

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.2 கோடி நாகப்பட்டினம் தர்காவிற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 2023-2024ஆம் ஆண்டில் 134 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான நிதியினை ரூ. 6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில் 100 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளிடப்பட்டுள்ளது.

கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உறுப்பினர்களை பதிவுசெய்வது மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து 18.01.2023இல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன மற்றும் இவ்வாரியத்திற்கு என ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் பணிச் சான்றிதழை பெறுவதற்கான வழிமுறைகளில் திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2022 - 2023

கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் புதிய திட்டம் தொடக்கப்பட்டது. 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ.483.13 இலட்சம் மதிப்பில் 76,723 சிறுபான்மையின பெண்குழந்தைகளுக்கு ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டன. 2024-2025ஆம் ஆண்டிற்கு ரூ.275.60 இலட்சம் மதிப்பில் சிறுபான்மையின பெண்குழந்தைகளுக்கு ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 8,785 பயனாளிகளுக்கு ரூ.55.28 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டிலிருந்து, உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு, அவரின் குடும்பத்தினருக்கு ரூ.1,500 குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையின மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையிலும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் அடிப்படை வசதிகளை வழங்கும் பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின் கீழ், ரூ.615.75 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் 62 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் தவணையாக ரூ.307.03 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டின் 10 மாவட்டங்களில் ரூ.658.44 கோடி மதிப்பீட்டில் 123 திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் ரூ.328.38 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2023-2024ஆம் ஆண்டு 13 மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 280 திட்டப்பணிகளை ரூ.674.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் கோரி கருத்துரு ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2024-2025ஆம் ஆண்டு ரூ.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (ஒன்றிய அரசின் 60% பங்கு ரூ.36 கோடி + மாநில அரசின் 40% பங்கு ரூ.24 கோடி)

கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மை இத்துறையின் மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா ஆண்டுதோறும் மாநில அளவில் கொண்டாடப்பட ரூ.2.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதி மதுரையில் கொண்டாடப்பட்டது.

2022-2023ஆம் ஆண்டில் தொன்மை வாய்ந்த தேவாலயங்களைப் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதல் தவணைத் தொகையாக ரூ.3 கோடி 4 தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டிற்கு தொன்மையான தேவாலயங்களைப் புனரமைத்தல் திட்டத்திற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டில் மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம் புனரமைப்பதற்காக ரூ.2 கோடி ஒப்பளிக்கப்பட்டு, ரூ.77.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டு தொன்மை வாய்ந்த தேவாலயங்களை புனரமைக்கும் திட்டத்திற்கென ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதுவரை 8 தொன்மை வாய்ந்த தேவாலயங்களுக்கு ரூ.1445.35 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகையாக 50 சதவிகிதம் ரூ.722.68 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2023- 2024

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் முன்னேற்றத்திற்காக 2,500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.160 இலட்சம் செலவில் பயனாளிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் வாரிசுகளுக்கு ரூ.1,000 கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000 லிருந்து ரூ.30,000 ஆகவும் மற்றும் விபத்து மரணத்திற்கான உதவித்தொகை ரூ.1,00,000 லிருந்து ரூ.1,25,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.116 இலட்சம் செலவில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர் மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்டடத்தில் இயங்கும் 9 சிறுபான்மையினர் விடுதிகளுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் ரூ.2 இலட்சம் செலவில் புதிதாக தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது,

கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்டன.

ரூ.3.04 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்குவழங்கப்பட்டுவரும்தொகைரூ.2,000லிருந்துரூ.10,000ஆகஉயர்த்தப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காகவும் மற்றும் 11 மண்டல அலுவலகங்களுக்கு 11 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் வாங்குவதற்காகவும் ரூ.1.25 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை 10,201 பயனாளிகளுக்கு ரூ.68.58 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டு முதல் புதிதாக TNeGA-ஆல் State Scholarship Portal (SSP) என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு www.ssp.tn.gov.in என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023-2024ஆம் ஆண்டில் 134 வக்ஃப் நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 1,649 பயனாளிகளுக்கு ரூ.455.58 இலட்சம் செலவில் நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 3,987 பயனாளிகளுக்கு ரூ.999.54 இலட்சம் செலவில் நிதிஉதவி அளிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 5,728 பயனாளிகளுக்கு ரூ.100.75 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்காக நிதி உதவி வழங்கும் திட்டத்திற்கு வழிகாட்டி நெறிமுறைகளை மாற்றியமைத்து, இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.233.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கிறித்துவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்ட தலை நகரங்களில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிலம் கையகப்படுத்தி மாநகராட்சி மற்றும் நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-2025

2024-2025ஆம் ஆண்டில், கடலூர் மாவட்டத்தில் செயல்படும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு ரூ.396 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டவும். புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.56 இலட்சத்தில் ஒரு புதிய சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி தொடங்கப்பட்டுள்ளது.

2024 – 2025ஆம் ஆண்டில், திருப்பூர், திருவள்ளூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 8 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருவள்ளூர் மற்றும் சிவகங்கை ஆகிய 2 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் ரூ.10 இலட்சம் செலவில் புதிதாக தொடங்க ஆணைகள் வெளியிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-2025ஆம் ஆண்டில், சிறுபான்மையின மகளிருக்கு 2,500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.160 இலட்சம் செலவில் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டு. நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இதுவரை (31.03.2025) 8,770 பயனாளிகளுக்கு ரூ.64.30 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூ.1,000 லிருந்து ரூ.1,200 ஆகவும் மற்றும் மூக்கு கண்ணாடி உதவித்தொகை ரூ.500 லிருந்து ரூ.750 ஆகவும் உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2024-2025ஆம் ஆண்டில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ தேவாலயங்களில், பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை இணையவழியில் செயல்படுத்திட தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் தனி மென்பொருள் (Software) மற்றும் வலைதளம் (Web Portal) ரூ.25 இலட்சம் செலவில் உருவாக்க ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டில், மக்கள் அதிகம் வரும் தொன்மையான 6 தர்காக்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.5 கோடி வழங்கவும், வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காக ரூபாய் ஒரு கோடி வழங்க ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-2025ஆம் ஆண்டில் 100 வக்ஃப்நிறுவனங்களின் புனரமைத்தல் மற்றும்பழுது நீக்குதலுக்காக ரூ.10 கோடி நிதிஒதுக்கீடு செய்து ஆணை வெளிடப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியத்தை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.80 இலட்சம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2025ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலிருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தகுதியான ஹஜ் பயனாளி ஒருவருக்கு ரூ.25,000/- வீதம் ஹஜ் மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியருக்கு தலா ரூ.1,000/- வீதம் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் நவீன நில அளவை கருவிகள் மூலம் வக்ஃப் வாரிய நிலங்களை அளவை செய்வதற்காக 30 உரிமம் பெற்ற நில அளவர்களை நியமனம் செய்து DGPS Rover கருவிகள் மூலம் நில அளவை பணிகள் மேற்கொள்ள ஒரு கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அயலக தமிழர் நலன்

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு

27.08.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் விதி 110-ன் கீழ் இலங்கைத் தமிழர் நலனுக்கான பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்தார்.

104 முகாம்களில் 57,457 இலங்கைத் தமிழர்களுக்கு மற்றும் 32,828 முகாம்களுக்கு வெளியே உள்ளவர்களுக்கு உயர்த்தப்பட்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாதாந்திர பணக்கொடை

குடும்பத் தலைவருக்கு ரூ.1,500-ம், (12 வயது மேல்) ரூ.1,000மும் மற்றும் சிறியவர்களுக்கு ரூ.500-ம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டிற்கு ரூ.21.29 கோடி செலவாகும்.

துணிமணிகள்

கடந்த 4 ஆண்டுகளில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இலவசமாக ரூ. 16.29 கோடி செலவில் துணிமணிகள் வழங்கப்பட்டு வருகிறது.

பாத்திரங்கள்

2021-2022 ஆம் ஆண்டுகளில் 18,849 குடும்பங்களுக்கு ரூ.2.44 கோடியில் பாத்திரங்கள், 2023-2024 ஆம் ஆண்டுகளில் 19,498 குடும்பங்களுக்கு ரூ.2.50 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழ் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்

கடந்த 4 ஆண்டுகளில் 5,273 மாணவ/மாணவியர்களுக்கு ரூ. 9,75,37,302 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

விலையில்லா அரிசித் திட்டம்:

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அரிசி எண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

கடந்த 4 ஆண்டுகளில் 57,400 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு 5 எரிவாயு உருளைகளுக்கு தலா ரூ.400/- மானியத் தொகை வீதம் ரூ.8.11 கோடி மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

முதற்கட்டம் (2021-2022)

3,510 வீடுகளுக்கு ரூ.176.02 கோடி நிதி ஒதுக்கீடும், 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

14 மாவட்டங்களில் 1,759 புதிய வீடுகள் 17.09.2023 மற்றும் 13.03.2024 அன்று திறக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

7 மாவட்டங்களில் 998 வீடுகள் மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 753 வீடுகள் மே-2025 இல் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்படும் நிலையில் உள்ளன.

இரண்டாம் கட்டம் (2023-2024)

இரண்டாம் கட்டத்தில் 3,959 வீடுகளுக்கு கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதலும், இதற்கான செலவீனத் தொகை ரூ.228.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 18 மாவட்டங்களில் 34 முகாம்களில் 3,919 வீடுகள் கட்டப்படுகின்றன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்:

2023-2024 இல் 27 இலங்கைத் தமிழர் முகாம்களுக்கு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

2021–2022 இல் 29 மாவட்டங்களில் 106 முகாம்களுக்கு ரூ. 4.99 கோடியும், 2023–2024 இல் 28 மாவட்டங்களில் 90 முகாம்களுக்கு ரூ.4.99 கோடியும், 2024–2025 இல் 28 மாவட்டங்களில் 103 முகாம்களுக்கு ரூ. 4.97 கோடியும் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகளிர் சுயஉதவிக்குழு தொழிற்கூடம் அமைத்தல்:

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கான தொழிற்கூடங்களை அமைக்க 10 மாவட்டங்களில் உள்ள 10 முகாம்களுக்கு ரூ.3,00,00,000/- நிதி ஒதுக்கீடு செய்து 8 முகாம்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றன.

மகளிர் சுயஉதவிக்குழு

2021–2022 இர் 321 சுய உதவி குழுக்களுக்கதலா ரூ.75,000 மற்றும் புதிய 300 சுய உதவிக்குழுக்களுக்க தலா ரூ. 1.25 இலட்சம் வழங்கும் பொருட்டு ரூ. 6.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 300 புதிய சுய உதவிகுழுக்களில் 266 குழுக்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பட்டு நிறுவனம் மூலம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

2023–2024 இல் புதிய 200 சுய குழுக்களுக்கு 1,25,000 வீதம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ. 2.50 கோடி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது.

முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்-19 நிவாரண உதவி வழங்குதல்

தமிழ்நாடு அரசின் கோவிட் நிவாரணமாக 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4,000/- வீதம் ரூ.7.58 கோடி செலவில் மற்றும் 14 மளிகைப் பொருள்கள் அடங்கிய பை ரூ. 88.08 இலட்சம் செலவில் வழங்கியது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

2021–2022 ஆம் ஆண்டில், 2,404 முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

2023–2024 ஆம் ஆண்டில் 260 பயணாளிகளிக்கு முன் கற்றல் அங்கீகாரம் (RPL) மற்றும் 39 பயனாளிகளுக்கு நான் முதல்வன் பள்ளி நிறைவு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகால தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

இலங்கைத் தமிழர்களின் சவால்களுக்கு தீர்வுகளை ஆராய்ந்து, குடியுரிமை மற்றும் திரும்பி செல்வதற்கான ஒரு செயல் திட்டம் முன்மொழிவதற்காக ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, குழுவின் இடைக்கால அறிக்கை 29.09.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்ட ரீதியான விதிகளுக்குட்பட்டு 7 தகுதியான நபர்களுக்கு இந்திய குடியுரிமை பெற்றதற்கான சான்று ஆவணமாக இந்திய கடவுச்சீட்டு வழங்கப்பட்டு உள்ளது.

இலங்கை மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ரூ.132 கோடி மதிப்பிலான 40,000 டன் அரிசி, ரூ.15 கோடி மதிப்பிலான 500 டன் ஆவின் பால்பொருட்கள் மற்றும் ரூ. 27 கோடி மதிப்பிலான 101 டன் மருந்து பொருள்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து வருகை

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக 323 இலங்கைத் தமிழர்கள் 24.02.2025 வரை நபர்கள் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமில் உணவு, தங்குமிடம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 06.10.2021 அன்று "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படுவதாக அறிவித்து 15 உறுப்பினர்கள் கொண்ட வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

24X7 கட்டணமில்லா தொலைபேசி உதவி மையம்

14.11.2023 முதல் வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக 24X7 கட்டணமில்லா உதவி மையம் தொடங்கப்பட்டு, 31.01.2025 வரை 16,067 அழைப்புகளுக்கு 196 மீட்பு மற்றும் தாயகம் அழைத்து வருதல் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேர்களைத் தேடி

ஒவ்வொரு ஆண்டும், 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பண்பாட்டு பயணத் திட்டம் அறிமுகம்.

15 நாடுகளில் இருந்து 194 மாணவர்கள், 15 நாள்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டும், தமிழ்நாட்டின் கலை, பண்பாடு குறித்தும் விளக்கப்பட்டது..

இச்சுற்றுப் பயணத்தில் தொல்பொருள் தளங்கள், வரலாற்று நினைவுச்சின்னங்கள், யுனெஸ்கோவின் உலக பாரம்பரியச் சின்னங்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பனர்.

எனது கிராமம்

புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுடன் தமிழ்நாட்டில் அவர்களது ஊர்களை மேம்படுத்தும் "எனது கிராமம்" திட்டம்.

அயலகத் தமிழர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ஆம் தேதி அயல்நாடுகளில் வசிக்கும் பங்களிப்பை தமிழர்களின் ஒப்புருவாக்கும் நாள் கொண்டாட்டம்.

2025 ஜனவரி 11 மற்றும் 12ஆம் தேதிகளில் "எத்திசையும் தமிழணங்கே" என்ற கருப்பொருளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

அயல்நாடுகளில் தமிழின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றிறுப் பவர்களுக்கான 'தமிழ் மாமணி' விருதுடன் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது,

அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்தல்

வெளிநாடுகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிப்பதற்கான இணைய வழி கல்வி கழகம் தொடக்கம்.

2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 12 இலட்சமும் 2023-2024-ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 44 இலட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தமிழ் இணைய கல்விக்கழகத்திற்கு வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2023-2024ஆம் ஆண்டில் சுமார் 250 மாணவர்கள் இத்திட்டம் மூலம் பயனடைந்துள்ளனர்.

உக்ரைன் நாட்டிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்தல்

ரஷ்ய -உக்ரைன் போர் காரணமாக, 1,524 தமிழ்நாட்டைச் சேர்ந்து மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களை மீட்டெடுத்தல் (அக்டோபர் 2022)

18.10.2022 அன்று உத்தரகாண்ட் கேதார்நாத் கோவிலுக்கு சென்ற தமிழர்கள் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த 3 பேர் உடல் மீட்டெடுக்கப்பட்டன.



சூடான் உள்நாட்டு போர் - தமிழர்களை மீட்டெடுத்தல் (ஏப்ரல், 2023)

சூடானில் உள்நாட்டுப் போர் காரணமாக, தமிழர்களுக்கு "கட்டணமில்லா தொலைபேசி" எண்கள் மூலம் உதவி வழங்கப்பட்டது.

இந்திய தூதரகம் மற்றும் வெளியுறவுத் துறையுடன் இணைந்து 263 தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர்.

துபாய் தீ விபத்து (ஏப்ரல், 2023)

15.04.2023 அன்று துபாய் தீ விபத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த - தமிழர்கள் உயிரிழந்த இரண்டு தமிழர்களின் உடல்கள் 18.04.2023 தாயகம் கொண்டுவரப்பட்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது, தமிழ்நாடு அரசு சார்பில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

மணிப்பூர் கலவரம் - தமிழர்களை மீட்டெடுத்தல் (மே, 2023)

மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் சிக்கித் தவித்த 8 தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் விமான பயணச் சீட்டுகள் மூலம் சென்னை அழைத்து வரப்பட்டனர்.

அமர்நாத் புனித யாத்திரை சென்ற தமிழர்கள் சிக்கி தவிப்பு – தாயகம் மீட்டல் (ஜூலை, 2023)

அமர்நாத் பனிச்சரிவில் சிக்கிக்கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 நபர்கள், யாத்திரிகர்களை, 13.07.2023 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டனர்.

17 நபர்களும், 15.07.2023 அன்று பயணச்சீட்டுகளுடன் பெற்றுத்தரப்பட்டு சென்னைக்கு கொண்டுவரப்பட்டு, அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் - தமிழர்களை மீட்டெடுத்தல் (ஆகஸ்ட், 2023)

தமிழ்நாட்டைச் சேர்ந்த பல இந்தியர்கள், கம்போடியா, தாய்லாந்து - மியான்மரில் சட்டவிரோத வேலைகளுக்காக கட்டாயப்படுத்தப்பட்ட, தகவல் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வரப்பெற்று 31.08.2023 வரை 83 தமிழர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிரம், கிரேன் கவிழ்ந்து விபத்து (ஆகஸ்ட், 2023)

மகாராஷ்டிராயில் கிரேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவர் உடல்கள் குடும்பங்களுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் நிவாரண உத்தரவிட்டார்.

துருக்கி நாட்டில் உடல் நலிவுற்ற குழந்தை – 10 இலட்சம் நிவாரணம் (செப்டம்பர், 2023)

கடந்த 07.09.2023 அன்று, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மனோஜ் என்பவரின் 2 வயது பெண் குழந்தையுடன் விமான பயணத்தின்போது தனது குழந்தைக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் விமானம் தரையிரக்கப்பட்டு துருக்கி இஸ்தான்டில் நகரில் துருக்கி நாட்டிலிருந்து சுவாச பிரச்சனையுடன் வந்த குழந்தையை தமிழ்நாட்டுக்கு விமானத்தில் கொண்டுவர மேல் சிகிச்சைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10 இலட்சம் வழங்க உத்திரவிட்டு அவர் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டது.

இஸ்ரேல் – பாலஸ்தீனம் போர்

இஸ்ரேல், பாலஸ்தீனப் போர் காரணமாக, 126 தமிழர்கள் வெளியுறவுத்துறை உதவியுடன் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு மீட்கப்பட்டுள்ளனர்.

நடுகல்

இரண்டாம் உலகப்போர் காலத்தில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக, தாய்லாந்தில் "நடுகல்" ஒன்றை நிறுவுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குவைத் தீ விபத்து (ஜீன், 2024)

குவைத் மங்காப் பகுதியில் 12.06.2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழு நபர்களின் 14.06.2024 அன்று உடல்கள் தனி விமானம் மூலம் கொச்சி விமான நிலையம் கொண்டு வரப்பட்டு, சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்திரவின்படி, உயிரிழந்த 7 தமிழர்களின் குடும்பத்தினருக்கும் தலா ரூ. 5 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

வங்கதேசத்தில் இருந்து தமிழர்களை மீட்டெடுத்தல் (ஜீலை 2024)

வங்கதேசத்தில் நிலவிய பதற்றம் காரணமாக தமிழர்கள் சிலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கியிருப்பதாக தகவல்கள் வந்தன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வங்கதேசத்தில் சிக்கிய தமிழர்களுக்கு ஆணையரகத்தை, தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அறிவுறுத்தினார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை இந்திய தூதரகம் மற்றும் தமிழ் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டும், அவசர உதவி எண்களை உள்ளிட்ட தகவல்களைச் சேகரித்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 220 தமிழ் மாணவர்களுக்கு விமான பயணச்சீட்டு ஏற்பாடு செய்து அவர்களை தமிழ்நாடு அழைத்து வரப்பட்டனர்.

தாய்லாந்து நாட்டில் விபத்துக்குள்ளான தமிழரை தமிழ்நாட்டிற்கு அழைத்து வருதல் (அக்டோபர், 2024)

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. முபாரக் அலி என்பவர் தாய்லாந்தில் விபத்துக்குள்ளாகி தீவிர சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக தமிழ்நாடு அரசிடம் கோரிக்கை வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் குடும்ப வறுமையை கருத்தில் கொண்டு, திரு.முபாரக் அலி-யை அரசு செலவில் மருத்துவ குழு உடன் தாய்லாந்து நாட்டிலிருந்து தமிழ்நாடு அழைத்து வர உத்தரவிட்டார்.

ரூ. 10,41,648/- செலவில் திரு. முபாரக் அலி என்பவர் 17.10.2024 அன்று தாய்லாந்தில் இருந்து மருத்துவ குழுவுடன் சென்னை அழைத்து வரப்பட்டு ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றார்.

சவுதி அரேபியா நாட்டில் அபராதம் செலுத்த வழியின்றி தாயகம் திரும்ப இயலாமல் தவித்த திரு.ரமேஷ் அவர்களுக்கு அபராதம் செலுத்தியது (டிசம்பர், 2024)

சவுதி அரேபியாவில் சிறிய சாலை விபத்தினை 6 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்திய காரணத்திற்காக திரு. ரமேஷ் கோவிந்தசாமி என்பவர் சிறையில் துன்புற்று வந்த நிலையில் அபராதத் தொகை தமிழ்நாடு அரசின் உதவியுடன் ரூ.8,72,551/- ஐ செலுத்திவிட்டு அன்று தமிழ்நாடு அழைத்து வரப்பட்டார்.

குவைத் நாட்டில் மூச்சுத் தினறல் ஏற்பட்டு உயிரிழந்த குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி (ஜனவரி, 2025)

குவைத் நாட்டில் தங்கியிருந்தபோது ஏற்பட்ட தீ விபத்தினால் இறந்த இரண்டு தமிழர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தலா ரூ. 5 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதி வழங்கப்பட்டது.

தமிழர்கள் மீட்பு

கடந்த நான்காண்டுகளில் சூடான் 281, இந்தோனேசியா 3, உக்ரைன் 1524, ஈரான்6, குவைத் 34, ஓமன் 32, கம்போடியா, தாய்லாந்து & மியான்மர் 83 மலேசியா 7, இஸ்ரேல் 126, கத்தார் 12, வங்கதேசம் 220, அமர்நாத் (இந்தியா) 17 , மணிப்பூர்(இந்தியா) 8, வாரணாசி (இந்தியா) 50, உத்தரகாண்ட் (இந்தியா) 20, குஜராத் (இந்தியா) 26 நபர்கள் மீட்கப்பட்டனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் அயல்நாடுகளிலிருந்து 987 பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மாநில மனித உரிமைகள் ஆணையம்

1997 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் 25 ஆண்டுகள் வெள்ளிவிழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னையில் 06.08.2022 அன்று கொண்டாடப்பட்டது.

ஆணையத்தின் இணையதளம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்து கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டம் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மனித உரிமை கொள்கை, கோட்பாடுகள் குறித்து, அறிவுறுத்தும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.








பள்ளிக் கல்வித் துறை

திரு. **அன்பில் மகேஸ் பொய்யாமொழி** அவர்கள்
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்



இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் கீழ், ரூ.660.35 கோடி ஒதுக்கீட்டில் 1.65 இலட்சம் தன்னார்வலர்கள் மூலம் 95.97 இலட்சம் மாணாக்கர்கள் பயன்...

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 2,917.03 கோடி ஒதுக்கீட்டில் 4,426 பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்...

3,64,521 புத்தகங்களுடன் செயல்பட்டு வரும் மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் 8,36,260 வாசகர்கள் படித்து பயன்...

எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் 37,767 அரசு பள்ளிகளில் பயிலும் 25.08 இலட்சம் மாணாக்கர்கள் பயன்...

இல்லம் தேடிக் கல்வி

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையால் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 2021-22 முதல் 2024-25 ஆம் கல்வியாண்டு வரை ரூ.660.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1.65 இலட்சம் தன்னார்வலர்கள் மூலம் 95.97 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றனர்.

2024-2025 ஆம் கல்வியாண்டில் 50,000 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்கள் வரையில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 7.97 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

கோடை விடுமுறை காலத்தில், குழந்தைகளிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கில கதைகள் அடங்கிய தொடர் வாசிப்பு (ரீடிங் மாரத்தான்') நடத்தப்பட்டது.

மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன்களை வெளிக்கொணரும் விதமாக இல்லம் தேடிக் கல்வி மையங்களில் குறும்படக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

எண்ணும் எழுத்தும்

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளிடையே அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணறிவை மேம்படுத்தவும், ஒவ்வொரு குழந்தையும் 2025 ஆம் ஆண்டுக்குள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்கணித திறன்களை அடைவதை உறுதி செய்யவும் "எண்ணும் எழுத்தும்" திட்டம் தொடங்கப்பட்டது.

1 முதல் 5 ஆம் வகுப்பு பயிலும் குழந்தைகளுக்கு நிலை வாரியான (அரும்பு, மொட்டு, மலர்) பயிற்சி நூல்கள், ஆசிரியர்களுக்கு விரைவுத் துலங்கல் குறியீட்டுடன் கூடிய ஆசிரியர் கையேடுகள் போன்றவை அளிக்கப்பட்டுள்ளன.

எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் 37,767 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 25.08 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

வாசிப்பு இயக்கம் : வாசிப்பு இயக்கம் முன்னோடித் திட்டமாக 11 மாவட்டங்களில் 11 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டு, 914 அரசு பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரையுள்ள 66,618 மாணவர்கள் பயனடைந்தனர்.

குழந்தைகள் அணுகக்கூடிய மொழியில் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற நான்கு தனித்தனி வாசிப்பு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டு, 123 புத்தகங்கள் மற்றும் 1 வாசிப்பு இயக்க கையேடு அச்சிடப்பட்டு அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 44.50 இலட்சம் மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

உள்ளடக்கிய கல்வி : அரசுப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களை சிறப்பு பயிற்றுநர்கள் மூலம் அடையாளம் காணவும், அதன் அடிப்படையில் தக்க சிறப்புக் கல்வி வழங்கவும் நலம் நாடி செயலி வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 கல்வியாண்டில் பள்ளியிலேயே ஆதார் திட்டத்தின் மூலமாக அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 76,56,074 மாணவர்களுக்கு ஆதார் புதுப்பித்தல் மற்றும் புதிய

ஆதார் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 36,91,318 மாணவர்களுக்கு ஆதார் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

28,067 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 100 Mbps வேகமான இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,540 அரசு பள்ளிகளில் இணைய சேவை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாதிரிப் பள்ளிகள்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் மொத்தம் 38 மாதிரிப் பள்ளிகள் ரூ.352.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதிரிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் பலர் பல்வேறு முதன்மைக் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

தகைசால் பள்ளிகள்: மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கற்றல் எல்லைகளை விரிவுபடுத்த இப்பள்ளிகள் தளமாக விளங்குகின்றன. 28 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம், 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக ரூ.100.82 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கலைத் திருவிழா:2022-2023 ஆம் ஆண்டில் போட்டிகள் நடத்தப்பட்டு, 2024-25 ஆம் கல்வியாண்டு முதல் இத்திட்டம் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில் 1759 மாணவ மாணவியர்களும், 2023-24ஆம் ஆண்டில் 1418 மாணவ மாணவியர்களும், 2024-25 ஆம் ஆண்டில் 1334 மாணவ மாணவியர்களும், மாநில அளவில் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கலையரசன், கலையரசி விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்: அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Lab) அமைக்கப்பட்டு வரும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

திறன்மிகு வகுப்பறைகள்: அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.455.32 கோடி செலவில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) அமைக்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்வி பாடத்திட்டம் மறுசீரமைப்பு: 2021-22 ஆம் கல்வியாண்டு முதல் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கான சீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடப் புத்தகங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 60,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றது. மேலும் தொழிற்கல்வி மாணவர்களுக்கான துறை சார் அகப்பயிற்சி (Internship) ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு அகப்பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் தொழிற்கல்வி கற்பிக்கும் 726 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி, நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு கைக்கணினிகள்: 79,723 இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.81 கோடி செலவில் கைக்கணினிகள் (Tablet) வழங்கப்பட்டுள்ளது.

பொது மாறுதல் கலந்தாய்வு : அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பொது மாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நிரவல் கலந்தாய்வு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு இணைய வழியில் EMIS மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளிகள் தரமுயர்த்துதல்: மாணவர்களின் நலனுக்காக 2023-24 ஆம் கல்வியாண்டில், 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

4,989 இடைநிலை ஆசிரியர், 5,154 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 3,876 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 14,019 ஆசிரியர் பணியிடங்கள் தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்களின் மூலம் நியமனம் செய்ய ஆணை வெளியிடப்பட்டன.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022-23 மற்றும் 2023-24ஆம் கல்வியாண்டுகளில் 614 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1087.76 கோடியும், 2,455 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.800 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,455 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும், 391 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் வகுப்பறைக் கட்டங்கள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும் 2024-25 ஆம் கல்வியாண்டில் 440 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.745.27 கோடியும், பராமரிப்பு பணிகளுக்கென ரூ.200 கோடியும் மற்றும் 526 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.284 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

வானவில் மன்றம்: அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் ஆர்வத்தையும் திறனையும் தூண்டும் வகையில் நடமாடும் அறிவியல் ஆய்வகத் திட்டம் (வானவில் மன்றம்) ரூ.11.69 கோடி செலவில் 33.50 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோடைக் கொண்டாட்டம்: மாணவர்களின் தனித் திறனை மேம்படுத்தவும், கோடை விடுமுறையினைப் பயனுள்ள வகையில் சமூகக் கற்றலுடன் செலவிடவும், கோடைக் கொண்டாட்டம் எனும் சிறப்பு பயிற்சி முகாம் தமிழ்நாட்டில் உள்ள மலைப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூக நீதி, பெண்ணுரிமை ஆகியவற்றின் அடிப்படையிலான பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.

பேராசிரியர் அன்பழகன் விருது: கற்றல் கற்பித்தல், ஆசிரியர் திறன்மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் வளர்ச்சி என பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் பெயரில் விருது 2023-24 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது: அரசின் திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தும் 100 தலைமை ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது, பாராட்டுச் சான்றிதழும், கேடயமும் ரூ.10 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

அரசுப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்விச் செலவினத்திற்கான உதவித் தொகை ரூ.50,000/- ஆக உயர்த்தப்பட்டு, 2023-24 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான 28 மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.12,95,000/- வழங்கப்பட்டது.



கணினி அறிவியல் பாட தனிக் கட்டணம் ரத்து: 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினி அறிவியல் பாடத்தை விருப்ப பாடமாக பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் தனிக் கட்டணம் ரூ.200/- ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 3.5 இலட்சம் மாணவர்கள் பயனடைந்தனர்.

மகிழ் முற்றம்: அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மகிழ் முற்றம் எனும் திட்டம் 2024-25 ஆம் கல்வியாண்டு முதல் 37,470 அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு முழு உடல் பரிசோதனை திட்டம்: ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென, தலா ரூபாய் 1,50,000/- ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து 38 மாவட்டத்திற்கும் ரூபாய் 57,00,000/- ஆசிரியர் நல நிதியிலிருந்து அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சாரண, சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி (Jamboree) 28.01.2025 முதல் 03.02.2025 முடிய திருச்சி மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த 20000 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

ஆண்டு விழா: அரசுப் பள்ளி மாணவர்கள் கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற பல்வேறு திறன்களை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்னிலையில் வெளிக்காட்ட வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆண்டு விழா 2023-2024 ஆம் கல்வி ஆண்டு முதல் நடத்தப்படுகிறது.

கல்விச் சுற்றுலா:

பள்ளி அளவில் கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளான மன்றச் செயல்பாடுகள், நூல் வாசிப்பு, நுண் கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உலக அளவிலும், தேசிய / மாநில அளவில் புகழ்பெற்ற இடங்களுக்கும் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல ஆண்டு தோறும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மாணவர்கள் மலேசியா, ஜப்பான், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

2024-25 ஆம் கல்வியாண்டில் கனவு ஆசிரியர் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 52 ஆசிரியர்கள் 23.10.2024 முதல் 28.10.2024 வரை பிரான்சு நாட்டிற்கு சர்வதேச கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். கனவு ஆசிரியர் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 325 ஆசிரியர்கள் டேராடூனுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் VI-XII வகுப்புகளை தமிழ் வழியில் அரசு / அரசு உதவி பெறும் பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2024-2025 ஆம் கல்வியாண்டில் 3.28 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

புதுமைப் பெண் திட்டம் : புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் கல்வியாண்டில் 2,09,365 மாணவியர்களுக்கும்; 2023-24ஆம் கல்வியாண்டில் 2,73,596 மாணவியர்களுக்கும்; 2024-25ஆம் கல்வியாண்டில் 4,13,072 மாணவியர்களுக்கும் மாதம் தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது.

தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு "ஊஞ்சல்" இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு "தேன்சிட்டு" இதழும்; ஆசிரியர்களுக்கான சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ள "கனவு ஆசிரியர்" என்ற மாத இதழும், ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி: நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளிக்கு என்று தனித்துவமாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு முழுவதும் உள்ள 400க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் இணைந்து, 658.67 கோடி ரூபாய்க்கு மேல் திரட்டி, அரசுப் பள்ளிகளில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளி மேலாண்மைக் குழு: அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு, 24 உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு செயல்பட்டு வருகிறது. 2024ஆம் ஆண்டு 8.4 இலட்சம் உறுப்பினர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

'மணற்கேணி' : மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக 'மணற்கேணி' என்ற டிஜிட்டல் கல்வி தளம் உருவாக்கப்பட்டு, 2023 ஜூலை 25 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரால் தொடங்கப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்தரமான டிஜிட்டல் உள்ளடக்கங்களை வழங்குவதன் வாயிலாக, இந்த செயலி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: மாநகராட்சி, நகராட்சி, ஊரக மற்றும் மலைப் பகுதிகளில் உட்பட அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கு காலை உணவு வழங்கும் ஒரு முன்னோடித் திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024-25 ஆம் கல்வியாண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உபகரணங்கள், பாடநூல், நோட்டு புத்தகம் போன்ற நலத்திட்ட உதவிகள், அரசு நிதியுதவின்றிச் செயல்படும் தனியார் சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தனியார் சுயநிதி பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் 49,498 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

தனியார் பள்ளிகளுக்கான அனுமதி / தொடர் அங்கீகார ஆணை வழங்குதல் ஆகியவை இணைய வழியாக மேற்கொள்ளும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 31.12.2022 அன்று தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துதல் இணைய முகப்பு (Regulatory Compliance Portal) மற்றும் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுச் செயலி (Inspection App) தொடங்கி வைக்கப்பட்டது.

10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் மே 2022ல் நடத்தப்பட்டு, இரண்டு தேர்வு முடிவுகளும் ஒரே நாளில் 17.50 இலட்சம் மாணாக்கர்களுக்கு குறுஞ்செய்தியாகவும் / இணையதளத்திலும் வெற்றிகரமாக வெளியிடப்பட்டது.

தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு: பள்ளி மாணவர்களின் தமிழ் மொழி இலக்கியத் திறனை மேம்படுத்தும் வகையில், 2022-23 கல்வியாண்டு முதல் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு தமிழ் மொழி இலக்கியத் திறனறித் தேர்வு நடத்தப்பட்டு 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1,500 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வில் 500 மாணவர்கள், 500 மாணவியர்கள் உள்ளிட்ட மொத்தம் 1,000 மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்டு ஊக்கத்தொகையாக ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ.1,000/- வீதம் வழங்கப்படுகிறது.

சான்றிதழ்கள் இணையவழியில் பெறும் வசதி: டிசம்பர் 2023 முதல் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் இரண்டாம் படி, மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல், புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்றிதழ்கள் இணையவழியில் பெறும் வசதி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் / டிசம்பர் 2024-ல் ஃபெஞ்சல் புயல் மற்றும் வெள்ளத்தால் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த 484 நபர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் கட்டணமின்றி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

மார்ச் 2024 பொதுத்தேர்வு முதல் மேல்நிலை பொதுத்தேர்வு மாணாக்கர்களுக்கு நடைமுறையிலிருக்கும் விடைத்தாள் நகல் வழங்கும் நடைமுறை பத்தாம் வகுப்பு மாணாக்கர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுப் புலம் : பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.40 இலட்சம் செலவில் மாநில மதிப்பீட்டுப் புலம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமும் (IIT-Madras) மற்றும் சீடாக் (CDAC) நிறுவனமும் இணைந்து உருவாக்கிய மென்பொருளைப் பயன்படுத்தி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அந்தந்த பள்ளியின் ஆசிரியர்களே வினாத்தாள்களைத் தயாரித்து மாணவர்களுக்குத் தேர்வு நடத்தி வருகின்றனர். 2022-23 ஆம் கல்வியாண்டில் இருந்து மாநில மதிப்பீட்டுப் புலம் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து 6029 அரசுப் பள்ளிகளிலும் 25 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இணைய வழி வினாடி வினா நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

தொல்லியல் பயிற்சி: 2023-24 ஆம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாள்கள் தொல்லியல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி சிறப்பாக நடைபெற்றுள்ளதைத் தொடர்ந்து, 2024-25 ஆம் கல்வியாண்டிலும் 1,000 பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள் மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் மூலம் 2.5 இலட்சம் மாணவர்களும் 1,100 ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி: பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் 12,000 அலுவலர்களுக்கு நாட்டின் தலைசிறந்த கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் உதவியுடன் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பித்தல் திறன் மற்றும் மாணவர்களின் கற்றல் திறன் ஆகியவற்றை மேம்படுத்திடும் பொருட்டு, 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் என 1,53,000 பேருக்கு குறுவளமைய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வித் தொலைக்காட்சி மூலம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களையும் காணொலிகளாக உருவாக்கி ஒளிபரப்பு செய்து வருகிறது. மெய்நிகர் ஒளிப்பதிவுக்கூடம்: நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி காணொலிகள் தயாரிப்பதற்காக, மெய்நிகர் ஒளிப்பதிவுக்கூடம் உள்ளிட்ட 5 உயர்தொழில்நுட்பப் படப்பதிவுக்கூடங்கள் மற்றும் ஒரு ஒலிப்பதிவுக்கூடம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்காணொலிகள் மூலம் 58,721 பள்ளிகளில் உள்ள 1,23,73,598 மாணவர்கள் மற்றும் 5,32,909 ஆசிரியர்கள் பயன்பெறுவர். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை 1 / கணினி பயிற்றுநர் நிலை 1 ஆகிய பணியிடங்களுக்கான கணினி வழியாக போட்டித்தேர்வு நடத்தப்பட்டு, 3,043 முதுகலை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டில் 97 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு இணைய வழியாக தேர்வுகள் நடத்தப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. 2023-24 ஆம் ஆண்டில் 33 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் தகுதித் தேர்வு:

ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் 1-க்கான தேர்வுகள் இணையவழியில் 14.10.2022 முதல் 19.10.2022 வரை நடத்தப்பட்டு, 21543 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் 2-க்கான கணினி வழித் தேர்வுகள் 03.02.2023 முதல் 15.02.2023 வரை நடத்தப்பட்டு, அதில் 16090 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஆசிரியர் தகுதித் தேர்வு சான்றிதழ்களின் மறுபிரதி சான்றிதழ்கள் 17.07.2023 முதல் இணைய வழியில் இ-சேவை மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஜனவரி 2025 வரை 9,113 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

3,192 பட்டதாரி ஆசிரியர் / வட்டார வள மைய பயிற்றுநர் பணியிடங்களுக்கு பணிநாடுநர்களை தெரிவு செய்வதற்கான தேர்வு 04.02.2024 அன்று நடத்தப்பட்டு, தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2,768 இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களுக்கு பணிநாடுநர்களை தெரிவு செய்வதற்கான தேர்வு 21.07.2024 அன்று நடத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரிய தொடர்பான மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள குறைதீர்க்கும் மையம் (Grievance Redressal Cell) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைபேசி தகவல் மையம் (Call Centre) செயல்பட்டு வருகிறது.

நூல்கள் வெளியீடு

திசைதோறும் திராவிடம்: தமிழ் இலக்கியம் மற்றும் வரலாற்று நூல்களை ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளுக்கு மொழிபெயர்த்து வெளியிடும் பொருட்டு, திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 68 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ் திராவிட அல்லது தென்னிந்திய குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம் - உலக தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் கூட்டு வெளியீடாக 16.02.2022 அன்று வெளியிடப்பட்டது. 5 மருத்துவ நூல்களுடன் உள்ளடக்கிய 45 பல்துறை நூல்களும், 2024 ஆம் ஆண்டு, 2ஆவது சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 62 பல்துறை நூல்களும், 2025 ஆம் ஆண்டு, 3ஆவது சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 32 நூல்களும் என மொத்தம் 139 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ் 138 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 23 நூல்களும் 36 சிறார் நூல்களும்; 2024ஆம் ஆண்டு நடைபெற்ற 2வது சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 76 நூல்களும்; 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற 3வது சென்னைப் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் 3 நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

வ.உ.சி. எழுதிய நூல்களின் தொகுப்பை வ.உ.சி. பன்னூல் திரட்டு, வ.உ.சி. திருக்குறள் உரை, வ.உ.சி. பதிப்பித்த தொல்காப்பியம், எழுத்ததிகாரம் மற்றும் தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆகிய நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன,

கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் மற்றும் சிறார் களஞ்சியம் 10 தொகுப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டுடமையாக்கப்பட்ட நூல்களின் வரிசையில் 59 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் தொகுப்புகள் வெளியீடாக பேரா.க.அன்பழகன், குழந்தை எழுத்தாளர் அழ.வள்ளியப்பா, தி.ஜானகிராமன், கி.ராஜநாராயணன் ஆகியோரின் தொகுப்புகளும்; எழுத்தாளர் இமையம் தொகுத்த 'முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புலகம்'என்ற நூலும், கு.அழகிரிசாமி மற்றும் கவிஞர் தமிழ் ஒளி ஆகியோரது தொகுப்புகள் என 7 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பெரியார் சிந்தனைகள் இந்திய மற்றும் பன்னாட்டு மொழிகளில் மொழி பெயர்த்தல் பெரியார் சிந்தனைகள் மொழிபெயர்ப்பு திட்டத்தின்கீழ், 20 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் தமிழ் நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ், 12 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழில் உலக குழந்தை இலக்கியங்கள் திட்டத்தின் கீழ் 22 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், உலக இலக்கியங்களின் எளிமைப்படுத்தப்பட்ட, குழந்தைகளுக்கான நூல் வரிசையில் சுமார் 9 நூல்கள் 2வது சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் வெளியிடப்பட்டன.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்வாக, பழ.அதியமான் எழுதிய வைக்கம் போராட்டம் என்ற நூல் மலையாளம் மற்றும் கன்னடத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தெலுங்கு மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் வைக்கம் போராட்டம் பற்றி 135 பக்கங்கள் கொண்ட சிறு தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

பேராசிரியர் அன்பழகனார் நூல் விற்பனை மையம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தரைத் தளத்தில் 11.03.2023 அன்று பேராசிரியர் அன்பழகனார் நூல் விற்பனை மையம் திறக்கப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு நூலகம்: மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் சர்வதேசத் தரத்திலான "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" ரூ.218.19 கோடி செலவில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ளது. 3,64,521 புத்தகங்களுடன் செயல்பட்டு வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் 8,36,260 வாசகர்கள் இந்நூலகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

புத்தகக் கண்காட்சிகள்: புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக ஊக்குவிக்க சென்னை புத்தகக்கண்காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 2022-23 ஆம் கல்வியாண்டு முதல் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இலக்கியத் திருவிழாக்கள்: தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நதி நாகரிக மரபு அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை, கோவை மாவட்டத்தில் சிறுவாணி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி, மதுரை மாவட்டத்தில் வைகை மற்றும் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழாக்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

இளைஞர் இலக்கிய விழா: 2023-2024 ஆம் ஆண்டு முதல் இலக்கியத் திருவிழாக்களுடன் கூடுதலாக இளைஞர் இலக்கிய விழா ஆண்டுதோறும் ரூ.30.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா: 2023-ஆம் ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. 2023-



ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 24 நாடுகள் கலந்து கொண்டு 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024-ஆம் ஆண்டில் 40 நாடுகள் கலந்து கொண்டு 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2025-ஆம் ஆண்டில் 64 நாடுகள் கலந்து கொண்டு 1,354 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்: விருது பெற்ற படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்பட்டுள்ளது.

முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நூலகம் : இந்திய நூலகத் தந்தை பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களின் நினைவாக, சீர்காழியில் ரூ.1.32 கோடி மதிப்பில் முனைவர். எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன் அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய மாதிரி நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் நூலகம்: செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்களின் நினைவாக, இராமநாதபுரம் மாவட்டம் அபிராமபுரத்தில் உள்ள கிளை நூலகத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

நூலகங்களுக்கு wi-fi இணைய வசதி: வாசகர்கள் மற்றும் போட்டித் தேர்வர்கள் பயன்பெறும் வகையில், கிராமப்புறங்களில் உள்ள பொது நூலகங்களுக்கு மின் நூலக சேவை வழங்கும் நோக்கில், இதுவரை 1,469 பொது நூலகங்களுக்கு wi-fi இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது.

மெய்நிகர் நூலகம்: குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், ரூ.57.20 இலட்சம் மதிப்பீட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 76 நூலகங்களில், 152 மெய்நிகர் தொழில்நுட்ப கருவிகளுடன் மெய்நிகர் நூலகம் (Virtual Reality Library) நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஊர்ப்புற நூலகங்களில் பணியாற்றும் 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு கலந்தாய்வின் மூலம், மூன்றாம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மையான நூல் கொள்முதல் கொள்கை: பொது நூலகங்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் நூல் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக வெளிப்படைத்தன்மையான நூல் கொள்முதல் கொள்கை 2024 வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் கொள்கையின்படி அனைத்து மாவட்டங்களில் உள்ள நூலகங்களுக்கு 2024-2025ஆம் ஆண்டு முதல் பருவ இதழ்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இக்கொள்கையின்படி, பொது நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களையும் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறந்த கற்போர் மையங்களுக்கு விருது: வயது வந்தோர் கல்வித் திட்டச் செயல்பாடுகளை சிறப்பாகச் செயல்படுத்திய 228 சிறந்த கற்போர் மையங்களுக்கு பாராட்டுச்சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு விருது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டது.

புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்: 15 வயதுக்குமேற்பட்ட முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத நபர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுக் கல்வியை வழங்கும் பொருட்டு 2022-23 ஆம் ஆண்டு முதல் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.9.83 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி 15 இலட்சம் கற்போர் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்: மத்திய மற்றும் மாவட்ட சிறைச்சாலைகளில், எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு, அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடும் வகையில் ரூ.25 இலட்சம் செலவில், சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில் முறையே 1,249 மற்றும் 1,398 எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகள் பயனடைந்துள்ளனர்.


SUMMER COACHING CAMP
NILGIRIS-2024






பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்



திரு. **சிவ.வீ.மெய்யநாதன்** அவர்கள்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்



சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்களின் இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.30,000மாகஉயர்வு...

விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு வழங்கப்படும்உதவித் தொகை ரூ.1இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாக உயர்வு...

ரூ.278.06 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 41,811 பயனாளிகளுக்கு கடனுதவிகள்...

ரூ.33 கோடி செலவில் 275 விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள்...

ரூ.814.76 கோடிசெலவில் கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது...

2021-2022ஆம் ஆண்டு

275 கல்லூரி விடுதிகளில் ரூ.274.52 இலட்சம் செலவில் செம்மொழி நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021-2022ஆம் ஆண்டு முதல் ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

275 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.151.70 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டன.

275 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

40 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

அரசுப் பள்ளிகளில் பயின்று 7.5 சதவிகிதம் இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேர்ந்த 317 மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணத்தொகையாக ரூ.1,151.30 இலட்சம் மருத்துவக் கல்வி இயக்ககத்திற்கு ஈடு செய்யப்பட்டது. 2022-2023ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.2,347.16 இலட்சம் செலவில் 683 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். 2024-2025ஆம் ஆண்டில் ரூ.59.99 கோடி செலவில் 2023-2024ஆம் ஆண்டு கல்வி பயின்ற 1,513 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஈடு செய்யப்பட்டது.

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் காப்பாளினிகளுக்கு ரூ.49.55 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டது.

20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.23.60 இலட்சம் செலவில் பயோ-மெட்ரிக் அடிப்படையில் முக அங்கீகார கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

146 விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.13 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

7 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.100.68 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் ரூ.490.26 இலட்சம் கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.

2 பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் பள்ளிவிடுதிகள் ரூ.14.44 இலட்சம்செலவில்கல்லூரிவிடுதிகளாகநிலைஉயர்த்தப்பட்டுள்ளது.

2 விடுதிகளுக்கு ரூ.660.54 இலட்சம்செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் 'கலைத்திருவிழா' என்ற பெயரில் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக 2021-2022ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டில், ரூ.196.72 கோடி செலவில் 7,14,516 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2022-2023ஆம் ஆண்டில், ரூ.233.81 கோடி செலவில் 7,49,410 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2023-2024ஆம் ஆண்டில், ரூ.317.84 கோடி செலவில் 10,22,102 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2024-2025ஆம் ஆண்டில், 3,50,046 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக ரூ.66.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணம், அனைவருக்கும் 400 ரூபாயாக (பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 175 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு 350 ரூபாயிலிருந்து 400ரூபாயாகவும்,ஐடிஐ/பட்டயப்படிப்பு மற்றும்முதுகலைமாணவ,மாணவியருக்கு 235 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும்) 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.

234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் ரூ.468 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டன.

104 கள்ளர் பள்ளி கட்டடங்களில் ரூ.7 கோடி செலவில் சிறப்பு பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 2022-2023ஆம் கல்வியாண்டு முதல் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

225 கள்ளர் பள்ளிகளில் 2021-2022 ஆம் கல்வி ஆண்டு முதல் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியருக்கு, ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.72,000 லிருந்து ரூ.1,00,000 ஆக 2021-2022ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டிற்கு 11ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 4,35,624 மாணவ, மாணவியருக்கு ரூ.221.26 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. 2022-2023ஆம் ஆண்டில், 3,44,144 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக ரூ.165.84 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2023-2024ஆம் ஆண்டில், 3,81,275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ரூ.184.33 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2024-2025ஆம் ஆண்டில், 11 ஆம் வகுப்பு பயிலும் 3,74,051 பிற்படுத்தப்பட்டோர், மிகப்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ரூ.180.36 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள் மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் ஆகிய உதவிகளைப் பெற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு 2021-2022 ஆம் ஆண்டு முதல் ரூ.72,000 லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2021-2022ஆம் ஆண்டிற்கு 3000 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் ரூ.146.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

சீர்மரபினர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவுசெய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.5,000 ஆகவும் 2021-2022ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட ஒரு புத்தகம் ரூ.8 இலட்சம் செலவில் வெளியிடப்பட்டுள்ளது.

சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதுத் தொகை 2021-2022ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு. இவ்விருது பெறுபவருக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும் ரூ.5 இலட்சம் விருதுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது 2021 ஆம் ஆண்டு திரு. க.திருநாவுக்கரசு அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டு கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டு திரு. சுப.வீரபாண்டியன் அவர்களுக்கும், 2024ஆம் ஆண்டு திரு. விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022ஆம் ஆண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 12,662 பயனாளிகளுக்கு ரூ.84.40 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டு

275 கல்லூரி விடுதிகளில் ரூ.220 இலட்சம் செலவில் e-Library அமைக்கப்பட்டது.

மாணவ, மாணவியர் குறைவாக உள்ள பள்ளி விடுதிகளை மறுசீரமைத்து, தேவைப்படும் இடங்களில் 15 கல்லூரி விடுதிகள் ரூ.148.05 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டன.

பள்ளி மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள இடங்களில் கல்லூரி மாணவியர் தங்க ஆணையிடப்பட்டு, காலியாக உள்ள பள்ளி மாணவியர் விடுதி இடங்களில் கல்லூரி மாணவியர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சொந்தக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்ததால் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் 2 விடுதிகளுக்கு ரூ.742.50 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

2022-2023ஆம் ஆண்டில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.117.90 இலட்சம் செலவில் 3 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential schools) 02.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 160 மாணவர்கள் இப்பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.134.32 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

11ஆம் வகுப்பு பயிலும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியர் மாநில அளவில் கல்விச் சுற்றுலாவிற்கு ரூ.42.16 இலட்சம் செலவில் அழைத்துச் செல்லப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ், 1,757 மாணவ, மாணவியர்களை இராமநாதபுரம், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய மற்றும் கலாச்சாரப் பாரம்பரியமிக்க இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் அழைத்து செல்லப்பட்டனர்.

விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 3 முறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்வதற்கென வழங்கப்பட்டு வரும் இடைநிகழ் செலவினம் ரூ.1,000-லிருந்து ரூ.3,000ஆக ரூ.32.98 இலட்சம் செலவில் உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டிற்கு 1,085 பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் ரூ.71.08 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2022-2023ஆம் ஆண்டில் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்கள் கொண்ட குழுவாக இணைத்து 25 நவீன முறை சலவையகங்கள் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்க ஆணையிடப்பட்டு ரூ.12 இலட்சம் செலவில் 4 நவீன முறை சலவையகங்கள் அமைக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில் தையல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களை 10 நபர்கள் கொண்ட குழுவாக இணைத்து 25 ஆயத்த ஆடை அலகுகள் (Readymade Garments Units) ரூ.75 இலட்சம் செலவில் அமைக்க ஆணையிடப்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2022-2023ஆம் ஆண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 15,151 பயனாளிகளுக்கு ரூ.99.62 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டு

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் ரூ.1,000லிருந்து ரூ.1,400ஆக பள்ளி மாணக்கர்களுக்கும், ரூ.1,100லிருந்து ரூ.1,500ஆக கல்லூரி மாணக்கர்களுக்கும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கி பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு ரூ.25 இலட்சம் செலவில் வினா வங்கி வழங்க ஆணையிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

368 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.73.60 இலட்சம் மதிப்பில் விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

385 பள்ளி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.163.24 இலட்சம் செலவில் LED தொலைக்காட்சி DTH இணைப்புடன் வழங்க ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மலை பிரதேசங்களில் செயல்பட்டு வரும் 20 விடுதிகளுக்கு ரூ.6.68 இலட்சம் செலவில் நீர் கொதிகலன் (Geyser) வழங்கப்பட்டுள்ளது.

12 விடுதிகளில் மாணவியர் பாதுகாப்பிற்காக ரூ.12 இலட்சம் செலவில் CCTV Camera பொருத்தப்பட்டுள்ளது.

141 கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியருக்கு ரூ.45 இலட்சம் மதிப்பில் சுகாதார குட்டை தகளிகள் (Napkin incinerator) வழங்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு ரூ.6 இலட்சம் செலவில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இயக்ககங்களில் பணிபுரியும் 17 அலுவலர்களுக்கு ரூ.1.30 இலட்சம் செலவில் தொலைபேசி இணைப்புகள் (CUG) வழங்கப்பட்டுள்ளன.

3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட ரூ.16.14 கோடி செலவில் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

129 விடுதிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.20 கோடி செலவில் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.2.05 கோடி செலவில் சுற்றுச்சுவர் கட்ட ஆணையிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிதாக 3 கல்லூரி விடுதிகள் ரூ.130.22 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதியில் மாணவியர் எண்ணிக்கை 100 லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், செக்கானூரணி அரசு கள்ளர் தொழிற்பயிற்சி மாணவர் விடுதி கல்லூரி மாணவர் விடுதியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் ஒரு உண்டு உறைவிடப்பள்ளி (Residential School) ரூ.50 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

295 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.75 இலட்சம் மதிப்பில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள் வழங்க ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கள்ளர் பள்ளிகளின் வகுப்பறைகளில் டைல்ஸ் பதித்தல் (Laying of Tiles) வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகள் ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சீர்மரபினர் நல வாரியம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், துணைத் தலைவர் மற்றும் 13 அரசு சாரா உறுப்பினர்களை 3 ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்து திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் இதுவரை 16,842 பயனாளிகளுக்கு ரூ.115.50 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 மற்றும் 2023-2024ஆம் ஆண்டுகளுக்கு 2,000 எண்ணிக்கையிலான மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.120 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டிற்கு 977 பித்தளை தேய்ப்பு பெட்டிகள் ரூ.73.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டு

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலத்தில் புதிதாக பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதி ரூ.25 இலட்சத்தில் தொடங்க ஆணை வெளியிடப்பட்டு, 102 மாணவர்களுடன் 04.10.2024 முதல் விடுதி செயல்பட்டு வருகிறது.

ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா ஒரு விடுதியென ஐந்து புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.233.25 இலட்சம் செலவில் தொடங்க ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19 பள்ளி விடுதிகள் ரூ.260.66 இலட்சம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர் நலன் கருதி NEET, JEE நுழைவுத்தேர்விற்கான வினா விடை வங்கி நூல்கள் ரூ.22.22 இலட்சம் செலவில் வழங்க, ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விடுதிகளில் முக அங்கீகார செயலி நிறுவுதல் மற்றும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்துதல் மூலம் விடுதிகள் மேலாண்மை தகவல் அமைப்பு HMIS (Hostel Management Information System) ரூ.1059.43 இலட்சம் செலவில் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய பெரு நகரங்களில் உள்ள 30 விடுதிகளுக்கு பொது சமையலறை (Common Kitchen) ரூ.250.74 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதி ரூ.45.46 இலட்சத்தில் தொடங்க ஆணை வெளியிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

671 பள்ளி விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் ரூ.134.20 இலட்சம் செலவில் வழங்கவும், 284 கல்லூரி விடுதிகளின் சமையலறை பயன்பாட்டிற்காக புதிய பாத்திரங்கள் ரூ.142 இலட்சம் செலவில் வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளவும்,

37 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.388 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு. நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாடகை கட்டடங்களில் இயங்கும் 6 கல்லூரி விடுதிகளுக்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.51.92 கோடிச் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை (PM-YASASVI Pre-Matric Scholarship), USS என்ற போர்டலின் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. TNeGA மூலம் USS 2.0 என்ற போர்டல் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2024-2025ஆம் ஆண்டிற்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையும் (PM-YASASVI Post-Matric Scholarship), Unified State Scholarship (USS) என்ற போர்டலின் மூலம் வழங்க திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை (TNeGA) மூலம் வலைதளம் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2024-2025ஆம் ஆண்டில் 29 கள்ளர்சீரமைப்பு பள்ளிகளில் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024 - 2025ஆம் ஆண்டில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் ரூ.73 இலட்சம் செலவில் வழங்க ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

2024-2025ஆம் ஆண்டில், சீர்மரபினர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் உதவித்திட்டங்களை இணைய வழி சேவைகள் மூலம் ஒருங்கிணைத்து செயலாக்கம் (Online operations) ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2024-2025ஆம் ஆண்டில், சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இயற்கை மரண உதவித் தொகை ரூ.20,000லிருந்து ரூ.30,000 ஆகவும், விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாகவும், முதியோர் ஓய்வூதிய உதவித் தொகை ரூ1,000லிருந்து ரூ.1,200 ஆகவும் உயர்த்தப்பட்டு, பயனாளிகளுக்கு உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சீர்மரபினர் நல வாரியத்தின் மூலம் இதுவரை (31.01.2025) 4,686 உறுப்பினர்களுக்கு ரூ.194.53 இலட்சம் செலவில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் இதுவரை 16,155 பயனாளிகளுக்கு ரூ.122.65 கோடி மதிப்பீட்டில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 6 கோடியே 51 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கோடியே 41 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கிருஷ்ணாஜிபட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் சிங்கவனம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஆயுஷ் பிரிவு பல்நோக்குக்கூடம் மற்றும் சுகாதாரத் தொகுதிக் கட்டடம் ஆகியவற்றை 14.02.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.






தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



திரு. **சி.வி. கணேசன்** அவர்கள்
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்



18 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவுபெற்ற 28,87,382 உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு பயன்...

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் ரூ.22.42 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 31,813 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு பயன்...

வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 2,49,392 வேலை நாடுநர்கள் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்று பயன்...

ரூ.224.19 கோடியில் 23 இடங்களிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 3,880 கூடுதல் இருக்கைகள் உருவாக்கம்...

தொழிலாளர் துறை

18 அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் 20,75,156 தொழிலாளர்கள் புதிதாக பதிவுசெய்யப்பட்டு, 18 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு பெற்ற 28,87,382 உறுப்பினர்களுக்கு ரூ.24,60,81,34,073/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

68 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டு,முதன்முறையாக 3 தொழில்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் மூலம் பல்வேறு தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு இணையவழி தற்சார்புத் (Gig Workers) தொழிலாளர்கள் நலவாரியமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவுசெய்துள்ள தொழிலாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.1,000/- லிருந்து ரூ.1,200/- ஆக உயர்வு.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய நலத்திட்டங்களின் மூலம் 31,813 தொழிலாளர்களுக்கு ரூ.22.42 கோடி அளவிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

ரூ.15.70 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகக் கட்டடம்.

சமரச அலுவலர்களின் சமரச பேச்சுவார்த்தையின் மூலம் 49 நிறுவனங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டு 17,448 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது.

சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்ட 3,506 வழக்குகள் உள்ளிட்ட 8,373 தொழிற்தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகள் சார்ந்த வேலை நிறுத்தங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளன.

738 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு ரூ.1.97 கோடி உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. 1,102 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, குழந்தைகள் நலக் குழுவினரிடமும், பெற்றோர்களிடமும் ஒப்படைப்பு.

கடைகள் மற்றும் நிறுவனங்களில் அனைத்து பணியாளர்களும் அமர்வதற்கு ஏதுவாக நிறுவன வளாகத்தில் இருக்கை வசதிகள் ஏற்படுத்தி தருதல் மற்றும் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பான குடிநீர், கழிப்பிடம், ஓய்வு அறை மற்றும் உணவருந்தும் அறை மற்றும் முதலுதவி வசதிகள் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் 1947 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட 1,500 அமைப்புசாரா பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா ரூ.1,00,000/- மானியம்.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

1948-ஆம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 8,887 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு.

1996-ஆம் ஆண்டைய கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் 6,170 புதிய நிறுவனங்கள் பதிவு.

97,445 தொழிற்சாலை பணியாளர்கள் பயனடையும் வகையில் 1,802 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

தீ மற்றும் தொழிற்சாலை விபத்துகளை தடுக்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான தீ மற்றும் தொழிற்சாலைகள் பாதுகாப்புக் குழு மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான தீ மற்றும் தொழிற்சாலைகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பு.

குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு பயிற்சி வகுப்பில் அலுவலர்களால் திரையிடப்பட்டு, தொழிலாளர்களுக்கு பயிற்சி.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (வேலைவாய்ப்பு பிரிவு)

தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ஆகும் செலவினங்களுக்காக ரூ.14.03 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த தன்னார்வ பயிலும் வட்டங்களில் பயிற்சி பெற்ற 6,615 நபர்கள் தேர்ச்சி பெற்று, அரசு மற்றும் பொதுத்துறைகளில் பணி நியமனம்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகையாக 56,564 பொதுப் பயனாளிகளுக்கு ரூ.94.19 கோடியும், 14,420 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.38.95 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் நடத்தப்பட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில், 2,49,392 வேலை நாடுநர்கள் இந்த முகாம்கள் வாயிலாக தனியார்துறைகளில் வேலைவாய்ப்பினை பெற்று பயன்.

கல்வித் தொலைக்காட்சி மூலமாக பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் ஒளிபரப்பப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில், 1,616 மணி நேர பயிற்சி வகுப்புகள் ஒளிபரப்பு.





வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (பயிற்சிப் பிரிவு)

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் ஆதரவுடன் நெய்வேலியில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.

ரூ.9.6 கோடிச் செலவில் சிவகங்கை, காரைக்குடி மற்றும் புள்ளம்பாடி (மகளிர்) ஆகிய மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான விடுதி கட்டடங்கள். 2024 ஆம் ஆண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 93.26% மாணவர் சேர்க்கையும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 45.65% மாணவர் சேர்க்கையும் நடைபெற்றுள்ளன.

2024 ஆம் ஆண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 90.04% மாணவர்களும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 87.65% மாணவர்களும் வளாக நேர்காணல் மூலம் பணியமர்வு. மாவட்ட அளவில் திறன் பயிற்சி நடவடிக்கைகளை கண்காணித்திட தென்காசி, செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகங்கள். மாறிவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு தனியார் முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து, தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகள் ரூ.2,877.43 கோடிச் செலவில் 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 7,672 கூடுதல் இருக்கைகள் உருவாக்கப்பட்டு மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

57 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், சீர் செய்ய இயலாத மற்றும் உபயோகமற்ற நிலையில் இருந்த இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்களை மாற்றி ரூ.20 கோடிச் செலவில் புதிய மற்றும் நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள். 23 இடங்களில் ரூ.224.19 கோடிச் செலவில் புதிதாக அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 3,880 கூடுதல் இருக்கைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் 6.80 கோடி ரூபாய் செலவில் தமிழில் பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்திய அளவில் நடைபெற்ற NCVT ஆல் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் தேர்வில் தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் 29 பேர் தேசிய அளவில் முதலிடம்.இண்டஸ்ட்ரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் தொழிற்பிரிவிலும் மேனுபேக்சரிங், பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் தொழிற்பிரிவிலும் தொடக்கப்பட்ட முதலாம் ஆண்டிலேயே தேசிய அளவில் 4 மாணவர்கள் முதலிடம்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

71,832 காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் புதிதாக 19 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ரூ.1.45 கோடிச் செலவில், அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய ஏழு இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவைகள்.










பால்வளம் மற்றும்
பால் பண்ணை வளர்ச்சி

திரு. **த.மனோ தங்கராஜ்** அவர்கள்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்



அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைப்பு...

மதுரையில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் மற்றும் சேலத்தில் 6 ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறன்கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை...

பசும்பால் மற்றும் எருமைப்பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.44 ஆக உயர்த்தப்பட்டு, 4 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்...

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.295.97 கோடி ஊக்கத்தொகை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கல்...

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை

அனைத்து வகையான ஆவின் பால் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு 16.05.2021 முதல் ரூபாய் 3/- குறைப்பு.

22.07.2021 அன்று ஆவின் நிறுவனம் அதிகபட்சமாக 43.05 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து சாதனை.

ஆவின் நிறுவனத்தில் 58 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் 21.08.2021 மற்றும் 16.08.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் பால் வளத்துறையில் 3 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள் 11.10.2021, 03.06.2022 மற்றும் 31.10.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் 2022 ஆம் வருடத்திற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் 121 கோடி ரூபாய் மதிப்புள்ள 2 கோடியே 16 இலட்சம் எண்ணிக்கையில் 100 மி.லி. ஆவின் நெய் விநியோகம்.

நுகர்வோர்களின் ஐஸ்கிரீம் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மதுரையில் நாளொன்றுக்கு பத்தாயிரம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022 அன்று காணொளி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

பலாப்பழ ஐஸ்கீரிம், ஒயிட் சாக்லெட், கோல்டு காபி, பட்டர் சிப்லெட்ஸ், பாசுந்தி, ஆவின் ஹெல்த் மிக்ஸ், பதப்படுத்தப்பட்ட சீஸ், பேக்டு யோகர்ட், ஆவின் மில்க் பிஸ்கட் மற்றும் ஆவின் பட்டர் முறுக்கு ஆகிய பத்து புதிய பால் பொருள்கள் 19.08.2022 தேதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள 4 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி 05.11.2022 முதல் பால் உற்பத்தியளார்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.32/-லிருந்து ரூ.35/-ஆகவும், எருமைப்பாலின் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.41/-லிருந்து ரூ.44/ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஆவின் பால் விற்பனை விலை ரூ.3/-குறைப்பினால் ஆவின் பால் நுகர்வோர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.270 கோடி சேமிப்பு.

ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் அதிகரிப்பு.

இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணைகளின் இணையம் (NCDFI) மூலம் 2021-2022ஆம் ஆண்டு ஆவின் நிறுவனத்தின்பால் மற்றும் பால் பொருள்களை இணையதள ஏலத்தின் மூலம் ரூ.590 கோடிக்கு பரிவர்த்தனை மேற்கொண்டதற்காக ஆவின் நிறுவனத்திற்கு இந்திய அளவில் இரண்டாமிடத்திற்கான விருது.

ஈரோடு ஒன்றியத்தில் உள்ள கால்நடை தீவன தயாரிப்பு தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 150 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 300 மெட்ரிக் டன்னாக ரூ.340 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.01.2022 அன்று காணொளி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் புதிதாக நாள் ஒன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தாது உப்புக் கலவை தொழிற்சாலை 19.01.2022 அன்று ரூ.52 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

2022-2023ஆம் ஆண்டு பால்வளத்துறை மானியக்கோரிக்கையின்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது 29 சங்கங்களுக்கு கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

மேலும், 2023-2024 பால்வளத்துறை மானியக்கோரிக்கையின்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது 9 சங்கங்களுக்கு கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

ஆவின் பால் பொருள்கள் விற்பனையை அதிகரித்திட ஏதுவாக புதிதாக 342 பாலகங்கள் தொடங்கப்பட்டன.

பால் உற்பத்தியாளர்களுக்கு தாமதமில்லாமல் பால் பண பட்டுவாடா செய்யும் பொருட்டு பால் பணம் நேரடியாக அவர்களது வங்கி கணக்கிற்கே செலுத்தப்பட்டு வருகிறது.

2022-2023ஆம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.27.60 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.12.58 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2023-2024ஆம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.25.85 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.11.61 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2022ஆம் ஆண்டு ரூ.188.47 இலட்சமும் மற்றும் 2023ஆம் ஆண்டு ரூ. 164.43 இலட்சமும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2024-2025ஆம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.22.51 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.10.86 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் 2.48 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.1,951.74/- இலட்சம் போனஸ் ஆகவும், ரூ.3432.62 இலட்சம் பங்கு ஈவுத்தொகையாகவும் மற்றும் ரூ.38.63 இலட்சம் ஆதரவு தொகையாகவும் (Patronage Rebate) வழங்கப்பட்டுள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் 2.85 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.1520.83 இலட்சம் போனஸ் ஆகவும், ரூ.26.10 இலட்சம் பங்கு ஈவுத்தொகையாகவும் மற்றும் ரூ.2409.56 இலட்சம் ஆதரவு தொகையாகவும் (Patronage Rebate) வழங்கப்பட்டுள்ளது.

நுகர்வோர்களுக்கு ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் பொருட்டு சேலம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் புதிய ஐஸ் கிரீம் தொழிற்சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.

மாதவரம் பால் பண்ணையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மாநில மைய ஆய்வகம் தொடங்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஏற்கெனவே உள்ள பால் பண்ணையின் பால் கையாளும் திறனை 7 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யவும் மற்றும் 30 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய புதிய பால் பண்ணை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய பயிற்சி மற்றும் தீவன விதைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனத்தால் வழங்கப்பட்டு 500 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆவின் நிறுவனம் சென்னை மாநகரில் அதிகபட்சமாக நாளொன்றுக்கு 15.22 இலட்சம் லிட்டர் விற்பனை செய்துள்ளது. மேலும் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களில் அதிகபட்சமாக 16.37 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்தும் சாதனை படைத்துள்ளது. 2023-2024ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக 31.37 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆவின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.11.2023 அன்று கீழ்க்கண்ட பணிகள் தொடக்கி வைக்கப்பட்டன.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தில் மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடை தீவனத்தினை சேமித்து வைப்பதற்காக ரூ.214 இலட்சம் மதிப்பீட்டில் ஒன்றியத்தின் செலவில் 1,500 மெட்ரிக் டன் கூடுதலாக சேமிப்புக் கிடங்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மகளிருக்கு என தனியே நூலக வசதியுடன், விடுதி மற்றும் ஆய்வக வசதியுடன் பயிற்சி நிலையம் ரூ.121 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.272 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகம் மற்றும் பால் கொள்முதல் பிரிவு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ரூ.293 இலட்சத்தில் திருவண்ணாமலை பால் பவுடர் ஆலையில் இணைய நிதி மூலம் 1,500 மெட்ரிக் டன் பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் ஆவின் பாலை ஒரே மாதிரியாக வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய வடிவமைப்பிலான பால் பாக்கெட்டுகள் இணையம் மற்றும் ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட பேக்கிங் முறையில் பால் பொருள்களை சிப்பம் கட்டுதல் மற்றும் அவற்றின் தரத்தினை தொடர்ந்து கண்காணிப்பதனால் இனிப்பு வகைகளின் ஆயுட்காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பசுந்தீவன உற்பத்திக்குத் தேவையான தரமான தீவன விதைகள் ஆவின் நிறுவனம் மூலம் குறைந்த விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு பால் உற்பத்தியாளர்கள் புதிய கறவைகள் வாங்குவதற்கு கறவை மாட்டுக் கடன் வசதி மற்றும் மூலதனக் கடன் வசதிகள் வங்கிகள் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் - வம்சாவழி சோதனைத் திட்டம் வேலூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மொத்த கொள்முதல் குறியீடான 558 சிறந்த மரபியல் திறன் உள்ள பொலிகாளை கன்றுகள் உற்பத்தியில், இதுவரை, 454 காளை கன்றுகள் இந்தியாவின் பல்வேறு விந்து நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் மூலம் 120 சிறந்த மரபியல் திறன் உள்ள பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்யும் நோக்கோடு 76 பொலிகாளை கன்றுகள் தமிழ்நாட்டில் உள்ள பொலிகாளை பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊட்டியில் உள்ள பொலிகாளை பண்ணைக்கு ஒன்றிய அரசின் தரநிர்ணய முகமை இவ்வாண்டு (2023-2024) A Grade வழங்கியுள்ளது.

மேலும், இப்பண்ணை, இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டம் மூலம் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தர நிர்ணய நெறிமுறைகள் அடிப்படையில், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், புதுப்பிக்கவும் பல்வேறு வகையான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், ஆய்வக உபகரணங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது..

செயற்கை முறை கருவூட்டல் வசதிகளை அதிகரிக்கும் வகையில் 313 நபர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சிகள் மாவட்ட ஒன்றிய பயிற்சி நிலையங்கள் வாயிலாகவும், திறன் மேம்பாட்டு மையம், மாதவரம் மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளது, அதில் தற்போது வரை 252 நபர்கள் செயற்கை முறை கருவூட்டல் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு தடையில்லாமல் திரவ நைட்ரஜன் வழங்கும் பொருட்டு 3,000 லிட்டர் கொள்ளளவு உள்ள 5 திரவ நைட்ரஜன் கொள்கலன்கள் நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பூர் ஆகிய ஒன்றியங்களிலும், உறைவிந்து உற்பத்தி நிலையம், ஊட்டி மற்றும் எருமையின பொலிகாளை பண்ணை ஈரோட்டிலும் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை இயக்கத்தின் (NLM) கீழ், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் 2022-2023ஆம் ஆண்டில் 1.17 இலட்சம் கறவைகளுக்கு 50 சதவீத மானியத்துடன் கூடிய பிரீமியம் சார்ந்த கால்நடை காப்பீட்டு வசதிகள் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில், தேசிய கால்நடை இயக்கம் 2023-2024இன் கீழ், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 5 இலட்சம் கறவைகளுக்கு 85 சதவீத மானியத்துடன் காப்பீடு செய்யப்படும். அதில், தற்போது வரை 45,782 கால்நடைகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

கறவைகளின் சினை பிடிக்கும் திறனை அதிகரிக்க 5,000 கறவைகளுக்கு சினைதருண ஒருங்கிணைத்தல் திட்டம் 2022-2023ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது மற்றும் பாலினம் பிரிக்கப்பட்ட விந்துவைப் பயன்படுத்தி கருமுட்டை ஒருங்கிணைப்பு திட்டத்தின் இலக்கான 500 கறவைகளில் 480 கறவைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை உர மேலாண்மைக்கான முன்னோடி திட்டத்தின் கீழ் நீலகிரி ஒன்றியத்தில் உள்ள 120 மகளிர் பால் உற்பத்தியாளர்களுக்கு சாண எரிவாயு கலன்கள் வழங்கப்பட்டது.

2022-2023ஆம் ஆண்டில் மடிநோய் தடுப்பு மற்றும் புற ஒட்டுண்ணி தடுப்பு திட்டத்திற்கு 3,000 லானோலின் டீட் ஸ்ப்ரே(Lanolin Teat spray) மற்றும் 1,000 நானோ மெத்திகோன் ஸ்ப்ரே (Nanomethicone spray) பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியாளர்களுக்கு கறவைகளின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்க மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 2023-2024ஆம் ஆண்டில் 100 மலட்டுத் தன்மையை நீக்கும் முகாம்கள், 200 புத்தறிவு பயிற்சிகள் மற்றும் 50 கன்று பேரணிகள் நடத்தப்பட்டுள்ளது.

மகளிர் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மகளிர் சங்கப் பணியாளர்களின் பயிற்சி தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒன்றிய அரசின் இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ், சேலம் மற்றும் திருநெல்வேலியில் பயிற்சி நிலையங்களில் பிரத்யேகமான மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளது.



18.12.2023 முதல் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் ஊக்கத்தொகையாக லிட்டருக்கு ரூ.3 வழங்கப்பட்டு வருகிறது, இதனால் ஆவின் நிறுவனம் 2024-2025ஆம் ஆண்டில் (ஜனவரி 2025 வரை) சராசரியாக நாளொன்றுக்கு 33.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளது. ரூ.143 கோடி ஊக்கத்தொகையாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 27 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், 2019-2020ஆம் ஆண்டு 6.98 இலட்சமாக இருந்த உறைவிந்து குச்சிகளின் உற்பத்தி படிப்படியாக உயர்ந்து, இவ்வாண்டு 15.68 இலட்சமாக அதிகரித்துள்ளது. 2024-2025ஆம் ஆண்டில், ஜனவரி 2025 வரை, ஆண்டு இலக்கான 20.30 இலட்சத்திற்கு எதிராக 10.26 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

எருமை வளர்ப்பை ஊக்குவிக்க "எருமை கன்று வளர்ப்பு திட்டம்" மற்றும் பாலினம் பகுக்கப்பட்ட உறைவிந்து குச்சி கொண்டு செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு ரூ.820.62 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்ட நிதியின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் ஈரோடு, திருப்பூர், திருச்சி, கரூர், சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, தருமபுரி, காஞ்சிபுரம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் கடலூர் ஆகிய 12 மாவட்டங்களில் 2,000 எருமை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் எருமை பால் உற்பத்தி அதிகரித்து பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் வருவாய் பெறுவதன் மூலம் அவர்களின் பொருளாதாரம் மேம்படும்.கால்நடைத் தீவனம், தாது உப்பு கலவை மற்றும் குடற்புழு நீக்கம் ஆகியவை எருமை கன்று வளர்ப்பு திட்டம் செயல்படுத்தும் ஒன்றியங்களுக்கு மார்ச் 24 முதல் இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும், கடந்த 2023-2024ஆம் ஆண்டு, 17.07 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் பால் உற்பத்தியாளர்களின் இல்லத்திற்கே சென்று சங்க அளவில் பணியாற்றும் கிராம நல ஊழியர்கள் வாயிலாக செய்யப்பட்டுள்ளது.அதன் மூலம் 5.42 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. 2024-2025ஆம் ஆண்டு, டிசம்பர் 2024 வரை, 12.71 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்தே இணையதளம் வாயிலாக ஆவின் பால் அட்டையை விண்ணப்பிக்கவும் மற்றும் புதுப்பிக்கும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டது. இந்த எளிய நடைமுறை மூலம் கடந்த ஜனவரி மாதம் சுமார் 39,750 பால் அட்டை விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை நிலையங்களிலும் ஆவின் ஐஸ்கிரீம் விற்பனையை தொடக்கிடவும் மற்றும் ஐஸ்கிரீம்



விற்பனையை உயர்த்திடவும் பிரத்தியேக ஐஸ்கிரீம் மொத்த விற்பனையாளர்கள் நியமித்து விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐஸ்கிரீம் விநியோகத்தை தமிழ்நாடு முழுவதும் எளிதாக கொண்டு சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கோடைக்காலத்தை முன்னிட்டு ஆவின் நிறுவனம் ஐஸ் கிரீம், தயிர், மோர், லஸ்ஸி போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்துள்ளது. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், பொதுமக்கள் அதிகம் கூடும் கடற்கரை, வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலாத் தலங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் ஆவின் ஐஸ் கிரீம் கிடைப்பதை உறுதி செய்ய 33 பேட்டரி வண்டிகள் மூலம் ஐஸ் கிரீம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற 48ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஆவின் நிறுவனத்தின் சார்பாக கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஆவின் நிறுவனத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி நிலைகள் கண்காட்சி அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

தீவுத் திடலில் நடைப்பெற்ற உணவுத் திருவிழாவில் ஆவின் சார்பாக விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

வளர்ந்து வரும், மின்னணு மற்றும் இணையவழி வணிகத்தில் ஆவின் நிறுவனம் தனது சந்தை மதிப்பை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தற்போது ஆவின் பால் மற்றும் பால் பொருள்கள் விற்பனையை மின் வணிக முறையில் பிக்பாஸ்கெட் (BIG BASKET), ஸ்விக்கி (SWIGGY), ஸோமாட்டோ (ZOMATO) ரிலையன்ஸ் (RELIANCE), ஜியோமார்ட் (JIOMART) பிலிங்க்கிட் (BLINKIT) மற்றும் ஸிப்டோ (ZEPTO) மூலம் சந்தைப்படுத்தியுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் ஆவின் பால் மற்றும் பால் பொருள்கள் மின்னணு மற்றும் இணைய வழி வணிகம் மூலம் மாதமொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஆவின் ஒன்றியங்கள் மற்றும் பெருநகர பால் பண்ணைகளில் பணிபுரியும் தரம் உறுதி செய்தல் பிரிவு அதிகாரிகளுக்கு உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் ஒழுங்கு முறைகள் குறித்து பயிற்சி வகுப்புகள் உணவுப் பாதுகாப்பு அலுவலர்களால் 07.07.2023 அன்று அளிக்கப்பட்டுள்ளது.

பால் மற்றும் பால் பொருள்களின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் தர விதிகளுக்குட்பட்டு ஒன்றியங்களிலிருந்து பெருநகர பால் பண்ணைகளில் பெறப்படும் பாலின் தர அளவீடுகள் மாற்றியமைக்கப்பட்டு 01.092023 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அம்பத்தூர் பால் பொருள்கள் பால் பண்ணைக்கு தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்திய தர நிர்ணய ஆணையத்தால் பால் மற்றும் பால் பொருள்களுக்கான இணக்க மதிப்பீட்டு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு 01.10.2023 அன்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர பால் பண்ணைகளில் உள்ள பால்பண்ணை மற்றும் விற்பனைப் பிரிவைச் சார்ந்த 202 பயனாளிகளுக்கு உணவுப் பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றிதழ் (FoSTaC), தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு துறை (Tamil Nadu Food Safety Department) மூலம் 19.02.2024 அன்று முதல் 21.02.2024 வரை வழங்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.241 இலட்சம் மதிப்பீட்டில் பால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பதப்படுத்தும் மற்றும் பால் பாக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2024 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.43.50 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அலுவலகக் கட்டடம் திறக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.88.80 இலட்சம் மதிப்பீட்டில் திருச்செங்கோடு பால் விற்பனை அலுவலகக கட்டடம் திறக்கப்பட்டுள்ளது.

பெருகிவரும் மக்கள் தேவையினைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.07.2024 அன்று கரூர் மாவட்டத்தில் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை, திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித்

திறன் கொண்ட பால்பண்ணை, திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் தயிர் மற்றும் மோர் தயாரிக்கும் ஆலை, மாதவரத்தில் ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் நோய்க் கிருமிகளை கண்டறியும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம் .திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களின் தீவன தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.01.2025 அன்று விருதுநகர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவனத்தொழிற்சாலை திறக்கப்பட்டது.

2024-2025ஆம் ஆண்டில், 28,000 கிலோ சான்றளிக்கப்பட்ட பசுந்தீவன விதைகள் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு (நீலகிரி பால் ஒன்றியம் நீங்கலாக) தேசிய கால்நடை இயக்க திட்டத்தின் கீழ் தேசிய பால்வள வாரியத்தின் மூலம் பசுந்தீவன சாகுபடிக்காக விநியோகிக்கப்பட்டு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேலூர் மற்றும் விழுப்புரம் ஒன்றிய பயிற்சி மையங்கள் மற்றும் மாதவரம் ஆவின் திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

2024-2025ஆம் ஆண்டில், பெரிய அளவில் 145 முகாம்கள் மற்றும் 96 கன்று பேரணிகள் அனைத்து ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டுள்ளது.

2024-2025ஆம் ஆண்டில், 106 நபர்களுக்கு இயற்கை முறை கால்நடை மருத்துவ TOT பயிற்சி அளிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து ஒன்றிய அளவில் 2,264 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு பால் விற்பனையை ஒப்பிடும்போது தற்போது 2024ஆம் ஆண்டு சுமார் 17% அதிகரித்துள்ளது.

2024 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் இனிப்பு வகைகள் 125.29 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து சாதனை.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் 131 சங்கங்கள் புத்தாக்கம் செய்யப்பட்டு பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் BMC, CC மற்றும் சங்கங்களில் பால் பரிசோதனை மையத்தில் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கலப்படம் இல்லாத பாலை கொள்முதல் செய்வது சாத்தியமாக உள்ளது.

நிருவாகத்தை கணினிமயமாக்கவும், மின் ஆளுமை திறன் கொண்டதாக செயல்படுத்த ஏதுவாக தற்போது 3,311 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும் மொத்த விற்பனையாளர்களாக மார்ச் 2024 முதல் நியமனம் செய்து ரூ.5.83 கோடி மதிப்பிலான ஆவின் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 29,75,500 கொள்ளளவு திறன் கொண்ட 818 மொத்த பால் குளிர்விப்பான்கள் (BMC) செயல்பட்டு வருகின்றன.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் உற்பத்தியாளர்களின் நலன் கருதியும், பால் உற்பத்திக்கான செலவு/இடுபொருட்களின் விலை உயர்வினைக் கருத்தில் கொண்டும் தமிழ்நாடு அரசு, பசும்பால் மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றிற்கு ரூ.3/- வீதம் ஊக்கத்தொகையாக 18.12.2023 முதல் வழங்கி வருகிறது. அக்டோபர் 2024 வரை தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ.295.97 கோடி ஊக்கத்தொகை பெற்று பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் வழங்கும் அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் மாதாந்திர ஊக்கத்தொகை ஒன்றியத்திலிருந்து ஒரே நாளன்று அவரவர் வங்கிக் கணக்குகள் மூலம் (DBT) வழங்கிட வழிவகை

செய்யப்பட்டுள்ளது. அதன்படி, நாமக்கல் ஒன்றியத்திலிருந்து நவம்பர் 2024 ஆம் மாதத்திற்கான ஊக்கத்தொகை ரூ.1.24 கோடி 13,079 பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் ஒன்றியத்திலிருந்து டிசம்பர் 2024 ஆம் மாதத்திற்கான ஊக்கத்தொகை ரூ.1.26 கோடி 7,822 பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

அனைத்து நுகர்வோரும் பயன்பெறும் வகையில் ஆவின் பால் விற்பனை விலை தனியார் பால் விற்பனை விலையைவிட ரூ.12 குறைத்து விற்பனை செய்யப்படுகிறது.

நுகர்வோர் குறிப்பாக பெண்களின் பாதுகாப்பு கருதி பால் விநியோக நேரம் காலை மற்றும் மாலை 6.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை மாற்றியமைக்கப்பட்டு பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது 1,510 பாலகங்கள் மூலம் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2023-24 ஆம் ஆண்டிற்கு புதிதாக 37 பாலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2024-2025 ஆம் ஆண்டிற்கு 40 பாலகங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலிருந்து பால் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பனையைப் பெருக்கும் பொருட்டு மலேசிய உலகத் தமிழ் வர்த்தக சங்க மாநாட்டில் விற்பனை மையம் அமைக்கப்பட்டு ஆவின் பால் உபபொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

என் கடன் பணி செய்து கிடப்பதே

என்னைப் பொறுத்தவரையில் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அந்த வழித்தடத்தில் பயணிக்க நினைக்கிறவன் நான்.

மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்




தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU


Guidance
TamilNadu





தொழில்கள், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா** அவர்கள்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்



ரூ.10,14,368 இலட்சம் கோடிக்கும் மேலான முதலீட்டுத் திட்டங்கள்...

சென்னையில் ரூ.200 கோடியில் நிதிநுட்ப நகரம்...676 தொழில் நிறுவனங்களில் ரூ.80,625.92 கோடி முதலீட்டினை ஈர்த்து 2,53,367 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு...

தூத்துக்குடியில் 1,000 ஏக்கர் பரப்பளவில் விண்வெளி தொழில்துறை மற்றும் திட எரிபொருள் பூங்கா...

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், நமது மாநிலம் முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. சுமார் 11,500 வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய 7,500 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீடுகளை ஈர்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அமெரிக்கப் பயணம் பெரும் வெற்றியடைந்துள்ளது. அதற்கு முத்தாய்ப்பாக, போர்டு நிறுவனம் மீண்டும் சென்னையில் தனது உற்பத்தியை தொடங்குவதற்கான அறிவிப்பையும் வெளியிட்டது.

மே 2021 முதல் மார்ச் 2025 வரை மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு முயற்சிகளின் பலனாக மாநிலத்தில் 32,04,895 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கக் கூடிய வகையில் ரூ.10,14,368 கோடி மதிப்பிலான முதலீட்டிற்கான உறுதிப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

அனைவருக்கும் பயனளிக்கும் சமச்சீரான வளர்ச்சியை உறுதிசெய்திட, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக முதலீடுகளை ஈர்ப்பதில் மாநில அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்படும் முதலீடுகள், அனைத்துப் பகுதிகளிலும் சமமான மற்றும் சீரான முன்னேற்றத்தை உருவாக்கிட அயராது உழைத்திடும் தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையை பறைசாற்றுகிறது.

அந்நிய முதலீடுகள் வாயிலாக பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் இராணிப்பேட்டை போன்ற தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய காலணி உற்பத்தித் துறையால் தற்போது பெரும் முன்னேற்றம் கண்டு வருகின்றன. மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள தூத்துக்குடி, பசுமை ஹைட்ரஜன் திட்டங்களுக்கான மையமாக மாறி வரும் வேளையில், சூரிய மின்கலன் மற்றும் அதன் தொகுப்புகளின் உற்பத்திக்கான பெருந்திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் தொழில்நுட்ப மையம், விண்வெளி மற்றும் பாதுகாப்பு, மின்னணு மற்றும் மின் வாகனங்களுக்கான மையமாக மேற்கு மண்டலம், குறிப்பாக, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் பகுதிகள் உருவாகி வருகின்றன. இதற்கிடையில், மாநிலத்தின் வடக்கு மண்டலம், நாட்டின் வாகன உற்பத்தியின் தலைநகராக தனது முன்னிலையை தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.

இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 41 சதவீதம் பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மாநிலத்தில் நிலவும் அமைதி மற்றும் நிலையான வளர்ச்சிக்கு உகந்த சூழலால் தமிழ்நாட்டை நோக்கி புதிய தொழில் முதலீடுகள் வந்த வண்ணம் உள்ளன.

பல துறை சார்ந்த 12 கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு;

தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021,

தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டு கொள்கை 2021,

தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை 2022,

தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022,

தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை 2022,

தமிழ்நாடு விண்வெளி & பாதுகாப்புத் தொழில் கொள்கை 2022,

தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை 2023,

தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023,

தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023

தமிழ்நாடு தொழில் ஜவுளி மறுசுழற்சி செய்யப்பட்ட பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் செயற்கை இழை நூல், செயற்கை இழை துணிகள் மற்றும் ஆடைகள் தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம் 2023.

தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024

தமிழ்நாடு பொது – தனியார் கூட்டாண்மைக் கொள்கை 2024

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறை சார்ந்த கொள்கைகள் மட்டுமல்லாமல் பின்வரும் கொள்கைகள் விரைவில் வெளியிடப்பட உள்ளன.

தமிழ்நாட்டை விண்வெளி தொழிலில் முன்னணி மாநிலமாக மேம்படுத்த, விண்வெளி தொழில் கொள்கை (Space Tech Policy) வெளியிடப்பட உள்ளது. சுழற்பொருளாதார (circular economy) துறைகளில் முதலீடுகளை அதிகரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு சுழற்பொருளாதார முதலீட்டு ஊக்குவிப்பு கொள்கை மற்றும் பொம்மைகள், பொழுதுபோக்கு மற்றும் குழந்தைகள் விளையாட்டுப் பொருள்கள் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் பெருமளவில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் ஒரு சிறப்பு திட்டம் வெளியிடப்படும்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், புதிய தொழிற்பூங்காக்களை நிறுவிடத் தேவைப்படும் 45,000 ஏக்கர் நிலங்களைக் கண்டறிந்து, இதுவரை 14,086 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது.

சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தஞ்சாவூர், பெரம்பலூர், தருமபுரி மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய சிப்காட் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் நலன் பேணும் வகையில் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான தங்குமிடங்களை ஏற்படுத்த அரசு முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில் 706 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட 18,720 படுக்கைகள் கொண்ட தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான இந்தியாவின் மிகப்பெரிய வீட்டுவசதித் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு முயற்சியான டைடல் பூங்கா சென்னை ராஜீவ் காந்தி சாலையில், 2000-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதன் மூலம், தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. அந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் டைடல் பூங்காவையும். தஞ்சாவூர், சேலம், விழுப்புரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மினி-டைடல் பூங்காக்களை திறந்து வைத்தார். மேலும், மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்கள் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டினார்கள். இப்பூங்காக்கள் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறைகள் வளர்ச்சி பெறுவதோடு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளும் மாநிலத்தில் உருவாகும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 676 தொழில் நிறுவனங்களுக்கு 6232.733 ஏக்கர் நிலம், ஒதுக்கீடு செய்துள்ளதோடு, 80,625.92 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்த்து 2,53,367 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

ஒரகடத்தில் மருத்துவ உபகரண தொழிற்பூங்கா ஒன்றினை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில்நுட்ப பங்குதாரராக நியமித்து அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சிப்காட் நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்திற்கிடையே கையெழுத்திடப்பட்டுள்ளது. இதுவரை 56 ஏக்கர் நிலம் 20 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிப்காட் நிறுவனம் எறையூரில் தொழிற்பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகிறது. இப்பூங்காவிற்காக, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்கா மற்றும் அதன் அங்கீகார நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இதுவரை 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தோல் அல்லாத காலணி நிறுவனங்களுடன் வெற்றிகரமாக கையெழுத்திடப்பட்டுள்ளன. முதல் கட்டமாக, திருவாளர்கள் ஜே.ஆர் ஒன் கோத்தாரி காலணி நிறுவனமானது 28.11.2023 அன்று தனது உற்பத்தியைத் தொடங்கியது.

தொழில் பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான புத்தாக்க மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைக்காக ரூ.500 கோடி கார்பஸ் நிதியில் தொழில் சுற்றுச்சூழல் அமைப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் 308 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 1128.75 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.03.2022 அன்று அடிக்கல் நாட்டினார். உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 125.96 ஏக்கர் நிலம் 3 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூர், ஒசூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் புத்தாக்க மையங்களை சிப்காட் நிறுவனம் ரூ.33.46 கோடி மதிப்பீட்டில் நிறுவியுள்ளது. சிப்காட் நிறுவனம் மேலும் ஒரு புத்தாக்க மையத்தை மதுரையில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் 26,500 சதுர அடியில் நிறுவ உள்ளது.

மணப்பாறை (138 ஏக்கர்), திண்டிவனம் (158 ஏக்கர்) மற்றும் தேனி (152 ஏக்கர்) ஆகிய மூன்று உணவுப்பூங்காக்களை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது.



தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் முறையே தூத்துக்குடியில் 60 MLD கொள்ளவு கொண்ட கடல் நீர் சுத்திகரிப்பு மையம் ஒன்றினையும், ஒசூரில் 20 MLD கொள்ளவு கொண்ட TTRO கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை உருவாக்க சிப்காட் நிறுவனம் முனைந்து வருகிறது.

சிப்காட் நிறுவனம், பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 447.21 ஏக்கர் பரப்பளவில், (201 ஏக்கர் சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) மாபெரும் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பு பூங்கா ஒன்றினை அமைத்து வருகின்றது.

விருதுநகரில் இந்தியாவின் முதல் பி. எம். மித்ரா பூங்காவை தொடங்குவதற்காக ஒன்றிய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த பூங்காவிற்காக சிப்காட் நிறுவனம் 1,052 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியாக ரூ.2,061 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதில் பி.எம். மித்ரா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் ரூ.500 கோடி மானியமும் அடங்கும். தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் மற்றும் துணி நூல் துறை மூலம் 11 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் அடுத்த தலைமுறைக்கான போக்குவரத்து தீர்வுகளை முன்னெத்துச் செல்ல சிப்காட் நிறுவனம் ஒரு முன்னோடி நிறுவனமாக, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் ரூ. 210 கோடி மதிப்பீட்டில் 300 ஏக்கர் பரப்பளவில் அதிநவீன வருங்கால நகர்திறன் பூங்காவை உருவாக்கி வருகிறது. 17 தொழில் அலகுகளுக்கு 102.39 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.02.2024 அன்று தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம் சிப்காட் தொழிற்பூங்காவில், 356.30 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,904 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வின்ஃபாஸ்ட் ஆட்டோ லிமிடெட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இராணிப்பேட்டை மாவட்டத்தில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு டாடா மோட்டார்ஸ் குழுமத்துடன் 13.03.2024 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.09.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.11.2024 அன்று அரியலூர் மாவட்டத்தில் உள்ள சிப்காட் ஜெயம்கொண்டம் தொழிற்பூங்காவில் தைவான் நாட்டைச் சேர்ந்த டீன் ஷுஸ் நிறுவனம் 1,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கவுள்ள காலணிகள் உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.02.2025 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிப்காட் கங்கைக்கொண்டான் தொழிற்பூங்காவில் டாடா சோலார் நிறுவனம் 4,434 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பெற்ற சூரிய மின்கல தொகுப்பு உற்பத்தி தொழிற்சாலையினை தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.12.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் தைவான் நாட்டைச் சேர்ந்த ஹோங் ஃபு நிறுவனம் 2,573 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 39,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கவுள்ள தோல் அல்லாத காலணிகள் உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

பெருந்துறையில் (222 படுக்கைகள்) ரூ.7.91 கோடி திட்டச் செலவிலும், தூத்துக்குடியில் (252 படுக்கைகள்) ரூ.6.92 கோடி திட்டச் செலவிலும் பெண்களுக்கான தொழில்துறை வீட்டு வசதிகளை நிறுவும் பணியில் சிப்காட் ஈடுபட்டுள்ளது.

சிப்காட் நிறுவனம் தொழிலாளர் தங்குமிட வசதியினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் நிலையான வீட்டு வசதிகளை வழங்குவதற்காக சிப்காட், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) மற்றும் டைடல் ஆகியவற்றுடன் பங்குதாரர்களாக இணைக்கப்பட்டு, தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம் (TNIHPL) என்ற சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம் சிறுசேரி – 807 எண்ணிக்கையிலான மகளிர் தங்குமிட வசதி, கங்கைக்கொண்டான் – 870 எண்ணிக்கையிலான மகளிர் தங்குமிட வசதி, செய்யாறு – 441 எண்ணிக்கையிலான ஆடவர் தங்குமிட வசதி, இருங்காட்டுக்கோட்டை – 801 எண்ணிக்கையிலான ஆடவர் தங்குமிட வசதி மற்றும் சூளகிரி–1,495 எண்ணிக்கையிலான ஆடவர் மற்றும் மகளிர் தங்குமிட வசதி என தொழிற்பூங்காக்களில் தொழிலாளர் வீட்டு வசதிகளை ஏற்படுத்தி வருகிறது.

சிப்காட் நிறுவனம் இரண்டு மின்னணு தயாரிப்பு தொகுப்பு பூங்காக்களை (i) மாநல்லூரில் 474 ஏக்கர் பரப்பளவிலும் (ii) பிள்ளைப்பாக்கத்தில் 379 ஏக்கர் பரப்பளவிலும் உருவாக்கி வருகிறது.

தொழிற்பூங்காக்களில் உள்ள திறந்த வெளி நிலங்களில் (OSR) பூர்வீக இனமரக்கன்றுகளை நட்டு பசுமை மேம்பாட்டை உறுதி செய்கிறது. அனைத்து சிப்காட் தொழிற்பூங்காக்களிலும் 1,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தில் 110 ஏக்கர் நிலப்பரப்பில் "நிதிநுட்ப நகரம்" ஒன்றை சுமார் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிதிநுட்ப நகரம், முதற்கட்டமாக 56 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.82.87 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5.6 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் ஒரு உயரமான கட்டடமாக அமைக்க சுமார் ரூ.236.81 கோடி மதிப்பீட்டில் "நிதிநுட்ப கோபுரம்" (Fintech Tower) என்ற அடுக்குமாடி கட்டடத்தினை கட்டுவதற்கும் டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத்தில் அதிகரித்து வரும் விமான போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு, அதனை ஈடு செய்வதற்காக, பரந்தூரில் ஆண்டுக்கு 100 மில்லியன் பயணிகளை கையாளும் வகையில்





ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

குலசேகரப்பட்டினத்தில் இஸ்ரோ (ISRO)-வின் புதிய விண்வெளி நிலையத்திற்கு அருகில், தூத்துக்குடியில் விண்வெளி தொழில்துறை மற்றும் திட எரிபொருள் பூங்காக்களை சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் டிட்கோ உருவாக்க திட்டமிட்டுள்ளது.

உலகளாவிய இணைப்புகளுடனும், அறிவு சார் பொருளாதாரத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கை வகிப்பதற்காக "தமிழ்நாடு அறிவு சார் நகரத்தை" உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்டமிட்டுள்ளது.

சூலூரில் உள்ள விமானப்படை நிலையத்தை ஒட்டி ஒரு வான்வெளி தொழில் பூங்காவை சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் டிட்கோ உருவாக்கி வருகிறது.

டிட்கோ. டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் (TTL) என்ற நிறுவனத்துடன் இணைந்து கோயம்பத்தூரில் ஒரு "பொது பொறியியல் வசதி மையத்தை" ரூ.400 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற் கட்ட பணிகள் ரூ.166.83 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூரில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் (TTL) உடன் இணைந்து ஒரு பொது பொறியியல் வசதி மையத்தை ரூ.166.83 கோடி மதிப்பீட்டில் டிட்கோ அமைத்து வருகிறது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), தொழில்-கல்வித்துறை ஒத்துழைப்பு, வணிகமயமாக்குதல், பிராந்திய வளர்ச்சி மற்றும், தொழில்முனைவோர் மேம்பாடு, அறிவுசார் சொத்து (Intellectual Property) உருவாக்கம் ஆகியவற்றுடன் பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்களை அமைத்திடும் பணியில் டிட்கோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கோவிட் 19 தொற்று இரண்டாவது அலையால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் தடைகள்/சிக்கல்களை எதிர்கொள்ளும் விதத்தில், இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான பணப்புழக்கத்தை மேம்படுத்தும் (Lens Scheme for MSMEs), திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், மேற்சொன்ன காலகட்டத்தில் 581 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 159.47 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று முதல் கட்டமாக மரக்கூழ் தயாரிக்கும் விரிவாக்க திட்டத்தை திறந்துவைத்து சிறப்பித்தார்கள். இதன் மூலம் 2023-2024ஆம் நிதியாண்டில் மரக்கூழ் இறக்குமதியை தவிர்த்து நமது ஆலையிலேயே உற்பத்தி செய்ததன் காரணமாக நிறுவனம் ஈட்டிய சேமிப்பு ரூ.225 கோடியாகும்.

சுற்றுச்சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டிற்கிணங்க, இரண்டு மெகாவாட் சூரிய மின் உற்பத்திக்காக இந்நிறுவனத்தின் இரண்டு அலகுகளின் கட்டட மேற்கூரைகளின் மீது சூரிய மின்தகடுகள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம், ரூ.8 கோடி மதிப்பீட்டில், கார்பன் தடயத்தைக் குறைக்கவேண்டும் என்ற நிறுவனத்தின் அயராத முயற்சிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்), விருதுநகர் மாவட்டம், ஆலங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு சிமெண்ட் ஆலையையும், அரியலூர் மாவட்டம், அரியலூரில் ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு சிமெண்ட் ஆலைகளையும் இயக்கி வருகிறது.

டான்செம் தனது புதிய ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டை தனியார் சிமெண்ட் ஆலைகளின் சிமெண்ட் விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்வதற்காக "வலிமை" என்ற புதிய வகையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரை 23.68 இலட்சம் மெ.டன் வலிமை சிமெண்ட் 31.03.2025 விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ரூ.5,000/- வழங்கும் திட்டத்தினை தொடக்கி வைத்தார்கள். இதுவரை, உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக 32,611 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.16.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பகுதியில் முதல் கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் இயந்திரத்தின் மூலமாக உப்பு உற்பத்தி மேற்கொள்ளத்தக்க வகையில் உப்பு தொழிற்சாலை நிறுவி உள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை "நெய்தல் உப்பு" என்ற வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.





எம்.சி.ராஜா
கல்லூரி மாணவர் விடுதி
M.C. RAJA COLLEGE
STUDENT HOSTEL



ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்



டாக்டர் **மா.மதிவேந்தன்** அவர்கள்
மாண்புமிகு ஆதிதிராவிடர்
நலத்துறை அமைச்சர்



ரூ.108. 50 கோடி மதிப்பில் 154 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள்...

ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் 60க்கும் மேற்பட்ட புதிய விடுதிகள்...

2,76,992 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் இலவச வீட்டுமனை இ-பட்டா வழங்கப்பட்டுள்ளது...

ரூ.1,000 கோடி செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத்திட்டம் உருவாக்கம்...

கல்வி மேம்பாடு

பள்ளி மற்றும் விடுதி உட்கட்டமைப்பு பணிகள்

ரூ.108.50 கோடி மதிப்பில் 154 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

39 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு 65 வகுப்பறைகள் மற்றும் 39 ஆய்வுக் கூடங்கள் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 மேல்நிலைப் பள்ளிகளை ரூ.16.26 கோடி செலவில் மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்தி அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

சிறந்த கல்வியினை வழங்க 119 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு அறிவுத்திறன் வகுப்பறைகளும், 174 பள்ளிகளுக்கு அறிவுத் திறன் பலகைகளும், 206 பள்ளிகளுக்கு உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

7 மாவட்டங்களில் உள்ள 88 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.9.24 கோடி மதிப்பீட்டில் வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறைகள் கட்டப்பட்டுள்ளன.

ரூ.7.46 கோடி செலவில் 305 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

13 ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

126 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் ஆய்வு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு இன்வர்ட்டர் (Inverter) வழங்கப்பட்டுள்ளன.

இளைஞர்களுக்கான ஆளுமை வளர்ச்சி பயிற்சி மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான வழிகாட்டு ஆலோசனை முகாம்கள்

என் கல்லூரி கனவு - தொட்டு விடும் தூரத்தில் இலக்கு:

பள்ளி இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு என் கல்லூரி கனவு எனும் உயர்கல்வி குறித்த வழிகாட்டு ஆலோசனை முகாம்களும், பழங்குடியின மாணவர்கள் தேசிய உயர் கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்வுகளை எளிதில் அணுக ஏதுவாக"தொட்டு விடும் தூரத்தில் இலக்கு" எனும் சிறப்பு பயிலரங்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வினில் 1,603 மாணவர்கள் மற்றும் 438 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

உயர் கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்விற்கான பயிற்சிகள்

பழங்குடியினர் நலத்துறை மூலம் GTR பள்ளிகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு JEE, NEET, CLUT, NIFT மற்றும் CUET போன்ற உயர்க்கல்வி தேர்விற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு மொத்தம் 16 மாணவர்கள் முறையே மருத்துவக் கல்லூரியில் 2 மாணவர்களும், திருச்சி NIT கல்லூரியில் 3

மாணவர்களும், திருச்சி தேசிய சட்டக் கல்லூரியில் ஒரு மாணவரும், சென்னை தரமணி NIFT இல் 4 மாணவர்களும் திண்டுக்கல் காந்தி கிராம் மத்திய பல்கலைக்கழகத்தில் 6 மாணவர்களும், அரசின் கல்வி உதவித் தொகையுடன் பயின்று வருகின்றனர்.

உயர்கல்வி நிறுவனங்களுக்கான கல்விச் சுற்றுலா

உயர்கல்வி நிறுவனங்களுக்கான சுற்றுலா என்ற திட்டத்தின் கீழ், உயர்கல்வி பயில்வதற்கான ஆர்வத்தை தூண்டவும், உயர்கல்விக்கான வழிகாட்டுதல்களை அறிந்து தெளிவான முடிவுகளை எடுக்கவும், மத்திய / மாநில உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்து செல்ல ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.25,000/- வழங்கப்படுகிறது.

பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத்திறன் வகுப்பு, கணினிப் பயிற்சி போன்றவை வழங்கப்படுகிறது.

கல்வி உதவித் தொகை திட்டம்

சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான உட்பயிற்சி உதவித்தொகை திட்டம்

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் (3 மற்றும் 5 ஆண்டு படிப்பு) ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்கள் அவர்களின் பாடத்திட்டத்திற்கு ஏற்ப உட்பயிற்சி (Internship) காலங்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. 2023-2024ஆம் ஆண்டு 789 மாணவர்களுக்கு ரூ.78.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதில் சிறப்பினமாக நீதியரசர்களிடம் பயிற்சி பெற உதவித்தொகை ரூ.10,000/- வீதம் 15 மாணாக்கர்களுக்கு ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 803 மாணாக்கர்களுக்கு உட்பயிற்சி உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித்தொகை திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வெளிநாட்டிற்குச் சென்று கல்வி கற்பதற்கான கல்வி உதவித்தொகை திட்டம் மறு சீரமைப்பு செய்யப்பட்டு, பெற்றோரின் வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

கலை, அறிவியல், வணிகம், சட்டம், பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற துறைகளில் வெளிநாடுகளில் முதுகலை அல்லது ஆராய்ச்சி படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.36 இலட்சம்வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2021-2022ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் மூலம் 9 மாணவர்கள் பயனடைந்த நிலையில், தற்போது 176 மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர். 2021-2022 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ.5.31 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், 2024-2025 நிதியாண்டிற்கு ரூ.60.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகை

முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகை ரூ.1,00,000/- என்று உயர்த்தப்பட்டுள்ளதுடன், 1,600 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இவ்வுதவித் தொகையினை மறுசீரமைப்பு செய்து தற்போது 2,000 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

உயர்திறன் ஊக்கத் தொகை திட்டம்

பட்டப்படிப்பு,பட்டமேற்படிப்பு,தொழில்நுட்ப படிப்புகளில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு ரூ.12,000/-,ரூ.15,000/- மற்றும் ரூ.25,000/- என மூன்று பிரிவுகளின் கீழ், திறன் பயிற்சிக்கான பண உறுதி ஆவணம் வழங்கும் உயர்திறன் ஊக்கத் தொகை திட்டம் 2024-2025ஆம் நிதியாண்டு முதல் ரூ.41 இலட்சம் செலவில் அரசால் செயல்படுத்தப்படுகிறது.

தொல்குடி புத்தாய்வுத் திட்டம்

பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வாளர் படிப்பினை மேற்கொள்ளும் இளம் வல்லுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு "தொல்குடி புத்தாய்வு திட்டம்" எனும் உதவித் தொகை திட்டத்தினை ரூ.1.50 கோடி செலவில் அரசு செயல்படுத்தி வருகிறது.

மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித்தொகை ஒன்றிய அரசின் உதவித்தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

விடுதி மேம்பாட்டு திட்டங்கள்

விடுதி உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்

மாணவர்கள் தங்கள் கல்வியினை சிறப்பாகப் பயிலும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் ரூ.300 கோடி மதிப்பில் 60க்கும் மேற்பட்ட புதிய விடுதிகளும் விடுதிகளில் பராமரிப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 535 விடுதிகளுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் நவீன வசதிகளுடன் 10 தளங்களுடன் கூடிய மாணவர் விடுதி ரூ. 45 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு 83 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

விடுதிகளில் ஏற்படும் சிறுபராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாணாக்கரின் எதிர்பாரா மருத்துவ செலவினம் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ.5.70 கோடி செலவில் கழிவறை மற்றும் குளியலறைகள் கட்டப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த சமையற்கூடம்

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதுடன், தரமான மற்றும் சுவையான உணவினை வழங்கும் பொருட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை பின்பற்றி ஒருங்கிணைந்த சமையற்கூடம் மூலம் உணவு வழங்கும் திட்டம் சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை நகரில் உள்ள 23 கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளில் தங்கிப்பயிலும் சுமார் 2,500 மாணாக்கர் பயனடைந்து வருகின்றனர். சென்னையில் இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து ரூ.9 கோடி மதிப்பீட்டில் 3,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கோவை, மதுரை மற்றும் திருச்சி நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தல் அறை

கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி, உடல் மற்றும் மனத்திறனை மேம்படுத்துவதற்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் உள்ள 22 விடுதிகளில் 2,197 மாணாக்கர் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறை அமைக்கப்பட்டு வருகின்றது.

விடுதி மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

நல்லோசை கற்றல் இனிதே

விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி நேரத்திற்கு பின்னர் கலை, அறிவியல், விளையாட்டு, தொழில்நுட்பம், மென் மற்றும் பணித்திறன்களில் திறமை வளர்த்துக்கொள்ள ஏதுவாக கல்லூரி மாணவர்களுக்கு நல்லோசை எனும் சிறப்பு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், பள்ளி மாணவர்களுக்கு கற்றல் இனிதே எனும் சிறப்பு கல்வி சார்ந்த பயிற்சியும் ரூ.10 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு

விடுதிகளை சீரான முறையில் பராமரித்து, மாணாக்கர் கல்வி பயில நல்ல சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன் கூடிய விடுதி மேலாண்மை அமைப்பு 1,383 விடுதிகளில் ரூ.27.15 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

விடுதி மாணக்கருக்கான உணவு மற்றும் இதர செலவீனங்களுக்கான கட்டணம் உயர்த்தி வழங்குதல்

முக்கிய விழா நாள்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உணவுக் கட்டணம் இரட்டிப்பாக்கப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு ரூ.40 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.80 ஆகவும் வழங்கப்படுகிறது.

விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர இதர செலவின உதவித்தொகை இரட்டிப்பாக்கப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு ரூ.100 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.150 ஆகவும் வழங்கப்படுகிறது.

விடுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இதர முன்னெடுப்புகள்

ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகள் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி விடுதிகளுக்கு ரூ.15 இலட்சம் செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் புதிதாக சேரும் மாணாக்கரின் தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும் விதமாக படுக்கை உபகரணங்களான கம்பளி, போர்வை மற்றும் அன்றாட தேவைக்கான பொருள்கள் அடங்கிய பெட்டகம் 2024–2025 நிதியாண்டில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகையானது உயர்த்தப்பட்டு, பள்ளி மாணவர்களுக்கு ரூ.1,000லிருந்து ரூ.1,400 ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1,100லிருந்து ரூ.1,500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு மின் அரைப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ஆண்டுதோறும் மூன்று மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் நூலகங்கள் மற்றும் இணைய வழி நூலகங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

1,331 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 160 பழங்குடியினர் நல விடுதிகளில் முறையே 1) இசை, இசை தகவல் தொழில்நுட்பம், நாடகம், புகைப்படக்கலை மற்றும் கவின் மன்றம், 2) வாசித்தல் மற்றும் விவாத மன்றம் 3) சுற்றுச்சூழல் மன்றம் 4) சதுரங்கம் மற்றும் பிற விளையாட்டு மன்றம் ஆகிய நான்கு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தொகுப்பூதியத்தில் பகுதி நேர தூய்மைப் பணியாளர்களாக பணிமுடித்த 98 தூய்மைப் பணியாளர்களை முழு நேர தூய்மைப் பணியாளர்களாக மாற்றி சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாடு

2024ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்ட சட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியானது, முறையாக சென்றடைவதை உறுதி செய்ய 2024ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்ட சட்டம் இயற்றப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.88,130.83 கோடியில், ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.19,363.56 கோடியும் (21.97%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,738.40 கோடியும் (1.97%) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாடு, இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்பு, தொழில்முனைவோர் கடனுதவிகள், நிலம் மேம்பாடு மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் போன்ற திட்டங்களை உள்ளடக்கி முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மானியமாக, தனிநபரின் மொத்த திட்டச் செலவில் 35% அல்லது அதிகபட்சம் ரூ.3.50 இலட்சம், இதில் எது குறைவோ அது வழங்கப்படும். கடந்த நான்காண்டுகளில் 52,255 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி ரூ.409.68 கோடி வழங்கப்பட்டுள்ளது. வங்கியில் கடன் தவணைகளை தவறாமல் செலுத்தும் பயனாளிகளுக்கு 6% வட்டி மானியம் வழங்கப்படுகிறது. 2024-2025ஆம் நிதியாண்டில் மட்டும் 2,629 பயனாளிகளுக்கு ரூ.49.99 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பட்டதாரிகள் வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்காக சிறப்புப் பயிற்சிகள் ரூ.10 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

7,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண்காடுகள் (Agroforestry) நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் ரூ.51.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் ரூ.2.50 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற 100 பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாக தொழில் தொடங்க ரூ.50,000/- வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் மின் இணைப்புப் பெற 90 சதவீதம் மானியம் ரூ.46.65 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.15,000 வீதம் ரூ.3 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வாங்க தலா ரூ.10,000 வீதம் ரூ.2 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

7,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண்காடுகள் (Agro forestry), நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாக தொழில் தொடங்க ரூ.50,000 வீதம் 100 நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மொத்த அளவியல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்காக தொழில்நுட்ப – பொருளாதார ஆய்வு மூலம் ஒரு கோடி ரூபாய் செலவில் திட்ட அறிக்கை வங்கி ஏற்படுத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணாக்கருக்கு வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிகள் ரூ.10 கோடி செலவிலும், ரூ.2.50 கோடி செலவில் 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.



500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விடுதி மாணாக்கர்கள் மற்றும் 100 இளைஞர்களுக்கு நிதி சார்ந்த தொழில்களில் ரூ.50 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3 கோடி மதிப்பீட்டில் சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க ரூ.90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்க ரூ.45 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

40 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளவும், தற்போது தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வரும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, மருத்துவ மூலிகை வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை மிளகு விளைவித்தல், பானை தயாரித்தல், காளான் வளர்ப்பு, மூங்கில் தளவாடங்கள் தயாரித்தல், துரித உணவகங்கள் அமைத்தல் மற்றும் நரிக்குறவர்களுக்கான பிரத்யேகமான கட்டமைப்புகள் ஆகிய வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் கண்காணிக்க திட்ட கண்காணிப்பு அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை ரூ.1.25 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

நன்னிலம் நில உடைமைத் திட்டம்

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிட மகளிரை நில உடமையாளர்களாக மாற்றி சமூக நிலை மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் நன்னிலம் நில உடைமைத் திட்டம் எனும் ஆதிதிராவிடர் மகளிருக்கான நிலம் வாங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 217 பயனாளிகளுக்கு ரூ.10.63 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2024-2025ஆம் நிதியாண்டில் ரூ.20 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு,தற்போதுவரை400பயனாளிகளுக்குரூ.20கோடிமானியம்விடுவிக்கப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டம்

வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நாளது வரை 2,76,992 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை இ-பட்டா வழங்கப்பட்டுள்ளது.

தொல்குடி வேளாண்மை மேலாண்மை திட்டம் – ஐந்திணை

விவசாயம்/ விவசாயம் சாரா தொழில்கள், கால்நடை மேம்பாடு, மீன் வளர்ப்பு, பாரம்பரிய தொழில்கள் மற்றும் வன சிறு பொருள்கள் சார்ந்த சுய மற்றும் கூட்டுத்தொழில் தொடங்க "தொல்குடி வேளாண்மை மேலாண்மை திட்டம் – ஐந்திணை " எனும் பழங்குடி மக்களுக்கான வாழ்வாதார திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 7 மாவட்டங்களில், 14 கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 1,090 பழங்குடியின விவசாய பயனாளிகள் பயன் பெறும் வகையில் ரூ.1.15 கோடி மதிப்பீலான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 90 பழங்குடியின மீனவர்களின் பயன்பாட்டிற்கு மீன்பிடி படகு, வலைகள் மற்றும் மீன் விற்பனை உபகரணங்கள் ரூ.37.19 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

200 பழங்குடியினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.02 கோடி மதிப்பில் ஆடு மற்றும் கோழி உள்ளிட்ட கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், தோட்டக்கலை, மலரியல், கைவினைப் பொருள்கள், சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்களை மேற்கொள்ள மகளிருக்கு மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் தாட்கோ மூலம் வழங்கப்படுகிறது. ஒரு மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள தனிநபருக்கான மானியத் தொகை ரூ.50,000/- வீதத்தில் 12 உறுப்பினர்களுக்கு அதிகபட்ச மானியத் தொகை ரூ.6,00,000/-(ரூபாய் ஆறு இலட்சம்) மானியமாக வழங்கப்படுகிறது.

பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

2024-2025ஆம் நிதியாண்டில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பழங்குடியின மக்கள் நலனுக்காக பல்வேறு வருவாய் ஈட்டக் கூடிய திட்டங்கள் மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

பழங்குடியின மக்களின் கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, கலாச்சார பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகளை நிறைவு செய்வதற்காக விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 5,374 பணிகள் ரூ.158.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈங்கூர் மற்றும் முதலிபாளையம் தொழிற்பேட்டைகளை புனரமைத்தல்

ஆதிதிராவிட தொழில்முனைவோரை ஊக்குவிக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, ஈங்கூர் மற்றும் முதலிபாளையம் ஆகிய அரசு தொழிற்பேட்டைகளை தற்போதைய தேவைக்கேற்ப புதிய உட்கட்டமைப்புடன் மேம்படுத்துவதற்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள்

தமிழ்நாடுபணிபுரியும்மகளிருக்கானவிடுதிநிறுவனம்(TamilNaduWorkingWomen'sHostelCorporation) மூலம் 3 பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் ரூ.1.07 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டம்

சமுதாயக்கூடங்கள் பராமரித்தல்

மகளிர் சுய உதவிக் குழு அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டு சமுதாயக்கூடங்கள் பராமரிக்கப்படுகிறது.

ஒவ்வொரு சுய உதவிக் குழுக்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனாக ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டு மகளிர் வாழ்வாதாரம் உயரவும், சமுதாயக் கூடங்களை சிறப்பாகப் பராமரிக்கவும் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி

மானியம் மற்றும் கடனுதவி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு ஒருவார காலம் பயிற்சி அளிக்கப்பட்டு, எட்டு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு மூன்று வேளையும் தரமான மற்றும் சுகாதாரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது. சமையலறைகளுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்கள், ஒரு விடுதிக்கு ரூ.5 இலட்சம் வீதம் 8 விடுதிகளுக்கு ரூ.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

பொலிவு ஹெல்த் கேர் சொசைட்டி

தாட்கோ மூலம் 60 ஆதிதிராவிடர் மகளிர் கொண்ட ஐந்து மகளிர் குழுக்கள் மூலம் பொலிவு ஹெல்த் கேர் சொசைட்டி தொடங்கப்பட்டு, சோப்பு, எண்ணெய், சிகைக்காய் மற்றும் சலவைத்தூள் பொன்ற பொருள்களை தயார் செய்து தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதியில் தங்கிப் பயிலும் சுமார் 20,000 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் சுயஉதவிக் குழுக்கள் ஆண்டொன்றுக்கு ரூ.3 கோடி வரை வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஜெய் பீம் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் நல சங்கம்

சென்னை கோயம்பேடு வணிக சந்தையில் கடனில் சிக்கித் தவித்த 150 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வணிகர்களை மீட்டெடுத்து ஜெய் பீம் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் நல சங்கம் உருவாக்கப்பட்டு ரூ.23 இலட்சம் மானியத்துடன் ரூ.57.50 இலட்சம் சிறுவணிக கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 146 வணிகர்களுக்கு ரூ.4.17 கோடி மதிப்பிலான சிறு வணிக கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான தொழில்முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கவும், புதிய வாய்ப்புகளை வழங்கவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான தொழில்முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் "TN- BEAT EXPO 2024" ஜனவரி 26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடத்தப்பட்டது.

முதலாவது கண்காட்சியின் சிறப்பான வரவேற்பின் காரணமாக, இரண்டாவது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான தொழில்முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 2025, ஜனவரி 25 மற்றும் 26 ஆகிய இரண்டு நாள்கள் நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 15,000-க்கும் மேற்பட்ட பொருள்களானது 500 அரங்குகளிலும், பன்னாட்டு வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்தி பொருள்கள் 300 அரங்குகளிலும், அரசு பொதுத்துறையை சார்ந்த 30 அரங்குகளிலும், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் 15 அரங்குகளிலும் அமைக்கப்பட்டு, 35,000க்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டு பயனடைந்தனர்.

நரிக்குறவர் மற்றும் இருளர் பழங்குடியினருக்கான சிறுவணிக கடன்

26 மாவட்டங்களைச் சேர்ந்த 1,255 நரிக்குறவர்களுக்கு ரூ.5,64,75,000 மற்றும் கடலூரைச் சேர்ந்த 188 இருளர்களுக்கு ரூ.84,60,000 நுண் கடன் NSTFDC மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், ஒரு தனிநபர் பழங்குடி பயனாளி தங்கள் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ரூ.45,000 கடனாகப் பெறலாம்.

அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்

அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், 2023–2024ஆம் நிதியாண்டில், ரூ.200 கோடி மதிப்பீட்டில் 1,695 உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2024–2025ஆம் நிதியாண்டில், ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1,966 பணிகள் நடைபெற்று வருகின்றன.

சமுதாயக் கூடங்கள்

20 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 28 சமுதாயக் கூடங்கள் ரூ.32.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

கிராம அறிவுசார் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்களது அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் ரூ.117.27 கோடி மதிப்பீட்டில் 120 கிராம அறிவு சார் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அரசு தொழிற்பேட்டைகள் புனரமைப்பு

ஆதிதிராவிட தொழில்முனைவோரை ஊக்குவிக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, ஈங்கூர் மற்றும் முதலிபாளையம் ஆகிய இரண்டு இடங்களில் அரசு தொழிற்பேட்டைகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படுகிறது.

தொல்குடி திட்டம்

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆண்டிற்கு ரூ.250 கோடி வீதம் 4 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் தொல்குடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொல்குடி திட்டத்தின் கீழ், வீடற்ற பழங்குடியினருக்கு 4,500 வீடுகள் கட்டபடவுள்ளன. முதற்கட்டமாக, 750 வீடுகள் ரூ.40.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் குடியிருப்புகளை தன்னிறைவு பெற்ற குடியிருப்புகளாக மாற்றிட 26 மாவட்டங்களில், ரூ.62.22 கோடி மதிப்பீட்டில் 560 உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்குடியின கிராம மக்கள் மருத்துவ மற்றும் அவசிய தேவைகளுக்காக பழங்குடியின கிராமங்களை இணைக்கும் வகையில் 8 மாவட்டங்களில் 26 அணுகு சாலைகள் ரூ.51.47 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை கட்டமைப்பினை உருவாக்கும் திட்டம்

பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் அடிப்படை வசதிகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ், ரூ.126.47 கோடி மதிப்பீட்டில் 2,787 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 500 நரிக்குறவர் மற்றும்1,000 இதர பழங்குடியினர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 23 மாவட்டங்களில் ரூ.79 கோடி செலவில் 1,500 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பகுதியில், உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.14.40 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்படுகிறது.

வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மற்றும் இதர பழங்குடியினருக்கு 750 வீடுகள் ரூ.40.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு 1,094 வீடுகள் ரூ.50 கோடி மதிப்பிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி மதிப்பீட்டிலும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களின் மருத்துவத் தேவைகளுக்கு ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள் ரூ.7 கோடி மதிப்பில் தேசிய சுகாதார திட்ட இயக்ககம் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடலூர் மாவட்டத்தில், பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் , தெருவிளக்கு, தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ரூ.5.48 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொல்குடி திட்டத்தின் கீழ், 2024-2025ஆம் ஆண்டில் வீடற்ற அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர் மற்றும் இதர பழங்குடியினருக்கு 1,124 வீடுகள் ரூ.18.66 கோடி மதிப்பில் கட்டுப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், காயரம்பேட்டில், பழங்குடியினருக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒரு பயனாளியின் பங்குத் தொகை ரூ.240,000 வீதம் 64 பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ.1.53 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பகுதியில் வசிக்கும் 57 நரிகுறவர் வீடுகளை ரூ.1.62 கோடி மதிப்பில் புனரமைக்கப்படுகிறது.

நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு வசதிகள்

ஈரோடு மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினர் மக்கள் அதிகம் வாழும் தொலைதொடர்பு வசதி இல்லாத 78 கிராமங்களில் நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு வசதிகள் ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வசதியினைப் பயன்படுத்தி தொலை மருத்துவம் (Telemedicine), தொலைதூரக் கல்வி (Tele Education), தொலைதூரக் கலந்தாய்வு (Tele Counselling) போன்ற செயல்பாடுகளுக்கு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமூக மேம்பாடு:

தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்

மாநில அளவில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் "தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்" உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 28.02.2025 நாள்வரை, பெறப்பட்ட 5,191 மனுக்களில் 4,038 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

வனஉரிமைச் சட்டம் செயல்படுத்துதல்

வனங்களைச் சார்ந்து வாழும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யவும் மற்றும் வன உரிமைச் சட்டத்தினை திறம்பட செயல்படுத்தவும் செயல்திட்டம் உருவாக்கப்பட்டு, புவித்தரவுகளின் அடிப்படையில் வனப்பரப்பு வரைபடம் தயாரித்தல் மற்றும் ஆவணங்களை பதிவேற்றும் பணி ரூ.2.85 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்திட வழி வகுக்கும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகியவற்றை திறம்பட நடைமுறைப்படுத்தி வருகிறது.

தீருதவி உயர்த்தி வழங்குதல்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படும் தீருதவி குறைந்தபட்சம் ரூ.85,000-லிருந்து ரூ.1,00,000ஆகவும் அதிகபட்சம் ரூ.8,25,000 லிருந்து ரூ.12,00,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான கூடுதல் நிதி மாநில நிதியிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது.

2023 - 2024ஆம் ஆண்டு வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 5,610 நபர்களுக்கு ரூ.71.20 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 394 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப வசதியுடன் கூடிய சட்ட ஆலோசனை மையம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்த புகார் அளிக்கவும் சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. (உதவி மைய எண். 14566) & (1800 2021 989)

விழிப்புணர்வு பயிற்சிகள்

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்த மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் தொண்டுசாரா நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

சமத்துவம் காண்போம்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம் வழங்குவதற்கு "சமத்துவம் காண்போம்" என்ற தலைப்பில் உரிய விழிப்புணர்வுப் பயிற்சிகள் ரூ.40 இலட்சம் செலவில் 983 அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நல வாரியங்கள்

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம், புதிரை வண்ணார் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியங்கள் மறுசீரமைக்கப்பட்டு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1,000 தூய்மைப் பணியாளர்களுக்கு 10 சதவீதம் பயனாளிகள் பங்களிப்பு மற்றும் 90 சதவீதம் அரசு மானியத்துடன் கட்டப்பட்ட வீடுகள் வழங்கப்படுகிறது.

587 தூய்மைப் பணியாளர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக அவர்களின் குடும்பதாரர்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் புதுப்பிக்கப்பட்டு, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளவும் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சமத்துவ மயானங்கள்

சாதி வேறுபாடுகளற்ற சமத்துவ மயானங்கள் கொண்டுள்ள சிற்றூர்களைத் தேர்ந்தெடுத்து, வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த ரூ.10 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 259 முன்மாதிரி கிராமங்களுக்கு ரூ.25.90 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

சமூக நல்லிணக்கம் கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் (சென்னை தவிர) தீண்டாமையை கடைப்பிடிக்காமல் சமூக நல்லிணக்கத்தை கடைப்பிடிக்கும் கிராமங்களைத் தேர்ந்தெடுத்து வளர்ச்சிப் பணிக்காக ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 37 மாவட்டங்களில் தலா ஒரு சிறந்த கிராமத்தை தேர்ந்தெடுத்து ரூ.10 இலட்சம் வீதம் ரூ.3.70 கோடி வழங்கப்படுகிறது.

பழங்குடியினருக்கான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம்

படித்த வேலைவாய்ப்பற்ற 146 பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு, உயர் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2024-2025ஆம் நிதியாண்டில் 1,300 பழங்குடியின இளைஞர்களுக்கு உறுதிசெய்யப்பட்ட வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் ரூ.4,20 கோடி மதிப்பில் வழங்கப்படுகின்றன.

இருளர் பழங்குடியினருக்கு முந்திரி சேகரம் செய்யும் உரிமை வழங்குதல்

அரியலூர் மாவட்டத்தில், ஆண்டிமடம் ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் சரகங்களில் உள்ள பழங்குடியின இருளர் மக்கள் வனத்துறைக்கு உட்பட்ட முந்திரி தோட்டத்தில் முந்திரிக் கொட்டை சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான ஏலத்தில் (டெண்டர்) கலந்து கொள்ளாமலேயே முந்திரி மகசூல் ஏல உரிமை வழங்கப்பட்டு, 10 யூனிட்டுகளுக்கான ஏலத்தொகை ரூ.86.10 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பண்பாடு, கலை மற்றும் இலக்கிய மேம்பாடு

சிறந்த எழுத்தாளர்களுக்கு ரொக்கப் பரிசு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் இலக்கியக் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் விருது ரூ.50,000லிருந்து ரூ.1,00,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோன்ற 21 எழுத்தாளர்களுக்கு 09.07.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சிறந்த படைப்புகள் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளுதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், கலை, பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சிறந்த எழுத்தாளர்களின் தமிழ் படைப்புகள், உலகளவில் வசிக்கும் மக்களை சென்றடையும் வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டு சங்கம் ஆறு படைப்புகளை மறு பதிப்பு செய்துள்ளது.

37 வகையான பழங்குடியினர் பற்றிய அடிப்படை கணக்காய்வு

பழங்குடியினருக்கான புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு, தமிழ்நாட்டில் வாழும் 37 வகையான பழங்குடியினர் பற்றிய அடிப்படைக் கணக்கெடுப்பு ரூ.4.50 கோடி மதிப்பில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பழங்குடியின மொழிகளை ஆவணப்படுத்துதல்

2022-2023ஆம் நிதியாண்டில், தோடர், கோட்டா, குரும்பஸ், இருளர், பணியர் மற்றும் காட்டுநாயக்கன் ஆகிய 6 அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களின் பண்பாட்டினை பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும், ரூ.48 இலட்சம் மதிப்பில் ஒலி மற்றும் ஒளி ஆவணங்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2023-2024ஆம் நிதியாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் காதர், முத்துவன், மகாமலசர், மலசர், இருளர் போன்ற பழங்குடியின சமூகத்தினர் இடம் பெயர்வதைத் தவிர்க்கவும், மக்களின் தொன்மையைப் பாதுகாக்கவும் ரூ.48 இலட்சம் மதிப்பில் ஒலி மற்றும் ஒளி ஆவணங்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பேசப்படும் தோடர், கோத்தர், சோளகர், காணி, நரிக்குறவர் பழங்குடியின மக்களின் மொழி வளங்கள் மற்றும் ஒலி வடிவங்கள் ரூ.2 கோடி செலவில் ஆவணப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டு பழங்குடியினரின் பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தேசிய மாநாடு

தமிழ்நாட்டு பழங்குடியின மொழிகளை ஆவணப்படுத்துவதற்கான உரிய வழிமுறைகளைக் கண்டறிய புகழ்பெற்ற தேசிய கல்வி நிலையங்கள் மற்றும் ஆய்வு மையங்களில் பணிபுரியும் ஆய்வாளர்களைக் கொண்டு "தமிழ்நாட்டு பழங்குடியினரின் பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய மாநாடு முதன் முறையாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.

சமூக நீதி மற்றும் சமத்துவ மையம்

சமூக நீதி மற்றும் சமத்துவத்தை மையமாகக் கொண்டு பொதுக் கொள்கை உருவாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆராய்ச்சிகள், பயிற்சிகள் மற்றும் ஆவணப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள சென்னை சமூக பணி பள்ளியில் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள்தொகை, வீட்டுவசதி மற்றும் அடிப்படைத் தேவைகள், கல்வி, வாழ்வாதாரம், நில உடைமை மற்றும் அரசுத் திட்டங்களை அணுகுவது பற்றிய தகவல்களைச் சேகரிக்க தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் சமூக-பொருளாதார கணக்கெடுப்பை இந்த மையம் நடத்தியது.

மேலும், வறுமை, சாதி பாகுபாடு மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் கல்வி தொடர்பான தகவல்களைச் சேகரித்து நிவர்த்தி செய்வதற்காக இந்த மையம் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள பன்னியாண்டி சமூகம் குறித்த ஆய்வு, அவை,

தமிழ்நாட்டில் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் சமூகங்கள் (PVTG) குறித்த வாழ்விட ஆய்வு,

தமிழ்நாட்டில் நாடோடி பழங்குடியினர் குறித்த ஆய்வு,

திருவாரூர் மாவட்டத்தில் பூம் பூம் மாட்டுக்காரர் (ஆதியான்) நாடோடி பழங்குடியினரின் கணக்கெடுப்பு,

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் குறித்த ஆய்வு,

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான சாதிய வன்கொடுமைகள் (1990–2023),

தமிழ்நாட்டில் சமூக ரீதியாகப் பின்தங்கிய சமூகங்கள் மீதான கல்வி உரிமைச் சட்டம் 2009இன் தாக்கம் மற்றும் தலித் தொழில்முனைவோரின் சமகால குரல்.

ஆதி கலைக்கோல்

தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் தொன்மையான கலைகள், பண்பாடு, இலக்கியம், இசை, நடனம் ஆகிய கலை வடிவங்களைப் பாதுகாக்கவும், காட்சிப்படுத்தவும் ஆதி கலைக்கோல் என்னும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை மற்றும் இலக்கிய சங்கமம் டிசம்பர் 2, 2024 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

தொல்குடியினர் தினம் – தேசிய பழங்குடியினர் தினம்

அனைத்து பழங்குடியினர் பள்ளிகளிலும் தொல்குடியினர் தினம் (தேசிய பழங்குடியினர் தினம்) நவம்பர் 15, 2024 அன்று கொண்டாடப்பட்டு மரம் நடும் விழா நடத்தப்பட்டது.

மாநிலத்திலேயே முதன்முறையாக 328 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பல்துறைப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதனில், 24,000 மாணவர்கள் பங்கேற்றனர்.

"களம் – ஆடு"

கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணாக்கருக்கு கலை, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மாணாக்கருக்கான அரசின் திட்டங்கள், உயர்கல்வி படிப்பு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் "களம் - ஆடு" என்ற கோடை கலைத்திறன் முகாம் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடைபெற்றது.






மனிதவள மேலாண்மை மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலன்



திருமதி **என். கயல்விழிசெல்வராஜ்** அவர்கள்
மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



78,882 அரசுப் பணியாளர்கள் தேர்வு...

பெண் அலுவலர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்வு...

ரூ.5 கோடி செலவில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் மேம்பாட்டு பணிகள்...

ரூ.161.51 கோடி செலவில் பல்வேறு நிதியுதவியின் கீழ், 67,595 முன்னாள் படை வீரர்கள் பயன்...

ரூ. 915.17 இலட்சம் முன்னாள் படைவீரர் நல நிதிக்கு வழங்கல்...

ரூ.4.57 கோடி செலவில் திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலையில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் திறப்பு....

மனித வள மேலாண்மைத் துறை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 12 தேர்வுகளுக்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு, 10 தேர்வுகள் நடைபெற்றுள்ளன.

முதன்முறையாக அனைத்து கொள்குறிவகைத் தேர்வுகளும் கணினி வழித் தேர்வாக நடத்தப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்களுக்கு சந்தேகங்களை உடனுக்குடன் தீர்க்க தேர்வாணையம் "குறைதீர் அழைப்பு மையம்" செயல்படுத்தியுள்ளது.

அரசுப் பணிகளில் நேரடி நியமன வயது உச்ச வரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்பட்டது.

கொரோனா தொற்றால் பாதித்த குடும்பங்கள் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பகங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம்.

பெண் அலுவலர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்த்தப்பட்டது.

அரசுப் பணியாளர்களுக்கான கூடுதல் கல்வித் தகுதிக்கு ஊக்கத் தொகை.

புதிய 6 மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் தொடங்கப்பட்டன.

ஊழல் தடுப்பு இயக்குநரகம் ஐந்து சரகங்களாகப் பிரிக்கப்பட்டு காவல் கண்காணிப்பாளரால் கண்காணிக்கப்படுகிறது.

மனிதவள மேலாண்மைத் துறையில் மின்னனு அலுவலக (e-office) முறை தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கொள்கை, 2022 செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு சில பணியிடங்களை நிரப்பும் அதிகாரம் வழங்கிய சட்டம், 2022 இயற்றப்பட்டுள்ளது.

தேர்வாணையத்தில் புதிய உயர் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ. 95 இலட்சம் ஒதுக்கீடு.

கடந்த நான்காண்டுகளில் 78,882 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழ்நாடு இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக வெளியிடப்பட்ட ஆணைகள் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாணைக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நான்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் ஐந்து உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் தலைவர், நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சரால் சட்டப்பேரவையில், புதிதாக அரசுப் பணியில் சேரும் மற்றும் பதவி உயர்வு பெறும் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்களுக்கு பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினை பரவலாக்கப்பட்ட பயிற்சிகளாக அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாவட்ட வாரியாக நடத்தப்பெற்ற பயிற்சியில் 7,430 அலுவலர்களுக்கும், இணையவழி மூலம் 542 அலுவலர்களுக்கும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 15,273 அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ரூ. 5 கோடி செலவில் ஒரு பல்நோக்கு அரங்கம், ஒரு உணவகம், ஒரு மழை நீர் சேகரிப்பு தேக்கி, ஒரு சமையல் எரிவாயு கிடங்கு, துணி துவைக்கும் இடம் ஆகியவை புதிதாக கட்டப்பட்டு காணொலி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2022 அன்று திறந்துவைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ரூ.10 கோடி செலவில் இரண்டு விடுதிகள் மற்றும் நான்கு வகுப்பறைகள் ஆகியவை புதிதாக கட்டப்பட்டு காணொலி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2022 அன்று திறந்துவைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

ரூ.27 இலட்சம் செலவில் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திலுள்ள 18 ஏக்கர் நிலத்தில் சமூக காடுகள் வளர்ப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

துணை வட்டாட்சியர் பணியிடைப் பயிற்சி தொடங்கப்பட்டு, இதுவரை 412 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மைய ஓரணிக்கான பயிற்சியாளர்களின் எண்ணிக்கையினை 685 – லிருந்து 850 ஆக உயர்த்தி 12.12.2023 முதல் தொடர்ந்து பயிற்சி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021–2022–ம் ஆண்டில், "அ" மற்றும் "ஆ"அடிப்படை பயிற்சி நிலையத்தில் உள்ள கணினி ஆய்வகத்தை புதுப்பிக்க, புதிய கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளை கொள்முதல் செய்ய ரூ.29.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கணினி ஆய்வகம் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

4 ஆண்டுகளில் 11 அணிகளில் 391 "அ" பிரிவு அலுவலர்களுக்கும், 28 அணிகளில் 1,281 "ஆ" பிரிவு அலுவலர்களுக்கும் அடிப்படைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது .

தமிழ்நாட்டிலிருந்து குடிமைப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 26 ஆர்வலர்களுக்கு 01.10.2021 அன்று அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தின் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கணினி ஆய்வகம் ரூ. 50,99,940/– செலவில் புதுப்பிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு உணவுக் கூட கட்டுமானப் பணிகள், மிடுக்கு வகுப்பறைகள் உள்ளிட்ட கட்டமைப்பு பணிகள் ரூ.1,17,96,383/– செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து மத்திய தேர்வாணைய குடிமைப்பணி உயர் பதவிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 33 ஆர்வலர்களுக்கு 13.07.2023 அன்று அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தின் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்களில் 27 ஆர்வலர்கள் குடிமைப் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்களில் அளிக்கப்பட்டு வரும் குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வுக்கான பயிற்சி காலத்தினை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கு தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.65,82,000/- நிதி ஒதுக்கீடு.

சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு 2024- 2025 நிதியாண்டிலிருந்து ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட உணவுக் கட்டணத்தை ரூ.3,000/- லிருந்து ரூ.4,500/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கு தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.69,68,500/- 2024-2025 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் நிர்வாகக் கட்டடம் மற்றும் விடுதி வளாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டடப் பராமரிப்பு மற்றும் மின்பராமரிப்பு ஆகிய பணிகளுக்காக ரூ.1,81,62,647/- நிதி ஒதுக்கீடு.

2022-2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்வுக்கு மாநிலக் கல்லூரி மற்றும் சர் தியாகராயா கல்லூரி போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் முறையே 213 மற்றும் 222 மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், மேற்படி இரு பயிற்சி மையங்களிலும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத் தேர்வுக்கு 165 மாணவர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-V-A தேர்வுக்கு 294 அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது.

2023-2024, 2024 - 2025 ஆம் ஆண்டுகளில் மாநிலக் கல்லூரி மற்றும் சர் தியாகராயா கல்லூரி போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் முறையே 600 மற்றும் 1,000 மாணவர்களுக்கு TNPSC, SSC, RRB மற்றும் IBPS உள்ளிட்ட பல தேர்வுகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மதுரை, காமராஜர் பல்கலைக்கழக (மாலை நேரக் கல்லூரி) வளாகத்தில் செயல்பட்டு வந்த போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிப்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்தப்போட்டித் தேர்வுகள் பயிற்சி மையத்திற்கு இடமாற்றம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பயிற்சி மையம் 01.01.2025 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும், இப்பயிற்சி மையம் செயல்பட 2024-2025 ஆம் நிதியாண்டிற்கு ரூ17,01,000/- மற்றும், 2025-2026 ஆம் நிதியாண்டு முதல் ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.71,07,000/-ம் நிதி ஒப்பளிப்பு.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975 இன் கீழ்பதிவு செய்யப்பட்டு, 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு படிப்படியாக வளர்ச்சியுற்று, அரசு பணியாளர்கள் குடிமக்களுக்கான சேவைகளை திறம்பட வழங்கிட ஏதுவாக மேலாண்மை மற்றும் செயல்திறன் பயிற்சிகளை அளித்திட முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் மண்டல பயிற்சி மையங்கள் 2014ஆம் ஆண்டிலும், செங்கல்பட்டில் 2022 ஆம் ஆண்டிலும் நிறுவப்பட்டது.

ஒரு முன்முயற்சியாக, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் காவல் துறை அலுவலர்களுக்கு மட்டுமான மூன்று நாள் முன்னோடிப் பயிற்சி முன்மொழியப்பட்டு, 5 அணிகளில் 227 காவல் துறை அலுவலர்களுக்கு பயிற்சி நடத்தி முடிக்கப்பட்டது.

அரசுத் துறைகளில் பணிபுரியும் 55 வயதைக் கடந்த அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்களுக்காக புத்தாக்கப் பயிற்சி பரிந்துரைக்கப்பட்டு, மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான கடற்கரை விடுதியில் 44 அணிகளில் 1,200 அலுவலர்களுக்கு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது

ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை அலுவலர்கள், அங்கன்வாடி, மதிய உணவுப் பணியாளர்கள் மற்றும் தங்கள் பணிக்காலத்தில் எவ்விதப் பயிற்சியும் பெறாத பிறத் துறை அலுவலர்களுக்கான ஒரு சிறப்புப் பயிற்சி முன்மொழியப்பட்டு, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியால் இதுவரை 30 பயிற்சித் திட்டத்தின் மூலமாக 907 அலுவலர்களுக்கு பயிற்சி நடத்தி முடிக்கப்பட்டது.

அகமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை நிலையத்துடன் ஒருங்கிணைந்து 30 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு 'பயனுள்ள தரவு காட்சிப்படுத்தலில் ஆ:ப்சைட் தனிப்பயனாக்கப்பட்ட நிரல்' என்ற பயிற்சி அளிக்கப்பட்டது.

முதன்முறையாக, தமிழ்நாடு பொது சேவை ஆணையத்தால் நேரடி நியமனம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி-1 அலுவலர்களுக்கு துறைவாரியான பயிற்சி தொடங்கப்படும் முன் ஒரு பொதுவான அடித்தளப் பயிற்சி நடத்த அரசு முடிவெடுத்து அப்பணியை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி வாயிலாக செயல்படுத்தியது.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி பிப்ரவரி 2021 இல் "AIM TN" என்ற காணொளிப்பாதையை அறிமுகப்படுத்தி அந்த கல்லூரியின் (AASC) முயற்சியால் நிறுவப்பட்ட நோக்கம் செயலி (Nokkam App) ஆகியவை போட்டித் தேர்வுத் தயாரிப்பில் தமிழ்நாட்டில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய காவலர் தேர்வில் 30 மாணாக்கர்கள், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய சார்பு ஆய்வாளர் தேர்வில் 137 மாணாக்கர்கள், மத்திய தேர்வாணையம் நடத்திய பன்முகத்திறன் பணியாளர் தேர்வில் (SSC MTS) 36 மாணாக்கர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-2/2A (2022) முதன்மைத் தேர்வில் 171 மாணாக்கர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி-1 முதல்நிலை தேர்வில் 567 மாணாக்கர்கள் தேர்ச்சி பெற்றனர்.

உள்புகைப்பட அரங்கு அமைப்பதற்காக, ரூ.49,89,814/- ஒப்பளிப்பு,

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரிக்கென பிரத்யேகமாக உயர் அழுத்த மின்சாரம் அளிக்க ரூ.3.5 கோடி ஒப்பளிக்கப்பட்டது.

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி பணியாளர்களுக்கு 8 தொகுப்பு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.3,48,02,047/- ஒப்பளிக்கப்பட்டது.

முன்னாள் படைவீரர் நலன்

திருநெல்வேலியில் ரூ.70.75 இலட்சம் செலவில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் 31.07.2021 அன்று திறக்கப்பட்டது.

மதுரையில் ரூ.86.35 இலட்சம் செலவில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் 31.07.2021 அன்று திறக்கப்பட்டது.

திருவண்ணாமலையில் ரூ.3.03 கோடி செலவில் புதிய படைவீரர் மாளிகை 09.07.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேரடியாக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.165.29 கோடி செலவில், 76,648 நிதியுதவிகள் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கிய வகையில் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் பயன்பெற்றுள்ளனர்.

சுமார் ஏழு கோடி ரூபாயில் முன்னாள் படைவீரர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி 10 மாவட்டங்களில் 205 மற்றும் 12 மாவட்டங்களில் 284 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுவரி மீள பெறுதல் திட்டம் 2024-2025 இல் முன்னாள் படை வீரர்களுக்கு ரூ.1,09,500/- வழங்கப்பட்டுள்ளது. அவ்வகையில் 87 முன்னாள் படைவீரர்கள் பயனடைந்துள்ளனர்.

தையல் பயிற்சி முடித்த 76 முன்னாள் படைவீரரின் மனைவி / கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்க திட்டம் செயல்படுகிறது.

முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் 400 முன்னாள் படைவீரர்களுக்கு 30% மூலதன மானியம், 3% வட்டி மானியம் வழங்கப்படும். 2009 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 200 விண்ணப்பங்கள் வங்கிகளின் தற்காலிக ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டிற்கான பொதுத்துறை மானியக் கோரிக்கையின்போது மாற்றுத்திறன் முன்னாள் படைவீரர் மற்றும் சார்ந்தோர்களுக்கு இலவசமாக பிரத்யேக பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு 47 பெட்ரோல் ஸ்கூட்டரும் 17 சிறப்பு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்1956-ஆம் ஆண்டு நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28.01.1986 அன்று பதிவுசெய்யப்பட்டு நிறுவப்பட்டு முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது.

6632 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாநில / ஒன்றிய அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

632 புதிய வாடிக்கையாளர்கள் அடையாளம் காணப்பட்டு 2809 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய கேட்பான ரூ.1,218.81 கோடியில், ரூ.1024.49 கோடி மற்றும் நிலுவைத் தொகை கேட்பான ரூ.303.01 கோடியில் ரூ.207.61 கோடி மொத்தம் ரூ.1232.10 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

34,387 முன்னாள் படைவீரர்களுக்கு விபத்து நிவாரணம், காப்பீட்டுத் தொகையாக ரூ.67.86 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. 18 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ. 68 இலட்சம் விபத்துக் காப்பீட்டு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் முகாம்கள் மற்றும் அரசு பள்ளிகளுக்கு ரூ.153.10 இலட்சம் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி (CSR) வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டத்திற்கு ரூ.12.80 கோடி ரெப்கோ வங்கிக்கு பங்களிப்பாக செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு ரூ.34.95 இலட்சம் செலவில் இலவச போக்குவரத்து வசதி வழங்கப்பட்டுள்ளது. ரூ.25.33 இலட்சம் செலவில் இலவச தங்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 106 குடும்பங்களுக்கு ரூ.5.95 இலட்சம் ஈமச்சடங்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.





சிறப்பு வெளியீடு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,

இயக்குநர்

செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு

இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

வடிவமைப்பு PAAR CREATIVE

அச்சிட்டோர்

தமிழரசு அச்சகம்

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.

தொலைபேசி : 044-22542224 / 22542221 மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in

இணையதளம்: www.tndipr.gov.in

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு


நாடு போற்றும்
ஆண்டு
தொடரட்டும்
இது பல்லாண்டு
எல்லார்க்கும் எல்லாம்